www.padippakam.com

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (இரண்டாம் தொகுதி)

முதற் பதிப்பு, வெளியீடு 1-7-1974

பதிப்புரிமை பெற்றது

கபீர் அச்சகம், சென்னை—600005

# THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

## VOLUME II

*Compiled and Edited by*
V. ANAIMUTHU

*Published by*
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

படிப்பகம்

www.padippakam.com

*Thoughts of Periyar E. V. R.—Volume II*
*First Edition, Published on 1-7-1974*
*All rights reserved*

Kabeer Printing Works, Madras—600005



திருச்சியில், பெரியார் (1970)

படிப்பகம்

www.padippakam.com



தம் முதிர்ந்த வயதிலும், 'விடுதலை' முதலான ஏடுகளுக்கு ஆராய்ச்சிக்
கட்டுரைகள், தலையங்கங்கள் தீட்டும் பெரியார் ஈ. வெ. ரா.

படிப்பகம்

www.padippakam.com



திருச்சியில் பெரியார் ஈ. வெ. ரா. வாழ்ந்து வந்த 'பெரியார் மாளிகை' 1951-ல்;
அவர் முதன் முதல் பயன்படுத்திய சொந்த கார்

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்பாசிரியர் முன்னுரை

திருச்சி சிந்தனையாளர் கழகம் தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்புவதைத் தலையாய கடமையாகக் கொண்டு பணிபுரிவதாகும்.

அவ்வகையில் தந்தை பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளையும் எழுத்துக்களையும் தொகுத்து, 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்ற பெயரில் மிகப் பெரியதான இந் நூலினை மூன்று தொகுதிகளாக ஒரே சமயத்தில் இக் கழகம் வெளியிட்டுள்ளது.

தமிழகத்திலும், பிறவெளியிடங்களிலும் உள்ள சுயமரியாதைத் தோழர்கட்கும், பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கட்கும், பெரியாரை முழுமையாக அறிய விழையும் அன்பர்கட்கும் இத் தொகுதிகள் மிகவும் பயன்பட ஏற்றவை எனக் கருதுகிறோம்.

தமிழ்நாட்டின் கண் உள்ள பல்கலைக் கழகத்தினர், 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனையை'ப் பல்கலைக் கழகங்களில் ஒரு படிப்புத் துறையாக அமைக்க ஆவன செய்வார்களென நம்புகிறோம். அன்றியும் தமிழக அரசினர் நூலகந்தோறும் இத் தொகுதிகள் இடம் பெறச்செய்து, தமிழ் மக்கள் புத்துணர்வுபெறத் துணைபுரிவார்களெனப் பெரிதும் எதிர் பார்க்கிறோம்.

இந் நூலின் மூன்று தொகுதிகளுள், இது இரண்டாம் தொகுதியாகும்.

இவ் இரண்டாம் தொகுதியில் நாட்டுப் பிரிவினை, அரசியல், வகுப்புரிமை, மொழி, தலைவர்கள், தத்துவம், அறிவு வளர்ச்சி, கலைகள், ஆகிய—தமிழில் உள்ள எட்டுப் பகுதிகளும்; Dravidasthan Separation என்ற ஆங்கிலப் பகுதியும் ஆக ஒன்பது பகுதிகள் (Parts) அடங்கியுள்ளன.

'நாட்டுப்பிரிவினை' என்ற எண்ணத்துக்கு இந்திய மண்ணில் முதன் முதலாக 1930-ல் வித்தூன்றியவர் பெரியாரே ஆவார். இக் கோட்பாட்டினை 1938 முதல் விளக்கி அன்னார் ஆற்றிய உரைகளும், வெளிப்படுத்திய எழுத்துக்களும் இப் பகுதியில் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

'அரசியல்' என்பது, இந்தியத் துணைக் கண்டத்தில், சமுதாய இயலோடு பின்னிப் பிணைந்ததாகும் என்பதே பெரியாரின் கொள்கையாம். இவ் அடிப்படையில், 'இனநலம்' ஒன்றையே குறியாகக் கொண்டு அன்னார் அவ்வப்போது மேற்கொண்ட அரசியல் நிலையையும் அதனால் விளைந்த பயன்களையும் 'அரசியல்' என்ற பகுதி நன்கு விளக்கும்.

இந்து மதமும், நெடுங்காலமாக நிலவிய இந்திய ஆட்சிகளும் சாதியைப் பாதுகாப்பதையே இலட்சியமாகக் கொண்டவையாம். ஆதலின், 'சாதி காக்கப்படும் வரையில், வகுப்புவாரியாக உரிமை வேண்டும்' எனக் கோரி 1919 முதல் அன்னார் இடையறாது போராடி வந்ததை 'வகுப்புரிமை' என்ற பகுதி விளக்குகிறது. இதனை 'வகுப்புவாதம்' எனக் குறிப்போர்க்கும் உண்மையை உணர்த்தும் விளக்கங்கள், இப் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

மொழி என்பது கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் கருவியே யாகும் என்பதை அறிவுறுத்தியும், தாய்மொழிப் பைத்தியம் அறிவு வளர்ச்சிக்குத் தடையாக ஆகிவிடும் என்பதை எடுத்துக் காட்டியும் சிறந்த மொழி ஆய்வுக் கருத்துக்களை வெளியிட்டுள்ள பெரியார்தம் கட்டுரைகளும், பேச்சுக்களும் 'மொழி' என்ற பகுதியில் அடக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பெற்றுள்ளன. தமிழ்மொழியின் வரிவடிவத்தில் 1934-லேயே அன்னார் புகுத்திய 'எழுத்துச் சீர்திருத்தம்' அறிஞர்க்குச் சிறந்த விருந்தாகும்.

பெரியாரவர்களோடு சமகாலத்தவர்களான காந்தியார், ஜின்னா, வினோபா பாவே ஆகியோருடன் அவர் மேற்கொண்ட உரையாடல்களும்; டாக்டர் நாயர், காந்தியார், இராஜாஜி, அம்பேத்கார், திரு. வி. க., பாரதிதாசன் முதலானோர் பற்றிய கருத்துகளும்; சங்கராச்சாரியார், சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம், டாக்டர் சி. என். அண்ணாதுரை, டாக்டர் மு. கருணாநிதி முதலானோர் பெரியாருக்கு விடுத்த மடல்களும் 'தலைவர்கள்' என்ற பகுதியில் அடங்கியுள்ளன.

கடவுள், மதம், ஆத்மா, மோட்சம், நரகம், தலைவிதி, தர்மம் முதலான மத மூட நம்பிக்கை எண்ணங்களைத் தகர்த்துப் பெரியார் அளித்த தத்துவக் கருத்துகளும்; பகுத்தறிவு அடிப்படையில் நாத்திகம், பகுத்தறிவு, மனித வாழ்வு பற்றிய உயர் எண்ணங்களும் 'தத்துவம்' என்ற பகுதியில் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

1929-ல் மலேயாவிலும் 1932-ல் ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா, இலங்கை, முதலான நாடுகளிலும் பயணம் செய்தகாலை அவர் ஆற்றிய உரைகளும், எழுதிய அனுபவக் கட்டுரைகளும்; மற்றும் பல்வேறு சமயங்களில் பேட்டியளித்தல், அறிவுரை ஆற்றுதல் வழியாக வெளிப்படுத்திய கருத்துகளும் 'அறிவு வளர்ச்சி' என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

கலை, பாமரரையும் பிணித்துக் கவரவல்லது. அத்தகு கலை இங்கு இசை, நாடகம், ஓவியம், சிற்பம் என்ற பெயர்களால் மக்களை அறியாமைக் குழியில் தள்ளிவிட்டதை எடுத்துக் காட்டியும்; அறிவையும் மனிதாபிமான உணர்வையும் முன்னிறுத்தி இக்கலைகளும், இலக்கியமும் மிளிரவேண்டுமென அறிவுறுத்தியும்; வளரும் அச்சுக்கலைத் துறையைக் குறிப்பிட்டும் அன்னார் தந்த அறிவுக் கருத்துகள் 'கலைகள்' என்ற பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இவ் இரண்டாம் தொகுதியின் இறுதியில் உள்ள, 'Dravidasthan Separation' என்ற ஆங்கிலப் பகுதி, கறுஞ்சட்டையினரைப் பற்றிப் பிறர் கொண்டுள்ள தவறான எண்ணத்தை அகற்றி, 'திராவிடநாடு' பிரிவினைக் கோரிக்கையையும், வகுப்புவாரிக் கொள்கையையும் ஆணித்தரமாக விளக்கி நிற்பதாகும்.

இந் நூலுக்கான விரிவான முன்னுரை முதல் தொகுதியின் தொடக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. நூல் முழுமைக்கும் உரிய பெயர்க் குறிப்பு அகராதியும், பொருட் குறிப்பு அகராதியும், முறைப்படி, மூன்றாம் தொகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

இம் மூன்று தொகுதிகளையும் பெற்றுப் பெரும்பயன் கொள்வதன் வாயிலாக, எங்களுடைய இம் முயற்சியினை அறிஞர் உலகம் ஊக்குவிக்கும் என நம்புகிறோம்.

இப் பெருமுயற்சிக்கு உறுதுணை புரிந்த அனைத்துப் பெருமக்கட்கும் சிந்தனையாளர் கழகம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதாகும்.

வளர்க பெரியாரிசம்!

வே. ஆனைமுத்து
பதிப்பாசிரியர்

திருச்சிராப்பள்ளி,
1—6—1974

# இரண்டாம் தொகுதி

## பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| | பதிப்பாசிரியர் முன்னுரை | i & ii |


### பகுதி I—நாட்டுப் பிரிவினை

#### 1. நாட்டுப் பிரிவினை


| | | |
|---|---|---|
| 1. | இந்தியா ஒரு நேஷனா? | ... 649 |
| 2. | சுதந்தரத் தமிழ்நாடு | ... 655 |
| 3. | தமிழ்நாடு தமிழருக்கே! | ... 658 |
| 4. | இந்து முஸ்லிம் பிரச்சினை | ... 660 |
| 5. | சர். ஆர். கே. எஸ். | ... 661 |
| 6. | மாநில சுயாட்சி | ... 663 |
| 7. | பேத உணர்ச்சிகள் மறைய வழி | ... 671 |
| 8. | பிரிவினை எண்ணம் ஏன்? | ... 677 |
| 9. | சகிக்க முடியாத அக்கிரமம் | ... 679 |
| 10. | நாட்டுப் பிரிவினை | ... 680 |
| 11. | திராவிடர்—திராவிட நாடு | ... 682 |
| 12. | அன்னியன் யார்? | ... 683 |
| 13. | ஆரியத் தரகர்கள் | ... 684 |
| 14. | சுதந்தர நாளா? | ... 686 |
| 15. | சுதந்தரப் போராட்டமா? சாதிமதச் சண்டையா? | ... 688 |
| 16. | சுதந்தர நாள் | ... 692 |


#### 2. திராவிடநாடு திராவிடருக்கே


| | | |
|---|---|---|
| 1. | திராவிடநாடு திராவிடருக்கே | ... 694 |
| 2. | மொழிவாரிப் பிரிவினை ஏன்? | ... 721 |
| 3. | தட்சணப் பிரதேச அமைப்பு | ... 728 |
| 4. | திராவிட நாடா? தமிழ் நாடா? | ... 732 |
| 5. | தமிழ்நாடு தமிழருக்கே! | ... 732 |
| 6. | பதவியா, தனி நாடா? | ... 743 |
| 7. | குடியாட்சி என்றால் என்ன? | ... 744 |
| 8. | சட்டசபை நுழைவும் நாட்டுப் பிரிவினையும் | ... 745 |
| 9. | நாடு கேட்பது தேசத் துரோகமா? | ... 745 |


படிப்பகம்

www.padippakam.com



பக்க எண்

# பகுதி II—அரசியல்

## 1. அரசியல்


| | | |
|---|---|---|
| 1. | சுயராஜ்யம் | 749 |
| 2. | வரதராஜுலு அறிக்கைக்கு சமாதானம் | 752 |
| 3. | செங்கற்பட்டு மாநாட்டின் தீர்மானங்கள் | 762 |
| 4. | இரண்டுவகை மாநாடுகள் | 766 |
| 5. | வருணாசிரம மாநாடு | 770 |
| 6. | நியாயம் வழங்கும் முறை | 774 |
| 7. | ஆட்சி முறை | 776 |
| 8. | இந்திய சுதேச சமஸ்தானங்கள் | 777 |
| 9. | நமது வெற்றி | 783 |
| 10. | சுயராஜ்ய ஆட்சி எது? | 786 |
| 11. | சுயராஜ்யத்தின் தன்மை | 790 |
| 12. | யோக்கியமான ஆட்சி | 794 |
| 13. | இது சுதந்தர நாடா? | 799 |
| 14. | திராவிடரே ஒன்றுபடுவீர்! | 802 |
| 15. | சமுதாயமும் அரசியலும் | 809 |
| 16. | அரசியல் நிர்ணய சபை | 810 |
| 17. | அரசியல் சட்டம் ஒழிக | 811 |
| 18. | அரசியல் சட்டத்தை எரிப்போம்—ஏன்? | 814 |
| 19. | ஆச்சாரியாரும் நானும் | 815 |
| 20. | பெரியார் அறிக்கை | 818 |
| 21. | என்னைப்பற்றி ஆச்சாரியார் | 820 |
| 22. | அரசியலில் ஒழுக்கக் கேடு | 822 |
| 23. | புதிய சகாப்தம் காண வாரீர்! | 825 |
| 24. | காமராசர் ஆதரிப்பு ஏன்? | 828 |
| 25. | மந்திரிமார்களுக்கு வேண்டுகோள் | 835 |
| 26. | காங்கிரசில் சேர ஆலோசனை | 837 |
| 27. | இராஜாஜி உண்மையைக் கக்கிவிட்டார் | 842 |
| 28. | டாஷ்கண்ட் ஒப்பந்தம் | 842 |
| 29. | சிந்தியுங்கள் | 843 |
| 30. | இன்று நடப்பது 1857-ன் சிப்பாய்க் கலகமே | 843 |
| 31. | தேர்தல் படிப்பினை | 846 |
| 32. | என் ஆதரவு | 847 |
| 33. | மந்திரிகள் சிந்தனைக்கு | 849 |
| 34. | ஜனநாயகம் | 851 |
| 35. | நாத்திகர் ஆட்சி | 857 |
| 36. | என் நிலை | 859 |
| 37. | தமிழர்களின் முக்கிய கவனத்திற்கு | 863 |
| 38. | கொள்கை ஆதரவு மாற்றம் | 865 |
| 39. | சுதந்தரமும் சமுதாயமும் | 867 |
| 40. | இன்றைய இழிநிலை | 869 |
| 41. | நம் இன உணர்ச்சி | 870 |
| 42. | மகா அயோக்கியர் | 871 |




பக்க எண்

## 2. ஜனநாயகம்


| | | |
|---|---|---|
| 1. | இன்று உண்மையான சுதந்திரமா? | 873 |
| 2. | ஜனநாயகம் | 874 |
| 3. | இந்திய ஜனநாயகம் | 875 |
| 4. | அரசியல் வாழ்வு | 880 |


## 3. மதச் சார்பற்ற அரசு


| | | |
|---|---|---|
| 1 | மதச் சார்பற்ற அரசு | 882 |


## 4. உள்ளாட்சி


| | | |
|---|---|---|
| 1. | நகர அமைப்பு | 885 |
| 2. | நகராட்சியின் தன்மை | 888 |


## 5. கிராமச் சீர்திருத்தம்


| | | |
|---|---|---|
| 1. | கிராமச் சீர்திருத்தம் | 892 |
| 2. | கிராமங்கள் ஒழியத் திட்டம் | 893 |


# பகுதி III—வகுப்புரிமை

## 1. வகுப்புரிமை


| | | |
|---|---|---|
| 1. | வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் | 901 |
| 2. | ஆதிமுதற்கொண்டே சூழ்ச்சி | 903 |
| 3. | வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏன்? | 907 |
| 4. | வகுப்புவாரி உரிமை | 908 |
| 5. | வகுப்பு உரிமையை ஒழிக்கச் சதி | 911 |


## 2. வகுப்பு வாதம், சமூக வாதம்


| | | |
|---|---|---|
| 1. | இந்து மகாசபையும் வகுப்புவாரி உரிமையும் | 927 |
| 2. | நாட்டு நலம் வேறு, வகுப்பு நலம் வேறா? | 929 |
| 3. | வகுப்பு வாதமா? சமூக வாதமா? | 931 |
| 4. | வகுப்புரிமையா? வகுப்புத் துவேஷமா? | 932 |
| 5. | சுதந்தரத்தால் பார்ப்பனர் இலாபக் கொள்கை | 935 |
| 6. | எஸ். முத்தையா முதலியார் வாழ்க! | 935 |
| 7. | ஜஸ்டிஸ் கட்சி சாதனை | 938 |
| 8. | கேபினட் மெம்பர்கள் கவனிப்பார்களா? | 939 |


## 3. வகுப்புரிமையின் வரலாறு


| | | |
|---|---|---|
| 1. | பார்ப்பனரல்லாதார் இயக்கமும் தேசத் துரோகமும் | 943 |
| 2. | தென்னாட்டில் அரசியல் கிளர்ச்சி | 945 |
| 3. | வகுப்புரிமை தோன்றிய வரலாறு | 947 |
| 4. | பிறந்த நாள் அறிக்கை | 951 |


படிப்பகம்

www.padippakam.com



பக்க எண்

## பகுதி IV—மொழி

### 1. எழுத்துச் சீர்திருத்தம்


1. தமிழ் எழுத்தில் சீர்திருத்தம் ... 959
2. மொழி—எழுத்து ... 964


### 2. தமிழ்


1. தமிழ் மொழி ... 976
2. திராவிட மொழிகள் ... 978
3. திராவிட மொழி தமிழே! ... 980
4. தமிழ் ... 983
5. மொழி ... 986
6. தாய்ப் பால் பைத்தியம் ... 990
7. சமஸ்கிருதம் ஏன்? ... 994
8. மொழித் தொல்லை ... 1000


## பகுதி V—தலைவர்கள்

### 1. தலைவர்களுடன் சந்திப்பு


1. காந்தியாரும் பெரியாரும் ... 1005
2. பெரியார்—ஜின்னா—அம்பேத்கார் சந்திப்பு ... 1008
3. பெரியார்—வினோபா பாவே ... 1011
4. அமைச்சர் எஸ். சந்திரசேகர் (வானொலிப் பேட்டி) ... 1012


### 2. தலைவர்களைப் பற்றி


1. டாக்டர் நாயர் ... 1017
2. திரு. வி. க. ... 1021
3. காந்தியார் ... 1022
4. காந்தியார் மரணம் ... 1025
5. காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ... 1026
6. காந்தியார் நினைவாக ... 1027
7. காந்தியார் மறைவு பற்றி ... 1029
8. காந்தியார் மாற்றமும் கொலையும் ... 1031
9. காந்தியே காரணம் ... 1032
10. டாக்டர் அம்பேத்கார் ... 1033
11. இராஜாஜி ... 1036
12. பாரதிதாசன் ... 1038


### 3. தலைவர்களின் கடிதங்கள்


1. ஸ்ரீமுகம் ... 1040
2. நாகம்மாள் அறிக்கை ... 1041
3. சர். பன்னீர்செல்வம் கடிதம் ... 1042
4. ஜின்னா பாராட்டு ... 1042
5. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு குன்றக்குடி அடிகளார் விடுத்த மடல் ... 1043
6. முதல்வர் கருணாநிதியின் கடிதம் ... 1045




பக்க எண்

## பகுதி VI—தத்துவம்

### 1. பிரகிருதி வாதம்


1. மெட்டீரியலிசம் (பிரகிருதி வாதம்) ... 1049
2. மதம் ... 1054
3. கடவுள் ... 1056
4. ஆத்மா ... 1065
5. மோட்சம்—நரகம்—கர்ம பலன் ... 1068
6. ஆத்மா—மோட்சம்—நரகம் ... 1071
7. தலை விதி ... 1078
8. ஒழுக்கம் ... 1079
9. ஒழுக்கம், பக்தி, இன்பம் ... 1085
10. ஒழுக்கம் கெட்டுவரக் காரணம் ... 1086
11. தர்மம் அல்லது பிச்சை ... 1087
12. தருமமும் பாவ புண்ணியமும் ... 1090
13. "நான்" ... 1095
14. ஆத்திகம்—நாத்திகம் ... 1099
15. நாத்திகம் ... 1108


### 2. பகுத்தறிவு


1. பகுத்தறிவு ... 1114
2. அறிவுச் சுதந்தரம் ... 1118
3. மறுத்தலும் பகுத்தறிவும் ... 1120
4. முட்டுக் கட்டைகள் ... 1121
5. நாம் அஞ்ஞானிகள் ... 1123
6. நம்பிக்கையாளரும் நம்பிக்கை மறுப்பாளரும் ... 1125
7. பகுத்தறிவுக்குத் தடைகள் ... 1129


### 3. மனித வாழ்க்கை


1. மனித ராசி உயர்வானதா? ... 1131
2. எப்படிப்பட்ட மனிதன் உயர்ந்தவன்? ... 1133
3. மனித வாழ்க்கை இலட்சியமற்றது ... 1135


### 4. பொது நலம்


1. சுயநலம்—பிறர் நலம் ... 1137
2. பொதுநல உணர்ச்சி ... 1139
3. பொதுநல வாழ்வு ... 1140
4. பொதுத் தொண்டு ... 1142
5. தியாகம் ... 1143
6. ஜீவகாருண்யமும் யாகமும் ... 1146
7. நாகரிகம் எது? ... 1151
8. மக்கள் துயரம் நீங்க வழி ... 1153
9. மாறுதல் ... 1154


படிப்பகம்

www.padippakam.com



பக்க எண்

# பகுதி VII—அறிவு வளர்ச்சி

## 1. கல்வி


1. கல்வி விடுதலை ... 1159
2. குழந்தைகள் கல்வி ... 1161
3. அறிவும் படிப்பும் ... 1163
4. கல்வித் திட்டம் ... 1170
5. கேள்வி கேட்கும் பழக்கம் ... 1171


## 2. அயல்நாட்டு அனுபவங்கள்


1. நமது மலாய் நாட்டு விஜயம் ... 1173
2. மலேயா இந்தியர்க்கு ... 1175
3. அயல்நாட்டு அனுபவங்கள் ... 1176
4. கெய்ரோ கடிதம் ... 1180
5. ஈஜிப்ட் கடிதம் ... 1183
6. அயல்நாட்டு நடப்புக்கள் ... 1186
7. 'தோழர்' என விளியுங்கள் ... 1187
8. நானும் நண்பர்களும் ... 1188
9. இங்கிலாந்தில் ஈ. வெ. ரா. சொற்பொழிவு ... 1191
10. ரஷ்ய நீதி ... 1192
11. மேல்நாடும் கீழ்நாடும் ... 1195
12. வெளிநாட்டு அனுபவம் ... 1206
13. கண்காட்சியின் பயன் ... 1208
14. பார்வைக் குறிப்பு ... 1211


## 3. பேட்டி


1. பெரியாரின் பதில்கள் ... 1212
2. செயற்கரிய செய்தார் ... 1213
3. பெரியாருடன் பேட்டி ... 1225
4. என் வாரிசு யார்? ... 1230
5. என் பழக்கங்கள் ... 1231


## 4. அறிவுரை


1. ஆசிரியர்களுக்கு ... 1233
2. மாணவர்களுக்கு ... 1240
3. பகுத்தறிவாளர்களுக்கு ... 1243


## 5. நமது ஆராய்ச்சி மனப்பான்மை


1. புலவர்களின் தன்மை ... 1244
2. நமது ஆராய்ச்சி மனப்பான்மை ... 1246
3. பழந் தமிழன் பெருமை ... 1251
4. சிந்திக்காததால் கேடு ... 1252




பக்க எண்

# பகுதி VIII—கலைகள்

## 1. கலைகள்


1. நமது இலக்கியம் ... 1257
2. குறளும்—நானும் ... 1259
3. மன்னர்களும் இலக்கியமும் ... 1266
4. உதவாக்கரை இலக்கியங்கள் ... 1266
5. கோவில் ... 1269
6. அரசர்களின் இழிசெயல் ... 1269
7. ஓவியம், சிற்பம் ... 1270


## 2. இசை


1. சங்கீதம் ... 1272
2. தமிழிசையும் நாடகமும் ... 1273
3. தமிழிசை ... 1279


## 3. நாடகம்


1. நவீன நாடகம் ... 1280
2. இரணியன் நாடகம் ... 1282
3. நாடகக் கலை ... 1283


## 4. வெளியீடுகள்


1. பத்திரிகைகள் ... 1284
2. தமிழரும் பத்திரிகைகளும் ... 1286
3. நூல்கள் ... 1287
4. அச்சுக் கலை ... 1291


# PART IX

## DRAVIDASTHAN SEPARATION


1. Separate Electorates ... iii
2. Dravidasthan Separation ... iv


படிப்பகம்

www.padippakam.com

பகுதி I

# நாட்டுப் பிரிவினை

படிப்பகம்

www.padippakam.com



# 1. நாட்டுப் பிரிவினை

## 1. இந்தியா ஒரு நேஷனா?

அக்கிராசனரவர்களே! சகோதரர்களே!

இந்தியா ஒரு நாடு என்று ஆனால்தானே, இந்தியா முழுமையும்பற்றிப் பேச நமக்கு உரிமை உண்டு. இப்போது இந்தியா ஒரு நாடாயிருக்கின்றதா?

இந்தியா—சாதிகள் காட்சி சாலையாக, மதக் கண்காட்சி சாலையாக, பாஷைகள் கண்காட்சி சாலையாக, சாமிகள் காட்சி சாலையாக இருக்கின்றதே ஒழிய வேறு என்னமாயிருக்கின்றது? இந்த நிலையிலுள்ள இந்தியா, விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா? மற்ற நாட்டார்கள், தங்கள் நாட்டை ஒரு நாடாக்கி நம் நாட்டையும் அதோடு சேர்க்கப் பார்க்கின்றார்கள். யார், எந்த நாட்டோடு சேர்த்துக் கொள்ளுவதென்று போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

[சேலத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 1-6-1930]

தலைவரவர்களே! தோழர்களே!

தோழர் ஜவஹர்லால் கூட சுயராஜ்யத்துக்கு ஒரு குறிப்பிட்ட அர்த்தம் சொல்லவே இல்லை. ஆனால், அவர் சுயராஜ்யம் என்றால் ஒரு சமயத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பார்; மற்றொரு சமயம் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பது என்பார்; மற்றொரு சமயம் தொழிலாளர் ஆட்சி என்பார்; மற்றொரு சமயம் குடியானவர் ஆட்சி என்பார்; மற்றொரு சமயம் சமதர்மம் என்பார்; மற்றொரு சமயம் பூரண சுயேச்சை என்பார்; மற்றொரு சமயம் பட்டினியும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிவதே என்பார்; மற்றொரு சமயம் உலகப் பொதுவுடைமை என்பார். இப்படி இன்னமும் எவ்வளவோ விதமாக வாயில் வந்தபடி, சமயத்துக்குத் தக்கபடிப் பேசுவார்.

தோழர் காந்தியாரோ சுயராஜ்யத்துக்கு அர்த்தம் ஒரு சமயத்தில் ராமராஜ்யம் என்பார்; மற்றொரு சமயம் வருணாசிரம முறையைச் சரிவர அமைப்பதே என்பார்; மற்றொரு சமயம் சுயராஜ்யத்தில் இராஜாக்களுக்கும் ஜமீன்தாரர்களுக்கும் இடம் உண்டு என்பார்; மற்றொரு சமயம் அவரவர் 'சுதர்மத் தொழிலை'ச் செய்யச் செய்வதே என்பார்; மற்றொரு சமயம் இராட்டினமே சுயராஜ்யம் என்பார்; மற்றொரு சமயம் எல்லோரும் கதர் கட்டுவதே சுயராஜ்யம் என்பார். கடைசியாகச் சென்ற மாதத்தில் 'பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் கடுகளவு மனக் கசப்பு ஏற்பட்டாலும் என் உயிரைக் கொடுத்தாவது அம் மனக் கசப்பை ஒழிப்பேன்' என்றார்.

இன்னமும் என்ன என்னமோ இந்த 20 வருட காலமாகப் பேசிவந்திருக்கிறார்.

மற்றபடியான—நமதருமை 'பாரத மாதாவின் புதல்வர்கள்'—தேச பக்தர்களும் தேசிய வீரர்களும் 'சுயராஜ்யத்துக்கு ஆக உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்தவர்' களுமான குட்டித் தலைவர்களும் தொண்டர்களும் போன மாதத்தில்தான் இந்திய சக்கரவர்த்தியான பிரிட்டிஷ் அரசர்க்கும் அவரது சந்ததிக்கும், அவரது ஆக்கினைக்கும் ஆட்சிக்கும் சட்டதிட்டங்களுக்கும் பக்தியாயும் விசுவாசமாயும் இருந்து, கீழ்ப்படிந்து நடப்பதாக சத்தியம் செய்துகொடுத்து, சர்க்கஸ் வளையத்துக்குள் ஆட்டம் போடும் சிங்கங்களைப் போல் இருந்துகொண்டு, அன்னிய ஆட்சி ஏஜண்டுக்கு அடங்கி நடந்து வருகிறார்கள்.

ஆகவே, சுயராஜ்யம் என்றால் என்ன என்று தோழர் கே. பி. பிள்ளை இப்பொழுதாவது சொல்லட்டும் என்று கேட்கின்றேன். அன்றியும், அடுத்தபடியாக பிரிட்டிஷ்



படிப்பகம்

www.padippakam.com



ஆட்சியையே ஒழித்துவிடுவதாலேயே சுயராஜ்யம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லிவிட முடியுமா? பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவை ஒரு பாகம் ஆளுகிறார்கள்; போர்ச்சுக்கீசியர்கள் ஒரு பாகம் ஆளுகிறார்கள். இவர்களுக்குத் தனித்தனி தேசங்கள் இருக்கின்றன. இத்தனைபேரும் ஒன்றுசேர்ந்து ஒரு கை பார்க்காமல், இராட்டின் ஆயுதத்தைக் கண்டு பயந்துகொண்டு இந்தியாவை விட்டுவிட்டு ஓடிவிடுவார்களா?

சுயராஜ்யத்துக்குப் பொதுமொழி ஒன்று வேண்டும் என்கின்ற அவசியம் என்ன?

ரஷ்யா பொதுஉடைமை தேசம். அங்கு இன்னும் பொதுமொழி இல்லை. நம் நாடு என்பது, அதாவது இந்தியாவானது அன்னிய ஆட்சிக்கு முன்—இராமர் ஆட்சி என்று சொன்ன காலத்திலும் 56 தேசத்துக்கும் ஒரே சக்கரவர்த்தியாகச் சொல்லப்பட்ட காலத்திலும் பொதுமொழி என்று ஒன்று இருந்ததாக ஆதாரமோ சரித்திரமோ ஒன்றும் காணவில்லை.

அதற்கடுத்தாற்போல், இந்தியா நம் தாய்நாடு என்று சொல்வதற்குத்தான் ஆதாரம் என்ன இருக்கிறது? இந்தியா என்கின்ற பெயர் இந்த நாட்டுக்கு எப்போது ஏற்பட்டது? இதற்கு எல்லை என்ன? பர்மா சென்ற வருடம் பிரிந்துவிட்டது. அதற்குமுன் இலங்கை பிரிந்துவிட்டது. அதற்குமுன் மலேயா பிரிந்துவிட்டது. அதற்குமுன் நேபாளம், பூடான் பிரிந்துவிட்டன. அதற்குமுன் காந்தாரம், காபூல் (ஆப்கானிஸ்தானம்) பிரிந்துவிட்டன. இப்படியே எவ்வளவோ பிரிந்து, எவ்வளவோ சேர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் தாய்நாடு எது? தகப்பன் நாடு எது? புராண காலத்தில் 56 நாடுகள் இருந்தனவே, அப்போது ஒரு நாட்டுக்காரன் இன்னொரு நாட்டைத் தாய்நாடு என்று கருதினானா?

மாகாண சுதந்திரம் கொடுத்து மாகாணத்துக்கு மாகாணம் சர்வ சுதந்திரமாய்த் தன்தன் காலிலேயே நிற்கும்படியான நிலைமை ஏற்பட்டு, ஐரோப்பா தேசத்தைப் போல் மொழிவாரியாகத் தனித்தனி நாடாகப் பிரிந்துகொண்டபின்—இந்தியா எப்படி எல்லோருக்கும் தாய்நாடாகும்? நேபால் நம் ஒரு ஜில்லாபோல் உள்ள விஸ்தீரணம்—அவர்கள் இந்தியாவைத் தாய்நாடென்பார்களா? சயாமில் பெரிதும் இந்து மதம்தான்—அவர்கள் இந்தியாவைத் தாய் நாடென்பார்களா?

ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன், டென்மார்க்கு, ஹாலண்டு, பெல்ஜியம், போர்ச்சுக்கல், கிரீஸ் ஆகிய நாடுகள் நமது நான்கு ஜில்லா, மூன்று ஜில்லா, இரண்டு ஜில்லா போன்ற விஸ்தீரணமுள்ளவை. இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நாட்டைத் தாய்நாடு என்பார்களே ஒழிய ஐரோப்பாவைத் தாய்நாடென்பார்களா?

ஆகவே, தமிழ் நாட்டவர்கள்—திராவிட மக்கள் எந்தக் காரணம் கொண்டு இந்தியாவைத் தாய்நாடென்று கூறவேண்டுமென்பதும், எதற்காக இந்தியா பூராவும் எப்போதும் ஒரு குடையின்கீழ் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும் என்பதும் எனக்கு விளங்கவில்லை. முதலாவது, 'பாரத நாடு' என்பதையும், நாம் எல்லாம் 'பரதர்கள்' என்பதையும்கூட நான் ஒப்புக்கொள்ள முடியாது.

இந்தி மொழி தமிழ்நாட்டில் எப்போது இருந்தது? பம்பாயில் எப்போது இருந்தது? வங்காளத்தில் எப்போது இருந்தது? இந்தியா 56 தேசமாய் இருந்தபோது 56 மொழிகளின் பேரால்தானே தேசமாய் இருந்தது? அப்போதும் மொத்தத்தில் 56 மொழிகள் இருந்திருக்கும். நாளாக நாளாக ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும்போதும், ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பார்மீது ஆதிக்கம் செலுத்தும் போதும்தான் அன்னிய மொழி புகுத்தப்பட்டுவிடுகிறது. அந்த முறையிலே இன்று இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்தப் பார்ப்பது, தமிழனல்லாத அன்னிய வகுப்பான் இன்று தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்டதினாலேயே ஒழிய வேறில்லை.



அப்படியானால், இந்தியா ஒரு நேஷனா? அதற்கு மொழி எது? மதம் எது? இந்தியாவில் எத்தனை மதம்? எத்தனை எத்தனை ஆச்சார அனுஷ்டானம்? முதலாவது, இந்து மதம் என்பதைத் தமிழர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? தோழர் கே. பி. பிள்ளை தன்னை இந்து என்று சொல்லுவாரானால் இந்துமத ஆதாரமாகிய வேதத்தை மனுதர்ம சாஸ்திரத்தையும் கீதையையும் ஒப்புக்கொள்ளுகிறாரா? அதன்படி நடக்க இன்று சம்மதிக்கிறாரா? மற்றவன் நடக்கவாவது இவர் அனுமதிக்கிறாரா? இந்து மதத்தில் கே. பி. பிள்ளையின் இடம் எது? இந்து மதத்தால்தான் இந்தியா நேஷன் ஆயிற்று என்றால், அதாவது நேஷனுக்கு மதமே பிரதானம் என்றால் இஸ்லாமியருக்கும், கிறிஸ்தவருக்கும், பவுத்தருக்கும், பார்சிகளுக்கும் இந்தியா நேஷனாகுமா? எதைக் கொண்டு அவர்கள் இந்தியாவை நேஷன் என்பது?

மொழியைக் கொண்டு நேஷன் பிரிப்பது என்றால் மாகாணம் ஒன்றுக்கு நான்கு ஐந்து நேஷன் ஆகிவிடாதா? பொது விஷயங்களில் வகுப்பு மத விஷயங்கள் புகுத்தக் கூடாது என்கிறார்; அன்றியும் அது மிகவும் அற்பமான விஷயம் என்கிறார். யாருக்கு அற்பம் என்று கேட்கிறேன். நாத்திகனுக்கு அல்லவா மதம் வகுப்பு அற்பமாகும்—அது கூடாததுமாகும்.

இந்தியத் தலைவர் தோழர் காந்தியார், 'இந்து மதத்துக்கு ஆக உயிர் வாழ்கிறேன்; எனது மூச்சே இந்து மதம்; நானே இந்து மதமாய் இருக்கிறேன்' என்றார். முஸ்லிம் தலைவர்கள் தோழர்கள் மகமதலி, ஷவ்கத் அலி, ஜின்னா ஆகியவர்கள், 'நாங்கள் முதலில் முஸ்லிம்; இரண்டாவது முஸ்லிம்; மூன்றாவது முஸ்லிம்; அப்புறம்தான் இந்தியன்' என்கிறார்கள். தோழர் ஜவஹர்லால் மதத்தையும் மத ஆதாரங்களையும் மதப் பழக்க வழக்கங்களையும் காப்பாற்றிக்கொடுப்பதாக உத்தரவாதம் செய்து, தலைவர் பதவி பெற்றிருக்கிறார். மிகவும் அநித்தியமான இந்த அற்ப இக (உலக) வாழ்வு என்பதற்கு ஆக, நித்தியமான பர (மேல் லோக) வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டு வகுப்பும் மதமும் அற்பமானது என்று எந்த யோக்கியமான ஆஸ்திகன்தான் சொல்ல முடியும்? 'மதம்' 'வகுப்பு' அற்பம் என்று கருதி இருந்தால் ஜின்னாவுக்கும் ஜவஹர்லாலுக்கும், காந்திக்கும், ஷவ்கத் அலிக்கும், இராஜகோபாலாச்சாரிக்கும் நமக்கும் தகராறு ஏன்? இவர்கள் அயோக்கியர்களா? சுயநலக்காரர்களா? பொது வாழ்க்கையில் வயிறு வளர்ப்பவர்களா? வேறு வகையில் யோக்கியதை அற்றவர்களா? என்று யோசித்துப் பாருங்கள்!

பொது மொழி இந்திதான் இருக்கவேண்டும் என்றால்—அதுதான் அதிக மக்களால் பேசப்படுகிறது என்றால், ஒரு பொதுமொழி தெரிந்தெடுக்க மெஜாரிட்டி பலமே போதுமானதாகுமா? மொழி எதற்காக வேண்டும்? பேசுவதற்கு மாத்திரம்தானா? புதிதாக ஒரு மொழியைத் தெரிந்தெடுப்பதனால் அந்த மொழி பழையது என்றோ வெகுபேர் பேசுகிறார்கள் என்றோ காரணம் சொல்லித் தேர்ந்தெடுப்பது அறிவுடைமையாகாது. அந்த மொழியால் தேச மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன என்று பார்க்கவேண்டும். புது அறிவு உண்டாகுமா? ஆராய்ச்சிக்குப் பயன்படுமா? முற்போக்குக்கும் நாகரிகத்துக்கும் பயன்படுமா? சீர்திருத்தத்திற்கு ஏற்றதா என்றெல்லாம் பார்க்கவேண்டாமா? இவர்கள் சொல்லும் இந்தி எதற்காகப் பயன்படும்? தோழர் இராஜகோபாலாச்சாரியாரும்—அதாவது இந்தியைப் பொது மொழியாக ஆக்கவேண்டும் என்று சொல்லுகிறவரும், அவரது சகாக்களும் 'இந்தி மூலம் துளசிதாஸ் இராமாயணம் படிக்கலாம்; சமஸ்கிருதம் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம்; இந்துமத சாஸ்திரம் உணரலாம்' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தி மூலம் மோட்சத்துக்குப் போவதற்கு அனுகூலமாக—ஆத்மார்த்த விஷயங்கள் என்பதற்கு அனுகூலமாகக் காரணம் சொல்லுகிறார்களே ஒழிய, இந்த உலக வாழ்க்கைக்கு ஆன காரியம் எதுவும் இந்தியில் இருப்பதாகச் சொல்லவே இல்லை. இராமாயணத்திலும், பாரதத்திலும் ஆகாய விமானம் இருக்கிறது; ஆனால், அது மந்திர

படிப்பகம்

www.padippakam.com



சக்தியால் ஓடி இருக்கிறது. இங்கிலீஷ் ஆகாய விமானம் இருக்கிறது. அது இயந்திர சக்தியால் ஓடுகிறது. நமக்கு எது வேண்டும்? மந்திர சக்தியா? இயந்திர சக்தியா?

ஆங்கிலம் நம்மில் சராசரி 100-க்கு ஒருவர் இருவரே படித்திருக்கலாம் என்றாலும்—அது, 35 கோடி மக்களையும் நடத்துகிறது. இந்நாட்டு மனிதன் இன்று அடைந்துள்ள மேல்நிலைக்கு ஆங்கிலமே காரணம். தோழர் கே. பி. பிள்ளை அவர்கள் பேசிய நேஷன், தாய்நாடு, சுயராஜ்யம், பொதுமொழி என்கின்ற உணர்ச்சியை—எண்ணத்தை ஆங்கில மொழியே உணர்த்தியது. அரசனுக்குக் குடிகள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும், அரசனே கடவுள் என்றும் கருதி இருந்த 'இந்தி இந்தியனை' —அரசன் குடிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும், அரசன் குடிகளின் சேவகன் என்றும் 'இங்கிலீஸ் இந்தியா'தான் கற்றுக் கொடுத்தது. இன்று உலகப் பொதுமொழியாக ஆங்கிலம்தான் கருதப்படுகிறது. அது அதிக மக்களால் பேசப்படுகிறது.

இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டாலும் உலக சம்பந்தம் இல்லாமல் இந்தியா வாழ்ந்துவிட முடியாது. வருங்கால உலகம் தேசத்துக்குத் தேசம், நாட்டுக்கு நாடு இப்போது உள்ள தூரத்தில் இருக்காது; கூப்பிடு தூரத்தில் இருக்கப்போகிறது. இந்திக்கு ஆகட்டும்—வேறு இந்திய மொழிக்கு ஆகட்டும் இனி அடுப்பங்கரையிலும், படுக்கை அறையிலும்கூட வேலை இருக்காது.

தொழிலாளிக்கும் தொழில் கருவியும் இயந்திரமும் ஆங்கில மொழியில்தான் இருக்கப் போகின்றன. விவசாயிகளுக்கும் அது போலவேதான். வியாபாரிகளுக்கும் அதுபோலவேதான். அரசியல்காரனுக்கும் அதுபோலவேதான். மோட்சம் போவதற்கு மாத்திரம்தான் இந்தி உதவக்கூடும். ஆனால், மோட்சம் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடப் போகிறது.

இந்தியா, 'இராம ராஜ்யமாக' ஆகும் என்று தோழர் கே. பி. பிள்ளை கருதுகிற போது—இந்தியா ரஷ்யா ஆகும் என்று ஏன் நான் கருதக்கூடாது? ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் அதிகத் தூரமில்லை—250 மைல்கள்தாம்! வகுப்பும் மதமும் வெகு அற்பமானவை என்று உண்மையிலேயே இந்தியர்கள் கருதக்கூடிய நாள் வந்தால், அன்றே இந்தியா ரஷ்யா ஆகிவிடும். அது கூடாது என்பதற்கு ஆகச் செய்யப்படும் சூழ்ச்சிகளில் ஒன்றுதான் இந்தி முயற்சி என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

தமிழ்நாடு ஒரு தனி நேஷனாக இருந்தது; இன்றும் இருக்கிறது; அதுதான் திராவிடம். அதனுடைய நாகரிகம், ஆச்சார அனுஷ்டானம் வேறு. வங்காளம், பம்பாய் வேறு. ஆங்கில ஆட்சியால் ஆங்கில மொழியால்தான் ஒன்றுக்கொன்று நேசபாவமான அறிமுகமாவது ஆகி இருக்கிறது. ஆங்கில ஆட்சியும் மொழியும் ஒழிந்து, இந்தி ஆட்சியும் மொழியும் வந்தால் அன்றே தமிழ்நாடானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நேஷனுடன் கலந்துவிடும்.

இனி பொதுவாக சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தியா பல மதம், பல வகுப்பு, பல தனிப்பட்ட இலட்சியம் கொண்ட கோரிக்கைகள் உள்ள நாடு. இது உலகில் உள்ள மற்ற நாடுகளைப் போல் மதம், அரசியல், சமூக வாழ்க்கை முதலியவைகளில் ஒரே மாதிரி இலட்சியமுடையதல்ல. கண்டிப்பாய் இந்து–முஸ்லிம் இலட்சியமும் பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார் இலட்சியமும் வேறு வேறாகவே இருந்துவருகின்றன. செல்வாக்கில்லாத இலட்சியமுடையவர்களை, செல்வாக்குள்ள இலட்சியமுடையவர்கள் இழித்தும் பழித்தும் கூறி கேவலப்படுத்துவதாலோ, கட்டுப்பாடாக உண்மையை மறைத்துப் பிரச்சாரம் செய்வதாலோ, கூலிகளை ஏவிவிட்டுக் காலித்தனம் நடக்கச் செய்வதாலோ எல்லோருடைய இலட்சியமும் ஒன்று என்று சொல்லிவிட முடியாது.



உதாரணமாக, இன்று பார்ப்பனர்கள் தங்கள் சமூகத்துக்கு என்று அனுபவித்து வரும் எந்த உரிமை இலட்சியத்தை விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்?

அதுபோலவே, முஸ்லிம்களும் தங்கள் சமூகத்துக்கு அல்லது மார்க்கத்துக்கு என்று அனுபவித்து வரும் எந்த உரிமை உணர்ச்சியை விட்டுக்கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள்? அதுபோலவே, பார்ப்பனரல்லாதாரோ அல்லது கீழ்சாதியார் என்பவர்களோ அனுபவித்து வரும் இழிவுகளையும் கொடுமைகளையும் நீக்க எந்த அளவுக்குப் பார்ப்பனர்களும் மேல்சாதியாரும் சம்மதிக்கிறார்கள்?

மேல்நாட்டில் இம் மாதிரியான சமூக, வகுப்பு, மார்க்கத் தொல்லை கிடையாது. குறிப்பாக நம் தென்னாட்டில் பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற தொல்லை பல ஆயிரக்கணக்கான வருடங்களாய் இருந்துவந்திருக்கிறது. இன்று சுமார் 50 வருட காலமாய்ப் பச்சையாய்—வெளிப்படையாய் அரசியலிலும், உத்தியோக இயலிலும், சமுதாய இயலிலும் தலைவிரித்து ஆடிவருகிறது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், இன்றைய தினம் நாம் இங்கு வாதம்செய்யும் இந்தி—அதில் பட்டதனாலேயாகும். இந்தி மொழியும் அதன் கலைகளும் தமிழ்நாட்டு மக்களுக்கு—குறிப்பாக பார்ப்பனரல்லாத ஏனைய மக்களுக்கு நேர் மாறானதாக இருக்கின்றன. இதை நான் இன்று மட்டும் சொல்லவில்லை.

சுயமரியாதையுடையவன் இந்தியை ஆதரிக்கமாட்டான். 1921-ம் வருடம் நான் பெரிய தேச பக்தனாய், தேசிய வீரனாய் இருந்து சிறைசென்று வந்த உடனே திருப்பூரில் கூட்டப்பட்ட தமிழ் மாகாண மாநாட்டில் நான் சொல்லி இருக்கிறேன். அதாவது, இன்று இந்தியைத் தமிழ் மக்களுக்குள் புகுத்தியாகவேண்டும் என்று பலாத்காரம் செய்யும் தோழர் இராஜகோபாலாச்சாரியார் என்ன காரணத்திற்காகத் தமிழ் மக்கள் இந்தி படிக்கவேண்டும் என்று சொன்னாரோ—அந்தக் காரணமாகிய இராமாயணத்தைப் படிப்பதையும், மனுதர்மத்தை உணர்வதையும் குற்றம் என்று சொன்னதோடு, அவைகளை நெருப்பில் போட்டு பொசுக்க வேண்டும் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். அன்று சொன்னதைப்பற்றிக் கவலை இல்லை, இன்று சொல்லுகிறேன்.

துளசிதாஸ் இராமாயணமானாலும் சரி, வால்மீகி இராமாயணமானாலும் சரி, கம்ப இராமாயணமானாலும் சரி, ஏதாவது ஒரு இராமாயணத்தைத் தோழர் கே. பி. பிள்ளை ஒப்புக்கொள்ளுகிறாரா? அதில் உள்ள தனது நிலையை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறாரா? அல்லது இங்குள்ள யாராவது இராமாயணத்திலும், மனுதர்மத்திலும், மற்றும் இந்தி புராண சாஸ்திரங்களிலும் உங்களுக்கு உள்ள நிலையை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா என்று கேட்கின்றேன். நான் அந்தத் தனிப்பட்ட புஸ்தகங்களில் உள்ள விஷயங்களைப் பற்றிக் கூட இப்பொழுது கேட்கவில்லை. இந்து மதம் என்பதில் இங்குக் கூடியுள்ள உங்களுக்கு உள்ள நிலையை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? அப்படி இருக்க, இராமாயணமும், புராணங்களும், இந்துமத சாஸ்திரங்களும் படிக்க இந்தி உதவும் என்றால் சுயமரியாதை உள்ள எவனாவது அதை ஒப்புக்கொள்ள முடியுமா?

மற்றும், வடநாடும் தென்னாடும் ஒரே இலட்சியமுடையதாகுமா? வடநாட்டாரால் இதுவரை தென்னாட்டாருக்கு ஏற்பட்ட நன்மை என்ன என்று யாராவது விரல்விட்டுச் சொல்லட்டும்! நம் மக்கள் ஏமாற்றப்பட, நமக்கு யோக்கியதை தெரியாத வடநாட்டாரைப் பிடித்துவந்து காட்டி வஞ்சித்ததல்லாமல், தென்னாட்டுச் சமூக, சமய, பொருளாதார, அரசியல் முதலிய விஷயங்களுக்கு வடநாடு எதில் பயன்பட்டது? நம்நாட்டுக்கு அழைத்து வரும்போது வடநாட்டவர்களை இந்திரன், சந்திரன், வீரன், சூரன், தியாகி, சத்தியவான், மகான் என்று விளம்பரம் செய்கிறார்கள். அவர்களைப்பற்றி அந்த உள்ளூர்க்காரர்களைக் கேட்டால், 'அவர்களுக்கு மிஞ்சிய மோசமானவர்கள் எந்நாட்டிலுமில்லை' என்கிறார்கள்.

ஆகவே, நாம் ஏமாறுவதற்குத்தான் வடநாடு உபயோகிக்கப்படுகிறது. இன்றைய அரசியலைப் பார்க்கின்றபோது, எக்காரணம் கொண்டாவது—எப்பாடுபட்டாவது நம்

படிப்பகம்

www.padippakam.com



நாட்டை வடநாட்டுச் சம்பந்தத்திலிருந்து தனியாகப் பிரித்துக்கொண்டால் ஒழிய நமக்கு விடுதலையோ மானமோ ஏற்படப்போவதில்லை. இன்று சிறிதாவது நமக்குச் சுயமரி யாதை உணர்ச்சியும், சுதந்திர உணர்ச்சியும் இருக்கிறதென்றால் அது நமது தனிப்பட்ட தமிழ்நிலை உணர்ச்சியாலேயும், இந்தி படிக்காததாலேயும்தான் என்று வலிமையாய்க் கூறுவேன். நமது இரத்தத்தில் அடிமை உணர்ச்சியைப் பாய்ச்சவே இன்று பார்ப்பன ஆதிக்கம் நம்முன் பலாத்காரமாய் இந்தியைப் புகுத்துவதாகும். இந்தியில் அரசியல் சுதந்திர ஞானம் கிடையாது; இந்தியில் பொருளாதார ஞானம் கிடையாது; இந்தியில் சமுதாய சமத்துவ ஞானம் கிடையாது; ஏதாவது இருப்பதாகச் சொல்லப்படுமானால், அவை இவையேயாகும். அதாவது:—

'ஒரு நாட்டு மக்களை ஆளவேண்டுமானால், அவர்களுக்கு கல்வி வாசனையும் அறிவுச் சுதந்திரமும் இல்லாமல் மடையர்களாக வைத்திரு.'

'ஒரு நாட்டு மக்களை என்றும் அடக்கி ஆளவேண்டுமானால், அவர்களுக்குப் பொருளாதார உரிமை இல்லாமல் சாமி, பூதம், பிசாசு என்கின்றதான மூடநம்பிக்கையைப் புகுத்திப் பயப்படுத்தி அவர்களது பொருள்களைக் கொள்ளையடி.'

'ஒரு நாட்டு மக்களை அடக்கி மிருகங்களிலும் கேவலமாய் என்றென்றும் அடிமைப் படுத்தி ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால், அந்நாட்டு மக்களை ஆயிரம் சமூகமாக ஆக்கி, ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பித்துச் சின்னாபின்னப்படுத்தி வை.'

என்பதல்லாமல் வேறு என்ன இருக்கிறது? நான் சாணக்கிய அரசியல் தந்திரம் முதல் இந்தியில் உள்ள பல அரசியல் நீதி சாஸ்திரங்களைப் பற்றியேதான் தெரிந்தவரை பேசுகிறேன். ஊரார் உழைப்பில் ஒரு சிறு சமூகம் உண்டு, வாழ்வதற்கு உரியதே இந்திக் கலைகளாகும். மற்றும் பாருங்கள்! நம் நாட்டில் மொத்தத்தில் இன்று 100-க்கு 9பேர்களே படித்தவர்கள். இவர்களில் பார்ப்பனர்கள் 100-க்கு 3பேராய் இருந்தாலும். அவர்கள் சமூகம் பூராவும் 100-க்கு 100பேர் படித்திருக்கிறார்கள். ஆங்கிலம் கற்றவர்கள் அவர்களில் 100-க்கு 50பேர் இருக்கலாம். நம்மில் தமிழ்ப் படித்தவர்களே 100-க்கு 5, 6 பேர்தாம் இருப்பார்கள். அதிலும் கிராம வாசிகளில் 100-க்கு 2, 3 பேர்கள் தாம் இருப்பார்கள். சில சமூகங்களில் ஒருவர் இருவரே இருப்பார்கள். பார்ப்பனர்களுக்கோ இந்தி வெகு சுலபமான மொழி. ஏனெனில், அவர்களுக்கு அது பாரம்பரிய மொழி. நமக்கு அது சுலபத்தில் வாயில் நுழையாத மொழி. பார்ப்பனர்கள் 100-க்கு 77பேர் இந்தியில் பாஸ் செய்தால் நம்மில் 100-க்கு 15பேர்கள் கூட பாஸ் செய்ய முடியாது. உத்தியோகத்துக்கு இந்தி ஒரு யோக்கியதையாய் வைத்துவிட்டால், நம்மவர்களுக்குப் பழையபடி 'பங்கா' இழுப்பதும், 'பில்லை' போட்டுக் கொள்வதுமான சேவக வேலைதான் கிடைக்கும்.

உதாரணமாக, அரசியலில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்படும் முன்பு சில படிப்புகளுக்கு—டாக்டர் முதலிய பரீட்சைக்கு சமஸ்கிருதம் படித்திருக்கவேண்டுமென்று பார்ப்பனர்களால் சூழ்ச்சி செய்யப்பட்டு இருந்தது. அதனாலேயே பார்ப்பனரும் மலையாளி களுமே பெரும்பான்மையாய் டாக்டர்களானார்கள். ஜஸ்டிஸ் கட்சி வந்தபிறகு—பனகல் அரசர் காலத்தில் சமஸ்கிருதம் படித்திருக்கவேண்டும் என்கின்ற நிபந்தனை எடுக்கப்பட்டு விட்டது. அதற்கப்புறமே பார்ப்பனரல்லாத தமிழ்மக்கள் பலர் டாக்டர்களாக முடிந்தது. அதுபோல்தான், இந்திக்கு உத்தியோக யோக்கியதையும் வைத்துவிட்டால்—பழையபடி, நாம் கல்வியில் இன்னும் அதிகமான பிற்பட்ட வகுப்புக்காரர்களாக ஆகிவிடுவோம்.

மாகாணக் கல்லூரியில் சமஸ்கிருதப் போதகருக்கு மாதம் 350 முதல் 500 ரூபாய் சம்பளம். தமிழ்ப் போதகருக்கு அதில் பாதிகூட இல்லை. 'அதிகாரி வீட்டுக் கோழி முட்டை அம்மிக் கல்லை உடைக்கும்' என்று ஒருவர் சொன்னார். அதுபோல், ஆதிக்கத்தில் உள்ளவர்கள் மொழி ஆனதால்—இந்தியை, தமிழை ஒழிக்கக் கட்டாய பாடமாக்கப்



போகிறார்கள். ஒரு சமயம் '10 ரூபாய் கேட்டால் 5 ரூபாயாவது வராதா?' என்கிறது போல் எண்ணிக்கொண்டு, தோழர் ஆச்சாரியார் கட்டாய பாடமென்றால், 'இஷ்ட பாடமாகவாவது வைத்துத் தொலையுங்கள்' என்று தமிழ் மண்டுகள் சொல்லாதா என்றே இந்த குயுக்தி செய்திருந்தாலும் செய்திருக்கலாம். எந்தப் பாடமாகவும் இந்தி நமக்கு எதற்கு? அதற்காகச் செலவிடும் நேரம், பணம், ஊக்கம் எல்லாம் தேசிய நஷ்டமல்லவா என்று கேட்கின்றேன். இந்த நாட்டில் இந்தி பாடமாக வைக்கப்பட்டால் தமிழர்கள் ஒழிந்தார்கள்—சுயமரியாதைக்குக் குழி தோண்டப்பட்டது என்றுதான் அர்த்தம்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு இதைப்பற்றி அதிகக் கவலையில்லை. அவர் களில் பலர் இராமாயணத்தைப் பூசிப்பவர்கள். அதைப்பற்றி நாம் இப்போது கவலைப்பட வேண்டாம். நம் தமிழ் மக்கள் இதை நன்றாய் உணரவேண்டும். அதாவது, இது ஒரு நெருக்கடியான சமயம்; இதில் ஏமாந்துவிட்டோமேயானால் தமிழன் தாசி மகனாகத் தானே ஆகிவிடுவான்? இப்பொழுதாவது அதற்கு என்று ஒரு சாதியும், ஒரு நாடும் மாத்திரமிருக்கிறது. இந்தி புகுந்துவிட்டால் தமிழர்கள் பூராவும்—பெண்கள் தாசி களாகவும், ஆண்கள் தாசி மக்களாகவும், தாசர்களாகவும் ஆகிவிடவேண்டியதுதான். அந்த நிலை ஏற்பட்ட பிறகு நாம் இருப்பதைவிட இறப்பதே மேல். கட்சி உணர்ச்சியை இதில் விட்டுவிடுங்கள்.

[கொல்லம்பாளையத்தில், 19-9-1937-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' மலர் 3 : இதழ் 6]

## 2. சுதந்திரத் தமிழ்நாடு

தமிழ்நாடு என்பது திராவிடநாடு என்றும், திராவிடநாடு என்பதானது இன்னது என்றும் வெகுகாலமாகவே ஐரோப்பிய அறிஞர் முதல் பல உலக ஆராய்ச்சிக்காரர் களாலும், இந்திய சரித்திர ஆராய்ச்சியாளராலும் எல்லை காட்டி வகுக்கப்பட்டிருக்கிறது என்றும் நான் இது விஷயமாய்ப் பேசுகிற இடங்களில் எல்லாம் இதைப்பற்றி விளக்கிப் பேசியே வந்திருக்கிறேன்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலாகிய மொழிகளைத் தாய்மொழி யாகப் பேசிவந்த மக்களையே மிகுதியாகக் கொண்ட நாடுகள்—இன்று திராவிடம் என்று சொல்லப்படுவது யாவரும் அறிந்ததேயாகும். அந்தத் திராவிடம் என்பது பெரிதும் சென்னை மாகாணமாகவே இருக்கிறதுடன் மற்றும் சிறிது சென்னை மாகாணத்தைத் தொட்ட சுற்றுப்புற நாடாகவும் இருக்கிறது.

இந்த விஸ்தீரணத்திற்குட்பட்ட முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் தங்களை ஆரியர் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் ஆகிய எல்லோரும் திராவிடர்கள் என்ற தலைப்பின்கீழ்தான் வருவார்கள். இவற்றை விளக்குவதோ மற்றும் இது சம்பந்தமாக இனியும் விளக்கிச் சொல்லுவதோ, கஷ்டமான காரியம் அல்ல என்பதோடு, இதுவரை சாதாரண நிலையில், ஆராய்ச்சியில், விவகாரத்தில் இவை வழங்காத விஷயங்கள் என்றும் சொல்லிவிட முடியாது என்று கருதுகிறேன்.

மேற்கண்ட விளக்கத்திற்கு உட்படாத, 'தமிழரல்லாதவர்கள் இருந்தால் அதைப் பற்றி என்ன?' என்று கேட்பீர்களானால் அவர்களுக்குள்ள உரிமைகள், அவர்களது முன்னேற்றத்துக்கு ஏதுவான அபிலாசைகள் நியாயப்படி காக்கப்படும்; யாரும் சந்தேகப் பட வேண்டியதில்லை.

திராவிட நாட்டில் பல மொழிகள் இருக்கின்றனவே என்றால், இப்போது காங்கிரஸ் தீர்மானித்து இருப்பதை அடிப்படையாகக் கொண்டே, திராவிடதேசம் என்பது—அவசியப் பட்டால் திராவிட மொழிவாரியான மாகாணங்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



உதாரணமாக, பிரிட்டனானது ஒரு தேசமாகவும், ஒரு ஆட்சியாகவும், ஒரு சமயம், ஒரே சமுதாயக் கொள்கை கொண்டதாகவும் இருந்தபோதிலும்—வேல்ஸ், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய மாகாணங்கள் பெரிதும் மொழிவாரியாக இருப்பது போலும், மற்றும்பல மேல்நாடுகளில் இருக்கும் உள்மாகாணப்பிரிவுகள் போலும் திராவிடம் என்ற தலைதேசத்தில் மொழிவாரி மாகாணங்கள் இருக்கும்.

‘இதை எப்படிக் காப்பாற்றிக்கொள்ள முடியும்’? என்று கேட்கிறீர்கள். பூரண சக்தி திராவிடத்திற்கு ஏற்பட்டு சர்வதேச சங்கத்தோடு (League of Nations) ஒரு தனி சுயேச்சை நாடாக (Independent Country) ஆகும் வரை, சிலோன், பர்மா போலும் அல்லது சில சுதேச சமஸ்தானங்களான தனி சுயநிர்ணய நாடுகள்போலும் பிரிட்டனுடைய பாதுகாப்பின் மூலம் காக்கப்படும்.

‘இந்தியாவின் மற்ற பாகங்களுடன் திராவிடம் வைத்திருக்கும் சம்பந்தம் எப்படியிருக்கும்?’ என்று கேட்கிறீர்கள். எப்படியென்றால், மேற்கண்ட பர்மா, சிலோன் ஆகிய நாடுகள் மற்ற நாடுகளுடன் வைத்திருக்கும் சம்பந்தம்போல இருந்து கொண்டு—திராவிடர் அல்லாத வெளிநாட்டார் திராவிடத்தில் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் முதலியவற்றில் ஆதிக்கம் செலுத்தாமலும் திராவிட செல்வத்தைச் சுரண்டிக்கொண்டு போகாமலும் பார்த்துக்கொண்டு நேசதேசமாய் இருந்துவரும்.

‘திராவிட தேசம் பிரிக்க முடியாதது’ என்கிறீர்கள். அதற்குப் பல சரித்திர ஆதாரம், இன்றைய கலை சமுதாய பழக்கவழக்கம் முதலியனவும், பிரத்தியேக ஒற்றுமை எல்லை முதலியவைகளும் திராவிடம் என்பதை மிகச் சுலபமாகப் பிரித்துக் காட்டக்கூடியதாகவேயிருக்கிறது.

‘இந்தியா பெரிய நாடாக—ஒரு தேசமாக இருப்பதால் நன்மை’ என்கிறீர்கள். இன்று இந்தியா 40 கோடி ஜனத்தொகையும் பல ஆயிரக்கணக்கான மைல் சுற்றளவும்—பல சாதி சமயக் கூட்டுறவுடனும் பல மாகாண மக்களுடன் கலந்து ஒரு நாட்டினராயும் இருந்து வருவதின்மூலமே ஒரு சிறுபான்மையார் கட்டுப்பாடான ஒற்றுமையாயிருந்து கொண்டு தந்திரத்தில் ஒவ்வொரு மாகாணப் பெருங்குடி மக்களையும் அவர்களுக்குள் ஏற்பாடு செய்துவிட்ட பாகுபாடுகளால் சிறுபான்மையினராக ஆக்கி, அவர்கள்மீது சுலபத்தில் ஆதிக்கம் செலுத்தவும்; ஒரு மாகாணத்தானை மற்ற மாகாணத்தானுக்குக் காட்டிக் கொடுத்து, ஆதாயம் பெற்று அதன் பயனாய்ச் சிறுபான்மையினரே மற்ற பெரும்பான்மையானவர்களை அடக்கி ஆளவும் முடிந்து வந்ததுடன், இனியும் அப்படித்தான் முடிகிறதே தவிர தாங்கள் கூறுகிறபடி ஒன்றாயிருந்தால் ஒற்றுமையும் பலமும் நாட்டிற்கு ஒரு நன்மையும் செய்து விடவில்லை.

ஆதலால் பரந்தநாடும், அதன் கலை, சமுதாயம், மதம் முதலியவைகளும் பொருத்தமில்லாத மக்களும் ஒன்றாயிருப்பதால் சுலபத்தில் மற்றவர்களால் ஏமாற்றப்படமுடிகிறதே தவிர முற்போக்கு அடையவோ, உரிமை பெறவோ முடிவதில்லை.

இன்றும் சரித்திரம் பார்க்கலாம். தனித்திருந்த காலத்தில் திராவிடம் முதலிய நாடுகளில் மக்களின் நிலைமையும் சமுதாயமும், பொருளியல், அரசியல், வீரம், சுயமரியாதை உணர்ச்சி ஆகியவை எப்படி இருந்தன? இன்று எப்படி இருக்கின்றன? என்று பார்த்தாலே தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் நிலைமை நல்லதா, கெட்டதா என்று விளங்கும். ‘அகல உழுவதைவிட ஆழ உழுவது மேலானது’ என்பதுபோல், இம் மாதிரி நம்நாட்டைப் பிரித்துக்கொண்டு அதற்கேற்றபடி நடந்து முன்னேற்றமடைவதாலேயே மற்ற மாகாணக்காரர்கள் நம்மைப் பின்பற்றவேண்டியவர்களே யாவார்கள்.

ஏனெனில், இன்று நாட்டில் ஒற்றுமை கெட்டு நலம் குன்றி இழிநிலையில் இருப்பதற்குக் காரணம், இந்நாட்டு மக்களுக்குத் தாங்கள் ஒரே சகோதரர்கள் என்ற உணர்ச்சி



இல்லாததேயாகும். இதற்கு முக்கிய காரணம், தமிழர் அல்லது திராவிடர்கள் பிறவியில் உயர்வு-தாழ்வு கொள்கை இல்லாதவர்களாயிருப்பதும், திராவிடத்தில் புகுந்து குடியேறி ஆதிக்கம் கொண்ட ஆரியர் பிறவியில் உயர்வு-தாழ்வு என்பதையே அடிப்படையான கொள்கையாகக் கொண்ட சமய சமூகத்தவராயிருப்பதும் ஆகும்.

‘தமிழ் நாடு தமிழருக்கே!’ என்று இப்போது நடைபெற்றுவரும் பிரச்சாரத்தைப் பற்றித் தமிழ்நாட்டில் எங்கும் பேசப்பட்டு வருகிறது. நம் எதிரிகளும், தங்கள் சுயநலத்திற்காகவே நம் கூட்டத்தில் இருக்கும் சில வேஷதாரிகளும் இதைத் திரித்துக் கூறுவதும், இதைப்பற்றி விஷமப்பிரச்சாரம் செய்வதும், இதற்கு எதிரான ஒரு கிளர்ச்சியை உண்டாக்க சூழ்ச்சி செய்வதுமான காரியங்களைப்பற்றிக் கேள்விப்படுவதோடு, சில விஷயங்களை நேரிலும் பார்க்கிறோம். இது விஷயமாக நான் தூத்துக்குடியில் பேசிய பேச்சை வைத்து ‘மெயில்’ பத்திரிக்கை எழுதிய கண்டனத்திற்கு, சென்னை மெமோரியல் ஹாலில் சொன்ன சமாதானம் சமீபத்தில் நம் பத்திரிகையில் வரக்கூடும். ஆனாலும் ‘மெயில்’ பத்திரிகைக்கு எழுதி அனுப்பிய விளக்கம் 20-11-1939-ந் தேதி ‘மெயிலி’ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன் அதன் தமிழ்க் கருத்து இன்றுவேறு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், இனி, அப் பிரச்சாரம் தீவிரமாகச் செய்யப்பட விருக்கிறபடியால் அதைப் பற்றிய விளக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

‘தமிழ் நாடு தமிழருக்கே!’ என்ற அபிப்பிராயம் சென்ற வருடம் டிசம்பரில் சென்னையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச் சங்க (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டிலே வாசிக்கப்பட்ட எனது பிரசங்கத்திலே குறிப்புக் காட்டப்பட்டிருக்கிறது. மற்றும், அதற்கு முதல்நாள் வேலூரில் நடந்த தமிழ் மாநாட்டில் தலைமை வகித்த தோழர் சர் ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களும் தலைமைப் பேருரையில் விளக்கி இருக்கிறார்கள். மற்றும், அது பற்றியே பெரிதும் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்னும் சொல் இன்று தமிழ் நாடெங்கும், தமிழ் மக்களது இலட்சியக் குறிச்சொல்லாகத் தமிழ்மக்களால் ஒலிக்கப்படுகிறது.

அன்றியும், ‘தமிழ்நாடு தமிழருக்கு’ என்பதில் யாருக்காவது அதிருப்தியோ, அபிப்பிராய பேதமோ இருப்பதாக இதுவரை நமக்கு எவ்வித தகவலோ, மறுப்போ வந்தது கிடையாது.

பார்ப்பனப் பத்திரிகைகள் சிலவற்றிலும், அவர்களது கூலிகளது வாய்கள் சிலவற்றிலும் ஏதோ பொருத்தமற்ற கூப்பாடுகள் இரண்டொன்றைக் காணவும், கேட்கவும் நேர்ந்தது என்றாலும் அதுவும் எங்கும் மறுமுறை கிளம்பினதாகத் தெரியவில்லை.

ஒரு பார்ப்பனப் பத்திரிகை மாத்திரம், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்றால், ‘எலி வளை எலிகளுக்கே’ என்று எழுதிற்று. மற்றொரு பார்ப்பனக் கூலியின் வாய், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்றால், ‘கன்னடியனுக்குத் தமிழ்நாட்டில் என்ன வேலை?’ என்று கூவிற்று. உள்ளேயிருந்தே உலை வைக்கக் கருதி இருக்கும் ஒரு தோழர் ‘தமிழ்நாடு தமிழருக்கே என்றால், ஆந்திர, மலையாளி கதி என்னாவது?’ என்று விஷமப் பிரச்சாரம் செய்தார். இவை தவிர வேறு விதமான எதிர்ப்புகளோ அதிருப்திகளோ வந்ததாக நமக்குத் தெரியவில்லை. எப்படி இருந்தாலும் சரி, அந்த இலட்சியமே இன்று தமிழ் மக்களின் குறிக்கோளாய் இருப்பதால் அதை விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

‘தமிழ்நாடு தமிழருக்கே!’ என்பதில் நாஸ்திகமோ, மதமொழிப்போ, வகுப்புத் துவேஷமோ தொக்கி இருக்கிறது என்று யாராவது சொல்லி வருவார்களேயானால், அவர்கள்-ஒன்று, விஷயம் அறியாதவர்கள்; அல்லது, வேண்டுமென்றே விஷமப் பிரச்சாரம் செய்யும் அயோக்கியர்களேயாவார்கள். ஏனென்றால் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று சொல்லும் தோழர்கள் சர் பன்னீர்செல்வம், குமார ராஜா முதலாகிய தலைவர்கள் நாஸ்திகர்களோ, மதமொழிக்கும் உணர்ச்சியுடையவர்களோ அல்லர்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாடு என்று இதுகாறும் பேசியும், எழுதியும் வருவதெல்லாம்; தமிழ்நாடு என்பதற்குத் திராவிடநாடு என்ற பொருளோடு இல்லாமல், தமிழ்மொழி பிரிவினையைக் கொண்ட கருத்தில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில், 'தமிழ்நாடு' என்றால், 'திராவிட நாடு' என்றும் நாம் எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் சிறிதுமில்லாமல் எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. அன்றியும், 'திராவிடமே தமிழ்' என்று மாறிற்று என்றும் 'தமிழே திராவிடம் என்று மாறிற்று' என்றும் சரித்திர ஆசிரியர்கள் முடிவு கண்டதாகக் குறிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. பழங்காலத்து அகராதிகளும் அப்படியே சொல்லுகின்றன.

['மெயில்' பத்திரிகையில் ('The Madras Mail') 20-11-1939-ல் வெளியிடப்பட்ட விளக்க அறிக்கை—'குடி அரசு' 26-11-1939]

## 3. தமிழ்நாடு தமிழருக்கே

தமிழ் மக்கள், இன்று தங்களை உண்மைத் தமிழரென்றும்—கலப்படமற்ற தனித் தமிழ்ச் சாதி, 'Race' என்றும் ஒருவன் சந்தேகமறக் கருதுவானாயின், அவன் உடனே தன்மீது சுமத்தப்பட்டிருக்கும்—தனக்கு எவ்வகையிலும் எப்போதும் சம்பந்தமிருந்திராத தான—தன்னை (தமிழ்மகனை) சூத்திரன் என்றும், சண்டாளன் என்றும் கூறும்படியான சமயத்தை உதறித் தள்ளிவிடவேண்டியது முதற் காரியமாகும்.

அடுத்தாற்போல், அத் தமிழ் மகன் தமிழ்நாட்டின் விடுதலையும், சுதந்திரமும், செல்வப் பெருக்கும், தொழில் மேம்பாடும்தான் தன்னுடையது என்றும்; இவற்றிற்காக உழைப்பதுதான் தனக்காக—தமிழ் மக்களுக்காக—தமிழ் நாட்டுக்காகச் செய்யும் தொண்டு, கடமை என்றும் கருதவேண்டும்.

இப்படிக் கருதாததாலேயேதான் தமிழன் இன்று முற்கூறப்பட்ட பல இழிவுகளுக்கு ஆளாகி, நிரந்தர இழிமகனாய் இருக்கவேண்டியவனாய் இருக்கின்றான்.

சுருங்கக் கூறின், தமிழன் ஈனநிலைக்குக் காரணம்—இந்துமதத்தைத் தனது மதம் என்று கருதியதும், இந்தியா பூராவையும் தன்நாடு (தேசம்) என்று கருதியதும், இவ்விரண்டுக்கும் உழைக்கும் தொண்டே மக்கள் தொண்டு, தேசத் தொண்டு (தேசாபிமானம்) என்று கருதி வருவதுமேயாகும்.

'இந்திய தேச அபிமானம்'—என்பது, தமிழன் பல நாட்டாரின் நலனுக்கு உழைத்துப் பல நாட்டாருக்கு அடிமையாய் இருப்பது என்பதாகும்.

இந்த நிலை அடியோடு அழியாமல் தமிழனுக்கு விடுதலை, சுதந்திரம், தன்மானம் என்பவை ஏற்படப் போவதில்லை.

தமிழ்நாட்டுத் தொழில்முறைகளை எடுத்துக்கொண்டோமேயானால், அதுவும் தமிழனுக்குப் பயன்படுவதில்லை என்பது விளங்கும்.

இரும்புத் தொழிலில் பம்பாய்க்காரர், பாரசீகக்காரர் உரிமைபெற்றுப் பயனடைகிறார்கள்.

உலோகத் தொழிலையும் பம்பாய்க்காரர், ஷோலாப்பூர்க்காரர் உரிமையாக்கிப் பயனடைகிறார்கள்.

துணித் தொழிலை பம்பாய், ஆமதாபாத்காரர்கள் கைப்பற்றிப் பயனடைகிறார்கள். இந்தத் தொழில்கள் இயந்திர உதவியினால் செய்யப்படுவதையே இங்குக் குறிப்பிடுகின்றோம். அதனால் தமிழ்த் தொழிலாளிகளுக்கு வேலையில்லை; தமிழ் முதலாளிக்கு இலாபம் இல்லை.



மற்றும், லேவாதேவித் தொழிலை எடுத்துக்கொண்டால், அவை பெரிதும் மார்வாரி நாட்டானும், குஜராத்தி, மூல்தான் நாட்டானுமே ஏகபோக உரிமையாக்கி அவர்கள் கொண்டுபோகும் செல்வம் கொஞ்சமா? அவை எப்படிப் போகின்றன என்பதைப் பார்த்தால் தமிழ்க் கூலிகள், தொழிலாளர்கள், ஏழைகள் ஆகியவர்களின் செல்வத்தைக் கையைத்திருகிப் பிடுங்கிக்கொண்டு போவதுபோல் மார்வாரிகள் கொண்டுபோகிறார்கள்.

மற்றும், தமிழ் வியாபாரிகள், ஏழைக் கிராமக் குடியானவனையும் தொழிலாளிகளையும் ஏமாற்றி வஞ்சித்துத் தேடும் செல்வம் அத்தனையும் பகற்கொள்ளை—வட்டிக்கொள்ளை என்று சொல்லப்படுவதுபோல் கோடி கோடியாய் சிந்து மாகாணத்திற்கு வட்டியின் பேரால் கடத்திச்செல்லப்படுகிறது. அதன் பயனாகத் தமிழ்நாட்டில் உள்ள பெரும் பெரும் வர்த்தகர்கள் மிக மோச நிலைக்கு வந்துவிட்டார்கள். மணல் வீடு கட்டிச் சரிந்து மட்டமாவதுபோல், தமிழ் வியாபாரிகள் தினம் தினம் கடன்காரராகி—பாப்பராகி—'இன்சால்வென்டாகி'த் தற்கொலை செய்து கொள்ளுவதும், நாட்டைவிட்டு ஓடுவதுமான நிலையில் இருந்து வருகிறார்கள்.

வியாபார நிலையக் காரியஸ்தர்கள் என்பவர்களுக்கோ, மாதம் ரூ. 100 சம்பளம் வாங்கின குமாஸ்தாவுக்கோ, இன்று மாதம் 25 ரூபாய் கொடுப்பதற்கு வியாபாரிக்குச் சக்தியில்லை. மாதம் 7 ரூபாய்க்கும், 8 ரூபாய்க்கும் கணக்குப் பிள்ளைகள் தவிக்கிறார்கள்; மூல்தானி, மார்வாரி வீட்டுச் சமையல்காரன் மாதம் 90 ரூபாய் சம்பாதிக்கிறான்.

கம்பளத் தொழிலும் பஞ்சாப் மாகாணக்காரன் கொள்ளைக்கு உதவுகின்றது. இதுபோலவே, மற்றும் அனேகமாக சரீரக் கூலித்தொழில் போக—மற்ற இலாபம் தரும் இயந்திரத் தொழில்கள், மூளைத் தொழில்கள் என்பவைகள் எல்லாம், பெரிதும் தமிழ் நாட்டார் அல்லாதவர்களால்—தமிழரல்லாதவர்களால் கைப்பற்றப்பட்டு, செல்வம் தேடப்பட்டு, திரட்டிய செல்வமனைத்தும் தமிழ் நாட்டைவிட்டு வெளிநாட்டிற்குக் கடத்தப்படுகிறதுடன், தமிழனுக்கு விரோதமாகவும் அவை உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்தப்படி பாழாவதும் கடத்தப்படுவதுமானது மேல்நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்குப் போனால் என்ன? அல்லது கீழ்நாட்டுக்குப் போனால் என்ன?

அரசியல் துறையிலும் நாம் (தமிழன்) வேறு நாட்டானுக்கே அடிமையாய் இருக்க வேண்டுமானால்—அது மேல்நாட்டானுக்கு அடிமையானால் என்ன? வடநாட்டானுக்கு அடிமையானால் என்ன?

தமிழனின் செல்வம்தானாகட்டும், தமிழ்நாட்டை விட்டுக் கடத்தித்தான் ஆகவேண்டுமானால்—அது மேல்நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்குப் போனால் என்ன?

எனவே தோழர்களே! இக் கட்டுரையில் இக் கருத்து சம்பந்தமான சில விஷயங்களை மட்டுமே வெகு சுருக்கமாகக் குறிப்பிட முடிந்தது. இன்னும் இதைப்பற்றி ஏராளமாகத் தக்க ஆதாரங்களோடு எழுதலாம்; எடுத்துக் காட்டலாம்.

ஒவ்வொரு தமிழ்மகனும் இவைகளை நன்றாய்ச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பார்த்தபின் ஆரியப் புரட்டு—வடநாட்டுப் புரட்டு ஆகியவைகளிலிருந்து மனிதன் விடுதலையாக முயற்சிக்க வேண்டும். பாழும் தேசிபத்தால், தமிழர்களாகிய நாம் 50 ஆண்டுகளைப் பாழாக்கிவிட்டோம். நாட்டையும், மக்கள் சமூகத்தையும் உண்மையாய் மேன்மையடையச் செய்ய முயற்சித்த ஒப்பற்ற பெரியார்களை—'நாத்திகன்', 'தேசத் துரோகி' 'சுயநலக்காரன்' என்றெல்லாம் வைது அவர்கள் பாடு பயன்படாதமுறையில் செய்து விட்டோம்.

உதைக்கும் காலுக்கு முத்தமிட்டுப் பூசை செய்கிறோம்; மலத்தை மனமார முகருகிறோம்; மானமிழந்தோம்; பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை இழந்தோம்; மாற்

படிப்பகம்

www.padippakam.com



றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம். இதற்குத்தானா தமிழன் உயிர் வாழவேண்டும்? எழுங்கள்! நம்மை ஏய்த்து அழுத்தி, நம் தலைமேல் கால்வைத்து ஏறி மேலே போக—வடநாட்டானுக்கும், தமிழரல்லாதவனுக்கும் நாம் படிக்கல் ஆகிவிட்டோம்.

இனியாவது, 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று ஆரவாரம் செய்யுங்கள்!

உங்கள் கைகளில், 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று பச்சை குத்திக்கொள்ளுங்கள்!

உங்கள் வீடுகள்தோறும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள்!

நம் வீட்டுக்குள் அன்னியன் புகுந்துகொண்டதோடல்லாது, அவன் நம் எஜமான் என்றால்—நமக்கு இதைவிட மானமற்ற தன்மை, இழிதன்மை வேறு என்ன எனச் சிந்தியுங்கள்!

புறப்படுங்கள்! தமிழ்நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கை உடைத்துச் சின்னா பின்னமாக்குங்கள்!

தமிழ்நாடு தமிழருக்கே!

[கட்டுரை—'குடிஅரசு' 23-10-1938; 'விடுதலை' 3-12-1957]

## 4. இந்து-முஸ்லிம் பிரச்சினை

'முஸ்லிம் இந்தியா' என்றும், 'இந்து இந்தியா' என்றும் பிரிக்க வேண்டுமென ஜனாப் ஜின்னா கூறியுள்ள திட்டம் எனக்கொரு ஆச்சரியத்தையும் தரவில்லை. ஏனெனில், நான், இந்தியாவிலிருந்து 'திராவிடநாடு' தனியே பிரிக்கப்படவேண்டுமென்று கடந்த இரண்டு ஆண்டுகளாகவே வற்புறுத்தி வருகிறேன்.

ஆரிய ஆதிக்கம் மிகுந்த காங்கிரஸ் ஆட்சியின் இரண்டாண்டு அனுபவம், ஆரியரல்லாதார் உள்ளத்திலே திகைப்பை உண்டாக்காமல் இருந்திருக்க முடியாது. இதனாலேயே பிரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் உண்டாகிவிட்டது. முஸ்லிம்கள் தனி நாட்டைப் பிரித்துக்கொண்டு தனியாட்சி நடத்த விரும்புவது இயற்கையாக எழும்பும் எண்ணமேயாகும். ஜனாப் ஜின்னா இந்தப் பிரிவினைக்குக் கூறும் காரணங்கள் மறுக்க முடியாதன; அவரது கோரிக்கையும் நியாயமானதே. காந்தியார் சதாகாலமும், பச்சையாகவே, தாம் விரும்பும் சுயராஜ்யம் இராமராஜ்யம்தானென்றும்—தமது வாழ்க்கையின் இலட்சியமே இந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்வதுதானென்றும் கூறிக்கொண்டிருக்க, தோழர் சவர்க்கார் போன்ற இந்துமகா சபைத் தலைவர்கள், 'இந்துஸ்தானம் இந்துக்களுக்கே' என்ற போர் முழக்கம் செய்து கொண்டுமிருக்கக் கண்ட பிறகும்—முஸ்லிம்கள் கைகட்டி, வாய்பொத்தி இருப்பார்கள் என்று யார்தான் எதிர்பார்க்கமுடியும்?

இந்து-முஸ்லிம் பிரச்சினை தீர்க்கப்பட முடியாததோ என்று திகைக்குமளவில் இருக்கிறது. இதனைத் தீர்த்துக்கொள்ள ஜனாப் ஜின்னாவின் திட்டமே அறிவு ததும்புவது. நான் ஜனாப் ஜின்னாவின் கோரிக்கையை ஆதரிப்பதோடு, மற்றொரு முக்கியமான அம்சத்தையும் வற்புறுத்த விரும்புகிறேன். முஸ்லிம்கள் 'முஸ்லிம் நாடு' என இந்தியாவில் தனி நாடு பிரித்துக்கொள்ள முடியும்; ஆனால், இந்துக்களால் முடியாது. ஏனெனில், இந்துக்கள் என்று கூறப்படும் தொகுப்பில் பலப் பல வர்க்கத்தார் உள்ளனர்.

நாலு கோடிக்கு மேலுள்ள திராவிடர்களுக்கும்—இந்துக் கொள்கை, கோட்பாடு என்று கூறப்படும் பார்ப்பனீயத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மொழி, கலை, சரிதம், மார்க்கம், பழக்க வழக்கம் ஆகியவைகளில்—ஆரியத்திற்கும், திராவிடத்திற்கும் தீர்மானமான வேறுபாடுகள் உள்ளன. கடவுள்கள் கூட வேறு, வேறு!



எனவே, 'முஸ்லிம் இந்தியா' என ஜனாப் ஜின்னா கேட்பதுபோலவே—தமிழ், ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய மொழி வட்டாரங்களைக்கொண்ட 'திராவிட நாடு' பிரிக்கப்படவேண்டுமென நாம் கேட்க உரிமையிருக்கிறது. 'இந்து இந்தியா' எனப் பொதுவாகக் கூறுவது முடியாத காரியம். அதை ஒட்டவைத்துக் காட்டினால் அது வெறும் பார்ப்பனீய ஏகாதிபத்தியமாகவே இருக்கும். அதனைத் திராவிடர் கடுமையாக முடிவுவரை எதிர்ப்பர். எனவே, இந்தியாவிலிருந்து திராவிட நாட்டைத் தனியே பிரித்துவிடுவது மிக அவசியமாகவும் அவசரமாகவும் செய்யவேண்டியதாகும். நான் இதனை 1938 டிசம்பர் 28-ல் சென்னையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டுத் தலைமையுரையில் கூறியுமுள்ளேன்.

['குடிஅரசு'—அறிக்கை—31-3-1940]

## சர். ஆர். கே. எஸ்.

சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் புதுக்கட்சியை ஏற்படுத்த முயற்சிப்பதும், அதற்கு ஜஸ்டிஸ் கட்சி என்று பெயர் கொடுக்கப் பார்ப்பதும், அவரைப் பல தோழர்கள் ஆதரிப்பதும், மற்றும் பலவிதமான காரியங்கள் நடந்துவருவதும் ஏன் என்பதும், எதற்காக என்பதும் இப்போது அதாவது, சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் சென்னையில் சமீபத்தில் சர்வ கலாசாலையில் பேசிய பேச்சிலிருந்து மக்களுக்கு விளங்கியிருக்கலாம்.

என்னவென்றால், சர். ஆர். கே. எஸ். அவர்கள், இந்தியா ஒரு நேஷன் (ஒரு தேசம்) என்றும், இந்தியா துண்டாக்கப்படக்கூடாது (அதாவது பாகிஸ்தான், திராவிடநாடு ஆகிய தனிப்பிரிவினை கூடாது) என்றும், இனத்தின் பேரால், மொழியின் பேரால், மதத்தின் பேரால் மனித சமுதாயம் பிரிக்கப்பட்டு, அதற்கு ஏற்றபடி நாடு பிரிக்கப்படுவது கூடாது என்றும் சொல்லிவிட்டார்.

சரித்திர காலமாக இந்தியா ஒரே நாடாக இருந்துவருகிறது என்றும், இது இயற்கை அமைப்பு என்றும் காட்டுகிறார்.

இது எவ்வளவு அதிசயப்படத்தக்க சேதி என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இந்தியா ஒரு நாடு அல்ல. திராவிடநாடு, பாகிஸ்தான் தனி நாடுகளாகப் பிரிக்கப்படவேண்டும். ஆரிய திராவிட இனங்கள் வெவ்வேறு இனங்களாகும் என்கின்றவையான இந்தப் பிரச்சினைகள் இன்றைக்கு 5, 6 வருஷங்களுக்கு முன்பிருந்தே ஆகாயம் முட்ட ஊசலாடிக் கொண்டிருந்துவந்து, இந்தியா முழுவதிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த, எல்லா அரசியல் வாதிகளுடையவும், பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த மக்களுடையவும் கவனத்தை இழுத்து நிற்கின்றதான ஒரு முக்கியமான பிரச்சினையாகும்.

அதோடுகூடவே, இந்தப் பிரச்சினைகளில் கலந்து தொண்டாற்றி வந்த மக்களோடு கூடிக் குலாவிக்கொண்டே இருந்து வந்திருக்கின்றவராவார் சர். சண்முகம் செட்டியார் அவர்கள்.

அப்படி இருக்க, இவைகளுக்கு விரோதமாக இன்று திடீரென்று வெளிவந்து ஒரு பெரிய வெடி குண்டைப்போட்டு, இந்தப் பிரச்சினைக் கிளர்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் அழிக்கமுன் வந்து இருக்கிறார் என்றால் இதற்கு என்ன கருதுக்கொள்வது?

இதுவரை சர். செட்டியார் அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்த இடத்திலும் இந்தப் பிரச்சினைகளுக்கு விரோதமாக ஒரு வார்த்தைகூடப் பேசியதாக நமக்குத் தெரியவில்லை. ஆதலால், இந்த அபிப்பிராயங்கள் இவருக்கு முன்பிருந்தே இருந்து வந்தவைகளா, அல்லது இப்போதுதான் கொள்ளப்பட்டவைகளா என்பது யோசிக்கத்தக்க மற்றொரு விஷயமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



எப்படி இருந்தயோதிலும், சர். சண்முகம் செட்டியார் அவர்கள் திராவிடர் கழகம் என்னும் ஜஸ்டிஸ் கட்சியில் இருக்க முடியாமல் போய், புதிய கட்சியை ஏற்படுத்தவேண்டிய அவசியம் என்ன என்பதற்குக் காரணம், இந்த இந்தியாவைத் துண்டு போடக்கூடாது என்கின்ற இந்திய தேசியமும், இனத்தின் பேரால் அரசியல் இருக்கக்கூடாது என்கின்ற உலக அரசியல் தத்துவமும்தான் என்பது யாவருக்கும் விளங்கி இருக்கலாம்.

இதற்கு நாம் சமாதானம் சொல்லவேண்டியது அவ்வளவு அவசியமா என்றே இப்போது கருதுகிறோம்.

எதிர்க்கட்சிக்காரராகிய காங்கிரஸ்காரர்களும், காந்தியாரும், டாக்டர் இராஜ கோபாலாச்சாரியார் அவர்களும்கூட இவ்வளவு இந்திய தேசீயம் காட்டவில்லை.

பிரிட்டிஷாரும்கூட பிரிந்துகொள்ளலாம் என்றும், இந்தியா ஒரு தேசமல்ல—அது ஓர் உபகண்டம் என்றும் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் திராவிடநாட்டைப்பற்றியும், திராவிட இனத்தைப் பற்றியும் இது தனித்த ஆட்சி உடையதாயிருக்க வேண்டுமென்பது பற்றியும், நாமும் மற்றும் பல அறிஞர்களும் பொதுநல சேவையில் ஈடுபட்டவர்களும் சொல்லிவந்த ஆதாரங்களுக்கு இதுவரை வேறு யாரும் மறுப்போ, சமாதானமோகூட சொல்லாமல் இருக்கும் இந்த நிலையில், நம்மில் ஒருவராய், அதுவும் பிரதானப்பட்டவருள் ஒருவராய்க் கருதிவந்த ஒருவரால் இன்று திடீரென்று சொல்லப்பட்ட கருத்துக்கள் நமக்கு எவ்வளவு பலவீனத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதுதான் முக்கியமாய்க் கருதப்படவேண்டியதாகும். ஆனாலும், திராவிடநாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி துவக்கக் காலத்தில் யார் யார் இதற்கு அனுகூலமாய் இருப்பார்கள்; யார் யார் இதற்கு எதிர்ப்பாய் இருப்பார்கள் என்பதைப் பற்றிய சிந்தனை ஒன்றும் இல்லாமல், அந்தப் பிரச்சினை தோன்றுவதற்கு அவசியமாயிருந்த பலமான காரணங்களைக் கொண்டும் அக் காரணங்களை ஒழிக்கவேண்டும் என்பதின்மீதுள்ள கவலையின் பலத்தைக் கொண்டுமே பலாபலனை இயற்கைக்கு விட்டுத் துணிந்துகொண்ட ஓர் அபிப்பிராயமேயாகும்.

ஆதலால், மற்றவர்கள் எதிர்ப்பும் ஆதரிப்புமே திராவிடநாடு, பாகிஸ்தான் பெறாமல் போவதற்கும் அல்லது, பெறுவதற்கும் முக்கிய துணையாய் இருந்துவிடாது என்கின்ற எண்ணம் நமக்கு உண்டு.

சர். சண்முகம் செட்டியார் அவர்கள் கருத்து நமக்கு எப்படி இருந்தாலும் அதை வெளியாக்கிவிட்டதற்குத் தமிழ்மக்கள் அவருக்கு நன்றிகாட்ட கடமைப்பட்டவர்களாவார்கள்.

நிற்க, அவரது அன்றையப் பேச்சில் நாம் அதிசயப்படக்கூடிய மற்றொரு சங்கதி என்னவென்றால்,

'இந்தியப் பிரச்சினை முடிவுபெற அமெரிக்க, சீன, ரஷ்யத் தலைவர்களைப் பஞ்சாயத்தாராய் நியமித்து அவர்கள் தீர்ப்புக் கூறவேண்டும்' என்பதாகும்.

இது சர். சண்முகம் செட்டியார் போன்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய அபிப்பிராயம் என்றால், இதைவிட அதிசயமான சங்கதி வேறு ஒன்று இருக்கமுடியாதென்றே கூறுவோம்.

இந்தியாவைப் பற்றி (இந்தியாவில் உள்ள தன்மைகளைப் பற்றி, இந்தியப் பிரச்சினைப் பற்றி) இவர்களுக்கு என்ன தெரியும்? இவர்களை நாம் எப்படி நம்பமுடியும்? இவர்கள் பிரிட்டிஷாரின் தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல், நடுநிலையில் இருந்து தீர்ப்புக்கூறி, தீர்ப்பை நடத்திக்கொடுக்கத்தக்க நிலையை உடையவர்களா?



நமக்காவது இவர்களுடைய யோக்கியதை நன்றாகத் தெரியுமா? இந்தியர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நம் எல்லோருடைய தேவையும் இலட்சியமும் ஒன்றுபோன்றதா?

இந்தியாவுக்காக இந்தப் பஞ்சாயத்தாரிடம் ஒரு பிராது கொடுப்பதாயிருந்தால், அந்தப் பிராதில் யார் யார் கையெழுத்துப் போடுவார்கள்? திராவிட மக்கள் சம்மதிப்பார்களா? திராவிடர்களை இலட்சியப்படுத்த வேண்டியதில்லை என்றால், ஆதித்திராவிட மக்கள் கையெழுத்துப் போடுவார்களா? அவர்களையும் இலட்சியப்படுத்த வேண்டியதில்லை என்றால் முஸ்லிம்கள் கையெழுத்துப் போடுவார்களா? முஸ்லிம்களையும் இலட்சியம் செய்யவேண்டியதில்லை என்றால், இந்து மகாசபையார் கையெழுத்துப் போடுவார்களா? இவர்களையும் இலட்சியம் செய்யவேண்டியதில்லை என்றால் மற்றும் வேறுயார் இருக்கிறார்கள் பிராது கொடுப்பதற்கு?

காந்தியாரும், சர். சண்முகமும் கையெழுத்துப் போட்டுவிட்டால் அது 45 கோடி மக்களின் பிரதிநிதியாகப் போட்ட பிராதாக அந்த மூன்று ஜட்ஜுகள் ஒப்புக்கொள்வார்களா? என்றெல்லாம் பார்த்தால் என்ன பதில் கிடைக்கும்?

பொதுவில் இதுபோன்ற ஒரு பேச்சு சர். சண்முகம் செட்டியார் அவர்களிடமிருந்து இதுவரை யாருமே கேட்டிருக்கமாட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். 'இயற்கையின் கோலம் இன்னும் என்னென்ன செய்யுமோ?

['குடிஅரசு'–தலையங்கம்—3–3–1945]

## 6. மாநில சுயாட்சி

தென்னாட்டு விடுதலைக் கோரிக்கையை இதர பகுதிகளில் வாழ்வோருக்கும் திராவிட நாட்டின் மூலை முடுக்குகளில் உறைவோருக்கும் தெரியப்படுத்தவும், தான்தோன்றித் தனமிக்க அரசியலமைப்பு சபையொன்று நமது எதிர்காலத்தை நிர்ணயிக்க முன்வந்து, தென்னாட்டவருக்கு அடிமை மனப்பான்மையூட்டி, புதிய வருணாசிரம முறையாட்சி ஒன்று நிறுவும் எண்ணத்தில் வகுத்துவரும் அரசியலைப் பரிசீலனை செய்யவும்—இம் மாதம் 9-ந்தேதி முதல் 12-ந்தேதி வரையில் கூட்டங்கள் போட்டு அதிதீவிரப் பிரச்சாரம் செய்யுமாறு எல்லாக் கருத்துச் சார்புடைய திராவிடரையும் வேண்டியிருந்தேன். நம் இனத்துக்கும், நம் நாட்டுக்கும் இப்பொழுது கவலைக்கிடமான நெருக்கடி நிலை கிட்டியுள்ளது. திராவிடர்களில் பெரும்பாலோர் கண்விழிப்புற்றுத் தங்களது உள்ளக்கிடக்கையினையும், கோரிக்கைகளையும் தற்போதைய இந்துஸ்தான் அரசியலமைப்புச் சபையிடம் முழு பலத்துடன் வலியுறுத்திக் கூற முனைந்து நிற்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்துஸ்தான் அரசியலமைப்பு சபையின் நடைமுறைகளைப் பரிசீலனை செய்வதற்கு முன்னர், அந்த ஸ்தாபனத்தின் முன்னிலையில் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதும் பத்திரிகைகளில் வெளியானதுமான அறிக்கைகளை விளக்குவதற்கு முன்னர், இப்பொழுது எய்தப்பெற்றிருக்கும் சுதந்திரத்தின் யோக்கியதை குறித்துச் சிறிது கூற ஆசைப்படுகிறேன்.

ஆகஸ்ட் 15-ல் நடைபெற இருக்கும் கொண்டாட்ட விழாக்களில் திராவிடர்கள் கலந்துகொள்ள வேண்டாமெனக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஏனெனில், தென்னாட்டவராகிய நமக்கு இதனால் இலாபம் என்ன? நம் முன்னிற்கும் வேலை என்ன? பிரிவினை ஏற்றுக்கொள்ளப்பட்டது; இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்பதற்கு மட்டும் நாம் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக்கொள்ளலாமே. தவிர, தென்னாட்டவர் தனிச் சுதந்திரம் பெற்று இன்புறும் வகையில் பிரிவினையேற்படாத வரையில், இந்துஸ்தான் 'டொமினிய'னுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் அல்லது டொமினியன் அந்தஸ்து என்பது. வெறும்

படிப்பகம்

www.padippakam.com



கேலிக்கூத்தே என்பதை நாம் உணரவேண்டும். மேற்படிக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளாதிருப்பதின்மூலம் நாம் நமது கண்டனத்தைத் தீவிரமாகக் காட்டிக்கொள்ளலாம்.

கடந்த ஆண்டில் வந்துபோன மந்திரி சபை தூதுகோஷ்டி, பாதுகாப்பு, அயல் நாட்டு விவகாரம், போக்குவரத்து ஆகிய மூன்று முக்கியமான விஷயங்களும் மத்திய சர்க்கார் பொறுப்பிலிருக்க வேண்டுமெனக் கூறி, திட்டமொன்றை வகுத்தது. மாகாணங்களுக்கு அதிகபட்ச சுதந்திரத்தை வழங்குவதே அத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. மேற்கண்ட மூன்று விஷயங்களை நிர்வகிப்பதற்குப் பிடிக்கும் செலவுத் தொகையினையே 'ரெவினியு'வாக மத்திய சர்க்காருக்கு மாகாணங்கள் அளிக்கும் வகையில் நிபந்தனை காணப்பட்டது. இவைகளைத் தவிர்த்த இதர விஷயங்களும் மத்திய நிர்வாகப் பொறுப்புக்கு விடப்படுமேல் அது அந்தந்த மாகாணத்தின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

பிரிட்டிஷ் தூதுவர் திட்டத்துக்குக் கண்டனங்கூற முன்வந்த திராவிடர்கள் பலரும் இரண்டு உதாரணங்கள் காட்டினர். தங்களின் ஆட்சேபத்துக்கு முதலாவதாக மத்திய நிர்வாகத்தின் பொறுப்பு இவைஇவை என்று தெளிவாக விளக்கப்படவில்லை என்றும், இரண்டாவதாக, 'ஏ' பிரிவில் இதர பகுதியினரோடு தாங்களும் பிணைக்கப்பட்டுவிட்டனர் என்றும் எடுத்துக் காட்டினர். புது டில்லியில் சர்க்கார் இயந்திரத்தின் பொறுப்பையேற்றுள்ள சுயநல ஆதிக்கக் கும்பல் செய்யும் அட்டகாசத்தில் 'ஏ' பிரிவிலுள்ள திராவிடரின் கோரிக்கையும், சுயாட்சியும் மறைந்துபடும். பொதுமக்களை அடிமைப் படுகுழியில் ஆழ்த்திவைத்து, தென்னாட்டவர் சுயேச்சையுறுவதை என்றென்றும் தடைசெய்தும் வர, தென்னாட்டுப் பிற்போக்குச் சக்தி சிலவற்றுக்கும், வடநாட்டாருக்குமிடையே ஒப்பந்த மேற்பட்டு வருவதாகவும் திராவிடர் உணரலானார்கள். திராவிடஸ்தான் அல்லது தென்னிந்தியாவை இதர மாகாணங்களோடு இணைத்து 'ஏ' பிரிவில் போட்டு அடைத்து விட்டதால் இவ்வொப்பந்தம் மேலும் வலுப்பெற்றது.

இதெல்லாம் நடந்துபோன சரிதை எனினும், அண்மையில்தான் நடந்ததாகையால் அலட்சியப்படுத்த முடியாது. இன்று முற்றிலும் மாறுபட்ட நிலைமை நேரிட்டு நிற்கிறது. ஜூன் 3-ந்தேதிய திட்டம் பழைய மந்திரிசபை தூதுகோஷ்டி திட்டம் முழுமையும் திருத்தியமையப்பெற்றதொன்றாகும். இந்தியா இரு துண்டாக்கப்படுவதை காங்கிரசும், முஸ்லிம் லீகும் ஏற்றுக்கொண்டு விட்டன. இப்பிரிவினை ஏற்றுக்கொண்ட நாள் முதற்கொண்டே அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள் சிலரிடமிருந்து ஆதிபத்திய அரசியலமைப்பு சபை செய்யக்கூடியது என்னவென்பது குறித்து விளக்கங்கள் வந்த வண்ணமுள்ளன.

அதிகாரங்களனைத்தையும் தன்மாட்டே நிரம்பப் பெற்றுக்கொள்ளும் பலமிக்க மத்திய நிர்வாகமொன்று அமைப்பதே இந்துஸ்தான் (இந்தியா) அரசியலின் முக்கிய குறிக்கோளென அறிவிக்கப்பட்டுள்ளது. அய்க்கியம் வளருவதற்கு, மாகாணங்களை எப்பொழுதும் மத்திய நிர்வாக ஆதிக்கத்தின் கீழேயே அடக்கிவைத்திருந்து, அதன் ஆணைக்கு உட்பட்டு நடந்துவர ஆவன செய்யவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரங்களைப் பிரித்து வழங்கிய மந்திரிசபை தூதுகோஷ்டித் திட்டத்தைத் தற்போதைய அரசியலமைப்புச் சபை கைவிட்டதேன் என்பது எனக்குப் புரியவில்லை. முஸ்லிம் லீகினர் பாகிஸ்தான் பெற்றுவிட்டனர் என்பதற்காக, இவர்களிடையே முதலாளித்துவ எதேச்சாதிகார மனோபாவம் ஏற்பட்டுவிடுதல் கூடாது. பாகிஸ்தான் உருவாகி வெற்றிபெற்றதற்கே காரணம், இந்த எதேச்சாதிகார எண்ணமேதானென்பதை அவர்கள் நினைவு கூரவேண்டும். அரசியலமைப்புச் சபை உறுப்பினர்களுக்கு அறிவு புகட்டுவது எனது வேலையல்ல; மிகமிக மோசமான முறையில் நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டிருப்பதைத்தான் திராவிடர்க்கு எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.



இத்தகைய நம்பிக்கைத் துரோகச் செயலைத்தான் திராவிடர்கள் நடக்கவிருக்கும் பொதுக் கூட்டங்களில் இடித்துக் கூறிப் பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

அரசியல் முறைகள் வகுக்கப்பெற்று நகலாகியதும், அவை மாகாண சட்டசபைகளுக்கு அனுப்பப்பெற்றுக் குற்றங்குறைகளையும், திருத்தங்களையும், யோசனைகளையும் கூறுமாறு கோரப்படுமென முதற்கண் அறிவிக்கப்பட்டது. விரைவில் காரியம் முடிய வேண்டியிருப்பதை அனுசரித்து, மாகாண சட்டசபையின் விவாதத்துக்கு நகலை அனுப்புவதற்கில்லையென அரசியலமைப்பு சபையார் அறிவிக்கின்றனர். இத்தகைய நம்பிக்கைத் துரோகச் செயலைத் திராவிடர்களாகிய நாம் மட்டுமல்ல—பொதுநன்மையில் அக்கறையுடைய சட்டசபைக் கட்சியினரும் கண்டித்தே தீரவேண்டும். நமக்கும் அவர்களுக்கும் உள்ள கருத்துவேறுபாடுகள் ஒருபுறமிருக்க, அரசியல்முறை விஷயத்திலாயினும் அவர்கள் கட்சிக் கொள்கையைக் கடந்து நாம் வதியும்பகுதிகளின் நன்மையை உத்தேசித்து வேலை செய்வரென நம்புகிறேன்.

அரசியலமைப்பு சபை ஒன்று ஆதிபத்திய அதிகாரம் பெற்றுத் திகழ்கின்றதென்பதற்காக, அதற்கு மரியாதை செலுத்தவேண்டியதில்லை. செலுத்தவேண்டுமானால், முன்னால் ஏகாதிபத்திய சர்க்காருக்கும் விடுதலை வீரர்கள் கீழ்ப்படிந்து நடந்து மரியாதை செலுத்தி இருக்கவேண்டும். தோழர் வல்லபாய்படேல் தலைமையில் தயாரிக்கப் பெற்றதான அரசியலமைப்பு சபையின் முடிவும், யூனியன் அரசியல்முறையும் அடிப்படை உரிமைகளும், கொடிமுறை தேர்ந்தெடுப்பும் இவைபோன்ற இதர விஷயங்களும் தென்னிந்திய வட்டாரங்கள் பலவற்றிலும் வெகுவாகக் கண்டிக்கப்பட்டன.

மாகாணங்களுக்கு அளிக்கப்படும் புதிய அரசியலின் அம்சங்களென்ன? மத்திய நிர்வாகம் சர்வ வல்லமையும் சர்வ சக்தியும் கொண்டதென்ற அடிப்படையை வைத்து நாம் ஆராயத் தொடங்க வேண்டும். இப்படி வைத்துத் துவங்குவதால் எழும் விளைவுகள் பல. அன்பு, மரியாதை, மதிப்பு, கீழ்ப்படிதல் என்ற அடிப்படையில் அசைக்க முடியாத யூனியனொன்றை நிறுவுவதென்ற ஆரம்பக் கொள்கைக்குப் பதிலாக, மனமொவ்வாத கூட்டாளிகள் வலுக்கட்டாயமாகப் பிணைத்து இழுத்துக்கொண்டு வரப்படுவதைக் காண்கிறோம். இந்த அரசியல் முறையின் முக்கிய அம்சங்கள் மிகவும் எளிமையானவையே. பலதிறப்பட்ட பத்திரிக்கைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள 'பெடரல்' விஷயங்களின் ஜாபிதா மிகப் பரந்ததொன்றாகும். அதில் 82 பிரிவுகள் அடங்கியுள்ளன. இப்பிரிவுகள் பெரும்பாலும் முக்கிய விஷயங்களை—மாகாணங்களைப் பொறுத்த முக்கிய விஷயங்களையே கவனித்துவரும் வகையில் அமைந்துள்ளன.

உதாரணமாக, பெடரேஷனுடையவும், அதன் ஒவ்வொரு அங்கத்தினுடையவும் பாதுகாப்பும், பாதுகாப்புக்கான தயாரிப்புகளனைத்தும் இன்ன பிறவும் மத்திய நிர்வாகத்தின் கீழ்வருதல் வேண்டுமெனக் கூறப்படுகிறது. மத்திய நிர்வாகத்துடன் ஒத்துப்போகத் தென்னாடு விரும்புகிறதென்றே வைத்துக்கொள்வோமானால், அதனுடைய அதிகாரத்தையும் மத்திய நிர்வாகத்திடந்தான் ஒப்படைத்தாக வேண்டும். இப்படி ஒத்துப்போக ஏற்றுக்கொள்வதால் மத்திய நிர்வாகமென்பது எல்லா வேலைகளையும் தானே கவனிக்க முற்பட்டுவிடுதல் கூடாது. ஆனால், இந்துஸ்தான் டொமினியன் செய்வது இதுவேதான். எப்படியெனில், மத்திய நிர்வாகத்தின் வேலை முறைகள் இவை இவையென விரித்துக் கூறப்படுகையில், மாகாணங்களின் பொறுப்புகளாக எவையும் விடப்படவில்லை. எல்லாவற்றையும் மத்திய நிர்வாகமே ஏற்றுக்கொண்டுள்ளது.

பாதுகாப்பு வேலைகளை நன்முறையில் கவனிக்க, பாதுகாப்புக் கைத்தொழில்களும் மத்திய நிர்வாகத்தின் ஆதிக்கத்தின் கீழிருக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. இன்னும் 'ரோட்டு'ப் பாதைகளும், நீர்ப் பாதைகளும் பெடரல் அதிகாரத்தின் கீழ்தான் இருக்குமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டு நீர்ப் பாதைகளில் கப்பல் போக்கு



படிப்பகம்

www.padippakam.com



வரத்தும், சாமான்கள், பிரயாணிகள் போக்குவரத்தும் பெடரல் பொறுப்பின் கீழேதான் இருக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக, பெடரேஷன் காரியங்களுக்கான சொத்துக்களனைத்தும் கைப்பற்றப்படுமென்றும், இவை பெடரல் சர்க்காரின் ஆட்சியின்கீழ் இருக்குமென்றும், தான் விரும்பிய எந்த முறையிலும் இது சொத்துக்களைக் கைப்பற்றலாமென்றும் கூறப்படுகிறது.

இந் நிபந்தனைகளைப் பரிசீலனை செய்வோருக்கு நன்கு தெரியவரும்—இந்துஸ்தான் அரசியலமைப்புச் சபை தோற்றுவிக்க முயலும் பெடரேஷனின் மாயத்தன்மை.

உதாரணமாக, பாதுகாப்புக் கைத்தொழில்கள் என்பவை யாவை? அவைகளைப் பற்றித் தெளிவாக, விளங்கக்கூறக் கவலையெடுக்கப்படாவிடில் பாதுகாப்புக் கைத்தொழில்கள் பிரிவின்கீழ் ஒவ்வொரு கைத்தொழிலையும் கொண்டுவந்து விடலாம்—'டெக்ஸ்டைல் மில்'கள் போன்ற இன்றியமையாக் கைத்தொழில்களை ஏற்படுத்திக்கொள்ளவும் மாகாணங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை! நவீன கைத்தொழில்கள், அவை பாதுகாப்புக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி—அவை 'சிவில்' மக்கள் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும். உண்மையில், நாடுகள் பலவும் படைக் கலைவுப் பிரச்சினைகளால் சமாளிக்கவேண்டியிருக்கும் பெருந்தொல்லைகளனைத்தும், போர்க்காலக் கைத்தொழில்களைச் சமாதானகாலக் கைத்தொழில்களாக மாற்றுவதிலிருக்கும் தொல்லைகளிலிருந்தே எழுகின்றன.

பெடரல் மத்திய நிர்வாகமென்பது பாதுகாப்புக் கைத்தொழில்கள் இன்னவை என்பதை விளக்காதிருப்பது என்ன நியாயம்? (பெடரல் மத்திய நிர்வாகம் ஒன்றுக்கு அவசியமிருப்பதாகவே வைத்துக்கொள்வோம்)—அவசர காலங்களில் பெடரல் மத்திய நிர்வாகமென்று பலதிறப்பட்ட கைத்தொழில்களையும் ஆதிக்கப்படுத்திக்கொண்டு, அவைகளைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் அங்கமாக வைத்துக்கொள்வதிலாவது அர்த்தமிருக்கிறது. ஆனால், இவை அவசரகால அதிகாரங்களாகும்; மிகமிக அவசரமான காலங்களில் மட்டுமே இவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்துஸ்தான் டொமினியன் ஆரம்பத்திலிருந்தே போர்ப் பாதைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இத்தகைய மாபெரும் அதிகாரங்கள் மத்திய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படுகின்றனவென்று வாதிக்கப்படமாட்டாதென நம்புகிறேன். இந்துஸ்தான் டொமினியன் போர்ப் பாதைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டியது அவசியந்தானென்று கூறுமேல், அது தன் எதிரிகளாக யாரைக் கருதுகிறதென்பதையறிய ஆசைப்படுகிறேன். உடனடியாக இப்படி அது போர்ப் பாதைக்கு ஆயத்தமாயிருப்பானேன்?

பெடரல் மத்திய நிர்வாகத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூர்ந்து பரிசீலனை செய்து பார்ப்போருக்கு, அவற்றின் பிற்போக்கு அம்சங்கள் தெரியவரும். அரசியலமைப்பான எவரும் இதுகண்டு வெட்கித் தலைகுனியவே வேண்டும்.

மாகாணமொன்றுக்கு உரிய சொத்தை, பெடரல் சொத்தாக்கிக்கொள்ள, பெடரல் நிர்வாகத்துக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது; மாகாண சட்டசபையைக் கலைக்காமலேயே இதனைச் செய்து கொள்ளலாம். அவைகள் சம்பந்தமாக மாகாண சட்டசபைகளுடன் கலந்து பேச வேண்டியது தகுதியும் முறையுமாக இருக்க, இவ்விதம் செய்யப்பட்டிருப்பது என்ன நியாயம்? பெடரல் சர்க்கார் நிர்ணயித்து வரையறை செய்யும் நிபந்தனைகள்போல்தான், பெடரல் சர்க்கார் காரியங்களுக்கான சொத்துக்களை பெடரல் சர்க்கார் கைப்பற்ற முடியும். பெடரல் முறையில் நிர்வகிக்கப்படும் விஷயங்கள் பெடரல் சட்டத்துக்கே உட்பட்டிருக்கும் பெடரல் சர்வீஸ்களாலேயே நிர்வகிக்கப்படுமென முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக, தங்கள் பகுதிகளைச் சார்ந்த சர்வீஸ்களின் நிர்வாகத்தையேற்று நடத்தும் அதிகாரமும் மாகாணங்களிடமிருந்து பறித்துக்கொள்ளப்படுகின்றது. மாகாணங்



களின் அதிகாரங்களை இப்படிக் களவாடிக்கொள்வதற்குக் கூறப்படும் சமாதானம் என்னவென்றால், நிர்வாக சபையின் அதிகாரம் சட்டசபையின் அதிகாரத்தைப் போலவே சமவிஸ்தாரமுடையதாயிருக்க வேண்டுமென்ற விதி எடுத்துக் காட்டப்படுகின்றது.

பதவிகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும், இந்நாட்டு மக்கள் சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து நிற்காவண்ணம் தடைசெய்யவுமே இம்முயற்சி கையாளப்படுகிறதென்பதை மட்டும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். பெடரல் மத்திய நிர்வாகமொன்றின்மீது நம்பிக்கை வைத்துள்ளோர் கூட புதிய முறையில் புனராலோசனை செய்து பெடரல் மத்திய நிர்வாகத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகள், தென்னாப்பிரிக்க யூனியனில் நிறுவப்பெற்றிருக்கும் ஒற்றையாட்சி சர்க்காரின்கீழ் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக்காட்டிலும் மிகப் பரந்தவை என்பதை உணரவேண்டும்.

இதுகிடக்க, எதிர்கால மாகாண சர்க்கார் அமைப்பு முறை பற்றிச் சிறிது பரிசீலனை செய்வோம். மாகாண அதிகாரங்கள் கமிட்டித் தலைவர் தோழர் வல்லபாய் படேல் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையொன்றில் மாகாண அரசியல் முறைக் கொள்கைகள் இவையிவையெனத் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. அவ்வறிக்கையின்படி, ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு கவர்னர் உண்டு; இவருக்கு எதேச்சையதிகாரம் முற்றிலுமுண்டு; இவரது எதேச்சையதிகாரத்தை அவ்வப்போது குறைக்கவோ தடைசெய்யவோ இராஷ்டிரபதிக்கும், பெடரல் நிர்வாகத்துக்கும் மட்டுந்தான் உரிமையுண்டு. வயது வந்தோரனைவருக்கும் ஓட்டுரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் இக் கவர்னருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் எந்த நாகரீக நாட்டு அரசியலிலும் காணப்படமாட்டா.

கவர்னர் என்பவர் சர்வஜன ஓட்டுரிமையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆகையால், அவர் அதிகாரங்களைத் தப்பு வழியில் பயன்படுத்த மாட்டாரெனக் கூற முனைவது அர்த்தமற்றதென்பதோடு, குறும்புத்தனமானதுமாகும். இது உண்மையானால் ஹிட்லர் ஒரு எதேச்சையதிகாரியாக இருந்திருக்க முடியாது.

பொறுப்பாட்சி வேலைகளை அனுசரிக்கவேண்டி, ஜனநாயக அரசியலொன்று தனிப்பட்ட ஒரு நபரை, எல்லா அதிகாரத்தையும் தன்மாட்டே வைத்துக்கொண்டுள்ள ஒரு நபரைத் தலைவராக வைத்துக் கொள்வது சரியானதுமல்ல. கவர்னரே தனது சொந்த அபிப்பிராயத்தையொட்டிக் காரியம் செய்யவேண்டும். அரசியல் முறையில் நிர்ணயிக்கப்பட்டுவிட்ட சந்தர்ப்பங்கள் போக இதர சந்தர்ப்பங்களில் கவர்னர் தனது சொந்த அபிப்பிராயத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

(1) மாகாணத்தினுடையவோ, அதன் எந்தப் பகுதியினுடையவோ சமாதானம், அமைதி குலைந்திடாதவாறு ஆக்கிரமிப்புகளைத் தடுத்து வருவது.

(2) மாகாண சட்டசபையைக் கூட்டல், கலைத்தல்.

(3) தேர்தல்களைக் கண்காணித்து, கவனித்து, தனது பொறுப்பின்கீழ் வைத்துக் கொள்வது.

(4) மாகாண பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவரையும் உறுப்பினர்களையும் நியமிப்பது.

10-வது நிபந்தனையில்தான் விஷயம் உச்சநிலை அடைகிறது. யாதொரு விஷயம், கவர்னர் அபிப்பிராயத்தையொட்டி, தீர்மானிக்கப்பட வேண்டியதா இல்லையாவென்பது குறித்து பிரச்சினையெழுமேல், கவர்னர் செய்யும் முடிவே முடிவானதாகுமென அந் நிபந்தனையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வரசியல் முறையின் நிபந்தனைகளை நான் நுணுக்கமாகப் பரிசீலனை செய்தேன். மத்திய சர்க்காருக்கு உதவிபுரிந்து ஆய்வுரை அளித்துவர ஆலோசகர்களை

படிப்பகம்

www.padippakam.com



நியமிப்பதே மேற்படி அரசியல்முறை வகுப்போரின் எண்ணமாகுமென்பதைப் பாரபட்சமற்ற எண்ணமுடையோரெவரும் தெள்ளிதின் உணருவரென்பது எனது எண்ணம்.

'கவர்னருக்கு உதவிபுரிந்து, ஆய்வுரையளித்து வருவது' என்ற சொற்றொடர் உபயோகிக்கப்பட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை. அதற்கு அரசியல் முக்கியத்துவம் இல்லாமலுமில்லை. ஆனால், கவர்னர் பிரயோகித்துக் கொள்ளக்கூடிய சொந்த அபிப்பிராயத்தை யொட்டிய அதிகாரங்களோடு, அவருக்கென நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வேலைகளையும் சேர்த்துப் படிக்கவேண்டுமென்பதைக் குறிப்பிட வேண்டும்.

தனது சொந்த அபிப்பிராயத்தின்கீழ் வரவேண்டியவை எவையெவை என்பனவற்றை நிர்ணயித்துச்சொல்லும் நீதிபதியாக இருப்பதோடு, பிரதமர் என்பவர் நிர்வகிக்கக் கூடிய உரிமைகள்கூட இவருக்கு அளிக்கப்பட்டன. அரசியல்முறை மாடலின் 18-வது பிரிவு கூறுவதாவது :—'மாகாண சர்க்கார் தங்கள் வேலைகளை எளிதாகச் செய்து முடிக்கவும், மந்திரிகளிடையே வேலைகளைப் பிரித்து வழங்கவும் கவர்னர் விதிகள் செய்வார்' என்பதாகும். இந்நிபந்தனையின் விளைவுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

அதாவது, கவர்னரென்பவர் நிர்வாகத்தின் வெறுந் தலைவர் மட்டுமல்லர்; தனது மந்திரிகளிடையே இலாக்காக்களைப் பிரித்து வழங்கவும், ஒரு இலாக்காவிலிருந்து இன்னொரு இலாக்காவுக்கு மந்திரிகளை மாற்றவும் அவருக்கு உரிமை உண்டு. 'மாகாண சர்க்காரின் வேலைகள் எளிதாக நடந்தேற' ஆவன செய்ய அவருக்கு உரிமையுண்டு! அவரது யதேச்சையதிகாரத்துக்கு ஒரே தடை, குற்றச்சாட்டு ஒன்று உண்டெனப் பயமுறுத்தப்பட்டுள்ளது. அவரைத் தடைசெய்ய வேண்டுமானால் மாகாண சட்டசபையைச் சேர்ந்த மூன்றிலிரு பகுதியினர் அவர்மீது எழும் குற்றச்சாட்டுக்கு வோட் அளிக்க வேண்டும்.

மாகாணங்களில் கொண்டுவர முயற்சிக்கப்பெறும் பொறுப்பாட்சி சர்க்காரின் ஏமாற்றுத்தன்மை குறித்துச் சந்தேகமெதுவுமெழுமேல், பெடரல் நிர்வாகம்பற்றி யூனியன் அரசியல் முறையில் கண்டுள்ள நிபந்தனைகளைக் காணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னருக்கு மாறாக, இராஷ்டிரபதிக்கு மிகமிகச் சுருங்கிய அதிகாரங்களே கொடுக்கப்பட்டுள்ளன. அவர் மத்திய நிர்வாகத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டவராவார். இவ்வரசியல் முறையில் பிரதம மந்திரி என்ற சொல் காணப்படுவதும் விசித்திரமாகத்தானிருக்கிறது. பிரதம மந்திரியொருவர் இருப்பதால் சர்க்கார் வேலைமுறை சம்பந்தமாக உத்தரவுகள் பிறப்பிப்பதும் மந்திரிகளிடையே வேலைகளைப் பிரித்து வழங்குவதும் இவரால்தான் செய்யப்படுமென்று நாம் நினைக்க வேண்டியவர்களாயுள்ளோம். தலைவரென்பவர் தனது கவுன்சிலின் ஆய்வுரையின்பேரில் பணியாற்றிவந்து அரசியல் தலைவராக இருந்து வருவார்.

மாகாணங்களின் அதிகாரங்களை (வேலைகளை) பறித்துக்கொண்டு, அவற்றை அடக்குமுறைக்கு (கீழான நிலைக்கு) ஆளாக்கி வைத்து, பெடரல் மத்திய நிர்வாகத்துக்கு வரையறையற்ற அதிகாரங்களை வழங்கிவிட்ட பிறகும், மாகாணங்களுக்குச் சிறப்பான மந்திரிசபை கவுன்சில்கள் அமையப்பெறாதது கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

பழைய அட்வைசர் ஆட்சியையொத்த ஓர் ஆட்சிதான் ஏற்படப்போகிறது. இதனால் அதிகாரம் பெரிதும் பெடரல் நிர்வாகத்தையும் கவர்னரையுந்தான் சென்றடையும்.

இந்துஸ்தான் அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொண்டிருக்கும் கொடியைப்பற்றி நான் மாறுபாடான கருத்தைக் கொண்டிருக்கிறேன் என்பதையும் கூற வேண்டியிருக்கிறது. பரந்த இந்த கண்டத்திலுள்ள பல்வேறு இனங்களும் பிரிவுகளும் ஒன்றுசேரக்கூடிய சின்னமாக விளங்கவேண்டியது இந்தக் கொடி. ஆனால், இந்தக் கொடியின் அமைப்பைப்பற்றிக்



கூறும்போது பண்டிட் ஜவஹர்லால் நேரு அதிகாரபூர்வமாக என்ன கூறியுள்ளார் என்பதைக் கவனியுங்கள்: 'இந்தக் கொடி ஒரு கட்சிக் கொடியாகத்தான் இருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால், பிறகு தேசியக்கொடியில் கைராட்டினம் இருப்பது பொருத்தமாயிருக்காது என்று கருதியே, அது விலக்கப்பட்டிருக்கிறது' என்று தெளிவாகவே கூறியிருக்கிறார்.

'சர்க்காவும் (இராட்டினம்) சக்கரமும் ஒன்றுதான்' என்கிறார் பண்டிட் நேரு. இந்தக் கொடியைப் பற்றிய தத்துவார்த்தங்களில் ஆளுக்கொருவிதமாகக் கூறினாலும், இந்துஸ்தான் அரசியல் நிர்ணய சபையின் முதன் மந்திரியாகிய நேருவின் அதிகாரபூர்வமான வியாக்கியானத்தை அலட்சியப்படுத்த முடியாது. இந்துஸ்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு டொமினியனாக (குடியேற்ற நாடாக) இருக்கும்போது, சுதந்திர ஆதிபத்தியக் குடிஅரசு என்ற ஒரு ஆட்சிக்கு வேண்டிய ஒரு கொடியை அமைப்பதில் அரசியல் நிர்ணயசபை, இவ்வளவு அவசரப்படவேண்டிய அவசியமென்ன என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

சர்வாதிகாரமுடைய ஓர் ஆட்சிக்கும் இதர ஆட்சிகளுக்குமுள்ள வேற்றுமையைக் குறிப்பதற்காகத் தனிக்கொடி ஒன்று இருக்கவேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும், சர்வாதிகாரமுடைய நாடுகள் தனிக்கொடி இல்லாமலும் இருக்கின்றனவே! கனடாவை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இந்நாடுகளிலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் எல்லோருமே அன்புடன் ஏற்று வணங்கும்படியானதும், நாளடைவில் ஆட்சியின் நிர்வாகத்தில் இரண்டறக் கலந்து உள் உணர்வோடு ஒன்றுபட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான ஒரு கொடியை இந்நாட்டு ஆட்சியாளரால் இதுவரை கண்டுபிடிக்க இயலவில்லை. எல்லாக் கட்சியாளர்களும் ஒன்றுசேர்வதற்குத்தான் தேசியக் கொடி அவசியம் என்ற கொள்கை அரசியல் நிர்ணய சபையால் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

'கடந்த போராட்டங்களை நினைவூட்டவும், வருங்கால வெற்றிகளை முன்கூட்டிக் காட்டவும் உண்மைக்கு மாறானவைகளையும், அற்பத்தனமானவைகளையும், தோல்வி மனப்பான்மையை உண்டாக்கக் கூடியவைகளையும் வருங்காலத்தில் நாம் வெல்வதற்கும், இந்தக் கொடியிலுள்ள சின்னங்கள் தேவையாயிருக்கின்றன' என்று பண்டிட் நேருவும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் கூறியிருக்கின்றனர். இவர்கள் கருதியிருப்பது சுத்தத் தவறு என்பதைக் கூற விரும்புகிறேன்.

மேலே கூறிய உணர்ச்சிகளை இந்தக்கொடி பொதுமக்களிடையே உண்டாக்குமென்று யார்தான் கூறமுடியும்? இந்தக் கொடியின் மூலமாக முன்னர் பெற்ற வெற்றிகள் நினைவுக்கு வருகின்றனவா, அல்லது படுதோல்விகள் நினைவுக்கு வருகின்றனவா என்ற விஷயத்தை எனதருமைக் காங்கிரஸ் தோழர்களே, சாவதானமாக நினைத்துப் பார்க்கட்டும்!

காங்கிரஸ் போராடியது வெள்ளையார் வெளியேறுவதற்காகவே; காங்கிரஸ் விரும்புவதோ அய்க்கிய இந்தியா. ஆனால், இப்போது கிடைத்திருப்பது என்ன? பிளவுபட்ட இந்தியா; முழு சுதந்தரமில்லாத இந்தியா!

இதுதான் நான் கொடியைப்பற்றிக் கூறவேண்டியது.

இனி, மைனாரிட்டிகளைப் பற்றியும், இந்துஸ்தான் டொமினியன் அரசியல் அமைப்பில் அவர்களது நிலைமையைப் பற்றியும் கவனிப்போம். அரசியல் நிர்ணய சபையில் நிகழ்ந்துள்ள விவாதங்களைக் கவனிக்கும்போது, மைனாரிட்டிகளுக்கு நியாயம் கிடைக்கும் என்று நம்பக்கூடியதாக இல்லை. பிற்பட்ட வகுப்பினர் என்ற காரணத்தினால் இது

படிப்பகம்

www.padippakam.com



வரை தனிச் சலுகைகள் பெற்றுவந்த மைனாரிட்டிகளுக்கு உத்தியோகத்தில் இனிமேல் விசேஷ பிரதிநிதித்துவம் இருக்காது.

இது மட்டுமா? நம் வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத அம்சமாக விளங்கி வருவதும், தென் இந்தியத் திராவிட இனத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாயிருந்து வருவதுமான பிரதிநிதித்துவமுறை ரத்து செய்யப்பட்டு விடுமாம்.

விஸ்வநாதம் என்ற ஆந்திரத் தோழர் தன் எஜமானர்களின் கண்ஜாடையை உணர்ந்து கொண்டு, இதுபற்றிய மசோதா ஒன்றைக் கொண்டுவரப்போகிறாராம்! இதன் மூலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழித்துக் கட்டிவிட்டு, 'தகுதி'யையும் 'திறமை'யையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு முறையைத் திராவிட நாட்டில் திணிக்கப் பார்க்கிறார்கள்.

தகுதியையும், திறமையையும் சாக்காகக் காட்டித்தான், அகில இந்திய சர்வீஸ்கள் ஒரே பார்ப்பன மயமாக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் அதே காரணங்களைக்கூறி, மாகாண ஆட்சியிலும் பார்ப்பனர் உத்தியோகங்களை ஏகபோக உரிமையாக்கிக்கொள்வதற்குத் திட்டம் போட்டுவிட்டனர். முக்கால் பகுதிக்கு மேற்பட்ட வரிகளைக் கொடுப்பது மட்டும் திராவிடர்களாகிய நாம்; ஆனால், இந்துஸ்தானில் இணைக்கப்பட்டிருக்கும் திராவிடநாட்டின் அரசியல், சமுதாய நிர்வாகத் துறைகளில் மட்டும் நமக்குப் பங்கே கிடையாது என்றால், இந்த அக்கிரமத்தை எப்படிச் சகித்துக்கொண்டிருப்பது என்று கேட்கிறேன்.

தோழர் விஸ்வநாதம் வெளிப்படையாகவே தம் எண்ணத்தைக் காட்ட முன்வந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இத்தகைய ஒரு சுயநலக் கும்பலை நம்பி, தங்களுக்கு நன்மைதேடும் பொறுப்பைத் தோழர் விஸ்வநாதம் போன்றவர்களிடம் ஒப்படைத்திருக்கும் தெலுங்கு நாட்டுத் திராவிட மக்கள், இதன்மூலம் இனியாவது கண் திறப்பார்கள் என்பது நிச்சயம்.

தங்கள் சாதி அல்லது சொந்த இனத்திற்கு (ஆரியர்) வேண்டிய வசதிகளை மேலும் மேலும் தேடிக்கொள்ளும் பொருட்டும்—தேசியத்தின் பெயராலும், 'அகில இந்தியா' என்பதின் பெயராலும் பித்தலாட்டஞ்செய்து சுரண்டிக்கொண்டிருந்த ஆரியக் கும்பலின் உயர்வுக்காகவும்—சிறைபுகுந்தும், இன்னும் பல தியாகங்களைச் செய்தும் தொண்டாற்றிய ஆந்திரத் திராவிடத் தோழர்கள் இனியாவது உண்மையை உணர்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திராவிடர்களாய்ப் பிறந்துள்ள எல்லா மக்களும் சுறுசுறுப்புடன் வீறுகொண்டு எழுங்கள்! எல்லா இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் போடுங்கள்! பொதுஜனக் கருத்தை ஒன்று திரட்டுங்கள்! நான் மேலே கூறியவற்றை நாடெங்கும் பரப்பி, திராவிடச் சக்தியை உருவாக்குங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமக்கு வரப்போகும் ஆபத்தை அலட்சியமாகக் கருதிவிட வேண்டாம். நமது ஆண், பெண், சிறுவர் ஆகிய எல்லோரும் நமக்கு முன் நிற்கும் பயங்கரமான நிலையை உணரவேண்டியது இன்றியமையாததாகும். எந்த ஓர் அரசியல் அமைப்பிலும் இருக்க வேண்டிய சாதாரண ஆரம்ப உரிமைகளைக்கூட நமக்குத்தர மறுத்திருக்கும் இந்தப் புதியவிதமான வருணாசிரம முறையின் அக்கிரமத்தை, நம்மவர்களில் ஒவ்வொரு ஜீவனும் உணரவேண்டியது அவசியமாகும்.

இப்போதுள்ள அரசியல் நிர்ணய சபையானது ஒரே கருத்துக்கொண்ட கட்டுப்பாடான ஒரு கும்பல் என்றும், பொதுஜனக் கருத்தைப்பற்றி அது சட்டைசெய்யப்போவதே இல்லை என்றும் ஒருசிலர் கூறலாம். அரசியல் விவகாரங்களில் இவ்வாறு மனமுடைவது



அவ்வளவு சரியல்லவென்றே கருதுகிறேன். பொதுஜனக் கருத்தைப் பிரமாண்ட அளவுக்கு ஒன்று திரட்டினால், அரசியல் நிர்ணய சபையின் முடிவுகளைக்கூட அது ஓரளவுக்கு மாற்றி விடமுடியும். இப்போது செய்யப்பட்டுள்ள முடிவுகள் தற்காலிகமானவை என்பதை நாம் மறுத்தல் கூடாது.

நம்முடைய இலட்சியங்களுக்குச் செவிசாய்க்கும்படியாகச் செய்வதற்கும் இன்னும் போதுமான காலமிருக்கிறது. அரசியல் நிர்ணய சபை எவ்வளவுதான் கல்நெஞ்சுடையதாக இருந்தாலும், ஒரு மாபெரிய இனத்தின் ஒன்று திரண்ட சக்தியின் முன்பு—தன் உரிமைகளைப் பெறுவது என்ற உறுதியுடனுள்ள ஓர் இனத்தின் உத்வேகத்தின் முன்பு அது வளைந்து கொடுத்தே தீரவேண்டும்.

'பிரதேசவாரியாக சுதந்திரம் தேவை' என்ற அவசியத்தைப் புதுடில்லியிலுள்ளவர்கள் உணரும் வகையில்—சமாதான முறைகள் யாவற்றையும் பயன்படுத்தவேண்டியது குடிமக்கள் என்ற முறையில் நமது நீங்காகக் கடமையாகின்றது. இவ்வாறு செய்யவேண்டுமானால், சுதந்திரம் பெறுவதற்கு விழையும் ஓர் இனமானது தனக்குத் தெரிந்த சமாதான முறைகள் யாவற்றையும் ஒன்றுவிடாமல் கையாண்டு பார்த்தே தீரவேண்டும். அவ்வாறு, நாம் செய்யவில்லையென்று சுய அறிவுள்ள எவரும் நம்மீது குற்றம் சுமத்த முடியாது என்பதை நான் உறுதியாகக் கூறமுடியும்.

ஆகஸ்ட் 9-ந்தேதி முதல் 12-ந்தேதி வரையில் தென்இந்தியாவிலுள்ள திராவிடர்கள் அனைவரும் பெருங்கூட்டங்களைக் கூட்டவேண்டும். பொதுமக்கள் யாவரும் திராவிடநாடு பிரிவினையின் அவசியத்தை உணருமாறு செய்யவேண்டும். இருண்டுகிடக்கும் திராவிட சமுதாயத்திற்கு வெளிச்சத்தைத் தரவேண்டும்; சர்வாதிகாரம் பெற்ற அரசியல் நிர்ணய சபைகூட சில ஜீவாதார உரிமைகளைக் கவனிக்கவேண்டியது அவசியம் என்பதை அதற்கு எடுத்துக் காட்டவேண்டும். 'முழு சுதந்திரம் பெற்ற திராவிடத் தனிஅரசே நமது உடனடியான இலட்சியம்' என்பதையும், அதன் இன்றியமையாத அவசியத்தையும் அரசியல் நிர்ணய சபைக்கு விளங்க வைக்கவேண்டும் எனக் கோருகிறேன்.

[அறிக்கை-'விடுதலை' 6-8-1947; 15, 17, 18-8-1972]

## 7. பேத உணர்ச்சிகள் மறைய வழி

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

திராவிடர் கழகம் இன்று நாடெங்கணும் பொதுக்கூட்டங்கள் பல நடத்தித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வருகிறதென்றால் அது உங்களை ஏமாற்றி ஓட்டுப் பெறவோ, அல்லது அரசாங்கத்தின் எதிர்ப்பாளர்களாகக் காட்டிக் கொண்டு ஏதாவது சில சலுகைகள் இரகசியமாகப் பெற்று வாழவோ அல்ல.

திராவிடர் கழகத்தின் கொள்கைகள் பூராவும் மக்களால் ஒப்புக்கொள்ளப்படும் வரையில் அது தேர்தலுக்குப் போட்டியிடுவதற்கில்லை. ஏனெனில், போட்டியில் ஜெயித்து சட்டசபைக்குச் சென்றாலும் மக்களுக்கு எவை நன்மையானவையோ, எவை அறிவுக்கு ஏற்றவையென்று அது கருதுகிறதோ அவற்றை அவர்கள் நிறைவேற்றி, வைக்கச் சட்டம் செய்வார்களானால், அதை மக்கள் ஏற்றுக்கொள்வது கஷ்டம். ஆகவே, திராவிடர் கழகம் இன்று அரசியலைக் கைப்பற்றும் வேலையில் முயற்சி செய்யாமல், தனது கொள்கைகளுக்கு ஆதரவு தேடுமுகத்தான் மக்களுக்கு அரசியல் ஞானத்தை ஏற்படுத்தி அவர்களைப் பகுத்தறிவுள்ள மக்களாக ஆக்கப் பாடுபட்டு வருகிறது. மக்களின் அறிவு சரியாகப் பயன்படுத்தப்படாத வரையில் யார் அரசியல் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டாலும், அவர்கள், மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைச் செய்து அவர்களை

படிப்பகம்

www.padippakam.com



ஓர் அளவுக்குத் திருப்தி செய்துவிட்டு, மற்றபடி தம் சுயநலத்திற்கான சகலத்தையும்
செய்துகொள்ள முடியுமே தவிர, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய காரியங்களைச் செய்ய
முடியாது. சுயநலத்தில் விருப்பமுள்ள கோஷ்டிதான் இன்று அதிகாரத்தில் இருக்க
முடியுமே தவிர, பொதுநலத்தில் விருப்பமுள்ள எவரும் அரசியல் அதிகாரத்தில் இருக்க
முடியாது.

ஏனெனில், எது தங்களுக்கு நலமானது என்று தெரிந்து கொள்ளும் அளவுக்குக்கூட
இன்றைய மக்களுக்குப் பகுத்தறிவு கிடையாது.

இப்படி இவர்கள் பகுத்தறிவற்றிருக்கக் காரணமே இவர்கள் நெடுநாட்களாக ஒரு
சுயநலக் கொள்ளைக் கூட்டத்தவரால்—ஆரிய லம்பாடிக் கூட்டத்தவரால் மதம், கடவுள்,
சாஸ்திரம், மோட்சம், நரகம் என்ற பேரால் ஏமாற்றப்பட்டு, அறிவை உபயோகப்படுத்த
முடியாதபடி செய்யப்பட்டு வந்ததுதான். இன்றுள்ள குறைபாடுகளுக்கெல்லாம்—இன்று
நமக்குள்ள முன்னேற்றத் தடைகளுக்கெல்லாம் மூலகாரணம் இப் பொல்லாத மதப்
புரட்டுகள்தாம். ஆகவே, எந்தப் பொதுநல விரும்பியின் முதற்கடமையும் இம் மதங்களை
யும், மதக் கடவுள்களையும், இவற்றிற்கு ஆதாரமாயிருந்துவரும் சாஸ்திர புராணங்களை
யும் ஒழிப்பதாகத்தான் இருக்கவேண்டும். மக்களுக்கு இவற்றின்மீதுள்ள நம்பிக்கையைக்
குறைத்து, இவர்கள் ஏதொன்றையும் தமது பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்து பார்த்து
முடிவுக்கு வரும்படி செய்யப்பட்டால்தான், நாம் உலக மக்களோடு சரிநிகர் சமானமாக—
மனிதர்களாக வாழ்க்கை நடத்தமுடியும். ஆதலால்தான், திராவிடர் கழகம் அரசியல்
அதிகாரத்தைப்பற்றிக் கவலைப்படாமல் இன்று இம்முதலாவது பணியில் ஈடுபட்டிருக்கிறது.
மக்களுக்கு அரசியல் அறிவு ஏற்பட்டுவிட்டாலுங்கூட, திராவிடர் கழகம் மற்றவர்களை
அதிகாரம் செய்யும்படி விட்டுவிட்டு, அவர்கள்மூலம் தம் கொள்கைகளை நிறைவேற்றி
வைக்கப் பாடுபடுவார்களே ஒழிய தாமே அதிகாரத்தைப் பெறுவதில் ஆசை கொள்ள
மாட்டார்கள். ஏனெனில், அதிகாரத்திற்கு வரும் எந்தக் கட்சியும் அதிலிருந்து நல்ல
பெயரோடு மீள்வதில்லை, மீளவும்முடியாது என்பதை இவர்கள் நன்கு உணர்ந்திருக்
கிறார்கள். ஆதலால், இன்று ஒரு பக்கத்தில் சுயராஜ்யக் கூப்பாடும்—மற்றோர் பக்கத்தில்
சுயராஜ்யம் பெற்றுவிட்டதாகக் கூப்பாடும்—வேறோர் புறம் பெற்ற சுயராஜ்யத்தைக்
காப்பாற்றுங் கூப்பாடும் கேட்கப்படுகின்றன. ஆனால், இந்த நாட்டைப் பொறுத்த
வரையில் இவற்றிற்கும் மேலாக நமக்குச் சுயமரியாதை உணர்ச்சியும், கொள்கையில்
கட்டுப்பாடும், ஒருவருக்கொருவரிடையே அன்பு மனப்பான்மையும், ஒவ்வொருவருக்கும்
தம் பகுத்தறிவில் நம்பிக்கையும் ஏற்படவேண்டும்.

நமக்குப் பகுத்தறிவுதான் பிரதானமே ஒழிய, சுயராஜ்யம் பிரதானமல்ல. நம்
திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் சுயராஜ்யப் பேச்சு ஒரு ஏமாற்றுப் பேச்சு, ஒரு
பித்தலாட்டப் பேச்சு, வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய பேச்சு என்றுதான் நான் கூறு
வேன். நம் நாட்டுக்கு நல்ல ஒரு ஆட்சி வேண்டுமென்று கேட்பதுதான் பொருத்தமான
கோரிக்கையாகும். அதைவிட்டு, சுயராஜ்யம் கேட்பது ஒரு கடைந்தெடுத்த முட்டாள்தனம்
என்றுதான் நான் கூறுகிறேன். இந்நாட்டில் சுயராஜ்யம் என்பதற்கே அர்த்தம் இல்லை.
இந்நாட்டில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பார்ப்பனர்கள், பறையர்கள், ஏழைகள், பணக்
காரர்கள், முதலாளிகள், தொழிலாளிகள், ஜமீன்தார்கள், குடியானவர்கள் என்று பலப்பல
பிரிவினைகள் இருக்கும்போது—இவர்களில் யார் ஆண்டால் சுயராஜ்யம் என்று நாம் கூற
முடியும்? அல்லது, இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து எப்படி ஆட்சி நடத்தமுடியும்?
ஒரு நாட்டில் அனைவரும் முஸ்லிம்களாகவோ அல்லது அனைவரும் கிறிஸ்தவர்களாகவோ
அல்லது அனைவரும் இந்துக்களாகவோ இருப்பார்களானால், அவரவர்கள் தனி ஆட்சி
செய்துகொண்டு—இது முஸ்லிம்களின் சுயராஜ்யம், இது கிறிஸ்தவர்களின் சுயராஜ்யம்—
இது இந்துக்களின் சுயராஜ்யம் என்று கூறிக்கொள்ளலாம். திராவிடநாட்டு மக்கள் ஒரே



மதத்தவர் இல்லையாகையால், இவர்கள் எத்தகைய ஆட்சி தங்களுக்கு வேண்டுமென்று
கூறிக்கொள்ளலாமே தவிர சுயராஜ்யம் வேண்டுமென்று கூறிக்கொள்ள முடியாது.
இன்றுள்ள ஆட்சியும் சுயராஜ்ய ஆட்சி என்றுதான் கூறப்படுகிறது. இதன் யோக்கியதை
யைப் பாருங்கள்.

'திராவிடர் கழகமா? அது நமது பித்தலாட்டங்களை யெல்லாம் வெளியிட்டு வரு
கிறது; ஆகவே அதைத் தலையெடுக்கவொட்டாமல் தடுங்கள்!'. 'முஸ்லிம் லீக்கா? அவர்
களுக்கு உத்தியோகமா? அவர்களெல்லாம் பாகிஸ்தானுக்கு உதவியவர்கள்; அவர்களைக்
கண்காணித்து வாருங்கள்; அவசியமானால் ஜெயிலில் அடையுங்கள்' என்று உத்தரவு
போடுகிறது.-இதற்கா சுயராஜ்ய சர்க்கார் என்று பெயர்?

நான் சொன்னால் நீங்கள் சந்தேகப்படுவீர்கள். சுயராஜ்யம் என்ற வார்த்தை நம்
திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு பித்தலாட்ட வார்த்தைதான். அது உங்
களுக்குச் சற்றுக் கடினமாகப்பட்டால் சுயராஜ்ய ஆட்சி என்பது நம் நாட்டில் சாத்தியப்
படாத ஒன்று என்று கொள்ளுங்கள். நமக்கு வேண்டியது நல்ல ஆட்சிதான்; சுய ஆட்சி
அல்ல. நம் திராவிட நாட்டில் பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேர் இருக்கிறார்கள்; முஸ்லிம்கள்
7 பேர்; கிறிஸ்தவர்கள் 2 பேர்; ஆதித் திராவிடர்களும் மற்ற சாதியினரும் 88 பேர்.

மொத்தம் 33 மந்திரிகள் இருந்தால்தான் பார்ப்பனருக்கு ஒரு மந்திரி பதவி கிட்டும்;
15 மந்திரிகள் இருந்தால்தான் முஸ்லிம்களுக்கு ஒரு மந்திரி பதவியாவது கிட்டும். 13 பேர்
கொண்ட மந்திரி சபையில் ஒரு பார்ப்பானுக்குக்கூட இடமில்லை; வேண்டுமானால் ஒரு
முஸ்லிம் இருக்கலாம். ஆனால், இப்படியா இருக்கிறது இன்றைய மந்திரி சபை? பறைய
னுக்குப் பார்ப்பான் ஆள்வதா சுயராஜ்யம்? எலிக்குப் பூனை ஆள்வது சுயராஜ்யமாகுமா?
உழவனுக்கு-மிராசுதாரனும்; தொழிலாளிக்கு-முதலாளியும் ஆள்வது சுயராஜ்யமாகுமா?
தேவதாசி என்று மதிப்பாகக் குச்சிக்காரி கூறிக்கொள்வது போலல்லவா இருக்கிறது இந்த
சுயராஜ்ய ஆட்சியின் தன்மை! படித்தவர், பணக்காரர், பார்ப்பனர் என்ற ஒரு சுயநலக்
கும்பலால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள் தன்மை சுயராஜ்யக்காரர்கள் என்று கூறிக்
கொள்வது அயோக்கியத்தனமல்லவா? எல்லா அதிகாரத்தையும் வடநாட்டானிடம் ஒப்
படைத்துவிட்டு அடிமை ஆட்சி செய்யும் இவர்கள், சுய ஆட்சி செய்வதாகக் கூறுவது
அக்கிரமமல்லவா?

ஜனநாயகம் (Democracy) ஜனநாயகம் என்று கூப்பாடு போடுகிறீர்களே—அதன்
அர்த்தம் தெரியுமா? 100-க்கு 88 பேருக்கு ஓட்டுரிமை இல்லாத நாடு எங்காவது ஜனநாயக
நாடாகுமா? ஏமாந்த சோணகிரிகள் சிலரை உங்கள் கையாளாகக்கொண்டு, நீங்கள் உங்கள்
ஆட்சியைப் பொதுஜன (சர்க்கார்) ஆட்சி என்று பிரச்சாரம் செய்வீர்களானால், அதைப்
பகுத்தறிவில்லாத மக்கள் சிலரோ பலரோ நம்பி வருவார்களானால்—எத்தனை நாளைக்கு
இந்தப் பொய்யை உங்களால் மூடிவைக்க முடியும்? 'கெட்டிக்காரன் புளுகு எட்டு
நாளைக்குள் வெளியாகும்' என்ற பழமொழி உங்களுக்குத் தெரியாதா? இந்த விஞ்ஞான
காலத்தில்—அதுவும் 1948-ல் நீ அதிகார மமதையால் தேள், தேள் என்று பூச்சி காட்டு
கிறாயே! அந்தப் பூச்சாண்டிக் காலம் இனிப் பலிக்காது, தம்பி! சுயராஜ்யம் என்பது
வெட்டிப் பேச்சு; சுயஆட்சி என்பது முட்டாள்தனம். ஜனநாயகம் என்பது இந்நாட்டு
மக்களுக்குப் புரியாத சங்கதி. சுயராஜ்யம் என்பது எப்படியிருக்கும் என்பதை மக்கள்
அறியவில்லை. அதனால்தான், பித்தலாட்ட சுயநலக் கும்பலின் சுரண்டல் ஆட்சியை
சுயராஜ்யம் என்று கருதிவருகின்றனர்.

நான் சூத்திரன்—அதாவது தேவடியாள் மகன்—ஆரிய அகராதிப்படி. என் நண்பன்
ஒருவன் தீண்டாதவன்; அவன் பஞ்சமன், சண்டாளன். மற்றொரு முஸ்லிம் தோழன் ஒரு
மிலேச்சன். இன்னொருவன் பிராமணன். இத்தனை பேரையும் நாட்டில் வைத்துக்
கொண்டு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறாய், சற்றேனும் மானமின்றி; அறிவின்றி.



படிப்பகம்

www.padippakam.com



உனக்கு அறிவிருந்தால் முதலில் இந்நாட்டில் அனைவரும் சமம்; சாதி வேறுபாட்டிற்கு இங்கு இடமில்லை என்று கூறி விட்டல்லவா—அனைவருக்கும் ஓட்டுரிமை அளித்து விட்டல்லவா நீ ஜனநாயகம் பற்றிப் பேசுவாய்?

இன்றைய ஆட்சியாளரைத்தான் கேட்கிறேன்—உங்கள் ஆட்சியை எங்களது சுயராஜ்ய ஆட்சி என்று சொல்ல—நீங்கள் எங்களுக்காகச் சாதித்தது என்ன? உங்களாட்சியில் இன்னும் சூத்திரன் இருக்கிறானே! இப்பிரிவையாவது ஒழித்தாயா? எங்களை மதம் என்ற பேரால், கடவுள் என்ற பேரால் பார்ப்பான் ஏய்த்து வருவதை நிறுத்திவிட்டாயா? எங்களைத் தேசியம் என்ற பேரால் வடநாட்டுப் பனியாக் கூட்டம் சுரண்டி வருவதை நீ தடுத்துவிட்டாயா?

எங்கள் மானத்தைப் பற்றித்தான் உனக்குக் கவலை இல்லை. எங்கள் பசியைப் பற்றித்தான் கவலைப்பட உனக்கு நேரமில்லை. எங்களுக்குப் படிக்கப் பள்ளி வைத்துக் கொடுக்கத்தான் உன்னிடத்தில் மனமில்லை. சரி, அத்தனையும் தொலைந்து போகட்டும்! உன்னுடைய ஆட்சியில் சமாதானமோ சாந்தியோ ஏற்பட்டுவிட்டதா? என்றைக்கு, சுயராஜ்யம் திரை மறைவில்—நடுராத்திரியில், திருட்டுத்தனமாக, நல்ல நாள் பார்த்து வந்ததோ அன்று உருவிய கத்தி இன்றும் தன் உறையில் நுழையவில்லையே! அன்று துவங்கிய கொள்ளையும் கொலையும் கற்பழிப்பும் நிற்க வழிகாணோமே! அன்றாடம் துவேஷங்கள் வளர்ந்து வருகின்றனவே ஒழிய, குறைக்கக்கூடிய ஸ்தாபனம் ஒன்றுகூட நாட்டில் இருப்பதாகத் தோன்றவில்லையே!

எதற்காக இந்து-முஸ்லிம் இருக்கவேண்டும்? எதற்காக முதலாளி-தொழிலாளி இருக்கவேண்டும்? எதற்காக பார்ப்பான்-பறையன் என்ற உயர்வு தாழ்வு இருக்கவேண்டும் என்று யாராவது கேட்டார்களா? இவர்களுக்குள் பேத உணர்ச்சியில்லையானால் சண்டை சச்சரவு இருக்குமா? மனித சமுதாயம் எந்த மாதிரி இருக்கத் தக்கது என்பதையாவது மக்களுக்கு உணர்த்தி வருகிறீர்களா—சுயராஜ்ய வீரர்களான நீங்கள்? காலத்திற்கேற்ப, உள்ள சூழ்நிலைக்கேற்ப, மக்களின் இயற்கை ஆசா பாச உணர்ச்சிகளுக்கேற்ப உங்கள் திட்டத்தை மாற்றிக்கொண்டீர்களா நீங்கள்?

இப் பேத உணர்ச்சிகள் மக்களிடையே இருந்துவரும் வரையில் மனித சமுதாயம் குமுறிக்கொண்டுதான் இருக்கும் என்பதை உணர்ந்து நடவுங்கள். நிரந்தரமான சாந்தி வேண்டுமென்றால் பேதங்களை அகற்ற முற்படுங்கள்; அதற்கு ஆவன செய்யுங்கள்.

'நாங்கள் சுயஆட்சி செய்கிறோம்; ஆகவே, மரியாதையாக நடவுங்கள்' என்று எங்களை மிரட்டுகிறாயே! நாங்கள் ஏன் உங்களுக்கு மரியாதை காட்டவேண்டும்? எங்களது சூத்திரப்பட்டத்திற்கு ஆணி அடிக்கப் பாடுபடுவதற்காக உங்களை வணங்க வேண்டுமா? எங்களை வடநாட்டான் சுரண்ட வழிசெய்துவிட்டு, அவனுக்குக் கையாளாயிருந்து வருவதற்காக உங்களுக்கு மரியாதை செய்யவேண்டுமா? எங்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் உருக்கத்தோடு அளித்து வருகிறீர்களே என்று நாங்கள் மகிழ்ந்து வணக்கம் செலுத்தவேண்டுமா? எங்கள் மனைவி மக்கள் பட்டினிகிடக்க வடநாட்டு அகதிகளுக்குப் பாலுஞ்சோறும், படுக்க அறையும், குளிருக்குப் போர்வையும் கொடுப்பதற்காக நாங்கள் உங்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டுமா? அல்லது, எங்களை நாஸ்திகர்களென்றும், தேசத் துரோகிகள் என்றும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தூற்றி வருவதற்காக நாங்கள் உங்களுக்கு வணக்கம் செலுத்தவேண்டுமா? இந் நாட்டின் ஆண்ட இனத்தை, இந் நாட்டிற்குச் சட்டத்தின்படியும் சரித்திரத்தின்படியும் உரிமையுடைய இனத்தைப் பார்ப்பானின் அடிமைகளாக வைத்திருக்க அவர்களின் அடிவருடிகளாகயிருந்து எங்களைக் காட்டிக் கொடுப்பதற்காகவா, உங்களை நாங்கள் மதித்து நடக்க வேண்டும்? எங்களைச் சூத்திரராக வைத்திருக்கும் மதத்தைக் கேலிசெய்யகூடாது என்று உத்தரவு போட்டதற்காக நாங்கள் உங்களை மரியாதை செய்ய வேண்டுமா? எதற்காக என்று கூறவேண்டாமா?



'சுதந்திர இந்தியாவின் கொடியை அவமதிக்காதீர்கள். அவமதித்தால் சும்மா விடேன்' என்று கூக்குரலிடுகிறாயே! உனக்குத்தான் பதவி கிடைத்தது; பணம் கிடைக்கிறது; கொள்ளையடிக்க வசதியும் கிடைக்கிறது. கூப்பிட்ட நேரத்திற்குக் குரல் கொடுக்க டவாலி பியூன் உனக்குக் கிடைக்கிறான். அதனால் இந்தக் கொடிக்குத் தலை வணங்குகிறாய்; அதற்கு அர்த்தமும் இருக்கிறது. அந்த வசதிகள் எனக்குத் தேவையில்லை; தேவையிருந்தாலும் அக் கொடிக்கு வணக்கம் செலுத்தாமலே என்னால் அவற்றை அடைய முடிகிறது. அப்படியிருக்க, நான் ஏன் 'ஹிந்துஸ்தான்' கொடியை வணங்கவேண்டும்? என்னுடைய சூத்திரப் பட்டத்தைப் போக்குமா அந்தக் கொடி? என்னை ஒரு மார்வாரி சுரண்டாமல் பார்த்துக்கொள்ளுமா அந்தக் கொடி? எங்களுக்கு உங்கள் 'ஹிந்துஸ்தானில்' இருக்கப் பிரியமில்லை. உங்கள் ஆட்சியில் எங்கள் மக்கள் பாதுகாக்கப்படமாட்டார்கள். ஆகவே, எங்களைப் பிரித்துவிட்டு விடுங்கள் என்று கூறுகிறோம். எங்களுடைய பாதுகாப்பைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? பேசாமல் பிரித்துவிட்டுவிடுங்கள்.

எங்களை ஆள எங்கள் நாட்டில் அறிவாளிகள் உண்டு. எங்கள் நாட்டில் எங்களைப் பாதுகாக்கும் வல்லமை படைத்த போர் வீரர்கள் உண்டு. நாங்கள் ஆண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால், எங்களுக்குத் தனித்திருக்கச் சகல வசதிகளும் உண்டு.

ஆகவே, 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் கூப்பாடு போடுகிறதாம்' என்பது போல, நீங்கள் எங்களுக்காகப் பரிதாபப்படாமல் பிரித்துக்கொடுத்துப் பாருங்கள்! ஆண்டு பார்க்கிறோம். ஆள முடியவில்லையானால், பாதுகாத்துக்கொள்ள முடியவில்லையானால் உங்களிடமே வந்து சரணாகதி அடைகிறோமே! ஏனப்பா, நீலிக்கண்ணீர் வடிக்கிறாய்?

'பிரிவினையை இனி அனுமதிக்க முடியாது. பாகிஸ்தான் பிரிவினையால் பட்டது போதும்' என்று எங்களை ஏய்க்கப் பார்க்கிறாயே—இது அறிவுடைமையா? பாகிஸ்தான் பிரிந்து போனதால் அன்னிய நாடு ஒன்றும் அதைக் கிள்ளிக்கொண்டு போய்விடவில்லையே! நீதானே அதைத் துன்புறுத்துகிறாய்; நீதானே அதன்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறாய்! இல்லையென்றாலும், உங்களுக்குள்ளேதானே அந்த வகுப்புப் போராட்டம் நடைபெறுகிறது? எங்கள் நாட்டில் ஒன்றும் அப்படிப்பட்ட வகுப்புப் போராட்டம் இல்லையே!

இவ்வளவு அக்கிரமம் செய்கிறான் பார்ப்பான்—அவனை, இன்றும் எங்களில் பலர் 'சாமி' என்றுதானே அழைத்து வருகிறார்கள்! பார்ப்பானை என்ன நாங்கள் இந்நாட்டில் இருக்க வேண்டாமென்றா கூறுகிறோம்? தாராளமாக இருக்கட்டும். ஆனால், அவர்கள் மனிதர்களாக இருக்கட்டும்; தேவர்களாக இருக்கவேண்டாம் என்றுதானே நாங்கள் கூறுகிறோம். எங்களுக்கும் மற்ற மதத்தவர்களுக்கும் இடையூறில்லாத எந்த உரிமையும் பார்ப்பனர்க்கும் வழங்க, நாங்கள் தயாராகத்தானே இருந்து வருகிறோம்!

எங்களை வடநாட்டான் சுரண்டிக்கொண்டு போவதால் உங்களுக்கு என்னப்பா இலாபம்? இதைப் புத்தியுள்ள பார்ப்பனத் தோழர்கள் சிந்திக்கவேண்டாமா? இங்குள்ள முஸ்லிம் தோழர்களை என்ன—நாங்கள் உங்கள்மீதா ஏவி விடுகிறோம்? அல்லது, இங்குள்ள கிறிஸ்தவர்களைத்தான் உங்கள்மீது ஏவி விடுகிறோமா? பின் ஏன் எங்கள்மீது சந்தேகப்பட்டு, வடநாட்டானுக்குக் கையாளாய் இருந்துவருகிறீர்கள்? எத்தனை நாள்தான் திராவிடன் தூங்கிக்கொண்டிருப்பான் என்று நீங்கள் கனவு காண்கிறீர்கள்?

திராவிடம் விழித்தெழுந்துவிட்டது. இனி உரிமைப் போராட்டம் விரைவில் துவக்கப்படுவது நிச்சயம். ஆகவே, விரைவில் பார்ப்பனத் தோழர்கள்—ஒன்று, திராவிடர்களோடு சேர்ந்துவிடவேண்டும்; அல்லது, அவர்கள் குடியேற வடநாட்டில் வசதிகள் செய்துகொள்ளவேண்டும். நாங்கள் குடியேறும்படி கூறவில்லை; அவர்களும் எங்களோடு என்றென்றும் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும்—ஆனால், மனிதர்களாக வாழவேண்டும்

படிப்பகம்

ன்பதுதான் எங்களுடைய உள்ளக் கிடக்கை. இதில் எந்தப் பார்ப்பனத் தோழரும் ந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், திராவிடன் என்றுமே விருந் தாம்பல் செய்யத் தவறியதில்லை என்பதை இவர்களுடைய ஏடே இவர்களுக்கு எடுத்துக் ாட்டும்.

ஆகவே, பார்ப்பனத் தோழர்கள் சற்றேனும் நன்றியறிதலோடு எங்களோடு த்துழைக்கவேண்டும்; அந்த ஒத்துழைப்பால் தங்களுக்கும் ஏராளமான நன்மை உண் ாகும்; இன்றுள்ள வெறுப்புணர்ச்சிக்கும் ஆளாகவேண்டியிருக்காது என்பதை இவர்கள் றிந்துகொள்ள வேண்டுகிறேன்.

திராவிடர் கழகத்திற்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களைப் ற்றி விளக்கிக் கூறுமாறு ஒரு தோழர் கேட்டுக்கொண்டார். திராவிடர் கழகம் ஜஸ்டிஸ் ட்சியாய் இருந்த காலம் முதற்கொண்டே, அது முஸ்லிம்களையும் சேர்த்துக்கொண்டு ான் இயங்கி வந்தது. சுயமரியாதைக் கழகத்திலும்கூட சில முஸ்லிம்கள் இருந்து காண்டுதான் இருந்தார்கள். என்றுமே திராவிடத் தோழர்களுக்கும் முஸ்லிம் தோழர் ளுக்கும் சண்டையோ சச்சரவோ ஏற்பட்டது கிடையாது. திராவிடநாட்டுப் பிரிவினைத் ர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்ததை முஸ்லிம்கள் இதற்குள் மறந்திருக்க மாட் ார்கள் என்றே நினைக்கிறேன். பாகிஸ்தான் கிடைக்கும்வரை திராவிடர் கழகம் அதை ஆதரித்துத்தான் வந்திருக்கிறது; அதற்காக ஆட்சியாளரிடம் சில தொல்லைகளையும் அனுபவித்துத்தான் வந்திருக்கிறது. இன்னும் பாமர முஸ்லிம்கள் எங்களை ஆதரித்துத் ான் வருகிறார்கள். அவர்களைச் சரியானபடி முன்னோக்கி அழைத்துச் செல்லக்கூடிய லைவர்கள் இன்றில்லை.

அவர்களுடைய இன்றையத் தலைவர்களுக்கு எங்கள் மீது ஏதாவது குறைகூறத் தரிகிறதே ஒழிய—இவர்களுடைய சமுதாய நலனுக்கு எது உகந்தது என்றுகூட அறிந்து காள்ள முடியவில்லை.

திராவிடர் கழகம், 'இனி மனுதர்ம ஆட்சிதான் நடக்கும்; ஆகவே சுதந்திர விழா காண்டாடாதீர்கள்' என்று கூறியபோது—இந்தத் தலைவர்கள் என்ன நேர்ந்துவிடுமோ ன்று பயந்து நமக்கு விரோதமாக, ஆகஸ்ட் 15-ந்தேதியன்று வருணாசிரமக் கொடிக்கு ணக்கம் செலுத்திவிட்டார்கள். இவர்களது அடிமைப் புத்தியை அறிந்துகொண்ட அரசாங்கமும் இன்று ஆணவத்தோடு இவர்களைச் சவாலிட்டு அழைக்கிறது. அன்று இவர்கள் ஹிந்துஸ்தான் கொடியை வணங்க மறுத்திருப்பார்களானால் ஆட்சியாளர்கள் இவ்வளவு அக்கிரமமாக நடந்து கொள்ளத் துணிவு கொண்டிருக்கமாட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். இன்றைய முஸ்லிம் தலைவர்களும் அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளை ளாக நடந்துகொள்ளவேண்டி, எங்கள் கழகத்தை சர்வஜாக்கிரதையாக ஒதுக்கிக்கொண்டே வருகிறார்கள். ஏதும் அறியாத பாமர முஸ்லிம் தோழர்கள் என்ன செய்வதென்று புரியாமல் திண்டாடுகிறார்கள். அப்படிப்பட்ட தோழர்களிடமிருந்து எனக்கு ஏறக்குறைய 20, 30 கடிதங்கள் வந்திருக்கின்றன.

திராவிடர் கழகத்தை ஆதரிக்கும்படி, தோழர் ஜின்னா அவர்கள் கூறியிருந்தும்— சுயநலத்தில் விருப்பம் கொண்டுள்ள இத் தலைவர்கள் தங்கள் வாழ்வையே பெரிதென்று கருதி, திராவிடர் கழகத்தை ஒதுக்கிவரப் பார்க்கின்றனர். டெல்லி ஆட்சியாளரின் ஏகாதி பத்தியக் கொட்டத்தைத் தடுக்க திராவிட நாட்டுப் பிரிவினை ஒன்றுதான் தக்க மருந்தென் பதைத் தோழர் ஜின்னா அவர்கள் உணர்ந்துதான் இவர்களுக்குப் புத்தி கூறினார். இவர்கள், எங்கே திராவிடர் கழகத்தோடு சேர்ந்தால் அரசாங்கம் தொல்லை கொடுக்குமோ என்று பயந்து வாளாவிருக்கிறார்கள். தொல்லை ஏறுகிறதா, குறைகிறதா என்று இருந்து பார்க்கட்டும்.



இங்குள்ள முஸ்லிம்களுக்கும் நமக்கும் எவ்வித பெரிய வேறுபாடும் இல்லை என்பது யாவரும் அறிந்ததேயாகும். திராவிடர் கழகத் தலைவர்களும், முஸ்லிம் கழகத்தோழர் களும் ஒன்றுகூடிப்பேசித் தம் வேலைத் திட்டத்தை வகுத்துக் கொள்வது நலம் என்று ஒரு பொறுப்புள்ள தோழர் குறிப்பிடுகிறார். ஆம், உண்மைதான். முஸ்லிம் தலைவர்கள் திராவிடர் கழகத்தோடு ஒத்துழைக்கத் தயாராயிருந்தால், கூட்டு வேலைத் திட்டம் என்றும் தனித்த வேலைத் திட்டம் என்றும் இரண்டு திட்டங்கள் வகுத்துக்கொண்டு அதன்படி நமது கூட்டுநலன் முன்னேறப் பாடுபடலாம்.

சில முஸ்லிம் தலைவர்கள் மதத்தைப் பற்றியே அதிகக் கவலையுடையவர்களாக இருக்கிறார்கள். மதம் மக்களின் தனிப்பட்ட உரிமையாக இருக்கவேண்டுமே தவிர மதத் திற்காக மக்கள் வாழவேண்டுமென்று நினைப்பது அறிவீனம்.

இம் மாகாண முஸ்லிம் லீக் தலைவர்கள் சிலர் தமது சொந்த இலட்சியங்கள் ஈடேற வேண்டும் என்பதற்காகவும், சர்க்காரை விரோதித்துக் கொண்டு எப்படி வாழ முடியும் என்பதற்காகவும் தம் இனத்தைக் காட்டிக்கொடுத்து வாழும் இழிசெயலில் ஈடுபட்டிருக் கிறார்கள். என்றாலும், இவர்கள் தம் தவற்றை விரைவில் உணர்வார்கள் என்றே நான் கருதுகிறேன். இந்துக்களும், முஸ்லிம்களும் என்றுமே ஒன்றாக வாழமுடியாதாகையால்— இன்றில்லையானாலும் நாளை இவர்கள் நமது பக்கத்திற்கு வந்துதான் தீரவேண்டும்; அவர்கள் வரும்வரை நாம் பொறுத்துப் பார்ப்போம்.

வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் மனப்பான்மை இருக்கும் வரைக்கும் நாட்டின் கொந் தளிப்பு இருந்து கொண்டுதான் இருக்கும். இந்து—முஸ்லிம் போராட்டம் இன்று ஐக்கிய நாடுகள் சபைவரை சென்றுவிட்டது. தோழர் கிரிப்ஸ் அவர்களும் கூறிவிட்டார்கள், 'ஒரு நாட்டின் வகுப்புவாதப் பிரச்சினை இன்று அகில உலகப் பிரச்சினையாக மாறியது இது தான் முதல் தடவை' என்று. உலக மக்களின் ஆதரவு முஸ்லிம் பக்கம் இருக்கும் என்பது தான் எனது அபிப்பிராயம். ஆகவே, இங்குள்ள முஸ்லிம்கள் தமது பயங்கொள்ளித் தனத்தைக் கைவிட்டுவிட்டு, தோழர் ஜின்னா அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றித் திராவிடநாட்டுப் பிரிவினைக்காக எங்களோடு ஒத்துழைக்கவேண்டுமென்று நான் முஸ்லிம் களைக் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம் தோழர்களும் இதைத் தமது தலைவர்களுக்கு எடுத்துக்கூறி, தமது நலனைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எனது ஆசை. எது எப்படியானாலும் முழு ஆதரவும் முஸ்லிம்கள் பக்கம் இருக்குமென்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[ஆழியூரில், 10-1-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-1-1948]

## 8. பிரிவினை எண்ணம் ஏன்?

பெரியோர்களே! தோழர்களே!

நம் நாட்டில் வெளிநாட்டான் எவ்வளவு சுரண்டுகிறானோ அதேபோல் இங்கே ஒவ்வொரு ஆளும் ஆயிரம் வேலி, அய்யாயிரம் வேலி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு வியாபாரிக்கும், மில்காரருக்கும் 10 இலட்சம், 20 இலட்சம், 25 இலட்சம் சொந்தமாக இருக்கும். இவையெல்லாம் திருடுவது அல்லாமல் எப்படி வரும்?

இவைகள் எல்லாம் மாறவேண்டுமானால், முதலாவதாக வெளி நாடுகளுக்குப் போவதைத் தடுக்கவேண்டும். தடுக்கக்கூடாதென உத்தரவு சர்க்கார் போட்டால் கூட தடுத்துத்தான் ஆகவேண்டும். அதில் என்ன நேர்ந்தபோதிலும் பரவாயில்லை என்ற உணர்ச்சி மக்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. என்னைப் பொறுத்தவரையில், இந்தக் கொடுமை ஒழியாவிட்டால் எவ்வளவோ கொலைகள் எல்லாம் ஏற்படுமே—அவைகளில்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



எல்லாம் நம்மவர்கள் தாமே இறக்க நேரிடும் என்ற பயம் இருக்கிறது. ஆனால், நம் காலத்திற்கு அப்புறம் கட்டாயம் எப்படியும் இது நடந்துதான் ஆகும். இந்த மாதிரி ஒரு கிளர்ச்சி நடந்தபிறகுதான் எல்லாக் காரியமும் சரியாகும்.

நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது என்றால் அந்த நாட்டின் பொருளாதாரம் தானே மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. ஆனால், இப்பொழுது நமது நாட்டிலே நடக்கிற காரியங்களைப் பார்க்கும்போது, நம் நாட்டில் உள்ள செல்வங்கள், பொருள்கள் எல்லாம் அன்னிய நாடுகளுக்குப் போகின்றன. மலேயோவில் உள்ள பொருள்கள் அன்னிய நாடுகளுக்குப் போகா. சிலோன், துருக்கி முதலிய நாடுகளில் உள்ள பொருள்கள் வெளியே போகா. ஆனால், நமது நாட்டில் இருந்தோ ஏராளமான பொருள்களை வடநாட்டான் சுரண்டிக்கொண்டு போகிறான். இங்கிருந்து சுரண்டிக்கொண்டு போய் பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் கட்டிவிடுகிறார்கள். சுதந்திரம் கிடைத்த நாட்டிலா இவைகள் நடப்பது? இவைகளுக்கு அரசாங்கமும் உதவி அளிக்கிறது. ஆகையால்தான், நாம் பிரிந்தாக வேண்டும் என்று சொல்கிறோம்.

நாம் பிரிந்தால் வடநாட்டானுக்கு. இங்கே பிழைப்பதற்கு வழி இல்லை. பார்ப்பானுக்கும் இந்த சோம்பேறி ஆதிக்கப் பிழைப்புக்கும் வழி இல்லை. இதுபோன்ற நிலைமை ஏற்படும் காரணத்தால்தான் வெள்ளைக்காரர்களுக்குப் பணிந்து பேசி 'உங்கள் முதல் இங்கேயே இருக்கட்டும்; இங்கே சுரண்டிக்கொண்டு போக வேண்டியதைச் சுரண்டிக் கொண்டு போங்கள்' என்று பேசி வைத்து இருக்கிறார்கள். ஆகையால்தான், வெள்ளைக்காரர்களுடைய முதல் இந் நாட்டிலே 300 கோடிக்கு மேல் இருக்கிறது. இந்தப் பணத்தின் இலாபத்தை இன்றைக்கும் அவர்கள் அனுபவித்தக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் மாறியாக வேண்டுமென்றே சொல்லுகிறோம்.

பாகிஸ்தான் வேண்டும் என்று கேட்டதற்கு 'பாகிஸ்தானைப் பிரித்துக்கொடுத்தால், பாகிஸ்தானால் தனித்து வாழ முடியாது; பாகிஸ்தான் சிறிய நாடு' என்று சொன்னார்கள். ஆனால் ஜின்னா, 'நீயாகப் பிரித்துக் கொடுக்காவிட்டால் நாங்கள் ரஷ்யாவிடம் போய் பெற்றுக்கொள்ளுவோம்' என்று பயமுறுத்தவே, ஜின்னாவுக்கு பாகிஸ்தான் கிடைத்தது. தனித்து வாழமுடியாது என்று கூறப்பட்ட அந்த பாகிஸ்தான் இன்று நமக்கு உணவு அனுப்புகின்றது; நம்மை மிரட்டுகின்றது. அதேபோல், நாமும் ஏன் தனித்து வாழ முடியாது? நமது நாட்டில் எதற்குக் குறைவு? வற்றாத நீர் ஓடைகளும், வளம் நிறைந்த வயல்களும் இல்லையா?

அடுத்தாற்போல், நாம் தடுக்கவேண்டியது பார்ப்பானுடைய சுரண்டல். நூற்றுக்கு 3 பேர்கூட இல்லாத கூட்டத்தார் நம்மைக் கீழாக்கி வைத்திருக்கிறார்கள். மதத்தின்பேரால் நாம் கீழ்நிலையில் இருக்கிறோம். இந்துமத சாஸ்திரத்தால் நாம் கீழ்நிலைமையில் இருக்கின்றோம். கடவுளின் பேரால் நாம் கீழ்நிலையில் இருக்கிறோம். இந்த மதம், கடவுள், சாஸ்திரம் என்பவைகளால் பார்ப்பான் நம்மைச் சுரண்டிக்கொண்டே வருகிறான். இந்த சுரண்டல்களை நாம் ஒழித்தாகவேண்டும். இம் மாதிரியான காரியங்களை நாம் செய்வதனால்தான் நம் நாடு பார்ப்பானுடைய ஆதிக்கத்திலிருந்து மீள முடியும்.

வடநாட்டானுடைய சரித்திரத்தை நாம் பார்ப்போமேயானால், நம்மை எல்லாம் காட்டிக்கொடுத்தவர்கள் பார்ப்பனர்கள்தாம் என்று தெரியும். காரணம்? பார்ப்பானுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் யார் செய்துகொடுத்தார்களோ அவர்களுக்கு இவர்கள் தொண்டு செய்கிறவர்கள்தாம்.

இதேமாதிரியாக, இந்த நாட்டிலே இரண்டாயிர, மூவாயிர வருடங்களின் சரித்திரத்திலே பார்ப்பான் நம் நாட்டைக் காட்டிக்கொடுத்து வந்து இருக்கிறான் என்பதை இந்திய



சரித்திரத்திலே காணலாம். வெள்ளையனுக்கு நம்மைக் காட்டிக்கொடுத்தவர்களும் பார்ப்பனர்கள்தாம். இதேபோல்தான், இன்றும் நமது நாட்டை வடநாட்டானுக்குக் காட்டிக் கொடுத்து வருகிறார்கள்.

இங்கே பிழைக்க வழியில்லாமற்போன பார்ப்பனர்கள் அங்கே-வடநாட்டுக்குப் போய்க் கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

[சேலம் விக்டோரியா மைதானத்தில், 22-7-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-7-1951]

## 9. சகிக்க முடியாத அக்கிரமம்

பொதுவாக, ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலையில்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும், கேரளாவும்) சீக்கிரத்தில் பிரிந்தால் நல்லது என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது.

கன்னடியருக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, சுயமரியாதையோ இல்லை; மத்திய ஆட்சிக்கு அடிமையாக இருப்பதுபற்றி அவர்களுக்குச் சிறிதும் கவலையில்லை. மேலும், சென்னை மாகாணத்தில் 7-ல் ஒரு பாகத்தினராக இருந்துகொண்டு, தமிழ் நாட்டில் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-ல் 2 பாகத்தை அடைந்து கொண்டு, இவை கலந்திருப்பதால்—நம் நாட்டைத் தமிழ்நாடு என்றுகூட சொல்வதற்கிடமில்லாமல் தடுத்து ஆண்டுகொண்டிருக்கிறார்கள். ஆதலால், இவர்கள் சீக்கிரம் பிரியட்டுமென்றே கருதிவந்தேன்; அந்தப்படியே பிரிய நேர்ந்துவிட்டார்கள். ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.

இந்தப் பிரிவினை நடப்பதில் சேர்க்கை சம்பந்தமாக ஏதாவது சிறு குறைபாடு இருந்தாலும், மேற்கண்ட பெரும் நலத்தை முன்னிட்டுக் கூடுமானவரை ஒத்துப் போகலாம் என்றே எனக்குத் தோன்றிவிட்டது. மற்றும், இந்தப் பிரிவினை முடிந்து தமிழ்நாடு தனியாக ஆகிவிட்டால், நமது சமய, சமுதாய, தேசிய, சுதந்திர முயற்சிக்கும் அவை சம்பந்தமான கிளர்ச்சிக்கும், புரட்சிக்கும் நமது நாட்டில் எதிர்ப்பு இருக்காதென்றும், இருந்தாலும் அதற்குப் பலமும் ஆதரவும் இருக்காது என்றும் கருதுகிறேன்.

ஆனால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கின்ற குறைபாடு எனக்கு இருக்கிறது.

ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்து போனபின்பு கூட, மீதியுள்ள யாருடைய மறுப்புக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர்கூட இருக்கக்கூடாது என்று, அந்தப் பெயரையே மறைத்து, ஒழித்துப் பிரிவினையில் 'சென்னை நாடு' என்று பெயர் கொடுத்திருக்கிறதாகத் தெரிய வருகிறது. இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும்; எந்தத் தமிழனும் இதைச் சகிக்க முடியாது.

இதைத் திருத்தத் தமிழ் நாட்டு அமைச்சர்களையும், சென்னை, டில்லி சட்டசபை-கீழ் மேல் சபை உறுப்பினர்களையும் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள புலவர்கள், பிரபுக்கள், அரசியல், சமுதாய இயல் கட்சிக்காரர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ், தமிழ்நாடு என்கின்ற பெயர்கூட இந்நாட்டிற்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாத நிலைமை ஏற்பட்டு விடுமானால், பிறகு என்னுடையவோ, எனது கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு எதற்காக இருக்க வேண்டும்?

['தனி அரசு'—அறிக்கை—25-10-1955]

படிப்பகம்

www.padippakam.com



# 10. நாட்டுப் பிரிவினை

நாட்டுப் பிரிவினை என்னும் விஷயத்தை 1938-லேயே முதல்முதலாக நான் துவக்கினேன். பிறகு நான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவனானவுடன் அப் பிரச்சினை ஜஸ்டிஸ் கட்சிப் பிரச்சினையாக ஆகி பிரபலம்பெற்று, ஜின்னா சாயபு, டாக்டர் அம்பேத்கார் ஆகியவர்களுடைய ஆதரவும் பெற்று, யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கத்திடமும் அது சமர்ப்பிக்கப்பட்டது. இதை (பிரிவினையை)ப்பற்றிப் பல திட்டங்கள் பிரிட்டிஷாரிடமே கொடுக்கப்பட்டன. அத் திட்டங்களில் ஒன்றுதான் பாகிஸ்தான் பிரச்சினையாகவும் முளைத்தது. இத் தகராறுகளைப் பிரிட்டிஷார் தங்கள்மேல் போட்டுக்கொள்ள இஷ்டமில்லாததால் 'காங்கிரசினிடம் நாங்கள் இராஜ்யத்தை ஒப்படைத்துவிடுகிறோம். நீங்கள் பிறகு எப்படியோ போங்கள்' என்று சொல்லிவிட்டார்கள்.

ஜின்னா சாயபு பிடித்த பிடியில் பிடிவாதமாயிருந்து வெற்றிபெற்று பாகிஸ்தானைப் பிரித்துக்கொண்டார்.

இராஜாஜி பாகிஸ்தானுக்கு ஆதரவாக (காங்கிரசுக்கு எதிராக) சுற்றுப்பிரயாணம் செய்து பிரச்சாரம் செய்கையில், 'இராமசாமி நாயக்கர் கேட்கும் திராவிடஸ்தானையும், திராவிட மக்கள் கேட்டால் பிரித்துவிட வேண்டியதுதான்' என்று சொன்னதோடு. அவரது சுற்றுப் பிரயாணத்தில் ஈரோட்டில் என் வீட்டிற்கே வந்து, திராவிடநாடு பிரிவினைக்கு ஆதரவு தருவதாகவும் சொன்னார். அன்று ஈரோட்டில் இரயில்வே ஸ்டேஷன் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் வெளிப்படையாக ஆதரவு தந்து அதன் அவசியத்தைப் பற்றியும் பேசினார்.

1940-ல் திருவாரூரில் நடந்த ஜஸ்டிஸ் கட்சியின் 'மாகாண மாநாட்டில் திராவிடஸ்தான் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அதற்காக எனது தலைமையில் ஒரு கமிட்டியும் போடப்பட்டது.

யுத்தம் காரணமாய் அதை அமல்படுத்தாமல், யுத்த ஆதரவு காரியத்தில் இருந்ததால் அப் பிரச்சினை யுத்தம் முடிவுவரை பிரச்சாரம் இல்லாமல் இருந்து, யுத்தம் முடிந்தவுடன் கிளப்பியதும், மேல் சொன்னபடி 'அதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்; எங்களுக்கு அவசரம்; நாங்கள் இந்த மாதத்திலேயே வெளியேறத் தீர்மானித்துவிட்டோம்' என்று பிரிட்டிஷார் சொல்லிவிட்டார்கள்.

ஜின்னா சாயபு, பாகிஸ்தானுக்கு நமது ஆதரவையும் தேடவேண்டி, நாமிருவரும் இரண்டு டிமாண்டை (demands)யும் (பாகிஸ்தான்—திராவிடஸ்தான் ஆகிய) இரண்டு ஸ்தான பிரச்சினையையும் ஒன்றாகவே வைப்போம் என்று சொன்னார். காந்தி 'உங்கள் காரியத்தை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்; அதை (திராவிடஸ்தானை)ப்பற்றி நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்' என்று சொன்னவுடன், எனக்கு ஜின்னா சாயபு 'நீங்கள் தனியாகக் கேளுங்கள். நான் என்னாலான உதவி செய்கிறேன்' என்று எழுதிவிட்டார்.

பிறகு பிரிட்டிஷார் போய்விட்டார்கள்; இராஜ்யம் காங்கிரஸ் கைக்கு கிடைத்துவிட்டது.

காங்கிரஸ் அவசர அவசரமாய் 'இந்தியா ஒரே நாடு; பிரிக்கக்கூடாத நாடு' என்று சட்டம் செய்துகொண்டார்கள். அதன் பிறகு திராவிடர் கழகம் பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒன்று வேறாக ஏற்பட்டும் திராவிடநாடு பிரச்சினையை அதுவும் வலியுறுத்தியே வந்தது.

காங்கிரஸ் ஆட்சி பலத்தால் திராவிடநாடு பிரிவினை கேட்பவர்கள் தேர்தலுக்கு நிற்கமுடியாது என்று விதிசெய்து கொண்டவுடன், தி. மு. க. 'நாங்கள் திராவிடநாடு பிரச்சினையை விட்டுவிட்டோம்' என்று சொல்லி, தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்று இன்று ஆட்சிக்கும் வந்துவிட்டார்கள்.



தேர்தலுக்கு அது ஒரு தடைப் பிரச்சினையாக ஆகிவிட்டதால், அவர்கள் அதைப் பற்றிப் பேச்சு மூச்சுகூட விடக்கூடாத நிலையில் இருக்கிறார்கள்.

மத்திய அரசாங்கம் காங்கிரசார் கையில் இருப்பதால், அவர்களுக்குப் பயந்துகொண்டு அடிக்கடி தி. மு. க. வினர் காலாகாலம் பார்க்காமல் 'நாங்கள் திராவிடநாடு பிரச்சினையை கைவிட்டு விட்டோம்; விட்டுவிட்டோம்; விட்டேவிட்டோம்' என்று சொல்ல வேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டார்கள்.

நாமோ தேர்தலுக்கு நிற்கிறவர்கள் அல்ல. ஆனாலும், நமது திராவிடர் கழகத்தில் அது (திராவிடநாடு பிரிவினையே) ஒரு கொள்கையாய் இருந்தாலும், காமராஜர் காங்கிரஸ் தலைவரானவுடன், சமதர்மம்—சோஷலிசம் காங்கிரசின் கொள்கையாக ஆக்கப்பட்டுவிட்டதால், அது தக்கபடி அமுலுக்குவந்தால் திராவிடநாடு பிரச்சினை அவசியமாக இருக்காது அல்லது கூடாததாய் இருக்காது என்றுகருதி, அதிகமாய்ப் பிரஸ்தாபிக்காமல் இருந்தோம்.

என்றாலும், காங்கிரசின் பலக்குறைவையும், பார்ப்பனரின் கட்டுப்பாடு பலத்தையும் பார்க்கும்போது, சோஷலிச அமுலுக்குத் தொல்லை ஏற்படும் என்று பயப்படவேண்டி இருப்பதால், இப்போது திராவிடநாடு பிரச்சினையைப் பிரச்சாரம் செய்யவேண்டியதும் தென் னாடுகளில் அதுபற்றிப் பிரச்சாரம் செய்யவேண்டியதும் அவசியமென்றே தெரியவருகிறது.

இன்று மக்களுக்குள் சாதி உணர்ச்சி வலுப்பட்டு வருகிறது என்கின்றது மாத்திரமல்லாமல், பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பிரச்சினை நாளுக்குநாள் மிகமிக வலுப்பெற்றுக்கொண்டே போவதுடன், நாட்டு உணர்ச்சியும் தென்னாடு, வடநாடு என்கின்ற பேதத்தோடு பலப்பட்டுக்கொண்டே வருகிறது.

இன்றைய தினத்திலே பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சியும், தென்னாடு—வடநாடு என்கின்ற உணர்ச்சியும் இரண்டும் சேர்ந்து காமராஜர் வலிவைக் குறைக்க இமாலயப் பிரயத்தனம் செய்துவரப்படுகிறது.

காங்கிரசில் பிளவு;

பார்ப்பனர்—அல்லாதார் என்கின்ற பிளவு;

பொது சாதி உணர்ச்சிப் பிளவு;

வடநாடு—தென்னாடு பிளவு;

பணமுதலைகளுடைய ஆதரவால் கூலிகளைச் சேர்த்துக்கொண்டு அவர்களது தொல்லையால் பிளவு;

காங்கிரஸ்காரர்களுக்குள் பதவி, ஆசையால் பிளவு;

மாகாணத்துக்கு மாகாணம் போட்டியால் பிளவு;

ஒவ்வொருமாகாணத்திலும் பதவித் தலைமைப்போட்டியால் பிளவு;

தனித்தனிக் கட்சிப் பிளவு;

இத்தனை பிரிவுகளிலும் பார்ப்பனர் புகுந்து பிளவை பெரிதாக்கும் தொல்லை.

இத்தனை நோய்களுக்கிடையில சோஷலிசம் என்ற குழந்தை பிழைக்குமா? என்று பயப்படவேண்டி இருக்கிறது.

இவற்றையெல்லாம்விட இந்தியாவில் சோஷலிசத்திற்கு அனுகூலமானவர்கள், முழு மூச்சுடன் பாடுபடுகிறவர்கள் எத்தனைபேர் என்றே கணக்கிட முடியவில்லையே!

மொழிபேதத்தால் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொள்ள முடிவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com



கலாச்சார பேதத்தால் நாம் ஒருநாட்டு மக்கள், சகோதரப் பிரஜைகள் என்கின்ற உணர்ச்சியே ஏற்படுவதில்லை. கூட்டுப்பொறுப்பு என்பதே எதில் என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை.

நான் தமிழ்நாட்டில் கிராமம், பட்டிதொட்டி முதலிய எல்லா ஊருக்கும் எல்லா மக்களுக்கும் தெரிந்தவனாக இருந்தாலும்,

கேரளாவில் 40 ஆண்டுகளுக்குமுன் வைக்கம் கிளர்ச்சியில் தெரிந்துகொண்ட ஒரு சிலர் (1½ கோடி மக்களில் ஒருசிலர்), ஒரு 5000 மக்களுக்குத் தெரிந்திருக்கலாம். மற்றவர்களுக்கு என்னைத் தெரியாது.

கர்நாடகத்தில் 2 கோடி மக்களில் பெங்களூரில் சில ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தெரியலாம்.

ஆந்திராவில் ஓர் ஊரிலும், ஒருவரையும் தெரிய வாய்ப்பில்லை; ஒரு சிலர் இருக்கலாம். பிறகு மற்ற நாடுகளில் என்னைத் தெரிந்தவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்? நானே 55 கோடி இந்திய மக்களில் சுமார் ஒரு 55 ஆயிரம் வெளிமாநில மக்கள் தவிர, மற்றவர்களுக்குத் தெரியாதவனாக இருக்கும்போது, இந்தியா எப்படி ஒரே நாடாக இருக்க முடியும்? இந்திய மக்கள் எப்படி ஒரே சமுதாய மக்களாக இருக்கமுடியும்?

இப்படி இருப்பதனால் தனிப்பட்டமாநில மக்களுக்கு இலாபம் என்ன?

நாட்டில் இலாப நட்டங்கள், அழிப்பு, செழிப்பு, கையில் வலுத்த நாட்டிற்கு இலாபமாய் முடியுமே தவிர, கஷ்டப்படும், நஷ்டப்படும் நாட்டுக்கு எப்படிப் பரிகாரம் வர முடிகிறது? 55 கோடி பேருக்கும் ஒரேநாடு, 1000-க்கணக்கான சாதியாருக்கும் ஒரேநாடு, 1000-க்கணக்கான மொழி பேசுகிறவர்களுக்கும் ஒரேநாடு, 100-க்கணக்கான கலாசாரம் கொண்ட மக்களுக்கும் ஒரேநாடு, 50-க்கணக்கான மதம் உடையவர்களுக்கும் ஒரேநாடு, அதாவது இவ்வளவு பேர்களுக்கும் ஆட்சிக்கு ஒரே ஒரு நாடு. இத்தனைபேரையும் அடக்கி ஆள ஒருகட்சி என்றால் இது என்ன நாடா? பாழா? நரகமா? ஜெயிலா? சர்க்கஸ்காரன் வளையத்திற்குள் இருக்கும் மிருகப்பிராணிகள் போல், இப்படி இருக்க என்ன அவசியம் உள்ளது? இதுதான் சுதந்திரமா? மானம், ரோஷம் கண்ணாடி போட்டுக்கொண்டு பாருங்கள்.

உலகில் எங்கே இப்படி ஒருநாடு இருக்கிறது? ஓர் ஆட்சி இருக்கிறது? என்று கேட்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—30-3-1967]

## 11. திராவிடர்—திராவிடநாடு

பெரியோர்களே! தோழர்களே!

தமிழும், தமிழ் நாடும், தமிழ் மக்களும் இப்படிப் பிரிந்து கிடக்கிற காரணத்தால் தான் ஒற்றுமைக்குப் பாடுபடும் நாங்கள் திராவிட நாடு என்றும், திராவிட மக்கள் என்றும், திராவிட கலாச்சாரம் என்றும் எடுத்துக்காட்டிப் புத்துணர்ச்சி ஏற்படுத்தப் பாடுபட்டு வருகிறோம். 'தமிழ்' என்பதும், 'தமிழர் கழகம்' என்பதும் மொழிப் போராட்டத்திற்குத்தான் பயன்படுமேயொழிய இனப் போராட்டத்திற்கோ, கலாச்சாரப் போராட்டத்திற்கோ சிறிதும் பயன்படாது.

சரி, ஆரியர்கள் முதலில் தம் கலாச்சாரத்தைப் புகுத்தித்தான் நம்மை வெற்றி கொண்டார்கள்; நம் கலாச்சாரத்தைத் தடுத்துத்தான் நம் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். நாமும் நம் கலாச்சாரத்தை மறந்து ஆரிய கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டதால்தான் அவர்களுக்குக் கீழான மக்களாக—அவர்களுடைய வைப்பாட்டி மக்களாக, சூத்திரர்களாக, பஞ்சமர்களாக ஆக்கப்பட்டோம்.



எனவே, அக் கலாச்சாரத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், மொழிப் போராட்டம் ஒன்றினால் மட்டுமே வெற்றி பெற்றுவிட முடியாது. கலாச்சாரத்தின் பேரால்—இனத்தின்பேரால் போராட்டம் நடத்தவேண்டும்; அதில் வெற்றிபெற வேண்டும். அப்போது தான் நாம் விடுதலை பெற்றவராவோம்.

மொழிப் போராட்டம், கலாச்சாரப் போராட்டத்தின் ஒரு பகுதிதானேயொழிய முழுப் போராட்டமாகவே ஆகிவிடாது. சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவை எல்லாவற்றிலிருந்துமே நம் இழிவு நீக்கமடைந்தாகவேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்றுவிடுவதாலேயே நமது இழிவும், இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்துவிடமாட்டா; மேலும், இந்த இழிவால் அவதிப்படுபவர்கள் தமிழ் மொழி பேசுகிறவர்கள்—தமிழர்கள் என்பவர்கள் மாத்திரமல்லாமல்—சென்னை மாகாணத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும், அதாவது, வேறு பல மொழிகள் பேசும் மக்கள் உள்ள வங்காளம், பீகார், பம்பாய், மகாராஷ்டிரம் முதலிய மாகாணங்களிலும் இருக்கிறார்கள்.

அங்குள்ள தாழ்த்தப்பட்ட தோழர்களும் தம்மைத் திராவிடர்கள் என்றுதான் கூறிக்கொள்கிறார்கள். உண்மையில் அவர்களும் திராவிடர்கள்தாம்.

இவர்கள் எல்லோருமே, இன்றில்லையானாலும் நாளை நிச்சயம் ஆரியத்தை எதிர்க்க—அதற்காகப் புரட்சிசெய்ய ஒன்றுபடப்போவது நிச்சயம். எனவேதான், நாம் பல எதிர்ப்புகளுக்கிடையேயும், திராவிடர் கழகம் என்கிற பேராலேயே தொடர்ந்து பாடுபட்டு வருகிறோம்.

இந்த ஆரியர்—திராவிடர் போராட்டம் புராண காலங்கள் தொட்டே நடைபெற்று வரும் போராட்டம். புராண காலத்தைப்பற்றி நமக்கு விளக்கமாகத் தெரியவில்லை என்றாலும், ஆரிய கலாச்சாரத்தை ஒழிக்க பவுத்தர்கள் வெகு பாடுபட்டிருக்கிறார்கள். இந்து கலாச்சாரத்திற்கு—அதாவது ஆரிய கலாச்சாரத்திற்கு நேர் எதிர்ப்பான இஸ்லாம் கலாச்சாரத்தைக் கொண்டவர்களான முகலாயர்களும் ஆரியத்தை அழிக்க எவ்வளவோ பாடுபட்டார்கள். ஆனால் அவர்கள் வெற்றி பெற்றார்களல்லர்.

எனவேதான், 'அவர்களே வெற்றி காண முடியாதபோது இந்தத் திராவிடர் கழகத்தார் எங்கே வெற்றி காணப் போகிறார்கள்!' என்று பார்ப்பனர்கள் நம்மைப் பரிகாசம் செய்துவருகிறார்கள். அவர்கள் பரிகசிக்கட்டும்; நமக்குக் கவலையில்லை!

என்னைப் பொறுத்தவரையில், நம் முயற்சி வெற்றிபெறும் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு; திட்டமான உறுதியுண்டு. வெள்ளையனுடைய சுமார் 200 வருடகால ஆட்சியும், நமது 25 வருடகாலப் பகுத்தறிவுப் பிரச்சாரமும், ஆரிய கலாச்சாரத்தினை—ஆதிக்கத்தைக் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைத்திருக்கின்றன.

[சென்னை ராபின்சன் பார்க்கில், 24-1-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-1-1950]

## 12. அன்னியன் யார்?

பெரியோர்களே! தோழர்களே!

மில் காவலாளி அன்னியன்; அவன் கூடாது என்கிறீர்களே! ஆனால், மற்ற விஷயத்தில் பாருங்கள். இந்த நாட்டுத் தலைவர்கள் அன்னியர்கள்; இந்த நாட்டு அதிகாரிகள் பெரிதும் அன்னியர்கள்; இந்த நாட்டுப் பிரதம மந்திரி அன்னியர். மற்றும் எவ்வளவோ ஜீவநாடியான முக்கியஸ்தர்கள் அன்னியர்கள். இந்தப்படி—அன்னியர் என்பவர்கள் யார் என்றால், நம் இனத்தவரல்லாதார், நம் மொழியினரல்லாதவர், நம்

படிப்பகம்

www.padippakam.com



வகுப்பினரல்லாதவர், நம்மைச் சமமாகக் கருதுபவரல்லாதவர், நம்மைச் சுரண்டாதவரல்லாதவர், நம்மை இழிமக்களாய்க் கருதாதவர்களல்லாதவர்களும்; நம்மை இந்நாட்டுக் கல்வி, ஆட்சி ஆகியவைகளுக்குத் தகுதியற்றவர்கள் என்பவர்களும்; நம்நாட்டுப் பழக்க வழக்கம் நாகரிகம் ஆகியவைகளில் வேறுபட்டவர்களும்; நம் திராவிட நாட்டு இன்றைய எல்லைக்கு வெளிப்பட்டவர்களும் அன்னியர்களேயாவார்கள் என்கிறேன். இந்த உணர்ச்சி நம் மக்களுக்கு வருவதற்காக, குறைந்த அளவு அன்னியன் காவல்காரனாகக்கூட இருக்கக்கூடாது என்கின்ற உணர்வு உங்களுக்கு வந்தது போற்றக்கூடியதேயாகும்.

நம் அரசியல் தலைவர்கள் அன்னியர்கள், நம் பண்டிதர்களும், மகாத்மாக்களும் மவுலானாக்களும், சர்தார்களும் ஏன் நம் நாட்டவராய் இருக்கக்கூடாது? காவல்காரர்கள் கூட நம்மவர்களாய் இருக்கவேண்டும் என்று கருதிய உங்களுக்கோ, உங்கள் ஸ்தாபனங்களுக்கோ, உங்கள் தலைவர்களுக்கோ இந்தக் கவலை எப்போதாவது தோன்றியதுண்டா? உங்கள் நாட்டவரில் ஒருவரை மகாத்மாவாகச் செய்துகொள்ள, சொல்லிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? உங்கள் இனத்தவர் ஒருவரை, உங்கள் வகுப்பினர் ஒருவரை இராஷ்டிரபதியாக ஆக்கிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? இருந்தும் உங்களுக்கு அது விஷயத்தில் கவலையும் மானமும் இல்லையே, ஏன்?

தோழர்களே! இந்த நாடும், இந்த இனமும், சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதைத் தன்மையும் கொண்டதானால் இங்கு 'நேரு பார்க்', 'காந்தி சவுக்', 'திலகர் கட்டம்' இருக்கலாமா? இதற்குப் பெயர்தான் பூரண சுயேச்சை என்பதா? இவைகளைப் பார்த்து உங்கள் மனம் பதறவில்லையே! வயிறு எரியவில்லையே! 'தென்னாப்பிரிக்காவில் வெள்ளையன் அட்டூழியம்' என்கின்ற உங்களுக்குத் திராவிட நாட்டில் ஆரியன் அட்டகாசம்; திராவிட நாட்டில் திராவிடர்களை ஆரியன் சித்திரவதை செய்கிறான்; திராவிட நாட்டில் திராவிடனை ஆரியன் தீண்டப்படாதவன் என்கிறான்—தாசி மகன், வேசி மகன், அடிமை என்கிறான்—என்று எந்தத் திராவிடனுக்கு மான உணர்ச்சி ஏற்பட்டு உள்ளம் துடிக்கிறது? இரத்தம் துடிக்கிறது? திராவிடர்களுக்கு ஆரியனா குரு சந்நிதானம்? திராவிடனுக்கு ஆரியனா சுவாமி, எஜமான், அதிகாரி, ஜட்ஜ், கலெக்டர், மாஜிஸ்ட்ரேட், குலகுரு? நாம் சிறிதும் மான உணர்ச்சி அற்ற சமுதாயம், நம் நாடு ஒரு காட்டுமிராண்டி அடிமை நாடு என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? தென் ஆப்பிரிக்காவிலே இருக்கிற வெள்ளையன்—திராவிடர்களை இந்திய ஆரியன் நடத்துவதில், கொடுமைப்படுத்துவதில், இழிவு செய்வதில் 100-ல் ஒரு பங்கு செய்கிறானா? தோழர்களே! தென்னாப்பிரிக்க வெள்ளையர்களைக் குறைகூறுபவர்கள், அவர்கள்மீது மக்களுக்குத் துவேஷத்தை உண்டுபண்ணுகிறவர்கள் இதே ஆரியர்கள். ஆனால், அதைவிடக் கொடுமையாகத் திராவிடர்களை நடத்துகிறவர்கள் இதே ஆரியர்கள்! இதை உணராமல் ஆரியனுக்கு வால்பிடித்து, அனுமாராய் அவன் பின் திரிபவர்கள் திராவிடர்கள். இதுதானே இன்றைய நம் நிலைமை? இன்று இந்தத் தமிழ் நாட்டில் ஆரிய அட்டூழியம் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியுமா?

[திருவல்லிக்கேணி கடற்கரையில், 20-6-1946-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 6-7-1946]

## 13. ஆரியத் தரகர்கள்

ஆகஸ்ட் 15-ந் தேதி சுயராஜ்யத்தைப்பற்றி ஏதேதோ கூறப்படுகிறது. பூரண சுயராஜ்யம் என்றும், அதற்காகக் கொண்டாட்டமென்றும் திட்டம் வகுக்கப்படுகிறது. இதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை; வேண்டுமானால், தன்மானமுள்ள காங்கிரஸ் திராவிடர்கள் அன்று வெட்கித் தலை குனிய வேண்டும்; ஏன்? 1929-ம் ஆண்டிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் எந்த அர்த்தத்தில் தீர்மானிக்கப்பட்டதோ அந்த சுயராஜ்யந்தானே நாளை வரப்போகுது? வெள்ளையர் உறவு சிறிதுகூட இல்லாத



பூரண இந்தியா முழுவதையும் கொண்ட சுயராஜ்யம்—அதாவது, பூரண சுயேச்சை கேட்கப்பட்டது. அதற்காக அன்றுமுதல் இன்றுவரை நமது மக்கள் எவ்வளவு தியாகங்கள் செய்தனர்? குறிப்பாகக் கூறவேண்டுமானால், காங்கிரஸ் திராவிடர் எவ்விதக் கஷ்டநஷ்டங்களுக்கு ஆளானோம்? என்னையும் சேர்த்து நம் இனத்துக்குள்ளாகவே எவ்வளவு போராட்டம்; எவ்வளவு பொருளை வாரிக்கொட்டி இருப்போம்! சுயராஜ்யத்தின்பேரால் அவ்விதமெல்லாம் செய்தும் கடைசியாகக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான் கிடைத்தது.

இந்தக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அன்று மிதவாதிகள் என்று கூறப்பட்டவர்களால் கேட்கப்பட்டபோது—அவர்களைப் பிற்போக்காளர், வெள்ளையர் தாசர்கள் என்று கூறி ஒத்துழையாமை செய்து, நாட்டில் பெரிய கலவரங்களிலிருந்து பல எதிர்ப்புகளை உண்டாக்கி, கடைசியாக அதே குடியேற்ற நாட்டு அந்தஸ்தை—அதுவும் முழு இந்தியாவுக்குமின்றி இந்திய உபகண்டத்தின் மூன்றிலொரு பாகமான இந்துஸ்தான் என்ற பகுதிக்கு மட்டும் பெற்று, அதை சுயராஜ்யம் என்று கொண்டாடுவது என்றால் இதைவிட வெட்கக் கேடான முறைவேறு இருக்க முடியுமா?

இந்துஸ்தான் சுயராஜ்யம் என்று நாளை கொண்டாடப்போகும் வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சி, பிரிட்டிஷாருக்கு ஏஜெண்டாக—கையாளாகயிருந்து வெள்ளையருடன் வடநாட்டு பிர்லா, பஜாஜ் கோஷ்டியினர் செய்துள்ள ஒப்பந்த ஆட்சியே யன்றி, சுய ஆட்சி என்று எந்தக் காங்கிரஸ் அரசியல் நிபுணராகிலும் கூறமுடியுமா?

வேண்டுமானால், வடநாட்டுக்காரர்களுக்கு இன்னும் அதிகமாக நம் மாகாணத்தின் பொருளாதாரத்தைச் சுரண்ட அதிகாரம் இந்த சுயராஜ்யத்தின்மூலம் ஏற்பட்டிருக்கிறதற்கு அவர்களுக்குக் கொண்டாட்டம் ஏற்படலாமே தவிர, மானமுள்ள திராவிடன் இனி திண்டாட வேண்டித்தானே இருக்கப்போகிறது? ஆகஸ்ட் சுயராஜ்யம் அநீதிக்கு அடிப்படையானதே தவிர, நம் நாட்டு மக்களின் நேர்மையான உண்மைச் சுதந்திர வாழ்வுக்கு ஏற்றதல்ல.

இந்த இந்திய உபகண்டத்தின் மற்ற மாகாணங்களைவிட நம் மாகாணமே எல்லா வளப்பத்திலும், அறிவிலும் முதன்மையானதென்பது உலகறிந்த சரித்திரச் சான்றாகயிருந்தும், நமக்குள் இன ஒற்றுமையில்லாததாலேயே மற்ற மாகாணத்தவர்களுக்கு, குறிப்பாக வடநாட்டுக்காரர்களுக்கு நாம் தாசானுதாசனாய் இருந்துவருகிறோம்.

இந்துஸ்தான் சுயராஜ்ய மாகாணங்களில் இனி கவர்னராக இருப்பவர்கள் சாதாரண கலெக்டர்களுக்குள்ள அதிகாரங்கூட இன்றி, வடநாட்டுத் தாக்கீதுக்கு அடிபணிந்து இருக்கவேண்டுவதோடல்லாமல், வேறு ஏதாவது உண்டா என்று கேட்கிறேன். கவர்னர்களின் கதியே இவ்வாறென்றால் மந்திரிகளைப்பற்றிக் கூற வேண்டுவதில்லை. 'அட்வைசரி' சர்க்காரிலாவது மந்திரிகளுக்குச் சிறிது அதிகாரம் இருந்தது. ஆகஸ்டு சுயராஜ்யத்தில்—பஞ்சாயத்து போர்டு மெம்பர்களுக்கிருக்கும் அந்தஸ்தைவிடக் குறைவானதென்றே கூறலாம்—மாகாண மந்திரிகளுக்குக் கொடுத்துள்ள அந்தஸ்து.

இந்த இலட்சணத்தில் கொண்டாட்டமாம்! காங்கிரஸ் ஆரியன்தான் கொண்டாடுகிறான் என்றால் காங்கிரஸ் திராவிடனுக்கு ரோஷம் இருக்கவேண்டாமா? ஏன், நமது தோழர்கள் அவினாசியோ, பக்தவத்சலமோ, சிவசண்முகமோ, ஆகஸ்டு சுயராஜ்ய ஜனாதிபதியாக, பிரதமராக இருக்க இலாயக்கில்லையா? வடநாட்டான் தேசபக்திதான் அசல் தேசபக்தி; மற்றவர்களுடையது போலியா? இவ்விதப் பித்தலாட்டங்களையெல்லாம் தகர்த்தெறியாமல் வெத்துவேட்டு சுயராஜ்யத்தில் எத்தனை நாளைக்கு மானத்துடன் வாழமுடியும்?

எனவே, தோழர்களே! வடநாட்டுப் பாசிச ஆட்சியை அறவே அழித்து, நம் மாகாணத்துக்கு—திராவிட நாட்டுக்குப் பூரண சுதந்திரம் கொண்ட விடுதலையையடைய

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமென்ற போராட்டம் எளிதில் கைகூடுமென்று நாம் நம்ப முடியவில்லை. காங்கிரசின் போக்கே குண்டாந்தடி ஆட்சியாக இருந்துவருகிறது. மக்களைத் துன்புறுத்துவதே அகிம்சா மூர்த்தியின் அருளைப்பெற்ற சீடர்களின் சுயராஜ்யத்தின் அடிப்படையாக இருந்துவருகிறது. தொழிலாளர்களைத் துன்புறுத்துவதே இன்றைய பட்டேலின் பாசிச வெறியாகக் காட்சியளிக்கிறது. நம் நாட்டை நாம் ஆளவேண்டும். மற்ற நாட்டினரின் பொதுவான விவகாரங்களில் நட்புக்கொண்டு வாழ்வதே மானமுள்ள வாழ்வு என்றால், அதை எதிர்க்கும் துரோகிகளின்—பட்டம், பதவிக்காக இனத்தைக் காட்டிக்கொடுக்கும், வடநாட்டவர்களின் ஆதிக்கச் சுரண்டலுக்குத் துதிபாடும் நமது விபீஷணர்களின் போக்கு ஆகியவற்றிற்கிடையே நாம் போராட வேண்டியிருக்கிறது.

எதிர்காலத்தில் இந்துஸ்தானத்தில், குறிப்பாக நம் நாட்டில் 'நவகாளி'கள் தோன்றுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. நம்மை அவ்வளவு நாசப்படுத்தவே வடநாட்டு ஏகாதிபத்தியம் தயார் செய்துகொண்டிருக்கிறது, சுயராஜ்யம் என்ற பேரால்.

ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். இவ்வளவு எதிர்ப்புக்களையும் அநீதிகளையும் சகித்து வென்று, நம் திராவிடத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டியே தீருவோம். எனவே, அதற்கேற்ப, இளைஞர்களே! திராவிட இனத்தவர்களான தொழிலாளர்களே! விவசாயிகளே! மாணவர்களே! அறிஞர்களே! உங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள். திராவிடத்திலும் 'நவகாளி'கள் தோன்றினால் அதற்கு நாம் அல்ல பொறுப்பு; இந்நாட்டு ஆரியர்கள்தாம் என்பதை எதிர்காலம் கூறும். அந்த நிலையிலிருந்து பழிச்சொல் ஏற்படாவண்ணம், இனியாவது, ஆரியம் வடநாட்டு ஆதிக்கத்துக்குத் தரகராயிருந்து நமது திராவிடத்திற்குத் துரோகம் செய்யவேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

நாட்டை ஆண்டதாக சரித்திரச் சான்றுகளில் தனது இனத்தைப்பற்றி இதுவரை பொறிக்கப்படும்படியான நிலையில்லாதிருந்து வரும் ஆரியம்—நாட்டைப் பிறர்க்குக் காட்டி கொடுக்கும் இனம் என்பதையாவது திராவிட நாடு பிரிவினை விஷயத்திலாகிலும், பிற்காலத்தில் எழுதும்படியான நிலையைத் தேடிக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறேன். இதனால்—திராவிடத்தால் ஆரியத்துக்குத்தான் முழுதும் அழிவு ஏற்படும் என்பதை ஆரியம் உணரட்டும்.

எனவே, காந்தியாரல்லர், அவர்தம் சீட கோடிகளல்லர், அல்லது அந்தராத்மா அல்ல, யார் எதிர்த்தாலும், திராவிட நாட்டை அடைந்தே தீருவோம் நாம்! அதற்குப் பல தொல்லைகளைத் தாண்டவேண்டியிருக்கும்—சலிப்படையாதீர்கள்! மானமில்லாது வாழ்வது வாழ்வல்ல. திராவிடன் மானமுள்ளவன் என்பது சரித்திரச் சான்று. அதற்கேற்ப அவன் இனி எந்த நாட்டவனுக்கும், எக்காரணத்தை முன்னிட்டும் அடிமையாயிரான் என்பது உறுதி.

['விடுதலை'–அறிக்கை—27-7-1947]

## 14. சுதந்திர நாளா?

வெள்ளையர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறிவிடவில்லை. இந்தியாவுக்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்து அளித்திருப்பதாய்ச் சொல்லுவதன் மூலம், இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றியிருக்கிறார்கள்.

இந்தியர்களில் எல்லாக் கட்சி மக்களிடையேயும் அதிகாரத்தை ஒப்புவிக்காமலும், எல்லோருடைய குறைகளைக் கேட்காமலும், எல்லாக் கட்சியாரையும் சமரசப்படுத்தாமலும், தங்களுக்குப் பல வழிகளிலும் வியாபாரத்திற்கும் பிரிட்டன் நலத்திற்கும் சில இரகசிய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு காங்கிரஸ்காரரிடம் மாத்திரம் அதாவது, பார்ப்பன



ஆதிக்கமும் வடநாட்டார் சுரண்டல் வசதியும் கொண்ட—ஒரு சுயநல தந்திர சூழ்ச்சி கொண்ட கோஷ்டியார் கைக்கு அதிகாரத்தை மாற்றிவிட்டு, அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் நிபந்தனையோடு அதிகாரத்தை மாற்றி இருக்கிறார்கள்.

எனவே, குடியேற்றநாட்டு அந்தஸ்து என்பது அதிகார மாற்றமே தவிர, நாடு ஒப்படைப்பு அல்ல.

உதாரணமாக, இந்தியாவுக்கு அரசர் ஜார்ஜ்மன்னர் ஆவார். மேற்பார்வையாளர், கவர்னர்-ஜெனரல் மேன்மைதங்கிய மவுண்ட்பேட்டன் ஆவார்.

ஆதலால், வெள்ளையருக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஓர் ஒப்பந்த ஆட்சிதானே ஒழிய, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்திர ஆட்சியல்ல. இதன் பயனாய் இந்த நாட்டிலுள்ள காங்கிரசல்லாத மக்களுக்கு நன்மை இல்லை; பிரதிநிதித்துவம் இல்லை. வருணாசிரம தர்மக்கொடுமை ஒழிவதில்லை.

ஏற்படப் போகும் மாகாணஆட்சி என்பது வெள்ளையர் அதிகார ஆட்சிக்காலத்திலிருந்த உரிமையைவிட மோசமான ஆட்சியேயாகும். அதிகாரங்கள் யாவும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் உண்டு.

சில அதிகாரங்கள்தாம் மாகாணங்களுக்கு என்றாலும், அவைகளும் கவர்னருக்கே ஒழிய, மந்திரிகளுக்கல்ல.

கவர்னர், தெரிந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்கட்டுப்பட்டவரல்லர்; மந்திரிகள் வெறும் பொம்மைகள்—அதாவது ஆலோசனை சொல்லுபவர்கள் ஆவார்கள்.

சென்னை மாகாணத்துக்கு 2000 மைல் தூரமான டில்லியில் இருக்கும் பிரஸிடெண்ட் கையில், சென்னை மாகாண மக்களை நடத்தும் ஆட்சி இருக்கிறது.

பிரஸிடெண்டும் மத்திய அரசாங்க மந்திரிகளும் அசெம்பிளி மெம்பர்களும் சேர்ந்த மொத்த கணக்கில் 10-ல் ஒரு பாக எண்ணிக்கைக்குக் குறைவான எண்ணிக்கையாளர்தாம், அங்கு சென்னை மாகாணப் பிரதிநிதிகளாய் இருப்பார்கள். அவர்களும் பெரிதும் ஆரிய அடிமைகளாகத்தாம் இருப்பார்கள்.

வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் சமுதாயத்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஏராளமான பேதம் உண்டு.

வியாபாரத்தில் வடநாட்டார் கொள்ளை இனியும் அதிகப்படுமே ஒழிய, சிறிதும் குறையாது.

ஆத்மார்த்தத்துறை என்னும் மதக்கொடுமையால் சமுதாயக்கொடுமை வடநாட்டார் இஷ்டப்படிதான் பெருகுமே தவிர, சமுதாய சமத்துவம் ஏற்பட வழி இல்லை.

நாம் இன்று திராவிடநாடு கேட்பது முக்கியமாய் வடநாட்டான் பொருளாதாரச் சுரண்டலும், ஆரியன் விளைத்த சமுதாய இழிவும் நீங்கவேண்டும் என்பதற்காகவேயாகும்.

அதாவது—இன்று, நைஜாம், திருவாங்கூர், மைசூர் நாடுகள் விரும்புவதுபோல், சென்னை மாகாண $4\frac{3}{4}$ கோடி திராவிட மக்கள் தங்களது கலாச்சாரம், பொருளாதாரம் முதலியவைகளுக்கு ஏற்ற சுயேச்சை நாடாக இருக்கவேண்டும் என்பதே.

ஆதலால், வெள்ளையர் நம்மை மோசடி செய்ததை வெறுக்கவும் அதாவது, வடநாட்டு பனியாக்களுடையவும், ஆரியப் பார்ப்பனர்களுடையவும் சூழ்ச்சிக்கும், ஏமாற்றுக்கும் உள்ள தந்திரத்திற்கும் நாம் ஏமாந்துவிடவில்லை என்பதைக் காட்டவும்; பூரண சுயேச்சையுள்ள திராவிடநாடுதான் நமது இலட்சியமே தவிர, அதற்குக் குறைந்த எதைக்கொண்டும்

படிப்பகம்

www.padippakam.com



நாம் திருப்தியடையமாட்டோம், ஓயமாட்டோம், கிளர்ச்சி செய்தே தீருவோம் என்பதைக் காட்டவும் இம் மாதம் 15-ந் தேதி நடக்கும் சுதந்திரத் திருநாள் என்னும் 'ஆரியர்—பனியா' ஏமாற்றுத் திருவிழாவில் நாம் கலந்து கொள்வதில்லை என்கிறோம்.

இதைக் காங்கிரஸ்காரரும், ஆரியர்–பனியாக்கள் அடிமைகளும் திரித்துக்கூறி 'வெள்ளையனை வெளியேற்றுவது, திராவிடர் கழகத்தாருக்கு இஷ்டமில்லை' என்று விஷமப் பிரச்சாரம் செய்வார்களாகில், அது காங்கிரசாரின் மற்றொரு பித்தலாட்டப் பிரச்சாரம் என்று திராவிட மக்கள் கருதவேண்டுமேயொழிய ஏமாந்து போகக்கூடாதென்று வேண்டிக்கொள்கிறேன்.

[ஆதாரம் : அறிக்கை—'விடுதலை' 20-8-1972]

## 15. சுதந்திரப் போராட்டமா? சாதிமதச் சண்டையா?

1857ஆம் ஆண்டில் நடந்த 'சிப்பாய்க் கலகம்' என்னும் ஒரு கலவரத்தை, 'இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சி' என்று பெயர் வைத்து—'இன்றைக்கு அது நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன ; ஆதலால் இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சியின் 100–வது ஆண்டு விழாக் கொண்டாடுவது' என்பதாக ஒரு விழாக் கொண்டாடப்படுகிறது.

1857–ல், 'இந்தியா விடுதலை அடையவேண்டும்' என்பதான ஒரு எண்ணமே இந்தியாவில் யாருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. 1857–ல் மாத்திரமன்று ; காங்கிரஸ் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் 1885 ஆம் ஆண்டில் காங்கிரசை ஏற்பாடு செய்த பெருந் தலைவர்கள் என்பவர்கள்கூட இந்தியா விடுதலை அடையவேண்டும் என்ற எண்ணத்தின் மீது காங்கிரசை ஏற்படுத்தவில்லை.

சாதாரணமாக நடுநிலையில் இருந்து, பகுத்தறிவைக் கொண்டு பார்த்தால், வெள்ளையர் இந் நாட்டாட்சியைக் கைப்பற்றிஆட்சி செலுத்த முன்வந்த காலத்தைத்தான், 'இந்தியர்வின் விடுதலை நாள்' என்று கொள்ள இடங்காணும்படியாக இருக்கிறது.

இதற்கு ஆதாரம் வேண்டுமானால், காங்கிரசின் துவக்க விழாவையும் அதன்பின் ஒவ்வொரு ஆண்டு காங்கிரஸ் விழாவிலும் இந்தியாவின் பெருந் தலைவர்கள் பேசி இருக்கும் பேச்சுக்களையும், அவற்றில் வெகுகாலம் செய்யப்பட்டு வந்திருக்கும் தீர்மானங்களையும் ஊன்றிப் படித்துப் பார்த்தால் தெரியும். இந்தியாவானது வெள்ளையர் ஆட்சி ஏற்படும் காலம் வரையில் ஒரு அடிமை நாடாக இருந்துவந்ததாகவும், இந்தியப் பெண் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத தன்மையில் 'காட்டாளர் ஆட்சியாக' இருந்ததாகவும், இந்திய மக்கள் கண்ணற்ற குருடர்கள்போல் எழுத்து வாசனை அற்றவர்களாகவும், காட்டுமிராண்டிகள் போல் நல்லறிவு நல்லாராய்ச்சி அற்றவர்களாக இருந்ததாகவும், வெள்ளையர் ஆட்சி ஏற்பட்ட பின்பே நாடு நல்ல மனிதத் தன்மை உள்ள உன்னத நிலைக்கு வந்திருப்பதாகவும் பல தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். மற்றும், ஆங்கிலம் புகுத்தப்பட்டதானது ஒரு 'வரப் பிரசாதம்' என்றும் பல தடவை கூறியிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்லாமல், 'இந்த நாடு வெள்ளையர் ஆட்சிக்கு வந்தது கடவுளால் அருளப்பட்ட அருள் பிரசாதம்' என்றும் ; 'வெள்ளையர் ஆட்சியே இந்நாட்டில் என்றென்றைக்கும் இருந்து வரவேண்டும்' என்றும் ; 'அப்படி இருந்துவர, கடவுள் அருள்புரிய வேண்டும்' என்றும் ; 'வெள்ளையரைக் கடவுள் காப்பாற்ற வேண்டும்' என்றும் பல பிரபல தலைவர்கள் கடவுளைப் பிரார்த்தித்து ஏகமனதாகத் தீர்மானமும் செய்திருக்கிறார்கள்.

இவை ஒருபுறமிருக்க, இந்நாடு என்றைய தினம் சுதந்திர நாடாக இருந்தது; என்றைய தினம் நல்ல ஆட்சி நடந்த நாடாக இருந்தது என்பதற்கு நல்லதொரு எடுத்துக்



காட்டோ, ஆதாரமோ காண முடிவதில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தமிழ் நாட்டிற்கு (திராவிட நாட்டிற்கு) ஒரு உண்மையான–ஆதாரபூர்வமான–நடுநிலை கொண்டதான சரித்திரமே காணமுடிவதில்லை.

இந்த நாட்டு ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக, ஆபாசக் காட்டுமிராண்டித்தனமான கற்பனைப் புராண இதிகாசங்களில் உள்ளவைகளைத்தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அறிவும், ஆண்மையும், நீதியும் கொண்டதான ஒரு ஆட்சியோ, ஆட்சி முறையோ இருந்ததாகக் கருதக்கூட இடமில்லை.

கற்பனைப் புராண இதிகாசகால ஆட்சிக்கு உள்ள பெருமையெல்லாம் வருணாசிரம முறைப்படி மக்கள் நடந்துகொள்ளும்படி ஆளப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன காணமுடிகிறது? அதை விட்டுவிட்டு, உண்மையாகவே தமிழ்நாட்டைத் தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தார்கள் என்ற பெருமை எல்லாம்—வருணாசிரம தருமத்தைக் காப்பாற்றி, அதன்படி ஆண்டு வந்தார்கள் என்று பாராட்டுவதைத் தவிர தமிழர்கள் ஆட்சிக்கு வேறு என்ன பெருமை இருக்கிறது? சேர, சோழ, பாண்டிய சாதியரான அரசர்கள் யோக்கியதையும் ; அவர்கள் மக்கட்குச் செய்த நன்மையையும் சரித்திர ஆதாரப்படி–கவிராயர்களின் கவிப்படி பார்ப்போமானால், நம் தமிழரசர்கள் யோக்கியதையெல்லாம் பெருங்கோவில்கட்டி, சோம்பேறிகளும் அறிவற்ற நபர்களும் மக்களை வஞ்சித்து இங்கு மடையர்களாக ஆக்கி வாழ்ந்து வந்தார்கள் என்பதைத்தான் சரித்திர மூலமாகவும் பிரத்தியட்ச அனுபவமூலமாகவும் காண்கிறோம். மற்றும், தமிழரசர்களின் ஆட்சிக்கு மற்றொரு எடுத்துக்காட்டு வேண்டுமானால், இந்திய உபகண்டத்தில் இந்தத் தமிழ் நாட்டைப்போல் ஏராளமான கோவில்களைக்கொண்ட நாடு வேறு எங்கும் இல்லை என்பதும், தமிழ்நாட்டு மக்களைப்போல் மடமை, மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து மானம் என்றால் என்ன என்பதை ஒரு சிறு அளவுகூட அறிந்திருக்க முடியாத பாமர மக்களை வேறு எங்குமே காணமுடிவதில்லை என்பதும்தான்.

இதுபோலவேதான், தமிழ் அரசர்கள் ஆட்சி முறையையும் அறிவுத் திறனையும் காண, பாண்டிய அரசர் ஆட்சியையும் அறிவுத் திறனையும் காண, அவர்களது சமய நடத்தையைக் கண்டால் தெரியலாம்.

தமிழரசர்கள் கடுகளவு அறிவும் தன்மானமும் உடையவர்களாக இருந்திருந்தால், இந்த நாட்டில் 2000, 3000 ஆண்டுகளாக இந்த நாட்டு மக்கள்—பழங்குடி மக்கள் கடைச் சாதியாய், இழி மக்களாய் இருந்திருக்க முடியுமா? எந்த அரசனாவது தானுட்பட—தன்னின மக்கள் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்கள் கீழ்மக்களாய், இழிமக்களாய் இருக்கிறார்களே என்று சிந்தித்ததாகக் காணப்படுகிறதா? கோவில்களுக்கும் சத்திரங்களுக்கும் மடங்களுக்கும் அவற்றின் விழாக்களுக்கும் விளம்பரங்களுக்கும் விடப்பட்டிருக்கும் சொத்துக்களையும்—அதே நேரத்தில் இந்நாட்டு மக்களின் கல்வியறிவு பெருகுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்காதபடி விட்டிருக்கும் தன்மையும், மற்றும் நம் மக்களுக்கு நல்லறிவும் நல்லொழுக்கமும் புகுத்தப் பாடுபட்ட பவுத்தர்களையும் சமணர்களையும் வெட்டியும், சித்திரவதை செய்தும், கழுவேற்றியும், கொடுமை செய்த சரித்திரத்தையும் நடப்பையும் பார்த்தால்—நம் தமிழரசர்கள் ஆட்சி ஒரு கொடுங்கோன்மையும், காட்டுமிராண்டித்தனமும் கொண்ட ஆட்சி என்பதைத் தவிர வேறு என்ன ஆட்சி என்று சொல்லமுடியும்?

ஆகவே, நம் நாட்டிற்கு, நம் மக்களுக்கு ஒரு விடுதலை ஏற்பட்ட காலம் என்று சொல்லவேண்டுமானால்—அந்த விடுதலைக்கு என்ன அர்த்தம் சொல்லுவதானாலும் இந் நாடு அன்னியர் ஆட்சிக்கு வந்த காலமேயாகும். அப்போதுங்கூட, வெள்ளையர் இந்தியாவைத் தன்னாட்டு வளத்திற்காகச் சுரண்டுவதை முதல் நோக்கமாகக் கொண்டனர் ; அடுத்தபடியாக, இந்திய மக்களிடையே உள்ள சாதிப் பிரிவு, காட்டுமிராண்டித்தனமான சமயம், கடவுள், கடவுள்–சமய ஆதாரங்கள், நெறிகள் ஆகியவை



படிப்பகம்

www.padippakam.com



களில் நல்ல மாறுதல் ஏற்பட வேண்டுமென்றும், இந்திய மக்கள் கல்வி, அறிவு ஆகியவை களில் தலைசிறந்து விளங்க வேண்டுமென்றும் கவலை கொண்டு, இந்திய 'மேல்சாதிக் காரர்'களின் பலமான எதிர்ப்பையும் சமாளித்து, எவ்வளவோ மாறுதல்களை உண்டாக் கினர் என்பதை மறுக்க முடியாது.

ஆகவே 1857-ல் நடைபெற்ற இந்தக் கலவரமானது, உண்மையில் 'வெள்ளைய னுடைய ஆதிக்கம் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்படுவது கூடாது; அரசியல் ஆதிக்கம் அன்னியரிடத்திலா இருப்பது!' என்ற கருத்திலல்ல என்பதை அப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளை முன் வைத்துப் பார்த்தால் அறியலாம்.

லார்டு டல்ஹவுசியின் சீர்திருத்தங்கள், ஒரு சிலரான பார்ப்பனர்கட்கு ஏகபோக உரிமையாக இருந்த கல்வியை—நாடெங்கும், எல்லோரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் பரப்பிய முறையையும்; இரயில், நீராவி என்ஜின், தந்தி சாதனம் போன்ற விஞ்ஞான முறைகளைப் புகுத்தியமை போன்ற சீர்திருத்தங்களையும் கண்டு, வைதிக மேல் சாதிக்காரர்கள் என்பவர்கள் வெகுண்டார்கள். 'இத்தகைய அறிவு வளர்ச்சி தங்களுடைய ஆதிக்கத்திற்கு எங்கு உலை வைத்துவிடுமோ!' என்றஞ்சி, எதைச் செய்தால் இவைகளை ஒழித்துக்கட்டலாம் என நினைத்து, அதைக் கண்டுபிடித்து—பாமர மக்களான, சிப்பாய்களாக இருந்த வைதிக மனப்பான்மையாளர்களை, 'உங்கள் சாதியும், மதமும் ஒழிந்துவிட வெள்ளையன் ஏற்பாடு செய்கிறான்' என்று கூறி, வெள்ளைக் காரர்களை எதிர்க்கச் செய்தனர். இந்தச் சீர்திருத்தங்களும் விஞ்ஞானக் கல்வியும் பரவினால்—எங்கே சாதிமுறையும், அதையொட்டி அமைந்துள்ள 'கீழ் சாதி' மக்களின் பணிவும் அடிமைத்தனமும் மாறிவிடுமோ என்ற சுயநல எண்ணத்தின்பேரில்தான் மற்றவர்களைத் தூண்டினர். 'துப்பாக்கிகளில் கொழுப்பைத் தடவிக் கொடுத்தனர்' என்ற குற்றச்சாட்டிலும்கூட, இந்து சிப்பாய்களிடம் அது பசுமாட்டுக் கொழுப்பு என்றும், முஸ்லிம்களிடம் அது பன்றிக் கொழுப்பு என்றும் பிரச்சாரம் செய்து, அவரவர்களுக்கு உள்ள மத உணர்ச்சியையும் அதனடியாகப் பிறந்த மூடநம்பிக்கையையும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

நெற்றியில் மதக்குறிகளை யாரும் அணியக்கூடாது; எல்லா சிப்பாய்களும் ஒரே மாதிரியான உடைகளையே உடுத்த வேண்டும்; தாடி வைத்துக்கொள்ளக்கூடாது; காதணி அணியக்கூடாது என்பன போன்ற விதிகளின்மூலம் வெள்ளையர்கள் இவர்களுடைய மதத் தத்துவங்களைத் தகர்த்தெறியச் செய்கிறார்கள் என்ற கண்ணோட்டத்துடன்தான் அவைகளை நோக்கினார்கள்.

அதுபோலவே, கடலைத் தாண்டி பர்மா முதலிய நாடுகளுக்குப் போரிடச் செல்ல வேண்டும் என்ற விதி—தங்களுடைய இந்துமத சாஸ்திரத்திற்குப் புறம்பான முறையில் அமைந்துள்ளது என்று நினைத்தே கொதித்தெழச் செய்தார்கள்.

இரயில் வசதியும், படிப்பு வசதியும் மற்ற விஞ்ஞான சாதனங்களின் மூலமும் கிறிஸ்துவ மதத் தத்துவங்கள் பரவ ஏதுவுள்ளது என்றும்—அதனால் இந்துமதம் எங்கு அழிந்துவிடுமோ என்ற பயமும், சிப்பாய்களைத் தூண்டிவிட்ட 'மேல் சாதிக்காரர்களுக்கு' இருந்தது என்பது ஒரு மாபெரும் உண்மையாகும்.

மேற்கண்ட உண்மைகளை வைத்துப் பார்த்தால், 1857 கிளர்ச்சி வெள்ளையனுடைய ஆதிக்க வாழ்வை எதிர்த்து ஏற்பட்டதன்று என்பதும், அவனுடைய சீர்திருத்தங்களினால் விளைந்த பலன்களை எதிர்த்தே ஏற்பட்டது என்பதும் புலனாகும். உதாரணமாக, பெண்கள் உடன்கட்டை யேறும் பழக்கமான 'சதி' என்ற முறையைச் சட்டத்தின் மூலம் வெள்ளைக்காரன் ஒழித்தபோது ஏற்பட்ட வைதிகர்களின் கூக்குரலை—வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிளம்பிய விடுதலைச் சங்கொலி என்று சொல்ல முடியுமா? அதுபோலவே தான் இந்த 1857 நிகழ்ச்சியும்.



அப்படியே விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டம் 1857 என்றே வைத்துக் கொண்டாலும், நமது தமிழ் (திராவிட) மக்களைப் பொறுத்த வரையில்—இன்றைய நிலை யிலாவது விடுதலை பெற்றவர்களாகத் திகழ்கிறார்களா என்பது சிந்திக்கத் தக்கது. வெள்ளைக்காரன் காலத்தில் எப்படி எதற்கெடுத்தாலும் லண்டனுக்கு ஓடி முடிவுகளைச் செய்தார்களோ, அதே தன்மையில்—இப்போது டெல்லிக்கு ஓடி முடிவுகளுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. தொழிற்கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை போன்ற சிறு சங்கதிகளில் கூட 'டெல்லியின் ஆணையைத் தலையின்மேல் நாம் தாங்கவேண்டி'யுள்ளது என்றால், நாம் எப்படி விடுதலை பெற்றவர்களாவோம்?

வெள்ளைக்காரனுக்கு வால்பிடித்து அவனை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, எந்தக் கட்டத்தில் அவனால் தங்களினத்திற்கும் சுயநல வாழ்விற்கும் முடிவு ஏற்படும் என்று எப்போது எண்ணினார்களோ—அன்று தான், அவனை வெளிப்படையாக எதிர்க்க முன்வந்தனர் 'மேல் சாதிக்காரர்கள்' என்ற 'பார்ப்பனர்கள்'.

1857ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியில் கலந்து கொண்ட மற்ற சுதேச மன்னர் களும் நானா சாயபு போன்றவர்களும் தங்கள் கையிலிருந்த ஆதிக்கம் மாறிவிட்டதே என்ற சுயநல நோக்கத்தில் தான் சேர்ந்தார்கள்; நாட்டு விடுதலை என்ற பரந்த நோக்கத் தாலல்ல என்று சரித்திரம் படிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

வெள்ளைக்காரனின் ஆதிக்கத்தால் அரசியல் அடிமைத்தனம் ஏற்பட்டது என்பது விவகாரத்திற்கிடமானதாக இருந்தாலும்—'வெள்ளையராட்சியாலேயே சமுதாய எழுச்சி இந்நாட்டில் ஏற்பட்டது' என்பது மறக்கமுடியாத ஒரு உண்மையாகும். 'நாம் சுதந்திரமாக வாழவேண்டும்' என்ற சுதந்திரக் கிளர்ச்சி எண்ணம் நமக்குப் பிறந்ததற்கே அடிப்படைக் காரணம் ஆங்கிலக் கல்வி என்று பண்டித ஜவஹர்லால் அவர்களே பல இடங்களில் பேசியும் எழுதியும் உள்ளார்கள்.

எனவே, 1857 நிகழ்ச்சியை நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முதல் நிகழ்ச்சி யாகக் கருத இடமில்லை. மாறாக, வைதிக எண்ணங்களைக் காக்கவும், பழமை, மதம்—இவைகளைப் பாதுகாக்கவும் செய்யப்பட்ட ஒரு முயற்சியாகும்.

நிற்க, மேல் நாடுகளில் 'சுதந்திர நாள்', 'சுதந்திர ஆண்டுவிழா'க் கொண்டாடுவது போல், நம் நாட்டில் சுதந்திர நாள், ஆண்டுவிழாக் கொண்டாடுவது—புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக்கொண்டதைப் போலாகும்.

மேல் நாட்டார்கள் சுதந்திரம் பெற்றபின் பெற்றநாளைக் குறிவைத்துக் கொண்டாடு கிறார்கள். நாம் அதுபோல் கொண்டாட நமக்குச் சுதந்திரம் வந்துவிட்டதா? நாம் ஏதாவது சுதந்திரத்தை அனுபவிக்கிறோமா? என்பதைப்பற்றி நமக்குக் கடுகளவு யோசனையும் இல்லாமல்—நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பவர்களின் சூழ்ச்சிக்கும் வஞ்சகத்திற்கும் ஆளாகி அடிமைத் தளையை இறுக்கிக்கொள்ள நாம் 'சுதந்திர விழா'க் கொண்டாடுகிறோம்.

இந்த நாட்டின் சுதந்திரம் பணக்காரர் மீது ஏழை மூட மக்களை ஏவி விடுவதாக இருக்கிறதே யொழிய—மனிதனை (நம்மை) நாயிலும், பன்றியிலும் கேடாக இழிவுபடுத்தி, கீழ்சாதி ஆக்கிய 'கடவுள்', 'சாஸ்திரங்களையோ', சட்டங்களையோ மக்களையோ—ஏனென்று கேட்க நாதியில்லை.

சுதந்திர நாட்டில் பிராமணன், சூத்திரன், பறையன், சக்கிலி இருக்கலாமா? அப்படி இருக்கும் நாடு சுதந்திர நாடா? 'நரக' நாடா?

இதை ஒழிக்கப் பாடுபட இந்த நாட்டில் ஏதாவது உரிமை இருக்கிறதா? உரிமை கேட்க வழி இருக்கிறதா? சுதந்திரநாட்டில் மனித சமுதாயத்தையே அடிமைப்படுத்தி முடையர்களாக ஆக்கி வைத்திருக்கும் இனத்தினர் (பார்ப்பனர்) மந்திரியாய், தலைவராய் இருக்கின்றார்கள் என்றால் இது சுதந்திர நாடாகுமா?

படிப்பகம்

www.padippakam.com



யோக்கியமான முறையில் பேச்சுரிமையில்லை; கூட்டம் போட உரிமையில்லை; 'லவுட் ஸ்பீக்கரு'க்குப் பணம் கட்டவேண்டும்; 'லைசென்ஸ்' வேண்டும்; கூட்டம்போட உள்ள இடங்கள் இராணுவத்திற்குக் கொடுக்கப்பட்டுவிட்டன என்கிறார்கள்.

தமிழனுக்குப் பார்ப்பான் மாத்திரம் எஜமானனல்லன்; மலையாளியும்—எஜமான்; அதிகாரி. வடநாட்டான்—முதலாளி; சர்வாதிகாரி. இது தமிழ்நாட்டுக்குச் சுதந்திரமா? சுதந்திரத்தை நினைத்துக்கொண்டு எழுத எழுத ஆத்திரம் வருகிறது; இத்துடன் நிறுத்திக் கொண்டேன்.

['விடுதலை'-தலையங்கம்—15-8-1957]

## 16. சுதந்திர நாள்

ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி 'சுதந்திர தின வெள்ளி விழா'வைக் கொண்டாட அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது, இந்தியாவுக்குப் பல நூற்றாண்டு காலமாக இருந்துவந்த அன்னிய நாட்டான் ஆட்சி ஒழிந்து, நம்நாட்டை நாமே ஆளும்படியான சுதந்திர சுயாட்சி ஏற்பட்டு 25 ஆண்டுகள் ஆனதாகவும், அதற்காக 'சுதந்திர தின வெள்ளிவிழா' கொண்டாடுவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் நான் இதை 'சுதந்திரம் பெற்ற நாள்' என்று சொல்ல மாட்டேன். மற்றென்னவென்றால், அடிமையும், மடமையும், ஒழுக்கக்கேடும், நேர்மைக் கேடும் ஏற்பட ஏதுவான துக்கநாள் துவங்கிய 25-ஆம் ஆண்டு (துக்க) நாள் என்றுதான் சொல்வேன்.

இதை இன்று மாத்திரம் சொல்லவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரம் என்று என்றைக்கு வெளியிடப்பட்டதோ, அன்றே சொன்னவன் நான்.

சுதந்திரம் என்று முதலில் விஷயம் வெளியானவுடன், உயர்திரு. அண்ணா அதைச் 'சுதந்திர நாள்' என்று பாராட்டினார். அதைக் காங்கிரஸ்காரர்கள் பெரிதாகப் பாராட்டி, துணித் தோரணங்களில் 'இது சுதந்திர நாள்' என்று எழுதி அடியில், 'அண்ணாதுரை' என்றும் எழுதி, அவற்றைத் தெருத்தெருவாகக் கட்டிவைத்தார்கள்; பத்திரிக்கைகளிலும் கொட்டை எழுத்துக்களில் விளம்பரம்போல் பிரசுரித்தார்கள்.

அனேகமாக, அந்தச் சம்பவந்தான் அண்ணாதுரைக்கும் நமக்கும் மாறுபாடு வெளியான சம்பவமாக இருக்கலாம்.

அது மாத்திரமல்லாமல், அடுத்த விஷயத்தை மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு கூட்டத்தில் (பொள்ளாச்சி கூட்டத்தில் என்பதாக ஞாபகம்) 'இது சுதந்திர நாள் என்று பேசினார்' என்பதைக் கேள்விப்பட்டு, நான் கண்டித்தேன். அப்போது, அதற்குப் பதில் என்பதாக நாவலர் அவர்கள், 'ஒரு விஷயத்தில் தலைவர் ஒரு கருத்துக் கொண்டால், அதை மக்களுக்குத் தெரிவித்திருக்க வேண்டாமா? தலைவர் கருத்து இப்படிப் பட்டது என்று எங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று சொன்னார்.

ஆகவே, இது துக்கநாள் என்பதை சுதந்திர அறிக்கை வெளியிடப்பட்டநாளிலேயே, 'இது துக்கநாள்; நாட்டிற்கும் மனித சமுதாயத்திற்கும் கேடான நாள்'—என்று சொன்னேன். இதை, அந்தநாள் 'குடி அரசு' பத்திரிக்கையில் பார்த்தால் நன்றாக விளங்கும். அது எப்படியோ இருக்கட்டும்.

இன்று இந்த நாட்டில், ஓர் ஆட்சிக்கு இருக்கக்கூடாத எந்த அயோக்கியத்தனமும், ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, புரட்டு, பித்தலாட்டம், மானங்கெட்டதனம், கட்சிமாறல்,



கட்சிக்குத் துரோகம், இழிதன்மையான சுயநலம், அபாண்டமாய்க் குறைகூறல் முதலிய கூடாஒழுக்கக் காரியங்கள் எந்தக் கட்சியில் யாரிடம் இல்லாமல் இருக்கின்றன? இப்படிப் பட்ட காரியத்துக்காக யார் வெட்கப்படுகிறார்கள்?

இன்று அரசியல் கிளர்ச்சி என்றாலே காலித்தனம், அயோக்கியத்தனம், மோசடி, துரோகம் முதலிய தன்மைகள் இல்லாமல் யாரால் நடந்துகொள்ள முடிகிறது?

முதலாவதாக, அயோக்கியத்தனத்துக்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன் :—

இந்தத் தேசத்தில் எவன் ஒருவன் தன் நாட்டுக்குச் சர்வ சுதந்திரம் கேட்கிறானோ அவன் ஏழு ஆண்டுகள் வரை தண்டிக்கத் தக்க குற்றவாளியாக ஆக்கப்படுவான்.

என்ற சட்டம் உலகில் எந்த நாட்டில், தேசத்தில் இருக்கிறது?

அடுத்துச் சொல்கிறேன் :—

எவனொருவன் தன் நாட்டுக்குத் தொண்டுசெய்ய, எந்த ஸ்தாபனத்தின் தேர்தலில் ஓர் அபேட்சகராக நிற்பதானாலும், அவன் பத்தாயிரம் ரூபாய் முதல் மூன்று இலட்சம் ரூபாய் வரையில் செலவு செய்துதான் வெற்றி, தோல்வி அடையமுடியும் என்றநிலை எப்படி யோக்கியமான நிலையாகும்?

காலித் தனத்துக்குப் பெயர் வேலை நிறுத்தம்; அயோக்கியதனத்திற்குப் பெயர் அஹிம்சை; சண்டித்தனத்திற்குப் பெயர் சத்தியாக்கிரகம்! தான் பதவிபெற்ற கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டு, எதிர்க்கட்சி ஆளாவது முதலிய அயோக்கியத்தனங்கள் எப்படி யோக்கியமான சுதந்திரமாக இருக்கமுடியும்?

மற்றும், இன்றைய சுதந்திரம் என்பதில், எந்த அயோக்கியத்தனமான காரியம் விலக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லமுடியும்?

இவைகள் ஒருபுறமிருக்க,

தேசத்துக்குப் பூரண சுதந்திரம் கிடைத்து, இன்றைக்கு 25 ஆண்டுகள் ஆன பிறகும், இந்தப் பூரண சுதந்திரம் உள்ள நாட்டில், 54 கோடி மக்களில் 39 கோடி பேர் தற்குறி என்றால்—100-க்கு 70 மக்கள் கையெழுத்துப் போடத் தெரியாத தற்குறிகளாக இருக்கிறார்கள் என்றால்; அதிலும் மொத்த ஜனத்தொகையில் சரிபகுதிப் பேர்களான பெண்கள் 100-க்கு 82 சதவிதம் தற்குறி என்றால்; அதுவும் தேசம் பூரண சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலை என்றால்; இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா, அடிமை ஆட்சியா என்று கேட்கிறேன்.

இதைச் சுதந்திர ஆட்சி என்று—வயிற்றுப் பிழைப்பு, பதவிவேட்டை தேசியவாதிகளும், மக்களுந்தான் சொல்லிக்கொள்ள முடியுமே தவிர, நேர்மையான, அறிவுள்ள ஜன சமுதாயத்தால் சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

இந்த நிலையில், இந்த நாட்டில் இலட்சக்கணக்கான கடவுள்கள்; பல்லாயிரக் கணக்கான தேர்திருவிழாக்கள், கடவுள் கலியாணங்கள், நித்தியமும் 5 வேளையும் பூசைகள் முதலிய ஆடம்பரங்கள் நடந்தவண்ணம் இருக்கின்றனவென்றால், இந்தத் தேசத்தை மக்கள் ஆள்கிறார்களா, 'பிசாசுகள்'—மனிதத் தன்மையற்றவர்கள் ஆள்கிறார்களா? இந்த நாட்டில் சுதந்திரம் இருக்கிறதா, அடிமைத் தன்மைக்கு ஆதிக்கம் இருக்கிறதா என்றுதான் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

தவிர, இந்த சுதந்திரத்தின் காரணமாக இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவு மானம், ரோஷம் இருக்கிறது என்றால், இந்த நாட்டு மனித சமுதாயம் இரு பிரிவாகப் பிரிந்து, ஒரு

படிப்பகம்

www.padippakam.com



பிரிவு நூற்றுக்கு 3 பேர் என்கின்ற பார்ப்பனர்; மற்றொரு பிரிவு 100-க்கு 97 பேரான சூத்திரர். பார்ப்பனர் என்றால் மேல்சாதி; சூத்திரன் என்றால் கீழ்சாதி (இழிமகன்) ஆவான்.

இந்தப்படியான நிலை, சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கிறது என்றால், இந்தத் தேசம் ஒரு சுதந்திரம்பெற்ற தேசம்—நாடு ஆகுமா? அடிமை சாசனம் பெற்ற தேசம்—நாடு ஆகுமா?

இதற்கு மேலும் நம் சுதந்திரத்தை, சுதந்திரநாள் விழாவைப்பற்றி விளக்குவது என்றால் நம் மனம் மிகுந்த பரிதாபப்படுகிறது; இரக்கப்படுகிறது.

தோழர்களே! இப்படிப்பட்ட நிலைபற்றி எந்தக் குடிமக்களாவது வெட்கப்படுவதாக இருந்தால் அந்த வெட்கத்தை நமது சமுதாயத்திற்குக் கேடாகவும், தங்கள் சமுதாய உயர்வாழ்வுக்குமாகவே நடத்தப்பட்டுவரும், பார்ப்பனப் பத்திரிக்கைகளை வாங்குவதில்லை, படிப்பதில்லை என்று உறுதி எடுத்துக்கொள்வதன் மூலம் காட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் இன்று பொதுமக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளும் (இன்ஜெக்ஷன்) செய்தியாகும்.

துக்கநாள் ஒழிக! உண்மை சுதந்திரநாள் தோன்றுக!

['விடுதலை'-தலையங்கம்—15-8-1972]

# 2. திராவிடநாடு திராவிடருக்கே

## 1. திராவிடநாடு திராவிடருக்கே!

திராவிடநாடு திராவிடருக்கே என்ற எண்ணம் நம் நாட்டிலே இன்று நேற்று தோன்றியதாக யாரும் கருதிவிட முடியாது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னதாகவே டாக்டர் டி. எம். நாயர், சர். பி. தியாகராயப் பெருமான் மனங்களிலும் தோன்றிவிட்டது.

ஆரிய ஆதிக்கத்திலிருந்து திராவிட மக்களை, திராவிடநாட்டைக் காப்பாற்ற வேண்டும்; இந் நாட்டிலிருந்து ஆரியக் களையைக் களைந்தெறிய வேண்டும் என்ற கருத்தின் மீது அவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். இந்த எண்ணம் அன்று இருந்ததினாலேதான் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தார் 'திராவிடன்' என்ற பத்திரிக்கையைத் தோற்றுவித்து நடத்தி வந்தார்கள். இப்பொழுது அந்த எண்ணம் கொழுந்துவிட்டு எரிகிறது; திராவிட இரத்தம் கொதிக்கிறது. அதன் காரணமாகவே, சென்ற 10-ந் தேதி நாடெங்கும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் ஒலித்தது. திராவிட நாட்டைத் தனியாகப் பிரித்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு தமிழருக்கே என்றால் சரித்திர அறிவோ, அரசியல் அறிவோ அற்ற ஒரு சிறு கூட்டம் பரிகாசம் பண்ணுகிறது. தமிழ்நாடு தமிழருக்கே ஆய்விட்டால் கன்னடர், ஆந்திரர், கேரளர் என்னாவது என்று கேட்கின்றன அம் முண்டங்கள். தமிழ், தாய் மொழியென்றும் அதிலிருந்துதான் கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் பிறந்தன என்றும் மொழி ஆராய்ச்சி வல்லுனர்கள் புகலுகின்றனரே! அப்படியிருக்க, தமிழ்நாடு தமிழருக்கே என்றால் அவர்களைச் சேர்ந்த குழுவினர்களாகிய கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் தனித்துப் பிரிந்துபோய் விடுவார்களா? இந்த அற்ப விஷயம் எப்படி, அந்த மர மண்டைகளில் ஏறப்போகிறது? ஆகவேதான், தமிழ்நாடு தமிழருக்கே இருக்கவேண்டும் எனக் கோருகிறேன். இதற்காக எத்தகைய கஷ்டம் வந்தாலும் பொறுத்துக்கொள்ளத் தமிழன் நெஞ்சம் உரம் கொண்டுவிட்டது; இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்றே தமிழன் துணிந்துவிட்டான். அதைச் சென்ற 10-ந்தேதி நிகழ்ச்சி நன்கு விளக்கிவிட்டது. தமிழன் தனது இலட்சியம் வெற்றிபெறும் வரை அயரமாட்டான்; அல்லும் பகலும் அதே சிந்தனையாயிருப்பான். தமிழன் இத் துணிச்சலைப் பெற்றிருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. இன்று உலகிலே நடைபெற்றுவரும் சம்பவங்களைப் பார்ப்பவர்களுக்கு இது ஒன்றும் அதிசயமாகத் தெரியாது.



அய்ரோப்பாக் கண்டத்தில் எத்தனை சிறுநாடுகள்—நமது திராவிடநாட்டைவிட ஜனத்தொகையிலும் பரப்பளவிலும் எவ்வளவோ சிறிய நாடுகள் தங்கள் சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றன என்பதை யாவரும் அறிவர். ஏன் அவைகள் தங்கள் சுதந்திரத்திற்காகப் போராடுகின்றனவென்றால், அப்பொழுதுதான் தங்கள் கலை, நாகரிகம் முதலியவைகள் காப்பாற்றப்படமுடியும் என்ற காரணத்திலேயேயாகும். அய்ரோப்பா எல்லாம் ஒன்றாகிவிட்டால் மெஜாரிட்டியினர்களுடைய நாகரிகத்தைப் புகுத்தி, மற்றவைகளை அழிக்கச் செய்து விடுமென்ற அச்சம் ஒவ்வொரு நாடும் கொண்டிருப்பதால்தான்—இன்று அவ்வாறு போராடுகின்றன. ஆகவே, உலகம் போற்றும் நமது கலை, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகள் வளரவேண்டுமானால்—உலகிலேயே பிரகாசிக்க வேண்டுமானால் முதலில் நமது நாட்டுக்கு, அதாவது திராவிட நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டும்.

ஏற்கனவே மாகாணங்களுக்குச் சுய ஆட்சி வழங்கப்பட்டுவிட்டது. இப்பொழுது நாம் கோருவதெல்லாம் நமது கலையின் மீதும், நாகரிகத்தின் மீதும், பொருளாதாரத்தின் மீதும் வேறு எந்த மாகாணமும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்பதேயாகும். இந்தப் பாதுகாப்பைக் கோருவதில் என்ன தப்பு என்று கேட்கிறேன். நிலம் படைத்தவன் தனது நிலத்தைச் சுற்றி, அடுத்த நிலத்துக்காரனது ஆடு மாடுகள் வந்து பயிரை அழித்து விடாமல் பார்த்துக் கொள்வதற்காக வேலி போடமாட்டானா? அப்படி அவன் வேலி போடுவது தவறா என்று கேட்கின்றேன். இதுபோலவேதான், நமது மாகாணத்திற்கு பந்தோபஸ்து தேடுகிறோம். இது எப்படிக் குற்றமாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

எனவே, 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கம்—திராவிடநாடு தனி நாடாகப் பிரிக்கப்படுகிறவரை சலிக்காமல் ஒலிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அதற்கு ஆவன செய்ய, ஒவ்வொரு தமிழனும் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிடநாடு திராவிடருக்கே!

['குடி அரசு'-தலையங்கம்—17-12-1939]

தலைவரவர்களே! தோழர்களே!

இந்தியா என்று ஒரு பொதுக் குடும்பம் (நாடு) எப்போதும் இருந்ததில்லை. நம் குடும்பத்தின் (நாட்டின்) பயனை மற்றவன் அனுபவிப்பதற்காகப் பல குடும்பங்களை ஒன்றாகப் பிணைத்து வெள்ளையர் உருவாக்கிப் பயன் அனுபவித்து வருகிறார்கள். குடும்ப மக்கள் கூப்பாடு போடாமல் இருப்பதற்கு—முன்னணியில் இருப்பவனை (ஆரியனை) சுவாதீனப் படுத்திக்கொண்டு அவனுக்குச் சற்று அதிக போஷணை கொடுத்து மற்றவனை மந்த காலத்தில் ஆழ்த்திவைத்துப் பலன் அனுபவிக்கச் செய்த சூழ்ச்சிதான் இன்று 'இந்தியர் ஏககுடும்பம்' என்பது.

இந்தியாவில் உள்ள நாம் எல்லோரும் ஒரு குடும்ப மக்கள் அல்லர். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளையுமல்லர். நம் எல்லோருக்குமாக ஒரு தகப்பனும் இல்லை; நாம் வேறு வேறு குடும்பத்தவர்கள், நம் தாய் தந்தையர்கள் வேறு வேறு. சிறையில் இருப்பவர்களுக்கு 'சூப்பிரண்டென்டும்', 'ஜெயிலரும்' குடும்பத் தலைவனாக முடியுமா? 'கான்விக்ட்

படிப்பகம்

www.padippakam.com



வார்டர்கள்' நமது காப்பாளர்களாகி விடுவார்களா? அதுபோல், வெள்ளையருக்காவது அவர்களின் சமீபத்திய வர்க்கத்தாரான ஆரியர்களுக்காவது—நமக்குத் தலைவர்களோ, காவலர்களோ ஆக உரிமையில்லை. இதை நான் ஆங்கிலேயர் எழுதிய சரித்திரப்படியும் ஆரியர்கள் எழுதி வைத்திருக்கும் சரித்திரப்படியுமே சொல்லுகிறேன்.

திராவிடர்கள், தங்களுடைய—தாங்கள் பாரம்பரியமாய்ச் சரித்திர காலம் தொட்டு ஆண்டு அனுபவித்து வந்த—திராவிடநாட்டைக் கைப்பற்றிக்கொண்ட வெள்ளையரை, தங்களுக்குப் பிரித்துக் கொடுத்து, தங்கள் தேவைகளுக்கு, பழக்கவழக்கமான உணர்ச்சிக்கு ஏற்றபடி சட்ட திட்டம் செய்துகொண்டு, முற்போக்கடைய சுதந்திரமும் சவுகரியமும் செய்து கொடுக்கும்படி (வெள்ளைக்காரர்களை)க் கேட்கின்றார்கள். இந் நிலையில் குறுக்கே நிற்க ஆரியர்களுக்கு என்ன உரிமை? இவர்கள் இதைப்பற்றிப் பேசவோ கலந்துகொள்ளவோ என்ன பாத்தியம் என்றுதான் நான் கேட்கின்றேன்.

ஆரியனுக்கு வெள்ளையனிடம் உள்ள உரிமையெல்லாம் 'நான் உள்ளாளாயிருந்து சூழ்ச்சி செய்தும், சதி செய்தும், முஸ்லிமிடமிருந்தும், திராவிடனிடமிருந்தும் உன் கைக்கு நாடு வரும்படி செய்தேனே; மறுபடியும் அவர்கள் ஆதிக்கத்திற்கு விடுகிறாயா? பிறகு என் கதி என்ன?' என்று கேட்பதுபோல் தடுப்பதல்லாமல் வேறு என்ன பாத்தியம் என்று கேட்கின்றேன். வெள்ளைக்காரன் இந்தியாவின் பல நாடுகளையும் கைப்பற்றும்போது ஆரியனுக்கு எங்காவது நாடு இருந்ததா என்று கேட்கின்றேன்.

ஆதலால், நாம் வெள்ளையனிடம் நமது நாட்டுச் சுதந்திரத்திற்கும், நமது நாட்டு முற்போக்குக்கும், நமது நாட்டு மக்கள் சுயமரியாதைக்கும் பிரிவினை கேட்டால் இந்த ஆரியன் யார் இதைத் தடுக்க என்கிறேன்.

நாம் கேட்கும் பிரிவினை இன்று நேற்றுக் கிளம்பியதில்லை. குறிப்பாக திராவிடர்–ஆரியர் விஷயமும் இவர்களுக்குள் ஒற்றுமையில்லாத தன்மையும், போராட்டமும் வேத காலம் முதல் இருந்து வருகின்றது. இந்தியாவில் திராவிடம்–ஆரியவர்த்தம் என்ற பிரிவினை வெகு தெளிவாக இன்றும் இருக்கிறது; ஆதாரமும் இருக்கிறது. அப்படியிருக்க, திராவிட நாட்டைப் 'பாரதநாடு' என்று சொல்லவோ, 'பாரதகண்டம்' என்று சொல்லவோ, 'பாரததேசம்' என்று சொல்லவோ என்ன உரிமை இந்த ஆரியர்களுக்கு இருக்கிறது என்று கேட்கிறேன். பரதன் திராவிட நாட்டை எப்போது ஆண்டான்? பரதன் என்பவனுடைய ஆட்சி திராவிடத்தில் எப்போதும் இருந்ததில்லை. திராவிட நாட்டைத் திராவிடர்களே ஆண்டிருக்கிறார்கள். முஸ்லிம் ஆட்சிகூட மிகச் சிறிது காலம், சில இடங்களில் இருந்தது என்பதல்லாமல், அதுவும் ஆரியர் குடியேறிய நாடுகளைப் பூரணமாக ஆயிரக் கணக்கான வருடங்களாக ஆண்டதுபோல் ஆண்டதாகச் சொல்லமுடியாது. திராவிட மன்னர்கள் ஆட்சி வேண்டுமானால் ஆரிய நாடுகளிலும் இருந்திருக்கிறது. ஆனால், ஆரியர் சூழ்ச்சியின் பயனாய் இந்த நாட்டை ஆண்ட பழம்பெரும் மன்னர்களின் சமுதாயங்களான திராவிடர்கள் ஆரியர்களுக்கு அடிமை சாதியாகவும், கீழ்த்தர சாதியாகவும் ஆக்கப்பட்டு, திராவிட நாட்டிற்கும் ஆரியர்கள் பெயர்கள் கொடுக்கப்பட்டுவிட்டன.

இன்று திராவிடனுக்கு இந்தத் திராவிட நாட்டில் என்ன யோக்கியதை இருக்கிறது? ஆரியர்களையும் திராவிடர்களையும், ஒப்பிட்டுப்பாருங்கள்! ஆரியன் தெருக் கூட்டுகிறானா? மூட்டை தூக்குகிறானா? வண்டி ஓட்டுகிறானா? 'பியூனாய்' இருக்கிறானா? உழுகிறானா? அறுப்பு அறுக்கிறானா? சரீரத்தில் இருந்து ஒரு துளி வேர்வையோ, நகத்தில் கடுகத்தனை அழுக்கோ படியும்படி ஏதாவது உடலுழைப்புச் செய்கிறானா? ஆனால், அவன் வாழ்வையும் திராவிடன் வாழ்வையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஆகவே நானோ, ஜனாப் ஜின்னாவோ இந்தியாவைப் பிரிக்கவேண்டும் என்பதற்காகக் கவலைப்படாதீர்கள். கண்டிப்பாகப் பிரிக்கப்படத்தான் போகிறது. சிலோன், பர்மாக்காரர்கள் பிரிந்ததால்—தங்கள் நாட்டைச் சுரண்டுகிற அன்னிய நாட்டு மக்களை 'வெளியில் போ' என்று சட்டம் செய்யவும், சிலோனியன்தான் அதிகாரியாக இருக்கலாம் என்றும் சட்டம் செய்யவும், இந்தியக் கூலிகளைக்கூட விரட்டவும் முடிந்தது. ஆனால், நாம் பிணைந்து இருப்பதால் திராவிட நாட்டில் ஆதிக்கம் அதிகாரம் பூராவும் ஆரியனிடமே இருக்கிறது. வெளி மாகாணத்தில் இருந்து வந்து கொள்ளையடிப்பவனையும், சுரண்டுகிறவனையும், சகல தொழிலையும் கைவசப்படுத்திக்கொண்டு நம் நாட்டு மக்களை வேறு நாட்டிற்குக் கூலியாகத் துரத்துகிறவனையும்கூட—துரத்துவதற்கு, நமக்கு இன்று அதிகாரம் இல்லை.



இந்த நாட்டில் முல்தானி, மார்வாடி, குஜராத்தி எதற்காக வந்து கொள்ளையடித்துப் போவது? பார்ப்பனர்களாவது தொலைந்துபோகட்டும் என்றாலும், இந்த முல்தானிக் கூட்டங்கள் சுரண்டுவதற்கு ஏன் இடம் கொடுக்கவேண்டும்? இவர்களைப் பார்ப்பனர்கள்தாமே அழைத்துவந்து சுரண்டிக்கொண்டு போவதற்கு இடம் கொடுத்து, அவர்களிடம் கூலி வாங்கி நம்மை ஒழிக்கும் இயக்கத்தை நடத்துகிறார்கள்!

'இந்தியை இந்த நாட்டில் பரப்ப—முல்தானி, குஜராத்தி, மார்வாடிகள் இலட்சக் கணக்காகக் கொடுக்கிறார்கள். சென்னை இந்தி மண்டலத்திற்கு வருடம் 20, 30 ஆயிரம் ரூபாய் பார்ப்பனர்கள் செலவு செய்கிறார்கள்; கட்டடங்கள் இலட்சக்கணக்கில் செலவு செய்து கட்டப்படுகின்றன. அங்குள்ள பார்ப்பனர்கள் வாழ்க்கை அரவிந்த ஆசிரமம் போலவும், இராமகிருஷ்ண மடம் போலவும், ரமண ரிஷிகள் ஆசிரமம் போலவும் நடைபெறுகின்றது.

திராவிடன் பம்பாய்க்குக் கூலியாகப் போய்—தோல் கடையில் மயிர் கழிக்கும் வேலையில், நாற்றத்தில் கொசுக்களுக்கு ஆகாரம் கொடுத்துக்கொண்டு—ஓட்டைக் குடிசையில் தீண்டாத சாதியாய் வாழ்கிறான். பம்பாயிலிருந்து இங்கு வந்த பட்டேல், தேசாய், பிர்லா, பஜாஜ் கூட்டக்காரர்கள் திராவிடர்களுடைய இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டு, தங்கசாலைத் தெருவில் சலவைக்கல் கட்டடத்தில், 3, 4 மோட்டார்களுடன் 2, 3 பம்பாய்த் தாசிகளுடனும் வாழ்கிறார்கள்.

[சேலத்தில், 19-4-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-4-1940]

தோழர்களே!

திராவிடநாடு தனியாகப் பிரிந்தால்தான் நாம் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேறமுடியும். பர்மா தனியாய்ப் பிரிந்துவிட்டதனால் அதற்கு நன்மையுண்டாகவில்லையா? சிலோன் தனியாகப்பிரிந்து இருப்பதனால் அதற்கு நன்மையுண்டாகவில்லையா? அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அன்னியர் சுரண்டலையும் ஆரிய ஆதிக்கத்தையும் போக்கிக் கொள்வதற்காக, அங்கேயிருக்கும் நமது மக்களை விரட்டுகிறார்கள். நமது கையில் ஆட்சியிருந்தால் நாமும் இங்கிருக்கும் அன்னியச் சுரண்டலையும் ஆரிய ஆதிக்கத்தையும் விரட்டமுடியும். நமது மக்கள் வேலை தேடி அன்னிய நாடு சென்று மானமிழந்து தவிப்பதைத் தடுத்து, அவர்களுக்கு இங்கேயே வேலை கொடுக்க முடியும்.

இந்த சேலம் நகரத்தை எடுத்துக்கொள்வோம். இங்குள்ள முக்கால்வாசி மக்கள் நெசவுத் தொழிலாளிகள். இவர்களெல்லாம் இன்று போதிய வேலையில்லாமலும், போதுமான கூலியில்லாமலும் திண்டாடுகிறார்கள். தங்கள் வாழ்க்கையை மானமுடன் நடத்த முடியாமல் பலர்—பெண்டு பிள்ளைகளுடன் சிலர் பிச்சைக்காரர்களாகவும் வெளியில் கிளம்பியிருக்கிறார்கள். இந்த நிலையைப்போக்க காங்கிரஸ்காரர்கள் அவர்களது 27 மாத ஆட்சியில் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டார்களா?



படிப்பகம்

www.padippakam.com



ஒரு காலத்தில் இங்கிலாந்தில் அன்னிய நாட்டுத்துணி கட்டினால் 30 பவுன் அபராதம் விதிக்கச் சட்டமியற்றினார்களாம். அவர்களுடைய நெசவுத்தொழிலை விருத்தி செய்ய இச்சட்டத்தை ஏற்படுத்தியிருந்தனர். இன்று நம்மில் 100-க்கு 60, 70 பேர் ஆமதாபாத் வெளி மாகாணத் துணிகளை அணிந்திருப்பதைப் பார்க்கிறோம். பெண்களும் ஆமதாபாத் சேலைகளைக்கட்டுகிறார்கள். நெசவாளிகளிடம் காங்கிரசாருக்கு—ஆரியருக்குக் கவலையிருக்குமானால், ஆமதாபாத் துணியை இந்நாட்டுக்கு வராமல் தடுக்க முடியாதா? அதற்குப் பதிலாக இந்நாட்டு மக்கள் இந்நாட்டுத் துணி உடுத்தும்படி செய்ய முடியாதா? காரைக்கால், பாண்டிச்சேரியிலிருந்து இங்கு துணி வருவதனால் நூற்றுக்கு 40, 50, விகிதம் வரிவிதித்து விடுகிறார்கள். அதனால், அதிகமாக நம்மால் அத்துணிகளை வாங்கமுடியவில்லை. அதற்குப் பதிலாக நம்நாட்டுப் பட்டாடைகளை உபயோகிக்கிறோம். இதுபோலவே, ஆமதாபாத் முதலிய வெளிநாட்டு—அதாவது திராவிடநாடு அல்லாத நாட்டுத் துணிகளை நாம் தடுத்துவிட்டால் நமது கைத்தொழில் வளர்ச்சியடையும்; கைத்தறி நெசவாளர்களின் துன்பம், வறுமை, கஷ்டம் ஒழிந்துபோய்விடும். இதை ஏன் அவர்கள் செய்யவில்லை? ஆரியர்கள் தங்கள் நன்மைக்கு எவ்வளவு காரியம் செய்து கொள்கிறார்கள்?

[சேலத்தில், 28-6-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 7-7-1940]

பெரியோர்களே! தோழர்களே!

நம் கட்சி நோக்கங்கள், திட்டங்கள் ஆகியவை நிறைவேற்றப்படுவதற்கு ஆகவும், நம் மக்கள் உண்மையான விடுதலையும் சுதந்திரமும் பெறுவதற்காகவும் நாம் செய்ய வேண்டிய வேலைகளில் முக்கியமானது ஆரியப் பிணைப்பில் இருந்து—அதாவது 'இந்தியா', 'இந்தியர்' என்ற பிணைப்பிலிருந்து திராவிட நாட்டையும், திராவிட மக்களையும் பிரித்துக் கொள்ளவேண்டியது அவசியமான காரியமாகும்.

என்றாலும், மக்களுடைய ஒழுக்கத்திற்கும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கும் மாறுபாடு இல்லாவிட்டாலும், மதசம்பந்தமான உணர்ச்சியின் பலனாய் 'ஹா! பறையனைத் தொடுவதா?' என்பதுபோல—எப்படிச் சில காரியங்களில் திடீரென்று வெறுப்புக்கொண்டு விடுகிறார்களோ அது போலவே—இவ்விஷயத்தில் 'ஹா! பிரிப்பதா!' என்று மக்கள் ஒரு திகில் அடையும்படி எதிரிகள் விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

அப்படிப்பட்ட பிரச்சாரங்களுக்கு ஆதரவெல்லாம், 'தாயை வெட்டுவதா?', 'பிள்ளையை அறுப்பதா?', 'பசுவைக் கொல்வதா?', 'கூரையைப் பிரிப்பதா?' என்பன போன்ற திடுக்கிடத் தகுந்த, பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொள்வதல்லாமல், பிரிப்பதால் என்ன நஷ்டமென்றோ—பிரிக்கப்பட்ட நாடுகள் என்ன கேடுகள் அடைந்திருக்கின்றனவென்றோ ஒரு சிறு ஆதாரத்தையும் எடுத்துக் காட்டினார்களிலர்.

நாம் திராவிடநாடு பிரிக்கப்படவேண்டும் என்று சொல்லப்படும் காரணங்களுக்கெல்லாம் ஒரு நாட்டு மக்களுக்கும் ஒரு சமுதாய மக்களுக்கும் முன்னேற்ற உணர்ச்சி ஏற்படவேண்டுமானால், அந்த மக்களுக்கு முதலில் தாங்கள் யார் என்ற உணர்ச்சி பிறந்து தங்களைப்பற்றித் தெளிவாய்த் தெரிந்துகொண்டு, அதன் பயனாக நாட்டுப் பற்றும் சமுதாயப்பற்றும் ஏற்பட்டாக வேண்டும். அது இல்லாத நாடோ, மக்களோ, முன்னேற்றமடைந்ததாகச் சரித்திரச் சான்றுகளே கிடையாது.

உலகில் மற்ற நாடுகளெல்லாம் ஒவ்வோர் அளவுக்காவது முன்னேற்றம் அடைந்து வரவும் நம்நாடும் மக்களும் மாத்திரம் எவ்வித முன்னேற்றமுமில்லாமல் தேங்கி இருப்பதற்கும் இதுவே காரணமாகும். மற்றும், வெளிநாட்டு மக்கள் ஏராளமாய் இந்நாட்டிற்கு வந்து நம்மை அடிமைப்படுத்தியும், நம் செல்வங்களைச் சுரண்டிக்கொண்டு



போகவும், நம் மக்கள் இங்கு பிழைப்பும், போதிய வரும்படியும் இல்லாமல் வெளிநாடுகளுக்குப் போய்—கூலியாகவும் அடிமையாயும் இருந்து இழிவுபடவும் இதுவே காரணமாகும். இங்கு நம் நாட்டுமக்கள்—100-க்கு 97 பேர்களாக உள்ள பெருமித எண்ணிக்கை உள்ளவர்களாக இருந்தும், 100-க்கு 3 பேர்களாக உள்ளவர்களும் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறினவர்களுமான ஆரியர்கள் மிகச் சிறுபான்மையினராக இருந்தும்—அரசியலில், பதவிகளில், உத்தியோகங்களில், சமுதாய உயர்வுகளில், அவர்கள் மெஜாரிட்டிகளாகவும் மேன்மையானவர்களாகவும் இருப்பதற்கும், நாம் மைனாரிட்டிகளாகவும் கீழ்மையாகவும் இருப்பதற்கும்; அரசாங்கத்தார் அரசியல் அபிப்பிராயங்களுக்கு இந்நாட்டுப் பழம் பெரும் மக்களாகிய நம்மை இலட்சியம் செய்யாமல் போவதற்கும், ஆரியர்களை இலட்சியம் செய்வதற்கும்; நம் நாட்டுப் பொது ஸ்தாபனங்கள் என்பவைகள் யாவற்றிலும், தொழில், பொருளாதாரம் யாவற்றிலும் ஆரியர்களே தலைமையும், ஆதிக்கமும் செலுத்துவதற்கும் நாம் அவர்களைப் பின்பற்றுவோராக இருப்பதற்கும் காரணம் இந்த நாட்டுப் பிணைப்பேயாகும்.

[திருவாரூரில், 24, 25-8-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 25-8-1940]

தலைவரவர்களே! பெரியோர்களே!

உலக சமுதாயத்தைப் பொதுவாக எடுத்துக்கொண்டால், இவ் இந்திய நாட்டைப் போன்ற நாடு இருந்ததில்லை; இருக்கவுமில்லை. கையிலே வலுத்தவன் மற்றவர்களைச் சுரண்டிப் பிழைக்கவும், உண்ண ஒரு கூட்டமும், உழைக்க மற்றவர்களும் இருக்கும்படியானதுமான சீர்கேடான நிலை ஏற்படத்தான், இப் பெரிய விஸ்தீரணமும், 'இந்தியா' என்கிற பெயரும் பயன்படுகின்றனவே ஒழிய, இந்தக் கண்டத்தின் பல்வேறு இனங்கள் ஒன்றுபடும்படியான அறிகுறிகள் எதுவும் தோன்றவேயில்லை. இவ்வாறு பல்வேறு இனங்கள், 400, 500 மொழிகள், 1000, 2000 வகுப்புகள், பலப் பல கொள்கைகள்—பழக்க வழக்கங்கள் கொண்ட ஒரு பெரும் நிலப்பரப்பை ஒரு நாடு (நேஷன்) என்று சொல்வதால் பயன் என்ன என்று யோசிக்க இந் நாட்டு 'மேதாவிகளுக்கு' அவகாசமில்லை. 4 கோடி, 2 கோடி, 50 இலட்சம், 20 இலட்சம் என்பன போன்ற எண்ணிக்கையுள்ள மக்களைக் கொண்ட தனி—சிறு நாடுகள், நமது ஒரு ஜில்லா 2 ஜில்லாக்கள் போன்றவைகள் சுதந்திர நாடுகளாக அய்ரோப்பாவில் இருக்கின்றன. அம்மாதிரி சிறு நாடுகள், சுதந்திர நாடுகளாக இருக்க முடிவது ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தை முக்கியமாகக் கருதியதால்தான். அந்தப்படி இந்தியா கண்டத்தில் வாழ்ந்துவரும் தனி இனத்தவராகிய நாம் பிறருடைய சம்பந்தத்தை விட்டு, நமக்குரிய இலட்சியத்தை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு முன்னேற்றமடைய முயற்சி செய்யவேண்டும்.

[விருதுநகரில், 11-6-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 17-6-1944]

திராவிடநாடு என்பதைபற்றிப் பலர் பலவிதமான குறை கூறுகிறார்கள். நம்மவர்கள் என்று சொல்லிக்கொண்டும் சிலர் குறைகூறுகிறார்கள். அதில் சிலர் அறியாமல் சொல்லலாம். சிலர் யோக்கியப் பொறுப்பில்லாமல் விஷமத்தனத்துக்காகவும் சொல்லுகிறார்கள். அவர்களைப்பற்றிக் கவலைப்படவேண்டியகாலம் தீர்ந்துவிட்டது; விளக்க வேண்டிய காலமும் தீர்ந்துவிட்டது; விளக்கவேலை செய்யவேண்டிய காலமும் தீர்ந்துவிட்டது. ஏன், நாம் இதுவரை செய்துவந்த வேலையின் பயன் 'திராவிடநாடு கூடாது' என்று சொல்ல இன்று திராவிடநாட்டில் ஓர் ஆளும் இல்லாமல் செய்துவிட்டது. இதற்கு உதாரணம்,

'மெயில்' பேப்பரின் 22-ம் தேதி தலையங்கத்தைப் பாருங்கள்.

'திராவிடநாடு என்பது பூரண சுயேச்சை கேட்பதாகும். அதில் சிறிது குறைந்தாலும் ஒப்புக்கொள்ள முடியாத மாதிரி அந்தப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. பாகிஸ்தான்

படிப்பகம்

www.padippakam.com



விஷயத்தில் தோழர் ஜின்னா அவர்கள் சற்று இறங்ினாலும் இறங்கலாம். ஆனால், தோழர் இராமசாமி சிறிதும் விட்டுக்கொடுக்கமாட்டார்' என்றும்,

'ஆந்திராக்காரர்கள் இதை ஒப்புக்கொள்ளுகிறார்களா என்று யாராவது கேட்டால் அவர்களும் திராவிடர்களேயாதலால் அவர்களுக்கு ஆகவும்தான் நான் திராவிடநாடு கேட்கின்றேன் என்றும் பதில் சொல்லி அடக்கிவிடுகிறார்' என்றும்,

'எல்லை புரியவில்லை, விஷயம் புரியவில்லை என்று சொல்லுகிறவர்களுக்கும் தோழர் இராமசாமி சென்னை மாகாணத்தை—அதன் எல்லை வரைந்த கோட்டிற்கு உட்பட்ட பாகத்தைத் திராவிடநாடு என்றும், அதன் திட்டம் என்ன என்பதற்குச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தனது 'திராவிடநாட்டு ஆட்சியானது அதன் சம்பந்தமாக கவர்னர், கவர்னர்-ஜெனரல், மத்திய அரசாங்கத்தார் ஆகியவர்கள் சம்பந்தமில்லாமல் இங்கிலாந்தில் உள்ள அரசரின் பிரதிநிதிகள் கவனிப்பில் இருக்குமென்றும் சொல்லிவிட்டார்' என்றும்,

'இந்தியாவில் சென்னை மாகாணம் தவிர, மற்ற மாகாண மக்கள் வியாபாரம் முதலியவைகள் எப்படி இருக்கும் என்று கேட்பவர்களுக்கும் தெளிவாய், அதாவது ஒரு அய்ரோப்பியன், ஜப்பானியன், அமெரிக்கன் திராவிடநாட்டிற்குள் வந்தால் எப்படி பாஸ்போர்ட் (அனுமதிச்சீட்டு) வாங்கிக்கொண்டு வரவேண்டுமோ அது போலவும், அந்நாட்டு சாமான்கள் திராவிடநாட்டுக்குள் வந்தால் எப்படி வரி போடுகிறோமோ அதுபோல் வரி போடப்படும் என்றும் சொல்லிவிட்டார்' என்பதாகவும் குறிப்பிட்டுவிட்டு கடைசியாக, 'இன்று திராவிட நாடு வியாபாரத்திலும், தொழில் முறையாலும், மதம் முதலியவற்றாலும் திராவிடநாடு அல்லாத நாடுகளால் சுரண்டப்பட்டுக் கேடடைந்திருப்பதற்குப் பரிகாரமாகவே இதைச் சொல்லுகிறார்' என்றும் எழுதியிருக்கிறது.

முடிவாக 'மெயில்' மற்ற மக்களுக்கும் ஒரு நல்ல புத்தி சொல்லி இருக்கிறது.

அதென்னவெனில்,

'நல்ல புத்திசாலித்தனமான முயற்சி இல்லாமல் இந்தியாவைப் பிரிக்கக்கூடாது; இந்தியா ஒற்றுமை கெடக்கூடாது என்கிறவர்கள் இந்தப் பல்லவியை மாத்திரம் பாடிக்கொண்டோ, திராவிடநாட்டுப் பிரச்சினையில் அதில்லை, இதில்லை இதற்கென்ன சமாதானம், அதற்கென்ன சமாதானம் என்று கேட்டுக்கொண்டோ, அதைப் பரிகாசம் செய்வதும், முட்டாள்தனமான பிரச்சினை என்று பேசிக்கொண்டிருப்பதுமான காரியங்களால் திராவிட நாடு பிரச்சினையை அடக்கிவிடலாம் என்று கருதினால் அவர்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள்' என்றும்,

'நல்ல அஸ்திவாரத்தின் மீது திராவிட நாட்டுப் பிரச்சினை எழுப்பப்பட்டு விட்டதால், மக்களுக்குள் ஆழப் பதிந்துவிட்டதால், இனி அதை அசைக்கப் பார்ப்பதைவிட அதற்கு இணங்கிப் போவதே அதாவது, எதற்கு ஆக அது கேட்கப்படுகிறதோ அதைப் பரிகரிக்க முயற்சி செய்வதே புத்திசாலித்தனம்' என்றும் எழுதிவிட்டது.

இதை நாம் ஏன் எடுத்துப்போட்டுக் காட்டுகிறோம் என்பதை மக்கள் கவனிக்க வேண்டும். பல எதிர்கூட்டப் பத்திரிக்கைகள் பரிகசிப்பதுபோல் 'மெயிலின் ஆசீர்வாதம்' கிடைத்துவிட்டது என்கின்ற பைத்தியக்காரப் பெருமைக்கோ, திருப்திக்கோ அல்ல; அல்லவே அல்ல. மற்றெதற்கு என்றால்,

1930ஆம் வருஷம் நவம்பர் மாதம் 20ஆம் தேதி இதே 'மெயில்' பத்திரிக்கை, பெரியார் சிறையில் இருந்து வெளிவந்ததும், தலையங்கத்தில் தூத்துக்குடியில் திராவிட நாட்டுப் பிரிவினைபற்றிப் பேசியதைப் பரிகாசமாக எழுதி இருந்ததோடு, ஜஸ்டிஸ் தலைமை ஸ்தானத்தையும் நையாண்டி செய்து இருந்தது. அதன் பிறகு இந்த 5 வருட காலத்தில் செய்துவந்த பிரச்சாரத்தால் மக்கள் அதன் தத்துவத்தையும் தேவையையும்



உணர்ந்து பாகிஸ்தான், சீக்கிஸ்தான், ஆதித் திராவிடஸ்தான், ஆரியஸ்தான் என்பதாக இன்னும் பல ஸ்தான்கள் கேட்கும்படியாகவும் காந்தியார், ஆச்சாரியார் முதல் பல அரசியல் வாதிகளும் அக் காலத்தில் அதன் காரண காரியங்களைப்பற்றி எதிர்த்து வாதாடிய வாதங்களையெல்லாம் விட்டுவிட்டு இன்று 'கேட்டால் கொடுக்க வேண்டியதுதான்' என்றும்; கேட்பது என்றால் ஆச்சாரியார், 'மெஜாரிட்டியாக (வெகுபேர்) கேட்டால்தான் கொடுக்கப்படும்' என்றும்; காந்தியார், 'வெகுபேர் என்பது தப்பு, மெஜாரிட்டி என்றால் ஆட்களின் எண்ணிக்கை அல்ல, புத்தியின் மதிப்புதான். ஆதலால் புத்திசாலித்தனமான ஒருவன் கேட்டாலும் போதும்' என்றும் சொல்லும்படியான நிலைமை வந்ததுடன், இந்த 'மெயில்' பத்திரிக்கையும் இவ்வளவு தூரம் ஒப்புக்கொள்ளவும் அதன் எதிரிகளுக்கு அறிவுறுத்தவும் வந்ததை மற்றவர்கள் அறியட்டும் என்பதற்காகவேயாகும்.

மற்றும், 'திராவிடநாடு கிடைத்தால், அதில் ஆரியர், முஸ்லிம், தீண்டப்படாதார் நிலைமை எப்படி இருக்கும்' என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் 22-ந்தேதி 'மெயில்' பத்திரிக்கையில் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, 'அவர்களது நிலை இன்றுள்ளது போல்தான் இருக்கும். அவர்களது குறைகள் போக்கப்படுவதற்கும் நலம் ஏற்படுவதற்கும் ஒற்றுமைக்கும் ஏற்ற சட்டங்கள் செய்யப்படும்' என்று சொன்னதை எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆகவே, திராவிடநாட்டுப் பிரிவினை ஒரு பாலைவனக் கூச்சல் என்றோ, பயன் அற்றதென்றோ, பரிகசிக்கத் தக்கதென்றோ கருதக்கூடிய நிலைமையைத் தாண்டிவிட்டது.

மற்றொரு விஷயமும் இதுசமயம் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது:

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் முத்துரங்க முதலியார் அவர்கள் மதுரையில் 20-ந் தேதி பேசியதாக 21-ம் தேதி 'விடுதலை' பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்னவென்றால்,

'இந்தியாவில் மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிக்க காங்கிரஸ் ஏற்கனவே வாக்குறுதி அளித்திருப்பதால் திராவிடநாடு பிரிவினையை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் கேட்பது அவசியமில்லை' என்பதாகக் காணப்படுகிறது.

நாம் திராவிடநாடு கேட்கும் முறையையும், அதன் அரசியல் தன்மையையும் அவர் முதலிலேயே குறிப்பிட்டுவிட்டு இப்படிச் சொன்னதாக அப் பத்திரிக்கையில் தெரிவதால், தோழர் மூத்துரங்க முதலியார் அவர்களும் அதாவது, சென்னைக் காங்கிரஸ்வாதிகளும் ஒப்புக்கொண்டதாகத்தான் அர்த்தமாகும்.

மற்றொரு விஷயம் என்னவெனில், அதுதான் 23-ந்தேதி 'தினசரி' பத்திரிக்கையின் 'எதற்காக திராவிடஸ்தான்?' என்னும் தலையங்கமாகும்.

அதில்,

'திராவிடஸ்தான் கேட்பதைக் கேலி செய்யக்கூடாது என்று 'மதராஸ்மெயில்' உபதேசம் செய்கிறது......நாயக்கர் குறிப்பிடும் (திராவிடஸ்தான் எல்லைப்) பிரதேசங்கள் தமிழ்நாடு, ஆந்திரா, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு நாடுகளும் சேர்ந்திருக்கின்றன. அந்த நாட்டார் திராவிடஸ்தானை ஆதரிக்கிறார்களா?' என்று கேட்கிறது. அதற்குப் பதில் 'மெயிலி'லேயே இருக்கிறது. அதாவது, அந்த நாட்டாரும் திராவிடர்களேயாதலால் திராவிடர்களுக்காகக் கேட்கப்படும் காரியங்களுக்குத் திராவிடர்கள் எல்லோருமே சேர்ந்து கேட்கவேண்டும் என்பது ஏமாற்றுவதற்காகச் சொல்லப்படும் காரணமாகுமே தவிர, அதில் நியாயம் இருக்க முடியாதென்பதாகும். முஸ்லிம்களுக்காக 'பாகிஸ்தானில் உள்ள எல்லா முஸ்லிம்களும் சேர்ந்து கேட்கவில்லையே?' என்று சொன்ன காந்தியார், ஜின்னா வாயடைப்பதற்கு ஏன் போனார்? 'எல்லோரும் சேர்ந்து கேட்டால்தான்

படிப்பகம்

www.padippakam.com



ஒப்புவோம்' என்று சொன்ன ஆச்சாரியார் தானாகவே, தனிமையாகவே ஜின்னா சாயபு வீட்டிற்கு ஏன் போனார்? ஒரு சமுதாயத்துக்கோ, ஒரு நாட்டுக்கோ நலனைத் தேட ஒரு மனிதன் முயற்சித்தால் அது எந்தச் சட்டப்படியும் தப்பாகிவிடாது. அந்த நாட்டை, அந்த இனத்தைச் சேர்ந்த எந்தத் தனி மனிதனுக்கும் உரிமையுண்டு.

அன்றியும், எல்லோரும் எப்படிக் கேட்கமுடியும்? முதலாவது, இந்தத் திராவிடர்கள் 100-க்கு 90 பேர் எழுத்து வாசனை அற்ற தற்குறிகள்; இரண்டாவது, 100-க்கு 90 பேர்கள் தங்கள் இனத்தின் பிறப்பு வளர்ப்பு அறியாதவர்களும், அல்லாததையும் இல்லாததையும் தங்களுடையதென்றும் கருதிக்கொண்டிருக்கிற பகுத்தறிவு இல்லாத மூடநம்பிக்கை மக்களும் ஆவார்கள். இந்த இலட்சணத்தில் இவர்களில் 100-க்கு 80 பேர் சுயநலத்திற்கு எதையும் விட்டுவிடும்படி பயிற்றுவிக்கப்பட்டவர்கள். இவர்கள் யாவரும் சேர்ந்து, அல்லது மெஜாரிட்டியார் சேர்ந்து ஒரு நல்ல நேரான காரியம் செய்வதென்றால், அமாவாசையன்று சந்திரகிரகணம் இருக்கவேண்டும் என்று கோருவது போலவேயாகும்.

இவ்வளவு தர்க்கம் ஏன்? எந்த ஆந்திர, கர்நாடக, மலையாள மக்களாவது இந்த 5 வருஷகாலத்தில் வெளியில் வந்து, 'எங்களுக்குத் திராவிடநாடு வேண்டாம்' என்று சொன்னார்களா?

அன்றியும், ஜஸ்டிஸ் கட்சி என்பது சென்னை மாகாணத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு நாட்டின் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்பதை 'தினசரி'யோ மற்றவர்களோ மறக்கிறார்களா? அப்படி இருக்க, இப்படிப் பேசுவது நியாயமா, அறிவுடைமையா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

அன்றியும், 'தினசரி' அதே தலையங்கத்தில் மற்றொரு இடத்தில் வடஇந்தியர் தென்னிந்தியாவில் ஏராளமாய் வந்து கூடி பொருள் சுரண்டிக்கொண்டு போவதை ஒப்புக்கொண்டு, 'அதற்குக் காரணம் தென் இந்தியரே ஒழிய வட இந்தியரல்ல' என்றும் 'தென் இந்தியர்கள் அறிவு பெற்றால் அவர்களாலும் முடியும்' என்பதாக எழுதியிருக்கிறது.

மேலும். தென்னிந்தியர்களுக்குப் பொருளாதார அறிவு இல்லை, கூடிவாழ்ந்து 'கூட்டுக் கம்பெனி நடத்தும் வழக்கமே தென்னிந்தியரிடம் இல்லை, நடத்தினாலும் சதி செய்துவிடுகிறார்கள்' என்று துணிந்து திராவிடநாட்டாரைப் பற்றி எழுதிவிட்டது. இப்படிப்பட்ட அறிவும் நல்ல வழக்கமும் இல்லாதவர்களிடமும், பணம் போட்ட ஒவ்வொருவரும் தம்மிஷ்டப்படி நடக்க வேண்டுமென்கின்றவர்களிடமும், 'சதிகாரர்கள்' இடமும்; அதாவது, அறிவற்ற சுயநலக்காரரிடமிருந்து அன்னியரால் சுரண்டப்படும் பொருளாதார சுரண்டலை நிறுத்த மெஜாரிட்டி ஓட்டுப்பெற முடியுமா என்பதையும், எல்லோரும் சேர்ந்து கேட்கும்படி செய்ய முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி 'தினசரி' ஆசிரியரைக் கேட்கிறோம். தவிர, 'தினசரி'யானது 'நாம் அடுத்த வீட்டுக்காரனை அவநம்பிக்கைப் பட்டுவிட்டு, 6000 மைலுக்கு அப்பால் இருப்பவனை நம்பலாமா' என்கிறது. இது பொருளுள்ள வாதமாகாது.

இன்று நடக்கும் யுத்தத்திற்கு காந்தியாரையும் காங்கிரசையும் நம்பி இருந்தால் நம் கதி என்ன ஆகி இருக்கும்! ஜெயிலுக்குப் போய்விட்டு வந்ததைத் தவிர வேறு என்ன செய்ய முடிந்தது? 6000 மைலுக்கு அப்பால் உள்ளவனை நம்பியதால், அவன் கேட்டதை நம்மாலான அளவு கொடுத்ததால் நாம் ஜப்பான் பிரஜை ஆகாமலும், நம் வீட்டின்மீது வெடிகுண்டு விழாமலும், நம் செல்வம், பெண்டு பிள்ளை ஓர் அளவுக்காவது கேடுறாமலும், கவலையற்று இருக்க முடிந்தது. அதை அவன் யாருக்காகச் செய்திருந்தாலும் சரி.

நாமே நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வகை ஏற்பட்டுவிட்டால் 6000 மைல்காரனும் வேண்டாம், அடுத்த வீட்டுக்காரனும் வேண்டாம். அண்ணன் தம்பி, அப்பனும் வேண்டாம் என்கின்ற நிலை எய்துவது இயற்கையேயாம். ஆதலால், இதில் 6000 மைல்காரனைவிட



அடுத்த எல்லையில் இருப்பவன் வேறுபட்டவன் என்பதோடு, உரிமை இல்லாத கொள்ளைக்காரனாக இருக்கிறான் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திராவிடநாட்டைப் பிரித்தால், 'திராவிடநாடு நிரந்தர அடிமையாய் இருக்க நேரிடும்' என்கிறது 'தினசரி'.

அப்படியே (பிரிந்தால் இருக்க நேராது)யிருந்தாலும், 'நாம் ஒருவனுக்கு அடிமையாய் இருக்கிறதே போதும். இருவருக்கு அடிமையாய் இருக்கமாட்டோம்' என்றுதான் சொல்லுகிறோம்.

வெள்ளையனுக்கு அடிமையானதால் அதிக நஷ்டம் இருந்தாலும் சிறிது இலாபமாவது பெற்று நாம் மனிதன் என்பதை உணர்ந்திருக்கிறோம். வடநாட்டானுக்குப் பூராவுமே அடிமையாய் இருந்தால் நாம் 'சூத்திரன்' 'ராட்சசன்' 'சண்டாளன்' 'அசுரன்' 'குண்டகன்' 'கோளகன்' 'பிரதிலோலன்' 'நரகன்'... ஆகத்தான் இருக்க நேரும். இப்பொழுதும் அப்படியே இருக்கிறோம் என்றாலும் அது ஓரளவுக்காவது ஆட்டம் கொடுத்துவிட்டது. திராவிடநாடு ஏற்பட்டவுடன், ஆட்டம் கொடுத்தவைகளைப் பிடுங்கி எறிந்துவிடுவோம். பிறகு 6000 மைலை 60000 மைல் தூரம் ஆக்கி அவனையும் திராவிடநாட்டுக்குப் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு வரும்படி செய்வோம் என்பதை உலகத்தில் உள்ள மற்ற சிறு சிறு நாட்டின் சரித்திரத்தையும், நிலையையும் கண்டு தெரிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—25-11-1944]

தோழர்களே!

திராவிடநாடு என்பது ஒரு பொருளாதார சமுதாய சீர்திருத்தப் பிரச்சினையே ஒழிய அது ஒரு அரசியல் பிரச்சினை அல்ல. தீண்டாமை ஒழியவேண்டும் என்பது போலவே சுரண்டல் ஒழியவேண்டும் என்கிறோம். அன்னியனுக்கு நம்நாடு சந்தையாய் இருக்கப்படக்கூடாது என்பது போலவே, அன்னிய மாகாணத்தானுக்கு நம்நாடு சந்தையாய் இருக்கக்கூடாது என்கிறோம்.

வாழ்க்கையில் பகுத்தறிவு வாதியாய், சீர்திருத்த வாதியாய் இருப்பதுபோலவே மதத்தில் பகுத்தறிவு வாதியாய் சீர்திருத்த வாதியாய் இருக்கவேண்டுமென்கின்றோம். இவைகளில் அரசியல் என்ன இருக்கின்றது? நம் அரசியல் நம் நாட்டைப் பொறுத்ததாக மட்டும்—நம்நாட்டு மக்களைப் பொறுத்ததாகமட்டும் இருக்கவேண்டும் என்கின்றோம்.

நம் திராவிட நாட்டுப் பிரச்சினையில் பிரிட்டிஷ் அரசாங்கம் இருப்பதா போவதா என்கின்ற பிரச்சினையோ, பிரிட்டனுக்கு எவ்வளவு உரிமை, நமக்கு எப்படிப்பட்ட உரிமை என்கின்ற பேச்சேகூடக் கிடையாது. அவை முதலியவை தனிப்பட்ட வேறு விஷயமாகும். அது திராவிடநாடு பெற்றதும் கிளம்பும். அன்னியர் ஆதிக்கமும் அன்னியர் தயவு, உதவியுங்கூட தேவை இல்லாமலும், தனித்து இயங்க நாம் வேறுமுயற்சி செய்வோம். அதை வேண்டுமானால் அரசியல் என்று சொல்லிக்கொள்ளட்டும். அதுவும் பிரிட்டிஷ் ஆதிக்கம் மாத்திரம் கூடாது என்பதோடு, நம் அரசியல் தீர்ந்துவிடாது.

பிரிட்டன், அமெரிக்கன், ஜெர்மானியன், ஜப்பானியன், ஆரியாவர்த்தம், காந்தி-நேரு கம்பெனி ஆதிக்கம் முதலிய ஒன்றுமே இல்லாத நம் (திராவிடர்) ஆதிக்கமே இருக்க வேண்டும் என்பது நம் அரசியலாகும். நாம் கேட்கும் திராவிடநாடு நம்மை இப்படிப்பட்ட சுதந்திரத்துக்கு, முழு முழு சுயேச்சைக்குக்கொண்டுபோய்விடும். ஆதலால், திராவிடநாடு பிரிவினை, இன்று அரசியலாகாது. திராவிடநாடு பிரிவினை என்று நாம் என்ன சொல்லுகிறோம் என்றால்,

படிப்பகம்

www.padippakam.com



1. சென்னை மாகாணம்தான் இன்று திராவிடநாட்டு விஸ்தீரண அளவு.

2. மற்ற மாகாணத்தான் திராவிட நாட்டிற்குள் காலடி வைப்பதானால் அனுமதிச் சீட்டு—'பாஸ்போர்ட்' வாங்கிக்கொண்டு வரவேண்டும்.

3. மற்ற மாகாண சரக்கு சுங்கம் கொடுத்துவிட்டு, அதுவும் நாம் அனுமதித்தால் தான் திராவிட நாட்டிற்குள் வரவேண்டும்.

4. விஸ்தீரணம் கூடுவதும் குறைவதும் நம்நாட்டின் சவுகரியத்தையும் இஷ்டத் தையும் பொறுத்தது.

5. வெளிநாட்டார் இங்கு வர்த்தகம், கைத்தொழில் செய்வதும் நம்நாட்டு சவுகரி யத்தையும், தேவையையும் பொறுத்ததாகும்.

6. நாடு முழு சுதந்திரமடையும் வரை பாதுகாப்பு இன்றுள்ளது போலவே இருக்கும்.

முஸ்லிம்கள், ஆதித் திராவிடர்கள், கிறிஸ்தவர்கள், பவுத்தர்கள் ஆகியவர்கள் அவர் களும் திராவிடர்களே. ஆனதால், அவரவர்கள் சமயம், ஆத்மார்த்தம் என்பவற்றின் உணர்ச்சி இன்றுள்ளது போலவே அவரவர்கள் இஷ்டப்படி இருக்கும்.

ஆரியர்கள் நிலையும் அதுபோலவே—மற்றவர்கட்கு நட்டமும், கேடும், இழிவும் இருப்பதற்கு இல்லாத நிலையில்—சம உரிமையோடிருக்கும்.

[சென்னையில் 19-11-1944 முதல் 22-11-1944 முடிய சொற்பொழிவு—'குடிஅரசு' 2-12-1944]

தோழர்களே!

நம் சமுதாயத்திலும், சமயத்திலும், நாட்டு உரிமையிலும்—நாம் 'இந்தியர்', 'இந்துக்கள்', 'பாரத மக்கள்' என்று சொல்லிக்கொள்வது தவறு என்றும், நாம் நம்மை 'திராவிடர்', 'பகுத்தறிவுவாதிகள்', 'திராவிட நாட்டவர்' என்று சொல்லிக்கொள்ள வேண்டும் என்றும் திருவாரூர் மாநாட்டில் 1940 ஆம் வருடத்திலேயே தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம்.

ஏனெனில், இந்த எண்ணம் நமக்கு இல்லாத காரணத்தாலேயே நாம் குறை களுக்கும், இழிவுகளுக்கும், முற்போக்குத் தடைகளுக்கும் ஆளாகி இன்றைய ஈனநிலையில் இருக்கிறோம்.

நாம் நம்மை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்வோமானால் இந்து சமயத்தின் வருணாசிரம தர்ம முறைப்படி—அதாவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அவர்ணன் என்கின்ற 5 பிரிவுகளில் நாம் 4-வது, 5-வது பிரிவுக்கு ஆளாகி—மிகுதியும் தாழ்மையும், இழிவும் இருக்கிற ஈனமக்களாக ஆகிவிடுகிறோம்.

இவை சட்டப்படியும், சமயப்படியும், சாஸ்திரப்படியும், அமுலில் இருந்துவரும் நடவடிக்கைக் கிரமப்படியும் நம்மைச் செய்துவிடுகின்றன என்பதோடு—இதை நாமே மனப் பூர்வமாய் ஒப்புக்கொண்டு ஏற்றுக் கொண்டவர்களாகவும், சகித்துக்கொண்டு இருப்பவர் களாகவும் ஆக்கிவிடுகின்றன.

[திருச்சியில், சொற்பொழிவு—'குடிஅரசு' 29-9-1945]

கழக இலட்சியத்தை—நீதியும் சமாதானமுமான முறையில் இந்தியாவிற்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சுயராஜ்யம் பெறவேண்டும் என்பதாக, கட்சியின் இலட்சியம் இருந்து வந்தது. பெரியார் நீதிக்கட்சியின் தலைவராக வந்ததும் முதல் மாநாட்டிலேயே (1938-ல்) இந்தியா பூரண சுயேச்சை அடையப் பாடுபடவேண்டியது



என்பதாகத் திருத்தப்பட்டது. இப்போது திருச்சி மாநாட்டில் (1945) இந்தியா என்கிற வார்த்தையே எடுக்கப்பட்டு திராவிடநாடு அரசியல், சமுதாயம், பொருளாதாரம், தொழில் துறை, வியாபாரம் ஆகியவற்றில் பூரண சுதந்திரமும் ஆதிக்கமும் பெறவேண்டும் என்பதாகவும்,

திராவிடநாடும், நாட்டுமக்களும் திராவிட நாட்டவர்கள் அல்லாத அன்னியரின் எல்லா விதமான சுரண்டல்களிலிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, காப் பாற்றப்படவேண்டும் என்றும்,

திராவிடநாட்டு மக்களிடத்தில் சமயம், சமயாசாரம், பழக்க வழக்கம் என்பவை களின் பேரால் இருந்துவரும் பேத உணர்ச்சி, மூடநம்பிக்கை ஆகிய இவைகள் மறையச் செய்து—மக்களைத் தாராள நோக்கமும் நல்ல அறிவு வளர்ச்சியும் பெற்ற ஒன்றுபட்ட சமுதாயமாகச் செய்யவேண்டும் என்றும்,

இவைகள் வெற்றிபெறுகிற வரை சாதி, சமயம், வகுப்பு, பேதம் ஆகியவை உள்ள மக்களுக்கு நம்மிடம் முழு நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்பட்டு மேற்கண்ட முயற்சி களுக்கு நம்மோடு களங்கமற்று ஒத்துழைக்கவேண்டிய அவசியத்திற்காக, அவர்களுக்கு எண்ணிக்கை, அவசியம் ஆகியவைகளுக்குத் தக்கபடி முக்கியமான துறைகளிலெல்லாம் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்றும் திருத்தப்பட்டிருக்கிறது.

['குடிஅரசு'-தலையங்கம்—6-10-1945]

தோழர்களே!

இன்று, நம் நாட்டில் சகல துறைகளிலும் அன்னிய ஆதிக்கமே உள்ளது. நீங்கள் உங்கள் 'மில்' காவலாளி அன்னியன்; அவன் கூடாது என்கின்றீர்கள். ஆனால், மற்ற விஷயத்தில் பாருங்கள்! இந்த நாட்டுத் தலைவர்கள் அன்னியர்கள்; இந்நாட்டு அதிகாரிகள் பெரிதும் அன்னியர்கள்; இந்நாட்டுப் பிரதம மந்திரி அன்னியர்; மற்றும் எவ்வளவோ ஜீவநாடியான முக்கியஸ்தர்கள் அன்னியர்கள்.

இந்தப்படி, அன்னியர் என்பவர்கள் யாரென்றால்—நம் இனத்தவரல்லாதவர், நம் மொழியினரல்லாதவர், நம் வகுப்பினரல்லாதவர், நம்மைச் சமமாகக் கருதுபவரல்லாதவர், நம்மைச் சுரண்டாதவரல்லாதவர், நம்மை இழிமக்களாய்க் கருதாதவரல்லாதவர்களும், நம்மை இந்நாட்டுக் கல்வி, ஆட்சி ஆகியவைகளுக்குத் தகுதியற்றவர்கள் என்பவர்களும், நம் நாட்டுப் பழக்க வழக்கம், நாகரிகம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டவர்களும், நம் திராவிட நாட்டு இன்றைய எல்லைக்கு வெளிப்பட்டவர்களும் அன்னியர்களேயாவார்கள் என்கின்றேன். இந்த உணர்ச்சி நம் மக்களுக்கு வருவதற்காகக் குறைந்த அளவு, அன்னியன் காவல்காரனாக இருக்கக்கூடாது என்கின்ற உணர்வு உங்களுக்கு வந்தது போற்றக்கூடியதேயாகும்.

நம் நாட்டாட்சியில் இன்று பிரதம மந்திரி அன்னியர். அதாவது, அவர் நம் இனத் தவரல்லர்; நம் வகுப்பினரல்லர்; நம்மைச் சரிசமமாய்ச் சமுதாயத்தில் கருதுபவரல்லர்; நம் மக்களைவிட எந்தவிதத்திலும் புத்தியில், திறமையில், நேர்மையில் மேம்பட்டவரு மல்லர். அப்படிப்பட்ட ஒருவர் இன்று ஆட்சிமன்றத்தில் உங்களுக்குப் பிரதமராய் இருக்கக் காரணம் என்ன? திராவிடரின் மான உணர்ச்சியற்றதனம் என்பதல்லாமல், வேறு என்ன சொல்லமுடியும்?

நம் அரசியல் தலைவர்கள் அன்னியர்கள். நம் பண்டிதர்களும், மகாத்மாக்களும், 'மவுலானா'க்களும், 'சர்தார்'களும்—ஏன் நம் நாட்டவராய், நம்மவராய் இருக்கக்கூடாது? காவல்காரர்கள் கூட நம்மவராய் இருக்கவேண்டும் என்று கருதிய உங்களுக்கோ, உங்கள் ஸ்தாபனங்களுக்கோ, உங்கள் தலைவர்களுக்கோ இந்தக் கவலை எப்போதாவது

1686—89

படிப்பகம்

www.padippakam.com



தோன்றியதுண்டா? உங்கள் நாட்டவரில் ஒருவரை மகாத்மாவாகச் செய்துகொள்ள, சொல்லிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? உங்கள் இனத்தவர் ஒருவரை, உங்கள் வகுப்பினர் ஒருவரை இராஷ்டிரபதியாக ஆக்கிக்கொள்ள உங்களுக்கு ஆளில்லையா? இருந்தும் உங்களுக்கு அது விஷயத்தில் கவலையும் மானமுமில்லையே, ஏன்?

தோழர்களே! இந்த நாடும், இந்த இனமும், சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதைத் தன்மையும் கொண்டதானால், இங்கு—'நேரு பார்க்', 'காந்தி சவுக்', 'திலகர் கட்டடம்' இருக்கலாமா? இதற்குப் பெயர்தானா சுயேச்சை யென்பது? இதற்குப் பெயர்தானா சுயமரியாதையுள்ள நாடு என்பது? இவைகளைப் பார்த்து உங்கள் மனம் பதறவில்லையே! வயிறு எரியவில்லையே!

'தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் அட்டூழியம்' என்கின்ற உங்களுக்கு, திராவிட நாட்டில் ஆரியன் அட்டகாசம், திராவிட நாட்டில் திராவிடர்களை ஆரியன் சித்திரவதை செய்கிறான், திராவிட நாட்டில் திராவிடரை ஆரியன் தீண்டப்படாதவன் என்கிறான்; தாசி மகன், வேசிமகன், அடிமை என்கிறான்—என்று எந்தத் திராவிடனுக்கு மான உணர்ச்சி ஏற்பட்டு உள்ளம் துடிக்கிறது? இரத்தம் துடிக்கிறது? திராவிடர்களுக்கு ஆரியனா குரு சந்நிதானம்? திராவிடனுக்கு ஆரியனா எஜமான், அதிகாரி, ஜட்ஜ், கலெக்டர், மாஜிஸ்ட்ரேட், குலகுரு? நாம் சிறிதும் மான உணர்ச்சியற்ற சமுதாயம், நம் நாடு ஒரு காட்டுமிராண்டி அடிமை நாடு என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

தென்னாப்பிரிக்காவிலே உள்ள வெள்ளையன்—திராவிடர்களை இந்திய ஆரியன் நடத்துவதில், கொடுமைப் படுத்துவதில், இழிவு செய்வதில் நூறில் ஒரு பங்கு செய்கிறானா? தோழர்களே, தென்னாப்பிரிக்க வெள்ளையர்களைக் குறை கூறுபவர்கள், அவர்கள்மீது மக்களுக்குத் துவேஷத்தை உண்டுபண்ணுகிறவர்கள்—இதே ஆரியர்கள்தாம். ஆனால், அதைவிடக் கொடுமையாகத் திராவிடர்களை நடத்துகிறவர்கள் இதே ஆரியர்கள்தாம். இதை உணராமல் ஆரியனுக்கு வால்பிடித்து அனுமாராய் அவர் பின் திரிபவர்கள் திராவிடர்கள். இதுதானே, இன்றைய நம் நிலைமை?

இன்று இந்தத் தமிழ் நாட்டில் ஆரிய அட்டூழியம் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆரிய ஆதிக்க மந்திரி சபை வந்தநாள் தொட்டு நம்மவர்களுக்குக் கண்டகண்ட பக்கமெல்லாம் அடி, உதை, குத்து, வெட்டு, கொடுமை, கொள்ளை, வழிப்பறி நடந்த வண்ணம் இருக்கின்றன. இதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்? இந்தமாதிரி ஆரியர்களுக்கோ, ஆரியப் பெண்களுக்கோ, ஆரியக் கொட்டகைகள், கட்டடங்கள் ஆகியவைகளுக்கோ நடந்திருந்தால்—அவர்கள் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பார்கள்? எவ்வளவு சீக்கிரம் அடக்கியிருப்பார்கள்? இன்று நாம் செல்லும் பக்கங்களில் எல்லாம்—நம் கூட்டங்கள் நடக்கும் பக்கங்களிலெல்லாம் நடக்கும் அட்டூழியங்களைப் பாருங்கள். திராவிட வாலிபர்களுக்கு, மாணவர்களுக்கு, தொழிலாளர்களுக்குச் சிறிதாவது மான உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்கிறதா என்று கேட்கிறேன். மே மாதம் 12ஆம் தேதி மதுரை காலித்தனம் ஒருபுறமிருக்க—அதற்கப்புறம் பல நடந்திருக்க, சென்ற மாதம் 23ஆம் தேதி சேலம் காங்கிரஸ்காரர்கள் செய்த அட்டூழியத்தால் ஒரு திராவிடனுக்குக் கால் வெட்டப்பட்டுவிட்டது; ஒரு திராவிடனுக்குக் கண் அடிபட்டு நசுங்கி ஒழுகிப் போய் விட்டது; 30, 40 திராவிடர்களுக்கு அடி, உதை, குத்து என்பதுடன் 10, 12 பேர்கள் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள். இதே மாதிரியாக நீடாமங்கலத்திலும் காலித்தனம் நடந்திருக்கிறது. இதன் காரணமென்ன? மற்றும் பல இடங்களில் கண், மூக்கு போய்—பெண்களுடன் பலர் அடிபட்டு, ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். இதுவரை சுமார் 10, 15 திராவிடர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? ஆரிய மந்திரி அரியாசனம் ஏறியதால்—திராவிட மக்கள் அந்த மந்திரிகளின் கால் கழுவித் தீர்த்தம் பருகுவதால் அல்லாமல், வேறு என்ன காரணம்? நம் நாட்டில் நம்மவர்களுக்கு, நம் மக்கள் நலத்



திற்குப் பாடுபடும் தொண்டர்களுக்கு இதுதான் கதியா என்று கேட்கின்றேன். இந்த மந்திரிகள் பதவிக்கு வருமுன் இந்த அட்டூழியம், அயோக்கியத்தனம், காலாடித்தனம் இப்படி நடந்ததா என்று கேட்கின்றேன்.

ஆரியர் பதவிக்கு வந்தார்கள். ஆங்காங்குள்ள ஆரியப் புரோகிதர்கள் 'மாமா'க்கள், அர்ச்சகர்கள், அதிகாரிகள் முதல்—ஆணவம் பிடித்துக் தலைகொழுத்து ஆடுகிறார்கள்; மக்களைத் தூண்டிவிட்டு, கள் ஊற்றி, நம்மீது காலித்தனத்துக்கு ஏவுகிறார்கள். அதிகாரிகள் ஆதரவு இருப்பதாலும் எப்படிப்பட்ட அக்கிரமம், அட்டூழியம், கொலை, கொள்ளை, நாசவேலை, சித்திரவதை செய்தாலும் கேட்கமாட்டார்கள் என்றும்; கேட்கப்பட்டாலும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்றும்; நடவடிக்கை எடுத்தாலும் மந்திரிகள் சிபாரிசால் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்றும்; தண்டிக்கப்பட்டாலும் மந்திரிகளால் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும்; விடுதலை மாத்திரமல்லாமல் வாத்தியம், மாலை ஊர்வலத்துடன் வரவேற்கப்படுவார்கள் என்றும்—காலிகளுக்கும், குழப்பக்காரர்களுக்கும், கூலிகளுக்கும் தைரியம் கொடுக்கப்பட்டு, காரியத்திலும் காட்டப்பட்டு இருப்பதாலும்—ஒன்றும் அறியாத திராவிட மக்கள் வெறியர்கள் போல் நடத்தப்பட்டு விடுகிறார்கள்.

தோழர்களே! நமக்கு, இனிப் பாதுகாப்பு மிக மிகக் குறைவுதான். கேள்வி இல்லை; கேட்பாருமில்லை. ஆரியப் பேய், இன்று தலைவிரித்தாடுகிறது. திராவிட மண்டுகள் பல அதற்கு உடுக்கை அடிக்கின்றன. இந்த நிலையில் அன்னியர் ஒழியவேண்டும்; அவர்கள் ஆதிக்கம் அழிய வேண்டும் என்கின்ற பிரச்சினையில் எங்களுக்கு முழு அனுதாபம் உண்டு. தொழிலாளத் தோழர்களே! நீங்கள் செய்யும் சமாதானமான கிளர்ச்சிக்கு எங்களால் கூடிய எல்லா ஆதரவும் தருகிறோம்.

நீங்கள் திராவிடர்கள்; நாங்கள் திராவிடர்கள். நம்மை இழிவுபடுத்திக் கொடுமைப் படுத்தித் துன்பப்படுத்தி நடத்துகிறார்கள் ஆரியர்கள். இதை நீங்கள் உணர்ந்துவிட்டால் நமக்கு இந்தக் கஷ்டமிருக்காது. ஆகவே, தொழிலாளத் தோழர்களே! இதுவரை நடந்து போனது போகட்டும். இனியாவது, திராவிடர்கள் யாவரும் கட்டுப்பாடாய்—ஆரியர்கள் போல் ஒற்றுமையாய், ஒருமனப்பட்ட இலட்சியமாய் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் தொழிலாளர்கள் என்றாலும், நாங்கள் உங்கள் தொண்டர்கள். உங்களுக்காகவே உயிர் வாழ்பவர்கள், இதை உணருங்கள்!

[திருவல்லிக்கேணியில் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1946]

தோழர்களே!

இன்று நீங்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்கள். இதை நாங்கள் முழுமனத்தோடு ஆதரிக்கிறோம். ஆனால், கூலி உயர்வுக்குச் செய்யும் வேலை நிறுத்தத்தை நாங்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதுவதில்லை. ஏனெனில், அது தொழிலாளிகளை தொழிலாளர்களாகவே இருக்கவைக்கும் வேலை என்பதே எங்கள் கருத்து. ஏனென்றால், தொழிலாளிக்கு அதிகக் கூலியும், வீடு, வைத்தியம், படிப்பு வசதியும் முதலாளி செய்வது என்பது, ஒருவன் தன் மனைவியை எப்போதும் அடிமையாய் அடைத்துத் தனது நலனுக்கு வைத்திருப்பதில், அவளை அந்தக் காரியத்தில் உற்சாகமூட்டி நல்ல பக்தி விசுவாசமுள்ள அடிமையாகச் செய்ய, தங்க வைரநகைகள், பட்டுச்சேலை, சீப்பு, சோப்பு, கண்ணாடி, வாசனை எண்ணெய், பவுடர் வாங்கிக் கொடுப்பது போலவே தவிர, சம உரிமை அடையவதற்கல்ல என்பது போலவேயாகும்.

தொழிலாளிக்கு வேண்டியது கூலியும், நல்வாழ்க்கை வாழச் செலவுமே அல்ல என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் கவனத்தில் வைக்கவேண்டும். அவனுக்கு

படிப்பகம்

www.padippakam.com



வேண்டியது தொழிலின் பயனை சம உரிமையுடன் அனுபவிக்க வேண்டும். அடைய வேண்டும் என்பதோடு, தான் அந்த இயந்திர சாலைக்கு ஒரு கூட்டாளியாக, பங்காளியாக இருக்க வேண்டுமேயொழிய, ஒரு தொழிலாளியாக, வேலைக்காரனாக இருக்கக்கூடாது என்பதேயாகும். தொழிலாளி–முதலாளி தன்மைமுறை இருக்கவேகூடாது. 'தொழிலாளர் சங்கம்' என்கின்ற பெயரும் இருக்கக்கூடாது. தொழிற்சாலைக்கு— அங்கு வேலை செய்பவர்கள், பங்காளிகளாக இல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பதென்பது—முட்டாள்தனம், அடிமைத்தனம், மானமற்றதனமாகும்.

தொழிலாளி தன் சரீரத்தினால் நேரே பாடுபடுகிறான். முதலாளி என்பவன், வேறு தொழிலாளிகள் பாடுபட்டபாட்டின் பயனாய் மீதப்படுத்தப்பட்ட பணத்தை, முதலாகப் போடுகிறான் என்பதல்லாமல் முதலாளிக்கு முதல் ஏது? சரீர உழைப்பு ஏது? பல தொழிலாளிகளை மோசம் பண்ணி, அவர்களுக்குச் சரி பங்களிக்காது வஞ்சித்த பொருளல்லாமல் எப்படி முதலாளிக்குப் பொருள் வந்தது? பாடில்லாமல் பணம் ஏது? பாடில்லாத பணம் திருட்டுதானே? ஆகவே, மோசம் பண்ணின, வஞ்சித்த, திருடிய பணத்துக்கு இலாபம் பூராவும் தருவதும்; பாடுபட்டவனுக்குச் சோறுமாத்திரம் என்றால்—கொஞ்சம் நல்லசோறு என்றால், இதுவா தொழிலாளர் இயக்க இலட்சியம் என்று கேட்கிறேன்?

பணத்தைப் போட்டு இயந்திரம் வாங்கி, தொழிலாளியைப் போட்டு வேலை செய்தால் தானே இலாபம் வருகிறது? இந்த இலாபத்தில் பெரும்பாகம் வேலைக்குத்தானே கிடைக்க வேண்டும்? முதலுக்குச் சிறு வட்டிதானே கிடைக்கவேண்டும்? அதுவும் மிஷினுக்கு எண்ணெய் போடுவது எப்படியோ, எஞ்சினுக்கு விறகு போடுவதெப்படியோ—அதுபோல் அதில் வேலை செய்பவருக்கும் அந்த 'மனித மிஷின்' டைனமோ, எண்ணெயும் விறகும் போல் நல்ல சாப்பாடும், நல்ல சுகமும் கொடுக்க வேண்டியது இயற்கைத் தர்மமாகும். ஆகவே, நிர்வாகஸ்தன் சம்பளம், முதலுக்கு வட்டி, மிஷினுக்கு எண்ணெய் விறகு என்பன போல்—தொழிலாளிக்கும் வாழ்க்கைச் சவுகரியம் செய்து கொடுத்து விட்டு, மீதியுள்ள இலாபத்தில் மிஷின் தேய்மானத்திற்கு ஒரு தொகை ஒதுக்குவது போல், தொழிலாளியின் ஓய்வுகால நல்வாழ்க்கைக்கும் ஒரு தொகை ஒதுக்கிவைத்துவிட்டு மீதியையே முதலும், வேலையும் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். நாளாவட்டத்தில் இயந்திரசாலை, தொழிற்சாலைகள் தொழில் செய்பவர்களுக்குச் சரிபாக சொந்தமாக ஆகவேண்டும். இதற்காக வல்லவா—இந்தக் காரியத்திற்கல்லவா தொழிலாளர் இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம் ஆகியவை இருக்கவேண்டும்? ஆனால், இன்று இவையிரண்டும் முதலையும் முதலாளிகளையும் பெருக்கிக் கொழுக்க வைத்து, தொழிலாளிகளுக்கு மயக்கத்தைக் கொடுக்கும் மதுபோல்—கொஞ்சம் கூலி உயர்வும், சிறிது சவுகரியமும் செய்து கொடுத்து, அவர்கள் என்றும் தொழிலாளிகளாகவே இருக்க வைக்கும் சதிவேலை ஸ்தாபனமாக இருந்து வருகின்றன.

இதிலிருந்து தெரிவதென்ன வென்றால், நம் நாட்டுத் தொழிலாளர் ஸ்தாபனங்களுக்கும், தொழிலாளர் தலைவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் இனிவேண்டியது என்ன என்பதே தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். காரல் மார்க்சின் காலம் வேறு; லெனின் காலம் வேறு; இந்தக் காலம் வேறு. இந்தக் காலத்துக்கு வேண்டியது பழைய காலத்தில், பழைய காலப் பெரியார்கள் கண்டுபிடித்தும், சொன்னதுமாகியவற்றில் இருக்க முடியாது; அவை போதாது. 1946 ஜூன் மாதத்திய இரயில்வே கைடு—ஜூலை மாதத்துக்குச் செல்லாது; இரயில் தவறிவிடும். ஆகவே, தொழிலாளிகள் தங்களை இனி அரை நிமிடமும் தொழிலாளி என்றெண்ணாமல், முதலாளிகள்—சொந்தக்காரர்கள் ஆகப் போகிறவர்கள் என்று எண்ணவேண்டும். இதற்கு அவர்கள் இன்றைய சுயநலப் புலிகளான தலைவர்களிடமிருந்து விடுபட வேண்டும். புராண வாழ்வுக்காரர்களை, பார்ப்பனர் (பிராமணர்)களை விட்டு விலகவேண்டும். பார்ப்பனர்களைவிட—புராணக்காரர்களான



பார்ப்பன அடிமைகளைவிட, முதலாளிகள் அதிகம் கெட்டவர்கள் அல்லர். ஆகவே, தொழிலாளத் தோழர்கள் என்கின்றவர்களே! நீங்கள் முதலில் உங்கள் ஆசாபாசங்களையும் இலட்சியங்களையும், ஸ்தாபனங்களையும், தலைவர்களையும் திருத்திக்கொள்ளுங்கள். இதுவரை நான் உங்களுக்குத் தொழிலாளர்களைப்பற்றிய எனது கருத்தை, திட்டத்தை முகவுரையாகச் சொன்னேன்.

இனி, உங்கள் விஷயமாகிய தற்காலப் பிரச்சினை பற்றிப் பேசுகிறேன்: அதாவது, நீங்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்திருக்கும் விஷயம்பற்றிப் பேசுகிறேன்.

உங்கள் வேலை நிறுத்தத்திற்கு என்ன காரணம் இருந்தாலும், வெளிநாட்டுப் 'பட்டாணியர்'களைக் கொண்டு வந்து உங்களுக்குக் காவல்காரர்களாகப் போட்டு அவர்கள் மரியாதையில்லாமல் உங்களிடம் நடந்துகொள்ளும் மூர்க்கத்தனத்தைப்பற்றி நீங்கள் வருத்தமடைந்து, இனி, அப்படிப்பட்ட அயலார் ஆதிக்கமும் அத்துமீறின காரியமும் 'மில்'லில் இருக்கக்கூடாது என்கின்ற கருத்தின்மீது வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்கள். இந்த உணர்ச்சி உங்களுக்கு ஏற்பட்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இது இன்னும் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு திராவிடனுக்கும் ஏற்படவேண்டியது அவசியமாகும். அதற்காக நீங்கள் செய்யும் கிளர்ச்சி பாராட்டத்தக்கதேயாகும். உங்கள் மில் முதலாளிகள் இதற்கு இணங்க வேண்டியது அவசியமும் நேர்மையுமாகும். உங்கள் முதலாளிகள் நிர்வாகிகள் யார்? உங்களுழைப்பால் பயனடைபவர்களேயாவார்கள்.

உங்கள் உழைப்புக்குக் கூலி, அதாவது உங்களுக்குச் சாப்பாடு போட்டுவிட்டதால் அவர்கள் கடன் தீர்ந்துவிட்டதாகக் கருதக்கூடாது. ஒவ்வொரு ஜீவனுக்கும் உணவு என்பது இயற்கை நியதியாகும். அனேக ஜீவன்கள் உழைப்பில்லாமலே உணவு கொண்டு ஜீவிக்கின்றன. அனேக மனித ஜீவன்களும் உழைப்பில்லாமல் பெருவயிறோடு நடமாடுகின்றன. நீங்கள் உழைத்துவிட்டு உணவு கொண்டு ஜீவிப்பதென்பது மற்றவர்களுடைய உதவியாலல்ல; அது இயற்கையாலேயே, நிர்ப்பந்தத்தாலேயாகும்.

உங்கள் உழைப்பால், உங்கள் முதலாளிகள் உணவு கொள்வதுடன் இலாபம் அனுபவிக்கிறார்கள். பொதுமக்கள் இயற்கை நியதிப்படி உணவு கொள்வதுடன் உங்கள் உழைப்பால் ஆடை அணிகிறார்கள். ஆகவே, உங்கள் முதலாளிகளும் பொதுமக்களும் உங்களுக்கு உணவைத் தவிர வேறு காரியங்களுக்கும் அவர்கள் கடமை, கடன்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் முதலாளிகள் உங்களுடைய இந்த விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவேண்டியவர்களாவார்கள். இந்தப் பிரச்சினை உங்களுடைய உணவு சவுகரியத்தைப் பற்றியதல்ல; உங்கள் சுயமரியாதையைப்பற்றியது. உங்களுடைய சுயமரியாதையை மாத்திரம் பற்றியதல்ல; திராவிட நாட்டையும், திராவிட சமுதாயத்தையும் பற்றிய சுயமரியாதையைப் பொறுத்தது. ஆகவே, இதில் வெற்றி பெற்றாலும், பெறாவிட்டாலும் போராடியே தீரவேண்டிய பிரச்சினையாகும். நாடு விடுதலை, நாடு சுதந்திரம், நாடு சுயமரியாதை பெற்றுவிட்டது என்றால் என்ன அர்த்தம்? அன்னியனும், அன்னிய நாட்டான் ஆதிக்கமும், வியாபாரப் பெருமையும், தலைமையும் இந்த நாட்டில் இருப்பது தான் அர்த்தமா என்கின்றேன்.

[திருவல்லிக்கேணியில் சொற்பொழிவு—'விடுதலை' 2–7–1946]

தலைவரவர்களே! தோழர்களே!

எனது கவலை, இலட்சியம் யாதெனில் அன்னியன் என்றால் வெள்ளையன், பனியா, மூல்தானி, மார்வாடி, காஷ்மீரி, குஜராத்தி ஆகிய இவர்கள் ஆதிக்கத்திலிருந்து—அதாவது எந்தவித ஆரிய ஆதிக்கத்திலிருந்தும் விலகுவதும், பிரிட்டிஷ்காரன், அமெரிக்கன், ரஷ்யன், மேற்கண்ட மார்வாடி, பனியா, பார்ப்பனன், மேல் லோகத்தான் என்பவன்

படிப்பகம்

www.padippakam.com



எவனும் நம்மைச் சுரண்டக்கூடாது என்பதும் ஆகும். இங்கு உள்ள பார்ப்பனன் சமுதாயத்தின் பேரால், ஆரியத்தின் பேரால் சுரண்டக்கூடாது என்றும், மீறி எவன் சுரண்டினாலும் திராவிட நாட்டை விட்டு வெளியே கொண்டு போகக்கூடாது என்றும் சொல்லுகின்றோம்.

விளக்கமாக—சென்னை மாகாணம் முழு சுயேச்சையுடன் இருக்கவேண்டும்—பிர்லாக்கள், டாட்டாக்கள், மகாத்மாக்கள், நேருக்கள், வெள்ளைக்காரர்கள் யாராயிருந்தாலும் சென்னை மாகாணம் என்னும் திராவிட நாட்டு எல்லைக்குள் நுழையவேண்டுமென்றால், 'பாஸ்போர்ட்'—அனுமதிச்சீட்டு வாங்கிக்கொண்டுதான் உள்ளே நுழைய வேண்டும். எந்த வடநாட்டானும், நமது நாட்டுக்குத் தலைவனாகவோ, இராஷ்டிரபதியாகவோ, மகாத்மாவாகவோ இருக்கக்கூடாது. மனிதரெல்லாம் சமமாக வாழவேண்டும். மனித வர்க்கத்திலே, பறையனோ, சூத்திரனோ, சக்கிலியோ, பிராமணனோ, இழி சாதியானோ இருக்கக்கூடாது. உலகநாடுகள் பெற்றுள்ளதைப்போல நமது நாடு சுதந்திரம் பெற்றுத் தனிநாடாக இருக்கவேண்டும். அய்ந்து கோடி மக்களிலே யார் வேண்டுமானாலும் மந்திரியாகவோ, மகாத்மாவாகவோ இருக்கட்டும். நம்மிலே அத்தகைய தகுதியுடையவர்கள் இல்லையா?

நமக்கு அரசியல் தெரியும். பரம்பரை பரம்பரையாகக் கப்பலோட்டி வாணிபம் செய்தவர்கள் நாம். பிறன் ஆதிக்கம், உயர்வு இங்கு வேண்டாம். திராவிடர்கள் இங்கு 'நான்காவது சாதி'யினராக இருக்கின்றார்கள். திராவிடரல்லாத ஒருகூட்டம், முதலாவது சாதியாக இருக்கின்றது. நூற்றுக்குத் தொண்ணூறு பங்காகவுள்ள திராவிட இனம் இன்று சட்டத்திலே, சாஸ்திரத்திலே சூத்திரனாக பஞ்சம, இழிமகனாக வாழ்கின்றது. திராவிடன் மனிதனாக வாழ வேண்டாமா? திராவிடநாடு, இழிமக்கள் இல்லாத நாடு ஆகவேண்டாமா? இந்தக் காலத்திலே சிம்மாதனத்திற்கோ, மகுடத்திற்கோ மதிப்பில்லை. 'ஜனநாயக ஆட்சியே இக் காலத்திற்குத் தேவை' எனப்படுகிறது. நாணயம், ஒழுங்கு, மனிதத் தன்மையுடன் யார் வேண்டுமானாலும் அதிகாரம் செலுத்தட்டும். இந்தியா என்னும் இப் பரந்த உபகண்டம் சுமார் மூவாயிரம் மைல் நீளம், இரண்டாயிரம் மைல் அகலம் உள்ளதாக இருக்கின்றது. இங்கு மக்களிடையே பண்டைக் காலந்தொட்டு இன்றுவரையில் பல பேதங்கள் வளர்ந்துவந்துள்ளன. ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடுவதற்கில்லை; மணந்து கொள்வதுமில்லை. பல மொழிகள், பல நாகரிகங்கள், பல உயர்வு-தாழ்வுகள் ஆகிய வித்தியாசங்கள் இருந்துவருகின்றன. இத்தகைய பேதம் உள்ள பிரதேசம் உலகத்தில் எங்குமே இல்லை. இவ்வளவு வேற்றுமைக் கருத்துடைய ஒரு பெரிய உபகண்டத்தை—ஒரே நாடு என்றும், ஒரே ஆட்சியில் இருக்கவேண்டுமென்றும் சொன்னால் இதை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? நாம் கேட்கின்றபடியே உபகண்டத்திலிருந்து திராவிட நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டுமென்றால், இதில் யாருக்கு—எந்த இந்தியனுக்கு என்ன அசவுகரியம் ஏற்படுகின்றது? திராவிடநாடு தனியாகப் பிரிந்தால் கிழக்கே கன்னியாகுமரி முதல் பர்ஹாம்பூர் வரையும்; மேற்கே பம்பாய் வரையிலும் ஆயிரம் மைல் நீளமுள்ள கடற்கரை நமக்குக் கிடைக்கின்றது. கிழக்கரை முதல் சிக்மகளூர் வரை அகலமான ஆறுகள், அகண்ட அணைகள், ஏரிகள் உயர்ந்த நன்செய் நிலங்கள், முத்துக் கொழிக்கும் கடல்கள், தங்கம் விளைகின்ற பல கனிகள் மலைகள் நமக்குண்டு. இத்தகைய திராவிட நாட்டை அதிலுள்ள 5 கோடி மக்களுக்காகப் பிரித்தால்—இந்தத் திராவிட மக்களுக்கு என்ன கஷ்டம் இருக்கமுடியும்? சிறிய, சிறிய நாடுகளாகிய துருக்கி, கிரீஸ், ஸ்வீடன், லிதுவேனியா, சுவிட்சர்லாந்து, டென்மார்க், பெல்ஜியம், அயர்லாந்து முதலிய 20, 30 நாடுகள் தனித்தனி வல்லரசுகளாக விளங்கவில்லையா? நாம் தனி ஆட்சியாக ஏன் இருக்க முடியாது? இப்படிப்பட்ட நமது நாட்டுக்குத்தான் நாம் பூரண சுயேச்சை கேட்கிறோம்.



வெள்ளையன் (ஆங்கிலேயன்) எங்களுக்கு வேண்டாம்; அவன் எதற்கும் எங்களுக்குத் தேவை இல்லை. நாட்டை ஆண்டு வந்த நாங்கள், வெள்ளையன் வந்த பிறகு, பியூனாக, பட்லராக, கான்ஸ்டபிளாக இருக்கின்றோம். ஆனால், பிச்சை எடுத்த கூட்டத்தார் இன்று அய்க்கோர்ட் ஜட்ஜாக, அட்வகேட் ஜனரலாக, திவானாக, மந்திரியாக, சங்கராச்சாரியாக, பகவான்களாக இருக்கின்றனர்.

பார்ப்பனர்கள், ஜட்ஜு முதலிய பெரிய பதவிகளில் இருக்கின்றார்கள். அதனால் அவர்களுக்கு வெள்ளையன் இருப்பதால் நஷ்டமொன்றுமில்லை. எங்களுக்குத்தான் முதலில் வெள்ளையன் வெளியே போக வேண்டுமென்ற கவலை—ஏனெனில், நாங்கள்தான் வெள்ளையனுக்கும் ஆரியனுக்கும் அடிமைகளாக இருக்கிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சியார் 'மில்'லிலும் 'எஞ்சினி'லும் வேலை செய்யும் தொழிலாளர்களையே தொழிலாளர்களாகக் கருதுகின்றார்கள். சரீரத்தினால் பாடுபடும் சூத்திரப் பட்டம் தாங்கிய 4 கோடி மக்களும் தொழிலாளர்களல்லவா? 'சூத்திரனைக் கூலி இல்லாமல் பார்ப்பான் வேலை வாங்கலாம்' என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகின்றதே! இது கடவுளின் கட்டளையாம்! 'திராவிடர் சங்கம்' என்றால் சூத்திரன் சங்கம் என்றுதானே கருத்து! இதற்குத்தானே—இப்படிச் சொல்ல வெட்கப்பட்டுத்தானே, 'பார்ப்பனரல்லாதார் சங்கம்' என்றும் சொன்னோம். ஏன் இந்த இழிவான பெயர்கள் நமக்கு? பார்ப்பனர் வேண்டுமென்றால் தங்கள் சங்கத்தை, 'சூத்திரரல்லாதார் சங்கம்' என வைத்துக் கொள்ளட்டுமே! 'பிராமணன் உயர்வானவன் என்று யக்ஞுவல்க்யர், நாரதர், பராசரர் ஆகியோர் சொன்னது, இன்று இந்து சட்டமாகக் காட்சியளிக்கின்றதே! சட்டத்திலே, சாஸ்திரத்திலே, நடத்தையிலே, பிறவியிலே, நாம் சூத்திரர் ஆயிற்றே! 'கடவுளாலே கொடுக்கப்பட்டது' என்று சொல்லப்படும் இந்தச் சூத்திரப் பட்டத்தைத் தாங்கி நிற்பவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்யும் தொழிலாளர்களாகிய திராவிடர்களல்லரோ? நாம் எப்போது இந்தச் சூத்திரப்பட்டத்தை ஒழிப்பது?

கம்யூனிஸ்ட் தோழர்களே! சூதுகள், தந்திரங்கள் ஒழியவேண்டும். நயவஞ்சகமாக இவ்வளவு நாள் நடந்த இந்த ஆட்சி பிரிட்டிஷ் ஆட்சியா? இது பிரிட்டிஷ் நாட்டு ஆட்சி அல்ல. இந்தப் பேதங்கள் அங்கே இல்லை. பார்ப்பனர் 100-க்கு 100 படிக்க வசதிசெய்து கொடுத்தது இந்த ஆட்சி. 'சூத்திரன் படித்தால் இராசாவுக்குக் கேடு; பட்டத்துக்குக் கேடு' என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்வதுபடி நடந்தது இந்த ஆட்சி. பிராமணன் உடலால் உழைக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவனுக்கு ஜட்ஜு முதலிய உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தோழர்களே!

வெள்ளையன் பார்ப்பானுக்கு உடந்தையாக இருக்கிறான். இது வெள்ளை ஆரியனுக்கும் மஞ்சள் ஆரியனுக்கும் உள்ள ஒப்பந்தந்தான். இனி ஏற்படப்போவதுகூட அந்த ஒப்பந்தந்தான். மற்ற பேச்சுகளெல்லாம் தந்திரம். இதை இரண்டு வருடங்கட்கு முன்பே நான் சொல்லிவிட்டேன். ஜின்னாவும் அம்பேத்காரும் இப்போது சொல்கிறார்கள். இன்றையச் சமுதாய அமைப்பைக் காப்பாற்றுவதுதான் சுயராஜ்யம். இதற்கு ஓர் உதாரணம், திருவையாற்றிலே சாப்பாட்டில் பேதம் கூடாது என்று சொன்ன காலத்திலே, மகாகனம் சாஸ்திரியார், பி. எஸ். சிவசாமி அய்யர், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார் முதலியோர், 'நாம் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறுகின்றாயே' என வெள்ளையனைக் கேட்டார்கள். இதைத்தான் நாம் உடைக்கவேண்டும்.

வெள்ளையன் இந்த நர்ட்டை விட்டுப் போய்விடுகிறேன் என்று சொல்லுவது (1946-ல்) மற்ற வல்லரசுகளிடம் அவன் செய்துகொண்ட ஒப்பந்தம். 'சண்டை நீங்கினவுடன் அவரவர்கள் நாட்டை அவரவர்களிடம் விட்டுவிட வேண்டும்' என்று நிபந்தனை

படிப்பகம்

www.padippakam.com



செய்துகொண்டார்கள். அந்தப்படியே அமெரிக்கன் பிலிப்பைன் நாட்டை விட்டுவிட்டான். அதைப்போலவே பிரெஞ்சுக்காரனும் விட்டுவிட்டான். ஆனால், நமது நாட்டை நம்மிடம் விடாமல் வெள்ளையன் தந்திரம் செய்கிறான். காங்கிரஸ் அவனை வெளியே விடாமல் டுத்து நிற்கின்றது. காங்கிரஸ் ஏன் அவனிடம் பேரம் பேசுகின்றது? நாட்டை ஆள மக்குத் தகுதி இல்லையா? நாட்டின் ஆட்சிக்கு முட்டுக்கட்டையாக, ஒற்றுமைக்கு பிரோதமாக எவன் சாதிப்பட்டம் வைத்திருக்கின்றானோ—எவன் பெயருக்குப் பின்னால் ாதியைக் குறிப்பிட்டு வால் வைத்திருக்கின்றானோ—அவனுக்கு 6 மாத தண்டனை விதிக்கட்டுமே!

பெருவாரியான சாதிப் பாகுபாடுகள் உள்ள நாட்டிலே—ஒரே கொள்கையுடைய ஒரு னம் அதுவும் 100-க்கு 60-க்கு மேல் மெஜாரிட்டியாக உள்ள இடத்தைத் தங்களுக்கென ஸ்லிம்கள் தனியே பிரித்துக் கொள்கிறதென்றால் இதில் என்ன தவறு? இது என்ன ட்டுக்கட்டை? நாடு என்ன பிளந்து போகும்? நாடு என்ன வெடித்துப்போகும்! இதற்கு திர்ப்பு இருக்கிறதென்றால், இது வெள்ளையனும் ஆரியனும் உண்டாக்குகிற கலகம். ங்கு இருக்கின்ற பிணக்கு, ஆபாசம் வெள்ளையனுக்குத் தெரியாதா! பார்ப்பான் என்று ரு சாதியும், பறையன் என்று ஒரு சாதியும் இருப்பதையும்; ஹோட்டலுக்குள் ஒரு சாதி பாகக்கூடாது என்பதையும் பார்த்து வெள்ளைக்காரன் சிரிக்கமாட்டானா?

[கும்பகோணத்தில், 18-8-1946-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 19-10-1946]

லைவரவர்களே! தோழர்களே!

இது திராவிட நாடு பிரிவினை நாள். இன்று 50,000 பேர் இங்குக் கூடியிருக்கிறீர்கள். டற்கரையாய் இருந்தால் இலட்சம் பேர் கூடியிருப்பீர்கள். இதுபோல ஆண்டுதோறும் ட்டம் கூடி நமது விருப்பத்தை அரசியலாருக்குத் தெரிவித்துவருகிறோம்.

திராவிடநாடு பிரிவினை வேண்டுமென்று நாம் விரும்புவது, இன்று நேற்றல்ல. ன்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து—அதாவது, பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் ருந்துவந்த காலமாகிய 1938-ம் ஆண்டிலிருந்து திராவிட நாடு பிரிந்து தனிச் சுதந்திர ஆட்சி நாடாக இருக்க வேண்டுமென்று கேட்டுவருகிறோம். இதற்கு இன்றைக்கு , 6 ஆண்டுகளுக்கு முன்பே, எனது நண்பரும், இன்றைய இந்திய கவர்னர் ஜெனரலு ான இராஜகோபாலாச்சாரியார் அவர்களது ஆசியும், சம்மதமும் கிடைத்திருக்கிறது. ன்னா சாயபு பாகிஸ்தானுக்காகக் கிளர்ச்சி செய்த காலத்தில் அதற்கு ஆதரவாக ஆச்சாரியார் அவர்கள் பிரச்சாரம் செய்துவந்தபோதே—திராவிட நாடு பிரிந்து கிடைக்க வண்டும் என்று கேட்டதும் நியாயம்தான், என்றும் அந்தந்த நாடு பிரிந்து தனிச் தந்திர நாடாய் இருக்கவேண்டுமென்று கேட்க ஒவ்வொரு நாட்டாருக்கும் உரிமை உண் டென்றும் பேசி இருப்பதோடு, என்னிடம் நேரிலும், 'நீ கேட்பது சரி' என்றும் தெரிவித் ருக்கிறார்.

அதற்கப்புறம் இந்த 5, 6 வருட காலத்தில் திராவிட நாடு பிரிவினைக்கு அதிகமான தவையும் ஆதரவும் ஏற்பட்டிருக்கிறது. அய்ரோப்பாவைப் பாருங்கள்! அய்ரோப்பாக் ண்டம் இந்தியாவைப் போன்ற விஸ்தீரணமும், ஜனத்தொகையும் கொண்டது. அது ன்று சுமார் 30 தனித் தனி சுதந்திர நாடுகளாக இருக்கின்றது. அவர்களின் முன்னேற்றம் ந்த வகையிலும் தடைப்பட்டுவிடவில்லை. அதுமட்டுமல்லாமல், அய்ரோப்பாவில் ற்படும் மகா யுத்தங்களின் பலனாக மேலும் நாடுகள் பிரிந்து தனித்தனி நாடுகளாக— வ்வொரு சிறு நாட்டாரும் விரும்பி புது இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டார்களே விர, 'பிரித்தால் கெட்டுப்போவோமே; பாதுகாப்பு இல்லாமல் போகுமே; வியாபாரம் கடுமே; தொழில் கெடுமே!' என்று ஒரு சிறு நாட்டார்கூடக் கவலைப்பட்டதோ, எண்ணி தோ கிடையாது. உலக அரசியல் ஞானமற்றவர்களும், சுரண்டல் கூட்டத்தாரும், ஒரு



நாட்டை ஒரு நாட்டார் அடக்கிச் சுரண்டி ஆதிக்கம் செலுத்தி வருகிறவர்களும்தாம் பிரிவினையை ஆட்சேபிப்பார்கள்; அல்லது இப்படிப்பட்டவர்களுடைய கூலிகள், கருங் காலிகள்தாம் ஆட்சேபிப்பார்கள்.

[சென்னை பீப்பிள்ஸ் பார்க்கில், 1-7-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1948]

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்!

மத்திய அரசாங்கப் பிடியில் இருந்து திராவிட நாடு தனி நாடாகப் பிரியாவிடில், சுதந்திரம் இல்லை,—சோறு இல்லை,—மான வாழ்வு இல்லை.

இது உறுதி! உறுதி! உறுதி!

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்.

['விடுதலை'-அறிக்கை—25-2-1949]

தோழர்களே!

இதே போல்தான் 1935 வரை அகில இந்தியா என்று பேசிவந்த நான், வடநாட்டார் ஆதிக்கத்தை உணர ஆரம்பித்ததும் 1938-ல் திராவிடநாடு பிரிவினைக் கொள்கையை முக்கியக் கொள்கையாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்தேன்.

1950 ஜனவரி 26-ம் தேதிய பலம் 1947 ஆகஸ்டு 15-ம் தேதியைப் போல் ஒரு விலாசம் மாற்றும் தினமேயாகும். அதே முதலாளிதான்; அதே பணப்பெட்டிதான்; அதே தராசுதான்; அதே படிக் கல் தான்; அதே சரக்குதான்; அதே பித்தலாட்டம்தான். ஆனால், விலாசம் அதாவது 'டிரான்ஸ்வர்' செய்யப்பட்டது மட்டும் மாற்றம் அடைகிறது. குடி அரசு ஆட்சி என்கிற புதுப் பெயரால் பழைய கொடுங்கோல் ஆட்சியே மேலும் அதிக பலத்துடனும், மேலும் அதிகப் பாதுகாப்புடனும் 26-ந் தேதி முதற்கொண்டு நடைபெறப் போகிறது.

இந்த உண்மையைத் தெளிவாக உணரும் நாம் இதை ஏன் புரட்டு என்று எடுத்துச் சொல்லக்கூடாது? உண்மையை எடுத்துச் சொல்ல நாம் ஏன் பயப்பட வேண்டும்? அக்கிரமத்தை எடுத்துச்சொல்ல நமக்கேன் அச்சம்?

[சேலம், மாயூரம் ஆகிய ஊர்களில் 14-1-1950 முதல் 18-1-1950 முடிய சொற்பொழிவு—'விடுதலை' 20-1-1950]

பெரியோர்களே! தோழர்களே!

எந்தெந்த நாடுகளில் தங்களுக்கு ஓர் அளவுக்குச் சுதந்திரம் வந்தது என்று கூறினார்களோ—அன்றைய தினத்திலிருந்தே தங்கள் எல்லையைக் காவல் காக்கும் பணி யில் ஈடுபட்டார்கள். 'எங்களுடைய நாட்டிலேயிருந்து வெளியே பணம் கொண்டு செல்லக் கூடாது; வேறு நாட்டானாகிய நீ வெளியே போ' என்று இலங்கை சர்க்கார் சொல்லி விட்டது. அங்கே கூலி வேலை செய்து வாழ்ந்துகொண்டிருந்த அன்னியர்களையும் வெளியே போகச் சொல்லிவிட்டார்கள் 'ஏன் இப்படி?' என்று கேட்டால், 'எங்களவர் களுக்கே இங்கு வேலை இல்லை; நீ வாழுவதற்காக உழைப்பின் பெயரைச் சொல்லிக் கொண்டு இங்கே இருக்கிறாய்' என்று கூறுகிறார்கள். அங்கிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் பணத்தை யாரும் எங்கேயும் கொண்டுபோக முடியாது. சாதாரணமாக ஒருவனுக்கு 10,000 ரூபாய் சொத்து இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த 10,000 ரூபாய் சொத்தை எதற்காக், ஏன் விற்கவேண்டும் என்று காரணம் காட்டி 7500 ரூபாய்க்குத்தான் விற்க முடியும். அப்படி விற்று வந்த பணத்தை இங்கு கொண்டுவர



படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமென்றால், அதற்கென்று இருக்கும் சிலரிடம் பேரம் பேசி, அதில் பாதியை 3750 ரூபாயை அவனுக்குக் கொடுப்பதாக ஒத்துக்கொள்ளவேண்டும். அதன் பிறகு பரிபாஷை மூலம் செய்தி அனுப்பி, தங்கள் ஆட்கள் உதவியால் தன்னுடைய பங்கு 3750 போக, மீதி ரூ. 3750 கொண்டுவந்து சேர்ப்பான். இவ்வளவு கஷ்டப்பட்டும் வழியில் சிக்கிவிட்டால் ரூ. 10,000-த்தில்—தனக்கு வரவிருந்த 3750 ரூபாயும் போய்விடும். எவ்வளவு எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது! அங்கே இருந்துகொண்டு சம்பாதிப்பதும் முடியாது; நாம் சம்பாதித்ததைக் கொண்டுவருவதென்றாலும் முடியாது. ஏன்? அந்த நாட்டில் பிறர் கொள்ளையடிக்கக் கூடாது; அடிக்க அவர்கள் விடுவதில்லை.

அதுபோலவே, பர்மாவில் பட்டப்பகலில் கொலை, கொள்ளை, குத்து வெட்டு நடக்கின்றன. சர்க்காரும் அதைப்பற்றிக் கவலை எடுக்காமல் விட்டுவிடுகிறது. கேட்டால், 'அன்னியருக்கு இங்கென்ன வேலை?' என்கிறார்கள். ஆகவே, அங்கு யாரும் போக முடியவில்லை. இன்று இங்கே உள்ள சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது—அந்த நாட்டுச் சர்க்காருடன். அதுபோலவே மலேயாவிலிருந்து பணம் வரவழைக்க முடியாது. 'கொச்சின் சைனா'விலிருந்து நம்மவனுக்கு மாதம் ரூ. 1000, 2000 வரும்படி வரக்கூடிய சொத்து இருக்கிறது. 200 ரூபாய்க்கு மேல் அங்கிருந்து கொண்டுவரக் கூடாது என்று சொல்லிவிட்டான்.

சுதந்திரம் பெற்ற மற்ற நாடுகளிலெல்லாம் அப்படியிருக்கும்போது, நமது நாட்டில் என்னவென்றால் மார்வாரி, குஜராத்தி, மூல்தானி, பனியாக் கூட்டத்தார்கள்—அவர்கள் நாட்டிலேயிருந்து வந்து, இங்கே கோடிக்கணக்காய்க் கொள்ளையடித்துக்கொண்டு போகிறார்கள். இன்று அவர்கள் இராஜ்யம்! தங்கள் நாட்டுக்காரர்களை இங்கே அனுப்புகிறார்கள். பலப்பல சலுகைகளோடு அவர்கள் இங்கே வந்து கொள்ளையடித்துக்கொண்டு, பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு கவலையற்ற வாழ்வு வாழ்கிறார்கள். சென்னை மவுண்ட் ரோட்டில் முன்பிருந்த வெள்ளைக்காரன் போல்—பனியாக்கள், மார்வாரிகள் முதலியோர் வாழ்கிறார்கள். ஒவ்வொருவனும் கோடிக்கணக்காய், இலட்சக்கணக்காய்ச் சம்பாதிக்கிறான். பல இனங்கள்—நாடுகள் கொண்ட இவ்வளவு பெரிய நாட்டை ஒன்றாக்கி, 'எவன் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் சென்று, எப்படி வேண்டுமானாலும் சம்பாதித்து அதை எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்' என்ற சட்டம் செய்துவிட்டு இங்கே வந்து கொள்ளையடிக்கிறார்கள். இந்தத் தன்மையை மாற்றாவிட்டால் நம்முடைய அத்தனைச் செல்வங்களும் அவர்களுக்கே போய்விடும். நாம் என்றைக்கும் அவர்களுக்கு—வடநாட்டாருக்கு மீளாத அடிமைகளாய், வேலைக்காரர்களாய்த்தான் இருக்க நேரிடும். இரும்பு அவனுக்கு, சிமெண்ட் அவனுக்கு, கப்பல் கட்டும் தொழில் அவனுக்கு; இப்படி 'எல்லாம் அவனுக்கு!' என்றே ஆகிவிட்டது. 1000 ரூபாய் 2000 ரூபாய்க்குத்தான் நம்மவன் லேவாதேவி செய்யமுடியும்.

எவ்வளவு மூலதனத்தையும் நம்மாலேயே உண்டாக்க முடியும். ஆகவே, இந்த வடநாட்டானுடைய மூலதனம் பொருள் இல்லாமல் நாம் வியாபாரம் செய்யமுடியாது என்பது ஒழுங்கான நியாயம் அல்ல. இந்த நாட்டில் உள்ள எல்லாத் தொழில்களையும் வடநாட்டார் கைப்பற்றிக் கொண்டார்கள். 10,000, 20,000 ரூபாய் லேவாதேவியெல்லாம் அவனாலேயே செய்யமுடியும். நம்மவர்களுக்குப் பாதுகாப்பில்லை. கொடுத்த கடனை வசூலிக்க கோர்ட்டுச் செலவு அதிகமாகும். ஆனால், ஒரு காசு செலவில்லாமல் வியாபாரம் நடத்த அவனுக்கு அனுமதி, பாதுகாப்பு!

அவை மட்டுமல்ல; இருக்க இருக்க அவர்கள் வெள்ளம்போல் வந்து உப்புகிறார்கள். அகதிகள் என்ற பேரால் நம்முடைய நாட்டிற்குச் சுமார் 10 இலட்சம் பேர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். வெறுங்கையுடன், குடும்பத்தோடு வந்தவர்களுக்கு இந்த மாகாண சர்க்கார் சலுகை காட்டி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதருவதில் தீவிரமாக



ஈடுபட்டு இருக்கிறார்கள். மேலே இருக்கிற டெல்லி—'இந்த அகதிகளுக்கு வீடு, வாசல், வியாபார வசதி செய்துகொடு' என்று உத்தரவு இட்டதின் காரணமாக, சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி, மதுரை, பெங்களூர், கள்ளிக்கோட்டை, கொச்சி ஆகிய இடங்களில் எல்லா வியாபாரங்களையும் அவர்களே கைப்பற்றிவிட்டார்கள். நம்மவர்கள் அவர்களுக்கு மூட்டை தூக்குகிறார்கள். பெரிய பெரிய கடைகளிலிருந்து திண்ணை, ரோடு, வண்டி முதலிய கடை வியாபாரம் வரையில் அவர்களே கைப்பற்றிக்கொண்டார்கள்.

வசதிகள் பல உள்ள இந்தப் பெரும் நாட்டில் அவன் இப்படிப் புகுந்து கொள்ளையடிப்பதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதா? இதைப்பற்றிப் பார்ப்பனர்களுக்குக் கவலையே இல்லை; காட்டிக்கொடுத்து பங்கு வாங்குகிறார்கள். இந்தக் கொள்ளையை—கொடுமையை எடுத்துக்காட்டி, 'இத்தகைய தன்மைகள் ஒழியவேண்டும்; எங்கள் நாட்டை நாங்களே ஆள எங்களிடத்தில் விட்டுவிடு,' என்று கேட்பது தேசத் துரோகமா? இது தவறா?

'வெள்ளைக்காரன், ஜப்பான்காரன் வரவேண்டும்' என்று கூறினால், அது தேசத் துரோகக் குற்றமாக இருக்கலாம். ஆனால், இருக்கிற அன்னியனையும், 'வெளியே போ!' என்று கூறுவது எப்படிக் குற்றமாகும்? அது 'மாபெரும் தேசாபிமானம்' ஆகும்.

வெள்ளைக்காரன் நம்மவர்களிடத்திலேயிருந்துதானே நாட்டை வாங்கினான்? அப்படி வாங்கிய நாட்டை—நம் நாட்டானிடம் கொடுத்துவிட்டுப் போனான் என்றால், எல்லாவற்றையும் வடநாட்டானே எடுத்துக்கொண்டால் என்ன நியாயம்?

['விடுதலை' 8-4-1950]

பெரியோர்களே! தோழர்களே!

நம்முடைய நாட்டில் வளம் இல்லையா? ஆளும் வாய்ப்புகள் இல்லையா? நம்முடைய நாட்டில் நல்ல வியாபார நுணுக்கங்கள் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் வசதியும் வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. வடநாட்டாருக்கே நல்ல வாய்ப்புகள் கொடுத்து, அவர்களையே விளம்பரப்படுத்தி, சகலத்தையும் அவர்களே கொள்ளையடித்துக்கொண்டு போகும் நிலையில் வடநாட்டு ஆட்சி உண்டாக்கிவிட்டது.

நம்முடைய நாட்டில் வீரர்கள் இல்லையா? உலகமே வியக்கத்தகுந்த முறையில் சென்ற யுத்தத்தில் வீரமாய்ப் போர்புரிந்தவர்கள் சென்னைச் சிப்பாய்கள்தாம்! இன்றுகூட காஷ்மீர் யுத்தத்தில் தீவிரமாய்ப் போரிடும் வீரர்கள் நம் நாட்டவர்கள்தாம். அவர்களைக் கொண்டு நம் நாட்டில் நல்ல பலமான இராணுவத்தை வைத்துக்கொள்ளலாம்.

நம்மிடத்தில் அறிவாளிகள் இல்லையா? நம்மைவிட அறிவாளிகள் வடநாட்டில் ஏது? அய்ந்து பண்டித நேருக்கள் சேர்ந்தால்தானே நம்முடைய ஒரு ஆச்சாரியாரின் அறிவுக்குச் சமமாக முடியும்? அதுபோலவே அய்ந்து பட்டேல்கள் சேர்ந்தால்தான் நம்முடைய சண்முகஞ் செட்டியார், இராமசாமி முதலியார் ஆகியோர்களின் அறிவுக்குச் சமமாக முடியும்?

நான் அஸ்ஸாம், அய்க்கிய மாகாணம், பஞ்சாப், பீகார் மற்றும் எல்லா இராஜ்யங்களுக்கும் போயிருக்கிறேன். வடநாட்டின் பல பகுதிகளிலும் சுற்றியிருக்கிறேன். அங்கு இருக்கிற கோவில்களில் கலைத் தன்மையே கிடையாது. அவர்களுடைய சாமிகள்கூட வெந்த பிணங்கள் போலத்தான் காட்சியளிக்கும். சமீபத்தில்தான் ஏதோ காசி விஸ்வநாதர் கோயிலைக் கொஞ்சம் சீர்திருத்தியிருக்கிறார்கள். ஏன் இவைகளையெல்லாம் கூறினேன் என்றால், அவர்கள் நாகரிகம் அற்றவர்கள்—நம்மைவிட எல்லாவிதங்களிலும் மட்டமானவர்கள், குறைந்தவர்கள், மூடநம்பிக்கைக்காரர்கள் என்பதற்காகத்தான். அப்படியிருந்தும் இன்று அவர்கள் ஆதிக்கம்தான் தலைவிரித்தாடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



'சுதந்திர ஜனநாயகக் குடிஅரசு வந்துவிட்டது' என்று கூறுகிறார்கள்! யாரைக் கேட்டு அங்கு போய் உட்கார்ந்து. இந்த நாட்டை ஜனநாயகச் சுதந்திரக் குடிஅரசு ஆகச் செய்தார்கள். ஆகஸ்ட் 15-ந் தேதி முதல், 'இந்த நாட்டை நீ வைத்துக்கொள்!' என்று, வெள்ளையன் தன்னுடைய சவுகரியத்திற்காகக் காங்கிரஸ்காரர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். அவனுடைய பிரதிநிதிகளாகத்தானே அதற்கு முன் இவர்கள் ஆண்டார்கள்?

அந்தப்படியிருக்க, அவனிடத்தில் இருந்து (Made Over) 'மேடோவர்' செய்து ஆட்சி வாங்கிக்கொண்டு இவர்கள் ஆளுவதென்றால், எப்படி இவர்கள் மக்கள் பிரதிநிதிகளாய் இருக்கமுடியும்? வெள்ளைக்காரன் வெளியே போனபிறகு தேர்தல் வைத்து, அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று இவர்கள் ஆளுவார்களானால், 'மக்கள் ஆட்சி' என்று வேண்டுமானால் சொல்லலாம். அப்படியில்லாமல், அவன் இவர்களிடத்தில் கொடுத்துவிட்டுப் போனான் என்பதால்—இவர்களே ஆளுவது என்பது என்ன நியாயம்? இந்த ஒரு கட்சிக்காரர்களே கூடிக்கொண்டு, 'சுதந்திரம் வந்துவிட்டது, பார்' என்று கத்தினால் ஒப்புக்கொள்ள முடியுமா? இது வெள்ளையனுடைய பிரதிநிதிகள் ஆட்சிதானே?

200 ஆண்டுகளாக வெள்ளைக்காரனுக்கு வரியைக் கொட்டிக் கொடுத்தோம். நம்மவர்கள் படிக்கவில்லை. பார்ப்பனர்கள் 100-க்கு 100 பேர்கள் படித்தார்கள். ஏனென்றால், வெள்ளைக்காரன் கல்வி இலாக்காவைப் பார்ப்பானிடம் ஒப்படைத்தான். அவர்கள் தங்கள் படிப்பிற்கு ஏற்ற முறையில் எல்லா சவுகரியங்களையும் செய்துகொண்டார்கள். நம்மவர்களில் 10 பேர்தானே படித்தோம்? பெரும்பாலான மக்களை இப்படித் தற்குறிகளாய் வைத்துக்கொண்டு, அவர்களுக்கு அரசியல் என்றால் என்ன என்றே தெரியாத நிலையில் வைத்துக்கொண்டு—ஏதோ 4 பார்ப்பனர்கள் கூடிச் சுதந்திரம் வந்துவிட்டது என்று கூப்பாடு போட்டு இன்று அவர்களே ஆள உட்கார்ந்துகொண்டு காரியங்களை நடத்துவதென்றால் என்ன அர்த்தம்?

ஆகவேதான், 'இது குடிஅரசு ஆட்சியல்ல; கொடுமைக்கார, கொள்ளைக்கார ஆட்சி' என்று கூறுகிறோம். இந்தச் சுரண்டல் ஆட்சியிலிருந்து விலகவேண்டும் என்று சொல்லுகிறோம்.

இன்னும், நம் நாட்டில் இவ்வளவு பணக்காரன், சாதி இருக்கக்கூடாது. இந்த இரண்டு வருடமாகத் தயாரித்த அரசியல் திட்டத்தில் இவைகளை ஒழிக்க ஏதாவது ஒரு வரி எழுதினார்களா? இல்லை. ஒருவனுக்குச் சம்பளம் ரூ. 10,000, 8000, 5000; மற்றவனுக்கு ரூ. 3). இந்த வித்தியாசம் ஏன் இன்னமும் இருக்க வேண்டும்? வெள்ளைக்காரன்தான் அவனது 'டாம்பீகச்' செலவுகளுக்காக வைத்துக்கொண்டான் என்றால் பார்ப்பனர்களும் அப்படி வைத்துக்கொண்டு இருக்கலாமா? இந்தப் பேதங்களையெல்லாம் நம்மால் ஒழிக்க முடியும். ஒருவனிடத்தில் ஏராளமாய்ச் சொத்துக்கள் முடங்கியும், மற்றவனுக்குச் சோற்றுக்கு இல்லாத நிலைமையும் இருப்பதனால்தானே நாட்டில் பஞ்சம், பித்தலாட்டம், நாணயமின்மை வளருகின்றன! இது மாறி 'எல்லோருக்கும் ஒரே நிலை' என்று ஆக்கி விட்டால் இந்தப் பித்தலாட்டங்கள் நடைபெற வாய்ப்பு இருக்குமா? கல்வித் துறையிலும் அப்படியே சீர்திருத்தம் செய்ய நம்மால் முடியும். உதாரணமாக '6 மாதத்திற்குள் கையெழுத்துப் போடத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கெல்லாம் 3 மாதம் தண்டனை விதிக்கப்படும்' என்று சட்டம் போட்டால், அவரவர்கள் விழுந்து விழுந்து படிக்க மாட்டார்களா?

இந்தப்படி அனேக சங்கதிகளை நம்மால் செய்ய முடியும். இந்தப்படி, இங்கு எல்லோரும் சமம், எல்லோருக்கும் ஒரே நிலை என்று ஏற்பட்டுவிடுமோ என்றுதான் பார்ப்பனர்களும் வடவர்களும் சேர்ந்து கூட்டுச்சதி செய்கிறார்கள்.

[குன்னத்தில், 2-4-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1950]



பெரியோர்களே! தோழர்களே!

நாம் திராவிட மக்கள். ஏறக்குறைய 10 கோடி மக்கள் இருக்கிறோம். நீங்கள் கணக்குப் பார்த்தால் திராவிடர்களுடைய எண்ணிக்கை பத்துக் கோடி ஆகும்.

இவ்வளவு ஜனத்தொகை கொண்ட ஒரு நாடு, அய்ரோப்பாவில் ரஷ்யாவைத் தவிர வேறு ஒரு நாடுகூடக் கிடையாது.

அய்ரோப்பாவில் இரண்டு கோடி, ஒரு கோடி, அறுபது இலட்சம் உள்ள நாடுகள் எல்லாம் கூடப் 'பரிபூரண சுயேச்சை'யோடு இருக்கின்றன. அன்னியனுடைய ஆதிக்கத்திற்கு அங்கு இடமே இல்லை. அந்த நாட்டிற்கு 100 மைலுக்கு அப்பால் இருக்கின்றவன் அந்த நாட்டுக்கு வரவேண்டுமானால் 'பாஸ்போர்ட்' வாங்கிக்கொண்டுதான் வரவேண்டும். ஒரு நாட்டு உப்பு இன்னொரு நாட்டுக்கு வராது. ஒரு நாட்டுத் தீப்பெட்டி, உருளைக்கிழங்கு பக்கத்திலே இருக்கிற இன்னொரு நாட்டுக்கு வரக்கூடாது; வரமுடியாது. நம் மாகாணத்தில் உள்ள ஒரு ஜில்லா அளவு உள்ள நாடு, அங்கு பூரண சுயேச்சையோடு இருக்கிறது.

நாம்—திராவிட நாட்டுக்காரர்கள் ஆகிய நாம் 1938-லேயே ஆரம்பித்தோம், 'திராவிட நாடு திராவிடருக்கே', 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று. ஒரு அங்குலம் கூட முன்னேறவில்லை.

நம் நாட்டில், வடநாட்டானுக்குக் கூலிகள்—அடிமைகள்தாம் அதிகம் ஆகி வருகிறார்கள். நாம் துவக்கிய இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு துவக்கினார்கள் பாகிஸ்தான் கிளர்ச்சியை. அவர்கள் வீட்டுவாசலில் கொண்டுபோய்க் கொடுத்தார்கள் பாகிஸ்தானை. 'உயிர் போனாலும் கொடுக்கமாட்டேன்; என் பிணத்தின்மேல் நடந்துதான் பாகிஸ்தானைக் காணலாம்' என்றார் காந்தியார். இராஜகோபாலாச்சாரியார் சொன்னார், 'தாயை வெட்டினாலும் கூட, இந்த பாகிஸ்தானைப் பிரிக்கமாட்டேன்' என்று.

இவர்கள் எல்லோரும் கூடி வெள்ளித்தட்டில் கொண்டுபோய் அவர்கள் வீட்டுவாசலில் வைத்துப் பாகிஸ்தானைக் கொடுத்துவிட்டு வந்தார்கள். பாகிஸ்தானை இல்லை என்று சொல்லமுடியுமா? முடியாது.

காரணம்? இதற்குக் காரணம் முஸ்லிம்கள் ஒற்றுமையாக இருந்ததுதான். அவர்கள் ஒற்றுமையாக இருந்ததற்குக் காரணம் அவர்களுக்கு ஒரே மதம். அந்த மதத்தினுடைய முக்கியமான தத்துவம் ஒற்றுமை; கட்டுப்பாடு; ஒரே ஆண்டவன். ஆனால், நமக்கு அப்படி இல்லையே! ஆயிரக்கணக்கான மதம், கோடிக்கணக்கான கடவுள்கள், பல ஆயிரக் கணக்கான சாதிகள்! நாம் எப்படி உருப்படமுடியும்?

அனேகமாக, நம்முடைய பணக்காரர்கள் இன்றைய தினம் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள். காங்கிரசுத் தோழர்கள் பார்ப்பனர்களுடைய நிபந்தனை இல்லாத கூலிகளாக இருக்கிறார்கள்.

இந்த இரண்டு தரத்தாரும் நமக்கு எதிர்ப்பு என்ற முறையிலே என்ன வேலை செய்கிறார்கள் என்றால், கடவுள் பிரச்சாரம் செய்வது, மதப் பிரச்சாரம் செய்வது—இந்த மாதிரி வேலைகளில்தான் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

நம்மவர் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், பார்ப்பனர் எவ்வளவு சிறிய பதவியில் இருந்தாலும் அவர்களைக் கண்டதும் நடுங்குகிறார்கள்! இந்த நிலை மாற வேண்டும். அதற்கு ஒற்றுமையாகக் கிளர்ச்சி செய்ய வேண்டும். பெருங்கிளர்ச்சிகள் ஆரம்பிக்க வேண்டும்!

அவற்றைச் சகிக்க முடியாமல் வடநாட்டாரும் பார்ப்பனரும் ஓடவேண்டும். ஏன் நாம் அவர்களைப் பகிஷ்காரம் பண்ணக்கூடாது? வடநாட்டான் கடையில் சரக்கு வாங்கக்

படிப்பகம்

www.padippakam.com



கூடாது என்றால் என்ன தப்பு? பார்ப்பானுக்குச் சிரைக்கக் கூடாது; பால் அரிசி கொடுக்கக் கூடாது என்றால் என்ன தப்பு?

பார்ப்பான் நம்மைத் தொட்டால் தீட்டு என்று எட்டி நிற்கிறானே, அவனைத்தானே பகிஷ்கரிக்கச் சொல்லுகிறோம்? அவனைப் பகிஷ்காரம் செய்தால் என்ன தப்பு?

இந்த அடிமைத்தன்மை நீங்கவேண்டும்; இந்தச் சுரண்டல் நீங்கவேண்டும்; அன்னிய ஆதிக்கம் ஒழியவேண்டும் என்ற உணர்ச்சியை நம் மக்கள் பெறவேண்டும்.

[சென்னை கிருஷ்ணாம்பேட்டையில், 10-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-2-1951]

தோழர்களே!

முன்னே பேசிய தோழர்கள் சொன்னார்கள், அரசியல் சுரண்டல் முக்கியமானது; அதை ஒழிக்க வேண்டும் என்று. நாமும் அரசியல் சுரண்டலை முக்கியமாகக் கொண்டு இருக்கிறோம்.

இந்த நாடு பூரண சுதந்திரம் அடைய வேண்டும். இந்த நாடு இந்த நாட்டு மக்களால் ஆளப்பட வேண்டும். இதுதான் முதல் காரியம். இப்பொழுது நாம் பொருளாதாரச் சுரண்டலை முக்கியமாகக் கூறுகிறோம். ஏனென்றால், ஆட்சி என்று சொல்லுவது, ஒரு நாட்டானுடைய அரசாங்கம் என்று சொல்லுவது முன்னே எப்படி இருந்தது என்றால் —ரொம்ப நாளைக்கு முன்பு சுமார் 100, 50 ஆண்டுகளுக்கு முன்னாலே, இன்னமும் சொல்லுவேன்—வெள்ளைக்காரனுடைய ஆட்சிக்கு முன்னாலே ஆட்சி எப்படி இருந்தது என்றால், 'இவ்வளவு விஸ்தீரணம் நம் நாட்டிற்குள் இருக்கிறது. இவ்வளவு விஸ்தீரணத்திற்கு நான் அரசன்; சக்கரவர்த்தி' என்று இருப்பார். மற்றபடி அரசர்கள் எல்லோரும் இருப்பார்கள். அங்கங்கேயுள்ள அரசர்கள் அங்குள்ள மக்களுக்கு ஆவன செய்து கொடுப்பார்கள். அவ்வளவுதான் இருக்கும் முன்னே. நாளாக நாளாக—அந்த விஸ்தீரணம், அதிலே இருக்கிற அதிகாரம் முக்கியம் அல்ல. பின்னே என்ன முக்கியம்? வளப்பத்தை செல்வத்தை அன்னிய நாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறான்; கொள்ளை கொண்டு போகிறான் என்பதுதான் இதன் தத்துவம். இந்தக் கருத்திலேதான் நாம் இன்றைய தினம் நம்முடைய நாடு அன்னிய ஆட்சியில் இருக்கிறது என்று சொல்லுகிறோம்.

ஏன் நம் நாட்டுச் செல்வம் அன்னியனுக்குப் பயன்படுகிறது? நம்முடைய நாடு இன்றைய தினம் விடுதலை அடையவேண்டுமானால், நம் நாட்டுப் பொருளாதாரம் நம் நாட்டைவிட்டுப் போகாமல் இருக்கவேண்டும் என்பது முக்கியமான சங்கதி ஆகும்.

பெயரளவில் சொல்லுகிறார்கள்—நம் நாடு ஏதோ சுதந்திரம் பெற்றுவிட்டது என்றும் அது குடி அரசு என்றும், ஜனநாயக ஆட்சி என்றும் எல்லாம், இப்படியாகப் பித்தலாட்டமாகச் சொல்கிறார்கள். இப்படி ஆரியர்கள் சொல்லுவதிலே அதிசயம் இல்லை; நம் மக்கள் நம்புவதிலும் அதிசயம் இல்லை; ஏன்?

நமக்குச் சில துறைகளிலே அறிவு இருந்தாலும், சில துறைகளிலே அறிவு கிடையாது. அந்தத் தலைப்பு வார்த்தைக்குத்தான் மரியாதை இருக்குமே தவிர கருத்துக்கு மரியாதை இருக்காது.

[காஞ்சிபுரத்தில், 7-4-1951-ல் தலைமையுரை—'விடுதலை' 19-4-1951]

பெரியோர்களே! தோழர்களே!

காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய தேர்தல் வாக்குறுதியில் என்ன சொன்னார்கள் என்றால், '21 வயதுக்கு மேற்பட்ட மக்களுக்கு ஓட்டுரிமை கொடுத்து, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்புகின்ற பிரதிநிதிகளைக் கொண்டு இந்நாட்டுக்கு அரசியல் நிர்ணய சட்டம் வகுப்போம்; அத்துடன் ஒவ்வொரு மாகாண மக்களுக்கும் சுயாட்சி உரிமை அளிப்போம்' என்று சொன்னார்கள்.



ஆனால், இன்று நடப்பது என்ன? வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில்—அதுவும் அவனுடைய அதிகாரத்தில் படித்தவனுக்கும், பணக்காரனுக்கும் ஓட்டு உரிமை அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட தேர்தலில் பிரதிநிதியாக வந்தவர்களைக்கொண்டு—அதுமட்டும் அல்லாமல், எந்தத் தொகுதியிலும் நின்று வெற்றி பெறாமல் வெள்ளைக்காரனாகக் கொடுத்த (Nomination) நியமனம் மூலமாகப் பதவி பெற்றவர்களைக் கொண்டு அரசியல் சட்டம் செய்து இருக்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள்.

இரண்டாவது சங்தியான மாகாண சுய ஆட்சி என்பது இன்று எப்படி இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். வெள்ளைக்காரன் காலத்திலே மாகாணங்களுக்கு எவ்வளவு அதிகாரம் இருந்ததோ அதுகூட இன்றைய தினம் இல்லாமல் மாகாணத்து ஆட்சி என்பது வெறும் பொம்மை சர்க்கார் இருக்கும் ஆட்சி என்பதாக ஆகிவிட்டது. எதற்கெடுத்தாலும் டில்லி நோக்கித் தெண்டனிட வேண்டிய மாதிரியில் தான் மாகாண ஆட்சியென்பது இருக்கிறது. இப்படியாக காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய தேர்தல் வாக்குறுதியிலே சொன்னதைச் சிறு அளவுக்குக்கூட நிறைவேற்றவில்லை.

தேர்தல் வாக்குறுதியாக மேற்சொன்ன சங்கதிகளில் சொல்லும்போது உள்ளபடியே அவர்களுக்கு நல்லெண்ணம் இருந்திருக்கலாம். நாம் பதவிக்குப் போனால் செய்யலாம் என்றே கருதி இருக்கலாம். ஆனால், இன்றைய தினம் அவர்களால் அவர்கள் சொன்னது போல் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த இரண்டு காரியங்களையும் செய்தார்கள் என்றால் வருணாசிரமம் அடியோடு ஒழிந்துபோய்விடும். தெளிவாகவே சொல்லுகிறேன், இப்பொழுது நம்முடைய மாகாணத்திற்குச் சுயாட்சி கொடுக்கப்பட்டது என்றால் இங்கு பார்ப்பனர் இருக்கமுடியுமா? அவனுடைய பூணூலும், மேல்சாதித் தன்மையும் இருக்குமா? ஒரேநாளில் மறைந்துவிடாதா? எனவேதான், வருணாசிரமம் ஒழிந்துவிடும் என்கிற பயத்தினால்தான் இன்றையதினம் அந்தக் காரியங்களைச் செய்யவில்லை. இன்னமும் அவர்கள் இன்றைய முறைப்படியே, இன்று நடத்துகிற மாதிரியில் இல்லாமல் வேறு முறையில் சென்றால் நிச்சயமாக அவர்கள் அழிந்துவிடுவார்கள்.

இந்த நாடு நமது கையில் இருக்கவேண்டும். இந்த நிலைமை எப்பொழுது ஏற்பட்டது என்றால் தோழர்களே, இந்தப் பிரிவினை கேட்பது இப்பொழுது ஏற்பட்டது அல்ல. நாடு, வெள்ளைக்காரனிடமிருந்து காங்கிரஸ்காரர்களிடம் வருவதற்கு முன்பே நம்நாடு பிரியவேண்டும் என்றும், அதாவது 1938 ஆம் ஆண்டிலேயே இராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரியாக இருந்து சென்னையை ஆட்சிசெய்த காலத்தில், இவர்களுடைய ஒரு வருட ஆட்சியைப் பார்த்த பிறகுதான் நாம் பிரிந்தாக வேண்டுமென்று—1938லேயே சொல்லி இருக்கிறேன்.

[வாடிப்பட்டியில், 20-5-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-5-1951]

எங்களின் விடுதலைக் கொள்கை, நம் நாடு விடுதலை அடையவேண்டும் என்பது. நம் நாட்டை, நம் இராஜ்யத்தை (இந்த சென்னை இராஜ்யத்தை), 9 கோடி மக்கள் இருக்கின்ற இந்த இராஜ்யத்தை இதற்கு முன் வெள்ளைக்காரர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நம் இராஜ்யத்தைத்தான், நாம் நம் கைக்கு வரவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால், அவர்கள் இது சுதந்திர நாடுதானே, ஆகையால் இதில் ஒரு வித்தியாசமும், வேற்றுமையும் இல்லையே என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், இன்றைய நிலையில் நம் நாட்டைப் பார்த்தால், 'குச்சிக்காரித்தனம் செய்கிறவளுக்கு எப்படி தேவ–அடியாள்' என்று பெயர் வைத்து இருக்கிறார்களோ, அதே மாதிரிதான் இருக்கிறது–அடிமையாக இருக்கிற இந்த நாட்டைப் பார்த்துச் சுதந்திரநாடு

படிப்பகம்

www.padippakam.com



என்று கூறுவது. இதையே நம்முடைய பொதுமக்களும் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். நமக்கு இன்று நம் நாட்டு ஆட்சியில் எதில் சுதந்திரம் இருக்கிறது?

இன்று நமது நாடு வடநாட்டானின் ஆதிக்கத்திலே, ஒரு ஸ்தல சுயாட்சி நிர்வாகத்தின் கீழ் இருக்கிற ஒரு பஞ்சாயத்து போர்டு எப்படி இருக்குமோ—அதுபோல் இருக்கின்றது. நம் மக்களுக்கு அரசாங்கத்திலே ஒரு உரிமையும் கிடையாது.

இன்று நமக்கு மந்திரி பதவிகள் கிடைக்கும் என்றால் அவை எதற்கு உதவும்? வடநாட்டானுக்கு நிபந்தனை இல்லாத கூலியாக இருக்கவும், சொத்து சுயநலத்திலே பூரண சுதந்திரமாக இருக்கவும்தான் உதவுமே தவிர, நம் நாட்டு மக்களின் நலத்திற்கு—முன்னேற்றத்திற்கு—பொருளாதார வளத்திற்கு என்ன சுதந்திரம் இருக்கிறது?

ஆகையினால், இந்த மாதிரியாக நம் நாட்டுக்கு இருக்கிற அடிமைத்தனம் நீங்கி, நியாயமான வரியை நாம் போடவும்—அதை நாமே நாட்டுக்குச் செலவழிக்கவும், நம் இஷ்டப்படி தொழில் செய்யவும், வியாபாரம் செய்யவும்—நம்நாட்டுச் செல்வம் வெளிநாட்டுக்குப் போகாமல் இருக்கவுமான சுதந்திரம் நமக்கு வேண்டும் என்கிறோம். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்போல் உரிமை வேண்டும் என்றே கேட்கிறோம்.

இந்த நாட்டை வடநாட்டான் சுரண்டுகிறான் என்று கூறினால் அது தவறா? இந்த நாட்டிலே யோக்கியமில்லாவர்கள் அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கின்றார்கள் என்று கூறினால் அது தவறா? இந் நாட்டிலே இந்த நாட்டுப் பாதுகாப்புக்குப் பாடுபடும் போலீஸ்காரர்கள் மாதம் 30 ரூபாய் சம்பளத்தில் கஷ்டப்பட்டுக் கஞ்சிக்கு வழியில்லாமல் தவிக்கின்றபோது மற்ற நாட்டு 'அகதி' மக்கள் இங்கு வந்து கொள்ளை அடிக்கிறார்களே என்று கூறினால் அது தவறா?

[சேலம் விக்டோரியா மைதானத்தில், 22-7-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-7-1951]

இந்த நாட்டு வரிப்பணம் 100 கோடிக்கணக்காய் வடநாட்டுக்குச் சென்றால் அவர்கள் வயிறு வீங்குகிறதே, நம்முடைய வயிறு வாடுகிறதே என்று கூறினால், அது தவறா? இவைகளைச் சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது? அல்லது, இவைகளுக்கு ஆக எங்களைத் தவிர வேறு யாராவது பாடுபடுகிறார்கள்; கவலைப் படுகிறார்கள் என்றாவது சொல்ல முடியுமா? சொன்னால் நாங்கள் அதை ஒப்புக்கொள்கிறோம்.

ஜின்னா செய்த மாதிரி இலட்சக்கணக்சான பேர்களின் தலை உருண்டால்தான் நமக்கு விடுதலை கிடைக்கும் என்ற நிலை வருகிறது. ஜின்னா, இதற்கு ஆக எத்தனை முஸ்லிம்களைப் பலி கொடுத்தார்? இதன் பிறகுதான் அவர்கள் நாட்டை அவருக்கு விட்டுக்கொடுத்தார்கள். அதேபோல், நாமும் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டால்தான் முடியும்போல் இருக்கிறது. எப்படியாவது நம் நாடு நம் கையில் வந்தால் ஒழிய நமக்கு நல்ல வாழ்க்கை இல்லை. இல்லையானால், என்றும் நாம் அடிமையாகத்தான் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

நம் திராவிட நாடாகிய சென்னை இராஜ்யமானது சுதந்திரத் தனி அரசு நாடாகப் பிரிந்து ஆகவேண்டும் என்பது திராவிட கழகத்தின் மூச்சு. இந்த மூச்சு நமக்கு இன்றல்ல, நேற்றல்ல, பார்ப்பன துவேஷத்தால் அல்ல, காங்கிரசுக்கு விரோதமாக அல்ல, சுதந்திரத்துக்கு எதிர்ப்பாக அல்ல. ஏனெனில், இன்றைய இந்த நாட்டின் சுதந்திர சுயேச்சை ஆட்சியானது திராவிட நாட்டுக்கு, திராவிட மக்களுக்கு வெள்ளை ஆரியன் ஆட்சியைவிடக் கொடுமையான, புராண கற்பனைகளில் ஆரிய ஆட்சிக் கொடுமைகளைவிட மோசமான மனு ஆட்சியாகவே இருந்துவருகிறது. வடிகட்டின மஞ்சள் ஆரியன் சர்வாதிகார ஆட்சியாகவே இருந்துவருகிறது. அரசியல், பொருளியல், கல்வி இயல், கலை இயல், மொழி இயல், கலாச்சார இயல், பண்பு இயல், சமய இயல், சமுதாய இயல் முதலிய எல்லா இயல்



களும் மஞ்சள் ஆரிய ஆதிக்க இயலாகவும், ஆரியர்களின் சுகபோக இன்ப வாழ்விற்காகவே அமைக்கப்பட்டதாகவும் இருந்துவருகிறது.

['விடுதலை'-தலையங்கம்—27-7-1951, 1-8-1951, 12-11-1952]

## 2. மொழிவாரிப் பிரிவினை ஏன்?

பெரியோர்களே! தோழர்களே!

முதலாவதாக, நாட்டுப் பிரிவினை என்பதைப்பற்றிப் பேசுகிறேன். பிரிவினை என்பது எதற்காக? ஒரு ஆட்சியின் கீழ் இருப்பவர்கள் பிரிந்து கொள்ள வேண்டும் என்பது எதற்காக? ஆட்சி நலத்திற்காகவா? ஒரே ஆட்சியில் எவ்வளவு பிரிந்தாலும் அந்த ஆட்சியின், அந்த ஆட்சிக் கொள்கையின் பயனைத்தானே அனுபவிப்போம்! இந்தப் பிரிவினையால் என்ன மாறுதல் நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தமுடியும்?

ஒரு குடும்பம் பிரிந்துகொள்ள வேண்டுமானால் பிரிந்துகொள்ள ஆசைப்படுபவர்கள் எதற்காக ஆசைப்படுகிறார்கள்? பிரிந்து போனால் ஏதோ நம் இஷ்டம் போல நலம் அனுபவிக்கலாம் என்பதுதானே கருத்து. மற்றபடி, அப்படிக்கு இல்லாமல் இவன் பயிர் செய்தால் உழவேண்டி இருக்கிறது; தண்ணீர் பாய்ச்சவேண்டி இருக்கிறது. பிரிந்து போனால் உழாமல், தண்ணீர் பாய்ச்சாமல் வெள்ளாமை எடுக்கலாம் என்பதற்கு ஆகவா? வெறும் சுயநலம் தவிர இந்தப் பிரிவினைக்கு அர்த்தமே இல்லை. பிரிந்து வேறு எந்த ஆட்சியில், எந்த ஆட்சிக் கொள்கையின் கீழ் இருக்கப் போகிறார்கள் இவர்கள்? மத்திய ஆட்சியில்—மத்திய ஆட்சி அரசியல் திட்டத்தின் கீழ்தான் வாழவேண்டும்.

பிரிந்தவர்களுக்குப் 'பார்லிமெண்ட்' டில்லியில்தான்; முதல்மந்திரி பண்டித நேருதான்; குடியரசுத் தலைவர் இராஜேந்திர பாபுதான்—இது இன்று மாத்திரமல்ல—இந்தப் பிரிவினை உணர்ச்சி 1921-லேயே ஏற்பட்டதாகும்.

ஏன்? காங்கிரஸ் கிளர்ச்சியால் சில அதிகாரம் பதவி ஆதிக்கம் ஏற்படும் என்கின்ற எண்ணம் அதில் அக் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருக்கும் தெரியும். அப்போது கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் படித்தவர்களில் பலர். அதிகாரம், பதவி வந்தால் சிலருக்குத்தான் வாய்ப்பு ஏற்படும். அதற்காகச் சிலர் எதிர்பார்க்கிறார்கள்; அதற்கு என்ன செய்வது என்ற எண்ணம் பலருக்குத் தோன்றியது. அதற்காகப் பிரிவினை கோரினார்கள். அப்படிப் பிரிந்தால் பல கவர்னர்கள், பல மந்திரிகள், பல முதல் மந்திரிகள் ஏற்படுவார்கள் என்று கருதி, அந்தப் பிரிவினைக்குக் காரணம் என்ன சொல்லுவது என்று யோசித்து—அதற்கு ஆசைப்பட்ட தலைவர்களும், பலமொழி பேசுபவர்களாக இருந்ததால் 'மொழிவாரி நாட்டுப் பிரிவினை' என்று பிரிந்தால் அந்தந்த மொழித் தலைவனுக்கு வாய்ப்புக்கிடைக்கும் என்று கருதி, 'மொழிவாரி மாகாணம்' என்றும் பெயர்வைத்து, அப்போதே இந்தியாவை 20 மாகாணங்களாக்கி, இருபது காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் செகரட்டரிகள், முதலியவர்கள் தலைமையை ஏற்படுத்திப் பிரித்துக்கொண்டார்கள்.

அவற்றுள் ஒன்றுதான் எனக்குக் கிடைத்தது. நானும் முதலில் செகரட்டரிஆகி பிறகு தலைவனும் ஆனேன். அப்போதே என்னைப் புகழ்பவர்கள் 'நாயக்கரே! நமக்கு சுயராஜ்யம் வந்தால் நீங்கள்தான் சென்னை (தமிழ்நாடு) கவர்னர்' என்று சொல்லுவார்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அந்தப் பிரிவினை உணர்ச்சிக்குக் காரணம் பதவி, சுயநலம் ஆகிய இரண்டேதான்; வேறு ஒன்றுமே இல்லை என்பதைத் தெளிவு படுத்தவேதான்.

இனி, 'மொழிவாரி' என்பதைப் பற்றிச் சில சொல்லுகிறேன். மொழியின்மீது ஒரு நாடு எதற்காகப் பிரியவேண்டும்? சாதியின்மீது, மதத்தின்மீது, இனத்தின்மீது பிரிவது



படிப்பகம்

www.padippakam.com



என்றால் அதற்கு அர்த்தம் உண்டு. ஏனெனில், அவை ஒவ்வொன்றுக்கும் மாறுபட்ட, பொருத்தமற்ற, ஒற்றுமையற்ற கொள்கைகள் திட்டங்கள் உண்டு. அவைகளால் இலாப நஷ்டம், சாதக பாதகம் அடைபவர்கள் இருப்பார்கள். அவர்கள் இலாபத்தைப் பெருக்கவோ, கஷ்டத்தைக் குறைக்கவோ தாங்கள் 'மெஜாரிட்டி'யாய் இருக்கும் நாட்டைப் பிரித்துக்கொண்டால் நல்லது என்று ஆசைப்படுவார்கள், இது இயற்கை.

மொழிகளில் அப்படிக் கொள்கையோ, திட்டமோ, அனுபவமோ, கலாச்சாரமோ—பழக்க வழக்கமோ மாற்றமாய் இருக்கும்படி நமக்குள் எந்த மொழியுமே இல்லை. மொழியினால் பெருமை, சிறுமை, இலாப நஷ்டம் ஒன்றுமே இல்லை. ஆதலால், இதைக் காரணம் காட்டிப் பிரித்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. 'பிரிவினை கூடாது; பேதம் கூடாது; சாதி, மத, வகுப்பு பேதமற்ற தேசியவாதிகள், தியாகிகள் நாங்கள்' என்று பேசுகிற காங்கிரசாருக்கு அல்லது சர்க்காருக்கு மொழிக்காகப் பிரியவேண்டும் என்பதும், மொழிக்காகப் பிரிக்கவேண்டும் என்பதும் சுயநலமல்லாமல் இதில் பொதுநலம் என்ன என்று கேட்கிறேன்.

அப்படித்தானாகட்டும்; மொழிக்காகப் பிரிவதை ஒப்புக்கொள்வதானாலும் நம்மில் இப்போதுள்ள சென்னை இராஜ்யத்தில் பிரிக்கப்படவேண்டிய அளவுக்கு என்ன வேறு வேறு மொழிகள் இருக்கின்றன? இந்திக்கும் இந்துஸ்தானிக்கும் உள்ள பேதம் அளவு கொண்ட பிரிவினை மொழிகூட நம்மிடம் இல்லையே! சென்னை இராஜ்ய மொழி என்ன? எது, எது? எத்தனை? ஒன்றுமில்லையே! ஒரே ஒரு மொழிதானே இருக்கிறது; அதுவும் தமிழ்தானே! உள்ள மக்களில் 100-க்கு 90 பேர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்தாமே! ஒரு மொழிக்கு சென்னை இராஜ்யத்தில் நான்கு பெயர்கள் வழங்குகின்றன. அவை முறையே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று சொல்லப்படுகின்றன. இதற்குக் காரணம், ஒருவருக்கொருவர் சம்பந்தமற்ற—சுலபத்தில் போக்குவரவுக்கு வசதியற்ற காலத்தில் தனித்தனியாக வாழ்ந்த கூட்டங்கள் பேசிய தமிழ்மொழியை, நிலத்தை உத்தேசித்து, சீதோஷ்ண நிலைமையை உத்தேசித்து, ஆங்காங்குள்ள தெளிவை உத்தேசித்து, தமிழை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக உச்சரித்த உச்சரிப்பு பேதம் தானே இன்றைய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமாக மாறிவிட்டன! நான் இதைப்பற்றி 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பேசி இருக்கிறேன்; பத்திரிகைகளில் எழுதி இருக்கிறேன்; சவால் விடுத்திருக்கிறேன்.

இந்த விளக்கத்திற்காக இந்தக் கூட்டத்தையே பயன்படுத்திக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. உதாரணத்திற்காகச் சிலவற்றை மட்டும் சொல்லுகிறேன். தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவைகளுடைய வயது என்ன என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்த எழுத்துக்கள் எப்போது எப்படி ஏற்பட்டன என்று உங்களுக்குத் தெரியாதா? வயது ஒரு பக்கம் இருக்கட்டும். சொற்களை எடுத்துக்கொள்வோம். தமிழுக்கும், தெலுங்கு முதலியவற்றிற்கும் சொற்களில் என்ன மாறுதல் இருக்கின்றன? இப்பொழுதும் சவால் விடுகிற தன்மையிலே பேசுகிறேன். மலையாளியோ, தெலுங்கரோ, பண்டிதர்களாய் இருப்பவர்கள் விளக்கட்டும்; ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

தோழர்களே! தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்கின்ற மொழிகளை எடுத்துக்கொண்டு அவைகளிலுள்ள வடமொழி முதலிய அன்னியமொழி, சார்பு நாட்டு மொழி முதலியவைகளை அடியோடு நீக்கிவிட்டு, மீதமுள்ள மொழிகளை எடுத்துக்கொண்டு அவற்றில் தமிழ் அல்லாத மொழிச் சொற்கள் எவ்வளவு இருக்கின்றன என்று யாராவது கணக்குச் சொல்லட்டுமே, பார்ப்போம்! சுத்த மலையாளம், சுத்தக் கன்னடம், சுத்தத் தெலுங்கு என்று ஒரு பத்துச் சொற்களையாவது காட்டக்கூடியவர்கள் இருக்கிறார்களா? இதுவரையில் யாராவது காட்டினார்களா—இதுதான் சுத்தத் தெலுங்கு என்று; இதுதான் சுத்தக் கன்னடமென்று; சுத்த மலையாளமென்று! தமிழிலேயே இசைப்பாட்டுக்கள் இருக்க



வேண்டுமென்று நான் போராட்டம் துவக்கிய காலத்தில் நான் ரூ. 2-8-0 கிரயம் போட்டு, தியாகராஜ கீர்த்தனை என்ற புத்தகத்தை விலைக்கு வாங்கி, ஒரு கீர்த்தனையிலாவது 50% (விகிதத்துக்கு) குறைந்த தமிழ் வார்த்தைகள் இருக்கின்றனவா, காட்டுங்கள் பார்ப்போம் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் காட்டிக் கேட்டிருக்கிறேன்.

தமிழ், தெலுங்கு முதலிய சொற்களில் என்னபேதம் இருக்கின்றன? வீடு என்று எடுத்துக்கொண்டால் தெலுங்கில் 'இல்' என்பான்; கன்னடன் 'மனை' என்பான்; மலையாளி 'பொறை' அல்லது 'உள்' என்பான். இதில் எது தமிழ் அல்லாதது?

தண்ணீரை எடுத்துக்கொண்டால் தமிழன் தண்ணீர் என்பான்; தெலுங்கன் 'நீள்' என்பான்; கன்னடியன் 'நீரு' என்பான்; மலையாளி 'வெள்ளம்' என்பான்; இதில் எது தமிழ் அல்லாதது?

சோற்றை எடுத்துக்கொண்டால் தெலுங்கன் 'வன்னம்' என்பான்; கன்னடியன் 'அன்ன' என்பான்; மலையாளி 'ஊணு' என்பான்; இல்லாவிட்டால் 'சோறு' என்பான்; இதில் எது தமிழ் அல்லாதது?

சேலையை எடுத்துக்கொண்டால், தமிழன் 'சீலை' என்பான். தெலுங்கன் 'சீர' என்பான்; கன்னடியன் 'சேலே' என்பான்; மலையாளி 'முண்டு' அல்லது 'வேட்டி' என்பான். இதில் எது தமிழ் அல்லாதது?

மற்றும் நான், நீ, எனக்கு, உனக்கு, வா, போ முதலிய சொற்களையும் எடுத்துக்கொண்டால் என்ன பேதம் காணமுடியும்?

உதாரணமாக, தமிழன் எனக்கு, உனக்கு என்கிறான்; தெலுங்கன் நாக்கு, நீக்கு என்கிறான்; கன்னடன் நனக்கே, நினக்கே என்கிறான்; மலையாளி எனிக்கி, உனிக்கி என்கிறான்; இங்கேயே பல தமிழர்கள் நேக்கு, நோக்கு என்கிறார்கள்; இதில் எது தமிழ் அல்லாதது? என்ன பெரிய வித்தியாசம்? இந்த வித்தியாசத்துக்காக ஒரு நாடு பிரிய வேண்டுமானால், அதுவும் சிறிதும் பேதமல்லாத ஆட்சிக் கொள்கைகளிலிருந்து பிரிய வேண்டும் என்றால், இதில் நாணயமான, யோக்கியமான காரணம் ஏதாவது இருக்க முடியுமா? பிரிகிறவர்கள் நாட்டைப் பிரித்துக்கொண்டு என்ன கொள்கையை மாற்றிக்கொள்ளப் போகிறார்கள்? நமது நாட்டில் அரசியல் வாழ்வில் கலந்தவர்கள் பெரிதும் பதவியையும் சொந்த சுயநலத்தையும் இலட்சியம் கொண்ட மக்களாகப் போய்விட்டதால், இம்மாதிரியான சூழ்ச்சிகரமான காரண காரியங்களுக்கு நம்நாடு ஆளாக வேண்டியதாகப் போய்விட்டது!

தவிர, இந்தப் பிரச்சினைகள் தனிப்பட்ட மக்களின் சுயநலப் பிரச்சினை என்பது ஒருபக்கம் இருந்தாலும், நமது சர்க்காரின் தலைமையில் இருப்பவர்களுடைய சுயநல உணர்ச்சி காரணமாகவே இந்தப் பிரிவினைப் பிரச்சினைகள் இப்போது பொதுமக்களிடையில் பெரிய விவாதத்துக்கு உரிய பிரச்சினைகளாகப் போய் விட்டன. எதற்கு ஆக நமது மத்திய சர்க்கார் இந்தப் பிரச்சினையை இதுவரையில் தீர்க்காமல் விட்டுக்கொண்டிருந்தார்கள்? இதற்கு நாணயமான காரணம் ஏதாவது சொல்லமுடியுமா?

பிரிவினை, ஆந்திரா—தமிழ்நாடு என்பதுபற்றி 1921-லேயே முடிந்து விட்டது. அதனுடைய எல்லைகளும் அப்போதே தீர்ந்துபோய்விட்டன. இன்றைக்கு 30 வருஷங்களாக அனுபோக பாத்தியதைகளும் ஏற்பட்டுவிட்டன. இந்த 30 வருஷங்களாக எல்லையிலேயே தமிழனோ, தெலுங்கனோ காங்கிரசை, அனுபோகத்தை எதிர்த்தவர்களும் இல்லை. யாராவது எதிர்த்தார்கள் என்றால் காரியம் நடப்பதற்கு முட்டுக்கட்டை போடவேண்டும் என்பவர்கள் எதிர்த்தார்களே தவிர, மாற்ற வேண்டும் என்பவர்கள் எதிர்க்கவே இல்லை. தமிழர்களில்தான் ஆகட்டும், இன்றைய தினம் தமிழ்நாடு எல்லைக்குப் போராடுகிறோம்

படிப்பகம்

www.padippakam.com



என்று வருகிறார்களே, வீரர்கள்—இவர்கள் இந்த 20, 30 வருடகாலமாக என்ன செய்தார்கள்? இன்றைய தினம் சிலர் தங்கள் விளம்பரத்துக்கு, பிழைப்புக்கு ஒருவகை செய்வது போன்ற சுயநலன்களுக்குக் கூப்பாடு போடுகிறார்களே தவிர, 'குமரி முதல் வேங்கடம்வரை' என்கிற அறிவு இன்றைக்கு வருவானேன்?

இந்தப் பேச்சை இன்றைக்குத்தானே காண்கிறோம்! காங்கிரசார் பிரித்து 30 வருடமாய் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். இந்தப் பிரிவினையில் கலந்துகொண்டு கூப்பாடு போடுபவர்களில் ஒருவரும் அந்தக் காலத்தில் பேசினவர்களல்லர். அதற்கப்புறம் 20 வருஷங்களிலும் பேசினவர்களும் அல்லர். அனாவசியமாக—காரணம் இல்லாமல், இருந்துவருகிற அமைப்போடு போராடுவது நியாயமல்லவென்றே கருதுகிறேன்.

காங்கிரஸ் சர்க்கார் பதவிக்கு வந்தவுடன் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டியது அவர்களுடைய யோக்கியமான கடமை. அவர்கள் இவ்வளவு நாள் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்ததன் காரணம், பதவியில் உள்ள சிலரின் சுயநலக் காரணமான சூழ்ச்சியே தவிர வேறு இல்லை. ஆந்திரர், தமிழர்கள் கலவரத்தினால் சில வசதிகள் செய்துகொள்ளலாமென்று மத்திய அரசாங்கத் தலைவர்கள் நினைத்தார்கள்; நினைக்கிறார்கள். ஆந்திரர்களும் தங்களுக்கு வாய்ப்பு, பதவிக்கு வசதி ஏற்படுகிற நேரத்தில் பிரித்துக்கொள்ளலாமென்று கருதி அதுவரையில் அழிவழக்கு செய்யலாமென வழக்காடுகிறார்கள்.

பிரிவினைக்குப் பெயர் மொழிவாரி நாட்டுப் பிரிவினை; இதில் பிரிந்துபோகவேண்டுமென்று வாதாடுகிறவர்கள் மொழியை ஆதாரமாகக் கொண்டுதானே பிரிவினை கேட்க வேண்டும்? அதை விட்டுவிட்டு, வேறு மொழி 100-க்கு 69, 70, 80 வீதம் பேசுகிற மக்கள் உள்ள நிலையைத் தங்கள் நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று கேட்பது எப்படி யோக்கியமாகும்? அல்லது, இந்தப் பிரிவினைக்கு, 'மொழிவாரி மாகாணப் பிரிவினை' என்றாவது எப்படிச் சொல்லமுடியும்?

இந்த அழிவழக்குக்குக் காரணம், ஆந்திரர்கள் மாத்திரமே அல்லர்; அதிகப் பங்கு மத்திய அரசாங்கத்தாருக்கே உண்டு. ஆந்திரருக்கு ஒரு கஷ்டம்—ஏதோ சில வசதிகள் போய்விடுகின்றனவே என்ற ஒரே கஷ்டம்தான். மத்திய அரசாங்கத்துக்கு இரண்டு விதமான கஷ்டங்கள். என்னவென்றால், மத்திய அரசாங்கத்தை விட்டுப் பிரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி தமிழ்நாட்டில் இருக்கிறது. இவர்களைத் தனிப்படுத்தி விட்டால் கிளர்ச்சி வலுத்துவிடுமே என்கிற பயம். ஆந்திராவில் கம்யூனிஸ்டுகள் பலமும், காங்கிரஸ் எதிரிகள் பலமும் அதிகம். இவர்களைத் தனியாகப் பிரித்தால் அங்கு காங்கிரஸ் ஆட்சிக்கு இடமிருக்காதே என்ற பயம். எனவே, கலகத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தப் பிரிவினைக் கிளர்ச்சியில் தமிழர்கள் செய்ய வேண்டியதெல்லாம், மத்திய அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு வசதி செய்துகொள்ள வேண்டியதுதான்.

நிற்க. ஒரு சங்கதியைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். பிரிவினையின் காரணமாக நம்மிடையில் உரிமை விவகாரம் ஒன்றும் இல்லை. அதாவது, ஆந்திரர்கள் இப்பொழுது அனுபவித்து வருவதற்கு மேலாகக் கேட்பது என்பதற்குக் காரணம் வேண்டும் என்பது ஒருபுறம் இருந்தாலும், ஆந்திரர்களே ஒரே குலோக எல்லோரும் இப்போது அனுபவிப்பதற்கு மேலாக எங்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை என்று சொன்ன பிறகு—நமக்கு விவகாரமேது? அப்படிக் கேட்டாலும், நமக்கு ஆட்சேபம் இல்லை. எந்த அளவில் என்றால், ஆந்திர மொழி பேசுகின்ற மக்களை மெஜாரிட்டியாகக் கொண்ட பகுதிகளை ஆந்திர நாட்டோடு சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபமில்லை. தமிழ்மொழி பேசும் மக்களைப் பெருவாரியாகக் கொண்ட நாட்டை ஆந்திராவோடு சேர்க்க வேண்டும் என்பது எப்படி, 'மொழிவாரி மாகாணப் பிரிவினை என்று சொல்லமுடியும்?



அடுத்தாற்போல், அதுபோலவே இன்றைய அனுபவத்தில் தமிழ்மொழி அதிகமாகப் பேசும் மக்களின் பிரதேசம் ஆந்திர நாட்டிலே சேர்ந்தாலுங்கூட, அவர்களுக்கு மொழி வாரிப் பிரதேச உரிமையை உத்தேசித்து எந்த நிமிஷத்திலும் விலகிக்கொள்ள கிளர்ச்சி செய்ய உரிமை உண்டு. அதை நாம் மறுக்கவில்லை; நம்மாலான உதவி செய்யவும் தயாராக இருக்கிறோம். ஆனால், நம்முடைய சொந்தப் பிழைப்பையோ, சுயநலத்தையோ, விளம்பரத்தையோ, கட்சி நலத்தையோ உத்தேசித்து, இன்றைக்குத்தான் இந்தச் சங்கதி தெரிந்ததுபோல் பாவனை காட்டிக் கொண்டு கூத்தாட நமக்கு இஷ்டமில்லை. இது ஏதோ ஒரு அளவில் முடிவுபெறப்போகிற காரியத்தைத் தொல்லைப்படுத்துவதே ஆகும் என்று கருதுகிறேன்.

யோக்கியமான சர்க்காராய் இருந்தால், மொழிவாரிப் பிரதேச அமைப்பு என்பதின் பேரால் செய்யும் எந்தக் காரியத்தையும் இதில் ஜனநாயகம் இருக்கிறதா? பெருவாரியாக தெலுங்கு மொழி பேசுகிற பிரதேசத்தைத்தான் நாம் சேர்க்கிறோமா? அல்லது பெருவாரியாகத் தமிழ் பேசுகிற மக்களைச் சேர்க்கிறோமா? என்பதைச் சிந்திக்க வேண்டியது அவர்கள் கடமையாகும். அதில் அவர்கள் தவறுவதை நியாயத் தவறு என்று சொல்ல முடியாது; நாணயத் தவறு என்றேதான் நான் சொல்லவேண்டியிருக்கிறது.

மொழிவாரிப் பிரதேசப் பிரச்சினையின் தன்மை இவ்வாறு இருக்க, இனி மற்றப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்போம். அவை ஆந்திர இராஜ்யத்தின் தலைநகர் சென்னையில் இருக்கவேண்டும் என்பதும்; பொது கவர்னர், பொது அய்க்கோர்ட் இருக்க வேண்டும் என்பதும்; சிறிது காலத்திற்காவது ஆந்திர அரசாங்கக் காரியாலயம் சென்னையிலேயே இருக்க வசதியளிக்கவேண்டுமென்பதும்; இவை ஒன்றுமே முடியாவிட்டால் சென்னையைத் தனி இராஜ்யம் ஆகச் செய்து அது ஆந்திராவுக்கும், தமிழ்நாட்டுக்கும் சம்பந்தமில்லாத, டெல்லியைப் போன்ற ஒரு கமிஷனர் இராஜ்யமாக ஆக்கவேண்டுமென்றும் கேட்கப்படுபவைகளாகும்.

இவைகளைப் பார்க்கும்போது, ஆந்திரர்களுக்கு இந்த விஷயங்களில் பொறுப்புள்ளதும் குறிப்பிட்டதுமான ஒரு யோசனையோ, இலட்சியமோ இல்லை என்பதாகவே தெரியவருகிறது. ஆந்திராவின் தலைநகரம் சென்னையில் எதற்காக இருக்கவேண்டும்? இப்போது ஆந்திர நாடு அமைப்பு என்கிற பிரச்சினை ஒரு விடுதலைப் பிரச்சினையேயொழிய, பாகப் பிரச்சினை அல்ல. எப்படியெனில், சென்னை இராஜ்யம் 4 மொழிவாரிப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நாலில் ஒன்றுதான் ஆந்திரா. இப்பொழுது ஆந்திராதான் மற்ற மூன்றையும் விட்டு விலகிக்கொள்கிறது. ஆகவே, இந்த விலகிக் கொள்ளுதல், சென்னை இராஜ்யத்திலிருந்து விடுதலை பெறுதல் என்பது அர்த்தமாகும். விடுதலை செய்துகொண்டு போகிறவர்கள், விடுதலை செய்துகொண்டு போகவேண்டுமே தவிர, மறுபடியும் ஒன்றாக இருக்க வசதி கேட்பது பொருத்தமற்ற காரியமாகும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கொருவர் பிடிக்காமல், ஒருவர் வெளியேறுகிறேன் என்று சொல்லிவிட்டு, அதே அடுப்பிலே நானும் சமையல் செய்துகொள்ளுகிறேன் என்றால் அது கலகத்துக்கு வசதி செய்வதாகுமே தவிர—வாழ்க்கைக்கு வசதியாகாது. அன்றியும், ஒரு இராஜ்யத்திற்குள்ளாக இன்னொரு இராஜ்யத்தின் தலைநகரம் இருப்பது நிர்வாகத்துறையில் நிர்வாகக் குறைவும், இராஜதந்திரக் குறைபாடும் ஏற்படும்.

அதுபோலவே, பொது கவர்னர், பொது அய்க்கோர்ட் இருப்பது என்பதும் அரசியல் சட்டப்படி அனுமதிக்க முடியாததாகும். வேறு வழியில் அனுமதி ஏற்படுத்திக் கொள்ளுவதானாலும் வீண் போட்டிக்கும், நிர்வாகக் கேட்டுக்கும் இடமாகும். சில நாளைக்காவது சர்க்கார் நிர்வாகக் காரியாலயம் சென்னையில் இருக்கவேண்டும் என்று விரும்புவதும் அர்த்தமற்றதேயாகும். இவைகளையெல்லாம் ஒன்றாகவோ—ஒன்றிலேயோ இருக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள் எதற்காகப் பிரியவேண்டும் என்று கருதுகிறார்கள்

படிப்பகம்

www.padippakam.com



என்பது எனக்குத் தெரியவில்லை. ஏதாவது ஒரு வகையில் தொல்லை ஏற்படும்படி செய்ய வேண்டும், அல்லது, தந்திரமான வழியில் ஆக்கிரமிப்புச் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தவிர, வேறு உண்மையான எண்ணம் ஒன்றும் இருக்கமுடியாது என்பதுதான் எனது கருத்து.

உண்மையிலேயே, இந்த ஸ்தாபனங்களுக்குப் பிரிக்கப்படும் ஆந்திர இராஜ்யத்தில் இன்று இடமில்லை என்று கருதுவார்களேயானால், ஆந்திரப் பிரிவினை உணர்ச்சி ஏற்பட்ட இந்த 30 வருஷ காலமாக இவர்கள் என்ன செய்தார்கள்? சமீபத்தில் சுமார் 20 வருஷமாகக் கிளர்ச்சி இருந்தும், பிரிந்துகொண்டால் தங்கள் நாட்டு நிர்வாகத்துக்கும், நீதி ஸ்தலத்துக்கும் இடமில்லை என்று இன்று சொல்லுவது இவர்களுக்கு வெட்கக்கேடாக இல்லையா? இன்னமும் தலைநகரையே இன்ன இடத்தில் என்று நிர்ணயிக்காத இவர்கள் இனி என்றைக்கு நிர்ணயிக்கப் போகிறார்கள்! இந்தமாதிரியான காரியங்களுக்கு ஆந்திர இராஜ்யத்தில் இடமில்லை என்று சொல்லமுடியுமா? ஜமீன்தார்கள் அரண்மனைகள் பல இருக்கின்றன; இவை தவிர சினிமா மண்டபங்கள் பல இருக்கின்றன. இவைகளில் ஏதோ சிலவற்றைப் பிடித்துக்கொண்டால், கைப்பற்றிக்கொண்டால் நாளைக்கே எந்தவிதமான கோர்ட்டும், காரியாலயமும் வைத்துக்கொள்ள முடியும். மற்றும், ஆந்திர ஜில்லாக்களில் ஒவ்வொரு ஜில்லாக்காரரும் தங்கள், தங்கள் ஜில்லாக்களிலே, நகரங்களிலே நிர்வாகக் காரியாலயம், அய்கோர்ட் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். இதனால் ஆந்திர நாட்டில் காலி இடங்களுக்கு ஏராளமாக விலையுயர்ந்துவிட்டதாகவும் தெரிகிறது. ஆகவே இடத்துக்கும், கட்டடத்துக்கும் யாரும் கவலைப்படவேண்டியதில்லை. அதுபோலவே, பொது கவர்னர் வேண்டுமென்பதும் தேவையில்லாதது ஆகும். கவர்னர்களுக்கா இப்போது பஞ்சம்!

இவைகளை யெல்லாம்விட நாம் கவனிக்கவேண்டிய சங்கதி ஒன்று இருக்கிறது. ஏதோ காரணம் சொல்லி நாம் இவர்களை உள்ளே இருக்கச் சம்மதிப்போமேயானால், பிறகு இவர்களை எப்படி வெளியேற்றுவது? அதற்கு என்ன சட்டம் இருக்கிறது? ஆகவே, இந்தப் பிரச்சினைகள் பெரும் தொல்லைக்கு இடமான பிரச்சினைகளேயாகும்; இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதே எனது கருத்து.

இனி, சென்னை நகரத்தைத் தனி மாகாணமாக்குவது என்பது எதற்கு ஆக? ஆந்திரர்களுக்கு இதன் அவசியம் ஏன்? ஒரு இராஜ்யத்தைப் பிரிப்பதும், வேறு இராஜ்யம் ஆக்குவதும், மற்றும் ஒன்றோடொன்று சேர்ப்பதும் அந்த இராஜ்யத்தாருடைய விருப்பத்தைப் பொறுத்ததே ஒழிய, அந்த இராஜ்யத்தார் அல்லாதவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்ததா? ஆந்திர நாடு பிரிந்தது என்றால் ஆந்திரர்கள் சென்னையை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்றே அர்த்தம். வெளியேறினவர்களுக்கு இந்த இராஜ்யத்தைப்பற்றிப் பேச என்ன உரிமை? ‘மடத்தை விட்டு வெளியேறின ஆண்டிக்கு நந்தவனத்தைப்பற்றிய கவலை ஏன்?’ என்று சொல்வதுபோல, சென்னையைப்பற்றி யோசனை கூற இவர்கள் யார்? தமிழ்நாட்டாராவது, சென்னை நகரத்தாராவதுதான் இதைப்பற்றிப் பேச உரிமை உள்ளவர்கள்.

ஒரு சமயம் மத்திய சர்க்காருக்கு இது விஷயத்தில் அதிகாரமிருக்கிறது என்றாலும்—அவர்கள், தமிழ்நாட்டு மக்கள் விருப்பப்படியும், சென்னை நகர மக்களின் விருப்பப்படியும் தான் செய்யக் கடமைப்பட்டவர்களே ஒழிய தாங்களாகவே ஒன்றும் செய்ய உரிமையற்றவர்களே ஆவார்கள்.

இந்த விஷயங்களைப்பற்றி யெல்லாம் ஆந்திரா இராஜ்யத்தார் பேசுகிறார்கள் என்றால், இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசாங்கத்தின் வழவழாத் தன்மையேயாகும்; அல்லது தந்திரமேயாகும்.



இதற்கெல்லாம் மற்றொரு காரணம் என்னவென்றால், தக்க யோசனையும் கிடையாது பலமும் கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் காரியத்தில் நாம் ஏதாவது போராட வேண்டி இருக்குமானால் அது கண்டிப்பாக மத்திய அரசாங்கத்தோடுதான் போராடவேண்டி இருக்கும். அதற்காக இன்றைய தினம் மத்திய அரசாங்கத்துக்கு ஒரு சரியான எச்சரிக்கைத் தீர்மானம் செய்து அனுப்பவேண்டும்.

அவர்களுக்கு ஆதிக்கம் செலுத்த ஆசை இருக்கிறதேயொழிய, அதைக்கொண்டு தங்கள் தனிப்பட்ட சுயநலத்தைப் பெருக்கிக்கொள்ள முயற்சி இருக்கிறதே தவிர, ஒழுங்கு முறையூன—கெட்டிக்காரத்தனமான ஆட்சி செலுத்தத் தகுதியோ அனுபவமோ சிறிதும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

இரண்டு நாட்களுக்கு முன் மேயர் வீட்டில் நடந்த சர்வ கட்சிக் கூட்டம் என்பதிலும் நான் பேசியபோது இதையே சொல்லியிருக்கிறேன். அதாவது, ‘இந்தப் பிரிவினையில் ஏற்படுகிற தொல்லைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தாலும், மத்திய அரசாங்கத்தில் செல்வாக்கு உடையவர்களாலும் ஏற்படுகிற தொல்லைகளே தவிர, வேறு ஆந்திர மக்கள் தொல்லை அல்ல. ஆதலால், இதே சமயத்தில் தமிழ்நாட்டின் நிலைமை இன்னதென்றும், தமிழர் விருப்பம் இன்னதென்றும் தெரிவித்துவிடவேண்டியது அவசியம் என்றும்; அந்தப்படி நடக்காதபட்சம் தமிழர்களுடைய அதிருப்திக்கு மத்திய அரசாங்கம் ஆளாக வேண்டிவருமென்றும் ஒரு தீர்மானம் போட வேண்டும்’ என்றும் சொன்னேன்.

பிரிவினை விஷயத்தில் என் கருத்து உங்கள் எல்லோருக்கும் தெரியும். பூரண விடுதலை, பிரிவினை வேண்டும் என்பவன் நான். அந்த அளவில் எவ்வளவு எல்லை குறைத்துக் கிடைத்தாலும் கவலை இல்லை என்று சொன்னவன் நான். இன்று காலையிலுங்கூட டாக்டர் A. கிருஷ்ணசாமி அவர்களிடம், ‘எனக்குச் சென்னை நகரம் முக்கியமல்ல; அன்னியன் ஆதிக்கமற்ற, அன்னியன் சுரண்டலற்ற பூரண சுயேச்சையுள்ள பிரதேசம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதுதான் தேவை’ என்று சொன்னேன். ‘ஒரு சமயம் சென்னைபோய்விடுமானாலும் நான் ஒன்றும் அதிகமாகக் கவலைப்படமாட்டேன்’ என்றும், ‘சென்னை ஒழிந்து போனால் பாக்கி உள்ள தமிழ் நாட்டை என் இஷ்டம்போல ஆக்கி நாளைக்கே பூரண விடுதலை பெற்ற பிரதேசமாக ஆக்க விளம்பரம் செய்துவிட முடியும்’ என்றும் சொன்னேன். ஆனால், ‘நான் விஸ்தீரணத்துக்காகப் போராடுகிறவன் அல்லன்; சுதந்திரத்திற்காகப் போராடுகிறவன் என்றாலும் இதில் ஏன் சம்பந்தப்படுகிறேன் என்றால்—மொழிவாரி என்று சொல்லிக்கொண்டு போகிறவர்கள் மொழிவாரியாகவும் பிரித்துக்கொண்டு, மொழி அல்லாத நாட்டிலும் ஆதிக்கம் செலுத்தப்பார்க்கிறார்களே என்ற ஒரே கருத்துத்தானே அல்லாமல், மற்றபடி சென்னை நகரம் தமிழருக்கோ, தமிழ் நாட்டுக்கோ பெரிய தொண்டு செய்திருக்கிறது—செய்து வருகிறது, அல்லது செய்ய முன்வரும் என்பதற்கு ஆக அல்ல’ என்றும் சொன்னேன்.

‘மற்றும் இவை ஒரு பக்கம் இருந்தாலும், நாம் பிரயத்தனப்படாவிட்டால் சென்னை நகரம் ஆந்திரர்களுக்குப் போய்விடுமோ என்கிற கவலை சிறிதும் வேண்டியதில்லை. ஏனெனில், அனேகமாகத் தமிழ்நாட்டுப் பிராமணர்கள் சென்னையில்தான் வாழ்கிறார்கள். அவர்கள் ஒருநாளும் சென்னை ஆந்திராவுடன் சேரவோ, தனி மாகாணமாக ஆக்கவோ சம்மதிக்கமாட்டார்கள். அவர்கள் இதில் வெற்றி பெற்றே தீருவார்கள். ஆதலால், நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை’ என்று இன்று காலையில் சொன்னேன். மற்றும், இது விஷயமாக என்னிடம் பேசவந்த பலரிடத்திலும் இந்தப்படியே பேசியிருக்கிறேன். அதற்காக அவர்கள் என்னிடத்தில் அதிருப்தி கொண்டதாகவும் சாடை காட்டினார்கள்.

[ராயப்பேட்டை லட்சுமிபுரத்தில், 5-1-1953-ல் தலைமையுரை—‘விடுதலை’ 7-1-1953, 8-1-1953]

படிப்பகம்

www.padippakam.com



# 3. தட்சணப் பிரதேச அமைப்பு

இன்று தமிழ் நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் முக்கியத்துவம் பெற்றிருப்பது தட்சணப்பிரதேசம் அமைப்பது என்பதே ஆகும். இது தமிழ்நாட்டைப் பொறுத்த விஷயம் என்பதாக மாத்திரம் இருக்குமானால் இதற்கு எவ்விதத்திலும் முக்கியத்துவம் இருக்காது என்பதோடு, எல்லைப் பிரச்சினைக்குப் பிற்பட்டதாகவே ஆகியிருக்கும்.

எல்லைப் பிரச்சினை தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் மாத்திரம், நிலப்பரப்பு—இன உணர்ச்சி ஆகியவைகளை முக்கியமாகக் கொண்ட பிரச்சினையாக இருப்பதுபோல் இருக்கலாம். ஆனால், தட்சணப் பிரதேசம் அப்படிக்கு இல்லாமல்—மலையாளமு, தமிழ் நாடு என்பதாக மாத்திரம் இல்லாமல், இந்தியப் பொது அரசியல் தத்துவத்தையும் சேர்த்து அரசியல் ஆதிக்கத்தில் இருக்கும் சிலரின் சுயநலத்தையும், பொதுவாகப் பார்ப்பனர்களின் அடிப்படை நலத்தையும் சேர்த்துப் பிணைத்துக்கொண்டிருப்பதாக இருப்பதால் தட்சணப் பிரதேசப் பிரச்சினை மிகமிக முக்கியத்துவம் கொண்டதாக இருந்துவருகிறது. இந்தப் பிரச்சினைக்கு, அதாவது தட்சணப் பிரதேச அமைப்புக்குத் தமிழ் நாட்டு மக்கள் 100-க்கு 90 பேர் இஷ்டப்படாதவர்களாகவும், எதிர்ப்பாளர்களாகவும் இருந்தாலும் தமிழர்களுக்கு நாட்டுப்பற்று, இனப்பற்று என்பது தங்கள் தங்கள் சுயநலத்தைவிடப் பிற்பட்டதாயிருப்பதாலும், தங்களில் ஒற்றுமை உணர்ச்சி இல்லாமல் இருப்பதாலும் மெஜாரிட்டி பலம் சரியானபடி பயன்படுவதற்கு இல்லாமல்போயிருக்கிறது.

உதாரணமாக, சென்ற 20-ந் தேதி தமிழ்நாட்டில் நடந்த கடை அடைப்பு ஆகிய காரியங்கள் எந்த அளவுக்கு நடந்திருந்தாலும், அதை நடத்த முற்பட்டவர்கள் என்பவர்கள் கட்டுப்பாடாகவோ, அந்தரங்க ஒற்றுமையாகவோ இல்லாமல் அவரவர் தன்னலத்திற்கு, கட்சி நலத்திற்கு ஏற்றபடி நடந்து கொண்டதன் மூலம் தட்சணப் பிரதேச அமைப்பு முக்கியத்துவம் பெறமுடியாமல் போய்விட்டது. ஏனெனில், ஒவ்வொருவர் ஒவ்வொரு பிரச்சினையை முக்கியமாகக்கொண்டு பேசியதன் பயனாய், இந்தக் கடையடைப்பு எதற்காக—எதை முக்கியமாகக்கொண்டது என்பதை மக்களோ, அரசாங்கமோ உணர முடியாமல் போய்விட்டது. பத்திரிகைக்காரர்களும் அந்தப்படியே பிரச்சாரம் செய்து விட்டார்கள்.

இவை எப்படி இருந்தபோதிலும் இப்போது ஒரு விஷயம் நாம் கவலைப்படத்தக்கதாகக் காணப்படுகிறது. அதாவது, காங்கிரஸ் தவிர்த்து வெளியிலுள்ள கட்சிகளும், கோஷ்டிகளும் தங்களுக்குள் தலைவிரி கோலமாய் இருந்தாலும், காங்கிரஸிலும் மந்திரிகளிலுங்கூடக் கட்டுப்பாடில்லாமல்—ஒற்றுமையில்லாமல் தலைவிரி கோலமாய்த் தமிழ் நாட்டுக்கு ஆபத்தைக் கொண்டுவந்து விட்டுவிடுவார்கள்.

நமது அரசாங்க முதல் மந்திரி, நேரிடையாக எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் அந்தரங்கத்தில் முழு எதிர்ப்புணர்ச்சி உள்ளவராக இருந்து வருகிறார். மற்றும், அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அமைப்பை ஆதரித்ததாகச் சாடைகூட காட்டவில்லை.

ஆனால், அடுத்த மந்திரியாய் இருப்பவர் கட்டுப்பாட்டையோ ஒழுங்கு முறையையோகூட இலட்சியம் செய்யாமல், தட்சணப் பிரதேச அமைப்பைத் தான் முழு பலத்தோடு ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு, பிரச்சாரமும் செய்துகொண்டு, அதற்கு ஆதரவாகக் கட்சி சேர்த்துக்கொண்டும் வருவதாகத் தெரிகிறது.

இது காங்கிரஸின் பிளவைக் காட்டுவதாக இருப்பது மாத்திரமல்லாமல், அரசாங்க—மந்திரி சபையின் ஒழுங்கு முறையற்ற தன்மையையும் காட்டுகிறது.

அமைப்புக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்துவரும் மந்திரிக்கு மெஜாரிட்டி இல்லையானாலும், பலம் அதிகமாக இருக்கிறது. எப்படியெனில், (1) மத்திய அரசாங்க ஆதரவு; (2) பிரதமமந்திரி பண்டித நேருவின் பலம்; (3) பார்ப்பனர்களின் ஆதரவு; (4) பார்ப்பனப் பத்திரிகைகளின் ஆதரவு; (5) தன் கட்சி (சி. ஆர். கட்சி) ஆதரவு ஆகிய இவை தவிர; (6) சென்னை முதல் மந்திரி காமராஜரின் எதிரிகளின் ஆதரவு; (7) இவ்வளவுடன் சமய சஞ்சீவிகளின் ஆதரவு—ஆகியவைகள் இருக்கின்றன. காமராஜருக்கு இருக்கும் ஆதரவெல்லாம் பொதுஜனங்களின் ஆதரவுதான் முக்கியமான ஆதரவென்னலாம்.



இந்த நிலையில், காமராஜர் சும்மா இருப்பது ஆபத்தென்பதாக நமக்குத் தோன்றுகிறது. காமராஜர் மவுனமாக இருந்தாலும் காங்கிரஸ் தட்சணப் பிரதேச அமைப்புக்கு எதிராயிருப்பவர்களில் யாராவது தைரியமாய் முன்வந்து அமைப்பு எதிர்ப்பை நல்ல வண்ணம் நாட்டி, ஒழுங்கு முறைக்கு விரோதமாக ஆதரிப்பவர்களைக் கண்டித்து அறிக்கைகள் விடவேண்டியதும், தட்சணப் பிரதேசத்தை எதிர்த்தும் காங்கிரஸ் பிரமுகர்கள், காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள், காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள், காரிய கமிட்டி அங்கத்தினர்கள் முதலானவர்களுடைய கையொப்பங்களையும் உடனடியாகப்பெற முயற்சிக்க வேண்டுமென விரும்புகிறேன். இவர்களில் யாராவது ஏதாவது தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு ஆதரிப்புக்கு வாக்குக் கொடுத்துவிட்டால், பிறகு அவர்களைத் திருப்புவது கடினமான காரியமாகிவிடும் என்று கருதுகின்றேன்.

தட்சணப் பிரதேச அமைப்பைத் தமிழ் நாட்டவர்கள் முழுமூச்சுடன்—உயிரைக் கொடுத்து எதிர்ப்பார்கள் என்பதையும், அதனால் அண்மையில்வரும் தேர்தலில் தலைகீழ் மாற்றம் ஏற்பட நேரலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

['விடுதலை'-அறிக்கை—1-3-1955]

தட்சணப் பிரதேசம் தற்கொலையானது. இன்றும் நாளையும் பெங்களூரில் தங்குகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கட்குத் தலைவர் பெரியார் அவர்கள் பின்வரும் அவசரத் தந்திச் செய்தியை அனுப்பியுள்ளார் :

'தட்சணப் பிரதேசம் ஏற்படுவதென்பது தமிழர்களுக்கு வாழ்வா? சாவா? என்பது போன்ற உயிர்ப் பிரச்சினையாகும். உங்களுக்கும் மற்றெல்லோருக்கும் இது தற்கொலையானதும் ஆகும். தட்சணப் பிரதேசம் ஏற்படுமானால் முன்பின் நடந்திராத கிளர்ச்சி செய்வதற்குத் தமிழ் மக்களை நெருக்குவதாகிவிடும். அருள்கூர்ந்து நம் எல்லோரையும் தமிழ் நாட்டையும் காப்பாற்ற வேண்டுகிறேன்.'

['விடுதலை' 1-2-1956]

பெரியோர்களே ! தோழர்களே !

தட்சணப் பிரதேசம் வந்தால் தமிழராகிய நமக்குத்தான் ஆபத்து. தமிழ், கன்னடம், மலையாளம் மூன்று நாடுகளும் ஒன்றுசேர்ந்தால், பார்ப்பனர்களால் கழித்து விடப்பட்டு நம்மவருக்குக் கிடைத்துவரும் உத்தியோகங்களெல்லாம் மலையாளிகளின் கைக்குள் போய்விடும். நாமெல்லோரும் போலீஸ், கக்கூஸ் எடுத்தல், ரெயில்வே கூலி முதலிய வேலைகளைத்தான் செய்யவேண்டிய நிலைமை வரும். முழு அதிகாரம் எல்லாம் வடநாட்டவருக்கும், மலையாளிகளுக்கும் பார்ப்பனர்களுக்கும்தான் போகும். மத்திய சர்க்கார் சுரண்டல் பெரிதாக உள்ளது. இப்பொழுதே நம்மை அடிமைபோல் நடத்துகிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்கள் புகையிலை வரி, போக்குவரத்து, சுங்க வரி முதலிய பெரிய வருமானங்கள் அங்கு போகின்றன. அவர்கள் இஷ்டப்படி சம்பளம் போட்டுக்கொள்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் ஒரு போர்ட்டருக்குக் கொடுக்கும் சம்பளம், இங்கு ஒரு எஸ். அய் க்கும், ஒரு கிளார்க்குக்கும் கொடுக்கப்படுகிறது. காங்கிரஸ் மொழிவாரியில் பிரியவில்லையா? வெள்ளையன் ஆட்சி முறைக்காக அமைத்த அமைப்பைக் காந்தி போன்றவர்கள் குறைசொன்னார்கள். மொழிவாரியாக மாகாணங்



படிப்பகம்

www.padippakam.com



களைப் பிரிக்கவேண்டும் என்று கூறினார்கள். அதன்படி தமிழ்நாடு போன்று 21 மாகாணங்களாகப் பிரித்து, 21 காங்கிரஸ் கமிட்டிகளை உண்டுபண்ணினர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு முதல் செகரட்டரியாக இருந்தது நான்தான். ஆகவே, நாட்டை அப்பொழுதே மொழிவாரியாகப் பிரிக்க ஒப்புக்கொண்டார்கள். இப்பொழுதே தமிழனுக்கு வேலை இல்லை. அன்னியரும் ஆதிக்கம் செலுத்த வந்தால் நிலைமை மிக மோசமாகிவிடும்.

[மதுரையில், 5-6-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-6-1956]

'நாடு பிரிவினைக் கமிட்டி' அறிக்கையைப் பார்த்தேன். இந்த அறிக்கை வெளியாவதற்கு முன்பே அறிக்கைபற்றிய சேதிகளின் சுருக்கம் ஒருவாறு எனக்குத் தெரிய வந்தது.

பொதுவாக, ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும் கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால்—இவை சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது. என்ன காரணம் என்றால்,

ஒன்று, கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இனச் சுயமரியாதையோ, பகுத்தறிவுணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில், அவர்களுக்கு வருணாசிரம வெறுப்புக் கிடையாது; சூத்திரன் என்பதுபற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலோருக்குக் கிடையாது; அவர்கள் மத மூடநம்பிக்கையில் ஊறிவிட்டவர்கள்.

இரண்டு, அவர்கள் இருவருக்குமே—மத்திய ஆட்சி என்னும் வடவராட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாய் இருப்பதுபற்றியும் சிறிதும் கவலையில்லை.

ஆகவே, இவ்விரு துறைகளிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணங்கொண்டவர்கள்; எதிரிகள் என்றே சொல்லலாம்.

மூன்றாவது, இவர்கள்—இருநாட்டவர்களும் பெயரளவில் இருநாட்டவர்களானாலும், அளவில், எஞ்சிய சென்னை இராச்சியம் என்பதில் 14 மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) இரண்டே ஜில்லாக்காரர்களாவார்கள்.

1. சென்னை, 2. செங்கற்பட்டு, 3. வடஆர்க்காடு, 4. சேலம், 5. கோவை, 6. நீலகிரி, 7. திருச்சி, 8. மதுரை, 9. இராமநாதபுரம், 10. திருநெல்வேலி, 11. தஞ்சை, 12. தென்னார்க்காடு, 13. தென்கன்னடம், 14. மலபார்.

அப்படி 14-ல்—7-ல் ஒரு பாகஸ்தர்களாக இருந்துகொண்டு, தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-ல் 2 பாகத்தை அடைந்துகொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டைத் தமிழ்நாடு என்றுகூடச் சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதை, நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால், இவர்கள் சீக்கிரம் ஒழியட்டுமென்றே கருதிவந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாகப் பிரிய நேர்ந்துவிட்டது. ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.

இந்தப் பிரிவினை நடப்பதில் சேர்க்கை சம்பந்தமாக ஏதாவது சிறு குறைபாடு இருந்தாலும், அதை மேற்கண்ட பெரும் நலத்தை முன்னிட்டு, கூடுமானவரை ஒத்துப் போகலாமென்றே எனக்குத் தோன்றிவிட்டது. மற்றும், இந்தப் பிரிவினை முடிந்து தமிழ்நாடு தனி நாடாக ஆகிவிட்டால் நமது சமய, சமுதாய, தேசிய, சுதந்திர முயற்சிக்கும் அவ்வ சம்பந்தமான கிளர்ச்சிக்கும், புரட்சிக்கும் நமது நாட்டில் எதிர்ப்பு இருக்காதென்றும் இருந்தாலும் அதற்குப் பலமும், ஆதரவும் இருக்காதென்றும் கருதுகிறேன்.



நிற்க, இந்தப் பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்கமுடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான்; நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்கு திராவிடம் என்று இருந்த பெயர், அது தமிழல்ல என்பதானாலும், நமக்கு அது ஒரு பொதுக் குறிப்புச்சொல்லும், ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக்கிறதே என்று வலியுறுத்தி வந்தேன். அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்களில் சிலரும் எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணங்கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்குச் சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களையும் சேர்த்துக் குறிப்பிடத்தக்க ஒருசொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும், 'திராவிடன்' என்ற சொல்லை விட்டு விட்டுத் 'தமிழன்' என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால், அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து, 'நானும் தமிழன்தான்' என்று கூறிக்கொண்டு உள்ளே புகுந்துவிடுகிறான்.

இந்தச் சங்கடத்திற்கு, தொல்லைக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்போது, இப்போது மற்றொரு மாபெருந் தொல்லை நெஞ்சில் இடி விழுந்தது போன்று வந்து தோன்றி இருக்கிறது.

அதுதான் திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டைவிட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோன பின்புகூட, மீதியுள்ள—யாருடைய ஆட்சேபணைக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர்கூட இருக்கக்கூடாதென்று பார்ப்பானும், வடநாட்டானும் சூழ்ச்சிசெய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்துப் பிரிவினையில், 'சென்னை நாடு' என்று பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனும், அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக்கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைத் திருத்த, தமிழ்நாட்டு மந்திரிகளையும், சென்னை, டில்லி, சட்டசபை, கீழ்—மேல்சபை அங்கத்தினர்களையும் மிகமிக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

மற்றும், தமிழ் நாட்டிலுள்ள புலவர்கள், பிரபுக்கள், அரசியல், சமுதாயஇயல் கட்சிக்காரர்களையும் முயற்சிக்கும்படி அதுபோலவே வேண்டிக்கொள்கிறேன்.

'தமிழ்', 'தமிழ்நாடு' என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சிசெய்து வெற்றிபெற்றுவிட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

இந்தக் காரியம் மாபெரும் அக்கிரமமான காரியம் என்பதோடு, மாபெரும் சூழ்ச்சிமீது செய்யப்பட்ட காரியம் என்றே கருதுகிறேன். நம்நாடு எது? நமது மொழி எது? நமது இனம் எது? என்பதையே மறைத்து விடுவதென்றால், பிறகு தமிழன் எதற்காக உயிர்வாழ வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, இக்கேடு முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்படி முயற்சி செய்யும்படியாக எல்லாத் தமிழர்களையும் உண்மையிலேயே வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'—அறிக்கை—11-10-1955]

படிப்பகம்

www.padippakam.com



## 4. திராவிட நாடா? தமிழ் நாடா?

பெரியோர்களே! தோழர்களே!

திராவிட நாடு எது? இதற்கு முன்—1956-க்கு முன் இருந்த சென்னை மாகாணத்தை நான் 'திராவிடநாடு' என்று சொன்னேன். அப்பொழுது மலையாளம், கன்னடம், ஆந்திரம் பிரிந்திருக்க வில்லை. வெள்ளையன் இந்த நாட்டைவிட்டுப் போய்விட்ட, பிறகு வட நாட்டானும், இந்த நாட்டுப் பார்ப்பானும் சேர்ந்துகொண்டு இனிமேல் நமக்கு ஆபத்து என்று கருதி, நான்கு பிரிவுகளாக வெட்டிவிட்டார்கள். இப்பொழுது நம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த கள்ளிக்கோட்டை, மங்களூர் மாவட்டங்களும் மலையாளம், கன்னட நாடு களுடன் சேரப்போகின்றன. இப்பொழுது நம்முடன் மலையாள, கன்னட நாடுகளின் சம்பந்தமில்லாமல் தனித் தமிழ்நாடாக ஆகிவிட்டோம். ஆகவே. இதை இப்பொழுது 'தமிழ்நாடு' என்று சொல்லலாம். முன்பு அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால், அவர்கள் பிரிந்து தனியாகப் போவதிலேயே கவனத்தைச் செலுத்திப் பிரிந்துபோய்விட்டார்கள். நாம் நிபந்தனையற்ற அடிமைகளாய் உள்ளோம். வெள்ளையர் ஆண்ட காலத்தில் பார்ப்பனரின் அக்கிரமங்களைச் சொல்ல வழி இருந்தது. அவர்களும் நாம் சொல்வதைக் கேட்டுச் சிலவற்றைக் கவனித்துவந்தார்கள். இப்பொழுது நம் நாடு வடநாட்டிற்கு நிபந்தனையில்லா அடிமை நாடாகிவிட்டது. நாங்கள் வெள்ளை யரை அப்பொழுதே கேட்டோம்: 'நாங்கள், உங்களை யுத்த காலத்தில் ஆதரித்தோம். பார்ப்பனரும் வடநாட்டுக்காரரும் உங்களை எதிர்த்தார்கள்; எங்கள் இனம் வேறு; அவர்கள் கலை, பழக்க வழக்கங்கள் வேறு' என்று சொன்னோம். அதற்கு வெள்ளைக் காரர்கள், 'நீங்கள் எல்லோரும் ஒன்றுதான் என்று நினைத்து இருந்தோம். இதெல்லாம் உங்கள் குடும்பச் சண்டை; நாங்கள் சீக்கிரத்தில் இந்த நாட்டை விட்டுப் போய்விடப் போகிறோம்' என்று கூறி, முஸ்லிம்களுக்கு சிறு இராஜ்யத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு, நம்மைப் பார்ப்பனருக்கும், வடநாட்டவருக்கும் காட்டிக்கொடுத்துவிட்டுப் போய்விட்டனர். இப்பொழுதும் நாம் வடநாட்டு ஆட்சியில் இருந்து பிரிந்து தனி நாடு ஆகவேண்டுமென்று கூச்சல் போடுகிறோம். தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் இருக்குமா என்று கேட்கிறார்கள். இல்லாமல் காக்கை, கழுகு தூக்கிக்கொண்டா போய்விடும்? பக்கத்தில் இருக்கும் இலங்கை யும், பர்மாவும் இருக்கும்பொழுது நாம் மட்டும் இருக்க முடியாதா? நமக்குப் போதுமான வசதி இங்கேயே இருக்கிறது. நமக்கு நாடு கிடைத்து வெள்ளையருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் இந்த வடநாட்டான் ஓடிவிடுவானே!

[திருவண்ணாமலையில், 19-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 29-8-1956]

## 5. தமிழ்நாடு தமிழருக்கே!

பெரியோர்களே! தோழர்களே!

நாடு சுதந்திரம் பெறவேண்டுமென்றும், திராவிட நாடே—தமிழ்நாடு தமிழருக்கே ஆகவேண்டுமென்றும் சொல்லுகிறோம்.

மலையாளம், ஆந்திரம், கர்நாடகம் பிரிந்துபோய் அவை அவைகளுக்கென தனிச் சட்டசபைகள் அமைத்துக் கொண்டுவிட்டன. நமக்கும் அவைகளுக்கும் சம்பந்தமில்லை. என்றைக்காவது நம்நாடு பிரிந்தேதான் தீரும். பலரின் உயிர்த் தியாகத்தின் மூலந்தான் நாட்டைப் பிரிக்கமுடியும். பாகிஸ்தானும் பல வெட்டு, கொலைகள் நடந்து பலர் செத்துத் தான் பிரிந்தது. பாகிஸ்தான் கொடுத்தால்தான் இந்துஸ்தான் நிலைக்கும் என்ற அளவில், ஆச்சாரியார் காந்தியாருக்கு உணர்த்தியே பாகிஸ்தான் தான் கேட்ட பகுதிகளைப் பெற முடிந்தது. நியாயமுறையில் பாகிஸ்தான் கொடுக்கவில்லை—பலரைப் பலியிட்டது; பல தலைகள் உருண்டன. நாம் ஏன் வடவர் காலடியிலிருக்க வேண்டும்? நம்மை ஏன் அவர்கள் கொள்ளையடிக்க வேண்டும்? ஆகவே, நம்நாடு என்றாவது தனியாகப் பிரிந்து தானாக வேண்டும்.



நம் நாட்டைப் பிரிக்கவும். பொதுவாக இந்திய நாட்டைப் பற்றியும் சென்னை யிலுள்ள சட்டசபையில் பேசி ஒன்றும் செய்யமுடியாது. மக்களை ஏமாற்றுகிறார்கள்; சிலர் வரி என்று கூச்சல் போடுகிறார்கள். வரி போடுபவன் டில்லியிலிருக்க, இங்கு கலகம் செய்தால் என்ன ஆகும்?

['விடுதலை' 24-7-1957]

1937-லேயே நாடு பிரியவேண்டுமென்றேன். இதை அன்றிருந்த வடநாட்டார் தெரிந்துதான் இருக்கிறார்கள். பதவி ருசியைக் காட்டி நம்மவர்களை ஏய்த்துவிடுகிறார்கள். பார்லிமெண்ட் மெம்பருக்கு ரூ. 500 சம்பளம்; தினம் 30, 40 ரூபாய் படி—இன்னும் பல வகைகளில் வசதி வாய்ப்பு; கட்டடம் உண்டு. பல நாட்கள் சட்டசபைக்குச் செல்லாமலேயே பணம் பெறலாம். இவ்வளவு வாய்ப்பும் வசதியும் தந்து வசியப்படுத்துகிறார்கள்—வடநாட்டார்.

கடந்த தேர்தலில் டில்லி சென்ற 'மெம்பர்'கள் என்ன சாதித்தார்கள்? யாராலும், 'பார்லிமெண்டை' அசைக்க முடியாது. பெரும்பாலும் காங்கிரசே ஜெயிக்கிறது. இப்படிப் பட்ட பாராளுமன்றத்தினால் நாம் ஒன்றும் சாதித்துக்கொள்ளமுடியாது. எல்லா வசதி களும் அவன் கையில். எல்லாச் சாமான்களும் அவனிடம் கேட்டு வாங்க வேண்டும். வட நாட்டானின் அரசாங்கத்தின் தயவில்லாமல் நாம் ஒன்றும் செய்துவிடமுடியாது என்ற நிலையில் வைத்துக்கொண்டு, நம்மை அடிமைப்படுத்தி வைக்கிறான். நம்நாடு மற்ற நாடுகளைப் போல முன்னேற வேண்டுமானால் நம்நாடு பிரிந்தே ஆகவேண்டும்.

நம் அதிகாரமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக டில்லிக்கே போய்க்கொண்டிருக்கிறது. 'யூனிவர்சிட்டி' பூராவும் டில்லி கையில்; கல்லூரிக்கு இடம் ஒதுக்க அவர்கள் இடும் உத்தரவுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும்.

நம்முடைய மாகாண சர்க்காரின் சிப்பந்திகளுக்குச் சம்பளம் மிகக் குறைவு; டில்லி சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சம்பளம் இரண்டு மடங்கு கிடைக்கிறது. மத்திய அரசாங்கம் பூராவும் பார்ப்பான் கையில்! சுங்கம், எக்சைஸ் இலாக்காக்களில் ஒரே பார்ப்பனர் மயம். பாலம் அணைகட்ட டில்லி உத்தரவு தேவை.

இவ்வளவு நெருக்கடியான பாதுகாப்போடே வளர்ந்துகொண்டே போகும் மத்திய ஆட்சியிலிருந்து—டில்லி தொடர்பிலிருந்து பிரிய, நாம் பலியாகித்தான் பெறமுடியும். கொலை, இரத்தவெள்ளம் ஏற்படவேண்டும். இப்படிப்பட்ட மிகப் பெரிய போராட்டங்களை நடத்த இருக்கும் இளைஞர்களுக்கு 'சினிமா'வைக் காட்டினால் எப்படி எழுச்சி, உணர்ச்சி உண்டாக முடியும்? நம் நாடு பாகிஸ்தானைப் போலப் பிரியவேண்டாமா? பிரிந்த நாடுகள் தாம் என்ன கெட்டுப்போயின?

நீயும் பாகிஸ்தானுக்குப் பயந்து படைச் செலவை ஏராளமாகப் பெருக்கிக் கொண்டுள்ளாய்; உன் யோக்கியதை இப்படி? நீ என்னைப்பற்றிக் கவலைப்படுகிறாய். நம் நாடு பிரிந்தால் இராணுவச் செலவு இத்தனை கோடியாகாதே! 4 கப்பல்கள் இருந்தாலே போதுமே! நாதியில்லாத்தனம் கொண்டது இந்திய சர்க்கார். இந்தச் சர்வாதிகார யூனியனை எங்களைத் தவிர யாரும் எதிர்ப்பதில்லை; மற்றவர்கள் அவர்களுக்குத் துதிபாடுபவர்களாகவே இருக்கின்றனர்; அவர்கள் தயவை நாடியே இருக்கின்றனர்.

சமுதாயத்துறையில், பிச்சை எடுத்துப் பிழைத்த பார்ப்பனர்களால் நாம் ஆளப் படுகிறோம். எண்ணிக்கையில் நாம் அதிகமிருந்தும் நாம் ஏன் இப்படி ஒரு சிறு கூட்டத்திற்கு அடிமையாய் இருக்கவேண்டும்?

['விடுதலை' 25-7-1957]

படிப்பகம்

www.padippakam.com



பாகிஸ்தான் கிடைக்கவில்லையா?

பாகிஸ்தான் கிடைப்பதற்கு முதலில் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்? பிறகு என்ன
ஆனது? 'எடு கத்தியை! வெட்டு!' என்றான்.

உடனே ஆச்சாரியார், 'பாகிஸ்தான் பிரித்துக்கொடுக்க வேண்டியதுதான்' என்று
சொன்னார். காந்தியார்கூட முதலில் ஒப்புக்கொள்ளவில்லை; ஆச்சாரியார் காங்கிரசை
விட்டு வெளியேறிப் பிரச்சாரம் செய்தார். என்னிடம் ஆச்சாரியார் அப்போது
சொன்னார்: 'இராமசாமி, இந்த வடநாட்டானுக்குப் புத்தியே இல்லை' என்று.

பாகிஸ்தான் கொடுக்கவேண்டும் என்று ஊர் ஊராய் ஆச்சாரியார் பிரச்சாரம்
செய்தார்.

உங்களுக்குத் தெரியாத இரகசியம் ஒன்று சொல்லுகிறேன். அந்தச் சமயத்தில்
இராஜகோபாலாச்சாரியின் சட்டையை எல்லாம் கிழித்துவிட்டார்கள்; சட்டைமேலெல்லாம்
தார் ஊற்றிவிட்டார்கள்.

பிறகு பாகிஸ்தான் வந்தேவிட்டது. அதேபோல் திராவிட நாட்டை வாங்க முடியும்.
என்னிடம் திட்டமெல்லாம் இருக்கிறது.

[மேட்டுப்பாளையத்தில், 6-7-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-7-1957]

தலைவரவர்களே! தோழர்களே!

உலக நாடுகளை ஒப்பிடுகையில் தமிழ்நாடு பெரிது. உலகத்தில் 85 நாடுகள் உள்ளன.
இவற்றில் 74 நாடுகளுக்குமேல்—பரப்பிலும் சரி, ஜனத்தொகையிலும் சரி—மேலானவர்
களாகவே நாம் இருக்கிறோம். மற்ற 74 நாட்டுக்காரர்கள் பிழைக்கும்போது நம்மைத்
தானா காக்கை தூக்கிக்கொண்டு போய்விடும்?

பூகோளம் தெரியுமா? சரித்திரம் தெரியுமா உனக்கு? உன் இரத்தம் கொண்டவர்
தமிழ் மக்கள்—இலங்கையில் நாய் போலத் திண்டாடுகிறார்கள்! அதைப்பற்றிக் கொஞ்ச
மாவது கவலைப்பட்டதுண்டா? தமிழனுக்கு ஆளும் வசதியில்லையா? புதுக் குடித்தன
மாகவே வைப்பதானாலும் வாழமுடியாதா? மந்திரி எவரும் இதுபற்றிப் பேசமாட்டேன்
என்கிறாரே? நமக்கு என்ன மற்றவன் தயவு வேண்டுமா? உட்கார்ந்த இடத்திலேயே
கம்பியின்மூலம் வியாபாரம் செய்துவிடலாம். நீ (வடவர் ஆட்சி) என்ன அய்யன்—வர்த்த
கத்துக்கு உதவி செய்ய? இதைப்பற்றி சப்தம் போட ஆளில்லை; நான் சப்தம் போட
வேண்டியது; அது செல்வாக்கைப் பெற்றதும் அதை வயிறு வளர்க்க உபயோகப்படுத்திக்
கொள்ள வேண்டியது சிலரது வேலையாக உள்ளது. இது என்ன நியாயம்?

இந்த மந்திரிகளை வடவன் பியூன் மாதிரித்தானே நடத்துகிறான்? அவனைப்
பிடித்துப்போடு என்றால்—'இதோ ஆய்விட்டது, சாமி' என்றுதானே இவன் சொல்லு
கிறான்? சர். இராமசாமி முதலியார் 'முனிசிபாலிட்டி மாதிரி ஆக்கிவிட்டாயே' என்று
நன்றாய்க் கேட்டிருக்கிறார்.

நீ (நேரு) பிறந்த நாடு என்பதற்காக அக்கிரமமாக காஷ்மீர் வேண்டும் என்கிறாயே?
நீ பிறந்த நாடு என்பதற்காக அக்கிரமமாகப் போகிறாய்! காஷ்மீர் என்ன நேஷன்? என்ன
சம்பந்தம் உனக்கும் காஷ்மீருக்கும்? முக்கால் வாசி மக்கள் முஸ்லிம் என்றிருக்கும்போது,
அங்குபோய் ரகளை செய்கிறாய்! நீ பிறந்த நாடு என்பதற்காக இவ்வளவு ரகளை
செய்கிறாய்.

நான் பிறந்த நாடு எனக்கு வேண்டும் என்று நான் கேட்கக்கூடாதா? 'எதைச் செய்
தாலும் சகித்துக் கொள்வேன்—ஆனால் நாடு பிரிவதை மட்டும் சகிக்கமாட்டேன்' என்பது
எவ்வளவு திமிர்?



ஆகவே, தோழர்களே! நீங்கள் நன்றாக நினைவு வைத்துக்கொள்ளவேண்டும். நான் போவதற்குள் படம் போட்டுத் தருகிறேன்.

சீக்கிரம் அழைக்கவேண்டும்—எல்லோரையும் அழைக்கிறேன். அழைப்பு அனுப்புகிறேன். அத்தனைபேரையும்—தமிழன் என்பவன் எல்லோரையும் கூப்பிடுகிறேன். நான் தலைவனே அல்லன், தொண்டனாக இருந்து சேவிக்கிறேன். யாராவது தலைவராக இருக்கட்டும். எனது தொண்டர்களையும் சேவிக்கச் செய்கிறேன்—சீக்கிரத்தில் நடக்க வேண்டும்.

இது கண்போன்ற பிரச்சினை—எவ்வளவு மோசமாக நடத்துகிறான்?

நம்நாட்டில் வசூல்செய்யும் பணத்தில் 60 கோடி ரூபாய் எடுத்துக்கொண்டு 8 கோடி நமக்குக் கொடுக்கிறான்—பிச்சை கொடுப்பது போல! யார் கேட்பது? ஏன் என்றால்—'அதிகப் பிரசங்கி' என்பானே என்று இவன் பயப்படுகிறான்! இங்கு சுரண்டிக் கொண்டு போய் வடநாட்டானுக்குத் தருகிறான்.

எலக்ஷனுக்கு தடவைக்கு 25 கோடி வசூல்செய்கிறான். முதலிலே சொன்னான் டாட்டா கம்பெனிக்காரன் என்னும் ஒரு கம்பெனி 10 இலட்சம் கொடுத்தான். ஒரு டைரக்டர் அதைக் கேட்டான். ஒரு கூட்டாளி, 'அரசியல் கட்சிக்கு எதற்குப் பணம் கொடுப்பது?' என்றான். 'அட பைத்தியமே, நான் கம்பெனி நலனை உத்தேசித்துத்தான் கொடுத்தேன்; இதைக் கொடுத்தால்தானே கோடி கோடியாகக் கொள்ளையடிக்கலாம்' என்று பதில் சொல்லியிருக்கிறானே வடநாட்டான்.

வடநாட்டான் 2 பூனையை வைத்துக்கொண்டுகூட ஆண்டுவிடுவானே? இந்த காமராசர் போனால் வேறொரு ராசர் அவனுக்குக் கிடைக்கக்கூடும். இந்தக் கொடுமை ஒழியவேண்டும்.

நம் நாடு தனியாகப் பிரிந்தே ஆகவேண்டும். ஒரு சுண்டைக்காய் 'எகிப்து' உலகத்தையே கலக்கிவிட்டதே! நம்மால் ஆளமுடியாதா? நான் சொல்லுகிறேன்—பிரிந்தால் நாம் சிறந்த வல்லரசாக வாழ்வோம்.

நாம் ஆரம்பித்தால்—பல வெளிநாட்டான் காத்துக்கொண்டிருக்கிறான்; நம்மோடு சேர்ந்துகொள்வான். நேற்று மராட்டியர்கள் 15 ஆயிரம் பேர் சேர்ந்து நேருவை எதிர்த்திருக்கிறார்கள். இதற்கு முன் செருப்பு மாலையை காந்திக்குப் போட்டிருக்கிறான். நாடு பிரியவேண்டுமென்ற ஆத்திரத்தில் நேருமீது கல் போட்டிருக்கிறான்.

ஆகவே, நாம் பெரிய இயக்கம் நடத்தவேண்டும்; ஆதரவு கட்டாயம் இருக்கும். எனக்குப் பிறகு என்ன நடக்குமோ என்ற கவலையாகத்தான் உள்ளது; பாதியிலாவது விட்டுவிட்டுப் போனால் கொள்கையை விற்றுத் தின்னத்தான் ஆள்வரும்.

ஆகவே, தயவு செய்து சிந்தியுங்கள்! காரியம் நடந்து தீரவேண்டும். இந்தியா படம் கொளுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

நாளைக்கு இந்திய யூனியன் படம் கொளுத்தப் போகிறோம். கைது செய்யட்டும். இல்லை அது 'நேஷனல் ஆனருக்குப் பங்கமில்லை' என்றால் விட்டுவிடட்டும். நேரு ஒரு பொறுப்புள்ளவர். உலகம் பூராவும் போய் தோட்டா வாங்கி வருபவர்—'காட்டுமிராண்டித் தனம்' என்று எதற்கெடுத்தாலும் சொன்னால் என்ன அர்த்தம்?

முன்பு கண்ணீர்த் துளிகள் ஏதோ செய்ததற்கு—'காட்டுமிராண்டித்தனம்' என்றார். தமிழரசுக் கழகக்காரரையும் 'காட்டுமிராண்டித்தனம்' என்றார். எதற்கெடுத்தாலும் காட்டுமிராண்டித்தனம் என்று சொல்லுகிறார். இதற்கு ஏற்ற பதில், நாம்செய்கை

படிப்பகம்

www.padippakam.com



யில் அமைதியுடன் நடத்திக் காட்ட வேண்டும். யூனியன் படத்தில் தமிழ்நாடு என்பதற்கு மட்டும் ஒரு கோடு போட்டு, பாக்கியுள்ள பாகத்தை—இந்திய யூனியன் படத்தை எரிக்க வேண்டும்.

['விடுதலை' 1-12-1957]

இந்த இராஜ்ய ஆட்சிக்கு எதில் அதிகாரமிருக்கிறது? இந்நாட்டில் அரிசிப் பற்றாக் குறை இருக்கையில்—நாளுக்கு நாள் விலை விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கையில்—கேரள இராஜ்யத்துக்கு அரிசி ஏற்றுமதியாவதைத் தடுக்க முடிகிறதா? கேரளத்துக்கு வேண்டு மானால் வெளிநாட்டிலிருந்து தருவித்துக்கொடு என்று மத்திய ஆட்சியிடம் கண்டிப்புச் செய்ய முடிகிறதா? இங்கிருந்து 60 கோடி ரூபாய்க்கு மேல் வரிகளைக் கொண்டு போகிறான்; அவனிடமிருந்து நீ பிச்சைக் காசு போல் 8 கோடி பெறுகிறாயே, எதனால்? அவனுக்கு அடிமைப் ட்டிருப்பதால்தானே? அங்கெல்லாம் பலகோடிக் கணக்கில் செலவிடும் பல திட்டங்கள் நடத்திவருகையில், இங்கு என்ன திட்டம் செய்கிறான்? நாம் வரிப் பணம் அழுவதுதானே மிச்சம்? நெய்வேலியில் ஒரு திட்டம் ஆரம்பித்தனர்; அதற்குள்ளாகவே வடநாட்டார்களை அங்கு அதிகாரத்தில் திணித்துவிட்டான். பெரம்பூரில் ஒரு 'கோச் ஃபாக்டரி' ஆரம்பித்துள்ளான்; அதில் அதிகாரம் எல்லாம் வடநாட்டானுக்கும், பார்ப்பா னுக்கும்தானே? இந்த இரண்டு இடங்களிலும் பார்ப்பான்கள்தானே அட்டகாசம் புரிகின்றனர். திராவிடர்கள் வெறும் கூலிகளாகத்தானே இருக்கமுடிகிறது? இதை எதிர்த்து இந்த இராஜ்ய அரசாங்கம் கேட்கமுடிகிறதா?

எனவே நாம் தனியாகப் பிரிந்து கொண்டாலொழிய நம் மக்களுக்கு நன்மை செய்ய முடியாதென்று ஆதார பூர்வமாகக் கூறுகிறேன்.

[எழும்பூரில், 30-11-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-12-1957]

'இந்திய அரசியல் சட்டம் பிடிக்கவில்லையானால் நாட்டைவிட்டு வெளியேறிவிடு' —பண்டிட் நேரு.

இன்றைய ஆட்சி முட்டாள்தனமான காட்டுமிராண்டி ஆட்சி என்றும், இது பார்ப்பன ஆட்சி என்றும், இது திராவிடமக்களை ஆரியர் (பார்ப்பனனும், வடநாட்டானும்) அடிமைகொண்ட ஆட்சி என்றும், இந்த வடநாட்டாராலும் பார்ப்பனராலும் அவர்களது நலனுக்கும் உயர்வுக்கும் ஆகவே செய்யப்பட்டிருக்கும் அரசியல் சட்டம்—மனுதர்ம சட்டத்தின் மறுபதிப்பே என்றும் 1949-லேயே நான் சொன்ன கருத்துக்கு இது எடுத்துக் காட்டாக இல்லையா என்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

தவிரவும் 'இந்த அரசியல் கொடி உனக்குப் பிடிக்கவில்லையானால்—நாட்டைவிட்டு வெளியேறிவிடு' என்றும் பேசியிருக்கிறார்! யார் என்றால், பண்டித ஜவஹர்லால் நேரு!

அவர் என்ன சாதி என்றால்—பார்ப்பன புரோகித சாதி; எந்த நிலையில் என்றால்—இந்தியாவின் முதல் மந்திரி (அதாவது ஆட்சித் தலைவர்) என்ற நிலையில்.

'தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து மனிதனையே கடிக்க வந்துவிட்டது' என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஏற்ப, இந்தப் பார்ப்பனர்கள் சாதி காரணமாகத் தாங்கள் சம்பாதித்துக்கொண்ட உயர் பதவிகளையும், ஆதிக்கத்தையும் ஆதரவாகக் கொண்டு சட்டம் செய்துகொண்டு, 'இந்தச் சட்டம் பிடிக்கவில்லையானால்—அதாவது சாதிமுறைக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தச் சட்டம் உனக்குப் பிடிக்கவில்லையானால்—இந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டு நீ சூத்திரனாய், பார்ப்பானின் வைப்பாட்டி மகனாய் வாழ உனக்கு இஷ்டமில்லையானால், இந்தத் திராவிடநாட்டை—தமிழ் நாட்டை விட்டு வெளியேறி விடு; இல்லாவிட்டால் ஜெயிலில் வைப்பேன்; இல்லாவிட்டால் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைப்பேன்' என்பதாகப் பேசியிருக்கிறார்.



எங்கு முழக்கி இருக்கிறார் என்றால், தமிழ்நாட்டின் மார்பு (இருதயம்—மத்திய ஸ்தானம்) போன்ற திருச்சி நகரில்—தமிழ் உணர்ச்சிக்குத் தாயகமான திருச்சி நகரில் சுமார் 20-30 ஆயிரம் பேர் நகர மக்கள் கொண்ட மாபெரும் தமிழ்க் கூட்டத்தில் சொல்லி யிருக்கிறார்.

சொன்னது மாத்திரமல்லாமல், இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பித் தனது ஊருக்கும் பத்திரமாகப் பறந்து சென்றிருக்கிறார்! எப்படிச் சென்றார் என்றால், 8000 பேர் கொண்ட போலீஸ் பாதுகாவலில் சென்றார்.

உண்மையாக உள்ளது உள்ளபடி சொல்லவேண்டுமானால், இந்தப் பனியா-பார்ப் பன ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாட்டில் தமிழன், சிறையில் இருக்கும் சிறைக் கைதி போலவே நடத்தப்பட்டு வருகிறான்; 'கான்விக்ட் வார்டர்களாக' தமிழர் சேவகர்கள், தமிழர் அதிகாரிகள் ஆகியவர்கள் இருந்துவருகிறார்கள்.

தமிழர்கள் மந்திரிகளாக இருந்தாலும், நிர்வாக அதிகாரிகளாக இருந்தாலும் சரி, இவர்கள் யாவருமே 'கான்விக்ட் வார்டர்களை'ப் போலவேதான் இருந்துவர வேண்டியதாக இருக்கிறது.

(கான்விக்ட் வார்டர் என்றால் நல்ல அடிமையாக இருந்து விடுதலை பெறக் கருதி, சிறையில் தொண்டு செய்யும் நீண்டநாள் தண்டனை பெற்ற கைதி.)

இந்தப் பாதுகாப்பான நிலையில்தான் நேரு பார்ப்பனர் திருச்சி நகரத்தில், திருச்சி மக்கள் முன்னிலையில் 'எங்களுக்கு அடங்கிக் கீழ்ப்பட்டுச் சூத்திரனாக இருந்தால் இரு. இல்லாவிட்டால் நாட்டைவிட்டு வெளியில் போ! போகாவிட்டால் ஜெயிலில் போடுவேன்' என்று எக்காளமிட்டுச் சென்றுவிட்டார்.

இந்தச் சமயத்தில் மந்திரிகளைப்பற்றி, அதிகாரிகளைப்பற்றி, போலீசாரைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட வாழ்வுக்கு ஏற்ப அதைப் பார்த்துக் கொள்ள அப்படி (அதாவது கான்விக்ட் வார்டர்களாக) நடந்துகொள்ள வேண்டியவர்க ளாவார்கள். அவர்களை மறந்துவிடுங்கள்! மறக்கும்போது அந்த இடங்களில் பார்ப்ப னர்கள் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை நினைவில் வைத்து மறந்துவிடுங்கள்.

தமிழ் மக்களே! இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களுடைய கடமை என்ன என்பதுதான் இப்போதைய பிரச்சினை.

ஆனால், அரசியல் சட்டம் எதற்காகக் கொளுத்தப்பட்டது? யாருக்காகக் கொளுத்தப் பட்டது? 3000 பேர் எதற்காகச் சிறைபிடிக்கப்பட்டார்கள்? நான் எதற்காகச் சிறைத் தண்டனை இடப்படுகிறேன்?

பார்ப்பனர்களைக் குத்தியதற்கா, கொன்றதற்கா? பார்ப்பனச் சேரியில் நெருப்பு வைத்துக் கொளுத்தினதற்கா? பார்ப்பனப் பெண்களை இம்சித்ததற்கா? இல்லவே இல்லை; இதற்காக இன்று யாரும் சிறையில் இல்லை.

குத்தச் சொன்னதற்காகவோ, கொல்லச் சொன்னதற்காகவோ, கொளுத்தச் சொன்னதற்காகவோகூட இன்று யாரும் சிறையில் இல்லை; என்றாலும், என் ஒருவன் பேரில் மட்டும்தான் அப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதுவும் 'வெள்ளரிப் பழத்திற்குப் பூண்போட்டுக் கெட்டிப்படுத்துவது' போன்ற குற்றம்தான் சாட்டப்பட்டிருக் கிறது; இது எப்படியோ போகட்டும். அதைப்பற்றித் தமிழர்களாகிய உங்களுக்குக் கவலை வேண்டாம்.

'சாதி காப்பாற்றப்படும் சட்டம் எங்களுக்கு வேண்டாம்; அதைத் திருத்து; சாதி ஒழிக்கப்பட வசதி செய்துகொடு' என்பதற்கு அறிகுறியாக—சாதியைப் பாதுகாக்க வசதி யுள்ள பாகத்தைக் குறித்த ஒரு துண்டுக் காகிதத்தை, அறிக்கை கொடுத்துக் கொளுத்து



படிப்பகம்

www.padippakam.com



வதன் மூலம் வலியுறுத்திக் காட்டியதற்காக குழந்தைகள், குஞ்சுகள், வயோதிகர்கள், பெண்கள், கர்ப்பப் பெண்கள், இளைஞர்கள் உள்பட 3000 மக்களை—அதுவும் கொளுத்தின மக்கள் 10,000 பேர்களில் பலவிதமாக 7000 பேர்களை விட்டுவிட்டு, 3000 பேர் களைச் சிறையில் அடைத்து—ஊசிப்போன சோளக் கஞ்சியையும் களிமொத்தையையும் கொடுத்து, உண்ணச் சொல்லி அடித்து, கடும் வேலை கொடுத்து, கொடுமைப்படுத்துகிற இந்த அட்டூழியத்திற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள்?

சிறையில் கொடுமைப்படுகிறவர்களில் 1, 2, 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக் காரர்களும், ஆண்டு ஒன்றுக்கு 1000, 5000, 10,000 ரூபாய்போல் வரும்படி உள்ளவர்களும் ஆன பல செல்வவான்களும், உயர்வாழ்வு வாழ்கின்ற சுக புருஷர்களும், அது போன்ற தாய்மார்களும், பகுதிக்கு மேம்பட்ட மக்களாக இருந்துவருவது அரசாங்கத்திற்கே தெரியும்.

அப்படிப்பட்ட மக்களையும் இப்படிக் கொடுமைப்படுத்துவதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

வெள்ளையன் ஆன அன்னியன் ஆட்சிக் காலத்தில் 'வெள்ளையனே வெளியேறு!' என்ற கூட்டத்தையும், வெடிகுண்டு ஏந்திய கூட்டத்தையும், தண்டவாளங்களைப் பெயர்த்து, இரயிலைக் கவிழ்த்த, தபாலாபீசுக்கும் நீதிஸ்தலத்திற்கும் இரயில்வே ஸ்டேஷன் கட்டிடங்களுக்கும் நெருப்பு வைத்துக் கொளுத்தி, கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்களை—ஆயிரக்கணக்கான உயிர்களை நாசப்படுத்தியவர்களையும் மனிதத் தன்மைக்கு மேலாகவே நடத்தினான்.

'உங்கள் நாட்டை நீங்கள் ஆண்டுகொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை' என்று வெள்ளையன் சொன்னான்.

'நாங்கள் உங்களுக்குப் பிடிக்கவில்லை யென்றால் நாங்கள் மனப்பூர்வமாய்ப் போய்விடுகிறோம். உங்கள் நாட்டை நீங்கள் ஒப்புக் கொள்ளுங்கள்' என்று சொல்லி ஒப்புவித்தானே தவிர, இந்தப்படி வடகோடியிலிருந்து தென்கோடிக்கு வந்து, தென்கோடி மக்களை—'என்னுடைய ஆட்சி, என்னுடைய சட்டதிட்டம், உங்களுக்குப் பிடிக்கவில்லை யானால்—நீங்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறி விடுங்கள்' என்று சொல்லவில்லை.

இந்தப் பேச்சு நேருவின் கெட்டிக்காரத்தனத்தையும் வீரத்தையும் காட்டுகிறதா? அல்லது, தமிழர்களின் மானங்கெட்ட தன்மையையும், மடமையையும், கோழைத் (சோதா) தனத்தையும் காட்டுகிறதா என்பதுதான் இங்கு சிந்தித்துப் பார்க்கத்தக்கதாகும்.

நேரு சாதியார் இந்த நாட்டில் எவ்வளவு கட்டுப்பாடு, ஒற்றுமை, தங்கள் இன நலத்தில் கவலை, முயற்சி முதலியவைகளோடு இருந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை யும்—நம் சாதியார் என்பவர்கள் எவ்வளவு கவலை ஈனமாய், ஒற்றுமை இன்றி, இனத்தைப் பற்றிய உணர்ச்சியே இல்லாமல் சுயநலவாழ்வு வாழ்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழனைப் பார்த்து,

'ஓ......தமிழர்களே! நீங்கள் எங்களுக்கு வைப்பாட்டி மக்களாய், இழிமக்களாய் சூத்திரர்களாய், கீழ் மக்களாய் இருந்தால் இந்த நாட்டில் இருங்கள்; இஷ்டம் இல்லா விட்டால் இந் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்' என்று சொல்ல இந்த நேருகூட வேண்டிய தில்லையே? இன்னமும் பரம முட்டாளும் படு கோழையும், பிழைக்க வழியற்றுத் தெருவில் பிச்சையெடுத்து வயிறு பிழைக்கும் ஒரு பார்ப்பன விதவைகூடப் போதுமானதாகுமே?

இதில் நேருவுக்கு ஒன்றும் கெட்டிக்காரத்தனத்தையோ, துணிவையோ, வீரத் தையோ பொருத்த வேண்டியதில்லை; தமிழனின் மானமற்ற சுயநல ஈனப்பிழைப்பும் கோழைத்தனமும், நாட்டைக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் தன்மையும்தான் காரணமாகும்.



கொலைக் குற்றப் பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டு, முச்சலிக்கா பாண்டுமீது நான் வெளியில் இருக்கிறேன்; வழக்கு விசாரணை 12-ந் தேதி நடக்க இருக்கிறது; நான் இந் நாட்டுக்கு 100-க்கு 90 பேர்களைக் கொண்ட திராவிடர் கழகத்திற்குத் தலைவன்; இந்த நிலையிலும் சட்டம் எரித்தார்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டு இனியும் விசாரணை செய்து தீர்ப்புச் சொல்லவேண்டிய 2000-க்கு மேற்பட்ட கழகத் தோழர்கள்—அதாவது என்னைப் பின்பற்றுகிறவர்கள் சிறையிலும் விசாரணையிலும் இருக்கிறார்கள்; இந்த நிலையிலும் ஆட்சித் தலைவன் என்னும் பேரால் ஒரு நபர் இங்கு வந்து—அதாவது, எங்கு விசாரணை நடக்கிறதோ அந்த ஊருக்கு வந்து, எந்த நீதிபதியும் மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்க வேண்டியவர்களோ, விசாரிக்கிறார்களோ—அந்த மாஜிஸ்ட்ரேட்டையும் நீதிபதியையும் அழைப்பு அனுப்பி வரவழைத்து எதிரில் உட்காரவைத்து அவர்களைப் பார்த்து—'இவர்கள் (இந்தக் குற்றவாளிகள்) சிறையிலிருக்க வேண்டியவர்களாவார்கள்! இவர்கள் மன்னிக்கப் படக் கூடாதவர்கள்; மன்னிக்கத் தக்கவர்கள் அல்லர்!' என்று இடிமுழக்கம் செய்கிறார் என்றால், இந்த ஆட்சி எவ்வளவு நீதியும், நேர்மையும், நாணயமும் ஆன ஆட்சி என்பதைத் தமிழர்கள்—மானம், ஈனம் பற்றி கவலைப்படாத தமிழர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

இதில் ஒரு குறிப்புக்கு இடமான விஷயம் என்னவென்றால், இதே நேரு, முதல் நாள் —8-ந்தேதி கொலை, கொள்ளை, கொளுத்தல், நாசவேலை, உயிருடன் தூக்கி நெருப்பில் போட்டுப் பொசுக்குதல், சுமார் 100—200 பேர்களுக்கு மேல் உயிரிழக்கச் செய்திருத்தல் ஆகிய காரியங்களைப் பற்றிப் பேசும்போது, விவகாரம் விசாரணையிலிருப்பதால் அதைப் பற்றிப் பேசுவது நீதியாகாது, நேர்மையாகாது என்று சொல்லிப் பேசாமல் வாயை மூடிக் கொண்டு வந்து—மறுநாள் காலையில் விசாரணை நடக்கும் இடத்திற்கே வந்து—நீதிபதி அவர்களிடத்திலேயே நேரில், 'இவர்கள் ஜெயிலிலிருக்க வேண்டியவர்கள் (நல்லபடி கடின மாகத் தண்டிக்கப்படவேண்டும்; இல்லாவிட்டால் உங்களுக்கு உத்தியோகம் நிலைக்காது, பிரமோஷன் இருக்காது)' என்று சொல்லுவதுபோல்—அதுவும் பெரிதும் பார்ப்பன நீதிபதிகளிடமே எக்காளம் போட்டுச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்றால் இந்த ஆட்சி, சட்டம், ஆட்சிக்கொடி மாத்திரமல்லாமல்—ஆட்சிமுறை, ஆட்சி நீதி, ஆட்சிப் பீடம் ஆகியவையும் சுட்டுப் பொசுக்க வேண்டியவை ஆகுமா, ஆகாதா? இதில் நமக்கு நலமான வாழ்வோ நீதியோ கிடைக்குமா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள், தமிழர்களே! சிந்தித்துப் பாருங்கள், தமிழர்களே! சிந்தித்துப் பாருங்கள், தமிழர்களே!

['விடுதலை'-தலையங்கம்—11-12-1957]

தலைவரவர்களே! தோழர்களே!

வாமனாவதாரக் கதையில் காணப்படும் அசுரன் மாபலி சக்கரவர்த்தி, ஒரு பெரிய பணக்காரனும் பேரரசனுமான திராவிடன் ஆவான். அவனை ஒழிக்கப் பார்ப்பனர்கள் எண்ணினார்கள். குள்ளப் பார்ப்பானாக வந்து மகாவிஷ்ணு மூன்றடி மண் கேட்டான். உலகத்தையும் வானத்தையும் இரண்டடியால் அளந்துவிட்டான். மூன்றாவது அடிக்கு இடங் கேட்டான். இதோ என்று மாபலி தனது தலையைக் காட்டினானாம். விஷ்ணு காலால் மிதித்து அவனை அழித்துவிட்டான்.

இம் மாதிரியாகவே போராட்டங்களெல்லாம் முறையாக நடந்திருக்கின்றன.

சாதி ஒழியவேண்டுமென்றால் நாம் பார்ப்பான் ஒழியவேண்டும் என்று சொல்கிறோம் என்கிறார்கள். ஆம், சாதிக்கு ஆதாரம் எது என்று சொல்லப்படுகிறதோ—மதமாய் இருந் தாலும் கடவுளாயிருந்தாலும் ஒழிக்கப்பட வேண்டியதுதான்.

இதுவரை பார்ப்பான் ஆண்டது கிடையாது; சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டார்கள் என்றால், அவர்களெல்லாம் பார்ப்பானுக்கு ஆதரவாகவே ஆண்டார்கள். பார்ப்பானுக்கு ஆதரவாக நடக்கவில்லை என்று யாராவது சொல்லமுடியுமா? இன்று

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பான் ஆளுகிறான் என்றால் நிலைமை அப்படிக் கொண்டுவந்துவிட்டது. அதாவது, சாதியை ஒழிக்கக் கூடிய தருணம் ஏற்பட்டுவிட்டதுதான் பார்ப்பானே ஆளவேண்டி ஏற்பட்டது! இல்லையென்று சொல்லமுடியுமா?

1885-ல் காங்கிரஸ் துவங்கிற்று என்றால் நாடு வெள்ளைக்காரனிடமிருந்து பிரித்துக் கொண்டு நாம் ஆளவேண்டும் என்றா துவக்கிற்று? பார்ப்பான் ஆதிக்கம் மேலும் மேலும் பலப்படுத்த வேண்டும் என்றுதான். பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் என்ன வந்தது? அன்று இந்த நாட்டில் முஸ்லிம் ஆட்சி வலுத்திருந்தது. வெள்ளையனிடம் வாதாடி உரிமை பெற்றார்கள். அன்று வெள்ளையன் ஆதிக்கம் இல்லாத இடங்களில் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம் இருந்துவந்தது.

காங்கிரசார் முதல்முதலாக உத்தியோகம் கேட்டார்கள். அதிகாரம், பணம், பதவி இப்படியே படிப்படியாகக் கேட்டார்கள். ஆதாரம் என்ன என்பீர்கள். 1885 முதல் 1920 வரை சுமார் 35, 40 வருடகாலம் வரை, 'பிரிட்டிஷ் ஆட்சி நீடூழி வாழவேண்டும்; பிரிட்டிஷ் அரசர் நீடூழி வாழவேண்டும்' என்று பக்தி விசுவாசத்துடன் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மற்றவர்களாகிய முஸ்லிம்கள், ஜஸ்டிஸ் கட்சியார்—எல்லாரும் பங்கு கேட்கவே ஒரு நெருக்கடி ஏற்பட்டது. வெள்ளையனுக்குத் தொல்லை தர ஆரம்பித்தார்கள். அவனுக்கும் இவர்கள் ஆள்வதில் விருப்பமில்லை. வெள்ளையன் நாணயமாக நடவாமல் பார்ப்பானிடம் சாவியைக் கொடுத்தான்.

பார்ப்பானோடு போட்டியிட்டு வெற்றிபெற முஸ்லிமால்தான் முடிந்தது. ஒரே தலைவரின் கீழ் நின்று ஒற்றுமைப்பட்டனர். உயிரிழக்கவும் துணிந்தனர். ஜின்னாவின் காலத்திலேயே உரிமை பெற்றனர். நாம் அப்படி இல்லாமல் பல சாதி, பல்வேறு உட்பிரிவு காரணமாகவும் ஒற்றுமையில்லாதபடியாலும், சுயநலம் காரணமாகவும் அடிமையாகவே இருக்க நேர்ந்தது; பார்ப்பான் சர்வாதிகாரியானான்.

எப்படி என்றால், சாதியை, மதத்தை, சமுதாயத்தை, அந்தஸ்தை, நிலை நிறுத்துவது அடிப்படை உரிமை (Fundamental Right) யாக ஆக்கிச் சட்டம் செய்து கொண்டான். அதைப்பற்றி யாரும் பேசக்கூடாது. அசெம்பிளியில், பார்லிமெண்டில் சத்தியம் செய்வதென்ன? 'இந்திய அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு அடங்கி பக்தி விசுவாசத்துடன் நடப்பேன்' என்றுதான் சத்தியம் செய்கிறான். அசெம்பிளியிலோ பார்லிமெண்டிலோ அடிப்படை உரிமைகள் என்பவை பற்றி யாரும் பேசமுடியாது!

ஆகவேதான், எங்கள் முதல் போராட்டம் 'பிராமணாள்' என்று போடாதே என்று துவங்கிற்று. ஏன், பிராமணாள் என்று போடுகிறாய்? அது எங்களை இழிவு படுத்துகிறது! வேறு போடேன்—'சைவ உணவு' என்பது போல. வாய்தா கொடுத்து, அழிக்கா விட்டால் நாங்கள் அழிப்போம் என்றோம்; மேற்கொண்டு வளர்ந்தது—இப்போது சாதியை ஒழிப்பதுதான் நமது முதல் இலட்சியம்.

சாதி ஒழியக்கூடாது என்று சொல்ல ஆளில்லை. இராசகோபாலாச்சாரிகூட சொல்லிவிட்டார்—ஜனநாயகமும் சாதியும் மாயை, பித்தலாட்டம் என்பதாக! பார்ப்பனர்களைப் பாதுகாக்க இருக்கிற ஒரே ஆள் அவர்தான்.

இந்த ஆட்சியை ஒழிக்காவிட்டால் வேறு எப்படி சாதியை ஒழிக்க முடியும்? அரசாங்கத்தை ஒழிக்க நம்மாலாகுமா? திராவிடர்களான—மற்ற கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் யாரும் சொல்லவில்லையே என்று, நாம் டில்லியிலிருந்து விலகிக்கொள்ளாமலிருக்க முடியுமா? இலங்கை, பர்மா, பாகிஸ்தான் பிரியவில்லையா? கிளர்ச்சிமூலம்தான் நம் நாட்டைத் தனியாகப் பிரித்துக்கொள்ள முடியும்.

பெங்களூரை மைசூர் நாட்டிலிருந்து பிரிக்க முடியாது; அதுபோல, சென்னையிலுள்ள தஞ்சையைப் பிரிக்க முடியாது. ஆனால், தமிழ்நாடு என்பதை டில்லியிலிருந்து



பிரிப்பது அப்படியல்ல. டில்லி ஆட்சி என்பது கூட்டாட்சிதான். டில்லிக்கு நாம் அடிமைகளல்லரே! பெங்களூர் வேண்டுமானால், மைசூருக்கு அடிமை, கட்டுப்பட்டது என்று சொல்லலாம். சென்னைக்கு சேலம் மாவட்டம் போல, டில்லிக்காரன் நமக்குச் சக்கரவர்த்தி (Emperor) அல்லன். நமக்கும் அவனுக்கும் சம்பந்தமில்லை. மைசூரும், சென்னையும் ஒரு கூட்டாட்சி நடத்துகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தக் கூட்டாட்சிக்கு யார் எஜமானர்? யாருக்காவது மற்றவரைப் பிடிக்கவில்லை என்றால் பிரிந்து போகவேண்டியது தானே? ஆனால், சட்டத்திலே பிரிவதற்கு உரிமையில்லை; வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம்.

சக்கரவர்த்தி ஆட்சி நடந்த காலத்தில் ஜின்னாவுக்கு நாடு பிரித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையைச் சொன்னவன் நான்தான். பிரியவில்லையா?

நாடு பிரிவது, பொதுவாக எந்த அரசியல் சட்டத்திற்கும் விரோதமல்ல. சாதி ஒழிய வேண்டும் என்றார். அதற்கு மதம் இடம் தரவில்லை, பார்ப்பான் இடம் தரவில்லை, சட்டம் இடம் தரவில்லையானால் இவற்றிலிருந்தெல்லாம் பிரிந்து கொள்ள வேண்டியது தானே? பிரிந்தால் ஆபத்து, கஷ்டம் என்கிறார்களே—எப்படி ஆபத்து? பிரிந்துவிட்டால் வடநாட்டுக்குப் போகிற வருமானம் நமக்கு மிச்சமில்லையா? அவனுக்கு வேண்டுமானால் வருமானம் நஷ்டமாகும்.

தமிழ்நாடு தமிழருக்கானது என்றால், அவர்கள் எல்லாம் இங்கு வருவார்கள்; அவர்கள் எல்லாம் வருவார்களானால் இங்கு இருக்கும் அன்னியர்கள் வெளியே போக வேண்டியது தானே? பாகிஸ்தானில் இருக்கும் இந்தியர்களை அவர்கள் 'போ' என்று சொல்லவில்லையா?

நமது தமிழ்நாடு ஏறத்தாழ நாலுகோடி மக்களைக் கொண்டது. ரஷ்யா, அமெரிக்கா, சீனா, ஜப்பான் முதலிய 7–8 நாடுகள் நம்மைவிடப் பெரியவை. 25 லட்சம் மக்கள் தொகை கொண்ட நாடெல்லாம் தனி நாடு; அதுவும் ஐ. நா. வில் மெம்பராகவே இருக்கின்றது. 4 கோடி மக்களைக்கொண்ட தமிழ்நாட்டுக்கு என்ன நஷ்டம் வந்துவிடும்? பெரிய நாடாக மட்டுமே இருப்பதால் இலாபம் என்ன? பாகிஸ்தான்காரன் இந்திய நாட்டு எல்லையில் சுடுகிறான், உதைக்கிறான்; கிராமங் கிராமமாகச் சேர்த்துக்கொள்கிறானே! என்ன செய்ய முடிந்தது? அதுதான் போகட்டும். கோவாவை என்ன செய்தாய்?

முன்பு நான் இந்த ஊருக்கு வந்திருந்தபோதுதான் சொன்னேன்: கோவாவில் இந்தியர்கள் சுடப்பட்டதற்கு யார் காரணம்? நேருவும் பிரசாதும்தான்; நியாய விசாரணை நடத்த வேண்டுமானால் இவர்களைத்தான் அதற்குக் குற்றவாளிகளாக்கித் தண்டிக்கவேண்டும் என்றேன். போர்ச்சுகீசியர்களுடைய மொத்த ஜனத்தொகை $1\frac{1}{2}$ கோடிகூட இருக்காது. அவனையே ஒன்றும் செய்யமுடியாத போது தமிழ்நாட்டை என்ன செய்துவிட முடியும்?

இதற்கெல்லாம் கடுதாசியைக் கொளுத்தினால் தீர்ந்து விடுமா என்பீர்கள். ஆம், தமிழ்நாடு நீங்கிய இந்திய யூனியன் படத்தைத் தீவைத்துக் கொளுத்தினால், நம்முடைய எதிர்ப்பைக் காட்டினதாக ஆகும். முன்பு இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்தினோமே என்ன ஆயிற்று? வெளிநாட்டுப் பத்திரிக்கைகளில் எல்லாம் செய்தி வெளியாயிற்றே! இந்திய யூனியன் படத்தைக் கொளுத்தினார்கள் என்பதை வெளிநாட்டார் அறிந்தால் இந்த ஆட்சியை என்னவென்று எண்ணுவார்கள்? இவனுக்கென்ன மதிப்பு வரும்? இது என்ன ஜனநாயக ஆட்சியா, சர்வாதிகார ஆட்சியா, என்று நினைக்கமாட்டானா?

இந்திய யூனியன் படத்தைக் கொளுத்தியும் ஒன்றும் ஆகவில்லையென்றால் வேறு என்ன செய்வது என்பது எனக்குத் தெரியும்.

[குமரி மாவட்டம் ஈத்தா மொழியில் சொற்பொழிவு—'விடுதலை' 20-12-1958]

படிப்பகம்

www.padippakam.com



'நம் தமிழ்நாடு இந்தியக் கூட்டாட்சியில் இருந்து, அதாவது வடநாட்டான் ஆதிக்கத்தில் இருந்து பிரிந்தால் பெரும் கேடு ஏற்பட்டுவிடும்' என்றும்,

'ஒன்று பிரிந்ததே—அதாவது முஸ்லிம்கள் வாழும் நாடு முஸ்லிம்களுக்கு என்று ஆகிவிட்டதே பெரிய கேடாக இருக்கிறது' என்றும் காங்கிரஸ்காரர்கள்—பண்டித ஜவஹர்லால் முதல் அனேகமாக எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும் கூப்பாடு போட்ட வண்ணம் இருந்தார்கள்.

ஆனால், பிரிந்தால் என்ன கேடு ஏற்படும் என்று இதுவரை குறிப்பிட்ட எவரும் எதையும் கூறவில்லை.

இந்திய யூனியன் ஏற்பட்ட நாள் முதல் இன்றுவரை தமிழ்நாடு பொருளாதார ஏற்றத்திற்கு, யூனியன் இந்தியா எத்தனை கோடி ரூபாய் கைப்பொறுப்பில் இருந்து செலவு செய்திருக்கிறது? அப்படி ஏதாவது இருந்தாலும் அதைத் தமிழ்நாடு, இந்தியா தவிர்த்த மற்ற நாடுகளில் இருந்து சரிசெய்துகொள்ள முடியாதா?

உண்மையைச் சொல்லவேண்டுமானால், இந்திய யூனியன் காரணமாகத் தமிழ்நாட்டைத்தான்—பஞ்சாப் முதல் பம்பாய், வங்காளம் வரை உள்ள முதலைகள் தமிழ்நாட்டிற்குள் புகுந்து, சிறு மீன்களை விழுங்குவதுபோல் விழுங்கிக்கொண்டு போகின்றனவே அல்லாமல், தமிழ்நாடு எந்தப் பொருளாதார ஏற்றம் பெற்று இருக்கிறது என்று சொல்ல முடியும்?

தமிழ்நாடு பிரிந்தால், அது சிறு நாடு ஆகிவிடுமே என்கிறார்கள். இலட்சக்கணக்கில் மக்கள் உள்ள சிறு சிறு நாடான கொழும்பு, பர்மா முதலிய நாடுகளும், அய்ரோப்பாவில்—ஆப்பிரிக்காவில்—ஆசியாமைனர் முதலியவற்றில் உள்ள சுமார் 100 நாடுகள்—சற்றேறக் குறைய தமிழ்நாடு போன்ற நாடுகள்—இன்று பொருளாதாரம் மாத்திரமல்லாமல், மற்றும் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து பயமற்று மானத்துடன் முழுச் சுதந்திரமாய் வாழுகின்றன.

ஒன்று நான் சொல்லுவேன்; உறுதியுடன் சொல்லுவேன்: வெள்ளையன் சென்றவுடன் தமிழ்நாடு தனி நாடாக ஆகியிருக்குமேயானால், முதலாவது, தமிழனின் சமுதாய இழிவு ஒழிந்திருக்கும்.

இரண்டாவது, தமிழன் பகுத்தறிவின் உச்ச நிலையை அடைந்து, இன்றுள்ள காட்டுமிராண்டித் தன்மையில் தன் தாய்நாட்டில் ஈனப் பிறவி மனிதனாக—கீழ் சாதியாக—வயிற்றுப் பிழைப்புக்கு, பதவிக்கு எதையும் விற்றுப் பிழைக்கும் ஈனத் தன்மை நல்ல அளவுக்கு மறைந்திருக்கும்; பதவிக்காக வடநாட்டானுடையவும் பார்ப்பானுடையவும் பெருவிரலைச் சூப்பும் ஈனத்தனம் ஒழிந்திருக்கும்.

மற்றும், பிறவி உயர்வு தாழ்வு, அயோக்கியத் 'தகுதி—திறமை' விகிதாச்சார உரிமைத்தனம் ஒரு சிறு சின்னஞ் சிறு கூட்டத்திற்கு அபரிமிதமான ஏகபோக உரிமை; பெரும், மாபெரும் கூட்டத்திற்கு இழிதொழிலில் பிழைக்கவேண்டிய மானமற்ற தன்மை முதலிய இவைகள் ஒழிந்திருக்கும்.

இன்று இந்திய யூனியனின் முக்கிய கொள்கைகள் என்னவென்றால், சாதி காப்பாற்றப்படவேண்டும்; மேல் சாதியான் மேல்பதவியில் இருக்கும்படியான தன்மைகள், முறைகள், பரம்பரைப் பழக்க வழக்கங்கள் இவை தவிர, யூனியனில் வேறு எந்த, மற்ற நாடுகளில் இல்லாத சிறப்பான, குறிப்பான 'நன்மை'கள் இருக்கின்றன?

ஒன்று சொல்லுவேன்; யூனியனில் தமிழ் நாட்டுக்கோ தமிழர்களுக்கோ நன்மை இருக்குமானால்—யூனியன் அரசியலில் இருப்பது போதாமல், பலாத்காரப் புணர்ச்சிக்காகத் தண்டிக்கும் தண்டனைக் காலத்தைவிட அதிக தண்டனை விதிக்கும்படியான அளவுக்கு, பிரிவினைத் தடைச் சட்டம் விதிக்கத் துடிப்பானேன்?



['விடுதலை'-தலையங்கம்—9-6-1972]

## 6. பதவியா, தனிநாடா?

தலைவரவர்களே! தோழர்களே!

மந்திரி பதவி வந்தாலும் வேண்டாம்; எந்தப் பதவி வந்தாலும் வேண்டாம் என்று தானே நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம்!

கவர்னராக இருந்த ஆர்தர் ஹோப், என்னை மந்திரிசபை அமைக்கும்படி மிகவும் கெஞ்சி வேண்டிக் கொண்டாரே! 'இந்த மாகாணத்தில் மந்திரிசபை இல்லாததால் இந்தியா முழுமைக்குமே மந்திரிசபை அமைக்க முடியவில்லை; ஆகவே, தாங்கள் மந்திரிசபை அமைக்கவேண்டும்' என்று அவர் கெஞ்சினாரே! எங்களுக்கு மந்திரி பதவி காத்துக் கிடந்ததே!

இன்னமும் சொல்கிறேன்; எழுதிவேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். ஆச்சாரியாரே என்னிடத்தில் வந்து, 'இந்தச் சண்டை சமயத்தில் (1936–39) அட்வைசரி சர்க்கார் நியமிக்க அவர்களை விட்டுவிடுவது ஆபத்து; தயதுசெய்து நீங்கள் மந்திரி பதவி ஏற்றுக் கொள்ளுங்கள். வேண்டுமானால் எங்கள் ஆட்களிலும் 2, 3 பேரை அனுப்பி, நானும் ஒரு மந்திரியாக இருந்து உதவி செய்கிறேன்' என்று சொன்னார்.

நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். ஏன்? மந்திரி பதவி ஏற்றால் நம்மால் என்ன செய்யமுடியும்? 8 அவுன்ஸ் அரிசி என்பதை 9 அவுன்ஸாக ஆக்க முடியுமா? ரூபாய்க்கு 3 பைசா விற்பனை வரி என்பதை மாற்றி 2 பைசா வாங்க முடியுமா? ஒன்றுமே செய்யமுடியாதே! சூத்திரக் கயிறு டெல்லியில் அல்லவா இருக்கிறது? இப்போது போனால்—இலஞ்சம், கொள்ளை, உறவினர்களுக்கு உத்தியோகம் தேடித்தர முடியுமே தவிர, வேறென்ன செய்ய முடியும்? இன்றைய நிலையில் பதவிக்குப் போனால் யோக்கியனும் அயோக்கியனாய் விடுவானே!

நாங்கள் பதவி ஏற்கவேண்டுமானால், பஞ்சாயத்து போர்டு, முனிசிபாலிட்டியைப் போல் மாகாண சர்க்காரை நடத்தும் அளவுக்கு மத்திய சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் ஒழிய வேண்டும்; மத்திய சர்க்கார் ஆதிக்கம் நம்மீது இருக்கக் கூடாது.

பார்ப்பனர்கள் எழுதிவைத்த சரித்திரப்படியே சேர, சோழ, பாண்டியர்கள் என்ற மூவேந்தர்கள் இங்கு ஆண்டதாக இருக்கிறது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகள் பிற்காலத்தில் ஏற்பட்டவை. தமிழைத் தவிர—வடநாட்டு சம்பந்தமில்லாத இலக்கியமே இல்லையே, மற்ற மொழிகளில்! வெள்ளையன் வரும்வரை நம்மவர்கள்தாமே ஆண்டார்கள்? வெள்ளைக்காரன் நம்மவர்களிடத்திலிருந்துதானே நாட்டை வாங்கினான்?

'கர்ப்ப ஸ்திரீகள் பிட்டுத் தின்றதைத் தவிர—பகைவர்களின் காலடி படாத மண்' என்று அவ்வளவு சிறப்பாக இருந்த நாடுதானே இது!

அடுத்துக் கெடுத்து ஆரியம் வென்றதே தவிர, போர் செய்தா வென்றது?

ஆண்ட அரச பரம்பரையினர் இழிந்தவர்களாய், தேவடியாள் மக்களாய் ஏன் வாழ வேண்டும்? பாடுபடுவது நம்மவர்கள்; கட்டடம் கட்டுபவர்கள் நம்மவர்கள்; உழுகிறவர்கள், நாட்டை அழகு படுத்துகிறவர்கள் நம்மவர்கள். இத்தனை பணிகள் செய்தாலும்—நாம் இழிந்த மக்களாய், கீழ் சாதிக்காரர்களாய் வைக்கப்பட்டிருக்கிறோம் என்றால் என்ன நியாயம்?

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் நாட்டில் இருக்கும் பெரிய பெரிய கோயில்களையெல்லாம் கட்டிவைத்தது யார்? காணிநிலம் எந்தப் பார்ப்பனனாவது, எந்தக் கோவிலுக்காவது எழுதிவைத்திருக்கிறானா? ‘உன் சவுகரியத்திற்காகக் கோயில்களும் அக்கிரகாரமும், கட்டிக்கொடுத்து—உன் சுக வாழ்வுக்கு வழிதேடிக் கொடுத்தவர்கள், சூத்திரர்களா?’ என்று ஏன் பார்ப்பானைக் கேட்கக் கூடாது! பார்ப்பான் உழுதால் பாவம் என்று எழுதிவைத்துக்கொண்டு, நிலத்தில் இறங்காமலேயே வாழ வழி வகுத்துக் கொண்டானே? உழுது அறுவடைசெய்ததைத் தின்பது மட்டும் புண்ணியமாகுமா? ஒருவன் உழைக்க, அதன் பலனை மற்றவன் அடையவேண்டும் என்று ஆண்டவன் எழுதிவைத்தான் என்கிறானே, இதுவா வேதம்?

பிச்சைக்கு வந்தவன் பிரபுவாகவும், நாட்டிற்கு உரியவன் பஞ்சையாகவும் ஓட்டாண்டியாகவுமா இருக்கவேண்டும்?

[மணப்பாறையில், 27-3-1950-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 31-3-1950]

## 7. குடியாட்சி என்றால் என்ன?

தலைவரவர்களே! தோழர்களே!

இது உண்மையில் குடிஆட்சியல்ல. இதற்கு முன் ஆண்டிருந்த வெள்ளையனுக்கு இலஞ்சம் கொடுத்து, அவனுடைய சுரண்டலுக்கு நிரந்தர வசதி செய்துகொடுத்து ‘மேட் ஓவர்’ (Made over) செய்துகொள்ளப்பட்ட ஆட்சிதான். தங்கள் பேருக்கு மாற்றிக் கொள்ளப்பட்ட ஆட்சிதான்.

காங்கிரஸ்காரர்கள் வெள்ளையனை வெற்றிகொண்டு, இந் நாட்டு ஆட்சியைப் பெற்றவர்களாகார். வெள்ளையன்தான், தான் கொடுத்த வாக்குறுதிப்படி ஆட்சியை இவர்களிடம் ஒப்படைத்தான்.

இக் குடிஅரசுச் சட்டத்தைத் தோற்றுவித்தவர்களும் ஒரே கட்சிக்காரர்கள்தாம். அதுவும் வெள்ளையன் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தாம். நாட்டில் 100-க்கு 10 பேரான பணக்காரர்களுக்கும் படித்த பார்ப்பனர்களுக்கும்தான் இவர்கள் பிரதிநிதியாவார்களே ஒழிய, மற்ற 90 பேருக்கும் இவர்கள் பிரதிநிதிகளாக ஆகமாட்டார்கள்.

குடிஆட்சி என்றால் குடிமக்களின் பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சியாக இருக்க வேண்டும். குடிஅரசுச் சட்டம் என்றால் எல்லாக் குடிமக்களின் பிரதிநிதிகளாலும் தோற்றுவிக்கப்பட்ட சட்டமாயிருக்கவேண்டும். இந்தச் சட்டத்தை உண்டாக்கினவர்களுக்கு அவ்விதம் கூறிக்கொள்ளத் தகுதியில்லை. ஏனெனில், அத்தனை பேருமே காங்கிரஸ் மேலதிகாரத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

எனவே, நமக்குக் குடிஆட்சி என்றால், நம் நாடு தனி நாடாகி நம்மவன் ஒருவன் அக் குடியாட்சியின் தலைவனாக இருக்கவேண்டும். நமக்கு வேண்டிய பொருள்களை நாமே வாங்க உரிமை உடையவராக ஆகவேண்டும்; நம் நாட்டு வளப்பம் நமக்கே சொந்தமாக வேண்டும்; இந் நாட்டுப் போக்குவரத்து மூலம் வரும் இலாபம், வருமான வரி மூலம், புகையிலை வரி மூலம் வரும் இலாபம், தபால் தந்தி இலாக்காக்கள் இவற்றின் மூலம் வரும் இலாபம் இவையாவும் இந் நாட்டவரான நமக்கே உரியதாகவேண்டும். அதுதான் உண்மைக் குடியரசாகும். இன்று வடநாட்டான்தான் இத்தனை இலாபத்திற்கும் உரிமையுடையவனாக இருந்துவருகிறான்.

இன்று பிரிவினை கேட்கும் நான் கிழவனாக இருக்கலாம். அதன் காரணமாக பலாத்காரத்தில் நம்பிக்கையற்றவனாக இருக்கலாம். நாளை நம் இளைஞர்களும் இப்படியே இருந்துவிடமாட்டார்கள். இரத்த வெள்ளத்தின் மத்தியில் பிரிவினை கேட்பார்கள்; கத்தி முனையில் பிரிவினை கேட்பார்கள். ஆட்சியாளர்கள் இப்படியெல்லாம் நடக்கவிடாமல் நம் நாட்டை ஒழுங்காக நமக்குப் பிரித்துக்கொடுத்துவிட வேண்டும் என்றுதான் நான் ஆசைப்படுகிறேன்.



[சென்னை சைதாப்பேட்டையில், 25-1-1950-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 27-1-1950]

## 8. சட்டசபை நுழைவும் நாட்டுப் பிரிவினையும்

தோழர்களே!

நமது நாடு விடுதலை பெறுவதற்கு—வெளி இராச்சியங்கள் நம்முடைய நாட்டைச் சுரண்டிக்கொண்டு இருப்பதிலிருந்து விடுவிப்பதற்கு ஆகிய இக் காரியங்களைச் செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்களா என்று பாருங்கள்.

சிலர் கூறுகிறார்கள், ‘நீங்கள் சொல்லுகிற சங்கதிகளெல்லாம் முற்றிலும் உண்மைதான். இந்த நாட்டை வெளியார்கள் ஆதிக்கத்திலிருந்து விடுபடச்செய்து சுதந்திர நாடாக்க வேண்டியதுதான். ஆனால், அதற்கு இப்படி வெளியில் இருந்து பேசிக்கொண்டு இருக்கக்கூடாது. தேர்தலில் நின்று சட்டசபைக்குப் போகவேண்டும்’ என்று சொல்லுகிறார்கள். அதாவது, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி (Power Politics) அதன் மூலம் போராடவேண்டும் என்கிறார்கள்.

நான் கூறுகிறேன், அங்கே நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது. நாம் ஒன்றும் செய்ய முடியாதபடியான சட்டதிட்டங்களை அங்கு அமைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாம் போய், திராவிடநாடு தனிநாடாகப் பிரியவேண்டும் என்று என்னதான் ஏகமனதாகத் தீர்மானித்தாலும், சட்டசபைக்குத் தலைவராக இருப்பவர், ‘இந்த மாதிரியான தீர்மானம் இங்கு செய்வதற்குச் சட்டத்தில் இடம் இல்லை’ என்று கூறித் தள்ளிவிடுவார்கள். இதைச் செய்யமுடியாமல் அங்கு போய் நாம் இருக்கவேண்டும் என்கின்ற அவசியம் ஒன்றும் நமக்கு இல்லை. எனவேதான், அத்தகைய சட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று நாம் வெளியில் இருந்து போராடி வருகிறோம்.

ஒரு வீட்டை இடிக்கவேண்டும் என்றால் அந்த வீட்டுக்கு வெளியில் இருந்து கொண்டுதான் இடிக்கவேண்டுமே தவிர வீட்டுக்குள் இருந்துகொண்டே இடித்தால்—வீடு நம்மீதே விழுந்து, நாமே அழிய வேண்டியதுதான். எனவேதான், நாம் வெளியில் இருந்து மக்களுக்குப் பகுத்தறிவை உண்டாக்கும் பணியில் வேலைசெய்கிறோம்.

[ஈரோட்டில், 13-2-1951-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 20-2-1951]

## 9. நாடு கேட்பது தேசத் துரோகமா?

தோழர்களே!

நாம் வேறு எந்த நாட்டானையாவது, ‘இந்த நாட்டிற்கு வந்து ஆட்சி செய்!’ என்று கூப்பிடுவதாய் இருந்தால்—அது தேசத் துரோகம் ஆகும். ஒரு அமெரிக்கனை, ஜப்பான்காரனை, பிரெஞ்சுக்காரனைக் கூப்பிட்டால், அது வேண்டுமானால் தேசத் துரோகம் ஆகும்.

ஆனால், நாம், இங்கே இருக்கிற அன்னிய இராஜ்யத்தானை ‘வெளியே போ!’ என்றால், அது எப்படித் தப்பு ஆகும்? எப்படித் தேசத் துரோகம் ஆகும்? சொல்லட்டுமே யாராவது?

எங்கள் நாட்டிலே—சென்னை இராஜ்யத்திலே, சென்னை இராஜ்யத்தார் அல்லாதவர் இருக்கக்கூடாது; அதிகாரம் செய்யக்கூடாது; அவனுக்குச் சுரண்ட உரிமை, வகை இருக்கக்கூடாது என்று சொன்னால் எப்படிக் குற்றம் ஆகும்?



படிப்பகம்

www.padippakam.com



இன்றைய தினம் நமக்குச் சுதந்திரம் இல்லை என்பது மாத்திரம் அல்ல; நம்மை—நம் இராஜ்யத்தை வடநாட்டான் தான் ஆள்கிறான். எனவே, அவர்களுடைய ஆதிக்கம்—அந்த ஆட்சி ஒழியவேண்டும் என்று சொல்லுகிறேனே தவிர, இந்த நாட்டிற்கு வேறு ஒருவனை நாங்கள் அழைக்கவில்லை.

அமெரிக்கன் வந்தாலும் இடம் கொடுக்கமாட்டோம், ஜப்பான்காரன் வந்தாலும் இடம் கொடுக்கமாட்டோம்.

நாங்கள் கூறுவது எல்லாம்—எங்கள் நாட்டை, எங்கள் இராச்சியத்தான் அல்லாத அன்னியன் யாரும் ஆளக்கூடாது; நாங்களே இந்த நாட்டை ஆளவேண்டும்; வெளியில் இருப்பவனுக்கு எவ்வித அதிகாரம், ஆதிக்கம் இருக்கக்கூடாது.

இன்றைய தினம் அரசியல் திட்டத்திலே இருக்கிற சென்னை மாநில (Madras State) எல்லைதான் நம்முடைய எல்லை. நாளைக்கு எங்களுக்குச் சக்தி இருந்தால் அடுத்த இராஜ்யங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனதனாலேயே எங்கள் நாட்டை நாங்கள் ஆளவேண்டும் என்று சொல்லுகின்றோம்.

சென்னை திருவல்லிக்கேணியில், 25-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-3-1951]

பகுதி II

# அரசியல்

படிப்பகம்

www.padippakam.com

# 1. அரசியல்

## 1. சுயராஜ்யம்

சுயராஜ்ய மென்னும் பதம் நமது நாட்டில் பெரும்பான்மையாய் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் சுயநலத்துக்கே பயன்படுத்தப்பட்டு வருவதோடு, பாமர ஜனங்கள் அதை அறியாதபடி சுயகாரியப் புலிகளால் சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றது. சுயராஜ்யம் என்பதைப் பலர் பல விதமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திருடர்கள் தாங்கள் திருடுவதைப் பிறர் கவனியாமல் விட்டுவிடுவதுதான் சுயராஜ்ய மென்று நினைக்கிறார்கள். சிறையிலிருக்கும் கைதிகள் தங்களை வெளியில் விட்டுவிடுவது தான் சுயராஜ்யம் என்று நினைக்கிறார்கள். குடிகாரர்கள், தாங்கள் தாராளமாகவும் விலை நயமாகவும் வேண்டிய அளவு குடிக்க வசமுள்ளதாய், கலால்வரி எடுபட்டுப் போவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். பாமர ஜனங்கள் பலர் இந்தியாவை விட்டு வெள்ளைக் காரரை விரட்டி விடுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். ஏழைகள் ரூபாய் 1-க்கு 8 படி அரிசி விற்பதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். தரித்திரர்கள் பணக்காரரின் சொத்துக்களை யெல்லாம் பிடுங்கித் தங்களுக்குச் சரிசமானமாய்ப் பங்கிட்டுக் கொடுப்பதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள்.

இவையெல்லாம் அறியாமையால் நினைப்பதாக வைத்துக் கொண்டாலும் அறிந்தவர்கள், படித்தவர்களென்போரோ, வெள்ளைக்காரர் உத்தியோகங்களை யெல்லாம் தாங்களே அனுபவித்துக்கொண்டு 500, 1000. 5000, 10000 ரூபாய் சம்பளம் பெறுவதுதான் சுயராஜ்ய மென்று நினைக்கிறார்கள். உயர்ந்தோர்கள் என்கின்ற பிராமணர்களோ பாமர ஜனங்களைக் கொண்டு கிளர்ச்சி செய்வித்து மேற்படி சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகங்களையும், பதவிகளையும் தாங்களே பெறுவதும், தாங்கள் பிறவியில் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தாழ்ந்தவர்ளென்பதை நிலைநிறுத்தி ஆதிக்கம் பெறுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். இராஜ தந்திரிகளென்போரும் இராஜீயவாதிகளென்போரும் சீமையிலிருந்து பார்லிமெண்டார் மூலம் நமக்கு வழங்கப்படும் சில அதிகாரங்களையும் பதவிகளையுந்தான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். காங்கிரசில் தற்காலம் பிரதான ஸ்தானம் வகிப்பதாய்ச் சொல்லப்படும் சுயராஜ்யக் கட்சியார் என்போரும், அரசாங்கத்தாரிடமிருந்து எதையாவது பெறுவதைத்தான் சுயராஜ்யமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (இவற்றையெல்லாம் அறிந்துதான் இங்கிலாந்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பிரசங்கம் கேட்ட கர்னல் வெட்ஜ்வுட் துரை இந்தியர்கள் இன்னமும் தங்களுக்கு வேண்டியது என்ன (சுயராஜ்யம்) வென்பதையே தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னார் போலும் !)

மகாத்மா காந்தியடிகள் இவற்றை ஒன்றையும் சுயராஜ்யமென்று கருதவேயில்லை. இவ்வித சுயராஜ்யங்களில் எதுவரினும், நமது நாட்டில் இப்போதுள்ள கஷ்டங்கள் எதுவும் மாறவே மாறாது என்பது அவருடைய அபிப்பிராயம். இப்போது சுயராஜ்யமில்லையென்று சொல்வதற்கு அறிகுறியாக இருப்பது :—

1. மக்கள் சுயமரியாதை இல்லாமலும், சமத்துவமில்லாமலும் ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவன் எனச் சொல்லிக்கொண்டு, பெரும்பான்மையான மனிதர்களைத் தீண்டாதார்களென்று ஒதுக்கி, இழிவான மிருகங்களிலும் கேடாய் மதித்து, மனித சுதந்திரமில்லாமல் கொடுமைப்படுத்தி வைத்திருப்பது.

படிப்பகம்

www.padippakam.com



2. தினம் ஒரு வேளைக் கஞ்சிக்கு வழியில்லாமலும், தங்கள் மானத்தைக் காக்க ஆடையில்லாமலும் கோடிக்கணக்கான ஜனங்கள் பட்டினியாலும், மானாபிமானத்தாலும் சாவது.

3. தேசத்தில் பெரும்பான்மையோரான தொழிலாளிகள் தங்களுக்குத் தொழிலில்லாமல் தங்கள் ஜீவனத்திற்காக எதுவும் செய்ய ஒருப்பட்டு ஜீவனத்திற்காக அன்னிய நாட்டிற்குச் சென்று இழிவாய் வாழ்ந்து மாய்வது.

4. நமது தேவைக்கு வேண்டிய சகல வஸ்துக்களும் அன்னிய நாட்டிலிருந்து வருவதாய் ஏற்பட்டு, அதன் பொருட்டு நமது செல்வங்கள் வெளிநாடுகளுக்குப்போய் நமது நாடு தரித்திரத்தில் மூழ்கிக்கொண்டு போவது.

இப்படிப்பட்ட கெடுதிகள் நம் நாட்டை விட்டு என்று அகலுமோ அன்றுதான் நமது நாடு சுயராஜ்யம் பெற்ற நாடு ஆகுமேயல்லாமல், அன்னியர்கள் அரசாட்சி செய்யும் காரணத்தினாலேயே சுயராஜ்யமில்லையென்று சொல்லிவிட முடியாதென்றும் மகாத்மா காந்தி அடிக்கடி கதறி வருவதோடு, இவ்வித சுயராஜ்யத்தை அடையவே ஒத்துழையாமையையும், கதர், தீண்டாமை, மதுவிலக்கு முதலிய நிர்மாணத் திட்டங்களையும் உபதேசித்தார்.

இதனை மேல்சாதியாரென்போரும், படித்தவர்களென்போரும், இவ்விரண்டும் சேர்ந்த சுயராஜ்யக் கட்சியாரென்போரும் ஆதியிலிருந்தே ஒப்புக்கொள்ளவில்லை. இவை ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலுக்கு வந்து பலன் தருவதானால், மேல்சாதியாரென்போருக்கும், படித்தவர்களென்போருக்கும் பெரிய ஆபத்தாய்த்தான் முடியும். ஏனெனில், தீண்டாமையொழிந்தால் மேல்சாதியென்பது போய்விடும். கதர், மதுவிலக்கு வெற்றிபெற்றால் ஏழ்மை நிலையும், தரித்திரமும் மறைந்துவிடும். இவ்விரண்டும் மறைந்தால் படித்தவர்களுக்குப் பிழைப்பிருக்காது.

இந்த இரகசியத்தை அறிந்தேதான், உயர்ந்த சாதியார்கள் என்போரும் படித்தவர்களென்போரும், கூட இருந்தே குடியைக் கெடுத்ததுபோல், மகாத்மாவின் திட்டத்தை அவருடன் இருந்தே ஒழித்துவிட்டார்கள். அது மாத்திரமல்லாமல், இராஜீய சுதந்திரமென்ற பொய்ப் பெயர் வைத்து உத்தியோகம் சம்பாதிப்பதையே பிரதான தத்துவமாய்க் கொண்ட சுயராஜ்யக் கட்சியென்று ஒரு கட்சியையும் சிருஷ்டித்துக்கொண்டு, காங்கிரசிலிருந்து மகாத்மாவை விரட்டிவிட்டு, உத்தியோக வேட்டையாட காங்கிரசை ஓர் ஆயுதமாயும் ஏற்படுத்திக்கொண்டார்கள். சுயராஜ்யக் கட்சியாரின் கொள்கையான இராஜீய சுதந்திரமென்னும் பொய் அதிகாரமும் பதவியும் நமக்குக் கிடைக்கக் கிடைக்க நாடு இன்னும் சீர்கேடடையவும், ஒற்றுமை குலையவும், தரித்திரம் பெருகவும், அடிமைத்தன்மை பலப்படவுந்தான் ஆகுமேயல்லாமல் தேசம் ஒருகாலும் முன்னுக்கு வர முடியவே முடியாது.

உதாரணமாக, ஒத்துழையாமைக்கு முன்னிட்ட காங்கிரஸ்களின் முயற்சியால் நமது அரசாங்கத்தார் இதுவரை இரண்டு தடவைகளில் இராஜீய சுதந்திரமென்னும் இரண்டு சீர்திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, ஒன்று மிண்டோ-மார்லி சீர்திருத்தம்; மற்றொன்று மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம். இவைகளின் பலனாய் தேசம் என்னவாயிற்று? இவற்றால் ஏற்பட்ட பதவியையும், உத்தியோகத்தையும், ஆயிரம் பதினாயிரக் கணக்கான சம்பளங்களையும் நம்மில் யார் அடைவது என்கின்ற சண்டைகளும், பொறாமைகளும் வலுத்து வந்ததும், ஒருவரை ஏமாற்றி ஒருவர் அடைய பொது ஜனங்களை உபயோகித்துக் கொண்டதுமல்லாமல் வேறென்ன கண்டோம்? 5500 ரூபாய் சம்பளமுள்ள திருவாக சபை மெம்பர் பதவிகளும் மந்திரி பதவிகளும் இந்தியருக்குக் கொடுப்பது என்கின்ற சீர்திருத்தம் பெறாமலிருந்திருப்போமேயானால், இந்து-முஸ்லிம் சண்டைகளும், பிராம்மணர்-பிராமணரல்லர்தார் கட்சிகளும், உட்பிரிவு துவேஷங்களும்



ஏற்பட்டிருக்குமா? சுயராஜ்யக் கட்சியென்று ஓர் கட்சி ஏற்பட்டு, மகாத்மாவின் இயக்கத்தைக் குலைத்து, உத்தியோக வேட்டையாட முன்வந்திருக்குமா? மேற்படி சீர்திருத்தங்களென்னும் இராஜீய சுதந்திரங்கள் கொடுக்குமுன் 70 கோடி ரூபாயாக இருந்த வரி இப்போது 150 கோடி ரூபாயாக மாறியிருக்குமா? 24 கோடியாக இருந்த இராணுவச் செலவு இன்று 60, 70 கோடியாக மாறியிருக்குமா? அரசாங்கத்தாரிடமிருந்து பெற்ற சீர்திருத்தம் என்னும் சுயராஜ்யத்தாலல்லவா இவ்விதக் கஷ்டங்கள் விளைந்தன! மகாத்மாவின் சீர்திருத்தமாகிய நிர்மாணத் திட்டமென்னும் சுயராஜ்யத்தைப் பெற்றிருப்போமேயானால், இக்கெடுதிகள் நமக்கு வந்திருக்குமா? சுயராஜ்யக் கட்சியார் கோருகிறபடி இன்னுமொரு சீர்திருத்தமென்னும் சுயராஜ்யம் சர்க்காரால் கொடுக்கப்பட்டால் நமது கதி என்னவாகும்? இன்னும் எவ்வளவு கோடி ரூபாய் வரி அதிகமாகும்? எவ்வளவு சாதிச் சண்டைகளும் வகுப்புத் துவேஷங்களும் வளரும்!

இந்தச் சீர்திருத்தங்களின் பலனால் ஏற்பட்ட உத்தியோகங்கள்தானே இன்றைய தினம் ஸ்ரீமான்களான சி. பி. இராமசாமி அய்யரும், முகமது உஸ்மானும், இராமராயநிங்கரும், பாத்ரோவும், சிவஞானம் பிள்ளையும் ஆளொன்றுக்கு மாதம் 5500 ரூபாய் வீதம் சம்பளம் என்னும் பெயரால் கொள்ளையடிப்பதும், தனி வண்டியில் பிரயாணம் செய்வதுமாயிருக்கிறது. இதைப் பார்த்துப் பொறுக்காமல் ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்கார் நாக்கிலும், சத்தியமூர்த்தி நாக்கிலும், ஏ. ரெங்கசாமி அய்யங்கார் நாக்கிலும் ஊறின தண்ணீர்தானே— நமது நாட்டில் சுயராஜ்யக் கட்சியாய்க் கிளம்பி, தேசத்தையும் சமூகத்தையும் பாழாக்கிக் கொண்டு வருகிறது! இந்த உத்தியோகங்கள் இந்திய மக்களுக்கு வீண் தெண்டத்துக்குத் தானே, குரைக்கும் நாய்க்கு எலும்பு போடுவது போல அரசாங்கத்தாரால் வீசி எறியப்பட்டிருக்கிறது? இந்த உத்தியோகங்களால் ஏழைகள் தலையில் கைவைத்து, வரியை உயர்த்தி வசூல் செய்து, ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒரு சிலர் அனுபவிப்பதல்லாமல் வேறென்ன பிரயோசனம்? இவ்வுத்தியோகங்களில்லாத காலத்தில் இராஜாங்கம் நடக்கவில்லையா? அந்த இராஜாங்கத்திற்கும் இந்த இராஜாங்கத்திற்கும் வித்தியாசம் தானென்ன? இந்த உத்தியோகங்கள் ஏற்பட்டதின் பலனாய் ஒரு வெள்ளைக்கார உத்தியோகமாவது, அதிகாரமாவது குறைந்ததா?

இந்த உத்தியோகத்தின் பலனாய்த் தேசத்தில் செல்வநிலை பெருகிற்றா? வரி குறைந்ததா? தீண்டாத மக்கள் தங்கள் தெய்வங்களைக் காணவாவது, தெருவில் நடக்கவாவது உரிமை பெற்றார்களா? கோடிக்கணக்காய் அன்னிய நாட்டாரால் வியாபாரத்தின் மூலமாய்ச் சுரண்டப்படும் பணத்தில் முக்கால் துட்டாவது நமது நாட்டில் தங்க வழியேற்பட்டதா? கோடிக்கணக்கான மக்கள் மதுபானத்தினால் பாழாவதையாவது நிறுத்த முடிந்ததா? தேசத்துக்கு என்ன பலனைக் கொடுத்தது? சுயராஜ்யக் கட்சியாரென்போர், இந்த இரகசியத்தைப் பாமர ஜனங்கள் அறியாதபடி பத்திரிகைகளில் சதாகாலமும் பொய்யும், புளுகும் எழுதியும், மனதறிந்த பொய்ப் பிரச்சாரங்கள் செய்தும், பொதுஜனங்களை ஏமாற்றி எல்லா உத்தியோகங்களையும் தாங்களே அடைய வேண்டுமென்னும் ஆசைப்பட்டுக்கொண்டும், கூடிக்கூடி எப்படி இந்த உத்தியோகத்தை அடைவது என்று சதியாலோசனை செய்துகொண்டும் இருக்கிறார்களேயல்லாமல், இவ்வித உத்தியோகங்கள் நமக்கு அவசியமா, அவசியமில்லையா என்பதைப்பற்றி ஒரு நாளாவது பேசியதே கிடையாது.

சுயராஜ்யக் கட்சியாரின் சுயராஜ்யம் தேசத்திற்கு உண்மையான சுயராஜ்யம் ஆகாது. இவ்வித சுயராஜ்யம் நமது நாட்டிற்கு வேண்டவே வேண்டாம். சுயராஜ்யக் கட்சியார் கேட்கிறபடி சர்க்காரால் கொடுக்கப்படும் சுயராஜ்யமென்னும் சீர்திருத்தம் மறுபடியும் வருமானால் படித்தவர்களுக்கும் உயர்ந்த சாதியாரென்று சொல்லுபவர்களுக்கும் ஆயிரக்கணக்கான சம்பளமும், உத்தியோகமும் கிடைக்கும். இதற்காக மறுபடியும்

படிப்பகம்

www.padippakam.com



வரியை அதிகப்படுத்த வேண்டும். மக்களுக்குள் உயர்வு, தாழ்வு நிலைத்திருக்கும். குடியை ஒழித்தால் சர்க்கார் வரும்படி குறைவதன் மூலம் தங்களுடைய சம்பளம் குறைந்து போகுமானதால், குடியை நிறுத்தமுடியாது. வியாபாரத்தின் மூலமாக அன்னிய நாட்டுக்குப் போகும் செல்வத்தை நிறுத்த இவர்கள் கையில் திட்டமொன்றுமில்லாததால் அதுவும் சாத்தியப்படாது. உத்தியோகத்தைக் குறைப்பதால், படித்தவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கு மார்க்கமில்லாமல் போய்விடும். ஆகையால் அதையும் இவர்கள் செய்யமுடியாது.

உண்மையான சுயராஜ்யம் நமக்கு வேண்டும். அது மகாத்மாவின் சுயராஜ்யமான கதர் உற்பத்தி செய்வதிலும், அதை உடுத்துவதிலும், தீண்டாமையை ஒழித்து மக்கள் சமமாய் வாழ்வதிலும், மதுபானம் ஒழிந்து மக்கள் ஒழுக்கமடைவதிலுமேதானிருக்கிறது. மகாத்மா சொல்லும் சுயராஜ்யமாகிய, கதர் உற்பத்தி செய்து உடுத்தினால் அன்னிய நாட்டுக்குப் போகும் 70 கோடி ரூபாயும், மில் இயந்திரக்காரர் அனுபவிக்கும் 70 கோடி ரூபாயுமாக 140 கோடி ரூபாயில், குறைந்தது வருடம் 1-க்கு 100 கோடி ரூபாயாவது ஏழைகளுக்குப் பங்கு வீதம் கிடைக்கும். மகாத்மா சொல்லும் தீண்டாமை என்னும் சுயராஜ்யத்துக்குப் பாடுபட்டு வெற்றி பெற்றால், மிருகங்களுக்கும், புழுக்களுக்கும் கேவலமாயிருக்கும் தீண்டாதாரென்று சொல்லப்படும் 7 கோடி பேர்கள் மனிதர்களாவார்கள். இந்திய மனித சமூகத்துக்கு 7 கோடி மனிதர்கள் இலாபமாகும். பிராமணரல்லாதாருக்கு இருக்கும் இழிவான தாசிமக்கள், சூத்திரர் என்கிற பெயரும் நீங்கும். மகாத்மாவின் சுயராஜ்யமாகிய மது விலக்குக்கு வேலைசெய்து வெற்றிபெற்றால், தேசத்தில் மதுபானம் ஒழியும். ஏழைகள் சுகமாய் வாழ்வார்கள். வருடத்தில் 20 கோடி ரூபாய் ஏழைகளுடைய பணம் மதுபான வகையில் சர்க்காருக்குப்போய், உத்தியோகஸ்தர்கள் பங்கிட்டுக்கொள்வதை நிறுத்தும். ஆதலால் சுயராஜ்யக் கட்சியின் சுயராஜ்யம் வேண்டுமா? மகாத்மாவின் சுயராஜ்யம் வேண்டுமா?

['குடி அரசு'-தலையங்கம்—15-11-1925]

## 2. வரதராஜுலு அறிக்கைக்கு சமாதானம்

'தமிழ்நாடு' பத்திரிக்கையின் ஜூன் மாதம் 3-ந்தேதி தலையங்கமாகிய, 'வரதராஜுலு அறிக்கை' என்னும் விஷயத்திற்கு, நான் ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டும் என்பதாக நமது வாசகர்கள் எதிர்பார்க்கக் கூடுமென்பதாக நினைத்தே, அதே தலையங்கமிட்டு இவ்வியாசத்தைத் தொடங்குகிறேன். ஸ்ரீ வரதராஜுலு அறிக்கையின் முதல் வாக்கிய ஆரம்பத்தில், 'காங்கிரஸ் மகாசபையே தேசத்தில் பிரதானமானது' என்பதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது எந்த விஷயத்தில் யாருக்குப் பிரதானமானது? எந்தத் தேசத்திற்குப் பிரதானமானது? தேசத்தில் உள்ள 33 கோடி மக்களில் எந்த வகுப்பாருக்கு, எந்தக் கூட்டத்தாருக்குப் பிரதானமானது? தென்னாட்டில் படித்த வகுப்பாரான பார்ப்பனருக்கும், வடநாட்டில் படித்த கூட்டத்தாரான சிலருக்கும் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதற்கும், அவர்களை வாழவைக்கவும் பிரதானமானதேயல்லாமல், வேறுயாருக்கு? எதற்கு? அதனால் என்ன பிரயோஜனம் உண்டென்றும் கேட்கிறேன். காங்கிரஸ் ஏற்பட்டு 40 வருஷத்திற்கு மேலாகியும், தேச மக்களின் பெரும்பாலோரான விவசாயி, தொழிலாளி, குடியானவன் ஆகிய கூட்டத்தாருக்கு என்ன நன்மை செய்திருக்கிறது? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்த கடன் எவ்வளவு? காங்கிரசுக்குப் பின் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? கடன் எவ்வளவு? காங்கிரசுக்கு முன் தொழிலாளிகளின் நிலைமை, சம்பாத்தியம் முதலியவைகள் சவுகரியம் எப்படி இருந்தது? காங்கிரசுக்குப்பின் தொழிலாளிகளின் நிலைமை, தொழில் சம்பாத்தியம், சவுகரியம் எப்படி ஆய்விட்டது? என்று கேட்கிறேன்.



இனி வகுப்புகள்வாரியாய்க் கவனிப்போம். காங்கிரசுக்குமுன் பார்ப்பனரல்லாதார் நிலைமை, செல்வம், செல்வாக்கு எப்படி இருந்தது? காங்கிரசுக்குப்பின் அவர்களது நிலைமை எப்படி இருக்கிறது? காங்கிரசுக்கு முன் பார்ப்பனர்கள் நிலைமை எப்படி இருந்தது? பின் அவர்கள் நிலைமை எப்படி இருக்கிறது? ஜஸ்டிஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் ஏற்படாமல், காங்கிரசை நம்பி இருந்தால் 'பஞ்சமர்கள்', 'முகமதியர்கள்' முதலிய சகோதரர்கள் நிலைமை என்னவாயிருக்கும்? இவைகளை எல்லாம் தனது மனதில் கையை வைத்து யோசித்துப் பார்க்கும்படி ஸ்ரீமான் வரதராஜுலு அவர்களை வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அன்றியும், 'சகல சாதியாருக்கும் பொதுவான காங்கிரஸ், சென்னையில் உள்ள இரண்டொரு பார்ப்பனர்களிடம் அகப்பட்டு விட்டதால் பார்ப்பனக் காங்கிரஸ் என்று பெயரெடுத்துவிட்டது' என்று 'தமிழ்நாடு' எழுதி இருக்கிறது. எந்த விதத்தில் அது சகல சாதியாருக்கும் பொதுவானதாகும் என்று கேட்கிறேன்.

கிறிஸ்தவரில் எத்தனை பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? மகமதியரில் எத்தனை பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? பஞ்சமரில் எத்தனைபேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? இன்னமும் இந்துக்கள் என்பேர்களில் எத்தனைபேர் காங்கிரசிலிருக்கிறார்கள்? இந்தக் கூட்டங்களில் பெரும்பான்மையோர் காங்கிரசிலிருக்கிறார்களா? விலகி இருக்கிறார்களா? எந்தக் காலத்திலாவது, பார்ப்பனரல்லாத மற்றவர்களிடத்தில் காங்கிரஸ் இருந்து வந்ததா? எந்தக் காலத்திலாவது அது பார்ப்பன காங்கிரசல்லாததாயிருந்ததா?

தவிர, 'அய்யங்கார் கோஷ்டியாரிடமிருந்து காங்கிரசை மீட்கவேண்டும் என்கிற உணர்ச்சி பரவி விட்டது' என்கிறது. அய்யங்கார் பாதார விந்தங்களில், மறுபடியும் மறுபடியும் காங்கிரசையும் தலைமைப் பதவியையும் காணிக்கையாய் வைத்துப் போட்டி போட்டுத் தண்டம் சமர்ப்பித்தது யார்? பார்ப்பனரா, பார்ப்பனரல்லாதாரா? அம் மாதிரி ஆசாமிகள் இப்போது ஒழிந்துபோய் விட்டார்களா? இனி அம் மாதிரி ஆசாமிகளைச் சிருஷ்டிக்க அய்யங்கார் சுவாமிகளால் முடியாதா? என்று கேட்கிறேன்.

தவிர, 'இராஜீய அபிவிருத்தி இந்தியாவுக்கு ஏற்படும்போது, அது ஒரு சாதியாருக்கென்று தனியாக இருக்க முடியாது. ஆதலால், எல்லா சாதியாரும் காங்கிரசில் சேர வேண்டும்' என்று 'தமிழ்நாடு' குறிப்பிடுகிறது. 'இராஜீய அபிவிருத்தி' என்பது என்ன என்று கேட்கிறோம்? 1000, 2000, 5000, 10000 சம்பளமுள்ள உத்தியோகங்களும், பதவிகளும் அல்லாமல் வேறு ஏதாவது உண்டா? அந்த உரிமையையும் நமது நாட்டில் பார்ப்பனர்களான ஒரே சாதியார் ஏகபோகமாய் அனுபவிக்காமல் வேறு எல்லா சாதியாரும் கிரமமாய் அனுபவிக்கிறார்களா என்று கேட்கிறேன். தவிர, 'பார்ப்பனரல்லாதார் நசுக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற உண்மை ஜஸ்டிஸ் கட்சியாருக்கு இருக்குமானால், அதற்குக் காங்கிரசைவிட வேறு பலமுள்ள ஸ்தாபனம் கிடையாது' என்று 'தமிழ்நாடு' எழுதுகிறது. இதுவரை அதாவது, இந்த 10 வருஷ காலமாகப் பார்ப்பனரல்லாதாரின் நிலைமையும், உரிமையும் ஜஸ்டிஸ் கட்சியினால் உயர்ந்ததாக்கப்பட்டதா? அல்லது காங்கிரசினாலா? மகம்மதிய அய்க்கோர்ட் ஜட்ஜ், நிருவாக சபை மெம்பர், வைசிராய் பிரபு சபை மெம்பர், மைசூர் திவான், கிறிஸ்தவ அய்க்கோர்ட் ஜட்ஜ், மந்திரி, சட்டசபை பிரஸிடெண்ட், திருவாங்கூர் திவான், பார்ப்பனரல்லாத அய்க்கோர்ட் ஜட்ஜ், பஞ்சம அய்க்கோர்ட் ஜட்ஜ், சட்டசபை மெம்பர், இந்தியா கவுன்சில் மெம்பர் இன்னும் இது போன்ற எத்தனையோ 'அரசியல் உரிமைகள்' காங்கிரசினால் இவர்களுக்குக் கிடைத்ததா? காங்கிரசில் சேராமல் வெளியில் இருந்ததினாலும், ஜஸ்டிஸ் கட்சியாலும் இவர்களுக்குக் கிடைத்ததா? என்று கேட்கிறேன்.

இது போன்ற இன்னும் பல விஷயங்கள் எழுதியிருக்கிறவைகளுக்கும் இதில் போலவே பதில் சொல்லலாம். 'தமிழ்நாடு' காங்கிரசில் சேரும்படி எழுதியவற்றில், பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பொறுத்தவரை ஒன்றாவது சரியான காரணம் அல்லவென்பது



படிப்பகம்

www.padippakam.com



நமது பொதுஅபிப்பிராயம். இன்னமும் சொல்லப்போனால், இந்தியாவுக்கு விடுதலையை வாங்கித் தரவேண்டும் என்று நினைப்பதற்கு, தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஒரு விதத்திலும் யோக்கியதை உடையவர்கள் அல்ல. நமது யோக்கியதையையே சரிப்படுத்திக் கொள்ள நமக்கு யோக்கியதை இல்லை. நாம் தாழ்ந்த சாதியார் என்று நமது நாட்டில் வேதப்படி, சாஸ்திரப்படி, சட்டப்படி, வழக்கப்படி மதிக்கப்படுகிறோமா, இல்லையா? என்பதை ஸ்ரீமான் நாயுடுவை முதலாவதாக யோசித்துப் பார்க்கும்படி விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். அதற்கு ஸ்ரீ நாயுடு என்ன செய்யப்போகிறார் என்று வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். 40 வருஷத்திய காங்கிரசினால்—'சகல சாதிக்கும் பொதுவான காங்கிரசினால்'—மற்றும் என்ன என்னவோ 'பொறாமை' கொண்ட காங்கிரசினால் நமக்குள்ள இக் குறைவுகளை நீக்க ஏதாவது முடிந்ததா? அதனால் கிடைத்து வந்த பலன் அல்லது இராஜீய உரிமைகளாலாவது முடிந்ததா? என்று கேட்கிறேன்.

'பார்ப்பனரல்லாதாருக்கு தேசாபிமானம் உண்டு, இராஜீய ஞானமுண்டு என்று மற்றவர் அறிய வேண்டுமானால் அவர்கள் காங்கிரசில் சேரவேண்டியது அவசியமாகும்' என்றுகூட அப் பத்திரிக்கை எழுதி இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை தேசாபிமானமும், இராஜீய ஞானமும் எனக்கு உண்டு என்பதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டியது அனாவசியம். என்னுடைய சொந்த சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்கும் தேசாபிமானத்தையும் இராஜீய ஞானத்தையும்கூட விற்கத் தயாராக இருக்கிறேன். என்னுடைய சுயமரியாதையையும் உரிமையையும் ஒப்புக்கொள்ளாத ஒரு ஸ்தாபனம்—அது காங்கிரசாக இருந்தாலும் சரி, அது தேசாபிமானமாயிருந்தாலும் சரி, மோட்ச லோகமாயிருந்தாலும் சரி—அதில் இருக்கநேரும் ஒவ்வொரு விநாடியையும் 'நரகத்திலி'ருப்பதாகத்தான் எண்ணுவேன். 'நமது உரிமையை ஏற்றுக்கொள்ளும்படி ஒரு சங்கத்தைப்போய்க் கெஞ்சுவது நமது சுயமரியாதைக்கு அழகல்லவென்பதே எனது அபிப்பிராயம். வெள்ளைக்காரனை சுயராஜ்யம் கேட்பதும், காங்கிரஸை நமது உரிமையை ஒப்புக்கொள்ள நாம் கெஞ்சுவதும் நமக்கு சுயமரியாதை இல்லை' என்பதற்குச் சரியான உதாரணங்களாகும். காங்கிரசை எவனொருவன் அது நம்மைப்போன்ற ஒரு பத்து பேர் சேர்ந்த கூட்டம் என்று நினைக்கிறானோ, எவனொருவன் காங்கிரஸ் அபிப்பிராயத்தை நம்மைப்போன்ற ஒரு பத்து மனிதனின் அபிப்பிராயமென்று நினைக்கிறானோ அவனே சுதந்திர புத்தி உள்ளவனாவான். அதைவிட்டு, கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுபவன் உரிமைக்கும், சுதந்திரத்திற்கும் யோக்கியதை அற்றவனே ஆவான் என்பது எனது தாத்பரியமான முடிவு.

அதே பத்திரிக்கை, 'காங்கிரசில் ஜஸ்டிஸ் கொடியை நாட்டவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்......அதில் தனிப்பட்டவர்கள் வகுப்பு வாதத்தைப் புகுத்துவது நியாயமல்ல' என்றும் எழுதி இருக்கிறது. அப்படியானால், கீழ் வகுப்பார், தாழ்த்தப்பட்ட வகுப்பார் முதலியவர்களின் கதி என்ன ஆவது என்று கேட்கிறேன். காங்கிரசில் எல்லாருக்காகவுமே உத்தியோகம் வருகிறது என்று வைத்துக் கொண்டால், 'எங்கள் வகுப்புக்கு ஒன்று கொடுங்கள்' என்று கேட்கக் கூடாது என்று காங்கிரஸ் சொல்லுமானால், அல்லது நாயுடுகார் சொல்லுவாரானால் மற்றபடி காங்கிரசினால் லாபம்தான் என்ன? என்று கேட்கிறேன். காங்கிரசில் கேட்பது உத்தியோகம், அதிகாரம், பதவி, சம்பளம் இவற்றைத் தவிர வேறில்லை; இதுயாவரும் அறிந்த விஷயம். அக் காங்கிரசில் உள்ளவர்களோ அநேக வகுப்பார்களாயிருக்கிறார்கள் என்பதும் தெரிந்த விஷயம். எல்லா வகுப்பார்களுக்கும் அது கிடைக்கவேண்டுமென்பதோ காங்கிரசுக்குள் வகுப்புவாதத்தைப் புகுத்துவதாகிவிடுகிறது. அப்படியானால், அதன் இரகசியம் என்ன என்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டுகிறேன்.

தவிர, 'காங்கிரசின் சட்டமறுப்பையாவது, சத்தியாக்கிரகத்தையாவது கண்டு ஜஸ்டிஸ் கட்சியாரோ அல்லது எந்தப் பார்ப்பனரல்லாதாரோ பயப்படவேண்டியதில்லை' என்று 'தமிழ்நாடு' பத்திரிக்கை எழுதியிருக்கிறது. இவ்விஷயத்தில் இப்போது காங்கிரஸ் தலைவர்களாகிய ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார், சாமி வெங்கடாசலம், வெங்கிட்டரமணய்யங்கார், ஓ. கந்தசாமி செட்டியார், எம். கே. ஆச்சாரியார், ஆதிநாராயண செட்டியார் முதலியவர்களைவிட எவ்விதத்திலும் இளைத்த ஆசாமிகள், ஜஸ்டிஸ் கட்சிப் பார்ப்பனரல்லாதார் கூட்டத்திலேயே இல்லை என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.



ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியின் நன்மையை உத்தேசித்தும், பார்ப்பனரல்லாதாரின் நன்மையை உத்தேசித்தும் அக் கட்சி காங்கிரசில் சேர்வது என்பது புத்திசாலித்தனமான யோசனை அல்ல என்பதோடு, ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாவுமணி என்று கூடச்சொல்லவேண்டியிருக்கிறதே என்று வருத்தப்படுகிறேன். ஜஸ்டிஸ் கட்சிக்கு இது சமயம் நாட்டில் கொஞ்சம் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. முக்கிய காரணம் என்னவென்றால், காங்கிரசின் யோக்கியதை, அதன் கசுமாலம் முதலியன வெளியாக்கப்பட்டதினால்தான்.

கூடிய சீக்கிரத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்களே, பார்ப்பனரல்லாதாரைக் காங்கிரசில் வந்து சேரும்படி கெஞ்சப்போகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அதாவது, பார்ப்பனரல்லாதவர்கள் கட்டுப்பாடாகவும், ஒற்றுமையாகவும் இருந்து ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்த காலத்தில், பார்ப்பனர்கள் பயந்துகொண்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும் சம்மதித்து தங்கள் சொந்தப் பணமும் செலவு செய்துங்கூட, 'காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் சங்கம் (சென்னை மாகாண சங்கம்)' என்பதாக ஒன்று ஏற்படுத்தி நம்மில் சிலருக்குத் தந்து அவர்கள் வேலை முடிந்ததும் அழித்துவிட்டதுபோல், செய்யப்போகிறார்கள். முக்கிய காரணம் என்னவெனில், இது சமயம் பார்ப்பனரல்லாதார் கொஞ்சம் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். ஆகவே, இக் கட்டுப்பாடு குலையாமல் யார் வேண்டுமானாலும் எந்தக்கட்சிக்கு வேண்டுமானாலும் ஸ்ரீமான் நாயுடுகார் சொல்வதுபோல், அவரவர்கள் தனித்த ஓதாவில் போய்க்கொள்ளுவதில் நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் கட்சியே சேருவதானால் தலைவர் யார், உபதலைவர் யார், மந்திரி யார், பிரசிடெண்டு யார்—என்பன போன்ற விஷயங்களின் சண்டையும், அதைக் காப்பாற்றப் பல அயோக்கியத்தனங்களைச் செய்துகொண்டு, அக்கப்போரில் காலம் கழிப்பதிலும் நேரம் சரியாய்ப்போய்விடுமே ஒழிய, உண்மையான வேலைசெய்ய நேரமும், காலமும் இருக்கவே இருக்காது. ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவும், 'ஜஸ்டிஸ் கட்சியில் சேரும் பார்ப்பனரல்லாதார்களுக்குத் தங்கள் சொந்த ஓதாவில் காங்கிரசில் சேர சுதந்திரமிருக்க வேண்டும்' என்றுதான் கேட்கிறார். நாமும் அதனால் அதிக நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்றே சொல்லுகிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியிலும்கூட நிர்மாணத் திட்டமாகிய கதரில் நம்பிக்கையில்லாதவர்களும், தீண்டாமை ஒழிவதில் சம்மதமில்லாதவர்களும், மதுவிலக்கில் இலட்சியம் இல்லாதவர்களும் இரண்டொருவர் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனபோதிலும், அக் கட்சி நிர்மாணத் திட்டத்தை ஒப்புக்கொண்டதால் நாம் நம்மால் கூடிய ஆதரவை அளிக்கிறோமே அல்லாமல், இரண்டொருவருக்கு நம்பிக்கை இல்லை என்கிற காரணத்திற்காகக் கட்சியையே குற்றஞ்சொல்ல முன்வரவில்லை. அதுபோலவே, இஷ்டப்பட்டவர்கள் தங்களது மனசாட்சியைக் கட்சிக் கட்டுப்பாட்டின் பேரால் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை என்று ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியில், 'இராமசாமி நாயக்கரும் அவருடைய சகாக்களும் எதிர்கால நிலைமையைக் கவனித்து மறுபடியும் தீரயோசித்து ஒரு முடிவுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்' என்று 'தமிழ்நாடு' எழுதி இருக்கிறது. உண்மையில், அரசியலில் இது சமயம் எனக்கு சகா யாரும் இல்லை; அன்றியும் எனக்கு என்று இது சமயம் யாதொரு கட்சியும் இல்லை. எனக்கும் சில தனிப்பட்ட நபர்களுக்கும் சில விஷயங்களில் மாத்திரம் அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறதை ஆதாரமாக வைத்துக்கொண்டு தனித்த முறையில் எனது

படிப்பகம்

www.padippakam.com



தொண்டைச் செய்து வருகிறேனே தவிர வேறில்லை. அதுபோலவே, ஜஸ்டிஸ் கட்சியிலும் எனது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுகிற அளவுவரையில் நான் அக் கட்சிக்கும் தொண்டராயிருந்து எனது கொள்கைக்கு அதை உபயோகித்துக்கொள்ளுகிறேனே தவிர, வேறில்லை. ஆகவே ஸ்ரீ வரதராஜுலு நாயுடு அவர்கள் இவ்விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் தனிச் சுதந்திரம் கொடுத்திருக்கிறதைப் போலவே நமக்கும் கொடுப்பார் என்றே நம்புகிறேன்.

['குடியரசு'-தலையங்கம்—5-6-1927]

மேற்கண்ட தலையங்கமிட்டு சென்ற வாரம் நான் எழுதிய விஷயங்களுக்கு மறுபடியும் 6-6-1927-ந்தேதி 'தமிழ்நாடு' பத்திரிகையில் பதில் எழுதுமுகத்தான் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

அப் பதிலின் தன்மையைப் பற்றி விவரிக்கும் முன்பாக அப் பத்திரிக்கை ஏதாவது ஒரு சமாதானம் எழுத முன்வந்ததற்காக அதைப் பாராட்டுவதுடன் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில், இதுவரை ஒரு பத்திரிக்கையாவது காங்கிரசைப் பற்றி இவ்வளவு நாளாக நான் எழுதிக்கொண்டு வந்த விஷயங்களுக்குப் பதில் என்பதாக ஒரு வரிகூட எழுத முன்வராமல், வழக்கம்போல் தங்கள் தங்கள் 'தேசாபிமானப் பிரச்சாரத்தை' நடத்திக்கொண்டும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைதுகொண்டுமே வந்திருக்கின்றன. ஆனால், காரைக்குடி 'ஊழியன்' பத்திரிக்கைகூட ஒருசமயத்தில் நம்மைப் பற்றி 'சுயமரியாதைப் பிரச்சாரம் செய்வது தேசத்திற்கு ஆபத்து' என்று மாத்திரம் எழுதிற்றேயல்லாமல், காங்கிரசைப் பற்றி நாம் எழுதியதற்குப் பதில் ஒன்றும் எழுதவில்லை. 'தமிழ்நாடு' துணிந்து எழுத முன்வந்துவிட்டதால் இனி ஒரு சமயம் எல்லாப் பத்திரிக்கைகளும் எழுத முன்வந்தாலும் வரலாம். ஆனாலும், இம் மாதிரி யாராவது சமாதானம் சொல்ல வருவதின் மூலமாகத்தான் அவ் விஷயங்களை இன்னமும் பாமர மக்கள் நன்றாய் அறியும்படி செய்யச் சவுகரியங்கள் ஏற்படும். இல்லாவிட்டால், ஒருதலைப் பட்சமாக நான் எழுதுவதாய்ப் பிறர் நினைக்க ஏது உண்டாகலாம். அதனால்தான் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டேன்.

பதில் எழுத முன்வந்த 'தமிழ்நாடு' பத்திரிக்கையானது நான் எழுதின சமாதானங்களைத் தனது பத்திரிக்கையில் எடுத்துப் போட்டு முறையே நான் எழுதிவருவதுபோல் எழுதி இருந்தால், அது இன்னமும் கொஞ்சம் பாராட்டத்தக்கதாக இருந்திருக்கும் என்பதுடன் எனது சமாதானத்திற்கும் நியாயம் செய்ததாகும்.

அப்படிக்கில்லாமல் 'குடிஅரசு சமாதானத்தைப் பார்த்து எந்தத் தேசியவாதியும் வருந்தாமலிருக்கமுடியாது' என்றும், 'இம்மாதிரி ஒரு தேசத்துக்குரிய பெரிய தேசிய ஸ்தாபனத்தை முறைதவறிப் பழித்துவிட விரும்பினால், இதை யார்தான் சகித்துக்கொண்டிருக்கமுடியும்' என்றும் வீர கர்ஜனை செய்து எழுதியிருக்கிறது. சாப்பாட்டுப் பந்தியிலே உட்காரக்கூடாது என்று தடைப்படுத்தப்பட்ட ஒருவன், இலை ஓட்டையாய் இருக்கிறது என்று சொல்லுவதில் என்ன பிரயோஜனம்?

அதுபோலவே 'தேசியம்' என்பதும் 'தேசிய ஸ்தாபனம்' என்பதும் அஸ்திவாரத்திலிருந்தே புரட்டு என்றும், சிலர் வயிற்றுப் பிழைப்புக்கும், உத்தியோகத்திற்குமென்றே ஏற்பட்டதென்றும் நமது நாட்டுப் பெரும்பான்மையான மக்களான—அதாவது 100 க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட ஜன சமூகத்திற்குக் கொஞ்சமும் நன்மை தரத்தக்கதல்லாததோடு, பெருங்கெடுதி தரத்தக்கதென்றும் நான் கணக்குப் புள்ளிகளுடன் விளக்கி எழுதி வரும்போது, அவைகளுக்கு முதலில் கொஞ்சமாவது விபரமாகச் சமாதானம் சொல்லாமல்—'மதம் எவ்விதம், பார்ப்பனர்கள் அவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால், 'மதம் போச்சுது', 'மதஸ்தாபனம் போச்சுது', 'நாஸ்திகத்தனம் ஆச்சுது' என்று சொல்லுகிறார்களோ அதுபோல் படித்த கூட்டத்தார், பணக்காரக் கூட்டத்தார் ஆகியவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால், 'தேசம் போச்சுது', தேசிய ஸ்தாபனம் போச்சுது', 'தேசத் துரோகம் ஆச்சுது' என்று சொல்வதால், அதற்குப் பயந்துகொண்டு உண்மையை வெளிப்படுத்தாமல் இருக்கமுடியுமா என்பதை யோசிக்க வேண்டுகிறேன்.



'சமூக சமத்துவத்தையும், சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் காங்கிரசின் மூலம் அடையாதபடி தென்னாட்டுப் பார்ப்பனர் செய்கிற கொடுமையைச் சகிக்கமுடியாமல் நாயக்கர் இம் மாதிரி எழுதுகிறாரேஅன்றித் தாமே முன்னின்று பிரச்சாரம் செய்து சிறை சென்று கவுரவப்படுத்திய காங்கிரஸ் மகாசபையை வேண்டுமென்று தூஷிப்பதாக நாம் நினைக்கவில்லை' என்று 'தமிழ்நாடு' பத்திரிக்கை எழுதி இருக்கிறது.

இந்த இடத்தில்தான் பொது ஜனங்கள் கொஞ்சம் நன்றாய்க் கவனம் செலுத்திப் பார்க்கவேண்டும். என்னவென்றால், நான் இப்போது காங்கிரசைக் கைப்பற்றி இருக்கும் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் செய்கையை மாத்திரம் கண்டிக்கவில்லை. மற்றும் காங்கிரசின் நடைமுறைகளை மாத்திரம் நான் கண்டிக்கவில்லை. நான் கண்டிப்பது காங்கிரசின் அஸ்திவாரத்தையே—அதன் அடிப்படைத் தத்துவத்தையே கண்டிக்கிறேன். காங்கிரசை உண்டாக்கினவர்களே—அவர்கள் யாராயிருந்தாலும், வெள்ளைக்காரர்கள் உட்பட உத்தியோகமும், அதிகாரமும், சம்பாதனையும் பெறவேண்டிய கூட்டத்தார்களென்றும்; பெரிதும் அதே நோக்கத்தோடு ஏற்படுத்தி அது ஏற்பட்ட நாள்தொட்டு நாளது வரையும் அவர்கள் அதே காரியத்தில் வெற்றிபெற்றும் வந்திருக்கிறார்களே யொழிய, தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரம் இந்தக் காரியத்திற்கு முழுப் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் யாவரும் உணர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த 40 வருஷங்களாக காங்கிரஸ் பிரதிநிதிகள் யார் என்பதைக் கணக்குப் போட்டுப் பாருங்கள். அதன் தலைவர்கள் யார் என்பதைக் குறிப்பிட்டுப் பாருங்கள். அதன் நிர்வாகி யாராயிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். இவர்களில் யாராவது, இந்திய நாட்டின் 100-க்கு 95 வீதம் உள்ள மக்கள் கூட்டத்திற்குச் சம்பந்தப்பட்டவர்களா? என்று யோசித்துப் பாருங்கள். இது மாத்திரமல்ல. இதுவரை காங்கிரசில் செய்துவந்த தீர்மானங்களையும், அத்தீர்மானங்களின் பலனாய் ஏற்பட்ட சீர்திருத்தங்களையும், அதன் அனுபவங்களையும் ஒவ்வொன்றாய் உங்கள் சொந்தப் பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப் பாருங்கள். தேசத்தைக் காட்டிக் கொடுத்து வாழவேண்டியதான ஆங்கிலக் கல்வி கற்றவர்களும், தேசத்தைப் பாழாக்கி வாழ வேண்டியவர்களான வக்கீல்களும், கூலிக்காரர்களையும் தொழிலாளிகளையும் குடியானவர்களையும், விவசாயிகளையும் வதைத்து வாழவேண்டியவர்களான முதலாளிகளும், நிலச்சுவான்தாரர்களுமே பிரதிநிதிகளாயுள்ள ஒரு கூட்டம் அல்லது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம், 100-க்கு 90 பேர்களாயுள்ள அவர்களல்லாத மேற்கண்ட மக்களுக்கு எவ்விதத்தில் பிரதிநிதி சபையாகும்? பிரதிநிதி ஸ்தாபனமாகும்? என்று கேட்கிறேன்.

இப்போதுள்ள 'இந்துக்கள்' எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்லப்படும் வருணாசிரம தர்மபரிபாலன சபை எனக்கும், ஸ்ரீ வரதராஜுலுவுக்கும், ஸ்ரீ கல்யாணசுந்தர முதலியாருக்கும் பிரதிநிதி சபையாகுமா? அதைக்கூட்டி நடத்தும் ஒருசிலர் அந்த ஸ்தாபனத்தை இந்தியாவிலுள்ள 24 கோடி இந்துக்களுக்குப் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டும் இந்துவேதம், சாஸ்திரம், புராணம் என்பவைகளை ஆதாரமாய் வைத்துக் கொண்டும் நடத்துவதாகவேதான் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வழக்கமும் சட்டமும்கூட அதை ஒப்புக்கொள்ளுகிறது. ஸ்ரீமான்கள் ஜெயவேலு, முத்துரங்க முதலியார், ஆதிநாராயண செட்டியார், ஒ. கந்தசாமி செட்டியார் போன்ற சில கனவான்கள் அதை இந்துக்களின் பிரதிநிதிசபை என்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அதனாலேயே ஸ்ரீமான்கள் வரதராஜுலு, வீரய்யன், எம். சி. ராஜா, நான் முதலியவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானா?

படிப்பகம்

www.padippakam.com



ஒரு சபையின் பெயர் பிரதானமா? அல்லது கொள்கையும் நடவடிக்கையும் நடத்தும் ஆசாமிகளும் பிரதானமா? என்பதை நன்றாய் யோசித்துப் பார்க்கவேண்டும். நமது மாகாணத்தில் காங்கிரஸ் தலைவர்கள் எனக்குத் தெரிந்த வரையில் 4 கனவான்கள் பெயர் ஞாபகத்திற்கு வருகிறது. ஸ்ரீமான்கள் சங்கர நாயர், மணி அய்யர், விஜயராகவாச்சாரியார், சீனிவாசய்யங்கார். இவர்களின் யோக்கியதை என்ன? நான்குபேர்களும் எந்த விதத்தில் தேசமக்களுக்குப் பிரதிநிதியானவர்கள்? இவர்களின் தொழில் என்ன? இவர்களின் காலட்சேபம் என்ன? ஏழைமக்களை வஞ்சித்து, பாமர மக்களை ஏமாற்றித் தாங்கள் மாதம் 1000, 5000, 10000, 20000 என்பதாகக் கொள்ளையடித்து, எந்த சர்க்காரைக் கண்டிப்பது போலும், வைவது போலும், ஒழிப்பது போலும், வேஷம் போட்டு நம்மை ஏமாற்றுகிறார்களோ, அந்த சர்க்காருக்கு அபிமான புத்திரர்களாக இருந்து, நம்மைக் காட்டிக்கொடுத்து வாழ்ந்தவர்கள்—வாழ்பவர்கள்தாமே அல்லாமல் வேறுண்டா? இவர்கள் பிள்ளைகுட்டி, மருமக்கள், அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன் முதலியவர்களையும் சர்க்கார் 'தெய்வத்'திற்கு ஒப்படைத்து, அவர்களைக்கொண்டு நம்மைக் காட்டிக்கொடுத்து, அச் சர்க்காரை வாழவைக்கும் முறையில் வயிறுவளர்க்கச் செய்கிறார்களே தவிர, வேறு ஏதாவது நன்மை உண்டா?

ஸ்ரீமான்கள் மணி அய்யர் தலைவரானார்; அய்யர் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். சங்கர நாயர் தலைவரானார்; மலையாளிகளுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். விஜயராகவாச்சாரியார், சீனிவாசய்யங்கார் தலைவர்களானார்கள்; அனேக அய்யங்கார் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார்கள். சர். சி பி. இராமசாமி அய்யர் காங்கிரஸ் காரியதரிசி ஆனார்; இன்று அவரும் 5,500 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு, சமையல்காரப் பார்ப்பன மக்கள், பஞ்சாங்கப் பார்ப்பன மக்கள், தூதவப் பார்ப்பன மக்கள் வரையில் அய்க்கோர்ட் ஜட்ஜ், ஜில்லா ஜட்ஜ், சப் ஜட்ஜ், சூப்பிரெண்டெண்ட் முதலிய பணம் கொழிக்கும் உத்தியோகங்கள் கொடுத்தார். ஸ்ரீரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் காரியதரிசி ஆனார்; அவர் தம்பி மாதம் ரூ. 2000 சம்பளம் வாங்குகிறார்; அவர் சுற்றத்தார்கள் அதுபோலவே வாழ்கிறார்கள். ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் காரியதரிசி ஆனார்; இப்போது அவர் பேரால் அவர் சிபார்சால் எந்தெந்த உருப்படிகளோ அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதும், கதர் இலாக்காவில் வயிறு வளர்ப்பதுமாய் நடைபெற்று வருகிறது.

இனியும் ஸ்ரீ நாயுடுவும், ஸ்ரீ கலியாணசுந்தர முதலியாரும் பார்ப்பனரல்லாதாரைக் காங்கிரசில் சேர்த்து, காங்கிரஸ் தலைமைப் பதவி பெற்றுக் காங்கிரசை நடத்தினால் இதைவிட வேறு என்ன செய்துவிட முடியும்? எல்லாவற்றையும்விட ஒன்று கேட்கிறேன். மகாத்மா காந்தி காங்கிரசில் சேர்ந்து, நானும் என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான பைத்தியக்காரர்களும் அவர்களுக்கு சிஷ்யர்களாக இருந்தும் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்தும், சிறை சென்றும் அதற்குத் தகுந்த என்ன காரியத்தைச் சாதிக்க முடிந்தது? இதற்குப் பதில் யாராவது சொல்லட்டும்! 'பலகெடுதிகள் ஏற்பட்டன' என்று சொல்லக்கூடியவர்களைத் தடுக்கக்கூட நமக்கு யோக்கியதை இல்லை. மேலும், அப் பத்திரிக்கை 'நாயக்கரே காங்கிரசில் சேர்ந்து உழைத்துப் பிரச்சாரம் செய்து ஜெயிலுக்கும் போய் வந்துவிட்டு, அதே காங்கிரசைத் தூஷிக்கிறார்' என்று எழுதுகிறது. இது வாஸ்தவம். காங்கிரசைப் பற்றிய எனது பரீட்சை முடிந்துவிட்டது.

மக்கள் தனது நாட்டிற்கு ஆக என்னென்ன செய்யவேண்டுமென்று மகாத்மா சொன்னாரோ அவற்றை என்னால் கூடியவரை செய்து காட்டினேன். மகாத்மாவும் செய்து பார்த்துவிட்டார். எங்களது கொள்கைக்கு காங்கிரசை உபயோகப்படுத்திப் பார்த்தோம்; கண்ணியமாகவும் அதை நடத்தினோம். அதைக்கொண்டு நம்நாட்டை விடுதலை செய்விக்க முடியாது; அது விடுதலைக்கான ஸ்தாபனமல்ல; அடிமைத் தன்மைக்கான



ஸ்தாபனந்தான் என்பதாகத் தீர்மானித்து ஆய்விட்டது. ஆதலால் அதை ஒழிக்க வேண்டியது நாட்டின் விடுதலையை எதிர்பார்ப்பவன் கடமை என்கிற முடிவுக்கு வந்துவிட்டேன். காங்கிரஸ் ஒழிந்த மறுதினமே மகாத்மாவை சத்தியாக்கிரக உலகத்தில் காணலாம்; தியாக உலகத்தில் காணலாம்; விடுதலை உலகத்தில் காணலாம்; இது உறுதி என்று சொல்லுவேன். மகாத்மா காங்கிரசை விட்டு விலகும்போது என்ன சொன்னார்? என்பதைக் கவனியுங்கள். 'எனது நாட்டின் விடுதலைக்கு ஏற்ற கொள்கைகளைப் படித்த வகுப்பாரை ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்கு ஏற்ற ஆற்றலை, கடவுள் எனக்குக் கொடுக்கவில்லை. ஆனதால் எனது கொள்கைகளை காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலக்கிக்கொள்ளுகிறேன். என்னாலானதை நான் வெளியில் செய்து பார்க்கிறேன்' என்று சொன்னதை ஸ்ரீமான்கள் நாயுடுவும், முதலியாரும் ஒப்புக்கொள்ளுகிறார்களா? ஆட்சேபிக்கிறார்களா? என்று கேட்கிறேன்.

மகாத்மாவினால் திருப்தி செய்விக்க முடியாத—படித்தவர்களது ஸ்தாபனமான—பணம் சம்பாதிக்கும் காங்கிரசை ஸ்ரீமான்கள் நாயுடுகாரும் முதலியாரும் கைப்பற்றி, மகாத்மா கொள்கைகளை அப்படிப் படித்தவர்களுக்குள் புகுத்தி, காங்கிரசின் மூலம் விடுதலை சம்பாதித்துக் கொடுக்கப் போகிறார்களா? என்று கேட்கிறேன். ஒருகால் ஸ்ரீமான் நாயுடுவும், முதலியாரும் ஒப்புக்கொள்வதானாலும், வாசகர்களே நீங்கள் முடியும் என்று நம்புகிறீர்களா? என்று கேட்கிறேன். தவிரவும் அப்பத்திரிக்கை எழுதுவதாவது—'சரித்திர ஆராய்ச்சியும் பிரதேச சுதந்திரக் கிளர்ச்சியின் அனுபோகமும் எனக்கு இல்லாததால் நான் இப்படிச் சொல்லுவதாய்' மிகவும் தாட்சண்யமான பாஷையில் எழுதி இருக்கிறது. பாஷையில் தாட்சண்யம் காட்டியதைப் பொறுத்தவரை நான் நன்றியறிதலுள்ளவனாக இருக்கிறேன்.

கருத்தைப் பொறுத்தவரையிலும் மாறுபடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இதற்காக ஒரு சிறுகதை சொல்லுகிறேன். ஓர் ஊரில் ஒருவன் வீட்டில் அவனது தாயார் இறந்துவிட்டாள். அதற்குத் துக்கம் விசாரிக்கப்போனவர்கள் அச் சிறுவனைப் பார்த்து, 'உன் தாயார் இறந்து போனதைப்பற்றி எங்களுக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது; அந்தம்மாள் உனக்கு மாத்திரம் தாயாரல்ல; எனக்கும் தாயாராயிருந்தாள்; இந்த வீதிக்கே—மற்றும் இந்த ஊருக்கே தாயாராயிருந்தாள்; அப்பேர்ப்பட்ட புண்ணியவதி போய்விட்டாளே என்று மிகவும் வருத்தப்படுகிறோம்' என்று ஆறுதல் சொன்னார்கள். அடுத்த வாரத்தில் பக்கத்து வீட்டிலுள்ள ஒருவரின் மனைவி இறந்துவிட்டாள். இந்த வாலிபன் அந் நண்பர் வீட்டிற்குத் துக்கத்தை விசாரிப்பதற்குச் சென்றவன், துக்கம் விசாரிக்கும் முறை இப்படித்தானாக்கும் என்று நினைத்துக்கொண்டு, வீட்டுக்காரரைப் பார்த்து 'அய்யோ உன் மனைவி இறந்து விட்டதைப்பற்றி நான் மிகவும் துக்கப்படுகிறேன். அப் புண்ணியவதி உனக்கு மாத்திரம் மனைவி என்று இருக்கிறாயா? எனக்கும் மனைவியாய் இருந்தாள்; இந்த வீதியிலுள்ள எல்லோருக்கும் மனைவியாய் இருந்தாள்; இந்த ஊராரிலும் யாருக்கு வேண்டுமானாலும் மனைவியாய் இருந்தாள்; அப்பேர்ப்பட்ட தர்மவதி இறந்துபோனதற்கு நான் மாத்திரமல்ல—இந்த ஊரார் எல்லோரும் துக்கப்படுகிறார்கள்' என்று சொன்னானாம். அதுபோல இருக்கிறது—உலகத்திலுள்ள மற்ற தேசியக் கிளர்ச்சியை நமது இந்தியநாட்டுக்கு ஒப்பிட்டு, அச் சரித்திரங்களின் படிப்பும் கிளர்ச்சிகளின் படிப்பும் இந்நாட்டில் நடத்த எத்தனிப்பது. உலகத்திலுள்ள மற்ற தேசமெல்லாம் வேறு; இந்தியா வேறு. அதனாலேதான் 'தமிழ்நாடு' பத்திரிக்கை சொல்வதுபோன்ற அயல்நாட்டுச் சரித்திரங்களையும், கிளர்ச்சியையும் மற்றவர்கள் யாருக்கும் பின்வாங்காத அளவுக்குப் படித்தறிந்த மகாத்மா காந்தி, இந்நாட்டு விடுதலைக்கு அவைகள் எதையும் உபயோகித்துக்கொள்ளாமல் தன் சொந்த முறையில் ஒரு தத்துவத்தைப் புகுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், அயல் நாட்டு விடுதலைச் சரித்திரமும், 'கிளர்ச்சி மாதிரி'யும் நமது நாட்டுக்கு உதவாது என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



மேலும் அப் பத்திரிக்கை எழுதி இருப்பதாவது : 'நாயக்கர், வரி உயர்ந்ததும், பார்ப்பனரல்லாதார் நன்மை கெட்டு பார்ப்பனர் ஆதிக்கம் வலுத்ததும், தொழிலாளர் நிலைமை கேவலப்பட்டதும், இன்னும் பல குறைகளுக்கும் காங்கிரசே காரணம்' என்று சொல்லுகிறார். இது சரியல்ல. மற்ற தேசங்கள் காங்கிரஸ் என்கிற ஸ்தாபனத்தின் மூலம்தான் வெற்றி பெற்று இருக்கிறது. காலத்திற்கு ஏற்றபடியும் தேவைக்குத் தக்கபடியும் எல்லா தேசத்திலும்தான் வரி உயர்ந்திருக்கிறது. ஆதலால், இவற்றிற்கு காங்கிரஸ் காரணமல்ல' என்று எழுதி இருக்கிறது. இதற்கும் முன் சொன்ன 'துக்கம் விசாரிப்புக் கதை'யையே சொல்ல வேண்டி இருப்பதற்கு வருந்துவதுடன், மேலும் இரண்டொரு சமாதானம் சொல்லுகிறேன்.

நமது அரசாங்கத்தார் உயர்த்தி இருக்கும் வரி காலதேச வர்த்தமான அதிகச் செலவை உத்தேசித்தா? அல்லது காங்கிரசுக்கு அழுகவேண்டிய சில உத்தியோகங்களை உத்தேசித்தா? என்பதையும்; நமது நாட்டு அரசாட்சிக்கு இவ்வளவு உத்தியோகம் வேண்டுமா? என்பதையும் மற்ற தேச உத்தியோகங்களுக்கு இவ்வளவு சம்பளமிருக்கிறதா? என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

ஒரு கவர்னரும், இரண்டு நிர்வாக சபை மெம்பர்களும், இரண்டு காரியதரிசிகளும் அரசாட்சி புரிந்த சென்னை அரசாங்கத்திற்கு—ஒரு கவர்னரும், 7 நிர்வாக அங்கத்தினர்களும், 7 காரியதரிசிகளும் எதற்காக? இது காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தேசித்தா? என்பதைக் கண்ணியமாய்ச் சொல்லட்டும். 5 அய்க்கோர்ட்டு ஜட்ஜுகள் இருந்து நியாயம் விளங்கின சென்னை உயர்தர நீதி மன்றத்திற்கு 15 அய்க்கோர்ட்டு ஜட்ஜுகள் இருப்பது காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தேசித்தா?

ஸ்ரீமான்கள் சர். சி. பி. இராமசாமிக்கும், சர். சிவஞானத்திற்கும், டாக்டர் சுப்பராயனுக்கும் மற்றும் இவர்கள் போன்றாருக்கும் மாதம் 5500 ரூபாய் கொடுப்பதும்; காரியதரிசிகளுக்கும், ஜட்ஜுகளுக்கும் 2500, 3000 கொடுப்பதும் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தேசித்தா? இதுபோன்ற ஆயிரக்கணக்கான உத்தியோகங்கள் அதிகமானதும், அவைகளுக்குச் சம்பளங்கள் கொடுக்கவேண்டியதும் நாட்டின் உண்மையின் அவசியத்தை முன்னிட்டா? காங்கிரசின் தேசத் துரோகத்தை முன்னிட்டா? இவர்களுக்கும் இவர்களைப் போலவே வெள்ளைக்காரருக்கும் அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டியதற்காகவே 40 கோடி ரூபாய் வரி செலுத்திவந்த நமது நாட்டுக் குடியானவர்கள், வியாபாரிகள், தொழிலாளிகள், கள், சாராயம் குடிக்கவேண்டியவர்களை அதிகப்படுத்த அவசியங்கள் ஆகிய வரிகள்; கார்டு, கவர், இரயில் சார்ஜ், உப்பு வரி, வருமான வரி, சாமான்கள் மீது வரி முதலியவைகளை அதிகமாக்க ஏற்பட்டதா? அல்லது தேசத்தின் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து ஏற்பட்டதா? என்று கேட்கிறேன்.

தூங்குபவர்களைத் தட்டி எழுப்பலாம்; 'தமிழ் நாடு' போன்று எல்லா விபரமும் தெரிந்த—வேண்டுமென்றே கண்ணைக் கெட்டியாய் மூடிப் படுத்திருப்பவர்களை எப்படி எழுப்புவது?

மற்றும், அப் பத்திரிக்கை எழுதுவதாவது: 'காங்கிரஸ் தோன்றிய பிறகுதான் மக்களுக்கு, தேசாபிமானம் இன்னது என்று தெரிந்தது; சீர்திருத்தங்களைப் படிப்படியாய் அடைய முடிந்தது; அடைந்ததை ஆள முடிந்தது. தேச, சமூக, சமய, வேத, புராண, புரோகித விடுதலைகளில் உணர்ச்சி ஏற்பட்டது' என்று எழுதுகிறது.

இதில் மருந்துக்குக் கூட உண்மை இல்லை. காங்கிரஸ் ஏற்பட்ட பிறகுதான் மக்களுக்கு தேசத் துரோகம் செய்யும் ஆசை கற்பிக்கப்பட்டது; தேசத் துரோகம் செய்து வாழ வேண்டிய அவசியமே மக்களுக்கு ஏற்பட்டது. காங்கிரசுக்கு முன் உத்தியோகஸ்தர்கள் மாத்திரம், அதுவும் மிகுதியான பார்ப்பன உத்தியோகஸ்தர் மாத்திரம் செய்யமுடிந்தது; இப்போது மக்கள் ஒவ்வொருவரும் வாழவேண்டுமானாலும், சிறப்பாக அயோக்கியர்கள் வாழவேண்டுமானாலும் உத்தியோகங்களைவிட காங்கிரசுதான் தக்க இடமாக இருந்துவருகிறது. சமய, சமூகவாரிகள் விடுதலைக்கு நமது நாடு ஆயிரக்கணக்கான வருஷங்களாய்ப் போராடுகிறது. அது வெற்றிபெறும் நாளையில் காங்கிரசின் பலனாய்ப் பார்ப்பன ஆதிக்கம் வளர்ந்து, அவ் விடுதலைகளுக்கு இடையூறாய் நிற்கிறது. இன்றும் இவ் விடுதலைக்குக் காங்கிரசின் பேரால் உழைக்க இடமிருக்கிறதா என்று கேட்கிறேன்.



காங்கிரசால் வந்த சீர்திருத்தத்தைத்தானே நம் நாட்டுக்கு ஆபத்து என்று சொல்லுகிறேன். அது வந்ததால் கெடுதிதானே ஆயிற்று. 'சீர்திருத்தத்தை நடத்திக்காட்ட முடிந்தது' என்கிறது. எதை நடத்திக்காட்டியதாக அப் பத்திரிக்கை சொல்லுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை. மந்திரி பதவிகளில் டாக்டர் சுப்பராயன், பனகல் ராஜா முதலியவர்கள் நடத்திக் காட்டியதையா? தேர்தல்களில் சீனிவாசய்யங்கார் நடத்திக் காட்டியதையா? இந்தியருக்கு உயர்பதவி கொடுத்ததில் சர். சி. பி. நடத்திக் காட்டியதையா? ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்ரீமான் ஈரோடு டி. சீனிவாச முதலியார் நடத்திக் காட்டியதையா? கூட்டுத்தொகுதியில் இந்திய சட்டசபைக்குத் தென்னாட்டில் அய்யங்கார்களே போக முடிந்ததையா? எதைச் சொல்லுகிறது என்று கேட்கிறேன். இதுபோலவே அதன் மற்ற வரிகளும் இருக்கின்றன. மற்றவைகளுக்குப் பதில் விரும்பினால் வரிவரியாய்ப் பிரித்து எழுதத் தயாராக இருக்கிறேன்.

ஒற்றுமையை உத்தேசித்து, கொள்கைகளை விட்டுக்கொடுத்த பலன்தான், மகாத்மா மூக்காடிட்டு சங்கராச்சாரி போல் மூலையில் உட்கார நேர்ந்ததும், அவரது நடவடிக்கைகள் இப்போது ஒரு மடாதிபதிகள் சம்பிரதாயம் போல் ஆனதும், மடங்களில் பலர் ஆஷாடபூதித்தனம் செய்து பெருமை அடைவதுபோல் காந்திமடத்திலும் பல 'சாஸ்திரிகள்' போய் அமர்ந்து முகஸ்துதி செய்து பெருமைபெற்று வாழ்வதுமான காரியங்கள் நடந்தது. காந்தி கொள்கைக்கு இருந்த மதிப்புகள் அடியோடு போய், காந்தி மடம் ஏற்பட்டுவிட்டதற்குக் காரணமே, கொள்கையை விட்டுக்கொடுத்து ஒற்றுமையை நாடின பைத்தியக்காரத்தனம் தான். மகான்கள் செயலில் பைத்தியக்காரத்தனமும் ஒன்றாதலால் மகாத்மா காந்திக்கு அது தகும். ஒரு சமயம் அதை மாற்றிக்கொள்ள அவருக்கு நம்பிக்கை பிறந்தாலும் பிறக்கும். நமக்கு அது தகாது. நமக்கு அந்நம்பிக்கை இல்லை. கொள்கையைவிட்டு இராஜியான ஒரு ஸ்தாபனமும், ஒரு மனிதனும், ஒரு நாடும் உருப்படியாகாது என்பது எனது புத்திக்கு எட்டிய உறுதியான முடிவு.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கு 'காங்கிரஸ்' பைத்தியம் இருப்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஸ்ரீ முதலியாருக்கு அரசியல் விளம்பரம் தேவையில்லை; ஆங்கிலம் படித்த பயனாகத் தேசத் துரோகத்தன்மை தோன்றவும் இடமில்லை; வேறுவிதத்தில் அவர் ஒரு பெரிய இராஜதந்திரியாக வேண்டியதவசியமும் இல்லை. ஆதலால் அவருக்குக் 'காங்கிரஸ்' பைத்தியம் ஏனோ தெரியவில்லை.

எப்படியானாலும் காங்கிரஸ் 'தேசத் துரோக ஸ்தாபன'மென்பதையும், ஏழைகளை வதைக்கும் ஸ்தாபனம் என்பதையும் நாம் கோபுரத்தின் மேலிருந்து கூவுவோம். ஆனால் கடைசியாக ஒரு வார்த்தை. அதாவது, யாரொருவர் காங்கிரசைப் பற்றி என்னைப் போல் நினைக்கிறார்களோ—என்னைப் போன்ற முடிவை உறுதியாகக் கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் மாத்திரம் காங்கிரசில் சேரவேண்டியதில்லை. ஸ்ரீமான் நாயுடுவைப் போலவும், முதலியாரைப் போலவும், மற்றும் ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சிலர்போலவும் 'காங்கிரஸ் ஒரு தேசீய சபை; அதனால் தேசத்திற்கு நன்மை செய்யலாம்' என்று யாராவது நினைப்பார்களேயானால், அவர்கள் அவசியம் தங்கள் மனசாட்சிப்படியே நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் மனதில் உண்மைதெரிந்து சுய நலத்திற்காகவோ, வாழ்வுக்காகவோ போய்ச் சேர்ந்து, தேசத்தையும் ஏழை மக்களையும் கெடுக்காதீர்கள் என்று பிரார்த்திக்கிறேன்.

['குடி அரசு'-தலையங்கம்—12-6-1927]



படிப்பகம்

www.padippakam.com



## 3. செங்கற்பட்டு மாநாட்டின் தீர்மானங்கள்

இரண்டு, மூன்று மாத காலமாய்த் தென்னிந்தியா முழுவதும் ஒரே பேச்சாயிருந்த முதலாவது சுயமரியாதை மாகாண மாநாடு செங்கற்பட்டில் இம் மாதம் 17, 18ஆம் தேதிகளில் வெகு விமரிசையாகவும், மிக்க ஆடம்பரமாகவும் கூடி, பல தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டுக் கலைந்துவிட்டது. வெகுசொற்ப நாட்களுக்குள்ளாகவே செங்கற்பட்டில் இந்த மாகாண மாநாடு நடத்தத் தீர்மானித்திருந்ததால் போதுமான சாவகாசமில்லாதிருந்தால்கூட, செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் கே. கிருஷ்ணசாமி அவர்கள் முயற்சியாலும், செங்கற்பட்டு சேர்மன் திரு. வேதாசலனார் அவர்கள் ஊக்கத்தாலும், செங்கற்பட்டு பிரபுவும், ஜமீன்தாரருமான அப்பாசாமி வள்ளலாரின் வள்ளல் தன்மையாலும், 'திராவிடன்' பத்திராதிபர் திரு. கண்ணப்பரின் இடையறா உழைப்பாலும், மற்றும் அனேக கனதனவான்களின் உதவியாலும், தென்னிந்தியாவில் இதுவரை எங்கும் நடந்திராத மாநாடுபோல் இம் மாநாடு நடந்தேறிவிட்டதும் மாநாட்டின் பிரதிநிதிகளிலும் இதுவரை எந்த மாநாட்டிலும் கூடாதமாதிரி எல்லா தரத்தவர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்ததும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

முதலாவதாக, வைதீகர்கள் கூட்டமும், இரண்டாவதாக, பண்டிதர்கள் கூட்டமும் மூன்றாவதாக, ராஜாக்கள், மந்திரிகள், ஜமீன்தார்கள், உத்தியோகஸ்தர்கள், ஆங்கிலம் படித்தவர்கள், செல்வந்தர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியவர்களின் கூட்டமும், எதிர்பாராத அளவில் விஜயம் செய்திருந்தது மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும். மற்றபடி பெண்மணிகள், தொழிலாளர்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கொடுமை செய்யப்பட்டவர்கள் ஆகியவர்கள் மற்ற எல்லாரையும்விட அதிகமாகக் கூடியிருந்தாலும் அவர்களே மாநாட்டுக்குச் சொந்தக்காரர்களானதினால் அவர்கள் வந்திருந்ததில் நாம் ஒன்றும் அதிசயப்படுவதற்கில்லை. எனவே, இம் மாதிரி குறிப்பிடத்தகுந்த அளவு மாநாட்டின் பெருமைகள் ஒருபுறம் இருக்க மாநாட்டின் தீர்மானங்களைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

இம் மாநாட்டில் சுமார் இருபது தீர்மானங்கள்வரை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் சைமன் கமிஷன் பகிஷ்காரம் கூடாது என்றும், நேரு கமிட்டி ரிபோர்ட்டை பகிஷ்கரிக்கவேண்டும் என்றும் செய்யப்பட்ட தீர்மானங்களைப்பற்றி அரசியல் துறையில் இருப்பவர்கள் என்பவர்களில் ஒரு சிறு சாராருக்கு அபிப்பிராயபேதமிருக்கலாம். அதற்கு நம்முடைய சமாதானம் என்னவென்றால், முதலாவதாக, நமது சுயமரியாதை இயக்கத்தில் அரசியல் நிர்வாக சம்பந்தமான சீர்திருத்த விஷயங்களைப்பற்றிய பேச்சுகளுக்கு இடமில்லை என்பது யாவரும் அறிந்ததேயாகும். ஆனால், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளும் திட்டங்களும் நிறைவேற்றப்படும்போது ஜனங்களின் உதவியை எப்படி எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றதோ அதுபோலவே அரசாங்க உதவியையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆதலால், அந்த அளவுக்கு அரசியல் தீர்மானம் இருந்துதான் தீரவேண்டி இருக்கின்றது. இன்றைக்கும் சுயமரியாதைக் கொள்கைகளில் அனேக விஷயங்களை நிறைவேற்றவொட்டாமல் செய்ய நமது எதிரிகள் அரசாங்கத்தின் துணையை எதிர்பார்க்கின்றதை நாம் பார்க்கின்றோம். அனேக விஷயங்கள் அரசாங்கச் சட்டத்தின் மூலம் செய்யப்படவேண்டி இருக்கின்றதையும் உணர்ந்து அவைகளுக்குச் சட்டசபைகளின் மூலம் சட்டம் செய்ய முயன்றுகொண்டு இருக்கின்றோம்.

உதாரணமாக, ஆண்களுக்கொரு சட்டம், பெண்களுக்கொரு சட்டம் என்பதாகவும் பார்ப்பனருக்கொரு சட்டம், பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு சட்டம் என்பதாகவும் உயர்ந்த சாதி என்பவர்களுக்கொரு சட்டம், தாழ்ந்த சாதி (தீண்டப்படாதவர்கள், கொடுமைப்படுத்தப்பட்டவர்கள்) என்பவர்களுக்கொரு சட்டம் என்பதாகவும் இருந்து வருவதையும், அவற்றை நாம் தினமும் அனுபவித்து வருவதையும் மாற்றி, எல்லோருக்கும் சமமான நீதி ஏற்படுத்தவேண்டுமானால், நமக்குள்ளாகவே நாம் செய்துகொள்ளும்படியாக



எந்தக் காரியம் செய்தாலும் சரி, எந்தத் தீர்மானம் செய்தாலும் சரி, அவைகளினால் நமது இலட்சியத்தை நிறைவேற்ற முடிவதில்லை என்பதும், அவைகளுக்குக் கண்டிப்பாய் அரசாங்கத்தின் மூலம் பழைய சட்டங்களை மாற்றிப் புதிய சட்டங்கள் செய்தே தீரவேண்டும் என்பதும் யாராலும் மறுக்கப்பட முடியாத உண்மைகளாகும். அல்லாமலும், அவைகளில் அனேகவற்றிற்குச் சட்டம் செய்யக்கூட நம்மவர்கள் ஏகமனதாய் ஒப்புக்கொள்வதாயிருந்தாலும்கூட முதலில் அரசாங்க அனுமதியையும் பெறவேண்டியதான நிபந்தனைகளும் இருக்கின்றன.

இது ஒருபுறமிருக்க, அரசாங்கம் எல்லா மக்களுக்கும் பொதுச்சொத்து என்பதையும் அரசாங்க உத்தியோகங்களும் பதவிகளும் எல்லோருக்கும் பொதுச்சொத்து என்பதையும், அதுபோலவே அரசாங்க வரிப்பணமும் எல்லா மக்களுக்கும் பொதுச்சொத்து என்பதையும் யாராவது மறுக்க முடியுமா? அதுபோலவே, அப் பணத்திலிருந்து செலவு செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் எல்லாருக்கும் பொது என்பதையும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். எனவே அப் பொதுக் காரியங்கள் உரிமைகள் எல்லாருக்கும் சமமாய் அனுபவிக்க சம சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டுமல்லவா? ஆதலால், இதற்கு நாம் அரசாங்க உதவி எதிர்பார்க்காமலிருக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கும், பொது உரிமைகளில் அதிகமான பங்கை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களுக்கும், மற்றவர்களை முன்னேற விடாமல் தடுத்து சூழ்ச்சி செய்து முன்னணியில் இருந்துகொண்டிருப்பவர்களுக்கு மாத்திரம் இக் காரியங்களுக்காக அரசாங்கத்தை எதிர்பார்ப்பது என்பது ஒரு சமயம் தங்களது சுயமரியாதைக்குப் பங்கமாக இருப்பதாகக் காணப்படலாமேயொழிய, வெகு குறைந்த உரிமைகளை அனுபவிப்பவர்களுக்கும் வெகு தாழ்ந்த பதவியில் தாழ்த்தப் பட்டிருப்பவர்களுக்கும் தங்கள் பதவிகளைக் கேட்பதும் விடுதலைபெற முயற்சிப்பதும் ஒருகாலும் அவர்களது சுயமரியாதைத் தத்துவத்திற்கு விரோதமானது என்று எவரும் சொல்ல முடியாதென்றே கூறுவோம்.

ஆதலால், இந்த முறையில் சைமன் கமிஷனிடம் கொடுமைப் படுத்தப்பட்டவர்களும், பிறரால் ஏமாற்றப்பட்டுப் பின்னணியில் தள்ளப்பட்டவர்களும் தங்கள் கஷ்டங்களையும், தேவைகளையும் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துவது என்கின்ற முறையில் கமிஷனிடம் எடுத்துச் சொல்லுவதிலும், சம சுதந்திரமும், சம சந்தர்ப்பமும் ஏற்படுத்துவதற்கு மார்க்கமில்லாத 'நேரு திட்டம்' என்னும் அரசியல் திட்டத்தைச் சம சுதந்திரமும் சம சந்தர்ப்பமும் இதுவரை அனுபவியாத மக்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதிலும் குற்றமொன்றுமில்லையென்றே சொல்லுவோம். ஆகவே, இவை அரசியல் நிர்வாக விஷயத்தைச் சேர்ந்ததல்லவென்றும் ஒரு சமயம் இவை அரசியல் நிர்வாகத்தைச் சேர்ந்தவைதான் என்று சொல்லப்படுவதானாலும் அவை உண்மையான சுயமரியாதைத் தத்துவத்திற்குத் தள்ளப்பட முடியாத விஷயமேயாகும் என்றும் சொல்லுவோம்.

நிற்க, மக்கள் பிறவியில் சாதிவித்தியாச உயர்வு-தாழ்வுக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பது, இது இந்நாட்டு மக்களில் பல துறைகளில் உள்ள எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுவதானாலும் அதற்கு விரோதமாயுள்ள ஆதார விஷயங்களில் உள்ள பிடிப்பை விட்டுவிட அனேகர் சம்மதியாமல் இருப்பதையும், மற்றொருபுறம் அக் கொடுமைகள் நிலைத்திருக்க மதத்தின் பேரால் மாநாடுகளும் பிரச்சாரங்களும் அரசாங்கத்தினிடம் தூதுகளும் நடைபெறுவதையும் பார்க்கும்போது, நம்நாடு சுலபத்தில் அக் கொடுமைகளை ஒழிக்கத் தயாராயில்லை என்பதும், உயர்வு-தாழ்வுக் கொடுமையின் அஸ்திவாரம் இன்னதென்று பலருக்குப் புலப்படவில்லை என்பதுமே விளங்குகிறது. அதுபோலவே, வருணாசிரமப் பிரிவுப் பாகுபாடுகள் விஷயத்திலும் தேசாபிமானி மகாத்மா, சீர்திருத்தக்காரர்

படிப்பகம்

www.padippakam.com



என்பவர்கள் முதல்கொண்டு அவற்றை ஆதரிப்பதிலும், அதற்காதாரமான மதம், வேதம் முதலியவற்றைப்பற்றிப் பிரச்சாரம் செய்வதும் அவ்வற்றிற்கு வேறு வியாக்கியானங்கள் செய்வதுமான நிலையிலேயே இன்னும் இருப்பதைச் சற்றுக் கூர்ந்து பார்த்தால், இது சம்பந்தமாக மாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களின் அவசியம் யாவருக்கும் நன்றாய் விளங்கும்.

நிற்க, அடுத்தபடியாக வகுப்புப் பட்டங்களும், குறிகளும் விடப்படவேண்டும் என்னும் தீர்மானத்தின் அவசியமும் அதுபோலவேதான். எப்படியெனில், மக்களுடைய பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே அவர்களது குணம், அறிவு, தன்மை முதலியவைகள் ஒன்றும் தெரியாமலே அவர்களைப் பிரித்து வேற்றுமையாய் நினைக்கத் தகுந்த மாதிரியில் அர்த்தமற்ற பிரிவினைகளைக் காட்டும் வித்தியாசங்கள் ஒழிந்தாலொழிய நமதுநாட்டில் மக்கள் ஒன்றுபட்டு ஒரே இலட்சியத்திற்குழைத்து வாழமுடியாதாகையால் அவ்வித்தியாசங்காட்டும் பெயர்களும் குறிகளும் ஒழிக்கப்படவேண்டும் என்பது ஒற்றுமையையும் சமத்துவத்தையும் விரும்பும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதேயாகும். மற்ற தீர்மானங்களைப்பற்றிய கருத்துக்கள் தொடரும்.

['குடிஅரசு'–தலையங்கம்—24 -2–1929]

சாதி வகுப்பு வித்தியாசத்தைக் காட்டும் பட்டங்களையும் சமய வித்தியாசத்தைக் காட்டும் குறிகளையும் விட்டுவிடவேண்டும் என்று செய்த தீர்மானம் நாட்டின் ஒற்றுமைக்கு மிகுதியும் அத்தியாவசியமானது என்பதைப்பற்றி முன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

இத் தீர்மானத்தில் பொறாமை கொண்ட சில விஷமக்காரர்கள் 'வகுப்புப் பட்டம் நீங்க வேண்டும் என்கின்றவர்கள் வகுப்பு மாநாடுகளில் கலந்துகொள்ளலாமா?' என்கின்ற ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்கின்றார்கள். இதற்கு நாம் சொல்லும் சமாதானம் என்னவென்றால், ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் வகுப்பு மாநாடுகள் கூட்டி, அவற்றில் இவ்விதத் தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அவற்றை முதலில் தங்கள் தங்கள் வகுப்புகள் என்பவைகளுக்குள் அமுலுக்குக் கொண்டுவருவதன் மூலம் வகுப்பு வித்தியாசங்களை ஒழியுங்கள் என்றுதான் கேட்கின்றோம். அதற்காகத்தான் வகுப்பு மாநாடுகள் கூட்டுங்கள் என்கின்றோமேயொழிய வேறில்லை. உதாரணமாக, ஒரு வாணிய வைசிய மாநாட்டில் நாம் பேசும்போது அவர்களுடைய பூணூலை எடுத்துவிடும்படியும், தங்களை வைசியர்கள் என்று சொல்லிக்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டோம். அதுபோலவே, நாடார் க்ஷத்திரிய வகுப்பார் கூட்டத்தில் பேசும்போது தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக்கொள்ள வேண்டாம் என்றும், பூணூலை எடுத்துவிடும்படியும் பேசினோம்.

அதுபோலவே, நாயுடுமார்கள் மாநாட்டில் பேசும்போது தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக்கொள்வதை விட்டுவிடும்படியே கேட்டுக்கொண்டோம். இம் மாதிரி சிறிதாவது விட்டுவிடவும் செய்தோம். ஆதலால், வகுப்புப் பிரிவுகள் எத்தனை உண்டோ அத்தனை வகுப்பும் மாநாடுகள் கூட்டி, வித்தியாசங்களை ஒழிக்கத் தீர்மானங்கள் செய்து கொள்ளாவிட்டால் எப்படி இந்தக் கொள்கைகள் ஒவ்வொரு வகுப்புக்குள்ளும் போய்ப் புகுந்து வகுப்பு நோயைத் தீர்க்க முடியும் என்பது நமக்கு விளங்காது. மற்றும், இப்போது ஆதித்திராவிட மாநாடுகள் கூடுவதால் எவ்வளவு தூரம் அச் சமூகத்திற்கு உணர்ச்சி வந்து அவைகள் முன்னேற இடமேற்பட்டிருக்கின்றது என்பதைக் கவனித்தால், வகுப்பு மாநாட்டின் அவசியம் விளங்கும். ஒரு பெரும் சமூகம் ஒற்றுமையும், சீர்திருத்தமும் பெற வேண்டுமானால் அதிலுள்ள பிரிவுகளான ஒவ்வொரு சிறு சமூகமும் தங்களுக்குள் முதலில் ஒற்றுமையையும், சீர்திருத்தத்தையும் பெற்றாக வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த உண்மை உலகத்திலுள்ள எந்த யோக்கியனுக்கும் விளங்கியே தீரும்.



உதாரணமாக, தென்னாட்டில் பார்ப்பனரல்லாதார் மாநாடு கூட்டப்படாமல் இருந்திருக்குமானால் பார்ப்பனர்களின் கொடுமையை நாடு அறிந்து, அதிலிருந்து விடுதலையடைய மார்க்கம் ஏற்பட்டிருக்க முடிந்தே இருக்காது என்றே சொல்லுவோம். அன்றியும், வகுப்பு மாநாடுகள் அடிக்கடி கூடுவதால் தாங்கள் மற்ற வகுப்பார்களால் அடையும் துன்பமும், அதிலிருந்துவிடுபட்டு மற்ற வகுப்பார்களும், தாங்களும் ஒற்றுமையாயிருக்க மார்க்கமும், அவசியமும் தானாகவே ஏற்பட்டுவிடும். எனவே, வகுப்பு வித்தியாசங்களால் வயிறு வளர்க்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் சுயநல சோம்பேறிகளைத் தவிர, பொதுநலத்தில் கருத்துள்ள மற்ற யாவருக்கும் வகுப்பு வித்தியாசங்களை ஒழித்து ஒற்றுமைப்பட வகுப்பு மாநாடுகள் கூட்டப்படுவது எந்த விதத்திலும் ஆபத்தாய்த் தோன்றாது.

சாதிபேதத்தை ஆதரிக்கின்ற மதம், வேதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளைப் பின்பற்றக் கூடாது.

இந்தத் தீர்மானத்தை எந்தவிதமான தீர்மானத்தைக்கொண்டும் யாரும் எதிர்க்க முடியாதானாலும், சமயத்தின் பேராலும், வேதசாஸ்திர புராணத்தின்பேராலும் தங்களது நித்திய வயிறு வளர்ப்பு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கும் இத் தீர்மானம் ஒருகாலும் திருப்தியை அளிக்காது என்பதோடு, அவர்களது சூழ்ச்சி விஷமப் பிரச்சாரம் இரகசியமாய் நடந்துதான் தீரும்.

இத் தீர்மானத்தின் கருத்துப்படி பார்த்தால், முக்கியமாக இந்துமதக் கொள்கைகளையும், அவற்றின் ஆதாரங்களையும் பின்பற்றக்கூடாது என்பதாகக் காணப்படுகின்றது என்றுதான் ஒவ்வொருவருக்கும் தோன்றும். ஏனெனில், உலகத்திலுள்ள எல்லா முக்கிய மதங்களைவிட இந்துமதம் என்பதிலும் அதன் ஆதாரங்கள் என்பதான வேதசாஸ்திர புராணங்களில்தான் சாதி வகுப்புப் பிரிவும், பிறவியில் உயர்வு உண்டு என்பதையும் அதிகமாக வலியுறுத்தப்படுகின்றது. ஆதலால், இத் தீர்மானம் மிகுதியும் இவற்றைக் குறைகொள்வதாக நினைப்பதில் அதிசயமில்லை. ஆனால், நம்மைப் பொறுத்தவரை உண்மையில் இந்துமதம் என்பதாக ஒரு மதமே இல்லை என்றும், இருப்பதாகக் கருதிக்கொண்டிருப்பதும் அதன் ஆதாரங்கள் என்று சொல்லப்படுவதும் ஒரு சிலருடைய சுயநலத்தாலும், நமது மக்களுடைய அறியாமையினாலும் வழங்கிவரும் ஒரு வெறும் மயக்க உணர்ச்சியே தவிர வேறில்லை என்றும் அம் மயக்க உணர்ச்சி ஒழியவே இந்துமதமும் அதன் ஆதாரங்களும் ஒழியவேண்டுமென்கிறோமே ஒழிய வேறில்லை.

உதாரணமாக, இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்று சொல்லிவந்திருக்கும் புஸ்தகங்களுக்கும், விஷயங்களுக்கும் இதுவரை யாரும் பதில் சொன்னவர்களே கிடையாது. 'ஞானசூரியன்' புஸ்தகத்தில் காணப்படுவதுபோல, ஒரு நாட்டின் இழிமக்களுக்கு அந் நாட்டு பாஷையில் சொல்லப்பட்ட ஓர் இழிவான பெயரே 'இந்து' என்பது.

அப் பெயர் பெரும்பாலும் மகமதியர்களால் தங்கள் மதஸ்தர்கள் அல்லது தங்கள் நாட்டவர்கள் அல்லாத இந்திய நாட்டவர்களுக்கு அளிக்கப்பட்டது. எப்படி அய்ரோப்பியர்கள் நம்மைச் சுதேசிகள் என்று கூப்பிடுகிறார்களோ, அதுபோலவே மகமதியர்கள் நம்மைச் சுதேசிகள் என்று கூப்பிடுவதற்குப் பதிலாக இந்தியன் என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் சொல்வதுபோல இந்தி, அரபி, உருது முதலிய பாஷைகளில் இந்து என்று சொல்லி அழைத்தார்கள். இந்த நிலையில் இந்திய மக்கள் எல்லோரையும் குறிப்பிட வேறு பெயர் சமயத்தின்பேரிலோ, நாட்டின்பேரிலோ, சாதியின்பேரிலோ ஒரு குறிப்பும் இல்லாதிருந்ததால் இந்து என்கின்ற பெயரே எல்லோரையும் சேர்ப்பதற்கு ஒரு பொதுப் பெயராகவும் ஏற்பட்டதோடு, ஆரியர்கள் கொள்கைகளுக்கே இந்து சமயம் என்னும் பெயர் தரப்பட்டு, அது இந்தியர்கள் எல்லோர்கள் தலையிலுமே சுமத்தப்பட்டுவிட்டது. உதாரணமாக, இந்துமதம் என்கின்ற வார்த்தை உச்சரிப்புகூட சுமார் ஒரு 400, 500 வருஷங்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



முன்னால் இருந்ததாக எண்ணுவதற்கு ஒரு ஆதாரத்தையும் காணோம். சைவம் என்கின்ற பெயரும், சிவன் என்றால் அன்பு என்கின்ற வியாக்கியானமும்கூட ஆரியக் கொள்கைகளைச் சிறப்பாகவே ஆபாசங்களையும், வேள்விக் கொடுமைகளையும் முறையே வெளியாக்கியும் அழிக்கவும் வந்த புத்த இயக்கத்தை எதிர்த்து அவரது கொள்கையை ஒழிக்கவே சைவம் என்பதாக ஒன்று கற்பிக்கப்பட்டதே தவிர, மற்றபடி அச் சைவம் என்பதற்கும் அதன் கொள்கைகளுக்கும் அதில் காணப்படும் பலவேறு கடவுள்களுக்கும் தமிழ் நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்வித சம்பந்தமும் இருப்பதாகவோ இதுவரை எவ்வித ஆதாரமும் வெளிப்படுத்தப்படவில்லை. நாளாக நாளாக சைவ ஆரியக்கொள்கை கொண்ட சமயம் தமிழ் மக்களுக்குப் பொருத்தமில்லாமல் போவதை அறிந்த சில தமிழர்கள், ஆரிய சைவ சமயம் என்பது வேறு, தமிழர் சைவசமயம் என்பது வேறு என்று பிரித்து, ஆரியக் கொள்கைகளைக் கண்டித்து ஒதுக்கி, அதற்குப் பதிலாகத் தமிழ் மக்களுக்குப் பொருத்தமானது என்பதாகச் சிலவற்றைத் தாங்களே நினைத்து வேறு சில கொள்கைகளையும் வியாக்கியானங்களையும் புகுத்தித் தமிழ்ச் சிவன், தமிழ்வேதம், தமிழ்க் கடவுள் என்பதாக, வெள்ளரிக் காய்க்குப் பூண் போடுவதுபோல், இழுத்துப் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். அன்றியும், சைவசமயத்திற்குச் சாதி, மத, வகுப்புப் பேதங்கள் கிடையாது என்று சொல்லி, சமரசத்தைப் பற்றிப் பேசுவதிலும் குறைவில்லை. ஆனால், உட்புகுந்து பார்த்தால், சமயாச்சாரிகள் எல்லோருக்கும் சாதி உண்டு. இது மாத்திரமல்ல; சைவக் கடவுள்கள் எடுத்த மனித ரூபங்கள் எல்லாவற்றுக்கும் சாதி உண்டு. இது மாத்திர மல்ல, சைவப் புராணங்கள் எல்லாவற்றிலும் அவற்றைச் செய்தவர்கள், செய்யப்பட்டவர்கள் உள்பட சாதி உண்டு. எனவே, சைவசமயம் சாதிகள் ஏற்பட்டதற்குப் பின்பு உண்டான தென்றும், அதுவும் சாதி மத பேதங்களை ஒழிக்கப் புறப்பட்ட பவுத்த, சமணக் கொள்கை களுக்குப் பின் உண்டானதென்றும் சொல்லித் தீரவேண்டியிருக்கின்றது. அதுபோலவே, வைணவ சமயம் என்பதும், அதுபோலவே ஆரியக் கொள்கைகள் நாட்டில் பெரும்பாலோ ரால் வெறுக்கப்பட்ட காலத்தில் அதனுடைய அடிப்படைகளை மாத்திரம் நிறுத்திக்கொண்டு சற்று திருத்தப்பட்ட கொள்கைகளை வைத்து வெளியாக்கப்பட்ட சமயமாகும். ஆனாலும், அதுவும் வார்த்தை அளவில் சில நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் வைணப் புராணங் களும், கடவுள்களும், ஆச்சாரியார்களும், ஆழ்வார்களும் சகலமும் சாதி வித்தியாசம் கற்பிக்கக்கூடியதாகவேதான் இருந்துவருகின்றது.

இச் சமயத்தைச் சேர்ந்த சில பெரியார்கள் என்பவர்கள் மாத்திரம் சாதி வித்தியாச மில்லை என்று சொன்னதாகக் காணப்பட்டாலும் அதற்கும் பல நிபந்தனைகள் சொல்லப் பட்டிருப்பதையும் காணாமல் இருக்கமுடியாது. எனவே, சாதி வித்தியாசம் இயற்கை என்பதும் அதை ஒழிப்பதற்கு நிபந்தனைகள் வேண்டியிருப்பதால் அவ்விரு சமயங்களும் சமரசம் செயற்கை என்றும் விளங்குகின்றது.

['குடி அரசு'—தலையங்கம்—3-3-1929]

## 4. இரண்டுவகை மாநாடுகள்

சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு நமது நாட்டில் ஒருவிதக் கிளர்ச்சி உண்டா யிருப்பதோடு, அவ்வியக்கத்திற்குச் சில எதிர்ப்புகள் தோன்றியிருக்கின்றன என்பதையும் மறுக்கமுடியாது.

இவ்வெதிர்ப்புகளில் காங்கிரசின் பேரால் வயிறு வளர்க்கும் சில கூலிகளுடையவும், வயிற்றுப் பிழைப்புக் காலிகளுடையவும், சமயபுராண வியாபாரிகள் வயிற்றுப் பிழைப்புப் பிரசங்கிகள், பண்டிதர்கள் ஆகியவர்களுடையவும் எதிர்ப்புக் கூச்சல்களை இலட்சியம் செய்து எவரும் பதில் சொல்லவேண்டியதில்லையானாலும், வருணாசிரமத்தின் பேரால் பார்ப்பனர்களும் சைவ சமயத்தின் பேரால் சைவர்கள் என்பவர்களும் வருணாசிரம மாநாடு



களும் சைவசமயக் கூட்டங்களும் கூட்டி, அதில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களைப் பற்றிக் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

சாதி வித்தியாசம், தீண்டாமை ஆகியவற்றை விலக்கவேண்டும் என்கின்ற உணர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்ட காலம் முதல் பார்ப்பனர்கள் வருணாசிரம மாநாடு என்பதாக ஒரு மாநாடு கூட்டி, தீண்டாமை இருக்கவேண்டும், அது கடவுளால் ஏற்பட்டது என்று சொல்லிக் கொண்டுதான் வந்திருக்கின்றார்கள். அதுபோலவே, பாலிய விவாக விலக்குக்கும், விதவா விவாக ஆதரிப்புக்கும் சிலர் தோன்றிய காலம் முதல்கொண்டும் பார்ப்பனர்கள் வருணா சிரம மாநாடுகள் கூட்டி, 'பாலிய விவாகம் செய்யாவிட்டால் பாபம், அது மதத்திற்கும் வேதத்திற்கும் விரோதம்' என்றும், 'விதவா விவாகம் செய்வதால் மதமும் ஒழுக்கமும் கெட்டுப்போகும்' என்றும் சொல்லி ஆட்சேபித்த தீர்மானங்கள் செய்துகொண்டு வந்திருப் பதுடன், இது விஷயங்களில் சட்டத்தின்மூலம் ஏதாவது செய்யலாம் என்று யாராவது முயற்சித்தால் 'அரசாங்கத்தார் மதவிஷயங்களில் தலையிடக்கூடாது' என்று தீர்மானங்கள் செய்துகொண்டும் வந்திருக்கின்றார்கள். பொதுஜனங்களுக்குச் சீர்திருத்த விஷயங்களில் எவ்வளவுதான், அறிவும், ஆசையும் இருந்தாலும் காரியத்தில் வரும்போது பார்ப்பனர் களும் பண்டிதர்களும் மதப் பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு விடுவதால், பாமர மக்கள் உடனே மதத்திற்குப் பயந்து மூலையில் ஒதுங்கிவிடுகின்றார்கள். இந்தக் காரணத் தாலேயேதான் மதத்தை வைத்துக்கொண்டு சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று புறப் பட்ட ஒருவர்கூட இதுவரையில் ஒரு சிறிதும் வெற்றிபெற முடியாமலே போய்விட்டது. இந்த அனுபவத்தைக்கண்ட பிறகே மதத்தின் யோக்கியதைதான் என்ன என்பதாக அதைக் கிளறப் புறப்பட்டோம். எனவே, அதைக் கிளறக் கிளற நாவிதன் குப்பையைக் கிளறுவதுபோல் உபயோகமற்ற குப்பைகளையே காணமுடிந்ததே அல்லாமல் ஒரு சிறிதாவது பயன்படத் தக்கதாக ஒன்றையுமே காணமுடியவில்லை.

உதாரணமாக, மதங்கள் என்பவைகள் பலப் பல; அவற்றுள் உள்மதங்கள் பலப் பல. உள்மதங்கள் ஒவ்வொன்றினுள்ளும் பிரிவுகள் பலப்பல. அப் பிரிவுகளுக்கும் வியாக்கியா னங்கள், அகச் சான்றுகள், புறச் சான்றுகள், தத்துவார்த்தங்கள் பலப் பல. இப்படி கரைகண்டு முடிவு செய்ய முடியாத மாதிரியில் கையில் வலுத்தவன், வாயில் வலுத்தவன், செல்வத்தில் வலுத்தவன், சூழ்ச்சியில் வலுத்தவன், மானமற்ற தன்மையில் வலுத்தவன் என்கின்றதை அனுசரித்து மக்களை மக்கள் ஏமாற்ற மாத்திரம் பயன்படுகின்றதே ஒழிய எதற்காக அவைகளை ஸ்தாபிக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றதோ அதற்காக அவை சற்றாவது பயன்படாமல், ஒரு சில சோம்பேறிகளுக்கும் சுயநலமுள்ள நாணயமற்றவர் களுக்கும் மாத்திரம் பயன்பட்டுவருவதை நன்றாய்ப் பார்த்துவருகின்றோம். ஆதலால், அவைகளை அழிப்பதைத் தவிர, வேறு வேலையின்மூலம் ஒருகாலமும் இப்போது மதங் களின்மூலம் நாட்டிற்கும், மக்கள் வாழ்க்கைக்கும், ஒழுக்கத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்பட்டுள்ள இடையூறுகளை ஒழிக்கமுடியாது என்று கருதி, அவற்றைத் தைரியமாக வெளியாக்கிவிட்டோம்—வெளியாக்கிக்கொண்டும் வருகின்றோம்.

இதைக்கண்ட பிறகுதான் பார்ப்பனர்களும் அவர்களின் எதிர்களாகிய சைவ சமயிகளும் இது சமயம் தங்கள் இருவர்களின் அடிப்படையான வித்தியாசத்தைக்கூட மறந்துவிட்டு, எப்படியாவது அடியோடு அழிக்க வந்திருக்கும் ஆபத்திலிருந்து தப்புவித்துக் கொண்டால் பின்னால் அவரவர்கள் தனித்தனிக் காரியத்தைப் பார்த்துக்கொள்ளலாம் என்று கருதி, தினம் ஒரு வருணாசிரம மாநாடும் வாரம் ஒரு சைவ சித்தாந்த மாநாடும் கூட்டிய வண்ணமாகவே இருக்கின்றார்கள். இவ்விரண்டு வகை மாநாடுகளுக்கும் இரண்டு வகை மடாதிபதிகள் என்பவர்களும் உள் ஆதரவாய் இருந்து, பண சம்பந்தமான உதவி களைத் தாராளமாய்ச் செய்தும் வருகின்றார்கள். ஏனெனில், அப்படிச் செய்யவில்லையா னால் முதல் பிடிமண் அவர்கள் வாயில்தான் விழவேண்டிவரும். ஏனெனில், பார்ப்பன

படிப்பகம்

www.padippakam.com



மடாதிபதிகள் சுமார் 2, 3 டஜன், (உலக குருக்களான) சங்கராச்சாரியர்களும் 2, 3 டஜன், மகந்துகள், ஜீயர்கள் மற்றும் பல மடச் சுவாமிகள் ஆகிய பார்ப்பனர்களும், ஒரு டஜனுக்கு மேற்பட்ட பார்ப்பனரல்லாத சைவ மடாதிபதிகளும் சேர்ந்து வருஷத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களின் வருவாய்களால் அனுபவித்துக் கொண்டுவரும் அதிகாரங்களையும் போகபோக்கியங்களையும் துறக்கவேண்டிவரும். அன்றியும், இவர்கள் பெயரைச் சொல்லிக் கொண்டும் இவர்களது போகபோக்கியத்திற்கு உதவிசெய்துகொண்டும் இருக்கும் பல ஆயிரக்கணக்கான மக்களது அனுபவமும் வயிற்றுப் பிழைப்பும் ஒழிந்துபோகும். அன்றியும், இவர்கள் ஆதீனத்தில் உள்ள பல கோயில்களின் வரும்படிகளும் ஆதிக்கங்களும் ஒழிந்துபோகும். ஆதலால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நமது நாட்டைவிட்டு தாங்களாகவே ஒதுங்கிப்போவதற்கு ஒரு காலம் யோக்கியமாக வந்தாலும் வரக்கூடுமே தவிர, இந்தக் கூட்டங்கள் ஒழிந்துபோக ஒருகாலமும் சம்மதிக்கவுமாட்டார்கள். அல்லது, யோக்கியமான முறையில் ஒழிக்கப்படுவதற்கும் இலக்காகவுமாட்டார்கள். ஆதலால்தான், இவர்கள் இம் மாதிரிக் கூட்டங்கள் கூட்டவும், கூட்டச் செய்யவும், கூட்டுபவர்களுக்கு உதவி செய்யவும் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே, இந்த மாதத்தில் மாத்திரம் 3, 4 வருணாசிரம மாநாடுகளும் 3, 4 சைவ சமாஜக் கூட்டங்களும், ஒரு பெரிய சைவசித்தாந்த மாநாடும் கூட்டப்பட்டுவிட்டது அதிசயமல்ல. ஆகவே, அதன் யோக்கியதைகளைச் சற்றுக் கவனிப்போம்.

முதலாவதாக, சைவப் பெரியார் மாநாட்டைப்பற்றிக் கவனிப்போம். இம் மாநாடு கூடிக் கலைந்த விவரம் 'திராவிடன்' பத்திரிகையில் உள்ளபடி வேறு பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். சைவப் பெரியார் மாநாட்டுத் தீர்மானங்கள் என்னவென்றால், முதல் தீர்மானமானது,

'நல்ல ஒழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டு என்னும் கொள்கை இன்றியமையாதது' என்பதாகும்.

இந்தத் தீர்மானம் மலையைத் தோண்டி எலியைப் பிடித்தது போன்றதாயிருக்கின்றது. சைவசமய மாநாடு கூட்ட முயற்சித்தபோது கடவுள் இல்லை என்னும் நாஸ்திகம் நாட்டில் வளர்ந்துவிட்டதாகவும் கடவுளை நிர்த்தாரணம் செய்யவேண்டிய அவசியத்திற்கும் நாஸ்திக இயக்கத்தை ஒழிப்பதற்கும் என்று வெகு அவசரமாக மாநாடுகூட்டி எவ்வளவோ பேர்கள், இரண்டு மூன்று நாள் மெனக்கெட்டு, பலபொருளும் செலவிட்டு, பலரை மாநாட்டில் கலந்துகொள்ளாமலும் செய்து, கடைசி கடைசியாகக் கடவுளைப்பற்றிய தீர்மானம் என்னவென்றால், கடவுள் உண்டு என்ற கொள்கை நல்ல ஒழுக்கத்திற்கு அவசியமானது என்பதோடு நின்றுவிட்டதே ஒழிய, கடவுள் உண்டு என்றாவது இல்லை என்றாவது யாதொரு முடிவும் கட்டமுடியாமல் போய்விட்டது.

எனவே, இந்தவிதமான கடவுள் முடிவு, சுயமரியாதை இயக்கத்தின் முடிவைவிட, புத்த சமண இயக்கங்களின் முடிவைவிட எந்த விதத்தில் மேலானதென்று கேட்கிறோம்.

மேற்கண்ட இயக்கங்களும், எல்லாவற்றையும்விட ஒழுக்கத்தையே பிரதானமாய்ச் சொல்லுகின்றனவே ஒழிய அவற்றுள் எதாவது விட்டுக்கொடுக்கின்றதா? ஒழுக்கம் எது என்னும் விஷயத்தில் அபிப்பிராயபேதமிருந்தால் அதற்காக ஒழுக்க மகாநாடு கூட்டி ஒரு முடிவுக்கு வருவதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அதற்காகக் கடவுளை ஏன் பொருத்தவேண்டும்? 'நெருப்பைத் தொட்டால் கடவுள் தண்டிப்பார்' என்பதைவிட, 'கைசுடும் தொடாதே' என்று அனுபவமுறையில் நன்மை தீமைகளைக் கற்பிப்பதின் மூலம் சீக்கிரம் சுலபத்தில் கண்டிப்பாய் ஒழுக்கமான வாழ்க்கைகளை உண்டாக்க முடியாதா என்று கேட்கின்றோம்.



வியாதியை மருந்து சாப்பிடுவதின் மூலம் சவுகரியம் செய்வதைவிட, நோயை இரத்தத்தில் கலக்கும்படி மருந்தை (இன்ஜக்ட்) ஊசிவழி ஏற்றுவதன் மூலம் சவுக்கியப்படுத்துவது சீக்கிரமாகவும், சுலபமாகவும் முடியக்கூடியதா அல்லவா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், கடவுள் உண்டு என்னும் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கும் மக்களில், மடாதிபதிகளில், பண்டிதர்களில் 1000-ல் எத்தனைபேர் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும், ஒழுக்கத்திற்குக் கடவுளைச் சம்பந்தப்படுத்தாமலும், ஒழுக்கத்தையே ஒழுக்கத்திற்காகக் கொண்டவர்களில், அதாவது பவுத்தர்கள், சமணர்கள், நிரீச்சுரவாதிகள் என்பவர்களில் ஆயிரத்திற்கு எத்தனை பேர்கள் ஒழுக்கமில்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்றும் கேட்கின்றோம்.

எனவே, சைவப் பெரியார்கள் தாமாக தாங்கள் ஒழுக்கமாக நடக்கமுடியாதவர்கள் என்றும், கடவுள் உண்டென்ற கொள்கை மூலம்தான் தாங்கள் ஒழுக்கமான வாழ்க்கையை நடத்தமுடியும் என்றும் முடிவைக் கொண்டவர்கள் என்றுந்தான் இத் தீர்மானத்தால் விளங்குகின்றது.

இரண்டாவது தீர்மானம், 'சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமுள்ளதாகவும் அன்பு நெறியையே அடிப்படையாகக் கொண்டதாகவும் இருத்தலினால் அது எக் காலத்திற்கும் எச் சமூக நிலைக்கும் இசைந்ததாயிருக்கின்றது' என்பதாகும்.

இது சுத்தப் பைத்தியக்காரத் தீர்மானம் அல்லது மதப்பித்துகொண்ட தீர்மானம் என்றுதான் சொல்லவேண்டும். முதலாவது, சைவசமயம் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமாயிருந்தால் அறிவும், ஆராய்ச்சியும்பெற்ற மக்கள் என்று நம்மாலேயே ஒப்புக்கொள்ளுகின்றவர்களிடம் சைவ சமயம் இருக்கின்றதா? உலகத்தில் இருக்கும் சுமார் 150 கோடி மக்களில் பவுத்தர்களும் பவுத்தசமய சார்புடையவர்களும் 54 கோடி மக்களாவார்கள். அடுத்தாற்போல் கிறிஸ்தவ மதத்தவர்கள் சுமார் 50 கோடி மக்களாவார்கள். முகமதியர்கள் 20 கோடியாவார்கள். இந்துக்கள் என்பவர்களும் 21 கோடி மக்களாவார்கள். மற்றபடி 2, 3 கோடிமக்கள் சில்லறை மதங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும். இவற்றுள் மேற்கண்ட 21 கோடி இந்துக்களில் 5, 6 கோடி மக்கள் தீண்டாதவர்கள். இவர்கள் சைவக் கொள்கைப்படி சைவர்களாக இருப்பதாகச் சைவர்களே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மீதி 15 கோடி மக்களில் அனேக மதங்கள் உண்டு. அனேகமாக வடநாட்டில்தானே கடவுள் என்கின்ற சங்கர மதமும், விக்கிரக வணக்கமில்லாத ஆரிய சமாஜமும், வேத புஸ்தகத்தை வணங்கும் சீக்கிய மதமும், வைணவ மதமுமே சிறப்பாக உள்ளவை. எனவே, தென்பாகத்தில் அதிலும் தென்னாட்டில் உள்ள மக்களில் 'பேய்த் தெய்வ' வணக்கக்காரர்கள், சமணர்கள், ஜெயினர்கள் இதுபோன்ற மற்றும் மத வித்தியாசமில்லாதவர்கள், ஸ்மார்த்தர்கள் ஆகியவர்களையெல்லாம் கழித்து மீதியுள்ள விபூதி பூசாதவர்களையும், விபூதி பூசுபவர்களையும், மாமிசம் சாப்பிடுபவர்களையும், இயற்கை வணக்கக்காரர்களையும் கழித்துக் கணக்குப் பார்த்து, இதில் சைவர்கள் எவ்வளவு பேர் இருக்கக்கூடும் என்பதை யோசித்துப் பார்த்தால், உமியை ஊதினால் என்ன மீதியாகுமோ அதுதான் மீதியாகலாம். இந்த மாதிரியான ஒரு சிறு கூட்ட மக்கள் ஓர் இடத்தில் கூடி ஒருவரை ஒருவர் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, சாப்பிடாமல் இருந்துகொண்டு 'சைவ மதம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒத்த மதம். எத்தேசத்திற்கும் எக் காலத்திற்கும் பொருத்தமானது' என்று தீர்மானிப்பதில் ஏதாவது அர்த்தமிருக்க முடியுமா என்பதை யோசித்து முடிவு கட்டும்படி பொதுஜனங்களுக்கே விட்டு விடுகின்றோம்.

மூன்றாவதாக, சாதாரணமாய் இந்த நாட்டில் சைவர்களது குறுகிய புத்தியும் அவர்களது சமய அகம்பாவமும் சமீப காலத்தில்தான் அதாவது, திரு. வேதாசலம் அவர்களது



படிப்பகம்

www.padippakam.com



ஆராய்ச்சியும், திரு. சுப்ரமணியப் பிள்ளை அவர்களது ஆராய்ச்சியும் மேநாட்டு முறையை ஒட்டிச் செய்துகொண்டு போனதின் பலனாய் சைவர்கள் கண்ணுக்கு மற்ற மனிதர்களைப் பார்த்தால் அவர்களும் மனிதர்கள்தான் என்று எண்ண முடிந்தது. இதற்குமுன் அவர்களது குறுகிய புத்திக்கும் ஆணவத்திற்கும் அனேக உதாரணம் சொல்லலாம். அவர்களது தீட்சையும் பஞ்சாட்சர மகிமையும், ஜபமும் மற்றவர்களை நாயினும் கடையாய் மதிக்கச் செய்தாலும் சுமார் 20 வருடத்திற்குமுன் அவர்களை மனிதப் பிறவி என்று சொல்லுவதற்குக்கூட யோக்கியதை இல்லாமல் இருந்தது என்பதை நாம் நேரில் அறிவோம். ஏன்—இப்போதுகூட எத்தனையோ பதர்கள் தங்களைச் சைவர்கள் என்று சொல்லிக்கொண்டு மனிதனைத் தொட்டால் பாவம் என்றும், ஒரு மனிதனோடு வேறு ஒரு மனிதன் கூட இருந்து உணவு கொண்டால் அது உணவு அல்லவென்றும், மற்ற சமயக்காரர்கள் எல்லாம் மக்கள் அல்லவென்றும், சாம்பலும் கொட்டையும் தவிர, வேறு கொள்கை சைவத்திற்கு இல்லை என்றும் கருதும்படி நடப்பவர்களையும் தாராளமாய்க் காணலாம்.

நான்காவதாக, 'சைவ சமயத்திற்கு ஆதாரம் 12 திருமுறைகளும் 14 மெய்கண்ட சாத்திரங்களும் வேத சிவாகமப் பகுதிகளும்' என்று தீர்மானித்திருக்கிறார்கள். சைவ சமயம் மிகுதியும் மோசமானது என்பதற்கு இதைப்போல வேறு உதாரணம் தேவையில்லை. திருமுறைகளில் அனேகம், எல்லாம் புராணக் குப்பைகளை ஆதாரமாகக் கொண்டவையே ஒழிய வேறில்லை. அவற்றுள்ளும் பிற சமயக்காரர்களை பார்ப்பனர்களைப் போல் இழிமுறையில் வையும்படியும், சொல்லும்படியும் வைததாகவும் கொன்றதாகவும் ஒவ்வொரு பதிகத்திலும் மிதக்கக் காணலாம். ஆகமங்களோ எந்த அளவில் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மனிதத் தன்மைக்கும் பொருத்தமானவை என்று கருதினார்களோ தெரியவில்லை.

இவ்வளவும் போதாமல், வேத சிவாகமப் பகுதிகளும் ஆதாரமாம். எனவே, சைவ சமய ஆராய்ச்சி 'பிள்ளையார் பிடிக்க அது குரங்காய் முடிந்தது' என்பதுபோல் முடிந்தது.

ஐந்தாவதாக, சைவச் சின்னம் சிவன்தான். பதி சரியை, கிரியை, மோகம், ஞானம் என்பவைகள் எப்படி ஆராய்ச்சிக்குள் அடங்கின என்பது விளங்கவில்லை. இதை விளக்கினால் 10 பக்கம் போதாது.

இது இப்படி இருக்க, வருணாசிரம மாநாடுகளின் தீர்மானங்களோ சைவப் பெரியார் மாநாட்டிற்குக் கொஞ்சமும் பின்வாங்கியவையல்ல. உருண்டைக்கு நீளம், புளிப்பிற்கு அவன் அப்பன் என்பதுபோல் சைவப் பெரியார்கள் தீர்மானங்களைத் தோற்கடித்துவிடக் கூடியவையாகவே இருக்கின்றன. இவற்றைப்பற்றி அடுத்த வாரம் விளக்குவோம்.

['குடி அரசு'–தலையங்கம்—7-4-1929]

## 5. வருணாசிரம மாநாடு

சென்றவாரம் 'இரண்டு மாநாடுகள்' என்னும் தலைப்பின்கீழ் நமது முன்னேற்றத்திற்கு விரோதமான கிளர்ச்சிகளைப்பற்றி எழுதி, முதலாவதாக சைவப்பெரியார் மாநாட்டைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, இந்த வாரம் வருணாசிரம மாநாடு, பார்ப்பனர்கள் மாநாடு ஆகியவைகளைப்பற்றி எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தோம். அதோடு இந்த வாரம் சென்னையில் திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவரான திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் சீர்திருத்தம் சம்பந்தமாகவும் சுயமரியாதை மாநாட்டின் தீர்மானங்கள் சம்பந்தமாகவும் தமது அபிப்பிராயத்தை ஓர் உபன்யாசமூலமாகத் தெரிவித்திருக்கின்றார்.



அதுவும் ஏறக்குறைய பார்ப்பனர்கள் மாநாடு, வருணாசிரம மாநாடு, சைவப் பெரியார் மாநாடுகள் போன்றவைகளின் அபிப்பிராயத்தையே வர்த்தகயுக்தி முறையில் பேசியிருக்கின்றார். அதன்சாரமும் அதற்கு திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்களின் விளக்கமான சமாதானமும் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம்.

திரு. சாமி வெங்கிடாசலமவர்கள் வவ்வாலைப்போல் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ளவேண்டும் என்னும் முறையில் எவ்வளவோ சாமர்த்தியமாகப் பேசியிருந்தாலும் தன்னைப் பொறுத்தவரை தான் சூத்திரன் அல்லவென்ற எண்ணத்தினால் வருணாசிரமத்தைக் காப்பாற்ற எண்ணி, அதை மக்களிடம் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

திரு. சாமி அவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனீயத்தை ஆதரித்தாலும் பார்ப்பனர்கள் திரு. சாமியையும் சூத்திரர்கள் என்பவர்களின் கணக்கில்தான் சேர்த்து வாழ்க்கையில் கோவில், ஓட்டல் முதலியவைகளில் சூத்திரன் மரியாதையைத்தான் கொடுத்து வருகின்றார்கள் என்பதை மறுக்கமுடியாது. அன்றியும், திரு. சாமி வெங்கிடாசலம் அவர்களின் வருணம் என்பதான வைசிய வருணத்திற்கு வருணாசிரம தர்ம வியாக்கியானமொன்றில் 'பிராமண ஆணும் க்ஷத்திரியப் பெண்ணும் சேர்ந்து பிறந்த பிள்ளை வைசியனாகின்றான்' என்று எழுதி இருப்பது தெரியுமா, தெரியாதா? அல்லது, தெரிந்தே வருணாசிரமத்தை ஆதரிக்கின்றாரா என்பது விளங்கவில்லை.

நிற்க, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய பார்ப்பன மாநாடுகளில் அதன் தலைவர்கள் பேசியிருப்பதைப் பார்த்த பிறகாவது திரு. சாமி வெங்கிடாசலம் செட்டியாரவர்களுக்கு ஏதாவது மாறுதல் உண்டாகுமோ அல்லது பழைய எண்ணமேதான் இருக்குமோ என்பது குறிப்பிடமுடியாதது. மேற்படி மாநாட்டுத் தலைவர்கள் பேசியிருப்பதின் சாரமாவது:—"மோட்சத்திற்கு ஆதாரம் வேதம், வேதத்தை அப்யசிக்கின்றவர்கள் பிராமணர்கள். கிரேக்கர், பார்சி, டச்சு, போர்ச்சுகீசு, பிரஞ்சு, முகமதியர் ஆகிய நம்மத துவேஷ ராஜாக்கள் காலத்திலும் இம் மாதிரி ஒரு மாநாடு கூட்டவேண்டிய அவசியமில்லாமல் நமது மதம் நிலை நின்றிருக்கின்றது.

நாம் தினமும் செய்துவரும் பிரார்த்தனை பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் க்ஷேமம் உண்டாகவேண்டும், ராஜா (இதற்கேற்றபடி) நீதியாய் நடக்கவேண்டும் என்பவைகளாகும். இம் மாதிரிப் பிரார்த்தனை எந்த மதத்திலாவது உண்டா?

இப்பொழுது நாடார், சுயமரியாதைக்காரர், ஸ்திரீகள், விதவைகள், யுவர்யுவதிகள் முதலியவர்கள் சங்கங்கள் விருத்தி அடைந்து வருகிறது. நமது அப்பிராமணர்கள் (சூத்திரர்கள்) நம்மீது துவேஷங் கொள்ளுகின்றார்கள். இவைகள் எல்லாம் நாம் ஈடேறவிடாமல் செய்யத்தக்கதல்லவா?

சூத்திரர்கள் அவர்களுடைய கடமைகளைக் கடந்ததால் பிராமணர்கள் சுயநலக்காரர்களாக வேண்டியதாயிற்று.

மத விஷயங்களிலும் சமூக விஷயங்களிலும் சட்டசபைகள் பிரவேசிக்கக் கூடாது. (அவர்கள் யார்?) சதிகாப்பு, விதவாவிவாகம், சாதிபேத விலக்கு, தர்ம சொத்து ஆகியவைகளைப்பற்றிச் சட்டம் கொண்டுவந்து இருக்கின்றார்கள். இன்னும் ருதுமதி, கல்யாண ரத்து, பெண்களுக்குச் சொத்து உரிமை ஆகியவைகளுக்கும் சட்டம் வேண்டுமாம்.

தேவதாசிகளை நீக்கவும், பாலிய விவாகத்தைத் தடுக்கவும் வந்துவிட்டார்கள். இவைகள் எல்லாம் இந்து மதத்தையே வேரறுக்கச்செய்வதே தவிர, இதனால் ஒரு பலனும் விளையாது. (இவைகள் இந்துமதக் கொள்கை ஆனால் இந்துமதம் இருக்கவேண்டுமா?)

படிப்பகம்

www.padippakam.com



பெண்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கற்பித்தல் கூடாது. அப்படிச் செய்வதால் அவர்களும் ஆண்களாகி விடுகிறார்கள். பெண்களுக்குக் குடும்ப காரியம், கற்பு, புத்திராபிவிர்த்தி செய்வதற்கும் இராமாயண பாரதம் கற்பித்தல் ஆகியவைகளே போதுமானது.

சூத்திரர்கள் வேதம் படிக்கக்கூடாது என்பதுபற்றியும், சூத்திரன், பஞ்சமன் என்று அழைப்பதைப்பற்றியும் ஆட்சேபித்துச் சிலர் கிளர்ச்சிசெய்து வருகின்றார்கள். சூத்திரன் என்ற சொல் மிகப் பரிசுத்தமானது. யாக எக்யாதிகளுக்கு சூத்திரன் அவசியமானவனாகிறான்.

பஞ்சமர், தீண்டாதார் என்று வித்தியாசப்படுத்திக்கொண்டு அப்படி ஒரு சாதி இருப்பதாய் வித்தியாசம் கற்பிப்பது கொடிதான காரியமாகும்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகியவர்கள் அவரவர்கள் கடமையிலிருந்து தவறும்போதுதான் பஞ்சமர்களாகின்றார்கள். அப்படி தன் வருண தர்மத்திலிருந்து தவறினவன் மறுபடியும் அந்த வருணத்தை அடையமுடியாது.

தினமும் ஸ்நானம் செய்யாததினாலேயே தீண்டாதவர்களாகின்றார்கள். தீண்டாமையை விலக்கத் தீண்டாதவர்களே சம்மதிக்கமாட்டார்கள். ஏனென்றால், தீண்டாதவர்களிடம் உயர்குணம் இருக்கிறது. உள்ளதுபோதும் என்று திருப்தியடைகின்றார்கள்."

தலைவர் உபன்யாசத்தின் சாரம்: "துவேஷமும் தெய்வ தூஷனையும் ஏற்பட்டுவிட்டதால் பிராமண சபை கூட்டவேண்டியதாயிற்று. ஒவ்வொரு வருணத்தாரும் அவரவர்கள் தர்மப்படி நடந்தால் எல்லோரும் நன்மையடையலாம். சூத்திரர்கள் வேதம் படிக்காததால் ஒன்றும் முழுகிப்போய்விடாது. அவர்களுக்குப் புராணங்கள் இருக்கின்றன. சூத்திரன் என்கின்ற பதம் நல்ல பதம்.

ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தர்மம் இருக்கின்றது. அதுபோல், இங்கும் அவனவன் தருமப்படி நடக்கவேண்டும். பிராமணர்களை அப்பிராமணர்கள் (சூத்திரர்கள்) ஏன் தூஷிக்கவேண்டும்? சூத்திரர்களில் நாயக்கர், வேளாளர் ஆகியவர்கள் எவ்வளவோ ஆசாரமாயிருக்கின்றார்கள்.

சூர்ப்பனகை எதிரில் வந்ததால் சீதை அக்கினிப் பிரவேசமாக நேர்ந்தது. ஸ்திரீகளைப் பத்திரமாகக் காப்பாற்றவேண்டியது ஆண்கள் கடமை. ஸ்திரீகள் உத்தியோகத்திற்கு லாயக்கில்லை. மேலதிகாரிகளுக்கு என்னவெல்லாம் செய்ய நேரிடுமோ?"

எனவே, பிராமணன்தான் இந்து மதத்திற்கு ஆதாரமானதென்னும் வேதம் படிக்கலாம் என்பதும்; தாங்கள்தான் பிராமணர் என்பதும்; இந்துமதத் தத்துவப்படி மற்றவர்களைச் சூத்திரர்கள் என்பதும்; வெகுகாலமாக அனேக இந்து மகமதிய ராஜாக்கள் காலத்தில்கூட தாங்கள் அவர்களை ஏமாற்றி தங்களது ஆதிக்கங்களை நிலைநிறுத்தி வந்திருப்பதும்; பிராமணனும் அவனது ஆகாரத்திற்கு மாடுகளும் க்ஷேமமாக இருந்தால் போதும், மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் கவலை இல்லை என்பதும்; இதை நிலைநிறுத்தத் தக்கவன்தான் அரசனாக இருக்க வேண்டும் என்பதும்; நாடார் முதலிய சமூக மாநாடுகளும் சுயமரியாதை மாநாடுகளும் தங்கள் ஆதிக்கத்திற்கு விரோதமானவை என்பதாகக்கருதி இருக்கின்றார்கள் என்பதும்; சூத்திரன் பிராமணனுக்கு அடிமையாய் இருக்க வேண்டியதும் சூத்திரப் பெண்கள் அவர்களுக்குத் தாசிகளாக இருக்க வேண்டியதுமான சூத்திர தர்மம் தவறினதாலேயே பிராமணர்கள் சுயநலக்காரர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்லுவதன்மூலம் பார்ப்பனர் தங்கள் சுயநலத்திற்குச் சமாதானம் சொல்லுவதும்;



சமத்துவம் இருக்கக்கூடாது, தர்ம சொத்துக்களின் கணக்குக் கேட்கக்கூடாது, குழந்தைப் பெண்களுக்குக் கல்யாணம் செய்யவேண்டும், பெண்களுக்குச் சொத்துக்கள் இருக்கக் கூடாது, படிப்பு கூடாது, சுதந்திரம் கூடாது, தாசிகள் இருக்கவேண்டும், விதவைகள் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது—என்பது போன்ற கொள்கைகளே இந்துமதம் என்பதும்; மேற்கண்ட கொள்கைகளில் எதைத் திருத்துவதானாலும் இந்து மதத்தை அழித்ததாகுமாதலால் சர்க்கார் அதற்கு இடம்கொடுக்கக்கூடாது என்பதும்; பெண்கள் வீட்டு வேலை செய்வதும் பிள்ளை பெறுவதும் தவிர வேறு உரிமைக்கு லாயக்கில்லை என்பதும்; கற்பு பெண்களுக்கு மாத்திரமேயொழிய ஆண்கள் விஷயத்தில் கவலை இல்லை என்பதும்; இராமாயணம், பாரதம் ஆகியவைகளே தர்மத்திற்கு ஆதாரமானதென்பதும்; சூத்திரன், பஞ்சமன் என்று அழைப்பது மிகவும் சரியானதென்பதும்; அவை அவர்களுக்கு மிகவும் மேன்மையானதென்பதும்; சூத்திரன் என்றசொல் மிகவும் பரிசுத்தமானதென்பதும்; பிராமணர்களின் யாகத்திற்குப் பயன்படவே சூத்திரன் இருக்கின்றான் என்பதும்; சூத்திரன் அவனுக்குள்ள கடமையைச் செய்யாததால் பஞ்சமனாக வேண்டியதாகின்றதென்பதும்; தினமும் ஸ்நானம் செய்யாததால் தீண்டாதவர்களானார்கள் என்பதும்; தீண்டாதவர்கள் அப்படியேயிருக்க விரும்புவதுதான் உயர்குணமென்பதும்; சூத்திரர்கள் புராணங்கள் படித்து அதன்படி நடத்தலே அவர்கள் வேதம் படித்ததற்குச் சமானமென்பதும்; வேளாளர் நாயக்கர் முதலியவர்கள் எல்லாம் சூத்திரர்கள் என்பதும்—ஆகிய விஷயங்கள் வியக்தமாகவும் நன்றாகவும் பொருள்படும்படி பேசி இருக்கின்றார்கள்; இதற்கேற்ற தீர்மானங்களும் செய்திருக்கின்றார்கள்.

சைவமத சைவப் பெரியார் மகாநாடு தீண்டாதவர்களுக்குத் தனிக்கோவில் கட்டிக் கொடுப்பதின்மூலம் தீண்டாமையை நிலைநிறுத்தப் பாடுபடுகின்றது. வருணாசிரம மாநாடும் பிராமண மாநாடும் ஒரே அடியாய் இருக்கின்றபடியே இருக்கவேண்டும் என்று தீர்மானித்து விட்டன. இதிலிருந்து வாசகர்களை நாம் ஒன்று கேட்கின்றோம்.

அதாவது, மேற்கண்ட கொள்கைகளையுடைய இந்து மதமும் அதற்கேற்ற கடவுள்களும், சைவ மதமும் அதற்கேற்ற சிவனும் இருக்கவேண்டுமா, அல்லது அவற்றைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டுமா என்பதேயாகும். இதுவரை எந்த ஆஸ்திக சிகாமணியும் தேசிய வீரர்களும் மேற்கண்ட இந்துமத ஆதாரத்தையும் சைவ சமய ஆதாரத்தையும் மறுத்துப் பேசவோ, வேறு ஆதாரம் காட்டவோ சிறிதாவது முற்பட்டவரல்ல. ஆனால், இந்து மதத்தையும் வேதத்தையும் ஆகமத்தையும் புராணங்களையும் காப்பாற்ற மாத்திரம் வரிந்து கட்டிக்கொண்டு முன்வந்து இருக்கிறார்கள். சிலர் தங்களைச் சூத்திரன் என்று சொல்லிக்கொள்ளப் போவதாகவும் தாங்கள் உண்மையிலேயே சூத்திரர்கள்தான் என்றும், அதிலும் 'சூத்திரர்கள்' என்றும் சொல்லி ஆனந்தப்படுகிறார்களாம். பார்ப்பனச் செல்வாக்கும் அவர்களது பணமும் நமது மக்களை என்ன வேண்டுமானாலும் செய்யத்தக்க வலுவுடையதாக இருக்கின்றது என்பதை நாம் சுலபத்தில் மறுக்கமுடியாதவர்களாக இருக்கின்றோம். பார்ப்பனரல்லாத மக்கள் பலருக்குச் சுயமரியாதை மாநாடு விஷயமாய் இருக்கும் ஆத்திரத்தில், அதிருப்தியில் ஒரு பங்குகூட இந்த வருணாசிரம மாநாட்டிலும், பிராமண மாநாட்டிலும் ஏற்படாதிருப்பதற்கு நமக்குக் காரணமே விளங்கவில்லை. எப்படியான போதிலும் இந்த மாநாடுகளும் எதிர்ப் பிரச்சாரங்களும் நமது கொள்கைகளையும் உத்தேசங்களையும் முயற்சிகளையும் உறுதிப்படுத்துகின்றனவே தவிர, சற்றாவது தளர்ச்சியாக்கவில்லை என்பதையும் நமது வாலிபர்கள் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட மதங்களையும் சாமிகளையும் ஒழிக்கத் தயாராயிருக்க வேண்டியதுதான் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—14-4-1929]

படிப்பகம்

www.padippakam.com



# 6. நியாயம் வழங்கும் முறை

இந்திய அரசியல் பிழைப்புக்காரர்கள் பாமர மக்களை ஏமாற்றி, தாங்கள்தாம் இந்திய ஜனப்பிரதிநிதிகள் என்று காட்டிக்கொண்டு அரசாங்கத்தாரிடம் பதவி பட்டம்பெற, வரியைப் பற்றியும், வெளிநாட்டு வியாபாரத்தைப்பற்றியும், கள்ளைப்பற்றியுமே எடுத்துச் சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். அறிவோடு கூடி நடுநிலைமையில் இருந்து ஒரு மனிதன் யோசித்துப் பார்த்தானேயானால், இவைகள் எல்லாவற்றையும் விட முக்கியமாய் இருக்கும் குறைகள் தாமாகவே புலப்படும்.

அதாவது, வக்கீல் தன்மைகளும் உத்தியோகத் தன்மைகளுமேயாகும். இவை இரண்டும் இந்த நாட்டில் பிறப்புத் தன்மையைக் காப்பாற்ற இருக்கின்றனவேயொழிய, நியாயத்தைச் சொல்லவோ, ஏழைகளைக் காப்பாற்றவோ இல்லவே இல்லை. அரசியல் துறையில் சம்பந்தப்பட்டதான வக்கீல் முறையும், உத்தியோக முறையும் இந்தியாவில் இம்மாதிரி இல்லாதிருந்திருககுமானால் இந்த நாட்டில் இவ்வளவு ஒழுக்கக் குறைவும், நாணயக் குறைவும், தரித்திரமும், மக்களுக்குக் கஷ்டமும் அலைச்சலும் இருக்க முடியவே முடியாது என்பதோடு, இவ்வளவு தூரம் வித்தியாசப்படும்படியான ஏழைத் தன்மையும், பணக்காரத் தன்மையும்கூட இருக்க முடியாது.

ஏழைகளையும் மத்தியதரத்தாரையும் இந்த நாட்டில் தலை எடுக்க ஒட்டாமல் செய்து வருவது இந்த வக்கீல் முறையும் உத்தியோக முறையுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

சாதாரண மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்பதோடு, பணக்காரனாயிருப்பவன் தனது பணத்தின் மகிமையினால் 100-க்கு 90 விஷயங்களில் தன் இஷ்டப்படியே நியாயம் பெறுகின்றான். நியாயாதிபதிகள் என்பவர்களும் வக்கீல்களும் ஏழை மக்கள் நீதி பெறுவதற்கு இடையூறாகவும், பணக்காரர்கள் தங்கள் இஷ்டப்படி நீதி பெறுவதற்கு அனுகூலமுமாகவே இருக்கின்றார்கள்.

இன்றைய வக்கீல் முறையே மனித சமூகத்தின் ஒழுக்கத்திற்கும் நாணயத்திற்கும் சாந்திக்கும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் நேர் விரோதமானதாகும். அது மாத்திரமல்லாமல், தேசத்தின் ஒழுக்கமும், நாணயமும், சுயமரியாதையும் கெட்டுப்போனதற்கு வக்கீல்களே காரணஸ்தர்கள் என்று சொல்லுவது சிறிதும் மிகைப்படக் கூறுவதாகாது.

நமது நாட்டுப் பணக்காரர்களில் அனேகருக்கு அயோக்கியத்தனமும், ஆணவமும், நாணயக் குறைவும் ஏற்படவும்; அவர்கள் நாட்டின் நலனுக்குப் பொறுப்பற்ற தன்மையாய் நடந்துகொள்ளவும் காரணமே நமது வக்கீல்கள் ஆவார்கள்.

இந்த நாட்டு விவசாயக்காரர்கள் பெரிதும் கடன்காரர்களாக இருக்கவேண்டி ஏற்பட்டதற்குக் காரணமும் இந்த வக்கீல்களே! மக்களுக்கு விவகாரத்தில் அதிக நம்பிக்கையும் ஆசையும் ஏற்படுவதற்குக் காரணம் வக்கீல்கள்தாம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அன்றியும், நாளுக்கு நாள் வழக்குகள் அதிகரித்துக்கொண்டு போவதற்கும் நியாயஸ்தலங்கள் அதிகமாவதற்கும் வக்கீல்கள்தாம் காரணஸ்தர்களாவார்கள். இன்னும் உண்மையை ஒளிக்காமல் சொல்லவேண்டுமானால், தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால் மக்கள் அயோக்கியர்களாவதற்கும், நாணயக்குறைவாய் இருப்பதற்கும்கூட நமது வக்கீல்களே பெரிய பொறுப்பாளிகளாவார்கள்.

இதற்குக் காரணம் பிரிட்டிஷ் அரசாங்கமா? இந்திய மக்களா? என்று பார்ப்போமேயானால் இந்திய மக்களே அதிகப் பொறுப்பாளர்கள் ஆவார்கள்.

ஏனெனில், பிரிட்டிஷ் இந்திய ஆட்சியில் இந்திய மக்களுக்குச் சம்பந்தமும், பங்கும் இருக்கவேண்டும் என்று கேட்க ஆரம்பித்த காலத்திலேயே, இந்த வக்கீல் கூட்டங்களேதாம்



இந்திய மக்களின் பிரதிநிதிகளாய் இருந்து, வக்கீல் தொழில் விருத்தியாகி, வக்கீல்கள் தாராளமாய்ப் பிழைப்பதற்கு ஏற்றதான திட்டங்களையே இந்திய சுதந்திரத்திற்கும், அரசாட்சியில் பங்கும் சம்பந்தம் பெறுவதற்கும் அனுகூலமான கொள்கை என்று பாமர மக்களுக்குச் சொல்லி, நம்பச்செய்து, ஏமாற்றி, அரசாங்கத்தாரையும் ஒப்பச்செய்து அரசாங்கச் சீர்திருத்தம் மூலமாகவும் சட்டம் மூலமாகவும் அவைகளைப் பெற்றுக்கொண்டு, தங்கள் தொழிலில் மிக்க தாராளமாகவும் தைரியமாகவும் அயோக்கியத் தனங்களையும், நாணயக் குறைவுகளையும் உபயோகித்து வந்து, நாளுக்குநாள் அது முதிர்ந்து, இன்று நாட்டிற்கும் சமூகத்திற்கும் இந்தநிலை ஏற்பட்டுவிட்டது. இந்தமாதிரி வக்கீல் ஆதிக்கமானது, இன்றைக்கும் நமது பாமர மக்களுக்கு யோக்கியமாகவும், நாணயமாகவும் இருக்க முடியாத வக்கீல்களின் பிரதிநிதித்துவம்தான் பிடிக்கச் செய்கின்றதேயொழிய—உண்மையான பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக்கொள்ள யோக்கியதை இல்லாமல் செய்துவிட்டது.

அதுமாத்திரமல்லாமல், ஒழுக்கமும் நாணயமும் உள்ளவர்கள் வக்கீலுக்கும் உத்தியோகத்திற்கும் அருகதையற்றவர்களாகி விட்டார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சிவில் இலாக்கா என்று சொல்லப்படும், அதாவது சொத்துக்களின் உரிமைகளைப் பொறுத்த விவகார இலாக்காக்களை எடுத்துக்கொண்டால், கீழே இருந்து அதாவது ஒரு 'சம்மன் சர்வு' செய்யும் சேவகன் முதல் குமஸ்தா—இலாக்கா உட்பட உள்ள சிப்பந்திகள் வரை, அவர்களது ஒழுக்கமும், நாணயமும் யோக்கியப் பொறுப்பும் மிகமிக மோசமானதாகவே நடைபெற்றுவர வெகு காலமாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றதென்றே சொல்ல வேண்டும். இவ்விலாக்காவில், இலஞ்சமும், மாமூலும் மோசமும், அய்க்கோர்ட் ஜட்ஜுகள், இலாக்காத் தலைவர்கள் என்பவர்கள் ஆகிய எல்லோருக்கும் தாராளமாய்த் தெரிந்து வேண்டுமென்றே அனுமதித்துக் கொண்டு இருக்கும் அளவை மனிதனால் சொல்லத் தரமுடையவைகள் அல்ல. வக்கீல்கள் தொல்லைகளும், நீதிபதிகள் தொல்லைகளும் ஒரு பாகம் என்றால்—மேற்கண்ட சிப்பந்திகள், நடுத்தர உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களின் தொல்லைகள் சகிக்கமுடியாதவையாகும். இந்தத் துறைகளில் சீர்திருத்தமோ ஒழுங்கோ செய்ய இன்றையதினம் இந்த நாட்டில் ஒரு அரசியல்வாதியாவது, ஒரு தேசியவாதியாவது கிடையவே கிடையாது. இதனால், வலுத்தவன் இளைத்தவனை நேருக்கு நேராய் உதைத்துத் தொல்லைப்படுத்தி அவனை ஒழிப்பதோ மிகவும் சுலபமானதும் சட்டபூர்வமானதுமான காரியமாகவே இருந்துவருகின்றது.

ஆகவே, இந்த முறையானது பணக்காரர்களுக்கு மிகவும் அனுகூலமாய்ப் போய் விட்டதால், அவர்களும்—அதாவது, நம் நாட்டுப் பணக்காரர்களும் சந்தோஷமாகத் தங்கள் முழு பலத்தோடு ஆதரிக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

உலகத்தார் எல்லோராலுமே ஒழுக்கமற்றதென்றும், நாணயமற்றதென்றும் வெளிப்படையாய்த் தெரியும்படியாக நடந்துகொள்ளும் ஈனத்தன்மையுடைய ஒரு தொழிலில் சட்டபூர்வமாகவே இந்தப்படி கொள்ளை அடிக்க இடமிருந்தால்—இந்த அரசாங்கத்தின் வேறு எந்த வரியை, யார் செய்யும் காரியத்தை நாம் அக்கிரமம் என்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத் தொழில்களில் இவ்வளவு அக்கிரமம் செய்வதற்கு இவர்களுக்கு எப்படி வழி கிடைத்தது என்று பார்ப்போமானால்:

1. வக்கீல்களும் நியாயாதிபதிகளும் ஒரே கூட்டத்தினராயிருப்பது. அதாவது, வக்கீலே நியாயாதிபதியாகவும், நியாயாதிபதி வக்கீலாவதும் ஆன முறை இருப்பது முதல் குற்றமாகும்.

2. சட்டமானது ஒரு வர்ஜாவர்ஜமில்லாமல் பத்ததி, நிர்ணயம் ஆகியவை இல்லாமல் ஒவ்வொரு மனிதனுடைய இஷ்டமும் ஒரு சட்டமாவதும்; ஒருவனுடைய இஷ்டத்தை மற்றொருவன் இஷ்டப்பட்டால் பின்பற்றலாம், இல்லாவிட்டால் பின்பற்றவேண்டியதில்லை

படிப்பகம்

www.padippakam.com



என்பதும்; மற்றும் தனக்கு இஷ்டமானவர்கள் அபிப்பிராயத்தைப் பின்பற்றலாம் என்பதும்; அவற்றை எல்லாம் விட்டுவிட்டுத் தன் இஷ்டப்படி நடக்கலாம் என்று இருப்பதுமான 'லா ரிப்போர்ட்டு'களை— அதாவது வேறுபல ஜட்ஜுகளின் அபிப்பிராயங்களைச் சட்டமாக ஏற்றுக்கொள்ள வசதி இருக்கும் முறைகளே, சட்ட உலகத்தில்–நீதி உலகத்தில் இவ்வளவு ஒழுக்க ஈனங்களைக் கற்பித்து, நீதிபதிகளையும் வக்கீல்களையும் இவ்வளவு ரூபாய்களைக் கொள்ளை அடிக்க வசதி செய்து கொடுத்து வருகின்றது.

நியாய உலகம் சீர்பட வேண்டுமானால், அதில் ஒழுக்கத்திற்கும் சிரமத்திற்கும் சிறிதாவது இடமிருக்க வேண்டுமானால் முக்கியமாக மேற்கண்ட இரண்டு முறைகளையும் ஒழித்துவிட வேண்டும்.

மேலும், ஏராளமாக வக்கீல்கள் உற்பத்தி செய்யப்படுவதையும் கணக்கில்லாமல் வக்கீல்களைத் தொழில் நடத்த அனுமதி கொடுக்கப்படுவதையும் நிறுத்திவிட வேண்டும்.

இந்தக் காரியங்கள்—அதாவது இந்தமாதிரி வக்கீல்கள் பெருகுவதான காரியங்கள், இந்த நாட்டின் நியாயத்தையும் ஒழுக்கத்தையும் சாந்தியையும் கெடுப்பதற்கு ஏற்பட்ட விஷக்கிருமிகளை வளர்ப்பதற்கே ஒப்பாகும்.

இனி விவகாரமுறையில் உள்ள அக்கிரமங்களைச் சொல்லவேண்டியதில்லை. ஒரு விவகாரம் கொடுத்து 20 வருஷங்களுக்கு மேலாகியும் இன்னமும் முடிவு பெறாத விவகாரங்கள் பல இருக்கின்றனவென்றால் விவகார முறையின் யோக்கியதையைச் சொல்ல வேண்டுமா?

['குடிஅரசு'-தலையங்கம்—10-5-1931]

## 7. ஆட்சி முறை

நமது நாட்டு அரசாங்கத்தாரைத் தனிப்பட்ட முறையில் பார்த்தோமானால் நமது நலத்தைப்பற்றிப் பொறுப்பு ஒரு சிறிதும் அற்றவர்கள் என்பதையும் அவர்கள்—தங்கள் சாதி, தங்கள் நாடு ஆகியவைகளின் நன்மையையே பெரிதும் கவனித்து, அதற்காகவே இந்திய நாட்டின் ஆட்சி நடத்தும் உரிமையை அடைந்து ஆட்சிபுரிந்து வருகின்றார்கள் என்பதையும் நாம் வெகுநாளாய் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம். அந்த ஆட்சியானது–அதாவது பிரிட்டிஷ் ஆட்சியானது, இந்தியாவில் அன்னிய ஆட்சிக்குமுன் வெகுகாலமாய் இருந்து வந்ததாகச் சரித்திரங்களில் காணப்படும் இந்திய மன்னர்களின் ஆட்சியைவிட— இந்திய 'தெய்வ அவதார' ஆட்சிகளைவிட எவ்வளவோ பங்கு மேலானதும் மனிதத் தன்மை பொருந்தியதுமாகும்.

மேலும், இந்தியாவில் இருந்ததாகச் சொல்லப்படும் யோக்கியமான ஆட்சிமுறைகள் என்பவைகள் எல்லாம் இன்றையதினம் நம்மால் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்று சொல்லப்படும்படியான மனுதர்ம ஆட்சிமுறையாகத்தான் இருந்து வந்ததாகக் காணப்படுகின்றனவே தவிர, 'மனிதத் தன்மை ஆட்சிமுறை'—சமதர்ம ஆட்சிமுறை ஒரு நாளும் இருந்ததாக எங்கும் எதிலும் காணப்படவே இல்லை.

இன்னும் பார்க்கப்போனால், பழைய தர்மத்தை அனுசரித்து செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டுவரும் இன்றைய இந்தியக் கிரிமினல் சட்டமும், 'இந்து சிவில் லா' சட்டமும் கூட மனுதர்ம (பார்ப்பன) சாஸ்திரத்தை அனுசரித்திருக்கின்றதையும்; அவை மனித தர்மத்தை—சம தர்மத்தைச் சிறிதும் இட்சியம் செய்யப்படாமல் இருந்து வருதையும் பார்த்தால், மேற்காட்டிய தத்துவம் யாவருக்கும் எளிதில் விளங்கும்.

வெள்ளைக்கார ஆட்சிகூட—வெள்ளைக்கார நாட்டில் இரண்டொன்று தவிர மற்றபடி அனேகமாய் மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும், அவர்களால் நடத்தப்படும் இந்திய ஆட்சியானது மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாயில்லை என்பதையும் நாம் சிறிதும் தயங்காமல் சொல்லுவோம். ஆனால், இந்தப்படியான ஆட்சிக் கொடுமை—அதாவது, மனித தர்மத்திற்கு விரோதமான–சமதர்மமற்ற ஆட்சிக் கொடுமைக்கு வெள்ளைக்காரர்களே பொறுப்பாளிகள் அல்லவென்பதையும் நாம் எங்கும் தைரியமாய்ச் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.



ஏனெனில், வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டில் தங்களது ஆட்சி என்றும் நிலைத்திருக்கவும், இந்த நாட்டுச் செல்வத்தைத் தாராளமாய்த் தங்கள் நாட்டுக்குக் கொள்ளை கொண்டு செல்லவும் உத்தேசித்து இந்த நாட்டில் யாருடைய தயவு தங்களுக்கு இருந்தால் தங்களது மேற்படி எண்ணம் தாராளமாய் நிறைவேறுமோ அவர்களது தயவைப் பூரணமாய்ச் சம்பாதிக்கவேண்டியே, அவர்கள் மனித தர்ம ஆட்சி என்பதை அடியோடு மறந்து–முழுவதையும் கைவிட்டு 'மனு தர்மப்படி', ஆட்சி முறையை வகுத்து நடத்தவேண்டியவர்களானார்கள். இன்றைய தினமும் இந்த நாட்டின் ஆட்சிமுறை மனித தர்மப்படி நடக்க வேண்டுமானால், மனுதர்ம ஆட்சியை அடியோடு ஒழிப்பதற்கு இந்திய மக்கள் சம்மதப்பட்டால் ஒழிய ஒரு நாளும் இந்த நாட்டில் மனித தர்ம ஆட்சி சாத்தியப்படவே படாது.

இன்னும் தைரியமாயும் வெளிப்படையாயும் சொல்லவேண்டுமானால் இன்றைய வெள்ளைக்கார ஆட்சியோ ஆதிக்கமோ ஒழியவேண்டும் என்று சொல்லுகின்றவர்களில் திரு. காந்தி அவர்கள் உட்பட 100-க்கு 90 பேர்களின் உள் எண்ணமெல்லாம், மனித தர்ம ஆட்சியை இந்த நாட்டில் தலைகாட்டச் செய்யாமல் இருக்கச் செய்யவும், மனு தர்ம ஆட்சியை நிலைநிறுத்தவும் செய்யப்படும் முயற்சியில்தான் உள்ளது என்று சொல்ல வேண்டும். இதைப் பாமர மக்கள் சரிவர உணராமல் மோசம்போய்க் கொண்டிருப்பதனால் இந்த நிலை வளர்ந்துகொண்டேயிருக்கின்றது.

உதாரணமாக, மனுதர்மத்திற்கு எதிரானதாகக் கருதப்பட்ட இந்துமத பரிபாலன சட்டமும், தேவதாசிகள் ஒழிப்புச் சட்டமும், குழந்தை மணத் தடுப்புச்சட்டமும் செய்யப்பட்ட—புறப்பட்ட காலத்தில் அதற்கு எதிராய் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்புகள் எல்லாம், 'இச் சட்டங்கள் செய்யப்படுவதே வெள்ளைக்கார ஆட்சியின் கொடுமை' என்பதாக மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டதும் மக்கள் அதை நம்பி அச் சடங்குகளுக்கு எதிராய் இருந்ததும் கடைசியாக, 'சர்க்கார் தாசர்கள்', 'தேசத் துரோகிகள்', அரசாங்கத்தார் ஆகியவர்கள் தயவில் இச் சட்டங்கள் நிறைவேற்ற முடிந்ததும், முடிந்த பிறகும் சரியானபடி அமுலில் இல்லாததுமே போதிய காரணங்களாகும்.

ஆகவே, இந்தியாவுக்கு ஏதாவது அரசியல் மாறுதல் ஏற்படுத்த வேண்டுமானால் அதில் மனுதர்மக் கொள்கைகள், வருணாசிரமக் கொள்கைகள், பார்ப்பன ஆதிக்கக் கொள்கைகள் ஆகியவைகள் இல்லாத ஆட்சி ஏதாவது ஏற்படக்கூடும் என்கின்ற நம்பிக்கை சிறிதாவது இருந்தால்தான் இந்த ஆட்சியை மாற்ற முயற்சிக்கலாமே ஒழிய, மற்றபடி செய்யும் அரசியல் முயற்சிகள் பாமர மக்களின் தற்கொலை முயற்சிகளேயாகும். இந்த இரகசியத்தை நமது மக்களில் பலர் அறிந்திருந்தும்கூட அவர்களில் பலரைத் தற்கால நிலைமையானது மனுதர்மத்தை ஸ்தாபிக்கும் அரசியல் முயற்சியில் கலந்துகொள்ளவே தூண்டுகிறது.

['குடிஅரசு'-தலையங்கம்—17-5-1931]

## 8. இந்திய சுதேச சமஸ்தானங்கள்

இவ்வாரம் சிம்லாவில் நடந்த இந்திய சட்டசபைக் கூட்டத்தில் இந்திய சுதேச சமஸ்தானங்களின் பாதுகாப்புக்காக என்று, 'இந்தியாவில் அரசர் பெருமானின் சர்வாதிகாரத்துக்கு உட்பட்ட சமஸ்தானங்களின் பாதுகாப்புச் சட்டம்' என்பதாக ஒரு புதிய சட்டம் அரசாங்கத்தாராலேயே கொண்டு வரப்பட்டிருக்கிறது.



படிப்பகம்.

www.padippakam.com



இந்தச் சட்டம் இப்போது கொண்டுவருவதற்குள்ள அவசியத்தை இந்திய அரசாங்க ஹோம் மெம்பர் எடுத்துச் சொல்லும்போது, 'இந்தியாவில் அரசர்பெருமானின் சர்வாதிகாரத்திலுள்ள சமஸ்தானங்களின் நிர்வாகத்தைக் கவிழ்க்கவோ, அச் சமஸ்தானங்கள் விஷயமாய்ப் பிறர் துவேஷங்கொள்ளும்படி செய்யவோ செய்யப்படும் முயற்சிகளைத் தடுக்க இச்சட்டம் செய்யப்படுகின்றது' என்று சொல்லியிருக்கிறார்.

சுதேச சமஸ்தானங்கள் என்பவைகள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்த காலம் முதற்கொண்டே இருந்துவருபவையாகும்; சில அதற்கு முன்பிருந்தே இருந்து வருவனவுமாகும். அப்படியிருக்க, இத்தனை காலம் பொறுத்து இப்பொழுது அவைகளைக் காப்பாற்ற என்பதாகப் புதிய சட்டம் ஒன்று ஏன் செய்யப்படவேண்டும் என்பதைக் கவனித்தால், அதில் ஏதோ ஒரு இரகசியம் இருக்கவேண்டுமென்பது விளங்காமல் போகாது. இதுபோலவேதான், சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்னால், 'மதத் தலைவர்களைக் காப்பாற்ற' என்று ஒருசட்டம் செய்யப்பட்டது. மதங்களும், மதத் தலைவர்களும் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகி இருக்கலாம். அப்படியிருக்க, 1927-ம் வருஷத்தில் மேற்கண்டபடி, 'மதத் தலைவர்கள்மீது துவேஷம் உண்டாகும்படியோ, ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மனவருத்தம் உண்டாகும்படியோ செய்யப்படும் காரியங்களைத் தடுக்க' என்பதாக ஒரு சட்டம் செய்துகொண்டார்கள். இது, சமஸ்தான ஆதிக்கங்களைக் காப்பது போலவே மத ஆதிக்கத்தைக் காப்பாற்றவே செய்யப்பட்டதாகும். ஆனால், அந்தக் காலத்திலேயே இதைப்பற்றி நாம், 'மதக் கொள்கைகள் அறிவுக்கும், மனிதனுடைய சுயேச்சைக்கும் விரோதமாய் இருக்குமானால் அதை ஆட்சேபிக்கவோ, கண்டிக்கவோ எவருக்கும் உரிமை இருக்கக்கூடாது என்று சட்டம் செய்வதானது பகுத்தறிவைத் தடுத்து மூடநம்பிக்கையையும், அடிமைத்தனத்தையும் வளரச்செய்வதாகும்' என்று சொல்லிப் பலமாக ஆட்சேபித்திருந்தோம். அதுசமயம் இந்தியா முழுவதிலுமே நம்மைத் தவிர வேறு யாரும் இவ்விதமான கொடுங்கோன்மை அடக்குமுறைச் சட்டத்தை ஆட்சேபித்ததாகத் தெரியவில்லை. இந்திய சட்டசபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் அச் சட்டத்தை ஆதரித்தார்கள் என்றாலும் நம் ஆட்சேபணையின் பயனாக ஏதோ சில மாறுதல்கள் மாத்திரமே செய்யப்பட்டது.

ஒருவரையொருவர் தூஷித்தால், ஒருவர்மேல் ஒருவருக்குத் துவேஷம் உண்டாகும்படி நடந்துகொண்டால் அதைத் தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருந்து வந்தும் திடீரென்று 'மதத் தலைவர் பாதுகாப்பு' சட்டத்தை உண்டாக்கி விட்டார்கள். அந்தப்படி ஒருசட்டம் செய்ய வேண்டுமென்று அந்தக் காலத்தில் சர்க்காருக்கு முதன்முதலில் யோசனை சொன்னவர் ஒரு சென்னை மாகாணத்துத் தமிழ்நாட்டுப் பார்ப்பனரேயாகும். சுயமரியாதை இயக்கத்தின் போக்கைப்பற்றி அனேக பார்ப்பனர்கள் அக் காலத்தில் பத்திரிக்கையில் ஓலமிட்டதைப் பார்த்தே ஒரு சட்டநிபுணப் பார்ப்பனர், 'ரங்கிலா ரசூல்' என்ற துண்டுப் பிரசுரத்தைச் சாக்காக வைத்து, இம் மாதிரி யோசனை சொன்னவுடன் அரசாங்கத்தார் இதே சாக்கென்று ஒரு வாரத்தில் சட்டம் கொண்டுவந்து எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றிக்கொண்டார்கள்.

போதாக்குறைக்கு இப்பொழுது இந்திய சுதேச சமஸ்தானங்களைப்பற்றி யாரும் அந்த சமஸ்தானங்கள் மீதோ, சமஸ்தானாதிபதிகள் மீதோ துவேஷம் உண்டாகும்படி பேசவும், எழுதவும் கூடாது என்பதாக ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை எந்தத் தேசியவாதிகளும் எதிர்த்துச் சரியாக ஆட்சேபிப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தேசத்தை, அல்லது ஒரு சமூகத்தை ஒருவர் ஆட்சி புரிவது என்பது அந்தத் தேசத்து மக்களின் நன்மைக்காகவே ஒழிய, ஆட்சிபுரிவோரின் நன்மைக்காக அல்லவென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயமாகும். அப்படியிருக்க, ஒருவருடைய நன்மைக்காகச் செய்யப்படும் ஆட்சியில் உள்ள குறைகளைத் திருத்தவோ,



மாற்றவோ ஒரு தேச மக்களுக்கோ, ஒரு சமூக மக்களுக்கோ உரிமை இல்லை என்று சொல்வதானால் அந்த ஆட்சியை மனிதத்தன்மை கொண்ட ஆட்சி என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும்? ஒரு ஆட்சியின் குறைகளை, கொடுமைகளை உண்மையாய் உள்ளபடி வன்மையாய் எடுத்துச் சொல்லும்போது குற்றமிருக்கிறவர்கள் மீது—அதாவது குறை ஏற்படும்படியான ஆட்சி செலுத்துபவர்கள்மீது யாருக்கும் அதிருப்தியோ, துவேஷமோ, வெறுப்போ உண்டாவது இயற்கையேயாகும். அப்படியிருக்க, ஒருவர்மீது துவேஷம் உண்டாகும்படி ஒருவர் பேசினால், அது குற்றமென்றால், யார் என்ன செய்தாலும், எப்படி ஆட்சியை நடத்தினாலும் பேசாமல் சகித்துக் கொண்டு அடங்கி இருக்க வேண்டுமென்பதுதான் அதன் கருத்தாகும். அனாவசியமாய், பொய்யாய் ஒருவர்மீது துவேஷம் உண்டாகும்படி ஒருவர் நடந்துகொண்டால் அதற்கு ஏற்கனவே சட்டமிருந்து வருகின்றது என்பதை மேலே காட்டி இருக்கிறோம். அது போதாது என்று இப்போது தனிச்சட்டம் செய்வதானது யோக்கியமான முறையல்லாமல், அடக்குமுறைமூலம் மக்களை அடக்கி ஆள சவுகரியம் செய்து கொள்வதேயல்லாமல் இதை நியாயமென்றோ, நல்ல அரசாட்சி முறையென்றோ சிறிதும் சொல்லமுடியாது.

இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான சுதேச சமஸ்தானங்களின் யோக்கியதையானது அனேக விஷயங்களில் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியைவிட அனேக மடங்கு மோசமானதென்று தைரியமாய்ச் சொல்லுவோம். தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால், அனேக சுதேச சமஸ்தானங்களின் ஆட்சியானது கொள்ளைக் கூட்டத்தாரின் காட்டு ராஜாங்க ஆட்சிபோல் நடந்து வருகிறது.

குடிகளுக்காக, குடிகளின் நன்மைக்காக நாம் ஆட்சி செலுத்துகின்றோம் என்கின்ற உணர்ச்சியே இல்லாமலும், உணர்ச்சி ஏற்படுவதற்கே இடமில்லாமலும் அனேக சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன.

இந்தியாவில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு விஸ்தீரணத்துக்கு மேலாகவே சுதேச சமஸ்தான ஆட்சிகளின்கீழ் இருந்து வருகின்றது. அதாவது, இந்தியாவின் மொத்தப் பரப்பு (விஸ்தீரணம்) 17,73,000 சதுர மைலாகும். இதில் 6,75,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள தேசம் சுதேச சமஸ்தானங்களின் ஆட்சியின்கீழ் ஆளப்பட்டு வருகின்றது.

சுமார் 8,00,00,000 (எட்டுக்கோடி) இந்திய ஜனங்கள் அவ்வாட்சியில் இருந்து வருகின்றனர்.

மேற்கண்ட 6¾ இலட்சம் சதுர மைல் விஸ்தீரணத்தையும் 8 கோடி ஜனத்தொகையையும் கொண்டதான பரப்புகள் 562 இராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை 562 சுதேச சமஸ்தானங்களாகி, 562 அரசர்களால் ஆளப்பட்டு வருகின்றன. இந்த இராஜ்யங்களில் எல்லாம் பெரியது ஹைதராபாத் இராஜ்யமாகும். இதற்கு விஸ்தீரணம் 82700 சதுர மைல். இதன் ஜனத்தொகை 1,25,00,000. இதன் மொத்த ரெவின்யூ வருமானம் 6,50,00,000 (ஆறரைக்கோடி) ரூபாயாகும். இதில் இராஜாவாகிய ஹைதராபாத் நவாப்பு தன் சொந்த செலவிற்காக எடுத்துக்கொள்ளும் தொகை 50,00,000 (அரைக்கோடி) ரூபாயாகும். இது தவிர அந்த நவாப்புக்கு 400 கோடி ரூபாயுள்ள சொந்த சொத்திலிருந்து வரும் வரும்படி வருஷம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாயாகும். ஆகவே, வருஷம் ஒன்றுக்கு ஒன்றரைக் கோடி ரூபாயை வரும்படியாக உள்ள ஒரு பெரிய முதலாளியால் (பூஷ்வாவால்) ஹைதராபாத் தேசம் ஆளப்பட்டு வருவதாகும்.

மற்ற சமஸ்தானங்களில் சுமார் 40 சமஸ்தானங்கள்தாம் வருஷம் ஒன்றுக்கு மொத்த ரெவின்யூ வருமானம் 10 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டவைகளாகும்; மற்றவைகள் எல்லாம் அதைவிடக் குறைந்த வரும்படி உடையவைகளேயாகும். சுமார் 400 சமஸ்தானங்கள்

படிப்பகம்

www.padippakam.com



வருஷம் ஒன்றுக்கு ரெவின்யூ வருமானம் ஒரு இலட்ச ரூபாயைவிடக் குறைந்த வருமானமுடையவைகளாகும். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இவற்றுள் 15 சமஸ்தானங்கள் ஒரு மைல் விஸ்தீரணத்துக்குக்கூட குறைந்த பரப்பளவுள்ளவைகளாகும். மூன்று சமஸ்தானங்களில் ஒவ்வொன்றிலும் 100 பிரஜைகளைவிடக் குறைவாக இருக்கின்றார்கள். அய்ந்து சமஸ்தானங்களுக்கு ஒவ்வொன்றின் வருஷ வரும்படி ரூபாய் 100 வீதம் கூட இல்லாமல் இருக்கிறது.

உதாரணமாக, அவாச்சார் (Avachar) என்கின்ற சமஸ்தானம் 1 மைல் விஸ்தீரணமும், 32 பிரஜைகளும் 72 ரூபாய் வருஷ ரெவின்யூ வருமானமுடைய தேசமாகும்.

இப்படிப்பட்ட இராஜாக்கள் தங்கள் தேச ரெவின்யூ வரும்படியில் 12-ல் ஒரு பாகம் முதல், சரிபகுதி வரையில் தங்கள் சொந்த செலவுகளுக்கு எடுத்துக்கொண்டு, மீதியையும் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றபடியே பிரஜைகளுக்கென்று செலவழித்துக்கொண்டு இருந்து வருகிறார்கள்.

ஒவ்வொரு சுதேச சமஸ்தான இராஜாக்களின் யோக்கியதைகளை, அதாவது இந்தூர், ஆள்வார், மிஸ்டர் 'A' முதலிய இராஜாக்களின் யோக்கியதையை நினைத்துப் பார்ப்போமேயானால், அவர்களது ஆட்சியின்கீழ் மக்கள் குடிகளாய் வாழ்வதைவிட மானங்கெட்ட வாழ்க்கை வேறு ஒன்றும் இல்லை என்றே தோன்றும். உலகில் உள்ள கூடா ஒழுக்கங்கள் எல்லாம் ஒருருவாய்த் திரண்டுவந்தது போன்ற அரசர்கள் எத்தனையோ பேர்கள் நமது சுதேச சமஸ்தானங்களில் இருந்து வருகிறார்கள் என்பது யாரும் அறியாததா?

இவர்களில் சில அரசர்கள் தங்கள் பெண்சாதிகளுக்குச் செலவிடும் அளவில் மூன்றில், நான்கில் ஒரு பாகம் தொகைகூட, தனது பிரஜைகளின் கல்விச் செலவு செய்யாதவர்களும்; தங்களது மோட்டார் கார்களுக்காகச் செலவு செய்யும் தொகையில் பகுதி அல்லது 3-ல் ஒரு பாகம்கூட தனது தேசப் பிரஜைகளின் சுகாதாரம், வைத்தியம் ஆகியவைகளுக்குச் செலவு செய்யாதவர்களுமாய் இருக்கிறார்கள் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. சுதேச சமஸ்தானப் பிரஜைகளுக்கு அவர்கள் தங்கள் தேச வரும்படியில் இத்தனையில் ஒரு பாகந்தான் தன் சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளலாம்; இத்தனை பெண்டாட்டிகள் தாம் கட்டிக்கொள்ளலாம் என்பதான நிர்ணயமே இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

'இந்திய சக்கரவர்த்தியின் சர்வாதிகாரத்துக்கு உட்பட்ட சமஸ்தானங்கள்' என்று வெகு பெருமையாய்ப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சொல்லிக்கொள்ளுகிறார்களேயொழிய, அந்தச் சர்வாதிகாரத் தன்மையை ஒரு சிறிதாவது இந்திய சமஸ்தான அரசர்களின் ஒழுக்கத்துக்கோ, அவர்களது வாழ்க்கை நிலையின் தன்மைக்கோ, குடிகளின் க்ஷேமத்தைக் கவனிக்க வேண்டிய அவசியத்துக்கோ செலவழித்ததாகச் சொல்லுவதற்கு இடமே காண முடியாமல் இருந்துவருகின்றது. இந்திய சமஸ்தான அரசர்களில் பெரும்பான்மையானவர்களுடைய நடவடிக்கையும், யோக்கியதையும் அரசாட்சி முறையும் பார்த்த ஒருவன் எந்த விதத்தில் அவர்கள் நிலையை வெளியில் எடுத்துச் சொல்லாமல் இருக்கவோ அவர்களை ஒழிக்க முயற்சி செய்யாமலிருக்கவோ முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. 562 பேர்களில் யாரோ ஒன்று இரண்டு சமஸ்தான அரசர்கள் ஒருசமயம் 'யோக்கியர்களாக' இருந்தாலும் இருக்கலாம்; அதுவும் 'கூரை வீட்டின்மீது இருந்துகொண்டு கொள்ளிக்கட்டையை எடுத்து விளையாடிக் கொண்டிருக்கின்றானே அவனே எல்லோரிலும் யோக்கியன்' என்று சொல்லுவது போன்ற யோக்கியமாய் இருந்தாலும் இருக்கலாம். இதற்காக அரசர் பெருமானின் சர்வாதிகாரத்துக்கு உட்பட்ட 562 'சமஸ்தான நிர்வாகத்தைப்பற்றித் துவேஷங் கொள்ளும்படி யாரும் செய்யக்கூடாது' என்று சட்டம் செய்வது என்றால், லார்டு வெல்லிங்டன் துரைமகனாரின் அடக்கு முறைச்சட்டம் என்பவைகளிலெல்லாம் இதுவே தலைசிறந்த உண்மையான அடக்குமுறைச் சட்டம் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ்



இந்தியாவின் வரி, ஆள் ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம் ஆகின்றது என்றால் அனேக சுதேச சமஸ்தானங்களின் வரி ஆள் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் வசூலிக்கப்படுகின்றது. ஆள் ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம் வரிவசூலிக்கும் பிரிட்டிஷ் இந்தியாவில், படிப்புக்காக நபர் ஒன்றுக்கு 8 அணா வீதம் செலவழிக்கப்படுகின்றது என்றால், ஆள் ஒன்றுக்கு 20 ரூ. வீதம் வரி வசூலிக்கப்படும் சில சுதேச சமஸ்தானங்கள், படிப்பு விஷயத்தில் ஆள் ஒன்றுக்கு ஆறு அணா வீதமும் 3 அணா வீதமும்தான் செலவு செய்கின்றனர். இவர்கள் பெயரை வேண்டுமானாலும் பொது நலத்தை உத்தேசித்து வெளியிட நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆதலால் முறையே நவநகர், கட்சு முதலாகிய சமஸ்தானங்களாகும். இதுபோல் இன்னும் பல சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன.

தவிர, இந்திய சுதேச சமஸ்தானத்தில் உள்ள எல்லா இராஜாக்களுமே தங்கள் சொந்த செலவுக்கென்று எடுத்துக்கொள்ளும் தொகையானது, அய்ரோப்பிய அரசர்களும், சக்கரவர்த்திகளும் எடுத்துக்கொள்ளும் விகிதாச்சாரத்தைவிட 60 பங்கு. 70, 100, 200, 1000 பங்கு அதிகமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக, அய்ரோப்பாக் கண்டத்தில் டென்மார்க் தேசத்து அரசருக்கு இருபத்தி மூன்றரைக்கோடி ரூபாய் வரி வருஷ வருமானம். நமது பிக்கானியர் சமஸ்தான அரசருக்கு வருஷம் 60 இலட்சம் ரூபாய் வரி வருமானம். ஆனால், டென்மார்க்கு தேச அரசர் வருஷம் 7 இலட்சம் ரூபாயே தனது சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார். பிக்கானியர் தேசத்து அரசர் வருஷம் பதின்மூன்றரை ($13\frac{1}{2}$) இலட்ச ரூபாய் தனது சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார். இதை விகிதாச்சாரம் பார்த்தால் டென்மார்க்கு அரசர் தனது தேச வருமானத்தில் 350-ல் ஒருபாகம் எடுத்துக்கொள்ளுகிறார்; பிக்கானியர் சமஸ்தான அரசர் தனது தேச வரும்படியில் 4-ல் ஒருபங்கு தனது சொந்தச் செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

பொதுவாகப் பார்க்கப்போனால், அய்ரோப்பிய அரசர்கள் தங்கள் வரும்படிக்கும், அவர்கள், தங்கள் சொந்தச் செலவுக்கு எடுத்துகொள்ளும் தொகைக்கும்; இந்திய சமஸ்தான அரசர்கள் வரும்படிக்கும் அவர்கள் தங்கள் சொந்தச் செலவுகளுக்கு எடுத்துக் கொள்ளும் தொகைக்கும் வித்தியாசத்தையும் மற்ற விஷயங்களையும் கணக்குப் பார்த்தால், இந்த சமஸ்தானங்களையும் சமஸ்தானாதிபதிகளையும் பாதுகாக்கச் சட்டம் வேண்டுமா அல்லது மாற்றவோ, கவிழ்க்கவோ சட்டம் வேண்டுமா என்பது நன்றாய் விளங்கும்.

அதற்காகவே சில புள்ளி விவரங்கள் கீழே தருகிறோம். இது சர்க்கார் கணக்கேயாகும். அதாவது :—

தனது தேச மொத்த வரும்படியில் இங்கிலாந்து தேச ஜார்ஜ் அரசர் 1600-ல் ஒரு பங்கும், பெல்ஜியம் அரசர் 1000-ல் ஒருபங்கும், நார்வே, அரசர் 700-ல் ஒருபங்கும், நெதர்லேண்டு அரசர் 600-ல் ஒருபங்கும், இட்டாலி அரசர் 500-ல் ஒருபங்கும், ஜப்பான் சக்கரவர்த்தி 400-ல் ஒருபங்குந்தான் தங்கள் சொந்தச் செலவுக்குப் பெறுகிறார்கள்.

ஆனால், இந்திய சமஸ்தானாதிபதிகளோ என்றால், தங்களது மொத்த ரெவின்யூ வரும்படியில் திருவாங்கூர் மகாராஜா 17-ல் ஒரு பாகமும், மைசூர் மகாராஜா 14-ல் ஒரு பாகமும், ஹைதராபாத் நவாப் 13-ல் ஒரு பாகமும், பரோடா மகாராஜா 12-ல் ஒரு பாகமும், காஷ்மீர் மகாராஜா 5-ல் ஒரு பாகமும், பிகானீர் மகாராஜா 4-ல் ஒரு பாகமும், இன்னும் சிலர் 3-ல் ஒரு பாகமும், சிலர் 2-ல் ஒரு பாகமும் தங்கள் சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொண்டு, அக்கிரமமான போக போக்கியங்களை அனுபவிக்கிறார்கள். ஆதலால், இந்திய சமஸ்தானாதிபதிகளின் ஆட்சிகளென்பவை ஒரு 'பக்கா' முதலாளித் தன்மை ஆட்சிகள் என்பதில் யாருக்குமே ஆட்சேபணை இருக்காது. இவர்களுக்கு ஏழை மக்கள், சரீரத்தால் கஷ்டப்பட்டு வாழும் தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் வாழ்க்கையைப்பற்றியோ அவர்களது மனிதத் தன்மையைப்பற்றியோ ஒரு சிறிது ஞாபகமாவது, கவலையாவது இருக்கவே இருக்காது; இருக்க இடமுமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இந்த இராஜாக்கள் என்பவர்கள் ஒருவித சுகபோகங்களை அனுபவிக்கவே தோன்றியவர்கள் என்பதும், அவர்களது பிறப்பும், பதவியும் ஏதோ முன்ஜென்ம கர்ம வசத்தால், புண்ணியத்தால், பூஜாபலத்தால் கிடைத்தது என்பதும் தவிர—மற்றபடி அவர்களுக்கு ஆட்சியிலிருக்கும் பொறுப்பு என்ன? தங்கள் நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும்? என்பனவாகியவைகள் தெரியவே தெரியாது. இந்த இலட்சணத்தில் இந்த சுதேச சமஸ்தானாதிபதிகளான இராஜாக்கள் தெய்வ அம்சம் பொருந்தியவர்களென்றும், விஷ்ணு அம்சமே உலகில் அரசனாய் அவதரிக்கின்றது என்றும் சொல்லப்படுவதோடு ஒவ்வொரு இராஜாங்கமும் ஒவ்வொரு கடவுளுக்குச் சொந்தமானதென்றும், அக் கடவுளின் பிரதிநிதிகளாகவோ தாசர்களாகவோ இருந்து இந்த இராஜ்யங்கள் அரசாளப்படுகின்றன என்றும் சொல்லிக்கொள்ளவும் படுகின்றன.

இந்தப்படியெல்லாம், ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும் சோம்பேறிக்கூட்டப் பார்ப்பனர்கள் கற்பித்து, பிறருக்கும் அந்தப்படி பிரச்சாரமும் செய்து எப்படிப்பட்ட கொடுங்கோன்மை ஆட்சியிலும் தாங்கள் மாத்திரம் நோகாமல், சரீரத்தால் எவ்வித பாடும் படாமல் சோம்பேறி வாழ்க்கையை நடத்திக்கொண்டு, அவ்வயோக்கிய அரசர்களுக்கு அடுத்த படியில் இருந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

நமது தேச பக்தர்களுக்கோ, தேசியவாதிகளுக்கோ, தேசியத் தலைவர்களுக்கோ இவைகளை எல்லாம் பற்றி ஒரு சிறிதுகூடக் கவலையே கிடையாது. அவர்களுடைய கவலையெல்லாம் 'அன்னியன் ஏன் நமது தேசத்தை ஆளுகிறான், வைசிராயிக்கு ஏன் இவ்வளவு சம்பளம், இவ்வளவு அதிகாரமேன்!' என்கின்ற பல்லவியும் பேச்சுந்தான் தெரியுமே ஒழிய வேறு ஒன்றையும் பற்றிய விவரமும் தெரியாது; கவலையே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். தேசியப் பத்திரிக்கைகளோ பெரிதும் இம் மாதிரி இராஜாக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்களையும், அவர்களது நிர்வாகத்தையும் புகழ்ந்து எழுதுவதும், பணம் கொடுக்காதவனை வைவதும் தவிர வேறு ஒரு கவலையுமில்லை.

மேற்கண்ட யோக்கியதை கொண்ட இராஜாக்கள் தங்கள் தங்கள் சமஸ்தானங்களைப் பாழாக்கி அந் நாட்டு மக்களை மிருகங்களாகப் பாவித்து அக்கிரம, அனியாய ஆட்சிபுரிவது உலகம் அறிந்திருந்தும், போதாக்குறைக்கு இந்த 'தர்ம ராஜாக்களை' பிரிட்டிஷ் இந்திய ஆட்சியிலும் கொண்டுவந்து கலக்கி—அதுவும் எப்படி என்றால் அவர்களைப்பற்றியும், அவர்கள் தேசத்தைப்பற்றியும், அவர்கள் நிர்வாகத்தைப்பற்றியும் பேச நமக்கு எவ்வித அதிகாரமில்லாமலும், நம் தேச ஆட்சியின் தலையில் அவர்கள் வந்து உட்கார்ந்துகொண்டு ஆதிக்கம் செலுத்தும்படியாகவும் கொள்கை கொண்ட சமஷ்டி (பிடரல்) ஆட்சியைக் காங்கிரசும், அதன் ஏக தலைவரான 'மகாத்மா'க்களும் ஒப்புக்கொண்டு, அதைப்பற்றி ஆட்சேபிப்பதில்லை என்கின்ற நிபந்தனையின்மீது வட்டமேஜை மகாநாட்டில்போய் கலந்துகொண்டார்களென்றால், தேசியத்தின் அயோக்கியத்தனத்துக்கும், சூழ்ச்சிக்கும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்பது நமக்குத் தோன்றவில்லை.

பழைய பழக்க வழக்கங்களையும், மதக் கொள்கைகளையும் வருணாசிரமத்தையும் காப்பாற்றும் விஷயத்தில் வெள்ளைக்கார அரசர்கள் அசார்சமாய் இருந்துவிடுவார்கள் என்கின்ற கருத்துக்கொண்டே காங்கிரசுக்காரர்கள் அம் மகாநாட்டுக்குச் சென்றார்கள் என்றும், நமது நாட்டுப் பார்ப்பனர்கள் இந்திய ஆட்சியில் கருப்பு சமஸ்தானாதிபதிகளையும் கொண்டுவந்து கலக்கினதுமான காரியங்கள் செய்தார்கள் என்றும் இந்திய ஏழை மக்கள், தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் கிளர்ச்சிகள் வலுத்துவிடுமேயானால் அதை அடக்க அதிகச் சிரமப்பட்டு நாம் ஏன் கெட்ட பேரை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கருதி கருப்பு சமஸ்தானாதிபதிகள் மூலமே அடக்கச் செய்யலாம் என்கின்ற சூழ்ச்சி மீதே பிரிட்டிஷாரும் இந்தத் தந்திரம் செய்திருக்கிறார்கள் என்றுந்தான் நாம் நினைக்கவேண்டி இருக்கிறது.



எப்படி இருந்தபோதிலும், பிரிட்டிஷ் முதலாளித்தன்மை ஆட்சியும், அவர்களது ஏகாதிபத்திய ஆணவமும் ஒழிவதற்கு முன், இந்திய சமஸ்தான முதலாளித்தன்மை ஆட்சியும் அவர்களது பொறுப்பற்ற கொடுங்கோன்மை, கூடா ஒழுக்க ஆட்சியும் அழிந்து மறைந்து ஒழியவேண்டியது அவசரமும் அவசியமுமான காரியமாகும் என்பதே நமதுஅபிப்பிராயம். அப்படி இருக்க, இப்போது அவர்களையும் சமஸ்தானங்களையும் காப்பாற்றப் புதிதாக ஒரு சட்டம் செய்வது மிகமிகக் கொடுமையான காரியம் என்றே சொல்லுவதுடன், இச்சட்டம் அச் சமஸ்தானாதிபதிகளை, 'இன்னும் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்' என்று சொல்லி லைசென்சு அனுமதிச்சீட்டு கொடுத்தது போலவும் ஆகிறது என்பதே நமது அபிப்பிராயம்.

['குடிஅரசு'–தலையங்கம்—3-9-1933]

## 9. நமது வெற்றி

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

பிரிட்டனிலோ, பைபிளிலோ, இங்கிலாந்திலோ, அவர்கள் இராஜரீகத்திலோ பறையன், சூத்திரன், பிராமணன் இருக்கிறார்களா? இல்லையே. அப்படி இருக்க இங்கு சட்டம், நடப்பு, கோவில், குளம், உண்ணல், அருந்தல், கொடுத்தல், கொள்ளல், செல்வம், தொழில், கல்வி, கடவுள் எல்லாவற்றிலும்—பிராமணன், சூத்திரன், பறையன் இருக்கக் காரணமென்ன?

வெள்ளை ஆரியர் (பிரிட்டிஷார்), இந்தப் பேதத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதாக மஞ்சள் ஆரியர் (பார்ப்பனர்)களுக்கு வாக்குறுதி கொடுத்து, இங்கு தங்கள் சுரண்டலைப் பலப்படுத்திக்கொண்டார்கள். அதற்குக் குறைவில்லாத அளவும், அதிகமாகவும், நம்மை மேலும் சுரண்டிக்கொள்ள மஞ்சள் ஆரியருக்கு (பார்ப்பனருக்கு) வெள்ளையர் சன்னது–சட்டபூர்வமான அனுமதி கொடுத்துவிட்டார்கள். அதுதான் இந்துமதப் பிரச்சாரமும் இந்து வருணாசிரம தர்ம சட்டமும் காப்பும் கோவில்கள், மோசடி சடங்குகள் முதலியனவும் காப்பாற்றப்பட்டு வருவதாகும்.

ஆதலால், நாம் இன்றையக் கொடுமையான ஆட்சி என்பதை ஒழிக்கவேண்டுமானால் வெள்ளை ஆரியர்–மஞ்சள் ஆரியர் ஒப்பந்தத்தை உடைத்துச் சுக்கல் ஆக்கவேண்டும். ஜின்னா சாயபு வெள்ளையரை உணரச் செய்ததுபோல், நாமும் உணரச் செய்யவேண்டும்.

ஜின்னா சாயபு என்ன செய்தாரென்றால், 'ஓ, வெள்ளையனே! பார்ப்பான்தான் உனக்குத் தொல்லை கொடுப்பான் என்று கருதி அவனை சரிப்படுத்திக்கொண்ட தைரியத்தில் நீ மகாமஸ்தாய் இருந்துவிடாதே; (என்னாலும் (முஸ்லிம்களாலும்) உனக்குத் தொல்லை கொடுக்க முடியும். இந்தியாவில் மாத்திரமல்ல, வெளியிலுங்கூடத் தொல்லைப்படுத்த முடியும்' என்று சொன்னதால், அதற்கேற்றபடி முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்ததால், இதை வெள்ளையர் (பிரிட்டிஷார்) ஒப்புக்கொண்டது மாத்திரமல்லாமல்—மஞ்சள் ஆரியரும் வழிக்கு வந்து, 'உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்; என்னை நம்பிய இரண்டொரு சாயபுகளிடம் என் மரியாதையைக் காப்பாற்று' என்ற அளவிற்கு வந்துவிட்டார்கள்.

அந்த நிலை நமக்கு ஏற்படவேண்டுமானால், நாம் என்ன செய்யவேண்டும்? அதைத் தெளிவாக்கத்தான் திராவிடர் கழகம் தொண்டாற்றுகிறது. நமக்கு இன்று நம் நாட்டில் இருந்துவரும் கஷ்டத்திற்குக் காரணம் நம் மக்கள் தங்கள் பிறவியையும், இனத்தையும் தங்களுக்கிருக்கவேண்டிய சுயமரியாதையையும் உணராத் தன்மையே ஆகும்.

இதனால்தான் நம்மில் அனேகர் பிறவி-இன–சுயமரியாதையைப்பற்றி இலட்சியம் இல்லாமல், சுயநலம் என்னும் பெயரால் தங்கள் மானத்தைவிட்டு அல்லது விற்றும்

படிப்பகம்

www.padippakam.com



பிழைப்பதைப் பெருமையாகக் கொண்டு வாழக் கருதுகிறார்கள். உலகத்தில் வேறு எந்த மக்களும் நம்மைப்போல் இழிவுக்கு ஆளாகி, அதைப்பற்றிக் கவலையற்று வாழவில்லை. நம்மில் இராஜாக்களையும், ஜமீன்தார்களையும், கோடீஸ்வரர்களையும், 'சர்'களையும் பாருங்கள்! யாருக்காவது இன உணர்ச்சி, இழிவுபற்றிய துடிப்பு இருக்கிறதா?

இவர்கள் எல்லோரும் இன இழிவுக்கு, பிறப்பு இழிவுக்கு ஆகவும், மனிதத் தன்மை—மானத்திற்குக் கேடு விளைவிக்கவும் நம் எதிரிகள் கற்பித்த சாதனமாகிய இந்து மதம் (கொள்கை) என்பதைத் தங்கள் மதம் (எங்களது கொள்கை) என்று சொல்ல வெட்கப்பட வில்லை; வீரம் பேசுகிறார்கள். அதைப் பின்பற்றி, எதிரிக்கு நல்ல பிள்ளையாகிப் பயன் பெறுகிறார்கள்.

மகாராஜாக்கள், பிரபுக்கள், கோடீஸ்வரர்கள், படித்தவர்கள் என்பவர்களே இப்படி இருந்தால் மற்றவர்களைப்பற்றி, அதுவும் வயிற்றுப் பிழைப்புக்கும், வாய் ருசிக்கும் எதையும் விற்றுப் பிழைப்பவர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா என்று கேட்கிறேன்.

ஆதலால், நமது பிறப்பையும், இனத்தையும் ஞாபகமூட்டுவதே திராவிடர் கழகத்தின் முக்கிய வேலையாகும். 1. முஸ்லிம் மதம் (கொள்கை), 2. முஸ்லிம் சாதி, 3. முஸ்லிம் நாடு, 4. முஸ்லிம் மானத்தோடு வாழ்வதா? சாவதா? ஆகிய இவைகளை ஞாபகப்படுத்தி, இவைகளைக் குறிக்கோளாகக் கொண்டதாலேயே 40 கோடி மக்கள் உள்ள இந்திய நாட்டில், 10 கோடி மக்கள் கொண்ட முஸ்லிம்களுக்குச் சரிபங்கு உரிமை, 'தனி ஆட்சி நாடு' என்கின்ற வலியுறுத்தல், யாராலும் ஆட்சேபிக்க முடியாத—ஆட்சேபிக்கப் பயப்படும்படியான பிரச்சினையாக இருந்து வருகிறது.

அது போலவே, (1) இந்துமதம், அதாவது (ஆரியக் கொள்கை) மதம், (2) இந்து (ஆரிய) இனம், (3) இந்து (ஆரிய) ஸ்தானம் (4) இந்து (ஆரியராம) ராஜ்யம், (5) இந்து (பார்ப்பன) ஆதிக்கம் என்ற குறிச்சொல்லே ஆரியர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) இவ்வளவு, அதாவது அவர்களது எண்ணிக்கை 100-க்கு 4, 5 ஆக இருந்தும் ஆதிக்கம் முழுவதும், நாடு முழுவதும், வளம்முழுவதும் அவர்களுடையதாகவும் மற்றவர்கள் அவர்களது 'வைப் பாட்டி மக்கள்,' சூத்திரர்கள், தீண்டப்படாதவர்கள் என்பதைத் தாங்களாகவே ஒப்புக் கொள்ளும்படியாகவும் செய்யப்பட்டுவிட்டது.

இதுபோன்ற உணர்ச்சியும், நிலையும் நமக்கும் ஏற்படவேண்டும். அதற்கேற்ற குறிச்சொல் நமக்கு வேண்டும் என்பதற்காகவே திராவிடர்கழகம் வேலை செய்கிறது. இந்தப் பெயர் பிடிக்காவிட்டால் வேறு எந்தப் பெயரைவைத்தாலும் சரி. இழிநிலையை வெட்டித்தள்ளும் புரட்சி உணர்ச்சி வரும்படியாக இருக்கவேண்டும். மற்ற எந்தப் பெயராலும் இதுவரை பயன் ஏற்படவில்லை. ஆதலால், இந்தப் பெயரைச் சொல்லுகிறேன். இதுவும் மறந்ததை நினைவுறுத்துவதே தவிர, புதிய கற்பனை அல்ல.

நாம் யாவரும் திராவிடர்; திராவிடர்யாவரும் ஒன்று. ஆரியருக்கும் ஆரியத்திற்கும் நாம் எந்த விதத்திலும், எந்தத் தன்மையிலும் சம்பந்தப்பட்டவர்கள் அல்லர் என்று கருதி (1) திராவிடநாடு, (2) திராவிட இனம், (3) திராவிட மானம், (4) திராவிடர் இருப்பதா— இறப்பதா என்ற உணர்ச்சி நமக்கு வந்துவிட்டால், திராவிடர்க்கு நிகர் இந்த நாட்டில் மாத்திரமல்ல—இந்தியா கண்டத்திலேயே யார் என்று கேட்கின்றேன்!

இன்னமும் சொல்லுவேன்: ஆரியஸ்தானுக்கும்—பாகிஸ்தானுக்கும் நம் நாட்டில் இடமில்லை. நமக்கு இரண்டு சம்பந்தமும் தேவையற்றதேயாகும். ஏன்? நமக்கும் முஸ்லிம் களுக்கும் நம் நாட்டில் சண்டை இல்லை. நாமும் அவர்களும் ஒரு இனம், ஒரு சாதிமத உணர்ச்சியில்—அதுவும் நாம் ஆரியமத உணர்ச்சி கொண்டதால் வேறுபட்டவர்களாகக் கருதிக் கொள்கிறோம்; அப்படியிருந்தும் நாம் உடன்பிறப்பாளர்களாக வாழ்கின்றோம்.



ஆரியம் நம்மைவிட்டொழிந்தால், மதத்திலும் பேதமிருக்காது; அங்குள்ள முஸ்லிம்கள் நம்மைவிட்டுப் பிரிந்துவாழவோ, நம்மை இழிவுபடுத்தி வாழவோ சிறிதும் நினையார்கள். ஆதலால், அவர்களுக்கும் நமக்கும் பேத உணர்ச்சி இல்லை; கண்டிப் பாய்ப் பேதம் வேண்டாததுமாகும்.

ஆதலால், திராவிடர் என்றதால் முகமதியர்களைப் பிரித்துக் காட்டுவதல்ல; பாகிஸ் தானை எதிர்ப்பதோ, இந்த நாட்டுக்குக் கூப்பிடுவதோ அல்ல. ஆனால், திராவிடர் என்றால் ஆரியர் வேறு என்பதைக் காட்டுகிறது. திராவிட நாடு என்பது ஆரியர்களின் சுரண்டலிலிருந்தும் ஆரிய ஆதிக்கத்திலிருந்தும் மீளவேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே, திராவிடர் ஒன்றுபடவேண்டும், ஒரு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். திராவிடக் கட்டுப்பாடும், ஒற்றுமையும் ஏற்படுவதற்குத் தடையாய் உள்ள எதுவும் தள்ளப்பட வேண்டும்.

இன்றைய அரசியலில் நமக்குப் பதவிப் பங்கு வேண்டியதில்லை. நம்மை வேவல் பிரபு கூப்பிடாததால் எனக்குச் சிறிதும் சங்கடமில்லை; கூப்பிட்டிருந்தால் அவர்தான் ஏமாற்றம் அடைந்திருப்பார். நம் கட்சியில் இடைக்காலப் பதவி ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று 1940ஆம் வருடத்திலேயே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. பதவிக்காக— யோக்கியமான ஜஸ்டிஸ் கட்சி ஒருநாளும் ஆசைப்படுவதில்லை. அது மாத்திரமா? நான் தேர்தலைக்கூட பகிஷ்கரிக்கவேண்டும் என்று சொல்லி வருகிறேன். இப்படியிருக்க, வேவல் கூப்பிடவில்லை என்று நினைப்பேனா? ஆனால், வேவல் பிரபுவுக்குச் சரியான எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, பதவி விஷயம் என்னை ஏய்த்து விடாது; ஏமாற்ற மடையவும் செய்யாது.

ஆனால், வேவல் திட்டத்தால், வேவல், ஜின்னா சாயபு, அம்பேத்கார், காங்கிரசார் நான் ஆகிய அய்ந்துபேரும் வெற்றி பெற்றுவிட்டோம்.

வேவலின் வெற்றி என்னவென்றால்—வேவல் பிரபு நல்லவர்; அவரால் குற்றமில்லை; சுயராஜ்யத்திற்கு வழிகாட்டினார்; நல்ல எண்ணத்தோடு வேலைசெய்தார் என்ற பெயரைக் காங்கிரசாரிடம் வாய்நிறையப் புகழ்ச்சி வாங்கிக் கொண்டதோடு, நாங்கள் இனி சட்டம் மீற மாட்டோம்; சண்டை முயற்சிக்கும் எதிர்ப்புச் செய்யமாட்டோம் என்ற உறுதி மொழியை யும் வாங்கிக்கொண்டார். இதை மெய்ப்பிக்க மவுலானா ஆசாத் அவர்கள், 'எனக்கும் வேவலுக்கும் நடந்த சங்கதி பரம இரகசியம்' என்று சொல்லிவிட்டதே போதுமானது. காங்கிரஸ் பத்திரிகைகளும் தலைவர்களும் இதை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக, வேவலைப் பாராட்டிவிட்டனர்.

ஜின்னாவின் வெற்றி என்னவென்றால்—முஸ்லிம்களுக்கு, இந்துக்களுக்கு உள்ளது போல், சம உரிமை பங்கில் உண்டு என்பதல்லாமல், முஸ்லிம்களுக்கு முஸ்லிம் லீக் தவிர வேறு யாரும் பிரதிநிதித்துவம் அல்ல என்பதை உறுதிப்படுத்திவிட்டார்.

அம்பேத்காருக்கு வெற்றி என்னவென்றால்—ஷெட்யூல்டு வகுப்புக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் அம்பேத்கார்தான் பிரதிநிதி என்பதோடு, காங்கிரஸ் பிரதிநிதித்துவம் கொண்டாடுவது சரியல்ல என்று செய்யப்பட்டுவிட்டது.

காங்கிரசாருக்கு என்ன வெற்றி என்றால்—முதலாவது தலைவர்கள் விடுதலை யானார்கள்; காங்கிரசை இயக்க, மேலால் பிரச்சார வேலை நடக்க இடம் செய்துகொண் டார்கள்; வேறு யாரும், எந்தக் கட்சியாரும் சுலபத்தில் நாட்டின் பேரால் பதவிக்கு வராதபடி பந்தோபஸ்து செய்துகொண்டார்கள்; காங்கிரஸ் ஆட்கள் காங்கிரசை விட்டு ஓடாமல் இருக்க வசதி செய்துகொண்டார்கள்; பிரிட்டிஷாரோடு போராடுவதை விட்டு விட்டதன் மூலம் பிரிட்டன் உதவிகொண்டு முஸ்லிம் லீகுடன் போர் தொடுக்க வசதி செய்து கொண்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இனி, நமக்கு வெற்றி என்னவென்றால்—இனப்படி, மதப்படி, வகுப்புப்படி எந்த அரசியல் பிரதிநிதித்துவமும் இருக்கவேண்டும் என்று போராடினவர்கள் இந்நாட்டில் நாமேயாகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காகவே, காஞ்சிபுரத்தில் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் ஸ்தாபனத் தலைமையை உதறித் தள்ளிவிட்டு, நடு மாநாட்டில் நாலாயிரம் பேர் இடையில், 'காங்கிரஸ் இங்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக் கொள்ளாததினால், நான் கவலைப்படவில்லை. இதற்காகவே வெளியேறி வேறு ஸ்தாபனம் ஆரம்பித்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ளச் செய்கிறேனா இல்லையா, பார்!' என்று பந்தயம் கூறி, மீசையை முறுக்கிக் காட்டிவிட்டு வந்த என் பந்தயப் பிரச்சினை, சிம்லா மாநாட்டில் ஏகமனதாய் ஒப்புக்கொண்டு கல்சாசனமாக்கப்பட்டுவிட்டது என்பதேயாகும்; அதுவும் நம் விகிதப்படி என்றால் இன்னும் மகிழ்ச்சி அல்லவா?

[சேலத்தில், 20-7-1945-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-7-1945; 'விடுதலை' 8-10-1972]

## 10. சுயராஜ்ய ஆட்சி எது?

தோழர்களே!

திராவிடர்கள் அத்தனை பேரும் இந்து மத வருணாசிரமப்படி சூத்திரர்களாக்கப் பட்டதுதான் அவர்கள் தொழிலாளிகளாயிருக்கக் காரணம் என்பதை நீங்கள் உணர்தல் வேண்டும். அதுதான் போகட்டும், இந்தத் தொழிலாளிகள் இழி மக்களாகக் கருதப்பட்டு வருவதற்குக் காரணம் இவர்கள் இந்து மத தர்மப்படி இழி மக்களாய் இருப்பதால்தான். சிலர், அறியாமை காரணமாக—'நாம் இழி தொழில் செய்கிறோம்; அதனால் இழிமக்களாக இருக்கிறோம்' என்று நினைத்து வருகிறார்கள். இது முற்றிலும் தவறாகும்.

எந்த ஒரு தொழிலும் மற்ற நாடுகளில் உள்ளதுபோல் ஒரு தனிக் கூட்டத்திற்கென்று ஒதுக்கப்படாமல் பொதுவாகவே கருதப்படுமானால், அந்தத் தொழிலுக்கு இழிவோ, பெருமையோ இருந்து வராது.

செருப்புத் தைக்கும் தொழில் ஒரு கூட்டத்திற்கே—அதுவும் இந்து மத தர்மப்படி 5-வது சாதிக்கே ஒதுக்கப்பட்டுவிட்டதால்தான் அது நம்நாட்டில் இழி தொழிலாகக் கருதப் பட்டுவருகிறதே ஒழிய, அத்தொழில் இழி தொழில் என்பதற்காக அல்ல. அதேபோல்தான் வீதி கூட்டும் தொழிலும், கக்கூஸ் கழுவும் தொழிலும். மணியடிக்கும் தொழிலுக்குப் பெருமை இருந்துவருவதற்கும் இதுதான் காரணம். அத்தொழில் உயர்சாதிப் பார்ப்பானுக் கென்றே ஒதுக்கப்பட்டு விட்டதால்தான் உயர்வாகக் கருதப்பட்டு வருகிறதே ஒழிய அத் தொழில் உயர்வானது என்பதற்காக அல்ல. ஆகவே, தொழில் காரணமாக இவர்கள் இழி மக்களாக இருக்கின்றார்கள் என்று யாரும் கூறிவிட முடியாது. இந்தத் தொழிலாளிகளுக்கு உணர்ச்சி வரவேண்டும். 'நாங்கள் மட்டும் ஏன் உடலுழைப்பு செய்தே வாழவேண்டும்? அப்படியிருந்தும் நாங்களேன் இழிசாதி மக்களாக வாழவேண்டும்?' என்று தொழிலாளிகள் கிளர்ச்சி செய்யவேண்டும். இன்றையத் தொழிலாளர்கள் கூலி உயர்வுக்காகக் கிளர்ச்சி செய்கிறார்களே ஒழிய, தமது இழிவு நீங்கக் கிளர்ச்சி செய்யக் காணோம். கூலி உயர்வால் பொருள் விலை ஏறுகிறது. விலை ஏற்றத்தைத் தொழிலாளிகள்தாம் சாமான் வாங்கும்போது கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற பொருளாதாரத்தை இவர்கள் உணரவில்லை; இவர்கள் தலைவர்களும் இவர்களுக்கு இதை உணர்த்துவதில்லை.

மேலும், இத்தொழிலாளிகளுக்கு மதப் பைத்தியமும், கடவுள் பைத்தியமும், முன் ஜென்ம, பின்ஜென்மப் பைத்தியமும், தலைவிதிப் பைத்தியமும் அதிகம் இருந்து வருகின்றன. இவற்றிலுள்ள நம்பிக்கைகள் அறவே ஒழியவேண்டும். ஊரார் உழைப்பால் உண்டு உடல் பெருத்து உருளுகிறான் ஒரு சோம்பேறிப் பார்ப்பான். அவனை, 'ஏனப்பா இப்படிச் சோம்பேறி வாழ்வு வாழ்கிறாய்?' என்று கேட்டால், 'நான் என்ன பண்ணட்டும்? கடவுள் கொடுக்கிறார்; நான் உண்டு புரளுகிறேன். அதுதான் கொடுத்துவைத்தது!' என்கிறான் அவன், ஆணவமாக! அடுத்த வீட்டுக் குப்பனைப் பார்த்து, 'ஏனப்பா, ஒருநாள் முழுவதும் ஓயாமல் உழைத்தும் உனக்கு அரைவயிற்றுக் கஞ்சிக்குக்கூடப் போதிய ஊதியம் கிடைக்கவில்லை?' என்று கேட்டால்—அவனும், 'அது என் தலைவிதி; நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; பகவான் செயலுக்கு நன்றி; என்ன பண்ணட்டும்? வஞ்சனையின்றி உழைக்கத்தான் என்னால் முடியும்?' என்கிறான், அழுகுரலோடு. நீங்கள் நினைக்கிறீர்களா, பகவான் செயலுக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமென்று? இல்லை, இல்லை!



இது, ஒரு சோம்பேறிக்கூட்டம் தம் சுகவாழ்வுக்காக ஏற்படுத்திக்கொண்ட ஒரு வஞ்சகத் திட்டம் என்றுதான் திராவிடர் கழகம் கூறுகிறது. இதற்கும் பகவான் செயலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமானால், அந்தப் பகவான் பாடுபடும் பாட்டாளி மகனுக்கு முதலில் படியளக்கட்டும்; பிறகு மீதியிருந்தால் சோம்பேறிப் பார்ப்பானுக்கும் கொஞ்சம் அழுது தொலைக்கட்டும் என்றுதான் திராவிடர் கழகம் கூறுகிறது.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று தேசிய கீதம் பாடுகிறார்கள்—இன்றையத் தேசியத் தோழர்களும் பொதுவுடைமைத் தோழர் களும். இது பார்ப்பனப் பாரதி காட்டியவழி. ஜெகத்தை இவர்கள் எப்படி அழிக்கப் போகிறார்கள்! சமுத்திரத்தைப் பூமியின்மீது வெட்டிவிடப் போகிறார்களா? அல்லது, சூரியனை அடுப்பிலிட்டுக் கொளுத்திவிடப் போகிறார்களா? ஜெகத்தினை அழிப்ப தென்றால் தொழிலாளியும் அதனுடன் சேர்ந்துதானே மடிய வேண்டியதிருக்கும்! என்னே இவர்கள் மடமை!

இன்றையச் சமூக அமைப்பு, பொருளாதார அமைப்பு அத்தனையும் மாற்றி யமைக்கத் தொழிலாளர்களான திராவிடர்கள் அத்தனைபேரும் பாடுபடவேண்டும். மக்களை ஏய்ப்பவன் செல்வவான் ஆகின்ற இக் கொடியநிலை மாறியே ஆகவேண்டும்.

அரசாங்கம் வரிவசூல் செய்து ஏதோ நிர்வாகம் நடத்திவருகிறது என்பதுதான் நம் மக்களுக்குத் தெரியுமேயொழிய—அது யாருக்காக நிர்வாகம் நடத்திவருகிறது என்பதோ, அந் நிர்வாகத்திற்கான செலவு யாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்பதோ இவர்களுக்குத் தெரியாது. தெரியாதது மட்டுமல்ல, இவர்களுக்குள்ள குறை; தெரிந்து கொள்வதற்கான ஆசைகூட இவர்களுக்கிருப்பதில்லை. தோழர்களே, சற்றுக் கவனமாகக் கேளுங்கள்.

நான் கூறுகிறேன், இன்றைய அரசாங்கம் பணக்காரர்களைக் காப்பாற்றத்தான் இருந்துவருகிறதென்று. அரசாங்கத்தின் போலீஸ் இலாக்காவும், கோர்ட்டும், ஜெயிலும், பட்டாளமும் ஏழைப் பாட்டாளி மக்களைக் காப்பாற்ற இருக்கின்றனவா அல்லது பணக்காரர் களைக் காப்பாற்றுவதற்காக இருக்கின்றனவா என்பதை நீங்கள் சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

பாடுபட்டுப் பட்டினி கிடக்கும் பாட்டாளி மகனிடம் ஏது பொருள், போலீஸ்காரனால் காப்பாற்றப்படுவதற்கு? ஒருவனுக்கு அதிகப்படியாக மற்றொருவன் பொருள் சேமித்து வைத்தில்லாவிட்டால்—நாட்டில் திருட்டு எப்படி இருக்க முடியும்? பணக்காரன்–ஏழை என்ற பாகுபாடு இல்லாவிட்டால்—நாட்டில் இத்தனை கோர்ட்டுகளுக்கு வேலை ஏது? முதலாளி–தொழிலாளி என்ற பாகுபாடு இல்லாவிட்டால்—நாட்டில் இத்தனை தொழிலாளர் கிளர்ச்சிக்கு இடமேது? இவற்றிற்கு இடமில்லையானால் நாட்டில் இத்தனை ஜெயில்கள் தான் இருக்கவேண்டிய அவசியமென்ன? மற்ற நாடுகளில் எல்லாம் ஜெயில் நிர்வாகத்தால் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறதென்றால், நம் நாட்டில் அரசாங்கத்திற்கு அதனால் வருடா வருடம் நஷ்டமேற்பட்டு வருவதற்குக் காரணமென்ன? நாட்டு மக்களுக்கெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



போர்முறைப் பயிற்சியளிக்கப்பட்டிருந்தால் நிரந்தரமாக ஒரு பெரிய பட்டாளம் இருக்க வேண்டிய அவசியம் இருக்காதல்லவா? ஒரு பட்டாளந்தான் இருக்கிறதென்றாலும் அதுவும் அரசாங்கத்தைக் காப்பாற்றத்தானே இருந்து வருகிறது. அரசாங்கமும் முதலாளி கையி லிருக்கும்போது—அப் பட்டாளம் தொழிலாளிகளின் உரிமைப் போராட்டத்தைத் தடுக்க அவ்வப்போது உபயோகப்படுத்தப்பட்டு வரும்போது—போலீஸ் இலாக்காவும் நீதி இலாக் காவும் அரசாங்கத்தால் தொழிலாளிகளை அடக்கப் பெரிதும் பயன்பட்டு வரும்போது, இன்றைய அரசாங்கம் முதலாளிகளைக் காப்பாற்றத்தான் இருந்து வருகிறது என்பதை யும்—தொழிலாளிகளையோ, ஏழைப் பாட்டாளிகளையோ காப்பாற்றுவதற்காக இருக்க வில்லை என்பதையும் யார்தான் மறுத்துக் கூறமுடியும்?

பணக்காரர்களைக் காப்பாற்றுவதற்காக இருந்துவரும் இந் நிர்வாகங்களுக்குண் டான வரிப்பணம் யாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது? தேசியத் தோழர்கள் கூறுவார்கள், இவ்வரிகள் பணக்காரர்களிடமிருந்துதான் வசூலிக்கப்படுகின்றனவென்று. நான் கூறு கிறேன், இவ்வரிகள் ஏழைப் பாட்டாளி மக்களிடமிருந்துதான் வசூலிக்கப்படுகின்றன. வென்று. பணக்காரன் வரி கொடுக்கிறான் என்கிறாய் நீ; சரி, ஒப்புக்கொள்வோம். அப் பணம் அவனுக்கு எப்படி வந்தது? ஏழை மக்களை ஆனமட்டும் ஏய்த்துத் தான் அடித்த கொள்ளையின் ஒரு சில பகுதியைப் பணக்காரன் சேமித்து வைத்துக்கொள்ளவும் அதைக் காப்பாற்றிக்கொள்ளவும், தானும் தனது பெண்டு பிள்ளைகளும் போக போக் கியத்துடன் சுகமாக வாழவும் தரகாக அரசாங்கத்திற்குக் கொடுத்து வருவதைத்தானே நீ வரி என்று கூறுகிறாய்? அவன் செலுத்தும் வரிப்பணம் அவனுடைய கொல்லையில் தானாக விளைந்துவிடுவதில்லையே! நான் கூறினால் ஏதோ விடுகதை கூறுவது மாதிரி இருக்கும். உண்மையாகக் கேட்கிறேன்—அரசாங்கம் நடத்த வரி என்று ஒன்று இருப்பா னேன்? மடையர்கள் இராஜ்யத்தில் அன்றோ வரி இருக்கும்! அறிவாளிகள் இராஜ்யத்தில் வரி எப்படி இருக்கும்? வரி கொடுத்து வாழும் இராஜ்யத்திற்கா சுயராஜ்யம் என்று பெயர்? வாடகை கொடுத்து வாழும் வீட்டிற்கா சொந்த வீடென்று பெயர்! எந்த மடையன்தான் இதைச் சுயராஜ்யம் என்று ஒப்புக்கொள்வான்?

அரசாங்கம் நடத்த வரி வேண்டுமென்றால், அதை நேரிடையாகவே ஏழைகளிட மிருந்து வசூல் செய்துகொள்ளுங்களேன். அதற்கேன் மறைமுகமான திட்டம் போடு கிறீர்கள்? அதற்காக முதலாளி என்றொருவரை நியமித்து அவர்களை ஆனமட்டும் கொள்ளையடிக்கும்படி அனுமதித்துவிட்டு, அவர்கள் அடையும் இலாபத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு அணாவோ, இரண்டணாவோ பெற்று அரசாங்கம் நடப்பானேன்? உனக்கு வேண்டிய ஒரு அணாவுக்காக, ஏஜென்ட் அல்லது எஜமானனுக்கு ஏழை மகன் 15 அணாவா அழவேண்டும்? நீயே சகல நிர்வாகங்களையும் எடுத்துக்கொண்டு, அந் நிர்வாகத்திற்கான செலவை மட்டும் இலாபமாக வைத்து மக்களுக்கான வசதிகளை அளித்து வருவதற்கென்ன தடையிருக்க முடியும்? இன்று நாட்டில் ஒவ்வொரு வியாபாரியும் அடித்துவரும் கொள்ளைக்குக் கணக்கு வழக்கைக் காண முடியவில்லையே! ஒவ்வொரு முதலாளியும் கணக்குக் காட்டாமல் அடிக்கும் கொள்ளையே பல இலட்சக்கணக்கில் ஆகி விடுகிறதே!

ஒரு பிர்லா வருடந்தோறும் வரி இல்லாமல் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கொள்ளையடிப்பதாகக் கூறப்படுகிறதே! அவர் வீட்டிலேயே காந்தியார் போய்த் தங்குவாரானால் அவரை எப்படி அரசாங்க உத்தியோகஸ்தர் கணக்குக் கேட்க முடியும்? இவர்கள் யோக்கியமானவர்களா யிருந்தால் ஊரைக் கொள்ளையடிப்பவன் வீட்டிலா இவர்கள் போய்க் கூட்டம் போடுவார்கள்

இவர்களுடைய அரசாங்கம் யோக்கியமானதாயிருந்தால் முதல் நம்பர் முதலாளி யாகிய சண்முகம் செட்டியாரை நிதி மந்திரியாக வைத்திருப்பார்களா? கொள்ளை இலாபம் அடிக்கும் கொழுத்த வியாபாரியல்லவா அவர்?. அப்படிப்பட்ட முதலாளிகள் இன்று ஆட்சி



செலுத்தி வரும்போது அவர்களுடைய ஆட்சியைப் பலப்படுத்தவேண்டும் என்று சமதர்மத் தோழர்களும், பொது உடைமைத் தோழர்களும் அன்றாடம் கூப்பாடு போட்டுவிட்டு, அந்த ஆட்சி யாருக்காக நடந்து வருகின்றதோ—அந்த ஆட்சி யாருடைய ஆதரவில் நடந்து வருகிறதோ—அவர்கள்மீது தொழிலாளிகளின் கவனத்தைத் திருப்பி வருவது எவ்வளவு போக்கிரித்தனம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! நாட்டில் சுயராஜ்ய ஆட்சியில் எத்தனை தொழிலாளர் கிளர்ச்சிகள் இதுவரை நடைபெற்றிருக்கின்றன? இவை தோல்வி அடையக் காரணமான சதிகாரர்கள் முதலாளிகளா? அல்லது, அவர்களின் கூலிகளான அரசாங்கத் தலைவர்களா? அல்லது, உங்கள் தலைவர்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள்!

உங்கள் தலைவர்கள்—ஒன்று, அறியாமையால் அல்லது தமது சுயநலத்தால் உங்களை முதலாளிகள்மீது ஏவி விடுகிறார்கள். நீங்களும் உண்மை உணராமல் மந்தை ஆடுகளைப்போல் தலைவர்களைப் பின்பற்றிக் கிளர்ச்சி செய்கிறீர்கள். அதனால் நீங்கள் காணும் பயன் என்ன? உங்கள் முதலாளிகளின் ஆதரவால் வாழும் அரசாங்கம் உங்கள் முதலாளிகளைக் காப்பாற்றுவதற்காக உங்கள்மீது தனது அடக்கு முறையைப் பிரயோகம் செய்கிறது; உங்களைத் தடியால் அடிக்கிறது; துப்பாக்கியால் சுடுகிறது; உங்கள் தலைவர் களை ஜெயிலில் அடைக்கிறது; ஒரு தலைவரை நாட்டை விட்டுக்கூட வெளியேற்றச் செய்தது; உங்களைப் பல நாட்கள் பட்டினி போட்டு வீதியில் பிச்சை எடுக்கச் செய்கிறது. அதோடு நிற்கிறதா? உங்களில் சிலரை உங்கள்மீது ஏவிவிட்டுக் கலகத்தை உண்டாக்கு கிறது. அது மட்டுமா? உங்கள் வீடுகளைச் சோதனை போடுவதாகக்கூறி உங்கள் பெண்டு பிள்ளைகளை வேறு அவமானப்படுத்துகிறது. இத்தனையும் ஆன பிறகு கூட, உங்கள் கவனம் இன்னும் உங்கள் முதலாளிகள் மீதே செல்லுமானால்—உங்கள் தலைவர்கள் உங்களை இன்னும் அந்தப் பக்கமே திருப்ப முயற்சிப்பார்களானால், அவர்கள் முதலாளி களுக்குக் கையாட்களாக, அரசாங்கத்தின் கையாட்களாக, சுயநலக்காரர்களாக இருக் கிறார்கள்; அல்லது, அவ்விதமே ஆக்கப்பட்டு விட்டார்கள் என்பதுதானே இதன் அர்த்தம்? அரசாங்கம் முதலாளிகளுக்கு அனுசரணையாக இல்லையானால், தொழிலாளிகள் சமூகத்தை எதிர்த்துத் தனிப்பட்ட முதலாளிகள் எத்தனை நாள் வாழமுடியும்?

இந் நாட்டில் முதலாளி என்றொரு வர்க்கம் இருந்துவரவும் அவ்வர்க்கம் அன்றாடம் தழைத்தோங்கவும் வழி செய்து கொடுப்பதும் இன்றைய ஆட்சிதான்.

ஆகவே, உங்கள் திரண்ட சக்தியை அரசாங்கத்தின்மீது திருப்புங்கள். அரசாங் கத்தைத் தொழிலாளர்களாகிய நீங்கள்—இந்த நாட்டிற்கு உரியவர்களாகிய நீங்கள்—இந்த நாட்டின் வளப்பத்திற்கு உழைப்பால் உரிமை பெற்றுள்ள நீங்கள் கைப்பற்றுங்கள்.

திராவிடர் கழகத்திற்குத் தொழிலாளரைப் பற்றிய திட்டமில்லை என்று சில சுய நலமிகள் துர்ப்பிரசாரம் செய்து வருகிறார்கள். நாங்கள், உங்கள் கவனத்தை அரசாங்கத்தின் பக்கம் திருப்புங்கள் என்று கூறினால்—உங்கள் தலைவர்கள், நாங்கள் ஏதோ முதலாளிகளின் கையாட்களாகிவிட்டோம் என்று கூறி உங்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். நீங்கள் இதை நம்பாதீர்கள். எங்கள் கட்சியில் ஒரு முதலாளிகூட இல்லை; அவர்கள் ஆதரவும் எங்களுக்குத் தேவையில்லை.

உங்களுடைய 1948ஆம் வருடத் திட்டம் ஆட்சியைக் கைப்பற்றுவதாக இருக்கட்டும். பாடுபடாத சோம்பேறிகளின் ஆட்சியை இருக்கவிடாதீர்கள்.

ஒரு இராமசாமி ரெட்டியார் ஏன் முதன் மந்திரியாயிருக்கவேண்டும்? அவர் உழுத வரா? அல்லது, விதைத்தவரா? ஒரு டாக்டர் இராஜன் ஏன் உணவு மந்திரியாக இருக்க வேண்டும்? அவர் என்றாவது கலப்பையைத் தொட்டிருப்பாரா? உடலுழைப்பு வேலை யென்றால் அது என்னவென்றாவது அவருக்குத் தெரியுமா? அயலார் உழைப்பில் வாழும் அக்கிரமக்காரர்கள் ஏன் உங்களை ஆள வேண்டும்? கேவலம், கூலி உயர்வுக்காக நீங்கள்

படிப்பகம்

www.padippakam.com



உயிரை அர்ப்பணம் செய்வதைக் காட்டிலும்—உங்கள் ஆட்சியை ஏற்படுத்துவதில் அர்ப்பணம் செய்வது மேலல்லவா? ஆட்சி உங்கள் கைக்கு வராதவரை என்னதான் நேர்மையான ஒருவர் ஆட்சிக்கு வந்தாலும்கூட—ஏன், 'பர மண்டலத்திலிருந்து உங்கள் பிதாவே' வந்து ஆட்சி புரிந்தால்கூட உங்களுக்குச் சுக வாழ்வு கிட்டாது; உங்கள் இழிவு நீங்க வழிபிறக்காது.

['விடுதலை'–சொற்பொழிவு—20-1-1948]

# 11. சுயராஜ்யத்தின் தன்மை

தலைவரவர்களே! தோழர்களே!

காந்தியாரைக் கொன்றதெது? காந்தியாரைக் கொன்றவனைத் தூக்கிலிடுவதோ அல்லது அவனுடைய சாதியையே பகிஷ்காரம் செய்துவிடுவதோ அல்லது அதற்கு ஏற்பட்ட சதி ஸ்தாபனத்தை அடக்கிவிடுவதோ அதற்கேற்ற பரிகாரமாகிவிடாது. அத்தகைய ஒரு பெரியாரைக் கொல்வதற்கான மனிதனை,—சமுதாயத்தை, ஸ்தாபனத்தை ஏற்படுத்த வெறியையூட்டிய மதத்தை—அதனுடைய அடிப்படையை ஒழிப்பதுதான் சரியான அடிப் படையாகும்.

சாதாரண மக்கள்கூட காந்தியார் கொலைக்குக் காரணம் மதவெறிதான்; அதை ஒழிக்கவேண்டியதும் அவசியம்தான் என்பதை உணர ஆரம்பித்துவிட்டதும், வெறும் தர்க்கத்துக்காயினும்—ஆட்சியாளர்கள், 'இந்த இராஜ்யம் மத சம்பந்தமற்ற இராஜ்யமாக இருந்துவரும்' என்று கூறி வருவதும், ஒரு அளவு கொலைபாதகர்களைக் காப்பாற்ற என்று இருந்தாலும், மதம் ஒரு அளவுக்கு வெறுக்கப்படுகிறது. சர்க்கார் அரசாட்சி ஏற்படுத்தப்படுமென்பது முடியக்கூடிய காரியமா? மதம், மதஉணர்ச்சி ஆட்சி என்கின்ற இலட்சியமில்லாவிட்டால் மற்றபடி சர்க்கார் ஆட்சிக்கு ஒரு இலட்சியம் என்ன என்பது தெரியவேண்டாமா? மக்களை ஆள ஏதாவது ஒரு கொள்கை இருந்துதானே ஆகவேண்டும்? அந்தக் கொள்கை என்பது மதத்தை அடிப்படையாகக் கொண்டதாகத்தானே இங்கு இருக்க முடியும்?

நாட்டில் பல மதங்கள் இருக்கும்போது ஒவ்வொரு மதக்காரனுக்கும் ஆட்சி இடம் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? இந்து, மாடு அடிக்கக்கூடாது என்கிறான்; முஸ்லிம் பொது ரோட்டில் மேளம் அடிக்கக்கூடாது என்கிறான். கிறிஸ்தவன் ஞாயிற்றுக்கிழமை லீவு வேண்டுமென்கிறான்; மூன்றையும் அனுமதித்துத்தானே ஆகவேண்டும்? மதத்தின் பேரால் சொத்து நாசமாக்கப்பட்டுவருவதை அனுமதித்துத்தானே ஆகவேண்டும்? மதத்திற்காகக் கட்டப்பட்டிருக்கும் கோயில்கள், சர்ச்சுகள், பள்ளிவாசல்கள் ஆகியவை பொதுச் சொத்துதானே? அவைகள் நூற்றுக்கணக்கான கோடி பெறாதா? அவற்றுக்குப் பாதுகாப்பு வேண்டும்; மதபரிபாலன போர்ட் வேண்டும். இவை இல்லாத ஆட்சி என்றா லும், மதம் அற்ற ஆட்சி என்றாலும்—நாஸ்திக அரசு ஆட்சி என்று தானே ஆகிவிடும்? அப்படியிருக்க, ஆட்சியாளர்கள் ஒப்புக்கொண்டுதான் இப்படிச் சொல்லுகிறார்களா? மதத் திற்கும் ஆட்சிக்கும் சம்பந்தமில்லையானால் 'மதஉணர்ச்சி புண்படுத்தப்பட்டால்' என்ற செக்ஷனை நீக்கிவிடுவார்களா? சர்க்காரில் கிறிஸ்டியன் காலேஜ், இஸ்லாமிய காலேஜ், இந்து காலேஜ் போன்றவை ஏற்பட்டுவிடுமா? வகுப்புரிமை கோரும்போது மாத்திரம் 'வகுப்பு சங்கதிகளை சர்க்கார் கவனிக்காது' என்று நாகரிக பாஷையில் பதிலளித்துவிட்டு சட்டத்தில், சாஸ்திரத்தில், பழக்கத்தில் இருக்கும் வகுப்புத் தன்மையை எடுத்துவிடு வார்களா?

வகுப்புபற்றிக் கூறும் சாஸ்திரங்கள் ஏன் உங்கள் ஆட்சியில் இருக்க வேண்டும்? வகுப்பில்லையானால், எங்கள் மக்கள் ஏன் கோயிலில் மணி அடிக்க அனுமதிக்கப்படுவ தில்லை? எங்கள் மக்கள் இன்னும் ஏன் சூத்திரர்களாகக் கருதப்பட்டு வருகிறார்கள்?



இவற்றையெல்லாம் ஒழிக்க முடியாதபோது, ஏன் மதம் அற்ற ஆட்சி நடத்தப்போவதாக ஜம்பம் அடிக்கிறீர்கள்? மதம் இன்றேல் இந்து ராஜ்யம் ஏது? கிறிஸ்துவ இராஜ்யம் ஏது? மதம் இல்லை என்று கூறப்படுமானால், நீங்கள் ஒரு முஸ்லிம் ராஜ்யம் ஏது? மானே இந்தியாவை ஆண்டுகொள்ளட்டும் என்று ஏன் விட்டிருக்கக்கூடாது? பெரும் பான்மை இந்துக்களைச் சிறுபாலரான முஸ்லிம்கள் ஆளுவதா என்பதுதானே இன்றைய காங்கிரஸ் கேள்வி? முஸ்லிம்கள் பெரும்பான்மையாயுள்ள இடங்களில் ஏன் சிறுபான்மை இந்துக்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற மனப்பான்மையால்தானே பாகிஸ்தான் பிரிய நேர்ந்தது? ஹைதராபாத், காஷ்மீர் பிரச்சினை எதை அடிப்படையாகக்கொண்டது? மதவெறியை ஒழிக்க வேண்டாமா? நம் நாட்டுத் தகராறும் அதுதானே? பெரும்பான்மை யான திராவிட மக்களாகிய நம்மைச் சிறுபான்மை ஆரியர் ஏன் ஆளவேண்டும் என்று தானே நாம் பிரிவினை கோரி வருகிறோம்.

மதத்தை அன்பாலும், சத்தியத்தாலும், அகிம்சையாலும் காப்பாற்றப் பாடுபட்ட தற்காகக் காந்தியாருக்கு வெடிகுண்டும், 'ரிவால்வர்' வெடியுமா பரிசாகக் கிடைக்க வேண்டும்? மதவெறி காரணமாய் அவரது போதனைகள் பலனற்றுப் போனதைக் கண்டேனும், மேலால் இது நடவாமல் இருக்க இச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு மதவெறியை ஒழிக்க வேண்டாமா? மதம் இன்றுவரை வெறியை ஊட்ட, வெறுப்பை ஊட்டப் பயன்பட்டு வந்திருக்கிறதே ஒழிய, யாரையும் சீர்திருத்தப் பயன்பட வில்லையே! காந்தியார் போதித்த அன்பும் அகிம்சையும் கவைக்குதவாத சங்கதிகளாய்ப் போய்விட்டனவே! காந்தியார் வாக்குப்படி நடப்பதாயிருந்தால் அவரைக் கொன்ற கோட்சேயைச் சிறைப்படுத்தியிருக்கவேண்டியதில்லையே! அவர்தான், 'நான் கல்லடி பட்டோ, கத்திக்குத்துப் பட்டோ அல்லது வெடிகுண்டு போட்டோ, இறக்க நேரிட்டால் அதுவே பகவானுக்குச் சம்மதமாகத்தான் இருக்கும். ஆதலால், என்னைக் காப்பாற்ற மற்றவர் எவராலும் முடியாது' என்று தெளிவாகக் கூறியிருந்தும், அவரை, 'பகவான் தனது பொன்னடிக்கு அழைத்துக்கொண்டு விட்டார்' என்று யாரும் சும்மா இருந்துவிட வில்லை. கோட்சேயையும் அவனுடைய கூட்டத்தையும் சிறைபடுத்தத் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள் அல்லவா? அப்படித் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொண்டபோதிலும் மதவெறி அழிந்துவிடக் காணோமே!

அதற்கு மாறாக, மதவெறிக்குப் பயந்தன்றோ இந்திய முதன்மந்திரியார்கூட முள் வேலி, பட்டாளம் இவற்றின் பாதுகாப்போடு வாழவேண்டி இருக்கிறது? வகுப்பு வெறியால், சென்னைப் பிரதமர் கவிழ்க்கப்பட சதிவேலைகள் நடக்கின்றன. மதவெறியால் விளைந்த கேடுதானே, காஷ்மீர்ப் போராட்டம்? மதவெறியால் நேரும் கேடுகளைத் தவிர்க்க சுமார் 1000 கோடிக்குமேல் படைக்காகச் செலவழிக்கத் திட்டம் போடப்பட்டு இருக்கிறதே! அங்கு தினம் 10, 15 இலட்ச ரூபாய் செலவாகிறதே; அதனால் ஏதாவது பயன் உண்டா?

இன்றைய மதத்தில் பித்தலாட்டக்காரர் பிழைக்க வழியேற்பட்டிருக்கிறதே ஒழிய உண்மையாக யாருக்காவது மதக் கொள்கைகள் பயன்பட்டுள்ளனவா? மதம் மட்டுமல்ல; இன்றையக் கடவுள் தன்மையும், மடாதிபதிகள் தன்மையும், சாஸ்திரங்கள் புராணங்கள் இவற்றின் தன்மையும், இவற்றின் உபதேசத் தன்மையும் இன்றைய மக்களுக்குச் சிறிதும் பயன்படவில்லை. இதைத்தான் காந்தியாரின் துர்மரணம் நமக்குத் தெளிவாக வலியுறுத்து கிறது. காந்தியார் எந்தக் கருத்துக்காகக் கொலைசெய்யப்பட்டாரோ, அந்தக் கருத்துக்கு ஆதாரமாயிருந்த மதத் தத்துவங்களால் மக்களுக்குப் பயன் ஏற்படவில்லை. தான் போதித்த சத்தியமும், அகிம்சையும் தனக்கே பிரயோசனப்படாமற் போய்விட்டன. அவற்றை மக்களால் கடைப்பிடிக்க முடியாமற் போய்விட்டது.

கடவுளும் மதமும் மனித சிருஷ்டியே; கடவுளும் மதமும் மக்களால் தோற்றுவிக்கப் பட்டனவே ஒழிய, தாமாகத் தோன்றியன அல்ல என்பதை நீங்கள் அறியவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



'கடவுள், கடவுள் என்று கூறுகிறாயே, உனக்கு எப்படியப்பா, அது இருப்பது தெரிந்தது?' என்று கேட்டால், தனக்கு, மற்றொருவர் கடவுள் இருப்பதாகக் கூறினார் என்று கூறுவாரே ஒழிய, கடவுள் நேரில் வந்து கூறியதாகவோ, தன் உள்ளம் கூறியதாகவோ கூறமாட்டார். 'இல்லை இல்லை, என்னுடைய உள்ளம்தான் கூறுகிறது கடவுள் இருப்பதாக' என்று ஒருவர், கூறுவாரானால் அதென்ன அவருடைய உள்ளம் மட்டும் நெய்யில் பொரிக்கப்பட்டது? நம்முடைய உள்ளம் மட்டும் என்ன கடலெண்ணெயில் பொரிக்கப்பட்டதா? என்று நாம் சிந்திக்கவேண்டும்.

நம்முடைய உள்ளம் அவ்வளவு விசாலமில்லையானால் நம் எல்லோருடைய உள்ளங்களைவிட விசாலமான ஒரு யானையினுடைய உள்ளம் ஏன் அப்படிக் கூறக்கூடாது என்று நீங்கள் சிந்திக்கவேண்டும். இன்றைய மதமும், கடவுளும் வேறு இறந்த எந்தக் காலத்துக்கோ தோற்றுவிக்கப்பட்டவை. அப்போது மக்கள் சக்கிமுக்கிக் காலத்தில் இருந்தனர். ஆகவேதான், அவை இன்றைய 'எலக்டிரிசிடி' காலத்திற்குப் பயன்படாமல் போய் விட்டன.

இன்றைய கடவுள் கருத்தும் மதக் கருத்தும்—ஆகாயத்தில் இரண்டு இராட்சதர்கள் சண்டையிட்டுக் கொள்வதால், பாணம் உராய்வதால் இடி ஏற்படுகிறது; மின்னல் ஏற்படுகிறது என்று நம்பிய காலத்தில் தோற்றுவிக்கப்பட்டனவாகும். எங்காவது இடி விழுமானால்—அங்கு யாரோ கெட்டுப்போனவர்கள் இருந்தார்கள்; அவர்களை அழிக்கத்தான் கடவுள் இடியை அங்கு விழும்படி செய்தார் என்று நம்பிய காலத்தில் தோற்றுவிக்கப்பட்டனவாகும். இன்று கோயில்கள்மீது இடிவிழுவதைப் பார்த்து எவனாவது இக் கருத்துக்களை நம்புவானா? அந்தக் காலத்திற்குத் தோற்றுவிக்கப்பட்ட மதமும் கடவுளும் அன்றையப் பாதுகாப்புக்குப் போதுமானதாய் இருந்தன. அந்தக் காலத்திய பாதுகாப்புக்கு இன்று யாரும் பயப்படுவதில்லை. அந்தக் காலத்தில் ஒரு 5 ரூபாய் நோட்டை வைத்து அதன்மீது ஒரு பளுவையும் வைத்து, நாலு பக்கங்களிலும், ஏசுநாதர், முகம்மது நபி, சிவன், மகாவிஷ்ணு என்று எழுதிவிட்டுப் போய்விட்டால் ஒருவன்கூட அதை எடுக்கத் துணியமாட்டான்; இன்றையக் காலத்திலோ அதை ஒருவன்கூட எடுக்காமல் இருக்கமாட்டான். அந்தக் காலத்தில் சாந்தி கழிக்க முச்சந்தியில் வைக்கப்பட்ட இடியாப்பத்தை எவனும் தொட அஞ்சுவான்; இன்றோ எவனும் அதைத் தாராளமாக எடுத்துத் தின்றுவிடுவான்—நானும் தின்று இருக்கிறேன். மனிதன் நிலை அவ்வளவு மாறிவிட்டது. அந்த மாறுதலுக்கேற்ப மற்றவைகளையும் மாற்றியமைக்க வேண்டியது அவசியம்.

அர்ச்சகன் பொறுக்கித் தின்ன மதம்; அதிகாரி பொறுக்கித் தின்ன இராஜ்யமா? காந்தியார் போனதுமல்லாமல், அதன்பயனாக நாட்டில் நாசவேலைகள், கொலைகள், கொள்ளைகள் அதிகம் நடைபெற ஆரம்பித்துவிட்டன. இதைத் தடுக்க ஆட்சியாளர்கள் சரியான நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்வதாகக் காணோம்; மாறாக, இதைத் தங்கள் கட்சிக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பாதுகாப்பற்ற மக்கள் சர்க்கார் கட்சிக்கு அடிமையாகி விடுகிறார்கள். ஆகவே, கடவுள் மதம் யாருக்கும் பயன்படாவிட்டாலும் சில சோம்பேறி அர்ச்சகர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக எப்படிப் பயன்பட்டு வருகின்றனவோ அதேபோல்—இன்றைய இராஜ்யபாரமும் மக்களுக்குச் சிறிதும் பயனற்ற முறையில், அர்ச்சகர்களைப்போல்—சில அதிகாரிகள், கட்சியாளர்கள் பொறுக்கித் தின்னமட்டுமே பயன்பட்டு வருகிறது. மக்களை நல்லொழுக்கத்தில் நடத்திச் செல்லவென்பதாகச் சொல்லி ஏற்படுத்தப்பட்ட மடங்கள், எப்படி மடாதிபதிகளின் உல்லாச வாழ்க்கைக்காகவும் அவருடைய பெருமைக்காகவும், அவர்களுக்கு இன்பமூட்டுபவருக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ அதேபோல்—சர்க்கார் அமைப்பும் மந்திரிகள், அவர்கள் பிரியர்கள், அதிகாரிகள் ஆகியவர்களது பெருமைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறதே ஒழிய, மக்களை நல்ல முறையில் நடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்டு வரவில்லை. கடவுளுக்குச் செய்யப்



படும் உற்சவமும் ஊர்வலமும் எப்படி நம் நல்வாழ்வுக்குப் பயன்படாமற் போனதோடு நமக்கு மேலும் மடமையையும் தொல்லையையும் விளைவிக்கப் பயன்பட்டு வருகின்றனவோ, அதேபோல்—சர்க்காருக்கு நாம் அழுதுவரும் வரிப்பணமும் நமக்குப் பயன்படாமற் போவதோடு நமக்கு மேலும் பல தொல்லைகள் கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு தொல்லைக்கும் போகாதவனுக்குக்கூட இன்றைய இராஜ்யத்தில் தொல்லை ஏற்பட்டு விடுகிறது.

இந்து–முஸ்லிம் கலவரமென்றால், யாதொரு பாவமும் அறியாமல், பீடிபிடித்துக் கொண்டே குதிரையை அதட்டிக்கொண்டு போகும் ஜட்கா வண்டிக்காரனுக்குக்கூடவா தொல்லை வர வேண்டும்? அவன் வீடும் வாசலுமா அக்கினிக்கு இரையாவது? காந்தியார் கொல்லப்பட்டார் என்பதால் சும்மா கிடக்கிற கிழவிகள்கூடவா—அரிசி பருப்பு இல்லாமல் தெருவில் திண்டாடவேண்டும்? ஆட்சியாளர்கள் இதைக் கவனித்தார்களா? அன்னியன் செய்த வழியால் ஏதோ உங்கள் இராஜ்யத்தில் சிக்கிக்கொண்டோம் என்றால்—எங்களை இப்படியா நீங்கள் வாட்டவேண்டும்? விடுதலை கிடைத்துவிட்டதென்றால், 'மோட்சலோகமும்', 'பகவான் திருவடி நிழலும்' ஒரு முழத் தூரத்திற்கா வந்துவிட வேண்டும்? இன்றைய ஆட்சியில் யாருக்கேனும் பாதுகாப்பு உண்டா? முதன் மந்திரியாருக்கு முள்வேலியும், பட்டாளமும் பாதுகாப்பு! அவருடைய அடுத்த மந்திரியாருக்கு அவருடைய தந்திரமே பாதுகாப்பு. மற்றவர் நிலை என்ன ஆவது? மிருகங்கள் மாதிரி சண்டையிட்டுக்கொண்டு மடியவா, நாம் மக்களாய்ப் பிறந்தோம்? இவ்வளவு திக்கற்ற நிலைக்கு நாம் வந்துசேர நமது உணர்ச்சிதானே காரணம்? இது ஒழிக்கப்படவேண்டுமென்று கூறுவதற்காகவா நாங்கள் விரோதிகள் ஆகவேண்டும்?

மற்ற நாடுகளில் நாகரிகம் வலுக்க வலுக்க, நம் நாட்டில் அநாகரிகம் வலுக்கிறதே! மற்ற நாடுகளில் அறிவு பெருகப் பெருக, தொழில் பெருகவும் செல்வம் பெருகவும் திட்டம் தீட்டப்படுகிறது. நம் நாட்டில் அறியாமை அப்படியே இருக்க—விரோதமும் துவேஷமும் வளர—பணக்காரன், பணக்காரனாகவே இருக்க—ஏழை ஏழையாகவே இருக்கத் திட்டம் தீட்டப்படுகிறது! 'எல்லா மாகாண மக்களுக்கும் அதிகாரம் இருக்குமானால் ஆட்சி சரிவர நடக்காது; ஆகையால் ஒரு மாகாணத்தில்—அதுவும் ஒரு சிலருக்குத்தான் அதிகாரம் இருக்கவேண்டும்; அதுவும் 2000 மைல் தூரமுள்ள டில்லியில்' என்று தைரியமாகக் கூறப்படுகிறதே இன்று. இதுவா, சுயராஜ்யம்?

'இந்த நாட்டுத் தொழிற்சாலைகளை எல்லாம் சர்க்கார் எடுத்து நடத்தவேண்டும் என்று மக்கள் நினைப்பது தவறு; சர்க்கார் எடுத்து நடத்துமானால் நிர்வாகம் சரியாக இருக்காது; ஆகவே தனிப்பட்ட முதலாளிகளே தொழில் நடத்த அனுமதிக்கப்படுவார்கள்' என்று இன்றைய ஆட்சிபீடம் அதுவும் முதலாளி உருவாரம், தெரிவித்துவிட்டதே! சுயராஜ்யம் வேண்டும், விடுதலை வேண்டும் என்று இதற்காகவா நாமெல்லோரும் கூப்பாடு போட்டோம்? சுயராஜ்யம் வந்ததும் எங்கள் நாட்டை ஆள எங்களுக்கு உரிமைவேண்டும் என்று கேட்டால் அதுவே இராஜ துரோகமாகக் கருதப்படும் என்று தைரியமாக 'கான்ஸ்டிடியூஷனில்' கூறப்படுகிறதே இன்று! வெள்ளையன் ஆண்டபோது எதை உரிமையோடு கூறலாமோ அதைக் கூறுவதற்கு இன்று உரிமையில்லாமற்போய்விட்டதே!

விடுதலை வந்தால் பிறவி இழிவு நீங்குமென்று நினைத்தோம். ஆனால், விடுதலை கிடைத்த பிறகு, அந்தப் பிறவி இழிவு நீங்க வேண்டுமென்று பேசக்கூட நமக்கு உரிமையில்லாமற்போய்விட்டதே! அப்படிச் சொன்னதற்காகவே நான் சிறைப்படுத்தப்படப் போகிறேன். இதன் அர்த்தம் என்ன? 'இழிவு இருக்கலாம்; சூத்திரன் இருக்கலாம்; அதனால் ஏற்பட்ட தொல்லைபற்றி மட்டும் பேசக்கூடாது' என்றால் அதன் அர்த்தம் என்ன? அயல்நாடுகளிலெல்லாம், 'அடுத்த 50 ஆண்டில் நாம் எவ்வளவு முன்னேற்றமடைய வேண்டும்' என்றெல்லாம் திட்டம் தீட்டப்படுகிறது. நம் நாட்டில், 1900 ஆண்டில் நாம்



படிப்பகம்

www.padippakam.com



எப்படி இருந்தோம்? 1800, 1700, 1600 இவ்வாண்டுகளில் நாம் எப்படி இருந்தோம்? அப்போதைய நம் நிலை என்ன? அப்படி இருப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்று திட்டம் தீட்டப்படுகிறதே! அசோகர் காலத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டதே நம்மை!

அந்த அசோகனுக்கும் நமக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? அவன் காற்று, மழைக்காவது இத் திராவிட நாட்டில் ஒண்டியிருப்பானா? மற்றவர்களெல்லாம் தேசிய முன்னேற்றத் திட்டம் வகுக்க, இவர்கள் தேசியப் பின்னேற்றத் திட்டம் வகுக்கிறார்களே! இப்படிப்பட்ட பரிதாபகரமான தன்மைக்கு நாம் வந்து கொண்டிருக்கிறோம்! பாமர மக்களை வைத்துக்கொண்டு விளையாட்டுத் தன்மையில் ஆட்சிபுரிகிறார்களே; சிந்திக்க வேண்டாமா?

பண்டைய நாகரிகமென்று கூறி பாமர மக்களை ஏய்த்து, பழமைக்குக் கொண்டு செல்கிறார்களே, நம்மை.

இந்த நிலையை மாற்ற அறிவுள்ள மக்களாவது சிந்திக்க வேண்டாமா? அதற்கான முயற்சிகளை கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டேனும் செய்ய வேண்டாமா? யாருக்கும் பயன் படாதமுறையில் சில தந்திரசாலிகளால், தம் சுயநலத்திற்காக நடத்தப்பட்டு வரும் முறையில் நாம் இருப்பதா என்று சிந்தித்து இதை மாற்றியமைப்பதில், உங்கள் கவனமும், கவலையும் செல்ல வேண்டாமா? நீங்கள் எல்லோரும் ஒற்றுமையோடு இழிவு நீங்கப் பாடுபடுங்கள். ஒரு குடும்பத்தினரைப்போல் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ளுங்கள். பார்ப்பனரைப் பார்த்தேனும் ஒன்றுபடுங்கள். பிரகாசத்தை ஒழிக்க அரும்பாடுபட்ட பார்ப்பனர்கள் எல்லோரும் இன்று ஓமாந்தூராரைக் கவிழ்க்கப் பிரகாசம் பந்துலுவோடு கூடிக் குலாவ வில்லையா? இதை யாராவது தவறு என்று கூறுவார்களா? ஒரு சிறு பார்ப்பனக் குஞ்சுகூட இதைத் தவறு என்று நினைக்காதே!

அதுபோல், நீங்களும் உங்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து, திராவிடர்கள் யாவரும் பேதாபேதமற்று, பொருளாதார சமத்துவம் பெற்று, அன்னியன் சுரண்டலற்று இன்ப வாழ்வு வாழ வழி செய்துவரும் திராவிடர் கழகத்தையும் அதன் திட்டங்களையும் ஆதரியுங்கள்; அனைவரும், கறுஞ்சட்டை அணியுங்கள்.

[திருவல்லிக்கேணி கடற்கரையில், 7-3-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-3-1948]

## 12. யோக்கியமான ஆட்சி

அன்புள்ள பெரியோர்களே! தாய்மார்களே! தோழர்களே!

'நாதசுரக் குழாயாய் இருந்தால் ஊதியாக வேண்டும்; தவுலாயிருந்தால் அடிபட்டுத் தானாக வேண்டும்' என்பது போல்—எனக்குத் தொண்டை, குரல் உள்ள வரையில் பேசியாக வேண்டும்; பிரசங்கம் செய்தாக வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் இவ்வளவு பெரிய கூட்டத்தைக் காண்பதால் ஏற்பட்டுள்ள உள்பூரிப்பும் ஒரு தனியான அகம்பாவமும், என் உள்ளம் பூராவையும் கவர்ந்து நிற்கிறது. இருந்தாலும் முயற்சித்து ஏதோ சொல்கிறேன்.

சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில புரட்சிகரமான தீர்மானங்களால் சர்க்கார் சம்பந்தம் நீங்கப்பெற்று, கழகத்தில் பெரும் மாற்றமடைந்து திராவிட நாடு பிரிவினையும் இலட்சியமாக்கப்பட்டதிலிருந்து நமது செல்வாக்கு அனுதினமும் பெருகிக்கொண்டே வருகிறது. இதைக் காணும் சில பொறாமைக்காரர்களும், மேதாவிகள் என்று தம்மை நினைத்துக்கொண்டிருக்கும் சில புத்திசாலிகளும் நம்மீது ஏதேதோ குற்றங் குறை கூறி வருகிறார்கள். நம் கழகத்தைப் பின்பற்றி நடந்துவருபவர்களை, இவர்கள் பைத்தியக் காரர்கள் என்றுகூடக் கருதிவருகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் என்னைப்



பின்பற்றி நடந்துவருபவர்கள் புத்திசாலிகளாய் இருக்கவேண்டுமென்ற கவலை எனக்கு ஒரு சிறிதும் கிடையாது. தங்கள் அறிவை ஆற்றலை மறந்து, என் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய ஆட்கள்தாம் எனக்குத் தேவையே ஒழிய, அவர்கள் புத்திசாலிகளா, முட்டாள்களா, பைத்தியக்காரர்களா, கெட்டிக்காரர்களா என்பதுபற்றி எனக்குக் கவலை இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மதிப்பிற்குரிய நண்பர் மாணிக்க நாயகர் அவர்கள் கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது. அவர் ஈரோட்டில் 'எக்ஸிகியூட்டிவ் என்ஜினீயராய்' இருந்தபோது அவர் எங்கள் வீட்டில் குடியிருந்தார். மாடுகளுக்குச் சுலபமாய் இருக்கக்கூடிய பதுமாதிரியான கவலை ஒன்று செய்யத் தனக்கு இரண்டு கொல்லர்களைத் தருவித்துக்கொடுக்கும்படி சொன்னார். நான் யோசித்து இரண்டு கெட்டிக்காரக் கொல்லர்களின், அதாவது துப்பாக்கி செய்யக்கூடியவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களை அழைத்துவரும்படி என் காரியஸ்தர்களுக்குக் கூறினேன். அப்போது அவர் சொன்னார், 'Brother, கெட்டிக்காரன் என்பவர்களை அனுப்பிவைப்பாயானால், அவர்கள் இருவருக்குள்ளும்—கெட்டிக்காரத்தனப் போட்டி வேலையைக் கெடுத்துவிடும். அவர்களே எனக்கு யோசனை சொல்ல முந்துவார்கள். என் திட்டம் ஆட்டம் கொடுத்து வேலை நடவாது. ஆகவே, நான் சொல்வதைப் புரிந்துகொண்டு, அதன்படி வேலை செய்யக்கூடிய ஒரு படிமானமுள்ள—சொன்னபடி நடக்கக்கூடிய, சம்மட்டியும் சுத்தியும் பிடித்துப் பழகிய இரண்டு ஆளை அனுப்பிவைத்தால் போதுமானது. அவர்கள் முட்டாள்களாயிருந்தாலும் சரி; அவர்களைக் கொண்டு சுலபத்தில் வேலையை முடித்துக்கொள்ளலாம்' என்று கூறினார். புத்திசாலிகள் சண்டையிட்டுக் கொள்வது எப்பொழுதுமே இயற்கைதான். ஆகவேதான், நான் நீடாமங்கலம் மாநாட்டின்போதே மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறேன்: 'என்னைப் பின்பற்றுபவர்கள் தங்கள் சொந்தப் பகுத்தறிவைக்கூடக் கொஞ்சம் தியாகம் செய்யவேண்டும்' என்று. யாராவது ஒருவன்தான் 'நடத்தக்கூடியவனாக' இருக்க முடியுமே தவிர, எல்லோருமே தலைவர்களாக இருக்க முடியாது. மற்றவர்கள், தலைவர் இட்ட கட்டளைப்படி நடக்க வேண்டியவர்கள்தாம். தோழர்களே! நான் இப்போது கூறுகிறேன்; நீடாமங்கலத்தைவிட ஒரு படி மேல் சொல்லுகிறேன்—கண்மூடிப் பின்பற்றுங்கள்!

நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை உங்கள் சொந்தப் பகுத்தறிவைமட்டுமல்ல, உங்கள் மனச்சாட்சி என்பதைக்கூட நீங்கள் கொஞ்சம் மூட்டைகட்டி வைத்துவிட வேண்டியதுதான். கழகத்தில் சேருமுன்பு உங்கள் பகுத்தறிவுகொண்டு, கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம்; என்னுடன் வாதாடலாம்; உங்கள் மனச்சாட்சி என்ன கூறுகிறது என்று நீங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆற அமர இருந்து யோசித்துப் பார்க்கலாம். ஆனால், எப்போது உங்கள் மனச்சாட்சியும், பகுத்தறிவும் இடங்கொடுத்து—கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களோ அப்போதிலிருந்தே உங்கள் பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் ஒரு புறத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு, கழகக் கோட்பாடுகளைக் கண்மூடிப் பின்பற்றி நடக்க வேண்டியதுதான் முறை.

ஒரு எஜமான் வேலைக்காரனைப் பார்த்து 'அந்தப் பெட்டியைக் கொஞ்சம் எடப்பா' என்று கூறினால் 'என் மனச்சாட்சி என்னை அதற்கு அனுமதிக்கவில்லையே' என்று கூறினால்—அது முறையாகுமா? ஒரு டிஸ்டிரிக்ட் சூபரின்டென்டென்ட் 'சுடு!' என்று போலீஸ்காரனுக்கு உத்தரவுபோட, அவன், 'என் மனச்சாட்சி அதற்கு இடங்கொடுக்கவில்லையே' என்று கூறினால் அந்த சூபரின்டென்டென்ட் கதி என்ன ஆவது? கசாப்புக் கடையில் வேலைபார்க்க ஒப்புக்கொண்டவன், 'அந்த ஆட்டை வெட்டுடா' என்று எஜமான் உத்தரவிடும்போது, 'அய்யோ, என் மனச்சாட்சி மாட்டேன் என்கிறதே, நான் என்ன

படிப்பகம்

www.padippakam.com



செய்யட்டும்!' என்று கூறினால், 'ஏண்டா, மடப் பயலே முன்னாடியே உனக்கு இது தெரியாமற் போனதென்னடா? அப்போது உன் மனச்சாட்சி எங்கேயடா போயிருந்தது?' என்று கேட்பானா இல்லையா, அவன்? ஆகவே மனச்சாட்சியோ, சொந்தப் பகுத்தறிவோ, கழகக் கொள்கையை ஒப்புக்கொள்ள மறுக்குமானால் உடனே விலகிக்கொள்வதுதான் முறையே ஒழிய உள்ளிருந்துகொண்டே குதர்க்கம் பேசித்திரிவது என்பது விஷமத்தனமே ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிலருக்கு நான் ஏதோ சர்வாதிகாரம் நடத்த முற்படுகிறேன் என்று தோன்றலாம். இது ஓரளவுக்குச் சர்வாதிகாரம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தோழர்களே! சிந்திக்கவேண்டும், இந்த சர்வாதிகாரம் எதற்குப் பயன்படுகிறது என்று. என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக இலட்சியத்தின் வெற்றிக்காக, பொதுநன்மைக்காகப் பயன்படுத்துகிறேனே தவிர, எந்தச் சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ, ஒரு சிறு கடுகளவாவது சொந்த நன்மைக்காகவோ, பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன். என் சொந்த விளம்பரத்திற்காக, என் சொந்தப் பெருமைக்காக இதுபோன்ற மாநாடுகள் கூட்டப்படுகின்றன என்று சிலர் கருதுவதற்கொப்ப, இம்மேடையின்கண் பேசநேரும் தோழர்களும் என்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதிலேயே, தமது சொற்பொழிவுக்குக் கொடுக்கப்படும் நேரத்தின் பெரும்பகுதியைச் செலவுசெய்கிறார்கள். இதை நான் அறவே வெறுக்கின்றேன்; சிறிதும் விரும்பவில்லை. ஆகவே, சொற்பொழிவாளர்கள் என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசாமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மாநாட்டிற்குப்பின் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் முதன்மையாகப் பேசப்படவேண்டியது காந்தியாரின் மறைவைக் குறித்தாகும். காந்தியார் உயிரோடிருந்த வரை அவருடைய போக்கைப் பெரும் அளவுக்குக் கண்டித்துவந்த எனக்கு காந்தியார் மறைவுக்குத் துக்கப்படவோ, அவரது மறைவுக்குப்பின் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசவோ என்ன உரிமை உண்டென்று சிலர் கேட்கலாம். சிலர், காங்கிரஸ்காரரின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக்கொள்ளவே நான் இவ்விதம் சூழ்ச்சி செய்வதாகவும் கருதி இருக்கலாம். ஆனால், தோழர்களே! இவை உண்மையல்ல. காந்தியார் மறைவுக்காக எந்தக் காங்கிரஸ்காரர் துக்கப்பட்டார்? அழுதார்? வேதனைப்பட்டார்கள்? காங்கிரஸ்காரர்கள் பண்டிகை கொண்டாடினார்கள்; காங்கிரஸ் முக்கியஸ்தராக இருந்த பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கினார்கள். எனக்கு உண்மையிலேயே இப்பொழுதும் துக்கம் மேலிடுகிறது. காந்தியார் மறைவுக்கு அனுதாபப்பட, மற்றவர்களைக்காட்டிலும் அதிகத் துக்கப்பட வேறு பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, காங்கிரஸ்காரர்கள் பலரும், பார்ப்பனர்களும் கருதி இருக்கிற காந்தியார் வேறு; இறந்த காந்தியார் வேறு என்று நான் கருதுகிறேன். 'இருந்த காந்தியார் ஆரியர் காந்தியார்; ஆரியரால் உண்டாக்கப்பட்ட காந்தியார்; நம் எதிரிகளின் காந்தியார். ஆனால் 'இறந்த காந்தியார்' நம் காந்தியார்; ஆரியம் அழிந்துவிடுமே எனப் பயந்து ஆரியரால் கொல்லப்பட்ட கொலையுண்ட காந்தியார். அதனால்தான், நாம் மற்றவர்களுக்கும் மேலாகத் துக்கப்படுகிறோம். அதனால்தான் மற்றவர்களைவிட நமக்குத்தான் அவர் மறைவுக்காகத் துக்கப்படவும் உரிமை உண்டு என்றும் கூறிக்கொள்கிறோம். ஒருவர் தம் மறைவு காலத்தில் எந்த நிலையில் இருக்கிறாரோ அதைப் பொறுத்துத்தான் அவருடைய மறைவுக்குத் துக்கப்படுபவர்களும், சந்தோஷப்படுபவர்களும் அமைவார்கள். உதாரணமாக நான், 'காங்கிரஸ் இராமசாமி' யாக ஒரு காலத்திலும், 'சுயமரியாதை இராமசாமியாக' ஒரு காலத்திலும், 'திராவிடர் கழக இராமசாமியாக' தற்காலத்திலும் இருந்துவருகிறேன். காங்கிரஸ் இராமசாமியாக இருந்த காலத்தில் இறந்திருந்தால் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் உள்பட, 'இந்து' ஆசிரியர் உள்பட பல காங்கிரஸ்காரர்களும், அய்யர், அய்யங்காரர்களும் துக்கம் கொண்டாடியிருப்பார்கள். ஒரு சில சுயமரியாதைக்காரப் பார்ப்பனர் தவிர்த்த மற்ற பார்ப்பனர்கள், வைதீகர்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டபடி இருப்பார்கள். ஆனால், இன்று மறைய நேர்ந்தாலோ திராவிடர்கள் அனைவரும் துக்கம் கொண்டாடலாம் என்று கருதுகிறேன்.



இதேபோல், காந்தியாரும் தம் மறைவின்போது திராவிடர் கழகக் கொள்கைகளை ஒப்புக்கொண்ட காந்தியாராகத்தான் இறந்தாரே ஒழிய, ஆரியதர்மத்தை ஒப்புக்கொண்ட காந்தியாராக மறையவில்லை. இந்து மத தர்ம அநீதியைக் கண்டிக்கப் புகுந்ததால், அதற்கான பயனை அடைந்தார். 'சூத்திரன் தலையெடுத்தால் பார்ப்பானுக்கு ஆபத்து' என்ற மனுதர்ம விதிப்படி, அவர் பார்ப்பனனால் கொல்லப்பட்டார். இராமாயணக் கதையில் சம்புகன் அடைந்த கதியை அவர் அடைந்தார். சம்புகன் கொல்லப்பட்டதற்கு ஆரியப் பார்ப்பனர்கள் அகமகிழ்ந்ததாக—இறந்த பார்ப்பனர்களெல்லாம் உயிர்த்தெழுந்ததாகக் கதையில் காணப்படுகிறது. காந்தியார் கொல்லப்பட்டமைக்குப் பார்ப்பனர்கள் மிட்டாய் வழங்கியதை நாம் நேராகப் பார்த்தோம். காந்தியார் மறைவுக்குப் பார்ப்பனர்களே காரணம் என்று வடநாட்டில் பார்ப்பனர்களின் வீடுகள் சூறையாடப்பட்டதையும், பார்ப்பனத் தாய்மார்கள் அவமானப் படுத்தப்பட்டதையும், பார்ப்பனர்கள் தங்க இடம் இன்றி ஓடித் தவித்ததையும் நாம் பத்திரிக்கையில் பார்த்தோம். அதற்கு நஷ்டஈடாக பம்பாய் மாகாண சர்க்கார் ஒவ்வொரு பார்ப்பனனுக்கும் ரூ. 2000 இனாமாகவும் ரூ. 25,000/- வரை ரொக்கக் கடனும் கொடுத்துதவியதாகவும் நாம் பத்திரிக்கையில் பார்க்கிறோம். இங்கு பார்ப்பனர்களுக்கு அத்தகைய கேடு நேரவில்லை. இதற்கு நம் கழகம்தான் காரணமேயொழிய காந்தியார் மறைவுக்குத் துக்கப்படுபவர் இந்நாட்டில் இல்லாமல் போனதால் அல்ல.

இதை அறியாத பார்ப்பனர்கள் ஆணவத்தோடு அந்தணர் மாநாட்டைக் கூட்டி நமக்குச் சவால் விடுகிறார்கள். இந்தப் பார்ப்பனர்களை இன்றுமட்டுமல்ல, என்றுமே காப்பாற்றி வருபவர்கள் நாம்தாம். இந் நாட்டிலிருந்து பார்ப்பனர்களை அறவே ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த (ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியில்) ஒரு காலத்தில் பார்ப்பனர்கள் தெருவில் வரக்கூடிய யோக்கியதையற்றுக் கிடந்தார்கள். அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியை இருந்த இடம் தெரியாமல் ஒழிக்க நான் தேசியத்திற்கு முதல் அடிமையானேன். தோழர் பி. வரதராஜுலு நாயுடு அடுத்த அடிமையானார். தோழர் கலியாணசுந்தர முதலியார் மூன்றாவது அடிமையானார். இராஜகோபாலாச்சாரியார், எஸ். சீனுவாசய்யங்கார், ரெங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர்களுக்கு மேடையில் இடம் வாங்கிக் கொடுத்தவர்களும், அவர்களுக்குத் தமிழ் பேசக் கற்றுக்கொடுத்தவர்களும் நாங்கள்தாம்.

அக் காலத்தில் தோழர் இராஜகோபாலாச்சாரியார் 'வீடு பிரித்துப்போட்டுக் கிடக்கு' என்று கூறுவார். சத்தியமூர்த்தி அய்யருக்கு—நேக்கு, நோக்கு, அம்மாஞ்சி, அம்மாமி, அவா இவா—இவை தவிர வேறு தமிழ் வார்த்தைகள் பேசத் தெரியாது. ரெங்கசாமி அய்யங்கார், டாக்டர் இராஜன், 'சுதேசமித்திரன்' ஆசிரியர்கள் ஒரு சிலர் தவிர்த்து அந்தக் காலத்தில் பார்ப்பனர்களில் தமிழ் பேச ஆள் கிடையாது. கூட்டத்தில் பார்ப்பனர்களுக்குப் பேச உரிமை வாங்கிக் கொடுத்தவர்களும் அவர்களுக்குத் தியாகம் செய்ய (ஜெயிலுக்குப்போக)க் கற்றுக்கொடுத்தவர்களும் நாங்கள்தாம். இராஜகோபாலாச்சாரியாரை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள், இது உண்மையா, அல்லவா என்று! அவர் நாளை கவர்னர் ஜெனரலாகப் போகிறார்; என்னையும் காண்பார்; கண்டால் வெட்கப்படப்போகிறார். கட்டியழப் போகிறார். 'நான் இப்படியானேன்; நீ அப்படியே இருக்கிறாயே' என்று கேட்பார். நாங்கள் இல்லாதிருந்தால் இந்த நாட்டில் இராஜகோபாலாச்சாரி ஏது? கவர்னர் ஜெனரல் பதவிதான் ஏது? சர்வம் பார்ப்பனீய சுயராஜ்யம் ஏது? பெற்ற பதவியில் நான் பங்கு கேட்கவில்லை.

உங்களுக்குச் சுயராஜ்யம் வந்துவிட்டது; பதவி வகிக்கிறீர்கள் என்றால் எங்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்லக்கூடவா எங்களுக்கு உரிமை இருக்கக்கூடாது? சுய

படிப்பகம்

www.padippakam.com



ராஜ்யம் வந்துவிட்டதென்றால் சுயராஜ்யத்தில் பதவி வகிக்க நேர்ந்த சுயராஜ்யப் புலிகள் மற்றவர்களை ஆடுகளைப்போல் கொன்று அழித்துத்தான் தீரவேண்டுமா? கொள்ளைக் காரர்களும் வஞ்சகர்களும், காலிகளும் எப்போதும்போல் சாதுக்களை, யோக்கியர்களை ஏழைகளை வஞ்சிக்கத்தான், கொள்ளை அடித்துத்தான் வாழ்ந்துவர வேண்டுமா? சுய ராஜ்ய சர்க்கார் இதைத் தடைசெய்ய வேண்டாமா? சுயராஜ்ய சர்க்காரில் ஏழைகள்தாம் அதிக வரி செலுத்தவேண்டுமா? சுயராஜ்யம் வந்து ஏழைகள் பட்டினி கிடக்கவேண்டுமா? சுயராஜ்யம் வந்தவிட்டதென்றால் ஒரு ஊரில் அரிசி ரூபாய்க்கு $\frac{3}{4}$ படியும், ஒரு ஊரில் அரிசி ரூபாய்க்கு $2\frac{1}{4}$ படியுமா விற்பது? உண்மையாகக் கூறுகிறேன், தோழர்களே உங்களுக்கும் கேட்க அதிசயமாயிருக்கும்.

நமது மாநாட்டிற்குத் தேவையான அரிசியை விலை சரசமாயுள்ள (அதாவது ரூபாய்க்கு $2\frac{1}{4}$ படி விலையுள்ள) தஞ்சை ஜில்லாவிலே வாங்கிக்கொள்ள அனுமதி தரவேண்டுமென்று மந்திரியாருக்கு விண்ணப்பித்துக் கொண்டோம். அதற்கு மந்திரியார் பதில் எழுதியிருக்கிறார்: இந்த மாகாணத்தில் இந்த ஒரு ஜில்லாவில்தான் நெல் அதிகமாக விளைந்து விட்டது. ஆகவே, அந்த அரிசியை வாங்கிக்கொள்ள உங்களுக்கு அனுமதி கொடுக்க மாட்டோம்; வேறு எந்த ஜில்லாவில் வேண்டுமானாலும் 50 மூட்டை வரைக்கும் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று எழுதியிருக்கிறார். அதிகமாக விளைந்துள்ள ஊரில் நெல்லும் அரிசியும் மக்கிப் புழுக்கவேண்டுமாம்! பற்றாக்குறை ஜில்லாவில் மேலும் அரிசி வாங்கி, மேலும் அந்த ஊரில் பஞ்சத்தை அதிகமாக்க வேண்டுமா? சுயராஜ்ய சர்க்காரின் புத்தி சாலித்தனத்திற்கு இதை விடச் சான்று ஒன்று வேண்டுமா? எவ்வளவு கவலையற்ற முறையில், அறிவற்ற முறையில் சுயராஜ்ய ஆட்சி நடப்பது? சுயராஜ்ய ஆட்சியில் 'கள்ள மார்க்கெட்' கொள்ளைக்கும், இலஞ்சத்திற்கும் ஒரு அளவே காணோம்! பணத்திற்கு மிஞ்சிய மோகினியைக் காண முடியவில்லையே? எதையும் பணம் கொடுத்துச் சாதித்துக் கொள்ள முடிகிறதே! மந்திரிகளே பணக்காரன் காலடியில் வீழ்ந்துகிடக்கிறார்களே! பணக்கார முதலாளிகளுக்குச் சாதகமாக, தொழிலாளிகளுக்குக் கூடுமான அளவுக்குத் தொல்லை கொடுக்கிறார்களே! இந்தக் குறைபாடுகளை எடுத்துக் கூறுவதுகூட குற்றமாகக் கருதப்படுமானால், ஆட்சி என்று ஒன்று இருக்கவேண்டுமா? நேற்று முளைத்த காளான்கள் தானே நீங்கள்? அதன் தன்மையை நீங்கள் அறியாமற் போனதேனோ? காளான்கள் வெயிலில் கருகிப்போகும்; மழை பெய்தால் துளிர்க்கும். அதுபோல், இந்த சுயராஜ்ய காலம் உங்களுக்கு மழைக்காலமாயிருக்கிறது; நீங்கள் துள்ளிக் குதிக்கிறீர்கள். நாளை மக்கள் அறிவு பெற்றெழுவார்களானால் (வெயிற்காலம் வருமானால்) நீங்கள் காளான்களைப்போல் கருகவேண்டியவர்கள்தாமே? இதைச் சிந்திக்க வேண்டாமா, நீங்கள்? ஒரு காமராசரோ, ஒரு வைத்தியநாதய்யரோ, ஒரு டாக்டர் இராஜனோ எங்களைவிட எப்படி எந்தக் காரியத்தில் தகுதி பெற்றவர்கள்?

நாங்கள் நம்பிக்கைக் குறைவாக நடந்து கொண்டதாக ஒரு உதாரணமாவது உங்களால் காட்டமுடியுமா? உங்களிடம் பண்டிதர்களும், பி. ஏ.க்களும், எம். ஏ.க்களும் இருக்கிறார்கள் என்று வேண்டுமானால் பெருமையடித்துக் கொள்ளலாம். என்றாலும், நேற்றுப் பள்ளியைவிட்டு வந்து எங்கள் கழகத்தில் சேர்ந்து ஒரு 10 நாளைக்குக் கறுப்புச் சட்டை போட்டுக்கொண்டிருந்த மாணவர்களுள் ஒருவனுக்குப் பதில் சொல்லமுடியவில்லையே உங்களால்! அவன் கூறுவானே பதில்—நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும்! உங்கள் பெரிய பெரிய தலைவர்கள் பேச வந்தால்கூட ஒரு 2, 3, ஆயிரம் பேரைக் கூட்ட முடியவில்லையே! எங்கள் கழக மாணவன் ஒருவன் பேசுவதாயினும்கூட ஆயிரக்கணக்கில் கூட்டம் சேர்ந்துவிடுகிறதே! ஒரு கறுப்புச் சட்டைக்காரனைத் தொலைவில் பார்த்தால்கூட உங்கள் தலைவர்கள் கூட்டத்தை முடித்துக்கொண்டு ஓடி விடுகிறார்களே! இதன் அர்த்தம் என்ன?



வரப்போகிற அரசியல் சட்டம் எப்படி இருக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்லக் கூடவா எங்களுக்கு உரிமை இருக்கக்கூடாது? எங்கள் உரிமையை எத்தனை நாள் மறுத்து வரமுடியும்? வெடிகுண்டை மூடிவைத்தால் அது எத்தனை நாளைக்கு வெடிக்காமல் இருக்கும்? நீங்கள் மூடிவைக்க மூடிவைக்க எங்களுக்கு எங்கிருந்தோ ஆதரவு வந்து கொண்டிருக்கிறதே! மராத்தி தேசத்திலிருந்து ஆதரவு வருகிறது; ஹைதராபாத்திலிருந்து ஆதரவு வருகிறது; இன்னும் எங்கெங்கிருந்தெல்லாமோ ஆதரவு வந்துகொண்டிருக்கிறதே! திராவிட நாட்டுப் பிரிவினைக்குத் தம் கழுத்தைக் கொடுக்க மக்கள் வரக் காத்திருக்கிறார்களே! இப்படி இருக்க, மக்கள் ஆதரவில்லையென்று எத்தனை நாளைக்கு எங்கள் கோரிக்கையைத் தட்டிக்கழித்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள்.

[தூத்துக்குடியில் 8, 9-5-1948-ல் நடந்த மாகாண மாநாட்டில் தலைமையுரை—'விடுதலை' 18–5–1948]

## 13. இது சுதந்திர நாடா?

தோழர்களே!

சுதந்திரம் பெற்றுள்ள எந்த நாட்டிலாவது—இன்று பார்ப்பான், பறையன் இருக்க நீங்கள் பார்க்கிறீர்களா? வரலாற்று ஏடுகளிலாவது கண்டிருக்கிறீர்களா? மேல்சாதி முறையும், கீழ்சாதி முறையும், மடையர்களும், முட்டாள்களும், மான ஈனமற்ற மக்களும், காட்டுமிராண்டிக் கால மக்களும், மிருகப் பிராய மக்களும் வாழும் நாடுகளிலன்றோ இவை இருக்கக் கடமைப்பட்டவை! அப்படி இருக்க, இந்த சுயராஜ்ய பூமியில், இந்தப் புண்ணிய பூமியில், இந்த ஞானபூமியில், பாரதமாதாவின் கை விலங்கும் கால் விலங்கும் அறுக்கப்பட்டு அவள் ஆனந்தக் கூத்தாடும் இந்தக் காலத்தில் என்னத்துக்காகப் பறையன் இன்னும் இருக்கின்றான்? என்னத்துக்காகப் பார்ப்பான் இருக்கின்றான்?

வெள்ளையன் ஒழிந்ததுபோல் வடநாட்டானும் ஒழியவேண்டாமா, இந்நாட்டைவிட்டு? இந் நாட்டிற்குச் சுதந்திரம் வந்துள்ளது உண்மையாயின் எதற்காக ஒரு 'இமயமலைப் பார்ப்பான்'—ஒரு வடநாட்டவன் எங்கள் நாட்டிற்குப் பிரதம மந்திரியாயிருக்க வேண்டும்? எதற்காக வடநாட்டவர்கள் இங்கிருந்து நம்மைச் சுரண்டிவர வேண்டும்? கேட்பாரில்லையே இத் தமிழ் நாட்டில்! எதற்காக 23 ஜில்லாக்களையும் 1500 மைல் சமுத்திரக் கரையையும், ஏராளமான நன்செய், புன்செய்களையும் ஆறுகளையும், ஏரி குளங்கள் வாய்க்கால்களையும், எண்ணிறந்த சுரங்கங்களையும் கொண்ட நம் நாடு—அன்னிய, வடநாட்டவனுக்கு ஆட்பட்டிருக்க வேண்டும்? எதற்காக இந் நாட்டை வடநாட்டவன் ஆதிக்கத்திற்கு ஒப்படைத்துவிட்டு, இந் நாட்டவர்கள் அவர்களின் சிப்பந்திகளாக, ஏவலாட்களாகப் பணியாற்றிவர வேண்டும்? வேறு சுதந்திரம் பெற்ற நாடுகளைப் பார்த்தாயினும் உங்களுக்குப் புத்தி வரக்கூடாதா?

பர்மாவைப் பாருங்கள்! பர்மா நம் நாட்டைவிட எவ்வளவு சிறிய நாடு! அதற்குள்ள வசதிகள் நமக்குள்ள வசதிகளைவிட எவ்வளவு குறைந்தவை; அங்குள்ள மக்களின் அறிவு வசதிகூட, நம் மக்களின் அறிவு வசதியைவிட எவ்வளவோ குறைந்ததாயிற்றே! அப்படியிருந்தும், அவர்கள் இன்று சுதந்திரமாக வாழவில்லையா? சுதந்திரம் வந்ததும் 'பர்மாக்காரன் அல்லாத மற்ற நாட்டவனுக்கு இங்கென்ன வேலை?' என்று அவர்கள் கேட்க ஆரம்பித்துவிடவில்லையா? பர்மாவில் ஏராளமான சொத்துக்கள், நிலபுலன்கள் வைத்திருந்த எத்தனையோ பணக்காரர்களின் தலைகளெல்லாம் பனங்காய்களைப் போல் உருளவில்லையா? 'தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று சிலர் ஓடிவந்துவிடவில்லையா? இன்று 1000 ரூபாய் மாதச் சம்பளத்திற்குக்கூட ஆள் கிடைக்காமல் நம் செட்டிப் பிள்ளைகள் திண்றவில்லையா? அந்நாட்டில் சுமார் 2 கோடி பெறுமான சொத்துள்ள இராஜா முத்தையா செட்டியார்—இன்று ஏஜெண்டாக அனுப்பிவைக்க ஆளில்லாமல் திணறுகிறாராமே: தலைகொடுக்கத் தயாராயிருந்தாலொழிய, அந்நாட்டிற்குச்

படிப்பகம்

www.padippakam.com



செல்லமுடியாது என்கின்ற நிலை இன்று ஏற்பட்டுவிடவில்லையா? 'பர்மா நாட்டுப்பூமி இன்று ஏன் வேறு நாட்டவனுக்குச் சொந்தமாயிருக்க வேண்டும்? உடனே பறிமுதல் செய்ய வேண்டும்' என்று பர்மா சர்க்கார் தீர்மானம் கொண்டு வரவில்லையா? சுதந்திரம் பெற்ற நாடுகளிலெல்லாம் அந்நாட்டு மக்களைத் தவிர்த்த அன்னியர்கள் துரத்தப்பட்டு வரும்போது—சுதந்திரம் பெற்றதாகக் கருதப்பட்டுவரும் திராவிட நாட்டில் மட்டும் அன்னிய ஆரியர்கள் கோலாகலமாகக் கும்மாளம் அடித்துவரவும், மேலும் மேலும் வடநாட்டவர்கள் குடியேறிக்கொண்டே வரவும் அனுமதிக்கப்பட்டு வருவானேன்?

சுயராஜ்யம் வந்தாலும் வந்தது—இந்நாட்டில், இதுவரை இல்லாதவர்களெல்லாம் வந்து புதிது புதிதாகக் குடியேறுகிறார்களே! மவுண்ட் ரோடிலுள்ள பெரிய பெரிய கட்டடங்களெல்லாம் வடநாட்டவர்களுடையதாக ஆகிவருகின்றனவே! வியாபாரம், கைத்தொழில் இவைகள்—யார் கையில்? இந்நாட்டு வியாபாரமும் கைத்தொழிலும் பெரும்பாலும் வடநாட்டவர்களின் கையில்தானே இன்று இருந்துவருகின்றன?

இன்னுங்கூட ஒன்று சொல்லலாம். அது வெட்கப்படத்தக்கதுதான் என்றாலும், உண்மையை மறைப்பானேன்? சில ஊர்களிலெல்லாம் விபசாரித்தனம் வடநாட்டவர் கைக்குச் சென்றுவிட்டதாமே! ஒரு முக்கிய நகரத்தில் மாலைக் கடைத்தெரு வழியே நான் போய்க்கொண்டிருந்தபோது வடநாட்டுடையணிந்த பெண்கள் கூட்டங் கூட்டமாக வரக் கண்டு—'இவர்கள் யார்?' என்று பக்கத்திலிருந்த அவ்வூர்த் தோழரைக் கேட்டேன். அவர், 'இவர்கள் வடநாட்டிலிருந்து வந்த அகதிகள்; இவர்கள்தான் இப்போது இவ்வூர் விபச்சாரத் தொழிலை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்' என்று தெரிவித்தார். கடைத்தெருவுக்கு வந்திருந்த அத்தனை பேர்களும் விபச்சாரிகளாக இருக்கமாட்டார்கள் என்பது உண்மை என்றாலும், இதற்காகவே அகதிகளாக வடநாட்டவர்கள் இந்நாட்டிற்கு வருவதென்றால் இது கேவலம் அல்லவா; வருந்தத்தக்கது அல்லவா?

இந் நாட்டுக் காப்பிக் கடைகளெல்லாம் சேட்டுகளுடையவை. இந் நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் பெரும்பாலும் வடநாட்டவருடையவை. ஒரு கோயங்காவுக்கு மட்டும் இந்நாட்டில் 50 இலட்சம், 60 இலட்சம் ரூபாய் சொத்து; இரும்பு வேண்டுமானால் அவருக்குத்தான் கிடைக்கும்; 'நியூஸ் பிரிண்ட்' வேண்டுமானால் அவருக்குத்தான் கிடைக்கும் என்கின்ற நிலை; பத்திரிகைக்காரர்களின் பிரதிநிதியாக அவர் அமெரிக்கா சென்று அவ்விடத்து வியாபாரிகளிடம் 'கான்ட்ராக்ட்' பேசிக்கொண்டு வந்துவிட்டார். அவரது தேவைக்கு மேற்பட்ட பேப்பரை எல்லாம் பவுண்டு ஒன்றுக்கு இரண்டணா இலாபம்வைத்து விற்று வேண்டுமானாலும் சம்பாதிக்கட்டும். சம்பாதிக்கும் பணத்தை இந் நாட்டிலாவது விட்டுவைக்க வேண்டாமா? கோயங்கா சம்பாதிக்கும் பணம் இந்த நாட்டில் இருக்க இயலுமா? வடநாட்டிற்கன்றோ ஆண்டுதோறும் ஏற்றுமதியாகிவிடும்! இந்த நாட்டில் என்ன, செல்வவான்கள் இல்லையா, இந்தத் தொழிலை நடத்த! பர்மிட் கிடைத்தால்தானே, இந் நாட்டவர்களுக்கு?

பரம்பரை யோக்கியர்கள் மாதிரி—இந்த நாட்டுப் பார்ப்பனர்களும் காங்கிரஸ் காரர்களும்—வெள்ளையனை அயோக்கியன் என்று தூற்றினர். அவர்கள் அயோக்கியர்களா யிருந்தாலும் 'கான்ட்ராக்ட்' கொடுப்பதாயிருந்தாலும், பர்மிட்டோ, லைசென்சோ கொடுப்பதாயிருந்தாலும்—சட்டம் செய்யும் போது, அதில், எப்போதும் பரம்பரையாகத் தொழில் நடத்தி உரிமை பெற்றவர்களுக்குத்தான் பர்மிட் வழங்கப்படும் என்று ஒரு வரியும் சேர்த்து எழுதி விடுவான். அதனால், அவன் காலத்தில் கூடுமான அளவுக்குப் பரம்பரை வியாபாரிகளுக்குத்தான் புது லைசென்ஸ் கிடைத்து வந்தது. ஆனால், சுயராஜ்ய சர்க்காரிலோ, சர்க்காரில் செல்வாக்குள்ள எவனுக்கும்—சர்க்கார் உத்தியோகஸ்தர்களை வசப்படுத்தக்கூடிய சாமார்த்தியமுடைய எவனுக்கும்—லைசென்சும் பர்மிட்டும் வழங்கப்பட்டு வருகின்றன.



புதிதாக வழங்கப்படும் நூல் லைசென்சுகளில் 100-க்கு 25 விகிதமாவது காங்கிரஸ் காரர்களுக்கு ஒதுக்கித் தரப்படவேண்டும் என்று சுற்றறிக்கை விடப்பட்டுள்ளதாம். 'ஜவுளி லைசென்சு'கள் அந்த வட்டார சட்டசபை மெம்பர்களின் சிபாரிசுகளின் பேரிலேயே கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறதாம். உணவு நிலையை எடுத்துக் கொண்டாலோ, வெள்ளையன் காலத்தில் நமக்குக் கிடைத்தது 16 அவுன்ஸ், 12 அவுன்ஸ்; சுயராஜ்ய காலத்தில் கிடைப்பது 6 அவுன்ஸ். ஏனய்யா குறைந்து விட்டது? பூமியைத் தண்ணீர் கொண்டு போய் விட்டதா? அல்லது, ஜனத் தொகையாவது ஒன்றிரண்டு ஆகப் பெருகிவிட்டதா? என்றால், 'அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது—இத்தனை ஜனங்கள் இருக்கிறார்கள். இவ்வளவு தானியம் விளைகின்றது; எனவே இவ்வளவுதான் ஆளொன்றுக்குக் கொடுக்க முடியும்' என்கிறார்கள்.

உண்மையிலேயே இந்த அரசாங்கத்திற்கு மக்களைப் பற்றிய கவலை இருக்குமானால், இப்படி வாளாயிருக்குமா? எப்படி இந்தக் குறையைச் சரிக் கட்டுவது என்று யோசித்து ஏதாவது முடிவு செய்திருக்காதா? இக் குறைவு ஏற்பட நேர்ந்ததன் காரணம் கூட நாம் சொல்கிற வரையில், இந்த சர்க்காருக்குத் தெரியாமல் போய் விட்டதே! உணவு தானியங்களுக்கு சர்க்காரால் தீர்மானிக்கப்பட்ட விலை மிகக் குறைவாக இருந்ததால், குடியானவர்கள் நெல், கேழ்வரகு, போன்ற தானியங்களை விளைவிப்பதை விட்டு விட்டு, கரும்பும் புகையிலையும் கடலையும் உற்பத்தி செய்யத் துவங்கி விட்டார்கள். ஆகவே, நெல் சாகுபடி வெகுவாகக் குறைந்து விட்டது என்று நாங்கள்தான் காரணம் காட்டினோம். நெல்லுக்குப் பஞ்சம் ஏற்படவே ஆங்காங்குள்ள காங்கிரஸ்காரர்கள் 4000 மூட்டை, 5000 மூட்டை சேமித்து வைத்துக்கொண்டு கள்ள மார்க்கெட்டில் விற்று, ஏராளமான பொருள் சேர்த்துக்கொண்டனர். அப்படிப் பட்டவர்கள் மீது புகார் கிடைத்து, அவர்களை ரேஷன் உத்தியோகஸ்தர்கள் கையுங் களவுமாய்ப் பிடித்தாலும், அந்த உத்தியோகஸ்தர்களுக்குத்தான் ஊர் மாற்றம் கிடைக்குமே தவிர—கள்ள மார்க்கெட்கார காங்கிரஸ் பேர்வழி தண்டனைக்குள்ளாக்கப் படமாட்டார்.

இவ்வளவு நாதியற்ற முறையில் ஆட்சி நடை பெற்று வருகிறது. முன்பு நீதிக் கட்சியார் ஆட்சி செய்தபோது எங்காவது ஓரிருவர் நாமினேஷன் செய்யப்பட்டால், 'ஜனநாயகம் சாகடிக்கப்படுகிறது; கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள தம் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்' என்றெல்லாம் காங்கிரஸ்காரர்கள் கூச்சல் போட்டார்கள். இன்றோ ஆங்காங்குள்ள சட்டசபை மெம்பர்களே 'ஜில்லா போர்டு' மெம்பர்களாக வேலை பார்க்கலாம் என்று கூற முன்வந்து விட்டனர். இப்படியெல்லாம் படுமோசம், பித்தலாட்டம் செய்துவரும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, பார்ப்பன–பனியா–ஆரிய ஆட்சி, நமக்கு நன்மை செய்யாது என்பதால்தான், திராவிட மக்கள் யாவரும் இன உணர்ச்சி பெற்றுறெழுந்து எப்படியும் காங்கிரஸ் ஆட்சி ஒழிய, வடநாட்டான் ஆட்சி ஒழியப் பாடுபட வேண்டுமென்று நாம் கூறி வருகிறோம்.

நம் மக்களைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாத ஒரு ஆட்சியிலிருந்து நாம் பிரிந்து கொள்ள வேண்டுமானால் அது எப்படிப் பாவமாகிவிடும்? 'இந்தியாவைத் துண்டு போடலாமா?' என்றால்—'நாம் இந்தியாவுடன் இணைந்திருந்து, பட்டினியால் வாடிச் சாகலாமா?' என்றுதான் திருப்பிக் கேட்க வேண்டியிருக்கிறது. நமக்குப் போதிய அளவுக்குச் சோறுபோட வக்கில்லாத மந்திரிகள்—பொழுது விடிந்தால், பொழுது முடிந்தால் நம்முடைய முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் முறைகளிலேயே பேசித் திரிகிறார்களே, ஏன்?

[சென்னை அயன்புரத்தில், 16–10–1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19–10–1948]



படிப்பகம்

www.padippakam.com



# 14. திராவிடரே ஒன்றுபடுவீர்!

பெரியோர்களே! தோழர்களே!

காங்கிரஸ் மிகவும் கெட்டுப்போய்விட்ட காரணத்தால்தான் திரு. வி. க. அவர்கள் தமக்கு எவ்வளவுதான் அதன்மீது பற்றுதல் இருந்தபோதிலும்—தாம் கண்ணீர்விட்டு வளர்த்த காங்கிரஸ் என்று பெருமையோடு கூறிக்கொண்டிருந்த போதிலும்—இன்னமும் கதரே கட்டிக்கொண்டிருக்கின்ற போதிலும் அந்தப் 'பாசிச'க் காங்கிரசை ஒழிப்பதே தமது பணியென்று கொண்டு, இன்று நம்மிடையில் இருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத் தலைவர் டாக்டர். அம்பேத்கார், 'காங்கிரஸ் எரிந்து கொண்டிருக்கும் வீடுபோன்றது' என்றும், 'விரைவில் சாம்பலாகி அழிந்துபோகக் கூடியது' என்றும் குறிப்பிட்டுவிட்டுத் தம் தோழர்களை—'அதில் சேரவேண்டாம்' என்று கேட்டுக்கொண்டுள்ளார். அவர் முன்னைய அம்பேத்காராயிருந்து சொல்லியிருந்தாலும், அவர் வேண்டுமென்றே சொன்னதாக நாம் தள்ளிவிடலாம். ஆனால், காங்கிரஸ் தயவால் பதவியேற்று அதை வகித்துவரும் காலத்தில்தான் அவர் இம் மாதிரி சொல்லியிருக்கிறார். எனவே, நாட்டு மக்களின் நன்மையைக் கருதி, காங்கிரசின் பிற்போக்கையும் கொடுங் கோன்மையையும் எதிர்த்து நின்று பணியாற்றிவர நமது கழகம் ஒன்றுதான் கழகமாக இருந்து பணியாற்றி வருகிறது. இதை யான் சுயநலத்திற்காகவோ தற்பெருமைக் காகவோ சொல்லவில்லை என்பது, யோசித்துப் பார்க்கும் எவருக்கும் நன்கு தெரியவரும்.

நாங்கள் பதவிக்கு வரவேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தால் காங்கிரசிலிருந்து கொண்டே சுலபத்தில் பதவி பெற்றிருக்கலாம். பெற்றிருக்கமுடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நமது மாகாண பிரதமரை நான் சந்திக்க நேர்ந்தபோது அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'நீங்களெல்லாம் எங்களை இப்படிப் பரிதவிக்கவிட்டுப் போய் விட்டீர்களே!' என்றுதான் சொன்னார். 'போகாமல் என்ன செய்வது?' என்று திருப்பிச் சொன்னேன். 'நீங்கள் காங்கிரசில் இருந்திருந்தால் நீங்களல்லவோ இந்த ஸ்தானத்தில் இருந்திருக்கவேண்டியிருக்கும்' என்றார். 'இருக்கலாம்; ஆனால், இப்போது மக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்குமா? இப்போது கேட்பதுபோல் 'திராவிட நாடு' பிரிவினை கேட்க வாய்ப்பிருந்திருக்க முடியுமா, அப்போது!' என்றேன். 'இதில் இருந்துகொண்டேகூட அதைச் செய்திருக்கலாமே!' என்றார். 'நீங்கள் நினைக்கிறீர்களா அப்படி? அது ஒருபோதும் முடியாத காரியம். நீங்கள் மனத்தால் திராவிடர்க்குச் சாதக மாக ஏதேனும் செய்யவேண்டும் என்று நினைக்கும்போதே உங்களைக் கவிழ்க்கப் பார்த்துவிட்டார்களே! அப்புறம் நான் நினைக்கிறபடி செய்வதாயிருந்தால் என்ன ஆகி யிருக்கும்? நீங்களே யோசித்துப் பாருங்கள்' என்றேன். ஓமாந்தூரார் சுலபத்தில் ஏமாறக் கூடியவர் அல்லர்; பதவிப் பித்துப் பிடித்தவரல்லர் என்றாலும், குறிப்பிட்ட இலட்சியத்தை முன்வைத்துக்கொண்டு அதற்காக எதையும் தியாகம் செய்யக்கூடியவர் அல்லர் அவர்.

இம் மாநாட்டில் கறுப்புச்சட்டை போடாதவர்களும் கலந்து கொள்கிறார்களே என்று சிலர் கவலைப்பட்டு எனக்குப் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். 'நான் நபர்களுக்குத் தகுந்தாற்போல் நடக்கிறேன்' என்று குறைகூறப்படுகின்றது. திரு. வி. க. அவர்கள் எனக்காக வேண்டி 22 வருடகாலமாக காங்கிரசுக்கு வெளியே இருந்துகொண்டு வருகிறார் என்பது உங்களுக்குத் தெரியவேண்டும். அவர் கூறியதுபோல், சர். சண்முகம் அவர்கள் முன்னிலையில்—'இனி இருவரும் கலந்துபேசி முடிவுசெய்து கொள்ளாமல் காங்கிரசில் சேருவதில்லை' என்று நாங்கள் ஒப்பந்தம் செய்துகொண்ட தினத்திலிருந்து இன்றுவரை—அதன்படியேதான் நடந்துவந்திருக்கிறார். 20 ஆண்டுகளுக்கு முன் கோவை ஜஸ்டிஸ் மாநாட்டின்போது காங்கிரசில் சேரவேண்டிய நிர்ப்பந்தம் வந்ததென்றாலும் நான் சேர ஒப்புக்கொள்ளவில்லை. சேரவேண்டும் என்று விரும்பியவர்களுக்கு மட்டும் அனுமதி அளித்தேன். அப்போது திரு. வி. க. அவர்கள், 'காங்கிரசில் சேருவது நலம்' என்றார்.



என்றாலும் நான் சேரவில்லை; சிலர் சேர்ந்தார்கள்; பிறகு விட்டுவிட்டார்கள். திரு. வி. க. அவர்கள் திராவிடர் கழகத்தின் உறுப்பினர் அல்லர்—கறுப்புச் சட்டை போடவேண்டும் என்று அவரை நிர்ப்பந்தப்படுத்த. அவர் நம்முடைய அழைப்பின்பேரில், அதுவும் பல நாள் வேண்டுகோளின்பேரில், தாம் செய்துகொள்ள வேண்டிய 'ஆபரேஷனையும்'—நமது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வேண்டி ஒத்திவைத்துவிட்டு—என்னிடமும் திராவிட நாடு பிரிவினையினிடமும் உள்ள பற்றுதலால் இவண்வந்து கலந்துகொண்டார். எனவே, அவருக்குக் கறுப்புச்சட்டை இல்லையென்று எவரேனும் குற்றம் காண்பது விசித்திரமாகவே இருக்கிறது. நாம் அவ்வளவு அனுபவ சாத்தியமற்ற பைத்தியக்காரர்களல்லர், இம் மாதிரி சில அற்பக் காரணங்களுக்காகச் சிலருடைய ஒத்துழைப்பைக் கைவிட. அன்போடும், ஆர்வத்தோடும் நம்மோடு கலந்துகொள்ள விரும்புவர்களை நாம் நிபந்தனையின்றி நம்மோடு இருக்கச் செய்துகொள்ள வேண்டியதுதான்.

திராவிடர் கழகத்தில் இருப்பவர்கள் கறுப்புச் சட்டை போடாமல் இருப்பதுதான் கண்டிக்கத் தக்கதே ஒழிய, கழகத்தில் சேர்ந்திராதவர்களைப் போட்டுக்கொள்ளும்படி வற்புறுத்துவதென்பது விரும்பத்தகாத காரியமாகும். மேலும், பெரியார் திரு. வி. க. கலந்துகொள்ளுவதால் நமது மாநாட்டிற்குத்தான் பெருமை ஏற்படுமே ஒழிய, அவருக் கொன்றும் இதனால் பெரிய பயன் ஏற்பட்டுவிடப் போவதில்லை. நம்முடன் கலந்து கொள்வதாகக் காட்டி, ஆட்சியாளரை மிரட்டி, ஏதாயினும் சலுகைகள் பெறவேண்டிய அவசியங்கூட இல்லாதவர் அவர்; பெண்டு பிள்ளை அற்றவர்; சாதாரண வாழ்க்கையை மேற்கொண்டுள்ளவர். எனவே, எவ்வித ஆசையும் சுயநலமும் அற்றவர். அப்படிப் பட்டவர் நமக்கு ஆதரவு அளிக்கின்றார் என்றால், நமது இயக்கத்தின் உயர்ந்த தன்மையின் காரணமாகத்தானே ஒழிய, பேரும் பெருமையும் அடைய அல்ல என்பதைத் தோழர்கள் உணரவேண்டும்.

காங்கிரஸ் இந்நாட்டிற்குப் பெருங் கேட்டை விளைவித்துவிட்டது; மக்களிடையே ஒழுக்கம், அன்பு, மனிதத் தன்மை இவை இருக்க இடமில்லாமல் வழி செய்துவிட்டது. அகிம்சை, அகிம்சை என்று காந்தியார் கூறி வந்தது—முடிவில் கலகத்தில், காலித்தனத் தில் கொண்டுவந்து சேர்த்துவிட்டது. அவரது இந்து-முஸ்லிம் ஒற்றுமை முயற்சி நிரந்தர வேற்றுமைக்கும், நாட்டுப் பிரிவினைக்கும் அடிப்படை போட்டுவிட்டது. அவரது தீண்டாமை ஒழிப்பு முயற்சி—பார்ப்பனர்களின் ஆணவத்தையே வளர்க்கப் பயன்பட்டுப் போய்விட்டது. காங்கிரசின் திட்டங்கள் யாவும் பெரும்பாலும் நேர்மாறான பயன்களையே அளித்துவிட்டன. ஏன்? காங்கிரஸ்காரர்கள் அத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக வகுத்துக்கொண்ட வழிகள் யாவும் குற்றமுடையனவாக அமைந்துபோய் விட்டமைதான்.

பொதுவாக 1920-லிருந்து 1948-வரை நாம் இந்நாட்டு அரசியல் சரித்திரத்தைத் தொடர்ந்து படித்துப் பார்த்தால், அரசியலில் ஈடுபட்ட தலைவர்களில் ஒருவரிடத்தாவது ஒழுக்கமோ, நாணயமோ இருந்திருக்க முடியாமல் செய்துவிட்டது என்பதைத் தீர்மான மாகக் கண்டு கொண்டு விடலாம்.

அருமைத் தோழர் இராஜகோபாலாச்சாரி முதல் குள்ளநரி வைத்தியநாதய்யர் வரை யாவரும் இந்தக் காங்கிரசில் நேர்மை, நாணயமற்றவர்களாக முறையே ஆக்கப்பட்டு விட்டார்கள். காங்கிரஸ்காரர் தவிர மற்றவர்கள் மட்டும் என்ன மகா யோக்கியர்களா என்று நீங்கள் கேட்கலாம். கேட்பது நியாயம் என்றாலும், நாணயக்காரர்கள் என்றோ ஒழுக்க முடையவர்கள் என்றோ வேஷம் போட்டுக்கொண்டு நம்முன் வரவில்லை. காங்கிரஸ்காரர்கள் தான் மகா மகா சத்தியசீலர்கள் என்றும் நீதியும், அகிம்சையும் கொண்டவர்களென்றும் நம்முன் கூறிக்கொண்டு அரசியலில் ஈடுபட்டார்கள். எப்படி பண்டார சன்னதிகள், 'அன்பே சிவம்' என்று கூறிக்கொண்டு அக்கிரமமாகப் பிறரை வஞ்சித்து வருகிறார்களோ, அதேபோல்—காங்கிரஸ்காரர்களும் சத்தியம், அகிம்சை என்கிற பேரால் நாட்டு மக்களைக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்ளைக்கும், வஞ்சகத்திற்கும், பித்தலாட்டத்திற்கும் ஆளாக்கிவிட்டனர். காட்டுமிராண்டிக் கால, கொள்ளைக்காரர் கால அறிவில், மக்களை வைத்துக்கொண்டு, அவர்களின் பிரதிநிதிகள் என்று விளம்பரப்படுத்திக்கொண்டு, காங்கிரஸ்காரர்கள் செய்துவரும் பித்தலாட்டங்களுக்கு அளவே காணமுடியவில்லை. காங்கிரஸ் திராவிடர்களோ—தாம், தம்மின எதிரிகளின் கூட்டத்தில் சேர்ந்திருக்கிறோம் என்பதைச் சிறிதும் உணராதவராய்த் தாம் விபீஷணர்களாவதன்மூலம் பெறக்கூடிய சிறு நன்மையோடு திருப்தி அடைந்து—ஆரிய ஆதிக்கத்திற்கு உற்ற தூண்களாக அமைந்திருக்கிறார்கள். ஒரு காங்கிரஸ் திராவிடனிடத்திலாவது, திராவிட இன உணர்ச்சி குடிகொண்டிருப்பதாக நம்மால் காணமுடியவில்லை.

தோழர் இராமசாமி ரெட்டியாரின் உடலில் ஒரு காலத்தில் திராவிட உணர்வுள்ள இரத்தம் ஓடிக்கொண்டிருந்ததென்றாலும், அது எப்படியோ தற்போது மாறிவிட்டது; அதில் ஏதோ விஷங்கலந்து விட்டது.

முதன் மந்திரி ரெட்டியார் ரமண ரிஷியின் சீடர்; அவர் பார்த்துச் சொல்கிறபடி இவர் ஆடுகிறாராம். அவர் மிக யோக்கியராக இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதில் சந்தேகம் வேண்டாம் என்றாலும், யோக்கியதை ஒன்று மட்டுமே பதவி வகிக்கப் போதுமா? திறமையும் அனுபவமும் கொஞ்சமாவது வேண்டாமா? கை சுத்தமாக இருந்தால் மட்டும் போதுமா? புத்தித் தெளிவும் அனுபவமும் கொஞ்சமாவது இருக்க வேண்டாமா? இவரும் தொலைந்தால் இவரைவிட மோசமான ஆள் வந்துவிடப் போகிறான் என்றுதானே இவருடைய ஆட்சியை நாம் சகித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. நம்மைக் கொஞ்சமாவது மனிதர்கள் என்று நினைத்து ஆட்சி புரிகிறார்களா, இந்த மந்திரிகள்? உணவுக் குறைவு, உடைக் குறைவு, கல்வி வசதிக் குறைவு, பாதுகாப்புக் குறைவு—எல்லாம் குறைவு; நிறையுடையது ஒன்றுமே இல்லை. என்றாலும், இவை பற்றிச் சிந்திக்கிறார்களா, இம் மந்திரிகள்—சிந்திக்க நேரம் இருந்தால்தானே!

பார்ப்பனர்களின் ஈட்டிக்குப் பயந்து—அவர்கள் ஆட்டியபடியெல்லாம் ஆடிவரத்தானே இவர்களுக்கு நேரம் இருக்கிறது. எப்போதும் மந்திரிசபை ஆடிக்கொண்டே இருக்கிறதே! பார்ப்பனர்கள் எல்லோரும் ஒருமுகமாகச் சேர்ந்துகொண்டு ஒரு நல்ல காரியத்தைக்கூட நடக்க விடமாட்டேன் என்கிறார்களே! அந்தப் பார்ப்பனர்களுக்குப் பயந்துகொண்டு மந்திரிகள் எங்கு சென்றாலும் பார்ப்பனீயப் பிரச்சாரம் செய்துகொண்டு வருகிறார்களே! ரமண ரிஷி சீடர் இராமாயணப் பிரச்சாரம் செய்யத் துவங்கிவிட்டாரே!

நாம் எவை எவை இந் நாட்டு மக்களை நாசம் செய்யப் பயன்பட்டுவருகின்றன என்று கூறி வருகிறோமோ, அவற்றை வளர்ப்பதையே இவர்கள் கண்ணுங் கருத்துமாகக் கொண்டு திரிகிறார்களே! இராமாயணப் பிரச்சாரம் செய்வது அவசியம் என்று தோன்றினால் மந்திரி பதவியை இராஜிநாமா செய்துவிட்டுத் தாராளமாய்ச் சுற்றிச் சுற்றிப் பிரச்சாரம் செய்யட்டுமே! மந்திரியாக இருந்து பல பொறுப்புகளைச் சுமந்துகொண்டு, இவ் வேலையைச் செய்துகொண்டிருப்பானேன்? இராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று நாம் பிரச்சாரம் செய்துவரும்போது, இராமாயணத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யும் ஒருவர் நமக்கு முதன்மந்திரியாக வாய்த்திருக்கிறார் என்றால், அதைவிடக் கெட்ட வாய்ப்பு வேறு நமக்கு என்ன வேண்டியிருக்கிறது?

இந் நாட்டுப் பத்திரிகைத் தொழில் பூராவும் 100-க்கு 3 பேராயுள்ள—ஒரு பொறுப்பற்ற, உழைக்காமலே பிறர் இரத்தத்தை உறிஞ்சி வாழ்ந்து வரக்கூடிய—ஒரு வஞ்சகக் கூட்டத்தினிடம் சிக்கிக் கொண்டுவிட்டது. ஆயிரமாயிரம் மக்கள் இறந்து கொண்டிருந்தாலும் கடுகளவாவது துயரமடைய வேண்டிய அவசியமில்லாதவர்களும், அதற்கு மாறாகப் 'பிறர் சாகச் சாகத் தம் வாழ்வு உயரும்' என்று மகிழ்ச்சி அடையக்கூடியவர்களுமான புரோகிதப் 'பைசாசக்' கூட்டங்களிடத்தே பத்திரிகைத் தொழில் சிக்கிக்கொண்டிருக்கிறது. எனவேதான், நமது சமுதாய வாழ்வு பாழடைந்து கொண்டே வருவது கண்டும் பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசும் வாளாவிருந்து வருகின்றன. இதன் காரணமாகத்தான், நாமும் இக் காங்கிரஸ் ஸ்தாபனம் ஒழியவேண்டும் என்று கூறி வருகிறோம்.



எவை எவை நம் நன்முயற்சிக்கு, நமது முன்னேற்ற முயற்சிக்கு ஊறு செய்கின்றனவோ அவையெல்லாம் ஒழியவேண்டும் என்கிறோம். ஒழிக்கப்பட வேண்டியவைகள் தாமே அவைகளும்! நம்மைக் கடிக்க வரும் பாம்பை நம்மால் அடிக்காமல் இருக்கமுடியுமா? அல்லது, தேளைப்போலொரு துஷ்டப் பிராணியைக் கொல்லவேண்டாம் என்றுதான் நம்மால் கூறமுடியுமா? பாம்பைவிட, தேளைவிடப் பன்மடங்கு விஷம் பொருந்தியவைகளாயிற்றே பார்ப்பனப் பத்திரிகைகள்! நமக்குள் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது; நாம் ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளக்கூடாது. அப்படி அடித்துக்கொண்டால் நாமே தோற்றவராவோம் என்றல்லவோ நாம் கூறுகிறோம்.

இராவணன் எப்படித் தோற்றதாக இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது? படித்துப் பாருங்கள்; இவ்வுண்மை விளங்கும்! இராவணனுடைய சேனைகள் முடிவில் தமக்குள்ளாகவே மோதி முட்டிக்கொண்டு சண்டையிட்டு அழிந்து போனதுதான் இராமனுடைய வெற்றிக்குக் காரணம் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, நமது கழகம் உயிரோடிருக்க வேண்டுமானால் நாம் எப்போதும் நமக்குள் சண்டையிட்டுக் கொள்ளக்கூடாது. அதாவது, திராவிடர்கள் தம்மில் ஒருவரை ஒருவர் எப்போதும் மோதிக்கொள்ளக் கூடாது. அப்படி மோதிக்கொண்டால் நாம் அழிந்துபோக நேரிடும் என்பதற்காகத்தான் காங்கிரஸ் திராவிடர்கள் நமக்கு என்னதான் துரோகம் செய்துகொண்டிருந்தாலும், என்னதான் நமது கூட்டத்தில் கல் போட்டுக்கொண்டிருந்தாலும் நீங்கள் அவர்களோடு சண்டைக்குப் போகாதீர்கள்; அவர்கள் அடித்தாலும் திருப்பி அடிக்காதீர்கள் என்று கூறிவருகிறேன். போலீஸ்காரன் அடித்தால்கூட அவனும் திராவிடன் என்கின்ற காரணத்தால் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் கூறியிருக்கிறேன். போலீஸ்காரன்—ஆட்சியிலுள்ள காங்கிரஸ் சிப்பந்தி. எனவே, அவர்கள் உத்தரவுப்படித்தான் அவர் நம்மை அடிக்க முன்வருகிறாரே ஒழிய, தானாக நம்மிடம் போராட வருகின்றார் இல்லை. எனவே, பொறுத்துக்கொண்டு அவரை ஆட்டிப் படைக்கும் அந்த ஆட்சியை ஒழிக்க முற்படுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாய்மார்கள் யாவரும் இந்த ஆட்சியை எதிர்த்தே தீருவதென்று திடசங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். அன்பர் திரு. வி. க. அவர்கள் 'இன்பப் பெருக்கம்—இனப் பெருக்கம்' என்றார். நான் சொல்லுகிறேன்—'இன்பச் சுருக்கம் இனச் சுருக்கம்' என்று. அறிவுள்ள குழந்தைகளைப் பெறவேண்டும்; வீரர்களைப் பெறவேண்டும் என்று ஆசைப்பட வேண்டியதுதான். ஆனால், அதிகம் பெறவேண்டியதில்லை. அதற்காக நான் இன்பம் துய்ப்பதை விட்டுவிட வேண்டும் என்று கூறவில்லை. குழந்தைகளை அதிகமாகப் பெற்றுவிட்டால் இன்பம் அனுபவிக்க—இனத் தொண்டாற்றப் போதிய அவகாசம் இராது. இனியும், 'குழந்தைகளைக் கடவுள்தான் கொடுத்து வருகிறார்' என்று நினைத்துக் கொண்டிருப்பதும் சுத்த முட்டாள்தனமாகும். உண்மையாகக் கடவுளே கொடுப்பதாயிருந்தால் இவ்வளவு முட்டாள்தனமாக, தேவைக்கும் மேலாகக் குழந்தைகளைக் கொடுத்துக்கொண்டிருப்பாரா? இனிப் பிறக்கும் குழந்தைகள், சமுதாய முன்னேற்றத்திற்காகச் சண்டை போடும் குழந்தைகளாக—கூர்மையான பகுத்தறிவு நிறைந்த குழந்தைகளாக அமையவேண்டும்; உண்மைத் திராவிட இரத்தம் ஓடும் குழந்தைகளாய் அமையவேண்டும். அதற்கு நீங்கள் முதலில் உங்களிடமுள்ள ஆரியப் பண்புகளை விட்டுத் தொலைக்க வேண்டும்; ஆரிய மூட நம்பிக்கைகளைப் பொசுக்கிவிட வேண்டும்; விபூதி பூசுவதை நிறுத்திவிட வேண்டும்; நாமமிடுவதை வெறுக்க வேண்டும்; தீபாவளி போன்ற ஆரியப் பண்டிகைக்களைக் கொண்டாடக்கூடாது; கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது செய்வதா

படிப்பகம்

www.padippakam.com



யிருந்தால் காலையில் தங்கள் வீட்டில் ஏதோ 'பெரிய காரியம்' ஏற்பட்டிருப்பதுபோல் நினைத்துக்கொண்டு துக்கப்பட வேண்டும். பட்டாசு கொளுத்துவதற்குப் பதிலாக இராமாயணத்தையும், பாரதத்தையும், புராணங்களையும் கொளுத்தவேண்டும். இம் மாதிரி மாறுதலைப் புகுத்திக்கொண்டு வருவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

பெரிய பெரிய உற்சவ காலத்தில் நாம் இம் மாதிரி மாநாடுகளைக் கூட்டவேண்டும். மக்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடியதும், அறிவு ஊட்டக்கூடியதுமான பொருட்காட்சிகளுக்கும், நாடகங்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். நமக்கும் இதுதான் வேலை. இனி ஜெயிலுக்குக் கொண்டுபோகப்படும் வரையிலும் அடிக்கடி இம் மாதிரி மாநாடுகள் நடந்து கொண்டுதானிருக்கும். நீங்களும் வசதி ஏற்படும்போதெல்லாம் வரவேண்டியதுதான். வெற்றிக்குக் காலம் நிர்ணயிப்பது என்பது என்னால் முடியாத காரியம். வெற்றி வருகிறபோது வரட்டும்—நாம் தொடர்ந்து, வெற்றியில் நம்பிக்கை வைத்து நமது காரியத்தைச் செய்துவருவோம்; நல்லறிவு பெறுவோம்.

பெரியார் திரு. வி. க. சொல்லுகிறார், 'இன்னும் 10 வருடத்தில் திராவிடம் கிடைத்துவிடும்' என்று. வரட்டும் அது! அதற்குள் நமக்கு நல்லறிவு வரட்டும்; நமக்குள் ஒழுக்கம் ஏற்படட்டும்; பற்றுதலும் அன்பும் உண்டாகட்டும்; நம் மக்கள் மனிதத் தன்மையோடு வளரட்டும். இழிவுநீங்கப் பாடுபடட்டும். தாய்மார்கள் ஆண்களைப்போல் முன்னேற்றப் பாதையில் நடக்க முன்வரட்டும்; சமையல் வேலையைக்கூட புருஷனிடம் வேண்டுமானால் ஒப்படைத்துத் தொலையட்டும். நான்கு குடும்பங்கள் சேர்ந்து சமையல்காரனை வைத்துச் சமைத்துச் சாப்பிட்டுக்கொள்ளட்டும். எல்லோருடைய முயற்சியும் நாட்டுமக்களின் பொது நன்மைக்காகப் பயன்படட்டும். பெருமைதரும் உத்தியோகங்களுக்கும், பணிகளுக்கும் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ளட்டும்.

பெண்களைக் கூண்டுக் கிளிகளைப்போல் வீட்டில் அடைத்து வைக்கத் தாய் தந்தையர் முயற்சிக்காதீர்கள்! தாராளமாகப் பழகவிடுங்கள். பெண்களுக்கு 20 வயது வரை, கண்டிப்பாகத் திருமணம் செய்யாதீர்கள்.

உங்கள் பெண்மக்களிடம் 20 வயதிற்குப் பிறகு கேளுங்கள்—'திருமணம் செய்து கொள்ள இஷ்டமா? பொதுச்சேவை செய்ய இஷ்டமா?' என்று. 'திருமணத்தில் இஷ்டம்' என்றால்—நல்ல வரனைத் தேடிப்பிடிக்கும் வேலையை அவர்களுக்கே விட்டுவிடுங்கள்; வேண்டுமானால் ஆலோசனை மட்டுமே கூறுங்கள். 'பொதுச் சேவையில் பிரியம்' என்றால்—அதற்குத் தாராளமாக வசதி செய்துகொடுங்கள். பிறர் என்ன சொல்லுவார்களோ என்று கவலை கொள்ளாதீர்கள்; பெண் எங்கே கெட்டுப்போய் விடுவாளோ என்று அஞ்சாதீர்கள்! குழந்தைகளின் உற்பத்திப் பீடமாயுள்ள பெண்கள் திருந்தினாலொழிய அவர்களிடமிருந்து உற்பத்தியாகும் குழந்தைகளும் திருந்திய குழந்தைகளாயிருக்க முடியாது என்பதை மனத்தில் கொள்ளுங்கள். வளம் செய்யப்பட்ட மண்ணில் எப்படி நல்ல நெல் மணிகள் தோன்றுமோ, அதுபோலவே சீர்திருத்த மனம்படைத்த அறிவுள்ள பெண்களிடமிருந்துதான் சீர்திருத்த அறிவுள்ள செம்மல்கள் தோன்றக்கூடும் என்பதைத் தாய்மார்கள் உணர்ந்து, முதலில் தம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ளட்டும்! கோயிலுக்குப் போய் அனாவசியமாய்க் குழவிக் கல்லுக்குத் தெண்டனிடுவதால் பயனில்லை என்பதை உணர்ந்து கொள்ளட்டும். வெறும் சமையல்காரிகளாகவும், கட்டிலறைப் போகப் பொருள்களாகவும், காட்சிப்பொருள்களாகவும் மட்டுமே இருப்பதில் பயனில்லை என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ளட்டும்!

திராவிட நாட்டை விரைவில் காணக்கூடிய தகுதியும், திறமையும் தம்மிடத்ததான் இருக்கின்றனவென்பதையும் தாய்மார்கள் உணரட்டும். கவர்னர் ஜெனரல் இங்குவரும்போது, தாய்மார்களை, 'தலைமயிரை விரித்துவிட்டுத் தெருவில் படுத்துக்கொள்ளுங்கள்;



உங்கள் தலையின்மீது வேண்டுமானால் அவர் நடந்து செல்லட்டும்' என்று கூறினேன். அதனால் எங்களைச் சிறைபிடித்தார்கள் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். இனியும் நீங்கள் எதற்கும் தயாராயிருக்கவேண்டும். நாம் விடுதலை அடையவேண்டுமானால் பெண்கள் முதலில் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். தாம் விதவைகளாயிருக்க தமது விதிப்பயன்தான் காரணம் என்பதை விதவைகள் விட்டொழிக்க வேண்டும். விதவைகளாயிருப்பவர்கள் சமூகத்தொண்டாற்ற முன் வரவேண்டும். நம் நாட்டுச் சரித்திரத்தில் பெண்களுக்கென்று தனி அத்தியாயம் எழுதப்படும் அளவுக்கு நீங்கள் விதவைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொள்ள வேண்டும். உங்கள் வாழ்வுக்கும், பெருமைக்கும், நலத்துக்கும் உழைத்து வருவது திராவிடர் கழகம் ஒன்றுதான் என்பதையும், உங்கள் வாழ்வைக் கெடுத்துவருவது பார்ப்பனீயத்திடம் நீங்கள் வைத்துள்ள மூடப் பற்றுதல்தான் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த மாநாட்டில் பெண்களுக்குப் பேசவோ, பாடவோ, சரியான வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. போதிய கால வசதி கிடைக்குமானால் அடுத்த மாநாட்டைப் பெண்களிடமே சகல பொறுப்புக்களையும் கொடுத்து நடத்த ஆசைப்படுகிறேன். அவ்வாசை உங்கள் ஒத்துழைப்பால் நிச்சயம் வெற்றி பெறும் என்றே நம்புகிறேன். வரவேற்புக் கமிட்டித் தலைவர், காரியதரிசி, மாநாட்டுத் தலைவர், கொடி ஏற்றுபவர் திறப்பாளர், தீர்மானங்கொண்டு வருபவர்கள், முன்மொழிபவர்கள் யாவரும் பெண்களாகவே இருக்கும்படி அம் மாநாட்டை நடத்த நினைக்கிறேன்.

அறிவுள்ள பெண்கள் சிலர் பதவி மோகங்கொண்டு அல்லலுறுகிறார்கள்; சிலர் தம் புருஷர்களிடம் மாட்டிக்கொண்டு அல்லல் படுகிறார்கள். விரைவில் இவற்றினின்று அறிவுள்ள பெண்கள் விடுதலை பெற்று, சமூகத் தொண்டாற்ற முன்வரவேண்டும். குழந்தைகள் போதுமென்றால் தாய்மார்கள் சிலர் கடைசிக் குழந்தைக்கு 'சாலம்மா' என்று பெயர் வைத்துவிட்டுப் பிறகு தமக்குக் குழந்தை பிறக்க வேண்டாமென்று நினைத்துக்கொண்டு விடுவார்கள். அதுபோல் தாய்மார்கள் இரண்டாவது, மூன்றாவது குழந்தைகளுக்கே—'போதுமம்மா', 'போதுமப்பா' என்று பெயர் வைத்துவிட்டுச் சமூகத் தொண்டாற்ற வந்துவிடவேண்டும்.

ஒவ்வொரு தாய்மாரும் இந்தக் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து திராவிடநாட்டை விடுவிப்பதையே முக்கிய வேலையாக—முதல் வேலையாகக் கொள்ள வேண்டும். உங்களின் பிற்காலச் சந்ததிகளின் வாழ்வை—உங்கள் சகோதர சகோதரிகளின் வாழ்வை நலம் செய்யத்தான் நாங்கள் உங்களை இத் தியாகத்திற்கு அழைக்கிறோம்! உங்கள் யாவரையும் ஒழுங்காக நடத்துவோம்; மரியாதையாக நடத்துவோம்; எங்களுக்குற்ற அருமைத் தலைவிகளாக—விடுதலைப் போராட்டம் நடத்தவந்த வீராங்கனைகளாக மகிழ்வுடன் போற்றிப் புகழ்வோம்! எல்லோருமாகச் சிறைச்சாலை செல்ல இம் மாநாட்டிலேயே உறுதி எடுத்துக் கொள்வோமாக! அவரவருக்குள்ள சிறு தொல்லைகளிலிருந்து விடுதலை செய்துகொள்வார்களாக! தாம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சகல காரியங்களும் ஒழுங்குறக் கவலையற்று நடக்கும்படியான வகையில், ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்துவைத்துக் கொள்வார்களாக! எப்போதும்—நீண்ட சிறைவாசத்திற்கே ஆயினும் புறப்படத் தயாராக இருப்பார்களாக! ஒவ்வொருவரும் 'எப்போதும் தயாராக' (Ever-Ready) ஆகி இருப்பார்களாக!

எல்லோருமே இணங்கி வராவிட்டாலும், ஆதரவு கிடைத்தவரை போராட்டம் நடந்து கொண்டு வரும். ஆதரவே இல்லாது போயினும் என்னைப் பொறுத்தவரையில் நான் சிறிதும் வருத்தப்பட மாட்டேன். என் கடமையைச் செய்யத் தவறேன்; அடக்குமுறையை எதிர்த்தே தீருவேன்; விடுதலை பெற்று வெளிவரினும் மீண்டும் எனது வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டுதான் இருப்பேன். இன்றுள்ள ஆட்சியைத் தொடர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தைச் சொல்லிவிட்டேன். போராட்டத்தின் தன்மையைச் சொன்னேன்; போராட்டத்தின் பலனையும் சொன்னேன்; போராட்டத்திலுள்ள கஷ்ட நஷ்டங்களையும் சொன்னேன். எனவே என்ன செய்வதென்பதை மனிதத் தன்மையில் விருப்பமுள்ள உங்களின் முடிவுக்கே விட்டு விடுகிறேன். கஷ்டம் அதிகந்தான்.

கஷ்டம் அதிகமாயிருக்கிறது என்று சிலருக்குத் தோன்றலாம் எனினும், என்ன செய்யமுடியும்? வந்துள்ள நோயின் தன்மையைப் பொறுத்துத்தானே மருந்தும் அமையக் கூடும்? கொடூரமான நோய்க்கு மிகக் கசப்பான மருந்தைத்தானே கொடுக்கவேண்டியிருக்கும். நோய் போகவேண்டுமென்று விருப்பப்படுபவர்கள் அம்மருந்தை உட்கொண்டுதானே ஆகவேண்டும்? 100-க்கு 80 தற்குறியாயுள்ள இந்த நாட்டில் இதைவிட நம்மால் வேறு என்ன செய்ய முடியும்? ‘கல் குவியலில் அரிசி பொறுக்கும்’ காலமன்றோ இது? எதிர்காலம் வேண்டுமானால்—‘அரிசிக் குவியலில் கல் பொறுக்கும்’ காலமாக இருக்கலாம்! அதுபோது, போராட்ட முறையும் வேறு விதமாக அமையலாம். இன்றைய நிலைக்கு இதுமாதிரிப் போராட்டத்தில் இறங்குவது தவிர வேறு வழியில்லை. எனவே, உதவியும் ஆதரவும் அளிக்கவல்ல தோழர்கள் விரும்பி அளியுங்கள்—உங்களால் ஆன உதவியை!

சட்டசபைக்குப் போகமாட்டோம் எனக் கருதிக் கொள்ளாதீர்கள். போனாலும் ஒன்றும் செய்யக்கூடாத நிலையில் சட்டசபை இருப்பதால்தான் நாம் ஒதுங்கியிருக்கிறோம்—என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்ய இயலாதே என்கின்ற காரணத்தால்—வெளியில் இருந்தால் அதிகம் செய்யலாம் என்ற எண்ணத்தால் ஒதுங்கியிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். எவனெவனோ சட்டசபையை அடைத்துக்கொண்டு கொள்ளையடிக்கிறானே என்றால்—நாமும் அவனுடன் சேர்ந்து கொண்டு கொள்ளையடிக்கலாமா? என் சதையைப் பிறர் அறுத்துத் தின்கிறார்களே என்று பொறாமை கொண்டு—நானும் கொஞ்சம் என் சதையைக் கடித்துக் கொள்வதா? நம் மக்கள்தாம் கொள்ளையடிக்கப்படுகிறார்கள் என்று அறிந்திருந்தும் நாமும் சேர்ந்து கொண்டு கொள்ளையடிக்க நினைக்கலாமா?

ஆத்திரப்படாமல் சிந்தித்துப் பாருங்கள்—பதவியிலுள்ளவர்களுக்கு உள்ள கெட்ட பேரை! அப்படிப்பட்ட கேவல பதவிகளையா நாம் விரும்புவது? முதலில் மக்களெல்லாம் அறிவு பெற்று விளங்க நாம் பாடுபடுவோம். அவர்கள் அறிவாளிகளாக ஆக்கப்பட்டதும்—பிறகு வேண்டுமானால் செல்லலாம், சட்டசபையை நோக்கி! நமக்கு நல்லது செய்ய வசதி இருந்தால் செல்லலாம்; மக்களும் உணருவார்கள்—நன்மை செய்யப்படுகிறதா, தீமை செய்யப்படுகிறதா என்று. இன்னும் ஒரு வருடம் இம் மாதிரி ஆட்சி நடைபெறுமானால் இம் மந்திரிகளெல்லாம் பர்மா மந்திரிகளைப் போல்தான் ஆகவேண்டி வரலாம். நாம் மட்டுமே இல்லை இந்த உலகத்தில் என்பது, உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்! நம்மவர்களாயிற்றே என்று நாம்தான் சும்மாயிருக்கிறோம் என்றால், அகிம்சை, அன்பு என்று மக்களை நாம் அடக்கி வைத்திருக்கிறோம் என்றால்—இதர கம்யூனிஸ்டுகள், ‘கோட்ஸே’ கூட்டங்கள் இல்லையா? சோஷலிஸ்டுகள் இல்லையா? ‘அனார்கிஸ்டு’கள் இல்லையா? அவர்கள் யோக்கியதை உங்களுக்குத் தெரியாதா? காந்தியாரையே ஒழித்தவர்கள், பார்த்துக்கொண்டிருப்பார்களா? அந்த நிலைக்கு மக்களைக் கருதவிடாமல்—தம்மை திருத்திக்கொள்ள வேண்டும் என்றுதான் ஆட்சியாளருக்கு நான் வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[ஈரோட்டில் 23, 24-10-1948-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 2-11-1948]



# 15. சமுதாயமும் அரசியலும்

தோழர்களே!

சமுதாயம் வேறு; அரசியல் வேறு என்று கூறுவது தவறாகும். சமுதாய அமைப்பைச் சரிவர நடத்துவதுதானே அரசாங்கத்தின் கடமை ஆகும்? சமுதாய அமைப்புக்கு வழிவகை அமைப்பதே மதத்தின் தத்துவமாகும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் தங்களது மதங்களை அவ்விதமே கையாண்டு வருகின்றனர். ஆனால், நமது மதம் இருக்கிறதே, அது நமது சமுதாய அமைப்பின் முன்னேற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கிறது. நம் அரசாங்கம் என்பதோ மக்களுக்காக அல்லாமல், அரசாங்கத்தாருக்காக மக்கள் வாழவேண்டிய தலைகீழ்த் தத்துவத்தில் நாம் உழன்று வருகின்றோம்.

எனவே, நாமும் நமது நாடும் முன்னேற வேண்டுமானால், சமுதாயத்துறையிலே பெரும் மாறுதலை உண்டாக்கவேண்டுவது அவசியமாகும். அதன் பின்னரே, நல்ல ஆட்சியும் ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம். அவ்வாறு இல்லாது, இன்றைய சமுதாய அமைப்பைக்கொண்டே, யார் ஆட்சி செய்தாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் ஒருசிறிதும் நீங்குவதற்கு வழி இல்லை; வழிவகையும் இருக்க முடியாது.

[பொன்மலையில், 22-5-1949-ல் சொற்பொழிவு—‘குடிஅரசு’ 28-5-1949]

தோழர்களே!

அரசியல் என்று தனியாக ஒருவிஷயம் இல்லை; அரசியல் என்பது மக்கள் வாழ்வில் சுமத்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சேர்த்துக் கூறுவதுதான் அரசியல். அதாவது, சமுதாயம், பொருளாதாரம், கல்வி, வியாபாரம், கைத்தொழில், பகுத்தறிவு இன்னும் மற்றும் அனேக காரியங்களைக் கொண்டதுதான் அரசியல். ஆனால், இன்றையதினம் மக்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், அரசியல் என்பது வேறு, சமுதாயம் வேறு என நினைத்துக் கொண்டு, தனித் தனியாகப் பிரித்துப் பேசுகிறார்கள்.

ஆகவே, சமுதாயம் வேறு, அரசியல் வேறு என்று நினைத்துக்கொண்டு பிரிப்பதின் காரணம் என்ன? அதாவது, அரசியல் விஷயமாகப் பேசுவதாய் இருந்தால் அது ‘பொலிடிக்கல்’ என்றும், சமுதாய விஷயமாக இருந்தால் அது ‘சோஷியல்’ என்றும் பிரித்து மக்களுடைய சமுதாயத்துறை சீர்படுவதற்கு இல்லாமல் செய்வதற்காகவே செய்த ஒரு தந்திரம் இது என்றுதான் சொல்லவேண்டும். இந்த நாட்டிலேதான் இப்படிச் சொல்லுகிறோமே தவிர, வேறு எந்த நாட்டிலும் இப்படித் தனியாகப் பிரித்துக் கையாளுவது கிடையாது.

ஏன் அப்படி அமைந்தது என்றால், இந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பு பெரும்பாலும் ஒரு சிறிய கூட்டத்தாருடைய பிழைப்புக்காகவே அமைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, சமுதாயத் துறையில் ஏதாவது மாறுதல் பண்ணவேண்டுமெனக் கருதினால்கூட அதனால் பிழைக்கிற கூட்டத்தார், ‘இது தவறு, இதைத் தவிர வேறு ஏதாவது பேசு’ என்று சொல்லித் தடுத்துக்கொண்டே வருகிறார்கள். அப்படி வந்ததாலேதான் இந் நாட்டில் வெள்ளைக்காரருடைய ஆட்சி ஏற்பட்டும்—அவர்கள் அரசியல் துறையில் சரியாக நடந்து வந்தும்—சமுதாயத்துறையில் கைவைப்பதற்குத் துணியவில்லை. அப்படியே துணிந்தாலும் அன்றையதினம் பெரிய எதிர்ப்பு இருந்துதான் வந்தது. வெள்ளைக்காரனுடைய ஆட்சியிலே ஒரு பெரும் நெருக்கடி ஏற்பட்டபோது, ‘நாங்கள் அரசியல் துறையில் மாத்திரம் பிரவேசிக்கிறோமே தவிர, சமுதாயத் துறையில் எவ்விதமாகவும் பிரவேசிக்கவில்லை’ என்று சொன்னார்கள். அதைத்தான் இப்பொழுது, ‘பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதி’ என்று சொல்லிக் கொள்வது. ஏதாவது ஒரு வார்த்தை பேசவந்தால், அதைப்பற்றி உடனடியாக ‘சர்க்கார் சமுதாயத்துறையில் பிரவேசிக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறது. ஆகையால், ஒருவரும் சமுதாயத்துறையில் பிரவேசிக்கக்கூடாது’ என்று சொல்லி விட்டார்கள். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் அதை வெவ்வேறாகப் பிரிப்பது இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



எங்களுடைய முக்கியமான சங்கதிகளெல்லாம் சமுதாயத்தைப்பற்றிய சங்கதிதான். இதற்காக நீண்ட நாட்களாக நாங்கள் பாடுபட்டு வருகிறோம். இந்த 25 ஆண்டுகளாக நாங்கள் செய்த வேலைகள் எல்லாம் சமுதாயத்திற்குப் பயன்படும் முறையில்தான் செய்து வருகிறோம். எங்களுடைய கொள்கைகள் எல்லாம் சமுதாய சம்பந்தமாகவேதான் இருக்கும்.

[பாண்டமங்கலத்தில், 10-10-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-10-1951]

## 16. அரசியல் நிர்ணய சபை

இன்றைய அரசியல் நிர்ணய சபை ஆரிய எதிர்ப்புக்காரர்களுக்குச் சிறிதுகூட இடமில்லாத சபையேயாகும். ஏனெனில், அரசியல் நிர்ணய சபையோரைத் தேர்ந்தெடுத்தவர்கள், அரசியல் நிர்ணய சபையின் வேலைத் திட்டம் இன்னது என்று தெரிந்த மக்கள் ஒருவர்கூட அல்லாதவர்கள். அரசியல் நிர்ணய சபையாரைத் தேர்ந்தெடுத்தவர்களைத் தெரிந்தெடுத்தவர்கள்—மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 10 பேர்களே. ஆனாலும், அந்தப் பத்துப் பேர்களும் அரசியல் நிர்ணய சபை கர்ப்பத்தில்கூட இல்லாத காலத்தில்—அப்படி ஒன்று ஏற்படும் என்று எவருமே அறிந்திருக்க முடியாத காலத்தில் வேறு எதையோ ஓட்டர்களுக்குச் சொல்லி ஓட்டுக் கொடுத்தவர்களாவார்கள்.

அதாவது, சில பொதுநல வாழ்வுக்காரர்கள், 'இது வரி குறைக்க எழுதப்பட்ட விண்ணப்பம்' என்று கூறிப் பொதுமக்களிடம் கையெழுத்து வாங்கி, அந்த விண்ணப்பத்தை கையெழுத்து வாங்கியவர்கள், 'வரி போடும்படி கேட்டுக்கொள்வதாக' திருத்திக் கொண்டதுபோல்—தங்கள் பொறுப்பை, கடமையை மாற்றிக்கொண்டதுபோல் மாற்றிக்கொண்டார்கள். அப்படிப்பட்ட அரசியல் நிர்ணய சபை இப்போது நாட்டு மக்களின் நிலைக்கேற்ற காரியத்தைச் செய்யாமல்—பார்ப்பனர்களும் அவர்கள் அடிமைகளான செல்வவான்களும் நிரந்தரமாய் மக்களைத் தங்களுக்குள் அடிமைப்படுத்தி வைத்திருக்கவும் சுரண்டவுமே 'சிமிண்ட் ஜல்லியால்' கட்டடம் கட்டிக்கொள்கிறது.

நாம் முன்னமே கூறியிருக்கிறோம்: 'இந்த அரசியல் நிர்ணய சபையால் செய்யப்படும் விதிகளில்—இனிமேல் சுதந்திர சமதர்ம இந்தியாவில் மக்கள் பிறவியில் பிராமணன், சூத்திரன், பஞ்சமன், அரிஜனன் என்பதான பிரிவுகள் இருக்கக்கூடாது; இப் பிரிவுகள் கொண்ட ஆதாரங்கள் இருக்கக்கூடாது; இருக்கப்படவுமாட்டாது; இல்லாமல் செய்யப்படும்' என்று ஒரு வாக்கியம் இருக்கவேண்டும் என்று.

அப்படிப்பட்ட வாக்கியத்தை, தன்னைப் பிராமணன் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள்—நேரு, ஆச்சாரியார், முன்ஷி, சந்தானம், கோபாலசாமி அய்யங்கார், அனந்தசயனம், கிருஷ்ணமாச்சாரி முதலிய பார்ப்பனர்கள் பிரேரேபிக்காவிட்டாலும்—முனுசாமிப் பிள்ளை, சுப்பராயன், குமார ராஜா, பாரதி, இராமசாமி ரெட்டியார் போன்ற 4-வது, 5-வது வர்ணத்தைச் சார்ந்தவர்களாவது சேர்க்க முயற்சித்து இருக்கலாம். முயற்சிக்காத காரணம், தங்களுடைய கீழ்சாதி நிலை மாறவேண்டும் என்கின்ற ஆசை அவர்களுக்கு இல்லை என்று யாராவது கூற முடியுமா? ஒருநாளும் அப்படிச் சொல்லமுடியாது. பின் ஏன் அவர்கள் அங்கு இதைச் சொல்லவில்லை என்றால், 'சாதி இழிவைப்பற்றி நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம்' என்பதாக வாக்குறுதி அல்லது நம்பிக்கை கொடுத்து அரசியல் நிர்ணய சபை மெம்பராகத் தங்களைச் சேர்த்துக் கொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டவர்களாதலால்—அவர்களை அரசியல் நிர்ணய சபை மெம்பர்களாக ஆகும்படி பார்ப்பனர்கள் செய்திருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் சூத்திரப் பட்டத்தையும் அரசியல் நிர்ணய சபையில் காப்பாற்றி இருக்கிறார்கள்.

இது போலவேதான், அரசியல் நிர்ணய சபையில் இதுகாலம் வரையில் இந்தியா முழுமையிலும்—பஞ்சாப், லாகூர் முதல் திருநெல்வேலி வரையும்; கொச்சி முதல் அஸ்ஸாம் வரையும் இருந்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை நிலைநிறுத்த ஆளில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.



அதாவது, 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஒரு சென்னை மாகாண மெம்பர் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இதனால் அபிப்பிராயபேதம் கடுமையாகி, கட்சிக் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை காரணமாக அத்தீர்மானம் நிறுத்தப்பட்டுவிட்டது' என்று காணப்படுகிறது. ஆகவே, அங்குள்ள கட்சிக் கட்டுப்பாடு எதுவும், மற்ற விஷயங்களில் தீர்மானம் கொண்டுவருவதும், பேசுவதும், வாதிப்பதும் தடுக்கப்படவே இல்லை.

எனவே, இன்றைய அரசியல் நிர்ணய சபை திராவிட சமுதாயத்தை இராமாயண காலம் முதல் இருந்துவந்த மனு முறைக்கு ஆளாக்கும் ஒரு 'பூதேவர்களின்' (ஆரியர்களின்) சபையே ஒழிய—இந்நாட்டு மக்களின் அரசியல் சபை அல்ல என்பதை விளக்கி, அந்த அரசியல் நிர்ணய சபை நடவடிக்கையால் உருவாக்கப்படும் நூல்—ஒரு மனுதர்ம நூலேயாகும் என்று கூறுகின்றோம்.

['விடுதலை'-தலையங்கம்—2-12-1948; 7-8-1950]

## 17. அரசியல் சட்டம் ஒழிக

தோழர்களே!

இந்திய அரசாங்கமானது அநியாயம் நிறைந்து விளங்கும் அரசியல் சட்டத்தைக் கொண்டிருக்கின்றது. மேலும் அரசியல் நிர்ணய சபையாவது ஒழுங்கானது என்று சொல்ல முடியுமா? உண்மையான முறையில் அதைப் பார்த்துச் சொல்லவேண்டுமானால்,

'நான்கு பார்ப்பனர்கள் சேர்ந்துகொண்டு எழுதிய மனுதர்ம சாஸ்திரம்' என்றுதான் சொல்லமுடியும். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய உரிமைகளை—அதிகாரங்களை—சுயதேவைகளை, ஆட்சி உரிமையைப் பறிப்பதற்காகத் திட்டம் போட்டுச் செய்யப்பட்டது தான் அரசியல் சட்டம் என்றுதான் கூறமுடியும். இது நம்முடைய நல்வாழ்வுக்காக அமைந்தது அல்ல என்று நான் முன்னாலேயே கூறிவிட்டேன்.

இன்றையதினம் உள்ள அந்தச் சட்டம் எப்படி இருக்கிறது? அது யாரால் செய்யப்பட்டது? அவர்கள் கணக்குப்படி இந்த நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது என்றும், குடிஅரசு ஆகிவிட்டது என்றும் கூறுகிறார்களே, அதன்படியாவது அமைந்ததா?

இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வந்துவிட்டது என்று அவர்கள் வாயில்தான் கூறுகிறார்களே தவிர, உண்மையில் இந்தச் சட்டம் மக்களால் அமைந்ததென்று சொல்ல முடியுமா? இந்த நாட்டின் மக்களுடைய பிரதிநிதிகளால் அமைக்கப்பட்டது என்றுதான் சொல்ல முடியுமா? இந்த நாட்டு மக்களுடைய பிரதிநிதிகள்தாம் என்று சர்க்கார் கூறுகிறதே, அதன் அர்த்தம் என்ன? 'இந்த நாட்டில் உள்ள 21 வயது நிரம்பிய எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுத்துவிட்டோம்; ஆதலால், நாங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான்' என்று சொல்கிறார்கள். மேலும் இதுதான் ஜனநாயக ஆட்சி எனவும் கூறுகிறார்கள்.

இது, உண்மையான குடியரசு நாடாய் இருந்தால்—உண்மையான ஜனநாயக நாடாய் இருந்தால்—உண்மையான சுதந்திரம் பெற்ற நாடாக இருந்தால், இவர்கள்தாம் இன்றையதினம் ஆட்சியில் இருக்கமுடியுமா? அல்லது, இவர்களாலே இவர்களின் மனத்திற்குத் தகுந்தபடி அரசியல் சட்டம் செய்துகொள்ள முடியுமா?

ஆகவே, இது வெறும் பித்தலாட்டமான சொல்; மக்களை ஏய்ப்பதற்கு உபயோகிக்கும் வார்த்தை. ஆகவே; இது குடிஅரசு நாடாய் இருந்து—அதன் மக்களால் செய்யப்பட்ட சட்டமாய் இருக்காமல், ஒரு சிலரால் செய்யப்பட்ட சட்டமாக இருக்கிறது. இந்தச் சட்டம்

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுத்தப்பட்ட அரசியல் நிர்ணய சபையிலே இருக்கிற பிரதிநிதிகள் எல்லாம், பிரிட்டிஷ் அரசாங்கத்தினரால் எடுக்கப்பட்டவர்கள். இந்தியாவின் மக்களால் ஜனநாயக முறையில்—குடிஅரசு முறையில் அமையப்பெற்ற பிரதிநிதிகள் அல்லர். இவர்களுக்கு ஓட்டுக்கொடுத்து அனுப்பியவர்கள் பணக்காரர்களும், பார்ப்பனர்களும், படித்தவர்களும்தாம்; இவர்களுக்கு மட்டுமே அந்தக் காலத்தில் ஓட்டுரிமை கொடுத்திருந்தார்கள். ஆகையினாலே, மேற்கூறிய (ஓட்டுக்கொடுத்த) நபர்களைக் கவனிக்காமல் பொதுமக்களைக் கவனிக்க முடியுமா? ஆகவே, இவர்கள் பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லமுடியாது.

இவர்களின்மேல் நம்பிக்கையில்லாமல்—இன்றைய சர்க்கார் அந்த வெள்ளைக்காரன் காலத்திலே வைக்கப்பட்டவர்களைத் தங்கள் இஷ்டம்போல் நடக்கவும், தங்களுடைய வாக்கின்படி மாறுபடாமல் நடப்பதற்கும், தாங்கள் சொல்லியவற்றிற்குக் கைதூக்கும்படியும் இன்னும் ஒருசிலபேரை நம் சென்னை மாகாணத்திலிருந்து அனுப்பச் சொன்னார்கள். அதுவும் அவர்கள் கைவசப்படுத்தி வைத்திருக்கிறவர்களைக்கொண்டு தெரிந்து எடுக்கச் சொன்னார்கள். அந்த அளவிலாவது விடவில்லை. சென்னை (தமிழ்நாட்டு)க்கு மாத்திரம் 47 பேர்கள் அரசியல் நிர்ணய சபைக்குத் தெரிந்து எடுக்கப்படவேண்டும் என்று சொல்லி விட்டு—கூடவே, அந்த 47 பேர்களின் 'லிஸ்டும்' அனுப்பிவிட்டார்கள். அது மத்திய அரசாங்கத்திலிருந்து அனுப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 47 பேர்களையாவது இஷ்டம்போல் எடுத்து அனுப்பும்படியும் கூறவில்லை. அந்த 'லிஸ்டிலே'யே அந்த 47 பேர்களின் பெயர்களையும் எழுதி அனுப்பிவிட்டார்கள்.

அவர்கள் அத்தனைபேரும் அவர்களின் பாதவருடிகளாகத்தான் காட்சி அளித்தனர். அதுவும் தவறிப்போகாமல் இருப்பதற்காக, ஒரு நபர் ஒன்றுக்கு 3½ பேர்கள் வீதம் ஓட்டுச் செய்து அனுப்புங்கள் என்றும் கூறி அனுப்பிவிட்டார்கள். 'வேறு யாருக்காவது ஓட்டுச் செய்தால், உங்கள் பேரிலே நடவடிக்கையெடுக்கப்படும்' என்றும் சொன்னார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தின்படி எடுத்து அனுப்பியும்விட்டனர். ஆனால், இதில் ஒரு ஆள் தவறுதலாகப் போய்விட்டார். அவர்தான் திரு. N. சிவராஜ். இப்படித் தவறு நடந்ததால் இவர்களின்பேரில் நடவடிக்கைகூட எடுத்துவிட்டார்கள்.

இதன் பெயர்தான் தேர்தல்; இதன் பெயர்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பது; இதன் பெயர்தான் குடியரசின் மக்கள் பிரதிநிதிகள் என்பது. ஆகவே, அரசியல் நிர்ணய சபைக்குப் போனவர்களில் சுயநலக் கும்பல்களையும், பார்ப்பனர்களையும் தவிர மீதி அத்தனைபேரும், மடையர்கள்தாம். பார்ப்பனர்கள் மாத்திரம் தன் சாதிக்கு வேண்டிய நன்மைகள் எது வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து கொண்டனர். இங்கிருந்து போனவர்களுக்கு மாதம் 250 ரூபாய் கிடைக்கிறது. இதுவே இவனுக்குப் போதும். ஆகவே, இவன் என்ன செய்யமுடியும்? இவனால் செய்ய முடிந்தது ஒரே ஒரு காரியம்தான். அதாவது, இவர்களுக்கு என்று ஒதுக்கிக் கொடுக்கின்ற அறையை இன்னொருவருக்குக் (பிரயாணம் வருகின்றவர்களுக்கு) கொடுத்துக் கூடுதல் பணம் வாங்கிக் கொள்வது. இதுதான் இவர்கள் முறை தவறாமல் நடத்திவந்தது. இது மிக மிகக் கேவலமானது என்று இப்பொழுதாவது புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்களே—அதுதான் அதிசயம்.

ஆகவே, இங்கிருந்து போனவர்கள்—தலைவருடைய கண்ணைப் பார்த்துக்கொண்டு கை தூக்குவதுதான் இவர்களுடைய முழுக் கடமையாக முடிந்தது. ஆனால், பார்ப்பனர்கள் மாத்திரம் தங்கள் இஷ்டம்போல்—தங்களுக்கு வேண்டிய சலுகைகளைக் கவனிக்கும்பொருட்டு அதற்கான சட்டங்களை எல்லாம் எழுதி வைத்துக்கொண்டார்கள்.

இதன் பின்னர் ஒரு கமிட்டி அமைத்தார்கள். அதிலும் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் முதலாவதாக நான்கு பேர்கள்; அத்தனை பேரும் பச்சைப் பார்ப்பனர்கள்.



டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், கே. எம். முன்ஷி, திருமலை ராவ். இன்னும் மேலே மூன்று பேர்கள் எடுத்தார்கள். அவர்களில் டாக்டர் அம்பேத்கார் ஒருவர். முஸ்லிம்களுக்காக சாயபு ஒருவர்; கிறிஸ்தவர்களுக்கு ஒருவர். ஆகவே டாக்டர் அம்பேத்காரைத் தவிர மீதி அத்தனை பேர்களும் தங்கள் தங்கள் இஷ்டம் போல் செய்து கொண்டனர்.

ஆனால், டாக்டர் அம்பேத்கார் மட்டும் ஏதோ ஆதித் திராவிடர்களுக்காகப் போராடினார். இவரிடம், 'உம் சங்கதிக்கு மட்டும் தடையில்லாமல் எதுவேண்டுமானாலும் சொல்—செய்கிறோம்; ஆனால், மற்றவர்கள் விஷயத்தைப் பற்றிப் பேசாதே' என்று கூறிவிட்டனர். அதன்படியே அம்பேத்காரும் தன் சமூகத்தாருக்கு வழிதேடிக் கொண்டார். ஆகவே, ஆதித் திராவிடர்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி விகிதாச்சாரம் கொடுப்பதாகக் கூறிச் சட்டமும் செய்துவிட்டனர். அந்தச் சட்டத்திலே ஆதித் திராவிடர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி சகலவற்றிலும் பங்கு கொடுக்கவேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் கேட்டபடி, மக்கள் தொகை விகிதாச்சாரத்தின்படி ஸ்தானங்கள் கொடுத்துவிட்டனர். ஆகவே, அவராவது அவ்வளவு பெற்றுவிட்டார். ஆனாலும், நம்மவர்களுக்காக (நான்காம் சாதி) எவனாவது இதுவரை ஏதும் கேட்டது கிடையாது. ஆதித் திராவிடர்களுக்கு இவ்வளவு ஒதுக்கிவிட்டு, நாம் விகிதாச்சாரம் கேட்பது தப்பு என்று சொல்லுகிறார்கள். ஆகவே, யாராவது இதைப்பற்றிக் கேட்டால், அவரை 'வகுப்புவாதி' என்று கூறிவிடுகிறார்கள்.

எனவே இந்த அரசியல் சட்டம் என்பது சட்டப்படி ஏற்பட்டதல்ல; காங்கிரஸ்காரர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி ஏற்பட்டதல்ல.

அதாவது, அவர்கள்—காங்கிரஸ்காரர்கள் 1946-லே தேர்தலுக்கு நின்றபோது விட்ட அறிக்கை என்ன? 'நாங்கள் தேர்தலில் நின்று வெற்றி பெறுவோமானால் ஒவ்வொரு மாகாணத்திற்கும் போதிய சுதந்திரம் கொடுக்கும்படியான அரசியல் சட்டம் அமைப்போம்; மேலும், அந்தச் சட்டமும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால் செய்யப்பட்டதாகத்தான் இருக்கும்' என்று கூறினார்கள். ஆனால், அப்படி நடந்தார்களா? அது தான் இல்லை.

ஒவ்வொரு காரியமும் நாட்டுக்குக் கேடுகளை விளைவிப்பதும், சொல்லுகின்ற ஒவ்வொரு காரியமும் பித்தலாட்டம் நிறைந்ததாகக் காணப்படுவதும்தான் இவர்களுடைய யோக்கியதையும் திறமையும்.

எனவே, இவர்களால் செய்யப்பட்ட அரசியல் சட்டம் நமக்குத் தேவையில்லை என்று நாம் கூறுவது மட்டும் போதாது; அதை ஒழித்துக்கட்ட—தோழர்கள் கேட்டபடி, ஒரு நாளை நாம் கைக்கொண்டு ஒழிக்கும் வழி தேடித்தான் ஆகவேண்டும்.

எனவே, நாம் என்ன செய்யவேண்டும்? அந்த அரசியல் சட்டம் நமக்குத் தேவை இல்லை; ஆகையால் அதன்கீழ் நாம் சட்டசபைக்குப் போவது சரியில்லை என்பதை உணர வேண்டும்.

ஆகவே, வருகின்ற தேர்தலில், எப்படியாவது, காங்கிரஸ் வெற்றிபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் செய்வது எல்லாம் அவர்களுடைய ஓட்டுப் பெட்டியில் நம்முடைய ஓட்டைப் போடாமல், மண்ணைக்கொண்டு நிரப்பவேண்டும். நீங்கள் காங்கிரசுக்காரர்களுக்கு ஓட்டுப் போடுவீர்களானால்—அது உங்கள் பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும், உற்றோர்க்கும் செய்த பெரும் கேடாய்த்தான் முடியும்.

[திருச்சி டவுன் ஹாலில், 17-9-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-9-1951]

படிப்பகம்

www.padippakam.com



## 18. அரசியல் சட்டத்தை எரிப்போம்—ஏன்?

தாய்மார்களே! தோழர்களே!

வெள்ளைக்காரன் வருவதற்கு முன் இந்தியா ஒன்றாக இருந்தது என்று யாராவது சொல்லமுடியுமா? திராவிட நாட்டைத் திராவிடன் அல்லாமல் வேறு யாராவது ஆண்டதாகச் சொல்லமுடியுமா? வெள்ளையன் அவன் ஜெயித்த பல நாடுகளை அவனது ஆட்சி சவுகரியத்துக்காக ஒன்றாகக் கட்டினான். முஸ்லிம் வைத்த பெயரை அவன் பயன் படுத்திக்கொண்டான். அது எப்படியோ உண்மைக்கு வந்துவிட்டது என்றவுடன், எந்த விதத்திலும் உனக்குச் சம்பந்தமில்லாத இந்த இராஜ்யத்தை, நீ மொகலாயர்கள்—வெள்ளையர்கள் ஆகியவர்களைவிட மோசமாகச் சுரண்டி ஆதிக்கம் செலுத்தி ஆளுவது என்றால்—என்ன அர்த்தம்? அவர்கள் தங்கள் மொழியைப் புகுத்தியதுபோல் நீயும் புகுத்துகிறாய்

அரசியல் சட்டம் என்பதாக—மனுதர்ம சாஸ்திரம் போன்ற ஒரு அநாமதேய, 'ஆகா வழிச் சட்டத்தை' ஏற்பாடு செய்துகொண்டு அதன் பெயரால், நாங்கள் எது செய்தாலும் அடக்குவது, ஒடுக்குவது என்று ஆரம்பிக்கிறாய். அரசியல் சட்டத்தின்படி—வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியல் செய்வது தவறு; நாடு பிரிவினை கேட்பது தவறு; வகுப்புவாரி உரிமை கேட்பது தவறு—இப்படியாக எங்கள் எல்லா முயற்சிகளையும், 'சட்டப்படி தவறு' என்கிறாய்.

நான் சொல்கிறேன், 'இந்த அரசியல் சட்டத்தை நாங்கள் ஏற்கமாட்டோம். இந்த அரசியல் சட்டம் எங்களுக்குத் தீங்கிழைப்பது ஆகும்; இது எங்கள் பிரதிநிதிகளால் செய்யப்பட்டதல்ல; இதை நெருப்பில் போட்டுப் பொசுக்குவோம்' என்று.

இந்த அரசியல் சட்டத்தை, நீ யார் சம்மதத்தின்பேரில்—யாரைக்கொண்டு செய்தாய்? வெள்ளைக்காரன் காலத்திலே—அவன் நலனுக்காக, அவன் வகுத்த தேர்தல் விதிகளின்படி, படித்தவனுக்கும் பணக்காரனுக்கும் ஓட்டு என்கிற அடிப்படையில் நடத்திய தேர்தலில் வந்தவர்களை வைத்துக்கொண்டு, அரசியல் சட்டத்தை நிறைவேற்றிவிட்டாய். வெள்ளையன் இந்தப் பிரதிநிதிகளைக் கொண்டு செய்த சட்டத்தை எதிர்த்து, நீயே சட்ட மறுப்புச் செய்திருக்கிறாய் என்பது—வடவனே, உனக்கு ஞாபகமிருக்கட்டும்!

100-க்கு இரண்டேமுக்கால் பார்ப்பானும், 100-க்கு 5 பணக்காரனும் அவர்கள் கூலி களும்தான் இந்த நாட்டின் பிரதிநிதிகளா? இந்த நாட்டின் பெருவாரியான மக்கள் சமுதாயத்தின்—ஏழைகளின் பிரதிநிதிகளைக் கொண்டா நீ அரசியல் சட்டம் செய்தாய்? 1946 தேர்தலின்போது, நீயே என்ன சொன்னாய்? '21 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளித்து, அந்தப்படி வாக்குரிமை அளிக்கப்பட்டு நடத்தப்பெறுகிற தேர்தலில் வந்த பிரதிநிதிகளைக்கொண்டு அரசியல் சட்டம் செய்யப்படும்' என்றுதானே சொன்னாய்? அந்தப்படி செய்தாயா?

ஏதோ வெள்ளைக்காரன் ஓடுகிற ஓட்டத்திலே உன்னிடத்திலே நாட்டைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டான் என்பதனால், எதுவும் செய்யலாம் என்று கருதிச் செய்து கொண்டாய்! உன் ஆதிக்கத்திற்கான முறையில் எங்களை நிரந்தரமாய் அடிமைப்படுத்திச் சுரண்டிக்கொண்டிருக்கும் தன்மையில் அரசியல் சட்டம் செய்துகொண்டு, அதை எங்கள் தலையில் வலுக்கட்டாயமாகப் புகுத்துவது என்றால், நாங்கள் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? இப்படி எங்களைக் கொலை பாதகம் செய்வதாகச் சொல்லியா, நீ வெள்ளைய ரிடம் அரசுரிமை பெற்றாய்?

எனவே, எப்படி இராமாயணம், பாரதம், கீதை, பிரபந்தம் போன்றவைகள் எல்லாம் நம்முடைய சமுதாய இயல்வாழ்வுக்கு ஏற்றதல்ல என்று கருதி அவைகளைக் கொளுத்தி னோமோ—கொளுத்துகிறோமோ, அதுபோலவே—இந்த நாட்டை அடிமைப்படுத்திச்

படிப்பகம்

www.padippakam.com



இரு இனத் தலைவர்கள்
சி. இராசகோபாலாச்சாரி அவர்களுடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்



கொழும்பில் ஈ. வெ. இராமசாமிக்கு வரவேற்பளித்த பொதுக்கூட்டக்காட்சி. பதினாயிரம் பேர் கூட்டம்.
("தினகரன்" பிரஸ் போட்டோ.)

1932-ல் அய்ரோப்பாவிலும், ரஷ்யாவிலுல் சுற்றுப்பயணம் செய்து
இலங்கை வழியாகத் திரும்பியபோது, கொழும்பில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு
அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி—'குடிஅரசு' 11–12–1932



சுரண்டி வாழ்வதற்கு என்றே ஆக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம்—கொளுத்துவோம்—கொளுத்துவோம்! (பெரிய கைதட்டல்).

திராவிட நாடு திராவிடர்களுக்கு என்று இருந்தால்—இன்று நடைபெறுகிற அக்கிரமங்கள், அதாவது—எல்லாம் வடநாட்டுக்காரனுக்கும் பார்ப்பானுக்கும்தான்; அவன் கழித்துப் போட்டது 'நமக்கு' என்கிற இந்த நிலைமை இருக்குமா? திராவிட மக்கள் என்ன மரக் கட்டைகளா? அவர்களுக்கு உணர்ச்சி, உரிமை வேட்கை இல்லையா?

[சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், 3-8–1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7–8–1952]

## 19. ஆச்சாரியாரும் நானும்

காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தாகிவிட்டது! அதை எதிர்த்து ஒழிக்கவேண்டியது அவசியம்! எதிர்ப்பு நிச்சயம்! ஆனால்—எதிர்ப்பு என்பது கூட்டு முயற்சியாலா, அல்லது, தனி முயற்சியாலா என்பதுதான் யோசிக்கப்படுகிறது.

சென்னை இராஜ்யத்தில் காங்கிரஸ் ஆட்சி மந்திரிசபை அமைக்கப்பட்டுவிட்டது.

இராஜ்ய மக்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் காங்கிரஸ் ஆட்சியை வெறுத்து, எதிர்த்து ஓட்டுச் செய்திருக்கிறார்கள்.

இந்த நிலையைக்கொண்டு கிரமமாகப் பார்த்தால், தேர்தலில் தோல்வியுற்ற கட்சி மந்திரிசபை அமைத்திருக்கிறது. அதிலும் காங்கிரசுக்கு எதிராக நின்று காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகள் பெற்று, வெற்றி பெற்ற கட்சியை இலஞ்சம் கொடுத்தும், காங்கிரஸ் ஒழுங்குமுறை விதிகளுக்கு விரோதமாகப் பதவி கொடுத்தும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மந்திரிசபை அமைத்திருக்கிறதானது—மாபெரும் அரசியல் நாணயக் குறைவான காரியமாகும்.

இது, நான் எதிர்பார்த்ததற்கு விரோதமாக அல்ல; இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்ததுதான். காங்கிரசுக்கு எதிர்ப்பாக என்று ஒரு மந்திரிசபை அமைப்பதில் எனக்கு இஷ்டமும் இல்லை; நம்பிக்கையும் இல்லை. ஏனெனில், நிலைமை அதற்கு ஏற்றதாக இல்லை. ஆனால், 'எதிர்ப்பு மந்திரிசபை' அமைக்கவேண்டுமென்றும், அமைக்கப்படலாம் என்றும் பேசிவந்தேன்.

அந்தப்படிப் பேசியது பெரிதும் காங்கிரசுக்கு எதிராக வெற்றிபெற்று வந்தவர்கள், காங்கிரஸ் வலையில் விழுந்துவிடக் கூடாது என்பதற்கும், பதவிக்கு ஆகவே யாராவது நின்று வெற்றிபெற்று வந்திருப்பார்களானால் அவர்கள் ஏமாற்றமடைந்து விட்டதாகக் கருதி வேறு யோசனை செய்யாமலிருப்பதற்கும் ஆகவே எதிர்ப்பு மந்திரிசபை பற்றிப் பேசிவந்தேன். எதிர்ப்பு மந்திரிசபை அமைப்பு எப்படி முடிவு பெற்றிருந்தாலும், இனி அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அது சுலபத்தில் நடக்கப் போவதில்லை. ஏனெனில், இந்தக் காங்கிரஸ் மந்திரிசபை ஒழிந்தால்தானே அது முடியும்.

எனவே, இந்த மந்திரிசபை ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்கு நாம் சொல்லுகிற காரணங்கள் தவிர்த்து, வேறு பல காரணங்கள் சொல்லி காங்கிரசையும் காங்கிரஸ் மந்திரி சபையையும் எதிர்த்து வந்த, எதிர்க்க வேண்டும் என்று கருதுகிற மக்களின் முக்கியமான கடமையும் இந்த மந்திரி சபையை ஒழிக்கவேண்டியதேயாகும். ஆதலால், அந்தப்படியான மக்கள் கூட்டம் நாணயமான கூட்டமானால் அதனின் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் நமக்கு இருக்கலாம் என்பதில் எவ்வித ஆட்சேபமிருக்க முடியாது.

எதிர்ப்பு என்றால் கூட்டத்தில் பேசுவது, பத்திரிகையில் எழுதுவது, சொந்தப் பெயரில் அல்லது கட்சிப் பெயரில் அறிக்கை விடுவது ஆன காரியத்தோடு முடிந்துவிடுகிற காரியம் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டே, ஒவ்வொரு கட்சியும் தனிநபர்களும் எதிர்ப்பைப்பற்றிச் சிந்தித்து முடிவு செய்யவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



காங்கிரசை எதிர்த்தவர்களில் இரண்டுதரமான கட்சிகளும், மக்களும் இருந்திருக்கிறார்கள்.

ஒன்று : பல காரணங்கள் கொண்டு காங்கிரஸ் ஆட்சியின் கேடுகளையும் கொடுமைகளையும் நாணயக்குறைவான சுயநலக் காரியங்களையும், அதனால் மக்களுக்கு விளைந்த பயன்களையும் கொண்டு காங்கிரஸ் ஆதிக்கத்தை—அமைப்பை ஒழிக்க வேண்டும் என்ற கருத்துடைய கட்சிகள், கருத்துடைய மக்கள் ஆவார்கள்.

இரண்டு : பதவிகளுக்காக, பயனுக்காக அதாவது—'காமன் வீல்' கட்சி போன்ற தோழர். மாணிக்கவேலு நாயக்கர் (Type)போன்ற மக்கள் ; இவற்றுள் தனது சுயநலத்துக்காக ஒரு தனி மனிதர் அல்லது ஒரு கோஷ்டி அமைத்துக்கொண்ட கட்சிகள் எதிர்ப்புக்குப் பயன்படா என்பது நமக்குத் தெரியும். அவர்கள், 'சுவர்மேல் பூனையாக' இருந்து வருவார்களே தவிர, எதிர்ப்பு வேலைக்குப் பயன்பட மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஆச்சாரியார் வீசி இழுத்துக் கட்டியிருக்கும் வலை இன்னமும் சுருட்டப்படாமல் இருந்துவருகிறது.

ஆனால், முதலாவது தரத்தில் கூறப்பட்ட மக்களின் ஒத்துழைப்பு எதிர்ப்புக்கு இருக்கலாம் என்றாலும், அவர்கள் மேற்சொன்ன மாதிரி பேச்சு, எழுத்து அறிக்கையோடு மாத்திரம் நில்லாமலும், 'காங்கிரசில் சேருவதில்லை' என்கின்ற பிரதிக்கினையோடு மாத்திரம் இல்லாமலும் தீவிரமான கிளர்ச்சிக்கு—அதாவது நேரிடை நடவடிக்கை என்பதற்குத் தயாராய் இருக்கிறார்களா? அடி, உதை, கண்ணீர்ப் புகை, ஜெயில், துப்பாக்கிக் குண்டு ஆகியவைகள் பெறத் தயாராய் இருக்கிறார்களா? இருக்க முடியுமா? என்பவைகள் முன்கூட்டியே நன்றாய் ஆலோசித்து, தங்கள் நிலையையும் தாங்கள் எதற்காகப் பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டவர்கள்போல் இருந்து வருகிறார்கள் என்பதையும் சிந்தித்து முடிவுகட்ட வேண்டியவர்களாவார்கள்.

இந்தக் கிளர்ச்சியில் நமது கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்கள், மந்திரிசபை எதிர்ப்புக்கு ஆன கொள்கைகளில் சிறிது மாறுதல் இருப்பதாய் இருந்தாலும்—எதிர்ப்புக் காரியத்திற்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தரவேண்டியவர்களே ஆவார்கள். ஆனால், அவர்களது மேலிடம் எந்த விநாடியில், எந்த ஆக்கினை இடுகிறதோ அதைப்பொறுத்தே நடக்க வேண்டியவர்களானதால்—கிடைத்தவரையில் நல்ல வாய்ப்பு என்றுதான் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஏனெனில், கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென்னாட்டுத் தலைவர்கள் கையில் இல்லை என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அதிலும், அந்தக் கட்சி மிகவும் கட்டுப்பாடான கட்டுத்திட்டங்களுக்கு அடங்கிய கட்சி என்பதையும் நான் சொல்லித்தான் மக்கள் உணரவேண்டும் என்பதும் இல்லை.

அடுத்தாற்போல் பிரகாசம் கட்சி. இது காங்கிரஸ் எதிர்ப்பில் எந்த அளவுக்குத் தீவிரக் கிளர்ச்சியில் ஒத்துழைக்கவோ, கலந்துகொள்ளவோ, ஆதரவளிக்கவோ முடியும் என்பதைக் காண்பது சிரமமான காரியமாக இருக்கிறது.

அதைப்பற்றி அதிகம் குறிப்பிடாமல் கிடைத்தவரை அனுகூலம் என்றுதான் கொள்கிறேன்.

காங்கிரஸ் மந்திரி சபைக்கு விரோதமாக இந்தி எதிர்ப்பை மூன்று முறை நடத்தினேன். வெற்றி பெற்றேனா, தோல்வியுற்றேனா என்பது ஒருபுறமிருந்தாலும்—அவற்றால் ஒரு அளவுக்கு அனுபவம் பெற்றிருப்பதோடு, கழகமும் பொது மக்களிடம் நம்பிக்கையும் செல்வாக்கும் பெற்றிருக்கிறது.

நமது கழகத் தோழர்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஒரு நல்ல கிளர்ச்சிக்கு—தீவிர் கிளர்ச்சிக்கு, இதற்கு மேலான நல்ல நிலைமை எதிர்பார்ப்பது அதிகமேயாகும்.



எப்படியிருந்தாலும் கிளர்ச்சி செய்தாக வேண்டியது அவசியம் என்கிற நிலையில்—நான் மாத்திரமல்லன் ; திராவிடர் கழகம் மாத்திரமல்ல; நாடு முற்றும், மக்கள் முழுமையும் எதிர்பார்க்கிற—தங்கள் கடமை என்று எண்ணுகிற சமயம்; அதுவும் நெருக்கடியான சமயம். ஆனதால், கடைசிப்பட்சம் என்னையே எண்ணியாவது, கிளர்ச்சி துவக்க இருக்கிறேன். இதற்காக, மாநாடு கூட்டப்போகிறேன் ; மக்கள் கருத்தை மேலும் அறியப் போகிறேன் ; மக்களிடம் கையெழுத்து வாங்க முயற்சிக்கிறேன் ; பல பெரியவர்களுடையவும், கட்சித் தலைவர்களுடையவும் கருத்தையும் அறிகிறேன்.

ஆச்சாரியார் நிர்வாகம், கிளர்ச்சியில் எப்படி நடந்து கொள்ளும் என்று நம்மால் முடிவு செய்யமுடியாது; விட்டுப்பிடித்தாலும் பிடிக்கும்; உடனடியாக அடக்குமுறை துவக்கினாலும் துவக்கும். நமக்கும், இரண்டும் ஒன்றுதான்.

என் விஷயத்தில் ஆச்சாரியார் தனது கொள்கையில் எந்த மாறுதலும் செய்துகொள்ளமாட்டார். அவர் கடமையை அவர் செய்துதான் தீருவார். அவர் என்ன செய்தாலும் அவர் கடமையை அவர் செய்கிறார், செய்தார்—என்றுதான் எண்ணுவேனே தவிர, நானும் வேறுவிதமாய் எண்ணமாட்டேன். அன்றியும், அவருங்கூட என் கடமையை நான் செய்கிறேன்; அதுவும் வேறு நிவர்த்தி இல்லாத நிலையில் செய்கிறேன்—என்றுதான் என்னைப்பற்றிக் கருதுவாறே தவிர, தனிப்பட்ட விருப்பு-வெறுப்பு காரணமாய் நடத்துகிறேன் என்று எண்ணமாட்டார் ; எண்ணவுங்கூடாது என்றே தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, இந்தி எதிர்ப்பின்போது, ஓமந்தூர் ரெட்டியார் என்னை நேரில் அழைத்துக் கேட்டபோதும், நான் இதையே சொன்னேன் ; அவரும் இதையே சொன்னார். அவரால் கூடியதைச் செய்தார்—நம் பிள்ளைகளின் கால், கை ஒடியும்படி மலபார் போலீசை விட்டு அடித்தார். அதன் பிறகு, அவர் நடத்தைகள் பலவற்றை மக்கள் சந்தேகப்படும்படியான அளவுக்கு நான் ஆதரித்தேன் ; பலர் அவரிடம் காரியம் சாதிக்க என்னிடம் சிபாரிசுக் கடிதம் கேட்கும்படியான அளவுக்கு நான் ஆதரித்தேன்.

இப்போது மக்கள் பலர் என்னை நம்புவதில்லை. நான் ஆச்சாரியாருக்கு வேண்டியவன் ; அவர் அன்புக்குப் பாத்திரமானவன் என்றெல்லாம் கருதி—நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்று கருதுகிறார்கள் ; எனக்கு அந்தப்படி சிலர் எழுதியுமிருக்கிறார்கள் ; சிலர் நேரில் சொன்னார்கள். மணியம்மைகூட என்னை, 'நீங்கள் இருவரும் திருடர்கள்' என்று சொன்னார்கள் என்றால், மற்றவர்கள் என்ன சொல்லமாட்டார்கள் ; நினைக்க மாட்டார்கள் !

உண்மையில் நான் ஆச்சாரியாருக்கு விரோதியல்லன் ; அவரிடம் எனக்கு விரோதமோ குரோதமோ கிடையாது; அவருக்கும் இருக்காது ; இருக்க நியாயமில்லை என்றுதான் கருதுகிறேன்.

நாணயத்தில், அவர் பார்ப்பனர் விஷயத்தில் தவிர, மற்ற காரியங்களிலும், நிர்வாகத்திலும் மற்ற காங்கிரஸ்காரர்களைவிட எவ்வளவோ மேலானவர்தான். ஆனால், அவர் பார்ப்பன சமுதாயத்திற்கு, 'தேவர்களுக்கு மகாவிஷ்ணு எப்படியோ' அப்படிப் போன்ற ஆபத்பாந்தவர்.

நான் பார்ப்பனரல்லாத திராவிட மக்களுக்கு அவரைப்போல் ஆபத்பாந்தவனாய் இல்லாவிட்டாலும், அவர்களுக்காகப் பாடுபடப் பார்ப்பனரல்லாதாரில் வேறு யாரையும் வெளிப்படையாகக் காண முடியவில்லையே ? பெரும்பாலான மக்கள் சுயநலமிகளாகவும், சமயசஞ்சீவிகளாயும் இருக்கிறார்களே என்று சரியாகவோ, தப்பாகவோ கருதிக்கொண்டு அல்லல்பட்டு, அவர்களுக்காக ஏதோ செய்யவேண்டுமே என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறவன்.



படிப்பகம்

www.padippakam.com



எனக்கு இன்னும் எத்தனையோ துறைகளில் எவ்வளவோ வேலை இருக்கிறது; மற்றும் என் வேலையின் பயனைத் தனிப்பட்ட முறையில் அனுபவிக்க எதிரிக்கு உள் ஆளாக இருந்து கவிழ்க்கப் பார்க்கும் துரோகிகள் சிலர் 'நம்மிலேயே' இருந்து தொல்லை கொடுப்பதால் அவர்களோடு மாரடிக்க வேண்டிய வேலை இருந்தாலும்—இது முக்கியமென்றே கருதுகிறேன்.

ஆதலால், திராவிடத் தோழர்களே! இளைஞர்களே! மாணவர்களே! என் வாழ்வில் இது கடைசிப் போராட்டமாக இருந்தாலும் இருக்கலாம். அதைப்பற்றிக் கவலைப்படா தீர்கள்! உங்கள் திராவிட சமுதாயம் உங்கள் கடமையைச் செய்ய அழைக்கிறது!

'திராவிட சமுதாயம் இனஉணர்ச்சி அற்ற துரோக சமுதாயம்' என்று கருத இடங் கொடுக்காமல் உங்கள் கடமையைச் செய்ய வாருங்கள்!

['விடுதலை'—தலையங்கம்—11-4-1952]

## 20. பெரியார் அறிக்கை

காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டு 23 நாள் ஆகிவிட்டது. இந்த மந்திரிசபை இந் நாட்டிலிருப்பது இந் நாட்டு மக்களுக்கே பெருத்த அவமானமாகும். எந்தவிதத்திலும் இம் மந்திரிசபை அரசியல் தர்மத்துக்கோ, நாணயத்துக்கோ, ஒழுக்கத்துக்கோ கட்டுப்பட்ட மந்திரிசபை என்று சொல்ல முடியாததாகும். இது காங்கிரஸ் மந்திரிசபையாக இருக்கிற தென்று கருதியோ—அல்லது ஆச்சாரியார் மந்திரிசபையாக இருக்கிறதென்று கருதியோ நான் முக்கியமாக இதைக் குறைகூறவில்லை; ஒழிக்கப்படவேண்டும் என்று ஆசைப்பட வில்லை.

நமது அரசியல் சட்டமென்பதே மக்கள் பிரதிநிதித்துவமல்லாத தனிப்பட்ட சுயநலமி களாகிய பார்ப்பனர், பணக்காரர், வடநாட்டார் ஆகியவர்களுடைய பாதுகாப்புக்காக அவர் களாலேயே ஏற்படுத்தப்பட்டது என்பது ஒருபுறமிருந்தாலும்—இன்றைய மந்திரிசபை யானது, அந்த அரசியல் சட்டத்துக்கும்கூட ஏற்றதல்லாததாக இருக்கிறது. ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், அரசியல் சட்டத்தைச் செய்தவர்கள் மக்கள் பிரதிநிதிகளல்லர்; மக்களில் ஒரு சாராராகிய படித்தவர்களுக்கும், வரி கொடுப்பவர்களுக்கும் மாத்திரம் பிரதி நிதிகளாவார்கள். அதனால்தான் அப்படிச் சொன்னேன். படித்தவர்களென்றால்—பார்ப் பனர் யாவரும்; வரி கொடுப்பவர்களென்றால்—செல்வமுடையவர்கள் யாவரும். இவர்கள் தாம் அரசியல் சட்டம் செய்தவர்களுக்கு 'வோட்' செய்திருக்கிறார்கள்.

அப்படியிருந்தும், அந்த அரசியல் சட்டப்படி அதற்குப் பின்னாலேற்பட்ட பொது ஜன வோட்டுரிமையின்கீழ் தேர்தல் நடந்திருக்கிறது. அந்தத் தேர்தலில் காங்கிரஸ் பெரு வாரியாகத் தோல்வியடைந்திருக்கிறது. அதாவது 375 ஸ்தானங்களில் காங்கிரஸ்காரர்கள் 371 ஸ்தானங்களுக்கு ஆட்களை நிறுத்தியும், 152 பேர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள். காங்கிரசுக்கு எதிரானவர்கள் 223 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதோடு, 'வோட்டு'ச் செய்த கணக்கும் காங்கிரசுக்கு 66,77,588 வோட்டுகளும், காங்கிரசுக்கு எதிர்ப்பாக 1,26,65,126 வோட்டுகளும் கிடைத்திருக்கின்றன.

இப்படியிருக்க, ஒரு மோசமான 'மைனாரிட்டி'க் கட்சியான காங்கிரஸ்தான் மந்திரி சபை அமைத்திருக்கிறது. இப்படி அமைத்திருப்பதில் காங்கிரஸ் கட்சி கவர்னருக்குக் கொடுத்த எண்ணிக்கையில் 156 பேர்களும், காங்கிரசுக்கு எதிர்ப்பானவர்கள் கொடுத்த எண்ணிக்கையில் 166 பேர்களும் இருந்திருக்க, கவர்னர் அவர்கள் குறைந்த எண்ணிக்கை யுடைய காங்கிரஸ்காரரையே மந்திரிசபை அமைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். இப்படிச் செய்ததற்குக் கவர்னரவர்கள் சொல்லும் சமாதானம் என்னவென்றால், காங்கிரஸ்



ஒரே கட்சி என்றும் காங்கிரஸ் அல்லாதவர்கள் பல கட்சிக்காரர்கள் என்றும், 'ஆதலால், ஒரு கட்சிக்காரரையே மந்திரிசபை அமைக்கச் சொல்லிவிட்டேன்' என்றும் சொன்ன தாகும்.

என்றாலும், இதுவும் நேர்மையான சமாதானமல்ல. ஏனெனில், காங்கிரஸ்காரர் களும் தங்கள் கட்சியோடு வேறு கட்சிக்காரர்களையும், கட்சியே இல்லாத தனிப்பட்ட நபர்களையும் சேர்த்துத்தான் மந்திரிசபை அமைத்திருக்கிறார்கள். அப்படி அமைத்திருப் பதிலும் நாணயமற்றவர்களையும், வோட்டர்களுக்குத் துரோகம் செய்தவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சர்க்கார் தங்களுடைய அக்கிரமமான இந்தக் காரியத்துக்குத் துரோகிகளையும், சுயநலக்காரர்களையும் தங்களோடு சேர்த்துக்கொண்டு இந்த இராஜ்ய பாரம் செய்வ தானது—அரசியல் துறையை மகா ஒழுக்கக்கேடானதாகவும், நாணயக்கேடானதாகவும் ஆக்குவதற்கு வழிகாட்டுவதேயாகும் என்பதோடு, பொது அரசியல் நாணயத்தை முன்னிட்டு இந்தக் காரியம் சிறிதும் மன்னிக்க முடியாததுமாகும்.

இதுதவிர, மந்திரிசபை அமைப்பதற்குக் காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவராக ஏற்படுத்தப்பட்ட தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அரசியல் சட்டத்திற்கேற்ப, அல்லது ஜனநாயக முறைக்கேற்ப எந்தவிதத்திலும் பொருத்தமில்லாதவரேயாவார். ஏனெனில், அவர் ஒரு 'வோட்டரா' என்பதே சந்தேகம்! அன்றியும் அவர் தேர்தலில் மக்கள் பிரதிநிதியாக வந்தவராக இல்லாமல், 'நாமினேஷனில்' காங்கிரஸ் சர்க்கார் பிரதி நிதியாக நியமிக்கப்பட்டவர். அந்த நியமனமும்கூடப் பொருத்தமற்றதும், நியமன சட்ட விரோதமுமான நியமனமாகும். இப்பொழுது இருந்துவரும் காங்கிரஸ் சர்க்கார் தலைமை யானது மக்கள் பிரதிநிதித்துவமுள்ளவர்களுடைய தலைமையாக இல்லாமல்—நியமனக் காரர்களுடைய தலைமையிலிருப்பதாகும். மந்திரிசபையில் 15 மந்திரிகள் இருந்தாலும், ஆச்சாரியார் அவர்கள்தான் பொறுப்புடையவராயிருக்கிறார். மற்ற மந்திரிகள் ஆச்சாரியார் சொல்லுகிறபடி கேட்கிறவர்களே தவிர, சுதந்திரமுடையவர்களல்லர்.

இப்படிப்பட்ட ஒரு சட்ட விரோதமானதும், ஏதேச்சாதிக்காரத் தன்மையுடையது மான ஒரு காரியம் நடைபெற சர்க்கார் ஏற்பாடு செய்வதானால், இந்த சர்க்கார் எலக்ஷனை எதற்காக நடத்தியிருக்க வேண்டும்? எலக்ஷன் நடந்ததில் சர்க்காருக்குச் சுமார் ஒரு கோடி ரூபாயாவது இந்த இராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் செலவாகியிருக்கும். பத்தாயிரக் கணக்கான சர்க்கார் சிப்பந்திகளுக்கும் வேலைத் தொந்தரவு ஏற்பட்டிருக்கும். விடுமுறை காரணத்தினால் அரசாங்கத்திற்கும் எவ்வளவோ வேலை நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது.

இதைத் தவிர, மக்களுக்கும் இந்த எலக்ஷனால் இந்த இராஜ்யத்தைப் பொறுத்த மட்டில், சுமார் 2 கோடி ரூபாயாவது செலவாகியிருக்கலாமென்பதோடு, எவ்வளவோ மக்க ளுக்குத் தொல்லை, அலைச்சல், பலவிதங்களில் நஷ்டம் முதலியவை ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வளவு நடந்தும் 'மெஜாரிட்டி' அல்லாத, மக்கள் பிரதிநிதித்துவமல்லாத— எதேச்சாதிகார நியமன மெம்பரின் மந்திரி ஆட்சி இருக்கிறதென்றால் இதை என்ன ஆட்சி என்று சொல்லுவது? இந்த ஆட்சியை ஏற்றுக்கொண்டு, இதை ஒழிக்காமலிருப்பதென்பது இந்த இராஜ்ய மக்களுக்கு ஒரு பெரிய மானக்கேடான காரியமல்லவா? இதற்குத்தானா இந்த இராஜ்ய மக்கள் பிரிட்டிஷ் ஆட்சி ஒழியவேண்டுமென்றும், மக்களாட்சி ஏற்பட வேண்டுமென்றும் பாடுபட்டதும், பல்லாயிரக்கணக்கான மக்கள் பலதடவை சிறை சென்று கிளர்ச்சி செய்ததும்?

காங்கிரஸ் எதேச்சாதிகார சர்க்காரின் இந்தக் காரியமானது—இந்த நாட்டையும், காங்கிரசுக்கு எதிராக வோட்டுச் செய்த 1¼ கோடி மக்களையும் அலட்சியமும் அவமானமும் இழிவும் செய்ததாகும் என்பதே எனது கருத்து.

படிப்பகம்

www.padippakam.com



அதனால், எக்காரணத்தினாலாவது இந்த 'மைனாரிட்டி—நியமன மந்திரி ஆட்சி' ஒழிக்கப்பட்டு மக்களின் உரிமையைக் காப்பாற்றவேண்டியது இந்த இராஜ்யத்தின் ஒவ்வொரு மனிதனுடையவும் கடமையாகும்.

இதற்காகச் செய்யப்படும் கிளர்ச்சிகளை இந்த அரசாங்கமோ, அல்லது அரசாங்கத் தலைமை மந்திரியான ஆச்சாரியாரவர்களோ, தனிப்பட்ட முறையில் விருப்பு வெறுப்புக் காரணமாகச் செய்யப்படும் கிளர்ச்சி என்று கருதுவது தவறான கருத்தாகும்.

இந்தக் கிளர்ச்சியை எப்படி நடத்துவது என்பது ஒரு பெரிய பிரச்சினைதான். என்றாலும், பயன்தரத்தக்க மாதிரியில் நடத்தப்பட்டாக வேண்டும். கிளர்ச்சி வெற்றி பெறுவதானாலும் தோல்வி அடைவதானாலும் சரி—கிளர்ச்சியில் எந்த உருவத்திலும் பலாத்காரம் இருக்கக்கூடாது என்பது எனது உறுதியான முடிவு.

இந்தக் கிளர்ச்சியானது அரசியல் ஒழுக்கத்தையும், நாட்டினுடைய-மக்களுடைய சுயமரியாதையையும் பொறுத்ததுமானதினால், இதற்கு இந்த நாட்டு மக்கள் எல்லோருமே ஆதரவளிக்க வேண்டியதும், கிளர்ச்சியில் கலந்துகொள்ள வேண்டியதும் மிகமிக முக்கிய மான கடமையாகும். கிளர்ச்சியின் முறையும் தன்மையும் சீக்கிரம் வெளியிடப்படும். ஓட்டர்கள், குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் தயாராய் இருக்கவேண்டும்!

['விடுதலை'–தலையங்கம்—4-5-1952]

## 21. என்னைப்பற்றி ஆச்சாரியார்

என்னைப்பற்றி மதிப்பிற்குரிய சி. ஆர். ஆச்சாரியார் அவர்கள் திருநெல்வேலி யிலும், சென்னை சட்டசபையிலும் பேசின பேச்சைப்பற்றி நான் ஒன்றும் பதில் சொல்ல வில்லை என்பதாகப் பல தோழர்கள் கவலைப்படுகிறார்கள்.

ஆச்சாரியார் அவர்கள் என்னைப்பற்றி, என் பெயரை உச்சரிக்கும்போது காட்டிய அன்புக்கும், மரியாதைக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். இது சம்பிரதாய நன்றியே யாகும்.

அவரது பதவித் துறையில், அவர் உணவுக் கட்டுப்பாட்டை—கண்ட்ரோலை—எடுத்துவிட்டதற்கு ஆக நான் நன்றி காட்டுகிறேன். இது பொதுநலத்தை முன்னிட்டு உண்மையாகக் காட்டும் நன்றியாகும்.

ஆச்சாரியாருக்கும், எனக்கும் அரசியல் துறையில் சில கருத்து வேற்றுமைகள் உண்டு. அவைகளில் ஒரு சிறியதையும் அவரும் விட்டுக்கொடுக்க மாட்டார்; நானும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்றே கருதிக்கொண்டிருக்கிறேன். இப்படிச் சொல்லுவது கடவுளைப்பற்றியது அல்ல; அது எனக்கு மிகச் சிறிய விஷயம். ஏனெனில், நாங்கள் தனிப்பட்ட தங்கள் தங்கள் சுயநலத்திற்காகப் பொதுவாழ்வில் இறங்கியிருந்தால் சுய நலத்தை முன்னிட்டு விட்டுக்கொடுப்பது 'சகஜ'மாகும். இரண்டுபேருக்கும் சுயநல மில்லை—ஏன் விட்டுக்கொடுக்கவேண்டும்? பொதுநலத்திற்கு ஆக விட்டுக்கொடுக்க நேரிட்டால், அது விட்டுக்கொடுத்தது ஆகாது; சம்பாதியமே ஆகும். ஆதலால், கருத்து வேற்றுமைக்குப் போராட்டம் நடக்கும் என்பதில் அய்யமில்லை.

என்னைச் சுற்றிலும் திராவிட மக்களிலேயே, என்னால் பலன் அடைந்தவர்களி லேயே துரோகிகளையும், சுயநல சமயசஞ்சீவிகளையும் வைத்துக்கொண்டிருக்கிற நான்—சில போராட்டங்களில் நல்ல யோக்கியர்கள், நம்பத் தகுந்தவர்கள் என்று கருதிய தோழர்கள் பலர் கழுத்தறுக்கும்படியான துரோகம் செய்துவிட்டுப்போன அனுபவத்தைக்கண்ட நான், அப்படிப்பட்ட துரோகிகளையும் பொதுமக்களும் இளைஞர்களும் ஆதரிப்பதையும் கண்டு கொண்டிருக்கிற நான், பெரும் போராட்டங்களைத் துவக்குவதானால் மிகவும் யோசிக்க வேண்டியதாகும்.



என்றாலும், துரோகம் எவ்வளவு பெரிதானாலும், துரோகிகளுக்கு எவ்வளவு ஆதரவாக இருந்தாலும், எனக்குப் பொதுமக்கள் ஆதரவு இருக்கிறது என்கின்ற நம்பிக்கை உண்டு என்பதோடு, என்னிடத்திலும் எனக்கு நம்பிக்கை உண்டு. உண்மையான நண்பர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதிலும், கஷ்ட நஷ்டங்களுக்கு உடன் இருந்து ஒத்துழைக்கச் சில பெரியவர்களும் பல இளைஞர்களும் இருக்கிறார்கள் என்பதிலும் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. இதைக்கொண்டு எப்படிப்பட்ட போராட்டம் துவக்குவது என்பதுபற்றித்தான் யோசனை செய்துகொண்டிருக்கிறேன். ஆதலால், சிலர் நினைக்கிறபடி ஆச்சாரியாரை எதிர்க்கவோ, ஆச்சாரியாருக்கு எதிராகப் போராட்டம் துவக்கவோ பயமோ தாட்சணியமோ கொண்டிருக்கிறேன் என்று யார் கருதுவதும் அதர்மமேயாகும். அன்றியும், ஆச்சாரியாருக்குக் கறுப்புக்கொடி பிடிக்கவில்லையென்றும் மந்திரிகளுக்குக் கறுப்புக்கொடி பிடிக்கவில்லையென்றும் என்மீது சிலர் குறைகூறுகிறார்கள்.

ஒழிக்கப்பட்ட காங்கிரசை, ஒழிக்கப்பட்ட மந்திரிசபையை, ஒழியப்பட இருந்த ஆச்சாரியாரை நம்மவர்கள் என்கிற துரோகிகள் ஆதரித்து உயிர்கொடுத்தால், அதற்காக யாருக்குக் கொடி பிடிப்பது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டாமா? சிந்திப்பதோடு கறுப்புக்கொடி பிடிக்கவும் மக்கள் மதிக்கத் தகுந்த ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமா?

நம் வீட்டுப் பெண், 'விபசாரத்தனம்' செய்து நம் எதிரிக்கு, 'வைப்பாட்டி'யாகப் போய் அமர்ந்து கொண்டால், அந்தப் பெண்ணை இழிவுபடுத்தாமல், அதற்காக அவளைப் பெற்ற நாம் வெட்கப்படாமல், வைப்பாட்டியாகக் கொண்டவன்மீது கோபங்கொண்டு, அவர் களுக்குப் பிறந்த குழந்தையை வெறப்பது என்றால், அது எப்படி மானமுள்ள காரிய மாகும்? முதலாவது, அந்தப் பெண்ணை இழிவுபடுத்தி வீட்டைவிட்டுத் துரத்தவேண்டாமா? ஆதலால், வேறு குற்றம் காண்கிறபோது அதைக் காட்டிக் கறுப்புக்கொடி பிடிக்கலாம். 'நம்மவர்கள்' செய்த துரோகத்தை, அதுவும் கும்பல் கும்பலாகச் செய்த துரோகத்தைப் பார்க்கும்போது 'எதிரிக்கு'க் கறுப்புக் கொடி பிடிப்பது சாதாரண காரியமாகிவிட்டது.

நாளைக்கு, பஸ்கட்டண வரி சட்டசபையில் நிறைவேறப்போகிறதென்றால், அதற்கு ஆச்சாரியார் என்ன செய்வார்? காங்கிரஸ்காரர்கள் என்ன செய்வார்கள்? பஸ்கட்டண வரி நிறைவேறினால் காங்கிரசுக்கு எதிராகப் பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் சில அயோக்கியர்கள் கொடுக்கும் ஆதரவு காரணமாகுமே என்பது தவிர, ஆச்சாரியாரும் அவரது மந்திரிசபையுமே எப்படிக் காரணமாகும்? அல்லது காங்கிரசே எப்படிக் காரணமாகும்?

இதை ஏன் எழுதுகிறேன் என்றால், நாம் நம்பிய–நாம் பிடித்து வைத்த ஆட்களே நமக்குத் துரோகம் செய்கிறமாதிரியாக நமது அரசியல் வாழ்வு இருந்து வருமானால், இதற்குப் பரிகாரம் செய்யாமல் காங்கிரசைக் குறைசொல்லிக்கொண்டே வீண் உழைப்பு உழைப்பதால் மாத்திரம் என்ன பயன் ஏற்படக்கூடும்?

இந்த எலக்ஷனில் நான் பட்டபாடு எவ்வளவு? அனுபவித்த கஷ்டம் எவ்வளவு? ஏற்பட இருந்த ஆபத்து எவ்வளவு? இதற்கெல்லாம் பரிகாரம் இந்தத் துரோகச் செயல்தான் என்றால்—இந்த இழிசெயல்கள் இனிமேலாவது ஏற்படாமல் இருக்கும்படி நாம் ஏதாவது செய்யத் தகுதியுடையவர்களாக இல்லாவிட்டால், இனியும் இப்படிப்பட்ட அரசியலைப் பற்றிக் கவலைகொள்வது பயனுடையதாகுமா? வேறு நாடுகளில் இப்படிப்பட்ட துரோகிகள் என்ன பலன் அடைகிறார்கள் என்பது யாருக்குத் தெரியாது?

துரோகம் செய்தவர்களில் பலர், 'திராவிடநாடு பிரிவினை'க்கு ஆதரவாளர்களாக இருக்க எழுத்துமூலம் வாக்களித்தவர்கள் என்று கருதும்போது–அந்தப் பிரச்சினையைக் கூட விற்றுத் தின்னும்படியான அவ்வளவு துணிவுள்ள மக்களாக 'நம்மவர்கள்' ஆகிவிட் டார்களே என்று வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



துரோகிகளின் நடத்தையை, அவர்கள் தேர்தலில் நாம் அவர்களுக்கு ஆதரவளிப்பதைப்பற்றி அவர்கள் யோக்கியர்களாக நடந்து கொள்ளவேண்டும் என்று கருதும்படியான உரிமை இல்லாவிட்டாலும், அவர்கள் ஓட்டர்களுக்கும் நமக்கும் கொடுத்த வாக்குறுதிப்படி நடக்காத அயோக்கியத்தனத்தைக் கண்டிக்கிற உரிமை இல்லை என்று யார் சொல்லமுடியும்? 'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்' என்ற சொல்லை, இதைவிட வேறு எந்த விதமான அயோக்கியத்தனத்திற்குப் பயன்படுத்த முடியும்?

இனி ஸ்தல ஸ்தாபனத் தேர்தலும் பக்கத்தில் வரப்போகிறது. இதுபோன்ற துரோகிகளும்—மூன்றாந்தர, நாலாந்தர மக்களும் வாயில் தண்ணீர் ஊற்றெடுத்துத் திரிகின்றனர். நம் ஆதரவால்—நம் பேரால் பதவிக்குப் போனவர்களில் யார் யோக்கியர்களாக, நன்றி விசுவாசமுள்ளவர்களாக, நாணயமுள்ளவர்களாக நடந்து கொண்டார்கள் என்று பார்த்தால், இந்த விஷயங்களில் காங்கிரஸ்காரர்களிலேயே—பார்ப்பனர்களிலேயே நம்மவர்களில் உள்ளவர்களைவிட அதிகமான யோக்கியர்கள் உண்டு என்று கருதலாம்போல் தோன்றுகிறது. ஒரே 'ஸ்டாக்கிலி'ருந்து—சுயநலவசதி ஒன்றேயே கருதி, காங்கிரசுக்காரர்களாகவும் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களாகவும் மக்கள் பிரிகிறதனால், காங்கிரஸ்காரர்களைவிட—எதிர்ப்பாளர்கள் சுபாவத்தில் யோக்கியர்களாக, நாணயஸ்தர்களாக இருக்கமுடியும் என்று எதைக் கொண்டு கருதமுடியும்?

எனவே, இந்த யோக்கியர்களால் நாட்டில் காங்கிரஸ் எதிர்ப்புக்கு நல்ல அளவுக்கு இருந்த சக்தி இப்போது மிகவும் குறைந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த இலட்சணத்தில் மாணிக்கவேலு நாயகரின் துரோகத்தை எடுத்துச் சொன்னால் வன்னியகுல க்ஷத்திரிய சாதிக்குக் கோபம்வந்து, அவர்கள் நம்மை வைவதும், இரத்தினத்தின் துரோகத்தையும் அவர் போன்றோரின் துரோகத்தையும் எடுத்துக் கூறினால் அந்த சமூகத்துக்குக் கோபத்தை உண்டாக்கி, அவர்கள் நம்மைக் குறைகூறுவதும் என்று ஆகி, முடிவில் இப்படிப்பட்ட பெரும் ஜனத்தொகை கொண்ட சமுதாயங்களின் தன்மை இப்படி ஆகிவிட நேருமானால் மற்ற சிறுபான்மை ஜனத்தொகை கொண்ட மக்களுக்கு இந்த நாட்டில் அரசியல் நல்வாழ்வோ, பாதுகாப்போ எப்படி இருக்கமுடியும்?

தோழர்களே! இப்பொழுது ஆச்சாரியாரை, ஆச்சாரியார் மந்திரி சபையை, ஆச்சாரியார் ஆதிக்கத்தை ஒழிக்க முடியுமா? முடிந்தாலும் அதை ஒழிப்பது பயன்படுமா? ஒழித்த பிறகு என்ன? அப்போது இந்தத் துரோகிகள் எங்கு போய்விடுவார்கள், என்ன செய்வார்கள் என்பதைப்பற்றி முன் யோசனையோடு யோசித்துப் பாருங்கள்.

எனது போராட்டம் இந்திய யூனியன் ஆட்சியையே ஒழித்துக்கட்டி, சென்னை இராஜ்யத்தை விடுவித்து சுதந்திர நாடாக்க வேண்டியதற்காக நடத்தப்படும் போராட்டமானதால்—ஆச்சாரியார் ஆட்சியை, காங்கிரஸ் ஆட்சியை ஒழித்துக்கட்ட வேண்டும் என்கிற காரியம் இந்தத் துரோகிகள் செயலால் சிறிதும் தடைப்பட்டு விடாது என்பது மாத்திரமல்லாமல், ஆச்சாரியாருக்கு நான் நண்பனாக இருந்தாலும் எனக்கு ஆச்சாரியார் நண்பனாக இருந்தாலும்கூடப் போராட்டம் எந்த அளவுக்கும் தடைப்பட்டுவிடாது. ஏனெனில், எங்கள் போராட்டம் தனிப்பட்டவர்கள் போராட்டம் அல்ல என்பதை மேலேயே கூறிவிட்டேன்.

['விடுதலை'-தலையங்கம்—9-7-1952]

## 22. அரசியலில் ஒழுக்கக் கேடு

மனித சமுதாயத்தில் இன்று ஒழுக்கம் மிகமிகக் குறைந்துவிட்டது; சுமார் 50, 60 வருஷங்களுக்கு முன்பு இருந்த ஒழுக்கம் இன்று இல்லை.



காந்தி காங்கிரஸ் ஏற்படுவதற்குமுன் (1920-ஆம் ஆண்டிற்குமுன்) இருந்த ஒழுக்கம் இன்றில்லை. அன்று மோசமும் வஞ்சகமும் துரோகமுமே கொண்ட வியாபாரி, வக்கீல், வேசி (தேவடியாள்) ஆகியவர்களுக்குள்ளாக நல்ல யோக்கியர்கள்—ஒழுக்க சீலர்கள் என்பவர்கள் இருந்தார்கள். மற்றும் பொதுமக்களிலும், பக்திமான்கள் என்பவர்களிலும், மதத்துறையிலும், அதிகாரிகள் என்பவர்களிலும், அரசியல் துறையிலும் நல்ல யோக்கியர்கள்—ஒழுக்க சீலர்கள் என்பவர்கள் இருந்தார்கள்.

ஏதோ தொழில் முறைக்காக—ஒழுக்க ஈனமாக யோக்கியமற்ற தன்மையாக நடந்து கொள்வது என்பதல்லாமல், அது தவிர்த்த மற்ற துறைகளில் யோக்கியர்களாக அனேகம் பேர் இருந்தார்கள். சொல்லப்போனால் ஏழைகளில்—கஷ்ட ஜீவனக்காரர்களில் பெரும்பாலோர் யோக்கியர்களாகவே இருந்தார்கள்.

இப்படி இருந்ததற்குக் காரணம் என்னவென்றால், அயோக்கியத்தனங்களை—நாணயமற்ற தன்மைகளை, ஒழுக்க ஈனமான காரியங்களை மக்கள் வெறுத்தார்கள். அயோக்கியர்கள், சமூகத்தில்—சமுதாயத்தில் வெறுக்கப்படுவார்கள். எந்தக் கூட்டத்திலும் யோக்கியன், நாணயஸ்தன் என்று கருதப்பட்டவன்தான் மதிக்கப்படுவான்; அவன்தான் முதலில் பேசத்தொடங்குவான். மற்றவன் பின் அணியில் இருப்பான்—அயோக்கியர்கள் சமூக பகிஷ்காரம் செய்யப்பட்ட (குலப்பெண்)—விபசாரிபோல் தலைமறைவாக இருக்கவே ஆசைப்படுவார்கள்.

ஆனால், இன்று அந்த நிலை இல்லை. காங்கிரசுக்கு செல்வாக்கு, ஆதிக்கம் ஏற்பட்டவுடன் அயோக்கியர்களே பெரிய மனித ஸ்தானத்தையும், பிரதிநிதித்துவ ஸ்தானத்தையும் அடைந்துவிட்டார்கள். நாணயத் தவறுதலையும், ஒழுக்க ஈனமான நடத்தைகளையும், நம்பிக்கைத் துரோகங்களையும்—'சாமர்த்தியம்' என்பதாகக் கருதத் தலைப்பட்டுவிட்டார்கள். இப்படிப்பட்டவர்களைப் பொதுமக்கள் வெறுப்பது இல்லை.

இதற்கு முக்கிய காரணம், பத்திரிகைக்காரர்கள் இமாலய அயோக்கியர்களாக ஆகிவிட்டார்கள். அயோக்கியர்கள் சுலபமாகப் பிழைப்பதற்குப் பத்திரிகைத் தொழில் நல்ல வாய்ப்பாக ஆகிவிட்டது. இதனாலும், வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டு, மேல் வகுப்பார் என்பவர்களுடைய நிலைமைக்குச் சிறிது கேடு ஆரம்பமானவுடன் அவர்கள் செய்கிற அயோக்கியத்தனங்களாலும், நாணயக் குறைவான காரியங்களாலும்—அயோக்கியர்கள், காலிகள், கீழ்மக்கள் ஆகியவர்களுடைய ஆதரவினாலும் கூட்டுறவினாலும் வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டவுடன், அவர்கள் (பத்திரிகைக்காரர்கள்) அயோக்கியர்களுக்கும் கீழ்மக்களுக்கும் விளம்பரம் கொடுத்துவர, அவர்களைத் தூக்கிவிடத் துவங்கியவுடன்—'யோக்கியனாக இருக்கவேண்டும்' என்கிற ஆசையே, பின் சந்ததிக்கும்—பெரிய மனுஷன் ஆகவேண்டும் என்று எண்ணுகிற மக்களுக்கும் தேவை இல்லாமல் போய்விட்டது. உண்மையில் யோக்கியர்களாகவும் நாணயஸ்தர்களாகவும் இருந்துவந்த மக்கள் சமயத்திற்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ள முடியாமல் மறைந்துகொள்ள வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்; புதிதாக முன்னுக்கு வரும் அயோக்கியத்தனத்தில், துரோகத்தில் பயிற்சிபெற்றே வர வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்.

இந்தமாதிரி நிலை மனித சமுதாயத்தில் சகஜமாக ஏற்பட்ட பிறகும்—அதாவது, எவ்வளவு அயோக்கியனும் துரோகியும் வஞ்சகனும் மோசக்காரனும் மக்களால் வெறுக்கப்படாமல் இருக்கவும்; எவ்வளவு ஈனத்தனமான காரியம் செய்து துரோகியாக ஆகிவிட்டவனானாலும் அவனுக்குச் சமுதாயத்தில் மரியாதையும் பதவியும் பெருமையும் ஏற்பட்ட பிறகும்—இனி எவன்தான், எதற்காகத்தான் மனிதன் யோக்கியனாக இருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியவனாவான்.

படிப்பகம்

www.padippakam.com



சாதாரணமாக, மதத் துறையை, கடவுள் துறையை விட்டுவிடுவோம்; அவை இரண்டின் அஸ்திவாரமே புரட்டும், மடமையும் கொண்டதாகும்.

அவற்றை விட்டுவிட்டு, அரசியல் துறையை எடுத்துக்கொள்ளுவோம். அது உண்மையிலேயே இருந்தாகவேண்டும்; சமுதாய அமைப்பு இருக்கிறவரையில் அரசியல் அமைப்பும் இருந்தாக வேண்டும்.

வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட மாறுதலில் அரசர்கள் ஒழியப்படவேண்டியவரானார்கள். அதற்குப் பதிலாக சமுதாய வாழ்க்கை மக்களே அந்த இடத்திற்கு வரவேண்டியவர்களாக ஆனார்கள். அந்த மக்கள் தரமானது, மேலே சொன்ன வகுப்பு உணர்ச்சி காரணமாகப் பிரதிநிதித்துவத்தைப் பெரிதும் அயோக்கியர்களே பெறவேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள். இந்தப்படியான அயோக்கியர்களுக்குத் துரோகமே, நாணயக் குறைவே, ஒழுக்கக் குறைவே 'வெல்வெட்டு' மெத்தைமீது நடத்தும்படியான அவ்வளவு சுலபமான வழியாக ஆகிவிட்டது. ஒவ்வொரு பிரதிநிதியும் இந்த வழியில் பயனடையவே முயற்சிக்கிறானே ஒழிய, அதுவும் அவனவன், அவனவனுக்கு, அவனவனுடைய வாழ்வுக்குப் பிரதிநிதியாக வந்ததாகக் கருதுகிறானே ஒழிய—அவனவன் தந்திர சாமர்த்தியத்தால் பதவி பெற்றதாகக் கருதுகிறானே ஒழிய, 'இந்தப் பதவிக்கு மக்களின் ஓட்டுகளையோ, மற்றவர்கள் ஆதரவையோ பெற்று வந்தோம்' என்று 100-க்கு 5 பேர் கூடக் கருதாமல், எவ்வளவோ கீழ்த்தரமான காரியத்திற்கும், கொலை பாதகத்திற்கும் போட்டி போடத் தயாராக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அரசியல் மூலம் மக்களுக்கு என்ன பலன், என்ன பாதுகாப்பு ஏற்பட முடியும் என்பதுதான் நமது கவலை.

இந்த அயோக்கியர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நின்றால் பதவி பெற முடியாது என்கின்ற நிலையாவது இல்லையானல்—அரசர் இல்லாத அரசியலானது அயோக்கியர்கள் ஆட்சியாக முடியுமே அல்லாமல், சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய அரசியலாக ஏற்பட முடியுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

மக்கள் இப்போது செய்ய வேண்டியதெல்லாம் ஒரே ஒரு காரியம்தான். அதாவது, அயோக்கியர்களை, துரோகிகளை, நாணயம், ஒழுக்கம் கெட்ட கீழ்மக்களை வெறுக்க வேண்டும். எந்தத் துறையில் அயோக்கியர்களானாலும் துரோகிகளானாலும் பொது வாழ்வில் பிரதிநிதித்துவத்தில் கண்டிப்பாக வெறுக்கவேண்டும். மக்களிடம் இந்தக் குணம் இல்லாததாலேயே அயோக்கியர்களும், கீழ்மக்களும் சமுதாயத்தில் தலைநீட்டவும் பிரதிநிதித்துவம் பெற முன்வரவும் துணிகிறார்கள்.

அயோக்கியர்கள் எப்படியோ பணம் சம்பாதிக்கட்டும். 'குடும்ப விபச்சார வியாபாரத்தில்' மக்கள் பணம் சம்பாதிக்க நம் சமுதாயத்தில் வாய்ப்பு அனுமதிக்கப்பட்டிருப்பதால், பணம் சம்பாதிப்பதில் நமக்கு இன்று கவலை வேண்டியதில்லை. ஆனால், மக்கள் பிரதிநிதிகள் ஆவதற்கு மக்களுக்குத் தரம் வேண்டாமா?

அயோக்கியர்களையும், மக்களைக் காலித்தனத்தினால் மிரட்டி வயிறு வளர்க்கிறவர்களையும், மான ஈனம் சிறிதுமில்லாமல் சமயம்போல் எதையும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருப்பவர்களையும் பொதுமக்கள் வெறுக்காவிட்டால், மற்ற துறைகள் எப்படியோ போனாலும்—அரசியல்துறை, அதாவது ஆட்சித்துறை சிறிதும் சீர்படமுடியாது; கண்டிப்பாய்ச் சீர்படமுடியாது.

அரசியல் துறை—ஆட்சித்துறை எவ்வளவு கீழ் நிலைக்கு, ஈனநிலைக்குப் போக வேண்டுமோ அந்த நிலைக்கு இப்போது போய்விட்டது. இதில் எந்த மதமும், எந்தக் கடவுள் பக்தியும், எந்தச் சாதியும், எந்தத் துறையும் பின்வாங்கி இருக்கவில்லை.



மனித சமுதாயத்தில் ஒழுக்கமும் நல்ல அரசியலும் ஏற்படவேண்டுமானால், அயோக்கியத் துரோகிகளை, மானஈனமற்ற இழிமக்களை, நாணயம், ஒழுக்கம் அற்ற ஈனமக்களைப் பொதுவாழ்வில் தலைகாட்டாமல் அடித்து விரட்டி வீழ்த்துவதேதான் சரியான வழியாகும்.

வேறு வழியிருந்தால் சொல்லுங்கள்!

['விடுதலை'-தலையங்கம்—7-7-1952]

யோக்கியர்களே அரசியல் பொது வாழ்வுக்கு வரும்படியான நிலையை இன்னமும் நம்முடைய நாடு எய்தவில்லை. பணக்காரனுக்குப் போனதுபோக மீதிதான் பணக்காரன் அல்லாதவர்களுக்குக் கிடைக்கிறது. அப்படி மற்றவர்களுக்குக் கிடைக்கும் ஸ்தானங்களும் பணக்காரத் தன்மைக்கு எவ்வளவு அயோக்கியத்தனம், நாணயக் குறைவு, துரோக புத்தி வேண்டி இருக்கிறதோ அவ்வளவும், அதற்கு மேலும் உள்ளவர்களுக்குத்தான் பெரிதும் கிடைக்கிற மாதிரியில் இருக்கிறது. ஏதோ ஒரு சிலர் யோக்கியர்களும் இருக்க நேரலாம்; என்றாலும், அவர்கள் யோக்கியமாய் நடந்துகொள்ள முடியாத சூழ்நிலையும், யோக்கியமாய் நடந்துகொண்டாலும் பயன் ஏற்படாத சூழ்நிலையும், இருந்துவருவதால் யோக்கியமாய் நடந்துகொள்வது முட்டாள்தனம் என்று அவர்கள் கருதும்படியாக நேரிட்டுவிடுகிறது.

['விடுதலை' 23-7-1952]

## 23. புதிய சகாப்தம் காண வாரீர்!

தமிழகமாகிய—'திராவிடநாடு' தனி அரசு நாடாக, அதாவது தமிழகத்தான் அல்லாத வேறு எந்த நாட்டானது சுரண்டலும் ஆதிக்கமும் இல்லாத, முழு உரிமை நாடாக ஆக்கப்பட வேண்டும் என்பது நமது—அதாவது, திராவிடர் கழகத்தினது (ஜஸ்டிஸ் கட்சி என்பதனது) 15 ஆண்டுக்கு முற்பட்டிருந்தே செய்துவருகிற முயற்சி ஆகும். இம் முயற்சி துவக்கத்தில் தமிழக மக்களுக்குச் சற்றுப் புரியாததாகவும், அதிசயமாகவும் இருந்துவந்தபோதிலும், இன்று தமிழகத்தில் காங்கிரஸ் தவிர்த்த மற்ற யாருடைய எதிர்ப்பும் இல்லாததாகவும், யாவருடையவும் சம்மதம் பெற்றதாகவும் இருந்துவருகிறது. காங்கிரஸ்காரர்களிடையிலும் 100-க்கு 75 வீதமுள்ள மக்கள் உள்ளத்தில் தமிழகம் தனி அரசு பெற வேண்டியதுதான் என்கின்ற கருத்துத் தோன்றி வளர்ந்து வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால்,

தமிழகம் தனித்தியங்கி தனியரசு நாடாக இருக்கக் கூடாது—இருக்கவே கூடாது என்று கருதிக்கொண்டு, தமிழகத்தை—திராவிட நாட்டை வடவன் ஆட்சிக்கு உட்படுத்தி, அதை டெல்லியின் ஏகபோக சர்வாதிகார ஆட்சியாக்கினது நமது நாட்டுப் பார்ப்பனர்களே யாவர். இந்தப் பார்ப்பன மக்கள் தமிழகத்திற்கும், தமிழர் இனத்திற்கும் அய்ந்தாம் படையாக இல்லாதிருப்பார்களேயானால், தமிழகம் இந்த அளவுக்கு வடவர்களுக்கும் டெல்லிக்கும் இவ்வளவு அடிமைப்பட்ட நாடாகவும், அடிமைச் சமுதாயமாகவும் ஆக்கப்பட்டிருக்க முடியவே முடியாது எனபதாகும்.

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், காங்கிரஸ்காரர்களிடம் வெள்ளையர், 'பிரிட்டிஷ் இந்தியா'வின் ஆட்சியை ஒப்படைக்கும்போது,

'இந்தியாவில் உள்ள சகல கட்சிகளுடைய முக்கிய கோரிக்கைகளையும் திருப்திப்படுத்தும் வண்ணம் நியாயமான ஒரு திட்டமாக இந்தியாவுக்குப் பலமும், காரியசாத்தியமானதுமான அரசியல் அமைப்பை ஏற்படுத்தித் தருவதாக இருப்பதற்கு நாங்கள் ஒரு திட்டத்தை உங்களுக்கு ஒப்படை செய்கிறோம். அதாவது, பிரிட்டிஷ் இந்தியாவையும், சமஸ்தானங்களையும் அய்க்கியமாய்க் கொண்டதாகவும் அது வெளிநாட்டு விவகாரம்,



படிப்பகம்

www.padippakam.com



எனக்கு யார் செய்த தீமைகளையும் மறந்துவிடும் சுபாவம் அதிகம் உண்டு. நன்மையை மறக்கவே மாட்டேன். புதிய சகாப்தத்தை உண்டாக்கலாம்.

['விடுதலை'-தலையங்கம்—10-8-1952]

## 24. காமராசர் ஆதரிப்பு ஏன்?

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! படைத் தலைவர் அவர்களே! தளபதி அவர்களே! படை வீரர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இந்தக் கூட்டம் ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்புப் படையை வரவேற்கும் கூட்டமாகும். (படைத் தலைவரையும், தளபதியையும், படை வீரர்களையும் தந்தை பெரியார் அவர்கள் மேடைக்கு முன் நிறுத்தி கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.)

இந்தப் படையினர் சென்ற மாதம் 29 ஆம் தேதி புறப்பட்டவர்கள். கால் நடையாகவே ஏறக்குறைய 600 மைல் நடந்து சுற்றி இங்கே வந்தார்கள். வந்ததும் இங்கு வெற்றி கிடைக்கும் என்று கருதி வந்தவர்கள் அல்லர். 'இங்கே வந்ததும் சிறைக்கூடம் திறந்திருக்கும்; நாம் போய் 'ஜம்' மென்று உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொள்ளலாம்' என்று வந்தவர்கள். எப்படியோ இவர்கள் ஏமாந்துபோகும்படியான நிகழ்ச்சி நடைபெற்று எல்லோரும் மகிழும்படியாக ஆகிவிட்டது. அடுத்தாற் போல் காமராசர் மந்திரிசபை பாராட்டப்படவேண்டியது.

உங்களுக்குத் தெரியும்—நண்பர் ஆச்சாரியார் பதவிக்கு வந்ததும் நான் அவரைப் பாராட்டினேன்; மற்றவர்களைவிட ஆச்சாரியார் எவ்வளவோ மேல் என்று பேசினேன். கம்யூனிஸ்டுக்காரர்களைவிட, பிரகாசத்தைவிட, ஆச்சாரியார் பரவாயில்லை என்று துணிந்து எழுதினேன்; அவரை ஆதரித்தேன். அப்படி அவரை நான் ஆதரித்தேன் என்ற கோபத்தில் தோழர் ஜீவானந்தமும், தோழர் இராமமூர்த்தியும் அவர்களுடைய தோழர்களும் தாங்கள் போகுமிடங்களிலெல்லாம் மக்களிடம், 'இப்போது ஆச்சாரியார் மட்டுமல்ல நாட்டை ஆளுவது; ஆச்சாரியாரும், இராமசாமியும் பேசிக்கொண்டு இந்த நாட்டை ஆளுகின்றார்கள்' என்று பேசினார்கள். நானும் அதை மறுக்கவில்லை. அவர் வந்ததும் கண்ட்ரோலை எடுத்தார், நான் அதைப் பாராட்டினேன். மக்களிடம் ஓட்டுக்குச் சென்றபோது கண்ட்ரோலை எடுக்கவேண்டும் என்பதாக நாம் பேசினோம்; அப்படிப்பட்ட நல்ல காரியத்தை அவர் செய்தாரே என்று அவரைப் பாராட்டினேன். ஏனென்றால், அப்படிப்பட்ட நல்ல காரியம் செய்தால் பாராட்டி மேலும் பல நன்மைகளை நம் மக்களுக்குப் பெறல் வேண்டும் என்கின்ற எண்ணத்தில் பாராட்டினேன். அடுத்தாற்போல், அவர் கைத்தறியாளர் பிரச்சினையில் அவர்களுக்காகப் பாடுபட்டார்; அதையும் நான் ஆதரித்தேன். பிறகு தஞ்சைக்கு பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார்; அதையும் ஆதரித்தேன்.

நாம் எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டியதில்லை. திராவிடர் கழகத்தைப் பொறுத்த வரை சட்டசபைக்குப் போவதில்லை; மந்திரியாக முயல்வதில்லை; தேர்தலில் நிற்பதில்லை என்பது அனைவருக்கும் தெரியும். 'இதெல்லாம் இல்லாமல் உன்னால் என்ன முடியும்?' என்றார்கள். அதற்குப் பதில் சொன்னேன்—'யார் வந்தாலும் நமக்கான காரியங்களைச் செய்யும்படி பார்த்துக்கொண்டாலே போதும்' என்று. ஆச்சாரியார் இந்தக் கல்வித் திட்டம் குறித்து மிகவும் பிடிவாதமாக இருந்தார். அதனால்தான் நானும் மிக உண்மையாகக் கண்டித்தேன் நானே வருந்தும்படியாக, அவர் பதவியை விட்டுப் போகும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இன்றைக்குக் காமராசர் இந் நாட்டின் முதலமைச்சராக வந்துள்ளார். இனிப் பலரும் சொல்லப்போகின்றார்கள், 'காமராசரும், பெரியாரும் ஏதோ ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்



கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் அடிக்கடி இரகசியமாகச் சந்தித்துப் பேசுகிறார்கள்' என்றெல்லாம் கூறுவார்கள். இன்றைய தினம் இக் கல்வித் திட்டம் எடுபடும்படியான செய்தி வந்தது குறித்து நாம் பெருமைப்பட வேண்டியதுதான். நாடு முழுவதும் பாராட்டுக் கூட்டம் போடவேண்டியுள்ளது. பெரும்பாலும் அந்தப் புகழ் எல்லாம் காமராசருக்கே போகும்.

நாமும் இந்தத் திட்டத்தை எதிர்த்தோம்; மற்ற எல்லாக் கட்சிக்காரர்களும் இத் திட்டத்தை எதிர்த்தார்கள்; இது குறித்துக் காமராசரும் எதிர்த்துச் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லிய அதே காமராசர், தான் பதவிக்கு வந்ததும் அதை எடுக்காமல் இருப்பாரானால் என்ன ஆகியிருக்கும்? அவரும் இந்த சுப்பிரமணியம், பக்தவத்சலம் முதலியவர்களுடன் சேர்ந்துகொண்டு கல்வித் திட்டத்தை ஆதரித்துக்கொண்டு இருந்தால், என்ன ஆகியிருக்குமோ, என்னால் சொல்லவே முடியாது. இதற்குள் அடுத்த முதன் மந்திரிப் பதவிக்கு யாராவது முயன்றுகொண்டிருப்பார்கள் என்றால் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லாத மாதிரி நிலைமை இருந்திருக்கும்.

நமக்கு மகிழ்ச்சிக்குக் காரணம் திராவிடன் முதல் மந்திரியாக வந்ததாகும். காமராசர் வந்ததும் ஆச்சாரியாரின் சீடர்களுக்கு எப்படியோ இருக்கும். அதோடு, இந்த நாட்டில் இருக்கிற பார்ப்பனப் பத்திரிகைகளுக்கும், பார்ப்பனக் கூலிகளுக்கும் எப்படியோ இருக்கும். அவர்களுக்கெல்லாம் இந்த மந்திரி சபையே பிடிக்காது. ஆகவே, நாம் காமராசர் மந்திரி சபையை ஆதரித்துத்தான் தீரவேண்டும். எப்போதுமே ஆதரிக்க வேண்டியதுதானா என்பதுபற்றி இப்போது ஒன்றும் யோசிக்கவேண்டியதில்லை.

நான் எப்போதுமே சொல்லிக்கொண்டிருக்கிறேன்: 'இது சுயராஜ்யமல்ல; பார்ப்பன ராஜ்யம்' என்று; 'இது ஜனநாயகமல்ல; பார்ப்பன நாயகம்' என்று. எப்படியோ நாம் இந்த ஜனநாயகத்தின் யோக்யதையைக் கண்டுகொண்டோம். இந்த ஜனநாயகத்தின் யோக்கியதையைப் பற்றிப் பல இடங்களில் சொல்லியிருக்கின்றேன். இலண்டனில், பெர்னார்ட் ஷா என்ற அறிஞரிடம் பலர் சென்று ஜனநாயகம் என்பதற்கு விளக்கம் தரும்படி கேட்டார்கள். அவர் அதற்குக் அழகான விளக்கம் தந்தார். என்ன விளக்கம் தந்தார் என்றால்—'ஜனநாயகம் என்பது முட்டாள்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அயோக்கியர்கள் ஆளும் ஆட்சி' என்பதாக விளக்கிக் கூறினார். அது ஏறக்குறைய (கிட்டத்தட்ட) நம் நாட்டுக்கு ஏற்ற மாதிரியில் அமைந்துபோய்விட்டது. ஒருவர் கூறினார், 'இரண்டு உழக்குப் பொரிக்கு ஓட்டு வாங்கினார்கள்' என்று. ஜனங்கள் என்ன முட்டாள்களா, இல்லையா? இல்லவே இல்லை. ஜனங்களை அந்தப் பக்குவத்தில் வைத்துக்கொண்டு ஜனநாயகத்தை ஆரம்பித்தார்கள்—ஜனநாயகம் என்றால் என்ன என்பதைப்பற்றிக் கவலைப்படாமல்.

திடீரென்று அதிகாரம் செய்கின்றார்கள். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் ஜனநாயக ஆட்சி என்றால், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தானா ஆட்சி செய்தார்? இந்தக் கல்வித்திட்டத்தை நீக்குவதற்கு ஒரு மந்திரி சபையே மாறவேண்டுமா? இந்தக் கல்வித் திட்டத்தை எல்லா எம். எல். ஏ.க்களும் எதிர்த்தார்கள்; ஜில்லா போர்டுகள் எதிர்த்தன; நகரசபைகள் எதிர்த்தன; இந்த ஊரில் நடைபெற்ற பஞ்சாயத்து மாநாட்டில் வந்திருந்த 4500-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்காரர்கள் எதிர்த்தார்கள். அந்த மாநாட்டில் இந்தக் கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பேச வந்தவரை, 'போ, வெளியே!' என்று சொல்லித் துரத்தினார்களே! அதற்குத் தலைமை வகித்த சுப்பராயன் என்ன சொல்லியும், அவரைப் பேசவிடவேயில்லையே! இவ்வளவுக்கும் மதிப்புத் தராமல், 'நீங்களாக இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. இதை அந்த இராமசாமி சொல்லி நீங்கள் சொல்கின்றீர்கள்' என்றல்லவா சொல்லித் தட்டிக் கழித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



பாதுகாப்பு, போக்குவரத்து இவைகளை மாத்திரம் கவனித்துக்கொள்ளக் கூடியதான ஒரு யூனியனாகவும் இருக்கவேண்டும்.'

'மேற்படி விஷயங்கள் தவிர்த்த இதர விஷயங்களும், மற்றும் எல்லா அதிகாரங்களும் மாகாணங்களிடையே இருக்கவேண்டும்.'

'இதுவும்—இந்த அமைப்பும், 10 ஆண்டுக்கு ஒருமுறை அந்தந்த மாகாண மக்கள் சம்மதம் பெறவேண்டும்' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இதைக் காங்கிரசார் அப்படியே ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகவே 1946-47-ம் ஆண்டில் நடந்த சட்டசபைத் தேர்தலின்போது ஓட்டர் மக்களுக்கு அளித்த வாக்குறுதியில், 'இந்தத் தேர்தலில் நாங்கள் வெற்றிபெற்றால், இராஜ்யங்களுக்கு ஏராளமான அதிகாரங்களைக் கொடுத்து—அப்படிப்பட்ட இராஜ்யங்களின் கூட்டுள்ள ஒரு யூனியன் என்னும்படியான அரசியலை, அந்தந்த இராஜ்யத்தில் வயதுவந்த எல்லா மக்களுக்கும் ஓட்டுக் கொடுத்து, அந்த ஓட்டின்மீது தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக்கொண்ட சட்டசபைமூலம் அமைப்போம். அதன் பின்தான் அரசியல் சட்டம் செய்யப்படும்' என்பதாகவே வெளியிடப்பட்டது.

ஆனால், காரியத்தில் காங்கிரசார் என்ன செய்தார்கள் என்றால், இந்தப்படி வாக்குறுதி கொடுத்துத் தேர்தலில் வெற்றிபெற்று வந்ததுடன், வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, உடனே அரசியல் சட்டம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அந்த நிலையிலாவது காங்கிரசார் யோக்கியமாக நடந்துகொண்டார்களா என்றால், அப்போதுதான் மகா மகா அயோக்கியத்தனமாக நடந்துகொண்டார்கள்.

என்னவென்றால், அந்தத் தேர்தலில் வந்த மக்களிடத்தில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லாததாலும், இவர்களுக்கு ஏற்ற சூழ்ச்சி தந்திர அறிவுள்ள மக்கள் அதில் இல்லாததாலும் ஒரு தந்திரம் செய்து, அதாவது—'இந்த சட்டசபை அங்கத்தினர்கள் எண்ணிக்கை போதியதாக இல்லை; இன்னும் பலபேர் சேர்க்கப்பட்டால்தான் எண்ணிக்கை விகிதம் சரியாக இருக்கமுடியும்' என்று சொல்லி, நமது மாகாணத்திற்கு இனியும் 47 பேர்கள் வேண்டியதாக இருக்கிறது என்று சொல்லி, அந்த 47 பேரையும் மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் தெரிந்தெடுத்து அனுப்பவேண்டும் என்று திட்டம் செய்து, அந்த தெரிந்தெடுக்கப்படவேண்டிய 47 பேரும் இன்னின்னார்தான் என்ற உத்தரவையும்—ஜாபிதாவையும் காங்கிரஸ் மேலிடம் மாகாண சட்டசபை மெம்பர்களுக்கு அனுப்பிவிட்டது.

பொதுவாகவே மாகாண சட்டசபையில் அப்போது காங்கிரஸ்காரர்களே 100-க்கு 75-க்கு மேலான 'மெஜாரிட்டி'யாக இருந்தார்கள். என்றாலும், அவர்களையும் நம்பாமல் தங்களுக்கு வேண்டிய ஆட்களைக் குறிப்பிட்டே, தாக்கீது அனுப்பிவிட்டார்கள். மாகாண சட்டசபை என்பது அந்த மேலிடத்தார் கொடுத்த 'ஜாப்தா'வின்படிக்குள்ள ஆட்களையே தெரிந்தெடுக்கப்பட்டதாகச் சடங்கு செய்து, 'லிஸ்ட்' அனுப்பிவிட்டார்கள்.

இந்த மாதிரியான ஆட்களை வைத்துக்கொண்டு இவர்கள், அதாவது—காங்கிரஸ்காரர்கள், பார்ப்பனர்கள், வடவர்கள் சர்வாதிகாரமாக அரசியல் சட்டத்தைச் செய்துகொண்டார்கள்.

இப்படிப்பட்ட அரசியல் சட்டம் பொது மக்களால் செய்யப்பட்ட அரசியல் சட்டம் ஆகுமா? இதை நமது அரசியல் சட்டம் என்பதாக நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? அதுவும், இந்த அரசியல் சட்டத்தின்படி இந்த 3–4 ஆண்டுகளாக நடந்த ஆட்சித் தன்மையைப் பார்த்த பிறகும்கூட, என்றுதான் கேட்கிறேன்.

இதைப் பார்க்கிறபோது, இந்தச் சூழ்ச்சிக்கு அய்ந்தாம் படையாய் இருந்த பார்ப்பனர்கள், ஒன்று, இந்த நாட்டை விட்டு வெளியேறவேண்டும். அல்லது, அவர்கள் இந்தச் சூழ்ச்சி செய்ததற்கு வருந்தி, இந்த அரசியல் சட்டத்தை நெய்யாகக் கொண்டு ஓமம் வளர்க்கவேண்டும்.



பார்ப்பனர்கள் சரித்திரம் ஒரு காலத்திலாவது யோக்கியமானதாக இருந்திருக்கவில்லை. அவர்களது சமய சம்பந்தமான கடவுள், சாஸ்திர, புராண, இதிகாசம் என்பவற்றில் எதிலும் நாணயமோ, யோக்கியமோ காணப்படவில்லை என்பதோடு, அவர்களால் இந்த நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு எந்தக் காலத்திலும் எதிலும் தீமையே அல்லாமல், சிறு நன்மையும் ஏற்பட்டதாக இல்லை.

இவைகளையெல்லாம்விட, பார்ப்பனர்கள் இந்தக் காரியத்தில் நடந்துகொண்டது, நமது பிற்கால சந்ததிகளைப் பல தலைமுறைகளுக்குப் பழி வாங்கும் எண்ணம் கொண்டதாக இல்லாமற் போகாது என்றே கருதுகிறேன்.

ஏன்? இப்படிப்பட்ட அருமையான ஒரு நாட்டை வடநாட்டு மலைவாசி ஆதிக்கத்திற்கு அடிமைப்படுத்திய கொலை பாதகத் தனத்தை நினைத்தால்—என் வயிற்றை எரிப்பதால், என் இரத்தத்தைக் கொதிக்கச் செய்வதால், மனம் குமுறிச் சொல்கிறேன்.

இன்று தமிழகம் மாத்திரமல்லாமல், 'இந்தியா'வையே உத்திரப் பிரதேசமும் (நேரு நாடும்) பீகார் (பிரசாது நாடும்) நாடுந்தானே ஆளுகின்றன! மற்றவர்களுக்கு இதைப் பற்றிக் கவலை இல்லாவிட்டாலும், தமிழகத்தானுக்கு—திராவிடனுக்கு இதைப் பற்றி மானம், வெட்கம், உரிமை சிறிதும் இல்லாமற் போகுமா?

பார்ப்பனர்களை மன்னிப்போம்! மன்னிப்போம்! மன்னிப்போம்!

எப்போது? நம்மை மாட்டி வைத்த இடுக்கில் இருந்து நம்மை விடுவித்து விட்டால் அப்போது.

அதுவரை—வடநாடும், வடவரும் போலவேதான் நம் பார்ப்பனர்களும்—நமக்கு என்பேன்.

நம் பார்ப்பனர் நம் நாட்டை, 'நம் நாடு' என்று—அதாவது தங்கள் நாடு என்று சொல்லிக்கொண்டே, சர்வத்தையும் அன்னிய மயமாக்கி நம்மையும் கீழாக்கியதோடல்லாமல் நம்மையும் நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக்கொடுத்து, நம்மை அடிமையாக்குவதென்றால், இதை யார் பொறுக்கமுடியும்?

நம்மை, நம் தமிழகத்தை வடவனுக்கு அடிமையாக்கி மாட்டிவைத்ததை, இந்தப் பார்ப்பனர்—தாங்கள் அல்லர் என்று சொல்லமுடியுமா என்பதாகக் கேட்கிறேன்.

பார்ப்பனரிடம் அன்பாய் இருக்க எனக்கு வெகு வெகு ஆசை. ஆனால், சுதந்திர மற்று, அன்னியனுக்கு அடிமையாக, என் நாட்டை அன்னியன் சூறையாடிக் கொள்ளையடிக்க இசைந்து அன்பு காட்ட முடியுமா? பார்ப்பனத் தோழர்களே! இளைஞர்களே! சிந்தியுங்கள்!

போதும்! போதும்! உலகம் உங்களை நகைக்கிறது; வடநாட்டானும் உங்களை வெறுக்கத் தொடங்கிவிட்டான்; டெல்லிக்குப் போய்வந்த நண்பர் ஒருவர் சொன்னார்—என்னவென்றால், டெல்லியில் 'சவுத் இண்டியன்', 'சென்னையான்' என்றால் எவனுக்கும் முகம், துர்வாடையைக் கண்டால் சுளிப்பதுபோல் சுளிக்கிறதாம்.

இது அவர்களின் 'வினையின் பயன்' என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, இந்த அரசியலைக் கொளுத்த, அழிக்க ஆதரவாக இருங்கள், ஒத்துழையுங்கள்.

இருவர் நலத்திற்கே சொல்லுகிறேன். மற்ற தோழர்களையும் அழைக்கிறேன்; யாவற்றையும் மறந்துவிடலாம்.

படிப்பகம்

www.padippakam.com



இன்றைக்கு இந்த மந்திரி சபையினரும் நடுங்கிக்கொண்டேயல்லவா சொல்லியிருக்கின்றார்கள். இன்றே இந்த அரசாங்கம் இந்தத் திட்டம் ஒழிந்தது என்று சொல்ல வேண்டாமா? பத்திரிகைக்காரர்கள் எல்லாம் இதை ஒரு சிபாரிசு என்றே கூறுகிறார்கள். இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் முதன் மந்திரி. அங்கேயே இருந்தவர் கல்வி மந்திரி. அப்புறம் என்ன? யாருக்கு இவர்கள் சிபாரிசு செய்கிறார்கள்? இதை அந்தக் கூட்டத்தில்தான் ஒப்புக்கொள்ளவில்லையென்றால் இவர்கள் எல்லாம் மனிதர்களா என்கிறேன். முதலிலேயே ஏழுபேர் கொண்ட கமிட்டியில் ஆறுபேர் ஆதரித்துள்ளார்கள். பிறகு கல்வி மந்திரி சகல கட்சித் தலைவர்களையும் கூட்டியதில், அதிலேயும் இத் திட்டத்தை எடுக்கவேண்டும் என்று சொல்லியாயிற்று. இப்படி எல்லோரும் ஒப்புக்கொண்டபின் இன்னும் தாமதத்திற்குக் காரணம் விளங்கவில்லை. இத் திட்டம் நீடித்திருந்தால் நமக்கு நல்ல வேட்டைதான். இந்தத் திட்டத்தினால்தான் நாம் ஓராண்டு வேறெதிலும் கவனம் செலுத்தாமல் இருக்கவேண்டியதாகிவிட்டது.

ஆச்சாரியார் அவர்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக மட்டுமல்லாமல், வேறு பல வகையிலும் தீங்குகள் செய்ய இருந்தார். இந்தச் சுயமரியாதைத் திருமணம் பற்றி அவர் பெரிய தீங்கிழைக்க இருந்தார். அவருக்குச் சுயமரியாதைத் திருமணம் பிடிக்காது என்பதல்ல; பார்ப்பானுக்கு வரும் வரும்படி போய்விடுமோ என்பதில்தான் அவருக்குக் கவலை.

அடுத்தது, கல்லூரியில் நம் மாணவர்களைச் சேர்ப்பதில் கைவைத்தார். நம் மாணவர்களுக்கு குமாரசாமி ராஜா காலத்தில் கொஞ்சம் வசதியிருந்தது. பிறகு, இந்தக் கல்லூரியில் சேர்ப்பதில் எவ்வளவு கெடுதல் உண்டுபண்ண முடியுமோ அவ்வளவும் செய்தாகிவிட்டது. இது பற்றிக் காமராசரிடம் யாரோ சொன்னபோது அவர், 'நானும் தமிழன் தான்' என்று சொன்னாராம். ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் பார்ப்பானில் இருந்த கூன், குருடு, நொண்டி, முடம் எல்லோருக்கும் பதவி கொடுத்துவிட்டார். பார்ப்பானில் வேலைக்கு ஆள் கிடைக்காத மாதிரி எல்லாப் பார்ப்பனர்களும் பதவியில் நிரம்பிவிட்டார்கள். நாடு நம்முடைய நாடு—இதில் பார்ப்பனர்களுக்கா பதவி? சட்டத்திற்குப் பெரிய மதிப்புக் கொடுத்தவன் நான்தான். இனி அதற்கு மரியாதை கொடுத்துப் பயனில்லை என்று கருதும்படியாக ஆய்விட்டதே! அதனால்தான், 'குத்து, வெட்டு, தீ வை!' என்று சொன்னேன். அதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. என்பேரில் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. அரசாங்கத்தார் சும்மா இருக்க மாட்டார்கள்; பார்ப்பனர்களும் சும்மா இருக்க மாட்டார்கள். ஆனால், நாம்தான் கட்டாயம் வெற்றிபெறுவோம் என்கின்ற உறுதியில் இருக்கின்றோம். அதற்கெல்லாம் வேண்டிய சாதனம் இருக்கின்றது. நீங்கள் இதற்கெல்லாம் ஆதரவு தரவேண்டுமென்று விரும்புகிறேன். ஆதரவு என்றால்—நீங்களெல்லாம் நெருப்புப் பெட்டி, தீப் பந்தம் முதலியவற்றுடன் வரவேண்டும் என்பதல்ல; எங்களோடு சாதாரணமாக ஒத்துழைத்தால் அதுவே போதும்.

நீங்கள் ஒன்று நினையுங்கள்! பார்ப்பான் எவ்வளவு அக்கிரமம் பண்ணியும், கொடுமை செய்தும் எல்லாவற்றிலும் வெற்றிபெற்றே வருகின்றான். எதனால் அப்படி வெற்றி பெறுகின்றான்? அவர்கள் எல்லோரும் ஒரே மனதாக ஒற்றுமையாக இருந்து வருகின்றார்கள். அவர்களோடு போராடுவது மிகவும் கடினந்தான். திராவிடர் கழகம் தவிர, 'பார்ப்பான் ஒழியணும்' என்று எவனும் சொல்லமாட்டேன் என்கிறானே? பார்ப்பான் ஒழியணும் என்று சொல்ல நடுங்குகின்றார்களே! 'பார்ப்பானே! நாட்டை விட்டுப் போ!' என்றால்—அவன், 'எங்கே போவது?' என்று கேட்கிறான். அதற்கு, 'நீ எங்கேயாவது போ!' என்று சொல்கிறோம் நாம். 'நான் இங்கேயிருந்து எங்கே போவது?' என்றால், 'நீ எதுக்கப்பா இங்கே இருக்கவேண்டும்?' என்று கேட்கிறேன். இந்த நாட்டில் கக்கூசு எடுக்கிறவன் இருக்கணும்; சலவை செய்பவன் இருக்கணும்; ஆனால் நீ எதுக்கப்பா இருக்கணும்? இதை, 2000 ஆண்டுகளாகப் பார்த்துவிட்டுத்தானே சொல்கிறோம்?



உள்ளபடியே இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றி, நேற்று வந்திருந்த தீர்ப்பு வராமல், வேறுவிதமாக வந்திருந்தால் நடப்பே வேறுவிதமாக அல்லவா நடந்திருக்கும்! ஒரு பத்துப் பார்ப்பனர் தலை விழுந்திருக்கும்! அப்படி விழுந்தால் நம்மவரில் ஒரு அய்ம்பது பேரைச் சுடுவான். ஆனால், நம் பிணம் சுடுகாடு சேருவதற்குள் எல்லாப் பார்ப்பானும் ஓடி விடுவானே!

இந்த இராஜ்யம் நல்ல இராஜ்யமாக இருந்தால் என்ன ஆகணும்? நேற்று நடந்த தீர்ப்புக்குக் கல்வி மந்திரி இராஜிநாமா கொடுத்தாகணும். அவர் அப்படி இராஜிநாமா கொடுத்தால் என்ன ஆவார்? பழைய கவுண்டர்தான்; முக்காடு போட்டுக்கொண்டு போக வேண்டியதுதான். இன்னொருவர் சொன்னாராம், 'இந்தக் கல்வித் திட்டத்தை எடுக்கா விட்டால், ஜில்லா போர்டு தேர்தலில் நமக்கு நாமம்தான்' என்று. இப்படி இந்தத் திட்டத்தை எடுத்ததற்குக் காரணம் நம்முள் இருக்கும் ஒற்றுமைதான்.

இவ்வளவோடு இல்லை, நம்முடைய முயற்சி. நாமும் இந்த மந்திரிசபையைக் கூடுமான அளவு ஆதரிக்கலாம். நாம் ஏதோ நமக்குச் சொந்தக் காரியத்திற்காக ஏதாவது கேட்கிறோமா? இன்னும் கொஞ்ச நாளைக்காவது அவர்கள் இருக்கவேண்டும் என்றால், நாட்டு மக்களது எண்ணங்களுக்கு மதிப்பு அளிக்கவேண்டும்.

1924 முதல் 1954 வரை ஒரு தமிழன்கூட முதன் மந்திரியாக வர முடியவில்லை. சுப்பராயன், சுப்பராயலு ரெட்டியார், பிரகாசம், ஓமாந்தூர் ரெட்டியார், இராசகோபாலாச்சாரியார்—இந்த மாதிரியாக பார்ப்பானும், ஆந்திராக்காரனும்தான் இருந்திருக்கின்றார்கள். அப்படிக்கில்லாமல் முதன் முதலாகத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழன் முதலமைச்சராக வந்திருக்கின்றார். இவர் மந்திரி சபையும் 15 நாளில் தீர்ந்து போகாத மாதிரி—இவர் வாய்தா பூராவும் இருக்கிற மாதிரி இருக்கவேண்டும்.

இரண்டாவது, முதன்முறையாகப் பார்ப்பானே இல்லாத மந்திரிசபை இது. இந்தக் காரியம் மிகமிகப் பெருமையானது. இன்றைக்கே அக்கிரகாரம் பேசுகிறது, 'நம்முடைய ஆச்சாரியார் எங்கே? இந்தச் சாதாரண காமராசர் எங்கே?' என்று. நான் சொல்லுகிறேன்—போய்ப் பாரேன்; இப்போது எங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று! 'காமராசர் இந்தத் திட்டத்தை எடுத்தால் அவரை எதிர்ப்போம்' என்று சில காங்கிரஸ்காரர்கள் பேசினார்களாம்! நாளைக்கு அவர்கள் யாரை எதிர்க்கின்றார்களோ பார்க்கலாம். சட்டசபையில் இப்போதுள்ள 'திராவிடப் பார்லிமெண்டரி கட்சி'யில் 23 பேர் இருக்கின்றார்கள். நாளைக்கு அவர்கள்தாம் எதிர்க்கட்சியாய் இயங்கப் போகின்றார்கள். காமராசர் ஆட்சி இந்தக் கம்யூனிஸ்டுகளுக்குத்தான் பெரிய மண்டைக் குடைச்சல்! இந்தக் கம்யூனிஸ்டுகள் ஆச்சாரியாரிடம் நல்ல முறையில் பல பலன்களை அடைந்துவந்தார்கள். இந்தக் கம்யூனிஸ்டுகள் இந்த மந்திரி சபை மாற்றத்தைப்பற்றிச் சொன்னார்களாம், 'குடுமி போய், கிராப் வந்திருக்கிறது' என்று. 'இதனால் என்ன இலாபம்?' என்றார்களாம். இவர்களும்தானே இந்தக் கல்வித் திட்டத்தை எதிர்ப்பதுபோல் காட்டிக்கொண்டார்கள்? இப்போது, குடுமி போய் கிராப் வந்தால் என்ன செய்யும் என்று தெரிகிறதா?

ஆச்சாரியார் இப்போது அடிக்கடி எங்களை எதிர்ப்பதாகக் காட்டிக்கொள்வதன் அர்த்தம்—அவர் இந்து மகா சபைக்கு அனுகூலமாக இருக்கிறார்; அது வடநாட்டில் தற்போது சற்று வளர்ந்து வருகின்றது. அதன் மூலம் ஏதாவது பதவி அடைய முயற்சிக்கிறார். வடநாட்டில் ஏற்படப்போகும் மாறுதலுக்கு—தனக்கு ஒரு 'சான்ஸ்' கிடைக்க வேண்டும் என்பதற்காக இப்படிப் பேசுகிறார்.

இந்த நாட்டில் இருக்கும் பத்திரிகைக்காரர்களுக்குப் பெரிய வேதனை. எப்படி இந்தப் பார்ப்பான் இல்லாத மந்திரி சபையைக் கவிழ்ப்பது என்றுதான் யோசித்து வருகிறார்கள். 'தினமணி' இன்னும் ஒரு மாதத்தில் எதிர்க்கும்; 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

படிப்பகம்

www.padippakam.com



எதிர்க்கும். எல்லாவற்றிற்கும் பிறகு மெதுவாக 'இந்து' எதிர்க்கும் என்பதாகக் கூறி, படையினருக்குப் பாராட்டுகள் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

[திருவல்லிக்கேணி கடற்கரையில் சொற்பொழிவு—'விடுதலை' 15-5-1954]

தோழர்களே!

இந்த மாநாடு நல்ல, குறிப்பிடத்தகுந்த நேரத்தில் மக்கள் உள்ளத்தில் மிக்க மகிழ்ச்சி நிறைந்திருக்கும்போது நடைபெறுகிறது. முதலாவது, இந்த மாநாடு அய்ந்து வருடத்திற்கு அசைக்கமுடியாதபடி இருந்த ஆச்சாரியாரின் ஆட்சி ஒழிந்த சந்தர்ப்பத்தில் நடைபெறுகிறது. இரண்டாவது, ஒரு தமிழரது மந்திரிசபை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் நடைபெறுகிறது.

கடந்த 34 வருடத்தில் இல்லாத மாதிரி இப்போதுதான் மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன் இருந்த மந்திரிகளெல்லாம் பார்ப்பனர்களாக, ஆந்திரர்களாகத்தான் இருந்தார்கள். தமிழ் நாட்டில் ஒரு பச்சைத் தமிழனுடைய மந்திரிசபை ஏற்பட்டிருப்பது நமக்கு ஒரு பெருமை! என்னைக்கூடக் கேட்டார்கள், 'நீ ஒரு கன்னடியன்; எப்படித் தமிழனுக்குத் தலைவனாக இருக்கலாம்?' என்று. அதற்கு நான் சொன்னேன், 'தமிழனுக்கு, எவனுக்கும் யோக்கியதை இல்லையப்பா' என்றேன். இதற்குக் காரணம், ஒரு தமிழன், இன்னொரு தமிழன் உயர்ந்தவனாக இருப்பதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கவே மாட்டான். இன்னொரு அதிசயம்—இது பார்ப்பானே இல்லாத மந்திரி சபை. 1937-ல் ஆச்சாரியாருடைய மந்திரிசபையில் பாதிப்பேர் பார்ப்பனர்களாகவே இருந்தார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட மந்திரிசபைகளிலேயும் 2, 3 பார்ப்பனர்கள் இருந்தார்கள். இப்பொழுதுதான் முதன்முதலாகப் பார்ப்பனர்களே இல்லாத மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது. இன்னொரு அதிசயம், எந்த ஆச்சாரியாருக்குத் தாங்கள் நல்ல அடிமைகள் என்பதாகக் காட்டிக்கொண்டிருந்தார்களோ, அதே ஆட்களை காமராசர் தன்னுடைய அடிமையாக ஆக்கிக்கொண்டார். ஆச்சாரியாருடைய ஆட்களைக்கொண்டே அவரது கண்ணைக் குத்த ஏற்பாடு செய்துவிட்டார். இந்தக் கல்வித் திட்டத்தை யார் கொண்டுவந்தார்களோ, அவர்களது வாயாலேயே சொல்லி எடுக்கவைத்தார்.

இது நமக்குப் பெரிய வெற்றி. இந்த மகிழ்ச்சியினால், நாம் இந்த மந்திரிசபையைக் காப்பாற்றுவோம் என்று கருதுகின்றேன். இதைப் பார்த்துச் சிலர், எனக்குக் கொள்கையே இல்லை என்று சொல்லுகிறார்கள். இதைப் பத்திரிகையிலும் மொச்சைக்கொட்டை அளவு எழுத்துக்களில் போடுகிறார்கள்; இப்போது ஒரு பத்திரிகை—இப் பந்திப் பத்திரிகை—அதற்குப் பெயர் 'தினத் தந்தி'—அது நல்ல நாட்டிலிருந்தால் அதை சாக்கடைப் பத்திரிகை என்றுதான் எல்லோரும் சொல்லுவார்கள்; அந்தப் பத்திரிகை நம்மை அடிக்கடி கேலிசெய்து, மக்களை வேறு கருத்தில் திருப்புவதில் ஈடுபட்டுள்ளது. எந்தச் செய்தியிலேயும் நமக்குச் சம்பந்தமே இல்லாத மூன்றாவது ஆளையும் இழுத்துப் போட்டுத் தப்புப் பிரச்சாரம் செய்கிறது.

இந்த மந்திரி சபையைப் பற்றிப் பெரியகுளம் மாநாட்டில் அறிக்கைவிட இருந்தேன். அன்று வந்த செய்தியில் பல மந்திரிகள் பழைய மந்திரிகளாகவும், ஆச்சாரியார் மந்திரி சபையில் இருந்தவர்களே இருப்பதையும் கண்டு நிறுத்திக்கொண்டேன். ஏன் என்றால், இந்தக் காமராசர், அவர் வெளியில் சொன்னதையெல்லாம் செய்யமுடியுமோ என்று நான் கருதியதாகும். அதனால்தான், இந்த மந்திரிசபையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, 'இது, புதிய மொந்தையில் பழைய கள்!' என்று சொன்னேன். ஆனால் காமராசர், நல்ல முறையில் இவர்களைச் சமாளிப்பேன் என்கிற மாதிரி, கல்வித் திட்டத்தை எடுத்துள்ளார்.

எங்களுக்கு இரண்டொரு காரியம் செய்தாலே போதும். அது என்னவென்றால், கல்வித்திட்டம் கேடுபய்ப்பது என்று பலரும் பலவிதத்தில் ஒப்புக்கொண்ட காரியத்தை—



உடனே கவனிக்க வேண்டும் என்பது. இரண்டாவது காரியம், ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து வந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை—சட்டப்படி இருந்ததை—அல்லாடி கெடுத்து விட்டார். அதைப்பற்றிப் பெரிய கிளர்ச்சி செய்தோம். அதைக்கண்டு அப்போதிருந்த மந்திரிகள் நடுங்கி, அதற்காக அரசியல் சட்டத்தையே திருத்தும்படியாக ஆகிவிட்டது. அதன்படி ஏதோ ஒரு அளவுக்கு நம்முடைய மக்களுக்கு விகிதாச்சாரம் கிடைக்கும் வசதி ஓரளவுக்கு இருந்தது. அதை மீண்டும் இராசகோபாலச்சாரியார் நன்கு கெடுத்துவிட்டார். அதை மீண்டும் மாற்றவேண்டுமென்று சொன்னேன். அதற்கு, காமராசரிடமிருந்து என்னிடம் வந்தவர், தனக்கும் அதில் அக்கறை இருப்பதாகவும், தனக்காகவே அதைக் கவனிப்பதாகவும் சொன்னார்கள். அதனால் இதை ஆதரிக்கவேண்டும்.

இப்பொழுது இதை ஆதரிக்க இன்னொரு காரணமும் சேர்ந்துகொண்டது. இது தமிழன் மந்திரி சபை; பார்ப்பானே இல்லாத மந்திரி சபை. திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை அது ஒரு கட்சி அல்ல என்று வெகுநாட்களாகவே சொல்லி வருகிறேன். அந்தக் கொள்கையை யார் ஆதரித்தாலும் அவர்களை நம்முடைய ஆட்களாகவே கருத வேண்டும் என்று சொல்லிவந்திருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையிலும் நான் என்றும் 'கட்சிக்காரனாக' இல்லவே இல்லை. எப்பொழுதும் நான் 'கொள்கைக்காரனாக'வே இருந்தேன்.

காங்கிரசிலிருந்தபோதே நான் இந்த ஜில்லா போர்டு, சட்டசபை முதலியவற்றுக்கு நிற்கக்கூடாது என்று சொன்னேன். ஆனால், சத்தியமூர்த்தி அய்யரும், சீனிவாசய்யங்காரும்—'இது நல்ல சந்தர்ப்பம்' என்று கூறி, அதைப் பயன்படுத்திக்கொண்டு, தேர்தலில் நிற்க ஆரம்பித்தார்கள். நான் அப்போது கோயம்புத்தூரில் பேசுகையில், 'காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதே!' என்று சொன்னேன். அதற்கு என்பேரில் யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. மற்றபடி, இன்றுகூடப் பலர், வ. வே. சு. அய்யரைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள்—'அவர் பெரிய தேசபக்தர்' என்பார்கள். ஆனால், அவரைப்போல பெரிய வகுப்புவெறி பிடித்தவன் எவனுமே இல்லை. காங்கிரசில் இருந்துகொண்டே நான் அவரது வகுப்பு வெறியை எதிர்த்தேன். மற்றும், இந்த பாரதியைப்பற்றி அளப்பார்கள். இந்த ஆளும் பெரிய வகுப்புவெறி பிடித்தவர்; எதை எடுத்தாலும் 'ஆரியர்!' என்றே பாடி இருக்கிறார்.

இவர்களையெல்லாம் காங்கிரசில் இருந்துகொண்டே எதிர்த்தேன். பிறகு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்காகப் பாடுபட்டேன். அதில் ஓட்டு எடுத்திருந்தால் 100-க்கு 75 பேர் என் பக்கம் இருந்திருப்பார்கள். அதை, திரு. வி. க. விடம் சொல்லி ஏமாற்றிவிட்டார்கள். அந்தத் தீர்மானத்தை திரு. எஸ். இராமநாதன்தான் கொண்டுவந்தார்; நான் அதை ஆதரித்தேன். அதை நிர்வாகக் கமிட்டியில் விடாவிட்டாலும், பொதுக் கூட்டத்திலாவது விடுங்கள் என்றேன்; சரி என்றார்கள். அப்படி அனுமதிப்பதற்கு 30 பேருடைய கையெழுத்துத் தேவை என்றார்கள்; உடனே இராமநாதன் 50 பேருடைய கையெழுத்தை வாங்கி வந்துவிட்டார். அதை எப்படிச் சமாளிப்பது என்று விழித்தார்கள். திரு. வி. க.வுக்கு என் முன்னிலையில் அந்தத் தீர்மானத்தை நிராகரிக்க முடியவில்லை. நான் தண்ணீர் குடிக்கப்போனபோது இந்த திரு. வி. க. அதை நிராகரிப்பதாகச் சொல்லிவிட்டார். நான் வந்ததும் மக்கள் சிரித்தார்கள்; ஏன் என்று கேட்டேன். 'இப்படி—நீ கொண்டுவந்த தீர்மானத்தை நீ இல்லாதபோது நிராகரித்துவிட்டார்கள்' என்று சொன்னார்கள். உடனே நான் சத்தம் போட்டேன். பிறகு அங்கிருந்து வெளியேறினேன்.

அதே மாதிரி, நான் காங்கிரசிலிருந்தபோது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தார்கள். யாரையும் கலந்துகொள்ளாமலும், சேட்காமலும், திடீரென்று அதைக் காங்கிரஸ் பார்ப்பனர்களான சத்தியமூர்த்தி அய்யர், சீனிவாச அய்யங்கார் முதலியவர்கள் எதிர்த்து எழுத ஆரம்பித்துவிட்டார்கள். உடனே, நான் பதறி,



படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பார்ப்பனர்களின் செயலை எதிர்க்க வேண்டுமென்று தீர்மானித்தேன். உடனே நானும் வரதராஜுலுவும், திரு. வி. கவும், இராமநாதனும் சேர்ந்து யோசித்து, ஒரு அறிக்கை எழுதினோம். அப்பொழுது அதை வெளியிட எங்களுக்குச் சாதகமாக எந்தப் பத்திரிகையும் கிடையாது. ஆகவே, அப்போதிருந்த 'நவசக்தி' என்கிற பத்திரிகையில் மட்டும்தான் அதை வெளியிட்டோம். அதைக் கண்டதும் இராசகோபாலாச்சாரியார் ஓடிவந்து, 'இந்த மாதிரி அறிக்கைவிடுவது கூடாது' என்றார். அதற்கு நான், 'சத்தியமூர்த்தியும், சீனிவாசய்யங்காரும் செய்தது சரியா?' என்று கேட்டேன். பிறகு இருவருக்கும் அமைதி ஏற்படுகின்ற தன்மையில் அவர் சமாதானம் செய்து ஒரு அறிக்கை விட்டார். அதன் பிறகு தான் அந்தப் போராட்டம் நின்றது.

மற்றபடி, சமீபத்தில் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஓமாந்தூரார் கொண்டு வந்தபோது அதை ஆதரித்தோம். காங்கிரஸ்காரர்கள் போட்ட கூட்டத்தில் நாங்கள் பேசினோம்; எங்களுடைய கூட்டத்தில் அவர்கள் பேசினார்கள். உடனே, 'இந்த இராமசாமி—கறுப்புச் சட்டை போடாத இராமசாமி' என்று சொல்லி ஒழித்துக்கட்டினார்கள்.

பிறகு, தேர்தலில் கம்யூனிஸ்டுகளை ஆதரித்தோம்; நாம் படாத பாடுபட்டு, கஷ்டப்பட்டு உழைத்து வெற்றி தேடித் தந்தோம். அவர்கள் வெற்றி கிடைத்ததும் நம்மைப்பற்றி எந்தவிதமான கவலையும் படாமல், ஆந்திரப் பார்ப்பனர் பிரகாசத்திடம் போய்க் கெஞ்சினார்கள். இது கூடாது என்று நான் எண்ணினேன். இந்தச் சமயத்தில் எழுதினேன் தைரியமாக—கம்யூனிஸ்ட் மூலம் பிரகாசம் வருவதைவிட, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஆச்சாரியார் வருவது நல்லது என்றேன். ஆச்சாரியாருக்கு என் ஆதரவு முழுவதும் கிடைக்குமென்றேன். மற்றவர்கள் திட்டும் பொழுதுகூட, அவரை நான் ஆதரித்தேன்; அவர் இலஞ்சத்துக்கு வழிவிட மாட்டார் என்றேன்; இந்த எம். எல். ஏ.க்களை வாலாட்ட விடமாட்டார் என்றேன்.

உடனே அவரும் கண்ட்ரோலை எடுத்தார். அதனால், எது இல்லையென்றாலும் நாட்டிலே பொது ஒழுக்கம் குறைந்து வந்ததாவது நிறுத்தப்பட வசதியாயிற்று என்று புகழ்ந்தேன். அதனால்தான், அவருக்கு நம்பேரில் சந்தோஷம் ஏற்பட்டது. அவரும் நம் பத்திரிகையைப் பார்த்துத்தான், 'தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை'க் கொண்டுவந்தார். நம்முடைய சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை அப்படியே எடுத்துக் கொண்டு, நெசவாளருக்கு நன்மைகள் செய்தார். அதைப் பார்த்து இந்த ஜீவானந்தமும், இராமமூர்த்தியும், 'இந்த நாட்டை இராசகோபாலாச்சாரியார் ஆளவில்லை; இந்த ஈரோடு இராமசாமிதான் ஆளுகிறார்' என்றார்கள்.

இதற்கும், நான் ஆச்சாரியாரை ஆதரிப்பதில் என்ன தப்பு என்று கூறிக் கொண்டு தான் போய்க்கொண்டிருந்தேன்.

இந்தியா மந்திரி பட்டேல் சென்னைக்கு வந்தார். அப்போது, எல்லா இந்தியா மந்திரிகளுக்கும் நாம் கறுப்புக்கொடி பிடித்துக் கொண்டிருந்த நேரம். நான் அப்போது, 'பட்டேலுக்குக் கறுப்புக்கொடி பிடிக்காதே!' என்றேன். அப்போது சிலர்கூட—நான் ஏதோ பணம் வாங்கிக்கொண்டு அப்படிச் செய்ததாகச் சொன்னார்கள். நான் ஏன் அப்படிச் செய்தேன் என்றால், பட்டேல், 'தென்னாட்டில் இருக்கும் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் நியாயமானது' என்கின்ற கருத்தைக் கொண்டிருப்பவர். இது அவர் ஓமாந்தூராரிடம் சொன்ன செய்தியாகும். அதை ஓமாந்தூரார் ஒரு ஆளிடம் சொல்லி அனுப்ப, அவர் அதை என்னிடம் சொன்னார். இப்படி நம்முடைய வாழ்க்கையில், நம்முடைய சமுதாயத்திற்கு அனுகூலமானதை எல்லாம் ஆதரிப்பதில் என்ன தப்பு?

காமராசரை என்ன கடைசி வரைக்குமா ஆதரிக்கப் போகிறேன்? அது என்னவாக முடியும்? ஆச்சாரியாரை ஆதரித்த நானே—ஆச்சாரியார் ஒழியவேண்டும் என்றதோடு, ஆச்சாரியார் சாதியே ஒழியவேண்டும் என்றல்லவா சொல்லிவிட்டேன்!



நம்மைப் பொறுத்தவரையில் இலட்சியம்தான் முக்கியம். யாருடைய போக்கும் எங்களுக்கு நன்கு தெரியும். எந்தெந்தக் காரியத்தில் காமராசருக்கு உற்சாகம் கொடுக்க வேண்டுமோ அதிலெல்லாம் அவருக்கு உற்சாகம் கொடுப்பதாக இருக்கிறேன்.

[சிதம்பரம் மாநாட்டில், 22-5-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-6-1954]

## 25. மந்திரிமார்களுக்கு வேண்டுகோள்

என்னுடைய வாழ்நாளில் அரசாங்க மந்திரிகளில் பொப்பிலி அரசரைத் தவிர இன்று வரை எந்த மந்திரிகளிடமும் நேரில் சென்றோ, எழுத்து மூலமாகவோ என் கழகத்துக்காவது, பொது நலத்திற்காவது எந்த விதமான வேண்டுகோளும் செய்துகொண்டது இல்லை.

திருவாளர்கள் முத்தையா முதலியார், டாக்டர் சுப்பராயன் ஆகியவர்கள் மந்திரிகளாய் இருந்த காலத்தில், அதாவது சுமார் 1928-'29 ஆம் ஆண்டுகளில் அவர்களிடம் பொது விஷயங்களைப் பற்றி ஏதாவது கேட்டுக்கொண்டிருப்பேன். அவர்களும் 100-க்கு 90-க்கு மேற்பட்ட வேண்டுகோள்களை மதித்திருப்பார்கள். மற்றபடி, இதுவரை எந்த மந்திரிகளிடமும் என் சொந்த விஷயம் உள்பட எந்தக் காரியத்திற்கும் நெருங்கினது இருக்காது.

இப்பொழுது நான் மந்திரிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துக்கொள்ள வேண்டியவனாய் இருக்கிறேன். அதாவது, தமிழ்நாட்டிலே பாமர மக்கள் மொழியாகிய தமிழ் மொழியை அரசியல், சமுதாயஇயல் காரியங்களில் அரசாங்கம் சிறிதும் இலட்சியம் செய்வதில்லை. இது தவிர, இந்தியை நுழைத்துப் பள்ளிக்கூடங்களிலும், பரீட்சைகளுக்கும் பாடமாக ஏற்பாடு செய்து, படிக்கும் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் தொல்லைகள் ஒருபுறமிருக்க, உத்தியோகத் தகுதியைக் கொண்டுவந்து புகுத்திப் பெரும்பாலான தமிழ் மக்களை உத்தியோகத் தகுதி அற்றவர்களாக ஆக்குவது மற்றொருபுறமிருக்க, இவையெல்லாம் போதாது என்று கருதியோ என்னமோ, தமிழ் எழுதப் படிக்கப் பேசத் தெரியாத மலையாளிகளையும், கன்னடியர் (மங்களூர்க்காரர்)களையும் தமிழ் நாட்டிலே மாகாணத் தலைமை உத்தியோகம், ஜில்லாத் தலைமை உத்தியோகம், மற்றும் கெஜட் பதிவு அதிகாரிகள், கெஜட் பதிவு இல்லாத அதிகாரிகள், கமிஷனர்கள் முதலிய உத்தியோகங்களில் நியமிப்பது என்பது சர்வசாதாரண காரியமாக இருந்துவருகிறது. ஜனநாயக நாடு, சுதந்திர நாடு, மக்கள் ஆட்சி என்கின்ற அலங்காரப் பெயர்களைச் சொல்லிக்கொண்டு நடைபெறுகிற ஆட்சியில் 100-க்கு 80 பேர்களுக்கு மேற்பட்டுக் கல்வியறிவில்லாத பாமரமக்கள் நிறைந்திருக்கும் நாடு இது என்பதைச் சிறிதும் உணராமல், மேற்கண்ட மாதிரியான—நாட்டுமொழி தெரியாத அன்னிய மொழியாளர்களை அதிகாரிகளாக நியமிப்பதென்றால் குடிமக்கள் அதிகாரிகளிடம் எப்படிப் பேசமுடியும்? அதிகாரிகளுக்குக் குடிமக்கள் எந்த மொழியில் விண்ணப்பங்களையும் வேண்டுகோள்களையும் எழுத முடியும்? பெயரளவிலே, 'நாட்டில், நாட்டு மொழியை வளர்க்கிறோம்; வளர்க்கிறோம்' என்று சொல்லிக்கொண்டு அகராதி, கலைக் களஞ்சியம், பள்ளிப் பாடப்புத்தகங்கள் முதலியவைகளின் பேரால் தமிழை நாசப்படுத்தினது மாத்திரமல்லாமல் தமிழ் தெரியாத அதிகாரிகளைக் கொண்டுவந்து வைத்து, அவர்களிடம் நீதி, நிர்வாக அதிகாரங்களைக் கொடுத்து நிர்வாகம் செய்யச் செய்வது என்றால், எந்த விதத்தில் இந்த நாட்டில் இந்த நாட்டு மொழியை அரசாங்கம் ஆதரிக்கிறது என்று சொல்ல முடியும்? இங்கு, கன்னடியர்களுக்கு கன்னட ஜில்லா ஒன்று இருக்கிறது; மலையாளிகளுக்கு மலையாள ஜில்லா ஒன்று இருக்கிறது. ஆதலால், அவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்த அளவில் உத்தியோகங்கள் கொடுத்து அவர்களை அந்தந்த ஜில்லாக்களில் உத்தியோகங்களில் போடுவதில் ஆட்சேபணை இல்லை. இப்படியிருக்க,

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கன்னடியர்களையும், மலையாளிகளையும் தமிழ்நாட்டிலே கொண்டுவந்து ஏராளமாகப் புகுத்துவதற்கு என்ன காரணம்?

வெள்ளைக்காரன் ஆட்சியிலும், பார்ப்பனர்கள் ஆட்சியிலும் இதற்குக் காரணங்கள் இருக்கலாம். என்னவென்றால், பார்ப்பனர்களுடைய ஏகபோக ஆதிக்க நலத்திற்காகத் தங்களுக்குக் கிடைத்த உத்தியோகங்களைத் தவிர மீதி உத்தியோகங்களுக்குத் தமிழ், தமிழன் (திராவிட இன) உணர்ச்சி இல்லாதவர்களைப் போட்டால் தங்கள் நலனுக்கு எவ்விதக் குறைபாடும் ஏற்படாது என்று கருதி, அவர்கள் பெரிதும் தங்கட்குக் கிடைக்காத இடங்களுக்கெல்லாம் கிறிஸ்தவரையாவது, முஸ்லிம்களையாவது, அதுவும் முடியாவிட்டால் மலையாளிகளையாவது, கன்னடியர்களையாவது நியமிக்கச் செய்துவந்தார்கள். இவர்களுக்குத் தமிழர் (திராவிட) இன உணர்ச்சி ஏற்படுவதற்கு அவசியம் இல்லை; நியாயமும் இல்லை. ஆதலால், அந்தக் காலத்திற்கு அது அவர்களுக்கு நியாயமாகவும் சாத்தியமாகவும் இருக்கலாம். இப்பொழுது சென்னை அரசாங்க மந்திரி சபையில் ஒரே ஒரு கன்னட மந்திரியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் தமிழர்களாக—அதுவும் ஒரு ரெட்டி, ஒரு நாயுடு, ஒரு செட்டிகூட இல்லாத தனித் தமிழர்களாக இருக்கும்போது, இத்தனை மலையாளிகளும் இத்தனை கன்னடியர்களும் இந்த நாட்டில் எப்படி வரமுடிந்தது என்பது மிகவும் யோசிக்கத் தகுந்ததும் கண்டிக்கத் தகுந்ததும் ஆகும்.

முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், பார்ப்பனர்களும் மந்திரி சபையில் இல்லை என்றாலும் அதனால் அவர்களுக்கு ஒன்றும் முழுகிப் போகவில்லை. ஏனென்றால், இவர்கள் எல்லோரும் தங்கள் விகிதத்திற்கு மேல் அதிகமான அளவு—அதுவும் கிறிஸ்தவர்களை எடுத்துக்கொண்டால் தங்கள் விகிதத்துக்குமேல் 2, 3 பங்கு அதிகமான அளவிலும்; பார்ப்பனர்களை எடுத்துக்கொண்டால் தங்கள் விகிதத்துக்குமேல் 5, 6 பங்கு அதிகமாகவும் பதவி முதலிய சலுகைகள் அனுபவிக்கிறார்கள். இவர்களுக்கு மந்திரி பதவி இல்லை என்றால் அது தனிப்பட்டவர்களுக்கு ஏமாற்றமாய் இருக்கலாமே தவிர, அந்த மதத்தாருக்கு எந்த விதத்திலும் குறைவில்லை. தமிழர்களுக்கு மந்திரி பதவி மாத்திரம் தாராளமாக இருந்தும், அவர்கள் இனத்துக்கு இவர்களால் நியாயம் செய்யப்பட்டது என்று சொல்லுவதற்கு இடமில்லாமல் இருக்கிறது.

நாட்டிலே இவ்வளவு தூரம் இன எழுச்சியும், நாட்டு எழுச்சியும், மொழி எழுச்சியும் ஏற்பட்ட காலத்திலும் இந்த மந்திரிகள் இவ்வளவு அலட்சியமாக இருந்துகொண்டு, தங்கள் வாழ்வின் வளப்பத்தையும் பெருமையையும் மாத்திரம் கவனித்துக்கொண்டு, தங்களுக்குச் சொந்தத்தில் வேண்டியவர்களுக்கு மாத்திரம் ஏதோ ஒருசில பதவியை அளித்துக்கொண்டு, காலம் தாழ்த்தி வருகிறார்கள் என்றால்—தமிழர் இனத்துக்கே இது அவமானமும் கேடும் ஆன காரியமாகும் அல்லவா? தமிழை வளர்க்கிற சர்க்கார், தமிழுக்கு நல்லது செய்யாவிட்டாலும் தமிழர்களுக்கு மொழித் துறையில் தொல்லையாவது கொடுக்காமல் இருக்க வேண்டாமா?

சிற்சில ஜில்லாக்களுக்கு, ஆட்சியில் தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவது என்று பரீட்சை பார்ப்பது என்று அனுமதித்து உத்தியோகங்களுக்குக்கூட—ஜில்லாக்களில்கூட மலையாளிகளையும், கன்னடியர்களையும் உத்தியோகங்களில் நியமிப்பதென்றால், இதைக் 'கவலை ஈனம்' என்று சொல்லுவதா அல்லது 'சுயநல தாட்சண்யம்' என்று சொல்லுவதா என்று புரியவில்லை. தமிழ்நாட்டில் தமிழன் பதவி வகிக்கவேண்டும் என்று கேட்பது ஒரு பெரிய காரியமாய் இருந்தால், எந்த விதத்தில் தமிழ் இராஜ்யம், 'தமிழர் ஆட்சியாய்' இருக்கிறது என்று சொல்ல முடியும்?

உயர்திரு காமராசர் அவர்களை முதல்வராகக் கொண்ட சென்னை இராஜ்ய மந்திரி சபை இனியாவது இது விஷயத்தில் கவலை கொள்ளுவது பெருமைக்குரியதாகும். இது



விஷயம் பற்றி எனது பிறந்தநாள் விழா அறிக்கையின்போது குறிப்பிட்டிருந்தேன். அது முதல் இதுவரையிலும் முன்னிருந்த நிலைமை வளர்ந்ததே தவிர, சிறிதாவது கவனித்ததாகக்கூடத் தெரியவில்லை.

குறிப்பு :—கொச்சி இராஜ்யத்திற்கு திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களை திவானாகப்போட்ட காலத்தில் கொச்சியில் உள்ள மலையாளிகள் எல்லோரும் ஒன்றுகூடி எதிர்த்தார்கள். அதே கொச்சி இராஜ்யத்தில் அனேக பார்ப்பனர்கள் திவான்களாய் இருந்த காலத்தில் யாதொரு பேச்சுமூச்சும் இல்லாமல் ஏற்றுப் பெருமை அடைவதாகக் காட்டிவந்தார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

['விடுதலை'—அறிக்கை—22-4-1955]

## 26. காங்கிரசில் சேர ஆலோசனை

திராவிடர் கழகச் சார்புடையவர்களானாலும் சரி; தி. க. ஆதரவாளர்களானாலும் சரி; அவர்கள் காங்கிரசில் சேர்ந்து தொண்டாற்ற ஆசைப்படுவார்களேயானால் தாராளமாய் அவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம்.

இன்றையத் தமிழ்நாடு காங்கிரஸ் ஆட்சியை இந் நாட்டிற்கு, மக்களுக்கு நல்வாழ்வு ஏற்படப் பாடுபடும் ஆட்சி என்று சொல்லலாம். என் அனுபவத்தில், தமிழ்நாட்டு மக்களுக்கு—இந்த, அதாவது இன்றைய அளவிற்காவது நலம் ஏற்படும்படியான ஆட்சி இதற்குமுன் எப்போதுமே இருந்ததில்லை; எந்த ஆட்சியாலும் இவ்வளவு பலன் கிடைத்ததும் இல்லை; ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியினால் செய்ய முடியாத பல நலன்கள் நாட்டிற்கும்—குறிப்பாக நம் சமுதாயத்திற்கும் செய்யப்பட்டு வருகின்றன.

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி தமிழர் சமுதாயத்திற்கு அனுகூலமாக இருந்தது என்பதற்கு உதாரணம்—இந் நாட்டுப் பார்ப்பன சமுதாயம் அத்தனையும் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்ப்பாய் இருந்து, அந்த ஆட்சியைக் கவிழ்த்து, அதைத் தங்கள் சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்துவந்ததையே உதாரணமாகக் கூறலாம்.

அதுபோலவே, இன்றையத் தமிழ்நாடு காங்கிரஸ் ஆட்சியும், தமிழர் சமுதாயநலனைக் கருத்தில் வைத்துத் தமிழர் சமுதாயத்திற்கு இதுவரை ஏற்பட்டில்லாத நலன்களைக் கவனித்துச் செய்துவருகிறது என்பதற்கு உதாரணம்—பார்ப்பன சமுதாயம் முழுவதுமே தமிழ்நாடு காங்கிரசை ஒழித்துக்கட்டி—கவிழ்த்து, மறுபடியும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் அதைக் கொண்டுவரவேண்டும் என்று பாடுபடுவதே போதுமானதாகும்.

ஆனதனாலேயே, இன்றையக் காங்கிரஸ் ஆட்சியைப் பார்ப்பனர் கைக்குச் செல்ல விடாமல் காப்பது, இன்று ஒவ்வொரு தமிழனின் கடமையும் முயற்சியுமாகும்; செய்ய வேண்டிய தொண்டுமாகும்.

ஆதலாலேயே நான் கூறுகிறேன்: 'எந்தத் தமிழர் வேண்டுமானாலும்—அவர் காங்கிரசில் சேர்ந்தால் தமிழர்களுக்குத் தொண்டுசெய்ய வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதுவாரானால் தாராளமாய்க் காங்கிரசில் சேரலாம்' என்று.

பதவிக்காகவே காங்கிரசில் சேருவதும், பதவி கிடைக்கவில்லையென்று ஏமாற்றமடைந்தால் காங்கிரசை வெறுப்பதுமான தன்மையுள்ள தி. க. ஆதரவாளர்கள் எவரும் அதில் சேராமலிருப்பது நலமும் மானமுடையதுமான காரியமாகும்.

இன்று தமிழர் சமுதாய நலன் உணர்ச்சியுள்ள எந்தத் தமிழருக்கும் காங்கிரசை ஆதரித்து, காங்கிரஸ் ஆட்சியை வலுவோடு அமரச்செய்வதே சமுதாயக் கடமை என்று கூறுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



காங்கிரசுக்கும் நமக்கும் கொள்கையின் கருத்து வேற்றுமையிருந்தாலும், அதன் இன்றையச் செயல் முறையில் கருத்து வேற்றுமைக்குப் பெரிதும் இடமில்லை என்று கருதியே இப்படிக் கூறுகிறேன். நான் காங்கிரசை எதிர்த்துவந்ததற்கு முக்கிய காரணங்கள்—முதலாவது, நாம் பதவியில், உத்தியோகத்தில், நிர்வாகத்தில் மிகமிக மானக் கேடான தன்மையில் புறக்கணிக்கப்பட்டுத் தகுதி, திறமையற்றவர்கள் என்று கூறப்பட்டு, ஒதுக்கப்பட்டு வந்தோம்; வருகிறோம் என்பதேயாகும். மேலும், காங்கிரஸ் ஆட்சியில் தமிழர் 'சிறை பிடிக்கப்பட்ட அடிமை' போலவே நடத்தப்பட்டு வருகிறார்களே என்ற கவலையாலும் வெட்கத்தாலும், கல்வித் துறையில் நாம் ஒதுக்கப்பட்டு வந்த தன்மையாலுமேயாகும்.

இந்த இழிவுகளும் குறைபாடுகளும் ஒழிக்கப்படும் வழியில் நம் நாட்டுக் காங்கிரஸ் ஆட்சி திரும்பி இருக்கிறது. ஆதலால், தமிழர் எவரும் இந்தத் திருப்பத்திற்கு முட்டுக் கட்டை போடாமல் தோள்கொடுத்து ஆதரிக்கவேண்டும்.

தமிழ்நாடு காங்கிரசும் தன்னை மேலும்மேலும் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தி. மு. கட்சித் தலைவர்கள்போல் நடந்துகொள்ளாமலும், 'ஆதரவாளர்கள்' என்னும் பேரால் தி.மு.க. ஆதரவாளர்களைக் சட்டிப் பிடித்துக்கொண்டிருக்காமலும்—கட்டுப்பாடும் ஆதிக்கமும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இனியும் காங்கிரஸ் ஒரு கோஷ்டிக்கு குடும்பச் சொத்தாகவும், சிலருக்குப் பரம்பரை மான்யமாகவும் இல்லாமல், அது பாரபட்சமற்ற—கட்டுப்பாட்டிற்கு அடங்கிய பொதுச் சொத்தாக ஆக்கப்படவேண்டும்.

புது நபர்களைச் சேர்க்கவேண்டும்; புது நபர்கட்குப் பதவி கொடுப்பதில் தாராளம் காட்டவேண்டும். தலைவரை (லீடரை)த்தவிர, மற்றவர்கள் இரண்டு முறை—மிக அவசியமானால் 3 முறை மட்டும் பதவி வகித்தால் போதாதா? இப்படிக்கு இல்லாமல், ஒரு சிலரே 'சிரஞ்சீவிகளாக இருந்து வருவது என்றால் அதுவே ஸ்தாபனத்திற்கு நாளுக்குநாள் பலவீனத்தை உண்டாக்கி விடுகிறது. அன்றியும், அது எப்படி ஜனநாயகமாக முடியும்? கொள்கையை எதிர்க்காமல், செயல்முறைக்கு ஒத்துவருபவர்களை, அவர்கள் மனமொப்பி வந்தால் ஏற்றுக்கொள்வது நலமாகும்.

பதவி இல்லாததாலேயே பலர் எதிரிகளாக இருக்கிறார்கள்; எதிரிகளாக ஆகிறார்கள். அப்படிப்பட்டவர்கள்—'வேண்டாம்' என்று வாயால்தான் சொல்லலாம்; காரியத்தில் 100-க்கு 75 பேர் அப்படிப்பட்டவர்கள்தாம் இருக்கிறார்கள். இது சாதாரண மனித சுபாவம். இதையறிந்து, தலைவர் நடந்து கொள்வது நலம். 'ஜெயிலுக்குப் போனதே ஒரு யோக்கியதாம்சம்' என்றால் அது மூன்றாந்தர மக்கள் யோக்கியதாம்சமாகும்.

ஜெயில் என்பது ஒரு பூச்சாண்டி. ஜெயிலுக்குப் போன பலர் தங்கள் தரத்துக்குமேல் வாழ்வும் சுகமும் அனுபவித்தவர்களாகவே இருப்பார்கள். நான் ஜெயிலுக்குப் போன சுமார் 19 முறைகளில் 4 தரம் A, B கிளாஸ் ஏற்படாத—'C' கிளாஸ் கைதியாக மண்சட்டியிலே கஞ்சியும், சோற்று மொத்தையும் வாங்கி, கல்லையும் புழுவையும் பொறுக்கி எறிந்துவிட்டுச் சாப்பிட்டவன். இன்று காங்கிரசில் அப்படிப்பட்டவர் ஒருவர்கூட இல்லை.

இராஜாஜி அவர்களின் பக்கத்து அறையில்—நான் கம்யூனிஸ்ட் பிரச்சாரம் செய்ததற்காக சுயமரியாதைக் கைதியாக இருக்கும்போது, அங்கிருந்த காங்கிரஸ் தோழர்கள் தாங்கள் உள்ளே இருக்கிறோமே என்று கருதி மனக் குறைபட்டிருப்பார்களே யொழிய, மற்றபடி வீடு போன்ற சகல வசதிகளுடன்—ஒரு நாளைக்குப் பொங்கல், ஒரு நாளைக்கு தத்தியோதனம், அக்கார்வடிசல் (சர்க்கரைப் பொங்கல்), பாயசம், பல்காரம் முதலிய நல்ல உணவுடன்தான் இருந்தார்கள்; எனக்குக்கூட அதில் நல்ல பங்கு கிடைத்தது. ஜெயிலுக்குப் போனதற்காகவே—காங்கிரசில் ஒருவர்கூடச் சாகவில்லை. என் இயக்கத்தில் 10, 15 பேர்



செத்தார்கள்! ஆகையால், ஜெயிலுக்குப் போனதே யோக்கியதாம்சம் என்றால்—அது மூன்றாந்தர யோக்கியதாம்சமென்று மறுபடியும் சொல்கிறேன். ஜெயிலுக்குப் போகாத பார்ப்பனர்—காங்கிரசையும் காந்தியாரையும் ஆபாசமாய் வைத பார்ப்பனர்கள் எத்தனை பேர் காங்கிரஸ் ஆட்சியில் பதவி வகிக்கிறார்கள்? காங்கிரசை வைததோடு இல்லாமல், நேருவையே ஒழிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு கட்சி நடத்தும் பார்ப்பனருக்கு—கவர்னர் விருந்து கொடுக்கிறார்; இந்திய பிரசிடெண்ட் போய் அவரிடம் இரகசியம் பேசுகிறார் என்றால், மற்றவர்களுக்குக் கட்டுப்பாடு என்பது சந்தைக்கடைக் கட்டுப்பாடுதானே?

ஆகையால், இந்தச் சமயத்தில் கூடுமானவரை வெளியாட்களை இழுத்துக் கொள்வது எதிர் காலத்துக்கு நலனாகும்.

என்னைப் பொறுத்தவரை நான் காங்கிரசுக்கு எதிரியாய் இருந்தபோது எனக்கு இருந்த 'பெருமை' இப்போது எனக்கு இல்லை. கழகத்தில் கோஷ்டியும் உட்பூசலும் சதி காரியங்களும் மலிந்து வருகின்றன.

என் ஆயுள் வளருவதை ஆசைப்படுபவர்களைவிட, குறுகுவதை எதிர்பார்க்கிறவர்கள் அதிகமாகிறார்கள். முன்னைய அனுபவங்களைக் கொண்டு, இதை இயற்கை என்றே கருதி என் இஷ்டப்படி நடத்துகிறேன்.

தமிழ்நாடு காங்கிரசின் இன்றைய நிலைமையும் போக்கையும் பாதுகாக்க வேண்டும் என்கின்ற ஆசையாலேயே இதை எழுதுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—18-8-1961]

வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களில் திராவிடர் கழகத்தின் நிலை என்ன என்பது பற்றி முக்கியமாக நம் தோழர்களுக்கும், மற்றும் காங்கிரஸ் மாற்றுக்கட்சித் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் விளக்கவேண்டியது இச் சமயத்தில் அவசியம் என்று கருதுகிறேன்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு, 'திராவிடர் கழக ஆதரவாளர்களும், திராவிடர் கழகச் சார்புடையவர்களும் தங்களுக்கு அவசியம் என்றோ, சரியென்றோ பட்டால் அவர்கள் காங்கிரசில் சேர்ந்துகொள்ளுவதில் நமக்கு ஆட்சேபணையில்லை' என்று எழுதியிருந்தேன். அதைச் சில பத்திரிகைகள் சரியானபடி புரிந்துகொள்ளாமலோ, அல்லது வேண்டுமென்றே விஷமத்தனமாகவோ, 'திராவிடர் கழகத்தினர் காங்கிரசில் சேர்ந்துகொள்ளலாம்' என்று பொருள் கொள்ளுகிற முறையில் தங்கள் பத்திரிகைகளில் வெளியிட்டுக் கொண்டார்கள். அதைப்பார்த்துப் பொதுமக்களில் சிலர் குழப்பமடைந்தார்கள் என்பது ஒருபுறம் இருந்தாலும், கழகத்திலுள்ள ஒரு கோஷ்டியார் தவறுதலாக மக்களிடையில் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

நான், இதைப்பற்றி மக்களுக்கு உடனடியாக விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கருதவில்லை. ஏனெனில், கழகத்தார்கள் சேர்ந்துகொள்ளலாம் என்று நான் கருதியிருந்தால்—தெளிவாக, விளக்கமாக, சந்தேகத்திற்கிடமில்லாமல் 'கழகத்தார் இஷ்டப்பட்டவர்கள் சேர்ந்துகொள்ளலாம்' என்று எழுதியிருப்பேன். அந்தப்படி நான் எழுதாமல், 'கழகத்தின் ஆதரவாளர்களும், சார்புடையவர்களும் சேர்ந்துகொள்ளலாம்' என்று எழுதியிருக்கிறபோது கழகத்தாரோ, மற்றவர்களோ அதைப்பற்றிச் சந்தேகப்படுகிறார்கள் என்றால்—போதிய அளவு அறியும் தன்மைஇல்லை; அல்லது, வேண்டுமென்றே விஷமத்தனம் குறியாய் இருக்கவேண்டும் என்று அப்பொழுதே நான் நினைத்துப் பொதுக் கூட்டங்களில் இதைக் கண்டித்து விளக்கமும் சொல்லிவிட்டேன்.

நான், 'ஆதரவாளர்களையும், சார்புடையவர்களையும் இஷ்டப்பட்டால் காங்கிரசில் சேர்ந்துகொள்ளலாம்' என்று எழுதியதற்குக் காரணம், வரப்போகும் தேர்தலில் நல்ல அளவுக்கு பலத்தோடு காங்கிரஸ் வெற்றிபெற வேண்டும் என்கிற ஆவலால்தான் எழுதியதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



உள்ளபடியே, இப்போதைய வரப்போகும் தேர்தலாகிய பொதுத்தேர்தலில் காங்கிரஸ் சார்பாக மக்களுக்கு விளக்கமாகப் பிரச்சாரம் செய்ய காங்கிரசில் போதிய ஆட்கள் இல்லை. மாற்றுக்கட்சிக்காரர்களுக்குச் சரியானபடி பதிலுக்குப் பதில் எடுத்துச் சொல்லவோ, அவர்களது குற்றச்சாட்டுகளுக்குத் தக்க சமாதானங்கள் சொல்லவோ, காங்கிரஸ்காரர்களில் சிலரைத்தவிர மற்றவர்களுக்குப் போதிய சக்தியும், வசதியும் இல்லாமல் இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம் என்றாலும், இந்த நிலை காங்கிரசுக்கு பலக் குறைவாகக்கூடும்; இந்த நிலையில் கழக ஆதரவாளர்களும் சார்புடையவர்களும் காங்கிரசில் சேர்ந்தால் நல்லபடி விளக்கம் கொடுக்கலாம்; காங்கிரசிற்கும் பலவிதத்தில் உதவிகள் செய்யலாம்; அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் விலகிக்கொள்ளலாம் என்று கருதி காங்கிரஸ் நன்மைக்காகவேதான் இதைச் சொன்னேன்.

நம் கழகத் தோழர்கள் கழகச் சார்பிலேயே நல்லபடி விளக்கம் கூறலாம். ஆனதனாலே, அவர்கள் இதற்காகக் காங்கிரசுக்குப் போகவேண்டும் என்கிற அவசியம் இல்லை. தவிரவும், கழக ஆதரவாளர்கள், சார்புடையவர்கள் என்றால் ஒரு அளவுக்காவது சுயநலமில்லாதவர்கள் என்றேதான் குறிப்பிடவேண்டும்.

நிற்க, தேர்தலில் கழகத்தின் நிலைமை என்னவென்றால், வரப்போகும் தேர்தலிலேயே கண்ணை மூடிக்கொண்டு காங்கிரசை ஆதரிப்பதுதான் இன்றையக் கழக நிலை.

காங்கிரசில் எலெக்ஷனுக்காகக் காங்கிரசார் யார் யாரை நிறுத்துவது என்பது பற்றியோ, யார் யாரை நிறுத்துகிறார்கள் என்பதுபற்றியோ கழகத்திற்குச் சிறிதும் கவலையோ, இலட்சியமோ அடியோடு கிடையாது. அந்தப் பொறுப்பு 100-க்கு 100 காங்கிரசையே சேர்ந்ததாகும். அவர்கள் அதில் அனுபவசாலிகள்; மக்களைப் பற்றிக் கூடுமானவரை விசாரித்த உணரக்கூடியவர்கள்; உணர்ந்திருப்பார்கள்; நல்ல அளவுக்குப் பொறுப்பும் உடையவர்கள். இத்துறைகளில் அவர்களுக்குமேல், எவரைப்பற்றியும்—தெரிந்தவர்கள் என்றோ, பொறுப்புடையவர்கள் என்றோ சொல்லிக்கொள்ள முடியாது.

மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்கள்மீது ஆதிக்கம் செலுத்த அவர்களுக்கே (காங்கிரசுக்காரர்களுக்கே) முழு உரிமையும் இருக்கவேண்டும். அதன் பலன் 100-க்கு 100 அவர்களையே சேர்ந்ததாய் இருக்கவேண்டும். ஆகவேதான், காங்கிரஸ்காரர்கள் 'களிமண்ணையோ', 'மரக் கட்டையையோ' நிறுத்தினாலும் நபரைப்பற்றிச் சிறிதும் சிந்தியாமல், நமக்காக நாம் வேலை செய்வதுபோலவே பாடுபட வேண்டியவர்களாவோம். நாம், எப்படிப்பட்ட நபர்களானாலும் ஒருவரைப்பற்றிச் சிபாரிசு செய்வது என்பது பொறுப்பற்ற தன்மையும், வேண்டாத (அதிகப் பிரசங்கித்) தன்மையுமேயாகும். நிறுத்தப்பட்ட ஆட்களால் ஏற்படும் நன்மை, தீமைகளுக்குக் காங்கிரஸ்காரரையே பொறுப்பாக்குவதால்தான் தேர்தலுக்குப் பிறகு நமக்கு ஒரு நிம்மதி ஏற்பட முடியும்.

பொதுவாகவே, அரசியல் உலகம் எப்படிப்பட்டது என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். மக்கள் யாராய் இருந்தாலும் அரசியலில் சுயநலமற்று, நேர்மையாய், நாணயமாய் நடந்துகொள்ளுவார்கள் என்பது இயற்கைக்கு விரோதமான காரியமாகும். மனித சுபாவத்தைப் பொறுத்தே நான் சொல்லுகிறேன். பெரிய பெரிய 'தலைவர்களையும்', 'மகான்கள்', 'மகாத்மாக்கள்' என்பவர்களையும் குறிப்பில் வைத்துக்கொண்டுதான் இந்தக் கருத்தைச் சொல்லுகிறேனே தவிர, சாதாரண இரண்டாந்தர, மூன்றாந்தர மக்களையே மனதில் வைத்துக்கொண்டு சொல்லும் கருத்தல்ல இது. அரசியலில் யாவருக்கும் பதவிதான் இலட்சியம். இது, 'பெரிய ஆட்கள்' என்பவர்களுக்கு; மற்றபடி, 'சின்ன ஆட்கள்' என்பவர்களுக்குப் பணமும், பிழைப்பு வசதியும்தான் இலட்சியம். இதற்கு இலக்காகாதவர்கள் யார் என்பது என் கண்ணுக்குப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தும்கூடத் தென்படவில்லை.



சாதாரணமாக காமராசர் என்னைப் பார்த்து, 'உன் கழகத்திலிருந்து இரண்டு ஆட்களைக் கொடு' என்று கேட்டாலும் யாரைக் கொடுப்பது என்பதில் அனேகமாய் யாரிடமும் எனக்கே நம்பிக்கை வரமாட்டேன் என்கிறது. சிலரிடம் நம்பிக்கை வரலாமென்றால் அவர்கள் என் பேச்சை மீறவாவது துணிவார்களேயொழிய ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கமாட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில், நாம் ஏன் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது? நமக்கு என்ன அவசியம்? எந்த அளவில் எந்தக் காரியங்களை நாம் மதிக்கிறோம் என்று கருதுவதுதான் இன்று நமது கவலை. சாதாரண மக்கள் என்னைக் கேட்கலாம்: 'காமராசரிடம் மாத்திரம் எப்படி நம்பிக்கை வைத்துக் கண்மூடி ஆதரிக்கலாம்?' என்று. 'காமராசரின் இயற்கை வாய்ப்பு—என்னுடைய திட்டப்படி மனித சுபாவத்தில் 100-க்கு 90 பங்கு சுயநல நலத்துக்கு மாறுபட்டவர்கள்' என்பதாகும். மக்கள் யாவருக்கும் சுயநலம் இயற்கையே என்றாலும்—அந்தச் சுயநலம்— தேவையை, அவரவர் வாழ்க்கை நிலையைப் பெரிதும் பொறுத்தது. ஆனதால், 'காமராசர் சுயநலம்' அதிகத் தேவையையோ, சூழ்நிலையையோ, வாழ்க்கைத் திட்டத் தன்மையையோ பொறுத்திருக்க வேண்டியதில்லை என்கிற காரணம்தான்.

சாதாரண மனிதனுடைய நாணயம், ஒழுக்கம், நேர்மை என்பதெல்லாம் நூற்றுக்குத் தொண்ணூறு அவனவனுடைய இலட்சியத்தையும், தேவையையுமே பொறுத்ததாகும். காமராசரின் இலட்சியம் இப்போது இருக்கும் நிலைமைக்கு மேல் போக முடியாது; அவரது தேவை இப்போதிருக்கும் வாய்ப்புக்குமேல் ஏற்பட அவசியமே இல்லை. இந்த நிலையில், அவரது சுயநலம்—ஒழுக்கம், நேர்மை, நாணயம் இவைகளைக் கடக்கவேண்டிய அவசியமே இல்லை என்று கருதுகிறேன்.

ஒரு மடாதிபதி எப்படிக் குடும்பம் இல்லாதவனாய், கலியாணமில்லாதவனாய், பெண்டு பிள்ளைகள் இல்லாதவனாய், சொந்த வீடு, வாசல், சொத்து தேவை இல்லாதவனாய் இருக்கவேண்டும் என்று சாதாரணமாய்க் கருதப்படுகிறதோ, அதுபோல—அதிலும் சற்று மேலான நிலைமையில்—இப்படிப்பட்ட ஜனநாயகத் தன்மைக்கு ஆளைப் பொறுக்க வேண்டியது அவசியமாகும். இந்த எண்ணம், அறிவு—ஆட்சிக்காக ஆளைப் பொறுக்குபவர்களுக்கு 100-க்கு 99 பேருக்கு இருப்பதில்லை. அதனால்தான் ஜனநாயகத்தை, 'அறிவில்லாதவர்களால் பொறுக்கப்படும் சுயநலக்காரர்கள் ஆட்சி' என்று சொல்லுகிறோம்.

ஜனங்களுக்கும் அறிவிருந்து, சுயநலத்துக்கு அவசியமில்லாதவர்களாயும் பார்த்துத் தேர்ந்தெடுக்கும் தன்மை கொண்டதானால்தான் அதை நாம் ஓரளவுக்கு ஜனநாயகம் என்று சொல்லலாம். காமராசர் விஷயத்திலும் இப்படிப்பட்ட அறிவுகொண்டவர்களாக பெரும்பாலோர் இல்லாததனால், 'இருக்கிறதிலே இது தேவலாம்' என்றுதான் சொல்ல முடிகிறது. இந்த நிலையிலும் காமராசர் முழு பலத்தோடு—சாதாரணத்தில் அசைக்க முடியாத தன்மையோடு ஆட்சியில் அமரநேர்ந்தால், நாம் அடையமுடியாத பெரும்பேற்றை அடைந்தோம் என்று நன்றாகச் சொல்லலாம். அப்பொழுதும் ஜனநாயகம் என்கிற பேரால் ஒரு சர்வாதிகாரியைத் தெரிந்தெடுத்தோம் என்று மகிழ்ச்சியடையலாம்.

ஆட்சிக்கு எப்போதும் இப்படிப்பட்ட சர்வாதிகாரிகள் வேண்டும். அவர் ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் தனக்கு ஏற்படும் பலத்தின் காரணமாக சாதாரணமாகவே சர்வாதிகாரி ஆகிவிடலாம். ஆனதினாலேதான், நம்மால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் சர்வாதிகாரித்தன்மைக்கு வரக்கூடிய ஒரு சுயநலமுள்ள நபராக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

இப்போது வரும்தேர்தல் இதுவரையிலும் நடந்த தேர்தல்போல அல்லாமல், ஒரு குறிப்பிடத் தகுந்த முக்கியமான தேர்தல் ஆகும். இதில் வெற்றிபெற்றால் வாழ்வோம்; தோல்வியுற்றால் வீழ்வோம் என்பதைத் தவிர இடையில் வேறு ராஜிக்கு இடமேயில்லை.



படிப்பகம்

www.padippakam.com



ஆகவேதான், காமராசரையே நம்பி—எல்லாப் பொறுப்புக்களையும் அவர்மீதே போட்டு—அவரால் நிறுத்தப்படுகிற ஆட்களில் 100-க்கு 90 பேருக்குக் குறையாமலாவது வெற்றி பெறும்படி செய்யவேண்டியது நம்முடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'-அறிக்கை—17-11-1961]

## 27. இராஜாஜி உண்மையைக் கக்கிவிட்டார்

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்ததற்கு 'காங்கிரசின் கிளர்ச்சியும் தியாகமும் காந்தியின் ஆத்ம சக்தியும் காரணம்' என்றும், சுதந்திரம் வாங்கிக்கொடுத்தவர் காந்தியாரென்றும் பார்ப்பனர் பித்தலாட்டமும் பிரச்சாரமும் மக்களை நம்பச் செய்துவிட்டது.

இந்த எண்ணம் தவறு என்றும், சுதந்திரத்திற்கும், காங்கிரசுக்கும் அதன் போராட்டத்திற்கும் 'தியாகத்திற்கும்' சம்பந்தமில்லை என்றும், வெள்ளையன் தானாகவே வீசி எறிந்து விட்டுப்போன சுதந்திரத்தை எடுத்துக்கொள்ள இந்தியாவில் கட்டுப்பாடான வேறு கட்சிகள் இல்லாமல் காங்கிரசும், முஸ்லிம் லீகும் மாத்திரம் இருந்ததால் முஸ்லிம் லீகுக்குப் பயந்து இணங்கி, ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்குபோட்டுக் கொண்டார்கள். அதாவது அனாதியாய்க் கிடந்ததைப் பங்கு போட்டுக்கொண்டார்கள். இதுதான் சுதந்திரத்தின் சரித்திரம். இதை நான் ஆயிரக்கணக்கான தடவை சொல்லிவந்திருக்கிறேன். சர். ஆர். கே. சண்முகமும் சொன்னார். ஆனால், மக்கள் அதை ஏற்கவில்லையென்றாலும், அதை மறுக்க இதுவரை யாரும் முன்வரவில்லை என்பதோடு, இந்த விஷயம் வெளியில் மக்களுக்குத் தெரியும்படி எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை.

இன்று சுதந்திரம் பார்ப்பனர் கைவிட்டு தமிழரிடம் வந்ததும், பார்ப்பனர் இப்போது உண்மையை ஒப்புக்கொண்டதோடு வெளியிலும் தெரியும்படி கக்கிவிட்டார்கள்.

அதாவது இராஜாஜி அவர்கள் 8-ந்தேதி கோகலே ஹாலில் பேசும்போது உண்மையைக் கக்கி (வெளியிட்டு) விட்டார்.

'காங்கிரஸ் போராட்டத்தாலும், நம் போராட்டத்தாலும் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது என்று நாமெல்லாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். சுதந்திரம் கிடைத்ததற்கு வேறு காரணம் இருக்கிறது. அது என்னவென்றால், வெள்ளைக்காரர்கள் உலக யுத்தம் காரணமாய் அவரவர் கைவசமிருந்த எல்லா அன்னிய நாடுகளுக்கும் சுதந்திரம் அவர்களாகவே கொடுத்துவிட்டார்கள். அதனால் நமது நாட்டுக்கும் சுதந்திரம் வந்துவிட்டது' என்று சொல்லி இருக்கிறார்.

ஆகவே, காங்கிரசினால், தியாகத்தால் காங்கிரஸ்காரர்களுக்குப் பதவி கிடைத்து, பதவி உரிமையாகிவிட்டது என்பது உண்மை. சுதந்திரம் கிடைத்தது என்பது உண்மை அல்ல. இதை வெளியிட்டுச் சொன்னதற்கு இராஜாஜிக்கு நன்றி.

['விடுதலை'-தலையங்கம்—16 2-1965]

## 28. டாஷ்கண்ட் ஒப்பந்தம்

டாஷ்கண்ட் சமரச முடிவினால் இந்தியாவுக்கு ஓரளவு தொல்லை நீங்குகிறது; பாகிஸ்தானுக்குத் தோல்வி நீங்கிற்று. கோசிஜினுக்கு உலகப் பிரசித்தியான பெருமை கிடைத்தது.

['விடுதலை'-அறிக்கை—11-1-1966].



## 29. சிந்தியுங்கள்

தோழர்களே!

உலகிலேயே தான்பிறந்த இனத்தை அன்னிய இனத்தானுக்குக் காட்டிக்கொடுத்து உயிர் வாழ்கின்ற மக்கள் நம் இனத்தில்தான் இருக்கிறோம்.

நம்மில் பலருக்கு இன உணர்ச்சி என்பதே கிடையாது.

இன உணர்ச்சியினால் பார்ப்பான் வெகு சிறுஇனமாக இருந்தாலும் அவன் மேல் மகனாய் வாழ்ந்தான்; வாழ்கிறான்; வாழ்ந்து வருகின்றான். இனத்தைக் காட்டிக் கொடுத்து வாழும் பார்ப்பான் உலகில் எங்குமே இல்லை.

'மனைவியை அயலானுடன் கூட்டி அனுப்பியாவது உன் இனத்தைக் காப்பாற்றிக் கொள்' என்று பார்ப்பனருக்கு அறிவுரை கூறுவதுதான் இராமாயண புராணம்.

சங்கராச்சாரியார் அவர்களே பார்ப்பனருக்கு அறிவுரை கூறுகையில், 'நமக்கு எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும்—இராமாயணக் கதையை எடுத்து, அப்படிப்பட்ட கஷ்டம் வந்த காலத்தில் இராமன் எப்படி நடந்துகொண்டான் என்று பார்த்தோமானால், எப்படிப் பட்ட கஷ்டத்திலிருந்தும் மீளுவதற்கு மார்க்கம் கிடைக்கும்' என்று கூறியிருக்கிறார்.

ஆனால், நாமோ, நமக்குக் கஷ்டம் வந்திருக்க வேண்டியதே இல்லை; வயிற்றுப் பிழைப்புக்கு இராமாயணக் கதைப்படி நடந்துகொள்கிறோம்.

இதற்குக் காரணம் 'மனுதர்மம்' என்று சிலர் சொல்லலாம். ஆனால் நாம் இன்று மனித தர்மம் வரப்போகிற, வளருகிற காலத்தில் இராமாயணக் கதையை வழிகாட்டியாய்க் கொள்ளுகிறோமே, நம் இனத்தின் பெருமைதான் என்ன?

புத்தர் காலத்திற்குப் பின்பு இப்போதுதான் காமராசர் காலம் வந்திருக்கிறது. புத்தன் கையில் ஆட்சி இருந்தும் புத்தன் பிரச்சாரத்தினாலேயேதான் சில காரியங்களைச் சாதித்தான். ஆனால், காமராசர் தன் கையில் சர்வாதிகார ஆட்சி இல்லாதிருந்தும், ஆட்சியினாலேயே காரியம் சாதிக்கத் திட்டமிட்டு, மனித தர்மம் செழிக்கக் காரியம் செய்து வருகிறார்.

இதற்கு எதிர்ப்பு என்ன? எங்கிருந்து வருகிறது? என்றால் நம் இனத்தவர்களாலேயே செய்யப்படும் இனத் துரோகக் காரியமாகத்தானே இருந்துவருகிறது? இப்படிப்பட்ட இனத் துரோக ஆட்களுக்கு நம் இனத்தவர்களிலேயே சிலர் ஆதரவளிப்பது என்றால் அவர்கள் நம் மனிதர்கள்தானா? கலப்பற்ற இனந்தானா? என்று சிந்திக்க வேண்டாமா?

இத்தருணம் தவறினால் மறுதருணம் நமக்கு எப்போது வரும்? இனி வரும் தருணம் உயிரைக் கொடுக்கவேண்டிய 'பலி ஈடு' தருணந்தானே வரமுடியும்?

அதற்குள் தமிழனைப் பற்றி மற்றொரு இராமாயணம் எழுதவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமே!

சிந்திக்க வேண்டாமா?

தமிழா சிந்தி! சிந்தி! சிந்தி!

['விடுதலை'-தலையங்கம்—15-10-1966]

## 30. இன்று நடப்பது 1857-ன் சிப்பாய்க் கலகமே

இன்று இந்தியாவில் நடப்பது 1857-ல் இந்தியாவில் நடந்த 'சிப்பாய்க் கலகம்' போன்றதேயாகும்.

சிப்பாய்க் கலகமென்பது, வெள்ளையர்களால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக 'வைதிக வெறியர்' (பார்ப்பனர்)களால் பாமர மக்களைத் தூண்டிவிட்டு நடத்திய 'சீர்திருத்த விரோதக் (குழப்பமே) கலகமே'யாகும்.

படிப்பகம்

www.padippakam.com



அக் கலகக் காரணங்களில் அரசியல் (பொலிடிகல்) சம்பந்தமான வாசனைகூடக் கிடையாது என்றே சொல்லலாம். இன்றையக் கலகத்திற்கு, அதாவது 'அரசியல் கிளர்ச்சி'க்கு எப்படிப் பார்ப்பனனும், பணக்காரனும், முஸ்லிம்களும் காரணமாய்—பின்னால் தாங்குபவர்களாய் இருக்கிறார்களோ அதுபோலவேதான், அன்றையக் கலகக் காரணங்களுக்கும் பார்ப்பானும், வைதிக மனப்பான்மைகொண்ட சுயநல மராட்டிய சிற்றரசர்களும், ஜமீன்தாரர்களும், முஸ்லிம்களும் காரணமாய் இருந்திருக்கின்றார்கள். இன்றையக் காங்கிரஸ் எப்படி ஜமீன்தாரர்களை ஒழித்து, சிற்றரசர்களை ஒழித்த வந்து, சமுதாயத் துறையில் தீவிரமான சீர்திருத்தம் செய்து வருகிறதோ, அதேபோல்தான் 1857 ஆம் ஆண்டு வாக்கில் ஆங்கிலேய ஆட்சி ஜமீன்களைப் பெரும்பகுதியை அரசாங்க ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்து விட்டதுடன், சிற்றரசர்களையும், சிறிது சிறிதாக அரசாங்க ஆதிக்கத்திற்குக் கொண்டு வருவதாய் இருந்ததுடன்—தீவிரமான சமுதாய சீர்திருத்தக் காரியங்களையும் செய்யத் தொடங்கி சில காரியங்களை அமுலுக்கும் கொண்டுவந்து விட்டது.

இந்த உண்மைகளை இன்று அரசாங்கச் சார்பில் பதிப்பிக்கப்பட்ட இந்திய வரலாறு (சரித்திர) நூல்களைப் பார்த்தால் நன்கு விளங்கும்.

இந்திய வரலாறுகள் பெரிதும் பார்ப்பனர்களாலேயே எழுதப்படுவதால், அவர்கள் தங்களுக்கு எதிரான உண்மைகளை மறைத்தும், தங்கள் நலனுக்கு ஏற்றபடி உண்மையல்லாத விஷயங்களைப் புகுத்தியும், தப்பும் தவறுமாகக் கற்பனை செய்தும் எழுதி வந்ததால், இதுவரை இந்திய மக்களுக்கு இந்திய வரலாற்று உண்மைகளை அறிய முடியாமலே போய்விட்டது.

மற்றும், அக் காலப் பார்ப்பனர்களால் எழுதிக்கொள்ளப்பட்ட சமய சம்பந்தான விஷயங்கள்கூட, இன்றுவரை 100-க்கு 100 பார்ப்பனர்களே மொழிபெயர்ப்பாளர்களாய் ஆகிவிட்டதால்—சமய நூல்களில் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசங்கள் முழுவதும் அவைகளில் உள்ள ஆபாசங்கள், காட்டுமிராண்டித்தனங்கள் முதலியவற்றை விட்டும், திருத்தியும், கற்பிதம் செய்தும் 'மொழிபெயர்த்து'ப் பிரசுரித்து வெளியாக்கிவிடுகின்றார்கள்.

நம் புலவர்கள் அப்படிப்பட்ட விஷயங்களைத்தான் நம் மக்கள் இடையில் பரப்பி, அவைகளை நம்பி மதிக்கும்படி செய்துவிடுகிறார்கள் என்றாலும், நம் மக்கள் உண்மை அறியவேண்டுமென்ற ஆவலால், இப்போது நான் சிறப்புக் கட்டுரை எழுதுவதற்கு ஆதாரமாகப் பயன்படுத்திக்கொள்ளும் நூல், இன்று நடைபெறும் 1966-ம் ஆண்டில் பதிப்பித்து, நமது முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களுடைய அணிந்துரைபெற்று தமிழ்நாடு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 'இந்தியாவின் சிறப்பு வரலாறு' (An Advanced History of India) என்னும் 11 ரூபாய் விலைபோட்ட 600 பக்கமுள்ள புத்தகத்தில் உள்ள விஷயங்களாகும்.

இதை ஆங்கிலத்தில் எழுதியவர்கள் 1. டாக்கா பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ஆர். சி. மஜும்தார் எம். ஏ; பி. எச். டி., 2. திரு. எச். சி. ராய் சவுதிரி எம். ஏ; பி. எச். டி., வரலாற்றுத் துறைப் பேராசிரியர், கல்கத்தா பல்கலைக் கழகம்; 3. திரு. கே. தத்தர். எம். ஏ; பி. எச். டி., ஆவார்கள். இதைத் தமிழில் மொழி பெயர்த்தவர். திரு. ஏ. பாண்டுரங்கன் எம். ஏ., ஈரோடு மகாஜன கல்லூரி வரலாற்று விரிவுரையாளர். வெளியிட்டது தமிழ்நாடு அரசாங்கம்.

இப்படிப்பட்ட இந்த நூலில் காணப்படும் விஷயங்களையே, ஆதாரமாய் வைத்து எழுதுகிறேன். நம் நாட்டு 'அரசியல்' பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும் பார்ப்பனப் பத்திரிகைகளும் இந்த 1857 ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க் கலகத்தை, 'இந்தியாவின் முதலாவது அரசியல் போராட்டம்' என்று பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்தும் வருவதால், அதன் உண்மையை மக்களுக்கு விளங்க வேண்டுமென்பதற்கு ஆகவும், அதே கூட்டம்



இன்று இந்த நாட்டில் நடந்துவரும் குழப்பங்களையும், கலகங்களையும், நாச வேலைகளையும், 'அரசியல் கிளர்ச்சி' என்று பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்து வருவதால் பொதுமக்களுக்கு விளக்க ஆசைப்பட்டு எழுதுகிறேன்.

அதாவது, மேலே குறிப்பிட்ட 'இந்தியச் சிறப்பு வரலாறு' என்னும் புத்தகத்தில், 'இந்தியப் பெருங் கலகம்' என்னும் தலைப்பில் 1-வது பாராவாக, 'கலகத்தின் முன்குறிகள்' என்ற தலைப்பில் 1816 முதல் 1855 வரை நடந்த சிறு கலவரங்களைக் குறிப்பிட்டுவிட்டு, 2-வது பாராவில் 'கலகத்தின் காரணங்கள்' என்ற தலைப்பில் அன்றைய அரசாங்கத்தின் நாடு இணைப்புக் கொள்கையாலும், வாரிசு அற்ற சொத்துக்களை, நாடுகளை அரசாங்கத்துடன் சேர்த்துக்கொண்டதாலும்-மராட்டியர் மனதிலும், முஸ்லிம்கள் மனதிலும் அதிருப்தி ஏற்பட்டது காரணம் என்று காட்டிவிட்டு,

196-ம் பக்கத்தில் 2-வது வாக்கியமாக, 'பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியிலும் இந்தியாவில் மிக வேகமாகப் பரவிய மேற்கு நாடுகளின் நாகரிகத்தைக் கண்டு, இந்தியாவிலிருந்த பழமைப் பற்றாளர்கள் (Conservatives) மிக அச்சமடைந்தார்கள். இரயில் தந்தி போன்ற புதியன புனைதல் (Inventions), மேற்கத்திய கல்வியைப் பரப்புதல், சதி, சிசுக் கொலை ஆகிய வழக்கங்களை ஒழித்தல், இந்து மதத்தைவிட்டு விலகியவர்களின் சிவில் உரிமையைப் பாதுகாப்பதற்காக 1856-ஆம் ஆண்டில் உண்டாக்கப்பட்ட 'சமயக் குறைபாடுகளை நீக்கும் சட்டம் (Religious Disabilities Removal Act of 1856)', விதவைகள் மறுமணம் செய்துகொள்வதைச் சட்டபூர்வமாக ஆதரித்து 'இந்து விதவைகள் மறுமணச் சட்டம் 1856 (Hindu Widows Remarriage Act of 1856), சில கிறிஸ்தவ மிஷனரிகள் நேர்மையற்ற விதத்தில் வலியத் தலையிடும் போக்கு ஆகியவைகளினால் அரசாங்கம் இந்தியர்களுடைய சமூக அமைப்பை அழிக்கவும், இந்த நாட்டில் பல காலமாக இருந்துவரும் பழக்கங்களையும் முறைகளையும் மாற்றி, மேற்கத்திய முறைகளை புகுத்தவும், இந்திய மக்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றவும் முயற்சிக்கிறது என அவர்கள் எண்ணினார்கள். வஹாபி மதப்பிரிவின் (Wahabi sect) நடவடிக்கைகள், முஸ்லிம்களின் உணர்ச்சிகளைக் கொழுந்துவிட்டு எரியுமாறு செய்தன.

'வங்காளப்படை என்ற படையில் உயர் சாதியினர் அதிகமாகச் சேர்க்கப்பட்டதால், அவர்கள் சமூக உரிமைகளைப் பெரிதாக நினைத்ததால் அவர்கள் ஒழுங்கு முறைக்கு அடங்கி நடக்கவில்லை.

'அரசாங்கம் மேற்கத்தியக் கொள்கைகளைப் (மக்களிடம்) புகுத்துகிறது என்று அவர்கள் நம்பினார்கள்.'

இப்படியாகவும், மற்றும், 'இந்தியப் படைகளை இந்தியாவிற்கு வெளியில் செல்லும்படியும் அரசாங்கம் கட்டளை இட்டது; இதனால் படைக்கு அதிருப்தி அதிகமாயிற்று' என்பதாகவும் கண்டிருக்கிறது.

குறிப்பு: மனுதர்மத்தில் பார்ப்பனர் கப்பல் ஏறுவது (கடல் தாண்டுவது) கூடாத காரியம் ஆதலால் அதிருப்தி ஏற்பட்டது.

மற்றும், அதில் காணப்படுவது என்னவென்றால், 'இராணுவத்தில் இந்தியர்கள் அதிகமாக 2,33,000 பேராகவும், ஐரோப்பியர் 45,322 பேராகவும் இருந்ததால் இந்திய அரசாங்கம் இந்திய சிப்பாய்கள் தயவில்தான் இருக்கிறது' என்கின்ற எண்ணம் இந்திய சிப்பாய்கள் கொண்டு விட்டார்கள்.

இந்த நிலையில் துப்பாக்கித் தோட்டாக்களில் மிருகக் கொழுப்பு பூசப்பட்டிருக்கிறதென்ற உண்மையற்ற கதை, காய்ந்த சருகில் விழுந்த நெருப்புப் பொறிபோல் ஆகிவிட்டது என்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



இதனால் சிப்பாய்கள் சிறைச்சாலைகளுக்குள் புகுந்து சிறைகளை நீக்கி கைதிகளை விடுவித்துப் பல அய்ரோப்பியர்களைக் கொன்று, அவர்களது வீடுகளையும் கொளுத்தினார்கள் என்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1857ஆம் ஆண்டு கலகத்திற்குக் காரணங்கள் இவையே போதுமென்று கருதுகிறேன். மற்றும் பல, இந்திய சரித்திரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆனாலும், இன்று இந்தியாவில் நடைபெறும் கிளர்ச்சி என்னும் குழப்பத்திற்குக் காரணங்கள் என்ன? அதுவும் இந்தியாவின் ஆட்சிப்போக்கு, ஆட்சிக்கொள்கை, சமதர்மம், சோஷலிசக் கொள்கையேயாகும் என்று பிரகடனமானவுடன்—ஜெயில் உடைபடுவது, அதிகாரிகள் கொல்லப்படுவது, அரசாங்க காரியாலயக் கட்டடங்கள் கொளுத்தப்படுவது, பஸ்கள் கொள்ளையிடப்படுவது, மந்திரிகளும், அதிகாரிகளும் அய்கோர்ட் ஜட்ஜுகளும் ஆட்சிக்கு, ஆட்சிக் கொள்கைகளுக்கு விரோதமான கருத்துக் கொள்வது, காரியங்கள் செய்வது—முதலிய காரியங்களின் தத்துவம் என்ன? 1857ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தை விடப் பலமடங்கு அதிகமாக, அதே காரியத்திற்காக, உயர் சாதிக்காரர்களால்—வைதிக வெறியர்களால் செய்யப்படும் யுத்தம் அல்லவா? என்று கேட்கிறேன்.

ஆனால், அன்று வெள்ளையன் துணிச்சலுடன் எதிர்த்து நின்று வெற்றிபெற்றான்.

இன்று சேனாதிபதி இருக்கிறாரேயொழிய, விஸ்வாசமுள்ள சேனை இல்லையே! சிப்பாய்க் கலக நாளில் இருந்த சிப்பாய்கள் போல்—பல துரோக மந்திரிகளும், துரோக உணர்ச்சி உள்ள அதிகாரிகளுந்தான் மிதந்து காணப்படுகிறார்கள்.

சிப்பாய்க் கலகத்தின்போது சிப்பாய்கள் பேரால் ஒரு கிழட்டுத் துலுக்கனை சிம்மாசனம் ஏற்றியமாதிரி, இன்றையச் சிப்பாய்கள் மிகமிகக் கீழ்த்தரமான மக்களை சிம்மாசன மேற்றப் பார்க்கிறார்கள்.

முடிவில் வெற்றி நமதே என்றாலும், பல தொல்லைகளுக்கு நாம் ஆளாகவேண்டி இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு உறுதியுடனிருக்க, தோழர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

['விடுதலை' 16-10-1966]

## 31. தேர்தல் படிப்பினை

1. பார்ப்பனர்கள் வெற்றி பெற்றுவிட்டனர்; பார்ப்பனர் ஆதரவில் பணக்காரரும் வெற்றி பெற்றுவிட்டனர்.

2. சோஷ்யலிஸம், சமதர்மம் பற்றி நம் மக்கள் கவலையற்றவர்களாக நடந்து கொண்டார்கள்.

3. எதிரிகளும் பொய்யும், புரட்டையும் ஆயுதமாகக்கொண்டு போராடினார்கள்.

இவைகளுக்குத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஆட்சி தெரிந்தோ, தெரியாமலோ நல்ல ஆதரவளித்து வந்திருக்கிறது. தங்கள் தங்களை முக்கியப்படுத்திக்கொண்டு, காங்கிரஸ் வெற்றி பெறவேண்டும் என்பது பற்றி காங்கிரஸ்காரர்களில் மிகப் பெரும்பாலானவர்களுக்கு வேலையில்லாமலேயே இருந்துவந்தது.

பொதுவாக, காமராசர் தோல்வியைத் தவிர, மற்ற தோல்வி எதுவும் எனக்கு அவ்வளவாகக் கவலை தரவில்லை. நமது மக்கள் ஜனநாயக உரிமைக்குத் தகுதியற்றவர்கள் என்பது எனது வெகுநாளைய கருத்து. இப்போதைய வெற்றியை ஏற்றுக்கொண்டும் என்பதில், இந்த வெற்றியை அளித்த மக்களின் யோக்கியதையைச் சரிவர நிர்ணயிப்போமானால், நாம் ஒன்றும் தனி முயற்சி எடுத்துப் பாடுபட வேண்டியதில்லை.



17-9-1967-ல் திருச்சியில் நடைபெற்ற பெரியார் ஈ. வெ. ரா. சிலை திறப்பு விழாவில் பேருரையாற்றிய முதலமைச்சர் C. N. அண்ணாதுரை அவர்களுடன் பெரியார் ஈ. வெ. ரா.

படிப்பகம்

www.padippakam.com



மற்றும், நம் உயிர் போன்ற கொள்கைகளுக்கு இந்த ஆட்சியில் கேடு நேராதவரை, ஆட்சியின் போக்கைப்பற்றி நாம் கவலைப் படவேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறோம். பொதுவாக, இதுபோன்ற பார்ப்பனர் வெற்றி (பார்ப்பனரல்லாதார் தோல்வி)பற்றி எனக்கு இதற்குமுன் மூன்று அனுபவங்கள் உண்டு. மூன்றிலும் பார்ப்பனர் வெற்றி நிலைத்தபாடில்லை. ஆதலால், இன்றையப் 'பார்ப்பனர் வெற்றி' பற்றியும் ஒன்றும் மூழ்கிப் போய்விடவில்லை என்றே நம் மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நானும் அதிகக் கவலைப்படவில்லை.

பார்ப்பனரின் வெற்றியான இந்த வெற்றி நமக்குக் கேடாக அமையுமாதலால், அதை மாற்றுவதற்கு நம் மக்கள் இயற்கையாக, நமக்குக் கிடைக்கப்போகும் ஆதரவுகளை எதிர்பார்த்துச் சற்றுப் பொறுமையாக இருக்கவேண்டும் என்றே கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, நம் நாட்டுக்கு இப்படிப்பட்ட ஓர் நிலை வரக்கூடும் என்று கருதியே, 1963-லேயே காமராசர் தமிழ்நாட்டின் முதல் மந்திரி பதவியை விட்டு, அகில இந்தியக் கட்சிப் பணிக்குச் செல்ல முடிவு செய்தபோதே, நான் பத்திரிகையில் எழுதி இருப்பவை அல்லாமல் காமராசருக்கே ஒரு தந்தி கொடுத்திருக்கிறேன். அந்தத் தந்திக் குறிப்பு:

**'Either of your own accord or on the advice of others, your resignation of Chief-ministership will be suicidal to Tamilians, Tamilnadu and yourself!'**

'தாங்களாகவோ, பிறர் ஆலோசனையின் பேரிலோ தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவியைத் தாங்கள் ராஜினாமா செய்வதானது தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், தங்களுக்கும் தற்கொலைக் கொப்பானதாகும்!' என்பதாக, பதவி விலகுவதற்கு முன்னதாகவே கொடுத்திருக்கிறேன்.

அவர் விலகியதின் பயனாகத் தமிழ்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமான ஆட்சி ஏற்படுவதுடன், பொறுப்புள்ள ஆட்சி அமைவதற்கில்லாமலேயே போய்விட்டது. வடநாட்டிலும் பொறாமை, துவேஷம், கோஷ்டி ஏற்பட இடம் ஏற்பட்டுவிட்டது.

காமராசர் தோல்வியைப்பற்றிப் பலர் என்னிடம் வந்து துக்கம் விசாரிக்கும் தன்மை போல தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் அளித்த ஆறுதல் 'பிப்ரவரி 23-ந்தேதி தோல்விச் செய்தியைப்பற்றிக் கவலைப் படுவதைவிட 1966 நவம்பர் 7-ந்தேதி டெல்லியில் நடைபெற்ற கொலை முயற்சியில் அவர் உயிர் தப்பினதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுங்கள்' என்று சொல்லி அனுப்பினேன். நானும் அப்படியே நினைத்துத்தான் சரிப்படுத்திக்கொண்டேன்.

இனி, நமது வேலை நமது கொள்கைகளைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யவேண்டியதும், அதனால் ஏற்படும் பலாபலன்களுக்கு நாம் தயாராக இருக்க வேண்டியதுமே நமது கடமையாகும்.

['விடுதலை'–தலையங்கம்—27-2-1967

## 32. என் ஆதரவு

இன்றைய தி.மு.க. மந்திரிசபை ஆட்சிக்கு நான் (சு.ம.–தி.க.) 'எதிர்ப்பு தெரிவிக்க மாட்டேன்' என்றால், 'வம்புச் சண்டைக்குப் போக மாட்டேன்' என்பதுதான் கருத்து. இந்தக் கருத்து எனது அறிக்கையிலேயே புதைந்து இருக்கிறது. தி.மு.க. வெற்றி பெற்றவுடன் என்னைக் காணவந்த எல்லோரிடத்திலும், நமது கழகத் தோழர்களிடமும் இதைத் தெரிவித்து இருக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



உண்மையாகச் சொல்லுகிறேன், காமராசரைத் தவிர்த்து காங்கிரசில் இருக்கும் எவரையும்விட தி.மு.க.வின் தலைவர் தரத்தில் இருக்கும் எல்லோரிடமும் எனக்குக் கவர்ச்சி இருக்கிறது. அவர்கள் (தி.மு.க.) என்னிடம் துவக்கம் முதல் இன்றுவரை தாட்சண்யமாக (நாகரிகமாக) நடந்து வந்திருக்கிறார்கள். நான் அவர்களை (ரிசர்வேஷன்) மீதி இல்லாமல் எவ்வளவு கண்டித்து கடும், குறைவான வார்த்தைகள் பயன்படுத்திய காலத்தும் இவர்களில் (தி.மு.க. தலைவர்கள்) ஒருவர்கூட என்னைக் கடிந்தோ, குறைகூறியோ, எந்தவிதமான குற்றம் சாட்டியோ, தரக் குறைவாகவோ ஒரு வார்த்தைகூடச் சொன்னது கிடையாது. இதை நாங்கள் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்களில் (தி.மு.க.) சிலர் அதிகமாக சந்திக்கப்பட நேரவில்லை என்றாலும், நேர்ந்தபோது பழைய முறையிலேயே நடந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய மந்திரிகளில் யாரும் திருவாளர் பக்தவத்சலத்தைவிடக் கேடாகவும், மோசமாகவும் நடந்துகொள்ள மாட்டார்கள் என்றே தோன்றுகிறது.

எனது கொள்கை—சாதி ஒழிப்பு, பகுத்தறிவு ஜாதி ஒழிப்பு பூரணமாக ஏற்படும் வரை வகுப்புவாரி உரிமை. இவற்றிற்குக் காங்கிரஸ் ஆட்சி எனக்குக் கூடிய உதவிகூடச் செய்யவில்லை என்பதோடு, ஆட்சியில் காங்கிரஸ் குழுவில் பலர் எதிரியாகவும் இருந்தார்கள்.

இவர்கள் (தி.மு.க.) உதவி செய்வார்களா என்றால், இன்றுவரையில் இவர்கள் இந்தக் கொள்கைக்கு மாறாகப் பேசியதாகக் காணவில்லை. இனியும் உதவி செய்யா விட்டாலும் எதிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

இப்படியே (தி.மு.க.) இருப்பார்களேயானால் நான் ஏன் அவர்களோடு மோதிக் கொள்ள வேண்டும்?

தி.மு.க.வைச் சேர்ந்த தலைவர் தரத்திலில்லாதவர்களில் ஆங்காங்குள்ள சிலர் தரக்குறைவாய் நடந்து கொள்ளலாம். அதைப்பற்றி நம்மவர்கள் இலட்சியம் செய்யாமல் நமது பிரச்சாரத்தை நடத்தவேண்டும். இந்தக் காரியம் செய்யமுடியாமல் எதிர்ப்பு வரும் போது பார்த்துக்கொள்ளலாம்.

ஏனென்றால், தி.மு.க. தலைவர்கள் எல்லோரும் பகுத்தறிவுவாதிகள். எல்லோருமே தமிழர்கள் (பார்ப்பனரல்லாதார்). இவர்கள் எளிதில் நம் கொள்கை விஷயத்தில் நம்மை எதிர்க்கவோ, தொல்லை கொடுக்கவோ வரமுடியாது.

நாம் காங்கிரசைக் கொள்கைக்காகத்தான் ஆதரித்தோம்; ஆதரிக்கிறோம்; ஆதரிக்கப் போகிறோம் என்பது பெரும் அளவுக்கு உண்மையானால், இன்றைய (தி. மு. க.) ஆட்சியையும், நம் கொள்கைக்கு மாற்றம் இல்லாதவரை, எதிர்ப்பு இல்லாதவரை அவசரப் பட்டு (ஆதரிக்காவிட்டாலும்) எதிர்க்காமலாவது இருக்கவேண்டியது நம் கடமையா, அல்லவா, என்று நம் கழகத் தோழர்களைச் சிந்திக்கவேண்டுகிறேன்.

மற்றும், சமதர்மத்திற்கு—சோஷ்யலிசத்திற்கு எதிராக தி.மு.க.வினர் பேசமாட் டார்கள்; பேசமுடியாது. பேசினால், அவர்களே எதிர்ப்புக்கு இடம் கொடுக்கிறார்கள் என்பதுதானே அதன் முடிவாகும். ஆகவே, தி.மு.க. வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது பார்ப்பனருக்கு ஒரு பெரிய நெருக்கடியும், தர்ம சங்கடமுமான நிலையாகும் என்பதோடு, தி.மு.க.வுக்கும் ஒரு பெரிய சோதனைக் காலம் என்றுதான் சொல்லவேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் இந்த நிலையில் எப்படி நடந்து கொள்வார்களோ நமக்குத் தெரியாது. பொதுவாக காங்கிரசில், காங்கிரஸ் ஸ்தாபனத்திலும், கொள்கையிலும் உண்மைப் பற்றுள்ளவர்கள்—ஒரு சிலர் (வெகு சிலரைத்) தவிர மற்றபடி தலைமைத் தரத்தி லாகட்டும், மந்திரி தரத்திலாகட்டும், முக்கிய பணியாளர் தரத்திலாகட்டும் யார் இருக் கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு சமயம் காமராசர் கண்களுக்குப் பலர் தென்படலாம். அதைப்பற்றி இப்போது இதில் நான் ஒன்றும் சொல்ல இஷ்டப்படவில்லை.



பொதுவாகச் சொல்லுகிறேன். இன்றைய மந்திரிகளுக்குப் பார்ப்பனர்களால்தான் நெருக்கடியும், கெட்ட பெயரும், காலாவதியும் வந்தால் வரலாமே தவிர நம்மால்—மக்களால் வராதென்றே கருதுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—6-3-1967]

## 33. மந்திரிகள் சிந்தனைக்கு

புதிய மந்திரிகள் அனுபவமில்லாதவர்கள்; அவசரப்படுபவர்கள்; எதையாவது சொல்லி மக்களை ஏய்க்கப் பார்ப்பவர்கள் என்பதைப் பதவிக்கு வந்த நான்கைந்து நாட்களுக்குள் காட்டிக்கொண்டார்கள்.

அரிசி விஷயத்தில், நிலவரி விஷயத்தில், லெவி விஷயத்தில் இவர்கள் வாக்குறுதி களுக்குப் பத்திரிகைக்காரர்கள் ஆதரவில் தப்பிப் பிழைக்க வேண்டியவர்கள் ஆகிவிட் டார்கள்.

இது மாத்திரமல்லாமல், 'ஏற்கனவே இந்தப் பிரச்சினைகளில் பொறுப்பு வகித் திருந்தவர்களையும் கலந்து பேசி, பலதரப்பட்ட ஆலோசனைகளையும் பரிசீலனை செய்யும் முன் அவர்கள் அவசரப்பட்டு எதுவும் சொல்ல விரும்பவில்லை' என்று ஜாடையாக மந்திரிகளுக்கு அறிவுறுத்தி இருக்கிறது 'தினமணி' [10 3-1967]

தேர்தல் காலத்தில் வாக்குறுதிகள் கொடுப்பது என்பது எப்படி இருந்த போதிலும், நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிலையில் மேலும் பல புது வாக்குறுதிகளைத் தாராளமாகத் தருவது புத்திசாலித்தனமான காரியமாகுமா?

தி. மு. க. மந்திரிகள் வாக்களித்து மக்களுக்கு ஆசைகாட்டிய, வண்டி வண்டியான வாக்குறுதிகளில் இதுவரை ஒன்றைக்கூட நிறைவேற்ற முடியாமல் தத்தளிப்பதுடன், 'பதவிக்கு வந்தவுடன் மறுநாளே செய்வோம்' என்று வாக்களித்தவற்றில் எல்லா விஷயங்கள் பற்றியும் பேசி இருப்பதில் ஒன்றைக்கூட நிறைவேற்றியதாகவோ, நிறை வேற்றுவதாகச் சொன்னவைகளில் புத்திசாலித்தனமாகவோ சொன்னதாகவும் இல்லை.

அரிசி விஷயத்தில், மலையாளம் போகும் அரிசியைத் தடுப்போம் என்றார்கள். பிறகு 'தினமணி' அதற்குச் சொன்ன வியாக்கியானத்தில் 'இந்த அரசாங்கத்தால் அதைத் தடுக்க முடியாது; அரிசியை வெளி மாகாணங்களுக்கு அனுப்புவதும், தடுப்பதும் மாகாண அரசாங்கத்தின் கையில் இல்லை; இது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது' என்று பளீரென்று எடுத்துக்காட்டிவிட்டது.

மற்றும், நெல் (லெவி) கொள்முதல் விஷயம் பெரிய குழப்பத்திற்குள்ளானது என்று காட்டப்பட்டுவிட்டது. பூமியை-உற்பத்தியைத் தரம்பிரிப்பது மிகமிகக் கடினம் என்று காட்டப்பட்டுவிட்டது. கிராமாதிகாரிகளையும் கீழ்ப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளையும் நம்பி ஆகவேண்டும். இவர்கள் மாமூல் பரம்பரையினராவார்கள். ஏனெனில், இவர்கள் சம்பளம் ஒரு பியூன் சம்பளத்தைவிடக் குறைவானது. வாழ்க்கையோ தாசில்தார் வாழ்க்கைக்கு இளைக்காதது! இவர்களுக்கு மேலதிகாரிகளுக்கு சப்ளை முதலிய தொல்லை களுமிருக்கின்றன. இதையெல்லாம் விட மந்திரிகளுக்கு இந்த விஷயங்களில் ஏ, பி, சி கூடத் தெரியாது. 'லெவி'யில் என்ன சீர்திருத்தம் செய்தாலும் சிப்பந்திகளுக்கு வழியாகுமே தவிர, பிள்ளை பிழைக்காது என்றுதான் சொல்லி ஆகவேண்டும்.

பூமிகளுக்கு நிலவரி முறையிலும் பெரும் குழப்பத்திற்கு உள்ளான காரியமாகும்.

கிரமப்படி பொறுப்புள்ள, நாணயமான அரசாங்கமானால் நிலவரியை உயர்த்த வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



நான்கு, அய்ந்து ஏக்கராக்களுக்கு உட்பட்ட நிலமுடையவர்களுக்கு வரிகூடாது என்று சொன்ன காலம் ஒரு ரூபாய்க்கு 6 படி, 5 படி விற்றகாலம். ஒரு கலம் 1½ ரூபாய், 2 ரூபாய் விற்ற காலம்! போலீசாருக்கு 7 ரூபாய் சம்பளமும், பியூனுக்கு 6–7 ரூபாய் சம்பளமும், டிப்டி கலெக்டருக்கு 250 ரூபாய் சம்பளமும் இருந்த காலம். இன்று ஒருபடி 1½ ரூபாய்க்கு விற்கிறது. அது, பூமி விலைகளும் ஒரு ஏக்ரா புஞ்சை ரூ. 250, நஞ்சை ரூபாய் 3000 வரை இருந்த காலம். இன்று புஞ்சை ரூ. 1000, நஞ்சை 10,000 ரூபாய் வரை-சில இடங்களில் நஞ்சை ஏக்கர் 20,000 ரூபாய்க்கு விற்கும்போது, எதற்காக நிலவரியைக் குறைக்கவேண்டும்? ஓட்டு வாங்கவைக்குமே யல்லாமல் இதில் அறிவுடைமையோ நாணயமோ என்ன இருக்கின்றது?

கிராமத்திற்கு ரீசெட்டில்மெண்ட் வைத்து, நில வரும்படியைக் கணக்குப் பார்த்து, வரி நிர்ணயிக்கவேண்டும். இதையெல்லாம்விட, உச்சவரம்பைத் திட்டப்படுத்தி அதில் கண்டிப்பாய், உஷாராய் இருந்து திட்டப்படுத்தினால் வரி விஷயத்தில் நாம் தலையிட வேண்டிய அவசியமே இராது. மந்திரிகள் நிர்வாகத்தில் புத்தி செலுத்தாமல், இன்னமும் மக்களை எப்படி ஏய்க்கிறது என்பதிலேயே முழுக் கவலையும் செலுத்திவந்தால் இந்த பத்திரிக்கைகாரன்கள் திடீரென்று கவிழ்த்து விடுவான்கள்.

மற்றும், அண்ணாதுரை சொன்னார் என்று 'தினமணி' ஒரு வாக்கியம் குறிப்பிட்டிருக்கிறது. அது என்னவென்றால், 'ஏற்கனவே (பழைய மந்திரிகளை—இந்த நிர்வாகத்தில் இருந்தவர்களை) இந்தப் பிரச்சினைகளில் பொறுப்பை நிர்வகித்தவர்களையும் கலந்து பேசி பலதரப்பட்ட ஆலோசனைகளையும் பரிசீலனை செய்யும்முன் அவசரப்பட்டு அவர் (அண்ணாதுரை) எதுவும் செய்ய விரும்பவில்லை' என்று குறிப்பிட்டு இருக்கிறது. இதன் கருத்தென்ன? இந்த நிலையில் இருந்துகொண்டு வீரம் பேசுவதில் பயன் என்ன? இவர்கள் எந்தக் காரியத்திலும் பழைய ஆட்சியை, கொள்கையைப் பொறுத்தோ, பெரிதும் திட்டத்தைப் பொறுத்தோ எளிதில் குற்றம் சொல்லிவிடவோ, மாற்றி நடந்துவிடவோ முடியாது; கண்டிப்பாய் முடியாது.

ஆனால், உத்தியோகம், பதவி வசதி அளிப்பதில் பக்தவத்சலம் நடந்துகொண்ட முறைதான் அவரைக் கவிழ்த்தது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவர் காங்கிரசைத் தோல்வி அடையச் செய்தார்.

புது மந்திரிகளின் இந்த 'அதைச் செய்வோம், இதைச் செய்வோம்' என்கின்ற மாபெரும் வாக்குறுதிப் பேச்சுகள் ஒன்றும் பயன்தரப்போவதில்லை. ஏன் என்றால், அதன் பயன் 8 நாளையில் விளங்கிவிடும். இந்த நாட்டு மக்களுக்கு இவர்கள் என்ன பங்கு அளிக்கப்போகிறார்கள் என்பதைத்தான் பொறுத்திருக்கிறது இவர்கள் பிற்காலம். இன்றைக்குத் தங்களுக்கு வரும் கூட்டத்தையும் நடைபெறும் ஆரவாரத்தையும் நம்பி ஏமாந்துவிடக்கூடாது.

சரித்திரத்தை—புராணத்தை எடுத்துக்கொண்டால் பார்ப்பனர்கள் எவனையும் வாழ வைத்ததாக ஆதாரமே இல்லை. மனிதனுக்கு எவ்வளவுதான் பேராசை இருந்தாலும் ஆசை, நிராசையானால் பின் விளைவு என்ன என்பதைப்பற்றிய கவலை இருக்கவேண்டும்.

ஒவ்வொரு பதவி வழங்குதலிலும், நியமனத்திலும், ஒவ்வொரு மந்திரிக்கும் நாட்டு மக்கள் நிலைமையைப் பற்றிய கவலை இருக்கவேண்டும். எல்லா இன மக்களையும், மூன்று போல் பாவித்துப் பாரபட்சமில்லாமல் நடுநிலைமை சிந்தனையுடன் நடந்துகொள்ள வேண்டும். இதைத்தான் பெரும்பாலான பொதுமக்கள் எதிர்பார்ப்பார்கள்.

'அரிசி' 'வரி' முதலிய பிரச்சினைகள் இன்றைய நிலையில் இயற்கைப் பிரச்சினைகள் அல்ல; செயற்கைப் பிரச்சினைகளேயாகும். இதை நம்பியே நாம் நம் வெற்றி



திருச்சியில் 17–9–1967–ல், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சிலையைத் திறந்து வைத்த கு. காமராசர் அவர்களுடன் மேடையில் பெரியார் ஈ. வெ. ரா.

படிப்பகம்

www.padippakam.com



யைக் கணித்துக் கொள்ளக்கூடாது என்றே சொல்லுவேன். விபூதி வீரமுத்துசாமிக்கு ஒரு காலத்தில் இருந்த மரியாதை, பெருமை யாரும் அறியாததல்ல. இன்று கிருபானந்தவாரியார் ஸ்வாமிக்கு இருக்கும் பெருமை யாரும் அறியாததல்ல. சங்கராச்சாரிகளுக்கு இன்றுள்ள பெருமை யாரும் அறியாததல்ல.

அதுபோல்தான் மந்திரிகளுக்கு இன்றுள்ள பெருமைகளும் என்பது எனது கருத்து.

அரிசிப் 'பஞ்சம்' (பஞ்சமல்ல–கஷ்டம்) காரணமாக வந்த வெற்றிக்கு எவ்வளவு பலம் இருக்கக்கூடும்? இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அதற்கு மந்திரிகளால் என்ன பரிகாரம் (சொன்னபடி) செய்ய முடிந்தது? முடிகிறது? தலையை மொட்டை அடித்து விடுவதானால், ஆள் பாரம் (எடை) குறைந்துவிடுமா?

போக்குவரத்து மந்திரி 'பஸ் சார்ஜ்' குறைக்கப் போவதாக, அதுவும் சிந்திக்கப் போவதாகச் சொல்லுகிறார்! குறைத்தால், பெரும் நஷ்டம்தான் வரும். பஸ் புதுச் சாமான்கள் திருட்டுப் போவதற்கும், டயர்கள் மாற்றப்படும் நஷ்டத்திற்கும் சரிக்கட்டவே வருமானம் திண்டாட்டமாகிவிடும். மற்ற தனிப்பட்ட பஸ் முதலாளிகளுக்கும்கூட 'உங்கள் பஸ் சார்ஜ் சத்தத்தை குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி இருக்கிறேன். அவர்களும் குறைத்துக்கொள்ளத்தான் போகிறார்கள். காரணம், வருமானவரி விகிதம் குறையலாம் என்பது. ஆனால், அரசாங்கத்தார் அடிக்கடி 'நன்கொடை' கேட்பார்களே–அதற்கு என்ன செய்வது? என்று கேட்கிறார்கள்' என்கிறார்.

அரசாங்க பஸ் கட்டணம் குறைவதால் ஒரு சிலருக்குப் பயன் ஏற்பட்டதாகக் கொள்ளலாம்.

எதிர்காலம் மந்திரிகளுக்குப் பெரிய சங்கடகாலமாகும். பழைய மந்திரிகளின் ஏற்பாட்டின்படி, வருஷந்தோறும் ஒரு இலட்சம் அல்லது 50 ஆயிரத்துக்குக் குறையாது படித்துத் தேர்வில் வெற்றிபெற்று வேலைக்கு அலையும் மக்கள் வெளிவரலாம். இவர்கள் சர்க்காரில் வந்துதான் முட்டிக்கொள்ளுவார்கள். ஏராளமான சிபாரிசுகள் வரலாம். தள்ள முடியாத சிபாரிசுகளும் வரலாம்.

இவற்றையெல்லாம் 'அரிசிப் பிரச்சினை வெற்றியே' தீர்வு கண்டுவிட முடியாது. அல்லது, பார்ப்பனர் ஆதரவே தீர்வு கண்டு கொடுத்து விடாது.

மந்திரிகள் குறைந்த அளவு தங்கள்மீது தவறில்லை என்றாவது காட்டிக்கொள்ள முன் வரவேண்டும்.

மற்றும், இந்த மந்திரிகள் வந்தவுடன் அதிகாரத்தில் பெரும்பான்மையாய் இருக்கும் வகுப்பாருக்கு லஞ்சம் வாங்குவதில் (இப்போதே துணிவு அதிகம்) பெரும் துணிவு வந்துவிடும். இதற்குத் தள்ளமுடியாத சிபாரிசுகள் வரும். இப்படிப் பல ஏற்படலாம். இதற்கெல்லாம் மருந்து தாங்கள் நேர்மையாய் நடந்து கொள்ளுகிறோம் என்று பெரும்பாலான மக்களுக்குக் காட்டிக்கொள்வதுதான்.

ஆகவே, அவசரப்பட்டுத் தடபுடலான வாக்குறுதிகள் கொடுத்து, பிறகு பார்ப்பனர் தயவை எதிர்பார்த்தாகவேண்டிய நிலைமைக்கு ஆளாகாமல், அறிவாளிகளாக மந்திரிகள் சிந்திக்க வேண்டும்!

['விடுதலை'–தலையங்கம்—10–3–1967]

## 34. ஜனநாயகம்

ஜனநாயகம் என்பது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களால் நடத்தப்படும் ஆட்சி என்பதுதான் பொருள்.

மக்கள் அதற்குத் தகுதி உடையவர்களா என்கின்ற பிரச்சினை இதில் எழுவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



அது மாத்திரமல்லாமல், நாட்டின் அமைப்பு அதற்கு ஏற்றதா என்கிற பிரச்சினை பற்றிய சிந்திப்பும் அதில் எழுவதில்லை. இவ்விரண்டு சிந்தனையும் இல்லாமல் பொதுவாக ஜனநாயகம் என்கின்ற சொல்லைக்கொண்டே மக்கள் ஜனநாயகத்திற்குப் பலி ஆகி விடுகிறார்கள்.

நமதுநாடு இன்றைக்கும் சாதி அமைப்பின்கீழ் இருந்து வருகிறது.

அதுபோலவே, நமதுநாடு இன்றும் மதஅமைப்பின்கீழ் இருந்துவருகிறது.

அதுபோலவே, நமதுநாடு இன்றும் பொருளாதார பேத அமைப்பிலேயே இருந்து வருகிறது.

இவற்றையெல்லாம்விட மோசம், மிகமிகக் கீழ்த்தரமான மூடநம்பிக்கை அமைப்பிலேயே நம்நாடு இருந்துவருகிறது.

இந்த நிலையில், மக்களுக்குப் போதிய கல்வி இல்லாத அமைப்பில், கல்வியிலும் பேதநிலை உள்ள கல்வி அமைப்பில் நமதுநாடு இருந்து வருகிறது.

இவ்வளவு பேதநிலை அமைப்பு உள்ள நாட்டில்—ஜனநாயகம் என்றால் இதன் பொருள் என்ன?

நாட்டில் ஒரு பெரும் சூதாட்டம் நடந்துவருகிறது. சூதில் வலுத்தவன் ஆட்சியாக நடந்துவருகிறது என்பதாகத்தானே கொள்ளவேண்டும்?

இந்த நாட்டிற்கு ஜனநாயகம் வந்து இன்றைக்கு 16 ஆண்டு ஆகிறது. நான்கு (அய்ந்தாண்டு) தேர்தல் நடந்துவிட்டது. மூன்று (அய்ந்தாண்டு) ஆட்சி நடந்துவிட்டது, ஆனால் இன்னமும்,

பார்ப்பான்—பறையன் இருக்கிறான்!

இந்து–முஸ்லிம்–கிறிஸ்தவன் இருக்கிறான்!

இன்றைக்கும் பணக்காரன்—ஏழை இருந்துவருகிறான்!

இன்றைக்கும் கடவுளுக்குச் சோறூட்டி, கலியாணம் செய்துவைப்பவனும் பார்ப்பான் காலில் விழுந்து கும்பிட்டு ஆசீர்வாதம் பெறுபவனுமாகப் படித்த மேதாவியும், படிக்காத முட்டாளும் இருந்துவருகிற இந்த நிலையில், இது எப்படி உண்மையான யோக்கியமான, நாணயமான ஜனநாயகம் ஆகும்?

அதுமாத்திரமா? இன்று இந்நாட்டில் உள்ள 50 கோடி மக்களில் ஒருவர்கூட இது எப்படி ஜனநாயகமாகும் என்கின்ற பிரச்சினையை கிளப்ப முன்வரவில்லையே!

மேலும், இதில் உள்ள பெரும் மடமை என்னவென்றால், ஜனநாயகத் தேர்தலில் அபேட்சகராய் நின்ற அபேட்சகர்களுக்கு நபர் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் முதல் சிலருக்கு 50 ஆயிரம் ரூபாய்வரை செலவாகி இருக்கிறது என்று எல்லோருமே—50 கோடிப் பேர்களுமே பேசிக்கொள்ளுகிறார்கள். மற்றும், பெரிய குறிப்பு தேர்தலில் ஒரு மனிதன் 10,000 ரூபாய்வரை செலவு செய்யலாம் என்கின்ற அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த நாட்டில் ஒரு வாரத்திற்குமேல் சாப்பாட்டிற்கு இல்லாத மக்கள் 25 கோடிக்குக் குறையாமல் இருக்கிறார்கள். ஒரு மாதத்திற்குமேல் சாப்பாட்டிற்கு இல்லாத மக்கள் $37\frac{1}{2}$ கோடிக்குக் குறையாமல் இருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்குமேல் சாப்பாட்டிற்கு இல்லாத மக்கள் 35 கோடிக்குக் குறையாமல் இருப்பார்கள். இப்படிப்பட்ட இந்நாட்டில்,

ஒரு மனிதன் தேர்தலுக்கு நிற்பதானால் ரூ. 250, ரூ. 500 டெபாசிட் கட்டிவிட்டு அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டும் என்ற நிபந்தனைக்கும் ஆளாகவேண்டும். இந்த அளவுக்கே எடுத்துக்கொண்டு மற்றதையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு இப்போது சொல்லுங்கள். இன்று நடப்பது ஜனநாயகமா? அல்லது, மேல்சாதிக்காரன்–பணக்காரன்–பித்தலாட்டக்காரன் நாயகமா? என்று.



இது ஒருபுறம் இருக்கட்டும். இப்படிப்பட்ட ஜனநாயக இராஜ்யத்தில் இந்த ஆட்சிக்கும் ஆட்சி முறைக்கும் கட்டுப்பட்டு யோக்கியன், நாணயஸ்தன் என்ற பெயரை வாங்கிக் கொண்டு,

1. சாதியை ஒழிக்கவேண்டும்;

2. மூடநம்பிக்கையை ஒழிக்கவேண்டும்;

3. பணக்காரனை ஒழிக்கவேண்டும்;

4. ஆட்சியில், பதவியில், சேவையில், கல்வியில் எல்லா சாதி வகுப்பாரும் விகிதாசார சம உரிமை ஏற்படச் செய்யவேண்டும்.

என்று பாடுபடுவது என்றால், பாடுபடுபவனுக்கு நல்லபேர் கிடைக்குமா? அவனுக்கு அரசாங்க ஆதரவோ மக்களின் ஆதரவோ இருக்கமுடியுமா? அவன் எதைத் தியாகம் செய்தால்தான் ஏதாவது பலன் ஏற்படமுடியுமா?

இது ஒருபுறமிருக்கட்டும். இன்று இந்த ஜனநாயகம் ஏற்பட்ட இந்த 16 ஆண்டுக் காலத்தில் மக்களிடத்தில், அதிகாரிகளிடத்தில், சிப்பந்திகளிடத்தில் ஏற்பட்ட குணங்கள் ஜனநாயகத்திற்கு முன்பு இருந்ததைவிட உயர்ந்திருக்கிறதா? என்றுபார்த்தால் நமக்கு எது தென்படுகிறது?

எல்லாத் துறையிலும் எல்லாத்தர மக்களிடத்திலும் பொய், புரட்டு, நாணயக்குறைவு, ஒழுக்கக் குறைவு, பலாத்காரம், நாசவேலை, கொள்ளை, மானவெட்கத்தைச் சிறிதுகூட லட்சியம் செய்யாமல் எல்லாவித அயோக்கியத்தனத்திற்கும் மக்கள் துணிவது ஆகிய காரியங்கள் நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமாகத்தானே இருந்து வருகிறது! இந்த நிலையில் நமதுநாட்டை நாம் ஜனநாயக நாடு என்று சொல்லிக்கொள்ள (தத்துவத்தில்) வெட்கப்படவேண்டியதாகத்தானே இருக்கிறது?

நிற்க, லவுகீய முறைப்படி பேசிக்கொண்டால், இன்றைய ஆட்சி மற்றவர்களுக்கு எப்படி இருந்தாலும், நம்மைப்பொறுத்தவரை நன்மை இல்லாவிட்டாலும் கேடு ஏற்படாத ஆட்சியாக இருக்கலாம் என்றே கருதுகிறேன்.

நேற்று ஒரு பார்ப்பனப் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். அதாவது:—

மந்திரிகள் பிரமாணம் எடுத்துக்கொண்டதில் முஸ்லிம் மந்திரி உட்பட, பைபிளும் குரானும் கீதையும் இராமாயணமும் பக்கத்தில் இருந்தும் அவற்றைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் கடவுள் பெயரையும் உச்சரிக்காமல் 'எங்கள் மனப் பூர்வாக' என்ற பதத்தையே பயன்படுத்திப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள் என்றும், குறிப்பாய் இந்துமத பரிபாலனத்துறை மந்திரிகூட கடவுள் பெயரை உச்சரிக்கவில்லை என்றும் ஆத்திரப்பட்டு எழுதி இருக்கின்றதைப் பார்த்தேன். திரு. அண்ணாதுரையும் மற்ற மந்திரிகளும் பிரமாணம் எடுத்த வாசகங்கள் பின்வருமாறு:

'சி. என். அண்ணாதுரை என்னும் நான் சட்டவிதிகளுக்கு இணங்க அமைக்கப்பட்ட, இந்திய அரசியல் அமைப்பில் நான் உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருக்கிறேன் என்றும், இந்தியநாட்டின் முழு முதல் ஆட்சியையும் ஒருமைப்பாட்டையும் என்றும் நிலைநிறுத்துவேன் என்றும், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் அமைச்சராக என் கடமைகளை உண்மையாகவும் உளச்சான்றின்படியும் நிறைவேற்றுவேன் என்றும்,

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் அமைப்புக்கும், சட்டவிதிகளுக்கும் இணங்க அச்சமும் ஒரு வழிப்பற்றும் இன்றி காய்தலும், உவத்தலும் அகற்றி, பல்வேறான மக்கள் அனைவருக்கும் நியாயம் வழங்குவேன் என்றும் உளமாற உறுதி கூறுகிறேன்'.

இதன் தத்துவம் எப்படி இருந்தாலும், இராஜாஜி இவர்களை (இந்த மந்திரிகளை)ப் பற்றிப் பார்ப்பனருக்கு அறிமுகப்படுத்துகிற நிலையில் 'இவர்கள் (தி.மு.க) தி.க.விலிருந்து, இராமசாமி நாயக்கரிடமிருந்து வந்தவர்கள் ஆனாலும் அந்த தி. க. வாசனையை அடியோடு விட்டுவிட்டு, பெருங்காயம் இருந்த டப்பாவில் அந்த வாசனை இருக்கும் என்பார்களே அதுகூட இல்லாமல், சுத்தமாகத் தேய்த்துக் கழுவிவிட்டு வந்திருக்கிறார்கள். தி. க. வாசனையே இவர்களிடமிருக்காது. நம்புங்கள்' என்று அறிமுகப்படுத்தினார்.

அப்படி இருந்தும், அந்த தி. க. வாசனை—ஏன், சு. ம. இயக்க வாசனை உலகமெல்லாம் அள்ளி வீசும்படி 15 நாள் காலத்திலேயே காட்டிவிட்டார்களே! இதைப் பார்த்தாலே தெரியவில்லையா, நம் இயக்கக் கொள்கைகளுக்கு இவர்களால் கேடு ஏற்பட முடியாது என்று கருதலாம் என்பதற்கு?

இதைவிட என்ன ஆதாரம் வேண்டும்?

மற்றும், அந்தப் பார்ப்பனப் பத்திரிகையிலேயே இராஜாஜியின் உத்திரவாதத்தை நினைத்துக் கொண்டு மற்றொரு பார்ப்பனர் தி. மு. க.வை கேட்கிறார். என்னவென்றால்,

நீங்கள்தாம் திராவிடர் கழகத்தை விட்டுவிட்டு, சுத்தமாக கழுவிக்கொட்டி விட்டு வந்தவர்களாயிற்றே; உங்கள் கழகத்திற்கு ஏன் இன்னமும் 'திராவிட முன்னேற்ற கழகம்' என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

'திராவிடர்' என்ற சொல்லை எடுத்துவிட்டு, அந்தச் சொல்லுக்குப் பதிலாக, 'தர்மம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி 'தர்ம பாதுகாப்பு முன்னேற்ற சங்கம்' என்ற பெயர் தொனிக்கும்படி D. M. K. என்று ஆங்கிலத்திலும் 'அற வளர்ச்சிக் கழகம்' அ. மு. க. என்று தமிழிலும் போட்டுக் கொள்ளுங்கள் என்று உபதேசம் செய்திருக்கிறார்.

மற்றொரு பார்ப்பனர்,

அது மாத்திரமல்லாமல், தி. மு. க. கொடியில் உள்ள இரண்டு நிறத்தில் கருப்புநிறம் இருப்பதை எடுத்துவிட்டு, கருப்பு சிவப்பு என்கிற பேதமே இல்லாமல், ஒரே நிறமாக ஆக்கிவிடுங்கள். அப்போதுதான் உங்களுக்குப் பேத உணர்ச்சி இல்லை என்கின்ற கருத்து நிஜமாகும் என்ற கருத்து ஏற்படும்படி எழுதி இருக்கிறார்!

இவற்றிலிருந்து தி. மு. க. காரர்களைப் பார்ப்பனர் எவ்வளவு தூரம் பயன்படுத்தலாம் என்று இருந்தார்கள் என்பதையும், இவர்கள் (தி. மு. க) அவர்களை எந்த அளவுக்கு ஏமாற்றமடையச் செய்து வருகிறார்கள் என்பதையும் பொதுமக்கள் இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

எனவே, பொதுமக்கள் எந்தக் கட்சியாரானாலும் தி. மு. க. சிறிதளவு நன்மை ஏற்படும்படி நடந்தாலும் அதைப் பெரிதாய்க் கொண்டு, அவர்கள் மனம் திருந்தும்படியாக நடந்துகொள்ள வேண்டுமென்றே விரும்புகிறேன்.

கோர்ட்டில் வாதாடும்போது வழக்கின் தன்மை ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். பஞ்சாயத்தாரைக் கொண்டு ராஜி பேசுகிறபோது வழக்கின் தன்மை ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். இதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—11-3-1967]



நாம் இன்று ஜனநாயகம் என்று சொல்லுவதெல்லாம்—முட்டாள் மக்கள் 'எல்லாம் கடவுள் செயல்' என்று சொல்லுவதுபோல்தானே அல்லாமல், அதில் வேறுபொருள் என்ன இருக்கமுடியும்?

'அரிசிப் பிரச்சினை காரணமாக மக்கள் காங்கிரசைத் தோற்கடித்துவிட்டார்கள்' என்றால் இது உண்மையாய் இருந்தாலும் இது ஜனநாயகமாகிவிடுமா?

சமதர்மப் பிரச்சினை என்ன ஆவது? நூற்றுக்கு 9 பேராகவே இருந்த படித்த மக்களை அம்பது பேராக ஆக்கியதன்மை என்ன ஆவது? சராசரி 32 வயதில் செத்துக் கொண்டிருந்த மக்களை 50 வயதுவரை வாழும்படி செய்த 'பிரம்ம' பிரயத்தனம் என்ன ஆவது? வருடம்தோறும் 70 ஆயிரம் மக்களையே எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு அனுப்பி அதில் 100-க்கு 30 பேரையே பாசாக்கிக்கொண்டு 70 பேரை ஃபெயில் ஆக்கிவந்து இருந்த நிலைமாறி, வருடம் ஒன்றுக்கு இலட்சத்து அம்பதாயிரம், இலட்சத்து அறுபதாயிரம் என மக்களை பரீட்சைக்கு அனுப்பி அதில் 100-க்கு 50 பேருக்கு மேல் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த மக்களாக அதிகப்படுத்திய நிலை என்ன ஆவது? மாணவர்களிடம் சம்பளம் வசூலித்துக் கொண்டும், 15 இலட்சம் மக்களையே படிப்பித்துக்கொண்டும் இருந்த நிலைமை மாறி, 65 இலட்சம் மக்களை இன்று சம்பளம் இல்லாமலும், இதில் 20 இலட்சம் மக்களுக்குச் சோறும் போட்டு படிப்பளித்திருக்கும் நிலை என்ன ஆவது? மொத்தம் 30 கல்லூரிகளே இருந்து, பெரிதும் பார்ப்பனர் அல்லாத மக்களுக்கு காலேஜில் சேர இடம் இல்லாமல் இருந்தது போய், இன்று 110 காலேஜ்கள் ஏற்பட்டு, ஏறக்குறைய படிக்க இஷ்டம் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்லூரி வாய்ப்புசெய்து இருக்கும் நிலை என்ன ஆவது?

இப்படி இன்னும் பல துறைகளில் பல விஷயங்கள் மேலும் பல பக்கம் வரும்படி எழுதலாம்.

'இது இயற்கையாக யாரும் செய்யமுடியும்' என்றால் ஆச்சாரியார் (பார்ப்பனர்) ஆட்சிக் காலத்தில் இத் துறைகளில் இக் காரியங்களில் எந்த விகிதத்தில் இக் காரியங்கள் வளர்ந்தன? அன்று இயற்கை எங்கு போயிற்று? அன்று காமராசர் வரும் முன்பு ஒரு நாளைக்கு 9 மணிநேரம் வேலை செய்ததற்கு ரூபாய் ஒன்று வரும்படி (கூலி) சம்பாதித்தவன், இன்று 6 மணி, 7 மணி நேரமே வேலை செய்வதற்கு ரூ. 3, ரூ. 5, ரூ. 7 வரை சம்பாதிக்கும்படியான வேலைவாய்ப்பு, வரும்படிவாய்ப்பு இருக்கிறதே! இது பொருளாதார வளர்ச்சி அல்லவா? பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்கு மின்விளக்கு, இலட்சக்கணக்கான நிலங்களுக்கு பம்புசெட்டு இவ்வளவும் ஏற்பட்டபிறகு, இவற்றிற்கு எதிரியாய் இருந்த ஆச்சாரியார் (பார்ப்பனர்) முயற்சியால் காங்கிரஸ் தோல்வி அடைந்தது என்றால், இதற்குப் பெயர்தான் ஜனநாயகமா? வெளிநாட்டுக்காரன், பகுத்தறிவுவாதி ஒருவன் இந்த விஷயத்தைத் தெரிந்தால் வாயால் சிரிப்பானா? அல்லது, இந்த மக்களை ஜனநாயகத்திற்குத் தகுதியான மக்கள் என்று சொல்லுவானா?

மக்களை மதிக்காத, தலைக் கனம் பிடித்த 100-க்கு 100-ம் சுயநலமே உருவாய் அமைந்த கோரரூபங்கள் பெரிதும் ஆட்சிக்காரர்களாய்—மந்திரிகளாய் அமைய நேரிட்டதால் ஆட்சி கவிழவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அவ்வளவுதானே ஒழிய, இதை எந்த நிலையிலும் ஜனநாயகம் என்று நான் சொல்லவேமாட்டேன்.

ஆனால், காங்கிரஸ் தோல்வி அடைந்து விட்டதாலேயே அதை இனி நாட்டிற்குத் தேவை இல்லை என்று ஒதுக்கிவிட முடியுமா? அதற்குப் புத்திபெற ஒரு வாய்ப்புக் கொடுத்ததாகக் கருதி, நமது கவனத்தை வேறு பக்கம் திருப்பி, காங்கிரசினால் நாம் பெற்ற நன்மைகள், வசதிகள், வாய்ப்புகள் ஆகியவற்றிற்கு இம்மியும் குறைவு வராதபடி, வெற்றி பெற்றவர்களைக்கொண்டு பலன் பெறுவதுதான் புத்திசாலித்தனமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



நாமும் இந்த நிலை ஏற்படுமென்று கருதவில்லை. வெற்றி பெற்றவர்களும் இப்படிப் பட்ட வெற்றி கிடைக்கும் என்று கருதவில்லை.

எப்படியோ ஏற்பட்டுவிட்டது. ஏற்பட்டதை இருவரும் அதை இருவருக்கும் நன்மை ஏற்படும்படி நடந்துகொள்வதுதான் புத்திசாலித்தனமா? அல்லது, இருவரும் இருவருக்கும் தொல்லை ஏற்படும்படி நடந்துகொள்வது புத்திசாலித்தனமா? இருவர் நலனையும் பொறுத்தவரை நான் எந்த அளவுக்கும் ஒத்துப்போகத் தயாராய் இருக்கிறேன்; தயாராகி விட்டேன். யார் என்னைப்பற்றி எவ்வளவு தாழ்மையாகக் கருதினாலும் இலட்சியம் செய்யாமல் ஒத்துப்போய் இம் மந்திரிகளிடம் நற்பணி பெறத்தயாராய் இருக்கிறேன்.

என் சொந்த (ஈ. வெ. ரா.) வாழ்வின் நலம் கருதியல்ல: நான் துறவி—எனக்கு (குடி செய்வார் மானம் பார்த்தால் இலட்சியம் கெடும்—என்பதுபோல) இதில் 'அவமானம்' வருமே என்கின்ற கவலையோ சிந்தனையோ கிடையாது.

எனக்கு நாடு முன்னேறவேண்டும்; மக்கள் மேம்பாடு அடையவேண்டும்; மந்திரி களும் பழிக்கு ஆளாகாமல் வாழவேண்டும்; என் மானத்தைக் கவனித்து மக்களுக்குத் தொல்லை கொடுக்கமாட்டேன்; மந்திரிகளுக்கும் தொல்லை கொடுக்கமாட்டேன்; கூடுமான வரை பொறுப்பேன்.

ஏன்? மக்கள் அவ்வளவு மோசமானவர்கள்; மக்களைவிட மந்திரிகள் கொஞ்சம் தேவலாம். நாம் இன்று பகுத்தறிவுவாதிகள் என்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும், மூட நம்பிக்கைக்காரர்கள் அல்ல. பகுத்தறிவு இன்னது என்று தெரிந்தவர்கள். அதில் சந்தேகம் வேண்டாம். இவர்கள், காங்கிரஸ் மந்திரிகள் நடந்துகொண்டதைவிட மேலாகவே நடந்து கொள்வார்கள். ஒவ்வொருவரும் நடந்துகொள்வார்கள்.

'ஒரு ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி அளப்பார் என்று நான் ஓட்டுச்செய்தேன்' என்று ஒருவன் சொன்னால், எதிர்பார்த்தால் அப்படிச்சொன்னவன் எப்படியோ இருந்தாலும் நம்பினவன் பத்தரைமாற்று முட்டாளா, இல்லையா? இவர்கள் ஓட்டுகளை ஜனநாயக ஓட்டு என்றால், அப்படிக் கருதுகிறவன், ஓட்டர்களைவிட முட்டாள் என்றுதானே கருத வேண்டும்? மந்திரி மூன்றுபடி அளக்கவில்லையே? என்று அந்தச் சாக்கை வைத்து நாம் மந்திரிகளுக்குத் தொல்லை கொடுத்தால் நம்மையும் அந்த வரிசையில்தானே சேர்க்க வேண்டும்?

இந்த மந்திரிசபை கவிழ்ந்தால் மறுபடியும் நமக்கு இந்தத் தொல்லைதானே ஏற் படும்? ஆகவே, நமக்கு இதே வேலைதானா?

ஸ்தாபனத்தை விட்டுவிட்டு ஸ்தாபன மந்திரிகளை எடுத்துக்கொண்டால், காங்கிரஸ் மந்திரிகளைவிட இன்றைய மந்திரிகள் மக்களிடம் பயம் உள்ளவர்கள். மக்களை எப்படி யாவது வசப்படுத்திப் பயன்பெற மக்களை மதிப்பவர்கள். 'மக்களுக்கு ஏதாவது செய்து அவர்களை வசப்படுத்தவேண்டுமே' என்கின்ற கவலை உள்ளவர்கள். இவர்களைக் கண்டு மக்கள் பயப்படவேண்டியதில்லை.

காங்கிரஸ் மந்திரிகளோ அப்படி இல்லை. மந்திரிகளுக்கும் மக்களுக்கும் மத்தியில் மலைபோல ஒரு அகம்பாவம் படுத்திருந்தது. அது அவர்களுக்கு இயற்கைதான்.

ஆகவே தோழர்களே! இந்த ஜனநாயக ஓட்டர்களை நம்பி மோசம்போய் விடாதீர்கள். இந்த மந்திரிகளை ஓடும்படியாகவும் செய்துவிடாதீர்கள். அவர்களாக ஓடினால் ஓடட்டும்; வேறு யாராவது ஓட்டினால் ஓடட்டும்; அந்தப்பழி உங்களுக்கு வேண்டாம்.

பணநாயகமும், சூழ்ச்சி நாயகமும்தான் இந்த 15 வருடகாலத்தில் ஜனநாயகத்தில் வளர்ந்திருக்கிறது.



காங்கிரஸ் ஆட்சி எவ்வளவோ நன்மை அளித்திருந்தும், உண்மை ஜனநாயகத்தை வளர்க்கவில்லை. மத்திய அரசாங்கத்திலும் அது இல்லை.

ஆகவே, நம் கொள்கை இலட்சியம் நிறைவேற காங்கிரசைவிட இது நல்ல வாய்ப்பு என்று கருதுகிறேன்.

மந்திரிகளைப்பற்றி நீங்கள் ஒன்றும் இலட்சியம் செய்யாதீர்கள். அவர்கள் நம்மைப் போன்ற மனிதரேயாவர். மனிதனுக்குக் கொடுக்கவேண்டிய மார்ஜினை, இடைவெளியைக் கொடுத்து, கொஞ்ச நாளைக்குக் கவனித்து வாருங்கள். நம் தலைக்குமேல் பார்ப்பான் என்கின்ற—ஒருபெரிய எதிரி இருப்பதை மறந்து 'ஜனநாயகத்தை' நம்பி ஏமாந்து போகாதீர்கள்.

['விடுதலை'—தலையங்கம்—20-3-1967]

## 35. நாத்திகர் ஆட்சி

இந்தியாவில் இன்று 100-க்கு 100 நாத்திகர்களே மந்திரிகளாய் இருந்து நடத்தப் படும் நாடு தமிழ் நாடே ஆகும்.

இந்த மந்திரிகள் முழு நாத்திகர்கள் என்பதும், அவர்கள், தலைவர்கள் 1940ஆம் ஆண்டிலிருந்தும் மற்ற பலர் 1957ஆம் ஆண்டிலிருந்தும் சிலர் 1960ஆம் ஆண்டிலிருந்தும் நாத்திகர்களாகவும், இராமாயணத்தை நெருப்பில் போட்டவர்களாகவும் இராமனைக் கொளுத்தியவர்களாகவும், பிள்ளையார் 'சிலை' உடைத்தவர்களாகவும் இருந்துவந்த நிலை 1967 பிப்ரவரி 15-ந் தேதி வரையிலும் தமிழ்நாட்டு மக்கள் யாவருக்கும், குறிப்பாக காங்கிரஸ்காரர்களுக்கும், அதைவிடக் குறிப்பாகப் பார்ப்பனர்களுக்கும் தெரிந்த காரியம்.

அதைவிட முக்கியமான சங்கதி என்னவென்றால், ஓட்டர் மகாஜனங்களும், இவர்கள் பக்கா நாத்திகர்கள் என்று தெரிந்தே, ஆத்திக அபேட்சகர்களுக்கு 'நாமத்தைச் சாத்தி' படுபாதாள தோல்வியைக் கொடுத்து, 10 ஆயிரம், 20 ஆயிரம், 30 ஆயிரம் கணக்கு வித்தியாசத்தில் இவர்களுக்கு அதிக ஓட்டுக்கொடுத்து, ஆத்திகர்களை ஆட்சிக்கு லாயக் கில்லை என்று இமாலயத் தோல்வி அடையச் செய்த காரியமாகும்.

இந்த நிலையில் இருக்கும் மக்களில் ஒரு கூட்டத்தார், அதுவும் தோல்வி அடைந்த கூட்டத்தினர், இன்று வெற்றிபெற்ற கூட்டத்தினரைக் குறைசொல்ல வேறு ஒரு சாக்குகூட கிடைக்காமல், ஆட்சியாளரை நாத்திகர்கள் என்று மேலும் மக்களுக்கு விளம்பரப்படுத்து வதற்காக, கொஞ்சம்கூட யோசனை இல்லாமல்—தாங்கள் செய்யப்போகும் காரியத்தின் பின் விளைவு என்ன ஆகும் என்றுகூட சிந்தியாமல், பொய்யான ஒரு செய்தியைக் கற்பனை செய்துகொண்டு 'கடவுள் பிரசாத'மாகிய விபூதியை (சாம்பலை) மந்திரி கையில் வாங்கிக் கீழே எறிந்துவிட்டதாகவும், அதனால் பக்தர்கள், மத உணர்ச்சி உள்ளவர்கள் மனம் புண்பட்டதாகவும், குற்றம் சாட்டிக் கேள்வி கேட்டிருக்கிறார் ஓர் ஆத்திகக் காங்கிரஸ்காரர். அதிலும் 'விபூதி பூசிக்கொள்வதை அவமானம் என்று கருதுகிறவர்கள் ஏன் கோவிலுக்குப் போகவேண்டும்?' என்றும் கேட்டிருக்கிறார். இதில் எவ்வளவு புத்திசாலித்தனம் இருக் கிறது என்பதை வாசகர்கள் சிந்திக்கவேண்டும்.

இதற்கு மந்திரி பதில் சொல்லுகிறார்: 'நான் கோவிலுக்குப் போகவில்லை. கோவில் குடியார்களாகிய தீட்சதர்கள் தாம் என்னைக் கூப்பிட்டார்கள். கோவிலில் எனக்கு யாரும் விபூதி கொடுக்கவில்லை. நான் வாங்கிக் கீழே எறியவில்லை. அவர்கள் கொடுத் திருந்தால் நான் வாங்கி உடனே வேறு ஒருவர் கையில் கொடுத்திருப்பேன்' என்று மரி யாதையாகப் பதில் சொல்லி இருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



இதனால், மந்திரி நாத்திகர் என்பதும், ஆத்திகர்கள் அவரை ‘நீங்கள் நாத்திகரானாலும் உங்கள் பாதம் கோவிலுக்குள் வந்து கோவிலை மிதித்துவிட்டுப் போனால் போதும்’ என்று அழைத்தார்கள் என்றும்தானே விளங்குகிறது?

சாத்திரத்தின்படி, நாத்திகர் முகத்தில் ஆத்திகர் விழித்தாலே, ஆத்திகர்கள் உடுத்தின வேட்டியுடன் ஸ்நானம் செய்தாக வேண்டும். அப்படி இருக்க, வலுவில் வந்து நாத்திகரை அழைத்துக்கொண்டு போனார்கள் என்றால், ஆத்திகத்தின் பரிதாபத் தன்மைக்கு வேறு சாட்சி என்ன வேண்டும்?

மனம் புண்பட்ட ஆத்திகரை ஒன்று கேட்கிறோம்; திருச்செந்தூர்க் கோவிலுக்கு ஓர் ஆத்திக மந்திரி போனபோது, அங்குள்ள கோயில்குடியான ஒருவன், ‘கடவுள் பிரசாதமான’ விபூதியை நிலத்தில் வீசி எறிந்து எடுத்துக்கொள்ளச் சொன்னானே அதைக் கேட்டவுடன் இந்துமத பக்தர் மனம் ஏன் புண்படவில்லை? என்று கேட்கிறோம்.

மத பக்தர்கள் இக் காலத்தில் வாயை மூடிக்கொண்டிருந்தால்தான் மதத்தின் யோக்கியதை பறிபோகாமல் இருக்கும். வாயைத் திறந்தால் துர்வாடைதான் வீசும்.

ஆத்திகர் என்றால், அவர்களுக்கு மானம், வெட்கம், அறிவு இருக்கக்கூடாத, இல்லாத கொழுக்கட்டையாய்த்தான் இருக்கவேண்டுமா?

இந்தக் கேள்வி கேட்ட ஆத்திகர் அந்தக் கோவிலுக்குள் போனால் அவரைக் கோவில் குடியான் ‘கடவுள்’ இருக்கும் அறைக்குள் நுழையக்கூடாது என்கிறானே, ஏன் சொல்லுகிறான்? ‘நீ கீழ்சாதி, சூத்திரன், தீண்டத்தகாதவன்; ஆதலால் வெளியில் நில்’ என்கின்றானே, இதில் பக்தர் மனம் புண்படுவதில்லை என்றால் அந்த மனம் எவ்வளவு மானம், வெட்கம்கெட்ட கல் மனம்? என்று கேட்கிறேன். ஆத்திகனுக்கு அறிவில்லாமல் போனாலும் மானம் கூடவா இருக்கக்கூடாது?

நண்பர் தியாகராஜன் இதெல்லாம் தெரியாதவரல்ல; அவர் சுயமரியாதை இயக்கத் துவக்க காலத்தில் இயக்கத்தில் கலந்திருந்தவர்தான். ஆனால், இன்று காங்கிரஸ்காரராய் இருப்பதால், ஆத்திக வேடம் போடவேண்டி இருப்பதால் இதைப் பயன்படுத்திக்கொண்டார்!

இவருக்கு மாத்திரமல்ல; எல்லாக் காங்கிரஸ்காரருக்குமே வேண்டுகோள் விடுகிறேன்.

இப்படிப்பட்ட கற்பனைப் போலிக் காரியங்களால் மந்திரிசபையை அசைக்கலாம் என்று கருதி கேலிக்காளாகாமல் நல்ல பிரச்சினைகளைக் கொண்டு மந்திரிசபையை அசைக்க, ஆட்ட முயற்சிக்கவேண்டும்.

நாத்திகம் என்பதற்காக அவர்களை அசைக்க நினைத்தால் இன்னும் பலர் நாத்திகராய்விடுவார்கள். பிறகு காங்கிரஸ் ஆத்திகர் ஸ்தாபனம் என்பதற்காகவே தலை எடுக்க முடியாமல் போய்விடும்!

காங்கிரசார் சமதர்மம் பேசிக்கொண்டு ‘பிரசாதத்தை (சாம்பலை) ஏன் கீழே எறிந்தாய்?’ என்று கேட்பதானால் இவர்கள் சமதர்மவாதிகளாவார்களா? இவர்களை சமதர்மவாதிகள் என்று மக்கள் நம்புவார்களா?

சமதர்மத்திற்கு A, B, C தான் கோவில்களை ஒழிப்பதாகும். இதை உணராதவர்கள் காங்கிரசில் அதிகம் பேர் இருப்பதால்தான் சமதர்மத்திற்கு இன்று வெற்றி கிடைக்காமல் போனதற்கு ஒரு காரணமுமாகும். நான் மறுபடியும் காங்கிரஸ் ஆட்சிக்கு வரவேண்டும் என்று கருதுகிறவன்.

[‘விடுதலை’–தலையங்கம்—27-3-1967]



# 36. என் நிலை

நான் அரசியலில் கலந்து கொள்ளாவிடினும், அதாவது அரசியல் சம்பந்தமான பதவிகள் எதிலும் நான் ஈடுபடாமல், வலியவந்த பதவிகளை எல்லாம் நான் வெறுத்து ஏற்காமல் இருந்து வந்தாலும், பதவிபெற்று ஆட்சி நடத்துகிற அரசாங்கம் ஒவ்வொன்றிலும் நான் சில கடமைகள் ஏற்று, ஆதரித்தும், எதிர்த்தும் வந்திருக்கிறேன். இதற்குக் காரணம் நல்ல ஆட்சி, கெட்ட ஆட்சி என்பதைக்கூட அதிகம் சிந்திக்காமல் பார்ப்பனர் ஆட்சி; பார்ப்பனர் அல்லாதார் (தமிழர்) ஆட்சி என்கின்ற தத்துவத்தை அடிப்படையாய் வைத்துத் தீவிரமாகக் கலந்து கொண்டு வந்திருக்கின்றேன்.

1920-ல் நான் காங்கிரஸ்காரனாக இருந்து அன்று இராஜாஜியின் சிஷ்யன் போலவே நான் நடந்து கொண்டிருந்ததால், அவரது கருத்துக்கு இணங்கி ஜஸ்டிஸ்கட்சி ஆட்சியை நான் நேரிடையாய் எதிர்க்காவிடினும் அக்கட்சி தேர்தலில் தோல்வி அடையத்தக்க காரியத்திற்கு உதவிசெய்து வந்தேன்.

அந்தக் காலத்தில் இராஜாஜியிடம் மாத்திரம் அல்லாமல் எல்லாப் பார்ப்பனரிடமும் நெருக்கமாகப் பழக ஏற்பட்டதாலும் காங்கிரசின் அந்தரங்கக் கருத்து, ஆட்சியைப் பார்ப்பனர் ஆட்சியாக மாற்றவேண்டும், ஆக்கவேண்டும் என்பதே என்றும் நான் உண்மையாய் உணர்ந்ததால் காங்கிரசை எதிர்த்தும் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியை ஆதரித்தும் தொண்டாற்றினேன். ஜஸ்டிஸ் கட்சி இழந்த ஆட்சியை மறுபடியும் கைப்பற்றவும் பாடுபட்டுச் செய்தேன்.

அந்தக் காலத்தில், 1927 முதல் 1937 வரை ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி பார்ப்பனரல்லாத மக்கள் நலனுக்கு நல்ல அளவு நன்மை செய்துகொண்டே வந்தது.

அந்தக் காலத்தில், காந்தியின் பெயரை வைத்துக்கொண்டு சி. பி. சுப்பையா, அண்ணாமலைப் பிள்ளை, உபயதுல்லா, கோடைஇடி குப்புசாமி, தேவநாகய்யா—போன்ற தகரப் போகணிகளைப் படையாக வைத்துக்கொண்டு காங்கிரஸ் (பார்ப்பனர்) ஆடிய ஆட்டத்தின் பயனாய், இன்று 1967-ல் எப்படிக் காங்கிரஸ் இங்கு கவிழ்ந்ததோ அதேபோல் அன்று 1937-ல் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

இரண்டிற்கும் முக்கிய காரணம், பார்ப்பனர் மிகமிகக் கட்டுப்பாடான சாதி, சூழ்ச்சியில் தேறிய சாதி; இவை இரண்டிலும் பரம்பரையாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அனுபவம் பெற்ற சாதி ஆனதனாலாகும்.

பார்ப்பனரல்லாதவர் (தமிழர்) இதற்கு நேர் விரோதம் என்பதோடு, புத்தி மூட நம்பிக்கையால் விளைந்ததனால் கட்டுப்பாடு அறவே கிடையாததும், இன உணர்ச்சியும் கிடையாததுடன் சூழ்ச்சி அறிவு என்பது, தங்களுக்குள் சூழ்ச்சி செய்து, தம் இனத்தைத் துணிவாய்க் காட்டிக்கொடுத்து, ஒருவனை ஒருவன் ஒழித்துக்கட்டத்தான் கற்றிருப்பார்களே தவிர, பார்ப்பான் நமது சமுதாயத்திற்கு பிறவி எதிரி என்பதை 10,000-ல் ஒரு தமிழனுக்குக் கூடப் புரிந்திருக்காது. புரிந்திருந்தாலும் தன் இனத்தைக் காட்டிக்கொடுத்து, பார்ப்பான் காலில் விழுந்து ஆசீர்வாதம் (பதவி) பெறுவதில்தான் கெட்டிக்காரர்களாக இருப்பார்களே தவிர, தன் இன உணர்ச்சி உள்ளவர்களைக் காண்பதோ கருத்தில் கொள்ளுவதோ அரிது; அரிதரிது!

இந்தக் காரணங்களால் பார்ப்பனர் ஆதிக்கம் ‘வெட்டவெட்டத் தழையும்’ மரம்போல் வளர்ந்துகொண்டே வருகிறது. நம் ஆதிக்கம் எவ்வளவு உயர்ந்தாலும் அடிக்கடி சறுக்கி நழுவிக் கீழ்நிலைக்கே வந்துவிடுகிறது.

என்றாலும், என்னைப் பொறுத்தவரை சரிந்தபோதெல்லாம் அரசியல் கொள்கை என்பவற்றைப்பற்றிச் சிறிதும் கவலை செலுத்தாமல், இன உணர்ச்சியை முக்கியமாக

படிப்பகம்

www.padippakam.com



வைத்தப் பார்ப்பனரல்லாதார் ஆட்சி என்றால், அதைப் பார்ப்பனருக்கு அடிமைப்பட விடாமல் வலியப்போய் ஆதரித்தே வந்திருக்கிறேன்.

உதாரணத்திற்கு அதிகதூரம் போகவேண்டியதில்லை. இன்றைய தி. மு. க. ஆட்சிக்கு முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியை 1937 முதல் 1954 வரை நான் எதிர்த்து வந்தவன்! முழு மூச்சாய் 'பலாத்காரத்தில் இறங்குவேன்' என்று மிரட்டியும் மந்திரிகள் தாராளமாய் நடமாடமுடியாத அளவுக்கும் எதிர்த்து வந்திருக்கிறேன். அந்தச் சமயங்களில் காமராசர் அவர்களைப்பற்றி எனக்கு அதிக அறிமுகம் கூட இல்லை. அவரோடு நான் கலந்து ஒரு இரண்டு நிமிடம் பேசிய வாய்ப்புக்கூட எனக்கு ஞாபகம் இல்லை. ஆச்சாரியார் (பார்ப்பனர்) ஆட்சி ஒழிந்து, தமிழர் கைக்கு ஆட்சி வர்கது என்கின்ற ஒரே எண்ணத்தில் வலிய ஆதரித்தேன்; தொடர்ந்து 13 ஆண்டு ஆதரித்தேன்.

இதற்குக் காங்கிரஸ்காரர்களால் (காமராசரைத் தவிர) ஒரு தொண்டரிடம் இருந்தும் கூட ஒரு பாராட்டுதலையோ ஒரு சொஸ்தி (முகஸ்துதி) வார்த்தையோகூட நான் நாளது வரை அடைந்ததில்லை; பெற்றதில்லை. மாறாக பல அலட்சியக் குறிப்பை—வெறுப்புக் குறிப்பைத் தாராளமாய்ப் பெற்று இருக்கிறேன்.

இன்றைக்கும் காங்கிரஸ்காரர் என்கின்ற முறையில் ஒரு தலைவரோ, மந்திரியோ, தொண்டரோ, எம்.பி.யோ, எம்.எல்.ஏ.யோ எனக்கு நட்போ கலந்து மனம்விட்டுப் பேசும் படியான சலுகையோகூடக் கிடையாது. பல அலட்சியங்களையும் அடைந்து வந்திருக்கிறேன். ஆனாலும், காங்கிரஸ் ஸ்தாபனத்தை, காங்கிரஸ் ஆட்சியைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்கின்ற தன்மையில் சிறிதுகூடத் தவறாமல் நான் தொண்டாற்றி ஆதரவு காட்டி வந்திருக்கிறேன்.

காரணம், காங்கிரஸ் ஆட்சி இந்த 14 ஆண்டு காலத்தில் மக்களுக்கு அபார நன்மை செய்திருக்கிறது. நாடு அபார வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம் தலைவர்களும் மந்திரிகளும் தொண்டர்களும் காரணம் அல்ல என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும்—அதாவது, காமராசர்தான்—காமராசர் ஒருவருடைய முயற்சியேதான் என்று தெரிந்திருந்தாலும் காங்கிரசுக்கு முழு மரியாதை கொடுத்து ஆதரித்து வந்திருக்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் பார்ப்பனரல்லாதார் சமுதாயத்திற்குக் கேடாகவும், எதிர்ப்பாகவும் காரியங்கள் செய்யப்பட்ட, வேதனை தரப்பட்ட காலங்களில்கூட தனிப்பட்ட நபரையும், தனிப்பட்ட அதிகாரியையும் மாத்திரந்தான் குறைகூறி இருப்பேனே தவிர, கிளர்ச்சி செய்து காட்டி இருப்பேனே தவிர, எந்தச் சந்தர்ப்பத்திலும் காங்கிரசுக்கு ஒரு சிறு அசவுகரியம் ஏற்படும்படிகூட நடந்திருக்கமாட்டேன்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், என் எண்ணத்தை, நடத்தையைக் காட்டிக் கொள்ளவே அல்லாமல் இதற்கு ஆக நன்றி பெறுவதற்கு அல்ல!

எப்போதும் நான் நன்றி பெறுவதில் கவலைப்படுவதே இல்லை. அது மனித சமுதாயத்திற்கு அவ்வளவு எளிதான காரியமல்ல; துஷ்டமிருகங்களால் மக்களுக்கோ அல்லது எந்த ஜீவனுக்கோ நன்றிகாட்டமுடியுமா?

அதுபோல்தான், மனிதஜீவனிடம் நன்றி எதிர்பார்ப்பது அறிவில்லாத தன்மையேயாகும். ஏன் எனில், மனிதஜீவன் துஷ்டஜந்துக்கள் இனத்தில் சேர்ந்த ஜீவனாகும்.

மனிதன் என்பவன் தன்னலத்திற்கு என்பதாக வாழவேண்டியவனே ஆவான்.

உலகில் எனக்குத் தோன்றிய அளவில் நாய் ஒன்றுதான் நன்றி காட்டும், விசுவாசம் காட்டும் ஜீவன். இதைப்பற்றி இங்கு அதிகமாக விவரிக்க நான் விரும்பவில்லை.



எப்படி இருந்தாலும், காமராசர் உயிர் உள்ளவரை நான் காங்கிரஸ் பதவிக்கு வரவேண்டுமென்றுதான் மனதார ஆசைப்படுகிறேன்.

இன்றைய நிலையில் காங்கிரஸ் ஒன்றினால்தான் நாட்டில் அமைதியான ஆட்சி நடத்தமுடியும். மற்ற கட்சிகள் எதுவானாலும் கிளர்ச்சி, கேடு, நாசவேலை, துரோகம் முதலியவைகள்தாம் செய்யமுடியும். ஏனெனில், காங்கிரஸ் ஒன்றுதான் இன்று எல்லா இந்திய ஸ்தாபனமாக இருக்கிறது. மற்றவை அந்தந்த நாட்டுக்குள்தான் ஆளமுடியும்!

வேறு ஆட்சி வந்தால் தமிழனுக்கு நல்லாட்சியாய் இருந்தால் ஆளட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை.

எப்படியோ இன்று தமிழ்நாட்டில் காங்கிரஸ் தோல்வி அடைந்து மாற்றான்—எதிரி ஆட்சியாகவே ஏற்பட்டுவிட்டது. அந்தப்படியே எதிரிகளும் நினைத்து மகிழ்ச்சி அடைந்தார்கள்; நானும் நினைத்துக் கவலைப்பட்டேன்; துக்கப்பட்டேன். என்னமோ நமது நல்ல வாய்ப்பின் காரணமாய், எதிரியின் புத்தி இல்லாத தன்மையின் காரணமாய் பெரிதும் தங்களால், தங்கள் முயற்சியால் ஏற்பட்ட ஆட்சியை அனுபவிக்க வாய்ப்புப் பெறாமல் ஒரே மூழுக்கில் மண்ணெடுக்க ஆசைப்பட்டு, ஆட்சியாளர்களைச் சங்கடமான நிலைக்கு கொண்டுவர ஆசைப்பட்டதால், ஆட்சியாளர் நேர்மையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்ததும் ஆட்சியாளர்களை ஒழிக்கத் திட்டம் போட்டுவிட்டார்கள்.

இது நமக்கு ஒரு நல்வாய்ப்பாய் வாய்த்தது என்று கருதி, இந்த ஆட்சியைக் கவிழாமல் செய்து, அது உள்ளவரையிலாவது மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படும்படி செய்ய முடியுமா என்று சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பெரிதும் பார்ப்பனர் முயற்சியால் ஆட்சி தி.மு.க.வுக்கு கிடைக்கும் வாய்ப்பு வந்தது என்றாலும் தி.மு.க. பார்ப்பனர் அல்லாதார் என்பதையும், அதிலும் அவர்கள் பகுத்தறிவு வாதிகள் என்பதையும் இவர்கள் பதவிக்காகப் பார்ப்பனர் ஆதரவைத் தேடினார்களே ஒழிய, பார்ப்பனர்களுக்கு அடிமையாக இருக்க அல்ல என்பதையும், பார்ப்பனர் மறந்து தடபுடலாக அடிமைகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

தி.மு.க. பார்ப்பனர்களை வாழவைக்க என்று பதவியை விரும்பினவர்கள் அல்லவே! அவர்களுக்குப் பதவிவேண்டும்; அதுவும் நிலைக்கவேண்டும்; தொல்லை இல்லாமலும் நடைபெறவேண்டும் என்கின்ற எண்ணமுடையவர்கள்.

அதோடு தி. மு. க.வுக்கு நாட்டில் பார்ப்பன செல்வாக்கு எவ்வளவு, பார்ப்பனரல்லாதார் செல்வாக்கு சக்தி–எவ்வளவு என்பதும் தெரியும். பார்ப்பனருக்குப் பத்திரிகைகள் அனுகூலம்; கோர்ட்டுகள் அனுகூலம்; அயோக்கியத்தன்மை பொருந்திய வக்கீல் கூட்டம் அனுகூலம் உண்டு.

ஆனால், பார்ப்பனரல்லாதவர்களுக்கு இவற்றைப்பற்றிக் கவலைப்படாத மக்கள் ஏராளமானபேர் இருக்கிறார்கள்; காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள்; கிளர்ச்சிக்காரர்கள் இருக்கிறார்கள்.

பார்ப்பனர்களுக்குக் கிளர்ச்சிக்கு ஆட்கள் வேண்டுமானால் பார்ப்பனரல்லாத ஆட்களைக் கொண்டுதானே கிளர்ச்சி செய்யவேண்டும். இந்த நிலையில் மோதல் ஏற்பட்டால் யார் வெற்றி அடையமுடியும்? இதை ஆட்சியாளர்கள் சிந்திக்கமாட்டார்களா?

1927-ல் சுயேச்சை (காங்கிரஸ்) மந்திரி சபை கவிழ்ந்து சுயமரியாதை மந்திரி சபை ஆயிற்று.

1937-ல் புயல்போல் வெற்றிபெற்ற காங்கிரஸ் மந்திரி சபை கவிழ்ந்து, ஏன் பெரியார் சொல்லுகிறபடி நடக்கிற (ஜஸ்டிஸ் கட்சி) அட்வைசர் மந்திரி சபை ஆயிற்று.

படிப்பகம்

www.padippakam.com



1947-ல் காங்கிரஸ் (பிரகாசம்) மந்திரி சபை மாறி, இராமசாமி ரெட்டியார் மந்திரி சபை ஆயிற்று.

பிறகு 1954-ல் இராஜாஜி மந்திரி சபை மாறி, காமராசர் மந்திரி சபை ஆயிற்று.

அப்படிப் போல்தானே 1967-லும் பார்ப்பனர் வெற்றிபெற்ற மந்திரிசபை, லேபிள் மாற்றியதுபோல், பார்ப்பனரல்லாதார் மந்திரிசபை ஆயிற்று.

இவ்வளவுக்கும் நான் பங்காளியாகச் சம்பந்தப்பட்டவனுக்கு—பாடுபட்டவனுக்கு இருந்துவந்திருக்கிறேன். என்னாலாயிற்றா, இயற்கையாக ஆயிற்றா? என்பது வேறு விஷயம். ஆனால், இவற்றிற்கு என் பங்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த நிலையில் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? என்னை தி. மு. க. மதித்தாலும் சரி, மதிக்காவிட்டாலும் சரி.

காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் மந்திரி சபை என்னை மதித்ததா? அழைத்ததா? புன்முறுவலாவது காட்டிற்றா?

'பட்டுச் சேலையை இரவல் கொடுத்துவிட்டு, ஜமுக்காளம் எடுத்துக்கொண்டே, இரவல் வாங்கியவள் பின்னால் திரிந்து தொடர்ந்தது' போல்.

அதாவது, பட்டுச்சேலை, அதை இரவல் கேட்டார்கள்; கொடுத்துவிட்டோம்; அதை வாங்கிக் கட்டிக்கொண்டவள் நினைத்த பக்கத்தில் போய் உட்கார்ந்தாளேயானால், சேலை அழுக்குப்பட்டுப் போகும்; கறைபட்டுப் போகும்; எண்ணெய் பட்டுப்போகும்; கட்டிக் கொண்டவளுக்குக் கவலை இல்லை; ஊரார் வீட்டுச் சேலைதானே என்று அலட்சியமாய் உட்காருவாள். கவலை சேலைக்காரிக்குத்தானே இருக்கும்? ஆதலால், வாங்கிக் கட்டிக் கொண்டவள் பின்னாலேயே சொந்தக்காரி ஒரு ஜமுக்காளம் எடுத்துக்கொண்டு, அவள் பின்னாலேயே போய், அவள் உட்கார ஆரம்பித்தால் உடமைக்காரி உடனே ஜமுக் காளத்தை விரிப்பாள்.

அதுபோலவே, நமது கதி; மந்திரி பதவி தி. மு. க.-வுக்கு. கவுரவம், அதன் பயன் நமக்கு! நம்முடையது.

அது கறைபடாமல், அழுக்குப் படாமல் பாதுகாக்க வேண்டிய காரியம் நமக்கு இருக்கிறது; அது எல்லோருக்கும் இருக்காது. உடமைக்காரியாகிய நமக்கு—தி. க. காரர்களுக்குத்தான் இருக்க முடியும்.

மற்றவர்களோ அது நமக்கு வராதோ என்கிற கவலைக்காரர்கள் ஆகத்தானே இருக்கிறார்கள்? பார்ப்பனர் (கம்யூனிஸ்ட்), பார்ப்பனர் (சுதந்திரா) மற்றும் பல பார்ப்பனர் பல கட்சி பேரால் இருக்கிறார்கள்.

கடைசியாக யாராவது கவிழ்ந்து மறுபடியும் நம்ம கைக்கு வராதா என்கிற கருத்தில் காங்கிரஸ் உள்ளது.

நாம் அப்படிப்பட்டவர்கள் அல்லவே! தி. மு. க. கவிழ்வதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. அதுவரையில், மற்றும் அப்புறம் என்ன ஆகும்? இது இரண்டையும் பற்றி 'பட்டுச் சேலைக்காரியான' நாம்தானே பாடுபட வேண்டும்? ஆட்சி நமக்குத்தானே சொந்தம்? மற்றவன், சுரண்டினவரை லாபம் என்பவன்தானே? காங்கிரசும் அப்படித் தானே? அது பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் அல்லவே? காமராசர்தானே நம்முடையவர்; நம்மவர்.

இதே தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைக்கு பக்தவத்சலனார் வரலாம்; அவர்தாமே வரலாம். காங்கிரசில் டிக்கெட் இல்லையென்றவுடன் சுதந்திரா டிக்கெட் கேட்பவனே வரலாம்; இப்படியானவர்கள் யாருக்காவது பார்ப்பனரல்லாதார் என்கின்ற கவலையோ, உணர்ச்சியோ உண்டா?



நமது இலட்சியத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டால் நாம் யாராவோம் என்பது எனது நண்பர்களுக்கும் பொது மக்களுக்கும் கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன். வழமைபோல் எப்படிப்பட்ட ஆட்சியானாலும் எதிர்த்தே தீருவோம்! எதிர்த்தே தீருவோம்!

['விடுதலை'-தலையங்கம்—29-3-1967]

## 37. தமிழர்களின் முக்கிய கவனத்திற்கு

பார்ப்பான் உயிர் கடவுள் பொம்மையிலும், கல்லிலும்தான் இருக்கிறது. அவை ஒழிந்தால் பார்ப்பானைப் பிராமணன் என்றோ, சாமி என்றோ, மேல் சாதியான் என்றோ எவனும் மதிக்கமாட்டான்.

இப்போதே பார்ப்பனர் தங்களுக்குக் கூண்டோடு அழிவுகாலம் வந்துவிட்டது என்று கருதி, எந்தப் பாதகத்தைச் செய்தாவது, அதாவது யாரைக் கொன்றாவது மக்களையெல்லாம் காலிப் பயல்களாகச் செய்தாவது, தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தீர்மானித்து இக் காரியத்தில் ஒவ்வொரு பார்ப்பானும் தங்களாலான கைங்கரியத்தைச் செய்து பார்த்து விடத் துணிந்து விட்டார்கள். இதற்கு ஆதாரம் இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் நடந்து வரும் அயோக்யத்தனங்களும், காலித்தனங்களுமே போதுமானதாகும். இந்த நிலைக்குப் பூணூல் இல்லாத பார்ப்பனர்களாகிய காங்கிரஸ்காரர்களும் பெரும் காரணஸ்தர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் இருக்கிறார்கள்.

பார்ப்பனர்களுக்கு அவர்களது பார்ப்பனத்தன்மை இறங்கிக்கொண்டு வருகின்றது; காங்கிரஸ்காரர்களுக்கு இந்த நாட்டில் அவர்கள் ஆதிக்க வாழ்வு இறங்கியே விட்டது.

ஆகையால், இரு சாராரும் சேர்ந்து தங்களால் செய்யக்கூடிய எல்லாப் பாதகச் செயல்களையும் செய்து பார்த்து விடுவது என்று துணிந்துவிட்டிருக்கிறார்கள். இப்போது வேலை நிறுத்தம், தொழிலாளர் என்று கூச்சல் போடுவதெல்லாம் பார்ப்பனக் கூட்டு முயற்சிதான். இன்னும் பல பெரிய கேடுகள் ஏற்படலாம். இன்றைய திராவிட முன்னேற்ற (பகுத்தறிவு)க் கழகத்தைக் கவிழ்க்கும் வரை (அதை அவ்வளவு எளிதில் செய்ய முடியாது) ஓயாமல் பல கேடுகளைச் செய்துதான் வருவார்கள். மக்கள் சகித்துக்கொண்டுதான் தீர வேண்டும். ஏன் என்றால் பார்ப்பான் ஒழிவதும், காங்கிரஸ் ஒழிவதும் இலேசான காரியம் அல்ல.

எளிதில் பிரிக்கமுடியாதபடி அவை ஒன்றுக்கொன்று ஆதரவில் பெரிய முடிச்சுப் போட்டுக் கொண்டிருக்கின்றன. இரண்டு பேரும் தங்கள் ஆதிக்கக் கட்டடத்தை கடவுள், மதம், கோவில், உருவம் இவை சம்பந்தமான கட்டுக் கதைகள் ஆகிய அஸ்திவாரத்தின் மீதே கட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்றால் மக்களுக்குப் பகுத்தறிவு ஏற்பட்டு, பகுத்தறிவுக்கு மாறான எதையும் ஒழித்துக்கட்டுவது என்ற துணிவு தமிழர்களுக்கு ஏற்பட்டால்தான் முடியும்.

இதை மனதில் வைத்துத்தான் காந்தியாரும் "காங்கிரஸ் ஒழிக்கப்படவேண்டும்" என்றும், ஆட்சி-செக்குலர், மதச்சார்பற்ற-பகுத்தறிவு ஆட்சியாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார். இதனாலேயே அவர் கொல்லப்பட்டு விட்டபடியால் காங்கிரஸ் கலைக்கப் படாமல் போய் விட்டதோடு 'செக்குலர் ஆட்சி' என்று சட்டம் செய்தும், அது அமுலுக்குக் கொண்டுவர முடியாமலே போய்விட்டது. இப்போது அதை மதச் சார்பற்ற ஆட்சியாகச் செய்யக்கூடிய தி.மு.க. ஆட்சி நல்வாய்ப்பாக ஏற்பட்டிருந்தும் அதைக் காங்கிரசாரும் பார்ப்பனரும் ஒழிக்கப் பார்க்கின்றார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



செக்குலர்—மதச் சார்பற்ற சொல்லுக்கு இவ்விரு சாராரும் என்ன வியாக்கியானம் கூறுகிறார்கள் என்றால், 'ஒரு பெண் கன்னியாய் இருக்கவேண்டுமென்றால் அதற்கு ஆண் சம்பந்தமே இருக்கக்கூடாது என்பது பொருள் அல்ல; எல்லா ஆண்களையும் சமமாகக் கருதி, கூப்பிட்டவனிடமெல்லாம் கலவி செய்யவேண்டும் என்பதுதான் கன்னி என்பதற்குப் பொருள்' என்பதுபோல் பொருள் சொல்லுகிறார்கள். எல்லா மதங்களையும் சமமாகப் பார்க்கவேண்டும் என்கின்ற கொள்கை மதவிஷயத்தில் 'காலம் காணாததற்கு' முன்பு இருந்தே இருந்து வருகிறபோது அதைப் புதிதாக வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏன் வரும்?

'செக்குலர்' என்ற சொல்லை ஆங்கிலச் சொல்லாகத்தான் சட்டத்தில் புகுத்தினார்களே ஒழிய, வேறமொழிச் சொல்லாகப் புகுத்தவில்லை. ஆங்கிலச் சொல்லுக்கு வியாக்கியானம் அந்தச் சொல்லை உற்பத்தி செய்தவர்கள் சொல்லுவதைப் பொறுத்ததேயொழிய, அதன் கருத்துக்கு விரோதிகளான பார்ப்பனர்களும் காங்கிரஸ்காரர்களும் சொல்லுவது பொருத்தமாக முடியுமா?

அந்தச் சொல்லும்கூட அரசாங்க காரியத்திற்குத்தான் பொருந்தும் என்று இன்றைய ஆட்சியாளர்கள் சொல்லுகிறார்களே ஒழிய, அது எல்லா மக்களுக்கும் வலியுறுத்தும் பொருள் என்று சொல்லவில்லையே! அப்படி இருக்க, இதில் பார்ப்பனருக்கும் காங்கிரசாருக்கும் ஏன் ஆத்திரம் வரவேண்டும்.

ஏன் என்றால், தங்கள் வாழ்வு அதில்தான் இருக்கிறது. அதில்தான் மக்களுடைய முட்டாள்தனத்தில் கிளைத்து எழுந்த கடவுள், மதம், கோவில், அதிலுள்ள கற்சிலைகள், அவற்றின் பொம்மைகள், சித்திரங்கள், படங்கள் தட்டிகள் முதலியவைகள் இருக்கின்றன. அதனால்தான் அவர்களுக்கு ஆத்திரம் வருகின்றது.

எதை எதையோ சொல்லி, எதை எதையோ செய்து எப்படியோ போகட்டும்; நமக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை; அதற்குப் பெரும் கூட்டம் தயாராய் இருக்கிறது. ஆனால், பார்ப்பனரும், காங்கிரஸ்காரர்களும் (காங்கிரசிலும் தனித்தன்மையுள்ள ஒரு கூட்டம் இருக்கிறது. ஆனால் அவர்கள் வெளிப்படையாய் வரப் பயப்படுகிறார்கள்) அல்லாத பொதுமக்கள் (தமிழர்கள்) கடமை என்ன?

நம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊரில் பொதுக்கூட்டம் போட்டு அரசாங்கக் காரியங்களை ஆதரித்துப் பாராட்டி தீர்மானங்கள் போட்டு, அத் தீர்மானங்களை முதலமைச்சருக்கும், மத இலாகா அமைச்சருக்கும் அனுப்பிய வண்ணம் இருக்க வேண்டியது அவசியம்.

பார்ப்பனர்கள் தினந்தோறும் தங்கள் பத்திரிகைகளில் யார் யாரோ அநாமதேயங்கள் பேரால் பல கடிதங்கள் வெளியிட்டு வருகிறார்கள். நாம் அப்படிச் செய்யாவிட்டாலும் பொதுக்கூட்டங்கள் போட்டுப் பேசித் தீர்மானங்கள் செய்து அனுப்ப வேண்டாமா?

இப்படிச் செய்வது ஒருவகையில் பார்ப்பனர் யோக்கியதையையும், காங்கிரசார் யோக்கியதையையும் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்கு வசதியாகும்.

பொதுவாக, நம் தமிழ் மக்கள் தாங்கள் என்றென்றும் சூத்திரர்களாக, கீழ் சாதி மக்களாக இருக்க ஆசைப்படுகிறார்களா? இல்லாவிட்டால், அதை மாற்றத் தமிழர்கள் செய்யும், செய்யப்போகும் காரியம் என்ன என்று கேட்கிறேன். தாங்களாகச் செய்யாவிட்டாலும், ஆட்சியையாவது ஆதரிக்க வேண்டாமா?

ஒவ்வொரு தமிழனும் தன் வீட்டில் உள்ள கடவுள்—மதசம்பந்தமான படங்களை எடுத்து எறியவேண்டும்; எடுத்து எறிந்துவிட்டுத் தகவல் கொடுக்க வேண்டும்; பொதுக்



தஞ்சையில், 17–9–1971–ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சிலையைத் திறந்து வைத்த முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களுடன் மேடையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



கூட்டத்தில் சாட்டிக் கிழித்து எறியவேண்டும். இவற்றாலும், இப்படிப்பட்ட காரியங்களாலும்தான் தமிழர் இழிவு நீங்கும்.

['விடுதலை'-தலையங்கம்—3-12-1971]

## 38. கொள்கை ஆதரவு மாற்றம்

நான் 1920-ல் காங்கிரசில் சேர்ந்தேன். அதற்கு முன்பு 1900 முதல் பார்ப்பனரல்லாதவர் நல உணர்ச்சி கொண்டவனாக இருந்துவந்தேன்.

நான் 1900-க்கு முன்பே கடவுள், மத, சாதி விஷயங்களில் நம்பிக்கை இல்லாதவனாகவே இருந்துவந்தேன்.

நான் அக் காலத்தில் சிறிது செல்வாக்குள்ள குடும்பத்தவனாகவும், வியாபார விஷயத்தில் ஈடுபடுபவனாகவும் இருந்துவந்ததால் யாரிடமும் தர்க்கமும், விவகாரமும் பேசுவதில் பிரியமும் உற்சாகமும் உடையவனாக இருந்துவந்தேன்.

மாடு, எருமை கன்றுபோட்ட நேரங்களைக் குறித்துவைத்துக்கொண்டு ஜோசியர்களிடம் கொடுத்து ஜோசியம் கேட்பேன்.

1900-ல் இருந்தே எனக்கு ஜோசியம், முகூர்த்தம், சகுனம் முதலியவைகளில் நம்பிக்கை இருந்ததில்லை. அப்போது என்னிடத்தில், 'வாய்கொடுத்து மீளமுடியாது' என்று எல்லோரும் பேசிக்கொள்வார்கள்.

நான் எனது 5, 6, 7 வயது முதற்கொண்டே 'தறுதலைப் பிள்ளையாகத் திரிந்தாலும், அந்த வயது முதற்கொண்டே நான் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும், எந்தக் கூட்டத்தில் சேர்ந்தாலும் (நான்) தலைவனாகவே, மற்றவர்கள் என் சொல் கேட்பவர்களாகவே இருக்கும்வண்ணம் இருந்து வந்திருக்கிறேன்.

இன்றுவரையிலும்கூட எந்தக் குழுவிலும், எந்தக் கட்சியிலும் நான் தலைவனாகவே இருந்துவந்திருக்கிறேனே ஒழிய, ஒரு சாதாரண அங்கத்தினனாக எதிலும் இருந்ததில்லை.

அதுபோலவே, எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தக் குழுவிலும், கட்சியிலும் எதாலும் நான் பிறத்தியாருக்கு ஆதரவு கொடுப்பவனாகவே இருந்து வந்திருக்கிறேனே ஒழிய, நான் யாரிடமும் எதற்கும் ஆதரவு உதவி கேட்டதே இல்லை. அதுபோலவே, நான்தான் எனது ஆயுளில் யாருக்கும் பணஉதவி செய்திருக்கிறேனே ஒழிய, யாரிடமும் எந்தக் காரியத்திற்கும் பண வசூலுக்குப் போனதே கிடையாது; யாரிடமும் எந்தக் காரியத்திற்கும் பண வசூல் செய்ததும் கிடையாது.

சுயமரியாதை இயக்கம், திராவிடர்கழகம் முதலியவற்றிற்குக்கூட பணம் வேண்டுமென்று பத்திரிக்கையில் போடுவேன்; கழகத் தோழர்கள் வசூல் செய்வார்கள்; அல்லது பொதுமக்கள் அனுப்பிக்கொடுப்பார்கள்; அவ்வளவுதான். நான் நேரில் யாரையும் கேட்டது கிடையாது; கேட்டு வாங்கியதும் கிடையாது.

எனக்குப் பணத்தாசை ரொம்பவும் உண்டு; செலவு செய்யவும் மனம் வராது; யாரையும் கேட்கவும் மாட்டேன்.

ஆனால், பணம் வந்துகொண்டே இருக்கும்; சேர்த்துக் கணக்குப்பார்த்து மகிழ்ச்சி அடைந்துகொண்டே இருப்பேன். சரியாகக் கணக்கு வைக்கமாட்டேன். அடிக்கடி இருப்பைக் கணக்குக் கூட்டிப் பார்த்துக்கொள்வேன்.

என்க்கு ஆசை எல்லாம்—மக்கள் பகுத்தறிவாளர்கள் ஆகவேண்டும்; சாதி ஒழிய வேண்டும்; உலகில் 'பார்ப்பனர்' இருக்கக்கூடாது. இதுதான் எனது கொள்கை. இதற்காகத்தான், காங்கிரஸில்; கூப்பிட்டவுடன் சேர்ந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com



நான் காங்கிரசை விட்டதற்கும் இதுதான் காரணம்.

ஜஸ்டிஸ் கட்சி என்னும் பார்ப்பனரல்லாத கட்சியில் சேராமலே அதற்கு நான் ஆதர வளித்ததும் இதற்காகத்தான்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைமை ஏற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதும் இதற்காகத்தான். அக் கட்சித் தலைமை ஏற்றவுடன் அக் கட்சிக் கொள்கையாக இம் மூன்றையுமே ஏற்படுத்தி விட்டு, அரசியலில் (எலக்ஷனில் நிற்பதில்லை; பதவி ஏற்பதில்லை) பிரவேசிப்பதில்லை என்ற திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டதும் இதற்காகத்தான். காங்கிரஸ் கட்சி பதவி யிலிருந்து விலக்கப்பட்டபோதும், பதவியை வேண்டாம் என்று உதறித் தள்ளினதும் இதற்காகத்தான்.

வெள்ளையன் போனபின்பு 1952-ல் நடந்த தேர்தலின்போதுகூட, நான் காங்கிரசை எதிர்த்து வேலை செய்தபோதுகூட என் கழகத்தில் இருந்து ஒரு நபரைக்கூட நிறுத்தாமல், கம்யூனிஸ்டுகளுக்கும், காங்கிரஸ் எதிரிகளுக்கும் ஆதரவளித்து, காங்கிரசைத் தோற் கடித்ததும் இதற்காகத்தான்.

1952-ல் காங்கிரஸ் தோற்றும், மேற்கண்ட எனது கொள்கைப்படி வேறுகட்சி பதவிக்கு வரமுடியாமல் போனதால், காங்கிரஸ் பதவிக்கு வந்து எனக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறியும் நான் மறுத்துவிட்டு, காங்கிரசை எதிர்த்து இராஜாஜியை காங்கிரசைவிட்டுப் போகும்படி செய்ததும் இதற்காகத்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் காமராசரை ஆதரிக்கும் முறையில் காங்கிரசை ஆதரித்ததும் இதற்காகத்தான். அதாவது, காமராசர் பதவிக்கு வந்தவுடன் டார்ப்பனர்களும், அவர்களது சில கூலிகளும் காங்கிரசை (காமராசரை) எதிர்த்தபோது, நானாகவே மேல்விழுந்து காங்கிரசை (காமராசரை) ஆதரித்ததும் இதற்காகத்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்காரர்கள் என்னை விரும்பவில்லை என்று தெரிந்தும், நானாகவே காங்கிரசை ஆதரித்துக்கொண்டிருந்ததும் இந்தக் கொள்கைக் காகத்தான்.

இந்தச் சந்தர்ப்பங்களில் தி. மு. க. வை எதிர்த்துக்கொண்டு இருந்ததும் இதற்காகத் தான். அதாவது, இந்தச் சந்தர்ப்பத்தில் தி. மு. க. வுக்கு பார்ப்பனர்கள்—அவர்களது பத்திரிக்கைகள் ஆதரவாக இருந்தாலும் தி. மு. க. வும், 'நாங்கள் பார்ப்பனர் கைப் பொம்மைகள்தான்' என்று பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டு இருந்தாலும் தி.மு.க.வை எதிர்க்கவேண்டி வந்தது. 1967 தேர்தலில் காங்கிரஸ் தோற்று, தி.மு.க. பதவிக்கு வந்தது. பார்ப்பனர் தி. மு. க. வை ஒழிக்கப் பாடுபடுவதாலும், காங்கிரஸ் பார்ப்பனருடன் சேர்ந்து கொண்டு தி. மு. க. வை ஒழிக்கப் பாடுபடுவதாலும் நான் தி. மு. க. வுக்கு ஆதரவாளனாக இருக்கவேண்டியதாகியதும் இதற்காகத்தான்.

ஆகவே, எனது பொதுவாழ்வு துவங்கியதுமுதல் இன்றுவரை மேற்கண்டபடிதான்— பல கட்சிகளை.எதிர்த்தும், பலகட்சிகளை ஆதரித்தும் தொண்டாற்றிக்கொண்டு வந்திருக் கிறேன்; வருகிறேன். எல்லாம் ஒரே காரியத்திற்கு (கொள்கைக்கு) ஆகத்தானேயொழிய, கொள்கை மாற்றத்திற்காக அல்ல என்பதை மக்கள் உணரவேண்டும்.

இவ்வளவு மாத்திரம் அல்ல; இனியும் எந்தக் கட்சியை எதிர்ப்பேனோ, எதை எதை ஆதரிப்பேனோ எனக்கே தெரியாது!

பொதுவாக, நான் சாகும்வரை இந்த மேற்கண்ட கொள்கைகளை மாற்றிக்கொள்ள மாட்டேன் என்று நான் உறுதியாய் இருக்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—26-8-1972]



# 39. சுதந்திரமும் சமுதாயமும்

நம் தேசம், நாடு, சுதந்திரம் பெற்று இன்றைக்கு (25) இருபத்தைந்தாண்டு ஆகிறது என்றாலும், இந்தக் கால் நூற்றாண்டில் அரசியலில்தான் மாறுதல் பெற்று வருகிறோமே ஒழிய சமுதாய அமைப்பில், கல்வியில் கீழ் நிலையில்—மிகமிகக் கீழ் நிலையில் இருந்து வருகிறோம்.

அரசியலில் நாம் பெற்ற மாறுதல் என்பது 'கெட்டதிலிருந்து கழிசடைக்கு'ச் (From bad of worse) சென்று கொண்டிருக்கிறோம். ஒரு எடுத்துக்காட்டு வாக்கியம் சொல்ல வேண்டுமானால், 'அவன் போனால் கலகமாகிவிடும்; நான் போய் செருப்பாலடித்துவிட்டு வந்துவிடுகிறேன்' என்று ஒரு சமாதானம் செய்ய வருகிறவன் சொன்னானாம்; அது போல இருக்கிறது நமது அரசியல் வளர்ச்சி.

நம் நாட்டு அரசியலில் வளர்ந்துவரும்—இருந்துவரும் மானங்கெட்ட, அயோக்கிய காலித்தனங்களும், கூலித் தன்மைகளும், யோக்கியப் பொறுப்பற்ற தன்மைகளும் வேறு எங்கும், எந்த நாட்டிலும் இல்லை என்கின்ற தன்மையில்தான் இருந்தும் வளர்ந்தும் வரு கிறது. நமது சுதந்திரமானது ஒரு யோக்கியன் ஒரு பெரிய மனிதன் என்று சொல்லுவதற்கு ஒரு ஆள்கூட நமது தேசத்தில், நாட்டில் இல்லாமல் செய்து விட்டது. அது மாத்திரமா?

நம் நாட்டில் காலித்தனம், அயோக்கியத்தனம், கயவாளித்தனம், புரட்டு, பித்த லாட்டம், மோசடி, துரோகம், வஞ்சனை முதலிய குணங்கள், தன்மைகள் இல்லாத மக்களையோ, அரசியல் கட்சிகளையோ, தலைவர்களையோ, அரசியல் வாதிகளையோ காண முடியவே முடியாதபடி செய்துவிட்டது. பெரிய பித்தலாட்டம் துரோகம், வஞ்சனை இவைகளில் தேர்ச்சி பெற்றவர்கள்தாம் தலைவர்களாகிறார்கள்; தேசியவாதிகளாகிறார்கள்; தேச பக்தர்களாகிறார்கள்.

இவை வர வர நம் நாட்டுப் பெண்களையும் தழுவிக்கொள்ளும் நிலை வளர்கிறது. அவ்வளவு மாத்திரமா? மாணவர்களையும் இழுத்துக் கொள்ளும் என்பதோடு அதிகாரி களையும், அரசியல், சிப்பந்திகளையும் சூழ்ந்துகொள்ளும் என்று உறுதி கொள்ளவேண்டிய அளவுக்கு வளர்ந்து வருகிறது.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், மக்களுக்கு இருக்கவேண்டிய மானம்— அவமானமற்ற தன்மை, கண்ணியம், நேர்மை முதலிய சாதாரண குணங்களை நமது சுதந்திரம் எரித்துச் சாம்பலாக்கி வருகிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்த சுதந்திரம் உள்ளவரை மக்களில் நேர்மையுள்ள யோக்கியன் இருக்கமாட்டான் என்பதோடு, தோன்றவே மாட்டான் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், இந்தச் சுதந்திரம் ஏற்பட்டதே பித்தலாட்டக்காரர்கள், நாணயமற்றவர்கள், மக்களை ஏமாற்றி வஞ்சித்துப் பழக்கப்பட்டுத் தேறினவர்கள், பொறுப்பற்ற காலிகள் முதலியவர்களது முயற்சியினால், தந்திரத்தினால் என்றால்—இதில் யோக்கியம், நேர்மை, உண்மை எப்படி இருக்கமுடியும்?

ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்; ஒரு கல்லுருவத்திற்கு அயோக்கியத்தனங் களைப் பரப்பும் ஸ்தாபனமான ஒரு கோவிலுக்கும், ஒரு மடத்திற்கும், ஒரு சபையாருக்கும் ஒரு சாமியாருக்கும், சங்கராச்சாரிக்கும் ஒரு கோடி ரூபாய் வருமானம் இருந்தாலும், சொத்து இருந்தாலும் வரவு-செலவு இருந்தாலும் அனுமதிக்க வேண்டியது; கணக்கு, வரி கேட்கக்கூடாது.

ஆனால், உழைத்துப் பாடுபட்டு, திருடாமல், ஏமாற்றாமல் தேடிய சொத்துக்களுக்கு அதாவது, ஒருவனுக்கு இவ்வளவுதான் உரிமை என்பது ஆட்சிக் கொள்கைத் திட்டம் என்றால் இந்த ஆட்சியின் தன்மை எப்படிப்பட்டது? முன்னவன் செல்வம் எப்படி நாச மாகிறது? யாருக்குப் பயன்படுகிறது? பின்னவன் செல்வம் யாருக்குப் பயன்படுகிறது?

படிப்பகம்

www.padippakam.com



சார்த்திகை என்கிறான்—குடம் குடமாய், பீப்பாய் பீப்பாயாக நெய், வெண்ணெய், எண்ணெய் பாழாகின்றன. இலட்சதீபம் என்கிறான், டின் டின்னாக எண்ணெய் பாழா கிறது. அபிஷேகம் என்கிறான்—நெய், எண்ணெய், பால், தயிர், வெண்ணெய் படிப்படி யாக ஜலதாரைக்குப் போகின்றன. மற்றும் இவை போன்றவைகளுக்கெல்லாம் கேள்வி கேட்பாரே கிடையாது.

இந்தப் பார்ப்பனர் வாழும் நாட்டைவிட வேறு எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட பழக்கமோ, வழக்கமோ, சர்க்கார் அனுமதியோ கிடையாதே! இங்கு சுதந்தரத்தில் கேள்வி கேட்பாரும் கிடையாது. ஆனால், மனித சமுதாயத்தில் உலகத்திற்கே மாறுதலாக நம் நாடு, தேசம் தவிர வேறு எந்த நாட்டிலும், தேசத்திலுமில்லாத மாதிரி, மனிதனில்—முதல் வன் (பார்ப்பான்), நாலாமவன் (சூத்திரன்), அஞ்சாமவன் (பஞ்சமன்) என்கின்ற பிரிவு கடவுளில், மதத்தில் உள்ள ஆதாரங்களின் பெயரால் அதாவது, சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் 4ஆம், 5ஆம் சாதி; 100-க்கு 3 பேர் ஒன்றாம் சாதி என்று பிரிக்கப்பட்டு, அதைக் காப்பாற்றுவதே சுதந்திரத்தின் சட்டம் என்றும் ஏற்பாடு செய்து, சுதந்திர ஆட்சியும் சட்டமும் அமுல் செய்து ஆதரித்து வருகிறது. இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா? கொடுங்கோன்மை ஆட்சியா என்று கேட்கிறேன்.

அதுமாத்திரமா? கீழ்மக்கள் என்று சொல்லப்படுகிற சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் இருக்கும் நாட்டில், மேன்மக்கள் என்று சொல்லப்படுகிற 100-க்கு 3 பேரையே கொண்ட 'முதலாவது' சமுதாயமாகிய ஒரு பார்ப்பனப் பெண்ணின் ஆட்சியில், சமுதாய அமைப் பைக் காப்பாற்றுகிற சட்டத்தை வைத்து ஆளுகிற ஆட்சியில் குடிகளாயிருப்பது என்பது சுதந்திர ஆட்சியா? கொடுங்கோன்மை ஆட்சியில் மானங்கெட்டு, ஈனத்தனமாகக் குடிகளாக இருக்கிறோம்; இருக்கவேண்டும் என்பதும் ஈன அடிமைத் தன்மை ஆட்சியா என்று கேட்கிறேன்.

சுதந்திரம் கிடைத்தவுடனே பார்ப்பான் சட்டம் செய்தான்; அந்தச் சட்டப்படியே தேர்தல் வைத்தான்; யார் வெற்றிபெற்றாலும் அந்தச் சட்டப்படியே ஆளவேண்டும் என்று அமுல்படுத்திவிட்டான். பரம்பரையாய்ப் பார்ப்பானே ஆட்சித் தலைவராய் வரும்படி ஆட்சி அமைப்பைச் செய்துகொண்டான்.

தேசத்தில் உள்ள மற்ற மக்கள் ஒன்றுசேர முடியாத நிபந்தனைகளைக் கட்டாய மாகச் சட்டமாக ஆக்கிக்கொண்டான். 50 கோடி மக்கள் உள்ள தேசம் ஒன்று சேராதபடி 16 பிரிவுகளாகப் பிரிந்து, இது உலகம் உள்ளவரை நிரந்தரமாகப் பிரிந்திருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தமும், பிரிந்துகொள்ள விரும்புகிறவனுக்குப் பிரதிநிதித்துவ உரிமை இல்லை என்றும், கிரிமினல் தண்டனை என்றும் ஆக்கிக்கொண்டு, மேல் சாதியானுடைய சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டு, பரம்பரை உரிமைபோல் நடத்தப்பட்டு வரும் ஆட்சியில் இருக்கிறோம். இதை அடிமை ஆட்சி என்றோ அன்னிய ஆட்சி என்றோ சொல்லக்கூடாத நிலையில் இருக்கிறோம்.

மற்றும் இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டு ஆன பின்பும் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள், வெறும் கையெழுத்து மாத்திரம் போடத்தக்க மக்களையும் சேர்த்து எண்ணிப்பார்த்தால்—100-க்கு 39 மக்களே இருக்கிறார்கள். அதாவது, இன்னும் 100-க்கு 61 மக்களுக்கு எழுத்து வாசனையே இல்லை. அதாவது, இந்த 39 பேர் பெரிதும் நகரவாசிகளேதாம்; அதிலும் பெண்கள் சமுதாயத்தில் 100-க்கு 27 பெண்கள்தாம் படிக்கத் தெரிந்தவர்கள். அப்படி யானால், இனியும் நமது நாட்டில் பெண்கள் 100-க்கு 73 பேர் படிக்கத்தெரிய வேண்டிய வர்கள் ஆவார்கள். இவர்களும் கிராமங்களில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட பெண்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என்றே சொல்லலாம்.



தஞ்சையில், 17-9-1971-ல் நிகழ்ந்த பெரியார் ஈ. வெ. ரா. சிலை திறப்பு விழாப் பொதுக் கூட்டத்தில், வேலூர் C. M. C. மருத்துவமனை வளர்ச்சிக்கு பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் துணைவியார் ஈ. வெ. ரா. மணியம்மையார் நிதி வழங்கினார்

படிப்பகம்

www.padippakam.com



இந்த இலட்சணத்தில் இந்த நாட்டு மக்களாகிய நாம் நமக்கு வேண்டிய ஒரு நீதிபதியை நியமித்துக்கொள்ள உரிமையில்லை; பார்ப்பானாகவும், பார்ப்பானுக்கு வேண்டியவனாகவும், மூடநம்பிக்கையில் ஈடுபட்டுப் பார்ப்பானுக்கு அடிமையாய் இருப்பவனாகவுந்தான் நியமிக்கப்பட முடியும்.

உதாரணம் வேண்டுமானால், இந்தநாட்டு நீதிபதிகளிடம் பார்ப்பனருக்கு நம்பிக்கை இல்லாமலே போய்விட்டது. தொட்டதற்கெல்லாம் சுப்ரீம் கோர்ட்டுக்கே போய் பிராது கொடுக்கிறார்கள்; வேறு மாகாணத்துக்கு மாற்றுதல் கேட்கிறார்கள்; யார் என்றால், சாதி மதம் முதலிய மூடநம்பிக்கை சலுகையால் வாழ்பவர்கள்.

எனவே, நம் நாட்டின் சுதந்திரத்தின் யோக்கியதை இந்த நிலையில் இருக்கிறது என்பதுடன் நமக்கு உண்மையான சுதந்திரம் வேண்டுமானால் பார்ப்பனர் கருதுவது போலவே, தமிழ்நாடு தனித்த ஏகபோக ஆட்சியாய் இருக்கவேண்டும். அப்படிக்கு இல்லையானால், அது முடியாது என்பதானால் அன்னிய தேசத்தான் ஆட்சிதான் வேண்டும் என்று நினைக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறோம். இதுதான் நமது இன்றைய சுதந்திரம்.

['விடுதலை-தலையங்கம்—23-9-1972]

## 40. இன்றைய இழிநிலை

தமிழ் நாட்டின் இன்றைய நிலை மிகவும் பரிகசிக்கத்தகுந்த, பரிதாபப்படத் தகுந்த நிலையில் இருக்கிறது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், எங்கு பார்த்தாலும் கலகம், காலித்தனம், நாசவேலை முதலிய கேடான காரியங்கள் நடந்தவண்ணம் இருக்கின்றன.

இந்த நாட்டில் என்றைய தினம் பார்ப்பனரல்லாதாருக்குள் பெரிதும் மான உணர்ச்சி ஏற்பட்டு அவர்கள் செயலில் இறங்கினார்களோ, அன்று முதலேதான் நாட்டில் இந்தப்படியான காலித்தனம் முதலிய இழிநிலைகள் ஏற்படுத்தப்பட்டன. இதற்குக் கர்த்தாக்களாகப் பார்ப்பனர்களே இருந்துவருகிறார்கள். இன்றைய நிலையில் எப்படியிருந்தாலும்—இந்தநாட்டில் சமுதாயத்துறையிலாகட்டும், அரசியல் துறையிலாகட்டும், கடவுள்—மதத் துறையிலாகட்டும் பார்ப்பனர்கள் ஒதுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டவர்களாகிவிட்டார்கள். அவர்கள் மறுபடியும் வந்து இத்துறைகளில் புகுந்துகொள்ள முடியாவிட்டாலும் மனிதர்களாக வாழுவதற்காவது ஏதாவது செய்து தீரவேண்டியவர்களாகி விட்டார்கள்.

கல்வித் துறையில் நம்மவர்கள் பார்ப்பனரை மிஞ்சி விட்டார்கள்; உத்தியோகத் துறையில் அவர்களைவிட எண்ணிக்கையில் எத்தனையோ மடங்கு கீழ்நிலையிலிருந்தவர்கள் இன்று பலமடங்கு அதிக எண்ணிக்கை கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள்.

சமுதாயத் துறையில் அவர்களுக்கிருந்த மதிப்பு அடியோடு போய்விட்டது. மதத் துறையில் அவர்களுக்கிருந்த மதிப்பும், செல்வாக்கும் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. மத்திய ஆட்சியின் தயவில்தான் பேர்சொல்லிக் கொள்ள முடிகிறது.

இந்த நிலையில் அவர்கள் உயிர்வாழவேண்டுமானால் நமது மக்களில் போதிய அறிவும், இன உணர்ச்சியுமற்ற மக்களைப் பிடித்து ஏதாவது காலித்தனம், கலகம் முதலியவைகளை நடத்தச்செய்து, பார்ப்பனர்மீது இருக்கும் வெறுப்பை—வேறு பக்கம், அதாவது தங்களுக்குள்ளாகவே செலுத்திக் கொள்ளும்படி செய்யவேண்டியதாகி விட்டது.

அதற்கேற்றாற்போல், இன்று பார்ப்பனருக்கு ஆயுதமாக ஏராளமாகப் பத்திரிக்கைகள் அவர்கள் கைவசமும்—நமது இன—மானங்கெட்ட, எது செய்தாவது வயிறு வளர்த்தால்

படிப்பகம்

www.padippakam.com



போதும் என்கின்ற ஈனமக்களிடமும் சிக்கிக்கொண்டதாலும்; நம்மிலும் அப் பத்திரிக்கைகளைப் பார்க்கவும், அவைகளை நம்பவுமான கீழ்த்தர மக்கள் ஏராளமாக இருப்பதாலும் கலகம், காலித்தனம் ஏற்பட வசதி ஏற்பட்டுவிட்டது.

1916 ஆம் ஆண்டில் நம் நாட்டில் ஏற்பட்ட பார்ப்பனரல்லாதார் (திராவிடர்) கழகம், பார்ப்பனரல்லாத சமுதாயத்தை விழிக்கச்செய்து, 1920-ல் அரசியலைக் கைப்பற்றச்செய்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது; இன்று மகா பலத்துடன் அரசோச்சி வருகிறது. இதன் மத்தியில், இந்த 50 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாகப் பார்ப்பனர் செய்த, செய்யச்செய்த காலித்தனம், கலகம், நாசவேலை, கொலை, கொள்ளை முதலிய கொடுஞ் செயல்கள் எவ்வளவு? கொஞ்சமா? சிந்தித்துப்பாருங்கள்!

சட்டம் மீறுதல், சத்தியாக்கிரகம், மறியல், தண்டவாளம் பெயர்த்து இரயிலைக் கவிழ்த்தல், வெடிகுண்டு எறிதல், கட்டடங்களைக் கொளுத்துதல்–இடித்தல், அதிகாரிகளைக் கொல்லுதல்–சுடுதல், கார்களை–பஸ்களைக் கொளுத்துதல், நாசமாக்குதல், தபாலாபீசு, இரயில்வே ஸ்டேஷன், போலீஸ் ஸ்டேஷன், நீதி ஸ்தலங்கள் கொளுத்தப்படுதல் முதலிய காரியங்களைச் செய்தல்; இத் தொழிலில் ஈடுபட்டவர்களை வீரர், சூரர், தியாகி என்று விளம்பரப்படுத்துதல்—முதலிய காரியங்களைச் செய்ய மக்களைத் தூண்டிவிட்டுத் தங்கள் நிலையைக் (பார்ப்பனர்) காப்பாற்றிக்கொண்டே வந்திருக்கிறார்கள். அந்தச் சம்பவங்கள்தாம் இன்றும் வேறு பல உருவங்களில் பார்ப்பனரால் நடத்தப்பட்டு வருகின்றன.

இவை, இந்த நாட்டில் பார்ப்பனப் பூண்டு இருக்கும் வரையிலும்–நம் மக்களுக்கு மான உணர்ச்சி ஏற்படும் வரையிலும் நடந்துகொண்டுதான் இருக்கும். இதற்குக் காரண காரியம் தேடுவது பயனற்ற காரியம்.

['விடுதலை'–அறிக்கை—23-10-1972]

## 41. நம் இன உணர்ச்சி

பொது மக்கள் சிந்திக்க வேண்டும்; சிறப்பாகத் தமிழ் மக்களில் பார்ப்பனரல்லாத—திராவிடத் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். நம் நாட்டு ஆட்சியைப் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்தும் பார்ப்பனர் கையிலிருந்தும் திருப்பி, நமது (தனித் தமிழர்) கைகளுக்கு வரும்படி செய்து, தமிழர் நலத்துக்கு—தமிழர் ஆட்சியாகவே ஆக்குவதற்கு எவ்வளவு பாடுபட்டோம் என்பதும், இதில் எவ்வளவு கஷ்டநஷ்டங்களிருந்தன என்பதும் இன்றைய இளைஞர்களுக்கு விளங்காது.

பார்ப்பனர் கையில்தான் வெள்ளையராட்சி இருந்தது; அவர்கள் இஷ்டப்படிதான் ஆட்சி நடந்துவந்தது. அந்த ஆட்சியின்போது நம்மவர்கள் (தமிழர்கள்) கல்வி கற்றிருந்தது 100-க்கு 5 விகிதத்தினர் ஆவார்கள்; நம்மவர்கள் பதவியிலிருந்தது மாதம் ரூபாய் 8-க்குட்பட்ட சம்பளமுள்ள பதவிகளில்தான் 100-க்கு 100 வீதம் இருந்து வந்தார்கள். இந்த நிலை எப்படி மாறிற்று? அரசியலாலும் மாறவில்லை; சமூக இயலாலும் மாறவில்லை; பார்ப்பனரல்லாதார் இனம் என்கின்ற இன உணர்ச்சியால்தாம் மாற்றமடைந்தது.

இந்த மாதிரியான இன உணர்ச்சிக்குப் பார்ப்பனர்—வகுப்புத் துவேஷம், தேசத் துரோகம், நாட்டைக் காட்டிக்கொடுத்த கூட்டம், கடவுள்–மதம்–சாஸ்திரங்களை எதிர்க்கும் நாத்திகக் கும்பல் என்றெல்லாம் கட்டுப்பாடாக எல்லாப் பத்திரிகைகளும், சர்க்கார் அதிகாரிகள், பார்ப்பனர்களெல்லோரும்; மற்றும் பார்ப்பனரல்லாதாரில் வயிற்றுப் பிழைப்பு–பதவியாசை உள்ள பலரும் கூடி விஷமப் பிரச்சாரம் செய்தும்; பொதுக் கூட்டங்களில் சொல்லடி, கல்லடி, செருப்படி, கலவரம், காலித்தனம் முதலியவை எல்லாவற்றிற்கும் ஆளாகியும் மனங்கலங்காது, மானாவமானத்தைப் பற்றிச் சிந்திக்காது



பாடுபட்டதன் பயனாலேயே, நாம் இன்று நமது இன ஆட்சியை ஏற்படுத்தி, அதன் மூலம் பயன்பெற்று இன்றைய நிலையிலிருக்கிறோம்.

இன்றைய நம் நிலை, சர்வ சக்தியுள்ள இந்திய இயக்கமாகிய காங்கிரசை மூலையில் உட்காரவைத்துவிட்டோம்; சர்வ சக்தியுள்ள பார்ப்பனர்களை அரசியலில் இருந்தே வெளியாக்கி சமுதாயத்துறையில் வெளியில் தலைகாட்டுவதற்கு—அதாவது 'புர்க்கா' (முக்காடு) இல்லாமல் வெளிவருவதற்கு யோக்கியதையில்லாமல் செய்துவிட்டோம். உலகப் பிரசித்தி பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி என்னும் கூட்டத்தைத் தங்கள் பெயரைச் சொல்லிக்கொள்ள யோக்கியதையில்லாமல், நாதசுரக் கச்சேரியில் ஒத்து ஊதுகிற—கூலிக்கு அலையும் கீழ்த்தர நாதசுரக்காரனையும் தவுல், மத்தளங்களையும் சுமந்து கிடக்கும் கீழ்த்தரக் கூலிபோல் ஆக்கிவிட்டார்கள்.

எதிர்க் கட்சிகளில் மந்திரிகளாய், முதல்வர்களாய் இருந்தவர்கள் எல்லாம் இன்று விலாசம் சொல்லமுடியாமல் பெயர்களை மட்டும் விளம்பரம் செய்யச்செய்துவிட்டுப் படுக்கையிலிருக்கிறார்கள். பார்ப்பனர்—சுதந்திரா என்றும் ஜனசங்கமென்றும் கவர்ச்சி ஏற்ற பெயரை வைத்துக் கட்சிகள் ஏற்படுத்திக் கொண்டு, யாராவது ஏற்பாடு செய்யும் கூட்டங்களில் தலையைக் காட்டி மறைந்து கொண்டு திரிகிறார்கள்.

['விடுதலை'–தலையங்கம்—25-10-1972]

## 42. மகா அயோக்கியர்

**அரசியலில் கட்சி மாறுகிறவர்கள் அயோக்கியர்கள், அயோக்கியர்கள், மகா அயோக்கியர்கள்!**

அரசியலில் ஒரு கட்சித் தலைவர்களிடம் பல்லைக்காட்டிக் கெஞ்சி, சிபாரிசு பிடித்து, தனக்கு ஒரு இடம் கிடைக்கும்படி கெஞ்சித் தன்னை ஏற்றுக்கொள்ளச் செய்து, தேர்தலில் தனக்காக ஆயிரம், பத்தாயிரம், இருபதினாயிரம் போன்ற கணக்கில், கட்சிப் பணச் செலவில் பதவிக்கு வந்து, கை தூக்குவதைத் தவிர வேறு ஒரு தொண்டும் கட்சிக்குச் செய்யாமல், பொதுமக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு, சர்க்காருக்குப் பல சிபாரிசுகள் செய்து பணம் சேர்த்துக்கொண்டு—கட்சிப் பெயரால், பதவிப் பெயரால் பல சலுகைகள் பெற்று அவற்றாலும் பணம், சொத்து, தகுதிக்கு மேற்பட்ட அந்தஸ்தும் வருவாய்க்கு வழியும் சம்பாதித்துக் கொண்டதைத் தவிர, வேறு காரியத்திற்குப் பயன்படாத அனாமதேயங்கள், சுயநலத்துக்கு என்றே கட்சியைக் காட்டிக்கொடுக்க, விலை பேசி வாங்கி—வேறு கட்சி என்னும் பேரால், தானிருந்த கட்சிக்கு மனதறிந்து கேடு செய்யும் கட்சிக்குப் போய்த் தன்பெயரைக் கொடுப்பதும், தான் ஆளான கட்சியைக் குறைகூறுவதும், அக்கட்சியை ஒழிக்கப் பாடுபடுவதும், அதற்குத் தன் பெயரைக் கொடுப்பதுமான காரியத்தில் ஈடுபடுவதைத்தான்—நான், அயோக்கியம்—அயோக்கியத்தன்மை என்றும், அயோக்கியர் என்றும்; மேலும் அப்படிப்பட்டவர் மகா அயோக்கியர் என்றும் பொது நன்மையை உத்தேசித்துக் கூறுகிறேன்.

ஏன் என்றால், இம் மாதிரிக் கண்டிக்காவிட்டால்—இப்படிப்பட்டவர்களை மக்கள் வெறுக்கும்படி செய்யாவிட்டால், நாளாவட்டத்தில் யோக்கியமான பலருக்கும் நாக்கில் தண்ணீர் வடிய ஆரம்பித்துவிடுமே என்ற காரணத்தாலும், வேறுவகை இல்லாமையாலுமேயாகும்.

நாம் இப்படி அயோக்கியர், மகா அயோக்கியர் என்று கூறுவது முக்கியமாய் யாரை என்றால்—கட்சி மாறுகிறவர்கள், தமது தேர்தலுக்குக் கட்சி செய்த செலவுத் தொகைகளைக் கொடுத்துவிட்டு, கட்சியால் தாம் பெற்ற பதவியையும் இராஜிநாமா செய்துவிட்டு வெளியேறாதவரைத்தான். அப்போதுங்கூடச் சொல்வேன்—தானிருந்த கட்சிக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்கைகளில் எற்பட்ட மாற்றம் என்னவென்பதையும், அக் கட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட கெடுதி என்ன என்பதையும், இவற்றிற்காகத்தாம் இருந்த கட்சியில் இருக்கும்போது செய்த முயற்சிகள் என்ன—தெரிவித்த யோசனைகள் என்ன என்பனவற்றையும் விளக்கிக் காட்டிவிட்டு, தான் புதிதாகச் சேரப்போகிற கட்சியின் யோக்கியதை என்ன, நாணயம் என்ன, அதனால் மக்களுக்கு—நாட்டுக்கு விளையப்போகும் நன்மை என்ன என்பதையும் விளக்கி, கட்சிக்கும் தனக்கு ஓட்டளித்த ஓட்டர்களுக்கும் தெரிவித்துவிட்டு விலக வேண்டும்.

'ஓட்டர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை; அவர்களுக்குப் பணம் கொடுத்துத் தான் ஓட்டு வாங்கியது; ஆதலால் அவர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை' என்று சொல்லுவதானால் கட்சிக்குத் தெரிவித்துவிட்டு, எச்சரிக்கை செய்து பார்த்துவிட்டு விலக வேண்டும்—வேறு கட்சிக்குப் போகவேண்டும். அப்படிச் சொல்லாமல், செய்யாமல் கட்சி மாறுகிறவர்களைத்தான், நான்—அயோக்கியர், மகா அயோக்கியர் என்றும்; சிலரை மகா மகா அயோக்கியர் என்றும் இன்றியமையாத காரணத்தால் கூறுகிறேன். இந்தப்படி, துண்டுப் பிரசுரம் அடித்து, சுவரொட்டி ஒட்டி, கல்லில் அடித்து நாலுபாதையில் புதைக் கலாம் என்றும் கருதுகிறேன்.

ஏன் என்றால், இந்த அயோக்கியர்கள் தாங்கள் செய்யும் இப்படிப்பட்ட காரியத்தைப் பொது நலனுக்கு ஏற்றதா என்று கருதாமல், 'தங்கள் அப்பன் வீட்டுப் பரம்பரைச் சொந்தக் காரியம்' என்று கருதுகிறார்கள்.

இப்படிப்பட்ட அயோக்கியர்களால், தாங்கள் விலகும் கட்சிக்கு ஓர் ஆபத்து வருமானால், அதைச் சமாளிக்க இப்படிப்பட்ட அயோக்கியர்களை நம்பினால் நம் முயற்சிக்கு, ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு பெரியகேடு, ஏமாற்றம்; பொதுமக்களுக்கும் எவ்வளவு கேடு ஏமாற்றம் ஏற்படலாம்?

'அரசியல் வாழ்வு அயோக்கியத்தனம்' என்று பல ஆண்டுகளுக்கு முன்பே பல அறிஞர்கள் சொல்லியிருந்தாலும், 'ஜனநாயகம் என்பது நம் நாட்டுக்குக் கடைந்தெடுத்த அயோக்கியத்தனத்துக்கும், காலித்தனத்துக்கும் பிறப்பிடமாகும்' என்று, நம் நாட்டைப் பற்றி—இது பிரஸ்தாபிக்கப்பட்ட காலத்திலேயே, நானும் பல அறிஞர்களும் சொல்லியிருந் தாலும்—அவை நேரிடும்போது சொல்லிக் காட்டிப் பரிகாரம் தேடாமல் இருக்கமுடியுமா?

உதாரணமாக, 'அமாவாசையில் பிறந்த பிள்ளை திருடும்' என்று, ஜோசியத்தில் நம்பிக்கையுள்ளவன் கருதினாலும்—அவன் வீட்டில், 'ஒரு அமாவாசையில் பிறந்த ஒருவன் திருடியிருந்தால் அவன் வெளியில் சொல்லாமல், போலீசில் பிராது செய்யாமல் இருப்பானா? அதுபோல்தான், நான்—'இன்று, இது சுபாவம்' என்றாலும், மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன்.

இந்த மாதிரி நம்பிக்கைத் துரோகம் செய்யும் அயோக்கியர்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டே வந்தால் பொதுநலம், பொது வாழ்க்கை என்ன கதி ஆவது?

நாட்டில் இப்படிப்பட்ட அயோக்கியர்களைக் காப்பாற்ற, மூடிமறைக்கப் பல பத்திரிகைக்காரர்களில் மகா மகா மகா அயோக்கியர்கள் பலர்—பிறவி அயோக்கியர் பலர் இருக்கிறார்கள்.

நம் நாட்டில்தான் இந்தப்படி பத்திரிகைத் தொழிலில் மகா மகா மகா இமயமலை அயோக்கியர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு மானாவமானம் இல்லை என்றாலும், வேறு பத்திரிகைகள் ஏதாவது இருக்கும்போது இப்படிப்பட்ட பத்திரிகைகளைப் படிக்கும் மானங்கெட்ட மக்களும் ஏராளமாக இருக்கிறார்கள். பொது வாழ்வில், பொதுத் தொண்டில் ஈடுபட்ட சிலர், தொண்டின் நலனுக்காக அவற்றைப் படிக்க நேர்ந்தாலும்



பொதுமக்கள் தங்கள் இனத்தின் கேட்டுக்காக நடத்தப்படுகிற பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவு மானங்கெட்ட ஈனத்தனம் என்பதை நான் வலியுறுத்திக் காட்டவேண்டியவனாக இருக்கிறேன்.

'யோக்கியமான காரணம் மேற்கண்டபடி காட்டாமல்—பதவியை இராஜிநாமா செய்யாமல் கட்சி மாறுகிறவர்கள் அயோக்கியர்கள்'—என்று சுவரில் எழுதுங்கள்; துண்டுப் பிரசுரம் போடுங்கள்; கல்லில் இவற்றை அடித்து (செதுக்கி) முச்சந்தியில் நடுங்கள் என்று கேட்டுக்கொண்டு இப்போதைக்கு முடிக்கிறேன்.

மனவேதனைப்பட்ட வேதனையாளன்.

['விடுதலை'–அறிக்கை—1-11-1972]

# 2. ஜனநாயகம்

## 1. இன்று உண்மையான சுதந்திரமா?

இன்று இந்தியாவில் எங்காவது உண்மையான சுதந்திரமும், ஜனநாயகமும் இருக் கின்றன என்று யாராவது அறிவு பூர்வமாக, ஆதார பூர்வமாகச் சொல்லமுடியுமா? இன்றைய சுதந்திரத்தில் 100-க்கு 90 மக்கள் அடிமை வாழ்வில்தான் வாழ்கிறார்கள். தெளிவாகச் சொல்லவேண்டுமானால், 100-க்கு 90 பேர்கள் 'சேவகாவிர்த்தி'—அதாவது சம்பள ஆளா கவும் கூலி ஆளாகவும் இருந்து (எஜமானனுக்கு அடங்கி) தொண்டு செய்துந்தான் வாழ்கிறார்கள்.

'அடிமை' என்பதற்கு என்ன அர்த்தம்? சொன்னவேலையைச் செய்து, கொடுத்த கூலியை வாங்கிப் பிழைப்பதுதானே? இந்த மாதிரி அடிமையாக இல்லாதவர்கள் இந்தியாவில் 100-க்கு 10 பேர் ஆவது இருப்பார்களா?

எஜமானன்–சம்பளக்காரன், முதலாளி–தொழிலாளி, பண்ணையார்–கூலிக்காரன் என்கின்ற முறை அமுலில் இருக்கும் நாட்டில் சுதந்திரம், சமத்துவம் என்று பேசுவ தெல்லாம் புரட்டும் மோசடியும் அல்லாமல், அதில் உண்மை இருக்கமுடியுமா? அதுபோல் தானே ஜனநாயகமும் நடந்து வருகிறது.

இன்றைய இந்தியாவின் ஜனநாயகம் எப்படி இருக்கிறதென்றால், 100-க்கு 97 பேர் கீழ்சாதி, ஈனசாதி, 4-வது சாதி, 5-வது சாதி, சண்டாள சாதி என்பதாகத்தானே—மதத்தில் சாஸ்திரத்தில், சட்டத்தில் இருந்து வருகிறது. இது மாத்திரமா? 100-க்கு 3பேராய் இருக்கும் மக்கள் மேல்சாதி—கடவுளுக்குச் சமமான சாதி—பிராமணர் என்பதாகத்தானே இருந்து வருகிறது? இதுதானே இன்று மதக்கட்டளை—கடவுள் கட்டளை என்று சொல்லிச் சட்டமும் இருந்து வருகிறது?

இதை ஜனநாயகம் என்றால், இதுவும் மோசடியும், புரட்டும் அல்லாமல் வேறு என்ன என்று சொல்லக்கூடியதாகும்? சுதந்திரம் பாதுகாப்பு என்பவை இந்த இரண்டு நிலைகளை யும் அதாவது எஜமானன்–அடிமை நிலையையும் பாதுகாப்பது என்பதுதானே? இது சுதந்திரம்–ஜனநாயகம் என்பது மாத்திரமல்லவே; இன்றைய மத அரசியல் சட்ட தர்மமும் இதுதானே!

ஒவ்வொரு மனிதனும் கூடிய அளவு வேலை செய்யவேண்டியது; வேலையின் பயனைக் கிடைத்த அளவு அனுபவிக்க வேண்டியது என்பதுடன் தனி உடைமை உரிமை இவ்வளவுதானே?

1686—110

படிப்பகம்

www.padippakam.com



இன்றைய நாட்டு அமைப்பில்—மக்கள் சமுதாய அமைப்பில் இந்தியாவில் சோசலிசம் ஏற்பட்டால் சமுதாயத் துறையில் 100-க்கு 3 பேராயிருக்கும் பார்ப்பனருக்கும், அதுபோலவே 100-க்கு 3 பேரிலும் குறைவாயிருக்கும் சில செல்வவான்களுக்குமல்லாமல் வேறு யாருக்கு என்ன கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டு விடும்? மனித சமுதாயத்திலுள்ள 100-க்கு 99 மக்களிடம் உள்ள உயர்வு தாழ்வு உணர்ச்சி, திருட்டு, புரட்டு, மோசடி, கவலை, கள்ளம், ஆத்திரம், பொறாமை, பலாத்காரம், சண்டித்தனம், காலித்தனம் முதலியவை பெரும் அளவிற்குக் குறைந்து விடுமே! தனிநலம் குறைந்து பொது நலம் வளர்ச்சியடையுமே! இந்திய ஜனத்தொகையில் பார்ப்பன சாதி 100க்கு 3 பேர்தானே! சைவன் 100-க்கு ½ கூட இருக்கமாட்டானே! பஞ்சமன் 100-க்கு 16 பேர்; பிற்படுத்தப்பட்டவன் 100-க்கு 75 பேர்; மற்ற வேஷக்கார சாதி 100-க்குச் சுமார் 7 பேர் இருக்கலாம். இவ்வளவு பேரையும் அந்த மூன்று சதவிகித பார்ப்பன ஆதிக்கம் ஆட்டிப் படைப்பதுதானே இன்றைய சுதந்திரம்!

['விடுதலை'-தலையங்கம்—15-3-1872; 30-4-1973]

## 2. ஜனநாயகம்

கேள்வி: உலகத்தில், மகா பித்தலாட்டமான சொல் எது?

பதில்: அதுவா, அதுதான் ஜனநாயகம் என்கின்ற சொல்.

கேள்வி: அது என்ன, கடவுள் என்பதைவிட மகா பித்தலாட்டமான சொல்லா?

பதில்: அய்யய்யோ, கடவுள் என்பது ஒரு பொதுப் பித்தலாட்டமான சொல்; இந்தப் பித்தலாட்டத்தில் எல்லோருக்கும் பங்கு வரும். ஜனநாயகம் என்கின்ற பித்தலாட்டச் சொல் அப்படி அல்ல; தந்திரக்காரனுக்கு-அயோக்கியனுக்கு-இவர்களேசேர்ந்த கோஷ்டிக்குத்தான் பங்கும், பயனும் உண்டு. போக்கற்ற ஆளுக்கெல்லாம், பித்தலாட்ட வாழ்வு கோஷ்டிக்கெல்லாம் பிழைக்கும்வழி—ஜனநாயகம்தான்.

கேள்வி: இதுவே இப்படியானால்—ஜனநாயக முன்னணி, ஜனநாயக அய்க்கிய முன்னணி, ஜனநாயக முற்போக்கு முன்னணி, ஜனநாயக தீவிர முன்னணி, ஜனநாயக அதிதீவிர முன்னணி, ஜனநாயக சுயேச்சை முன்னணி, சுயேச்சை ஜனநாயக முன்னணி, ஜனநாயகக் கூட்டணி—என்பது போன்ற சொற்களின் தன்மை என்ன ஆவது?

பதில்: அவைகளா? துப்பாக்கியின் வயிற்றில் பீரங்கி பிறந்ததுபோல்—அது மகா பித்தலாட்டமானால், இவை மகாமகா பித்தலாட்டமாகும்; ஏன்—பித்தலாட்டத்தின் எல்லையென்றே சொல்லலாம். சந்தேகமிருந்தால் இவைகளில் இருக்கின்ற—இவைகளில் சேர்ந்த தனித்தனி ஆட்களை எடுத்துக்கொண்டு, அவர்களது சென்றகால, நிகழ்கால, எதிர்கால பலனைக்கொண்டே 'சாதக'த்தையும், அவர்களது கொடிவழிப்பட்டியையும் பார்.

எங்கேயோ போகிற பனாதி; பிழைப்புக்கு எத்தனையோ வழியில் வகைபார்த்து உதைபட்டு வந்த உதவாக்கரை; மற்றும் சகலவிதமான அயோக்கியத்தனங்களுக்கும் புகலிடமாக இருக்கிற பரம அயோக்கியர்கள்; தினம் ஒரு கட்சி புகுகிறவர்கள்; சமயத்திற்கேற்ற கொள்கைகளைப் பேசுகிறவர்கள்; எதைச் சொன்னால் மக்கள் ஏமாறுவார்களோ அதைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறவர்கள்; கலவரம் உண்டாக்குவதாலேயே பிழைக்கக் கூடியவர்கள்—இவர்களும், இவர்களைப் போன்றவர்களையும் பெரிதும் கொண்ட ஸ்தாபனங்கள்தானே! எந்தப் பெயர் இருந்தாலும்—அதற்குச் சொந்தப் பெயர், 'பித்தலாட்ட மோசடி ஸ்தாபனம்' என்றுதானே சொல்லவேண்டும்?

கேள்வி: சிலர்—இரண்டொரு, அப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்களும் இருக்கிறார்களே?



பதில்: இருக்கலாம் என்றே வைத்துக்கொள்ளுவோமே! இருந்தால் அவர்களை மோசடிப் பித்தலாட்ட அயோக்கியர் என்று சொல்லவேண்டாம்; முட்டாள்கள் என்று சொல்லு!

கேள்வி: இப்படிச் சொன்னால் யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்களா?

பதில்: யாரும் கோபித்துக்கொள்ளமாட்டார்கள். தேவடியாளை, 'விலை மாதர்' என்றால் கோபிப்பார்களா? நியாயவாதியைப் பொய் விற்பனையாளர்கள் என்றால் கோபிப்பார்களா? வாணிபர்களை ஏமாற்றுக்காரர்கள் என்றால் கோபிப்பார்களா? அதுபோல் தானே இதுவும். ஆதலால், கோபித்துக்கொள்ளுபவர்கள் யாராய் இருந்தாலும்—அவர்கள் தலைக்கு இந்தக் குல்லாய் சரியாய் இருக்கிறது என்று அவர்களே ஒப்புக்கொள்ளுவதாகத் தான் அர்த்தமாகும்.

கேள்வி: சரி.

பதில்: சரி!

கேள்வி: வணக்கம்.

பதில்: வணக்கம்; வணக்கம்!

[சித்திரபுத்திரன் என்ற பெயரில் எழுதியது—'விடுதலை' 4-10-1952]

## 3. இந்திய ஜனநாயகம்

இது ஜனநாயக ஆட்சி என்றாலும், ஆட்சியில் ஆட்சியாளராக இருப்பவர்கள் மூட நம்பிக்கைக்காரர்களாக இல்லாமல் பகுத்தறிவு வாதிகளாகவும்; குறைந்தது கடவுள்கள், கடவுள் கதைகள், கடவுள்களின் கொலை, புரட்டு, பித்தலாட்டம், பெண்டாட்டி, வைப்பாட்டி, கலியாணம் முதலிய செய்கைகள் கொண்ட தன்மைகளில் நம்பிக்கை இல்லாதவர்களாகவும்; எந்த நிலையிலும் மக்கள் யாவரும் பிறவியில் சமமானவர்கள் என்றும், எல்லா மக்களும் ஒரு தர தகுதி பெற, தகுதி உடையவர்கள் என்றும், அந்தப்படி ஆக்கப்பட வேண்டியவர்களே என்றும் கருதும்படியானவர்களும்; ஆட்சியின் சமுதாய சீர்திருத்தப் பணியென்பது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் 'தகுதியின்மை' என்று சொல்லும்படியான எந்தத் தன்மையையும் ஒழித்து உச்சத் தகுதிக்கு அருகர்களாக ஆக்குவதையே முதல் பணியாகக் கொள்வதுதான் என்று கருதுபவர்களாகவும்; எந்தத் தன்மையிலும் சமுதாய பேதம் ஒழிக்கப்பட்டே ஆகவேண்டும் என்று எண்ணத் தகுதி உடையவர்களாகவும் இருக்க வேண்டும்; இருந்தாக வேண்டும்.

பிறவி காரணமாகப் பல மதம், பல சாதி, பல பிரிவு உள்ள தன்மைகள் கொண்ட—இருக்க உரிமையளிக்கப்பட்ட நாட்டை, சமுதாயத்தை ஜனநாயகமாக்குவது என்றால், கண்டிப்பாய் மேற்கண்ட விஷயங்களை மனதிற்கொண்ட ஆட்சி அமைந்தால்தான் நாடும், மனித சமுதாயமும் முன்னேற முடியும்.

உலகில் (இந்தியா தவிர்த்த) மற்ற ஜனநாயக நாடுகளிலெல்லாம் மேலே குறிப்பிட்ட இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டுதான் ஆட்சி நடத்தப்படுகின்றது.

நம் நாட்டில் செயற்கையின் பயனாக 'முயற்சியால்' ஏற்பட்ட பொருளாதாரத் துறையைத்தான் சமத்துவமாக்க, சம நிலைக்குக் கொண்டுவர ஆட்சி-ஜனநாயக ஆட்சி என்பது முயற்சிக்கிறதே ஒழிய, 'இயற்கையினால்' என்றும், 'பிறவியினால்' என்றும் அக்கிரம முறையில் உலகில் எங்கும் இல்லாத மாதிரியில், எந்தக் காரணமும் எந்த அவசியமும் எந்தத் தகுதியும் எந்த முயற்சியும் இல்லாமல் பித்தலாட்ட முறையில், ஒரு

படிப்பகம்

www.padippakam.com



சிலர் அதுவும்—மிகமிகக் குறைந்த (மைனாரிட்டி) எண்ணிக்கையுள்ள 100-ல் 3 விகிதத்தினர் (100 நயா பைசாவில் 3 விகிதத்தினர்) ஏற்பாடு செய்துகொண்ட முறையைத் தகர்த்தெறியத் துணிவில்லாத முறையில் ஜனநாயகம் இருக்கிறதென்றால், இது எப்படி ஜனநாயகமாகும்?

நம் நாட்டில் நடைபெறும் இன்றைய ஜனநாயக முறையில் திருத்தப்பாடு ஏற்பட முடியவில்லையானால், நாடு எதிர்காலத்தில் கொலைக்களமாகிவிடும் என்பதில் அய்யம் இல்லை.

இன்றைய ஜனநாயக முறையென்று எதைச் சொல்லுகிறேனென்றால்,

1. பொருளாதாரத்தில் நம்நாடு (தமிழ்நாடு) அல்லாத மற்ற நாடுகளுக்கு நம் செல்வம் கொள்ளை போகிறது.

2. வெளி நாட்டான் (தமிழ் நாட்டான் அல்லாதவன்) இங்கு வந்து பதவிகளில், வேலைகளில், கூலித்தன்மையில், வியாபாரத்தில், அடகு பிடிப்பதில், தொழிற்சாலை வைத்துத் தொழில் நடத்துவதில், பத்திரிகைத் தொழிலில் ஏராளமாகப் புகுந்து கொள்ளையடித்துக்கொண்டு போகிறார்கள்.

3. ஆட்சித் தலைமையில், எந்தக் காலத்திற்கும் ஒரு தமிழன் இராஷ்டிரபதியாகவோ, பிரதமராகவோ வர வாய்ப்பில்லாத தன்மையில்தான் ஜனநாயகம் இருந்து வருகிறது.

4. ஆட்சி முறைச் சட்டம் என்பது இரண்டாந்தர, மூன்றாந்தரப் பார்ப்பான் செய்வதும், அவன் செய்த சட்டத்திற்கு அந்தப் பார்ப்பனர்களே வியாக்கியானம் செய்வதும் தான் சட்டமாக இருந்துவருகிறது.

5. ஆட்சியின் மூலாதாரக் கொள்கை என்பது சாதியையும், சாதி அந்தஸ்தையும் காப்பாற்றுவது என்பதையே அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது.

6. இராஜாஜி போன்ற, பஞ்சமா பாதகத்திற்குத் துணிந்த ஒரு பார்ப்பான் தன்னிஷ்டப்படி தனக்கு வேண்டிய சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள பார்லிமெண்டில்—பாராளுமன்றத்தில் இடமும் வசதியுமிருக்கிறது. ஒரு தமிழனுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கே 100-க்கு 100 பேரும் விரும்புகிற ஒரு காரியத்தைச் செய்துகொள்ள, நினைக்கக்கூட அதில் இடமில்லை.

உதாரணமாக, தமிழன் ஆட்சியைக் கைப்பற்ற பார்ப்பான் சூழ்ச்சி செய்து 'தீண்டாமை ஒழிக்கப்பட்டது; எந்த உருவத்திலும், எந்த நடத்தையிலும், தீண்டாமை அனுஷ்டிக்கப்படக்கூடாது; அது எதில் அமுலிலிருந்தாலும் தண்டிக்கப்படத் தக்கது' என்று சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

இது, மக்களை ஏய்க்கச்செய்த சட்டம். எப்படியென்றால், சாமி (சிலை) இருக்கும் இடத்திற்குச் செல்லப் பார்ப்பானுக்குத்தான் உரிமை, சூத்திரன் செல்லக்கூடாது என்று அந்தச் சட்டத்திற்கு கோர்ட்டில் வியாக்கியானம் செய்யப்பட்டுவிட்டது.

7. அதுமாத்திரமா? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜனத்தொகை விகிதாச்சாரப்படி படிப்பு, உத்தியோகம் பெற உரிமை உண்டு என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மாநில அரசாங்கம் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிற அளவு ஒதுக்கி வைக்கலாம் என்றும் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு வியாக்கியானம் என்கின்ற முறையில் கோர்ட்டில், 'எல்லா ஒதுக்கீடும் 100-க்கு 50-க்குள்தான் ஒதுக்கவேண்டும்' என்று வியாக்கியானம் செய்யப்பட்டுவிட்டது. இதுபோன்ற பல பித்தலாட்டங்கள் செய்து, தமிழன் எந்த விதத்திலும் சமத்துவம், சம உரிமை அடையக்கூடாது என்கின்ற தன்மையில் ஆட்சிமுறையும் சட்டமும் செய்யப்பட்டு வருகின்றன.



8. இந்தி மொழி விஷயத்தில் இந்தி பேசாத மக்களை அவமதித்து இழிவுபடுத்தியதாகும் என்பதோடு, இந்தியக் கூட்டாட்சி என்கின்ற மத்திய அரசாங்கமானது சிறிதுகூட ஈவு, இரக்கம், மானம், மரியாதை இல்லாமல் பார்ப்பன பாஷை (மொழி) என்பதற்காக—இந்தி மொழியை 6, 7, 8 மாநிலத்தாருக்கு மேலாக உள்ள மக்களுக்கு. அது அன்னிய மொழியாக இருந்தும், ஆரிய உணர்ச்சியை—சாதி முறையைப் பாதுகாக்க, மூடநம்பிக்கைகளைப் புகுத்தும் சூழ்ச்சி எண்ணத்துடனேயே இந்தியைப் பொது மொழியாக, கட்டாய மொழியாக, தேசிய—கட்டாய மொழியாக ஆக்கச் சட்டம் செய்து புகுத்திவிட்டார்கள்.

இந்த இந்தியை இராஜாஜி (ஆச்சாரியார்) சென்னை இராஜ்யமாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நாலு மாகாணங்களும் ஒன்றாக இருந்த காலத்தில் முதலமைச்சராயிருந்தபோது கட்டாய பாடமாக, மொழியாகப் புகுத்தியபோது, நான்கு மாகாண மக்களால் பெரிய கிளர்ச்சி நடந்து 2000 பேர் சிறைப்படுத்தப்பட்டு, பல ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, பலரை சிறையிலே மடியும்படி செய்து, அதன் பயனாய்க் காங்கிரஸ்—இராஜாஜி ஆட்சி பதவியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டு, வெளியேறிய பின் ஒழிக்கப்பட்ட இந்தியை, இன்று கட்டாய மொழியாகப் பெரிய எதிர்ப்புக்கிடையில் ஒரே ஒரு ஓட்டின் பலத்தால் புகுத்தப்பட்டிருக்கிறது.

9. அடுத்து, திரு. ரெங்கராஜன் (உயர் நீதிபதி) நியமனம். இது நீதியைக் கொலை செய்த பாதகமேயாகும். திரு. ரெங்கராஜன் என்கின்ற ஒரு பார்ப்பனரை, சாதி உணர்ச்சியால் அய்யங்கார் சாதி என்கின்ற தன்மையில், திரு. இராஜாஜி அய்யங்கார் அவர்கள் திரு. ரெங்கராஜ அய்யங்கார் என்கின்ற ஸ்ரீரங்கத்துப் பார்ப்பனரைத் திடீரென்று ஜில்லா ஜட்ஜாக நியமித்தார்.

அவர் 'சட்டம் தெரியாதவர்', 'திறமை அற்றவர்', 'பதவியில் சட்ட விரோதமான பல காரியங்களைச் செய்தவர்' என்று குற்றம் சாட்டப்பட்டு, அவர் நீதிபதி பதவிக்கு அருகதையற்றவர் என்று மேல் கோர்ட்டுகளால் முடிவு செய்யப்பட்டு, அவருக்கு மேலால் நீதிபதி—அதாவது ஜில்லா நீதிபதி பதவிகூடக் கொடுக்கக்கூடாது என்று முடிவு செய்து, நீதிபதி பதவியில் இருந்து கிளப்பி, சட்டக்கல்லூரி மாணவர்கள் பள்ளி நிர்வாகியாக சென்னை அரசாங்கமும் சென்னை உயர்நீதி மன்றமும் முடிவு செய்து, ஜில்லா நீதிபதி பதவியிலிருந்து கிளப்பிவிடப்பட்டவர்.

அப்படிப்பட்ட அவர், ஒரு உயர்நீதி மன்ற பார்ப்பன சீப் ஜட்ஜாலும், மற்றும் ஒரு பார்ப்பன அடிமை, பார்ப்பனர் தயவில் மந்திரி பதவி பெற்ற அடிமை மந்திரியாரின் சூழ்ச்சியாலும் அய்க்கோர்ட் ஜட்ஜாக நியமிக்கக் கருதி பல முயற்சிகள் செய்தும், அவை பலியாமல் போனதோடும், கண்டிப்பாய் அவர் அய்க்கோர்ட் ஜட்ஜ் பதவிக்குத் தகுதி அற்றவர் என்றும் அதற்குப் பல அத்தாட்சிகளும் ஒரு அய்க்கோர்ட் சீப் ஜட்ஜின் பலமான அபிப்பிராயமும் இருக்கிறது என்ற அத்தாட்சியையும் மேலிடத்திற்கு, அதாவது டில்லி ஆட்சிக்கும் சுப்ரீம் கோர்ட்டுக்கும் இன்றைய சென்னை அரசாங்கம் பலதடவை எடுத்துக் காட்டி நேரில் விளக்கிக் கூறியும், ஒன்றையும் இலட்சியம் செய்யாமல், அவர் ஒரு பார்ப்பனர்—இராஜாஜிக்கு வேண்டியவர் என்கின்ற காரணத்திற்காகச் சிறிதும் மானம், வெட்கம், நேர்மை இல்லாமல் டில்லி மாகாணத்தின் அய்க்கோர்ட்டுக்கு ஜட்ஜாக நியமித்து, பொது மக்களை அலட்சியப்படுத்தி ஏமாற்றி இருக்கிறது டில்லி ஆட்சி. இப்படியான நிலைமை ஜனநாயகமானால், எடுத்ததற்கெல்லாம் ஜனநாயகம், ஜனநாயகம் என்றும், 'இப்படிச் செய்தால் ஜனநாயகத்திற்குக் கேடு' 'அப்படிச் செய்தால் ஜனநாயகத்திற்குக் கேடு' என்றும் சொல்லி, பாமர மக்களை மிரட்டிக் காரியம் சாதித்துக் கொண்டு; தமிழனின் இழி நிலையைப் பாதுகாப்பதுதான் ஜனநாயகம் என்கின்ற தன்மையில் ஜனநாயகம் நடந்தால், தமிழன் இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுத்துக் கொண்டு இருக்கமுடியும்?

படிப்பகம்

www.padippakam.com



சட்டங்கள் செய்வதே வஞ்சகக் கருத்துடன்; அதற்கு வியாக்கியானம் செய்வது 'கொலை பாதக' உணர்ச்சியுடன் என்றால்—'ஜனநாயகம்' எப்படி நடக்கும், எப்படி வாழும் என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

நான் எப்போதும் சட்டம், அமைதியைக் கெடுக்க விரும்புகிறவன் அல்லன் ஆனால், கிளர்ச்சியில்தான் இன்று எந்த நியாயத்தையும் பெற முடியும் என்று கருத வேண்டியவனாக இருக்கிறேன்.

எனவே, அமைதிக்குப் பங்கமில்லாமல், வன்முறைக்குச் சிறிதும் இடமில்லாமல், வைக்கம் தெரு தீண்டாமைக்கு 1924-ல் நான் கிளர்ச்சி செய்ததுபோல்—தமிழ் நாடு கோயில் தீண்டாமை ஒழிப்புக்காகக் கிளர்ச்சி செய்வது என்று கருதியிருக்கிறேன். இது 'இந்துக்கள்' என்பவர்களில் 100-க்கு 97 பேர்களின் மான உணர்ச்சிக்காக, மனித உரிமைக்காக, ஜனநாயகத்திற்காகச் செய்யப்பட வேண்டியதாக, செய்யாமல் இருக்க முடியாததாகக் கருதி, இந்தச் 'சுயமரியாதைப் பாதுகாப்புக் கிளர்ச்சி'யில் ஈடுபடப் போகிறேன் என்பதை மக்களுக்கும் ஆட்சிக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—24-1-1969]

எந்த நாட்டிலும் எந்த ஒரு அரசும் நிலையாக வாழவேண்டும் என்பதாலேயோ, வாழ்ந்துவிடுவதாலேயோ மக்களுக்குப் பயன் ஏற்பட்டுவிடாது.

மேலும், மேலும் மக்கள் அறிவில், மானத்தில், வாழ்வில் வளர்ச்சி ஏற்படுவதற்கு ஏற்ற அரசு ஆண்டுக்கு ஒன்றாக மாற்றமடைந்தாலும் அது மேலான ஆட்சியேயாகும்.

உதாரணமாக, 'காந்திவழி' என்று சொல்லிக்கொண்டு பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்ற இன்றையக் காங்கிரஸ் ஆட்சி இனியும் ஒரு (100) நூறு ஆண்டுகளுக்கு யாராலும் அசைக்கமுடியாத நிலையில் நடந்து வந்தாலும் இதனால் மக்களுக்கு அறிவோ, மானமோ, வாழ்வில் மேன்மையோ ஏற்படக்கூடும் என்று யாராவது சொல்லமுடியுமா?

அல்லது 1950 முதல் இன்று 1969 வரை காங்கிரஸ் ஏகபோக ஆட்சி நடைபெற்று வருகிறதே. இதனால் மக்களுக்கு, நம் சமுதாயத்திற்கு அறிவோ, மானமோ, வளர்ச்சியோ ஏற்பட்டதாக யாராலாவது சொல்லமுடியுமா?

இந்தியாவுக்கு 'சர்வ சுதந்திர ஆட்சி' என்னும் பெயரால், மக்களாட்சி என்பதாக அசைக்கமுடியாத காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டு இன்றைக்கு 20 ஆண்டுகள் ஆகின்றன.

இந்த இருபது ஆண்டுகளில் இந்திய மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? காமராசரால் கல்வி விரிவடைந்தது என்றாலும், மக்கள் அறிவில் வளர்ந்தார்களா? மானத்தில் வளர்ந்தார்களா? கவலையற்ற வாழ்வில் வளர்ந்தார்களா? இன்பவாழ்வில் வளர்ந்தார்களா? உரிமையில் வளர்ந்தார்களா? எதில் வளர்ந்தார்கள்?

ஒழுக்கத்தில் வளர்ந்தார்களா? நாணயத்தில் வளர்ந்தார்களா? நேர்மையில் வளர்ந்தார்களா? எதில் வளர்ந்தார்கள்? இதே சுதந்திரத்துடன் இந்தியாவில் இன்று ஒரு இஸ்லாம் ஆட்சியோ, ஜப்பான் ஆட்சியோ, இங்கிலாந்து-அமெரிக்க-ரஷ்ய ஆட்சியோ ஏற்பட்டிருக்குமானால் இந்த இருபது ஆண்டில் இந்திய மக்கள் நிலை—குறைந்த அளவுக்குத் தமிழ்நாட்டு மக்கள் நிலை—எந்த அளவுக்குப் பெருகி இருக்கமுடியும் என்பதை. யோக்கியமான முறையில் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இன்றைய நம் மானங்கெட்ட 'ஜனநாயக ஆட்சி' என்பது மதத்தையும், சாதியையும், அவரவர்களுக்கு உள்ள அந்தஸ்தையும் காத்துக்கொள்வதில் சர்வ உரிமையை மூலாதாரக் கொள்கையாகக் கொண்ட ஆட்சி என்பதோடு, பொருளாதார உரிமையையும் மூலாதார உரிமையாகக்கொண்ட ஆட்சியேயாகும்.



இந்த ஆட்சியில் மக்களுக்கு அறிவு வளருமா? மானம் வளருமா? சமவாழ்வு வளருமா? ஏழ்மை, தரித்திரம், 'கோட்டீஸ்வரத் தன்மை', 'பகற்கொள்ளை' அடிக்கும் தன்மை மாறும் நிலை ஏற்படுமா? அல்லது, 'முதல் சாதி', 'நாலாம் சாதி', 'அய்ந்தாம் சாதி' என்கின்ற தன்மை மாறுமா என்று கேட்கிறேன்.

இன்றைய ஆட்சி ஒழியுமானால் இந்த நாட்டில் 100-க்கு 90 பேர்களுக்கு என்ன நட்டம் ஏற்படக்கூடும்? ஒழியாவிட்டால் 100 க்கு 90 பேருக்கு என்ன லாபம் ஏற்படக்கூடும்? நடுநிலைமையிலிருந்து ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

வெள்ளையன் போனவுடன் காங்கிரஸ் (பார்ப்பனர்) ஆட்சி வராமல்—இந்தியாவில் அல்லது தமிழ்நாட்டுக்கு ஜப்பான் ஆட்சியோ, ரஷ்ய ஆட்சியோ ஏற்பட்டிருக்குமானால், இன்று இந்தியா அல்லது தமிழ்நாடு, இதைச்சேர்ந்த 100-க்கு 90 மக்களின் நிலை என்னவாக இருந்திருக்கும்? சிந்தித்துப் பாருங்கள்.

சுதந்திரம் கிடைத்த இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் ஜனநாயக நாட்டில் 100-க்கு 90 மக்களுக்குப் பதவி வேண்டுமானால், சாதி சொல்லிக் கேட்கவேண்டியிருக்கிறது; உத்தியோகம் வேண்டுமானால் சாதி சொல்லிக் கேட்கவேண்டியிருக்கிறது; ஆட்சி வேண்டுமானால் சாதி சொல்லிக் கேட்க, முயற்சிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், இந்த 100-க்கு 90 மக்களை இழிசாதி, சண்டாள சாதி என்று கூறி, தங்களுடைய வைப்பாட்டி மக்கள் என்று அழைத்துக்கொண்டிருக்கும் 100-க்கு மூன்று பேராக உள்ள ஒரு கூட்டத்தினருக்கு தங்கள் 'திறமை'யைச் சொல்லி பதவி—உத்தியோகம்—ஆட்சி கேட்க, அதுவும் கேட்காமலே அடையவேண்டி இருக்கிறது.

இப்படிப்பட்ட இந்த நிலையை உண்டாக்கி இருக்கும் ஆட்சித்தன்மையை ஜனநாயகம் என்று நம்மைத் தவிர உலகில் வேறு எந்த மடையனாவது சொல்வானா? சொல்ல முடியுமா?

இதுமாத்திரமல்லவே! இன்றைய ஜனநாயகம் நமக்குக் கற்பிப்பது என்னவென்றால்:

இந்திய நாட்டுக்கு (தமிழ்நாட்டுக்கு) இந்தியனல்லாதவன் ஆட்சி—அன்னிய நாட்டான் ஆட்சி ஏற்பட்டாலொழிய இந்தியனின், தமிழனின் இன்றைய இந்த (இழிநிலை) நிலை மாறாது என்றல்லவா கல்லில் பொறித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் இந்த ஆட்சி நிலையாக இருக்கவேண்டுமானால், இருக்க நேரிட்டால் இந்த நாட்டு 100-க்கு 90 பேராக உள்ள மக்களின் நிலை என்ன ஆவது என்று கேட்கிறேன்.

சில மேதாவிகள் 'பிரகஸ்பதிகள்', 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்' என்று கேட்கிறார்கள்.

இதன் கருத்தென்ன?

'வெறும் செருப்பாலடிக்காதே. அந்தச் செருப்புக்குப் பட்டு ஜரிகை கொண்டு குஞ்சங்கள் கட்டி அதனால் அடி' என்று கேட்பது போல்தானே இருக்கிறது?

இன்றைய அரசியல் சட்டப்படி இப்போது கேட்பவர்களுக்கு மாத்திரமல்லாமல் என்னிடமே அதிக அதிகாரங்களை ஒப்புவித்தாலும் அதைக்கொண்டு நான் இந்த நாட்டு மக்களில் 100-க்கு 90 பேர்களாக உள்ளவர்களுக்கு அவர்களது இழிவை, மடமையை, மானமற்ற தன்மையை, குறையை, கவலையைத் தீர்க்க 'அந்த அதிக அதிகாரத்தை'க் கொண்டு என்னால் என்ன செய்யமுடியும்?

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் சட்டத்தில் 'எந்தத் தன்மையிலும் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது. தீண்டாமை பாராட்டுவது சட்ட விரோதம்; தண்டிக்கத் தக்கதாகும்' என்று இருக்கிறது. அப்படி இருந்தும் அதற்கு நிபந்தனை கூறுவதில், 'தீண்டாமை விலக்கு என்பது மதத்தைப் பாதிக்காத அளவுக்குத்தான் அமுல் படுத்தத் தக்கதே ஒழிய எல்லாவற்றிலும் அல்ல' என்று விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, தீண்டாமை என்பதே பார்ப்பானைத் தவிர்த்த மற்ற மனித சமுதாயத்திற்கு இழிவு கற்பிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். இதுதான் தீண்டாமைக்கு மூலாதாரம் என்பதோடு தத்துவமுமாகும்.

ஆனதால், இந்த மூலாதாரத்திற்கு விரோதமில்லாமல் மனிதன் இழிவை நீக்கிக்கொள்ளப் பயன்படுத்தாமல், மற்றதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் அந்தச் சட்டத்தின்–தீண்டாமை விலக்கின் தத்துவமாகும்.

இது காங்கிரஸ் ஆட்சி ஒழிந்தால் மாத்திரம் போதாததோடு, வேறு அன்னியன் ஆட்சி வந்தால்தானே முடியும்?

'கடவுளைத் தொட்டால் தீட்டு; கடவுள் இருக்கிற 'உள் அறை'க்குள் வந்தால் தீட்டு' என்ற நிபந்தனை உள்ள இந்தத் தீண்டாமை ஒழிக்கப்பட மாட்டாது என்றால், கோயிலும் கடவுளும் ஒழிந்தால் அல்லாது தீண்டாமை 100-க்கு 97 பேருக்கு மனித இழிவு எப்படி ஒழியும்? முஸ்லிம் முதலிய மற்ற சமுதாய ஆட்சி வந்தால் இந்த நிபந்தனை இருக்க முடியுமா? இந்த நிலையில் இன்றைய இதே ஆட்சி நிரந்தரமாய் இருக்கவேண்டும் என்பது மடமையும், மானமற்ற தன்மையும், முட்டாள்தனமும், மூட நம்பிக்கையுமல்லாமல் வேறு என்னவென்று சொல்லத்தக்கதாகும்?

ஆகவே, இன்றைய ஆட்சி ஒழியவேண்டும்; ஒழிக்கப்பட வேண்டும் என்பது, 'வெள்ளையன் ஆட்சி ஒழிக' என்பதைவிடப் பல மடங்கு உரத்துக் கூறவேண்டியது முக்கியமாகும் என்பதோடு, இன்றைய ஆட்சிக்கு, ஆட்சியின் அரசியல் திட்டத்திற்கு உட்பட்ட எந்த ஆட்சியின் கீழும் சுதந்திரமோ, சுய ஆட்சியோ, அதிக சுதந்திரமோ கிடைத்து விடுவதால் 'மனித சுதந்திரம்' ஏற்பட்டுவிடாது என்பது எனது கருத்து.

['விடுதலை'–தலையங்கம்—27-3-1969]

## 4. அரசியல் வாழ்வு

அரசியல் வாழ்வு நாளுக்குநாள் மனிதப் பண்பைக் கெடுத்துவருகிறது. அரசியல் போட்டி என்பது மிகமிகக் கீழ்த்தரத்திற்கே போய்க்கொண்டிருக்கிறது. இது நமது பின்சந்ததிகளைப் பாழாக்கிவிடும்போலத் தெரிகிறது.

இன்றையச் சமுதாயத்திற்குக் கிளர்ச்சி—அதாவது சட்டம், அமைதி, ஒழுங்குத் தன்மைகளை அலட்சியமாய்க் கருதிப் போராட்டம் நடத்துவதைத்தான் உற்சாகமாய்க் கருதும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறதேயொழிய, மனிதப் பண்பு பற்றிய கவலையே சிறிதும் இல்லாமல் போய்விட்டது. இதற்கு அரசியல் போட்டியாளர்களே காரணமாவார்கள்.

ஜனநாயகம் என்பதுதான் இதற்குக் காரணம் என்றும் சொல்லவேண்டியிருக்கிறது.

சட்டம்–ஒழுங்கு மீறுதல், பலாத்காரச் செயலில் ஈடுபடுதல் முதலிய காரியங்கள் நம்நாட்டில் முதல்முதல் அரசியலின் பேரால்தான் துவக்கமானதாகத் தெரிகிறது. இதற்குக் காரணஸ்தர்கள் பார்ப்பனர் என்றுதான் சொல்லவேண்டும். பார்ப்பனர்களுக்குத் தூண்டுகோல் மனுதர்ம சாஸ்திரம்தான்.



பார்ப்பன சாதி என்பதாக ஒரு வகுப்பு நாட்டில் இருக்கும்வரை—சட்டம், ஒழுங்கு, அமைதி, பலாத்காரமற்றதன்மை முதலியவை இருப்பது என்பது முடியாத காரியமாய்த்தான் இருந்துவரும். பொதுவாகச் சொல்லப்படுமானால், அரசியலில் காலித்தனம் பொது மக்கள் செயலாக ஆக்கப்பட்டது—காந்தியால்தான் என்று சொல்லலாம்.

சட்டசபைகளில் காலித்தனம் என்பது சத்தியமூர்த்தி அய்யர், மோதிலால் நேரு முதலிய பார்ப்பனர்களாலேயேயாகும். சட்டசபையின் கவுரவமும் ஒழிக்கப்பட்டதற்குக் காரணம் காங்கிரஸ் பக்தர்கள் (காலிகள்) என்றுதான் சொல்லவேண்டும். இந்த நிலைமை வளர்ச்சிக்கு உற்சாகம் கொடுத்தவர்கள் பார்ப்பனப் பத்திரிகைக்காரர்களே யாவார்கள்.

பொதுவாழ்வில் பார்ப்பனர்களுக்குள்ள ஆதிக்கம் குறைந்ததுடன் அவர்கள் காலித்தனத்தை வளர்த்து, நாட்டில் அமைதியையும் பொது ஒழுக்கத்தையும் பாழாக்கிவிட்டார்கள். பார்ப்பனர்கள் தங்களுக்குப் பார்ப்பனரல்லாதார்களில் மானம், ஒழுக்கம், நேர்மை ஆகியவற்றில் பற்றும் அருகதையும் உள்ள பெரிய மனிதர்கள் என்பவர்களின் ஆதரவு இல்லை என்று தெரிந்தவுடன் அயோக்கியர்கள், காலிகள், பொறுப்பற்ற கீழ்மக்கள் ஆகியவர்களையே பெரிதும் வேட்டையாடி விளம்பரங் கொடுத்து, உண்மையில் பெருமையும் கவுரவமுள்ள பெரியவர்கள் என்பவர்களை எல்லாம் மூலையில் ஒடுங்கும்படி செய்துவிட்டார்கள். நல்ல பாரம்பரியத்தின் மதிப்பையெல்லாம் கெடுத்துவிட்டார்கள்.

நபர்களின் தன்மையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும், பண்பைப் பற்றிக் கவலைப்படவில்லையானால் மனித சமுதாயத்திற்குப் பாதுகாப்பு எப்படி இருக்கமுடியும்?

சமதர்மம் பேசுகிறோம். எப்படிப்பட்ட சமதர்மம் ஏற்பட்டாலும்—நம் சமுதாயமும் நாடும் பொது உடைமைச் சமுதாயமாகவும், பொது உடைமை நாடாகவும் ஆகும் வரையில் ஏழை–பணக்காரர் இருந்துதான் தீருவார்கள்; மற்றும் முதலாளி–தொழிலாளி இருந்துதான் தீருவார்கள்; எஜமான்–வேலைக்காரர்கள் இருந்துதான் தீருவார்கள். இந்த நிலை இருக்குமானால், இருக்கும் வரை—ஒரு கட்டுத் திட்டம், ஒழுங்கு முறை இருந்தால்தானே மனித வாழ்வும் காரிய நடப்பும் சரிவர நடந்தேற முடியும்? மனிதனுக்கு இன்று சொத்துரிமை இருக்கிறது; இதில் மற்றவன் தனது பலாத்காரத்தைப் பயன்படுத்தி உரிமை பெறுவதென்றால்,—கையில் வலுத்தவன் பயனடைவது என்றால் மனித சமுதாயத்தில் அமைதியும் சமாதானமும் ஆன வாழ்வு எப்படி இருக்கமுடியும்?

கட்டுப்பாடும் சமாதானமும் அற்ற தன்மையை 'சத்திய சோதனை' என்னும் பேரால் உண்டாக்கிவிட்டு, ஜனநாயகத்தையும் உண்டாக்கிவிட்டால்–எந்தக் குணம், எந்தத் தன்மை கொண்ட மக்கள் பெருவாரியாய் இருக்கிறார்களோ அந்த மக்கள் ஆட்சிதானே நிலவும்! 'தொழிலாளர் தொல்லை', 'கூலிக்காரர்கள் தொல்லை', 'இவர்களைத் தூண்டிவிட்டு வாழும் காலிகள் தொல்லை' என்றால் நாட்டில் இந்த இனம்தானே மெஜாரிட்டியாக உள்ளனர்!

இந்த நிலையில் சமதர்மம், ஜனநாயகம் என்றால் நாடும் மனித சமுதாயமும் எக் கதி ஆகும் என்பதைச் சிந்திக்க வேண்டாமா? ஆகவே, நமது 'அரசியல் வாழ்வு' என்பதைப் பொது உடைமை வாழ்வாக ஆக்கிக் கொண்டால்தான் மக்கள் சமுதாயம் கவலையற்று—சாந்தியும் சமாதானமும் பெற்று வாழமுடியும். இல்லாவிட்டால், மக்கள் சித்திரவதைக்கு ஆளாகத்தான் நேரிடும்.

['விடுதலை'–தலையங்கம்—6-7-1972]



படிப்பகம்

www.padippakam.com



# 3. மதச் சார்பற்ற அரசு

## 1. மதச் சார்பற்ற அரசு

இந்திய தேசியக் காங்கிரசின் கொள்கைகளை விளக்குவதில் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டுகிறோம்:—

இந்தியாவில் உள்ள இந்துக்கள் என்பவர்களில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்பதாக மூன்று பிரிவுகள் சட்டத்திலும் அனுஷ்டானத்திலும் பல ஆதாரங்களிலும் இருந்துவருகிறது. இந்தப் பிரிவின்படி—பண்டித நேரு பிராமணராகவும், காந்திஜி சூத்திரராகவும், அம்பேத்கார் ஹரிஜனாகவும் கருதப்படுகிறார்கள்.

இந்திய அரசாங்கம் சாதிப் பிரிவு, சாதிச் சலுகை, சாதித் தொகுதி, சாதிப் பிரதிநிதித்துவம் இல்லாத அரசாங்கமாக இருக்கும் என்று அடிக்கடி பிராமண வகுப்பில் வருகிற தலைவர்களாலும், காங்கிரஸ் பிரமுகர்—பிரச்சாரகர்களாலும் சொல்லப்பட்டு வருகிறது.

இப்போதுள்ள பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கின இந்திய யூனியன் அமைப்பு முறையிலும் சாதி வகுப்பு விஷயமாய்ச் செய்யப்படப்போகும் விதிகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வார்த்தைகளுக்கு இடம் அளிக்கப்படுமா? சட்டங்கள், இந்துமத சமுதாய ஆதாரங்கள், இடங்கள் முதலியவைகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வார்த்தைகள் இருக்க இடம் அளிக்கப்படுமா? அந்தப்படி இருப்பவைகளை சர்க்கார் அங்கீகரிக்குமா? என்கின்ற விஷயம் இதுவரையில் தெளிவாக்கப்படவில்லை.

இந்த விஷயங்கள் தெளிவாக்கப்படாமல், சாதிகளின் பேரால் தொகுதியில்லை, பிரதிநிதித்துவமில்லை, சலுகையில்லை என்று சொல்லப்படுவது—பிரிவினையின் காரணமாகக் கீழ் நிலையில் இருக்கும் மக்களுக்குப் பெருத்த அநீதியாகவும், குறைபாடாகவும், அசவுகரியமாகவும், முன்னேற்றத் தடையாகவும் இனியும் இருக்க இடமாகிறது.

ஆகவே, இந்திய யூனியன் கான்ஸ்டிடியூஷனிலும், இந்திய தேசியக் காங்கிரஸ் கான்ஸ்டிடியூஷனிலும்—'இந்திய யூனியனில் உள்ள மக்களில் அல்லது இந்துக்கள் என்கின்ற சமுதாயத்தில்—அரசியலின் பேராலும், மத இயலின் பேராலும், சமுதாய இயலின் பேராலும் பிராமணர், சூத்திரர், ஹரிஜனன் என்கின்ற பிரிவு எந்த முறையிலும் அனுஷ்டிக்கப்படமாட்டாது; இந்த வார்த்தைகள் அரசியல், மத இயல், சமுதாய இயல் கொண்ட எந்த ஆதாரங்களிலும் உபயோகிக்கப்படமாட்டாது என்பதோடு, இவைகள் இருக்கவும் இடம் கொடுக்கப்படமாட்டாது; அப்படிப்பட்ட வார்த்தைகள் இருக்கும்படியான ஆதாரங்களைச் சர்க்கார், காங்கிரஸ் மரியாதை செய்யாது; ஆதரிக்காது; கல்வி, கலைத் துறையிலும் இவ் வார்த்தைகளுக்கு-பிரிவுகளுக்கு இடம் இருக்க அனுமதிக்கப்படமாட்டாது'—என்பவை தெளிவாக விளங்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டு விட்டால், இந்த யூனியனில் வகுப்பு வாதங்களோ, வகுப்பு ஸ்தாபனங்களோ, வகுப்புக் கலவரங்களோ என்பவை இருக்க இடமில்லாமல் போய்விடும்; வகுப்புக் குறைகளைச் சொல்லிச் சலுகைகளோ, பிரதிநிதித்துவங்களோ, உரிமைகளோ கொண்டாடவும் கேட்கவும் இடமில்லாமல் போய்விடும். இந்திய யூனியனும் பிறவியின் பேரால் பிரிவு, சாதிப் பிரிவு, வகுப்பற்ற ஒரே சமுதாயமாக விளங்க முடியும்.

அந்தப்படிக்கில்லாமல், பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற பிரிவுகளை, சாதிகளை வைத்துக் கொண்டு—இதன் காரணத்தால் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் குறை நீங்கத் தக்கதாக சலுகைகள், பிரதிநிதித்துவங்கள் இல்லையென்று தடுப்பது கொடுமையான அநீதியாகும்.

ஆகவே, இதை அரசியல் நிர்ணய சபையும், காங்கிரஸ் விதிமுறை அமைப்புச் சபையும் கவனிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

['குடியரசு'—அறிக்கை—24-4-1948]



நம் மக்களின் இழிவிற்கும் மானமற்ற தன்மைக்கும் அடிப்படை, அவர்களால் கொண்டாடப்படுவதும் போற்றிக் காக்கப்படுவதுமான கடவுள், மத சாஸ்திரங்களானதால் அவற்றை ஒழிக்க வேண்டுமென்கிறோம். 'நீ ஏன் சூத்திரன்?' என்றால், 'கடவுள் அமைப்புப்படி, மதப்படி, சாஸ்திரப்படி' என்கிறான். அதுபோல—'அவன் எப்படிப் பார்ப்பான்?' என்றால் இந்தக் கடவுள், மத, சாஸ்திரப்படிதான் என்று கருதிக்கொண்டு இருக்கிறான். ஆகவே அடிப்படைக் காரணமாக இருக்கிற இந்த இழிநிலை மாறாததற்குக் காரணம்—நமக்குச் சரித்திரம் தெரிந்த காலம் முதல் நேற்றுவரை நடைபெற்ற ஆட்சிகள் அத்தனையும் நம் சூத்திரத் தன்மையையும் இழிவையும் பாதுகாக்கக் கூடியதாகவும், மனுதர்மப்படி ஆட்சிசெய்யக் கூடியதாகவும் இருந்ததேயாகும்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற இந்த ஆட்சியானது பகுத்தறிவாளர்கள் ஆட்சியானதால்—நமது இழி நிலையை ஒழிக்கவேண்டும் என்கின்ற கவலையுடைய ஆட்சி ஆனதால் இப்போது ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அதுவும் இரகசியமான உத்தரவு. அதாவது, 'அரசாங்க அலுவலகங்களில் சாமி படங்களோ, மத சம்பந்தமான மூட நம்பிக்கைப் படங்களோ இருக்கக்கூடாது' என்று உத்தரவு போட்டிருக்கிறது. இந்த இரகசியமான உத்தரவை இவர்களாகப் போடவில்லை. திரு. பக்தவத்சலம் ஆட்சியிலிருந்தபோது—நம்மிடம் இருந்து பிரிந்துசென்ற திரு. குருசாமியும் மற்றவர்களும், 'சுயமரியாதை இயக்கம்' என்பதாக ஒரு ஸ்தாபனம் வைத்தார்களல்லவா? அவர்கள், 'இது மதச் சார்பற்ற ஆட்சியானதால் அரசாங்க அலுவலகங்களில் இருக்கும் மதசம்பந்தமானவர்கள்—கடவுள்கள் முதலிய படங்களை எடுத்துவிட வேண்டும்' என்று தீர்மானம் போட்டு, சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள். திரு. பக்தவத்சலம் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கட்டிவைத்துவிட்டார். இவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் அதற்குமுன் ஆட்சியிலிருந்தவர்கள் 'பைசல்' செய்யாமல் விட்டுவிட்டுப் போனவைகளை யெல்லாம் பைசல்செய்து கொண்டு வரும்போது, இதையும் பைசல்செய்தல் வேண்டியிருந்தது. அதனால், இந்த உத்தரவைப் போட்டார்கள். இதுபோன்ற ஓர் உத்தரவு 1950-ல் போட்டிருந்ததைக்கொண்டு இந்த உத்தரவைப் போட்டார்கள். இதை எப்படி நான் உறுதியாகச் சொல்கிறேன் என்றால், அதிலுள்ளபடியே இதையும் அமைத்திருக்கின்றார்கள். 'படங்களை அகற்றுவதில் எவ்வித முன்னறிவிப்போ, ஆர்ப்பாட்டமோ, விளம்பரமோ இன்றி சாதாரணமாக அகற்றப்பட வேண்டும்' என்று பழைய உத்தரவில் இருந்தது. அதையே இந்த உத்தரவிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பழைய உத்தரவில் அப்போதிருந்த 'கவர்ன்மெண்ட் செகரட்டரி' கையெழுத்துப் போட்டிருக்கிறார். இப்போது வந்த உத்தரவிலும் 'கவர்ன்மெண்ட் செகரட்டரி'தான் கையெழுத்துப் போட்டிருக்கிறார்.

சாதாரணமாக வழக்கம் என்னவென்றால், இதுபோன்ற உத்தரவுகளுக்கு கவர்னரோ, மந்திரியோதான் கையெழுத்துப் போடவேண்டும். பழைய உத்தரவில் அதுபோல் இல்லாமல் செகரட்டரியே கையெழுத்துப் போட்டிருந்ததால் அதைப் பின்பற்றியே இதிலும் செகரட்டரி கையெழுத்துப் போட்டு அனுப்பி இருக்கிறார். அந்தப் பழைய உத்தரவு எப்போது போடப்பட்டது என்றால், வெள்ளைக்காரன் இந் நாட்டை விட்டுப்போய்—பூரா பொறுப்புகளையும் ஒப்படைத்தபின், 1950-ல் போடப்பட்டிருக்கிறது. அதைப் போடவேண்டிய அவசியம் ஏன் வந்தது என்றால், அரசாங்க அலுவலகங்களில் இராஜாவின் படமும், இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் படங்களும் இருந்துவந்தன. 'வெள்ளைக்காரர்களின் படங்களை எல்லாம் அகற்றவேண்டும்' என்கின்ற எண்ணத்தில் தான் அந்த உத்தரவைப் போட்டார்கள். அந்த உத்தரவானது 1950-வது வருஷம் மே மாதம் போடப்பட்டதாகும். அந்த உத்தரவில், 'கோர்ட்டு அறைகளின் சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும் அரசர், அரசி, அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களின் படங்கள் எதுவானாலும் அவைகளையெல்லாம் அகற்றிவிடவேண்டும்; அவைகள் நீதி ஸ்தலங்களில் இருப்பது நீதி ஸ்தலங்களுக்கு இழுக்காகும்; வேண்டுமானால், காந்தியார் படம் இருக்

www.padippakam.com



கலாம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவின்மீது பெல்லாரி டிஸ்டிரிக்ட் ஜட்ஜும், தென் கனரா கலெக்டரும் 'எல்லாப் படங்களையும் எடுக்கவேண்டுமென்றால் இப்போதுள்ள கவர்னர், பிரதம மந்திரி ஆகியவர்கள் படங்களை என்ன செய்வது?' என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு, 'அவைகளையும் சேர்த்து எடுத்துவிடவேண்டும்; வேறு இடங்களில் வேண்டுமானால் மாட்டிக்கொள்ளலாம்' என்று 1950-ல் நவம்பர் 2-ஆம் தேதி ஒரு உத்தரவை அரசாங்கம் அனுப்பி இருக்கிறது. அந்த உத்தரவை அப்போது கவர்ன்ட்மெண்ட் செக்ரட்டரியாக இருந்த புல்லா ரெட்டி என்பவர் கையெழுத்திட்டு அனுப்பி இருக்கிறார். ஆகவே, இந்த உத்தரவு 1950 முதல் அமுலில் இருந்துவருகிறது. இப்போது இவர்கள் புதிதாக ஒன்றும் செய்துவிடவில்லை.

அரசியல் சட்டத்தில் இது மதச் சார்பற்ற சர்க்கார் என்பது ஆகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மதச்சார்பற்ற அரசாங்கம் என்று காந்தியே சொல்லி இருக்கிறார்; திரு. ஜவஹர்லாலும் சொல்லி இருக்கிறார். திரு. காந்தி, 'அரசாங்கப் பணத்திலிருந்து சிறிதுகூட மத சம்பந்தமான காரியத்திற்குச் செலவிடக்கூடாது. மத சம்பந்தமான எந்தக் காரியத்திலும் அரசாங்கம் சம்பந்தப்படக்கூடாது' என்று சொல்லி இருக்கிறார். இந்த காந்தி முதலில், 'இந்து மதந்தான் என் உயிர்; வருணாசிரமத்தைக் காப்பதற்காகவே நான் சுதந்திரம் கேட்கிறேன்; இந்து மதத்தில் கை வைக்க ஒருநாளும் சம்மதிக்கமாட்டேன்; என் உயிரைக் கொடுத்தாவது மதத்தைக் காப்பாற்றுவேன்' என்று சொல்லிக்கொண்டிருந்தவர்தான். அதற்காகவேதான் பார்ப்பனர்கள் அவரை 'மகாத்மா' வாக்கினார்கள். அவர் எதனால் மாறினார் என்றால், வெளிநாட்டார்கள், 'இந்தியன் என்றால் காட்டுமிராண்டி' என்று சொல்லிவந்தனர். அதற்கு ஆதாரமாக இந்து மதத்தைக் காட்டினர். சுதந்திரம் பெற்றபின், 'நாங்கள் காட்டுமிராண்டிகள் அல்லர், உங்களைப் போன்ற மனிதர்கள்தாம்' என்பதைக் காட்டிக்கொள்வதற்காக, மேல்நாடுகளின் அரசாங்கங்களைப்போல அதைப் பார்த்து 'செக்குலர் ஸ்டேட்' (Secular State) என்ற பெயரை இந்தியாவிற்கும் உபயோகித்துக்கொண்டார்.

அதோடு மட்டுமல்ல; அவர், 'காங்கிரசில் உள்ளவனெல்லாம் அயோக்கியனாகிவிட்டான்; இலஞ்சம் வாங்குகிறான்; திருடர்கள் கையில் காங்கிரஸ் சிக்கிவிட்டது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. முக்கியமானவர்களாக இருப்பவர்களும் என்னிடம் வந்து சொன்னார்கள். ஆகையால், இனி காங்கிரசைக் கலைத்துவிட வேண்டியதுதான்' என்று சொன்னார். அவர் உயிரோடிருந்தால் இந்நேரம் காங்கிரசைக் கலைத்திருப்பார். காங்கிரசைக் கலைத்துவிட்டால் அதனால் பெருமையும் புகழும் பெற்றிருந்த—அதன் மூலம் சுகபோகமாக வாழ்ந்துகொண்டிருந்த பார்ப்பனர்கள் எல்லாம்—இனி, 'காங்கிரஸ் போனால் நமது வாழ்வே போய்விடும்; இந்த மனிதனை வைத்திருந்தால் நிச்சயம் கலைத்தாலும் கலைத்துவிடுவான்; இப்போதே மதமற்ற அரசாங்கமென்கிறான்; இனியும் இந்த மனிதனை உயிரோடு வைத்திருப்பது நம் குலத்திற்கே பெரிய ஆபத்தாக முடியும்' எனக் கருதி, பார்ப்பனர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, காந்தியையே ஒழித்துவிடுவது என்று தீர்மானம்போட்டு அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

இவர்கள் எந்த நாட்டைப் பார்த்து எந்த மொழியில்—'செக்குலர் ஸ்டேட்' என்று குறிப்பிட்டார்களோ, அந்த நாடுகளில் அந்த மொழிக்கு—'செக்குலர்' என்பதற்கு என்ன பொருள் இருக்கிறதோ—அவர்கள் எந்தப் பொருளில் அதைப் பயன்படுத்தியிருக்கிறார்களோ, அந்தப் பொருளில்தானே நாமும் பயன்படுத்தவேண்டும்? அதை விட்டுவிட்டு சொல்லைமட்டும் வைத்துக்கொண்டு, 'செக்குலர் என்றால் மதச் சார்பற்றது என்று பொருளல்ல; எல்லா மதங்களையும் ஒன்றுபோலக் கருதவேண்டும் என்றுதான் பொருள்' என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள்.



பெண்கள் ஒரு மாநாடு நடத்துகிறார்கள். அந்த மாநாட்டில் உள்ள பெண்கள் அத்தனைபேரும், 'பெண்கள் பதிவிரதைகளாக நடந்துகொள்ள வேண்டும்' என்று தீர்மானித்துவிட்டு—'பதிவிரதை என்றால் எல்லா ஆண்களையும் தங்கள் கணவனைப் போலக் கருதி நடந்துகொள்ள வேண்டும். அதுதான் பதிவிரதத் தன்மை' என்று அர்த்தம் சொல்வது எவ்வளவு அயோக்கியத்தனமானதோ, அதைவிட, அயோக்கியத்தனமாகும்—'மதச் சார்பற்ற' என்பதற்கு எல்லா மதங்களையும் ஒன்றுபோலக் கருத வேண்டுமென்பது! எனவே, 'மதச் சார்பற்ற' என்றால், 'எந்த மதத்தையும் சாராத' என்பதுதான் பொருள். இந்த சர்க்கார் மதச் சார்பற்ற சர்க்காரானதால், அரசியலில் மதச்சார்புள்ள சாதனங்களான கடவுள் முதலிய படங்களை நீக்கவேண்டுமென்கிறது.

[புத்தகம் : 'மதச்சார்பின்மையும் நமது அரசும்'—பதிப்பு 1968]

# 4. உள்ளாட்சி

## 1. நகர அமைப்பு

நகரசபை அங்கத்தினர்களே! பெரியோர்களே!

'நகர பரிபாலன சபை அமைப்பும் வேலையும்' என்பது பற்றிப் பேச விழாப் பிரமுகர்கள் விழைவதாகத் தலைவரவர்கள் அறிவித்துள்ளார்.

இவ்விஷயம் பற்றிப் பேச எனக்கு மிக மகிழ்ச்சியே.

நகர பரிபாலன சபை என்பது நகரில் வாழும் மக்களின் நலனைக் குறித்துக் கவலை கொண்டு, அவர்கட்கு வேண்டுவன செய்யும் கடமையை ஏற்ற சபை என்பது பொருள் என்றே கருதுகிறேன். அச் சபையை நிர்வகிப்பவர்கள் அந் நகர மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டு, நகரமக்களின் பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகின்ற மக்கள் ஆவார்கள். இதுபோலவே, ஜில்லா பரிபாலன சபை, தாலுக்கா பரிபாலன சபை, கிராம பரிபாலன சபை, மாகாண பரிபாலன சபை போன்றவைகளுமாகும். ஆனால், நாம் காணும் இப் பரிபாலன சபைகள் என்பவை எப்படி அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றால், நகர் முதலியவைகளில் வாழும் செல்வவான்களது பரிபாலன சபைகளாகவே அமைக்கப் பெற்றிருக்கின்றன.

எப்படியெனில், இச்சபைகளில் அமருகின்றவர்களுக்கென ஏற்படுத்தியுள்ள யோக்கியதாம்சம் என்ன? அவர்களைத் தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சம் என்ன? என்று யோசித்துப் பார்ப்போமேயானால், அப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது ஒரு சொத்துடைமையைப் பொறுத்தே அத் தகுதிகள் இருந்துவருவதைக் காணலாம். சொத்துடைமை இல்லாத எவருக்காவது தகுதி இருக்கக் காணுவோமேயானால் அத் தகுதியும் அந்நகர, தாலுக்கா, ஜில்லா, மாகாண மக்களில் 100-க்கு ஒருவருக்குக்கூட இருக்க முடியாததான—'படிப்பு உடைமையை'ப் பொறுத்தே ஏற்படுத்தப்பட்டுள்ள தகுதியேயாகும். அதாவது, ஒன்று, ஒரு குறிப்பிட்ட சொத்து இருக்கவேண்டும்; அல்லது, ஒரு குறிப்பிட்ட படிப்புப் பட்டம் இருக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லாதார், தகுதி இல்லாதாராகவே கருதப்பட்டிருக்கிறது. ஆதலால், மேற்கண்ட பரிபாலன சபைகளின் அமைப்புகளானது பொது மக்களது சபையாக அமைக்கப்படவில்லை என்பதே எனது அபிப்பிராயம்.

பிரத்தியட்ச அனுபவத்தில் காண வேண்டுமென்றாலும் நீங்கள் காணலாம். எந்தப் பரிபாலன சபைகளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்; அவற்றில் வீற்றிருப்போர் யாவர் என்று நோக்குங்கள்; அவற்றின் தலைவர்கள் யாவர் என்று நோக்குங்கள்; மற்றும் அவர்கள் எல்லோரையும் தெரிந்தெடுப்பவர்களும், தெரிந்தெடுக்கப்

படிப்பகம்

www.padippakam.com



படுபவர்களும் தங்கள் கடமைகளை, பொறுப்புகளை உணர்ந்தவர்களாய் இருக்கின்றார்களா என்று பாருங்கள். சொத்துடைமையைத் தகுதியாகக்கொண்ட மக்களின் சபைப் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் சொத்துடைமையைப் பெருக்குவதைக் கடமையாகக் கொள்ளுவார்களா, அல்லது சொத்தில்லாதவர்கள், படிப்பில்லாதவர்களாகிய ஏழைப் பாமரமக்களின் நலன் பெருக்கத்தைக் கடமையாகக் கொள்ளுவார்களா என்பதை இயற்கைத் தத்துவம் என்னும் கண்ணினால் பாருங்கள்!

ஆகவே, நகர பரிபாலன அமைப்பே பொதுமக்களின் நலனுக்கேற்றதாய் இருக்க முடியாமல் அமைக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒழுக்கத்தையோ, நாணயத்தையோ காண்பதென்பது மிகமிக அரிதாகவே இருக்கத்தக்கதாய் இருக்கிறது. தெரிந்தெடுத்தல்கள் (எலக்ஷன்கள்) என்பவைகளைப்பற்றி யாவரும் வெளிப்படையாய் அறிந்த விஷயமே யாகும். தெரிந்தெடுப்பவர்கள் எவருக்குமே—ஏறக்குறைய 100 க்கு 99 பேருக்குமேல் தெரிந்தெடுப்பவர்களின் கடமை என்ன என்பதே தெரியாது. ஒவ்வொரு தெரிந்தெடுப்பவனும் அவனவன் சுயநலம், தாட்சண்யம் ஆகியவைகளைக் கவனித்தே வியாபார முறையில் தெரிந்தெடுக்கிறான். தெரிந்தெடுக்கப்படுபவனும் தனது சுயநலம், தற்பெருமை, தற்காப்பு ஆகியவைகளைக் கருத்தில் வைத்தே தெரிந்தெடுக்கப் பாடுபட்டு தெரிந்தெடுக்கப்பட்டவனாகின்றான். ஆகவே, தெரிந்தெடுப்புமுறை பெரிதும் சுயநலத்தையே அஸ்திவாரமாய்க் கொண்டு உலவுகின்றது.

பொதுஜனங்கள் பேரால், சில ஜனங்கள் புகழ் பெற்றுச் செல்வம் பெருக்கி மகிழ்வது என்பதே நகர பரிபாலன சபையின் அமைப்பாகவும் வேலையாகவும் இருந்து வருகின்றது.

இதேபோல்தான் ஜில்லா, தாலுக்கா பரிபாலன சபைகளுமாகும். ஜில்லா, தாலுக்கா என்பது நகரங்கள் தவிர்த்த கிராமங்களையே பொறுத்தது. கிராமங்களிலுள்ள பெரும்பான்மை மக்களான விவசாயக் கூலிகளுக்கு இந்தச் சபைகள் பிரதிநிதி சபையாகுமா? சின்னக் குடியானவர்களுக்கு இது பிரதிநிதி சபையாகுமா? பூமி இல்லாதவனுக்கும், ஒரு ஏக்கர், அரை ஏக்கர் பூமி உள்ளவனுக்கும்—1000 ஏக்கர், 10,000 ஏக்கர் பூமி உள்ளவர்கள் பிரதிநிதிகளானால், இது எதற்குப் பயன்படும்? அந்த ஒரு ஏக்கர், அரை ஏக்கர் பூமியையும் பிடுங்கி, 1000–ஏக்கர்காரன் 1500–ஏக்கர்காரனாகவும்; 10,000 ஏக்கர்காரன் 15,000 ஏக்கர்காரனாகவும், மற்றவர்களை ஏழையாகவும், பாப்பர்களாகவும் ஆக்கத்தான் பயன்படும். மற்றும், தங்கள் அதிகார ஆணவங்களைக் கொண்டு விவசாயக் கூலி மக்களை அடக்கி ஒடுக்கி, துஷ்ட மிருகங்கள் மாதிரி நடத்தத்தான் பயன்படும்.

இந்தப்படி நாடு முழுவதும் நடக்கிறதா, இல்லையா பாருங்கள். நகர பரிபாலன சபையின் செல்வங்கள் அவற்றில் உள்ள உத்தியோகஸ்தர்களும், காண்ட்ராக்டர்களும் சாப்பிடவும்; அவற்றில் பரிபாலன சபையார்களுக்கும் பங்கு இருக்கவுமே பெரிதும் பயன்படுகின்றன. ஒரு பாகம் பொதுஜனங்களுக்கும் பயன்படுகிறது என்று சொல்லப்பட்டாலும் அதுவும் செல்வவான்களுக்கும், படித்தவர்கள் என்று சொல்லப்படுகின்ற சோம்பேறிகளுக்குமே போய்ச் சேருகின்றன.

மாகாண பரிபாலன சபைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவைகளில் ஜமீன் பேரால் மக்கள் இரத்தத்தை உறிஞ்சும் கொள்ளைக்காரர்கள்; லேவாதேவியின் பேரால் மக்கள் இரத்தத்தையும் எலும்பிலுள்ள ஊன்களையும் உறிஞ்சும் கொள்ளைக்காரர்கள்; மிராசுதார்கள் பெயரால் விவசாயக் கூலிகளின் இரத்தத்தையும், எலும்பு ஊன்களையும், மனிதத் தன்மையையும் கொள்ளைகொண்ட துஷ்ட மிருகங்களுக் கொப்பானவர்கள்; வன்னெஞ்ச வியாபாரிகள்; படித்தவர்கள் என்னும் ஈவு இரக்கமற்ற சோம்பேறிக் கூட்டங்கள் ஆகியவைகளே நிறையப் பெற்றிருக்கின்றன. இவர்களது எண்ணமென்ன, கடமை என்ன, செய்கை என்ன, என்பவைகளை நான் விவரிக்க வேண்டுமா? பிரத்தியட்சத்தில் நீங்கள் அறியாத எதை நான் சொல்லவேண்டும்?



ஆகவே, இச் சபைகளின் அமைப்பையும், வேலைத் திட்டத்தையும் நடவடிக்கைகளையும் கண்ட ஒருவன் யோக்கியனாய் இருப்பானாயின், இவைகளைக் கலைக்கவேண்டுமென்றுதான் சொல்லுவானே ஒழிய சீர்திருத்தவேண்டுமென்று சொல்லுவதுகூட மிகக் கஷ்டமாய்த்தான் இருக்கும். ஆனால், சிறிது காலமாகவே நான் கொண்ட அபிப்பிராயப்படிதான் நகர பரிபாலனங்களின் ஆதிக்கங்கள் நாளாவட்டத்தில் குறைந்து வருவது பற்றி மகிழ்ச்சியடைகின்றேன். என்னவெனில், நகரபரிபாலன சபைக்கு இருந்துவந்த அதிகாரங்கள் இந்த 20 வருட காலத்தில், அதாவது பாமர மக்களுக்குச் 'சுயாட்சி' உணர்ச்சி ஊட்டி, செல்வவான்களும் படித்த சோம்பேறிகளும் ஏமாற்ற ஆரம்பித்த காலம் முதல், நாளுக்குநாள் ஏற்கனவே இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டே வருகின்றன. இனி, ஜில்லா, தாலுக்கா சபைகளின் அதிகாரங்களும் பறிக்கப்பட வேண்டுமென்ற விருப்பங்களும் செல்வாக்குப் பெற்றுவருகின்றன. இதிலிருந்தே பரிபாலன சபையின் அமைப்பும் வேலையும் ஒழுங்காக இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும். நம் நாட்டில் நகர பரிபாலன சபைகள் ஏற்பட்டு 50 வருஷங்களுக்கு மேலாகியும் இன்னமும் மக்களுக்கு அவற்றின் கடமையும் பொறுப்பும் தெரியவில்லை என்றால், நாம் நம் சமூகத்தின் பேரால் வெட்கப்பட வேண்டாமா என்று யோசித்துப் பாருங்கள்.

எப்படிப்பட்ட நகரத்திலும் ஒரு வீட்டுக்காரன் பொது இடத்தில் ஒரு அடி நிலமாவது சேர்த்துக் கட்டிக்கொள்ளவே பார்க்கிறான்; அதில் அவன் வெட்கப்படுவதில்லை. பொதுச் சொத்து என்றால் கொள்ளை அடிக்கத் தகுந்தது என்பதே ஒவ்வொருவனுடையவும் எண்ணமாய் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட எண்ணமுடையவர்கள் ஒருநாளும் பொது நிர்வாகத்துக்கு அருகதையுடையவர்களாக மாட்டார்கள். இப்படிப்பட்ட ஜனங்களின் பிரதிநிதிகளும் தன்வீட்டுக் குப்பை, கூளம், அசிங்கம் ஆகியவற்றைப் பக்கத்து வீட்டுப் புறம் கொட்டுவதிலும், தன் வீட்டுப் பிள்ளையை எதிர்வீட்டுப்புறமோ அல்லது பக்கத்து வீட்டுப்புறமோ இருத்தி மலஜலம் கழிக்கச்செய்வதையுமே கடமையாகவும் நீதியாகவும் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை 50 வருஷமாய்த் திருத்தமுடியாத பரிபாலனசபை அமைப்பும், வேலையும் இனி எப்பொழுது திருந்தப்போகின்றது?

மேல்நாடுகளில் இவ்விஷயங்கள் ஓரளவு கவனிக்கப்படுகின்றன என்றாலும் அங்கும் போதிய வேலைகள் செய்திருப்பதாய்க் காணப்படவில்லை.

உண்மையான நகரபரிபாலன சபைகள் என்பவைகள் ஒரு அரசாங்கம் என்பதின் வேலைகள் எல்லாவற்றையுமே மேற்போட்டுக்கொண்டு வேலை செய்து வரத் தக்கதாய் இருக்கவேண்டும். அவைகள் நகரில் பெரும்பான்மையான மக்களான—தொழில் செய்து வாழும் மக்களுடைய முழுப் பிரதிநிதிகளாகவே இருந்து, அவர்களுடைய நன்மையையே பெரிதும் கவனிக்கத் தக்கதாய் இருக்கவேண்டும். பொது ஜனங்களை உத்தேசித்துப் பொது ஜனங்களுக்காக நடைபெறும் எந்தக் காரியத்தையும், வியாபாரத்தையும் தனிப்பட்ட மனிதன் நடத்திப் பயன்பெற இடமே இருக்கக்கூடாது. உதாரணமாக வியாபாரங்கள், தொழிற்சாலைகள் மற்றும் மக்களுக்கு வேண்டிய ஆதார சாமான், போகபோக்கிய சாமான், போக்குவரவு வசதி, கல்வி முதலிய எல்லா நிர்வாகங்களும் நகரபரிபாலன சபையின்கீழ் நிர்வகிக்கப்பட்டு, அதன் இலாபங்கள் முழுமையும் நகரமக்களின் வாழ்க்கைக்கும் கல்விக்கும் சுகபோகத்துக்கும் சரிசமமாய்ப் பயன்படத் தக்கதாகவே இருக்கவேண்டும். உற்பத்தி செய்பவனுக்கும் அனுபவிப்பவனுக்கும் மத்தியில் 'மிடில்மேன்' கூடவேகூடாது. நகர சிவில், கிரிமினல், போலீஸ் முதலிய காரியங்களும் நகர பரிபாலனத்துக்குள்ளாகவே அடங்கியதாய் இருக்கவேண்டும். ஜட்ஜுகள், போலீஸ் அதிகாரிகள், சிறைக்கூடத் தலைவர்கள் முதலிய எல்லா அதிகாரிகளும் நகர பரிபாலன சபையின் அதிகாரிகளாகவே இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த முறையில்தான் ரஷ்ய தேசத்தில் நகரசபைகள் நடப்பதைப் பார்த்தேன். அங்கு ஓட்டர்கள் சங்கக் கூட்டத்தில் ஐட்ஜுவை நிறுத்தி, கேள்விகள் கேட்கப்பட்டதை நேரில் பார்த்தேன். ஐட்ஜு நகர ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவராவார். அவரும் ஒரு தொழிலாளியேயாவார். ஒவ்வொரு தெரிந்தெடுக்கப்படவேண்டிய ஸ்தானத்திற்கும் தெரிந்தெடுக்கப்பட்டவரிடமிருந்து வேலை வாங்கவும், அவர் கடமையைச் சரியாய் உணர்ந்து பொறுப்புடன் நடக்கின்றாரா என்பதைக் கவனிக்கவும் ஒரு தனிக் கமிட்டி உண்டு. அக் கமிட்டிக்கு அவர்கள் என்றும் பொறுப்பாளிகளாய் இருக்கவேண்டும் என்கின்ற முறையிலே எல்லா ஸ்தல ஸ்தாபனங்களும், வேலைமுறைகளும் அங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. நிற்க,

நமது நாட்டு ஸ்தாபனங்களில் ஸ்தாபன சிப்பந்திகளின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்கும் கண்டனத்துக்கும் உரியதாகும். சிப்பந்திகளுக்குச் சர்க்கார் சிப்பந்திகள்போல பென்ஷன் இல்லை; அவர்கள் ஒரு எஜமானருக்கு திருப்தியாய் நடக்க முடியா விட்டால் வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளவோ, மாற்றப்படவோ மார்க்கமில்லை. இந்தக் காரணங்களால் மனச்சாட்சிப்படி நடக்கமுடியாமலும் சுதந்திரத்துடன் இருக்க முடியாமலும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நகரபரிபாலன சபை அங்கத்தினர்களும், தலைவர்களும் எப்படிப்பட்ட யோக்கியதை உடையவர்கள் என்று முன்னாலேயே சொன்னேன். அப்படிப்பட்டவர்களிடமிருந்து காலந்தள்ள வேண்டிய அவசியத்தில் மனிதன் வாழ்வது மிகவும் கொடுமையான வாழ்வேயாகும். ஒரு எஜமானன் காலாவதியாகி, அவனது மறு தேர்தலுக்கு ஒரு சிப்பந்தி ஏதாவது அபிமானம் காட்டினால்—அடுத்து வருகிற எஜமானன் கல் நெஞ்சுடன் அவனை நசுக்கி விடுகிறான்; அபிமானம் காட்டவில்லையானால்—அதே எஜமானன் திரும்பவும் வந்தால் அப்படியே செய்துவிடுகிறான். மற்றும், சிப்பந்திகள் தங்கள் கடமையை நிர்த்தாட்சண்யமாய்—ஒரு நிலையாய் செலுத்துவதானால் எஜமானாய் இருப்பவன் பொது ஜனங்களின் 'சாடி'யைக் கேட்டுக்கொண்டு கொடுமைப் படுத்தி விடுகிறான்.

ஆதலால், சிப்பந்திகள் சமயத்துக்குத் தகுந்தபடி தங்கள் பணத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயே கருத்துள்ளவர்களாகி விடுகிறார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்கள், நகரபரிபாலன சபைகள் ஒழுங்குபட வேண்டுமானால், சிப்பந்திகள் எல்லாம் சர்க்கார் சிப்பந்திகள் ஆகவேண்டும். சிப்பந்திகள் விஷயத்தில் நகரபரிபாலன சபைத் தலைவர்களுக்குச் சிறிதும் அதிகாரம் இருக்கக் கூடாது. இதுபோல் இத்துறையிலும் பல மாறுதல்கள் ஏற்படவேண்டியிருக்கிறபடியால் பொதுவில்—இன்றைய நிலையில். ஸ்தல ஸ்தாபனங்களை எடுத்துவிட்டு, சர்க்கார் மேற்பார்வையில் பொது ஜனங்களுக்கு ஐவாப்தாரித்தனமுள்ள முறையில் நடத்தப்படுவதே கூடியவரை மேலானது என்று சொல்லலாம்.

[திருப்பூரில், 10-12-1933-ல் சொற்பொழிவு—'புரட்சி' 17-12-1933]

## 2. நகராட்சியின் தன்மை

நகரசபை அங்கத்தினர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இந்தச் சந்தர்ப்பத்தில் நகரசபையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நகரசபைகளைப்பற்றி இனிமேற்பட நாம் சற்று நல்ல கருத்துக்கள், முற்போக்கான கருத்துக்களைக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த நகரசபைகள் என்கிறதான ஒரு ஸ்தாபனத்தை வெள்ளைக்காரர்கள் ஏற்பாடு செய்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, 'இந்தப்படியாக ஒவ்வொரு



ஊருக்கும் நகரசபைகளை ஏற்பாடுசெய்து, அவைகளில் அங்கம் வகிப்பதற்காகப் பொது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வேண்டும் என்று ஏற்பாடு செய்தால், தெரிந்தெடுக்கப்படுதலில் போட்டா போட்டிகள், கட்சிகள் ஏற்பட்டு, ஒருவருக் கொருவர் கட்சிகளாகப் பிரிந்து விரோதம் பாராட்டிக்கொள்வார்கள். இந்தக் கோஷ்டிகளில் ஏதாவது ஒரு கோஷ்டி சர்க்காருக்கும், அதனுடைய ஆட்சிக்கும், நடப்புக்கும் அனுசரணையாக, ஆதரவாக இருக்கும்; அதனால் சர்க்கார் நடத்துவதற்கு சற்றுச் சவுகரியமாய் இருக்கும்' என்றே ஜனங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அந்தப் பிரிவுகளினால் அவர்களுக்கு உண்டாகும் பலவீனத்தின் துணையைக்கொண்டு, அவர்களே ஆட்சி புரிவது என்பது ஒரு காரணம். இதை வெளிப்படையாகச் சொல்லாமல், வெள்ளைக்காரர்கள் வெளிப்படையாக வேறு ஒரு காரணம் சொன்னார்கள்.

அதாவது, 'இந்திய மக்களை சுய இராஜ்யத்திற்குத் தகுதியுடையவர்களாக ஆக்குவதற்காக—அதாவது, ஆட்சி புரிகிற அனுபவத்தை அவர்கள் பெறுவதற்காக அவர்களைத் தயார்செய்ய வேண்டும் என்பதால் இந்த மாதிரி நகர சபைகளை ஏற்பாடு செய்து, அதன் மூலம் இந்திய மக்கள் ஆட்சி அனுபவம் பெறும்படி செய்வதற்கு ஆகும்' என்றார்கள். இந்தப்படி இரண்டு காரணங்கள்தாம் நகரசபைகள் ஏற்பாடு செய்ததற்கும், நடந்து வருவதற்கும் சொல்லப்பட்ட காரணங்களாகும். இவை தேவையில்லாத காரணங்கள்.

இன்றையதினம் இந்த இரண்டு காரணங்களும் நகரசபை இருக்கவேண்டும் என்பதற்குத் தேவையில்லாத காரணங்களாகிவிட்டன. எப்படி என்றால், முதலாவதாக ஜனங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து வைத்து அதன் மூலம்தான் ஆளவேண்டும் என்கின்ற அவசியம் நமக்கு வேண்டியதில்லை. இன்றையதினம் ஆளுகிறவர்கள் 'இந்தத் தேசத்துக்காரர்கள்'—'நம்மவர்கள்' என்று சொல்லப்படுவதோடு, 'ஆளுகிறவர்கள் நம்மால் தெரிந்தெடுக்கப்பட்டு நம்முடைய பிரதிநிதிகளாகப் போய் ஆளுகிறார்கள்' என்றும் சொல்லப்படுகிறது. இன்றையதினம் இருக்கிற இந்திய முதல் மந்திரி என்பவரும், மற்ற மந்திரிகளும் இந்த ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களுக்கு மேலாக இந்த நாட்டின் தலைவர் என்று இருக்கிறவரும் இந்த மக்களால் தெரிந்தெடுக்கப்படுகிறவர் என்று சொல்லப்படுகிறது. இந்தப்படி 'இந்தத் தேசத்தவரே இந்த மக்களாலே தெரிந்தெடுக்கப்பட்டு ஆளுகிறவர்கள்' என்றும் சொல்லப்படும்போது—ஆளும்போது ஜனங்களைப் பிரித்துவைத்து அதன்மூலம் ஆட்சியை நடத்தவேண்டும் என்ற அவசியம் எப்படி உள்ளவர்கள் ஆவார்கள்?

இரண்டாவதாக, இந்தத் தேசத்து மக்களைச் சுயராஜ்யத்துக்கு அருகதை உள்ளவர்களாக ஆக்குவதற்காக நகரசபைகள் ஏற்படுத்தப்படுவது என்பதும் இன்றையதினம் தேவை இல்லாததாகும். ஏனென்றால், இந்த நாடு வெள்ளைக்காரரிடமிருந்து சுதந்திரம் பெற்று, சுதந்திர ஆட்சிதான் இன்று நடைபெகிறது என்றும் சொல்லப்படுகிறது. எனவே சுதந்திரம், சுயராஜ்யம் பெற்ற மக்களுக்கு—சுயராஜ்ய ஆட்சியே புரிகிற மக்களுக்கு, சுயராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்குவது என்பது பொருந்துமா? எனவே, இந்த இரண்டு காரணங்களுக்காகவும், அதாவது எந்தக் காரணங்களைச் சொல்லியும்—மனத்தில் வைத்தும் இந்த நகரசபைகள் என்பவைகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ, அந்தக் காரணங்கள் என்பவைகள் இன்று தேவையில்லாத, அவசியமில்லாத காரணங்களாகி விட்டன. எனவே, அவைகளின் அடிப்படையில் இன்றைய தினமும் நகரசபைகள் இருக்க வேண்டும் என்பது தேவையில்லை. பின் எப்படி என்றால், இன்னும் சற்றுப் பாதுகாப்போடும், பலமான அஸ்வாரத்தோடும், வேறு முறையோடும்தான் இன்று நகரசபைகள் இருக்கவேண்டும்.

அதாவது, நகரமக்கள் பிரதிநிதிகளுக்கு நகர ஆட்சி, சுதந்திரம் முழுவதும் இருக்க வேண்டும். இன்று நகர ஆட்சிக்குப் பொறுப்பானவர் கமிஷனர். அவருக்கும் கவுன்சிலர்



படிப்பகம்

www.padippakam.com



களுக்கும் ஆட்சியில் எவ்வித சம்பந்தமும் இல்லை. அதனாலேயே இது தேவை இல்லை என்று நான் எப்போதும் வலியுறுத்திக் கூறுவது—அதாவது, இந்த புதுக்கோட்டை நகர சபைக்கு, இந்த புதுக்கோட்டை நகரத்தைப் பொறுத்தவரையில் முனிசீபு, மாஜிஸ்ட்ரேட்டு, போலீஸ், ஜட்ஜு முதலிய சகல அதிகாரத் தலைமைகளும் நடப்புகளும் புதுக்கோட்டை நகரசபையைப் பொறுத்ததாய் இருக்கவேண்டும்; பொதுப் பாதுகாப்பு, மேல்பார்வை, பொது சம்பந்த நிர்வாகப் பாதுகாப்பு போன்றவைகளை வேண்டுமானால் பொதுத் தன்மைக்கு—அதாவது, இராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் என்பதாக ஏற்பாடு செய்துவிட்டு, மற்றபடி இந்த ஊரைப் பொறுத்தவரையான காரியங்களுக்கு இந்த நகரசபையே அதிகாரமுடையதாக இருக்கவேண்டும் என்பது ஆகும். அப்போதுதான் 'நகர சுய ஆட்சி' என்று சொல்வதற்கு அர்த்தமேதவிர, இப்போது இருக்கிறதுபோல சும்மா—பேருக்கு அதாவது, நமது இராஜ்யத்திற்கு இருப்பதுபோல், அங்கத்தினர் நலம், கவுரவம் என்ற பெருமைக்கு, நகராட்சி என்ற பெருமைக்கு நகராட்சி என்று இருப்பது கேலிக்கூத்தாகும். சாதாரணமாக, இன்று நகராட்சி என்பவைகள் எப்படி இருக்கின்றன என்றால், சிலருடைய வசதிக்கும், பெருமைக்கும், இலாபத்துக்கும் பயன்படுவது என்கிற மாதிரியான தன்மையில் இருக்கின்றன. இது மாறவேண்டும்.

இந்த என்னுடைய கருத்தைப் பலர் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள்; இந்தப்படியே செய்யவேண்டும் என்று ஒப்புதல் தந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பதவியில் இல்லாதபோது, அதிகாரத்தில் இல்லாதபோது இந்தக் கருத்தை ஒத்துக்கொண்டார்களே தவிர, அதிகாரத்துக்குப் போனவுடன், தங்களுடைய வசதிக்காக—தம்மை நிலைப்படுத்துவதற்காகப் பழையபடியே நடந்துகொள்கிறார்கள்.

தோழர்களே! நமது நாடு எப்படி இருந்தாலும் இந்தச் சாதி வகுப்புணர்ச்சியினால் மிகவும் சீரழிகிறது. அவனவன் தன் சாதி, தன் வகுப்பு பதவிக்கு வரவேண்டும், மற்றவர்களை அடக்கி ஒடுக்கிவருவது என்று கருதுகிறான். ஒவ்வொரு ஊரிலும் இந்த மாதிரியான தகராறு இருக்கிறது; இது ஒழியவேண்டும்.

நகரசபைக்குப் போகிறவர்கள் அங்குபோய் என்ன செய்யப்போகிறார்கள்? இவர்களுக்கு அங்கு என்னவேலை இருக்கிறது? நகரசபைகளில் பணம் இருக்கிறது; அந்தப் பணத்தைச் செலவு செய்வதற்கு ஏற்கனவே சர்க்காரால் செய்யப்பட்ட சட்டங்கள் இருக்கின்றன. இவைகள் சரியானபடி நடத்திக்கொள்வதற்காக சர்க்காரால் நியமிக்கப்படும் அதிகாரிகள், சிப்பந்திகள் இருக்கிறார்கள். இவர்களை நிர்வாகம் செய்யவும், மோசடி நடவாமல் இருக்கவும் முழுப்பொறுப்புள்ள கமிஷனர் இருக்கிறார். இப்படி இருக்க, இவர்கள் அங்கு போய் என்ன செய்யப் போகிறார்கள்? இதற்குத்தானா இவ்வளவு தகராறுகள், போட்டா போட்டிகள், சண்டைகள்! சிந்தித்துப் பாருங்கள்!

'அப்படியானால், இந்த ஸ்தாபனமே தேவையில்லை என்று நீ சொல்லுகிறாயா?' என்றால், மற்ற இலாகாக்களுக்கு ஸ்தாபனங்கள் இருப்பதுபோல், 'நகர நிர்வாக ஸ்தாபனம்' என்று ஒன்று தேவைதான். ஆனால் ஒப்புக்கு, ஏதோ சிலரின் வசதிக்கும், பெருமைக்கும், பலம் பார்ப்பதற்கும் என்கிற மாதிரியில் இல்லாமல்—உண்மையிலேயே நகராட்சி சபையாக நகரத்தைப் பொறுத்தமட்டில் போலீஸ், நிதி, பொதுநிர்வாகம் போன்ற ஸ்தாபனங்கள் போல—ஒரு நிர்வாக அதிகாரம் படைத்ததாக இருக்கவேண்டும் என்பேன்.

மற்றும், இந்த நகரசபைகள், நகர நிர்வாகத்திற்கு என்பதாக ஜனங்களிடமிருந்து தனிவரிகள் வாங்கக் கூடாது; அது நகர மக்களுக்குத் தொல்லையாகும். தனிவரி இல்லாமல் நிர்வாகம் நடைபெறவேண்டும். அப்போதுதான் அதை 'நகர சுய ஆட்சி' என்று சொல்ல முடியும். அந்தந்த நகரத்தைப் பொறுத்தவரையிலும் நிர்வாக அதிகாரம் நகரசபைக்கும், ஜில்லாவைப் பொறுத்தவரை ஜில்லாபோர்டுகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். அப்படிப்



பூரண உரிமை, அதிகாரம் கொடுக்கப்பட்டால், நான் சொல்லுகிறேன்—ஜனங்களிடமிருந்து வரி வாங்காமலேயே ஆட்சியை நடத்திக்கொண்டு போக முடியும் என்று. எப்படி எனில், இரயில், தபால்-தந்தி, டெலிபோன், ரோட்டு விளக்கு, முதலியவைகளுக்கு வரி போடுகிறோமா? செலவுக்கு 'சார்ஜ்'—கூலி பெற்றுக்கொள்கிறோம்; அதிலும் இலாபம் பெறுகிறோம். ஆனால், வரி என்பதாக ஒன்றும் இல்லாமலே அவை நன்றாக இலாபத்தில் நடைபெறுகின்றன. அவைகளால் மக்களுக்கு வரிக் கஷ்டமே இல்லை.

அதாவது, வரி என்றால் அவரவர்களின் வருமானத்திலிருந்து வாங்கப்படுகிறது. வீட்டுவரி, தொழில்வரி, வருமானவரி, மற்றும் இதுபோன்ற வரிகள் எல்லாம் ஜனங்கள் தங்கள் தங்கள் தொழிலைச் செய்து அந்தப்படி செய்த தொழிலில் வரும் இலாபத்தில் ஒரு பங்கை வரியாக சர்க்கார் நடப்புக்கு, செலவுக்குக் கொடுக்கிறார்கள். இந்த இலாபத்தில் பெரும்பகுதி தனிப்பட்டவர்கள் அடைகிறார்கள் என்பதுதானே! இப்படி நகர பொது ஜனங்களிடம் இருந்து மற்ற தனிப்பட்டவர்களைச் சம்பாதிக்கவிட்டு, அந்தப்படி சம்பாதித்த சம்பாதனையிலிருந்து வரி வாங்குவது என்பதற்குப் பதில்—இப்படி வருவாய் உள்ள தொழில்களைப் பூராவும், அதாவது மில்கள், ஜவுளிக் கடைகள், நாடகம், சினிமாக் கொட்டகைகள், பஸ் மற்றும் இதுபோன்ற தொழில்களை சர்க்காரே ஏற்று இரயில், தந்தி, தபால், விளக்குபோல் நடத்தினால்—இவைகளின் பூரா இலாபமும் இன்று தனி மனிதனுக்குப் போய்ச் சேர்ந்து, அவனுடைய சொத்துக்கு சுகவாழ்வுக்கு, தேவைக்குப் பயன்படுகிறது என்கிறதல்லாமல், நகரத்தின் பொதுவாழ்வுக்கு, பூரா இலாபமும் சேர்க்கப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்கு, பொதுநிலைமைக்குப் பயன்படாதா? இந்தப்படி செய்தால் இவைகளின் மூலம் வருகிற வருமானத்தின் மூலமாகவே ஜனங்களிடமிருந்து வரி வசூல் செய்யாமல் காரியங்களை நடத்தலாம். இப்படிச் செய்தால்தான் ஏதோ பயன்படுமே தவிர, சும்மா அவர்களின் வசதிக்கு. 'மைனர் வாழ்வுக்கு' 'இலட்சாதிபதி' 'கோடீஸ்வரன்' என்கிற தன்மைக்குப் போய்க்கொண்டிருந்தால் என்ன பிரயோசனம்?

இன்றைய நிலைமையில் சாதாரணமாக ஒரு ஊரில் வசூலிக்கப்படும் பணத்தின் பெரும் பகுதி—அதாவது விற்பனை வரி, வருமான வரி, மற்றும் இதுபோன்ற வரிகள், பெருத்த பண வருவாய் வரக்கூடியவைகள் எல்லாம் சென்னை சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் போய்விடுகின்றன. இவர்கள் வீட்டு வரியையும், விளக்கு, சாக்கடை வரியையும் வைத்துக்கொண்டு பணம் பற்றாமல், சென்னை சர்க்காரிடம் பல்லைக் காட்டிக், கெஞ்ச வேண்டி இருக்கிறது; அவர்கள் டெல்லி சர்க்காரிடம் பிச்சை கேட்கவேண்டி இருக்கிறது. இதோடு மட்டுமல்ல; பொதுமக்களும் மேற்கண்ட மூன்று பேருக்கு வரி கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்புறம் இலஞ்சம், 'மாமூல் வகையரா' இருக்கிறது. இப்படி இருப்பது என்றால், இது எப்படிச் சுதந்திரமுள்ள சுயராஜ்யம் என்று சொல்ல முடியும்? சுயராஜ்யத்தின் பேரால் சிலர் சர்வாதிகாரமாய், தங்கள் வசதிக்கு நடந்துகொள்வது; மற்றவர்கள் வேதனைப்படுவது என்கிற மாதிரி இருப்பது என்றால் என்ன நியாயம்?

மற்றபடி. நகர சபையார் இப்போதுள்ள அளவில் தங்கள் நகரத்தைப் பொறுத்தவரையில் முடிந்த அளவு சமுதாயத் தொண்டு புரியலாம். இன்று ஜனங்களிடத்தில் இருக்கிற மூடக் கொள்கைகள், அறிவுக்கு ஆராய்ச்சிக்கு நிற்காத நினைப்பு-நம்பிக்கை, உயர்வு-தாழ்வு பேதம் இவைகளைப் போக்கி மக்களை அறிவுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் ஆக்கும் சமுதாயத் தொண்டு புரியலாம். இதை அவர்கள் தங்கள் தங்கள் நகர மக்களுக்குச் செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அது நான் இன்று நகர மக்களுக்குத் தேவையானது.

[புதுக்கோட்டையில், 27-10 52-ல் சொற்பொழிவு—'விடுதலை' 31-10-1952, 2-11-1952]

படிப்பகம்

www.padippakam.com

# 5. கிராமச் சீர்திருத்தம்

## 1. கிராமச் சீர்திருத்தம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

கிராமம், நகரம் என்ற பேதத்தை முதலில் ஒழிக்க முயற்சிக்க வேண்டும். அந்தப் பேதம் கற்பித்து, கிராம மக்களை நகர வாசிகள் மிக இழிவாக நடத்தி வருகிறார்கள். நான் கேட்கிறேன், சென்னையைவிட ஈரோடு எந்த விதத்தில் குறைந்தது? இதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம் இருந்து வருகிறது? இரண்டும் தன்மையில் ஒன்றாகத்தான் இருந்து வருகின்றன. தனி சவுகரியங்கள் மட்டும் தனித்தனியாக இருக்கலாம். அது ஜனத் தொகை, பொருளாதார வசதி இவைகளைப் பொறுத்திருப்பது. இதனால் எப்படி ஒன்று மேலாகவும் ஒன்று தாழ்வாகவும் இருக்க முடியும்? அப்படி இழிவாக எண்ணுவதை ஒழிக்க வேண்டும். கிராமங்களை எல்லாம் ஒழித்து நகரமாக்க வேண்டும். நகர மக்களைப்போல் கிராம மக்களையும் சுகமனுபவிக்கச் செய்யவேண்டும். நகரம் போலவே வரிகள் விதித்து, பல திட்டங்கள் வகுத்து, பல சவுகரியங்கள் அனுபவிக்க வழி செய்யவேண்டும். இவற்றைச் செய்யாமல் கிராமங்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று கூறி வருவதால் ஒருவிதப் பயனும் ஏற்பட்டுவிடாது. நான் இன்னும் கூறுவேன்—'கிராமச் சீர்திருத்தம் என்னும் வார்த்தையே சூழ்ச்சியான வார்த்தை' யென்ற! கிராமச் சீர்திருத்தம் என்ற பேரால் இரண்டு மூன்று பேர்கள் கிராமங்களுக்குச் சென்று வீதி கூட்டி—இரண்டொருவருக்கு அரி, வரி என்று எழுதுப் படிப்பு சொல்லிக்கொடுத்து விடுவதால் கிராமம் சீர்திருத்தமாகிவிடுமா? இவையெல்லாம் கிராமவாசிகளை ஏமாற்றித் தாழ்மையாக்கி இழிவு செய்வதென்றே நான் கருதுகிறேன்.

மற்றும், கிராமம்—நகரம் என்று பிரித்துக் காட்டுவதே வருணாசிரம முறைப்படியே தான். சமதர்மம் பேசுகின்றவர்களே கிராமம்—நகரம் என்ற பிரிவினை இருக்கவேண்டு மென்று பிரச்சாரம் செய்கிறார்கள்.

தோழர் காந்தியார் சில வருடங்களுக்கு முன் ஒரு சமஸ்தான கிராம வாசிகள் இடையில் பேசும்போது கீழ்க்கண்டவாறு பேசியுள்ளார்: 'கிராம மக்களாகிய உங்கள் கையில் வெள்ளிக் காசுகள் இருக்கக்கூடாது; நகரத்திலுள்ளவர்களுக்கு ஊழியம் செய்யவே உங்களைக் கடவுள் படைத்திருக்கிறார். ஆகலால், நகரத்திலுள்ள மக்கள் சவுகரியமாக வாழும்படி அவர்களுக்குப் பால், நெய், காய்கறி, செருப்பு ஆகியவைகள் தயார்செய்யும் ஊழியம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.' இதிலிருந்து காங்கிரஸ்காரர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சிந்தியுங்கள்.

கிராமம் நகரம் என்ற வித்தியாசம் தொழில் முறையாலும் விளையாட்டுமுறையாலும் இருக்கிறது. இம் முறையை மாற்றவேண்டும். இந்த முயற்சியை சர்க்காரே எடுக்க வேண்டும்; இதற்காகப் பணமில்லை என்று கருதவேண்டாம்.

இதற்கு வழி செய்யலாம். திருவிழாக்களால் ஒரு கிராமத்தில் எவ்வளவு செலவாகி வருகிறது! வக்கீல்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் கிராமத்தார் எவ்வளவு அழுகிறார்கள்! அதனால் எவ்வளவு சுகாதாரக் கேடுகள், ஒழுக்கக் கேடுகள், மக்களுக்குப் பண விரயங்கள் ஏற்படுகின்றன! அவைகளைப் போக்க சர்க்கார் வழிகளைச் செய்யவேண்டும். உதாரண மாக, கோட்டை மாரியம்மன் திருவிழாவை எடுத்துக்கொள்ளுங்கள். அதனால் மக்களுக்கு ஏதாவது நன்மை உண்டாகிறதா? இதைவிட விவசாயக் கண்காட்சிகளை ஏற்படுத்தி விவசாயம் செய்யும் விதம், எப்படி—எப்படி விவசாயம் செய்தால் பலன் முன்னேறும்—விவசாயம் பெருகுவதற்கு விவசாயிகள் செய்யவேண்டிய வேலைகள் ஆகியவைகளைப் பற்றி மக்கள் நன்கு உணருமாறு காட்டவேண்டும். அதுபோலவே, சுகாதாரக் கண்காட்சி



களை ஏற்படுத்தவேண்டும். அந்தக் கண்காட்சி மூலம் கிராம மக்கள் எவ்வாறு சுகாதார முறைப்படி இருக்கவேண்டும் என்பதைப்பற்றியும் திருவிழா முதலிய இடங்களில் சுகாதார முறைக்கு விரோதமாக நடப்பதைப்பற்றியும் விளக்கவேண்டும். அதுபோலவே, கூட்டுறவு வியாபார முறைகளால் ஏற்படும் நன்மைகளைப்பற்றியும், அந்த முறையல்லாது—வியாபாரிகள் ஒழுங்கான முறையில் வியாபாரம் செய்யாது மக்களை ஏமாற்றுவதைப்பற்றியும் மக்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். தொழிற் காட்சி வைத்து இயந்திரத் தொழில், கைத்தொழில் முறைகளை விளக்கவேண்டும். இவைகளை சர்க்காரே செய்யவேண்டும். இதனால் வரி உயர்ந்தாலும் மக்கள் கவலைப்படமாட்டார்கள்.

[ஈரோட்டில், 18-9-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 22-9 1940]

## 2. கிராமங்கள் ஒழிய திட்டம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

நான் 'பழமை', 'வழமை' பெரியோர் கருத்து, சாஸ்திரம், ஆதாரம் என்பவைகளைக் கண்மூடிப் பின்பற்றாத ஒரு பகுத்தறிவுவாதி என்று சொல்லப்படுபவன். நானும் என்னைப் பொதுவாக ஒரு சீர்திருத்த உணர்ச்சி உள்ளவன் என்று உரிமை பாராட்டிக் கொண்டாலும், என்னுடைய சீர்திருத்தம் என்பதானது பழைய அமைப்பு, மத அடிப்படை என்பவைகளைக்கூட இலட்சியம் செய்யாமல், அனேக காரியங்களை அடியோடு அழித்து நிர்மாணிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவன். இதனால் என்னை நாச வேலைக்காரன் என்று பலர் சொல்லும்படியானவனுமாவேன். நாடகத்தில் நகைச்சுவை என்பதின்மூலம் எப்படித் தலைகீழான, வெறுப்பான, பல மாறான கருத்துக்களைக் கண்டு உடல் துடிக்காமல் அவைகளை நகைத்துக்கொண்டு அனுபவிக்கிறோமோ, அதுபோல் நான் சொல்லுவதைச் சற்று கவனமாகக் கேட்டு, நகைச் சுவையாய் அனுபவித்து, வீட்டுக்குச் சென்று நடுநிலையில் இருந்து ஆலோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். ஆத்திரப்படாமல் ஆலோசனையில் இறங்கினால்தான் நல்ல முடிவு கிடைக்கும்.

எனது கிராமச் சீர்திருத்தத் திட்டம் என்பது என்ன என்றால், நாட்டில் கிராமங்களே எங்கும் இல்லாமல் அவற்றை ஒழித்து விடுவதேயாகும். அது மாத்திரமல்லாமல், கிராமங்கள் (Villages) என்கின்ற வார்த்தை அகராதியில் கூட இல்லாதபடி செய்து விடவேண்டும். அரசியலிலும் கூட கிராமம் என்கின்ற வார்த்தை இருக்கக்கூடாது என்றே சொல்லுவேன். கிராமம் என்கின்ற எண்ணத்தையும் பெயரையும் அதற்கு ஏற்ற பாகுபாட்டையும் பாகு பாட்டு முறையையும் வைத்துக்கொண்டு நீங்கள் என்னதான் கிராமச் சீர்திருத்தம் செய்தாலும், 'பறையன், சக்கிலி' என்பவர்கள் எப்படி 'அரிசனன்' ஆனானோ அது போலவும் 'ஆதித் திராவிட'னானானோ அதுபோலவுந்தான் மாற்றம் ஏற்படுமே ஒழிய, பறையன் மற்ற மனிதர்களைப்போல மனிதனானான் என்கின்ற மாற்றம் எப்படி ஏற்படாதோ அது போல, கிராமச் சீர்திருத்தம் செய்யப்படுவதால், 'நல்ல கிராமம் ஆயிற்று' என்றுதான் ஏற் படுமே ஒழிய மற்றபடியான நகரத்தன்மையும், நகர மக்கள் அனுபவிக்கும் உரிமையும் அனுபவிக்க முடியவே முடியாது. ஏனெனில், நகரத்தின் அமைப்பும் அவசியமும் வேறு; கிராமத்தின் அமைப்பும் அவசியமும் வேறு.

எப்படியெனில், கிராமம் என்கின்ற வார்த்தையே இன்று மனித சமுதாயத்தில் எப்படி பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற வருணாசிரம தர்ம முறையில் பஞ்சமன் இருக்கின்றானோ, அது போல்தான் 'ஊர்' தன்மையில்—'ஊர் வரிசை'யில் பஞ்சமன் நிலையில் கிராமம் இருக்கின்றது.

வருணாசிரமத்தின் கருத்து என்ன? ஒருவன் மேல் சாதி, இன்னொருவன் கீழ் சாதி; ஒருவன் பாடுபடுவதற்காக இருக்கவேண்டியவன், மற்றொருவன் சரீரப்பாடுபடாமல்

படிப்பகம்

www.padippakam.com



வாழ்வதற்காக இருக்கவேண்டியவன்; ஒருவன் உழைக்க வேண்டியவன், மற்றொருவன் அந்த உழைப்பை அனுபவிக்க வேண்டியவன். இதைத் தவிர, வருணத்தின் தத்துவம் என்ன? உதாரணம் என்னவென்றால், 'முதல் மூன்று வருணத்தார் வாழ்வுக்காக நான்காவது அய்ந்தாவது வருணத்தானைக் கடவுள் சிருஷ்டித்தார்.'

'ஆகையால், நான்காவது அய்ந்தாவது வருணத்தார் முதல் மூன்று வருணத்தாருக்குத் தொண்டு செய்து திருப்தி செய்வதன் மூலம் மோட்சமடைய வேண்டுமே ஒழிய நேரே மோட்சத்தை அடையக் கருதக்கூடாது.'

'நான்காவது அய்ந்தாவது வருணத்தான், பணம் காசு கையிலே வைத்திருந்தால் முதல் வருணத்தார் அவற்றைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொள்ளலாம். முதல் வருணத்தார்தான் படிக்கலாம்; நான்காவது, அய்ந்தாவது வருணத்தார் படிக்கக்கூடாது. படித்தால், உலகம் நடைபெறாது' என்பது போன்ற மனுதர்ம முறைப்படிதானே—அனுபவத்தில், கிராமத்திற்கும் நகரத்திற்கும் 'வருணமுறை ஊர் தர்மம்' இருந்து வருகின்றது! இது உண்மையா, இல்லையா என்று யோசித்துப் பாருங்கள்!

கிராமம் என்றால் என்ன? அதில் பள்ளிக்கூடம் இல்லை; ஆஸ்பத்திரி இல்லை; டிராமா இல்லை; பார்க்கு இல்லை; நீதிஸ்தலம் இல்லை; போலீஸ் காவல் இல்லை; நல்ல ரோடு வசதியில்லை; விளக்கு இல்லை; நல்ல தண்ணீர் இல்லை; உயர்ந்த நாகரிகம் என்பது இல்லை. பெரும்பாலும் வயிற்றுக்கு ஆகாரம் சம்பாதிப்பதைவிட, வாழ்வு ஆசைக்குப் பணம் சம்பாதிக்கும் வசதி இல்லை, ஓய்வு இல்லை; புத்தியைச் செலவழித்து முற்போக்கடைய வழி இல்லை. இப்படி இன்னும் பல வசதிகள் (நகரத்தானுக்கு இருப்பவைகள்) கிராமத்தானுக்கு இல்லை என்பதல்லாமல் கிராமம் என்றால் வேறு என்ன?

ஆனால், 'நகரங்களுக்கு ஆதாரம் கிராமங்கள்தாம்' என்று சொல்லப்படுகின்றது. சொல்லுவது மாத்திரமல்லாமல் கிராமத்தாரின் உழைப்பும், உழைப்பில் ஏற்பட்ட விளை பொருளும், உற்பத்திப் பொருள்களுமே நகரத்தார் அனுபவிக்கவும், நகரத்தார் செல்வவான்களாக ஆகவும், அரசாங்கம் நடக்க வரி கொடுக்கவும், அரசாங்கம், நகரமக்கள் ஆகியவர்கள் மாத்திரமல்லாமல்—கடவுள்கள் கோவில்கள்கூட அங்கிருப்பவர்களும் சேர்ந்து தேவஸ்தான சட்டப்படி ஒழுங்காய்ச் சகல இன்பங்களும் அனுபவிக்கவும் வசதியாக இருந்து வருகின்றன.

உதாரணமாக, லேவாதேவிக்கு வட்டி கொடுத்து வரும் கிராமங்களான—நஞ்சை, புஞ்சை நில வசதிகளுள்ள—நீர்ப்பாசனமும் பருவம் தவறாமல் மழை பெய்யும் கொழுத்த நீர்வசதியும் உள்ள நிலப்பரப்புக்கு மத்தியில் உள்ள கிராமங்களின் நிலைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் பொட்டல் காடு, கானல் காடு, பாலைவனங்கள் ஆகியவைகளில் குடியிருக்கும் லேவாதேவித் தொழிலாளர்களான நாட்டுக்கோட்டையார், மார்வாடிகள் ஆகியவர்கள் வீடுகள் எப்படி இருக்கின்றன? அவர்கள் வாழ்க்கை நிலைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் பாருங்கள்! இதற்குக் காரணம் என்ன? இது வருணாசிரம தர்ம முறையா அல்லவா? யோசித்துப் பாருங்கள்! மற்றும் பாடுபட்ட மிராசுதார், குடியானவன் ஆகியவர்களின் வீடுகள் எப்படி இருக்கின்றன? இவர்களிடம் சரக்கு வாங்கி விற்ற நகர வியாபாரிகள் வீடு, அவர்களது வாழ்வு எப்படி இருக்கின்றன பாருங்கள்.

கிராமத்தானுக்குக் கல்வி இல்லாமல் இருந்தால்தானே—பயிரிட்டு, உழைத்து, அறுத்து, மூட்டையாகத் தைத்து, வண்டியில் போட்டு நகரத்துக்கு அனுப்பிவிட்டு, சாவியாய்ப்போன தானியத்தை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய், கஞ்சியாகக் காய்ச்சி, கலயத்தில் ஊற்றி, பிள்ளை குட்டிகளைச் சுற்றிலும் உட்கார வைத்துக்கொண்டு, 'இன்று, கடவுள் நமக்கு இவ்வளவு கொடுத்தார்' என்று வாழ்த்துப்பாடி, எருமை மாடு தவிட்டுத் தண்ணீர் குடிப்பதுபோல் வயிறுமுட்டக் குடிக்க முடியும்! அதோடு அவன் திருப்தியடையவும் முடியும்!



அப்படி இல்லாமல், கிராமத்தானுக்குக் கல்வி கொடுத்து விட்டால், 'நாம் உழைக்கிறோம், நாம் விளைவித்தோம், நாம் உருப்படி பண்ணினோம்; அப்படியிருக்க நாம் கஞ்சி குடிப்பதும்—உழைக்காதவன் தறித்துப் புடைத்து ஆக்கிப் படைத்துக்கொண்டு இப்படித் தொப்பை வெடிக்க அமுக்குவானா?' என்கின்ற எண்ணம் ஏற்பட்டுவிடாதா? அதனால்தான், கிராமம் ஒரு 'பஞ்சமனுடைய' நிலையில் வைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையை நிலைக்கவைக்க, 'கிராமச் சீர்திருத்தம்' என்கின்ற பித்தலாட்டப் பெயரை வைத்துக்கொண்டு ஒரு கூட்டம்—அதுவும் வருணாசிரம தர்மத்தில் மேல்படியில் இருப்பவர்கள் சீர்திருத்தக்காரர்களைப் பார்த்து—'கிராமத்திற்குச் செல்லுங்கள்' (Go to the Village!) என்று வாயில் கத்திக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை அன்றைக்கு வியாபாரத்திற்கும் வக்கீல் வேலைக்கும் (கட்சிக்காரர்களைச் சேர்க்கும் நோக்கத்தோடு) கிராமங்களுக்குச் சென்று, விளக்குமாற்றால் (துடைப்பத்தால்) ஒரு வீதியைக் கூட்டிவிட்டு, அதற்கு ஒரு பஜனைப் பாட்டைப் பாடி, ஒரு கூடையில் அக் குப்பையை வாரித் தூக்கிக் கொண்டு போய் நத்தத்தில் கொட்டிவிட்டு, ஒரு சிறு பிரசங்கம்—'இராமாயணத்தில் இராவணக் கொடுமையும், அனுமன் பெருமையும்' பற்றிப் பேசிவிட்டு வந்துவிட்டால், கிராமம் சீர்பட்டு விடுமா என்று யோசித்துப் பாருங்கள்.

கிராமம் என்ற ஒன்று—ஒரு குப்பைக்காடு—எதற்காக இருக்கவேண்டும்? ஆடு, மாடு, எருமை மேய்ப்பதும்; அவைகளைக் காப்பாற்றி பால், தயிர், நெய், மோர் உற்பத்தி செய்வதும் கிராமத்தான். அவ்வளவையும் அனுபவிப்பது நகரத்தான். இதற்கு என்ன ஆதாரம்? கிராமவாசி கிராமத்தில் இரவு 3 மணிக்கு எழுந்து, மாட்டுக்குத் தண்ணீர் வைத்து, கொட்டத்தைக் கூட்டிச் சுத்தம்செய்து, 4 மணிக்குப் பால் கறந்துவிட்டு, கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டு, 5 மணிக்குப் புறப்பட்டு—3, 4, 5 மைல் நடந்து 6 மணிக்கு வந்து, நகரத்து மக்களை, 'அய்யா, பால்காரி நான்!' என்று சொல்லிக் கதவைத் தட்டி எழுப்பிவிட்டுப் பால் ஊற்றி விட்டுப் போகிறார்கள். தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு பால், நெய் ருசியே தெரியாமல் செய்துவிடுகிறார்கள். இதற்கு 'நகரத்தார்' பணம் கொடுக்கிறார்கள் என்பது உண்மைதான். கிராமத்தான் கையில் கிடைத்த இந்தப் பணம்தான் என்ன ஆகிறது? போலீசுக்கு ஒரு பங்கு; முனிசிபல் சிப்பந்திகளுக்கு ஒரு பங்கு; கள்ளுக் கடைக்கு ஒரு பங்கு போனது போக கனமாக ஏதாவது மீதி இருந்தால் அது வக்கீலுக்கும், அதிகாரிகளுக்கும் போகிறது.

நல்ல பெரிய விவசாயி என்பவனும் கிராமத்தில் இருந்தால் இதுபோல்தான். கிராமத்தான் பாடுபட்டுப் பயிராக்கி, தானியமாக்கி நகரத்துக்குக் கொண்டுவந்தால் நகர வியாபாரி, கிராமத்தானின் பயிர் செலவு, மூட்டுவழிச் செலவுக்குக்கூடப் பத்தும் பத்தாமல் கணக்குப் போட்டு விலை பேசி, ஒன்றுக்கு ஒன்றேகாலாக ஏமாற்றி அளந்து வாங்கிக் கொண்டு, மொத்தக் கிரயத்தை 'தரகு, மகிமை, சாமி காசு, நோட்டு வட்டம், வாசல்காரிக்கு, கலாஸ்காரனுக்கு வெற்றிலைப் பாக்குச் செலவு' என்றெல்லாம் பல செலவுக் கணக்குப் போட்டுப் பிடித்தம் செய்துகொண்டு, மீதி ஏதோ கொஞ்சம் கொடுக்கிறான். பணத்தை மொத்தமாகக் கண்டறியாத கிராம விவசாயி 'தன்மீது கருணை வைத்துக் கடவுள் இவ்வளவு ரூபாய் கைநிறையக் கொடுத்தார்' என்று கருதிக்கொண்டு வாங்கி, துணியில் முடிந்து கொண்டு, காப்பி சாப்பிட்டு சினிமா பார்த்துவிட்டு ஊருக்குப் போகிறான். வியாபாரியோ இந்தச் சரக்கை வாங்கி, இருப்பு வைத்து, அதிக விலை வரும்போது விற்று, இலாபமடைந்து இலட்சாதிபதியாகி, மாடமாளிகை கட்டிக்கொண்டு—கிராமவாசியை வண்டி ஓட்டவும், மாடுமேய்க்கவும் வீட்டு வேலை செய்யவும், உடம்பு பிடிக்கவும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறான்.

சர்க்காருக்கும் கிராமவாசிகள் என்றால் கசாப்புக் கடைக்குப் போகும் ஆடுகள் போலக் காணப்படுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே, கிராமம் என்பது தீண்டப்படாத மக்கள் நிலையில்தான் இருந்து வருகின்றது; கிராமத்தார் அல்லாத மற்றவர்களுக்கு உழைப்பதற்கு ஆகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு கிராமத்தை எவ்வளவு சீர்திருத்தினாலும் கிராமம், 'சூத்திரன்—தீண்டப்படாத சாதியான்' நிலையில்தான் இருக்கும்.

எனவே, சமுதாயத்தில் மக்கள் மனிதத் தன்மை பெறவேண்டுமானால் பிராமணன் என்று ஒரு சாதியும், பறையன் என்று ஒரு சாதியும் அடியோடு இல்லாமல், மனிதன் என்கின்ற ஒரு சாதிதான் இருக்கவேண்டும் என்று எப்படிக் கருதுகிறோமோ அதுபோல், ஊர்களிலும் பட்டணம், நகரம் என்று சில ஊர்களும், கிராமம்—குப்பக்காடு என்று பல ஊர்களும் இல்லாமல் பொதுவாக ஊர்கள்தான் இருக்க வேண்டும் என்று ஆக்கப்பட வேண்டும்.

வருணாசிரம தர்மத்தைப் போல்தான் கிராமங்களும் என்பதற்கு மற்றொரு உதாரணம் பாருங்கள்! ஜனத்தொகைப்படி 100-க்கு 90 பேர்கள் நான்காவது அய்ந்தாவது வருணத்தார்கள்; 10 பேர்கள்தான் மேல் வருணத்தார்களாக (முதல் மூன்று வருணத்தார்களாக) இருப்பார்கள். 'அதுபோலத்தான் மொத்த ஊர்களில் 100-க்கு 90-க்குமேற்பட்ட ஊர்கள் கிராமங்களாக இருக்கின்றன. அதாவது, இந்தியா பூராவும் 7 இலட்சம் கிராமங்கள். ஆனால், பட்டணங்கள் நகரங்கள் 75,000 கூட (100-க்கு 10 கூட) இருக்காது.

மற்றும் பார்க்கப்போனால் பட்டணத்தில் உள்ள ஒரு கைவண்டி இழுப்பவன், ஒரு கோர்ட்டு பியூன், ஒரு பிச்சை எடுக்கும் புரோகிதன், மணியாட்டும் அர்ச்சகன், ஆகிய இவர்கள் பிள்ளைகள்—S.S.L.C., B.A., இஞ்சினியர், டாக்டர், I.C.S. கூடப் படிக்க முடிகின்றது. ஆனால், கிராமத்தில் 100 ஏக்கரா, 200 ஏக்கரா உள்ள குடியானவன் மகன்கூட எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமானால்—வரும்படியில் பகுதி செலவாகிறது. ஏழைக் குடியானவன் மகனுக்கு நடக்கத் தெரிந்ததும், மாடு மேய்க்கவேண்டியதாகத்தான் முடிகிறது. பட்டணங்களில் இருப்பதால் ஒரு கக்கூசு எடுப்பவர், வீதி கூட்டுபவர் குழந்தையும் கட்டாயமாகப் படித்து ஆகவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போடும்; இலவசப் பள்ளியும் வைக்கும். ஆனால், கிராமத்தான் தன் மகனைப் படிப்பிக்க நகரத்துக்கு அனுப்பவேண்டும். அங்கு மேற்பார்வை இல்லாமல் சிகரெட்டு, பீடி, 'டாடி', 'பிராண்டி' குடித்து நாசமாக வேண்டும்—இதற்கு அர்த்தம் என்ன?

இவ்வளவு சங்கதிகள் ஏன்? ரேஷனை எடுத்துக்கொள்ளுங்கள். பட்டணத்திலே இருப்பவர்கள், கடவுள்களுக்கு நாட்டுக்கோட்டையார் படி அளப்பதுபோல், ஆளுக்கு இவ்வளவு என்று சர்க்காரால் அளவு அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தாருக்கு, அதுவும் தானியங்களை உற்பத்தி செய்யும் கிராமத்தார்களுக்கு ரேஷன், 'கடவுளிடம்தான்' ஒப்படைக்கப்பட்டு விட்டது. 'கடவுள்'தான் அவர்களுக்குப் படி அளக்கவேண்டும்; அதாவது, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி நகரத்தானிடம் திருட்டுத்தனமாய் வாங்கிக் கொண்டு போகிறார்கள். பாடுபட்டு விளைவித்ததைக் கொண்டுவந்து வியாபாரியிடம் கொடுத்துவிட்டு—அதுவும் திருட்டுத்தனமாக வாங்கிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது.

மேலும், நகர வாழ்க்கை—நகரத்தில் இருந்தால் 100-க்குத் 90-க்கு மேம்பட்ட மக்களுக்கு உடலுழைப்பு இல்லாத சுகவாழ்வு வாழமுடிகின்றது. கிராம வாழ்வு—கிராமத்தில் இருந்தால் 100-க்கு 90 பேர் உடலுழைப்பு வேலையே செய்தாக வேண்டும். அவர்களுக்குள் ஒரு சிறு தகராறு, சண்டை விவகாரம் ஏற்பட்டாலும், விவகாரப் பெறுமானத்தை விட அதிகமாகச் செலவு செய்து, நகரத்துக்குப் பல தடவைகள் நடந்து, நீதி பெற வேண்டும். இதன் பயனாய் போக்கிரிக்கும் செல்வானுக்கும் அடங்கி வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.



தந்தை பெரியார் அவர்களுடன், தமிழகக் கல்வி அமைச்சர் டாக்டர் வி. ஆர். நெடுஞ்செழியன். (1973)

(நவம்பர்–1973)

படிப்பகம்

www.padippakam.com



தந்தை பெரியார் அவர்களுடன்—இந்நூல் வெளிவரத் துணைபுரிந்த அமைச்சர் திரு. என். வி. நடராசன்.
(நவம்பர்–1973)

படிப்பகம்

www.padippakam.com



விவசாயம் 200 வருஷ காலத்திற்கு முன் இருந்த மாதிரிதான் இன்றும் இருக்கின்றது. அதில் நீர்ப் பாய்ச்சல் வசதி, நீர் நிலை, தேக்கம் ஆகியவை ஏற்பட்டு சில நிலங்களுக்குப் புதிதாய் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டது என்பதல்லாமல்—விவசாயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. சர்க்காரின் விவசாய இலாக்காவானது சில பேருக்கு உத்தியோகத்தைத்தான் கொடுத்தது; அதுவும் விவசாயத்தைத் தொழிலாகக் கொள்ளாத பரம்பரைக்கே பெரிதும் உத்தியோகமாய் முடிந்தது என்பதல்லாமல் மற்றபடி விளைபொருளில் மாறுதல் இல்லை. விளைவு அளவில் கூடுதல் இல்லை; விவசாய முறையில் மாற்றம் இல்லை; விவசாயிகள் விளைபொருளின் சரியான விலையை அனுபவிக்க வழியில்லை; விவசாயி விவசாய ஞானம் பெற வழியில்லை. விவசாயிகள் விஷயத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்ட மற்ற முயற்சி என்ன என்று பார்ப்போமானால், மேல்நாட்டாரைப்போல் இந்நாட்டு விவசாயிகள், எல்லோரும் படித்த மக்கள் என்று கருதிக்கொண்டு, அவர்களுக்கு அறிவுறுத்தத் துண்டுப் பிரசுரம் மூலம் சில முறைகள் கையாண்டார்கள் என்பதைத் தவிர, அவர்கள் பெரும்பாலோர் படிப்பும் நாகரிகமும் இல்லாதவர்களாகப் பட்டணங்களுக்கு வெகு தூரத்தில் இருக்கிற—நாகரிகமும், பகுத்தறிவும் அற்ற மக்கள் என்கின்ற எண்ணமே இல்லாமல் அவர்களுக்கு நலம் செய்யும் வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள்.

உண்மையில் கிராமங்களைச் சீர்திருத்த வேண்டுமானால் நான் சொல்லப்போகும் முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டும். விவசாயம் உடலுழைப்பில் நடைபெறுவதை மாற்றி, அதை ஒரு தொழில் முறையாக, அதுவும் இயந்திரத் தொழில் முறையாக (Industrial) ஆக்கிவிட வேண்டும்.

உழுவதும், விதைப்பதும், அறுப்பதும், இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும். கிணறு வெட்டுவதும், தண்ணீர் இறைப்பதும் பாய்ச்சுவதும் இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும்.

அந்த அளவுக்குப் பூமிகளைத் திருத்தி இணைக்கவேண்டும்; அதற்குப் பயன்படாத பூமியைத் தனிப்படுத்தி அடிக்கடி பாடுபடவேண்டிய அவசியம் இல்லாத பயிர் செய்ய வேண்டும்.

விளைபொருளால் ஆக்கப்படும் பண்டங்களை ஆங்காங்கே விவசாயிகளால் கூட்டுறவு முறையில் ஆக்கப்பட்டு, அந்தப் பயன் விவசாயிகளுக்கே கிடைக்கவேண்டும்.

பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக ஆக்கி, அதில் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பார்க்கு, சினிமா, டிராமா, தமாஷ் அறை, வாசகசாலை, ரேடியோ ஒலிபெருக்கி நிலையம், நல்ல ரோடு, கால அளவுப்படி போக்குவரத்துள்ள பஸ் ஸ்டாண்டு, போலீஸ் ஸ்டேஷன், நன்றாய்ப் படித்த ஒரு நீதிபதி, சகல சாமான்களும் கிடைக்கத் தக்க கடைகள் ஆகியவற்றை ஏற்படுத்தவேண்டும்.

இயங்கும்படியான (சுற்றுப்பிரயாண) கண்காட்சிச் சாலைகள் அடிக்கடி பற்பல விதங்களில் ஊர்கள்தோறும் சுற்றிச்சுற்றி வரும்படியாகவும் ஆன காரியங்கள் செய்ய வேண்டும்.

ஆங்காங்கு அப்பீல் கோர்ட்டுகள், குறை தெரியும் அதிகாரிகள் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கு வாராவாரம் முகாம் போடவும் ஆன ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதோடுகூடவே அந்த இடங்களில் அவற்றிற்குத் தகுந்தபடி இயந்திரத்தால் செய்யப்படும் சிறுசிறு தொழிற்சாலைகளை நிறுவி, அவர்கள் வேறு ஊருக்குப் பிழைப்புக்குப் போகாதபடி பிழைப்பு ஏற்படுத்த வேண்டும்.

கிராமத்தான், பட்டிக்காட்டான், குப்பக்காட்டான் என்கின்ற பெயர் ஒரு மனிதனுக்கு ஏன் இருக்கவேண்டும்? அதுவும் பாடுபட்டு உழைக்கும் மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்? ஆதலால், அப் பெயர்கள் இல்லாமல் செய்யப்பட்டுவிட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



மேல்நாடுகளில் பெரும்பான்மைக் கிராமங்கள் நான் விரும்புகின்ற முறைப்படிதான் இருக்கின்றன. ஐரோப்பாவில் கிராமங்கள் என்ற நிலை இல்லவே இல்லை. இருந்த போதிலும், அது அந்த இடத்திற்கு ஏற்ற வாழ்வாய் இருக்கலாமே தவிர, 'பிராமணனுக்கு தொண்டு செய்வதற்கே கடவுள் சூத்திரர்களை, பஞ்சமனைப் படைத்தார் என்பது போல, 'நகரத்தார்கள் நல்வாழ்வு வாழ்வதற்கே கிராமங்கள் ஏற்பட்டன' என்கின்ற முறையில் கிராமங்கள் அங்கு இல்லை. அங்கு ஏதாவது ஒன்று இரண்டு கிராமங்கள் இருந்தபோதிலும் இங்கு இருக்கக்கூடாது என்று சொல்லுவேன்.

அப்படியானால், விவசாயம் யார் செய்வது, யார் பூமியைப் பயிர் செய்வது என்று கேட்கப்படலாம். இது, 'கக்கூசு' எடுக்கும் சக்கிலி, பறையர், ஒட்டர் என்பவர்களுக்குப் படிப்புக் கொடுத்து மேன்மக்களாக ஆக்கிவிட்டால், கக்கூசு எடுப்பவர்கள் யார் என்று கேட்பதுபோலக் கேட்கப்படுவதாகும். அதற்கு எனது பதில், 'அந்தத் தொழில்களை நாம் எல்லோரும் (எல்லா இடத்தில் உள்ளவர்களும்) விகிதாசாரம் பங்கு போட்டுக்கொண்டு செய்யவேண்டும்' என்பதுதான்.

கீழான தொழில், ஈனமான தொழில், கஷ்டமான தொழில், சரீர உழைப்பு அதிகமாகவும் பயன் மிக்க அற்பமாகவும், குறையாகவும், வாழ்வில் இழிவாகவும் இருக்கும்படியான தொழில் முறைகளை நாட்டில் இல்லாமல் செய்யவேண்டும். அதுதான் நாட்டு முன்னேற்றமாகும்.

கப்பல் கட்டி எவனோ ஒருவன் கோடீஸ்வரனாவது முன்னேற்றமாகாது. எங்கேயோ ஒரு இரும்புத் தொழிற்சாலை வைத்து யாரோ கோடீஸ்வரனானால் நாட்டுக்கு முன்னேற்றமாகாது.

நான் கூறுகின்ற முன்னேற்றம் செய்ய முடியவில்லையானால்—அதற்கு, அதாவது அப்படிப்பட்ட இழிவான, கீழான, பிரயாசையான வேலை செய்பவர்களுக்கு அதிக இலாபமும், சலுகையும், மேன்மையும் இருக்கும்படியான பிரதி பலன் அடையச் செய்யவேண்டும். இரசாயன முறை, விஞ்ஞான முறை, இயந்திர முறை முதலியவைகளைக் கையாண்டு— அவைகளைக் கிராமங்கள் என்பவைகளில் இருந்து தொடங்குவோமேயானால் இந்தப் பிரச்சினைகள் சுலபத்தில் தீர்ந்துவிடும். கிராமம் என்கின்ற பெயரும் நிலையும் தானாக மாறிவிடும்.

இதைப் பொதுவுடமை என்றோ, சமதர்மம் என்றோ முட்டாள்தனமாய்க் கருதாமல், முற்போக்கு என்ற முறையில் சிந்தித்தால்தான் இதில் உள்ள நியாயமும் உண்மையும் விளங்கும்.

[ஈரோட்டில், 30-10-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-11-1944]

பகுதி III

# வகுப்புரிமை

படிப்பகம்

www.padippakam.com

# 1. வகுப்புரிமை

## 1. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

வகுப்புவாரி உரிமைபற்றிக் கொஞ்ச காலத்துக்கு முன்பு நமது 16-8-1925 'குடி அரசு' இதழில், 'சித்திர புத்திரன்' எழுதிய ஒரு கட்டுரையை வாசகர்கள் பார்த்து இருக்கலாம். இன்று நடக்கப்போகும் காஞ்சி மாநாட்டில் ஒரு தீர்மானம் வருகிறதாய்த் தெரிகின்றபடியால், அதன் அவசியத்தைப்பற்றி வாசகர்கள் மறுபடியும் அறியுமாறு சில வாக்கியங்கள் எழுதுகின்றோம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஒரு தேசத்தின், ஆட்சியின் பொது உரிமையும், அந் நாட்டின் குடிமக்களின் உரிமை சகலமும் எல்லா வகுப்பாரும் ஏற்றத் தாழ்வின்றி சமமாய் அடையவேண்டியதென்பதுதான். இதை அரசாங்கத்தாரும் குடிமக்களுக்குச் சரியாய் வழங்குவதாய் 1840-ம் வருடத்திலேயே ஒப்புக்கொண்டு (போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 125 மூலமாய்) வெளியிட்டுமிருக்கிறார்கள். ஆதலால், இந்தியர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் ஏற்பட்டதன் பிறகோ, சீர்திருத்தங்கள் ஏற்பட்டதன் பிறகோ. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற பேச்சு பிறந்ததல்ல. ஆனால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டால் யாருடைய செல்வாக்கும், போகங்களும், ஆதிக்கங்களும் குறைந்துவிடுமோ, அவர்கள் வசமே அரசாங்கத்தின் ஆதிக்கமிருந்து, அவர்களே அனுபவித்துக்கொண்டே வந்ததினால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமென்பது சர்க்கார் உத்தரவளவிலும், காகித அளவிலும் நின்றுபோய்விட்டது. அதன் பலனாய் பிரிவுகளும், வேற்றுமைகளும், துவேஷங்களும், தந்திரங்களும், பகைமைகளும் வளர்ந்துகொண்டே வந்து, இப்போது அதுகள் பலனளிக்க ஆரம்பித்திருக்கின்றன. ஆரம்பித்து இருக்கும் முறையைப் பார்த்தால் இதனுடைய முடிவு என்னவாகுமோ என்று எண்ணுகிறபோது பயமாகவே இருக்கிறது.

இந்தியா ஒழிந்த மற்ற நாடுகளுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அதிக அவசியம் இல்லாதபோதிலும் சிற்சில இடங்களில் தொகுதிகள் பேராலும், வகுப்புக்களின் பேராலும் இருந்துகொண்டுதான் வருகிறது. குடியேற்ற நாடுகளிலும் இவ்வழக்கம் இருந்துகொண்டுதான் வருகிறது. நமது நாட்டில் சிலர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வந்தால் ஜனங்களைப் பிரித்துவிடும் என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டில் முகம்மதியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டதின் பிறகு என்ன பிரிவினை புதியதாய் ஏற்பட்டுப்போய்விட்டது? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 150 வருடங்களுக்கு மேலாகியும் இன்னமும் தீண்டாதாராகிய ஏழு கோடி மக்களுக்கு இராஜீய வாழ்வில் சுதந்திரம் பெற யோக்கியதையில்லையென்றுதானே சொல்லவேண்டி இருக்கிறது. அதன் பலனாய் அவர்கள் அத்தனை பேரும் அரசாங்கத்தைத்தானே நத்திக்கொண்டிருக்க வேண்டியதாய்ப் போய்விட்டது.

பிராமணரல்லாதார் என்னும் 24 கோடி இந்துக்கள் இராஜீய வாழ்வில் சம உரிமை பெறுவதற்கில்லாமல், பிற்போக்கான வகுப்பில் சேர்க்கப்பட்டு அரசாங்கத்தாரையும், பிராமணர்களையும் நத்திக்கொண்டுதானே இருக்கவேண்டியதாய்ப் போய்விட்டது; இதற்குக் காரணமென்ன? பிறவியிலேயே அவர்களுக்கு இவ்வுரிமையைப் பெற யோக்கியதை இல்லாததா? அல்லது, அவர்கள் இவ்வுரிமை பெறவொட்டாமல் உயர் பதவியிலிருக்கிறவர்கள் தங்கள் செல்வாக்கால் கொடுமைப்படுத்தி முன்னேறவொட்டாமல் அடக்கி வைத்திருப்பதா? குறைந்தது 50 வருடங்கட்கு முன்பாவது பிராமணரல்லாதாருக்கும் தீண்டாதா

படிப்பகம்

www.padippakam.com



ரென்போருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தால் இன்றைய தினம் இவர்களிருவரின் நிலைமையும் இப்படியிருக்குமா? ஸ்ரீமான்களான பி. என். சர்மாவுக்கும், சி. பி. இராமசாமி அய்யருக்கும் கொடுத்திருக்கும் உத்தியோகங்களை ஸ்ரீமான்களான எம். சி. இராஜாவுக்கும், ஆர். வீரய்யனுக்கும் கொடுத்தால் பார்க்கமாட்டார்களா? சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் இருக்கும் உத்தியோகத்தில் ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் இருந்தால் பாலக்காடு தெருவில் நடக்க 144 ஏற்பட்டிருக்குமா? கோயிலுக்குப் போனதற்காகத் தண்டனை அடைந்திருக்க முடியுமா? என்ன காரணத்தால் இவர்களுக்கு அந்த உத்தியோகம் கிடைக்காமல் போய்விட்டது? யோக்கியதை இல்லாததாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததாலா? ஜனாப் சர். முகமது அபிபுல்லா சாயபுக்கும், டாக்டர் முகமது உஸ்மான் சாயபு அவர்கட்கும் 5000, 6000 சம்பளம் கிடைக்கக்கூடிய பதவிகள் எப்படிக் கிடைத்தது? இப்பொழுதுதான் அந்த ஸ்தானத்திற்கு அவர்கள் யோக்கியதை உடையவர்களாகிவிட்டார்கள் என்கிற காரணத்தாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையின் வாசனையினாலா? இவற்றைப் பொதுமக்கள் சிந்தித்துப் பார்த்தால், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பார்கள் என்று கருதப்பட்டவர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் எப்படிச் சமத்துவம் ஏற்படும் என்பதை அறிவார்கள். இப்போது பிற்பட்ட வகுப்பார் என்று அழைக்கிற வகுப்பாரெல்லாம், பிரிட்டிஷார் நம் நாட்டுக்கு வரும்போது பிற்பட்ட வகுப்பாராகவா இருந்தார்கள்” பல பிராமணர்கள் அரசாங்கத்திற்கு அனுகூலமாயிருந்ததாலும் மற்றவர்கள் அப்படியில்லாததாலும் அரசாங்கத்தார் பிராமணர்களுக்கே சகல சவுகரியமும் உரிமையும் கொடுத்ததனால் பிராமணர்கள் முற்பட்ட வகுப்பாராகவும் பிராமணரல்லாதவர்கள் பிற்பட்ட வகுப்பார்களாகவும் ஏற்பட்டுப் போய்விட்டது.

இந்தப் பிற்பட்ட வகுப்பார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் வேறு எந்த வழியில் முற்பட்டவர்கள் ஆகக்கூடும்? இப்போது அவர்களுக்குப் புத்தி இல்லையா? சக்தியில்லையா? கல்வியில்லையா? ஏன் தங்கள் தொகைக்குத் தகுந்த உரிமை அடையாதிருக்கிறார்கள்? இந்தியர்கள் அனேக சாதியார்கள்; நாள் போகப்போக உரிமை வளர்ந்து கொண்டே போகும்; பிறகு எத்தனை பேருக்குக் கொடுப்பது? என்று சிலர் பேசுவார்கள். ஆனால், தற்காலம் அரசாங்கத்தில் தென்னாட்டில் அய்ரோப்பியர் ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர், முகமதியர், பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் என இவ்வெட்டு வகையாய்த்தான் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் அய்ரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர், முகமதியர் இவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தாய்விட்டது. இவர் நீங்கிய மற்றவர்களான பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் என மூன்று வகுப்பாரையும் முகமதியரல்லாதார் என்னும் பெயரால் அழைக்கப்பட்டு, அவர்களுக்கு மாத்திரம் வகுப்புவாரிப் பிரதிநிதித்தும் வழங்கப்படாமலிருக்கிறது. இம்மூன்று வகுப்பாருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்ட பிறகு, மறுபடியும் உள்வகுப்புக்கள் ஏற்படுமே என்கிற பயமிருக்குமானால் அதற்கும் நாம் தயாராயிருக்கவேண்டியதுதான். உத்தியோகங்களுக்குப் பெருத்த சம்பளங்கள் கொடுப்பதை நிறுத்திக் கொண்டோமேயானால் எத்தனை வகுப்புகளுக்கு வேண்டுமானாலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் நமக்குக் கஷ்டம் ஏற்படாது. மேல் நாடுகளில் பார்லிமெண்ட் முதலிய சபைகளுக்கு 500, 1000 என்கின்ற கணக்குள்ள மெம்பர்கள் இருந்து காரியம் நடத்தவில்லையா? அது செய்வது நமக்குக் கஷ்டமே இருக்காது. சண்டை வருவதெல்லாம் பெரும் சம்பளத்தை உத்தேசித்துத்தானே? சம்பளமில்லாத அதிகாரத்தை அனேகமாய் எல்லோரும் விரும்பமாட்டார்கள். ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கொள்ளமாட்டார்கள்; ஒருவரைக் கெடுக்க ஒருவர் தந்திரங்கள் செய்யமாட்டார்கள். தேசம் நம்முடையது என்கின்ற எண்ணமும் தேசத்தின் பொது நலத்திற்கு எல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும் என்ற எண்ணமும் தானாகவே ஏற்படும். இப்போது ஜனங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகள் ஒழியும். சர்க்காரும்



ஒருவரைவிட்டு ஒருவரைக் கொடுமைப்படுத்தச் சொல்லமுடியாது. ஆதலால், தேச நலத்திலும், சமூக நலத்திலும் அக்கறையுள்ளவர்கள் காஞ்சிபுரம் மாநாட்டில் வகுப்புவாரித் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுகிறோம்.

[‘குடிஅரசு’-அறிக்கை—22-11-1925]

## 2. ஆதி முதற்கொண்டே சூழ்ச்சி

காஞ்சிபுரம் மாநாடு நடந்து 2 வாரங்களாகிவிட்டது. மாநாட்டின் சம்பவங்களும் பழைய கதைகளாகி விட்டன. ஆனால், அம் மாநாட்டின் சம்பவங்களால் ஒவ்வொரு நிமிஷமும் புதிய எண்ணங்களே தோன்றிக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ராஜீய நாடகத்தில் பிராமணரல்லாதார்களின் சார்பாக, ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஆகிய இம்மூவர்களின் வேஷமும், விளம்பரங்களுந்தான் அடிக்கடி விசேஷமாய்த் தோன்றும். இம் மூவர்கள்தான் காங்கிரசில் பிராமணரல்லாதாருக்கு உள்ள பற்றுதலுக்கும், காங்கிரசைப் பிராமணரல்லாதார் ஆமோதிக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரமாய் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள்.

அது மாத்திரமல்லாமல், காங்கிரஸ் என்பது பிராமண ராஜ்யம் ஸ்தாபிக்கத்தகுந்த சாதனம் என்றும், சுயஆட்சி என்பது பிராமண ஆட்சிதான் என்றும் கருதிய பெரியார்களான டாக்டர் டி. எம். நாயர், ஸர். பி. தியாகராயச் செட்டியார் போன்ற தேசாபிமானமும், அனுபவமும் வாய்ந்த பல பெரியோர்களால் சொல்லி, காங்கிரசை ஒதுக்கி, தென்னிந்திய மக்கள் நலவுரிமைச் சங்கம் என்பதாக ஓர் சங்கத்தைக் கண்டு, அதன்மூலமாய் பிராமணரல்லாதார் நன்மைக்கென ஜஸ்டிஸ், திராவிடன் என்கிற இரண்டு பத்திரிகைகளையும் தோற்றி, தீவிரப் பிரச்சாரங்களைச் செய்து, அதுகாலையில் பிராமணர்கள் வயப்பட்டுக்கிடந்த பெருவாரியான பல அதிகாரங்களையும், பதவிகளையும் பிராமணரல்லாதார் தங்கள் உரிமைக்குத் தகுந்த அளவு அடையவேண்டும் எனக் கருதிப் பிரச்சாரமும் தொடங்கினார்கள்.

அச்சமயத்தில், மேற்படி சங்கமும் பிரச்சாரங்களும், தென்னிந்திய மக்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்றும், ஏதோ சிலர் அரசாங்கத்தின் வயப்பட்டு அவர்கள் தூண்டுகோலால் நடைபெறுகிற சங்கமென்றும், இதில் பிராமணரல்லாதார் கலந்து கொள்ளக்கூடாதென்றும், தென்னிந்திய பிராமணரல்லாத மக்களுக்கு நன்மை செய்யவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை அளிக்கவும் சென்னை மாகாணச் சங்கமென்பதாக ஒரு சங்கத்தைத் தோற்றுவித்திருக்கிறோம்; அதில் பிராமணர்கள் யாரும் கலப்பில்லை. அதன் தத்துவமே காங்கிரஸ் மூலமாகச் சுயராஜ்யம் பெறுவதும், பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறுவதும்தான் முக்கியமானது என்றும். அதின் அக்ராசனாதிபதி திவான் பகதூர் பி. கேசவப் பிள்ளையாகவும், உப அக்ராசனாதிபதி ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியோராகவும், காரியதரிசி ஸ்ரீமான் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களாகவும், இதற்குப் பிரசாரப் பத்திரிகைகள் ‘இந்தியன் பேட்ரியட்’ என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் ‘தேசபக்தன்’ என்கிற தமிழ்ப் பத்திரிகையையும், இவற்றிற்கு திவான்பகதூர் சி. கருணாகர மேனன், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியவர்கள் முறையே பத்திரிகை ஆசிரியர்களாகவும் இருந்து நடத்தி வரப்பட்டதோடு, இதன் பலனால் ஜஸ்டிஸ் கட்சிக்குப் பிராமணரல்லாத பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்கில்லாமல் செய்ததுடன், காங்கிரஸ்தான் தேச விடுதலைக்குச் சாதனமென்றும், சென்னை மாகாணச் சங்கம்தான் பிராமணரல்லாதாரின் நன்மையைக் கருதக்கூடியதென்றும் சென்னை மாகாணத்திலுள்ள பிராமணரல்லாத மேற்கண்ட முக்கியஸ்தர்கள்தாம் தென்னாட்டுப் பிராமணரல்லாதார் பிரதிநிதிகளென்றும் சொன்னது கிடைத்தாய் விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இதோடு மாத்திரமல்லாமல், தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரும் சென்னை மாகாணச் சங்கத்தாரும் போட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கூச்சல்களினால், கிறிஸ்தவர், முகமதியர், ஆங்கிலோ இந்தியர் முதலிய வகுப்பாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், விவசாயிகள், லேவாதேவிக்காரர், இந்திய வியாபாரிகள், அய்ரோப்பிய வியாபாரிகள் முதலிய தொழிலாளிகளுக்குத் தொழில்வாரிப் பிரதிநிதித்துவமும், தேர்தல்களில் கொடுக்கப்பட்டதோடல்லாமல், பிராமணரல்லாதாருக்கெனப் பல ஸ்தானங்களையும் ஒதுக்கி வைக்கப்பட அரசாங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இது இப்படி இருக்க, ராஜீய சபைகளான காங்கிரஸ் முதலிய சபைகளிலும் முகமதியர், கிறிஸ்தவர் முதலியோருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று அவர்களோடு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. இதுமாத்திரமேயல்லாமல் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலும், உதாரணமாக, எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் முகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம்; கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம்; தீண்டாதாருக்கு இத்தனை ஸ்தானம்; இவை நீங்கிய மற்றவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என மாகாண வாரியாக ஒதுக்கிவைக்கப்பட்டு, அந்தப்படி இப்பொழுது காங்கிரசிலும் அமுலில் நடந்து வருகிறது. இவ்வளவிருந்தும் மேலும் மேலும் இவை போதாதென்றும் இன்னும் சில ஸ்தாபனங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படவேண்டுமென்றும் ராஜீய காங்கிரசிலும், கான்பரன்ஸ்களிலும் கிளர்ச்சிகளும், முயற்சிகளும் செய்துகொண்டே வரப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, காக்கிநாடா காங்கிரசில் ஸ்ரீமான் தாஸ் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்ட 'கல்கத்தா பேக்டி'னாலும், (அது தோற்றத்திற்கும் ஒரு காரணம் உண்டு; ஆனால் இரகசியம்) டாக்டர் அன்ஸாரி, லாலா லஜபதிராய் முதலியோர்களை இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிகாண ஓர் ஏற்பாடு கண்டுபிடிக்கும்படி காக்கிநாடா காங்கிரசில் ஏற்படுத்திய கமிட்டியினாலும், அதன் குறிப்புகளினாலும் நன்றாய் விளங்கும்.

இன்னமும் தமிழ்நாட்டில் நடந்த மாகாண கான்பரஸ்களின் போதெல்லாம் நடந்த பிராமணரல்லாத தனிக் கூட்டங்களாலும் நன்றாய் விளக்கலாம். அதாவது:—

1919-ம் வருடத்தில் திருச்சியில் நடைபெற்ற 25-வது ராஜீய மாகாண கான்பரன்சின் போது, அதே கொட்டகையில் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரின் அக்கிராசனத்தின்கீழ் இதைப்பற்றிப் பேசி, ஈரோட்டில் சென்னை மாகாணச் சங்கத்தை நடத்தவேண்டுமென்றும், அதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு, அதுபோலவே தீர்மானமும் நிறைவேற்றியுமிருக்கிறது.

1920-ம் வருடம் திருநெல்வேலியில் நடந்த 26-வது ராஜீய மாகாண கான்பரன்சின் போது பிரதிநிதிகள் சாப்பாட்டு விடுதியில் ஸ்ரீமான் ஈ.வி. இராமசாமி நாயக்கருடைய அக்கிராசனத்தின்கீழ் 'பிராமணரல்லாதார் கூட்டம்' ஒன்று கூடி, 'சட்டசபைகள் முதலிய தேர்தல் ஸ்தானங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவதோடு, அரசாங்க உத்தியோகத்திலும் வகுப்பு ஜனசங்கைக்குத் தகுந்தபடி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்கிற தீர்மானத்தைக் காலஞ் சென்ற ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை, ஸ்ரீமான்கள் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணி பிள்ளை மற்றும் திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முதலிய ஸ்தலங்களிலுள்ள சில வக்கீல்களும் ஆகச் சேர்ந்து', உடனே விஷயாலோசனைக் கமிட்டிக்கு அனுப்பிய அத் தீர்மானத்தை—ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கர் பிரேரேபிக்க, ஸ்ரீமான்கள் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணி பிள்ளை முதலியோர்கள் ஆமோதிக்க, காலஞ் சென்ற ஸ்ரீமான் எஸ். கஸ்தூரி ரெங்கய்யர் எழுந்து விகிதாசாரம் (Percentage) என்கிற



வார்த்தைக்குப் பதிலாக 'போதுமான' என்னும் அர்த்தத்தைக் கொடுக்கத்தகுந்த (Adequately) 'அடிகுவேட்லி' என்கிற பதத்தைப் போட்டுக்கொள்ளும்படி ஒரு திருத்தப் பிரேரேபணை கொண்டுவந்தார். இந்த 'அடிகுவேட்லி' என்ற பதத்திற்கு என்ன பொருள் என்று ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் அம் மாநாட்டுக்கு அக்கிராசனாதிபதியாயிருந்த ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரவர்களைக் கேட்க, அவர் இரண்டும் ஒரே அர்த்தந்தான்; ஆனால் பெர்சன்டேஜ் என்பதைவிட அடிகுவேட்லி என்பது நல்ல வார்த்தையென்று சொல்லித் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்.

இது சமயம் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் முதலியோர்களும் அக்கூட்டத்தில் ஆஜராகித்தானிருந்தார்கள். அதோடு, இராஜாங்கக் கல்வித் துறைகளில் சமஸ்கிருதக் கல்விப் பயிற்சிக்கு உள்ள யோக்கியதையும், செய்முறையும் தமிழ்க் கல்விக்கும் இருக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான் வி. ஓ. சிதம்பரம் பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆனால், விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வெளியில் வந்து ஸ்ரீமான் ஈ. வே. இராமசாமி நாயக்கர் சில ஆங்கிலம் படித்தவர்களைக்கண்டு 'அடிகுவேட்லி' என்பதற்கும் 'பெர்சன்டேஜ்' என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டபோது, அவர்கள் அடிகுவேட்லி என்பது இருபொருள் கொண்டதென்றும் அதாவது, 'யோக்கியதைக்குத் தகுந்த' என்ற பொருள்கூடக் கொள்ளலாமென்றும் பெர்சன்டேஜ் என்கிற வார்த்தைதான் மிகத் தெளிவானது என்றும் சொன்னார்கள். பிறகு மாநாட்டில் அத்தீர்மானம் வரும்போது பெர்சன்டேஜ் என்கிற வார்த்தையையே போட்டுக்கொள்ள வேண்டுமென்று, ஸ்ரீமான்கள் நாயக்கரும், தண்டபாணி பிள்ளையும் அக்கிராசனர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரிடம் சொன்னார்கள். அவரும் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டார். கடைசியாக மாநாட்டில் இது தவிர மற்ற தீர்மானங்கள் முடிந்தவுடன் அக்ராசனாதிபதி எழுந்து திடீரென்று தமது முடிவுரையை ஆரம்பித்துவிட்டார். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை தன்னுடைய வகுப்புவாரிப் பிரதிநித்துவ தீர்மானம் என்ன ஆயிற்றென்று அக்கிராசனரைக் கூட்டத்தில் கேட்டார். அக்கிராசனர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் அது பொது நன்மைக்கு விரோதமான தீர்மானமானதால் அதை ஒழுங்கு தவறானதென்று தீர்மானித்து விட்டதாகச் சொல்லிவிட்டார். உடனே ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை எழுந்து விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தன் தீர்மானம் இங்கு எப்படி ஒழுங்குத் தவறு என்று கேட்டார். அப்போது அங்கிருந்த பிராமணர்கள் ஸ்ரீமான் பிள்ளையை உட்காரும்படி கூச்சல்போட்டு அடக்கி விட்டார்கள். கடைசியாக முடிவுரையில் ஸ்ரீமான் அய்யங்கார் காஞ்சி மாநாட்டில் ஸ்ரீமான் முதலியாரைக் கொண்டு சமாதானம் சொல்லச் சொன்னது போல் வருத்தப்படுவதாகப் பொய் வேஷம் போட்டு மறைத்து விட்டார்.

பின்னர் 1921-ம் வருஷம் தஞ்சையில் நடந்த 27-வது தமிழ் மாகாண மாநாட்டில் கோயமுத்தூர் ஜில்லா பிரதிநிதிகள் கொட்டகையில் ஸ்ரீமான் சர்க்கரைச் செட்டியார் அக்கிராசனத்தில் தமிழ்நாடு பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்றுகூடி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசி, ஸ்ரீமான்கள் சென்னை சிங்காரவேலு செட்டியார், கலியாண சுந்தர முதலியார், சர்க்கரைச் செட்டியார், வரதராஜுலு நாயுடு, இராமசாமி நாயக்கர் ஆகியவர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று நியமித்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு வேண்டிய வேலை செய்யவும் ஜஸ்டிஸ் கட்சிக்குப் போட்டியாய் ஆரம்பித்த சென்னை மாகாண மாநாட்டைக் கூட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

1923ஆம் வருஷம் திருப்பூரில் கூடிய 28-வது மாகாண மாநாட்டிலும் நாடார்கள் முதலியோர்க்கு ஆலயப் பிரவேசம் கொடுக்கவேண்டும் என்றும், அதற்கு விரோதமான சாஸ்திரங்களையும் பழைய ஆசார வழக்கங்களையும் மாற்றவேண்டும் என்றும் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு விஷயாலோசனைக் கூட்டத்தில் தீர்மானமானதை வெளி மாநாட்டில் பிரேரேபிக்க முடியாதபடி பல பிராமணர்கள் செய்தும்



படிப்பகம்

www.padippakam.com



கடைசியாக பெரிய தகராறின் பேரில் ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார் பிரேரேபிக்க ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஆமோதிக்க அதன்பேரில் ஸ்ரீமான்கள் எஸ். சத்திய மூர்த்தி, மதுரை ஏ. வைத்தியநாதய்யர், கும்பகோணம் பந்துலுவய்யர் முதலியோர் ஆட்சேபித்து கூச்சல்களையும், கலகத்தையும் உண்டாக்கி, எப்படியோ அத் தீர்மானத்தை அப்படியே ஓட்டுக்கு விடாமல், அதன் ஜீவநாடியை எடுத்துவிட்டு, ஒரு சொத்தைத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதுசமயம், ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கு 'மதில்மேல் பூனை போலவே நடந்து கொண்டார்' என்கிற பழியும் வந்தது.

1923-ம் வருஷத்திய மதுரை இராமநாதபுரம் மாநாட்டிலும் பிராமணர்–பிராமணரல்லாதார் தகராறு ஏற்பட்டது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் இதில் சிக்கிக்கொண்டு வெகு பாடுபட்டார்.

பிறகு 1923-ம் வருஷத்தில் திருச்சியில் டாக்டர் இராஜன் வீட்டில் கூட்டிய மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாய் ஸ்ரீமான். பி. வரதராஜுலு நாயுடு ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அத் தீர்மானத்தை அடுத்த மீட்டிங்கில் வைத்துக்கொள்ளலாம் என்று ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் தந்திரமாய்த் தள்ளி வைத்துவிட்டார்.

1923-ம் வருஷம் சேலத்தில் கூடிய 29-வது தமிழ் மாகாண மாநாட்டுக்கு விஷயாலோசனைக் கமிட்டியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அதுசமயம் இல்லா விட்டாலும் அவருக்காக அவர் நண்பர்கள் ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையோ, அல்லது பவானி சிங்கோ இதே தீர்மானத்தைப் பிரேரேபித்தபோது ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் 'இது சமயம் ஒத்துழையாமையே போய்விடும்போல் இருக்கிறது; டெல்லி மாநாடு தீர்ந்த பிறகு வைத்துக்கொள்ளலாம்' என்று சொல்லி அதை நிறுத்தச் செய்துவிட்டார்கள்.

பின்னர் கூடிய 1924-ம் வருடத்திய திருவண்ணாமலையில் கூடிய 30-வது தமிழ் மாகாண மாநாட்டில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கருடைய அக்கிராசனப் பிரசங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பெல்காமில் கூடிய ராஜீய காங்கிரசின் போதும் பிராமணரல்லாதாருக்கெனத் தனியாக ஒரு மாநாட்டைக்கூட்டி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றிப் பேசியதோடு ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றியும் தீர்மானம் செய்திருக்கிறது. அதேசமயம் மகாத்மாவினிடமும் இதைப்பற்றி விரிவாய் எடுத்துச்சொன்னதோடு ஸ்ரீமான்கள். ஆர். கே. சண்முகம் செட்டியார், பி. வரதராஜுலு நாயுடு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றிச் சொல்லியும் இருக்கிறார்கள். மகாத்மா காந்தியும் யோசித்துத் தக்கது செய்வதாய்ச் சொல்லியுமிருக்கிறார்.

இவ் வருடம் தஞ்சையில் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் உட்பட பிரதிநிதிகளாயிருந்த தேசிய பிராமணரல்லாதார் மாநாட்டிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி இருக்கிறது.

இன்னும் எத்தனையோ விஷயங்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சரித்திரத்தைப் பற்றியும் தலைவர்கள் என்று சொல்லப்படுவோரின் தந்திரம், சூழ்ச்சி, குட்டிக் கரணம், குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புத்தன்மை முதலியவற்றைப் பற்றியும் விரிவாய் எடுத்துச்சொல்ல அடுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறோம். அல்லாமலும், பிராமணரல்லாதார் வகுப்பைச் சேர்ந்த உண்மைத் தொண்டர்கள் என்ன செய்யவேண்டும் என்பதையும் அடுத்தாற் போல் எழுதலாம் என்று இருக்கிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—6-12-1925]



## 3. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏன்?

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

'தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்தும், தேசிய ஒற்றுமையை உத்தேசித்தும் அரசியல் சம்பந்தமான சகல பதவிகளிலும், இந்து சமூகத்தில் பிராமணர், பிராமணர் அல்லாதவர், தீண்டாதார் என்போர் ஆகிய இந்த மூன்று சமூகத்தாருக்கும் அவரவர் ஜனத்தொகையை அனுசரித்துப் பிரதிநிதி ஸ்தானம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமாய் மாகாண மாநாட்டைக் கேட்டுக் கொள்வதோடு, இத் தீர்மானத்தை மாகாண மாநாடு மூலமாய் காங்கிரஸையும் வலியுறுத்தும்படியும் தீர்மானிக்கிறது' என்னும் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியதாவது:

நாம் ஒவ்வொருவரும் சுயராஜ்யம் அடையப் பாடுபடுவதாய்ச் சொல்கிறோம். அதற்காக எவ்வளவோ கஷ்டத்தையும் அனுபவிக்கின்றோம். சுயராஜ்யம் கிடைத்தால் அது 'பொதுமக்கள் ராஜ்யமாய்' இருக்கவேண்டாமா? நாட்டின் தற்கால நிலைமையைப் பார்த்தால், சுயராஜ்யம் என்பது பிராமண ராஜ்யம்தான் என்னும் பயம், இப்பொழுது மக்களிடையே உண்டாகிவருகிறது. பிரிட்டிஷ் ஆட்சி புரிகிற இக் காலத்திலேயே மனிதர்களைத் தெருவில் நடக்கவிடக் கூடாது, குளம் குட்டைகளில் தண்ணீர் எடுக்க விடக்கூடாது என்னும் பல கொடுமைகள் நடைபெறுகிறபோது—இராஜ்ய அதிகாரம் ஒரு வகுப்பார் கைக்கே வந்துவிடுமானால் இனி என்ன கொடுமைகள் செய்ய அஞ்சுவார்களென்று, ஜனங்கள் பயப்படுகின்றார்கள். தேச விடுதலைக்குத் தியாகம் தேவையாய் இருந்த காலத்தில் புறமுதுகு காண்பித்து ஓடிப்போன ஆசாமிகள் எல்லாம், ஏதோ சிலர் செய்த தியாகத்தினால் ஏற்பட்ட பலனை அனுபவிக்க வெட்கமில்லாமல் முன்வந்து சூழ்ச்சிகள் செய்து பலன் அடைவதைப் பார்க்கின்றபோது இவர்களை எப்படி நம்பமுடியும்? 'வெட்கங்கெட்டவன் சொந்தக்காரன்' என்பதுபோல் விவஸ்தையற்ற ஒரு கூட்டத்தார் தேசத்திலிருந்துகொண்டு, தேசத்தைப் பாழ் பண்ணிக்கொண்டு வருவதை நாம் பார்த்துக்கொண்டே வருகிறோம். சாதுக்களான ஏழு கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு பெரிய கூட்டம் மிருகங்களினும் கேவலமாய் நடத்தப்படுவதையும் பார்த்துவருகிறோம். இப்படி ஏன் இருக்கவேண்டும்? அந்தந்தக் கூட்டத்திற்குத் தகுந்த அளவு, அவரவர்களுக்கு அரசியல் முதலிய உரிமைகளை ஒதுக்கி விடுவோமேயானால், சாதுக்களெல்லாம் மிருகங்களாகவும் அயோக்கியர்களெல்லாம் சுவாமிகளாகவும் ஆகிவிடமுடியுமா? கட்டுதிட்ட அளவில்லாததனால், கையில் வலுத்தவன் காரியமென்பதுபோல, ஏமாற்றச் சக்தியுள்ளவனும், செல்வாக்கு உள்ளவனும் மேலே வந்துவிடுகிறான். இதனால் ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையில்லாமலும், ஒற்றுமையில்லாமலும், இவர்களை எப்படி ஏமாற்றலாம் என்பதே ஒரு கூட்டத்தாருடைய ஜென்மக் கூறாகவும், இவர்கள் தந்திரத்திலிருந்து எப்படித் தப்புவது என்பது மற்றக் கூட்டத்தாருடைய கவலையாகவும் போய்விடுகிறது. இந்த நிலைமை, அரசாட்சி புரிபவர்களுக்கு வெகு அனுகூலமாய் ஏற்பட்டுப் போய்விடுகிறது. அதோடு மாத்திரமல்லாமல், அரசாங்கத்தை நடத்துவிக்க வகுப்புகளுக்கு வகுப்பு போட்டிபோட்டுக்கொண்டு ஒற்றர்களாகவும், அடிமைகளாகவும் அரசாங்கத்தையே நாடுவதாய் ஆகிவிடுகிறது. இக் குணங்கள் நமது நாட்டைவிட்டு அகல வேண்டுமானால், ஒரு வகுப்புக்கு மற்றொரு வகுப்பு நம்பிக்கை ஏற்படும்படியும், ஒருவர் பாத்தியத்தில் மற்றொருவர் பிரவேசிக்காதபடியும் பந்தோபஸ்து ஏற்பட்டுப்போக வேண்டும். அவ்வித பந்தோபஸ்துதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது. நான் பிரேரேபித்திருக்கின்ற தீர்மானத்தில் இந்தத் தத்துவம்தான் அடங்கி இருக்கிறது. அது இப்பொழுது மாத்திரம் ஏற்பட்டதல்ல. நீண்ட நாளாகவே இக் கிளர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்டிருந்தாலும் எப்படி எப்படியோ அதை ஒரு வகுப்பார் கட்டுப்பாடாய்ச் சூழ்ச்சிகள் செய்து, சமயத்திற்கேற்றவாறு நடந்து, பாமர ஜனங்களை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு, வெளிக்குத் தெரியாமல் அடக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், நீங்களெல்லோரும் நன்றாய் யோசித்துப் பார்க்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[காஞ்சிபுரத்தில்; 21-11-1925-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 6-12-1925]

www.padippakam.com



# 4. வகுப்புவாரி உரிமை

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி வலியுறுத்த ஆரம்பித்த பிறகு தமிழ்நாடு இராஜ்ய உலகில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டதோடு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு அனுகூலமாய் இருக்கும் சில தேச பக்தர்களுக்குக் காங்கிரசில் செல்வாக்கு இல்லாமல் அடிப்பதோடு காங்கிரஸையே பிராமணமயமாக்க அவசியம் ஏற்பட்டதும், பிராமணரல்லாதாரில் யாருக்காவது காங்கிரஸில் பெயரைச் சொல்லிக்கொள்ள வேண்டுமானால் அவர்கள் பிராமணர்கள் தயவுபெற வேண்டியிருப்பதால் பிராமணர்களுக்குப் பயப்பட்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே ஆகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒரு நாளும் பிராமணர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எங்கு ஏற்பட்டுப் போகுமோ என்கிற பயத்தால்தான் பிராமணர்கள் சர்க்காரைத் தாங்கிக் கொடுத்துக் கொண்டிருப்பதும், ஒரு சர்க்கார் இவர்களுக்கு விரோதமாய் இருந்தால் வேறொரு சர்க்காரைத் தயார் செய்வதுமாய் இருந்தார்கள். அதற்குப் பயந்துகொண்டுதான் வரும் சர்க்காரும், பிராமணர்களுக்குச் சுவாதீனமாய்ப் போய்விடுகிறார்கள். நம் நாடு ஏதாவது ஒரு காலத்தில் 'இயற்கைக்கு விரோதமாய்' நம் நாட்டார்களாலேயே ஆளப்படுகிறது என்கின்ற யோக்கியதை அடையுமானால், அது கண்டிப்பாய் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப் பட்டால்தான் முடியும் என்று வைரக்கல்லில் எழுதிவைப்போம்.

அது ஏற்படும்வரை இந்தியாவை இந்தியர் ஆட்சி புரிவதென்பதைத் தூரத் தள்ளி வைத்துவிட வேண்டியதுதான். நமது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பிராமணர்கள் மாத்திரம் விரோதிகளல்லர். அன்னிய அரசாங்கத்தாரும் விரோதிகள் என்பதை உணர வேண்டும். ஏனென்றால், எவ்வளவுக்கெவ்வளவு நமக்குள் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு ஒற்றுமைக் குறைவாய் இருக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அன்னிய ஆட்சியின் எல்லை நீண்டுகொண்டிருக்கும். நமக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்து, நாம் எல்லோரும் உத்தியோகத்திற்கும் பதவிக்கும் சண்டை போட்டுக்கொள்ளாமல், அவரவர்களுக்குள்ளது அவரவர்கள் அடையும்படிசெய்து, ஒருவரை ஒருவர் தின்னாமல் செய்து விட்டால் பிறகு எல்லோரும் ஒற்றுமையாய்ப் போய்விடுவார்கள். இதனால் அன்னிய ஆட்சிக்கு ஆபத்து. ஆதலால், இந்தத் தத்துவம் எப்பொழுதும் அன்னிய அரசாங்கத்திற்கு விரோதமானது. 'பெருங்கூட்டத்தைச் சிறு கூட்டம் ஆளவேண்டுமானால், சிறு கூட்டத்தார் பெருங்கூட்டத்தை ஒருவருக்கொருவர் பொறாமையும் துவேஷமும் ஏற்படும்படிசெய்து, பிரித்துவைத்துக் கலகத்தை உண்டாக்கிவிட்டால் தாராளமாய் ஆளலாம்' என்று ஒரு பழமொழி உண்டு. அதுவே சர்க்காரின் நடவடிக்கை; அதுவே நமது பிராமணர்களின் நடவடிக்கை. இதை நம்மில் பலர் அறிவதில்லை. அறிந்தாலும் எப்படிப் பிராமணர்களுக்கு நல்ல பிள்ளையாகலாம் என்பதில்தான் அதிகக் கவலை. ஆங்கில அரசாங்கத்தின் 150 வருடத்திற்கு மேற்பட்ட ஆட்சியின் பலனாய், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததின் பலனாய்ப் பிராமணரல்லாத வகுப்புகள் எவ்வளவு மூற்போக்கு அடைந்து இருக்கிறது என்று பார்த்தால், உண்மை பிராமணரல்லாத இரத்தம் ஓடும் மனிதன் துடிக்காமல் இருக்க மாட்டான். நம் தென்னாட்டு அரசாட்சியில், பிராமணரல்லாதவர் நிலை எப்படி இருக்கிறது, பிராமணர்கள் நிலை எப்படி இருக்கிறது என்பதுபற்றிக் கீழ்க்கண்ட கணக்குகளால் அறிந்துகொள்ளக் கோருகிறோம்.

நமது அரசாங்கத்தில் 35 ரூபாய்க்குக் கீழ்ப்பட்ட உத்தியோகங்களில், அதாவது வாசல் கூட்டுவது, மேஜை துடைப்பது, பங்கா இழுப்பது, அதிகாரிகளுக்குக் கைகால் அமுத்துவது முதலிய வேலைகளில் பிராமணரல்லாதவர்கள் 37,125 பேர்கள் இருக்கிறார்கள். பிராமணர்கள் 1810 பேர் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்களும் சம்பளம் குறைவாய் இருந்தாலும் தளுக்காய் மேலதிகாரிகளை ஏமாற்றி, மேலே கண்ட வேலைகள் பார்க்காமல் அதிகாரம் செலுத்திவருகிறார்கள். ரூ. 35-க்கு மேற்பட்டு 100 ரூபாய் வரை சம்பளம் உள்ள



உத்தியோகத்தில் பிராமணரல்லாதவர் 7003 பேர்கள். பிராமணர்களோ 10,934 பேர்கள். இந்த இடத்திலே நம்மைவிடப் பிராமணர்கள் 4000 பேர்கள் அதிகமாகிவிட்டார்கள். ரூபாய் 100-க்கு மேற்பட்டு சுமார் 250 ரூ. வரை உத்தியோகங்களில் பிராமணர்கள் 2679 பேரும், பிராமணரல்லாதவர் 1666 பேருமாய் இருந்தனர். இந்த இடத்தில் பிராமணரல்லாதாரை விடப் பிராமணர்கள் 1000 பேர் அதிகமாய் இருக்கிறார்கள். 250 ரூபாய்க்கு மேற்பட்ட உத்தியோகங்களில் பிராமணர்கள் 594; பிராமணரல்லாதவர் 280 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு இருமடங்குகளுக்கு மேல் போய்விட்டார்கள். கலெக்டர் உத்தியோகத்தில் 11 பேர் இந்தியர்கள் வகிப்பதில், 9 பேர் பார்ப்பனர்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு அய்ந்தாய் விட்டார்கள். ரிவின்யூபோர்டில் உள்ள ஒரு இந்திய மெம்பர் உத்தியோகத்தில் பிராமணர்தான் இருக்கிறார். இந்தியருக்குக் கொடுக்கப்பட்ட கைத்தொழில் டைரக்டர் வேலையில் பிராமணரே இருக்கிறார். அரசாங்கக் காரியதரிசி வேலையில் உள்ள இந்தியரும் பிராமணரே.

200 ஜில்லா முன்சீப்களில் 150 பேர் பிராமணர்கள். 61 சப் ஜட்ஜுகளில் 45 பேர் பிராமணர்கள். ஜில்லா ஜட்ஜுகளில் 7 பேர் பிராமணர்கள். அதாவது, எடுபிடி உத்தியோகங்களில் பிராமணரல்லாதவரும் ரூ. 100, 500, 1000, 2000, 3000 மாதச் சம்பளம் உள்ள உத்தியோகங்களில் பிராமணர்களும் அனுபவிக்கிறார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்லும் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை நாம் ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது:

இவ்விதம் 1000, 2000, 3000 ரூபாய் சம்பளம் உள்ள உத்தியோகங்கள் பிராமணரல்லாத இந்துக்கள் என்போராகிய 100-ல் 70 பேருக்கு மேலாக இருக்கும் பிராமணரல்லாதாருக்குக் குறைவாய் இருப்பதற்கும், 100-ல் 3 பேராயிருக்கும் பிராமணர்களுக்கு ஏகபோகமாய் இருப்பதும் யோக்கியதை இல்லாததாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததாலா, என்று கேட்பதோடு—ஸ்ரீமான் முதலியார் கோரும் சுயராஜ்யமோ, சீர்திருத்தமோ பிராமணர்களுக்கு உத்தியோகப் பெருக்கமாகுமா, அல்லது ஏழைகளுக்கு வரி குறைந்து தொழிலாளிக்குத் தொழில் கிடைக்குமா என்று கேட்கிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—18-4-1926]

அக்கிராசனர் அவர்களே! சகோதரர்களே!

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைக் காங்கிரஸ்காரன், அதிலும் வைதிக ஒத்துழையாமைக்காரன், மாறுதல் வேண்டாதவன் என்று சொல்லப்பட்ட ஒருவன், வகுப்பைப் பற்றிப் பேசுவது பொருத்தமா என்று சிலருக்குத் தோன்றலாம். வைதிக ஒத்துழையாமைக்காரன் என்றால், ஒருவன் கழுத்தை ஒருவன் அறுக்கும்போது பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பவனல்லன்; ஒருவன் சொத்தை ஒருவன் கொள்ளையடித்துக் கொண்டு போனால் வழியைத் திறந்துவிட்டு வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்பவனல்லன் என்பதை முதலில் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அல்லாமலும், மகாத்மாவின் காங்கிரஸும் அவரது ஒத்துழையாமையும், நிர்மாணத்திட்டமும் காங்கிரஸிலிருந்து வெளிப்பட்டு மறைந்துகொண்டும் வருகிறது. நிர்மாணத் திட்டங்கொண்ட ஒத்துழையாமைக் காங்கிரஸின்போது வகுப்பு விஷயத்தைப்பற்றி யாரும் யோசிக்கவேயில்லை. அதில் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமே இல்லாமல், எல்லா வகுப்புக்கும் சமத்துவமும் சுயமரியாதையும், ஏழை பணக்காரர் என்கிற வித்தியாசமே இல்லாமல் எல்லோருக்கும் சம யோக்கியதையும் உண்டாக சவுகரியமாய் இருந்ததால், என்போன்றவர்கள் வகுப்பு எண்ணத்தை மறந்து மகாத்மா காங்கிரசிலும், ஒத்துழையாமையிலும், நிர்மாணத் திட்டத்திலும் உழைத்துவந்தோம்.

மகாத்மா காங்கிரசுக்கு முன்பே நான் வகுப்பு முன்னேற்றத்தில் கவலை உள்ளவனாகத்தான் இருந்தேன். அதாவது, பிராமணரல்லாதாருக்காக இப்பொழுது உள்ள

படிப்பகம்

www.padippakam.com



தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பது போன்ற, ஏறக்குறைய இதே கொள்கை உடைய 'சென்னை மாகாணச் சங்கம்' என்ற ஒரு சங்கம் இருந்ததும் அதில் என்போன்றவர்கள் முக்கிய பங்கெடுத்து உழைத்ததும் உங்களுக்குத் தெரியும். அது எதற்காக இருந்தது? பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்குக் காங்கிரஸ் போதாது என்றும், நமக்கென்று தனியான இயக்கம் இருக்கவேண்டுமென்றும் இப்பொழுது காங்கிரஸிலுள்ள பிராமணரல்லாதார் எல்லோரும் ஒன்று கூடித்தான் அச் சங்கத்தின் மூலம் பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு உழைத்ததும், நமது முன்னேற்றத்திற்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முதலியவைகளை நாம் வலியுறுத்தி வந்ததும் உங்களுக்குத் தெரியும்.

இன்னும் என் அபிப்பிராயம் என்னவென்றால், நமது நாட்டில் காங்கிரஸ் என்கிற ஒரு இயக்கம் இல்லாவிட்டால் நமக்கு வகுப்பு முன்னேற்ற இயக்கமே தேவையில்லை என்றே சொல்லுவேன். நமது நாட்டில் என்று காங்கிரஸ் ஏற்பட்டதோ அன்றே பிராமணரல்லாதாருக்குச் 'சனியன்' பிடித்தது. உதாரணமாக, தமிழ்நாட்டில் காங்கிரஸ் வருவதற்கு முன் பெரிய மனிதர்கள் என்போரும், படித்தவர்கள் என்போரும், தலைவர்கள் என்போரும், தேசபக்தர்கள் என்போரும் பிராமணரல்லாதார்களாகவே இருந்தார்கள். ஜில்லா முனிசீப்புகள், சிரஸ்தார்கள், தாசில்தார்கள், இன்ஸ்பெக்டர்கள் ஆகிய இவ்வுத்தியோகங்கள் தாம் அக் காலத்தில் இந்தியர்களுக்கு அதிகமாய் வழங்கப்பட்டன.

இவைகளில் நூற்றுக்கு 99 பேர் நாயுடு, முதலியார், பிள்ளை, சாயபு ஆகிய இவர்கள் தாம் இருப்பார்கள். இவர்கள் உத்தியோக கண்ணியமும், தர்பாரும் இக் காலத்திலுள்ள ஒரு கலெக்டருக்காவது, நிர்வாக சபை மெம்பருக்காவது கிடையாது. எனக்குத் தெரிய ஒரு நாயுடு இந்த ஜில்லா சிரஸ்தாரராயிருந்தார், அவரை, 'கலெக்டர் கூப்பிடுகிறார்' என்று யாராவது கூப்பிட்டால், 'பத்து நிமிஷத்தில் வருகிறேன்' என்றுதான் சொல்வார். 15 நிமிஷம் கழித்து மெத்தைக்குப் போவார்; காலில் ஜோடும், ஒரு கையில் தடியும், மற்றொரு கையில் சுருட்டுமாய் மெத்தை ஏறுவார். கலெக்டர் முன்னால் மேஜையின்மேல் தடியையும், சுருட்டையும் வைத்துவிட்டு, 'என்னைக் கூப்பிட்ட விஷயம் என்ன?' என்று கேட்பார். காரியம் முடிந்ததும் சுருட்டையும் தடியையும் எடுத்துக்கொண்டு கீழே வருவார். போலீஸ் எட்குவாட்டர் இன்ஸ்பெக்டராக நாயுடு ஒருவர் இருந்தார். அவர், கலெக்டர் சூப்பரின்டெண்டு முதலிய வெள்ளைக்கார அதிகாரிகளுடன் சினேகிதர் போலப் பேசுவார்; உறவாடுவார். நாயுடுவைத் திடீரென்று கூப்பிடமுடியாது. நாயுடுவின் சந்தர்ப்பம் தெரிந்துதான் கூப்பிட வேண்டும். இதுபோலவே, அக் காலத்தில் தக்க குடும்ப பரம்பரையும், யோக்கியமும், அந்தஸ்தும், கண்ணியமும் உள்ளவர்கள் பெரிய உத்தியோகம் வகிப்பார்கள். அப்போதைய உத்தியோகங்களுக்கு வேண்டிய யோக்கியதை இதுதான்.

காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு உத்தியோகத்தின் யோக்கியதை அடியோடு மாறிவிட்டது. முனிசிபாலிட்டி விளக்கு வெளிச்சத்தில் படித்தவனானாலும் சரி, பஞ்சாங்கம் சொல்லிப் பிச்சை எடுத்தவன் மகனானாலும் சரி, தூது சென்று பிழைப்பவன் மகனானாலும் சரி, உருப்போடத் தெரிந்து, கிராமபோன் மிஷின்போல பார்த்ததை உருப்போட்டு எழுதத் தெரிந்து மற்ற விஷயத்தில் எப்படிப்பட்டவனானாலும் சரி, அவன்தான் உத்தியோகத்திற்கு இலாயக்கு உள்ளவனாகப் போய்விட்டான். இதனால் தெருப்பிச்சை எடுப்பவர்களெல்லாம் உத்தியோகத்திற்கு இலாயக்குள்ளவர்களாகப் போய்விட்டார்கள். பரம்பரையாய்ப் பெருங் குடும்பமாய், தேசத்தையே கோட்டை கொத்தளங்களோடு அரசாண்டவர்களாய், சுயமரியாதையோடு உள்ள பிராமணரல்லாதார் குடும்பங்கள் பின்னடைய ஏற்பட்டுவிட்டன. இதன் பலனாய் உத்தியோகங்களுக்கும் மதிப்புக் குறைந்துவிட்டது.

காங்கிரஸின் ஆதி சூழ்ச்சியே, பிராமணர்கள் எவ்வாறு உத்தியோகம் சம்பாதிப்பது என்கிற அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டதாகும். அதற்கு ஏற்றாற்போல் அந்தச் சாதிக்குச் சுபாவமாய் உள்ள உருப்போடும் வித்தையை உத்தியோகத்திற்கு யோக்கிதையாய் வைத்து, அதற்கேற்ற பள்ளிக்கூடங்களை விருத்தி செய்தார்கள். இதன்மூலம் உத்தியோகம் பெற்ற பிராமணர்களால் வெள்ளைக்காரர்களுக்குப் பலவிதத்திலும் உபயோகமிருந்ததால் அவர்களும் இந்தப் பிராமணர்களுக்கு அனுகூலமான உத்தியோக யோக்கியதையையே பரப்பிவிட்டார்கள். இப்போது வரவர மேற்படி உத்தியோகங்களின் யோக்கியதையும் குறைந்துவிட்டது.



பெரும்பாலும் வெள்ளைக்கார அதிகாரிகளுக்குள்ள சகல தேவைகளையும் நிறைவேற்றி வைக்கக்கூடியவர்களும், சுயமரியாதை அற்றவர்களும், மனச்சாட்சியை இழந்தவர்களுந்தான் நல்ல டிப்டி கலெக்டர், நல்ல முன்சீபு, நல்ல தாசில்தார், நல்ல மாஜிஸ்டிரேட், நல்ல இன்ஸ்பெக்டர்களாக விளங்குகிறார்கள். இந்த உத்தியோகத்திற்கே இவ்வளவு யோக்கியதை வேண்டுமானால் இன்னும் பெரிய உத்தியோகத்திற்கு எவ்வளவு யோக்கியதை வேண்டும்? இந்த முறையில் பிராமணரல்லாத வகுப்பார் உத்தியோகம் பெற அஞ்சுகிறார்கள். துணிந்து யாராவது ஒப்புக்கொண்டாலும் மேற்படி யோக்கியதை இல்லாத காரணத்தால் நல்ல உத்தியோகஸ்தர்களாக ஆகமுடிவதில்லை.

இம் மாதிரி காங்கிரஸ் நம் நாட்டில் ஏற்படாதிருந்தால் நமது ஜனங்களின் யோக்கியதை இவ்வளவு கேவலமாய்ப்போய் இருக்காது. உத்தியோகங்களின் யோக்கியதைகளும் இவ்வளவு இழிவான நிலைமைக்குப்போய் இருக்காது. வெள்ளைக்காரர்களும் இவ்வளவு கொடுமையான முறையில் ஆளத்துணிந்திருக்க மாட்டார்கள். ஆதலால், பிராமணரல்லாதார் நிலைமையை இவ்வளவு கேவலத்திற்குக் கொண்டுவந்துவிட்டதற்கு முக்கிய காரணங்களில் இந்தக் காங்கிரஸும் பிரதானமானது. காங்கிரஸ் என்பதே உத்தியோகம் பெற ஏற்பட்டதுதான். அது நமது நாட்டுப் பிராமணர்களால் வளர்க்கப்பட்டதால் பிராமணர்கள் உத்தியோகம் பெறத்தக்க வழியில் நிலைநின்று விட்டது. எந்த அந்தஸ்தும், எந்த உத்தியோகமும், எந்தப் பதவியும் எந்தப் பெரிய உத்தியோகங்களையும் எடுத்துக் கொண்டீர்களேயானால் அந்தப் பதவியும் உத்தியோகமும் காங்கிரசின் பலனாக ஏற்பட்டதாகத்தானிருக்கும்.

இனி பிராமணரல்லாதார் சமூகத்திற்கு ஏதேனும் யோக்கியதை உண்டாகவேண்டுமானால், இந்தக் காங்கிரஸ் ஒழியவேண்டும். இது உள்ளவரை பிராமணரல்லாதார் உருப்படியாக முடியாது. மகாத்மா காங்கிரஸ் உண்டாக வேண்டும்.

[கோயம்புத்தூரில் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-6-1926]

## 5. வகுப்பு உரிமையை ஒழிக்கச் சதி

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது, இந்திய மக்களில் பார்ப்பனர் தவிர மற்றெல்லா வகுப்பார்களும் வெகுகாலமாக, அதாவது இந்தியப் பிரதிநிதித்துவம் என்கிற வார்த்தை என்றைக்கு ஏற்பட்டதோ அதுமுதல் அரசாங்கத்தாரிடம் கேட்டு வரப்படும் ஒரு கோரிக்கை ஆகும்.

இக் கோரிக்கை ஏற்பட்ட காலம் முதல் இந்நாட்டுப் பார்ப்பனர்கள், குறிப்பாய் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பல வழிகளிலும், தந்திரங்களிலும், சூழ்ச்சிகளிலும் அது ஈடேறாமலிருப்பதற்காக வெகு பாடுபட்டு வந்திருக்கிறார்கள். என்ன பாடுபட்டும் அரசியல் இயக்கங்களான காங்கிரசும், அரசாங்கமும் இதை ஒப்புக்கொண்டு அது ஒரு அளவு அமுலில் வரவும் ஏற்பாடு செய்தாகிவிட்டது. உதாரணமாக, இந்தியாவிலுள்ள இந்திய மக்களில் முகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், முகமதியர் அல்லாதாருக்கு இத்தனை ஸ்தானம் என்றும், சீக்கியர்களுக்கு இத்தனை ஸ்தானமென்றும், கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், முகமதியர் அல்லாதாரில் பார்ப்பனரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதாருக்குப் பொதுவில்

படிப்பகம்

www.padippakam.com



இத்தனை ஸ்தானங்கள் என்றும் பிரிக்கப்பட்டு, 6, 7 வருஷ காலமாய்—அதாவது மூன்று தேர்தலாய் அமுலுக்கு வந்தாகிவிட்டது. அதுபோலவே, காங்கிரஸிலும் கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், முகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், தீண்டாத வகுப்பார் என்று சொல்லப்பட்ட ஒடுக்கப்பட்டவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும் ஒதுக்கப்பட்டு அதுவும் சுமார் 5, 6 வருஷமாக அமுலில் இருந்து வருகிறது என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமே. இப்போது அதில் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்கிற விஷயத்தில் வகுத்திருக்கும் முறையானது காரியத்தில் பிரயோசனப்படாததையும், ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாக இருப்பதால் அதையும் தெளிவுபடுத்தி விடுவதே இப்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதன் பொருளேயல்லாமல், புதிதாக ஒன்று ஏற்பாடு செய்யவோ அல்லது கண்டுபிடிக்கவோ யாரும் கோரவில்லை. இக் கொள்கைகளை அரசாங்கத்தாரும் சுமார் 85 வருஷங்களுக்கு முன்னாலேயே ஒப்புக் கொண்டு, 1840-ம் வருஷத்தின் 125ஆவது ஸ்டாண்டிங் ஆர்டரில் விவரமாகச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால், சகல உத்தியோகங்களும் பதவிகளும் அரசாங்கத்தார் கைவசமாக இருந்து அவர்களே ஏறக்குறைய சரிவர வினியோகித்து வந்ததால் அதற்காக யாரும் கொள்கை ஒன்று ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியமே இருந்துவரவில்லை. ஆனால், காங்கிரஸ் என்பதாக ஒரு ஸ்தாபனத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு, அதை தேசப் பிரதிநிதித்துவம் பொருந்தியது என்று சொல்லி, அரசாங்கத்தை மிரட்டி, அவர்கள் மூலம் சில பதவிகளும் பிரதிநிதித்துவங்களும் அதிகமாய் விநியோகிக்கச் செய்ததில் அவைகள் காங்கிரசில் உழன்று கொண்டிருக்கிற பார்ப்பனர்களான ஒரு கூட்டத்திற்கே போய்ச்சேருவதைப் பார்த்தவுடனும் மற்றவர்கள் காங்கிரசில் ஆதிக்கம் பெற முடியாமலும் மற்றவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க முடியாமலும் கட்டுப்பாடாய்ப் பிராமணர்கள் சூழ்ச்சி செய்ததின் பலனாகவும் காங்கிரசில் விசேஷ தீவிரவாதிகளாயிருந்த பார்ப்பனரல்லாதார்களில் வடநாட்டில் முகமதியர்களும், தென்னாட்டில் முகமதியரல்லாதாருமான பார்ப்பனரல்லாதாரும் காங்கிரசில் ஏற்படும் உத்தியோகங்களையும் பதவிகளையும் பிரதிநிதித்துவங்களையும் எங்களுக்கும் சமமாய் விகிதாசாரம் பங்கு கொடுக்கவேண்டும் என்றும், இல்லாவிட்டால் காங்கிரசுக்கு விரோதமாயிருந்து அரசாங்கத்திடமிருந்தே நேரிடையாகப் பெறப் பிரயத்தனம் செய்வோம் என்றும் வாதாடியதில், காங்கிரசிலுள்ள பார்ப்பனர்கள் முகமதியர்களுக்கு மாத்திரம் ஒப்புக் கொண்டு மற்றபடி முகமதியரல்லாத பார்ப்பனரல்லாதாருக்கு ஒப்புக்கொள்ளாமல் ஆட்சேபணை செய்தார்கள். இதன் பலனாய் அப்போது அரசியல் வாழ்விலும் காங்கிரசிலும் பிரதான ஸ்தானங்களிலும் அனுபோகத்திலும் இருந்த ஸ்ரீமான்கள் டாக்டர் நாயர், தியாகராசச் செட்டியார் போன்றவர்கள், ‘தென்னிந்தியர்களின் நல உரிமைச் சங்கம்’ என்பதாக ஒன்றை ஏற்பாடுசெய்து, அதில் தென்னிந்தியாவிலுள்ள எல்லாப் பார்ப்பனரல்லாத மக்களையும் ஒன்றுசேர்த்து, காங்கிரஸ் என்பது பார்ப்பனர் முன்னேற்றத்திற்கு ஏற்படுத்திய ஆயுதமேயொழிய ஜனப் பிரதிநிதித்துவம் பொருந்தியதோ அல்லது எல்லா மக்களும் சமஉரிமை அடையத்தக்கதானதோ அல்ல என்றும்; சுயராஜ்யம் என்பது பார்ப்பன ராஜ்யமேயல்லாமல் பொதுமக்கள் ராஜ்யம் அல்ல என்றும் பிரச்சாரம் செய்ததின் பலனாய்க் காங்கிரஸ் ஆதிக்கமும் குலையத் தலைப்பட்டது. இதை அறிந்த பார்ப்பனர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து ஒரு தீர்மானம் செய்தார்கள். அதென்னவென்றால், ஸ்ரீமான்கள் சர்க்கரைச் செட்டியார், ஆரியா, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முக்லிய காங்கிரசிலீடுபட்டிருந்தவர்களின் அபிப்பிராயத்தையும், அவர்களது பத்திரிகைகளையும் எதிர்க்க எப்படி ஸ்ரீமான்கள் மயிலை இரத்தினசபாபதி முதலியார், பாவலர் குப்புசாமி முதலியார் என்கிற பெயருள்ளவர்களைத் தலைவர்களாக்கியும், ‘தேசபந்து’ என்கிற பேர்கொண்ட பத்திரிக்கையை உண்டுபண்ணவும் முயற்சி செய்தார்களோ, அதுபோலவே அப்போதும் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரும், டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களும் பார்ப்பனர்கள்



மேல் பிணக்குக்கொண்டு காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலகுவதாய் மிரட்டியும். ‘நீங்கள் போனால் வேறு ஒரு முதலியாரையும், நாயுடுவையும் சேர்த்துக்கொள்ளத் தெரியும்’ என்று சொல்லி வெளியிலேயே அனுப்பிவிட்டுத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருவதையும் உலகம் அறியும்.

இதுபோல, பார்ப்பனரல்லாத சங்கத்திற்கு அனுகூலமாய் சாட்சி சொல்ல சீமைக்குப் போன டாக்டர் நாயர், ஸ்ரீமான் எல். கே. துளசிராம் இவர்களுக்கு மாறாக ஸ்ரீமான்களான ஒரு சர்க்கரைச் செட்டியாரையும், ஒரு செஞ்சையாவையும் சீமைக்குப் பணம் கொடுத்து அனுப்பிவைத்தார்கள். இப்போது இந்தப் பார்ப்பனர்கள் யோக்கியதையை அறிந்து ஸ்ரீமான் சர்க்கரைச் செட்டியார் அவர்களை விட்டு விலகியதும் அதற்குப் பதிலாக ஒரு ஓ. கந்தசாமிச் செட்டியார் என்பவரையும், முன் பார்ப்பனரல்லாதாருக்குச் சாட்சி சொல்ல சீமைக்குப் போயிருந்த எல். கே. துளசிராம் என்பவரையும் ஆசைவார்த்தைகள் சொல்லி தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு, அப்போது ஸ்ரீமான் சர்க்கரைச் செட்டியார் செய்த வேலையை இவர்களைக்கொண்டு செய்துவருவதோடு, அவருக்குப் பதிலாய் இவர்களை உபயோகித்துக் கொள்ளப்போகிறார்கள். இவ்வளவு தீவிரமாகவும், இவ்வளவு பிரயத்தனமாகவும், இவ்வளவு செலவு செய்துகொண்டும் இதுசமயம் இந்தப் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத இயக்கத்திற்கு விரோதமாய்க் கட்சி சேர்த்திருக்கிறதன் முக்கிய நோக்கம் என்னவென்றால், 1920 ஆம் வருடத்தில் ‘சில சீர்திருத்தங்கள்’ அரசாங்கத்தார் நமக்கு வழங்கியிருப்பதாய்ச் சொன்ன யாதாஸ்தில், ‘இன்னும் 10 வருஷம் சென்றவுடன் இப்போது கொடுத்த சீர்திருத்தத்தை எப்படி உபயோகித்திருக்கிறீர்கள்; மேற்கொண்டு உங்களுக்கு சீர்திருத்தம் கொடுத்தால் அதைச் சரியாய் உபயோகித்துக் கொள்ளக்கூடிய யோக்கியதை உங்களுக்கு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பரீட்சித்துப் பார்த்து, இன்னும் சில சீர்திருத்தங்கள் கொடுப்போம்’ என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி சர்க்கார் வழக்கம்போல் 1928-லோ, 1929-லோ ஒரு கமிஷனை நியமிக்கப் போகிறார்கள். அந்தக் கமிஷனில் நமது பார்ப்பனருக்கு மேற்கொண்டு ‘சீர்திருத்தம்’ கொடுத்தாலும் சரி, கொடுத்திருப்பதையும் பிடுங்கிக்கொண்டாலும் சரி, அதைப் பற்றியெல்லாம் நமக்குக் கொஞ்சமும் கவலையில்லை. எப்படியாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதை ஒழித்துவிட்டால் அதுவே பார்ப்பனர்களுக்குச் சுயராஜ்யமளித்த மாதிரியாகையால், அதை ஒழிக்கக் கட்சியும் பலத்தையும் சேர்க்கத்தான் இவ்வளவு தந்திரங்களும் சூழ்ச்சிகளும் பணச் செலவும் செய்வதே தவிர வேறில்லை. அதனால்தான் பார்ப்பனர் என்கின்ற கூட்டமே அடியோடு ஆண், பெண் அடங்கலும் கட்சிபேத-அபிப்பிராய பேதமின்றி ஒன்றுசேர்ந்திருக்கிறார்கள். இதற்காகவே ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரும் அடிக்கடி பட்டணம் போவதும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச அய்யங்கார் வெற்றிக்காகக் காத்திருப்பதும், அவர்கள் கூட்டங்களில் பேசுவதும், வகுப்பு வாதங்கள் மாத்திரம் கூடாதென்பதும் ஆகிய தந்திரங்களைச் செய்துவருவதும், ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் வகுப்புவாதம் கூடாதென்பதும் பார்ப்பனரல்லாதாரிலும், முகமதியர்களிலும், கிறிஸ்தவர்களிலும், தீண்டாதார் என்னும் வகுப்புகளிலும் கூலிகொடுத்து ஆட்களைப் பிடித்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அரசியலில் பேசக்கூடாதென்று சொல்லச் செய்வதுமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆதலால், தமிழ்மக்கள் இது சமயம் ஏமாந்துபோகாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தையும், அதற்கெதிராய்ப் பார்ப்பனர் செய்யும் பிரச்சாரத்தின் நோக்கத்தையும் அவர்களுடைய யோக்கியதைகளையும் முன்பின் அபிப்பிராயங்களையும் பாமர மக்கள் சரியாக உணரும்படி பிரச்சாரங்களைச் செய்து, எப்படியாவது அதை அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டி வற்புறுத்துகிறோம்.

[‘குடி அரசு’—தலையங்கம் —21-11-1926]

நமது நாட்டில் தற்சமயம் உண்மையானதும் சுயநலமற்றதுமான பொதுநலசேவை செய்கின்றவர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டியது, நமது நாட்டு மக்களுக்குள் கற்பிக்கப்

1686—115

படிப்பகம்

www.padippakam.com



பட்டிருக்கும் பிறப்பு உயர்வு–தாழ்வை ஒழித்து, சமத்துவத்தை ஏற்படுத்தி, அவர்களைச் சுயமரியாதையுடன் வாழச் செய்யவேண்டியதாகும். இதை நாம் பல தடவைகளில் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம்.

எனினும், மக்களுக்குள் சமத்துவமும், சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்பட்டு விட்டால் வாழமுடியாத நிலையில் நமது நாட்டில் சில சமூகமும், சில தனிப்பட்ட மக்களும் இருப்பதால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை இவ்வித்தியாசத்தின்மீதே நிலைநிறுத்திக் கொண்டதால், அவர்கள் மற்றவர்களின் சமத்துவத்திற்கும், சுயமரியாதைக்கும் விரோதமாக இருந்தே தங்கள் வாழ்நாளைக் கழிக்கவேண்டியதான நிலைமை, அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டு இருப்பதை நாம் மறைத்துப் பேசுவதில் பயனில்லை.

எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட ஒரு கூட்டம் இருந்தேவந்து தங்கள் சுயநலத்தின் பொருட்டு மக்களின் நலத்தைப் பாழ்படுத்தி வந்திருப்பது சரித்திர வாயிலான உண்மையேயாகும்.

எனினும், சமத்துவமும் சுயமரியாதையும் பெற்று முன்னேற்றமடைந்து வரும் நாடுகளின் சரித்திரங்களைப் பார்ப்போமேயானால், முதலில் இக் கூட்டத்துடன் போர் புரிந்து அவர்களை அழித்தபிறகுதான், நாட்டினுடைய மக்களுக்குச் சமத்துவம் கொடுத்து, சுயமரியாதையைக் காப்பாற்றி, தங்கள் தங்கள் நாட்டை முன்னுக்குக் கொண்டுவந்து இருப்பதாக அறியக்கிடக்கும். ஆதலால், நம்நாட்டிலும் பொதுநலத்தொண்டில் ஈடுபடுபவர்கள் இக் கூட்டத்தின் தொல்லைக்குத் தலைகொடுத்துத்தான் ஆகவேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.

அனேகமாக, மற்ற நாட்டின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் தடை வேலைக்காரர்களாயிருந்து தீரவேண்டியவர்கள் பெரிதும் மதத்தின் பேரிலேயே தங்கள் தடை வேலைகளைச் செய்துவந்ததாகக் காணலாம். ஆனால், நமது நாட்டில் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் எதிர்த்து நிற்பவர்கள் பெரிதும் அரசியலின்பேரால் தடைக் கல்லாய் நிற்கின்றார்கள். மதக்காரர்கள் என்பவர்களைவிட அரசியல்காரர்கள் என்பவர்களே தொல்லை கொடுக்கின்றார்கள் என்பதற்கு உதாரணம் என்னவென்றால், நமது நாடு இப்போது மதத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதைவிட அரசாங்கச் சட்டத்திற்கே அதிகமாய்க் கட்டுப்பட்டிருப்பதாகும்.

எனவே, எந்தச் சமத்துவமும் சுயமரியாதையும் இப்போது பெரிதும் அரசாங்கச் சட்டத்தைக் கொண்டே செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றது. அதனால் நாம் அரசாங்கச் சட்டமுறையில் சமத்துவம் கேட்கும்போது, எதிரிகள் அரசியலின் மூலமாகத்தான் எதிர்த்தாக வேண்டும். எனவே, அதை அரசியலின் பேரால் வாழ்பவர்கள்தாம் எதிர்த்தாக வேண்டும். அன்றியும், மதக்காரர்களின் எதிர்ப்புக்கு நமது நாட்டில் மதிப்பும் குறைந்துவிட்டதால், அரசியலின் பேரால் தடைவேலை செய்பவர்களுக்கு மதக்காரர்களின் பின்பலமும் தாராளமாய் இருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது.

நிற்க, நம்முடைய நாட்டிலுள்ள உயர்வு–தாழ்வு முதலிய வித்தியாசங்களைப் போக்க நம்மவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அதற்காகப்பட்ட கஷ்டங்களும் இந்நாட்டில் உள்ள யாவரும் அறிந்ததேயாகும். அவர்கள் வேறு எந்த விதத்திலும் முயற்சி செய்து முடியாததனாலேயேதான் நம்நாட்டு முதிர்ந்த அனுபவசாலிகளும் சுயநலமற்ற பெரியார்களுமாகிய பலர் சேர்ந்து, சமத்துவத்தையும் சந்தர்ப்பத்தையுமே முக்கிய கொள்கைகளாகக் கருதி, அதற்காக நமது நாட்டு அரசியல் தொகுதிகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறுவதே முக்கிய நோக்கமாகக்கொண்டு, பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயருடன் ஒரு ஸ்தாபனங் கண்டு, அதற்காகவே பலர் தங்கள் தங்கள் உயிரையுங் கொடுத்து வேலை செய்துவந்தார்கள் என்பதும், பலர் உயிரைக் கொடுக்க இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடைமலை.



அதுபோலவே, அவ்வியக்கத்தை, நாம் மேலே சொன்னதுபோல் உயர்வு–தாழ்வு வித்தியாசத்தாலேயே தங்கள் வாழ்வையும் பிழைப்பையும் நிலை நிறுத்திக்கொண்ட சமூகமும் அவர்களுக்கு அனுகூலமாயிருந்து வாழவேண்டியவர்களான சில தனி நபர்களும் சேர்ந்து அக் கொள்கைகளை ஒப்புக்கொண்டதுபோல் வேஷம் போட்டுப் பல சூழ்ச்சிகள் செய்து எதிர்த்தும், இப்போது நேராகவே வெளிவந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அரசியலின் பேராலும் எதிர்ப்பதும் வெள்ளிடைமலை. இவ்வளவு எதிர்ப்புகளையும் தாண்டி அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதும் ஒருவாறு வெற்றிபெற்று இந்தியா முழுவதிலும் அமுலில் இருப்பதும் தெரிந்ததே.

அதனால் அவ்வுரிமை பெற்ற சமூகங்கள் ஒவ்வொன்றும் ஒருவாறு சமத்துவமும், சம சந்தர்ப்பமும், சுயமரியாதையும் உணர்ச்சியும் பெற்றிருப்பதும் வெள்ளிடை மலையேயாகும். ஆனாலும், இப்போது அதை மேலும் கேட்பதை மறுப்பதற்கும் உள்ளதையும் ஒழிப்பதற்கும் மேற்கண்ட கூட்டமே அரசியலின் பேரால், அதாவது, சர்வகட்சி மாநாட்டின் பேராலும் தேசத்தின் பேராலும் செய்யும் சூழ்ச்சியும் நமக்குத் தெரிந்ததாகும்.

நிற்க, தற்காலம் இந்தியாவுக்கு அளிக்கப்படப் போகும் அரசியல் சுதந்திரம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பதை விசாரித்தறிவதற்கென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டார் நியமித்தனுப்பிய சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பது என்கின்ற ஒரு சூழ்ச்சியையும் குறிப்பாக இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டே ஆரம்பித்து மக்களை ஏமாற்றுவதும், தாங்கள் மாத்திரம் தங்களுடைய இஷ்டப்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழிக்க ஒரு அரசியல் சுதந்திரத் திட்டத்தை ஏற்பாடு செய்துகொண்டு, அதைப் பொதுஜனங்களின் பேரால் சைமன் கமிஷனுக்குத் தெரியப்படுத்துவதான வேலையில் ஈடுபட்டிருப்பதும் வெள்ளிடை மலையேயாகும். இந்த நிலையில் இந்திய மக்களின் பொது அபிப்பிராயம் என்ன என்பதை அக் கமிஷனுக்கு வெளிப்படுத்தப் பொதுஜனங்களும் குறிப்பாக முகமதியர்களும், கிறிஸ்தவர்களும், பார்ப்பனரல்லாதார்களும், தாழ்த்தப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும், தீண்டப்படாதவர்கள் என்று விலக்கப்பட்ட மக்களும் மிகுதியாகக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்பவர்களில் யாரும் இதுவரை அது கூடாது என்பதற்குச் சரியான காரணமோ அல்லது எல்லா மக்களுக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படியான வேறு மார்க்கமோ எடுத்துச் சொன்னவர்களும் இல்லை.

பல கூலிகள் மாத்திரம், மக்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதைப்பற்றி, ‘தென்னாட்டில் ஒரு பகுதியில் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேரால், யாரோ சிலர் மாத்திரம்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கின்றார்கள்; பொது மக்கள் கேட்கவில்லை’ என்கின்ற ஒரு மந்திரத்தையே சொல்லிக்கொண்டு, இதைப் பொதுமக்கள் நம்பும்படி பிரச்சாரம் செய்து, இதனாலேயே சைமன் கமிஷன் கண்ணிலும், பொதுமக்கள் கண்ணிலும் மண்ணைப் போட்டுத் தெரியாமல் செய்துவிடலாம் என்பதாக மனப்பால் குடித்துக்கொண்டு, நமது நாட்டில் ஒரு வயிற்றுப் பிழைப்புப் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். ஆனால், இவர்களுக்குத் தக்க பதில் கீழ்க்கண்ட வார்த்தைகள்தாம்.

அதாவது, எட்டுக் கோடி மக்கள் கொண்ட முகமதியர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கிறார்களா, இல்லையா என்பதும்,

அய்ந்து கோடி ஜனசமூகங் கொண்ட தீண்டாதவர்கள் என்பார்கள் எல்லோரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கிறார்களா, இல்லையா என்பதும்,

பார்ப்பனரல்லாதார் இயக்கம் வகுப்புவாரி இயக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டதா, இல்லையா என்பதும்,

படிப்பகம்

www.padippakam.com



கிறிஸ்தவர்களும், ஐரோப்பியரும், ஆங்கிலோ இந்தியரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கின்றார்களா, இல்லையா என்பதுமேயாகும்.

['குடி அரசு'-தலையங்கம்—16-12-1928]

இந்தியாவில் முதன்முதலாக அரசியல் கிளர்ச்சி உண்டாக்கப்பட்டதன் உத்தேசமே இந்திய ஆட்சி உத்தியோகம் முழுவதும் ஆங்கிலேயர் கையிலே இருப்பதால், இந்தியர்களுக்கும் இந்திய அரசாட்சியில் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்டேதான் ஏற்படுத்தப்பட்டது என்பது எல்லா அரசியல் வாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இப்படிக் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டதென்றால், ஆங்கில அரசாட்சியின் பயனாக நமக்குச் சற்று கல்வி, அன்னியநாட்டு வர்த்தமானம் முதலியவைகள் மூலம் அரசியல் விஷயங்கள் அறிய வசதி ஏற்பட்டதேயாகும். ஆகவே, அவர்களது ஆசையானது அரசாட்சி உத்தியோகங்களில் புகுந்து அதை அடைவதற்கு அரசியல் ஸ்தாபனம் என்பதை ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலமாய்த் தங்களுக்கு இன்ன இன்ன உத்தியோகங்களில் உரிமை கொடுக்க வேண்டும் என்றும், பிறகு அதில் இத்தனை இத்தனை இடங்கள் தங்களுக்கே (இந்தியர்களுக்கே) வேண்டுமென்றும், அதற்குப் பிறகும் அது இன்ன இன்ன மாதிரியில் கிடைக்கக்கூடியதாய் இருக்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டது போலவே, அரசாங்கத்தாரும் சம்மதித்து நாளா வட்டத்தில் கொடுக்கப்பட்டும் வந்திருக்கின்றது. அது போதாதென்று கேட்கப்பட்டு வருகின்றது.

எனவே, மேற்கண்டமாதிரியான பிரதிநிதித்துவமும் சுதந்திரமும் மக்களுக்குக் கிடைத்ததில் அவைகள் பெரும் பெரும் பதவிகளாகவும், பெரும் பெரும் வருவாய் உள்ளதாகவும், பெரும் பெரும் அதிகாரங்கள் உள்ளவைகளாகவும் மக்களுக்கு அவை கவுரவமும் புகழையும் உடையவைகளாகவும் ஏற்பட்டுவிட்டதால் அவைகள்மீது எல்லா மக்களுக்கும் ஆசை ஏற்பட்டு, ஒவ்வொருவரும் அதை அடைய முயற்சிசெய்ய வேண்டியதாய்விட்டது. இதன் பயனாய்ப் பதவிகள் எல்லாம் அரசியல் ஸ்தாபனங்களில் முன்னணியில் இருப்பவர்களுக்குக் கிடைக்கக் கூடியவைகளாய்விட்டபடியால், அரசியல் ஸ்தாபனத்தின் மூலமாய்த் தங்களுக்குக் கிடைக்காது என்று கருதினவர்களுக்கும், அந்த ஸ்தாபனங்களில் செல்வாக்குப் பெற முடியாமல் தடுக்கப்பட்டிருந்தவர்களுக்கும் தங்களுக்கென்று தனி ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியங்கள் ஏற்பட்டு விட்டன. ஆனதினால், அதற்காகப் பதவி—அதிகாரம், உத்தியோகம் ஆகிய ஆசை கொண்டவர்கள் ஒரே ஸ்தாபனத்தை நம்பிக் கொண்டிருக்க முடியாமல், தனித் தனியாகப் பிரிந்துபோய் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இவர்கள் தங்கள் ஸ்தாபனங்களுக்கு ஏதாவது ஒரு கொள்கையும் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் ஆனார்கள். இதனால் அவசியமில்லாத கொள்கைகளை உண்டாக்கவும், அவசியமான கொள்கைகளை மறுக்கவும், மறைக்கவும் வேண்டிய அவசியம் அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டது. ஆகவே, இந்த வேலைகள் சற்றுப் படித்தவர்களுக்கே வேண்டியிருந்ததாலும், படித்தவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகவே இருந்ததாலும், பார்ப்பனரல்லாத படித்தவர்கள் மிகச் சுருக்கமாக இருந்ததாலும், பார்ப்பனரல்லாத பொதுமக்கள் பாமர மக்களாக இருந்ததாலும் பார்ப்பன சூழ்ச்சியை வென்று அரசியல் ஸ்தானத்தின் உத்தியோகங்களிலும் பதவிகளிலும் பங்குபெற முடியாத பார்ப்பனரல்லாதார்கள் அரசியல் துறையை விட்டு, சமூகத்துறையின் பேரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதன் மூலம் மக்களைத் தங்கள் வசப்படுத்த, அரசியலில் பங்குபெற முயற்சிக்க வேண்டியவர்களானார்கள்.

இந்தக் காரணத்தால் ஏற்பட்டதுதான் பார்ப்பனரல்லாதார் இயக்கம். இந்த ஸ்தாபனக்காரர்கள் முன்கூறியதுபோல் தங்களுக்கும் ஏதாவது ஒரு கொள்கையைக் கண்டு



பிடிக்கவேண்டியிருந்ததால் தங்களுக்குக் கிடைக்கும் உத்தியோகத்தையும், பதவியையும் எல்லா வகுப்பு மக்களுக்கும் எண்ணிக்கைப்படி பங்கு போட்டுக் கொடுப்பதாவும் தங்களுடன் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை என்றும் சொன்னதோடு, புதிதாக ஏற்படுத்தப்பட்ட இயக்கமாதலால் அதற்குச் சற்று பலம் வேண்டும் என்று கருதி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட சுயராஜ்யம் அடைவது என்கின்ற பேரையும் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு கூட்டத்திலும் இராஜவிசுவாசப் பல்லவியும் பாடிவரலாயினர்.

இராஜ விசுவாசம் என்பது காங்கிரஸ் ஆரம்பித்த காலம் முதற்கொண்டே எந்தக் கூட்டத்திலும் முதன் முதல் செய்யுந் தீர்மானமும், கூட்ட முடிவில் பாடும் இராஜ வாழ்த்துப் பாட்டுமாகும். ஆகையால், பார்ப்பனரல்லாதார் கட்சியாரும் அதையே பின்பற்ற வேண்டியதாயிற்று.

எனவே, இந்தப் புதிய கட்சி எல்லோருக்கும் பங்கு கொடுக்கச் சம்மதித்துப் பார்ப்பனர்களை விலக்கியதாகத் தெரிந்தவுடன் எல்லோரும் இதில் சேர்ந்தனர். இதைக் கண்ட பார்ப்பனர்கள் இதை ஒழிக்கக் கருதி, வகுப்புத் துவேஷக் கட்சியென்றும், தேசத் துரோகக் கட்சி என்றும், உத்தியோக வேட்டைக் கட்சி என்றும் தூற்ற ஆரம்பித்தார்கள். என்ன தூற்றியும் புதிய கட்சிக்குக் கூட்டம் அதிகமாகிவிட்டதால் அதை வேறு விதத்தில் ஒழிக்கக் கருதி, பார்ப்பனரல்லாதார்களிலே சிலரை—உத்தியோகத்திற்குத் தகுதி இல்லாத ஆட்களையும் தனி சுயநலவாதிகளையும், போதுமான புத்தியில்லாத ஆட்களையும் பிடித்து மற்றொரு பார்ப்பனரல்லாதார் கட்சியொன்று ஆரம்பித்து—அதாவது அவர்கள் 'தென் இந்தியர் நல உரிமைச் சங்கம்' என்று பேர் வைத்தால், இவர்கள் அதை வேறு வார்த்தையில் 'சென்னை மாகாண மக்கள் சங்கம்' என்று பேரிட்டு, இதிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுப்பதாயும், பார்ப்பனர்களைச் சேர்ப்பதில்லை என்றும் கொள்கைகள் வைத்து, இராஜவிசுவாசத்தை மாத்திரம் மாற்றி, சங்கத்தை நடத்தினார்கள். கடைசியாக அந்தப் புதிய இயக்கமும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பலமாக வலியுறுத்தியவுடன் பார்ப்பனர்கள் தாங்களாகவே அதை அழித்துவிட்டு, அதிலிருந்த சில ஆட்களைக் கொண்டே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய வைத்தார்கள். இதிலிருந்துதான் காங்கிரசில் ஒத்துழையாமையில் இருந்த பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் அபிப்பிராய பேதம் தொடங்கலாயிற்று.

['குடி அரசு'—கட்டுரை—19-4-1931]

இந்தியர்களின் அடிமைத் தன்மைக்கும், இழிநிலைக்கும், மதமும், சாதியும், வகுப்பும் அவை சம்பந்தமான மூடநம்பிக்கை எண்ணங்களும், வெறிகளும், சடங்குகளும் இவற்றிற்காக ஒருவரை ஒருவர் அவநம்பிக்கைகொண்டு அடக்கி ஆள நினைப்பதுமே முக்கியமான காரணங்களாகும். இதன் காரணமாய் மக்கள் வலுவிழந்து, சுயமரியாதையிழந்து, சுதந்திரமற்று, நடைப் பிணங்களாகவும் பகுத்தறிவற்ற மிருகத்தன்மையிலும் கேவலமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

இதற்கு உதாரணமாக சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டால், சுமார் 3¾ கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் 385 சாதிகளாகவும் மற்றும் பல உள்பிரிவு சாதிகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். நாளேற நாளேற நாகரிகத்தின் காரணமாகவும் செல்வநிலையின் காரணமாகவும் இன்னும் அதிகமான சாதிப் பிரிவுகளும் ஏற்படும் நிலையிலேயே தேசம் போய்க்கொண்டிருக்கின்றதே தவிர, ஒன்றுபடத்தக்க முயற்சியோ அறிகுறியோ இல்லை.

இந்தியாவில் 8-ல் ஒரு பாகம் கொண்ட சென்னை மாகாணத்திலேயே 385 சாதிகள் என்றால், மீதி 7 பாக மக்கட்தொகையில் எத்தனை சாதிப் பிரிவுகள் இருக்கக்கூடும்?

இந்த சாதிப் பிரிவுகள் மாத்திரமல்லாமல் உயிரினும் தேசத்தினும், முக்கியமாய் கருதவேண்டியதான 'தாய் பாஷை'ப் பிரிவுகள் எவ்வளவு?

படிப்பகம்

www.padippakam.com



இவ்வளவு சாதியும் தாய் பாஷையும் தங்களுக்குள் பிரிக்கப்பட்டு இருக்கின்றன என்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்காமல், தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு–தாழ்வு என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற உள் எண்ணமும், வெளி நடவடிக்கைகளும், வெறுப்பும், துவேஷமும் எவ்வளவு?

இவற்றையெல்லாம் கவனிக்காமலும், இதை நேர்படுத்த முயற்சிக்காமலும் யாரோ சில சோம்பேறிகளும் சுயநலக்காரரும் 'தேசியம்' என்று சொல்லி, மக்கள் கண்களில் மிளகாய்ப் பொடியைப் போட நினைத்தால், நாடு எப்படி க்ஷேமம் அடையும்? கொஞ்ச நாளைக்கு மாத்திரம்தான் இந்தத் தேசிய வயிற்றுப் பிழைப்பு, வியாபாரம், நடத்த முடியுமே யொழிய இது என்றும் நிலைத்திருக்க முடியாது.

வகுப்புவாதம் சொல்லக்கூடாது என்பதன்மூலம் ஏதோ சில பயங்காளிகளையும், வேறு வழியில் பிழைக்க வழியற்ற தேசியவாதிகளையும், உத்தியோகம்–பதவிப் பிரியர்களையும் மிரட்டலாமேயொழிய, வகுப்புப் பிரிவுகளாலும் உயர்வு–தாழ்வு வித்தியாசங்களாலும் உள்ள கஷ்டத்தையும் கேட்டையும் ஒழிக்க முடியுமா?

வகுப்பு வாதம், மதவாதம், சாதிவாதம் பேசி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களால் தேசத்தின் விடுதலை கெட்டுப்போகின்றது என்று திப்பிலி, தேசாரம், சதகுப்பை இவைகளெல்லாம் பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டதைக் கண்டு நாம் சிறிதும் இலட்சியம் செய்யவில்லை.

அந்தப்படி பேசும், எழுதும் யோக்கியர்களில் 100-க்கு அரைப் பேராவது தங்கள் மதத்தையும், உள் மதத்தையும், சாதியையும், வகுப்பையும் விட்டுவிட்டவர்கள் உண்டா என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

ஆகவே, தேசியம் என்பதும், தேசியப் பிழைப்பு என்பதும் மக்களை எவ்வளவு அயோக்கியர்களாகவும் செய்து விடுகிறது?

எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று ஒரு மதம், ஒரு சாதி, தனி வகுப்பு என்பதாகப் பிரிக்கப்பட்டதோ, பின்பு—அவன் தனது மதம், சாதி, வகுப்புக்கு என்று உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ, அயோக்கியத்தனமோ இருக்க முடியும்?

வகுப்பு வாதம், மதவாதம், சாதிவாதம் கூடாது என்கின்ற யோக்கியர்கள் ஒருவராவது மதத்தையும், சாதியையும், வகுப்பையும் அழிக்கச் சம்மதிக்கிறார்களா? அது மாத்திரமல்லாமல், பார்ப்பனர் முதல் பறையர் வரை அவரவர் வகுப்புக்கு உயிரைவிட்டாவது காப்பாற்ற வேண்டும் என்கிறார்களே ஒழிய, ஒருவராவது சாதிமத வகுப்புகளைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா?

வகுப்பையும், மதத்தையும், சாதியையும் ஒருபுறம் காப்பாற்றிக்கொண்டு—மற்றொரு புறத்தில் சாதி, மத, வகுப்புப் பிரதிநிதித்துவம் கேட்பதை அயோக்கியத்தனம் என்று சொன்னால், அப்படிச் சொல்வது ஆயிரம் மடங்கு அயோக்கியத்தனமும், இரண்டாயிரம் மடங்கு இழிதன்மையும், வஞ்சகத் தன்மையும் துரோகத் தன்மையும் ஆகாதா என்பதோடு இது தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்வுக்கும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற கீழ்மக்கள் தன்மையல்லவா அது?

தேசம், உயிரினங்களுக்குப் பொதுவானதாகும்; தேச ஆட்சியும் மக்களுக்குப் பொதுவானதாகும். எந்த மனிதனுக்கும் ஆட்சியில் அவனது இஷ்டத்தைத் தெரிவிக்கவும், ஆட்சியில் பங்குபெறவும் உரிமை உண்டு என்பதை எந்த மூடனும் மறுக்க முடியாததாகும், ஏதோ சில வஞ்சகக்காரர்களது செல்வாக்குக் காலத்தில் அவர்களது ஏய்ப்பில் விழுந்த முட்டாள் மன்னர்களான, ஒழுக்க ஈனமுள்ள அரசர்கள் காலத்தில் ஏற்பட்ட அக்கிரமங்களாலும், கொடுங்கோன்மைகளாலும் சாதிமத வகுப்பு ஆணவங்கள் ஏற்பட்டு, ஒரு சாதி மத வகுப்பை, மற்றொரு சாதிமத வகுப்பு அடக்கி ஆளும்படியாகவும், ஒரு சாதிமத



உழைப்பில் மற்றொரு சாதிமத வகுப்பு சோம்பேறியாய் இருந்துகொண்டு உண்டு வாழும் படியாயும் செய்யப்பட்டு விட்டதனாலேயே, எல்லாக் காலங்களிலும் எல்லா அரசாட்சிகளும் அப்படிப்பட்ட வஞ்சகர்களுக்கு உதவியாகவே இருக்க வேண்டுமா என்றும், யாரோ சிலருக்குப் பிழைப்பதற்கு வேறு வழியில்லாததனாலேயே அந்த ஈனர்களுக்குக் கூலியாய் இருக்கும் இழிதகைமையை மற்றவர்களும் அடைய வேண்டுமா?

ஏதாவது ஒரு மனிதன், தன்னுடைய மதம் சிறுபான்மையானது என்றும், தன்னுடைய சாதி வலுவிழந்த சாதி என்றும், தன்னுடைய வகுப்பு தாழ்த்தப்பட்டதென்றும் சொல்லி, அதன் காரணமாக ஆட்சியில் தனக்குள்ள பங்கு இன்னது என்பதைத் தெளிவாய்ச் சொல்லி, 'என்னை நீ அடக்கியாள முடியாதபடி செய்து விடு' என்று சொல்வதில் என்ன தப்பு? இதற்குப் பதில் சொல்லாமல் அப்படிக் கேட்பது 'குலாம் தன்மை' என்றும், தேசத் துரோகத்தனம் என்றும் சொல்லுவதானால் அப்படிச் சொல்லுகின்றவர்களை எப்படிச் சொல்லுவது? 'வயிற்றுப் பிழைப்புக்கு எச்சில் இலை பொறுக்கும் இழி தன்மை' என்று ஏன் சொல்லக்கூடாது? தன் பங்கைத் தனக்குக் கொடு என்று கேட்டவுடன் கொடுக்க மறுத்த குடும்பங்கள் எல்லாம் நாசமுற்றே இருக்கின்றன. ஆகவே, எந்த மத, சாதி, வகுப்பாருடைய பங்கையானாலும் மறுத்து ஏமாற்றப் பார்த்தால் கண்டிப்பாக அந்த நாடு கேடுறுவது திண்ணம்.

['குடிஅரசு'-தலையங்கம்—8-11-1931]

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கோருவதே பார்ப்பனரல்லாத சமூகங்களின் (ஜஸ்டிஸ் கட்சி) அரசியல் கிளர்ச்சியாகவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பதே பார்ப்பன சமூக (காங்கிரஸ் கட்சி) அரசியல் கிளர்ச்சியாகவும் இருந்துவருகின்றது என்பதை அனேக ஆதாரத்துடன் எடுத்துச்சொல்லலாம்.

இன்று இந்நாட்டின் மதங்களின் பேரால் உள்ள இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ, சீக்கிய ஸ்தாபனங்களும் வகுப்புக்களின் பேரால் உள்ள மேல் சாதி, நடு சாதி, கீழ் சாதிகள் என்று சொல்லப்படும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்பட்ட வகுப்பு ஸ்தாபனங்களும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையே கண்ணாகக்கொண்டு கிளர்ச்சிகள் செய்வதை யாரும் மறுக்கமுடியாது.

['குடி அரசு'–தலையங்கம்—1-9-1935]

1939 ஆம் வருஷத்தில் காங்கிரஸ் ஆட்சியில் தயாரிக்கப்பட்ட இம் மாகாண சர்க்கார் நிர்வாக அறிக்கையில் உள்ள உத்தியோகப் பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் புள்ளி விவரம் :

| சம்பளம் (உத்தியோகம்) | பார்ப்பனர் | பார்ப்பனரல்லாதார் |
|---|---|---|
| 1. கெஜட்டட் ஆபீசர் என்னும் சற்றேறக்குறைய மாதம் ரூ. 300-க்கு மேல் 5000 ரூபாய் வரை சம்பளமுள்ள நீதி நிர்வாக இலாக்கா பெரிய உத்தியோகங்களில் | 609 | 398 |
| 2. மாதம் ரூ. 100-க்கு மேற்பட்ட உத்தியோகங்களில் | 3667 | 2492 |
| 3. மாதம் ரூ. 35-க்கு மேற்பட்ட குமாஸ்தா முதலிய உத்தியோகங்களில் | 9183 | 8042 |
| 4. மாதம் ரூ. 35-க்குக் கீழ்ப்பட்ட பியூன், பங்கா இழுத்தல், எடுபிடி வேலை ஆகிய உத்தியோகங்களில் மாத்திரம் | 1513 | 33662 |

ஆகவே, இப் புள்ளி விவரங்களிலிருந்து மேல் வேலைகளில் கொழுத்த சம்பளங்கள் உள்ளவைகளில், 100-க்கு 3 பேராய் உள்ள பார்ப்பனர்கள் சரி பகுதிக்கு மேலாகவும்,

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றுக்கு இரண்டாகவும் இருந்துவருவதும் கீழ்த்தர, இழிவான, குறைந்த சம்பள உத்தியோகங்களில் பெரும்பான்மை மக்களான பார்ப்பனரல்லாதாரே ஆயிரக்கணக்காக இருந்துவருவதும் விளங்கும். இப்படி இருந்தும் நாம்தாம் உத்தியோக வேட்டைக்காரராகவும், பார்ப்பனர்தாம் தேசியவாதிகளாகவும் தேசத்திற்காகச் சகலமும் தியாகம்செய்த துறவிகளாகவும் விளம்பரம் செய்யப்படுகிறது.

[திருவாரூரில், 24, 25-8 1940-ல் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டுத் தலைமையுரை—'குடிஅரசு' 25-8-1940]

கடைசியாக நான் கூறுவது நமக்கு அழிவையும் கீழ்த்தன்மையையும் வசதியின்மையையும் கொடுக்கிற இந்த சாதிகள் ஒழிந்து, மக்களுக்குச் சமமான தன்மை வரும்வரை, இப்போதைய பிற்பட்ட வகுப்பினருக்கு அறிவு வளர்ந்து நாகரிகம் அடைந்து அரசியலில் கலந்துகொள்வதற்காகக் கல்வி, உத்தியோகம் முதலியவைகளில் அவரவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விகிதாச்சாரம் அளிக்கப்படவேண்டும் என்பதுதான்.

இந்த நாட்டில் பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேராயும் ஆதித் திராவிடர்கள் 16 பேராயும், பார்ப்பனரல்லாதார் 100-க்கு 72 பேராயும் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கைப்படிதானே அவரவர்களுக்கு உத்தியோக விகிதாச்சாரம் கொடுக்கவேண்டும்? அதை விட்டுவிட்டுத் தகுதி, திறமை என்ற பேரைச் சொல்லி பல துறைகளில்—'எல்லாவற்றையும் நானே எடுத்துக்கொள்வேன், உனக்கு ஒன்றுமில்லை' என்று பார்ப்பனர்கள் கூறினால், அதை நாம் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? ஒரு கூட்டு வியாபாரத்தில் கடைசியில் வருகிற இலாபத்தில் அவரவர்கள் போட்ட முதலுக்கு ஏற்றவாறுதானே பங்கு பிரிக்கவேண்டும்? அதைவிட்டு, எல்லாவற்றையும் ஒருவனே எடுத்துக்கொள்வது என்பது என்ன நியாயம்? நம்மவர்களுக்குள்ளேயும் சாதியின்படியே வேண்டுமென்றால் எடுத்துக்கொள்ளட்டும். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், சாதிகளை ஒழிக்காமல் அவைகளை விட்டு வைத்துக்கொண்டு, இதிலே மட்டும் சாதித் தன்மை கூடாது என்பதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? நாம் வரி கொடுக்கிறோம். நமக்குத் தகுந்தபடி கொடுக்கவேண்டும் என்று கேட்பது வகுப்புவாதமா? சுயராஜ்யம் வந்தபின் உத்தரவு போட்டுமே—சாதி இல்லையென்று. அதை விட்டுவிட்டு, மதச் சார்பற்ற சர்க்கார் என்று விளம்பரப்படுத்திக்கொண்டு, ஸ்டாம்பில் கோபுரத்தை, நடராசர் உருவத்தை வைத்துக்கொண்டிருப்பது என்றால் என்ன நியாயம்?

100-க்கு 80 பேராக இருக்கும் நமக்கு 45 விகிதம்தான் உத்தியோகம். ஆனால் 100-க்கு 3 பேராய் இருக்கும் பார்ப்பனருக்கு 15 விகிதம் கொடுக்கிறார்கள். நமக்கு ஆளுக்கு ½ வீதம், பார்ப்பனருக்கு மட்டும் ஆளுக்கு 5 வீதமா! இதைக் கேட்பது வகுப்புவாதமா?

[குன்னத்தில், 2-4-1950 ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1950]

நாம் நம்முடைய உரிமைகளைப் பெறுவது என்றாலே என்ன அர்த்தம் என்றால், நம்முடைய உரிமைகளைப் பறித்து அனுபவித்து வருகிற எதிரிகளின் ஆதிக்கம் அழிவு என்றுதான் அர்த்தம் ஆகும். அவர்களுடைய அழிவின்மீதுதான் நாம் நம்முடைய உரிமைகளைப் பெறமுடியும். அந்த அளவுக்கு அவர்கள் நம்மீது நம் உரிமைகளைப் பெறுவதற்கில்லாமல் ஆதிக்கம் பெற்று இருக்கிறார்கள்.

ஆனால், இந்தக் காரியம் சுலபமானதல்ல; சாதாரணமாகச் சாதித்து விடலாம் என்கிறதான தன்மையில் இல்லை. இது மிகப்பெரிய காரியம் என்பதோடல்லாமல் மிகமிகப் பயங்கரமான—பலர் பலியாக வேண்டிய காரியமாகும். நம்முடைய எதிரிகளுக்கு இருக்கிற வசதிகளும், பக்கபலமும் மிகமிக ஏராளமானவைகள் மதமும், கடவுளும், சாஸ்திரங்களும்; ஆட்சியும், அதனைச் சார்ந்தவைகளும் அவர்கள் பக்கம் இருக்கின்றன என்பதுடன்,



நம்முடைய எதிரிகளைப் பாதுகாப்பதற்கு ஆகவே, நம்முடைய எதிரிகளின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக வென்றேதான் அவைகளோடுகூட சர்க்காரும் இருந்துவருகிறது.

எதிர்த்துப் போராடுகிற நம் எதிரிகளுக்கு ஒற்றுமை அதிகம்; நமக்கு எவ்வித பலமும் கிடையாது; நமக்குள் ஒற்றுமையும் கிடையாது; துரோகிகளும் அதிகம். ஆனாலும் நாம், பலமிக்க வலுவுற்றிருக்கும் நம்முடைய எதிரிகளை எதிர்த்துப் போராடியாக வேண்டும். இதற்கு மனத்துணிவு வேண்டும்.

[வாடிப்பட்டியில், 20-5-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-5-1951]

இந்தியா சாதிப் பிரிவாக அமைந்த நாடு. இந்த சாதி, மதத்தின் அடிப்படையிலும், மத தர்ம அடிப்படையிலும் இருந்து வருவதுடன், ஆட்சிக்கொள்கையும் 'சாதி–மத–தர்ம அடிப்படையில் கைவைக்கக்கூடாது' என்ற தன்மையில் இருந்து வருகிறது.

இது மாத்திரமல்லாமல், பல நாடுகள் சேர்ந்த உபகண்டமாக இந்தியா இருப்பதால், நாடுகளின் உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டியதாய் இருக்கிறது.

வெகுகாலமாக இந்திய மக்களுக்குக் கல்வி அறிவும், உரிமை உணர்ச்சியும் இல்லாமலிருந்த காரணத்தினால் கையில், சூழ்ச்சியில், ஏமாற்றும் சக்தியில் வலுத்த கூட்டத்தினர் சகல துறைகளையும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொண்டு சாதியில், கீழ்த் தரத்தில் உள்ள 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்களை 100-க்கு 3 பேராக உள்ள மக்கள் மத தர்ம காரணமாய் மேல்சாதி ஆக நேர்ந்த வாய்ப்பை வைத்துக்கொண்டு, எந்த விதத்திலும் தலைதூக்கவிடாமல் அழுத்தி வைத்துக்கொண்டே வந்தார்கள்.

அன்னியன் ஆட்சி காரணமாய் ஏதோ ஒருவகையில் கல்வியும் உரிமையும் பெறத் தக்க உணர்ச்சி கொண்டுவிட்டபடியால், போராடிப் பெறவேண்டிய தகுதிக்குத் தமிழர்கள் வந்துவிட்டார்கள்.

தமிழருக்கு என்றைய தினம் இந்த உணர்ச்சி ஏற்பட்டதோ அன்று முதல் பார்ப்பனர் அறிவிழந்து துள்ளிக்குதித்து, அவர்கள் வசமிருந்த எல்லா ஆதிக்கத்தையும் பாழாக்கி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில், தமிழர்கட்கு வகுப்பு உணர்ச்சி ஏற்பட்ட காலமான 1920ஆம் ஆண்டு முதல் நாட்டில் ஒழுக்கம், நாணயம், அமைதி, கண்ணியம், நீதி, நேர்மை முதலிய எல்லா நற்குணங்களையும் ஒழியும்படி செய்துவிட்டார்கள். யோக்கியன், அயோக்கியன் என்ற பேதமே இல்லாமல் செய்துவிட்டார்கள். மனிதனுக்கு மனிதன் தான் எப்படிப்பட்ட ஈனத் தன்மையான காரியங்களைச் செய்தாவது வாழவேண்டியதுதான் மனிதப் பண்பு என்று ஆக்கிவிட்டார்கள். ஆண்களோ, பெண்களோ யாரும் ஒழுக்கத்தைப்பற்றியோ, நாணயத்தைப்பற்றியோ சிந்திப்பது முட்டாள்தனமென்றே ஆக்கிவிட்டார்கள்.

இன்றைய நிலைமைச் ஒரு இராணுவ ஆட்சி ஏற்பட்டுச் சர்வாதிகார அரசு ஏற்பட்டால் ஒழிய, மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படாது; நல்வாழ்வு ஏற்படாது என்கின்ற நிலையை உண்டாக்கிவிட்டார்கள்.

காரணம், 'தங்கள் நிலை பாதுகாப்பாய்விட்டது; மற்ற எவன் எக்கேடு கெட்டால்தான் நமக்கென்ன?' என்கின்ற முடிவுதான். இப்பொழுது இந்த இரண்டு ஆண்டு காலமாக இந்தியாவில் நாடு முற்றும் ஒவ்வொரு நாட்டிலும் எளிதில் அடக்கமுடியாத காலித்தனங்கள் தாண்டவமாடுகின்றன. அதுவும், உலக அறிவு அற்ற, பொறுப்பு அற்ற இளைஞர்களைக் கொண்டு துவக்கச்செய்து, காலிகளை ஏராளமாகச் சேர்த்துக்கொண்டு காலித்தனங்கள் நடைபெறச் செய்துவருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



மனுதர்மத்திற்கு மாறான தன்மையைக் காங்கிரஸ் கொள்கையாகக் கொண்டவுடன் நாட்டை அன்னியன் வசப்படுத்தியாவது, தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் துணிந்து விட்டார்கள். நாட்டில் இமயம் முதல் குமரிவரை உள்ள எல்லாச் செல்லாக் காசுகளையும், கீழ்த்தர மக்களையும், சமுதாய எதிரிகளையும், எதைச் செய்தாவது வயிறு பிழைக்குந் தன்மையில் உள்ளவர்களையும் தேடிப்பிடித்துத் தங்கள் வசமாக்கிக்கொண்டு, பேடி யுத்தம் நடத்துகிறார்கள்.

இந்த நிலையில் பொறுப்பும், நேர்மையும் உள்ள மக்கள் எல்லாம் பயந்துகொண்டும் மறைந்துகொண்டும் வாழவேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள்.

நாட்டின் நிலைக்கு ஒரு சின்ன எடுத்துக்காட்டு காட்டுவதானால், அண்மையில் நடந்த தேர்தலையே பார்க்கலாம். தேர்தலில் அபேட்சகர் ஒரு லட்சம், ஒன்றரை லட்சம், இரண்டு லட்சம் ரூபாய்வரை செலவு செய்து இருப்பதுடன், இப்படிச் செலவு செய்தவர்கள் சிலர் தோற்றும் போயிருக்கிறார்கள் என்பதும், சில காலிகள் தேர்தலில் நின்றதன்மூலம் 10, 20, 30 ஆயிரம் ரூபாய், ஒரு லட்ச ரூபாய்வரை பணம் சேர்த்துக்கொண்டார்கள் என்று கூடச் சொல்லும்படியான அளவுக்குக் காரியம் நடந்திருக்கிறது என்கிறார்கள். காமராசரைத் தோற்கடிப்பதற்காக இரண்டரை இலட்சம், மூன்று இலட்சம் செலவு ஆயிற்று என்று சொல்லுகிறார்கள்!

இந்த நிலைபற்றி நான் சொல்லுவது அபேட்சகர்களைப் பொறுத்தோ, கட்சிகளைப் பொறுத்தோ, அரசியல் தன்மையைப் பொறுத்தோ மாத்திரம் அல்ல; மக்களைப் பொறுத்துமேதான் கூறுகிறேன். இப்படிப்பட்ட நாட்டில் பொதுத்தொண்டு, அரசியல் தொண்டு, சமுதாயத்தொண்டு என்று எதைச் செய்கிறது என்பது நமக்குத் தோன்றவில்லை.

முதலாவது, நம்மைத் திருத்திக்கொண்டுதான் எந்த வேலையையும் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

இந்த நிலை இப்படியே இருக்குமானால், நமது எதிர்காலம் மிகமிக மோசமாகப் போய்விடும். ஆனதால், இப்போது உள்ள வசதியைக்கொண்டு நமது வகுப்பு விகிதாச்சார உரிமையை நாம் முதலில் பெற்று ஆகவேண்டும். அதற்குப் பல சங்கடங்கள் ஏற்படலாம் என்றாலும் எதிரிகள் கையாளும் எல்லா முறையையும் நாம் கையாளப் பின்வாங்கக்கூடாது.

மற்றும், மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் வேலையில் நாம் தீவிரமாய், அதிதீவிரமாய் ஈடுபட்டாகவேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன் நாம் சென்ற அளவில் நமது சுய மரியாதைக் கொள்கைகளைப் பரப்புவதில் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம்தான் பாமர மக்கள், இளைஞர்கள் நம்மிடம் பற்றுக்கொள்ளுவார்கள்.

அரசியல் பணிக்குக் கருத்து வேற்றுமை, கொள்கை வேற்றுமை போட்டி உண்டு. மூடநம்பிக்கையை ஒழிப்பதற்கு இவை குறுக்கிடாது; பார்ப்பனரும், இமிடேஷன் பார்ப்பனரும் தவிர, மற்ற மக்கள் யாவரும் நம்முடன் சேருவார்கள்; ஆதரவளிப்பார்கள்; அதற்கு இது தக்க சமயம்; தக்க வாய்ப்பு என்றே கருதுகிறேன்.

நாம் இந்த எண்ணம் கொண்டுதான் காங்கிரசை ஆதரித்தோம். ஆனால், காங்கிரஸ் நம்மை ஆதரிக்கவில்லை; சிறிதுகூட ஆதரிக்கவில்லை. அரசியல் தன்மையில் நெருங்கினதால் பாமர மக்கள் நம்மீது பற்றுக்கொண்டிருந்தும் நம்மை ஆதரிக்கவில்லை. கடைசியாய்ச் சொல்லுகிறேன். எனக்கு வயது 88. இனி நான் எவ்வளவு நாளைக்கு இருக்க ஆசைப்படமுடியும்! எவ்வளவு நாளைக்குத்தான் இருக்கமுடியும்? என் நிலை எனக்குத் தெரியும். ...அதனால்தான் சொல்லுகிறேன், வகுப்புரிமை பெற்றே ஆகவேண்டும் என்று.

['விடுதலை'–தலையங்கம்—18-3-1967]



பதவிகள் வழங்குவதில், உத்தியோகம் வழங்குவதில் அரசாங்கம் எந்தச் சாதியாருக்கும், எந்த மதத்தினருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது.

ஒவ்வொரு சாதிக்கும், ஒவ்வொரு மதத்திற்கும் அதைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ அந்த எண்ணிக்கை விகிதப்படி பதவி, உத்தியோகம் முதலியவைகளை வழங்கவேண்டும்.

தகுதி, திறமை என்பதெல்லாம் எல்லா சாதி–மத வகுப்பிலும் சமமாக இருந்து வருகின்றன. ரொம்பவும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்புக்கள் என்பவைகளுக்குத் தகுதியிலேயே சலுகை காட்டப்பட்டு வருகிறது; அதுவும் சட்டப்படியே காட்டப்பட்டு வருகிறது. இப்படிக் காட்டப்பட்டு வருவதால் அதன் காரணமாய் நிர்வாகம், நாணயம், பண்பு, நேர்மை ஆகியவற்றில் ஒன்றுக்கொன்று பேதம் காணும்படியாக எதுவும் தென்படவில்லை.

மேல் சாதியாரில், மேல் நிலையில் அய். சி. எஸ். (I.C.S.)ல் உள்ளவர்களில் நாணயக் குறைவு, ஒழுக்கக் குறைவு, பண்புக் குறைவு இருந்திருக்கிறது என்றால், அது பெருவாரி எண்ணிக்கையுள்ள மற்ற சாதி வகுப்பாரை விடச் சிறு எண்ணிக்கையுள்ள பார்ப்பன்ச் சாதியில்தான் அதிகமாக இருந்துவந்திருக்கிறது. அதுபோலவே, கூடுதலாக எண்ணிக்கையுள்ள இந்து மதக்காரர்களைவிடக் குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்கின்ற மதஸ்தர்களில்தான் அதிக விகிதாச்சாரப்படி நடந்திருக்கிறது.

சலுகை, சிபாரிசு, அந்தந்த இனத்தாரின் பிரவேசம், மேல் பதவிகளில், நீதிபதிகளில் அந்த இனத்தார் இருப்பது ஆகிய காரணங்களால் பெருமளவு அவை மறைக்கப்பட்டு விடுகிறதானாலும், பெருவாரியாக உள்ள மக்கள் விகிதாச்சாரத்திற்கும் அதிகம் என்று சொல்லலாம் ஆனாலும், தயவாய்க் கொள்வதனால் குறைந்ததல்ல என்றே சொல்லலாம்.

இவை ஏன் சொல்லப்படுகிறதென்றால், மொத்த ஜனத்தொகை விகிதத்தில் தகுதி–திறமை, நாணயம், நேர்மை, ஒழுக்கம் காரணமாக எந்த சாதி, மத வகுப்பு மக்களும் ஒரு சதம், அரை சதவிகிதம் கூட அதிகமாகவோ குறைவாகவோ பெறத் தக்கவர் யாரும் இல்லை என்பதற்காகவே சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் மிகச்சிறு எண்ணிக்கையுடைய 100-க்கு 2, 3 என்கின்ற கிறிஸ்தவர்களும், பார்ப்பனர்களும் விகிதாச்சார எண்ணிக்கைக்கும் மேல், கொள்ளை விகிதத்தில் ஒன்றுக்குப் 'பத்தாக', 'இருபதாக' என்கின்ற அளவில் பெற்றிருப்பதும்; அது போலவே முஸ்லிம்களும் தங்கள் எண்ணிக்கை விகிதத்திற்குக் குறைவில்லாமல், அதுவும் உயர்—டாப் (Top) பதவிகளை அடைந்திருப்பதும், நாட்டிற்கு உடையவனான தமிழன் அதுவும் மொத்தத்தில் 100-க்கு 60, 70 விகிதத்திற்கு மேற்பட்டவன் தன் விகிதத்திற்குப் பகுதிகூட எட்டமுடியாமல் தவித்துக் கொண்டிருப்பதும் என்றால், பதவி வினியோகத்தில், உத்தியோக வினியோகத்தில் எவ்வளவு மோசடி, வஞ்சகம், சூது, வாது நடக்கிறது என்று சொல்ல வேண்டி இருக்கிறது?

தமிழனே மெஜாரிட்டியாக, பெருவாரியாக வெறும் தமிழனாகவே ஆட்சித் தலைமையிலிருக்கும் ஆட்சியில் இப்படி நடக்கின்றது என்றால், தமிழனின் இழிதன்மைக்கு இதைவிட வேறு ஆதாரம் என்ன வேண்டியிருக்கிறது?

பதவி, உத்தியோகம் வழங்குவதில் சாதி, மதம் பார்க்கக்கூடாது என்பதாகச் சட்டம் இருக்கிறது என்றால் அந்தச் சட்டத்தின் கருத்து குறைந்த சாதி, மத வகுப்புக்கு அதிக எண்ணிக்கை கொடுக்கவேண்டும் என்பதும் சாதி–மத வகுப்பில் அதிக எண்ணிக்கை உள்ளவர்களுக்குக் குறைந்த விகித பதவி–உத்தியோகம் வழங்க வேண்டுமென்பதும்தான் அர்த்தமா?

படிப்பகம்

www.padippakam.com



அப்படியில்லாவிட்டால். பார்ப்பனர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் என்பவர்களுக்கு மாத்திரம் இவ்வளவு அதிகமாகவும், குறைவில்லாமலும் எப்படிக் கிடைக்க முடிகிறது? இது ஆட்சியிலிருப்பவர்களின் கவலையற்றதும், சுயநலத்திற்கு எதையும் விட்டுக் கொடுக்கலாம் என்கின்ற தன்மையுமல்லாமல் வேறு என்ன?

இவற்றையெல்லாம்விடத் தமிழனுக்கு ஒரு பெரும் கேடு என்னவென்றால், தமிழர்களிலேயே பாடுபடாத ஒரு வகுப்பு 'நாங்கள் மாமிசம் சாப்பிடமாட்டோம்; மண்வெட்டி தொடமாட்டோம் ஆனதால் நாங்கள் சைவர்கள்; பார்ப்பனருக்கு அடுத்தவர்கள்; நாங்கள் சமுதாயத்தில் 100-க்கு ½ (நூற்றுக்கு அரை) பேராக இருந்தாலும் எங்களுக்கும் பார்ப்பனர் போல் அதிகப் பங்கு இருக்கவேண்டும்' என்று உரிமை கொண்டாடி, பார்ப்பனருக்கு அடுத்தபடியாக பதவி, உத்தியோகம் பெற்றிருப்பதாகும்.

இந்தக் காரணத்தால்தான் இந்தக் கூட்டம் இன உணர்ச்சி அற்று இருப்பதுடன், இவர்களுக்கு வாய்ப்பு வந்தால் பார்ப்பனர், கிறிஸ்தவர் கிடைக்காவிட்டால் மலையாளிகள் ஆகியவர்களுக்குப் பதவி வழங்கி உழைப்பாளித் தமிழனை அழுத்திவைப்பதுமாகும்.

என்னைப் பொறுத்த வரையில் நான் ஒரு சமுதாய சீர்திருத்தத் தொண்டன்.

இன்றல்ல, நேற்றல்ல 60, 70 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பார்ப்பனரை வெறுத்து வருபவன்; அதாவது, திரு. பா. வெ. மாணிக்க நாயக்கர் ஈரோட்டில் இன்ஜினியராயிருந்த 1902-ல் இருந்தே; இது நாமக்கல் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கே நன்றாய்த் தெரியும்.

நான் அரசியலில் பல மாறுதலில் ஈடுபட்டிருக்கலாம் என்றாலும் சமுதாயத் துறையில் பார்ப்பனீய வெறுப்புள்ளவன் நான். அதுதான் என்னைப் பகுத்தறிவுவாதியாக (நாத்திகனாக) ஆக்கியது.

இந்தச் சமுதாய சீர்திருத்தம் என்பதற்கு முதற்படி பார்ப்பன ஆதிக்கத்திலிருக்கும் பதவி, உத்தியோகங்களை விகிதாச்சாரம் கைப்பற்ற வேண்டியது என்பதைத்தான் A. B, C, D-யாகக் கொண்டேன்—கொண்டோம். ஆனதினாலேயேதான் நான் வகுப்புவாதி என்று சொல்லப்பட்டேன் என்பதல்லாமல் நானும் வகுப்புவாத உருவமாகவே இருந்துவருகிறேன்.

50, 60 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழர், முழுக் தமிழர் ஆட்சி ஏற்படும் வாய்ப்புக் கிட்டிய பிறகு கூட தமிழன் தன்னாட்டுப் பதவி, உத்தியோகம் முதலியவைகளில் தமிழன் ஏகபோகமாக, அதிகமாக அனுபவிக்காவிட்டாலும் அவனது விகிதாச்சாரம்கூட அனுபவிக்க முடியவில்லையானால், தமிழன் எதில், எங்கே முன்னேறி இருக்கிறான் என்று கேட்கிறேன்? மான உணர்ச்சி பெற்றா இருக்கிறான்?

ஆதலால், இன்றைய மந்திரிகள் இதுபற்றிக் கூடிப் பேச வேண்டும்; என்னென்ன முறையை, வழியைக் கொண்டால் தமிழன் தன் உரிமை பெற்றவனாக ஆகமுடியும் என்று சிந்திக்கவேண்டும்.

உண்மையான காங்கிரஸ்காரன் யாராய் இருந்தாலும் அவன் தமிழனாகவே இருக்க முடியாது; அது மாத்திரமல்லாமல் பார்ப்பானின் கூலியாகத்தான் இருக்கமுடியும்.

இன உணர்ச்சி இல்லாதவனுக்குத்தான் காங்கிரஸ்காரன் என்று பெயர். தேசபக்தன், தேசியவாதி என்றாலே (என் அகராதிப்படி) இனத் துரோகி என்பதுதான் பொருள்.

காங்கிரஸ்காரர்களால்—காங்கிரசினால் தமிழன் ஒருநாளும் சமுதாயத்தில் உயர முடியவேமுடியாது. 'காங்கிரஸ் என்றால் பதவிவேட்டை என்றுதான் சொல்லியாக



வேண்டும். அதன் தோற்றத்தில் இருந்து சிந்தித்தால்தான் இது விளங்கும். நான் சொல்லுகிறேன்: இந்தத் துறையில் தி.மு.க. ஆட்சிகூட மக்களை ஏய்க்கலாம்; ஆனால், அதன் பலனை அடையாமல் இருக்கமுடியாது.

ஆதலால், தி.மு.க. ஆட்சி ஒவ்வொரு பதவி, உத்தியோகம் பற்றிக் கையெழுத்துப் போடும்போதும் பார்ப்பானா, கிறிஸ்தவனா, முஸ்லிமா, சைவனா, மலையாளியா, தமிழனா என்பதைப் பார்த்துத்தான் கையெழுத்துப் போடவேண்டும். கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்டால், தமிழனைப் பலி கொடுத்ததாகத்தான் பொருள். காமராசர் தமிழனுக்குக் கண் கொடுத்தார்; தி.மு.க. தமிழனை எழுந்து நடக்கச் செய்யவேண்டும்.

கண்ணிருந்தும் குருடனாய் இருப்பதில் ஜீவனுக்குப் பயன் என்ன?

நான் இவ்வளவு வேண்டுகோள், செய்வது முதல் மந்திரிக்கு மாத்திரமல்ல; முக்கியமாக மற்ற பத்து மந்திரிமார்களுக்குமேயாகும்.

ஆகவே, கவனிக்கவேண்டும்; கவனிக்கவேண்டும்; கண்டிப்பாய்க் கவனிக்க வேண்டும்.

['குடி அரசு'-தலையங்கம்—5-3-1969]

கல்வித் துறையில் அரசாங்கம் பெரிய 'பார்ப்பனீயம்' செய்துவருகிறது. அடுத்த ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சேருவதற்கு நுழைவுத் தேர்வுகளை நடத்துவதற்குத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதாம்! எதற்காக?

பாஸ் செய்த சர்ட்டிபிகேட்டில், 'காலேஜில் சேர—சேர்த்துக்கொள்ளத் தகுதி உடையவன் (Eligible for College Course)' என்று எழுதிக் கையெழுத்துச் செய்து கொடுத்துவிட்டு, காரியத்தில் 'மார்க்கு' பார்த்து—திறமை பார்த்துப் புகுமுகப் பரீட்சை வைத்துச் சேர்க்கவேண்டும் என்று உத்தரவு போடுவதும், தாதரம் பார்க்காமல் சேர்க்கக் கூடாது என்பதும் பார்ப்பனீயமா, அல்லவா? ஏனென்றால், இவை பார்ப்பானின் மூளையில் தோன்றியவைதானே?

பிற்படுத்தப்பட்ட வகுப்பு, தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பவர்களைக் கல்வி விஷயத்தில் குழியில் தள்ளி மூடுவதுதானே இந்த யோசனையின் பலன்?

கல்வித்துறை அதிகாரம் பிற்படுத்தப்பட்ட வகுப்பார்—தாழ்த்தப்பட்ட வகுப்பார் கையில் இருந்தால் இந்த எண்ணம் அவர்களது ஞாபகத்துக்காவது வருமா? மொத்த ஜனத்தொகையில் முற்பட்ட வகுப்பு மக்கள் எவ்வளவு? பிற்படுத்தப்பட்ட வகுப்பார் ஜனத்தொகை எவ்வளவு? வரி கொடுப்பதில் யார் 1-க்கு 3 ஆக, 4 ஆக வரி கொடுக்கிறார்கள்? ஓட்டர்களில் அதுபோல் யார் அதிகம்? நாளைக்கு பதவிக்கு நிர்வாகிகள் ஆசைப்பட்டால் ஓட்டர்கள் இதை எண்ணிப் பார்க்கமாட்டார்களா? கல்வித் துறையில் பார்ப்பன ஆதிக்கத்தை உயிருக்குத் துணிந்து ஒழித்ததன் பலன் இதுதானா? இராஜாஜி, பக்தவத்சலனார் உத்தரவுகளுக்கும்—இதற்கும் என்ன பேதம்? இதனால் யார் பயனடைவார்கள்?

உத்தியோகத்திற்குத் 'தகுதி—திறமை' பார்ப்பதே யோக்கியமற்ற காரியம் என்று, 40 ஆண்டுகளாகச் சொல்லிப் போராடிவருகிற நான், பாஸ் செய்தவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்குத் தரம் பார்க்க வேண்டுமென்றால். பெரிதும் 'சாதி தரம்' தவிர வேறு தரம் என்ன என்று கேட்கிறேன். 'நாம்தான் பாஸ் பண்ணாதவனை 'பெயில்' ஆக்குகிறோமே! 'தகுதி திறமை' பார்த்துச் சேர்க்கப்பட்டவனும் பெயில் ஆகிறானே?

நான், மனித சமுதாயத்தின் 'தகுதி', 'திறமை', 'தரம்' என்பவைகளைப் பார்த்து வந்த அனுபவமுடையவன். அவைகளைப் பற்றி நான் எழுதிவந்த கருத்துக்கள் இன்னமும்

படிப்பகம்

www.padippakam.com



இருக்கின்றனர். பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்காக, தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்காக உழைத்து வந்தவன்—வருபவன் நான். மந்திரிகள் முதல்—அவர்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆகித் தீர வேண்டும் என்பவன்.

கல்வி விஷயத்தில்—இந்த ஆட்சியைவிடக் காமராசர் ஆட்சி மிக்க தேவலாம் என்று ஆகிவிடக்கூடாது.

பாஸ் செய்த பின்பு—'தகுதி, திறமை, தரம்' எதற்காகப் பார்க்கப்படுகின்றது? அது எதற்காக வேண்டும்? அதன் அர்த்தம் என்ன? அதன் பலன் என்ன? மந்திரி சபையில், பெரிய பதவியில், அதிகாரத்தில் 'தரமுள்ளவர்'களால், 'திறமை' உள்ளவர்களால் ஏற்பட்ட நன்மை, பெருமை என்ன? 'தகுதி, திறமை, தரம்' அற்றவர்களால் ஏற்பட்ட கெடுதி என்ன? அதிகாரம், உத்தியோகங்களிலும் வகுப்பு, உள்வகுப்பு, உட்பிரிவு, சாதி வகுப்புரிமை வேண்டும். சர்க்காருக்கு 50 கோடி ரூபாய், மது இலாக்கா மூலம் வருவாய் கிடைத்திருக்கிறது. இது யார், எந்த வகுப்பார் தந்த பணம்? இந்த வருவாய் கொடுத்தவர்களை வடிகட்டுவதுதான் பலனா? இதைக் கவனிக்க வேண்டும்.

கண்டிப்பாய் அரசாங்க அகாரதியில் 'தகுதி, திறமை, தரம்' என்ற சொற்களை எடுத்துவிடவேண்டும்.

இது என் சொந்தக் கருத்து.

['விடுதலை'–தலையங்கம்—18-7-1972]

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பார்ப்பானுக்கு விரோதமாகிவிடுகிறது என்பதற்காக சர்க்காரில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதை 1950-ல் எடுத்துவிட்டார்கள். பிறகு நாங்கள் செய்த கிளர்ச்சிகளின் பயனாகச் சட்டத்தில் கொஞ்சம் திருத்தம் செய்திருக்கிறார்கள். படிப்பு, உத்தியோகம், சமுதாயம் ஆகியவற்றில் பின்தங்கியவர்களுக்குச் சலுகை காட்டத் திட்டம் ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று அரசியல் சட்டத்தில் எழுதியிருக்கிறார்கள். அரசியல் திட்டத்தால் ஆதித் திராவிடருக்கு மாத்திரம் அவர்களுக்குரிய விகிதாச்சாரம் கிடைத்திருக்கிறதே ஒழிய, மற்ற திராவிட மக்களுக்கு விகிதாச்சாரம் கிடைக்கவே இல்லை. இப்படி நாங்கள் கூறுவதை ஆதித் திராவிடர்கள் தங்களுக்கு விரோதமானது என்று கூறிக்கொள்கிறார்கள். மற்ற திராவிட மக்களுக்கு அவர்களால் (ஆதித் திராவிடர்களால்) ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. ஆனாலும், நாம் எவ்வளவோ செய்தோம். அப்படி இருந்தும் 'பிராமணர்கள் தேவலை, சாதி இந்துக்களால்தான் எங்களுக்குத் தொல்லை'—என்று ஆதித் திராவிடர்கள் கூறுகிறார்கள். இது நன்றியற்ற பேச்சு. அவர்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்தவர்கள் யார்? பார்ப்பனர்களா? நாங்கள் செய்த கிளர்ச்சியாலும், முயற்சியாலும்தான் இன்று அவர்கள் சமுதாயத்தில் தலையெடுக்க முடிந்தது. அவர்கள் படிப்புத் துறையில் முன்னேற வழிகாட்டியவர்கள் நாங்களே. ஆதித் திராவிடர்களின் கோயில், தெரு நுழைவுக்கு முதல் முதல் போராடியவர்கள் நாங்கள்தாம். ஆதித் திராவிடர்கள் படித்தவர்களாகவும், உத்தியோகஸ்தர்களாகவும், சட்டசபை உறுப்பினர்களாகவும், மந்திரிகளாகவும் ஆனார்கள் என்றால், பார்ப்பனர்களாலா? இதற்கெல்லாம் அவர்கள் நன்றி செலுத்தவில்லை என்றாலும், நமக்கு விரோதிகளாகவாவது ஆகாமல் இருக்கவேண்டாமா?

[சென்னை பெரியார் நகரில், 17-9-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-9-1956]



# 2. வகுப்புவாதம், சமூகவாதம்

## 1. இந்துமகாசபையும் வகுப்புவாரி உரிமையும்

இந்து மகாசபை ஆதியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே, இது பிராமண ஆதீனத்திற்காக ஏற்படுத்தப்பட்டதென்றும், பிராமணரல்லாதாரின் பிறவி இழிவைப் பலப்படுத்துவதாய் முடியும் என்றும், இந்தியாவின் ஜன சமூகத்தின் நான்கில் ஒரு பாகத்திற்கு மேலாய் இருக்கும் முகமதிய சகோதரர்களின் அதிருப்திக்கும், சந்தேகத்திற்கும் இடமளிக்கக் கூடியதாகும் என்றும், இந்து மகாசபை ஆரம்பித்ததற்கே, முகமதிய சகோதரர்களின் நடவடிக்கைகளைத்தான் முக்கிய காரணமாகச் சொல்லிவருவதால் வெகுகஷ்டப்பட்டு மகாத்மாவினால் ஏற்பட்ட இந்து–முஸ்லிம் ஒற்றுமை அடியோடு மறைந்துபோகுமே என்றும், நமது 'குடிஅரசி'ன் பத்திராதிபர் பல தடவைகளிலும், பல பிரசங்கங்களிலும் சொல்லிக்கொண்டே வந்திருக்கின்றார்.

அது மாத்திரமல்லாமல், நமது தமிழ்நாட்டில் இந்து மகாசபைக்குக் கிளைகளாக ஏற்படுத்தப்பட்ட சபைகளிலெல்லாம், வருணாசிரம தர்மிகளும், பிறவியிலேயே தாங்கள் உயர்ந்தவர்களென்று சொல்லிக்கொள்பவர்களுமே, அக்கிராசனாதிபதிகளாகவும், காரியதரிசிகளாகவும் நியமுகம் பெற்றிருக்கின்றார்கள் என்பதும் அனுபவத்தில் தெரிந்த விஷயம். பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக, இந்து சபையிலிருக்கும்போது தீண்டாமை ஒழிய வேண்டும் என்று ஓர் போலித் தீர்மானத்தை ஏற்படுத்திக்கொள்வதும், அதே ஆசாமிகள் மறுபடியும் வருணாசிரம சபையென்று கூட்டி, அதிலும் உட்கார்ந்துகொண்டு தீண்டாமை வேத சம்மதமென்றும், மனுதர்ம விதி என்றும், இதற்கு விரோதமாய் இருக்கும் மகாத்மா காந்தியை ஒழிக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் செய்வதையும் நாம் பார்க்கின்றோம்.

சென்னை மாகாணத்தில் இந்து மகாசபையின் கிளைத் தலைவர் ஸ்ரீமான் டி. ஆர். இராமச்சந்திர அய்யர் என்பதை வாசகர்கள் அறிவார்கள். அவர் வருணாசிரம தர்மத்தினுடையவும், பிறவியில் தான் உயர்ந்த பிராமண சாதி என்பதினுடையவும், தீண்டாதான் என்பவன் தெருவில் நடக்கக் கூடாது, கண்களில் படக்கூடாது என்பதினுடையவும் அவதாரம். அதே மாதிரி கும்பகோணம், தஞ்சை, நாகப்பட்டினம், கோயமுத்தூர் முதலிய இடங்களில் உள்ள இந்து மகாசபைத் தலைவர்களும், சென்னைத் தலைவருக்கு இளைத்தவரல்லர். கும்பகோணம் இந்து மகா சபையிலேயே தீண்டாமை சாஸ்திர சம்மதமானதென்றும், அதை ஒழிக்கக் கூடாதென்றும் ஓர் தீர்மானம் செய்திருப்பதாக நமக்கு ஞாபகம் இருக்கிறது. இப்படி இருக்க, இந்து மகாசபையை நாட்டில் பரப்புவது, எப்படி இந்து மதத்திற்கு நன்மை பயப்பதாகும்? ஓர் கொள்கைக்காக ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டால், அந்தக் கொள்கைப்படி நடப்பவர் கிடைக்காவிட்டாலும், அந்தக் கொள்கையை நம்புகிறவர்களாவது அந்த ஸ்தாபனத்தை நடத்துகிறவர்களாய் இருக்க வேண்டாமா? ஸ்ரீமான் இராமச்சந்திர அய்யர் தீண்டாமையை ஒழிப்பதைக் கொள்கையாகக் கொண்ட ஒரு சபைக்குத் தலைவராக அங்கம் வகிப்பதானது, வாஸ்தவத்திலேயே அச் சபையின் யோக்கியதையைக் காட்டுவதாகுமா? அல்லது, அச்சபையின் புரட்டுகளைக் காட்டுவதாகுமா?

நமது நாட்டிலுள்ள சில வைதிகர்கள் எப்படிப் பாமர ஜனங்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறலாம் என்கிற கொள்கைக்கு ஸ்தாபனங் கண்டுபிடிக்கக் கருத்தாய் இருக்கின்றார்களே யல்லாமல், உண்மையாக ஓர் காரியத்தைச் செய்வதற்கு ஒருவரும் இல்லை. இந்து மகா சபையின் ஸ்தாபகர் ஸ்ரீமான் மாளவியா அவர்களே, தீண்டாதாரைப்பற்றிப் பேசும்போது, கண்களில் ஜலம் விடுகின்றாரேயல்லாமல், பிறவியில் தனக்கும் தீண்டாதாருக்கும் வித்தியாசம் இல்லை என்பதை ஒப்புக்கொள்வதே இல்லை. தன்னைப் பெரிய வருணாசிரம தர்மியாகத்தான் ஒப்புக்கொள்கின்றார். முஸ்லிம்களின் உபத்திரவங் காரணமாக இந்து

படிப்பகம்

www.padippakam.com



மகாசபை ஏற்படுத்துவதாயிற்று என்று சொன்ன காரணத்தால், பஞ்சாபில் முஸ்லிம்கள் செய்கையால் அதிருப்தி கொண்ட லாலா லஜபதி ராய் அவர்களும், இந்து மகாசபையில் சேர்ந்து, இந்து மகாசபைக்கு உழைக்க முன்வர வேண்டியதாயிற்று.

இந்துக்கள் அதிகமாய் இருக்கிற பாகங்களில், இந்துக்களல்லாதவர்களைத் தாழ்மையாகக் கருதுவதும், இந்துக்களில் பிராமணர்கள் அதிகமாய் இருக்கிற பாகங்களில், பிராமணரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும், முகமதியர்கள் அதிகமாக இருக்கிற பாகங்களில் முகமதியரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும் கிறிஸ்தவர்கள் அதிகமாய் இருக்கிற பாகங்களில், கிறிஸ்தவர்களல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும் பெரும்பாலும் உலக சுபாவமாகவே கருதுகிறோம். அதோடு கொஞ்சம் செல்வாக்கு உள்ளவர்களும், செல்வாக்கு இல்லாதவர்களைத் தாழ்மையாகவே கருதுவதும் சுபாவமாகத்தான் இருக்கிறது. உதாரணமாக, இந்துக்கள் முகமதியர்களையும், கிறிஸ்தவர்களையும் மிலேச்சர்கள் என்று சொல்லுவதையும், முகமதியர்களைத் தொட்டால், தொட்டபாகத்தை வெட்டியெறிய வேண்டுமெனச் சொல்லிவந்ததையும்; இந்துக்களுள் பிராமணரல்லாதவர் மிலேச்சர் என்று அகராதியில் எழுதியிருப்பதையும்; பிராமணர் பிராமணரல்லாதாரை விபச்சாரி மகன், வேசிமகன், சூத்திரன் என்று எழுதிவைத்துக் கொண்டிருப்பதையும்; முகமதியர் இந்துக்களை 'காபிர்' அதாவது, 'நாத்திகர்' என்று சொல்வதையும்; கிறிஸ்தவர்கள் இந்துக்களை 'அஞ்ஞானிகள்' என்று சொல்லுவதையும் தினமும் பார்த்தும் கேட்டும் வருகிறோம். இந்தத் தத்துவத்தினாலேதான், இன்றைய தினம் நாம் நமது இராஜ்யத்தை இந்திய அரசாங்கமாகச் செய்து கொள்ளாமல், பிரிட்டிஷ் அரசாங்கமாகச் செய்து வைத்துக் கொண்டிருக்கிறோம். நமது பொய்க் கிளர்ச்சியின் பலனாக ஒருசமயம் பிரிட்டிஷ் அரசாங்கம் தொலைந்தாலும், ஜெர்மனி அரசாங்கமோ, ஜப்பான் அரசாங்கமோ, அல்லது வேறு எந்த வெளிநாட்டு அரசாங்கமோ ஏற்படுமேயல்லாமல், ஒருகாலும் இந்திய அரசாங்கம் ஏற்படும் என்று கருதுவதற்கே வகையில்லாமல் இருக்கிறது. லாலா லஜபதி ராய் அவர்கள் தமது பிரசங்கத்தில், முஸ்லிம்கள், முஸ்லிம் இராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டும் என்று ஏதோ ஒரு பத்திரிகை எழுதுவதாகவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதாகவும் ஆதலால் இடங்கொடுக்கக்கூடாதென்றும் வெகு எளிதில் சொல்லிவிட்டார்.

இந்திய அரசாங்கத்தில், இந்திய ஜனங்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்ட பெரிய சமூகத்தாராகிய முகமதிய சகோதரர்களுக்குப் பங்கு உண்டா, இல்லையா?

அவர்கள் ஏழரைக்கோடிப்பேரும் இனிமேல் இந்தியாவை விட்டுப்போக முடியுமா? அவர்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால், இராஜ்ய விஷயத்திலும், மத விஷயத்திலும் நமக்குச் சரியான அந்தஸ்துப் பெற்றுத்தானே ஆகவேண்டும்?

வகுப்புப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால், அவர்களுக்குச் சம உரிமை கிடைத்துவிடுமா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முகமதியர்களுக்கு ஏற்படாததற்கு முன், முகமதியர்கள் சொற்பமாய் உள்ள எந்தப் பிரதேசத்திலாவது, தேர்தல்களில் ஒழுங்கான பிரதிநிதித்துவம் பெற்று இருக்கிறார்களா? உதாரணமாக, நம் நாட்டிலுள்ள தீண்டாதார் என்று சொல்லப்படுவோரை நாம் எப்படி வைத்திருக்கிறோம்? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 200 ஆண்டுகளாகியும், ஒரு தீண்டாதானாவது தேர்தல்களில் நின்று, இந்தியனுடன் போட்டி போட்டு ஜெயம்பெற சக்தியுண்டாகி இருக்கின்றானா? எந்த ஒரு தீண்டாதானல்லாத இந்தியனாவது, தீண்டாதவனும் நமது சமூகத்தில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை உள்ளவன்தானே—அவனை நிறுத்தி அவனுக்கு நம்முடைய வோட்டைக் கொடுத்து, நமது அரசியல், சமூகவியல் இவைகளில் அவனுக்குள்ள பங்கைக் கொடுக்கவேண்டுமென்று ஸ்ரீமான்கள் மாளவியா, லஜபதி ராய் போன்ற யாராவது அனுபவத்தில் காட்டியிருக்கிறார்களா? மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் சம சுதந்திரம் அடைவதோடல்லாமல், உயர்ந்த நிலைமையையும் அடைய ஆசைப்படுவது; ஒவ்வொரு ஜீவனின் சுபாவமாகும்



அப்படி இருக்க, 'உன்னுடைய சமத்துவத்திற்கு நானும் பிரயத்தனப்படமாட்டேன். நீ பிரயத்தனப்பட்டால் அதையும் ஒழிப்பதற்கு நான் பிரயத்தனப்படுவேன்' என்று சொல்லுவது சமத்துவ மனித தர்மமாகுமா? இந்தியாவில் இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முகமதியர்களும், இந்துக்களினால் தீண்டப்படாதவர்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையும், சம உரிமையும் பெற்றால் அல்லாது, இந்தியா விடுதலை அடையும் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனம் என்றே சொல்லுவோம். சம உரிமையும், நம்பிக்கையும் ஏற்படவேண்டுமானால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மனம் ஒப்பிக் கொடுப்பதுதான் ஏற்ற மருந்தாகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உணர்ச்சியை அடக்கி மழுப்பிவிடலாம் என்று நினைப்பது, சரீரத்தில் ஏற்பட்ட ஒரு புண்ணை மருந்து போடாமல் மூடிவைத்துவிடுவதனால் அது ஆறிப்போகும் என்று நினைப்பது போல்தான் முடியும். இந்துமகாசபைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் விரோதம் என்று சொல்வதனால் அவ் இந்துமகாசபை, நமது தேசத்தின் ஒற்றுமைக் குறைவுக்கும், துவேஷத்திற்கும் ஏற்பட்ட மற்றொரு சாதனமென்றுதான் சொல்லவேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி 'இந்து' பத்திரிகை என்னும் பிராமணப் பத்திரிகை எழுதியிருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். அதாவது :—

'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஜனங்களிடையே சுயமதிப்பை உண்டுபண்ணியிருக்கிறதென்பதையும், சமுதாய முன்னேற்றத்திற்குக் காரணமாய் இருக்கிறது என்பதையும், அது ஏற்படுவதற்குமுன் இராஜ்ய வாழ்வில் அலட்சியமாய் இருந்த வகுப்பினர்களுக்கு இராஜ்ய அறிவு புகட்டுவதற்கான வசதிகளை அது உண்டுபண்ணியிருக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது' என்று எழுதியிருக்கிறது.

இந்தக் குணங்களை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் உண்டாக்கி இருக்குமேயானால், இந்தியாவிலுள்ள மற்ற எல்லா ஸ்தாபனங்களையும்விட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அதிக பலன் அளித்து இருக்கிறது என்பதில் சந்தேகம் உண்டா? ஆதலால், இந்துமகா சமூகமானது ஒரு கூட்டத்தாரின், ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கு அனுகூலமானதேயல்லாமல், தேசப் பொது நன்மைக்கு உற்றதல்ல என்பதையும்; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவந்தான் தேச ஒற்றுமைக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பரஸ்பர நம்பிக்கைக்கும் சஞ்சீவி என்பதையும் நாம் உறுதியாகச் சொல்லலாம்.

[குடி அரசு'-தலையங்கம்—13-12-1925]

## 2. நாட்டுநலம் வேறு; வகுப்புநலம் வேறா?

தற்கால இராஜீய உலகத்தில் எவனாவது ஒருவன் தன் வகுப்பு முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதும், மற்றும் தாழ்ந்த வகுப்பு முன்னேற்றத்தைப்பற்றிப் பேசுவதும் தேசத் துரோகமெனவும், ஆண்மைத் துரோகமெனவும் மதிக்கப்பட்டுப் போகிறது. இந்நிலை நமது நாட்டின் பிற்பட்ட வகுப்பாருடையவும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருடையவும் ஈனஸ்திதியை விளக்குவதோடு, முற்பட்ட வகுப்பாருடையவும் உயர்ந்த வகுப்பாருடையவும் ஆதிக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் நல்லாண்மைக்கென ஏற்பட்ட பத்திரிகைகள் மிகுந்திருந்த போதிலும், அவைகள் முற்பட்ட வகுப்பாருக்கும், உயர்ந்த வகுப்பாருக்கும் பயந்துகொண்டு வகுப்பு நலனை நாடுவதும், இல்லாண்மையாக்கிக் கொள்ளுவதும், நல்லாண்மை ஆகாதென்றும் சொல்லித் தங்கள் பத்திரிகைகளை நடத்தி வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட ஒவ்வொரு வகுப்பாருக்கும் தங்கள் தங்கள் ஆண்மைகளை அடையவும் நாட்டு நலன்களின் சம உரிமை அடையவும் மார்க்கமில்லாதிருக்கும்போது தேச உரிமையும், நாட்டு உரிமையும் யாருக்கு? வகுப்புரிமை பெற்றால் வகுப்புச் சச்சரவுகளை உண்டாக்கும் எனச் சொல்லிக்கொண்டு பல வகுப்புரிமைகளையும் நாசமாக்கி ஒரு வகுப்பார் சகல உரிமைகளையும் அடைந்து முன்னிற்பதை, மற்ற வகுப்பார் பார்த்துக்கொண்டு அவர்கட்கு அடிமையாயிருக்கவேண்டும் என்று சொல்லுவதில் எவ்வளவு யோக்கியமிருக்கும்?



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



நமது நாட்டில் பல வகுப்புக்களிருந்தபோதிலும் ஒவ்வொரு வகுப்பையும் கவனித்து அதற்கு வேண்டிய சுயமரியாதை ஏற்பட்டிருக்கின்றதா? தேசத்தில் வரும் ஆக்கம் பல வகுப்புக்களுக்கும் சரிவரப் போய்ச் சேர மார்க்கமிருக்கின்றதா என்பதைக் கவனித்து, வேலை செய்தால், அது தேசத்தையே முன்னுக்குக் கொண்டு வந்ததாகும். அப்படிக்கின்றி, முன்னாலிருக்கிற வகுப்பாரை மாத்திரம் கூட்டிக்கொண்டு அவர்கள் மெச்சும்படி அவர்கள் பின்னாலும் திரிந்துகொண்டு நாட்டுநலம், நாட்டுநலம் என்று சொல்லிக்கொண்டும், வகுப்பு நலத்தைத் தேடினால் நாடு கெட்டுப்போகும் என்றும், சொல்லிக்கொண்டு திரிந்தால் ஒரு நாடு எப்படி முன்னுக்கு வரும்?

ஒரு நாடு என்பது ஒரு நாட்டிலுள்ள பல வகுப்பாரின் நலத்தையும் பொறுத்ததா? ஒரு வகுப்பாரின் நலத்தை மாத்திரம் பொறுத்ததா? உண்மையான நாட்டு நலத்தைத் தேடுவோர், தாழ்ந்த வகுப்பாருடைய நலத்தையும் பிற்பட்ட வகுப்பாருடைய நலத்தையும் தேடுவதைத்தான் நாட்டு நலமென்று நினைப்பார்கள். நாடு என்பது சகல வகுப்பாருக்குமே யொழிய, வலுத்த வகுப்பாருக்கென்று மாத்திரம் ஏற்பட்டதல்ல. 'வகுப்பு நலன் தேடுவது என்றால், நமது நாடு பல வகுப்புக்களையுடையதாயிருக்கிறது; ஆதலால், பல வகுப் பாருடைய நலனையும் தேடுவதாய் ஏற்படும்; அப்போது அது முடியாத காரியமாகிவிடும். ஆதலால், நாட்டு நலம், நாட்டு நலம் என்று பொதுவாய்ச் சொல்லிக்கொண்டிருப்பதுதான் அனுகூலமானது' என்று சிலர் சொல்லுகிறார்கள். நமது நாடு பல வகுப்பாரைக் கொண்ட தாகவே எந்தக் காரணத்தினாலோ ஏற்பட்டுப்போய் விட்டது. பல வகுப்பாருக்கும் நம்பிக்கை உண்டாகும்படியாக நடந்துகொள்ள வேண்டியதுதான் நாட்டின் நலன் தேடுவோரின் கடமை!

நாட்டு நலன் தேடுவோரின் ஒவ்வொரு திட்டமும் சகல வகுப்பாரின் நம்பிக்கைக்கும் ஏற்றதாய்த்தான் இருக்கவேண்டும். தற்போது நமது நாட்டில் வகுப்பு என்று சொல்லக் கூடிய மாதிரியில், வகுப்புரிமைக்கு ஆவலையும், ஒன்றுக்கொன்று அவநம்பிக்கையாயும் இருப்பது மூன்றே வகுப்புக்கள்தாம். அவை பிராமணர், பிராமணரல்லாத இந்துக்கள், பஞ்சமர் என்று சொல்லக்கூடிய மூன்று வகுப்பார்கள்தாம். இதை எல்லோருமே—சர்க்கார் உட்பட, நாட்டு உரிமை தேடுவோர் உட்பட—எல்லோரும் ஒப்புக்கொண்டாய்விட்டது. ஆந்திரர், தமிழர், கர்நாடகர், கேரளர் என்கின்ற பிரிவைச் சொல்லி ஜனங்களை ஏய்க்க வேண்டியதில்லை. இவற்றைத் தனித்தனியாகவே பிரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஏற்பாடு செய்தாகிவிட்டது. காங்கிரசிலும் அதுபோலவே பிரித்தாகிவிட்டது. ஆதலால், அதைப்பற்றிக் கவலையில்லை.

எனவே, மேற்சொன்ன மூன்று வகுப்பார்கள்தாம் ஒருவருக்கொருவர், அவநம்பிக் கையுடனிருக்கிறார்கள். 'இவர்களுக்கு உரிமை வழங்கிவிட்டால் இவர்களுக்குள்ளாகவே பல வகுப்புக்கள் கிளம்பும்' என்று சொல்லி, ஜனங்கள் புத்தியைக் கலைக்கக்கூடும். அப்படி யிருந்தாலும் சகல வகுப்பாரின் நலனையும் கவனிக்கத் தகுந்த திட்டம் போடுவதற்கு முடியாதென்று பயப்பட வேண்டியதில்லை. வகுப்புக்களுக்குத் தகுந்தபடி உத்தியோகங் களும், ஸ்தானங்களும் அமைக்கவும் சவுகரியமிருக்கிறது. 3¼ கோடி ஜனங்களுள்ள இங்கி லாந்து பார்லிமெண்டில் 700 மெம்பர்கள் இருந்து இராஜ்யபாரம் செய்கிறார்கள். ஆதலி னால், நமது நாட்டிலும் சகல வகுப்பாரையும் இராஜ்யபாரத்தில் சேர்ப்பது கஷ்டமல்ல. இரட்டை முதல் வகுப்புப் படியும், 5000, 6000 ரூபாய் சம்பளமும் கொடுக்காமல், 3-வது வகுப்புப் படிச்செலவும், 400, 300 சம்பளமும் கொடுத்தால் எல்லாம் சரிக்கட்டிப் போகும். அப்போது அதிகப் போட்டியிருக்காது. ஆதலால், வகுப்புரிமையைப்பற்றிப் பயப்பட வேண்டியதில்லை.

அல்லாமலும், நமது நாட்டில் அதிகமாகப் பிரிவினைகள் இருக்கின்றதாக நினைத்துக் கொள்ளுகின்றோமேயல்லாமல், வாஸ்தவத்தில் அளவுக்கு மிஞ்சினதாக ஒன்றுமில்லை.



பிராமணர்களும், தாங்கள் ஒரு வகுப்பென்றும், தங்களைத் தவிர மற்றவர்களில் சூத்திரர்—பஞ்சமர் என இரண்டு வகுப்புக்கள்தான் இருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிராமண ரல்லாதாரும், மேற்சொன்ன பிராமணரல்லாதார் எல்லாம் ஒரு வகுப்பென்றும், தங்களுக் குக் கீழ் பஞ்சமர் என்று ஒரு வகுப்பும் இருப்பதாகத்தான் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பஞ்ச மர்கள், தாங்கள் ஒரு வகுப்பென்றும், மற்றவர்கள் தங்களுக்கு மேற்பட்ட வகுப்பென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இம் மூன்று வகுப்பாரும் தங்களில் ஒருவருக்கொருவர் வித்தி யாசமிருப்பதாகக் கற்பித்துக் கொள்ளுவதால், இம் மூவருக்கும்தான் ஒருவருக்கொருவர் நம்பிக்கை உண்டாகும்படி தக்க உரிமைகள் ஏற்படவேண்டியது மிகவும் அவசியமான தாகும். இம் மூவரும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் உயர்வு—தாழ்வு இல்லை; எல்லோ ரும் சமம்தான்; மனித உரிமையை அடைவதில் நாம் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர்கள்—தாழ்ந்தவர்களல்ல என்கிற உணர்ச்சி வருகிற காலத்தில் வகுப்புரிமையைப்பற்றிய கவலையே வேண்டியதுமில்லை; வகுப்பின் பேரால் உரிமையும் கேட்க அவசியம் ஏற்படாது. அப்படிக்கில்லாமல், பல வகுப்பாரும் சேர்ந்து கஷ்டப்பட்டு ஒரு பதவியைச் சம்பாதித்தால் அதை ஒரு வகுப்பாரே அனுபவிப்பதற்கு அனுகூலமாகவும், மற்ற வகுப் பார்கள் சூத்திரர்கள் என்றும், பிற்பட்டவர்கள் என்றும், தீண்டாதார்கள் என்றும், தெரு வில் நடக்கவும்—கண்ணில் தென்படவும் அருகர்களல்லவென்றும், ஒரு வகுப்பார் ஒரு வகுப் பாரால் கருதப்படுகின்றபோது, வகுப்புரிமையைக் கவனிக்காமல் நாட்டுரிமையைக் கவனிக்க வேண்டுமென்று சொல்லுவது நல்லாண்மையல்லாததும், அர்த்தமில்லாததும், பித்தலாட்ட உரிமையாகவுமேதான் முடியும்.

['குடி அரசு'-தலையங்கம்—14-2-1926]

## 3. வகுப்புவாதமா? சமூகவாதமா?

வகுப்புவாதம் எல்லா வகுப்புக்கும் சம சந்தர்ப்பமும், சம சுதந்திரமும் வேண்டும் என்கின்றது. சமூகவாதம் தங்கள் சமூகம் மாத்திரம் எப்போதும் உயர்வாகவே இருக்க வேண்டும் என்கின்றது. நமது 'குடி அரசு' தோன்றியபின் இதன் இரகசியங்கள் வெளியாகி, இவைகள் எல்லாம் மறைந்து, இப்போது வகுப்புவாதிகளை ஒழிப்பது என்பது தவிர, வேறு எவ்விதக் கொள்கையும் திட்டமும் இல்லாமல் போய்விட்டது. வகுப்புவாதிகள் யார், அல்லா தவர்கள் யார் என்று பார்த்தாலோ அது இவைகளை எல்லாம்விட மிகயோக்கியமானதாக இருக்கும். அதாவது, வகுப்பு வித்தியாசம், சாதி உயர்வு—தாழ்வு, ஒரு வகுப்புக்கு ஒரு நீதி ஆகியவைகள் அடியோடு கூடாது என்றும், எல்லா வகுப்புக்கும் சமஉரிமையும் சம சந்தர்ப் பமும் இருக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பவர்கள்தாம் இக்கூட்டத் தாருக்கு வகுப்புவாதிகளாகத் தென்படுகின்றார்கள்.

உயர்ந்த வகுப்பு என்பதாக ஒன்று உயர்ந்திருக்கவேண்டும், தாழ்ந்த வகுப்பு என்பதாக ஒன்று தாழ்ந்திருக்கவேண்டும்; பார்ப்பனர்கள் உயர்ந்த வகுப்பு, மற்றவர்கள் அவர்களைவிடத் தாழ்ந்த வகுப்பு; சூத்திரர், பஞ்சமர் என்கின்ற வித்தியாசம் இருக்க வேண்டும். இந்த வித்தியாசங்களை ஒழிக்க யாரும் முயற்சிக்கக்கூடாது; எவ்வித சட்டமும் செய்யக் கூடாது—என்பவர்கள் இவர்களுக்கு வகுப்புவாதிகள் அல்லாதவர்கள். சுருங்கச் சொன்னால், அவர்கள் கொள்கைப்படி பார்ப்பனர்களும் அவர்களை நத்திப் பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்களும் அவர்களது கூலிகளும் தவிர மற்றவர்கள் எல்லோரும், அதாவது பார்ப்பனரல்லாதவர்கள் எல்லோரும் வகுப்புவாதிகள் ஆவார்கள்.

எப்படியென்றால், நாமும் இதைத்தான் சொல்லுகின்றோம். அதாவது, சர்க்காரை யும், தேசத்தையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம். சமூகவாதிகளை முதலில் அழிக்க வேண்டும் என்பதேயாகும். இந்தத் தேசம் பாழாய்ப் போவதற்கும்; இந்த சர்க்கார் இங்கு இவ்வளவு அநீதியான ஆட்சி புரிவதற்கும், சமத்துவக் கொள்கை பரவாதிருப்பதற்கும் எந்த

படிப்பகம்

www.padippakam.com



ராஜ்யம் இல்லாததால் என்று யாராவது சொல்லுவதானாலும் அந்தப் பூரண சுயராஜ்யம் என்பதும் இந்த சாதி மத, வகுப்புத் தொல்லைகளாலேயே தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

அய்ரோப்பிய யுத்தம் நேசக் கட்சியாருக்கு வெற்றியாக முடிந்தவுடன், நேசக் கட்சியாராகிய பிரிட்டன், அமெரிக்கா, பிரெஞ்சு ஆகியவர்கள் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் அன்னிய நாடுகளை விட்டுத் தங்கள் ஆதிக்கத்தை—ஆட்சியை விலக்கிக் கொள்கிறோம் என்று உலகத்தாருக்கு வாக்குக் கொடுத்தபடி விலகிக் கொள்ளுகிற வேலையில் முனைந்து விட்டார்கள். அமெரிக்கர் பிலிப்பைன் முதலிய தீவுகளைப் பூரண சுயேச்சையுள்ள நாடுகளாக ஆக்கிவருகிறார்கள். இதில் பிலிப்பைன் தீவுக்காரர்களே நம்பிக்கை கொண்டு திருப்தி அடைந்து வருகிறார்கள். பிரெஞ்சுக்காரர்களும் அதைப் பின்பற்றுகிறார்கள். பிரிட்டிஷாரும் அதற்குத் தக்க ஏற்பாடுகளை உண்மை உள்ளத்தோடு நாணயமாக நடத்தி வருகிறார்கள்.

நாட்டுக்கு நாடு அதிகார ஆதிக்கப் பேராசை இல்லாமல் அதைத் தனித்தனியாய்ப் பிரித்து விட்டுவிடுவதாய் இருந்தால் கலகமே விளைய இடமில்லை என்பதும்; வகுப்புக்கு வகுப்பு—சாதிக்குச் சாதி ஆதிக்கம், அதிகாரம் செய்யச் சூழ்ச்சி செய்யாமல் விகிதாசாரம், கல்வி, பொருளாதார வசதி, உத்தியோகம், பதவி இருக்கும்படி செய்து விட்டால், உள்மாகாணக் கலவரங்கள், கட்சிப் போராட்டங்கள், அரசியல் பித்தலாட்டங்கள் நடப்பதற்கு இடமே ஏற்படாமல் போய்விடும் என்பதும் உறுதியாகும்.

உதாரணமாக, திராவிட நாட்டை எடுத்துக் கொண்டால் இங்கு நடப்பது அரசியல் கட்சிப் போராட்டமா? அல்லது, ஒரு சாதியின் பேராசை, சூழ்ச்சிப் பித்தலாட்டத்தால் விளைந்த விளைவுப் போராட்டமா?

திராவிட நாட்டில் பதவிகள், பெரும் உத்தியோகங்கள் பாடுபடாமல் சராசரி வரும்படிக்கு 100-க்கு 100 பங்குக்கு மேலாகக் கொள்ளை அடித்து உயர் வாழ்வு வாழும் வாழ்க்கைப் போகபோக்கியங்கள் ஆகியவை பார்ப்பனர்கள் என்கின்ற ஒரு சாதியாருக்கே பெரிதும் ஏகபோகமாய் இருந்து வருவது தேசியமாய் இருக்கக் காரணம் என்ன? இப்படி இருந்தால் மற்ற சாதி வகுப்பார்கள் ஆத்திரப்பட மாட்டார்களா? கட்சி ஏற்படுத்த மாட்டார்களா?

வங்காளம், பீகார், நவகாளி போல் திராவிட நாடும் ஒரு நாளைக்குப் பார்ப்பனர்—திராவிடர் என்கின்றதான கலவரங்களுக்கு அடிமை ஆகாதா? அந்தந்த சாதி வகுப்புக்கு எண்ணிக்கைக்குத் தக்கபடி அதிகாரம், பதவி, உத்தியோகம், கல்வி, வருவாய் முதலியவைகளைப் பிரித்து விடுவதனால் எப்படித் தேசியம் கெட்டுப்போகும்? இன்று தமிழ்நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் திராவிட மக்களேயாகும். அவர்களுடைய புத்தி, திறமை, சக்தியாவும் திராவிடர்களுக்குச் சராசரி எவ்வளவோ, அவ்வளவையே கொண்டதாகும். அப்படி இருக்க, இங்கு சென்னை மாகாணத்தில் இந்த இரு கூட்டத்தாருக்கு மாத்திரம் அவர்கள் ஜன எண்ணிக்கைக்குத் தகுந்தபடியும்—மேலாகவும் முறையே அனுபவிக்கக் கொடுத்துவிட்டு, திராவிட மக்களை ஏமாற்றி, ஆதித் திராவிடர்களை வஞ்சித்து, அடியோடு அவ்வளவையும் பெரும்பாகமாகப் பார்ப்பனர்கள் மாத்திரம் அனுபவிக்கக் காரணம் என்ன?

மக்கள் எண்ணிக்கைப்படியும் மேலும் விகிதாசாரம் பெற முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சக்தி, திறமை, தகுதி இருக்கும்போது, திராவிடர்களுக்கு ஏன் இல்லாமல் போய்விட்டது?

['குடி அரசு'—தலையங்கம்—30-11-1946]



## 5. சுதந்திரத்தால் பார்ப்பனர் இலாபக்கொள்ளை

சுதந்திரம் வந்தாலும் வந்தது—பார்ப்பனர்களுக்குத்தான் இலாபத்துக்குமேல் இலாபமாக வந்துகொண்டிருக்கிறது! வெள்ளைக்காரர்கள் இருக்கும்போது நிர்வாகத்திற்காக என்று அய். சி. எஸ். பரீட்சை வைத்திருந்தார்கள். அந்தப் பட்டம் பெறுவதற்கு இலண்டனுக்குச் சென்று படித்துவிட்டு வரவேண்டும். அப்போதெல்லாம் அந்த அய்.சி.எஸ். பட்டதாரிகளில் 50, 60 பேர் பார்ப்பனர்களாகத்தான் இருப்பார்கள். இங்கிருந்து இலண்டனுக்குப் போய்ப் படிக்க அனுப்பப்படுபவர்கள் பெரும்பாலும் அவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில், அவர்கள் படிப்புச் செலவுக்கு சர்க்கார் பணம் கொடுக்கும். ஆதலால், பார்ப்பனர்களே அதைக் கைப்பற்றி விடுவார்கள். அதைப் பெறப் பார்ப்பனர்கள் என்னவேண்டுமானாலும் செய்வார்கள்.

மற்ற வகுப்பாரைச் சேர்க்கவேண்டுமென்றால்—ஒரு மலையாளி, ஒரு கிறிஸ்தவர், ஒரு முஸ்லிமைச் சேர்த்துக்கொள்வார்கள். இவர்களையெல்லாம் சேர்த்துத்தான், 'பார்ப்பனரல்லாதார்' என்று கணக்குப் போடுவார்கள். அவர்களை மட்டும் சேர்த்துக் கொள்கிற காரணம் என்னவென்றால், அவர்கள் பதவிக்கு வந்தால் அவர்களுக்குப் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி இருக்காது. தங்கள் இன நலத்தோடு இருந்துவிடுவார்கள்; பார்ப்பனர்களுக்கு விரோதமாக இருக்கமாட்டார்கள்; இருக்கவேண்டிய அவசியமுமில்லை. ஆனால், நம்மவர்கள்—திராவிடர்கள் வந்தால் அவர்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்டுவிடும்; அதனால், அவர்கள் தங்களுக்குத் தொல்லையைக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள் என்றுதான் நம்முடைய ஆட்கள் வரமுடியாமல் செய்தார்கள்.

ஒவ்வொரு வகுப்பாருக்கும் இத்தனை உத்தியோகங்கள்தாம் என்று திட்டவட்டமாக வரையறுத்துவிட வேண்டும். அந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டு எவராவது, எந்த வகுப்பினராவது ஓர் ஆள் அதிகமாக உத்தியோகம் பார்த்தால் அவர்மீது துராக்கிரத ஆக்கிரமிப்புக் குற்றம் சாட்டப்பட்டு, அவனுக்கு வேலை கொடுத்தவனுக்கு நாணயக் குறைவுக் குற்றம் சாட்டியும் அதற்கான தண்டனையும் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அனைவரும், எல்லா வகுப்பினரும் சமநிலை எய்தமுடியும்.

இல்லையேல், மேலே இருப்பவர்கள் இன்னும் உயர உயரப் போய்க்கொண்டே இருக்க—தாழ்ந்த நிலையில், சமுதாயத்தின் அடித் தளத்திலே வாதனையுறுவோர், மேலும் மேலும் தாழ்ந்து அழிந்து போகவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

[பெரம்பூரில், 13-8-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 17-8-1950]

## 6. எஸ். முத்தையா முதலியார் வாழ்க !

நமது மந்திரி திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள் தமது ஆதிக்கத்தில் உள்ள முக்கிய இலாக்காவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை நிலைநாட்டிவிட்டார். அதாவது, பத்திரப் பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நபர்களை நியமிப்பதில், அடியிற்கண்ட வகுப்புவாரிப்படி தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும் என்பதாக ஒரு விதி ஏற்படுத்தி, அதை கவர்னர் பிரபுவாலும், மற்ற மந்திரிகள், நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலியவர்களாலும் சம்மதம் பெற்று, அமுலுக்குக் கொண்டுவர வேண்டியதான சட்டமாக்கிவிட்டார். அதாவது, பத்திரப் பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நியமிக்க வேண்டிய ஸ்தானங்கள் 12 இருக்குமானால் அவைகளில்: பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களிலிருந்து 5; பார்ப்பனர்களிலிருந்து 2; முகமதியர்களிலிருந்து 2; அய்ரோப்பிய, ஆங்கிலோ-இந்தியர்கள் அடங்கிய கிறிஸ்தவர்களிலிருந்து 2; தாழ்த்தப்பட்டவர்களிலிருந்து 1 ஆக 12 நபர்களை வகுப்புவாரி முறையில் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும் என்கின்ற சட்டம் செய்திருக்கிறார். எனவே, மேற்படி இலாக்காவுக்கு எவ்வளவு பேர் தேவை இருந்தாலும்,

படிப்பகம்

www.padippakam.com



இந்த விகிதப்படியே நியமிக்கப்படவேண்டும் என்பதாகும். இந்தத் திட்டத்தின் விகிதங்களில் 100-க்கு 3 வீதம் ஜனத்தொகை உள்ள பார்ப்பனருக்கு 100-க்கு 16 உத்தியோகம் வீதமும், 100-க்கு 20 வீதத்திற்கு மேற்பட்ட முகமதியர்களுக்கு 100-க்கு 16 வீதமும், 100-க்கு 20 வீதம் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற வகுப்பாருக்கு 100-க்கு 8 வீதமும் உத்தியோகங்கள் பங்குபிரித்துக் கொடுத்திருப்பதானது மிகவும் அநியாயமானதென்றே சொல்லுவோம். ஒருசமயம் உத்தியோகத்திற்கு ஏற்ற நபர்கள் குறைவான பங்கு கொடுக்கப்பட்டிருக்கும் வகுப்புகளில் கிடைக்கவில்லை என்று யாராவது சமாதானம் சொல்ல வருவார்களானால்—அது. அந்த வகுப்பார்களுக்கு உத்தியோகங்கள் கொடுப்பதில் அவர்களுக்குச் செய்திருக்கும் கொடுமையைவிடப் பலமடங்கு மேற்பட்ட கொடுமையாகும். என்னவெனில், உத்தியோகப் பங்கில் மண்ணைப் போட்டதல்லாமல், அந்த வகுப்புகளை உத்தியோகத்திற்கு இலாயக்கில்லை என்று அவமானப்படுத்தியதாகும். இந்தத் திட்டத்தை முகமதியர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் ஒப்புக்கொள்வதானது—'பிச்சை போடாவிட்டாலும் கவலையில்லை, தயவு செய்து நாயைப் பிடித்துக் கட்டுங்கள்!' என்றபடி—ஒரு வீட்டில் பிச்சைக்குப்போன ஒருவர்மீது வீட்டுக்காரர் நாயை அவிழ்த்துவிட்டுக் கடிக்கச்சொன்னபோது—எஜமானனைப் பார்த்து அந்தப் பிச்சைக்காரர் கெஞ்சினதுபோல்தான் ஆகும்.

எனவே, யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் விஷயத்தில் சற்றுக் கஷ்டமோ அதிருப்தியோ இருந்தாலும், சர்க்கார் உத்தியோகம் என்பவைகள் பொதுச் சொத்தென்பதையும் அதில் எல்லோருக்கும் பங்குண்டு என்பதையும் ஒப்புக்கொண்டு பங்கு பிரித்துக் கொடுக்கவும், பங்கு பிரித்துக்கொள்ளவும் ஒரு ஆதாரம் ஏற்படுத்திக்கொள்ள இடம் கிடைத்ததே—இது சமயம் நமக்கு ஒரு பெரும் வெற்றியாகும். இதுபோலவே, மற்ற இலாக்காக்களுக்கும் ஒரு விதி ஏற்பட்டுவிடுமானால் நமது நாட்டைப் பிடித்த கேட்டில் பெரும்பாகம் தொலைய மார்க்கமேற்பட்டுவிட்டதென்றே சொல்லுவோம். இந்த முறைக்கு ஒரு சமயம், அதிகப் பங்குகளுக்குப் பல வழிகளிலும் முயற்சித்துக் கொள்ளை அடித்து அனுபவித்துவரும் பார்ப்பனர்கள் ஒப்புக்கொண்டாலும், நமது அரசாங்கத்தார் ஒப்புக்கொள்வது என்பது அவர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம் என்பதே நமது அபிப்பிராயம். நமது நாட்டில் வெள்ளைக்கார ஆட்சியானது இந்நாட்டு மக்களின் இவ்வளவு அதிருப்தியின்மீதும் கவலையற்று, பொருத்தமற்ற கொடுங்கோன்மை முறையில் நடைபெற்று வருவதற்குக் காரணமே—ஒரு வகுப்பை இன்னொரு வகுப்பார் ஏய்த்து, 'கையில் வலுத்தவன் காரியம்' என்பதுபோல்—வலுத்தவன் ஏகபோக உரிமை அடையும் படியான மாதிரியில் அமைக்கப்பட்டிருக்கும் தன்மைதான் என்றே சொல்லுவோம்.

இத்தன்மையே உள் கலகங்களுக்கும், வகுப்புச் சச்சரவுகளுக்கும், ஒற்றுமையின்மைக்கும் இடமாய் இருந்துவருகின்றது. எனவே, அவர்களுக்குள்ள இந்த சவுகரியமான தன்மையை மாற்றிவிடக் கூடியதும், அடியோடு கவிழ்த்துவிடக் கூடியதுமான வகுப்பு உரிமை கொடுத்துவிட்டால் எப்படி ஏகபோக உரிமை போய்விடுமோ அதைப் போல்,—ஏகபோக ஆட்சியும் போய்விடும். ஆதலால், ஏகபோக ஆட்சியை எதிர்பார்க்கும் எந்த அரசாங்கத்தாரும் இந்த வகுப்புவாரி உரிமையை ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். இருந்தாலும் எப்படியோ சாமர்த்தியமாகவோ, தந்திரமாகவோ, நமது திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள் விதி ஏற்படுத்திக் கொண்டதுபோல் மற்ற மந்திரிகளும், நிர்வாகசபை அங்கத்தினர்களும் ஒரு விதி செய்துகொண்டார்களானால், அதிலும் முக்கியமாக—திருவாளர்கள் கிருஷ்ணன் நாயர் அவர்களும், மகமது உஸ்மான் அவர்களும் தங்கள் தங்கள் இலாக்காவுக்கு திரு. முத்தையா முதலியாரைப் பின்பற்றி இம்மாதிரி ஒரு ஏற்பாடு செய்து வைப்பதில் கவலை எடுத்து வெற்றி பெறுவார்களானால்—அதுவே அவர்களது உத்தியோக காலத்தை வெற்றி பெற நடத்தியதாகும் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம். அப்படிக்கில்லாமல், 30 நாளை எண்ணிக் கொண்டிருப்பதும், அது எண்ணி முடிந்தவுடன் ரூ. 5333-5-4 எண்ணுவதும், ரூ. 5333-5-4 எண்ணி ஆனவுடன்



மறுபடியும் 30 நாட்களை எண்ணுவதும்; மீதி ஏதாவது கொஞ்சநஞ்சம் நேரமிருக்குமானால் தங்கள் அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், சிநேகிதன், அடிமை முதலியவர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதிலும்; மறுபடியும் தங்களுக்கு மேல் உத்தியோகங்கள் கிடைப்பதற்குத் தந்திரமும் சூழ்ச்சியும் கண்டு பிடித்துக் கொண்டிருப்பதில் செலவழிப்பதுமான காரியத்தைச் செய்து கொண்டிருந்தால், அவர்களை என்னவென்றழைப்பது என்பதைப் பொது ஜனங்களுக்கே விட்டுவிடுகிறோம்.

இந்த நிலையில் பச்சைப் பார்ப்பனப் பத்திரிகையாகிய, 'சுதேசமித்திரன்' 8-11-1928 தேதி தலையங்கத்தில், 'வகுப்புப் பித்தம் தலைக்கேறி விட்டதா?' என்கின்ற தலைப்புக் கொடுத்து தனது ஆத்திர விஷத்தைக் கக்கியிருக்கின்றான்.

அதாவது எடுப்பிலேயே, 'ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிகளாக இருந்த காலத்தில் செய்யத் துணியாத அக்கிரமத்தை.........கனம். எஸ். முத்தையா முதலியார் செய்யத் துணிந்து விட்டார்' என்று ஆரம்பித்து, 'இது சட்ட விரோதமான காரியமாகும்' என்று முடித்திருக்கிறான்.

'மித்திரனின்' சாதிப் புத்தி இதுதான் என்பது ஏற்கனவே எல்லோரும் அறிந்தது தான். என்னவெனில், பார்ப்பனருக்கு இஷ்டமில்லாத எந்தக் காரியமானாலும் அதைப் பற்றி உலகமே முழுகிப்போய்விட்டதுபோல முதலில் கூப்பாடு போடுவார்கள்; அது பலிக்கவில்லையானால், பிறகு சட்டத்தைக் கொண்டுவந்து சட்டம்பேச ஆரம்பித்துவிடுவார்கள். மனுதர்ம சட்டத்தைப் போலவே வெள்ளைக்காரர் சட்டமும் பார்ப்பனர்கள் பிழைப்புக்குத் தக்கபடி ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது என்ற தைரியம் அவர்களுக்கு இருப்பதால் அவர்களுக்குச் சட்டம் என்கிற ஆயுதத்தைக் கொண்டு எப்படியும் பேசலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இனி இந்த நினைப்புக்கு இடம் கொடுக்கக்கூடாது. நம் நியாயத்திற்கு விரோதமாய் இருக்கும் எந்தச் சட்டத்தையும் மண்டையில் அடித்து உடைத்துச் சுட்டுப் பொசுக்கத் தயாராயிருக்கவேண்டும்.

'மித்திரன்' ஜஸ்டிஸ் கட்சியைப் புகழ்ந்ததற்கும் ஆதாரம் இல்லாமற் போகவில்லை. ஏனென்றால், சென்ற தேர்தலில் பார்ப்பனர்களின் விஷமப் பிரச்சாரத்தால் ஜஸ்டிஸ் கட்சிக்கு நல்ல சூடு கிடைத்துவிட்டதால், இந்தத் தேர்தலிலும் அப்படி ஏற்பட்டுவிடுமோ என்கின்ற பயத்தில் சூடு பட்டவர்கள்—பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை ஆகலாம் என நினைத்துக் குட்டிக்கரணம் அடித்து வருகின்றார்கள். இதன் பலன்களில் ஒன்றுதான் திரு. இராமசாமி முதலியாரவர்கள், தலை ஒருவருக்கும் வால் ஒருவருக்கும் காட்டுவது; இதன் பலன்தான்—திரு. பாத்ரோ அவர்கள் சமூக சீர்திருத்தத்திற்குச் சட்டம் செய்யக் கூடாது என்றது. இதன் பலன்தான்—இப்பேர்ப்பட்ட திரு. பாத்ரோ அவர்களை, பனகல் அரசர் சைமன் கமிட்டி மெம்பராக்கினதும் அவரை அக் கமிட்டிக்குத் தலைவராக்கினதும் ஆகும். இதன் பலன்தான்—தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட விஷயத்தில் சற்றும் கவலை கொள்ளாமல், தங்கள் ஆதிக்கத்தின் பெருமையில் அலட்சியமாயிருந்ததும் இன்னும் இதுபோன்ற பல இரகசியங்களும் ஆகும். எனவே, இதன் சக்தியில் இன்னும் நடப்பதைப் பார்க்கலாம் என்றுதான் காத்திருக்கிறோம். எது எப்படியானாலும், 'மித்திரன்' சாதி என்ன சொன்னாலும், ஜஸ்டிஸ் கட்சி எப்படி 'அந்தர்' அடித்தாலும் நமது மக்கள் தைரியத்தை விடாமல் அதிகாரத்திலும் பதவியிலும் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் நமது வீரர் முத்தையா முதலியார் அவர்களைப் பின்பற்ற வேண்டுமென்பதே நமது வேண்டுகோளாகும்.

['குடிஅரசு'—தலையங்கம்—11-11-1928]



படிப்பகம்

www.padippakam.com



## 7. ஜஸ்டிஸ் கட்சி சாதனை

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை வேண்டும் என்பதற்காகவே ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது.

அதிதீவிர காங்கிரஸ்வாதியாகவும், அதிதீவிர தேசியவாதியாகவும் இருந்த டாக்டர் நாயர், சர். பி. தியாகராயர் ஆகியவர்களின் முயற்சியே ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதற்குக் காரணமாகும். அக்கட்சி கல்வியில், அறிவில், உத்தியோகங்களில் பிரதிநிதித்துவத்தில் பிற்பட்டும், ஒதுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும் கிடந்த மக்களுக்குப் பாடுபடுவதை முக்கிய கொள்கையாகக் கொண்டதால் அதற்குப் பார்ப்பனரல்லாதார் கட்சி என்றும் ஜஸ்டிஸ் கட்சி என்றும் சொல்ல வேண்டியதாயிற்று.

இந்தக் கட்சியின் முன்னேற்றமும், இம்முயற்சியின் வெற்றியும், வெகு காலமாய்க் கல்வியிலும், உத்தியோகத்திலும், பிரதிநிதித்துவத்திலும் முன் அணியில் இருந்த பார்ப்பனர்களுக்கும் அவர்களது ஆதிக்கத்திற்கும் சிறிது தடையும் ஏமாற்றமும் செய்வதாக இருந்ததால், ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனர்களுடைய எதிர்ப்பிற்கும், துவேஷத்திற்கும், விஷமப் பிரச்சாரத்திற்கும் ஆளாகவேண்டியதாய் இருந்ததோடு, பார்ப்பனர்களின் சூழ்ச்சியானது பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் பிரிவினையையும் கட்சி பேதங்களையும் உண்டாக்கித் தொல்லைப்படுத்த வேண்டியதாயிற்று.

எது எப்படி இருந்தபோதிலும், பல காரணங்களால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை இன்று சென்னை அரசாங்கத்தில் ஒரு அளவுக்காவது நிலைநிறுத்தப்பட்டு விட்டதுடன், அது இந்திய அரசாங்கத்தையும் எட்டிப் பார்க்கச் செய்துவிட்டது.

இந்த நிலையானது இனி எப்போதாவது ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியின் ஆதிக்கம் (ஒழியாது) ஒழிந்துவிட்டாலுங்கூட, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை அவசியம் என்பதை அரசாங்கத்தார் உணர்ந்துவிட்டார்கள். ஆதலால், அக் கொள்கை இனி மாற்றப் படுவது என்பது சுலபத்தில் சிந்திக்க முடியாத காரியமாகிவிட்டது. பிரிதிநிதித்துவங் களிலும், உத்தியோகங்களிலும் இன்று இருந்துவரும் விகிதாச்சார எண்ணிக்கை பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கு மிகவும் குறைவாக இருக்கின்றது. என்றாலும், அந்தக் கொள்கை பார்லிமெண்ட் வரை ஒப்புக்கொள்ளப்பட்டாகிவிட்டது என்பதும் எவரும் மகிழ்ச்சியடையக்கூடிய செய்தியே ஆகும்.

அய்க்கோர்ட்டு ஆட்சிக்குட்பட்ட இலாக்காக்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை கையாளப்படாததற்குக் காரணம், ஜஸ்டிஸ் கட்சியின் பலமற்ற தன்மையேயாகும்.

ஜஸ்டிஸ் கட்சி பலமுள்ளதாக இருந்து, அக் கட்சித் தலைவர்கள் பொதுநலத்தைவிட சுயநலத்தைப் பெரிதாக எண்ணாதவர்களாக இருந்து, தங்களது சுயமரியாதைக்கு மதிப்புக் கொடுத்திருப்பார்களேயானால் 4, 5 வருஷங்களுக்கு முன்பாகவே, அய்க்கோர்ட்டு இலாக்கா விலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை அமுலுக்கு வந்திருக்கும்.

கட்சிக்குப் பலமும் ஒற்றுமையும் இல்லாது இருந்ததால் அய்க்கோர்ட்டாரை வகுப்பு வாரி முறையைக் கையாளும்படி கட்டாயப்படுத்தத் தைரியம் இல்லாமல் போய்விட்டது.

என்றாலும், இப்பொழுது பொதுஜனங்களுடைய உணர்ச்சியானது அது விஷயத் தில் பலப்பட்டு விட்டதாலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை இனி யாராலும் தடுக்க முடியாத மாதிரியில் செல்வாக்குப் பெற்றுவிட்டதாலும் இனி அதை யாராலும் அசைக்க முடியாது என்ற நிலை பெற்றுவிட்டதாலும், இப்போது அய்க்கோர்ட்டாரையும் இந்த முறையைக் கைப்பற்றித் தீரவேண்டும் என்கின்ற நிலையில் கொண்டுவந்து விட்டுவிட்டது.

அதாவது, தென்னிந்திய இரயில்வே நிர்வாகத்திற்கு 84 கிளார்க்குகள் வேண்டியிருக் கிறது. அவற்றுள்: பார்ப்பனரல்லாதார் 42, முகமதியர் 17, இந்தியக் கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர், அய்ரோப்பியர் ஆகியவர்கள் 17, தீண்டப்படாத வகுப்பார் உட்பட மற்ற வகுப்பார் 8. ஆக 84 பேர்களுக்கு விண்ணப்பங்கள் வேண்டியதாயிருக்கிறது என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள்.



[இது 11-6-1935-ந்தேதி ஜஸ்டிஸ் பத்திரிக்கையில் இருக்கிறது.]

'ஜஸ்டிஸ் கட்சி என்ன செய்தது? சுயமரியாதை இயக்கம் என்ன செய்தது?' என்று கேட்பவர்கள், இதைச் சிறிது கவனித்துப் பார்த்துவிட்டு அப்புறம் கேட்கட்டும் என்று ஆசைப்படுகிறேன்.

['குடி அரசு'-தலையங்கம்—23-6-1935]

## 8. கேபினட் மெம்பர்கள் கவனிப்பார்களா?

சென்னை அரசாங்கத்தில் உத்தியோகஸ்தர்களை அமைக்கும் பொறுப்பும் அதி காரமும் சென்னை அரசாங்க கவர்னர் பிரபுவைச் சேர்ந்தது என்று சொல்லப்படுமானாலும்— அவை பெரிதும் கவர்னர் பிரபுவின் ஆலோசனை சபை அங்கத்தினர்களான போலீஸ், லா, ரெவினியூ ஆகிய இலாக்காத் தலைவர்களுக்கே நேரிட்ட பொறுப்பும், மேற்பார்வையும், அதிகாரமுமாக இருந்து வருகின்றன.

மந்திரிமார்களோ, உத்தியோக நியமன விஷயங்களில் யாதொரு அதிகாரமும் இல்லாமலே இருந்து வருகிறார்கள். மந்திரிமார்கள் கையிலுள்ள உத்தியோகங்களோ மிகச் சிலவேயாகும். அதுவும் ஸ்தல ஸ்தாபன இலாக்கா சம்பந்தப்பட்ட வரையில்தான் அவர்களது அதிகாரம் செல்லலாம். எனினும், இந்த இலாக்காவிற்கும் செக்ரட்டரிகள் என்னும் அய்ரோப்பியர்களும், பார்ப்பனர்களும் குறுக்கிட்டு, அவற்றை மந்திரிகள் இஷ்டப்படி நடைபெறாமல் செய்யவும் இடம் வைக்கப்பட்டிருக்கின்றபடியால், அந்த அதிகாரமும் பலனற்றது என்றே சொல்லவேண்டும்.

மற்றபடி, போலீஸ்-லா-ரெவினியூ இலாக்காக்களுக்கு முன்னைய மந்திரி சபையின் பயனாய் ஒரு அளவுக்கு பல வகுப்புக்களையும் கவனித்து நியமனம் செய்யும்படியான வகுப்புவாரி முறை புகுத்தப்பட்டிருந்தும், மேற்படி இலாக்காத் தலைவர்களின் இலட்சியக் குறைவால் அம் முறையாலும் தக்க பயன் ஏற்படாமல், பழையபடியே அரசியல் உத்தி யோகம் ஒரு வகுப்பாரின் கைக்கே—அதாவது, பார்ப்பனர் கைக்கே போகும்படியாய் இருந்து வருகின்றது. இதை நாம் துவேஷத்தின்மீதோ, பொறாமையின்மீதோ சொல்ல வரவில்லை. உண்மை நிலையைக் கண்டு புள்ளி விவரங்களைக் காட்டியே சொல்லுகிறோம்.

அன்றியும், சுமார் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒரு பிரஞ்சு பாதிரியாகிய ஆபே டுபாய் என்பவர் இந்திய அரசாங்க உத்தியோகத்தைப்பற்றியும், பார்ப்பனர்களின் யோக்கியதையைப்பற்றியும் கூறி இருப்பதைப் பார்த்தால், இன்றைய நிலையைப்பற்றி நாம் எடுத்துச் சொல்லுவதை எவரும் துவேஷம் என்று சொல்லிவிட முடியாது. அவர் குறிப்பிடுவதாவது:—

'இந்தியாவைத் தற்போது ஆண்டுவரும் அய்ரோப்பியர்களைப் பார்ப்பனர்கள் வெகு சாமர்த்தியமாகத் தம் வசப்படுத்திக்கொண்டார்கள். பல ஜில்லாக்களிலுமுள்ள சர்க்கார் உத்தியோகங்களில் உயர்ந்தவைகளையும், அதிக வருமானம் வரக்கூடியவை களையும், நீதி இலாக்காக்களையும் மற்றும் சகல பதவிகளையும் பார்ப்பனர்களே கைப்பற்றி இருக்கிறார்கள். உண்மையில் சர்க்கார் உத்தியோகங்கள் எதுவும் அவர்கள் இல்லாவிட்டால் நடவாது என்கின்ற தன்மையை உண்டாக்கிக்கொண்டார்கள்.'

'மேலும் சப்-கலெக்டர்களாகவும், குமாஸ்தாக்களாகவும், மொழிபெயர்ப்பாளர் களாகவும், கஜான்சிகளாகவும், மற்ற சிப்பந்திகளாகவும் பெரும்பாலும் பார்ப்பனர்களே நிரம்பி இருக்கிறார்கள். இவர்கள் உதவி இல்லாமல் எதையும் செய்வது கஷ்டமான

படிப்பகம்

www.padippakam.com



காரியமாக அவர்கள் சாமர்த்தியத்தால் செய்துகொண்டார்கள். மேலும், இந் நாட்டு மக்களின் அபிப்பிராயத்தையும், அதைத் திருப்புவதற்குள்ள வழிகளையும் பார்ப்பனர்கள் நன்கு அறிந்திருப்பதும், பிறப்பினால் பார்ப்பனர்களுக் கேற்பட்ட உயரிய அந்தஸ்தும் பார்ப்பனர்களுக்கு எளிதில் உத்தியோகங்களைக் கைப்பற்றிக்கொள்வதற்கு அனுகூலமாக இருந்து வருகின்றன. மற்ற சாதியார் பார்ப்பனர்களுக்கு மதிப்பையும், கவுரவத்தையும் கொடுப்பதனால், இவர்களை உத்தியோகத்துக்கு நியமிப்பதால் அரசாங்கக் காரியம் பெருமையாக நடக்கும் என்ற அபிப்பிராயம் ஏற்பட இடமுண்டாயிற்று; இப் பார்ப்பனர் களின் தன்மையை ஊன்றிக் கவனிக்காமல் அவர்கள்மீது பூரண நம்பிக்கை வைப்பதால் அய்ரோப்பியர்கள் இடர்ப்படப் போகிறார்கள் என்பதில் அய்யமில்லை. இவ்வளவு தூரம் பார்ப்பனர்களுக்கு அய்ரோப்பியர்கள் இடம் கொடுப்பதால் தங்கள் உத்தியோகங்களுக்கே ஆபத்து தேடிக்கொண்டவர்களாகித் தங்கள் உத்தியோகங்களை இழக்கக்கூடிய நிலை மைக்கு வரப் போகின்றார்கள்.'

(என்று 1816ஆம் வருஷத்திலேயே பிரெஞ்சுப் பாதிரியாரான ஆபேடுபாய் எழுதி யிருக்கிறார். இது ஆலயப்பிரவேச உரிமை, 8 ஆம் அத்தியாயம், 52-வது பக்கம்)

இவை போதாமல், சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் 6, 7 வருடங்களுக்கு முன் லா மெம்பராகவும், போலீஸ் மெம்பராகவும் இருந்த காலத்தில் அந்த இரண்டு இலாகாக் களையும் பரிசுத்தமான அக்கிரகாரமாகவே ஆக்கிவிட்டுப் போனார். ரெவினியூ இலாக்காவில் அய்ரோப்பியர் இருந்துவந்தும் அந்த இலாக்கா முக்காலே மூன்றுவீசம் அக்கிரகாரமாகவே ஆக்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்குக் காரணம், பெரிதும் செக்கரட்டேரியேட்டில் உள்ள பார்ப்பன ஆதிக்கமும், சூழ்ச்சியும் என்று சொல்லப் பட்டாலும், மந்திரிமார்கள் எவரும் இதைப்பற்றிக் கவனிக்காத குற்றம் ஒரு அளவுக்குக் காரணம் என்று சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

ஆறு, ஏழு வருடம் சர். கிருஷ்ணன் நாயர் லா மெம்பராய் இருந்தார். ஏழு, எட்டு வருட காலம் சர் மகமத் உஸ்மான் சாயபு அவர்கள் போலீஸ் மெம்பராகவும், ஹோம் மெம்பராகவும் இருந்தார். இவர்கள் சர். சி. பி. இராமசாமி அய்யர் கட்டி விட்டுப் போன அக்கிரகாரக் கோட்டை அஸ்திவாரத்தைக் கடுகளவாவது அசைத்தார்கள் என்று சொல்லு வதற்கு யோக்கியதை இல்லாமலே—ஆள் ஒன்றுக்கு 3 இலட்சம், 5 இலட்சம் என்பதாக ரூபாய்களைச் சேர்த்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

சர். கே. வி. ரெட்டி நாயுடு, லா மெம்பராகி ஒரு வருடத்திற்கு மேலாகிறது; இவர் போகிற இடங்களில் எல்லாம் வகுப்பு நீதி, இராஜபக்தி ஆகியவைகளைப்பற்றிப் பேசுவதில் சிறிதும் குறைவில்லை. ஆனால், இந்த ஒரு வருட காலத்தில் நீதி இலாக்காவில் எங்கும் அக்கிரகாரமயமாய் இருப்பதை மாற்ற ஒரு கடுகளவு முயற்சியாவது எடுத்ததாகத் தெரிய வில்லை. முன்பெல்லாம் சப் ஜட்ஜுகளாகவும், ஜில்லா ஜட்ஜுகளாகவும், அய்க்கோர்ட் ஜட்ஜுகளாகவும் வக்கீல் கூட்டங்களிலிருந்து நேரடியாக நினைத்தபடி பார்ப்பனர்களே நியமிக்கப் படவில்லையா? மாதம் 200, 300 ரூபாய்கள் கூட வரும்படி இல்லாத வக்கீல்கள் பார்ப்பனர் என்கின்ற காரணத்தைத் தவிர வேறு எவ்வித யோக்கியதையும் இல்லாமல் இருந்தும், ஜில்லா ஜட்ஜாகி இன்று அய்க்கோர்ட் ஜட்ஜாக ஆக்கப்படவில்லையா? இன்று லா டிபார்ட்மெண்டில், நீதி இலாக்காவில் ஜில்லா ஜட்ஜுகள் இந்துக்கள் 18 பேர்களில் 11 பேர்கள் பார்ப்பனர்கள், 4 மலையாளிகள், 3 பார்ப்பனரல்லாத தமிழர்களே இருப்பதும்; சப்-ஜட்ஜுகள் இந்துக்கள் 66 பேர்களில் 51 பார்ப்பனர்களும், 11 மலையாளிகளும், 4 பேர்களே பார்ப்பனரல்லாத தமிழ் மக்களாக இருப்பதுவும்; 169 இந்து முன்சீப்புகளில் 115 பார்ப்பனர்கள், 17 மலையாளிகள் போக 37 பேர்களேதான் பார்ப்பனரல்லாத தமிழ் மக்களாய் இருப்பதும் பார்த்தால்—வகுப்பு நீதிக்காக உத்தியோகம் பார்க்கும் மெம்பர், வெட்கப்பட வேண்டிய காரியமா, அல்லவா என்று கேட்கின்றோம்.



லா மெம்பர் தோழர் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் 5 வருடம் மந்திரியாகவும், 3 வருடம் சவுத் ஆப்பிரிக்கா ஏஜென்டாகவும் மற்றும் இப்போது இன்னும் 2, 3 வருடங் களுக்கு மாதம் ரூ. 5333-5-4 சம்பளம் வாங்கும் லா மெம்பராகவும் இருந்தும் இவரால் இந்த சமூகம் அடைந்திருக்கும் நிலைமை இதுவானால், 'பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று சொல்லப்படுவதானது அச் சமூகத்தில் ஏதோ இரண்டொருவர் தொப்பையை நிரப்பு வதற்குத்தான் பயன்படுத்தப்படுகிறது' என்று சொல்லுபவர்களின் கூற்றை எப்படி மறுக்க முடியும் என்று கேட்கின்றோம். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், சமீப காலத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தல்களில் பார்ப்பனரல்லாத வக்கீல்கள் 100-க்கு 97 பேர்கள் பார்ப்பனர்களுக்கு (காங்கிரசுக்கு) அனுகூலமாகவே வேலை செய்தார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

பார்ப்பனர்களின் உள் எண்ணமும், காங்கிரசின் சூழ்ச்சித் தன்மையும், நாணயக் குறைவான தன்மையும் பார்ப்பனர்களுக்கு வேலைசெய்த பார்ப்பனரல்லாத வக்கீல்களுக்குத் தெரியாது என்று யாரும் சொல்லிவிட முடியாது. அந்தப்படி யாராவது சொன்னால், அது பார்ப்பனரல்லாத வக்கீல்களை மூடர்கள் என்று சொல்வதற்கு ஒப்பாகும். மற்றபடி இவர்கள் ஏன் பார்ப்பனர்களுக்குக் கூலிகளாக இருந்தார்கள் என்பதற்கு நாம் காரணம் சொல்ல வேண்டியதில்லை.

எனவே, லா மெம்பர் பார்ப்பனரல்லாத கட்சியின் நன்மையைக் கருதினவர் என்று சொல்லப்படுமானால், இந்த சர்வ வல்லமையுள்ள நீதி இலாக்காவில் பார்ப்பனரல்லாதார் களுக்கு நீதி வழங்கினாலொழிய மற்றபடி எப்படி அந்த வார்த்தை உண்மையாகும் என்று கேட்கின்றோம். ஆகவே, கனம் லா மெம்பர் அவர்கள் குறைந்தது ஒரு 50 சப் ஜட்ஜையும், 10 ஜில்லா ஜட்ஜுகளையுமாவது நேரே தெரிந்தெடுக்கும்படியான ஒரு சட்டத்தைச் செய்து, பார்ப்பனரல்லாத வக்கீல்களுக்குச் சுதந்திர புத்தியை உபயோகிக்க இடம் கொடுக்காத வரையில், அடுத்த பொதுத் தேர்தலில் தோல்விக்குக் கனம் லா மெம்பர் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களே முக்கிய காரணஸ்தராகிவிடுவார் என்பதை இப்பொழுதே எச்சரிக்கை செய்துவிடுகிறோம்.

அது போலவே, போலீஸ் மெம்பர் கனம் பன்னீர் செல்வம் அவர்கள் போலீஸ் மெம்பர் ஆனதும் அனேக தோழர்கள் அவர் அந்த இலாக்காவில் ஏதோ பிரமாதமாய்ச் சாதித்துவிடுவார் என்று எதிர் பார்த்தார்கள். ஏனெனில், அவர் தஞ்சை ஜில்லா போர்ட் பிரசிடெண்டாய் இருந்த காலத்தில் வேறு எந்தப் பிரசிடெண்டும் செய்யமுடியாத அவ்வளவு பெரிய காரியங்களில் பார்ப்பனரல்லாதார்களுக்கு நீதி செய்திருக்கிறார். தஞ்சை ஜில்லா பார்ப்பன ஆதிக்கம் உள்ளது என்பதோடு, அனேக தர்ம சொத்துக்களைப் பார்ப்பனர்களே ஏக போகமாய் வெகுகாலமாக அனுபவித்து வந்ததுமாகும். அந்த ஜில்லா, இந்த மாகாணப் பார்ப்பனர்களுக்கே ஒரு கோட்டையாகவும் இருந்தது. அப்படிப்பட்ட ஜில்லாவில் கனம் செல்வம் அவர்கள் பெரிய மாறுதல்கள் செய்து ஒரு அளவுக்கு பார்ப்பன ரல்லாதாருக்கு மனிதத்தன்மையை உண்டாக்கினார். இதை யாரும் மறுக்க முடியாது. சுயமரியாதை இயக்கம் கிறிஸ்தவ மதத்தைப்பற்றிப் பேசாதிருந்த வரையில் அச் சங்கத் துக்கு உபதலைவராகவும் இருந்தார். இவைகளை எல்லாம் உத்தேசித்தே அவர் போலீஸ் இலாக்கா தலைவர் ஆனவுடன் ரொம்பக் காரியம் செய்துவிடுவார் என்று கருதி னார்கள். ஆனால், அவர் வந்து சுமார் 10 மாத காலமாகியும் இனிக் கொஞ்ச காலமே ஆயுள் இருப்பதை உணர்ந்தும் போலீஸ் இலாக்கா பலமான ஒரு அக்கிரகாரமாகவே மேலும் மேலும் ஆகிக்கொண்டு வருவதைத்தான் பார்க்க முடிகின்றதே யொழிய, சிறிதாவது நியாயத்துக்கு ஒத்து இருக்கிறது என்று சொல்லுவதற்கே இடம் ஏற்படவில்லை.

வரவர 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பது போல்— அதாவது, ஒரு ஊரில் டிப்டி சூபரிண்டென்டெண்ட் பார்ப்பனர், இன்ஸ்பெக்டர் பார்ப்பனர்,

படிப்பகம்

www.padippakam.com



சப் இன்ஸ்பெக்டர் பார்ப்பனர் என்பதாகி மும்மூர்த்திகளும் அவர்களாகவே ஆகிக்கொண்டு வருகிறார்கள். இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் சிறியதேயாயினும் அவர்களுக்கு இந்த வகுப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டால், அவர்களால் எவ்வளவு விஷயங்கள் செய்யக்கூடும் என்பதை நினைத்துப் பார்த்தால், எவருக்கும் அதன் தொல்லைகள் நன்றாய் விளங்கும்.

இந்த இலாக்கா ஒரு சாயபு இடம். அதுவும் வேறு எவ்வித யோக்கியதையும் முக்கியமாய் இல்லாமல் பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்தவர் என்கின்ற ஒரு யோக்கியதையை முன்னிட்டே அடைந்த ஒரு சாயபு இடம் 6, 7 வருட காலம் இருந்து வந்தும்—இன்று இவ்வளவு மோசமான யோக்கியதையில் அந்த இலாக்கா இருக்குமானால் அக்கட்சி உருப்படாததற்கு இவர்கள் போன்றவர்கள்தாம் காரணம் என்று சொல்லப்படுவதை எப்படி மறுக்க முடியும் என்றும் கேட்கின்றோம். பொதுஜனங்கள் மாத்திரம் அல்லாமல், சர்க்காரும்—'ஜஸ்டிஸ் கட்சி ஒரு கட்டுப்பாடில்லாத (டிமாரலைஸ்டு)–Demoralised கட்சி' என்று சொல்லவேண்டிய நிலைக்கு வந்ததற்குக் காரணமும் இந்த—கனம் மெம்பர்களாவார்கள். பார்ப்பனர்கள் ஒரு சிறிய உத்தியோகத்தில் இருந்தாலும் ஊசி விரியன் பாம்புபோல் தங்கள் விஷத்தைப் பரப்பிக் காரியத்தைச் சாதித்துத் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். பார்ப்பனரல்லாதார்களோ மலைப் பாம்புகள்போல் இரை பொறுக்க மாத்திரம்தான் கவலையே ஒழிய, எதிரிகளைப்பற்றிக் காரியத்தில் கவலையே கிடையாது.

அவர்கள் வயிறு நன்றாக நிரம்பிவிட்டபடியால் மற்றவர்கள் பசியைப் பற்றிக் கவலையே இல்லாமல் அஜீரணத்தோடு வீடுபோய்ச் சேர்ந்துவிடுகிறார்கள். தோழர் கனம் பன்னீர்செல்வத்தின் காரியம் அப்படியிருக்காது என்றும், ஏதாவது செய்வார் என்றும், பார்ப்பனரல்லாதாரில் அவருடைய எதிரிகள்கூட நினைத்தார்கள். இப்படி ஆகிவிட்டது வருந்தத் தக்கதாகும்.

ரெவினியூ மெம்பர் என்று சொல்லப்படும் அய்ரோப்பிய மெம்பர்களோ இராஜதந்திர முறைப்படி தங்கள் காரியம் தவிர அதாவது, சர்க்காருக்கு எவ்விதக் கஷ்டமும் அசவுகரியமும் இல்லாமல் எப்படி நடக்க வேண்டுமோ அதைத் தவிர, மற்றபடி ஜனங்களின் கஷ்ட நிலைமை அவர்களுக்கு முக்கிய இலட்சியமாக இருப்பதில்லை. உதாரணமாக, அய்.சி.எஸ். கலெக்டர்கள் உத்தியோகம் 57 இந்துக்கள் பார்ப்பதில்—40 பார்ப்பனர்களும், 10 மலையாளிகளும் போக, ஏழே பேர்கள்தான் பார்ப்பனரல்லாத தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். அதுபோலவே டிப்டி கலெக்டர்களிலும் 81 உத்தியோகங்கள் இந்துக்கள் பார்க்கிறார்கள் என்றால், அவற்றில் 45 பேர்கள் பார்ப்பனர்களாகவும், 9 பேர்கள் மலையாளிகளாகவும் போக, 27 பேர்களேதான் பார்ப்பனரல்லாத தமிழர்களாக இருக்கிறார்கள். மற்றும் இந்த இரண்டு உத்தியோகமும் பொது ஜனங்கள் மீது எவ்வளவு ஆதிக்கத்தை உண்டாக்கிக் கொள்ளமுடியும் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.

இந்தப்படி ரெவினியூ இலாக்காத் தலைமை ஸ்தானங்களில் பார்ப்பனர்கள் இருப்பார்களானால் அந்த இலாக்காவில் பார்ப்பன ஆதிக்கம் இல்லாமல் வேறு என்ன இருக்கமுடியும்? கணக்குப்பிள்ளை, மணியக்காரர்கள் எந்த சாதியானாலும் பார்ப்பனருக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பார்கள். ஆகவே, இந்த மூன்று மெம்பர்களும் பார்ப்பனரல்லாதார் கட்சியுடையவும் கிளர்ச்சியினுடையவும் ஆதரவிலும் ஆமோதிப்பிலும் இருந்துகொண்டு—அந்தச் சமூக விஷயத்தில் இவ்வளவு அலட்சிய புத்தியுடன் இருந்தால் இந்நாட்டில் ஜஸ்டிஸுக்கும், நீதிக்கும் சுதந்திரத்துக்கும் எப்படி இடமேற்படும்? மத விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கத்தில் இருந்து விலகவேண்டும் என்று 'ஊசிமேல்' நின்று தவஞ்செய்யும் இந்தியாவானது பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகு அரசியல் விஷயத்திலும் பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடிமையாகும்படியாக ஏற்பட்டால், மக்களுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றம் என்பதை இந்த மெம்பர்களே யோசித்துப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.



ஆகவே, கனம் ரெவினியூ மெம்பர் குறைந்தது ஒரு 50 பேர்களையாவது பார்ப்பனரல்லாதாரிலிருந்தே நேராக டிப்டி கலெக்டர்களாகவும், 100 பேர்களையாவது தாசில்தார்களாகவும் தெரிந்தெடுத்து, தற்சமயமுள்ள குறைகளையாவது உடனே சரிப்படுத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். நிற்க, மூன்று மெம்பர்களும் ஒன்றுசேர்ந்து அவரவர்கள் இலாக்கா உத்தியோகங்களுக்கு ஒரு ஜாபிதா தயாரித்து, ஒவ்வொரு டிவிஷனிலும், தலைநகரங்களிலும் எல்லா உத்தியோகமும் ஒரே வகுப்பாராய் இல்லாமல்—உதாரணமாக டிப்டி கலெக்டர் பார்ப்பனராய் இருந்தால் தாசீல், மேஜிஸ்ட்ரேட் ஆகிய வேலைகளில் பார்ப்பனரல்லாதாராயும்; பார்ப்பனர் போலீஸ் டிப்டி சூபரிண்டென்டாய் இருந்தால் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் பார்ப்பனரல்லாதாராகவும்; மற்ற இலாக்காவும் இதுபோல் கலந்து இருக்கும்படியும்; வகுப்பு எண்ணிக்கையை அனுசரித்தும் சரியானபடி பிரதிநிதித்துவம் இருக்கும்படி செய்ய வேண்டியது அவசரமானதும் முக்கியமானதுமான கடமையாகும்.

பல ஊர்களில் இருந்துவரும் உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கை விவர ஜாபிதாக்களில் நமக்கு வந்திருக்கும் கணக்குகளைப் பார்த்தால், சரீரத்தால் பாடுபடுகின்ற உத்தியோகங்கள் போக பாக்கி எழுத்துவேலை, மூளைவேளை முதலிய—ஜனங்களிடம் செல்வாக்குப்பெறும் உத்தியோகங்களில் 100-க்கு 25 கூட பார்ப்பனரல்லாதார்களுக்கு இல்லை என்று சொல்லும்படியான நிலையில் இருக்கின்றன. இதைக் கவனித்துப் பார்த்தால் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு மூளையில்லையென்றோ அல்லது பார்ப்பனரல்லாதாரை நம்பக்கூடாதென்றோ கருதி இருக்கிறார்களா என்ன என்றுதான் கேட்கவேண்டி இருக்கிறது.

பார்ப்பனரல்லாத சில பெரிய பதவிக்காரர்களும் பெரிய உத்தியோகஸ்தர்களும் அவர்கள் சமூகத்திற்கு விசுவாசமில்லாத துரோகிகளாய் ஆகிவிட்டார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாமேயொழிய—மூளை இல்லை என்றும், நம்புவதற்கு இல்லையென்றும் ஒழுக்கமில்லை என்றும் சொல்லும்படி பார்ப்பனர்களைவிட அதிகமாக இதுவரை பார்ப்பனரல்லாதார் எவரும் நடந்துகொள்ளவில்லை.

அரசாங்கத்தாரும் மெம்பர்களும் இதைக் கவனித்துத் தக்கது செய்யவில்லையானால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் வேறு வழியில் திரும்ப வேண்டிவரும் என்பதை எச்சரிக்கை செய்கின்றோம்.

மந்திரிமார்களும் இதைக் கவனித்துத் தக்கது செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

['குடிஅரசு'–தலையங்கம்—19-5-1935]

# 3. வகுப்புரிமையின் வரலாறு

## 1. பார்ப்பனரல்லாதார் இயக்கமும் தேசத் துரோகமும்

பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்பட்டு சுமார் 15 வருட காலமே ஆகியிருந்தாலுங்கூட, அது ஏற்பட்ட பிறகு இந்த நாட்டுக்கு 100-க்கு 97 பேர்களாய் உள்ள நம் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும், சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கும் எவ்வளவு பயன் அளித்து வந்திருக்கின்றது என்பதை உணர்ந்தால், பார்ப்பனர்களின் சூழ்ச்சியும் அவர்களுக்கு உதவி செய்யும் மூடர்களுடையவும், கூலிகளுடையவும், குலத் துரோகிகளுடையவும், யோக்கியதையும் சிறிதாவது விளங்காமல் போகாது.

படிப்பகம்

www.padippakam.com



தென்னிந்தியாவில் போலீஸ் இலாக்காவிலும், முன்சீப் இலாக்காவிலும் (நிர்வாகம், நீதி என்கின்ற இரண்டு இலாக்காவிலும்) பார்ப்பனர்கள் ஆதிக்கம் இல்லாமல் இருந்திருக்குமானால், நேற்று நடந்த இந்திய சட்டசபைத் தேர்தல்களின் முடிவு இப்படி ஆகியிருக்காது என்பதற்கு அனேக ஆதாரங்கள் காட்ட நம்மால் முடியும். இது ஒருபுறமிருக்க, இந்த நாட்டுக்குப் பழம்பெரும் குடிமக்களாகிய பார்ப்பனரல்லாதார் நிலை இந்த இருபதாம் நூற்றாண்டிலும், சூத்திரராயும் சண்டாளர்களாயும் மதிக்கப்படவே முடியாது. ஆகவே, கப்பலுக்கு சுக்கான் எப்படி முக்கிய கருவியோ அதுபோல—மக்களுக்கு மக்களை நடத்துவதற்கு போலீசும், முன்சீப்பும், சுக்கான் மாதிரியாய் இருந்து வருகின்ற அவ்வளவு முக்கியமானவையாகும்.

ஆனால், உத்தியோகம்தான் பெரிதா? தேசம் பெரிதா? என்று பார்ப்பனர்கள் நம்மைப் பார்த்துக் கேள்விகள் கேட்பார்கள்; பார்ப்பனர்களது கூலிகளும், அடிமைகளும் இதற்குப் பின்பாட்டும் பாடுவார்கள்.

உத்தியோகத்தை மனத்தில் வைத்தே தேசம், தேசாபிமானம் என்று பார்ப்பனர்கள் பேசி வரும் இரகசியம் பார்ப்பனரல்லாத 'தேசாபிமானிகள்' பலருக்குத் தெரியாது என்பதோடு, பலர் தெரிந்தும் தங்கள் பிழைப்புக்கு வேறு விதியில்லாமல் பின்பாட்டுப் பாடுகின்றார்கள் என்றே நினைக்கின்றோம்.

இன்று தமிழ் நாட்டிலுள்ள தேசபக்திப் பார்ப்பனர்களை எடுத்துக் கொண்டால் அவர்களது பிள்ளை குட்டிகள் பேத்துப் பிதிர்கள் எல்லாம் எதை எதிர்பார்த்து இன்று வாழ்கின்றார்கள்—வளர்க்கப்படுகின்றார்கள்? S.S.L.C.; F.A.; B.A.; M.A.; B.L.;M.L. முதலிய படிப்புக்கள் படிக்கவைக்கிறார்கள் என்பவைகளைப் பார்த்தால், பார்ப்பனர்கள் தேசாபிமானத்தைப் பிரதானமாகக் கருதுகிறார்களா? அல்லது, உத்தியோகத்தைப் பெரிதாகக் கருதுகின்றார்களா? என்ற சூழ்ச்சி விளங்காமல் போகாது. பார்ப்பனர்கள் சர்க்கார் உத்தியோகத்தை எதிர்பார்க்காமலும்—வெறும், புத்திக்காகவும் அறிவுக்காகவும், தேசபக்திக்காகவும் படிக்கின்றார்கள் என்று, இன்று எந்த முட்டாளாவது கருதியிருக்கின்றார்களா என்று கேட்கின்றோம்.

ஆகவே, உத்தியோகத்தையே நம்பி உயிர் வாழும் ஒரு கூட்டம்—உத்தியோகத்திலேயே 100-க்கு 70, 80, 90 கணக்கில் புகுந்து கொண்டும், நத்திக் கொண்டும் மற்றவர்களை உள்ளே விட ஒட்டாமலும் சூழ்ச்சி செய்து வயிறு பிழைக்கும் ஒரு கூட்டம்—அதற்காகவே தங்கள் பிள்ளைகுட்டி, பேத்துப் பிதிர்களைத் தற்புத்தி செய்து கொண்டு அரசாங்க ஆதிக்கத்தைக் கைப்பற்ற எவ்வித இழி தொழிலையும் கையாளும் ஒரு கூட்டம், 'உத்தியோகம் பெரிதா? தேசம் பெரிதா?' என்று உத்தியோகத்தில் 100-க்கு 25 பேர்கள் கூட இல்லாத நம்மைக் கேட்பதாயிருந்தால், இதில் யோக்கியப் பொறுப்போ, நாணயமோ, கடுகளவாவது இருக்க முடியுமா என்று கேட்பதோடு, இதைக் கடுகளவு அறிவாவது இருக்கும் மனிதன் நம்பமுடியுமா என்றும் கேட்கின்றோம்.

இந்தச் சூழ்ச்சிகளை வெகு காலமாக அனுபவத்தில் தெரிந்து அனுபவித்து வந்த சர். தியாகராயர், டாக்டர். நாயர் போன்ற மேதாவி அறிஞர்கள்தாம் உத்தியோகத்தில் விகிதாச்சாரம் கிடைக்கவேண்டும் என்கின்ற கொள்கையோடு இந்த ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்தார்களே ஒழிய, மற்றபடி வெள்ளைக்காரர்களே எல்லா உத்தியோகத்திலும் இருக்க வேண்டும் என்றோ, இந்த நாட்டை என்றைக்கும் வேறு நாட்டாரே ஆள வேண்டும் என்றோ கருதி அல்ல என்பது நமது அபிப்பிராயம்.

இந்த இயக்கத்தின் பயனாய்ப் பார்ப்பனர்களின் ஏகபோக (உத்தியோக) அனுபவிப்பு குறைந்த பிறகுதான் பார்ப்பனர்கள் உத்தியோகம் வேறு, தேசாபிமானம் வேறு என்று சொல்ல ஆரம்பித்தார்களே தவிர, அதற்கு முன்பு வரை. உத்தியோகங்களே தேசாபிமானமாய் இருந்துவந்தது யாரும் அறியாததல்ல. உதாரணமாக, ஜஸ்டிஸ் கட்சி ஏற்படும் வரை, காங்கிரஸ் பிரசிடெண்டுகளும் காரியதரிசிகளும், அய்க்கோர்ட் ஜட்ஜுகளாகவும், நிர்வாகசபை மெம்பர்களாகவும் இருந்து வந்ததே போதுமானதாகும்.



ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுவதற்கு முன்பு, தீண்டப்படாதார் நிலை எப்படியிருந்தது என்பது இப்பொழுது கூலிக்கு மாரடிக்கும் பச்சோந்திகளுக்கும் தேசபக்தர்களுக்கும் 'அரை-டிக்கட்' தேச பக்தர்களுக்கும் தெரியாவிட்டாலும்—ஒரு நாற்பது வயதிற்கு மேற்பட்ட பார்ப்பனர்–பார்ப்பனரல்லாத தேசபக்தர் எவரும் அறிந்ததேயாகும்.

ஆகவே, நமது பார்ப்பனரல்லாதார் சமூகம் அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப விகிதாச்சாரம் உத்தியோகத்தில் பெறும் வரையிலும், அல்லது பார்ப்பனர்கள் தங்கள் விகிதாச்சாரத்துக்கு மேற்பட்ட விகித உத்தியோகம் தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லும் வரையிலும் ஜஸ்டிஸ் கட்சி இருந்து தீர வேண்டியதே என்பதே நமது அபிப்பிராயம்.

அது தேசத் துரோகக் கட்சியாக ஆயினும் சரி, சர்க்கார் தாசர்கள் 'குலாம்கள்' கட்சியாயினும் சரி, அதனுடைய பிறப்புரிமையைப் பெற்ற பிறகுதான் அது வேறு வேலையில் இறங்க வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டுப் பார்ப்பனர்களுக்குப் பயந்து கொண்டு 'எங்களுக்கு வகுப்புவாரித் திட்டம் வேண்டியதில்லை, யாரோ ஒருவர் இருவருக்கு மந்திரிப் பதவியோ, பெரிய சர்க்கார் உத்தியோகப் பதவியோ மாத்திரம் இருந்தால் போதும். நாங்களும் பெரிய தேசபக்தர்கள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள்தாம்' என்றால் அதைவிட ஈனத் துரோகமான கட்சி உலகில் வேறு இல்லையென்றுதான் சொல்லுவோம்.

['பகுத்தறிவு'-தலையங்கம்—23-12-1934]

## 2. தென்னாட்டில் அரசியல் கிளர்ச்சி

எப்படிப்பட்ட அரசியல் கிளர்ச்சியும் போரும் மதம், வகுப்பு, சாதி ஆகியவைகளில் எதையாவது ஒன்றின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் நடந்திருக்கின்றன—நடைபெறுகின்றன என்றுதான் சொல்லவேண்டுமேயொழிய, மற்றபடி எல்லாப் பொது மக்களின் நன்மையைப் பொறுத்தும், விடுதலையைப் பொறுத்தும் நடந்திருப்பதாகச் சொல்லுவதற்கில்லை.

சாதாரணமாக, நம் நாட்டில் சிறப்பாகத் தென்னாட்டில் நடக்கும் கிளர்ச்சி அரசியல் கிளர்ச்சி என்பதாக முன்சொன்னேன். ஆனால், அது இன்று மாத்திரமல்லாமல் சரித்திர காலம் முதல் நடந்துவருகிறது. அதற்கு ஆதாரம் வேண்டுமென்றால், வேதம், ஸ்மிருதி. புராணம் முதலியவைகளைப் பாருங்கள். வேதம், வேதகாலம் பெரும்பாலும் வெள்ளையர்–கறுப்பர் சண்டையாகவே இருந்துவந்து இருக்கிறது என்பதை வேதம் அறிந்த யாரும் உணரலாம்.

வேதத்தில் கடவுளையோ அல்லது ஆரியர் தலைவரான இந்திரனையோ பிரார்த்திக்கும் பிரார்த்தனைகள்–மந்திரங்கள் எல்லாம் கறுப்பு நிறக்காரர்கள் தங்களுக்குக் கொடுமைகள் செய்கின்றார்கள் என்றும், தங்கள் சுகபோகங்களுக்குப் பங்காளிகளாய் இருக்கின்றார்கள் என்றும், தங்கள் ஆதிக்கத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்கின்றார்கள் என்றும், ஆதலால் கறுப்பர்களை அடியோடு அழிக்கவேண்டும் என்றும், ஒழிக்கவேண்டும் என்றும் பிரார்த்திப்பதாகவே காணலாம்.

மற்றும், ஸ்மிருதி என்பவைகளைப் பார்த்தாலும் பார்ப்பனர்கள் என்பவர்களுக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் உயர்வும் சவுகரியமும், பார்ப்பனரல்லாதவர்கள் அல்லது



படிப்பகம்

www.padippakam.com



கறுப்பு நிறக்காரர்கள் என்பவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் இழிவும் கொடுமையும், அதை ஆதரிக்கும் அரசர்களைத் தவிர, மற்றவர்களைப் பார்ப்பனர்கள் அழித்து வந்திருக்கிறதும் காணலாம்.

அது போலவே, புராணங்களைப் பார்த்தாலும் எங்கும் பூசுரர்கள்—அசுரர்கள் சண்டையும், தேவர்கள்—இராட்சதர்கள் சண்டையும், பூதேவர்கள்—அரக்கர்கள் சண்டையும் மலிந்து கிடப்பதைக் காணலாம்.

அதே சண்டைகள், கிளர்ச்சிகள் ஆகியவைகள்தாம் இன்று தேச பக்தர்கள்—தேசத் துரோகிகள் என்னும் பேரால் நடைபெறுகின்றன.

அந்தக் காலத்தில் புராணங்களில் நடந்ததாகச் சொல்லப்படும் சூழ்ச்சிகள் எல்லாம் இந்தக் காலத்திலும் இக் கிளர்ச்சிக்கு நடைபெறுகின்றன.

இந்திரப் பட்டம் பெறவோ (பார்ப்பனர்களைத் தவிர) வேறு யார் தவம் (பாடு பட்டாலும்) செய்தாலும், அவர்களை ஒழிக்க எவ்வளவு சூழ்ச்சிகள்—இழிவான வஞ்சனையான காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், இன்றையக் காரியங்களைப் பார்த்து யாரும் ஆச்சரியப்பட முடியாது.

தவம் செய்பவர்களின் தவத்தைக் கெடுக்க அனேக தடவைகளில் பெண்களை விட்டே மயக்கிக் கெடுத்திருக்கிறார்கள். இராவணனுடைய தபசின் மகிமையை எவ்வளவு சூழ்ச்சி செய்து கெடுத்திருக்கின்றார்கள். இரணியன் தபசின் மகிமையை எவ்வளவு சூழ்ச்சி செய்து கெடுத்திருக்கிறார்கள். பத்மாசூரன் தவத்தின் மகிமையை எப்படிப்பட்ட தந்திரத்தால் கெடுத்திருக்கிறார்கள்!

இவைகளெல்லாம் உண்மையல்ல என்றும், பொய்க் கதைகள் என்றும், மிகைப்படுத்தி மாற்றிக் கூறப்பட்டவை என்றும் சொல்லப்படுவது உண்மையானாலும் கூட—பார்ப்பனரல்லாதாரை எப்படி நடத்தவேண்டும், எப்படி வஞ்சிக்க வேண்டும், எப்படி அவர்களைத் தலையெடுக்க வொட்டாதபடி அழுத்திவைக்க வேண்டும், தலை எடுத்தவர்களை எப்படி ஒழிக்கவேண்டும் என்பதற்கு இவை வழி காட்டியாகும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அந்த முறையில்தான் இன்று பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற கிளர்ச்சி அரசியலின்பேரால் தேச பக்தி, தேசாபிமானம் என்பதின்பேரால் நடைபெறுகிறது.

இந்திய சரித்திரங்களினாலும் சரி, புராணங்களினாலும் சரி, முன்காலத்தில் தேசாபிமானம் என்கின்ற பேச்சோ, கிளர்ச்சியோ இருந்துவந்ததாகக் காண்பதற்கில்லை. தேச பக்தி, தேசாபிமானம் என்கின்ற வார்த்தை மேல்நாட்டிலிருந்து வந்ததாகும்.

நம்நாட்டில் இராஜாக்களுக்கும்—இராஜாக்களுக்கும் மகத்தான சண்டைகள் நடந்திருக்கின்றன. அது விஸ்தீரணத்தை அதிகப்படுத்திக்கொள்ளவும், ஒரு வகுப்பாரை ஒழிக்கவுமேயல்லாது தேச நன்மைக்கு என்று, தேசபக்தி பூண்டு அரசர்களுடன் பொது மக்கள் போர் புரிந்ததாகச் சரித்திரம் இல்லை.

மேல்நாட்டுத் தேசாபிமானத்துக்கும் நாம் இங்கு இன்று கற்பிக்கிற அர்த்தம் இருந்ததில்லை. அங்குள்ள தேசாபிமானத்தாலும் தேச பக்தியாலும் எந்தத் தேச மக்களுக்கும் விடுதலை ஏற்பட்டதாக ஆதாரமோ, அனுபவமோ இருந்ததும் இல்லை.

சாதாரணமாக, இந்த நாட்டைப் பாரத தேசம் என்று சொல்லுவதுகூட யோக்கியமான பெயராகாது. பரதன் என்கின்றவன் ஆண்டதால் பாரத தேசம் என்று சொல்லப்படுமானால், அதற்கு முன், ஆண்டவர்கள் பெயர் ஏன் சொல்லக்கூடாது? அதற்குப்பின் ஆண்டவர்கள், ஆளுகின்றவர்கள் பெயர் என்ன கதியாவது? எந்தத் தேசத்திலாவது, எப்போதோ ஒரு காலத்தில் ஆண்டவன் பெயர் சொல்லப்படுகின்றதா? இந்தப் பெயர் ஆரிய



ஆதிக்கத்தைக் குறிப்பதே தவிர வேறில்லை. அக் காலத்திய அரசர்களை நாம் மதிப்பதாகவோ பாராட்டுவதாகவோ சொல்லுவதும், பழங்கால அரசர்கள் ஆட்சி போன்ற—அரசியல் முறை வேண்டுமென்று சொல்லுவதும் பெரிதும் சுயமரியாதை அற்றதும் முட்டாள்தனமானதுமான காரியமாகும்.

பழங்கால அரசர்களின்—இராஜ விசாரணை, இராஜநீதி என்பவை என்ன என்பதற்கு அக் கால ஆதாரங்கள் சரித்திரங்கள் அல்லாமல், அவர்களைப்போல் நடிக்கும் நாடகங்களைப் பார்த்தாலும் நன்றாய் விளங்கும். உதாரணமாக, ஒரு அரசன் இராஜசபைக்கு வந்தவுடன் மந்திரியை என்ன கேட்கிறான்?

"பிராமணர்களுக்கு மான்யம், அன்ன சத்திரம், வேத பாடசாலை (இலவசப் படிப்பு) ஆகியவைகள் தாராளமாய் வழங்கியிருக்கிறாயா? அவர்கள் மனம் நோகாமல் சந்தோஷத்தோடு வாழ உதவி செய்து வருகிறாயா?" என்று கேட்டுவிட்டு, 'மற்ற வகுப்பார் பிராமணர்களுக்கு இட்ட கருமப்படி நடந்து வருகிறார்களா" என்றுதான் கேட்கிறானேயொழிய, வேறு என்ன? அதாவது, வருணாசிரம இராஜ்ய பாரந்தானே இதுவரை நடந்துவந்திருக்கிறதே ஒழிய, வேறு என்ன?

[திருச்சி, திண்டுக்கல், திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் பேசிய சொற்பொழிவின் சுருக்கம் —'குடிஅரசு' 8-9-1935]

நம்முடைய கட்சியாகிய இந்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கமானது 25 வருடத்திற்கு முன்பாகவே, முக்கியமாய்த் தென்னாட்டுத் திராவிட மக்கள் அரசியல், சமுதாயம், கல்வி, பொருளாதாரம் முதலிய துறைகளில் தலையெடுக்க முடியாமல் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் நிலையிலிருந்து மீட்கப்படச் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். அக்கட்சியினுடைய முக்கியமான கொள்கைகள் எல்லாம் அரசியல் சமுதாய விடுதலையும், அரசியல் தனித் தொகுதிப் பிரதிநிதித்துவ உரிமையும், அரசாட்சி, உத்தியோகம், பதவி ஆகியவைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் ஆகும்.

[திருவாரூரில், 24, 25-8-1940-ல் நடந்த ஜஸ்டிஸ்கட்சி மாநாட்டின் தலைமையுரை—'குடி அரசு' 25-8-1940]

## 3. வகுப்புரிமை—தோன்றிய வரலாறு

நம்முடைய நாட்டிலே 1916, 1917-ல் தான் வகுப்புவாரிக் கோரிக்கை ஆரம்பமானது என்றாலுங்கூட, வடநாட்டில் வகுப்புவாரி உரிமை முழக்கம் 1900-லிருந்தே எழுப்பப்பட்டது. தங்களுடைய வகுப்பின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு தங்களுக்கு விகிதாசாரப்படி எல்லாத் துறைகளிலேயும் சேர்க்கப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் 1900-லிருந்தே கிளர்ச்சி செய்து வந்தார்கள். நம்மில் பலருக்கு இந்தச் சங்கதி தெரியாதிருந்திருக்கலாம். கொஞ்சம் வயதானவர்களுக்கு இதைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரி முஸ்லிம்கள் செய்துவந்த கிளர்ச்சியைக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்ப்புச் சற்றும் பயன்படாமல் போய்விட்டதோடு மாத்திரமல்லாமல். முஸ்லிம்களுக்காக வகுப்புவாரித் திட்டத்தையும் நிறைவேற்றினார்கள். அப்போது இந்தியாவின் மத்திய சர்க்கார் கல்கத்தாவில் இருந்து வந்தது. கல்கத்தாவில் பெருவாரியானவர்கள் முஸ்லிம்கள் என்பதால், வெள்ளையர்களால், முஸ்லிம்களுடைய கோரிக்கைகளை மறுக்கமுடியாமற் போயிற்று. எனவே அவர்கள் காங்கிரஸ் எதிர்ப்பைப் பற்றிச் சிறிதும் இலட்சியம் கொள்ளாமல் முஸ்லிம்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தார்கள்.

எனவே, காங்கிரஸ்காரர்கள் 1907-ல் 'சுதேசி இயக்கம்' என்ற பேரால் முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக என்றே—அதாவது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தனித் தொகுதி

படிப்பகம்

www.padippakam.com



முறை, அவர்களுக்காகச் செய்த வங்காளப் பிரிவினை கூடாது என்பதற்காகவே, ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

நம்முடைய மக்களும் பிரமாதமாக அந்த இயக்கத்தால் சாதித்து விடமுடியும், தங்களுக்கு ஏதோ பெரிய இலாபம் ஏற்படும் என்று கருதி, 'சுதேசி இயக்கத்தில்' பெரும் பங்கு கொண்டார்கள். ஆனால், அவர்களுக்கு இந்த இயக்கத்தின் உள்நோக்கம் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் தனித்தொகுதி முறையை—பிரிவினையை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது என்று தெரியாது. ஏனென்றால், இன்றைய தினம் நம்முடைய மக்கள் எப்படிப் பாமர மக்களாய், அரசியல் என்பதே இன்னது என்று தெரியாதவர்களாய், யார் எதைச் சொன்னாலும் நம்பிக்கொள்வது என்ற தன்மையில் இருப்பது போலவேதான் அன்றைய தினமும் இருந்து வந்தார்கள். அவர்களுக்கு 'சுதேசி இயக்கம்'— அது 'தேச பக்தர்கள்' இயக்கம் என்றுதான் தெரியுமே தவிர, அந்த இயக்கத்தினுடைய உட்கருத்தும், நோக்கமும் தெரியாது. ஆனாலும், முஸ்லிம்கள் கட்டுப்பாடாக நின்று காங்கிரஸ்காரர்களுடைய பல தொல்லைகளையும் எதிர்ப்பையும் சமாளித்துக் கொண்டு தங்கள் கொள்கையில் வெற்றிபெற்றார்கள்.

1910 ஆம் ஆண்டிலேயே முஸ்லிம்களுக்கு என்று தனித் தொகுதியும், இந்துக்களுக்கு என்று தனித் தொகுதியும் பிரிக்கப்பட்டது. அந்தப்படி பிரிக்க நேர்ந்தபோது 'இந்துக்கள்' தொகுதி என்று பிரிக்க முடியாமற் போய்—'முஸ்லிம்கள் தொகுதி', 'முஸ்லிம்கள் அல்லாதார் தொகுதி' என்று பிரித்தார்கள். முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி கொடுப்பதை எதிர்த்துவந்த காங்கிரஸ் இந்தக் காரியத்தினால் படுதோல்வியுற்றது. ஆனாலும், தங்களது தோல்வியை வெளியே சொல்லுவதற்கு காங்கிரஸ் வெட்கப்பட்டது. இந்த நேரத்தில் வெள்ளையர்களுக்கு ஒரு புதிதான யோசனை சொன்னார்கள். அதாவது, காங்கிரசார் முஸ்லிம்களுடைய தனித் தொகுதி முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதற்குப் பதிலாக, வங்காளத்தை இரு மாகாணங்களாகப் பிரிக்கும் திட்டத்தை வெள்ளையர்கள் கைவிட்டுவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு காங்கிரஸ் ஒத்துக்கொண்டது. எனவே, 1910 ஆம் ஆண்டிலேயே முஸ்லிம்கள் செய்த கிளர்ச்சியின் பயனாய் அவர்களுக்குத் தனித்தொகுதி முறை ஏற்பட்டது. அதன் பின்னரும் காங்கிரஸ் முஸ்லிம்களை மறைமுகமாக எதிர்த்து வந்தது; எது சொன்னாலும் அதை மறுத்து ஒரு பலமிக்க எதிர்க் கட்சியாக விளங்கியது.

முஸ்லிம்களுக்கு எதிராகக் காங்கிரஸ் செய்த எத்தகைய முயற்சிகளும் பலிக்கவில்லை என்பதோடு, முஸ்லிம்கள் கட்டுப்பாடாக மேலும் மேலும் பலமடைந்து வந்தார்கள். இதனால், காங்கிரஸ் கட்சியிலேயே அந்தக் காலத்தில் இந்திய அரசியலில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய அன்னி பெசன்ட் அம்மையாரின் மூலமாக முஸ்லிம்களிடம் சரணாகதி அடைந்தது. அதற்குப் பெயர்தான் 'லக்னோ பாக்ட்' (லக்னோ உடன்படிக்கை) என்று நினைக்கிறேன். இதுதான் 'இந்து-முஸ்லிம் ஒப்பந்தம்' என்பதாகும். அந்த ஒப்பந்தம் இன்று முஸ்லிம்களுக்குத் தனி நாடு அளித்துவிட்டது.

இந்தப்படியாக, வடநாட்டில் முஸ்லிம்கள் வெற்றிபெற்று தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டதைக் கண்ட பிறகுதான், நம்முடைய நாட்டவர்களுக்கும்—நமக்கும் வகுப்புவாரி விகிதாச்சாரம் வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லிம்களே ஒரே மூச்சாக, கட்டுப்பாடாகப் போராடியதன் மூலமாக எல்லாத் துறைகளிலேயும் அவர்களுக்கு இவ்வளவு என்று பங்கு பிரிக்கப்பட்டது. அவர்கள் தனித் தொகுதியும் பெற்றுவிட்டனர்.

அந்தப்படி இருக்கும்போது, இந்த நாட்டில் 100-க்கு 90 பேராய் இருக்கக்கூடிய நாம் எல்லா உத்தியோகங்களையும் சகல அதிகாரங்களையும் 100-க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்கள் அடையும்படி விட்டுவிட்டு நாய் வாடுவதா? எல்லாத் துறைகளிலேயும் பிற்பட்ட



மக்களாய், பார்ப்பனர்களுக்கு அடிமைகளாய் இருந்து வரவுமான நிலைமையிருக்கலாமா என்று தியாகராயச் செட்டியார், நாயர் போன்றவர்கள் எண்ணினார்கள்.

தியாகராயர் காங்கிரசிலே மிகப் பிரபலமிக்கவராய் இருந்து வந்தார். சென்னையிலே நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்.

1916 ஆம் ஆண்டுவரை தியாகராயரும், நாயரும் எதிர் எதிர்க் கட்சியாய் இருந்து கொண்டு, ஒருவரையொருவர் மிக மோசமாகத் தாக்கிக்கொண்டு இருந்தார்கள்.

இப்படி இருந்தவர்கள்தாம், தாங்கள் இரண்டுபேரும் போட்டுக்கொள்கிற சண்டையினால் மற்றொரு கூட்டத்தாராகிய பார்ப்பனர்கள் நலம் அடைகின்றார்கள்; தங்கள் இருவருக்கும் சண்டை ஏற்படுத்தி விட்டுவிட்டு அதன் மூலம் தங்கள் நலத்தைத் தேடிக்கொள்கிறார்கள் என்பதை அறிந்தார்கள். அதன் பின்னர்தான், அவர்கள் 'தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்' என்ற பெயரால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் துவக்கினார்கள். அப்போது திராவிடர் என்கின்ற பெயரையோ அல்லது வேறு எந்தப் பெயரையோ சொல்லத் தைரியமில்லாததால் அவர்கள் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்கிற பேரால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்திற்கு அந்த இயக்கத்தினுடைய நியாயமான கொள்கையின் காரணத்தால் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. அப்போது நடந்த தேர்தலிலேயும் அந்த இயக்கம் வெற்றிபெற்றது. அப்போதெல்லாம் நான் காங்கிரசிலேயே இருக்கிறேன்.

தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்திற்கு ஏற்பட்ட செல்வாக்கு கண்டு இங்குள்ள பார்ப்பனர்கள் வெகுவாக அஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தை ஒழிப்பதற்காக முயற்சிசெய்ய வேண்டியவர்களாகி காந்தியாரிடத்தில் சரணாகதியடைந்தார்கள்.

[சென்னை பெரம்பூரில், 13-8-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 15-8-1950]

இந் நாட்டில் நீண்ட நாட்களாகப் பார்ப்பனரும், பார்ப்பனரல்லாதாரும் எவ்வளவோ ஒற்றுமையாகத் தங்கள் சாதி இழிவைக்கூடக் கருதாமல்—பார்ப்பனர்களிடம் எவ்வளவோ அமைதியாகவும், பக்தியாகவும், மரியாதையாகவும் இருந்துவந்த நிலையானது இந்தப் படிப்புக் குறைவையும், உத்தியோகக் குறைவையும் கருதியே கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்து, அதற்காக ஸ்தாபனம் ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்ய முற்பட்டதாலும்; அந்த முயற்சியைப் பார்ப்பனர் எதிர்த்துத் தடுத்துவந்ததாலும் இரு சமூகத்தாருக்கும் வேற்றுமை உணர்ச்சி ஏற்பட்டு—அது இன்று இரு வகுப்புகளுக்கும் வகுப்புத் துவேஷமாயும் ஒருவருக்கொருவர் சாதி வகுப்புக் காரணமாகவே வெறுப்பும், அதிருப்தியும் கொள்ள வேண்டியவர்களாகவும் ஆக்கியிருப்பதை இந்தக் கனவான்களும், மற்றும் பார்ப்பனத் தலைவர்களும் அவர்களது பத்திரிகை ஆசிரியர்களும் பார்ப்பன சமுதாயமும் அறியாத விஷயமா?

இப்படியிருக்க, இந்தத் துவேஷமும், வெறுப்பும், அதிருப்தியும் வளரும்படியாகவே பார்ப்பனத் தலைவர்கள் மேலும், மேலும் அகம்பாவமாகவும், ஆணவமாகவும், தந்திரமாகவும் சூழ்ச்சியாகவும், வஞ்சகமாகவும் காரியங்களைச் செய்து வருவது பார்ப்பன சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் காரியமாக இருக்கமுடியுமா என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

சாதாரணமாக, இந்த நாட்டைப் பிரிட்டிஷ்காரன் ஆளும்போது இருந்த நிலையைவிட இன்று அவன் ஒழிந்து, இந்த நாட்டை இந்த நாட்டாரே ஆளுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டவுடன்—திராவிடர்களுக்குப் பார்ப்பனர்களிடம் துவேஷமும் வெறுப்பும், பார்ப்

படிப்பகம்

www.padippakam.com



பனர்களுக்குத் திராவிடர்களிடம் துவேஷமும் வெறுப்பும் அதிகமாக வளர்ந்தவண்ணமாகவே இருந்து வருகின்றதே ஒழிய வேறு என்ன?

உண்மையைச் சொல்லவேண்டுமானால், பார்ப்பனர்கள் இன்று இந்த நாட்டில் தங்களுக்கு ஒரு ஆதரவும் இல்லாமல் செய்துகொண்டார்கள். சகலத்திற்கும் வட நாட்டாரையே நம்பி, தங்கள் பாதுகாப்புக்காக இந்த நாட்டை வடநாட்டான் ஆதிக்கத்திற்கு விட்டுக் கொடுத்து, இந்த நாட்டு ஆட்சி ஆதிக்கம் முழுமையும் அவன் காலடியில் ஆக்கி, இந்த நாட்டுச் செல்வம் யாவற்றையும் அவனே சுரண்டிக் கொண்டு போகும்படி விட்டு, அதன் மூலம் தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளுகிறார்கள். இதன் பின்விளைவைச் சற்றும் கவனியாமல், தங்களது இன்றைய மேன்மையையும் நலத்தையுமே கருதுகின்றார்கள்.

இதன் பின்விளைவை நினைக்கும்போது நமக்கு உண்மையிலேயே பயமாக இருக்கிறது. இதுவரை இந்தப் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக இருந்து வந்த காங்கிரஸ் திராவிடர்கள் சிறிதுசிறிதாக வேறுபடுவதாகத் தெரிகிறது. மற்றும், இந்தப் பார்ப்பனர்களுக்கு ஆதரவாக இருக்கும் கடவுள்கள், வெகு சீக்கிரத்தில் அழிந்துவிடப் போகின்றன என்பது நமது உறுதி. அவற்றுள் ஏதோ சிறிது மீதியானாலும் அவைகளில் பார்ப்பனர்களுக்குச் சிறிதும் ஆதிக்கம் இல்லாமல் ஆகிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. அன்றியும், பார்ப்பனர்களுக்கு அவர்களது ஆதிக்கத்திற்கு அனுகூலமாக இருந்துவரும் சாஸ்திர, மத, புராண, இதிகாச சம்பந்தமான மூடநம்பிக்கைகளும் அவற்றின் வாழ்வும் வெகு சீக்கிரத்தில் —இனி ஒரு 5 வருடங்களுக்குள்ளாக அனேகமாக ஒழிந்துபோகும் என்பது உறுதி.

ஏன் இப்படி உறுதி கூறுகிறோம் என்றால், பார்ப்பனர்கள்மீது திராவிடர்களுக்கு இன்று உள்ள துவேஷமும் வெறுப்பும், மக்களை அவர்களது (பார்ப்பனர்களது) மதம், கடவுள், சாஸ்திரம் வகையரா தங்கள்மீது சுமத்தப்பட்டிருப்பதையும்; அதனால் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட ஆதிக்கத்தையும், தங்களுக்கு ஏற்பட்ட இழிவையும் நன்றாய் அறியச் செய்து விட்டதுடன், கடவுளுக்கும், கோவிலுக்கும், அதிலுள்ள உருவங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதையும், பக்திக்கும் சாஸ்திர புராண இதிகாசங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதையும் இன்றைய இளைஞர்களையும், இள மங்கையர்களையும் நன்றாக உணரச் செய்து விட்டது.

இன்று துவக்கப்பட்டிருக்கும் இந்த வகுப்புவாரி உரிமைக் கிளர்ச்சியானது வகுப்புரிமையை மாத்திரம் பொறுத்த கிளர்ச்சி அல்ல என்பதே நமது கருத்து. மற்றும், எதைப் பொறுத்தது என்றால்—இந்த நாட்டில் பார்ப்பனரல்லாதார்—திராவிடர் 100-க்கு 90-க்கு மேம்பட்டிருந்தும் இந்த நாடு திராவிடர்களுடையதாக இருந்தும், இந்த நாடு திராவிடர்களுடைய உழைப்பின்மீதும் அவர்களது தானதருமத்தின்மீதும் இருந்து வந்தும், இந்த நாட்டை வெள்ளையனுக்குமுன் ஆண்டு வந்தவர்களும் திராவிடர்களாகவே இருந்திருந்தும், இன்று அப்படிப்பட்ட பார்ப்பனரல்லாத திராவிட சமுதாயம் பார்ப்பனர்களிடம்—அதுவும் இந்த நாட்டுக்குப் பிழைக்கவந்து இந்நாட்டு மக்கள் தானதருமங்களாலேயே மனிதர்களான பார்ப்பனர்களிடம் சிக்கிக்கொண்டு இந்தப்படி அல்லற்படவும், இழிவு படவும், தங்கள் உரிமைக்கு விகிதாச்சாரத்துக்கு பார்ப்பனர்களைத் தொங்கவும்—பார்ப்பனர்கள் திராவிடர்களைப் பார்த்து, 'உங்களுக்குத் தகுதி இல்லை, திறமை இல்லை; நீங்கள் அடிமை வேலைக்குத்தான் தகுதி' என்று சொல்லவுமான நிலை எதனால்—எது எதனால் ஏற்பட்டதோ அதைஅதையெல்லாம்—அவைகளையெல்லாம் வேரோடு கண்டுபிடித்து அழித்து ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே இந்தக் கிளர்ச்சி தோன்றியதாகும்.

1939-ல் இந்திக் கிளர்ச்சி தோன்றிய காலத்தில் இம் மாகாணத்தில் பார்ப்பன ஆதிக்கம் இருந்த நிலை என்ன! அப்போது ஆச்சாரியார்—C. R. அவர்கள் முடிசூடா மன்னராக இருந்தார். 'திராவிட மக்களை இப்படிக் கொடுமைப் படுத்தலாமா?' என்று கேட்ட

படிப்பகம்

www.padippakam.com



17-9-1961-ல் சென்னையில் நடைபெற்ற பெரியார் பிறந்தநாள் விழாவில் சர். ஏ. இராமசாமி முதலியார், ராஜா சர். எம். ஏ. முத்தையா செட்டியார் ஆகியோருடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்



தற்கு அவர், 'நடு இரவில் திருடன் புகுந்து விட்டால் கையில் கிடைத்ததை எடுத்து அடிக்க வேண்டியதுதானே!' என்றார். அந்த ஆணவச் சொல்லானது தமிழுக்கு எவ்வளவோ ஆக்கத்தைக் கொடுத்தது; தமிழர்களை ஒரு அளவுக்காவது பார்ப்பனச் சூழ்ச்சியை உணரச் செய்து, நல்ல அளவுக்குப் பார்ப்பன வெறுப்பை உண்டாக்கிற்று. அதனால் மந்திரி சபையில் அவர்களுக்கு மரியாதையே இல்லாமல் செய்துவிட்டது. கடைசியாக, அந்த ஒரு காரணமே ஆச்சாரியாருக்கு இந்த நாட்டில் மரியாதையுடன், பெருமையுடன் வாழ இடமே இல்லாமல் போய்விட்டது. அதோடு மாத்திரமல்லாமல் 'கட்டாய இந்தி'யும் ஒழிந்தது.

அதுபோலவேதான்—ஏன், அதற்கு மேலாகவேதான் இந்த வகுப்புவாரி உரிமைக் கிளர்ச்சி பயன்படப் போகிறது. அதில் யாருக்கும் எந்தப் பார்ப்பனருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

பார்ப்பனர்களுக்கு அவர்களுடைய சூழ்ச்சியும், தந்திரமுமே ஆயுதமாக இருக்கிறதே ஒழிய, மற்றபடி அவர்களுக்கு வேறு ஆயுதம் கிடையாது; நல்ல பின்புத்தியும் (Fore sight, கிடையாது. திராவிடர் நிலை அப்படி அல்ல. திராவிடர் மாத்திரம் 100-க்கு 25 பங்கு ஒன்றுபட்டுவிட்டால் பார்ப்பனீயத்தைச் சித்திரத்தில் கூட, கண்காட்சிக் கூடத்தில் கூடக் காணமுடியாது 'திராவிடர்கள் ஒன்றுசேரமாட்டார்கள்' என்கின்ற தைரியம்—இனி பார்ப்பனருக்கு வேண்டாம் என்றே சொல்லுகின்றோம்.

இனி, காங்கிரஸ் திராவிடர்களுக்கும்—திராவிடர் கழக திராவிடர்களுக்கும் இன வேற்றுமை உணர்ச்சி இருக்கவேண்டிய அவசியமே இல்லை. அதுபோலவே கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட் திராவிடர்களும் வேற்றுமை உணர்ச்சி கொள்ளவேண்டியதில்லை. அது போலவே, தொழிலாளத் தோழர்களும் எந்த விதத்திலும் வேற்றுமை உணர்ச்சி கொள்ள வேண்டியதில்லை. தொழிலாளத் தோழர்கள் உலகம் உள்ள வரை தாங்கள் தொழிலாளர்களாவே இருக்கப்போவதாகக் கருதிக் கொண்டு இருக்கிறார்களா என்று கேட்கிறோம்.

இந்தக் கிளர்ச்சி தொழிலாளர்களுக்கே அதிகமான பயன் கொடுக்கக் கூடியதாகும். தொழிலாளி-முதலாளி ஆகிய இரு வகுப்பையும் இந்தக் கிளர்ச்சி ஒழித்துவிடும். ஆதலால், அவர்கள் முழு மூச்சுடன் இதில் கலந்துகொள்ள வேண்டும்.

['விடுதலை'-கட்டுரை—14-8-1950]

## 4. பிறந்தநாள் அறிக்கை

என்னுடைய 76 ஆவது பிறந்த நாளாகிய இன்று ஒரு அறிக்கை விடவேண்டுமென்று என் தோழர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதை அனுசரித்து இன்றைக்கு முக்கியமான பிரச்சினையென்றும், இனி நாம் அதிகமாகக் கவலை செலுத்தவேண்டிய பிரச்சினையென்றும் கருதுகிற ஒரு விஷயத்தைப்பற்றிப் பொதுமக்களுக்கு எனது வேண்டுகோளாகத் தெரிவிக்கலாமென்று கருதுகிறேன்.

தோழர்களே! தமிழ்நாட்டை வடநாடு பொருளாதாரத்துறையில் பெருங்கொள்ளையடிப்பதோடு, தமிழ்நாட்டைப் பொருளாதாரத் துறையிலும், தொழில் துறையிலும் தலையெடுக்கவொட்டாமல் மட்டந்தட்டிக்கொண்டு வருகிறது. இந்த ஒரு முக்கியமான காரியத்துக்காகவே-வடநாட்டான், அரசியலிலும் தமிழ்நாட்டைத் தனக்கு அடிமைப்படுத்தி, தனது காலடியில வைத்திருக்கிறான்.

இதற்கு அனுகூலமாக இந் நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களுக்கு இனி இந் நாட்டில் ஆதிக்கம் பெறவோ, இதுவரையிலும் வாழ்ந்ததுபோன்ற ஆதிக்க வாழ்வு வாழவோ முடியாதென்று கருதி, வடநாட்டானுக்கு அவனது அரசியல்-பொருளாதார ஆதிக்கத்துக்குத் தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு உடந்தையாகவும் உள் ஆளாகவும் இருந்துவருகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



## 10. ஒழுக்கம் கெட்டுவர[illegible]காரணம்?

தோழர்களே!

கடவுளும், மதமும் நன்மைக்கென்றே ஏற்ப[illegible]பாயினும் ஒழிக்கப்பட வேண்டியவையே. சமுதாயத் தொண்டை வலியுறுத்தவும்[illegible]ல் உண்மையையும், அன்பையும், ஒழுக்கத்தையும் ஏற்படுத்தவும் என்பதாகச் சொல்லிக்கொண்டே, மேற்கண்டவைகள் (கடவுள், மதம், பார்ப்பான், சாதி முதலியன) ஏற்பட்டு, இப்போது அவை தேவை இல்லாதவைகளாக ஆகிவிட்டதோடு, ஒழிக்கப்பட வேண்டியவையாகவே ஆகிவிட்டன. மிருகப் பண்புகளே தெய்வீகப் பண்புகளாய் அமைந்தன. கடவுள், சமயம், பார்ப்பான் முதலியவைகளாலேயே மனிதனுக்கு, சமுதாயத்திற்குத் தேவை இல்லாதவைகள் எல்லாம் கடமை ஆக்கப்பட்டு, மனிதனை மனிதன் இம்சிப்பது, வஞ்சிப்பது முதலிய துஷ்ட ஜந்துக்கள் குணமே தெய்வீகக் குணங்களால் அமைந்துவிட்டன. மத சாஸ்திர புராண இதிகாசத் தத்துவங்களைப் பார்த்தால் இவை விளங்கும். நெறியற்ற வாழ்வே மலிந்து காணப்படுகிறது. உயிர் வாழ்வில் எனக்கு 78 ஆண்டு அனுபவமுண்டு (1956). 65 ஆண்டுகளாக உலக நடப்பும் மனித வாழ்வின் தன்மையும் எனக்குத் தெரியும். அறிவு எவ்வளவோ வளர்ச்சி பெற்று இருக்கிறது என்றாலும், மனித வாழ்வு மிகமிகக் கீழான நிலைக்குப் போய்விட்டது. வஞ்சகத்திற்கும், துரோகத்திற்குமே அன்பு, ஒழுக்கம் என்றும், திருட்டுக்கும் புரட்டுக்குமே நாணயம் என்றும் அகராதிகளில் விளக்கம் எழுதவேண்டிய நிலைக்கு மனிதன் வந்து விட்டான். இதில் என்ன அதிசயம் என்றால், இந்த விதிக்கு விலக்களிக்க இன்று இந்த நாட்டில் ஒரு ஆளைக்கூடக் காண முடியவில்லை என்பதுதான். கடவுளும் சமயப் பிரசாரங்களும் நற்பயனளிக்கவில்லையே! கடவுள்களுக்கும், சமயங்களுக்கும்—இவைகளுக்குக் கோவில்களுக்கும், உற்சவங்களுக்கும் குறைவில்லை; சமயப் பிரசாரகர்களுக்கும் கடவுள், சமயம் பற்றிய ஆதாரங்களுக்கும் குறைவில்லை; இவைகளில் தேர்ந்த புலவர்களுக்கும் குறைவில்லை; மற்றும் கடவுள் சமய நம்பிக்கைக்காரர்களுக்கும், பக்தர்களுக்கும், பக்தி செலுத்துபவர்களுக்கும் குறைவில்லை. இந்நிலையில் மனிதனிடம் அன்பு, ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை இல்லாமல், துரோகத்தினால், ஒழுக்கக் கேட்டால், நாணயக் குறைவால், ஏமாற்றுதலால் அல்லாமல் வேறு வழியில் மனிதன் வாழ முடியவில்லை என்கின்ற நிலை மக்களுக்கு ஏற்பட்ட காரணம் என்ன?

மனிதனின் வாழ்க்கைத் திட்டத்தையே ஏமாற்றுதல் மீதும், துரோகத்தின் மீதும் அன்னியன் உழைப்பின் பயனை அநியாயமாய் அனுபவிப்பதன் அஸ்திவாரத்தின்மீது அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியமென்ன? துரோகிகள், போலிகள், ஏமாற்றுக்காரர்களுடன் இணைந்திருப்பதெப்படி? இவைகள் எல்லாம் இரண்டாவது குணம் என்கின்ற தன்மையில் கொள்ளும்படியான அளவுக்கு, அயோக்கியர்களையும் துரோகிகளையும் நாணயக் குறைவானவர்களையும் நம்பிக்கை மோசம் செய்பவர்களையும் வெளிப்படையான போலிகளையும் வெறுக்காமல், அவர்களிடம் வெறுப்புக் காட்டாமல், மக்கள் அப்படிப்பட்ட காரியங்களில் நிபுணர்களிடம் இணைந்தாவது வாழ வேண்டும் என்று கருதுவதும், அவர்களோடு இணைந்திருப்பதில் வெட்கப்படாமல் இருப்பதுமான நிலையில், மனிதன் இருக்கக் காரணம் என்ன?

கடவுள் சமயத்துறை ஒழுக்க ஈனங்களும், வியாபாரம் நிர்வாகத்துறை ஒழுக்க ஈனங்களும் நீண்ட நாட்களாகவே இருந்து வருவதாக சமய, வியாபாரத்துறை ஆதாரங்களில் காணப்பட்டாலும், இப்போது அரசியல் துறையின் நடப்புக்கள் ஒழுக்கக் கேட்டின்—துரோகத்தின் எல்லையை அடைந்து விட்டன. அயோக்கியர்களுக்கும், துரோகிகளுக்கும் முதலிடமா? இவைகள் எல்லாம் மனித சமுதாயத்திற்கு எவ்வளவு கேடு பயக்கிக்கின்றன? என்பதை எண்ணினால், நெஞ்சம் பிளக்கும்படியான வேதனை ஏற்படுகின்றது. அயோக்கியர்களும் துரோகிகளும் நாட்டில் தைரியமாய் உலாவவும் அவர்களை மக்கள் வெறுக்காமல் இருப்பதையும் பார்த்தால், இக் கூட்டத்தில் நாம் வாழ்வதே



ஒழுக்கக்கேடு என்று தோன்[illegible]டன், அப்படியாவது ஏன் வாழவேண்டும் என்றே தோன்றுகிறது. ஒழுக்கக்[illegible]களைந்தே ஆகவேண்டும். ஆகவேதான், நாம் இனி ஒரு வினாடி வாழ்வதானாலும்[illegible]ட்டு, ஒரு பரிகாரம் செய்து வாழவேண்டுமே யொழிய, மற்றபடி வாழ்வது இழிவு என்[illegible]ருத்[illegible]றுகிறது. இவ்வித பரிகாரத்திற்கு இனி எந்த விதத்திலும் கடவுளும் சமயமும் பயன்பட[illegible]து என்றும் தோன்றுகிறது.

ஒழுக்கக் கேட்டிற்கு இதுவரை காரணமாக இருந்தவைகளை, ஒழுக்க வளர்ச்சிக்குப் பயனில்லாமல் இருக்கின்றவைகளை ஒழித்துவிட்டு, ஒழுக்கப் பிரசாரமும், ஒழுக்க ஈனராய் துரோகிகளாய் இருப்பவர்களை ஒழிக்கும் பிரசாரமும் செய்ய வேண்டியதுதான் தனக்கென வாழாதவர்களுக்கு முக்கியமும் முதன்மையுமான கடன் என்றே கருதுகிறேன். ஒழுக்கமும் அன்பும் இல்லையானால் மனித சமுதாயமே வேண்டாம் என்று தோன்றுகிறது.

[குன்றக்குடியில், 6-6-1956ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-6-1956]

## 11. தர்மம் அல்லது பிச்சை

தர்மம்—அதாவது, ஏழைகளுக்குப் பிச்சை இடுதல் முதல், மற்றவர்களுக்குப் பல உதவிகள் செய்வது என்பதுவரை அனேக விஷயங்கள் தர்மத்தின்கீழ் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த மாதிரி தர்மத்தைப்பற்றி எல்லா மதங்களுமே முறையிடுகின்றன. இந்து, முஸ்லிம், கிறிஸ்துவம் முதலிய மதங்களில் இந்தத் தர்மத்தை- பிச்சை கொடுத்தலை மிக நிர்ப்பந்தமாகக் கட்டாயப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படியெனில், தர்மம் கொடுக்காதவன் பாவி என்றும், அவன் நரகத்துக்குப் போவான் என்றும், கடவுள் அவனைத் தண்டிப்பார் என்றும், இப்படியெல்லாம் பயமுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை கடவுள் வாக்கெனவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்து மதம் என்பதில் தர்மத்தை 32 விதமாகக் கற்பித்து, 32 தர்மங்களையும் ஒருவன் செய்யவேண்டும் என்றும், அந்தப்படி செய்தால் அவனுக்கு இன்னின்ன மாதிரிப் புண்ணியம் கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது, அறம் 32. ஒரு மனிதன்—சரித்திரம் படிப்பவர்களுக்குச் சாப்பாடு, சத்திரம் கட்டுதல், பக்தர்களுக்கு உணவு, பசுவுக்கு வாயுறை, கைதிகளுக்குச் சாப்பாடு, இரப்பவர்களுக்குப் பிச்சை, தின் பண்டம்; அனாதைகளைக் காத்தல், பிள்ளைப் பேறுக்கு மருத்துவம் செய்தல், அனாதைப் பிள்ளைகள் வளர்த்தல், தின்பண்டம், பிள்ளைகளுக்குப் பால் வார்த்தல், அனாதைப் பிணம் சுடுதல், ஏழைகளுக்கு ஆடை கொடுத்தல், வழிப்போக்கர்களுக்குச் சுண்ணாம்பு கொடுத்தல், வைத்தியம் செய்தல், வண்ணான் உதவல், நாவிதன் உதவல், கண்ணாடி காட்டுதல், காதோலை கொடுத்தல், கண்ணுக்கு மருந்து செய்தல், தலை முழுக்காட்ட எண்ணெய் தருதல், பெண் போகம் வேண்டுவோருக்கு போகப்பெண் உதவுதல், கஷ்டத்தில் சிக்குண்டவர்களுக்கு உதவி செய்து விடுவித்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், மடம் கட்டுதல், ரோடு போடுதல், சாலை மரம் வைத்தல், மாடு—எருமை ஆகியவை தங்கள் தினவுகளைத் தீர்த்துக்கொள்ளச் சொரி கல் நடுதல், மிருகங்களைக் காத்தல், கக்கூசு கட்டல், விலை கொடுத்து உயிர் மீட்டல், பெண்தானம் செய்தல் ஆகிய 32 தருமங்கள் செய்யவேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபோலவே, இஸ்லாம் மதம் என்பதிலும் அன்னியனுக்குப் பிச்சை கொடுத்தாக வேண்டும் என்றும், அது ஒருவனுடைய வருஷ வரும்படியில் அவனுடைய செலவுபோக மீதி உள்ளதில் 40-ல் 1 பாகம் வருஷந்தோறும் பிச்சையாகப் பணம், சாப்பாடு, துணி

படிப்பகம்

www.padippakam.com



போகவேண்டும்; கூறுங்[illegible] கேட்கிறான். இதெல்லாம் எதனால் வருகிறது? மதத்தினாலா? ஒழுக்கத்தினா[illegible]வுப் பெருக்கத்தினாலா? பண்பாட்டினாலா? என்பதை நாம் யோசிக்கவேண்டும்.

[திருப்ப[illegible]ரில், 30-5-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-6-1956]

தோழர்களே!

சீதை, திரவுபதை, அகலிகை, தாரை இவர்கள் எல்லாம் பத்தினிப் பட்டியலில் சேர்ந்துவிட்டார்கள்! நம் பெண்களை, 'என்னம்மா இப்படி நடக்கிறாயே?' என்று கேட்டால் திரவுபதை போனாளே! தாரை படிக்க வந்தவனுடன் கூடினாளே? அவர்கள் எல்லோரும் பத்தினிப் பட்டியலில் சேர்ந்து இருக்கிறார்களே'! என்று திருப்பி நம்மைக் கேட்கமாட்டார்களா? இது எவ்வளவு ஆபாசம்?

இதைவிட மோசமாக இருந்த நாடுகள் இல்லை என்று சொல்லவில்லை. கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும் திருந்திவிட்டனர். கிறிஸ்தவர்கள் இன்று நாகரிகமானவர்களாக ஆகிவிட்டார்கள். முற்காலத்தில் கிறிஸ்தவர் தங்கள் அக்காள்—தங்கைகளைத்தானே கட்டிக்கொண்டார்கள்? வேட்டி கட்டத் தெரியாதே அவர்களுக்கு! பச்சை மாமிசம் தின்று இருந்தவர்கள்தாமே அவர்கள்! இயேசு தோன்றிய பிறகு அவர்களை முடிந்த அளவு சீர்திருத்தினார்.

அதுபோலவே, 1500 வருடங்களுக்கு முன் இஸ்லாமியர்கள் அராபிய நாட்டில் எப்படி இருந்தார்கள்? காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தார்கள். நாம் எப்படிப் பெண்களை வெறுக்கிறோமோ அதுபோலவே அவர்களும் வெறுத்தார்கள். நாம் குழவிக் கல்லைக் கும்பிடுவதுபோல அவர்களும் கல்லைக் கும்பிட்டார்கள். பிறகு, முகமது நபி தோன்றி ஒரே கடவுள், அதுவும் உருவம் இல்லாதவர் என்று சொல்லிச் சீர்திருத்தம் செய்தார்; சாதிகளை அழித்தார்.

[பெத்துநாயக்கன் பேட்டையில், 22-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 31-8-1956]

## 9. ஒழுக்கம், பக்தி, இன்பம்

தோழர்களே!

நம்மிடத்தில் ஒழுக்கம் இருக்கவேண்டும்; பக்தி இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒழுக்கம் இருக்க வேண்டும். பக்தி தனி மனிதனைப் பொறுத்தது. ஒழுக்கம் இல்லாது ஒருவன் இருந்தால், அது பிறரையும் பாதிக்கும்; ஒழுக்கமில்லாதவனால் அயலானுக்குத் தொல்லை ஏற்படும். எனவே, சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கம்—பக்தியைவிட முதன்மையானது; இன்றியமையாதது. ஒழுக்கம் என்றால் என்ன? மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு எதைச் செய்யவேண்டுமென்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ, அதன்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் ஒழுக்கம்.

தனக்குப் புகழ் வேண்டும்; தன்னை மற்றவர்கள் பெருமையாகக் கருதவேண்டும் என்று கருதுவது மனித இயற்கை. இதற்காகவே மற்றவருக்கு உதவுவது, மற்றவருக்குப் பயன்படுவது, பொதுத்தொண்டு ஆற்றுவது என்பன எல்லாம். சமுதாயத்தில் தன் கடமையை உணர்ந்து பிறருக்குப் பயன்படு லே அறம்; அந்த அறத்தால் வருவது இன்பம்.

[பொன்மலையில், 2-9-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 26-9-1956]

படிப்பகம்

www.padippakam.com



பிடிக்க ஆசையாகவும் இருக்கும்? எனவெ, இப்படிப் [illegible] நிறைந்த நாட்டின் தலைவனாக வருபவன் எப்படி ஒழுக்கசீலனாக இருக்கமுடி[illegible]துவும், ஒழுக்கமற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயகத்தின் தலைவன் [illegible]தலாட்டத்தில் கைதேர்ந்தவனாக இருக்க வேண்டும். ஆனால், எனக்கு மட்டும் [illegible]மை யின்மீது மிகப்பற்று உண்டு. ஒழுக்கத்துக்கே மதிப்பளிப்பேன். ஒழுக்கத்திற்கு மரியாதை கொடுக்க நான் தவறுவது இல்லை. இன்றைக்கில்லையானாலும் என்றைக்காவது உண்மையின் மேன்மையை மக்கள் உணரத்தான் போகிறார்கள். எனவே, என்னைப் பொறுத்தமட்டிலும் நான் ஒழுக்கமுடன் நடந்தால், உண்மையை ஒளிக்காமல் எதையும் நேர்மையுடன் கடைப்பிடித்தால் அதற்குத் தனி சக்தி உண்டு என்பது என் நம்பிக்கை. அதைப் போன்றே ஓரளவு பலன் கிடைத்துக் கொண்டும் வருகிறது.

நான் என்னுடைய மனத்திற்குத் தோன்றியவைகளை யாருடைய தயவு தாட்சண்யத்திற்கும் பயப்பட்டுக் கூறுகிறவன் அல்லன். எது உண்மை என்று தோன்றுகிறதோ அவைகளை மறைக்காமல் அப்படியே வெளியிட்டு விடுவேன். என் நோக்கங்கள் அவ்வளவும் பல பேர்களுக்கு இடையூறாக இருக்கலாம். பல பேர்களின் வாழ்க்கைக்கே வழி இன்றிச் செய்துவிடலாம். அதனால்தான், ஆரம்பத்தில் பெரும் எதிர்ப்புகள் எல்லாம் இருந்து, இப்போது ஓரளவு யாவரும் நம்பி ஆதரவு தரும் அளவுக்கு வந்துவிட்டது.

[அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-3-1956]

ஆசிரியப் பெருமக்களே! மாணவ ஆசிரியர்களே!

மனித வாழ்க்கை மற்ற ஜீவன்களைப் போல் தனித்துவாழும் தன்மை கொண்டதல்ல. சமுதாய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. மனிதன் கூடிவாழும் வாழ்க்கையைக் கொள்வது இயல்பும் அவசியமும் ஆனதாகும். இதற்கு மனிதன் ஒழுக்கத்தைப் பின்பற்றுவது மிக அவசியமாகும். மனிதனிடம் சுலபத்தில் ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால் மாணவப் பருவத்தில்தான் முடியும். மாணவப் பருவம் தாண்டியபின் இவன் மாணவனாக இருந்தபோது பின்பற்றியவைகளையே பிறகும் பின்பற்றி நடக்கிறான். எனவே, இப் பருவத்திலேயே நல்லொழுக்கத்தைப் புகட்டவேண்டும். அதற்கு ஆசிரியர்கள் மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு முயற்சிக்கவேண்டும். நல்லொழுக்கம் என்பது மிகவும் கஷ்டமான காரியம் இல்லை. ஒருவன், மற்றவன் தன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறானோ அதைப்போன்றே அவனும் மற்றவனிடம் நடந்து கொள்வதுதான் ஒழுக்கமாகும். மற்றவன் தன்னிடம் நடந்துகொள்வதால் தனக்கு மனக் கஷ்டமும், மனவேதனையும், துன்பமும் உண்டாகுமானால், அதனைப்போன்று தானும் மற்றவனிடம் நடந்துகொள்வானாகில் அதுவே தீயொழுக்கம் ஆகும். பிறர் தன்னிடம் நடந்துகொள்ளும் முறையில், தான் இன்பமும், மன சந்தோஷமும், நிம்மதியும் அடைவானாகில் அதைப்போன்றே மற்றவனிடம் நடந்தால், அதே நல்லொழுக்கத்தின்பால் பட்டதாகும். எனவே, தமது வாழ்க்கையால் பிறர் துன்பம் அடையாவண்ணம் நடந்து கொள்ளவேண்டும். இதையே மனித வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொருவரும் வாழ்க்கை நடத்த முயற்சிக்கவேண்டும்.

[திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 17-3-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-3-1956]

தோழர்களே!

மனிதனுக்கு ஒழுக்கத்தைப் பரப்பவேண்டும். ஒழுக்கத்தில் ஏற்படும் இலாப நஷ்டங்களை அவன் மனத்தில் படும்படியாகச் சொல்லவேண்டும். மேல்நாடுகளில் வழிதெரியாமல் விழித்துக்கொண்டு போனால், நம் அருகில் வந்து, 'May I help you? Which way you wish to go?' என்று கேட்கிறான். 'நான் வழிகாட்டட்டுமா? எங்கே



1932 பிப்ரவரி முதல் மே வரை ரஷ்ய நாட்டில் தங்கியிருந்தபோது, ரஷ்யாவில் டிப்லிஸ் மாகாண நாத்திக சங்கத் தலைவர், செயலாளர், மொழி பெயர்ப்பாளருடன் பெரியார் ஈ. வெ. ரா.

படிப்பகம்

www.padippakam.com



மக்களையும் வலுத்தவர்களும் தந்திரக்காரர்களும் ஏமா[illegible]ற்றிசெய்த ஒரு பெரும் சூழ்ச்சியே ஆகும்.

எப்படிக் குழந்தைப் பருவம் உள்ளமட்டும் பூ[illegible]டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கிறதோ, அதுபோலத்தான் அறிவும், சக்தியும் [illegible]களுக்கு ஏற்படும்வரை—மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத்தீர வேண்டியிருக்கிறது.

உலகில் ஒழுக்கமான காரியம் அல்லது ஒழுக்க ஈனமான காரியம் என்பனவெல்லாம் அவைகளைச் செய்கின்ற ஆட்களின் வலிமையையும், அறிவையும் கொண்டு மதிக்கப்படுகிறதேயல்லாமல், வெறும் காரியத்தைப்பற்றி மாத்திரம் முடிவு செய்யப்படுவதில்லை.

சாதாரணமாக, உலகில், 'விபச்சாரம்', 'பொய்', 'களவு', 'ஏமாற்றம்' முதலிய காரியங்கள் ஒழுக்கங்கெட்ட காரியங்கள் என்று சொல்லப்படுகிறது. என்றாலும், இந்தக் காரியங்கள் யாவையுமோ அல்லது ஏதாவது ஒன்றையோ இல்லாத மனிதர் எவரையும் இது வரையில் உலகத்தில் காண முடியவே இல்லை.

ஒரு சமயம் நம் கண்ணுக்குத் தென்படவில்லை என்று சொல்வதானால், அப்படிச் சொல்லும் மக்கள் ஒவ்வொருவரும் முதலில் தங்களைப் பற்றியே நினைத்துப் பார்த்துத் தங்களுடைய சிறுபிராயம் முதல் இன்றுவரை உள்ள பல பக்குவ வாழ்நாளில் மேற்கண்ட 'ஒழுக்கங் கெட்ட' காரியங்கள் என்பவைகளில் எதையாவது ஒன்றை மனோ வாக்குக் காயங்களால் செய்யாமல் இருந்திருக்க முடிந்ததா, அல்லது செய்யாமல் இருக்கிறார்களா என்று நினைத்துப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும். மற்றும், தங்களுடைய சுற்றத்தார், நண்பர், சுற்றியுள்ள அறிமுகமான ஜனங்கள், நன்றாய்த் தெரிந்த அன்னியர் முதலாகியவர்களில் யாராவது ஒழுக்கத்துடன் கற்புடன் நடந்து வந்ததுண்டா என்று சிந்தித்துப் பாருங்கள். இந்த இருவித முடிவைக் கண்டுகொண்ட பிறகு உலகத்தை நினைத்துப் பாருங்கள்.

மற்றும், உலகில் மக்கள் வாழ்க்கைக்கென்று இருந்துவருகின்ற தொழில்களில் முக்கியமானவைகளாகக் காணப்படுவன விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலி, வக்கீல், உத்தியோகம், வைத்தியம், விலைமாதர் தொழில் ஆகியவைகள் முதல், குருத்துவம், சன்னியாசம், துரைத்தனம், தேசியம் ஈறாக உள்ள அனேக துறைகளாகும். இவற்றின் மூலமே மக்கள் பெரும்பாலும் வாழ்கிறார்கள் என்பதை நாம் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். இந்த மக்களில் யாராவது ஒருவர், ஒழுக்கமாக நடந்துகொள்வதை நாம் பார்க்கிறோமா? ஒழுக்கம் என்றால் என்ன, அது எது என்கின்ற விஷயத்தில் நாம் இப்போது பிரவேசிக்கவில்லை; அதற்கு இந்த வியாசத்தில் இடம் வைக்கவும் இல்லை. மற்றபடி, நாம் 'ஒழுக்கம்' என்பதாக உலக வழக்கில் எதை எடுத்துக்கொண்டு பேசுகிறோமோ, மேற்கண்ட வாழ்க்கைத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தந்தத் துறைக்கும் எதை எதை ஒழுக்கம் என்று அவர்களாகவே சொல்லிக்கொள்கிறார்களோ அதையும், அவரவர்கள் மற்றவர்களைப் பார்த்து எதை எதை ஒழுக்கம் கெட்ட காரியம் என்று சொல்கிறார்களோ அதையும் மாத்திரமே—இங்கு ஒழுக்கம் என்பதாக வைத்துக் கொண்டு யாரிடமாவது இந்த 'ஒழுக்கத்தை'க் கண்டுபிடிக்க முடிகிறதா என்றுதான் கேட்கிறோம்.

ஒரு வேலைக்காரன் செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை அந்த வேலைக்காரன் முன்னிலையிலேயே எஜமான் செய்துவிட்டு, வேலைக்காரனை மாத்திரம் ஒழுக்கங் கெட்டவன் என்று சொல்லுகிறான்.

ஒரு குமாஸ்தா செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை, மேல் அதிகாரி அந்தக் குமாஸ்தா முன்னிலையிலேயே பல தடவைகள் செய்துவிட்டு, குமாஸ்தாவை ஒழுக்கங் கெட்டவன் என்று கூறுகிறான்.



ஒரு மகன் செய்யும் [illegible]கெட்ட காரியத்தைத் தகப்பன் செய்துவிட்டு, மகனை ஒழுக்கங்கெட்டவன் என்று [illegible]ட்டு, [illegible]றான்.

இது போலவே, எல்லாத் தொழில் துறையிலும் உள்ள மக்களும், அவரவர்கள் வாழ் நாட்களில் ஒழுக்க ஈனமாக நடந்துகொண்டே மற்றவர்களை ஒழுக்க ஈனர்கள் என்று சொல்லி வருகிறார்கள். இவை நாம் ஒரு குறிப்பிட்ட ஒரு சிலரிடம் மாத்திரம் இருப்பதாய்ச் சொல்ல வரவில்லை. 'ஒழுக்கமாய்' மக்கள் யாராலும் நடக்க முடியாது என்றும்; ஒழுக்கம் என்பதாக ஒரு குறிப்பிட்ட குணமோ, செயலோ இல்லை என்றும்; ஒழுக்கம் என்று சொல்லி வருவதெல்லாம் எளியோரையும், பாமர மக்களையும், அடிமைத்தனத்தில் இருத்தி வரப் பயன்படுத்தக்கூடிய சூழ்ச்சி ஆயுதமே தவிர, மற்றபடி அது மக்கள் சமதர்மத்திற்குப் பயன் படக்கூடியது அல்லவென்றும் சொல்லுவதற்காகவே எடுத்துக்காட்டுகின்றோம்.

உண்மையிலேயே 'ஒழுக்க ஈனம்' என்பது ஒன்று உண்டு என்றும்; அது—திருட்டு, பொய், ஏமாற்றம் போன்றதாகிய குணங்கள்தாம் என்றும் சொல்வதாய் இருந்தால், அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாய்க் குடிகொண்டிருக்கும் இடங்கள் அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள், வக்கீல்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும்.

மனிதர்களுக்குத் துன்பம் இழைத்து, அவர்களது அமரிக்கையைக் கெடுத்து ஏமாற்றி வஞ்சித்து வாழும் கூட்டங்கள் மேற்கண்ட கூட்டங்களே ஆகும்.

இது அந்தந்தத் துறையைக் கைக்கொண்ட ஆட்களை மாத்திரம் அல்லாமல், அந்தந்தத் துறைகளுக்கே இரத்தமும், சதையும், எலும்பும் போலக் கலந்து இருக்கும் காரியங்களுமாகும்.

இந்தக் கூட்டத்தாரைக் கண்டு எந்த மகனும் அருவருப்படுவதே இல்லை. இவர்களிடத்தில் மக்கள் வெறுப்புக் காட்டுவதும் இல்லை. அதற்குப் பதிலாக, இந்தக் கூட்டத்தாருக்குத்தான் நாட்டிலே மக்களிடம் செல்வாக்கும், மதிப்பும் இருந்து வருகின்றது. மனித சமூகத்திற்கு எலும்புருக்கி வியாதி போன்ற இந்தக் கூட்டம், மக்களிடம் ஆதிக்கம் செலுத்தி வருவது என்பது மக்களின் அறிவீனத்தையும் பலமற்ற தன்மையையும் காட்டுவதேயல்லாமல் வேறில்லை.

வாழ்க்கைத் துறையின் ஒழுக்கம்தான் இம் மாதிரி இருக்கிறதென்றால் மற்றபடி, பக்தி, பரமார்த்திகம், ஆத்மார்த்தம், ஆசாரத்துவம், மகாத்மாத்துவம் என்பவை முதலான துறைகளிலாவது ஒழுக்கம் என்பதைக் காணமுடிகின்றதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

அவையும் இப்படித்தான் இருக்கின்றன என்பதே நமது அபிப்பிராயம்.

['குடிஅரசு'–கட்டுரை—4-6-1949]

பெரியோர்களே! தோழர்களே!

மேல்நாட்டில் ஒருவனைப் பார்த்துப் பாதை கேட்டால் அவன் சும்மா இருக்க மாட்டான். நாம் எங்கே போக விரும்புகிறோமோ அதுவரை நம்கூடவே வந்து காண்பித்துப் போவான். இதை அன்றி அவன் நாம் கேட்பதற்குச் சரியாகப் பதில் கூறவில்லை என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மற்றவன் அவனைப் பார்த்து 'உனக்கு சென்ஸ் இருக்கிறதா? ஒழுக்கம் கெட்டவனே!' என்று தூற்றுவான். இம்முறையில்கூட மேல்நாட்டில் ஒழுக்கத்திற்கு ஒவ்வொருவரும் மதிப்புக் கொடுக்கின்றனர். இங்கு அப்படி இல்லை. ஒழுக்கமுள்ளவன் மூலையில் கிடப்பான். ஒழுக்கம் கெட்டவன் பலராலும் போற்றப்படுவான். தனிப்பட்ட ஒவ்வொருவனும் ஒழுக்கத்தைப் பின்பற்றுவதில்லை. முதலில் ஒழுக்கத்திற்கு மதிப்பிருந்தால் அல்லவா ஒவ்வொருவரும் ஒழுக்கத்தைக் கடைப்

படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொருவரும் விபச்சார தோஷத்திற்கு ஆ[illegible]விட்டே மற்றவர்களைக் குறை கூறுகிறார்கள் என்பது அவரவர்கள் நெஞ்சில் கை[illegible]த்து—குழந்தைப் பருவமுதல் தாங்கள் நினைத்தது, செய்தது ஆகிய காரிய[illegible] ஞாபகப்படுத்திப் பார்த்தால் தங்களுக்கு விளங்கும்.

நம்முடைய கடவுள்கள் என்று சொல்லப்படும் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலியவைகள்கூட விபச்சார தோஷத்திலிருந்து விலக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய பெண்சாதிமார்களைக்கூட விபச்சார தோஷத்திலிருந்து விலக்கவில்லை.

ஏன் இப்படி இருக்கவேண்டும்? விபச்சாரம் மக்களுக்கு இயற்கையா என்று பாருங்கள். ஒரு நாளும் அல்லவே அல்ல. செயற்கைக் குணங்களாலேயே விபச்சாரம் நடக்கின்றது. அதாவது, கலியாணங்களே பெரிதும் விபச்சாரத்திற்குச் சமானமானவையாகும்.

தனக்கு இஷ்டமில்லாமல், காதல் இல்லாமல், பணம், காசு, சொத்து, வேறுவித நிர்ப்பந்தம் ஆகியவைகளுக்காக இணங்குவதே விபச்சாரம் ஆகும்.

நமது மணமக்கள் பெரும்பாலோர் தாய் தகப்பன்மார்கள் தங்களை ஜோடி சேர்த்து விட்டார்களே என்பதற்காகவே இணங்கி இருக்கிறார்கள். மற்றும் பலர் தங்களுக்குள் வேற்றுமை உணர்ச்சியும் (அன்பு) ஆசை இன்மையும் ஏற்பட்டும் பிரிந்துகொள்ள முடியவில்லையே என்பதற்கு ஆகவே இணங்கி இருப்பதுபோல் இருக்கிறார்கள். இதுபோன்றவைகள் எல்லாம் நிர்ப்பந்த விபச்சாரங்களேயாகும். மற்றும் பலர் செல்வத்தையே பிரதானமாய்க் கருதி, இன்ப உணர்ச்சியைப் பறிகொடுத்து இணங்கி இருக்கிறார்கள். இதுபோன்றவை காசு, பணம், சொத்துக்களுக்காகச் செய்கின்ற விபச்சாரங்களேயாகும்.

இவை ஒருபுறமிருக்க, இன்று உலக வழக்கில் இருக்கின்ற விபச்சாரத் தன்மைகள் தாம் ஆகட்டும் ஏன் ஏற்படவேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். பால்ய மணங்களை ஒழித்துக் காதல் மணம், கல்யாண ரத்து, விதவை மணம், சமஉரிமை ஆகியவைகள் ஒரு சமூகத்தில் இருக்குமானால், இன்றுள்ள விபச்சாரங்களில் 100-க்கு 90 பாகம் மறைந்து போகும் என்றே சொல்லுவேன். அதோடு, பெண்மக்களை நன்றாகப் படிக்கவைத்து, அவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டி, சொத்து உரிமையையும் வழங்கிவிடுவோமானால் விபச்சாரம் என்பது எப்படி நேரும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

[கீழையூர், திருபுவனம், திருச்சி ஆகிய இடங்களில் 9-6-1935 முதல் 13-6-1935 முடிய சொற்பொழிவுகள்—'குடிஅரசு' 16-6-1935]

தாய்மார்களே! தோழர்களே!

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்ற இவ்வாண்டு துவக்க விழாவிற்குத் தலைமை வகித்து நடத்தும் பெருமையை எனக்களித்ததற்கு நான் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன்.

ஒழுக்க விஷயங்களிலும், அதுபோலவே மக்களிடம் மக்கள் நடந்து கொள்ளுகிற ஒழுக்கத்தைப் பற்றித்தான் சுயமரியாதைக்காரருக்குக் கவலையே ஒழிய—எப்படிக் குடுமி வைப்பது, எப்படி வேட்டி கட்டுவது, எப்படிப் பொட்டுப் போடுவது; எப்படிப் பிரார்த்தனை செய்வது, யாரைத் தொடுவது, யார் வீட்டில் சாப்பிடுவது, எது சாப்பிடலாம், எது சாப்பிடக் கூடாது, எத்தனை கடவுள்கள், எந்தக் கடவுளைக் கும்பிடுவது, எதைக் கும்பிடக் கூடாது, எது வேதம், எது சாஸ்திரம்—என்பனவாதிகளில் சுயமரியாதைக்காரருக்குக் கவலை இல்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், எந்த மனிதனும் அன்னியனுக்கு உபகாரியாயும், கடைசிப் பட்சம் அன்னியனுக்குத் தன்னால் துன்பம் கொடுக்காதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம் என்று சுயமரியாதை இயக்கத்தார் கருதி இருக்கிறார்கள்.



சுயமரியாதைக்காரர்க[illegible] நாமும் தனிப்பட்ட எந்த வகுப்பாருடையவும், சுயநலத்துக்கு மாத்திரம் ப[illegible]ய எந்த ஒழுக்கத்தையும், தனிப்பட்ட மதவாதிகளுக்கு மாத்திரம் பயன்படும் எந்த [illegible]ட்டு[illegible]தையும் ஒப்புக்கொள்ளாமல் எல்லா மக்களுக்கும்—எந்த வகுப்பாரானாலும், எந்த நக்[illegible]யிலுள்ளவர்களானாலும், எந்த மதக்காரரானாலும் யாவருக்கும் ஒன்றுபோல் பயன்[illegible]ம்படியான காரியங்களையே நாம் 'ஒழுக்கம்' என்கிறோம். இதனால் சுயநலத்தையே பிரதானமாய்க் கருதிக் கற்பித்துக்கொண்ட ஒழுக்கங்களை உடைத்தெறிவது சுயமரியாதைக்காரர்கள் கடமை என்பது விளங்கும்.

தாசிக்கு ஒழுக்கம்–ஒரு புருஷனையே நம்பி ஒருவனிடத்திலேயே காதலாய் இருக்கக் கூடாது என்பதாகும்.

'குல ஸ்திரீ' என்பவளுக்கு ஒழுக்கம்–அயோக்கியனானாலும், குஷ்டரோகியானாலும் அவனைத் தவிர வேறு ஒருவனை மனத்தில்கூடச் சிந்திக்கக்கூடாது என்பதாகும்.

இதுபோலவே, முதலாளிக்கு ஒழுக்கம் – எப்படி வேண்டுமானாலும் யாரையும் ஏமாற்றலாம் என்பதாகும்.

தொழிலாளிக்கு ஒழுக்கம் – ஒரு விநாடி நேரம்கூட வேலை செய்யாமல், முதலாளிக்குத் துரோகம் செய்யலாகாது என்பதாகும்.

இந்துவுக்கு ஒழுக்கம் – பசுவை இரட்சிக்க வேண்டும் என்பதாகும்.

முஸ்லிமுக்கு ஒழுக்கம் – பசுவைப் புசிக்கலாம் என்பதாகும். இந்து வட்டி வாங்கலாம். முஸ்லிம் வட்டி வாங்கக்கூடாது என்பவை ஒழுக்கம்.

சைவனுக்கு ஒழுக்கம் – விபூதி பூசவேண்டும் என்பதாகும்.

வைணவனுக்கு ஒழுக்கம் – நாமம் போட வேண்டும் என்பதாகும்.

மாத்துவனுக்கு ஒழுக்கம் – முத்திரை அடித்துக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

இந்துவுக்கு – அக்காள் மகளை, அத்தை மகளைக் கட்டிக்கொள்வதும்; சிற்றப்பன் மகள் தங்கை என்பதும் ஒழுக்கம்.

முஸ்லிம், சிற்றப்பன் மகளைக் கட்டிக்கொள்வது ஒழுக்கம்; அக்காள் மகளைக் கட்டக்கூடாது என்பது ஒழுக்கம்.

ஆகவே, இன்று உள்ள ஒழுக்கங்கள் என்பவைகள் எல்லாம் சட்டம்போல்—சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குப் பொருந்தியவைகளே தவிர, எல்லோருக்கும் பொருந்தியவைகள் அல்ல.

ஆதலால், சுயமரியாதைக்காரர்கள் பொதுவாக மனித சமுதாயத்திற்கும், சமூக சமத்துவ வாழ்வுக்கும் ஏற்றதையே ஒழுக்கமாகக் கொண்டு—முக்கியமாய் மனித சமுதாயத்திற்கு ஏற்ற வண்ணம் அன்னியனுக்கு உதவி செய்தும், அன்னியனுக்குத் தொந்தரவில்லாமல் நடந்துகொள்வதையே ஒழுக்கமாய்க் கருதுவார்கள்.

[சென்னையில், 17-11-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 24-11-1940]

உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அதுபோலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும்—எளியோரையும், பாமர மக்களையும் ஏமாற்றி, மற்றவர்கள் வாழப் பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பன எல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது, குழந்தைகளைப் பயமுறுத்தப் பெரியவர்கள், 'பூச்சாண்டி, பூச்சாண்டி' என்பது போல், இவை எளியோரையும் பாமர



படிப்பகம்

www.padippakam.com



வெளியில் போய் அதுகளுடன் சேர்ந்துவிடுகிறது. உடம்பில் 1000 எடை தண்ணீர் இருக்கிறதென்றால் உடம்பை எரிக்கும்போது தண்ணீர் ஆவியாகிறது. மூலப்பொருளுடன் சேர்ந்து கொள்கிறது. முன்பு கூறுவார்கள்: ஒன்றும் மெழுகுவர்த்தி எரிவதால் ஒன்றும் நஷ்டமில்லை என்று. மெழுகுவர்த்தி எரிகிறது. புகைச்சலாக வந்து காற்றுடன் சேர்ந்து அது அதன் மூலப்பொருள்களுடன் சேர்ந்து கொள்ளுகிறது. பிறகு நாம் அந்த மூலப் பொருளை எடுத்துக் கொள்ளுகிறோம். இப்படி அதன் மூலப்பொருள் நஷ்டமாவதில்லை.

ஒரு அண்டா நிறைய தண்ணீர் சுடவைக்கிறோம். எரிய எரிய தண்ணீர் குறைந்து ஆவியாகி, அது கனம் குறைந்த வஸ்துவாக ஆகிறது. மேலே போக, காற்றாகிப் பின் குளிர்ந்து மழையாகப் பெய்கிறது. அது எங்கேயும் போகவில்லை. மூலப்பொருளாகிய தண்ணீரோடு தண்ணீராகச் சேருகிறது. தண்ணீர் ஆவியாகி, ஆவி தண்ணீராக மாறுகிறது. அது உயிரோடுதான் இருக்கிறதே தவிர எங்கேயும் போய்விடவில்லை. எத்தனை தடவை அப்படித் தண்ணீர் மாறி மாறி வருகிறதோ, அதுபோல்தான் மனிதன் உயிரும் என்பர்.

எனவேதான், இந்த ஆத்மா என்பதும், மோட்சம், நரகம் என்பவைகள் எல்லாம் இந்தப் பார்ப்பனர் நம்மை ஏமாற்றி நம்மிடம் பணம் பறிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதுதான் கருத்தே தவிர, இதில் உண்மை இருக்கிறது என்றுகூற இடமில்லை.

இதையெல்லாம் எடுத்துக்கூற நாதியில்லை, எங்களைத் தவிர. ஏமாற்றிப் பிழைக்கத்தான் வசதியிருக்கிறதே தவிர, உண்மையை எடுத்துக்கூற வசதியில்லை. இந்தப் பத்திரிகைக்காரன் யோக்கியமாக நடப்பதில்லை. மக்களையும் யோக்கியமாக நடக்க விடுவதில்லை. தன் சுயநலத்திற்காகப் பித்தலாட்டம் செய்கிறான். ஒரு பக்கம் ஜோதிடம் போடுகிறான். உள்ளபடி அவன் பக்தனாக இருந்தால் அந்த ஜோதிடத்தை அவன் நம்புகிறானா? அதன்படி நடக்க சம்மதிக்கிறானா? எனவே, தோழர்களே நீங்கள் நன் முறையில் சிந்தித்துப் பார்த்து நடக்க வேண்டும்.

[*சீர்காழியில்,* 29-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1959]

## 7. தலைவிதி

தோழர்களே!

இன்று இவ்வூர் யூனியன் போர்டார் அழைப்புக்கு இணங்கி வந்தசமயம் உற்சவக் கூட்டத்திற்காக ஒரு பொதுக்கூட்டம் கூட்டவேண்டுமென்று சொன்னதால் இங்குப் பேச ஒப்புக்கொண்டேன்.

கடவுளைப்பற்றிய எண்ணங்களும் பக்திகளும் நமக்கு என்ன பலனைக் கொடுக்கின்றன? அதிக பக்திக்காரன் தனக்கு வேண்டியதெல்லாம் கடவுள் கொடுப்பார் என்று எண்ணுகிறான். கடவுளைப்பற்றி அதிகமாய் அறிந்தவன் சகலமும் அவன் (கடவுள்) செயல்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று எண்ணுகிறான். மனிதனது முற்போக்கையும் அவனது கஷ்டத்தையும் கொடுமையையும் நிவர்த்திசெய்துகொள்ளுவதையும் இந்த எண்ணங்கள் தடைப்படுத்துகின்றன.

பல ஆயிரம் வருஷங்களாக ஒருவன் கீழ்ச் சாதியாய் இருப்பதற்கும், கல்வி அறிவு பெறாமல் இருப்பதற்கும், சதா உழைத்து உழைத்துப் பாடுபட்டும் பட்டினியாய்ப் போதிய ஆகாரமும் வசதியும் இல்லாமலும் இருப்பதற்கும் இந்த எண்ணங்களே காரணமாகும். இதுபோலவே பாடுபடாத சோம்பேறிகள் கோடீஸ்வரர்களாகவும், தலைமுறை தலைமுறையாய்ப் பிரபுக்களாகவும் மேல்சாதிக்காரர்களாகவும் இருப்பதற்கும் இந்த எண்ணங்கள்தாம் காரணம். இந்த எண்ணங்கள் பணக்காரனுக்கும் சோம்பேறிக்கும் (பார்ப்பானுக்கும்) தாம் அனுகூலம்; தொழிலாளிக்கும், கூலிக்காரனுக்கும், பண்ணையாளுக்கும் கெடுதியே ஆகும்.



ஏழைகள் தங்கள் தரித்திரத்திற்கும் கஷ்டத்துக்கும் கடவுளும், தலைவிதியும்தாம் காரணம் என்று சொல்லிவிடுவார்களே தவிர அவர்கள் எப்படித் தரித்திரத்தை நீக்கிக்கொள்ள முடியும்? அவன், தன் பாட்டின் பிட்டு, எவன் அனுபவிக்கிறான்? ஏன் அனுபவிக்கிறான்? என்று பார்த்து அவைகளைத் தடுக்கவேண்டும். இந்தக் காரியம் செய்ய ஒரு கடவுளும் ஒப்பாது. ஏனென்றால், கடவுளையும் தலைவிதியையும் பணக்காரனும், சோம்பேறியும் தாம் உண்டுபண்ணுகிறார்கள். ஆகையால், அவைகளைத் தங்களுக்குத் தகுந்தபாதிரியாகத்தான் உண்டுபண்ணிக்கொள்வார்கள். இதில் உங்களுக்குச் சந்தேகம்வேண்டாம். இங்கு மாத்திரமல்லாமல் எல்லாத் தேசங்களிலும் பணக்காரர்கள் தங்கள் நன்மைக்கும், அது ஸ்திரமாய் இருப்பதற்கும் இந்த மாதிரியாகத்தான் கடவுளைச் சிருஷ்டித்து, அதைப் பிரசாரம் செய்யப் பாதிரிகளை ஏற்படுத்தி—அவர்களுக்குப் பணம் கொடுத்துக் காப்பாற்றி வருகிறார்கள். இந்தப் புரட்டுகளை உலகில் வெகுபேர் அறிந்திருந்தாலும், ரஷியா தேசத்தார்கள்தாம் முதன்முதலில் இதை அழித்து நிர்த்தூளியாக்கி, பணக்காரத் தன்மையையும், பாதிரித்தன்மையையும் ஒழித்தார்கள். ரஷியா தேசமானது இந்தியாவைப் போலவே பணக்காரனுடையவும் பார்ப்பனர் (பாதிரி)களுடையவும் ஆதிக்கத்தில் இருந்து ஏழை மக்களை வாட்டி வதைத்து வந்தது. ஆனால், அவர்கள் அதற்குக் காரணம் கடவுள் புரட்டும் மதப்புரட்டும் என்பதை உணர்ந்து, அந்த இரண்டையும் ஒழிக்கத் தொடங்கி, இன்று எல்லோரும் சமமாய் வாழுகின்றார்கள். அங்கு சோம்பேறியோ, பிரபுவோ, பணக்காரனோ, முதலாளியோ, மிராசுதாரனோ, ஜமீன்தாரோ கிடையாது. எல்லோரும் பாடுபட வேண்டியது. அதன் பயனை எல்லோரும் சமமாய் அனுபவிக்கவேண்டியது; ஒருவனை ஒருவன் ஏய்க்கவோ, ஒருவன் பாடுபட்டதை ஒருவன் அனுபவிக்கவோ அங்கு முடியாது.

[சென்னிமலை ஸ்கூலில், 9-2-1933-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-2-1933]

## 8. ஒழுக்கம்

தோழர்களே!

வாழ்க்கையில் ஒழுக்கத்தில், புருஷனுக்கு வேறு சட்டம், பெண்ணுக்கு வேறு சட்டம் வைத்திருக்கிறோம்.

ஆனால், ஒழுக்கத்தைப்பற்றி சதாகாலமும் பேசுகிறோம்; ஒழுக்கம் என்பதை எழுத்தில், சப்தத்தில் பார்க்கின்றோமே ஒழிய காரியத்தில் பார்ப்பதே இல்லை.

விபசாரித் தனம் என்பதை எவ்வளவோ கண்டிக்கிறோம். அதற்கு எவ்வளவோ நிபந்தனைகள், நிர்ப்பந்தங்கள் சட்ட மூலமாய், சமூக மூலமாய், சாஸ்திர மூலமாய், இயற்கை மூலமாய் எல்லாம் வைத்திருக்கிறோம். அப்படி எல்லாம் இருந்தும், அதை இருவருக்கும் சமமாய் வைக்கவில்லை. ஆண் விபசாரத்தைப்பற்றிப் பேசுவோரே கிடையாது. அப்படி இருந்தாலும் அதற்குப் பெயர் பலக் குறைவு (Weakness) என்று சொல்லி விடுகிறோம். பெண் விபசாரத்தை நாணயக் குறைவு, ஒழுக்கக் குறைவு, கெட்டகுணம், இகழத் தக்கது, கண்டிக்கத் தக்கது, வெறுக்கத் தக்கது என்றெல்லாம் சொல்லுகிறோம். ஆணும் பெண்ணும் சேர்ந்தால்தான் விபசாரமாகுமே தவிர ஒரு பெண்ணும் மற்றொரு பெண்ணும் சேர்ந்து விபசாரம் செய்துவிட முடியாது. இதை யாரும் விபசாரம் என்று சொல்லவும் மாட்டார்கள்.

ஒருவருக்கொரு நீதி என்கின்ற முறையாலேதான் உலகில் பெரிதும் விபசாரம் இருந்து வருகிறதே தவிர, பெண்களின் கெட்ட குணங்களால் இருந்து வருவதாகச் சொல்லி விட முடியாது.

அன்றியும், இவ்வளவு தூரம் மதத்தாலும், சட்டத்தாலும், சமூகத்தாலும், நிபந்தனையாலும், வெறுக்கப்பட்ட விபசாரம் என்பது ஏன் இன்று உலகில் சர்வ சாதாரணமாய் இருந்துவருகின்றது. இதற்கு என்ன காரணம் என்பதை யாராவது யோசிக்கிறார்களா?

www.padippakam.com



புத்தியால் சிந்தித்துப் புத்தியின்படி நட! [illegible]நால்தான் புத்தர் எனப்பெயர் என்று வெள்ளைக்காரன் எழுதி வைத்திருக்கிறான். [illegible] தமிழ் அகராதியிலும் புத்தியை ஆதாரமாகக் கொண்டவன் புத்தன் என எழுதியிருக்கிறது.

புத்தர் சொன்னபடி சிந்தித்தால் இது விளங்குமே தவிர, நம்மிரு மதமும் என்ன கூறுகிறது என்று பார்த்து, மதத்தில் கூறியிருக்கிறது என்று கூறி நடப்பானேயானால் அவன் மடையன்; புத்திப்படி நடந்தால் மட்டும் எல்லாம் நன்மையாகும். அதற்குமேல் அவன் ஆராய்ச்சி வேறு இருக்கிறது.

மனிதன் பிறக்கும்போதே பெரிய மனிதனாகப் பிறப்பதில்லை. சின்னக் குட்டியாகத் தான் பிறக்கிறான். சிறிதாகப் பிறந்து பிறகு பெரியவனாக வளருகிறான். பெரியதாகத் தோன்றும் யானையும் பிறக்கும்போதே பெரிதாகப் பிறப்பதில்லை. சிறிதாகத்தான் பிறக்கிறது. பெண்டாட்டி சினையாகிறாள்; பிள்ளை பெறுகிறாள். யானை சினையாக வேண்டுமானால் அதற்கு விதை கடுகத்தனையாகும். பெண் சினையாவதற்கு, அந்த சினை (யானை) உருவத்திற்கு ஆகும் ஒரு கடுகத்தனையிலே நான்கில் ஒரு பங்குதான். அவ்வளவுதான்; அதிலிருந்து வருவது சிறு உருவமாகும். அப்புறம் உணவு உண்டு வளர்ந்து மனிதனாகிறான். இதுதான் மனிதன்; இதில் எப்படி ஆத்மா என்பது பொருந்தும்?

சாதாரணமாக, ஒரு மரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 10டன் எடை இருக்கிறது. ஒரு ஏக்ரா அளவு ஒரு ஆலமரம் இருந்தது. விழுது எங்கும் இறங்கியிருந்தது. இதெல்லாம் எங்கிருந்து வருகிறது? ஒரு சிறு கடுகத்தனை முனையிலிருந்துதான். மற்றபடி காற்று, தண்ணீர், மண்ணின் சாரம், இவையெல்லாம் சேர்ந்து மளமளவென்று வளருகிறது. சிலது நூறு, இருநூறு, ஐந்நூறு வருஷம் இருக்கிறது. பட்டுப் போய்விட்டால் பகவான் சீட்டுக் கிழித்து விட்டான் என்பான்.

எத்தனை நாளைக்கு இருப்பது, வாழ்வது என்பன சுற்றுப்புறச் சார்புப்படிதான். மனிதனும் அப்படித்தான். வயிற்றிலேயே இறப்பதுமுண்டு; பிறந்ததும் இறப்பதுமுண்டு. பள்ளியில் படிக்கும் போதும் இறப்பான். திருமணமான பிறகும் இறப்பான். இப்படி எந்தச் சமயத்திலும் மனிதன் சாகிறான். சுற்றுப்புறச் சார்புப்படி சிற்சில சிகிச்சைகள் செய்வதை முன்னிட்டு விபத்துக்களைத் தவிர்ப்பதுமுண்டு. வளப்பமான முறையிலிருந்ததால் இந்தக் குறைகள் அதிகமில்லை.

எனக்கு வயது 80 ஆகிறது. எந்த விதத்திலும் உணவு மற்ற விஷயங்களிலும் கவலைப்படுவதில்லை. ஏதோ வாய்த்தபடி, நினைத்தபடி, பிடித்ததைச் சாப்பிடுவேன். நேற்று ஒரு பண்டத்தை தின்று அது ஜீரணிக்காமல் கஷ்டப்பட்டிருப்பேன். இன்று அது கிடைத்துவிட்டால் சாப்பிட்டு விடுவேன். பத்து நாளைக்கொருதரம் குளிப்பேன். அதுவும் யாருடையவாவது தொந்தரவினால்தான். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதென்றால் அது ஒன்றரை மாதத்திற்கு ஒரு தடவை கூட கஷ்டம். அதுவும் லேசில் தேய்க்கவிட மாட்டேன். இதற்காக என் முதல் மனைவி நாகம்மையாரும் என் தங்கையும் சேர்ந்து பேசிக் கொள்வார்கள். 'நான் பேச்சுக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறேன். நீ பின்னால் வந்து எண்ணெயைத் தலையில் ஊற்றித் தேய்த்துவிடு' என்று; அதன்படி என் மனைவி என்னிடம் ஏதாவது பேசிக்கொண்டிருப்பார்கள். என்னுடைய தங்கை பின்னால் வந்து தலையில் எண்ணெய் ஊற்றி விடும். நான், அட நாசமாபோறவங்களே, என்று திட்டி விட்டுப் பின்னால் திரும்புவேன். தங்கையாக இருக்கும், கோபம் வராது. சரியாகத் தாங்குவது கிடையாது. மற்றபடி ரொம்பப்போனால்தான் டாக்டரைக் கூப்பிடுவேன். கொடுக்கும் மருந்தைக் குடிப்பேன்.

மனிதனாகப் பார்த்து நல்லதாக அமைப்பதும் உண்டு; தானாக அமைவதும் உண்டு. எல்லா வசதிக்கும் அபாயம் என்பது உண்டு. இயற்கை நிகழ்ச்சிகள்!



ஒரு நல்ல கெட்டியான [illegible] 100 வருஷம் இருப்பதும் உண்டு. நாலு வருஷம் இருப்பதும் உண்டு. நல்ல கெ[illegible]ன வீடு இது; நூறு வருஷம் வரை தாங்கும் என்கிறோம். ஆனால் நான்கு வருஷத்திலே நெருப்புப் பிடித்துக்கொண்டு இடிந்து விடுகிறது.

100, 150 வருஷம் இருக்கும் என்றாயே, 4 வருஷத்தில் போய்விட்டதே என்றால் என்ன அர்த்தம்? எப்படியெப்படியிருந்தால் இருக்குமோ அப்படியிருந்தால் இருக்கும். ஒரு இடி அதன்மேல் விழுந்தாலோ அல்லது ஒரு லாரி வந்து வீட்டின்மேல் மோதினாலோ அது இருக்குமா? சாதாரணமாக இருந்தால் 100, 150 வருஷம் இருக்கும்.

காந்தி கூடத்தான் 150 வருஷம் இருப்பேன் என்றார். என்னவாயிற்று? அதற்கேற்றபடி சாப்பிட்டு வந்தார். எனக்கு அதைப்பற்றியெல்லாம் நன்கு தெரியும். அவருடன் நெருங்கிப் பழகியவர்களில் நானும் ஒருவன். எத்தனை பாதாம் கொட்டை, எத்தனை பழம் என்று எண்ணித்தான் சாப்பிடுவார். என்ன டாயில் என்ன சத்து என்று பார்த்துச் சாப்பிடுவார். உடல் வளர்ச்சிக்கானவற்றை உண்பார். இதற்காகப் பட்டினியுமிருப்பார். ஆனால், அதே சமயத்தில் அந்தப் பட்டினியைக் காட்டிக் காரியமும் சாதித்துக் கொள்வார். என்ன ஆயிற்று? 80 வயதிலேயே தீர்ந்து போனார். என்னைவிட பத்து வயது முந்தி. அவ்வளவுதான். என்ன நடந்தது? சாகவில்லையா? ஏதோ பார்ப்பனர்களுக்கு அபாயம் வந்தது; எனவே, பார்க்காமல் சுட்டான். செத்துப்போனார். நான்கு தென்னங் கன்றுகளை நட்டால் எல்லாம் நன்றாகவா பயன் தருகிறது? இல்லை; ஏன்? எல்லாம் ஒரு விதைதானே! மனிதனாக இருந்தால் ஜாதகம் சொல்லுவார்கள். மரத்திற்கு என்ன காரணம் சொல்லுவார்கள்? என்னமோ, அது அவ்வளவுதான் என்பார்கள்.

அயோக்கியன் என்று ஒரு பிள்ளை பிறப்பதில்லை. சுற்றுப்புறச் சார்புகளின்படி, பழக்கப்படிதான் கெட்டவனாக, பித்தலாட்டக்காரனாக, கொலைகாரனாக மாறுகிறான். இதன்படி உடம்பு அமைப்பு ஏற்பட்டுவிடுகிறது. வயிற்றிலிருக்கிறபோதே, உருவ வளர்ச்சியடைகிறபோது காற்று, உஷ்ணம் வந்து ஒவ்வொரு அவயங்களையும் தாக்குகிறது. அதனால்தான் சிலர் நொண்டியாகவும், முடமாகவும் மற்றும் பலர் அங்கஈனமாகவும் பிறக்கிறோம். நம் உடம்பில் சிரிக்க, கோபப்பட, சிந்திக்க, நடக்க, ஆத்திரப்பட என்று ஒவ்வொரு அவயவம் இருக்கிறது. இது சுற்றுப் புறத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளும்.

முன்கோபக்காரன் ஒருவன், நண்பன் ஒருவனைப் பலர் முன்னிலையில் முன்கோபத்தால் திட்டினால், அது ஆணவத்தால் வருவது இல்லை. உள்ளேயுள்ள அவயவத்தால் வருவது. கார் ஓடுகிறது; ஒன்று கோளாறாக இருந்தால் வண்டி கோளாறு காண்பிக்கிறது.

ஒரு மடையனுக்குப் படிக்கும்போதே மறந்துவிடுகிறது. வரிசையாக எண்ணிக் கொண்டே வரும்போது 59, 60 என்று கூறிவிட்டுப் பின் 59 என்று கூறுவான். அவயவத்திலுள்ள ஒரு கூட்டுச் சக்திதான் காரணம்.

செத்துப் போய்விட்டது, சாறு போச்சு; சத்துப்போய்விட்டது என்கிறோம். என்ன அர்த்தம்? எதன்மூலம் எப்படிப் பார்த்து செத்துப் போயிற்று என்கிறோம். எப்படிப் பார்க்கிறார்கள்? நாடி பிடித்தா? பெண்களும் பாட்டிகளும் போயிட்டது என்கிறார்கள். எப்படி? மூக்கில் கை வைத்துப் பார்க்கிறார்கள். மூச்சு எழும்பவில்லையா? உடனே செத்துப்போச்சு என்பார்கள். எப்படி? காற்றை வாங்கிவிடுகிற இயந்திரம் இருந்து, அதன் வேலை தீர்ந்து போச்சு. மற்ற எந்த அவயவமும் நன்றாக இருந்தாலும் பயனில்லை. காற்றை வாங்க முடியவில்லை, விடமுடியவில்லை என்றால் சத்துப் போய்விட்டது; அதுதான் காரணம். நல்லா உடம்பு குண்டாகத்தானிருக்கும். வண்டியிலேறி கோர்ட்டுக்குப் போவார். போகும் வழியில் இறந்து விடுவார். இறங்கும்போது பார்த்தால் இறந்து கிடப்பார்.

காற்றை விடுகிற, வாங்குகிற சக்தி குறைந்தால் தீர்ந்தது. பிறகு எரித்து விடுகிறோம். அதில் சேர்ந்திருந்த பொருட்கள் காணாமல் போய்விடாது. அதுவெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



இதிலிருந்து தப்ப மோட்சம் வேண்டும். அதற்கு கோடியது செய் என்பான். மாடு தருவது எதற்காக என்றால், இந்த ஆள் மோட்சத்திற்குப் போகும் வழியில் ஒரு ஆற்றைத் தாண்டுவதற்காக. அதாவது, நெருப்பு ஆறு ஒன்று இருக்கிறது. அதன்மேல் மயிர்ப் பாலம் கட்டியிருக்கிறது. அந்த மயிர்ப் பாலத்தின்மேலே, சர்க்கஸ்காரப் பெண் பிள்ளைகள் கம்பியிலே நடக்கிறார்களே, அதுமாதிரி இந்த ஆத்மா மயிர்ப் பாலத்தின் மேல் போகணும். கீழே நெருப்பு; மேலே மயிர்ப் பாலம். தனியாகப் போகமுடியாது. அதற்காக இவன் கொடுத்தனுப்புகிற மாடு அந்த மயிர்ப்பாலத்தின் மீது செல்லும். அப்படி அந்த மாடு செல்லும்போது அந்த மாட்டின் வாலைப் பிடித்துக்கொண்டே ஆத்மா போகணும். சாவதற்குச் சற்றுமுன் கொடுத்தால்தான் இது உதவும்; செத்த பிறகு வேண்டுமானால் இரண்டு மாடுகள் தரவேண்டும். இது எவ்வளவு பித்தலாட்டமான காரியம்?

நெருப்பின்மேல் மயிர் கருகிப் போகுங்கிவிடாதா? தனி மனிதன் போகமுடியாத மயிர்ப் பாலத்தின்மீது மாடும் மனிதனும் சேர்ந்து எப்படிப் போகமுடியும்? மடத்தனத்திற்கு அர்த்தம் வேண்டாமா? என்று கேட்டால், இவனை வெளியில் போகச் சொல் என்றால் என்ன அர்த்தம்? இது எத்தனை முட்டாள்தனம்? காட்டுமிராண்டித்தனம்?

முதல் பித்தலாட்டம் ஆத்மா என்பது. இது இல்லாவிட்டால் மற்ற பித்தலாட்டங்களுக்கெல்லாம் இடமேயில்லை. இந்த மனிதனை உண்டாக்கிய சக்தியின் வேலை என்னவென்றால், மனிதனைக் கவனிப்பது; தண்டனை தருவது என்பது போன்றவையாம். சாதாரணமாக ஒரு வரிவசூல்செய்யும் தாசில்தாரைக்கண்டு யாராவது பயப்படுகிறார்களா? ஆனால் இது ஒரு மாஜிஸ்ட்ரேட், ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருந்தால் கொஞ்சம் பயப்படுகிறோம்; நடுக்குகிறோம். காரணம், அதிகாரம் இருக்கிறது. தப்பும் தவறுமாகக் கேஸ் கொண்டுவந்து தண்டித்துவிடுவார்கள் என்பதால். காலிப் பசங்களை விட்டுத் திட்டச் சொல்வது; நான் பார்த்துக் கொள்கிறெனென்று சொல்லி கேசில் வரும் லாபத்தில் பங்கு பெறுவது என்றால் என்ன நியாயம்?

எங்கள் ஊரில் ஒரு மாஜிஸ்ட்ரேட் இருந்தார். நூறு ரூபாய்தான் சம்பளம். இருந்தும் நல்ல வசதி. சில காலிப் பசங்களைக் கையில் வைத்திருப்பார். அவர்கள் ஊரில் சென்று வீண் வம்பு செய்து கேஸ் கொண்டு வருவார்கள். இவர்களை வீட்டிற்கு வரச்சொல்லுவார். தன் பெண்டாட்டியை விட்டு தோசை, பலகாரம் கொடுக்கச் சொல்லுவார். அவர்களில் ஒருவனுக்கு மொட்டையன் என்று பெயர். ‘ஏண்டா! மொட்டையா, இந்த வாரத்தில் ஒரு கேஸ்கூட வரவில்லையே’ என்பார் மாஜிஸ்ட்ரேட். ‘நானும் போய்த்தான் பார்க்கிறேனுங்க. மாட்டமாட்டேங்குறாங்க. எப்படியும் கொண்டு வருகிறேன்’ என்பான். இவன் எப்படியாவது நாலுபேரை வம்புக்கிழுத்து கலாட்டா செய்துகொண்டு வந்து விடுவான். இவரும், ‘வா, ரொம்பநாளாய் நீ தப்பித்துக்கிட்டிருந்தாயா?’ என்று கேட்பார். அதாவது காசு கொடுக்காமல் ரொம்பநாள் தப்பித்துக் கொண்டிருந்தாய் என்பது பொருள். ஓரிருதடவை வாய்தா போட்டு, ஏதாவது பணம் வந்தவுடன், ‘சரி, இனி நீ இப்படியெல்லாம் செய்யக்கூடாது’ என்றுகூறி இருவரையும் கண்டிப்பது போல் கூறி அனுப்பிவிடுவார். காசு வரா விட்டால் ஏதாவது காரணங்காட்டி இழுத்தடித்துக் கொண்டே போவார். இத் தொல்லையெல்லாம் சீக்கிரம் விட்டால்போதும் என்று காசு கொடுத்துவிட்டுப் போய்விடுவான். அந்த வரும்படியில் காலிப் பசங்களுக்குச் சிறிது கொடுத்துவிடுவார்.

இம் மாதிரி விரட்டியே, பெண் பிள்ளைகளைக் கடவுளைக்காட்டிப் பயமுறுத்துகிறான். கடவுள் தாசில்தாரைப் போலிருந்தால் யார் கவனிப்பார்கள்? அவன் பிடிப்பான், நாசம் செய்வான், கண்டிப்பான் என்றால்தான் பயப்படுவார்கள். இல்லாவிட்டால் அதுவும் ஒரு கல்லுதான்; இருக்கும் வரைதானே என்றால் என்ன செய்வது? எதற்காக உடம்பு செய்தது என்று கருதாமல் ஆத்மா செய்தது என்று கருதி, இதைச் செக்கில்போட்டு ஆட்டுவான்; கழுமரத்திலேற்றுவான்; மலத்தைத் தின்னும்படி செய்வான்; நெருப்பில் போட்டுப்



பொசுக்குவான்; நண்டு, தேள், பாம்பு இவற்றின்மீது படுத்துத் தூங்கவைப்பான் என்பது? ஆத்மா எது? உயிர்தான் செத்துப் போகிறதேயென்றால், ‘உனக்குத் தெரியாது; உன்னிடமிருந்து அதுபோகும்; போனவுடனே பகவான் உன்னுடைய உடம்பைப்போல் செய்து அதிலிருந்த உயிரை உள்ளே செலுத்திக் கொடுமைப் படுத்துவான். அதற்காக, நீ இதெல்லாம் செய்துதான் தீரவேண்டும்’ என்பான்.

யானை, நாய், பூனை, கரடி இவையெல்லாம் செத்தால் என்ன செய்கிறோம்? கருமாதியா செய்கிறோம்? இவனுக்கும் ஆத்மா இருக்கிறது; இவைகளுக்கும் ஆத்மா இருக்கிறது. ஏன் மனிதனுக்கு மட்டும் கருமாதி? மற்றவைகளுக்குக் கிடையாது? நல்லது கெட்டது தெரிந்துதான் இவனைத் தண்டிப்பார். பார்ப்பானுடைய மதத்தைத்தவிர ஆத்மா என்ற சொல் வேறு மதத்தில் கிடையாது. கிறிஸ்து மதம், முஸ்லிம் மதம், தமிழ் மதம் ஆகிய எந்த மதங்களிலும் ஆத்மா என்பதே கிடையாது. ஆனால், இந்தப் பார்ப்பனர் வந்த பிறகு அவர்களுடைய வாழ்க்கை வசதிகளுக்காக ஏற்படுத்திக்கொண்ட ஏற்பாடே இந்த ஆத்மா என்பதாகும். புத்தர்கூட ஆத்மா என்பது ஒன்று இல்லை. அதற்கு எஜமான் என்று ஒரு கடவுளில்லை என்றுதான் கூறியிருக்கிறார்.

பார்ப்பனர்கள் கூறும் ஆத்மாவுக்கு ஆயுசே கிடையாது. எத்தனையோ ஜன்மங்கள் எடுத்திருக்கிறது அதற்கு வயது எல்லையே இல்லை. இங்கு நாம் பார்ப்பனர்களுக்குத் தானம் கொடுக்காவிட்டால் அங்கு சரியானபடி சாப்பாடு தரமாட்டார்கள். இங்கு நாம் என்னென்ன தருகிறோமோ அதுவெல்லாம் அங்கு தருவார்கள். சிலர் செருப்பு வாங்கித் தருவார்கள். ஏனெனில், அங்கு கரடுமுரடான பாதையில் நடக்கச் சொல்லுவார்களாதலால் அதற்காக. செருப்பு இங்கு தந்தால் அது அங்கும் அவனுக்குக் கிடைக்கும். அங்கு வசதியான வீடு வேண்டுமானால், தனக்கு இங்கு ஒரு நல்ல வீடு தந்தால் அங்கு அவனுக்குக் கிடைக்கும் என்று கூறி வாங்கிக் கொள்கிறான். வெள்ளித்தட்டு கல்யாணப் பெண்ணைத் தானம் கேட்கிறான். என்னடாவென்றால், இதெல்லாம் அங்கு உனக்குக் கிடைக்கும் என்கிறான். சிலர் இதற்காக ஒரு இலட்சம் வரை செலவு செய்கிறார்கள். இப்படி ஒரு சிறு கூட்டம் வாழ வழி வகுத்துக் கொண்டிருக்கிறது.

காலமான பிறகு ஒரு வருடம் கழித்துத் திவசம் செய்யாதவரை, பெயரெல்லாம் கேட்டுக் ‘குடி அரசி’ல் போட்டோம். ஏராளமாகத் தொடர்ந்து வந்தது. அதில் எங்காவது ஒரு குமாஸ்தா இருந்திருப்பான். அதைக் கண்டுபிடித்து, நீ என்ன திவசம் செய்யமாட்டேன் என்று ‘குடி அரசி’ற்குப் பெயர் கொடுத்தாயா? என்பான். அய்யய்யே, அது நானில்லை வேறு யாரோ என்று கூறிவிடுவான். 1926–27லேயே இப்படி மதுரையில் இந்தக் கருத்தைக் கூறித் துவக்கினோம். பத்து சதவீதம் பேர்தான் திருந்தினார்கள். மீதி தொண்ணூறு சதவீதம் பேர்கள் திருந்தவில்லை.

சிந்திக்கவேண்டும். கடவுள், மத, சாஸ்திர சம்பிரதாயப்படி, உலக வழக்கப்படி போகிறது என்கிற மாதிரி முட்டாள்தனத்திலும் அடிமுட்டாள்தனத்திலுமாக நடந்தால் என்ன அர்த்தம்? எப்படிச் செத்து எப்படி வருகிறோம்? என்பது தனி நிர்வாணமாக இருந்து சிந்திக்க வேண்டும். எந்தவிதமான பற்றும் கவலையும் இருக்கக்கூடாது. நம் ஆராய்ச்சி அறிவைக்கொண்டு நாம் சிறிது சிந்திக்கவேண்டும்.

சிந்திக்க ஆரம்பித்தால்தான் உண்மை தெரியும். சிந்திக்காததுதான் குறை.

2500 வருடங்களாக புத்தர் கூறினாரே ‘யார் எதைக் கூறுகிறார்கள் என்பதற்காக எதையும் நம்பாதே! சிந்தித்துப்பார்! பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்! உன் புத்தி என்ன சொல்லுகிறதோ அதன்படி நட!’ என்றார். புத்திப்படி நட என்றதால்தான் அவருக்கு புத்தர் என்று பெயர் வந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இப்படிச் செய்ய ஆளில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நாம் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து மடிகிறோம். ஏன் மடமையில் மூழ்கிக்கொண்டு, சுயநலத்தையே பிரதானமாகக்கொண்டு, சாதாரணமாகத் தள்ளவேண்டிய சடங்குகளை, காரியங்களைத் திரும்பத் திரும்பச் செய்துகொண்டு, தப்பான முறையில் வைத்துக்கொண்டு அலைகிறோம்.

நான் நிர்வாணமாகச் சொல்லுகிறேன். அதாவது, மறைவில்லாமல், அப்படியே மனத்தில் பட்டதைப் பச்சையாகப் பார்த்தால் எப்படித் தோன்றுகிறதோ, அப்படியே உள்ளது உள்ளபடியே கூறுவதுதான் நிர்வாணமாக என்பதன் அர்த்தம். அந்த நிர்வாணத்தைத்தான் சிலர் முத்தி என்றும், ஞானம் என்றும் கூறுவார்கள். அதற்குமேல் எதுவுமில்லாததால் முக்தியடைந்து விட்டார் என்பது. அதாவது, நிர்வாணசக்தியடைந்து விட்டார் என்பது. நிர்வாணசக்தி என்றால் முடிவு அடைந்துவிட்டார் என்பது. வேதாந்தம் அல்லது வைகுந்தம், மோட்சம் அடைந்துவிட்டார் என்பது முட்டாள்தனம். அதுபோல் தமிழ்மொழியில்கூட இல்லை. நிர்வாணம் என்பது நம் உள்ளத்தில் தோன்றிய உண்மையான காரணங்களை எடுத்துக்கூறும் நிலை—ஸ்தானமாகும். புத்தநெறியினர்கூட நிர்வாண ஸ்தாபனம் என்பார்கள். செத்துப்போனார், முடிவெய்திவிட்டார் என்பதுபற்றி நிர்வாணமாகப் பேசுகிறோம்; அது சம்பந்தமாய்ப் பல காரியங்களை எப்படிச் செய்ய வேண்டுவது என்பனவற்றைச் சொல்கிறேன். இம் முறையென்றால், இதுபோல உலகத்தில் ஒன்றுகூடக் கிடையாது. ஒரே மாதிரிக் காரியத்தில் பல கருத்துக்களைப் பல மதக்காரர்கள் முட்டாள்தனமாகக் கூறியிருக்கிறார்கள். ஒருவன்கூடச் சரியாகக் கூறவில்லை. மரம்கூடச் சாகவேண்டியதுதான்; புலி, சிங்கம், கரடி இவைகளும் மற்ற விலங்கினங்களும் சாக வேண்டியவைதான்; மனிதனும் சாகவேண்டியவன்தான். இப்படி எங்கும் நிறைந்து எங்கும் நடந்துவரும் ஒரு காரியத்தில் ஒன்றாவது ஒற்றுமையான கருத்தில்லை. நிர்வாணமாக உள்ளவர்களைத்தவிர மற்றவனெல்லாம், மத சம்பந்தக்காரனெல்லாம் ஆளுக்கொரு மாதிரிக் கூறுவான்.

செத்துப் போவதென்றால் என்ன? செத்துப்போனால், உயிர் போய்விட்டால் கீழே மண்ணில் போட்டுப் புதைத்துவிடுவான். அதைப் பாதுகாப்பதாக அவனது நினைப்பு. ஆனால், அது மூன்று நாளில் மக்கி மடிந்து அழிந்துவிடும். முஸ்லிமும் இம் மாதிரியே பாதுகாப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறான். மற்றும் சிலர் உடலை ஒரு மண்டபத்தில் மேலே கொண்டுபோய் நிர்வாணமாகப் போட்டுவிடுவார்கள். பக்கத்தில் தண்ணீரும் வைத்திருப்பாகள். காக்கை, கழுகுகள் கொத்தித் தின்றுவிட்டுப் போய்விடும்.

புதைத்தவனுடைய கருத்து கொஞ்ச நாள் கழித்து எழுந்திருக்கும். கொஞ்ச நாள் போய் ஆண்டவன் விசாரித்துத் தண்டனை தருவான் என்பது முஸ்லிம், கிறிதஸ்வர்கள் பழக்கம். ஆண்டவன் தணிக்கை பார்த்துத் தண்டிப்பான் என்றும் இதற்குத் தணிக்கை பார்க்கிற நாள் இருப்பதாகவும் கருத்து.

நம்மவன், என்னத்தைத்தான் செய்வது என்ற விதியொன்றும் கிடையாது.

செத்துப் போய்விட்டான் என்றால் அது எங்கேயோ போய்விட்டது என்று கூறுகிறான். பார்ப்பான் மதப்படி இன்றைய மக்களுக்கு என்ன காட்டுகிறானென்றால், ஜீவன் அல்லது மனிதன் செத்துப் போய்விட்டான் என்றால், அப்படிச் செத்துப் போனதற்கு ஆதாரம் உள்ளே உள்ள ஆத்மா பிரிந்து போய்விட்டது; வேறு இடம் தேடிக்கொண்டது. இதிலுள்ள தத்துவப்படி பார்த்தோமானால் இந்த உடம்பிலிருந்து பிரிகிற ஆத்மா சும்மா பிரிவதில்லை; இன்னொரு உடம்பைப் பிடித்துக் கொண்டு அதில் இந்த ஆத்மாவை விடுவான் என்பான். அங்கொரு காலை வைத்துக் கொண்டுதான் இங்கிருந்து அது பிரிந்து போகும். சும்மா போவது, பிறகு இடமின்றித் திண்டாடுவது என்பதில்லை. சும்மா பிரிந்திருக்கிறதென்றால் எங்கே போயிருக்கிறது?



செத்தும் சும்மா விடுவதில்லை. அது பண்ணின தப்புக்குத் தண்டனை தர வேண்டும். செத்தபிறகு நரகத்திற்கோ, மோட்சத்திற்கோ போகிறதாம். அது அவர்கள் செய்த புண்ணிய தர்மப்படி நடக்கிறதாம்.

பார்ப்பானுக்குத் தங்கத்தால் தட்டு, வெள்ளியால் தட்டு செய்து தந்தால் அவ்வப்போது சுடச்சுட தோசை கிடைக்கும். பக்கத்திலே வயதுவந்த பெண் பிள்ளைகள் இருப்பார்கள், என்றைக்கும் இருப்பதைப்போல் சொர்க்கத்தில் சுகமாக இருக்கலாம் என்பர்.

நரகம் எங்கு பார்த்தாலும் மலமாகத்தானிருக்கும். எத்தனை முனிசிபாலிடியில் வாங்கியிருப்பானோ தெரியவில்லை. தேள், நண்டு, பாம்பு முதலிய பயங்கர ஜந்துக்கள் இருக்கும். அதில் போட்டுத் தினம் துன்பப்பட வைப்பதுடன், அங்கு செக்கில் போட்டு ஆட்டுவான், நெருப்பால் சுடுவான், ஈட்டியால் குத்துவான், கழுவேற்றுவான்.

இது ஒரு பக்கம் நடக்கும். உயிர் அங்கு திண்டாடும். அதற்காக நீ என்னென்ன தானம் எப்படியெப்படி செய்யவேண்டும் என்று ஒரு முடிவு சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்னதுதான் செய்வது என்று கிடையாது.

எங்கம்மாவுக்கு நானும் என் அண்ணனுமாக இரண்டு பிள்ளைகள். எங்கம்மாவுக்கு என்மேல்தான் அதிக ஆசை. ஆனால் என்னைத் தொடமாட்டார்கள். தொட்டுவிட்டால் குளிப்பரர்கள். காரணம், நான் கண்ட இடத்தில் சாப்பிடுகிறேன் என்பதால். ஆசையுடன் என்னை ராமு என்று கூப்பிட்டு, எட்ட நின்று சோறு போடுவார்கள். அத்தனைக்கும் என்மேல்தான் ஆசை. என் அண்ணனைக் கண்டால் பிடிக்காது. அண்ணனும் அதை இலட்சியம் பண்ணுவதில்லை. அந்தம்மாளுக்குக் காசுமேல் நிரம்பக் குறி. சாப்பிடாமல்கூட சேர்த்துவைப்பார்கள். வருடம் எப்படியும் ஆயிரம் ரூபாயாவது மீதமிருக்கும். அண்ணனுக்குப் பணம் தேவையாயிருக்கும். அம்மாவிடம் போய் உட்கார்ந்து கொண்டு பணம் கேட்பார். அம்மாவோ, ‘என்னிடம் ஏது பணம்?’ என்பார்கள். என்னவெல்லாமோ கூறிப் பார்ப்பார். பணம் தரமாட்டார்கள். கடைசியில் ‘இந்தாம்மா நீ செத்தால் நான் தான் கருமம் செய்யணும். அவன் கொள்ளிவைக்கமாட்டான். முனிசிபாலிடி நாய் மாதிரி உன்னைச் செய்துவிடுவான். நான்தான் உனக்கு எல்லாம் செய்யணும். நீ பணம் கொடுத்தால்தான் செய்வேன். இல்லாவிட்டால் நீ செத்தவுடன் நான் எங்கேயாவது ஊருக்குப் போய்விடுவேன்’ என்பார். உடனே எங்கம்மா, ‘ஏதோ ஒரு பிள்ளைதான் அப்படிப் பிறந்துவிட்டது. நீ அப்படியெல்லாம் போகக்கூடாது’ என்று கூறிப் பணம் கொடுத்துவிடுவார்கள்.

எங்கய்யாவிற்கு நோய் வந்தால் சர்வ பிராயச் சித்தம்—அதாவது, உயிர் போய்விடும் என்று நினைத்து மாடு வாங்கி, பார்ப்பானுக்குச் சடங்குகள் செய்து தருவார்கள். அவன் வாங்கிக்கொண்டு போனவுடன் இங்கு பிழைத்துக்கொள்வார். சாதாரணமான நெஞ்சுவலி; சில பேர் உயிர்போய்விட்டதென்றால் கணக்குப் பார்த்துத் திருப்பியனுப்பிவிட்டான் என்பார்கள். இப்படி 2, 3 மாடுவேறு; தனியாகக் காசுவேறு கொடுத்திருக்கிறார்கள்.

எப்போதும் தனியாக ரூபாய் அம்பது தந்து, ‘ஒரு மாடு வாங்கிக் கொடு அப்பா’ என்று கூறித் தருவார்கள். இதை 16-ஆம் நாள் செய்வோம். அதையெங்கள் வீட்டில் தப்பாது செய்வார்கள். எங்கள் பார்ப்பான் என்ன செய்வான் தெரியுமா? சும்மா அவனுக்கு மாடு வாங்கிக் கொடுத்தால் என்ன செய்வது? நாங்கள் கொடுத்த மாட்டை விற்றுவிட்டால் ஏசுவோம்; கோபித்துக்கொள்வோம். அதனால், அவன்கிட்டே ஒரு மாடிருந்தால் அதை எவனையாவது ஒருவனைப் பிடித்துக் கொண்டு போய்விடும்படி செய்வான். பிறகு எங்களிடம் வந்து ‘இது நல்ல மாடு; இதைத்தான் வாங்கித் தந்து விடுங்களேன்’ என்பான். நாங்களும் சரியென்று வாங்கிக்கொடுத்து விடுவோம். அவன் மாடும் அவனுக்கே வந்து விடுகிறது; பணமும் ரூபாய் அம்பது கிடைக்கிறது! பித்தலாட்டம் செய்திருப்பான்.

1686—135

படிப்பகம்

www.padippakam.com



கவனித்துப் பாருங்கள். மனிதனுக்கு எதெதில் சாதாரணமாய் ஆசை வரக் கூடுமோ, அதையேதான் மோட்சத்தில் சிருஷ்டித்து இருக்கிறார்கள்.

அதாவது, இங்கு உள்ள மனிதனுக்குப் பொருள் வேண்டும்; பெண்வேண்டும்; தேவையானவை எல்லாம் நினைத்த மாத்திரத்தில் கிடைக்கவேண்டும்; நல்ல வாலிபப் பருவம் வேண்டும்; சதா இடைவிடாத போக்கியம் பெறவேண்டும்; சாகாமல் இருக்க வேண்டும். இந்த விஷயங்கள் மனிதனுக்குச் சாகும் வரையிலும், செத்த பிறகும் அனுபவிக்கக் கூடியதாய், ஆசைப்படக் கூடியதாய் இருக்கின்றன என்பது யாரும் அறிந்ததே.

ஆகவே, இந்தக் காரியங்களையே மேல் உலகத்தில் இருப்பதாகவும், அதை அடையக்கூடும் என்னும் ஆசை உண்டாகும்படி, அதாவது மேல் உலகத்தில் எங்கு பார்த்தாலும் பொன்னும், இரத்தினங்களும் நிறைந்து கிடக்கும் என்றும், உலகமே பொன்னுலகம் என்றும், அங்கு அரம்பை, ஊர்வசி முதலாகிய தேவ கன்னிகள் என்பவர்கள் என்றைக்கும் வாலிபமாய் நம் பக்கத்தில் இருந்துகொண்டு நமக்கு சதா போகங் கொடுத்துக்கொண்டிருப்பார்கள் என்றும், காமதேனு, கற்பக விருட்சங்கள் நமக்கு எது தேவையோ அதை உடனேயே கொண்டுவந்து கொடுக்கும் என்றும், நரை, திரை, மூப்பில்லை என்றும், நாம் சாகாமல் சிரஞ்சீவியாய் இருப்போம் என்றும் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டதால், அவைகளை மனிதன் நித்தியமாய் நம்பி, இந்த உலகத்தையும், இங்குள்ள போக போக்கியங்களையும், அநித்தியமாய் எண்ணி, கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்களை எல்லாம் இந்த மோட்சத்திற்கு என்றே செலவு செய்வதுடன் நில்லாது, இதற்காக என்று பலவித அக்கிரமமான வழிகளிலும், மற்ற மக்களை வஞ்சித்தும், பட்டினி போட்டும் பொருள் பறித்தும்கூட இதற்காகச் செலவு செய்யவேண்டி இருக்கின்றது. உதாரணமாக, ஏழை மக்கள் கஞ்சிக்கு அலையும்போது, குடம் குடமாய்ப் பால் குடங்களைத் தினமும், கல்லின் தலையில் கொட்டி அவற்றை நாற வைப்பதன் கருத்து என்ன என்று பாருங்கள்! குடி இருக்க நிழல் இல்லாமல் மக்கள் திரியும்போது மலைகளையும் பாறைகளையும் உடைத்துக் கோட்டைகள்போல்—மக்கள் கோவில்கள் கட்டுவதன் கருத்து என்ன என்று பாருங்கள்! எவ்விதத் தொழிலும் செய்வதற்கு மூலதனம் இல்லாமலும், தொழில் இல்லாமலும் மக்கள் வயிறு வளர்க்கக் கப்பலேறி வேற்று நாட்டிற்குக் கூலிகளாய்ப் போய் சொத்துப் போத்தென்று மாண்டு மடிந்துகொண்டிருக்கும்போது, பொம்மைகளை வைத்து உற்சவம் செய்வதும், அவற்றிற்குப் பத்து இலட்சம், ஒருகோடி, பத்துக் கோடிக்கணக்காக நகைகளும், பாத்திரங்களும், வாகனங்களும், துணிகளும், சொத்துக்களும் சேர்த்து வைப்பதன் கருத்து என்ன என்று பாருங்கள்! நாளுக்கு நாள் வாழ்க்கை துன்பகரமாக மாறி, ஏழைகள் மலிந்து வரும்போது ஆயிரக்கணக்காய், ஏன் இலட்சக்கணக்காய் ரூபாய் செலவு செய்து கும்பாபிஷேகங்கள் செய்வதன் கருத்து என்ன என்று யோசித்துப் பாருங்கள்! பூமியை உழுது கஷ்டப்பட்டுப் பயிர் செய்யும் குடியானவர்கள் அரை வயிற்றுக்குக்கூடப் போதுமான ஆகாரம் இல்லாமல் கஷ்டப்படும்போது குழவிக் கல்லுக்கும், செம்பு, பித்தளைப் பொம்மைகளுக்கும் தினம் பத்து மூட்டை, இருபது மூட்டை, முப்பது மூட்டை போன்ற அரிசிபோட்டுப் பொங்கி, நைவேத்தியம் செய்து, பாடுபடாத சோம்பேறிகளுக்குக் குடும்பத்துடன் போட்டுக்கொண்டு இருக்கும் கருத்து என்ன என்பதை எண்ணிப் பாருங்கள்! மக்களில் 100-க்கு 5 பேர்களுக்குக்கூட அதாவது சராசரி படிப்பு—எழுத்து வாசனைகூட இல்லாமல் இருக்கும்போது வேத பாடசாலை, தேவாரப் பாடசாலை முதலியவைகளுக்கும், கல்லுகள்–பொம்மைகள் பின்னால் நின்றுகொண்டு, ஆயிரத்திற்கு ஒருவருக்குக்கூடப் புரியாத வேத பாராயணம் முதலியவைகள் செய்யப்படுவதற்கும் இலட்சக்கணக்காய் செலவு செய்ததையும், செய்யப்படுவதன் நோக்கம் என்ன என்பதையும் யோசித்துப் பாருங்கள்! இப்படியாக நமது நாட்டில் இதுபோலவே எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை நோக்கினால், மற்ற மக்களை எவ்வளவு பாடுபடுத்தியாவது,



அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தாலாவது சிறிதும் இலட்சியம் செய்யாது–நாம் மோட்சத்திற்குப் போகவேண்டும்; நாம் பிரபுவாய் இருக்க வேண்டும்; இலட்சுமி புத்திரராய்–இராஜாவாய்–நிரந்தர செல்வனாய்–சிரஞ்சீவியாய் இருக்கவேண்டும் என்கின்ற பேராசையல்லாமல், வேறு தத்துவம் அதில் என்ன இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்! இந்த மாதிரி மோட்சம் கற்பிக்கப்பட்டு, அதை அடைவதே மனிதனின் முக்கிய இலட்சியம் என்று போதிக்கப்பட்டிருக்கின்ற, பேராசையுள்ள ஜனங்கள் மலிந்து இருக்கும் இந்த நாட்டில் இந்த உணர்ச்சியை அழிக்காமல் என்ன காரியம் நம்மால் செய்ய முடியும் என்பதையும் யோசித்துப் பாருங்கள். ஆதலால்தான், முதலில் மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

இந்த மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியதைப்போலவே, நரக உணர்ச்சியும் அழிக்கப்படவேண்டும். மோட்ச உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதிபிம்பமோ அது போலவே நரக உணர்ச்சியும் அடிமைத் தனத்துடையவும், பயங்காளித் தனத்தினுடையவும் பிரதிபிம்பமாகும். நரகத்திற்குப் பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகிறான்; தைரியம் இல்லாத கோழையாய் இருக்கிறான். இவைகளை எல்லாம்விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேண்டுமானால், சிறிதாவது இயற்கையின் இன்பத்தை நுகரவேண்டுமானால் எல்லாவற்றையும்விட மனிதனுக்கு விதி, கர்மபலன் என்கின்றதான உணர்ச்சிகள் கண்டிப்பாய் ஒழிய வேண்டும். விதி, கர்மபலன் என்கின்றவைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டு இருக்கவில்லையானால், இன்றைய தினம் இந்நாடு அனேக விஷயங்களில் ரஷியர்களுக்கு–ஏன், இந்த உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கும் மேலாக இருந்து, அனேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தையும், சம இன்பத்தையும், இயற்கை இன்ப நுகர்ச்சியையும் கொடுத்து, சர்வ சுதந்திரத்துடன் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன். ஆகையால், இந்தக் கர்ம பலனின் உணர்ச்சி, மோட்ச, நரக நம்பிக்கைகள் மனிதத் தன்மைக்கு மிகவும் கேடான எதிரிகள் என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நான் மேலே காட்டிய இந்தக் காரணங்கள்தாம் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தாமாகவே இந்த நாடு சுயமரியாதை பெற்றுவிடும்; சுதந்திரம் பெற்றுவிடும்; மனிதத் தன்மை அடைந்துவிடும். ஆகையால் சகோதரர்களே! நீங்கள் இந் நாட்டின் முற்போக்கிற்கும், உண்மை விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் பாடுபடவேண்டுமானால், மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

['குடிஅரசு'–கட்டுரை—25-1-1949]

## 6. ஆத்மா, மோட்சம், நரகம்

தோழர்களே!

நாம் செத்த பிறகு ஒன்றுமில்லை. நாம் வைத்த பெயர் செத்துப்போய்விட்டது என்பதேயாகும். மரம், செடி, கொடி செத்துப்போயிற்று என்கிறோம். அதாவது, இவைகளுக்குச் சத்துப் போய்விட்டது என்பதாகும். மரம் செத்துப்போனால் அடுப்பிற்கு இரண்டு வண்டி விறகாவது ஆகிறது. மனிதன் செத்துப்போனால் ஒன்றும் பிரயோசனமில்லை. இரண்டு நாள் அப்படியே வைத்திருந்தால் நாற்றமடிக்க ஆரம்பித்துவிடும்; அவ்வளவு கேவலமானவன் மனிதன். புதைத்துவிடவேண்டும்! அல்லது நெருப்பு வைத்துக் கொளுத்திவிட வேண்டும்; இதுதான் சரியான காரணம்.

செத்துப் போய்விட்டதென்றால், மனிதனுக்குத்தான் இந்தவிதச் சடங்கு. மற்றபடி காட்டிலே வசிக்கின்ற புலி, சிங்கம், கரடி மற்ற விலங்கினங்கள் ஆகியவற்றிற்கெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



என் சித்தம், என் கடவுள், என் ஆண்டவன், என் பிராணன், என் பிராணவாயு, என் சூட்சம சக்தி என்பன போன்ற—அதாவது, மனிதன் அல்லது ஆத்மா அல்லது ஜீவன் என்பவைகளாகிய எது எதை நாம் மனிதனாக, ஆத்மாவாக இருக்கக்கூடும் என்று கருது கின்றோமோ அவைகளை எல்லாந்தன்னில் இருந்து தனிப்படுத்தி அவைகளோடுகூட 'என்' என்பதைப் பேசுவதைப் பார்க்கின்றோம். ஆகவே, என் (நான்) வேறு; மேற்கண்ட மற்ற வைகள் எல்லாம் வேறு—என்பதாக நினைக்கும்படியாக இருக்கின்றது. ஆதலால், இவைகள் எல்லாம் மனிதனுடைய தன்மை உணர்ச்சி ஆகிய 'நான்' என்பது அல்ல என்றே சொல்லவேண்டி யிருக்கின்றது.

இந்த நிலையில் மனிதனாகிய நான் என்னும் தன்மை உணர்ச்சி செய்த காரியங் களுக்காக—நான் அல்லாத அதாவது என் ஆத்மா என்பதாகிய ஒரு வஸ்துவோ, ஒரு ஜீவனோ, ஒரு சக்தியோ, ஆகிய சூட்சம ஜீவன் என்பது எப்படி அந்தப் பயனை அனுபவிக்க முடியும்? அனுபவிப்பதுதான் எப்படி நியாயமாகும்? நான் செய்த காரியத்திற்கு என் ஆத்மாவைத் தண்டிப்பதோ, கண்டிப்பதோ, சன்மானமாகியவைகளைக் கொடுப்பதோ எப்படிக் கடவுளின் நீதியாகும்? என்கின்றதான விஷயம் மிகவும் யோசிக்கத் தக்கதாகும்.

இந்த மாதிரியான பிரச்சினைக்குச் சமாதானம் சொல்பவர்கள் பெரிதும் ஒரே சமாதானந்தான் சொல்வார்கள். அதாவது, 'இம் மாதிரியான பிரச்சினை வெகு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே பலரால் கேட்கப்பட்டாய்விட்டது. இவை சாதாரண மக்க ளுக்குப் புரியும்படியானவைகள் அல்ல. சொன்னாலும் உங்களைப் போன்றவர்களால் கிரகித்துக் கொள்ளமுடியாது. வேண்டுமானால் கைவல்யம், ஞானவெட்டி, வாசிஷ்டம், கீதை, வேதாச்சாரம், தத்துவ கீதை முதலியவைகளைப் பாருங்கள். அதற்கு வேறுபல பக்குவங்கள் வேண்டும்' என்பது போன்ற பதிலைச் சொல்லிவிடுவார்கள்.

சாதாரணமாக, கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் அனேகர் இந்த விஷயத்தில் கவலைப்படாமல் தீர்ப்பு நாளை உத்தேசித்து, தாங்கள் இந்த சரீரத்துடனேயே ஒரு காலத்தில் மறுபடியும் எழுப்பப்பட்டு ஏதோ ஒரு பலனை அடையக்கூடும் என்கின்ற அளவோடு விட்டுவிட்டார்கள். ஆதலால், அவர்களிடம் அதிக சிக்கலோ, புரட்டோ கிடையாது. பவுத்தர்கள், 'ஆத்மா என்பதே கிடையாது, நித்திய வஸ்து என்பதே கிடையாது' என்பதாக முடிவு கட்டிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்குள்ளும் இந்தக் கசமுசாக்கள் கிடையாது.

ஆனால், இந்து மதக்காரர்கள் ஆத்மா, சூட்சும சரீரம், மோட்சம், நரகம், மறுபிறப்பு, அதுவும் பலவிதமாய், அதாவது புல்லாகி, பூண்டாகி என்று படிப்படியாய் ஏற்பட்டது என்றும்; இவைகள் எல்லாவற்றையும்விட வேறொரு விதமாய், அதாவது ஆத்மாக்கள், பிதிர்த் தேவதைகள் ஆகி பிதிர்லோகம் என்பதில் இருந்துகொண்டு பிள்ளைகள், சந்ததி யார்கள் முதலியவர்களால் இந்த உலகத்தில் பிராமணனுக்குக் கொடுக்கப்படுவதை அவர்களது மந்திர சக்தியின் மூலமாய்ப் பெற்று அடைந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் இன்னும் பலவிதமாய்ச் சொல்லப்படுகின்றன. ஆகவே, இவை தாமாகவே ஒன்றுக் கொன்று முரண்படுகின்றனவாக உள்ளன.

['குடி அரசு'—தலையங்கம்—3-5-1931]

## 5. மோட்சம்—நரகம்—கர்மபலன்

மனிதன் உடல், உயிர், மாயை என்னும் முப்பொருளாக ஆக்கப்பட்டு இருக்கிறான் என்று சைவர்களும், பிரம்மமே மாயா சம்பந்தப்பட்டு இவ்வுலகில் ஜீவர்களாய்த் தோன்றி யிருக்கிறது என்று ஸ்மார்த்தர்களும், 'ஆன்மா' என்றொரு பொருளை இறைவன் சிருஷ்டித்து மனித உடலுக்குள் புகுத்தி இருக்கிறான் எனச் சில மதங்களும், இவ்வாறு



ஒன்றிற்கொன்று முரணாக நாம் நோக்கிக் காட்டியபடி கூறிவருகின்றன. ஆனால், எல்லா மதங்களும் 'ஆன்மா' செய்த நன்மை தீமைக்குத் தகுந்தவாறு மோட்சமும் நரகமும் எய்தும் என்பதை அபிப்பிராய பேதம் இன்றி ஒத்துக்கொள்ளுகின்றன. ஆனால் மோட்சமும் நரகமும் எவ்வாறு இருக்கும் என்றால், ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாகவே வர்ணிக்கின்றன. எந்த நாட்டான் நரகத்தைப்பற்றி எழுதி இருந்தாலும், தம்தம் நாட்டில் உள்ள கொடிய பிராணிகளும், பயங்கர உருவங்களும், கஷ்டமான அனுபவங்களும்தாம் நரகத்தில் இருப்பதாகவும், அவ்வாறே மோட்சத்திலும் தம்தம் நாட்டில் உள்ள உயர்ந்த பிராணிகளும், மரம், செடி, கொடி, பழவர்க்கம், உணவு, பெண்கள் முதலிய போகபோக்கியங்களும் இருப்பதாகவே எழுதிவைத்து இருக்கிறான்.

நரகமும், மோட்சமும் பணம் பறிப்பதற்குப் புரோகிதர்களால் கட்டப்பட்ட ஒரு கற்பனை உலகம் என்றே யாம் கருதுகின்றோம். சிறு பிள்ளைகளை, 'அய்ந்து கண்ணன் வருகிறான்; பூச்சாண்டி வருகிறான் அழாதே! அப்படிச் செய்யாதே; இப்படி நடவாதே' என்று ஏமாற்றுவதுபோலவே, மனிதர்களை நரகத்தைக் காட்டிப் புரோகி தர்கள் மிரட்டுவதும், சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய், சாக்லெட் முதலியவைகளைக் காட்டி தத்தம் வழிக்குத் திருப்புவதுபோல, மக்களிடம் மோட்சத்தைக் காட்டி பணம் பறித்து வருகிறார்கள். மேலும், முதலாளிகள் தொழிலாளிகளையும், அரசன் குடிகளையும் விளித்து, 'ஜாக்கிரதை, நீ எஜமானத் துரோகம், இராஜத் துரோகம் செய்தால், என்றும் மீளாத கொடு நரகிலே வீழ்ந்து, என்றும் துன்புறுவாய்' என்று மிரட்டி, அவர்களுக்குத் தங்களின் நியாயமான உரிமைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் உதிக்காமலே ஏமாற்றிவிடுவதற்குத் தக்க பேராயுதமாய் நரகம் விளங்கி வருகின்றது.

பொதுவாக எம் மதத்தை உற்றுநோக்கினாலும் மோட்சத்தை, பணம், சாம்பல் (விபூதி), சிலுவை, குருபக்தி, பிரார்த்தனை முதலியவைகளினால் எளிதில் பெற வழி காணலாம்.

மக்களுலகில் வறுமையும், ஏமாற்றும், அக்கிரமங்களும் இந்த மோட்ச—நரகப் பைத்தியத்தினாலும், பிராயச்சித்தம் என்னும் பித்தலாட்டத்தாலும் பெருகி வளர்ந்து வருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மோட்சமும் சுவர்க்கமும் கள்ளுச்சாராயக் கடைகளைவிட, தாசிவேசிகள் வீடுகளை விட மோசமானவை என்பதை மக்கள் உணரும்படி செய்யவேண்டும். மோட்சம், நரகம் என்பது எப்படித் திருடர்கள் பிரயாணிகளை வழிப்பறி செய்வதற்குத் தனிவழியில், ஆள் அடையாளம் தெரியாத வகையில் வேஷம் போட்டுக்கொண்டு வந்து வழி மறித்து, மண்டையை உடைக்க, தடிக் கம்பையும் ஈட்டியையும் ஆயுதமாகக் கொண்டு பொருள் பறித்துச் செல்கிறார்களோ, அதுபோலவே பகல் வழிப்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைப் பிரயாணத்தில் வழி மறித்துப் பொருள் பறித்துப்போகச் செய்துகொண்ட ஆயுதங்களே ஆகும். ஆகையால், அதை மனிதன் முதலில் மறந்தாகவேண்டும். இந்த உலக வாழ்க்கை யையும், ஒழுக்கத்தையும், மக்களுக்கு உதவி செய்வதையும் தனது அளவுக்கும் தேவைக்கும் மேற்பட்டதை அடைய ஆசைப்படாமலிருக்க வேண்டியதையே மோட்சம் என்றும் மக்கள் கருதவேண்டும். இந்தப்படி அளவுக்கும் தேவைக்கும்மேல் மக்களை அடையச் செய்யாமல் பார்த்துக்கொள்வதையே மக்களை 'மோட்சத்திற்கு அனுப்பும்வேலை' என்று நாம் கருத வேண்டும். மனிதன் இந்த நாட்டில் எப்படித் தனது தேவைக்கும், அளவுக்கும் தகுதிக்கும் மேல் அடைய ஆசைப்படுகின்றானோ, அதற்கு ஆதரவாய் இருப்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவர்களது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கும் மேலாக அனுபவிக்க ஆசைகாட்டி, இங்கு தட்டிப் பிடுங்கிக் கொள்கிறார்கள். மூடர்களும் பேராசைக்காரர்களும் தாம் மோட்சத்தை விரும்புவதை நாம் பல உதாரணங்களால் காணலாம். மோட்சத்தையும் தேவலோகத்தையும் பற்றிப் பாமர மக்களுக்குச் சொல்லப்படும் கருத்துக்களைச் சற்று

படிப்பகம்

www.padippakam.com



அதாவது, உலகத்தாரால் உண்டு என்று சொல்வதை இல்லை என்பவன் - எதனால் அறிவில்லாதவன்? எவ்வாறெனில், உண்டு என்பதை இல்லை என்று சொல்லுவதற்காக அவன் கொண்ட கருத்து குற்றமுடையதா? அல்லது, பலர் அனேகர், மற்றவர்கள் எல்லோரும் உண்டு என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயத்திற்கு—அது எப்படி இருந்தாலும் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றாமல், தனது சொந்த அபிப்பிராயத்தைத் துணித்து சொல்ல வந்துவிட்டானே, அந்த அடங்காத, கீழ்ப்படியாத, ஊருடன் ஒத்துப்போகாத, ஆணவமான தன்மையுடைய அந்தச் செய்கை குற்றமுடையதா? என்று யோசிக்க வேண்டியது இங்கு முக்கியமான காரியமாகும். ஆகவே, உலகத்தார் உண்டு என்பதை மறுத்துக் கூறியதற்கு ஆதாரமாக அவன் கொண்ட அபிப்பிராயம் குற்றம் என்று ஏற்படுமானால், இங்கு உலகத்தார் சொல்வதெல்லாம் சரியானதாய்த்தான் இருக்கும் என்று பொருள் கொண்டு, நாயனார் சொல்லியிருக்க வேண்டும். அல்லது, அப்படி உலகத்தார் அபிப்பிராயத்திற்கு விரோதமாக அபிப்பிராயப்பட்டதை ஒருவன் தனித்து எடுத்துச் சொல்வது என்கின்ற தன்மை குற்றமானதென்று கருதி நாயனார் சொல்லி இருந்தால், மனிதனுக்கு அவனவன் அபிப்பிராயத்திற்குச் சுதந்திரமில்லை என்று வள்ளுவர் கருதி அப்படிச் சொல்லி இருக்கவேண்டும். ஆகவே, அக் குறளானது உலக மக்களில் பொதுவாகப் பெரும்பான்மையோரையோ—அல்லது அறிவாளிகளாகிய பெரும்பான்மையாரையோ—யாரைக் குறிப்பில் வைத்துக் கொண்டு நாயனார் சொல்லி இருந்தாலும், இக்குறள் பொதுவில் குற்றமுடையது என்பதே நமது அபிப்பிராயம்.

ஆதலால், ஆத்மா என்கின்ற விஷயத்தைப்பற்றி யார் என்ன சொல்லி இருந்தாலும் உலகமே என்ன கருத்துக்கொண்டிருந்தாலும் அதை இலட்சியம் செய்யாமல் நாம் நம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றோம். அதாவது, ஆத்மா என்பது ஒரு பொருள் அல்ல. அது சுதந்திரம், அறிவு, உணர்ச்சி ஆகியவைகளை உடையதல்ல என்பதோடு, அது பெரிதும் அர்த்தமற்ற ஒரு வார்த்தை என்றே நமக்குக் காணப்படுகிறது. இங்கிலீஷ் – தமிழ் அகராதியில் பார்த்தாலும் ஆத்மா என்பதற்கு இங்கிலீஷில் (Soul) 'சோல்' என்றும், 'சோல்' என்றால் அறிவு - யோசனை - ஆசை பிறக்குமிடம், ஊக்கம், உள் சக்தி, மனித வர்க்கம், உயிர் என்ற பொருள்கள் காணப்படுகின்றன.

தமிழ் அகராதிகளிலும் அதுபோலவே ஆத்மா அல்லது ஆன்மா என்றால் காற்று, அறிவு, உடல், உயிர், பிராணன், மூளை, முயற்சி, பிரம்மன், சுபாவம் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன. இந்த வார்த்தைகளில் இருந்து விளக்கப்படவேண்டியது ஒரே ஒரு வார்த்தைதான் ஆகும். பிராணன் அல்லது உயிர் என்பதற்குத்தான் அர்த்தம் விளங்கவேண்டியிருக்கின்றது. மற்ற வார்த்தைகள் எல்லாம் தானே அர்த்தம் புரியும்படியாயிருக்கின்றன.

ஆகவே, பிராணன் என்பது என்னவென்று பார்த்தால், அது ஒரு காற்று—பிராணவாயு, இருதயத்தில் இயங்கிக்கொண்டிருப்பது என்பதாகத்தான் அகராதியில் காணப்படுகிறது.

இது இங்ஙனமிருக்க, இப்போது பழக்கத்தில், ஆத்மா என்றால் அது சரீரத்திற்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்து என்றும்; அது சூட்சும வஸ்து என்றும்; அதற்குப் பிறப்பு, இறப்பு இல்லை என்றும்; அது மனிதன் இறந்தபின்பு வெளிப்பட்டு மறுபடியும் சரீரம் எடுப்பது என்றும்; மற்றும் அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங்களுக்காக அதன் பயனை—சரீரத்தை விட்டுப்பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கிறதென்றும்; மற்றும் எத்தனையோ விதமாக அதைப்பற்றிப் பல மதங்களில் பலவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றதாய் அறிகின்றோம்.

உதாரணம் என்னவென்றால், அது மனிதனுக்குள் இருந்து மனித சரீரத்திற்கு வேறாய் 'என் சரீரம்' என்று சொல்வதன் மூலம்—சரீரத்திற்கும் வேறுபட்டதென்றும் சொல்லுவது போன்ற ஏதேதோ குறிவுகள் காட்டி, அந்த ஆத்மா சரீரம் விட்டுப் பிரிந்த பிறகு அடையவேண்டிய, அடையக்கூடிய பலன் ஆகியவைகளைப் பிரதானமாகக் கருதி அதற்குத் தகுந்தபடி, அதற்காகவே மனிதன் வாழவேண்டியது அவசியமென்று சொல்லப்பட்டு—அந்த மாதிரி, ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையே மதங்கள் போதிக்கின்றன என்றும், அதற்காகவே உலகத்தில் மனிதகோடிகளுக்கு மதம் அவசியமென்றும் சொல்லப்படுகிறது.



ஆகவே பவுத்தம், இஸ்லாம், கிறிஸ்து, இந்து ஆகிய மதங்களில் பவுத்தம் தவிர மற்ற முக்கியமான மூன்று மதங்களும் ஏறக்குறைய ஒரே கொள்கையில்தான் ஆத்மாவையும், ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் பற்றிய விஷயங்களை வைத்துக் கொண்டிருக்கின்றன.

மேற்கண்ட ஆத்மா என்பதில் (1) மனித ஆத்மா மாத்திரம்தான் மேற்கண்ட மத சம்பந்தங்களுக்கு–அதாவது, கடவுளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்குச் சேர்ந்ததா—அல்லது, புல், பூண்டு, அணு, ஜந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன, நீர்வாழ்வன முதலிய ஜந்துக்களின் ஆத்மாக்கள் என்பவைகளும் அதில் சேர்ந்தவைகளா?

(2) இந்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்ற ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது, எல்லாம் ஒரே தன்மையானதுதானா?

(3) மனித ஆத்மா மனித சரீரத்தில் இருக்கும்போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிறகு அனுபவிக்கின்றது என்பது போலவே, மற்ற புல் பூண்டு, நடப்பன, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, அணு, ஜந்துக்கள் முதலியவைகளின் ஆத்மாக்களும் சரீரத்தைவிட்டு விலகிய பிறகு அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?

(4) இந்த ஆத்மாக்களில் மேற்கண்ட ஜந்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள், குணங்கள், தன்மைகள் முதலியவைகள்—அதாவது, புலன் வித்தியாசங்கள், அறிவு வித்தியாசங்கள் உள்ளதுபோலவே, மனித ஜீவனும் மற்ற ஆத்மாக்கள் போலவே இருப்பதோடு புலன் அறிவு விஷயத்தில் சற்றுக் கூடுதல் வித்தியாசம், மாறுதல் முதலியவைகள் உடைய ஜந்துவா?

(5) உலகத்தில் உள்ள மேற்கண்ட ஜந்துக்கள் எல்லாம் வேறு, மனித ஜந்து மாத்திரம் வேறு என்று சொல்லும்படி வேறுபாட்டை உடைய ஜந்துவா மனிதன்? என்பன போன்ற—இன்னும் அனேக கேள்விகள் இருந்தாலும் மனிதன் என்ன என்பதை நாம் முதலில் ஆராய்வோம்.

மனிதன் என்பதின் தன்மை விளக்கம் ஆங்கிலத்தில் (Self), என்பதான 'தான்' 'நான்', 'என்' என்கின்ற குறிப்பு உணர்ச்சிகளேயாகும். அக் குறிப்புகளில் ஒரு மனிதன் தன்னை, 'நான்' என்று சொல்லிக் கொள்ளும்போதும், 'எனக்கு', 'என்னுடைய' என்று சொல்லிக் கொள்ளும்போதும் ஏற்படுகின்ற உணர்ச்சி எப்படிப்பட்டது? அது எப்படி உண்டாகிறது? என்பதைக் கவனித்தால் ஆத்மத் தன்மை என்பது தானாகவே விளங்கும்.

அதாவது, ஒரு மனிதன் 'நான்' என்பதில் அந்த மனித சரீரத்தின் எந்தப் பாகம் தனித்து இருந்து நான் என்கின்றது? அல்லது, அந்த உடல் மொத்தமுமா அல்லது சரீரமில்லாமலா? சரீரத்தில் எதுவரை 'நான்' என்கின்ற உணர்ச்சி இருக்கிறது? சரீரத்திலிருந்து எது போய்விட்டால் 'நான்' என்பது போய்விடுகின்றது? என்கின்ற கேள்விகளுக்குப் பதில் கிடைத்தால் ஒழிய 'நான்' என்பது விளங்காது.

இந்த முறையில் நான் என்பதைக் கவனிக்கும்போது என் சரீரம், என் உயிர், என் ஆத்மா, என் ஆவி, என் ஜீவன், என் மனம், என் அறிவு, என் புத்தி, என் எண்ணம்,

படிப்பகம்

www.padippakam.com




பெரியார் ஈ. வெ. ரா. வழங்கிய நாத்திகக் கட்டளை



## 4. ஆத்மா

ஆத்மா என்னும் விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கும் நமது நண்பர்கள் பலர்—'இது ஒரு தத்துவ விசாரணை விஷயம்; இதைப்பற்றிப் பேசவோ எழுதவோ வேண்டிய அவசியம் சமுதாய சீர்திருத்தக்காரருக்கு எதற்கு? சுயமரியாதைக் காரர்கள் அனாவசியமாய் கண்டகண்ட விஷயங்களில் எல்லாம் தலையிட்டுச் சீர்திருத்தத் துறையைப் பாழாக்கிக்கொள்வானேன்?' என்று கூசாமல் பேசுவார்கள். ஆனால், இப்படிப் பட்ட நண்பர்கள் சமுதாய சீர்திருத்தம் என்பது என்ன என்பதைச் சரிவர உணராதவர்கள் என்று நினைத்துவிட்டு, நம் பாட்டுக்கு நாம் மேலே செல்லக்கூடிய நிலையிலேயே இருக்கின்றோம்.

ஏனெனில், சமுதாய சீர்திருத்தம் என்றால் ஏதோ அங்கும் இங்கும் ஆடிப்போன, சுவண்டுபோன, இடிந்துபோன பாகங்களைச், சுரண்டி, கூறுகுத்தி, மண்ணைக் குழைத்துச் சந்துபொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவது என்றுதான் அனேகர் கருதி யிருக்கின்றார்கள்.

ஆனால், நம்மைப் பொறுத்தவரை, நாம் அம் மாதிரித் துறையில் உழைக்கும் ஒரு சமுதாய சீர்திருத்தக்காரனல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றபடி நாம் யார் என்றால், என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் ஏன் சீர்திருத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்தது என்பதை உணர்ந்து, உணர்ந்தபடி மறுபடியும் அந்நிலை ஏற்படாமலிருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில், அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை மேற்கொண்டிருக்கிறபடி யால், சமுதாய சீர்திருத்தம் என்பதைப்பற்றி மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்ததற்கு நாம் மாறுபட்ட கொள்கையையும் திட்டத்தையும், செய்கையையும் உடையவராய்க் காணப் படவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதனாலேயேதான், பலவற்றில் உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும்; சரி என்பதைத் தப்பு என்றும்; தேவை என்பதைத் தேவையில்லை என்றும்; கெட்டது என்பதை நல்லது என்றும்; நல்லது என்பதைக் கெட்டது என்றும்; காப்பாற்றப்படவேண்டும் என்பதை ஒழிக்கவேண்டும் என்றும்; மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கூறுவோராக, செய்வோராகக் காணப்படவேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம்போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும், மதிக்கப்படுவதும் பழிக்கப்படாமல்-குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும்.

உதாரணமாக, இது விஷயமாய் நாயனார் தம் குறளில், 'உலகத்தார் உண்டென்பது இல் என்பான் வையத்து அலகையா வைக்கப்படும்' என்று ஒரு குறள் காணப்படுகிறது. இதன் பொருள் அக் குறளில் காண்கின்றபடி பார்த்தால் 'உலகத்தாரால் உண்டு என்று சொல்லப்பட்டதை, இல்லை என்று சொல்லுபவன், உலகில் பிசாசாக மதிக்கப்படுவான்' என்பது பொருளாகும்.

இதிலிருந்து, 'உலகத்தார்' என்பது யாரைக் குறிப்பிடுகின்றது? உலகத்தார் என்றால் 'உயர்ந்தோர்' என்று சொல்வதானால் 'உயர்ந்தோர்' என்பதற்கு இலட்சண மென்ன? பிசாசு என்றால் அர்த்தமென்ன? 'வையத்து அலகை' என்பதற்குத் திருவள்ளுவர் கருத்தென்ன? அவர் பிசாசை நம்பி இருந்தாரா? என்பனபோன்ற பல தர்க்க விவகாரங்கள் அக் குறளுக்குப் பொருள் கூறுவதில் சிலருக்கு ஏற்பட்டாலும், அதன் அதிகாரத்தின் தலைப்புப்படி அக் குறளின் கருத்து, 'அனேக மக்களால் உண்டு என்று சொல்லப்படும் விஷயத்தை, இல்லை என்று சொல்லுபவன் அறிவில்லாதவன்' என்று பொருள்படுவதாகவே வைத்துக்கொள்ளுவோம். இப்படி இருந்தாலும், இதிலிருந்து அவன்



படிப்பகம்

www.padippakam.com



தவிரவும், கடவுளும் மதமும் மனிதனுக்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கற்பிக்கப்பட்டவை அல்லது தோன்றியவை என்பதை யாரும் மறுக்க முடியாது. அக் காலக் கற்பனையானது காலக் கிரமத்தில் மாறுதலடைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதையும் யாராலாவது மறுக்க முடிகிறதா?

இந்த நிலையில் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய கிறிஸ்தவ மதமும், கிறிஸ்தவக் கடவுளும், 1500 ஆண்டுக்கு முந்தைய நபி மதமும், முகம்மது நபி கடவுளும் மாத்திரம் சீர்திருந்தி மாற்றமடைந்துள்ளபோது, பலப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய ஆரியக் கடவுள்களும் ஆரிய மதமும் மாற்றமடையக்கூடாது என்றால் அது எப்படிப் பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இருக்கமுடியும்?

இவைகள் எல்லாம் மனிதர்களால் அமைக்கப்பட்டனவே அன்றி மனிதப் பிறவியில் மனிதத் தன்மைக்கு மேற்பட்ட சக்தி கொண்ட ஒரு மனித உருவால் அமைக்கப்பட்டது என்று சொல்லப்படுமானால், அது பெரும் புரட்டாகத்தான் இருக்கமுடியுமே ஒழிய, அப்படிச் சொல்லுவதில் சிறிதாவது உண்மையோ அறிவுடைமையோ இருக்காது என்பதுடன், அதில் யோக்கியப் பொறுப்பும் இருக்கமுடியாது என்று வலியுறுத்திக் கூறுவேன். ஏன் என்றால், இன்றைய மக்கள் தன்மை, இன்றைய விஞ்ஞான அறிவு சக்தித் தன்மை 10000, 5000, 2000, 1500 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட எத்தனையோ மடங்கு அதிகமானது.

அக்காலக் கடவுளும் மதமும், இவைகளைக் கற்பித்தவர்களும், அக்கால மனிதத் தன்மைக்கு மேற்பட்டவர்களும் 'ஏழைகளுக்கு உதவி செய்தால் உனக்கு மோட்சம், சன்மானம் கிடைக்கும்' என்று சொன்னார்கள். அவர்களால் சொல்லப்பட்ட வேதசாஸ்திரங்களும் அப்படியே சொல்கின்றன. இன்றைய வெகு சாதாரண விஞ்ஞான அறிவு, 'ஏழைகள் ஏன் இருக்கவேண்டும்? அவர்கள் பிறப்பிக்கப்பட என்ன அவசியம்? அவர்கள் யாரால் எதனால் பிறப்பிக்கப்பட்டாலும் சரி, இன்று அவர்கள் கண்டிப்பாக மனித உலகத்தில் இருக்கக்கூடாது' என்று கூறுகிறது. இதற்கு யாரால்தான், எந்தத் தெய்வீக புருஷனால் தான் ஆகட்டுமே என்ன பதில் சொல்லமுடியும்? ஆகவே, கடவுள், மதம், தெய்வீகப் புருஷர்கள் என்பவற்றை எப்படிப்பட்டவர்களானாலும் பாதுகாக்க வேண்டுமானால் அவரவர்களைப் பொறுத்தவரை அடக்கமாக வைத்திருந்தால் காக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அப்படிக்கின்றி, தான் பெரிய கடவுள் பக்தன், மத பக்தன் என்கின்ற கர்வங் கொண்டு அவற்றைக் காப்பாற்ற வெளிக்கிளம்புவானேயானால், அவன் கண்டிப்பாக அவைகளை ஒழிக்க, அவற்றின் 'பெருமை'யை அழிக்கப் புறப்பட்டவனே ஆவான். கடவுள், மதம், தெய்வீகப் புருஷர்கள் என்பவற்றில் கடவுளைவிட மோசமானது, மக்களை அலைக்கழித்து வேற்றுமை உணர்ச்சியை உண்டாக்குவது மதமாகும். மதத்தைவிட, மக்களுக்கு மடமையையும் அகம்பாவத்தையும் உண்டாக்குவது தெய்வீக சக்தி. அதாவது, மனிதத் தன்மையைவிட மேற்பட்ட சக்தி உள்ள மனிதன், மனிதப் பிறவி என்பதாகும்.

எனவே, பெரிய ஆட்கள், அதாவது 30 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இந்தக் கடவுள் மத உணர்ச்சி இருந்தாலும், 24 அல்லது 30 வயதிற்கு உட்பட்ட மக்களிடம் கண்டிப்பாக இந்த உணர்ச்சி இருக்கவே கூடாது என்பது என் ஆசை. அப்படி, இந்தக் கடவுள் மத உணர்ச்சி இல்லாமல் இருந்தால்தான் மனிதப் பண்பு, மக்கள் யாவரையும் ஒன்றுபோல் கருதும் உணர்ச்சி, நேர்மை, நல்லதைப் போற்றவும் தீயதைக் கண்டிக்கவுமான துணிவு, யாவரையும் ஒன்றுபோல் கருதிச் செய்யும் பொதுத்தொண்டு உணர்ச்சியும் ஏற்படமுடியும். இன்று இவை சுத்தசுத்தமாய் இல்லாததற்குக் காரணம்–இந்தக் கடவுள், மதம், மனிதத் தன்மைக்கு மேற்பட்ட தன்மையுள்ள மனிதப் பிறப்பு என்கின்ற உணர்ச்சிதான் என்பது எனது தாழ்மையான முடிந்த முடிபு!

படிப்பகம்

www.padippakam.com



வைகள் மலிந்துவிடும். சாதுவும் யோக்கியருமான மக்கள் மிகமிகத் துன்பமடைய நேரிடும். அயோக்கியர்களும் காலிகளுமே நல்வாழ்வு வாழ்வார்கள். அதற்கேற்ற அரசாங்கந்தான் ஏற்படமுடியும்.

['குடி அரசு'-கட்டுரை—7-5-1949]

மதம் என்பது ஒரு கட்டுப்பாடு. மதத்தில் ஈடுபட்ட ஒரு மனிதன் அவன் எவ்வளவு அறிவாளியாய் இருந்தாலும் அந்தக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பதைத் தவிர, மற்றபடி அந்த மனிதனுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படப் போவதில்லை. ஒரு மதவாதிக்கு மதம் காரணத்தால் ஏற்பட்ட கடவுள், மோட்சம், நரகம், வேதம், மததர்மம் மதத் தலைவன் என்பனவெல்லாம் அந்த அதாவது, அவன் சார்ந்திருக்கிற மதக்கட்டுப் பாட்டினால் ஏற்பட்டவையே ஒழிய, உண்மைப் பொருளோ, உண்மைத் தத்துவமோ அல்ல என்பதோடு, அவை எல்லாம் செயற்கையே ஒழிய இயற்கையுமல்ல.

ஒரு மதவாதிக்கு அவன் எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவனுக்கு கடவுள், அது எப்படிப்பட்ட கடவுளானாலும் அது செயற்கைக் கடவுளே ஆகும். இதில் இயற்கை, செயற்கை என்பதற்கு என்ன விளக்கம் என்றால், இயற்கை என்பது உணவு உட்கொள்வது, மலஜலம் கழிப்பது, பார்ப்பது, கேட்பது, மூச்சுவிட்டு இழுப்பது, பேசுவது, வலி காண்பது, பசி தோன்றுவது, தூங்குவது, விழித்திருப்பது, காம உணர்ச்சி, துக்கம், சுகம், சூரியன், சந்திரன், வெளிச்சம், இருட்டு, பஞ்ச பூதங்கள் முதலியவை இயற்கை ஆகும். இவை எல்லா மக்களுக்கும் பொது என்பதோடு யாராலும் மறுக்க முடியாதவை. மற்றபடி, இத் தன்மையவை அல்லாத கடவுள், மதம், மோட்சம், நரகம், சன்மானம், கண்டனை, செல்வம், பெருமை, சிறுமை, பக்தி, பிரார்த்தனை, வேதம் முதலியவை அடியோடு கற்பனையேயாகும்.

இந்த இயற்கை, செயற்கைகள் அறிபப்படுவதற்கு ஆதாரம் முறையே பிரத்தியட்ச அறிவும்—பிரத்தியட்ச அறிவுக்குப் புறம்பான நம்பிக்கையுமேயாகும்.

ஆகவே, இன்று உலகில் உள்ள எப்படிப்பட்ட மதக்காரனும் கடவுள் உணர்ச்சிக் காரனும் நம்பிக்கைவாதி ஆவானே ஒழிய, அறிவுவாதி ஆகவேமாட்டான். உதாரணமாக, 'கிறிஸ்து' என்றால் 'பைபிள்' என்றால், கிறிஸ்துவை ஏற்று அவரில் நம்பிக்கை வைத்து பைபிளை ஒப்புக்கொண்டவருக்குத்தான் 'கிறிஸ்துவே' தவிர-'பைபிளே' தவிர, அவை நம்பிக்கையில்லாதவருக்கு உண்மையாய், தத்துவமாய் இருக்கமுடியாது.

அதுபோலவே 'முகம்மது நபி' என்றால் 'குரான்' என்றால், முகம்மது நபியை ஏற்று, அவரின்மீது நம்பிக்கை வைத்து குரானை ஒப்புக் கொண்டவருக்குத்தான் நபியே தவிர-குரானே தவிர, நம்பிக்கை இல்லாதவருக்கு எப்படி நபியாகவும், குரானாகவும் இருக்க முடியும்? இப்படியேதான் மற்ற மதங்களும் வேத சாஸ்திரங்கள் முதலியவையு மாகும். ஆகவே நம்பாதவனுக்கு, ஏற்காதவனுக்கு எது எது இல்லையோ அவை எல்லாம் பெரிதும் செயற்கையே ஆகும். கடவுளும், கடவுள் நம்பிக்கையும் அதில் பட்டதுதான்.

ஒரு மனிதனை மற்றொரு மனிதன் 'நீ கிறிஸ்துவை நம்பித்தான் ஆகவேண்டும்; பைபிளை நம்பித்தான் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் நரகத்தில் அழுந்துவாய்' என்று சொல்லுபவனும், 'நீ நபியை நம்பித்தான் ஆகவேண்டும்: இல்லாவிட்டால் எரி நரகில் அழுந்துவாய்' என்று சொல்லுபவனும் எவ்வளவு அறிவற்றவனாவானோ அவ்வளவு அறிவற்றவனே ஆவான்—ஒரு மனிதனைப் பார்த்து, 'நீ கடவுளை நம்பித்தான் ஆக வேண்டும்; மோட்ச—நரகத்தை நம்பித்தானாகவேண்டும். இல்லாவிட்டால் நீ நரகத்தில் அழுத்தப்படுவாய்'' என்று சொல்லுகிறவனும், என்பதை மதவாதிகளும் உணரவேண்டும். கடவுளும் மதமும் அறிவற்றவனைத்தான் ஆட்டும் என்பதோடு நம்பிக்கைக்காரனை வெறியனாகவும், பைத்தியக்காரனாகவும்கூட ஆக்கிவிடும்.



ஆனால், எப்படிப்பட்ட தன்மையுள்ள கடவுளும் மதமும் பகுத்தறிவுவாதி இருக்கிற பக்கம் எட்டிக்கூடப் பார்க்கமுடியாது.

எப்போதுமே நான் கடவுளையும் மதத்தையும் அவை சம்பந்தப்பட்டவை எவற்றையுமே 'வெங்காயம்' என்றுதான் சொல்லுவேன். வெங்காயம் என்றால் வித்து இல்லாதது; வெறும் சதை. அச்சொல்லின் பொருள் வெங்காயம்—வெறும் காயம்; உயிரற்ற உடல்; விதை இல்லாதது; உரிக்கஉரிக்கத் தோலாகவே—சதையாகவே வந்து முடிவில் சூனியமாய்—விதை இல்லாத தன்மையதாய் முடிவது என்பது பொருள்.

ஆகவே, விதை, வித்து இல்லாத காரணத்தால்தான் அதற்கு வெங்காயம் என்ற பெயர் உண்டாயிற்று. அது போன்றவைதான் கடவுளும் மதமும் ஆகும். இச்சொற்களுக்கு இயற்கைப் பொருளே இல்லை; கற்பிக்கிறவர்கள் சொல்லும் பொருள்தான்.

ஆனால், சூரியன், சந்திரன் முதலானவைகளை அப்படிச் சொல்லமுடியுமா? முடியாது. ஏன் என்றால், அவை உண்மையானவை. எவ்வளவு மடையனும், எப்படிப் பட்ட பகுத்தறிவுவாதியும் அவைகளை மறுக்கமாட்டான் என்பதோடு 'எனக்கு அவை இல்லை; என் கண்ணுக்கு—என் புத்திக்கு அவை தென்படவில்லை. ஒப்புக்கொள்ள மாட்டேன்' என்று சொல்லவேமாட்டான். இதுதான் இயற்கைக்கும்—உண்மைப் பொருளுக்கும்; செயற்கைக்கும்—கற்பனைக்கும் ஏற்ற உதாரணமாகும். மற்றும், கடவுள் மதவாதியாக இருப்பவர்கள் 'ஒரு மனிதன் மதத்தை ஏன் மறுக்கிறான்?' என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுபோலவே, 'ஒரு மனிதன் கடவுளை ஏன் மறுக்கிறான்?' என்பதையும் (கடவுள் வாதி) சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மற்றும், கடவுள் மதவாதிகள், கடவுள்-மத மறுப்பாளர்களைவிட எந்தவிதத்தில் உயர்ந்தவர்கள்? எந்த விதத்தில் அறிவாளிகள்? எந்த விதத்தில் உயர்ந்த இந்திரியங்களை (மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவைகளை) உடையவர்களாக இருக்கிறார்கள்? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனிதனுக்கு மிக அருமையான அறிவும் பகுத்தறியும் சக்தியும், ஆழ்ந்து சிந்திக்கும் தன்மையும், அனுபவத்திற்கு ஏற்ப நடக்கும் உரிமையும், இருக்கும்போது கடவுள் எதற்கு ஆக வேண்டும்? என்பதையும் நல்லவண்ணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கடவுள் என்ற பொருளுக்கு மனிதன் கற்பித்து இருக்கும் குணம் என்னவென்றால்,

கடவுள் யாவற்றையும் படைத்து (படைத்ததோடல்லாமல்) யாவற்றையும் நடத்துகிறவன் என்பதாம்.

அதாவது, 'நன்றோ செய்வேன், தீதோ செய்வேன், நானா அதற்கு நாயகன், நீ நடத்துகிறபடி நடத்தப்படுகிறவன்தானே!' என்பதுதான் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் கடவுளைப்பற்றி மக்களுக்குச் சொல்லும் இலட்சணம்.

இந்தக் கருத்து ஒரு கடுகளவாவது மனிதனுக்குப் பயன்படுகிறதா? மற்ற மனிதர்களுக்குத்தான் சொல்லப்படுகிறதே ஒழிய, எவனுக்கு ஆவது தன் விஷயத்தில் நம்பவோ, நம்பி நடக்கவோ வாழ்க்கையில் கொள்ளவோ பயன்படுகிறதா?

மக்கள் மடையர்களாக இருந்தவரையிலும், அதாவது சிந்திக்கும் தன்மை இல்லாதவர்களாக இருந்தவரையில்—இருக்கிறவரையில் கடவுளுக்கு சர்வ சக்தி சர்வ செயல் 'இருந்திருக்கலாம்.' இன்று—அறிவாளிக்கு அறிவுவாதிக்கு, அந்த எண்ணம் சரி என்று தோன்ற முடியுமோ?

படிப்பகம்

www.padippakam.com



நடந்துகொள்ளும் நடத்தைகள் அவசியமா ?—என்பனவாகியவைகள் ஒருபுறம் இருக்க, தங்களைப் பெருத்த அறிவாளிகள் என்றும், எல்லாம் அறிந்த மேதாவிகள் என்றும் கருதிக் கொண்டிருக்கும் சிலர் கூறுகிறபடி, அதாவது—'கடவுள் இருக்கிறதோ, இல்லையோ அது வேறு விஷயம்; கடவுள் என்பதாக ஒரு சர்வ சக்தி உள்ளவர் ஒருவர் இருக்கிறார் என்று மக்கள் நம்பும்படி செய்தால்தான் மக்கள் யோக்கியமாய், பிறருக்குத் தீங்கிழைக்காமல் நடந்துகொள்ளுவார்கள்; ஆதலால், கடவுள் பயம் மக்களுக்கு இருக்கவேண்டும்; அந்தப் பயத்தைத் தெளியவைக்கக்கூடாது' என்று சொல்லுகிறார்களே—அதைப்பற்றிச் சிறிது சிந்தித்தால், அவர்கள் கருதுவதுபோல், கடவுள் உணர்ச்சியையும்; கடவுள் தன்மைகளையும்; நியாயத் தீர்ப்புகளையும்; பயப்படத்தக்கக் கொடூர ரூபம் உள்ள நரக வேதனைகள், செக்கில் போட்டு ஆட்டுதல் முதலிய பலமான தண்டனைகளையும்; பின் ஜென்மத்தில் பல கஷ்டமான இழிவுகளையும் துன்பங்களையும் தரத்தக்க தலைவிதிகளையும்; மற்றும் பலவித மோட்ச சுகங்களையும், உயர் பிறவிகளையும், சுகபோகங்களையும் தரத்தக்க முன் ஜென்ம புண்ணிய கருமங்களையும்; அவைகளுக்கு ஏற்ற கடவுள் வாக்கு, வேதம், சாஸ்திரம், புராணம் முதலிய கற்பனைகளையும் எவ்வளவோ கெட்டிக்காரத்தனமாய் கற்பனைசெய்து மக்களுக்குள் பல ஆயிரம் ஆண்டுகளாகப் புகுத்தி வந்தும்கூட, இன்று வரையில் மக்களில் பெரும்பாலோர்—ஏறக்குறைய எல்லா மக்களும் யோக்கியமாய், மனிதனை மனிதன் ஆட்கொல்லாமல், சராசரி மனிதனுக்கு மேம்பட்ட பொருளை அனுபவியாமல் இருக்கமுடியவில்லையே—அது ஏன் என்றும், கடவுள் உணர்ச்சியை இவ்விதமாக எல்லாம் மக்களுக்குள் ஊட்டியதால் ஏதாவது பயன் ஏற்பட்டு இருக்கிறதா என்றும் பார்த்தால், 'மனிதன் ஒழுக்கத்திற்குக் கடவுள் உணர்ச்சி வேண்டும்' என்கின்ற வாதமும் அடிபட்டுப்போகின்றதே!

ஏன் எனில், உலகில் அறிவில்லாத பாமர ஏழை மக்கள் மாத்திரந்தான் ஒழுக்கமற்று, நாணயமற்று, உண்மையற்று நடந்துகொள்கிறார்கள் என்பது அல்லாமல், கற்ற மக்கள், செல்வவான்கள், பெரும் பதவியில் உள்ளவர்கள், மிகமிகப் பக்திமான்கள், குருமார்கள் உட்பட எல்லோருமே பெரிதும் விதிவிலக்கு இல்லாமல், கீழ்மக்கள் தன்மையாய் நடந்து கொள்கிறதைப் பார்க்கிறோமே! ஆகவே, கடவுள் உணர்ச்சிக்கும், ஒழுக்கத்திற்கும், உயர் குணத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லை என்று தெளிவாகிவிடவில்லையா? கடவுளுக்கு உருவம் எதற்கு என்றால் அதற்கு ஒரு சமாதானம் கூறப்படுகிறது; அது என்னவென்றால்,

'பாமர முட்டாள் ஜனங்களுக்கு, கடவுளின் அருவ—(உருவமற்ற) தன்மை விளங்காது. ஆதலால், கடவுளை ஒரு உருவமாகக் காட்டி, அந்த உருவம் மக்கள் உள்ளத்தில் பய ரூபமாய், அடிமை ரூபமாய் விளங்க, கடவுள் உருவங்களுக்குப் பல கோர கொடூரச் செயல்களைக் கற்பித்து, அதோடு கடவுளை மேல்சாதியாகக் கற்பித்து, அவைகளிடத்தில் பக்தி உண்டாகும்படி செய்வதற்காக, கடவுளுக்கு உருவம் அறிவாளிகளால் கற்பிக்கப்பட்டதாகும்' என்று சொல்லப்படுகிறது. இதையும் சிறிது சிந்தித்தால் இதன் பயனற்ற தன்மையும் அறியாமையும் சூழ்ச்சியும் விளங்காமல் போகாது.

சாதாரணமாக, நம் நாட்டில் கடவுளுக்கு உருவங்கள் ஏற்படுத்தி, வழிபாடு செய்யத் துவங்கிய காலம் 2000, 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகவே இருக்கலாம். அதாவது, ஆரியர் நம் நாட்டிற்கு வந்து, அவர்களது (ஆரிய) மதத்தைப் புகுத்தி, அதன் மூலம் கடவுள்களைக் கற்பித்து, அவற்றிற்கு உருவங்கள் ஏற்படுத்தின காலத்தில் இருந்தே, நம் நாட்டில் உருவக் கடவுள்கள் காட்சியளித்துவருகின்றன எனலாம். அதற்கு ஆதாரம் என்னவெனில், எந்தக் கடவுளது உருவத்தை எடுத்துக்கொண்டாலும் ஆரிய மதக் கதை சம்பந்தமும், ஆரியத் தோற்ற சம்பந்தமும் இல்லாமல் காண்பது அரிதாகவே இருக்கிறது. ஆகவே, இந்தப்படி 3000, 4000 ஆண்டுகளாகக் கடவுளை உருவமாக்கி, மக்களுக்குக் காட்டி, கடவுள் தன்மை ஊட்டிவந்தும், இன்றைக்கும் பாமர மூடஜனங்கள் மாத்திரம்



அல்லாமல் பண்டிதர்கள், ஞானிகள் என்பவர்கள் முதல், பெரும் மேதாவிகள் என்பவர்களுக்குக்கூட உண்மையான கடவுள் பக்தி, அவரவர் நடப்பில் கடவுள் தன்மை, பகுத்தறிவு ஆகியவை ஏற்படவில்லை என்றால்,—மூடர்களுக்குக் கடவுள் பக்தி ஏற்படுவதற்காக உருவம் (விக்கிரகம்) கற்பிக்கப்பட்டது என்பதில் ஏதாவது உண்மையோ, பலனோ, அறிவுடைமையோ உண்டு என்று யாராவது கொள்ளமுடியுமா?

மற்றும், நித்தியமான சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றால், கடவுள் என்பதாக ஒன்று உண்டா இல்லையா என்பதாக மக்களுக்குச் சந்தேகம் ஏற்படுவானேன்? சிலருக்குக் கடவுள் இல்லை என்றும்—இருக்க முடியாதென்றும் தோன்றுவானேன்? ஏதோ 'அறிவிலி'களுக்கு இப்படித் தோன்றுகிறது என்று கொள்வதானாலும், 'அறிவாளி'களுக்குக் கடவுளைக் காப்பாற்றவேண்டும், கடவுள் பிரச்சாரம் செய்யவேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றுவானேன்? கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று குழந்தைகளுக்கும், பள்ளிப் பிள்ளைகளுக்கும் கற்பிக்க முயற்சிசெய்வானேன்?

அவைதாம் போகட்டும் என்றாலும், கடவுள் அவதாரம் என்றும், கடவுள் தன்மை அடையப்பெற்ற பெரியார்கள் என்றும், கடவுள் மனித ரூபமாய், பன்றி ரூபமாய், மற்றும் ஏதேதோ ஆபாச ரூபமாய்க் காணப்படுவானேன்? கடவுளுக்குக் குமாரரும், தூதுவரும், அசரீரியும், மக்கள்மீது மருளும்—அதாவது சாமியாடுதலும் ஏன்?

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மெய்யாய் இருந்தாலும், பொய்யாய் இருந்தாலும், இவைகள் கடவுள் இருப்பதை ஊர்ஜிதம் செய்யவோ அல்லது மக்களுக்குக் கடவுளால் பயன் ஏற்படவோ, அல்லது உலக நடப்புக்காவது, மனித சமுதாய நல்வாழ்வுக்காவது ஏதாவது பயன் ஏற்படுமா என்பது மிகவும் சிந்திக்கவேண்டியதாகும்.

இதுவரையில் காலம் எப்படிக் கழிந்து இருந்தாலும், இனிமேலாவது மனித சமுதாயம் பயமும் கவலையுமற்று, சாந்தியாய், திருப்தியாய் நல்வாழ்வு வாழவேண்டியது அவசியமாகும். அதற்கு ஏற்றவண்ணம் இனி சமுதாய ஒழுங்குகள், ஒழுக்கங்கள் அமைக்கப்படவேண்டும். வருங்காலம் பயங்கரமான ஆபத்துக்குள்ளாகும் காலம்.

எப்படி எனில், மக்கள் இனி சுலபத்தில் சாகமாட்டார்கள். இதுவரை நம் மக்களுக்கு சராசரி ஆயுள் 25 என்றால், இனி, மக்கள் சராசரி ஆயுள்—வயது 50-க்கு மேற்பட்டுத்தான் இருக்கமுடியும். சுகாதாரம் அதிகம்; வைத்திய வசதி அதிகம். மனிதன் நோய்களையும் துன்பங்களையும் கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு அற்பாயுளாகப் போய்க்கொண்டு இருந்தவன், தன் முயற்சியில் நம்பிக்கை வைத்துப் பரிகாரம் தேடி மீளுகிறான். மனிதனுக்குப் பல துறைகளில் அறிவு உணர்ச்சி ஏற்பட்டு, வாழ்வை நீட்டிக்கொள்ள வசதி பெற்றுவிட்டான்.

இதுபோலவே, மக்கள் பிறப்பும் அதிகமாகிவிட்டது. கர்ப்பச் சிதைவு, சிசு மரணம், பிரசவ மரணம் இனி சுலபத்தில் ஏற்படாத மாதிரி பாதுகாப்புகள், பரிகாரங்கள் ஏற்பட்டுவிட்டன. இனி மலடும் இருப்பதற்கு இல்லாமல் நிவர்த்தி மார்க்கங்கள் ஏற்பட்டுவிட்டன. இனி விதவைகளாகவும் எவரும் காலம் கழிக்க முடியாமல் விதவை மணம், சுதந்திர காதல் முதலியன செல்வாக்குப் பெற்று, சாதாரணமாய் நடப்பில் வருவதின்மூலம் அவற்றாலும் பிறப்பு அதிகமாகின்றது.

பொதுவாக, பிறப்பு விகிதங்களும் பலவகை சவுகரியங்களால் நபர் 1-க்கு 2, 3, 4 என்பதாகக் குழந்தைகள் இருந்து வந்தது மாறி, இப்பொழுது நபர் ஒன்றுக்கு 6, 8, 10, 12 என்பதாகக் குழந்தைகள் பிறப்பதும், அவைகளும் நீண்ட நாள் வாழ்வதுமாக இருக்கின்றன. இவர்களுக்கு எல்லாம் உணவு, போக போக்கியப் பொருள், பிழைப்பு, நல்வாழ்வு ஆகியவை தேவைப்படுவதுடன் உணவுப் பஞ்சம் ஏற்பட்டே தீரும். இவைகளில் பெரும் போட்டியும் அதன் பயனாய் வெறுப்பு, வஞ்சம், துரோகம், கொள்ளை, கொலை முதலிய

www.padippakam.com



எதற்காகக் கடவுள்? ஏன் கடவுள்? எது கடவுள்? என்கின்ற விளக்கம் அவசியம் ஒவ்வொரு தத்துவ விசாரணைக்காரனுக்கும் விளங்கியாகவேண்டும். மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அது ஆராய்ச்சிக்காக ஏற்பட்டதே தவிர கண்மூடித்தனமான மிருகத் தன்மைக்கு ஏற்பட்டதல்ல. பகுத்தறிவை மனிதன் தப்பாகப் பயன்படுத்தி, அதிகமான தொல்லையில் மாட்டிக்கொண்டிருக்கிறான். இந்தத் தொல்லைக்குப் பரிகாரமாகக் கடவுளைச் சிருஷ்டித்துக்கொண்டான். அரசன் ஏன்? குடிகள் ஏன்? ஏழை, பணக்காரன் ஏன்? மேல் சாதி, கீழ்சாதி ஏன்? உழைப்பாளி அடிமையும், சோம்பேறி எஜமானும் ஏன்? பிச்சைக்காரன், பிரபு ஏன்?

இந்தத் தன்மைகளை ஏற்படுத்தவும், நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் அல்லாமல் கடவுளால் கண்ட வேறு பயன் என்ன? அவர் செய்த நல்ல காரியம் என்ன? இந்த வேலைகளுக்குக் கடவுள் வேண்டுமா?

பகுத்தறிவு கொண்ட மனிதன் சாந்தி, அன்பு, திருப்தி இல்லாமல், கவலை இல்லாமல், அதிருப்தியில் குறையோடு சாவதற்குக் காரணம், கடவுள் அல்லாமல் வேறு என்னவாய் இருக்கக்கூடும்?

அவனவன் முட்டாள்தனம் காரணம் என்றால், பகுத்தறிவு இருப்பது எதற்காக? முட்டாள் தனத்தை உண்டாக்கவா? பகுத்தறிவு இல்லாத ஜீவன்களுக்கு இல்லாத கெட்ட குணங்கள், கவலைகள், குறைபாடுகள், இனவெறுப்புகள், துரோகங்கள், பகுத்தறிவுள்ள ஜீவனான மனிதனுக்கு ஏற்படுவானேன்? பகுத்தறிவற்ற துஷ்ட ஜந்துக்களிடம் இல்லாத கெட்ட குணங்கள் பகுத்தறிவு உடைய மனிதனிடத்தில் இருப்பானேன்? கடவுளைக் கண்டதாலா? கடவுளைக் கற்பித்துக்கொண்டதாலா? கடவுள் தன்மையை, கடவுள் சக்தியைத் தவறாகக் கொண்டதாலா? எதனால் என்பது, பகுத்தறிவுக்குக்கூட எப்படிப் பரிகாரம் செய்து கொள்வது என்பது முடியவில்லையானால், பகுத்தறிவின் பயன்தான் என்ன? கடவுளின் தன்மைதான் என்ன?

கடவுள் எதற்காக? அது மனிதனுக்குத் தானாகத் தோன்றியதா? அல்லது, வேறு மக்களால் தோற்றுவிக்கப்பட்டதா? தானாகத் தோன்றியிருக்குமானால் ஏன் எல்லோருக்கும் தோன்றவில்லை? தோன்றியவர்களுக்கும் ஏன் பலவிதமாய்த் தோன்றவேண்டும்? அதன் தன்மைகளும் சக்திகளும்கூட பலவிதமாய்த் தோற்றப்படுவானேன்?

தோற்றுவிக்கப்பட்டவையானால், எதற்காகத் தோற்றுவிக்கப்பட்டன? எந்தக் காரணத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்டதோ, அந்தக் காரணம் நிறைவேறிற்றா? தோற்றுவித்தவர்கள் வெற்றி கண்டார்களா? கடவுள் காணப்பட்டும் அல்லது கடவுள் கற்பிக்கப்பட்டும் மனிதன் ஏன் கடவுள் தன்மைக்கு—கடவுள் விரும்புகிற தன்மைக்கு மாறாக நடக்கிறான்?

கடவுளால் சர்வமும் நடைபெறுகின்றன. கடவுள் சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ளவர் என்பதாக இருந்தும் கடவுளால் என்ன காரியம் நடக்கிறது? எதையும் கடவுள் பெயரைச் சொல்லி மனிதன்தான் செய்கிறான்; கடவுளை அலட்சியப்படுத்திவிட்டு, கடவுளுக்கு இஷ்டமில்லாத காரியம் என்பதைக்கூட மனிதன் செய்கிறான். மனிதனுக்கு வேண்டாததும், மனிதனுக்குக் கேடான காரியமும் நடந்தவண்ணமாய் இருக்கின்றன. ஒரு காரியமாவது கடவுள் உணர்ச்சி உள்ள உலகில் பூரணத்துவம்—அதாவது, திருப்தி உள்ளதும் குறை இல்லாததுமான காரியம் என்பதாகக் காணக்கூடியதாகவே இல்லை. மனித எத்தனப் பாதுகாப்பு இல்லாவிட்டால், வாழ்க்கையில் ஒரு காரியமும் பத்திரப்படாது என்பதோடு—கடவுளுக்குக்கூடப் பத்திரமில்லை என்றே சொல்லலாம்.

[சேலம் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவு—'குடிஅரசு' 23-11-1946]



கடவுள் விஷயமாய் இக் கட்டுரையின் நோக்கம் என்னவென்றால், கடவுள் என்பதைப் பற்றி—கடவுள் என்பதற்காக, மனிதர்கள் இன்று நடந்துகொள்ளும் தன்மை, பான்மை சரியா, அவை அவசியமா என்பதேயாகும்.

முதலாவது, இக் கட்டுரையின் நோக்கம்—கடவுளைக் காப்பாற்ற, கடவுள் ஒருவரோ பலரோ உருவமாகவோ, அருவமாகவோ, மற்றெப்படியாகவோ கடவுள் இருக்கிறார் என்பதாக மக்களுக்கு மக்கள் எடுத்துச் சொல்லவேண்டியதும் பிரச்சாரம் செய்ய வேண்டியதும் அவசியம்தானா?

இரண்டாவதாக, கடவுள் எண்ணம் மக்களுக்கு மறைந்துபோய்விட்டது. அதை ஞாபகப்படுத்த பிரச்சாரக்காரர்களைச் சம்பளத்திற்கு வைத்து–பாதிரிகளை, குருமார்களை ஏற்படுத்தி, கடவுள் தத்துவத்தைப் போதிக்க ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவேண்டியது அவசியந்தானா?

மற்றும், நாத்திகர்கள் பலர் தோன்றி, கடவுள் இல்லை என்று நாத்திகப் பிரச்சாரம் செய்துவருவதால் கடவுள் கரைந்துவருகிறார். ஆதலால், கடவுளைக் காப்பாற்றவேண்டியது மிக மிக அவசியம் என்று பலர் கருதி, ஆத்திகப் பிரச்சாரம் செய்து கடவுளைக் காப்பாற்ற வேண்டியது அவசியந்தானா?

மற்றும், கடவுளுக்குக் கோயில் வேண்டுமா?

கடவுளுக்குப் பெண்டாட்டி வேண்டுமா?

கடவுளுக்குக் காம விகாரம் உண்டா?

கடவுளுக்குக் குழந்தைகள் வேண்டுமா?

கடவுளுக்குத் தாசி, போக மாதர்கள் வேண்டுமா?

கடவுளுக்குப் படைப்பு, சாப்பாடு, நகை, துணி, மணி, கல்யாணம், உற்சவம், ஊர்வலம் வேண்டுமா?

இவை ஒருபுறம் இருக்க, கடவுள் சக்திக்கு—செய்கைக்கு ஏதாவது அளவு உண்டா? அல்லது, அவர் எல்லாம் வல்லவரும் எல்லாவற்றிற்கும் பொறுப்பானவருமா?

அவருடைய சக்திக்கும் செயலுக்கும் எல்லை உண்டா? இல்லையா?

கடவுள் சக்தியை உணர்ந்தவன் கடவுளைக் காப்பாற்றக் கவலை கொள்ளுவானா?

உண்மையிலேயே, 'சர்வ சக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவனன்றி ஒரு அணுவும் அசையாது' என்று மனப்பூர்வமாய் நம்பி இருக்கும் ஒருவன் கடவுளைக் காப்பாற்ற முற்படுவானா? கடவுள் இல்லை என்று ஒருவன் சொன்னால் அவன்மீது பாய்ந்து கோபிப்பானா?

இந்தப்படி கடவுளைப்பற்றிக் கவலைப்படுகிறவர், கடவுள் பிரச்சாரம் செய்கிறவர்களில் யாராவது தங்களது எண்ணத்தில், நடத்தையில் கடவுள் சித்தப்படி நடப்பவர்களாகவோ, கடவுளுக்குப் பயந்து நடப்பவர்களாகவோ, அல்லது கடவுள் தன்மையில் மதிப்பும்நம்பிக்கையும் பயமும் கொண்டவர்களாகவோ எங்காவது காணப்படுகிறார்களா?

கடவுள் நம்பிக்கை உடையவன் எவனாக இருந்தாலும் அவன் கடவுளைத் தொழ வேண்டுமா? பூசிக்க வேண்டுமா?

தொழுதாலும், பூசித்தாலும் அதற்கு ஒரு நேரம், ஒரு இடம், ஒரு உருவம், ஒரு வாக்கியம், பாட்டு வேண்டுமா?

மற்றும், அதற்குப் பண்டம் படைப்பு வேண்டுமா? உண்மையாகக் கடவுள் இருப்பதானாலும், இருப்பதாக நம்புவதானாலும் பல மதக்காரர்களும் இன்று கடவுள் சம்பந்தமாய்

படிப்பகம்

www.padippakam.com



என்கிறான். அதுபோலவே, ஒரு உண்மைக் கிறிஸ்தவன் என்கிறவனும் 'ஏசுவை அடைந்தால் சகல பாவமும் தீர்ந்துவிடும்' என்கின்றான். அன்றியும், 'ஏசுவின்மூலம் அல்லாமல் பாவமன்னிப்பு என்பது கிடையவே கிடையாது' என்கிறான். அதுபோலவே, ஒரு முஸ்லிம், 'குர்-ஆனில் சொல்லப்பட்டதெல்லாம் கடவுள் வாக்கு; அது எந்தத் தேசத்திற்கும் எந்தக் காலத்திற்கும் பொருந்தியது. அதில் உள்ள ஒரு கோடாவது மாறினால் இஸ்லாம் மதமே போய்விடும்' என்கின்றான். இப்படியே ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு பெருமையைக் கூறி, அதுவேதான் உண்மையான மதம்; முறையே கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன் ஆகியவர்களால் ஏற்பட்டது என்றும் சொல்லுகின்றார்கள்.

['குடி அரசு'-கட்டுரை—23-4-1949]

## 3. கடவுள்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

'கடவுள்' என்னும் விஷயம் அற்பமானதாகவும் கருதப்படலாம்; பிரமாதமானதாகவும் கருதப்படலாம். எப்படி எனில், சாதாரண மக்களுக்குக் கடவுள், மதம், அரசியல் விஷயங்களின் தத்துவம் மிகவும் அலட்சியமானதாகும். பெரிய அறிஞர்களுக்கு இந்த விஷயங்கள் அபாரமானதும் மிக நுணுக்கமாக அறிந்து பேசத் தக்கதுமாகும்.

நான் எனது தத்துவத்தை எடுத்துச் சொல்லப் பயப்பட்டால், அல்லது பித்தலாட்டம் செய்தால் நான் என்னையே வெறுத்துக்கொள்ள வேண்டியவனாவேன்.

ஆகவே, என்னை நாஸ்திகன், மதத் துவேஷி என்று ஆஸ்திகன் சொல்லுவது மகா மகா அறியாமையும் அலட்சிய புத்தியும் ஆகும்.

இதை ஓர் உதாரணம் காட்டி விளக்குகிறேன். ஓர் ஊரில் ஒரு 'பிச்சைப் பிழைப்புப் பார்ப்பனன்', ஒரு நல்ல காரியம் நடந்ததற்காகப் பிச்சை கொடுக்கும் ஒரு வீட்டிற்கு வந்து பிச்சை கேட்டான். அவ் வீட்டுக்காரர் மற்றவர்களுக்குக் கொடுத்ததுபோல் இவனுக்கும் 4 அணா கொடுத்தார். அதற்கு அந்தப் பிச்சைக்காரப் பார்ப்பான் அந்த வீட்டுக்காரரைப் பார்த்துக் கோபித்துக்கொண்டு, 'ஏ! ஓய்! தற்பெருமை, அன்னியர்களைக் குறை கூறுதல், பணத்தாசை ஆகிய மூன்றையும் துறந்து 4 வேதம், 6 சாஸ்திரம், 18 புராணம், தர்க்கம் மீமாம்சம், தத்துவஞானம் ஆகியவைகளைக் கற்ற மிக மேதாவியும், மகா பண்டிதனுமான எனக்கும் 4 அணா, இந்த ஒன்றும்தெரியாத முட்டாள் கழுதைக்கும் 4 அணாவா? வெகு யோக்கியமாய் இருக்கிறதே உம்முடைய தர்மம்!' என்று கேட்டான்.

அதுபோல் இருக்கிறது ஓர் ஆஸ்திகன் என்பவன் ஒருவனைப் பார்த்து நாஸ்திகன் என்று சொல்லுவது என்கிறேன்.

ஏனெனில், இந்த ஆஸ்திகன் கடவுளை எப்படி அறிந்திருக்கிறான் என்றால், 'கடவுள் சர்வ வல்லமை உள்ளவர்; சர்வ வியாபி; சர்வத்தையும் நடத்துகிறவர்; அவருக்கு மேம்பட்டவர் எவரும் இல்லை; அவர் அன்றி ஒரு காரியமும் நடைபெறுவதில்லை' என்பதாக அறிந்திருப்பதாகச் சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட கடவுளை நான் இல்லை என்பதாகவோ, மறுப்பதாகவோ சொல்லுகிறார் என்றால் இது அந்தப் பார்ப்பனன் சொன்னதற்கே சமமானதாகும்.

அந்தப் பார்ப்பனன் முதலில் தன்னிடம் ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவிய அபேட்சை இல்லை என்றும் தான் அவைகளை வெறுத்துவிட்டவன் என்றும் சொல்லிவிட்டு, உடனே, 'நான் 4 வேதம், 6 சாஸ்திரம் முதலியவைகளைப் படித்துக் கரைகண்ட மேதாவியாகிய மகா பண்டிதன்' என்கிறான். இதில் அவன் தற்பெருமையை வெறுத்த யோக்கியதை தெரிகிறது.



அதுபோலவே, பரநிந்தை—அன்னியனை இழிவாக்குவது, வைவது தன்னிடம் இல்லை என்று சொல்லிவிட்டு, 'இந்த ஒன்றும் தெரியாத முட்டாள் மடையனுக்குமா நாலணா? என்கிறான்.

அடுத்தபடியாகத் தனக்குப் பண ஆசையே இல்லை என்று சொல்லிவிட்டு, 'இந்த 4 அணாதானா கொடுப்பது?' என்கிறான். எனவே, தன்னைப்பற்றி அவன் சொன்னது அத்தனையும் பொய் என்பதும், கற்பனை என்பதும் பின்னால் சொல்லியதிலிருந்து வெளியாகிவிட்டன.

அதுபோலவே, எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த, யாவற்றையும் செய்விக்கிற கடவுளை—ஒரு மனிதன் இல்லை என்று சொல்லுகிறான் என்று சொன்னால், ஒன்று அந்த ஆஸ்திகன் கடவுளுக்கு மேற்கண்ட குணங்கள் இருப்பதாகச் சொன்னது பொய்யாகவும், கற்பனையாகவும் இருக்கவேண்டும்; அல்லது, மற்ற மனிதனைப் பார்த்து, 'நாஸ்திகன், கடவுள் இல்லை என்பவன்' என்று சொன்னது தவறாக, அறியாமையாக, யோசனை அற்றதாக இருக்கவேண்டும்.

இருக்கிற கடவுளை—இல்லை என்று சொல்வதில், சொல்பவனுக்கு என்ன இலாபம்? அல்லது, சர்வத்தையும் செய்விக்கிற—சொல்லச் செய்கிற ஒரு கடவுள் இப்படியாக ஒருவனைச் சொல்லவும், நினைக்கவும் செய்வதில் கடவுளுக்குத்தானாகட்டும் என்ன இலாபம் வரும்? ஆகவே, ஒரு மனிதன் இப்படி முட்டாள்தனமான காரியத்தைச் செய்வானா? அல்லது, ஒரு கடவுள் இப்படிப் பைத்தியக்காரத்தனமான காரியத்தைச் செய்விப்பாரா என்பதையாவது ஒருவன் கடுகளவு நினைத்தாலும், சிந்திக்கும் சக்தியைப் பயன்படுத்தினாலும் மற்றவனை—நாஸ்திகன், கடவுளை மறுக்கிறவன் என்று குறையோ, குற்றமோ சொல்லமாட்டான்.

ஒருவனைப் பார்த்து, 'அவன் நாஸ்திகன்; கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன்' என்று சொல்லுவதே நாஸ்திகமாகும்; கடவுளைச் சரியாக அறியாததேயாகும். அந்த வார்த்தையை உண்டாக்கினவர்களே நல்ல நாஸ்திகர்களாவர். கடவுள் இருந்தால், ஒரு மனிதன் 'கடவுள் இல்லை' என்று சொல்லமுடியுமா? அல்லது, ஒருவன் இல்லை என்று சொல்லுகிறான் என்று, மற்றவன் நினைக்கவாவது முடியுமா? ஆகவே, நாஸ்திகம், நாஸ்திகன் என்பன கடவுள் வியாபாரக்காரர்கள் தங்கள் வியாபாரத்திற்கு ஆதரவாகக் கண்டு பிடித்த உப கருவிகளேயாகும். கடவுள் வியாபாரக்காரனுக்கு அல்லாமல் மற்றவனுக்கு இந்தக் கவலையே இருக்க நியாயமில்லை.

கடவுள் பற்றிய தத்துவ விளக்கம் என்றால்—கடவுள் நிர்வாணமாய், பட்டாங்கமாய்க் காணப்படும் வரையில் ஆராய்ச்சி செய்வது என்பதாகும். ஒரு விஷயத்தைத் தத்துவ விசாரணை செய்ய முதலில் என்ன, ஏன், எதற்காக, எப்படி, எங்கே, எப்போது என்பன போன்ற கேள்விகளைப் போட்டு திருப்தியான பதில் பெறவேண்டும். தயவு தாட்சண்யமற்ற கேள்வி போடவேண்டும். தத்துவ விசாரணை என்பதும், தர்க்க வாதம் என்பதும் ஒன்றுக்கொன்று சம்பந்த முடையவையாகும். ஆகையால் சர்வ சக்தி, சர்வ வியாபகம், சர்வத்தையும் நடத்துதல் ஆகிய அபார குணங்களைக் கொண்ட ஒரு 'பரம்பொருளை'ப் பற்றித் தத்துவ விசாரணை செய்கிறவர்கள் இந்த 6, 7 கேள்விகள் மாத்திரமல்லாமல் இன்னும் 60, 70 சோதனைகள் செய்து பார்க்கவேண்டும். பக்தனுக்கு இது தேவை இருக்காது; தத்துவ விசாரணைக்காரனுக்கு இது அவசியமாகும்.

கடவுள் மூட பக்தியால், குருட்டு நம்பிக்கையால் விளங்குபவராக இருக்கக்கூடாது. வேறு யாருக்காகிலும் அப்படி விளங்கினாலும், பகுத்தறிவுள்ள மனிதனுக்கு—அதிலும் தத்துவ விசாரணைக்காரனுக்கு அப்படிக் குருட்டு நம்பிக்கையில் விளங்கக் கூடாது என்பேன்.



படிப்பகம்

www.padippakam.com



## 2. மதம்

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததே ஆகும். மனித வர்க்கம் விலங்குகளைப்போல் தனித்தனியே காடுகளில் வாசஞ்செய்துவந்த நிலைமை மாறி, குடிசைகள் கட்டிக்கொண்டு குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகிவிட்டன. எப்படியெனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால், உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறதோ, அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்கவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுவிடுகின்றது; அதேபோல் தீர்மானிக்க வேண்டியதாகிவிட்டது. அக் கொள்கைகள்தாம் இப்பொழுது மதம் எனப்படுவதாக இருக்கிறது. அம் மாதிரியான கொள்கை நிர்ணயங்களை மீறக்கூடாது என்பதற்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி, அந் நிபந்தனைகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க முடியாத நிலையிலோ, அல்லது தண்டிக்கவேண்டாம் என்று தோன்றிய சமயத்திலோ, அல்லது சிலரின் சுயநலத்திற்காகவோ வேறு விதத்தில் ஏமாற்றிப் பிழைப்பதற்காக வேண்டியோ, அக் கொள்கைகளைக் கடவுள் என்பவற்றுடன் சம்பந்தப்படுத்துவதனால்தான் மக்கள் ஏமாறுவார்கள் என்கின்ற எண்ணங்கொண்டோ, அவற்றைக் 'கடவுள் உண்டாக்கினார்' என்றும், அவற்றிற்கு மீறி நடந்தால், 'கடவுள் தண்டிப்பார்' என்றும் சொல்லவேண்டியதாய்விட்டது. (இந்த இடந்தான் முதன் முதலாக மனிதன் தவறு செய்த இடமாகும்.)

ஆனால், இந்தக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி, எந்த ஆதாரங்களைக் கொண்டு என்று பார்ப்போமேயானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை—அதாவது பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித் திறம் ஆகிய நிலையில்—அதாவது கால தேச வர்த்த மானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும், ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேச வர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால், யாராவது அறிஞர், அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது பாமர மக்கள் மூட நம்பிக்கையின் பலனாய், தங்கள் பிடிவாதத்தைக் காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில் பிரிந்துபோய்ப் புதிய கொள்கைகளை வகுத்து—அதாவது முன்னையதைத் திருத்தியோ, அல்லது சிலவற்றை மாற்றியோ, அல்லது சில புதியனவற்றைச் சேர்த்தோ ஏதாவது ஒன்றைச் செய்ய நேரிடும்போது அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டு விடுவதும் உண்டு. இதனால் பாமர மக்கள்—அதாவது குருட்டுப் பிடிவாதமுள்ளவர்கள், 'என் மதம் பெரிது,' 'உன் மதம் சிறிது' என்கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டு விடுகின்றது.

இந்தச் சண்டையில்லாமல் திருத்தப்பாடு செய்யலாமா என்று நினைத்த பெரியோர்கள், அக் கொள்கைகளை மாற்றாமல், பழைய கொள்கைகளுக்கே புதிய வியாக்கியானங்களைச் செய்து, திருப்திசெய்ய முயற்சித்து இருக்கின்றார்கள். ஆனாலும், அம் முயற்சிகளின் பலனும், முடிவில் உட்சமயங்களாகவும், சார்புச் சமயங்களாகவும் மாறிற்றேயொழிய, கொள்கைகளின் முக்கியங்கள் திருத்தப்பட முடியாமலேயே போய்விட்டன. இப்படியேதான் மதங்கள் வெகுகாலமாய் மாறி மாறியும், திரிந்து திரிந்தும், பெருகிக் கொண்டும் வந்ததனாலேயே, மதங்களின் உண்மைத் தத்துவமும் அவசியமும் அறிவதிற்கில்லாமல் போனதோடு, அதை ஒரு சடங்காகவே கொள்ளவேண்டியதாகியும் விட்டது. இன்றைய தினம் எந்த மதக்காரனையாவது கண்டு, 'உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன?' என்றால், சில சடங்குகளையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய, அதன் உண்மைத் தத்துவம்—அதாவது, எந்தக் கருத்தைக் கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அதைக் கூறமாட்டான்; அறிந்திருக்கவும் மாட்டான். அதோடு, அம் மூலக் கொள்கைக்கு நேர்விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும்



புகுந்துவிட்டதன்றி, சிலர் அவற்றைத் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் கருவியுமாய்விட்டது. சிறப்பாக, இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றிக் கொடுமைப்படுத்திப் பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும் அரசாங்கமும் செல்வந்தனும் பிழைக்கும் மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றிப் பொதுவாக மனித வர்க்கத்திற்கு எவ்விதப் பலனும் இல்லாமற் போய்விட்டது. மற்றும், மதத்தினால் ஏற்பட்டுவரும் கெடுதிகள் என்ன என்று பார்ப்போமானால், முதலாவது, மதம் மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்துவிடுகிறது. எப்படி எனில், ஒவ்வொரு மதக்காரனும் தனது மதப்படி கடவுள் உண்டு என்று நினைப்பதோடு, தனது மதத்தைக் கடவுள் உண்டாக்கினார் என்று நம்புவதாகக் காணப்பட்டாலும், மற்றொரு மதக்காரனும் அப்படித்தானே சொல்லுகிறான்! ஆதலால், அவர்களுக்கு வேறு மதத்தையும், நமக்கு வேறு மதத்தையுமா கடவுள் செய்து இருப்பார் என்று சிறிதாவது யோசிக்கவோ, அல்லது நம் மதத்தை வையும்படியோ, அன்றி ஏற்காதபடியோ அவர் மற்றொரு மதத்தை உண்டாக்கி இருப்பாரா? அப்படியானால், இது ஒன்றுக்கொன்று முரண்பாடல்லவா என்று எவருமே நினைப்பதில்லை. எவருமே என்றால், மத ஆச்சாரியார்கள், மத அபிமானிகள் என்பவர்கள் முதலாக எவருமே கருதுவதில்லை.

இந்த ஒரு காரணத்தாலேயே, மதம் மக்களின் அறிவை எவ்வளவு தூரம் கெடுத்து இருக்கின்றது என்பது விளங்கும். இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக்காட்டவே மதம் உதவுகிறது. மூன்றாவதாக, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தி அடையச்செய்கின்றதே ஒழிய, ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்ப்பந்திப்பதில்லை. நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவுக்குச் சிறிதும் இடம் இல்லை. ஏனென்றால், எவ்வளவு நல்ல மதமானாலும், முதலில் ஏதாவதொன்றை—அதாவது நமது அறிவிற்கும், பஞ்சேந்திரியத்திற்கும் எட்டாததைக் குருட்டுத்தனமாய் நம்பித்தான் ஆகவேண்டும் என்று சொல்லாமல் இருப்பதில்லை. அப்படியானால், அம்முறையில் ஒன்றை நம்பிவிட்டு, அதேபோன்ற மற்றொன்றை நம்பாமலிருப்பதற்குக் காரணமுமில்லை. ஐந்தாவது, மதமானது கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகர்களை உண்டாக்கி, அத் தரகர்களின் நடவடிக்கையையும், வார்த்தையையும்—அது எவ்வளவு அசம்பாவிதம் ஆனாலும், சொந்த அறிவைவிட, பிரத்தியட்ச அனுபவத்தைவிட மேலானதாக நினைக்கச்செய்கிறது. அன்றியும், மதமானது பணச்செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும் பாவமன்னிப்பும் இருப்பதாகவும், எவ்வித அக்கிரமங்களுக்கும் வணக்கத்தின் மூலம் மன்னிப்பு இருப்பதாகவும் நம்பச் செய்வதால், மனிதனை அக்கிரமம் செய்யவும், அவ்வாறு செய்வதன்மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகிறது. சோம்பேறிப் பிழைப்புக்குத் தாராளமாய் மதம் இடம் கொடுக்கின்றது.

மதம் மக்களைக் கோழைகளாக்குகின்றது. மதத்தினால் இவ்வளவு அநீதிகள் ஏற்பட்டும், உலக சம்பவங்களின் உண்மைக் காரண காரியங்கள் உணர்வதற்கு இல்லாமல் நிர்ப்பந்தமாய் மக்கள் மதத்தினால் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவும் தவிர, ஒருவனுடைய உழைப்பில் மற்றும் ஒருவனை வாழும்படி செய்கின்றது. நிற்க, உண்மைச் சைவன் என்பவன் ஒருவன் எவ்வளவு அயோக்கியனானாலும் ஒரு துளி சாம்பல் அவன் மேல் பட்டுவிட்டால் உடனே அவனுடைய சகல பாவமும் தீர்ந்து, நேரே 'கயிலயங்கிரி'க்குப் போய்விடலாம் என்கிறான். சுருக்கமாகச் சொன்னால், வக்கீல் தொழில் செய்பவனும், பொய்ப் புராணப் பிரசங்கம் செய்பவனும் விபூதி பூசிக் கொள்ளுகிற காரணத்தினாலேயே தன்னை ஒரு சைவன் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறான். பிறரும் அப்படியே எண்ணவேண்டுமென்றும் ஆசைப்படுகிறான் என்றால், சைவனின் யோக்கியதைக்கும், சைவ சமயத்தின் பெருமைக்கும் வேறு சாட்சியம் தேவையா? அதுபோலவே, ஒரு உண்மை வைணவன் என்பவனும் ஒரு தடவை 'ராமா' என்று சொல்லிவிட்டால் சகல பாவமும் தீர்ந்துவிட்டது என்கிறான். இராமனைவிட உலகில் வேறு தெய்வம் இல்லை

படிப்பகம்

www.padippakam.com



ஆயுதங்கள் கண்டுபிடித்த பின் யானை, புலி, சிங்கம் முதலிய தெய்வங்களைப்பற்றிய பயமும் மறைய ஆரம்பித்துவிட்டன. இந்த முறையில் இனியும் நமக்குள் மீதி இருக்கும் கடவுள் உணர்ச்சிகள் எவை என்று பார்ப்போமேயானால், காரண காரியம், ஆதாரம் முதலிய விவரங்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகின்றோம். இவைகளும் நாளுக்குநாள் மனிதன் அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியும் முதிர முதிர மறைந்துகொண்டேதான் வரும். மேலும், இப்பொழுது ஒருவருக்குக் கடவுள்சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள், மற்றொருவருக்குக் கடவுள்சக்தி என்று தோன்றப்படாமலிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்விருவருடைய அறிவு, ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமேயாகும்.

இப்பொழுதும் நம் மனத்திற்கு எட்டாத காரியங்களை மேனாட்டார் செய்யும்போது நாம் அதிசயப்பட்டாலும், அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு நாம் தைரியம் பெற்றுவிட்டோம் என்றாலும் நமக்குப் பூரண அறிவும், ஆராய்ச்சி முடிவும் ஏற்படும் வரை கடவுள் உணர்ச்சி நம்மை விட்டு விலகமுடியாது. அன்றியும், வாழ்க்கையில் பக்குவமடையாதவர்களுக்குக் கடவுள் உணர்ச்சி சிறிதுகாலம் வரை இருந்தே தீருகிறது. அதாவது, கஷ்டப்பட்டு ஏமாற்றமடைந்தவனுக்கும், ஈடு செய்ய முடியாத நஷ்டம் அடைந்தவனுக்கும் கடவுள் செயல் என்பதைச் சொல்லி ஆறுதலையும் திருப்தியையும் அடையச் செய்கிறார்கள். நல்ல அறிவும் ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்குக் காரண காரியம் எட்டாத இடத்திலும் ஈடு செய்ய முடியாத இடத்திலும் கடவுள் செயல் என்பதைக் கொண்டு திருப்தி அடைகின்றார்கள். அப்பொழுது தங்கள் அறிவுக்கு மேல் ஒன்று இருப்பதை எண்ணித் தீர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், உறுதியான பக்குவம் அடைந்தவர்கள், எந்த விஷயத்திற்கும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக்கொண்டு சமாதானம் அடைவதும், தெரியாததாய் இருந்தால், 'நமக்கு எட்டவில்லை' என்றோ அல்லது 'இதுதான் இயற்கை' என்றோ கருதித் திருப்தி அடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே, சாதாரண மக்களின் கடவுளுக்கும், சற்று அறிவு உடைய மக்களின் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்களின் கடவுளுக்கும், பக்குவமடைந்தவர்கள் எண்ணத்திற்கும் வித்தியாசங்கள் உண்டு. ஒருவருக்கொருவர் கடவுள் வணக்கத்திலும் கடவுள்மீது சுமத்தும் பொறுப்பிலும் வித்தியாசங்கள் உண்டு.

['குடி அரசு'-கட்டுரை—16-4-1949]

கடவுள் என்கின்ற உணர்ச்சி மக்களுக்கு எப்பொழுது, எப்படி உண்டாயிற்று என்பதைப்பற்றியும், அவ்வுணர்ச்சி மக்களுக்கு எதுவரையும் இருக்கமுடியும் என்பதைப் பற்றியும் சுருக்கமாக இதன் முன்னர் எழுதியிருந்தோம். அதாவது, மனிதன் உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும், சம்பவங்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில், கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத்துக்கொள்வதும், உதாரணமாக, அவற்றிற்குக் காரண காரியம் தோன்றிய பின்பு, அந் நினைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடுவதும் சகஜம் என்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். இந்த முறையிலேதான் கொஞ்ச காலத்திற்குமுன், அனேக விஷயங்கள் கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள், விஞ்ஞான (சயின்ஸ்) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு, அனேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தைரியம் கொண்டுவிட்டார்கள். உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தி இருக்கும் விஷயமும், அது எப்படிச் செய்யப்படுவது என்கின்ற 'சயின்ஸ்' உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால், நாம் இன்னமும் அதை 'ஒரு தெய்வீகச் சக்தி' என்றும், பழைய காலத்து ரிஷிகள் பேசிக்கொண்டு இருந்ததாய்ச் சொல்லப்படும், 'ஞான சிருஷ்டிச் சம்பாஷணை' என்றுமே சொல்லித் தீருவோம். ஆதலால், மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் வளர, வளர கடவுள்



உணர்ச்சியின் அளவும் குறைந்துகொண்டே போகும் என்பது திண்ணம். அதுபோலவே, அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறைய கடவுள் உணர்ச்சி வளர்ந்துகொண்டே வரும் என்பதும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இப்பொழுதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமேதான் அனேகமாக, தொட்டதற்கெல்லாம் கடவுளும், அவர்தம் செயல்களும் தாண்டவமாடுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே 'கடவுள் வருவதை'க்கூடப் பார்க்கின்றோம். காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர்களிடமே அனேகமாகக் கடவுளைப்பற்றிய கதைகள் என்பவைகளும் புராணங்கள் என்பவைகளும் மதிப்புப் பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக் கதைகளை அப்படியே—அதாவது, கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பிக்கொண்டு இருந்தவர்கள்கூட இப்பொழுது அப்படியே நம்புவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு, தங்களுக்குள்ள அறிவு வளர்ச்சியில்லாத் தன்மையை மறைத்துக்கொண்டு, 'சயின்ஸ்' மூலம் அக் கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக் கொண்டு கஷ்டப்படுகின்றார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகின்றதென்றால், மக்கள் வரவர இப்பொழுது 'சயின்ஸுக்கு'ப் பொருத்தமில்லாதவைகளை ஏற்க மறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துகொண்டு இருக்கின்றார்கள் என்பது விளங்குகின்றது. மழையை வரச்செய்வதும், செத்தவனை மறுபடியும் பிழைக்கச் செய்வதும், பேச்சுக்களையும், நாட்டியங்களையும் இயந்திரங்களில் பிடித்துக் காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக்கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு, மிக்க பாமர ஜனங்களுக்குக்கூட இவையெல்லாம் கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை குறைந்துவருவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. எனவே, ஒரு காலத்தில்—அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள், இனியும் இருந்துதான் தீரவேண்டுமா என்றால், அது இருந்துதான் வருகிறது. எப்படியும் அது ஒரு அளவுக்காவது—கொஞ்சமாவது இருந்துவரக்கூடும் என்றே சொல்லுவோம்.

ஏனெனில் மனிதன், தான் எல்லாம் அறிந்தவன் என்கின்ற ஆணவத்தை உடையவனாதலால் தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளச் சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்படமாட்டானாகையால், அங்கு—அதாவது தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது—அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும், கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல; பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும், சிலர் உண்மையை அறிந்திருந்தாலும், சுயநலமோ மூடப்பிடிவாதமோ காரணமாகத் தங்களுக்கே புரியாதவற்றைப் பேசிப் பாமர மக்களை மயக்கிக்கொண்டும் இருப்பார்கள். ஏனெனில், மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே, அவர்கள் பிழைக்கக் கூடியவர்களாய் இருப்பதனால்தான். எது எப்படி இருந்தபோதிலும், உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்துவிட்டதால், கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வரவரக் குறைந்து கொண்டுதான் போகும் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்காக வருத்தப்படுவதிலோ, யார் மீதாவது குற்றம் சொல்வதிலோ பயனில்லை. ஆனால், அவ்விதக் குருட்டு நம்பிக்கையும் மூடப்பிடிவாதமும் ஒழிந்த காலத்தில்தான், உலகத்தில் ஒழுக்கமும் சமத்துவமும் இன்பமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

['குடிஅரசு'-கட்டுரை—23-4-1949]

படிப்பகம்

www.padippakam.com

# 1. பிரகிருதிவாதம்

## 1. மெட்டீரியலிசம் (பிரகிருதிவாதம்)

சுயமரியாதை இயக்கம் நாட்டில் பரவ ஆரம்பித்த பிறகு, அதிலும் அவ்வியக்கம் நாட்டில் சற்றுச் செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்பு, மக்களுக்குள் தானாகவே ஒருவிதக் குழப்ப உணர்ச்சி தோன்றியிருப்பதை நாம் நன்றாய் உணர்ந்து வருகின்றோம். அதோடு கூட பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாதார்களில் அரசியல் தேசியம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும், சமயம், புராணம், பிரசங்கம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும் இவ்வியக்கத்தை எதிர்ப்பதற்கு, கடவுளையும் மதத்தையும் பற்றிய பொதுமக்களின் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக் கொண்டும், மற்றும் திரித்துக் கூறிக்கொண்டும் விஷமப் பிரச்சாரம் செய்து வருவதனாலும், நமது இயக்கத்தில் உண்மையான பற்றுக்கொண்ட உண்மை நண்பர்களிற் சிலர் இவ் விஷமப் பிரச்சாரத்தைக் கண்டு பயப்படுவதாகத் தெரிவதாலும், மற்றும் சில பெரியோர்களும் சமய சம்பந்தமாக மனத்துடிப்புக் கொள்வதாலும் நமது நிலையையும் கடவுள், மதம் என்பது பற்றி நாம் கொண்டுள்ள கருத்தின் நிலையையும் சற்று விளக்கிவிட வேண்டுமென்பதாகக் கருதி இதனை எழுதப் புகுந்தோம்.

இவைகளைப்பற்றி இதற்குமுன் பல தடவைகள் பேசியும், எழுதியும் இருக்கின்றோம். ஆயினும், அவைகளைவிட இது சற்றுத் தெளிவாக இருக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே இதை எழுதுகின்றோம். வாசகர்கள் தயவு செய்து இதைச் சற்று நிதானமாகவும், கவனமாகவும் படித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

இந்த முதல் பகுதியானது, இதே தலைப்பின்கீழ் திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மாநாட்டின் முடிவுரையின்போது நம்மால் எடுத்துச் சொல்லப் பட்டதை அனுசரித்தும், சில நண்பர்கள் அதை விளக்கி எழுதும்படி சொன்னதை ஆதரித்தும் எழுதப்பட்டதாகும்.

முதலாவதாக, நமக்குக் கடவுளைப் பற்றியாவது, மதத்தைப் பற்றியாவது சிறிதும் கவலை இல்லை என்பதாகவும், கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவைகளில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து, விடுதலையை உண்டாக்கவேண்டும் என்பதே முக்கிய கவலை என்பதாகவும் அனேக தடவைகளில் வெளியிட்டு இருக்கிறோம். அதுவும், பலர் நம்முடைய இம்முயற்சியில் கடவுளையும் மதத்தையும் கொண்டுவந்து குறுக்கே போட்டுவிட்டதால்தான் நாம் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியதாயிற்றே ஒழிய, உண்மையில் கடவுளையும் மதத்தையும் பற்றிப் பேச வேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்கவில்லை. அதுபோலவேதான், சைவ சமயத்தைப் பற்றியும் நாம் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதும் என்போம். எப்படியெனில், சில சைவத் தலைவர்கள் நமக்கு எதிராகத் தம்மால் கூடிய சூழ்ச்சிகளெல்லாம் செய்து பார்த்தும் ஒன்றிலும் பயன் தராததால், கடைசியாகச் சமயமென்றும் சமயப் பெரியார் என்றும் கூறிக்கொண்டு, அவ் வார்த்தைகளையே தமது ஆயுதமாகவும், சமய சம்பந்தமான சில பைத்தியக்காரர்களைத் தமக்குப் படையாகவும் வைத்துக்கொண்டு, அவர்களைத் தெருவில் இழுத்து நம்மீது உசுப்பிவிட்டுச் சூழ்ச்சிப் போர் தொடுக்க ஆரம்பித்ததன் பலனாய், சைவ சமயம் என்பதும் சமயாச்சாரியர்கள் என்பவர்களும் சந்திக்கு வரவேண்டியவர்களானதோடு சைவப் பெரியார்கள் என்பவர்களின் சாயமும் வெளுக்கவேண்டியதாய்விட்டது.



படிப்பகம்

www.padippakam.com



இன்றையதினம் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், இராமாயணம், பாரதம் ஆகியவைகளிலுள்ள கதைகளை நம்பி, முக்கிய கதாநாயகர்களைக் கடவுள்களாக மதித்து வணக்கம், பூஜை, உற்சவம் செய்ய எவனெவன் சம்மதிக்கின்றானோ அவன் மாத்திரமே கடவுள் நம்பிக்கையும், சமயப் பற்றும் கொண்டவன் என்றும், மற்றவர்கள் நாத்திகர்கள், சமயத் துரோகிகள் எனவும் தீர்மானிக்கப்பட்டு, அதுவே முடிந்த முடிவாகவும் சொல்லப் பட்டுவிட்டது. இது எப்படி இருந்தபோதிலும், கடவுள்-மதம் என்பது என்னவென்பது பற்றியும், இவை எப்படி உண்டாயின என்பதுபற்றியும், இவற்றை உண்டாக்கியவர்கள் கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கினார்களா, அல்லது நல்ல எண்ணத்தோடு உண்டாக் கினார்களா, அல்லது அறியாமையினால் உண்டாக்கினார்களா என்பவைகளைப்பற்றியும், இவற்றில் நமது, அதாவது மக்கள்-கடமை என்ன என்பதுபற்றியும் சற்று ஆலோசித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதைப்பற்றி முதலாவதாக, இங்கு குணம், உருவம், பெயர் அற்ற தன்மைகளையுடைய கடவுள் என்பதைப் பற்றியும், மக்களின் வாழ்க்கை நலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்தான் மதம் என்று சொல்லப்படும் மதத்தைப் பற்றியுமே இங்கு விவரிக்கக் கருதியுள்ளோமே தவிர, மற்றபடி பல கடவுள்களின் தன்மை யையும், மதப் பிரிவுகளான கிறிஸ்துவ, இஸ்லாமிய, ஜைன, பவுத்த, சீக்கிய, சைவ, வைணவ, ஸ்மார்த்த, சாக்கிய, வாம முதலிய பல உள் மதங்களைப் பற்றியும் நாம் இங்கு தனித் தனியாகப் பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை. ஏனெனில், அவற்றிற்கு ஏற்கனவே மறுப்புகள் தாராளமாய் வெளிப்பட்டு, ஒருவருக்கொருவர் பதில் சொல்ல முடியாமல் தத்து வார்த்தம் என்கிறதற்குள் அடைக்கலம் புகுந்தும், நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்குள் புகுந்துமேதான்—ஒவ்வொருவரும் அவரவர்கள் கடவுளையோ, கடவுள் தூதர்களையோ, அவதாரங்களையோ, சமயங்களையோ, சமயாச்சாரியர்களையோ— காப்பாற்றிக் கொள்ள முடிந்ததே ஒழிய, அறிவின் மீதோ, நியாயத்தின் மீதோ நிலைநிறுத்த முடியாமற் போய்விட்ட விஷயம் உலகம் அறிந்ததாகும். ஆதலால், இப் பகுதியில் நாம் அவற்றில் பிரவேசிக்கவில்லை.

முதலாவது, மக்களுக்குக் கடவுள் எப்பொழுது, எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து, வளர்ந்து நினைக்கப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில், இப்பொழுதுகூட மக்களுக்குப் பிறர் சொல்லிக் கொடுத்த பிறகுதான் கடவுள் என்கின்ற பேச்சும், நினைப்பும் ஏற்படுகின்றதே தவிர, தானாக ஏற்படுவதில்லை. எப்படியெனில், சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இடுக்கிக்கொண்டு—ஒரு உருவத்தையோ, வஸ்துவையோ காட்டி, சாமியென்றும் அதைக் கைகூப்பிக் கும்பிடு என்றும் சொல்லிக்கொடுத்த பிறகே குழந்தை சாமியைக் கும்பிட அறிகின்றது. அது போல, ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகுதான் அவன் மனத்திற்குக் கடவுள் நினைப்புத் தோன்றியிருக்க வேண்டும். அது எப்படி என்றும் எப்போதென்றும் பார்ப்போமானால், சாதாரணமாக மனிதனுக்கு அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில் தான் கடவுள் நினைப்புத் தோன்றிஇருக்கவேண்டும். கடவுள் என்பது—கடவுள், ஸ்வாமி, அல்லா, 'காட்' என்ற—தமிழ், சமஸ்கிருதம், அரபி, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும், குறியில், அர்த்தத்தில் உலகத் தோற்றத்திற்கும், நடப் பிற்கும், அழிவிற்கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப்படுமானால் அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்ச பூதக் கூட்டு என்று சொல்லப்படுமானால் அக் கூட்டின் சேர்க்கைக்கும் ஏதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆகவேண்டும் என்பதும்—அந்த சக்திதான் கடவுள், எல்லாம்வல்ல ஆண்டவன், அல்லா, 'காட்' என்று சொல்லப்படுகிறதென்று சொல்லுவதானாலும், அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனத்திற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத்தக்கதாய் இருக்கிறது.



ஆகவே, அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம் நாட்டைப் பொறுத்தவரை எப்படி இருந்தது என்பதாகவும் பார்க்க வேண்டுமானால், நம் நாட்டில் உள்ள கடவுள்களைக் கொண்டுதான் அதைத் தாராளமாய் உணரமுடியும். அதாவது, இப்பொழுது நமது நாட்டில் உள்ள கடவுள்கள் எவை என்றால் பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள், பயங்கரமான மிருகங்கள் ஆகியவைகளெல்லாம் கடவுள்களாகக் கருதப்படு கின்றன. இவைகளெல்லாம், இவற்றின் உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவைகள். அதிலும் இமயமலையே 'கயிலயங்கிரி' யாகவும், அதுவும் வெள்ளி மலையாகவும், அங்குக் கடவுளிருப்பதாகவும், அங்கிருந்து வரும் நீர் அம் மலையில் உள்ள கடவுளின் தலையிலிருந்து வருவதாகவும் கருதப் பட்டதோடு, இமயமலைக்கு அப்பால் ஒரு நாடும் கண்டுபிடிக்க முடியாதிருந்ததும்; மேல் லோகம் என்றும், கீழ் நாட்டைப் பாதாளலோகம் நரகலோகம் என்றும் இப்படிப் பல வாறாகக் கடவுள் தன்மையைச் சொன்னதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது, அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவைகளைக் கடவுள் என்றும், அவற்றின் இயங்குதலைக் கடவுள் சக்தி என்றும் சொல்லவேண்டிய அவசியம் தானாகவே ஏற்பட்டது.

இப்போதும் மனிதன் தன்னால் முடிந்தவைகள் போக, முடியாதவைகளுக்கே கடவுள் சக்தி என்று சொல்லி விடுகின்றான். உதாரணமாக, சிறு குழந்தைகள், ஒரு ஜால வேடிக்கைக்காரனுடைய செய்கையை மந்திர சக்தி என்றும், தெய்வ சக்தி என்றும், உபாசனா சக்தி என்றும் கருதுகிறார்கள். சிறுவனாய் இருக்கும்போது நாமும் அப்படியே கருதி இருந்தோம். இப்போது அறிவு வளர்ச்சி பெற்ற பின் அந்த ஜால வேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல் தந்திரம், கைத்திறம் என்று சொல்லுகின்றோம். மற்றும், அந்த ஜால வேடிக்கைக்காரன் செய்யும் ஜாலத்தின் வழி இன்னதென்று நமக்குத் தெரியா விட்டாலும் கூட, நாம் அவற்றை ஒருக் காலமும் மந்திர சக்தி என்றோ, தெய்வ சக்தி என்றோ சொல்லாமல், 'இது ஏதோ தந்திரம்தானே ஒழிய வேறில்லை; ஆனால், அது இன்னது என்று கண்டுபிடிக்க நம்மால் முடியவில்லை' என்று சொல்லி விடுகிறோம். எனவே, ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திரமாகவும் தெய்வ சக்தியாகவும் தோன்றியது. பிறகு, அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்னவென்றால், அது அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியின் பலனுமேயாகும். அதுபோலவே, நமக்கு இப்பொழுது தெய்வ சக்தி, கடவுள் சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம், மேல் நாட்டாருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றுவதில்லை. உதாரணமாக, சூரிய-சந்திர கிரகணம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டு பிடித்து, சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்பதாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபம் என்றும் சொல்லி, அச் சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து அத் தோஷம் தீர ஸ்நானமும் செய்து வருகின்றோம். இது வான சாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட கருத்தாகும். இப்பொழுது வான சாஸ்திரம் தெரிந்தவர்கள், பூமி-சூரியன் இவற்றின் இயங்குதல், அதன் கால அளவு ஆகிய வைகளைக் கண்டுபிடித்த பின், சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணர்ந்து இருக்கிறோம். அதுபோலவே, எங்கிருந்து எப்படி மழைத் தண்ணீர் வருகிறதென்பது தெரிந்தவுடன் நதிக் கடவுளும், மேகக் கடவுளும், வருண பகவானும் சிறிது சிறிதாக நம் மனத்தை விட்டு மறையத் தொடங்கி விட்டன. அதுபோலவே, வியாதிகள் எப்படி வருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற் கூற்று ஆராய்ச்சியும் நமக்குத் தெரியவந்த பின்பு, பேதி, மாரி, அம்மை முதலிய தெய்வங்களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன. இதுபோலவே, காற்று, நெருப்பு, பேய் முதலியவைகளும் மறைந்துவருகின்றன. துப்பாக்கி, பீரங்கி முதலிய

படிப்பகம்

www.padippakam.com




அய்ரோப்பிய சுற்றுப் பயணத்தின்போது முதலமைச்சர் மு. கருணாநிதி, பெரியார் ஈ. வெ. ரா அவர்கட்கு விடுத்த மடல்.



# முதல்வர் கருணாநிதியின் கடிதம்

மு. கருணாநிதி, நியூயார்க்.

அன்புமிக்க அய்யா பெரியார் அவர்கட்கு, தங்கள் கருணாநிதி வணக்கம். இன்று நயாகரா நீர்வீழ்ச்சி பார்த்துவிட்டு, அமெரிக்காவில் மிக உற்சாகமாகக் கொண்டாடப்படும் (Thanksgiving day) 'நன்றி அறிவிப்பு நாள்' விழாவில் 'நயாகரா கிளப்' விருந்தினராக இருந்துவிட்டு நியூயார்க் செல்லும் வழியில் இந்த மடல் எழுதுகிறேன்.

தாங்களும் அம்மையாரும் நண்பர் வீரமணியும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். தங்களுக்குத் தேவைப்படும் ஓய்வுபற்றி நான் அதிகம் கூறவேண்டியதில்லை.

சிகாகோ பல்கலைக்கழகத்தில் அரசியல் பிரிவில் அரசியல் கருத்தரங்கில் கலந்து உரையாற்றினேன். அங்கு தங்களைப் பற்றியும், நமது இயக்க வரலாறு பற்றியும், அண்ணாவைப் பற்றியும், இன்றையத் தமிழக அரசு பற்றியும் அமெரிக்க மாணவர்களும் பேராசிரியர்களும் நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நம்மவர்கள்தாம் தமிழகத்தில் நமது வளர்ச்சியை, சூரியனை மேகத்தால் மூடநினைப்பதுபோல இருட்டடிப்புச் செய்ய முனைகிறார்களே தவிர, உலகின் பல்வேறு நாடுகளில் நமது பணியின் பயன்பற்றிப் பேசப்படுகிறது.

சிகாகோ பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சி, தங்கள் ஓயாத தொண்டு, தங்கள் காலத்திலேயே கொள்கைகள் பெற்றுவரும் வெற்றி குறித்தெல்லாம் குறிப்பிட்டேன். பேச்சுக்குப் பிறகு தங்களைப்பற்றியும், தன்மான இயக்கவளர்ச்சி பற்றியும் நிறைய வினாக்கள் எழுப்பினார்கள். பதில்களை விளக்கமாக அளித்தேன்.

கண்ணில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. பயணத்தை முடித்துக் கொண்டு தங்களையும், தமிழகத்து அன்பு முகங்களையும் காண டிசம்பர் முதல் வாரத்தில் வந்து சேருகிறேன். அமெரிக்காவில் விஞ்ஞானக் கூடங்கள் பலவற்றையும் கண்டேன். அவைகளின் சிறப்புக்களை நேரில்தான் விளக்கவேண்டும்.

தங்கள் அன்பு மறவாத,
(ஒ-ம்) மு. கருணாநிதி
வணக்கம்

['விடுதலை' 3-12-1971]

படிப்பகம்

www.padippakam.com



கோவிலிலுள்ள கடவுள் என்பதைத் தமிழில் பூசை செய்யாததற்குக் காரணம், வட மொழியிலேயே பூசை செய்வதற்குக் காரணம்—'தமிழ் மிலேச்ச மொழி' என்பதும், வடமொழி 'தேவமொழி' என்பதுமேயாகும்.

அதுபோலவே, தமிழன் பூசை செய்யக்கூடாது என்பதற்கு, 'தமிழன் சூத்திரன், இழிமகன்' என்பதும்; பார்ப்பான் மேல்மகன் 'பிராமணன்' என்பதுமே காரணம். இதை அடிகளார் ஒப்புக் கொள்ளாதிருக்கலாம்; ஒப்புக்கொள்ள மறுக்கலாம்.

அடிகளார் மன்னிக்க வேண்டும். நான், நாம் குறிப்பிடும் கடவுள்களைப் பற்றியதை மத, சம்பிரதாய ஆதாரங்களிலிருந்தும், நடப்பிலிருந்தும் அறிந்ததைச் சொல்லுகிறேன்.

இவை எப்படியோ இருக்கட்டும். தமிழ் மொழியில் பூசை நடக்கவேண்டுமென்று அடிகளாரும் கூறுகிறார்கள்; நானும் கூறுகிறேன். இதற்காகக் கிளர்ச்சியோ, போராட்டமோ நடத்த வேண்டுமென்பதில் அடிகளாருக்கும் மறுப்பு இருக்க நியாயமில்லை.

தமிழன் பூசை செய்யவேண்டும் என்பதிலே அடிகளார் கருத்து எப்படியிருந்தாலும் நான் தீவிரமான ஆசையுள்ளவனாகவே இருக்கிறேன்.

இவைகளுக்காக நடைபெறும் போராட்டங்களில் அடிகள் எந்த அளவுக்கு அருள் கூர்ந்தாலும் அது எனது பேறு ஆகவே கருதுவேன்.

மற்றபடி, நாம் இருவரும் நட்பு முறையில் அன்பர்கள் ஆவோம். கொள்கைகளில் ஒன்றுபட்டவர்களாக இருக்க வாய்ப்பில்லாதவர்கள் என்றாலும்—ஒன்றுபட்ட இலட்சியங்களுக்கு மக்கள் நலனையும் தமிழர் தன்மானத்தையும் முன்னிட்டுக் கூடியதைச் செய்வோம்.

இப்படி எது செய்யினும், அடிகளார் அருளையும் ஆணையையும் முன்வைத்தே கூடியதைச் செய்ய வேண்டும் என்பதுதான் எனது ஆசை.

'இந்தப் போராட்டத்திற்குக் கடவுள் நம்பிக்கையும் வழிபாட்டு நம்பிக்கையும் அடிப்படையா? அல்லது இனம், சாதி அடிப்படையா'? என்று அடிகளார் கேட்டிருக்கிறார்கள். அடிகளார் அருள்கூர்ந்து முன்னின்று செய்யும் போராட்டத்திற்குக் கடவுள் நம்பிக்கையும் வழிபாட்டு நம்பிக்கையும் உடையவர்களையே கலந்து கொள்ளும்படி பார்த்துக்கொள்கிறேன்; அதில் அடிகளாருக்குச் சங்கடம் வேண்டியதில்லை.

தவிர, 'தமிழன் என்று யாரைக் கருதுகிறீர்கள்?' என்று அடிகளார் கேட்டிருக்கிறார்கள். நான் 'தமிழன்' என்று கருதுவது—பெரிதும் நம் நாட்டில் 'சூத்திரர்கள்' என்று சொல்லப்படுகிறவர்களையே யாகும். இப்பொழுது கோயில்களில் பூசை செய்கிறவர்கள் சூத்திரர்கள் என்று ஒரு சாரார் சொல்லக்கூடும். அதாவது 'குருக்கள் சூத்திரர்கள்' என்பதே.

அது வெறும் பேச்சு. காரியத்தில் குருக்கள் எல்லாம் நம்மைத் தீண்டாதவர்களாகவும் கருதுவதோடு, நம்முடனிருந்து உண்ணக்கூடாதவர்கள் என்றே இருந்து வருகின்றார்கள்; பூணூல் அணிந்திருக்கிறார்கள்.

அவர்கள் சூத்திரர்கள் அல்லது நம்மவர்கள் ஆனால், நாம் பூசை செய்வதற்கு என்ன தடங்கல்? நமக்கேன் அந்த உரிமை கிடைக்கும்படி பாடுபடக்கூடாது?

எனவே, அருள்கூர்ந்து எனது முயற்சிக்கு ஆதரவளிக்க வேண்டுகிறேன். குற்றமிருப்பின் மன்னித்தருள்க.

ஈ. வெ. ராமசாமி

['விடுதலை' 7-11-1957]


பேரன்புடைய பெரியார் அவர்கட்கு, வணக்கம்.

தங்கள் அன்புள்ள
அண்ணாதுரை

நியூயார்க்
10/10/68

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 90-வது பிறந்தநாள் செய்தியினை 'விடுதலை' மலரில் (17-9-1968) கண்ணுற்று, அமெரிக்காவில் நியூயார்க் மருத்துவமனையிலிருந்து C. N. அண்ணாதுரை எழுதிய மடல்

படிப்பகம்

www.padippakam.com



# பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு குன்றக்குடி அடிகள் விடுத்தமடல்

குன்றக்குடி, டிச. 26, 1956

அன்புள்ள பெரியார் அவர்களுக்கு!

திருவருள் இன்பம் யாண்டும் மலர்க!

தாங்கள் 15-12-1956, மதுரையில் நடந்த திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் அறிவித்திருக்கும் போராட்டச் செய்தியைப் படித்தோம். இது சம்பந்தமாக நாம் இருவரும் திருப்பரங்குன்றிலிருந்து திருநெல்வேலி போகும்வரை பேசிக்கொண்டதும் நினைவிருக்கலாம். இது சம்பந்தமாகப் பின்னீடு, தாங்கள் வெளியிட்டதாக வந்துள்ள செய்திகள் அவ்வளவு திருப்தியாக இல்லை.

மேலும், இது சம்பந்தமாக ஆஸ்திகத்தின் பேரில் சிலர் வெளியிட்டுள்ள அருவருக்கத்தக்க அறிக்கையை மறந்து விடுவதற்கில்லை.

இது சம்பந்தமாக ஒரு வரையறுத்த முடிவிற்கு வருவது நம்மிருவருடைய கடமையாக இருக்கிறது; அவசியமாகவும் இருக்கிறது.

1. தாங்கள் நடத்த இருக்கும் போராட்டத்திற்குக் கடவுள் நம்பிக்கையையும் திருக்கோயில் வழிபாட்டையும் அடிப்படையாக வைத்திருக்கின்றீர்களா? அல்லது, சிலர் கருதுவது போல இனம் அல்லது சாதியின் அடிப்படையில் கிளர்ச்சிதான் நோக்கமா?

2. 'தமிழன் வழிபாட்டிற்கு நியமிக்கப் பெறவேண்டும்' என்று நிபந்தனை கூறியுள்ளீர்கள்; 'தமிழன்' என்றால், தாங்கள் யாரைத் தமிழர் என்று கருதுகின்றீர்கள்? இதில் சாதி அல்லது இனம் உணர்ச்சி தலை காட்டுகின்றதா? இது சம்பந்தமாகத் தாங்கள் தெளிவுபடுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,
தெய்வசிகாமணி, 26-12-1956

குன்றக்குடி அடிகளாருக்கு பெரியாரவர்கள், விடுத்த பதில் மடல்:

போற்றுதற்குரிய தவத்திரு அடிகளார் அவர்கட்கு! ஈ. வெ. ராமசாமி வணக்கம்.

அடிகளாரது 26-ஆம் தேதிய கடிதம் பெற்றேன். செய்தி உணர்ந்தேன். 'ஒரு வரையறுத்த முடிவிற்கு வருவது நம்மிருவருடைய கடமையாயிருக்கிறது' என்று எழுதியிருக்கிறீர்கள்.

எனது கருத்தை என் பிறந்த நாள் விழாவில், அடிகளார் தலைமையில் நான் பேசும்போது விளக்கியிருக்கிறேன். அதுவேதான் எனது நிலைமையும். மற்றும், திருநெல்வேலி செல்லும்போதும் அடிகளாருக்குத் தெரியும்படி சொல்லியிருக்கிறேன். நிற்க.

போராட்டத்தின் இலட்சியம் இரண்டு.

ஒன்று: தமிழ்நாட்டில், தமிழன் கோவிலில் உள்ள கடவுள் என்பவைகளுக்குத் தமிழில் பூசை செய்யப்பட வேண்டும்.

இரண்டு: தமிழ்நாட்டில், தமிழன் கோயிலுக்குள் தமிழரால் பூசை செய்யப்பட வேண்டும்.

இந்த இரண்டு காரியமும் கடவுளையும், வழிபாட்டையும் பற்றியது மாத்திரமல்ல; தமிழ் மொழியின் தன்மானத்தையும், தமிழனின் தன்மானத்தையும் பற்றியதுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## சர். பன்னீர்செல்வம் கடிதம்

Air Port,
Karachi, 29-2-1940

எனது அன்புள்ள தலைவர் அவர்கட்கு,

நேற்று மாலை பம்பாயிலிருந்து இங்குவந்து சேர்ந்தேன். இன்று காலை நான் எந்த பிளேனில் போகிறதாயிருந்தேனோ, அந்த பிளேன் இன்னும் இங்குவந்து சேரவில்லை. அனேகமாய் இன்று மாலை இங்கு வந்துசேரும். நாளைக் காலை 7 மணி சுமாருக்கு நான் இங்கிருந்து கிளம்புவேன். ஆகவே, வரும் திங்கட்கிழமை லண்டன் போய்ச்சேருவேன் என்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு,
தங்களன்புள்ள,
(A. T. பன்னீர்செல்வம்)

['குடிஅரசு' 7-4-1940

## ஜின்னா பாராட்டு

New Delhi,
Feb. 26, 1940

President,
S. I. L. F., Pycrofts Road,
Royapetta, Madras.

Congratulate you on behalf of Muslim League Party, Central Legislature Assembly on your success in getting Government of Madras remove compulsory study of Hindi.

Your efforts to prevent Congress Government to enforce Hindi upon unwilling people and your sufferings and sacrifices in that struggle have met with well deserved success.

I am sure that those who suffered will have satisfaction that their great sacrifices were not in vain.

M. A. JINNA

மொழிபெயர்ப்பு :

கட்டாயப் பாடமாக இந்தி கற்கவேண்டுமென்றிருந்ததைச் சென்னை சர்க்கார் ரத்து செய்யும்படி செய்து, தாங்கள் வெற்றி பெற்றமைக்கு, மத்திய அசெம்பிளி முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் தங்களைப் பாராட்டுகிறேன்.

விரும்பாத மக்கள்மீது இந்தியைக் கட்டாயமாகப் புகுத்திய காங்கிரஸ் சர்க்காரின் செய்கையைத் தடுக்கத் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், பட்டபாடுகளும், அப் போராட்டத்தில் தாங்கள் செய்த தியாகங்களும் வெற்றி பெற்றுவிட்டன. மேலும், அப் போராட்டத்தில் கலந்து பலவித கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தவர்கள் இப்போது மனங் குளிர்ந்திருப்பார்கள் என்றும், அவர்களின் மகத்தான தியாகங்களெல்லாம் வீணாகவில்லை யென்று உணருவார்கள் என்றும் நம்புகின்றேன்.

புதுடெல்லி
26-2-1940

எம். ஏ. ஜின்னா

['குடிஅரசு' 3-3-1940]

சென்னையில் செல்வத்துக்கு உபசாரம்



இந்திய மந்திரியின் ஆலோசனையாளராக பதவிப் பொறுப்பேற்க லண்டனுக்குப் பயணமான சர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களைப் பாராட்டிச் சென்னையில் நடந்த தேநீர் விருந்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் — 'குடி அரசு' 25-2-1940

படிப்பகம்

www.padippakam.com



பெரியார் அவர்களின் முதல் துணைவியார்
அன்னை ஈ. வெ. ரா. நாகம்மையார்



சிருங்கேரி மடாதிபதி உயர்திரு ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களிட மிருந்து நமக்கு வந்த ஸ்ரீமுக அழைப்பை இவ்விதழில் வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக் கிறோம். திரு மடாதிபதி அவர்கள் அந்த ஸ்ரீமுகம் நமக்கு அனுப்பியதற்காகவும் மற்றும் அதில் நம்முடைய நமது மனைவியாருடையவும் ஒரு சிறு தொண்டை மிகுதியும் பாராட்டி, தங்களது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காகவும் நாம் நம் சார்பாகவும் நமது மனைவியாரின் சார்பாகவும் மனப் பூர்த்தியான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம்.

நிற்க, அந்த ஸ்ரீமுகத்தில் சனாதன தர்மத்தைக் கெடுக்காமல் கருமகாண்டத்தில் உள்ள அவர்கள் கடமைகளைச் செய்து; சாத்திரங்கள் இடம் கொடுக்கும் வரையில் என்கின்ற நிபந்தனைகள் கண்டு அதற்கு விரோதம் இல்லாமல் சில சுதந்திரங்கள் அளிக்கப் படும்—என்கின்ற வாசகங்கள் காணப்படுகின்றபடியால் நான் அங்கு செல்வதால் ஏதாவது பயன் ஏற்படுமா என்கின்ற விஷயம் நமக்குச் சந்தேகமாகவே இருக்கின்றது. ஆயினும், பொறுப்புள்ள ஒரு பதவியை வகிப்பவரும் பல கொள்கைகளுக்கு அபிப்பிராய கர்த்தாவாய் இருப்பவரும் பல மக்களால் விளங்கிக் கொண்டாடி மதிக்கத் தக்கவராக இருப்பவருமான ஒரு பெரியாரின் அழைப்பை மதித்து அதற்கு இணங்கி அங்குச் சென்று வரவேண்டியது மிக்க நியாயமாகுமென்றே நமக்குத் தோன்றுகின்றது. ஆயினும், நமது நண்பர்களின் விருப்பத்தை அறிந்து சென்று வரலாமென்றே கருதியிருக்கின்றோம்.

['குடி அரசு' 2-3-1930]

## நாகம்மாள் அறிக்கை

நமது பத்திரிகையின் ஆசிரியர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தின் பொருட்டுப் புறப்பட்டுச் சுமார் நான்கு மாதங்களாகின்றன; இந்த நான்கு மாதங்களாக நமது 'குடி அரசு'க்குக் கட்டுரைச் செல்வத்திலும் பொருட் செல்வத் திலும் ஒருசிறிதும் வறுமை தோன்றாதபடி இரண்டையும் வழங்கி ஆதரித்து வந்த நமது இயக்கத் தோழர்களாகிய கட்டுரையாளர்களுக்கும் வாசகர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்த வாரம் நமது பத்திரிகைக்கு எட்டாவது ஆண்டு பிறக்கப் போவதால் நமது இயக்கத் தோழர்களாகிய கட்டுரையாளர்களும் வாசகர்களும் சிறந்த கட்டுரைகளை வழங்கியும், எண்ணற்ற சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்தும் பத்திரிகையின் வளர்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

ஈ. வெ. ரா. நாகம்மாள்.
பிரிண்டர் அண்டு பப்ளிஷர்.

['குடி அரசு' 24-4-1932]

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் உடல் மெலிவினால் இப்போது ஒரு நிமிஷம் சேர்ந்தாற்போல் ஏதாவது விஷயத்தைப்பற்றிப் பேசினால் தொண்டை சப்தம் குறைந்து இளைப்பு எடுக்கின்றது. எதையாவது சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று நிமிஷம் எழுதினாலும், படித்தாலும் உடனே தலை வலியும், மயக்கமும் உண்டாகிவிடுகின்றன. ஆகாரம் மிகச் சிறுசிறு அளவே சாப்பிடவேண்டியிருக்கின்றது. சற்று அதிகமாகச் சாப்பிட்டால் வயிறு வலிக்கின்றது. ஆகையால், அவர் வெளியில் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளுவதால் 'குடிஅரசு' பத்திரிகை ஆசிரியர் பொறுப்பை திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் கவனித்து வருகின்றார். குறைந்தது 2, 3 மாத காலத்துக்காவது சந்தாதாரர் களும் வாசகர்களும் பத்திரிகையை ஆதரித்து திரு. சாமி சிதம்பரனார் அவர்களை உற்சாகப்படுத்திவைக்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ரா. நாகம்மாள்

['குடிஅரசு' 15-11-1931]



படிப்பகம்

www.padippakam.com



# 3. தலைவர்களின் கடிதங்கள்

## ஸ்ரீமுகம்

திரு. ஈ. வெ. இராமசாமியாருக்கு ஸ்ரீஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம்.

ஸ்ரீசங்கராச்சாரி சமஸ்தானம்–நிஜசிருங்கேரி க. நெ. 53. (முகாம் புஷ்பவனம்)

அஸ்மத் பிரிய முக்கிய சிஷ்யரான கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு கஸ்பா வெங்கிட்டசாமி நாயுடு குமாரர் ஸ்ரீமான் இராமசாமி நாயுடுவினுடைய சமஸ்த்த அய்ஸ்வரிய ஆரோக்கிய அபிவிருத்தியின் பொருட்டு திரிகால அனுஷ்டானத்திலும் பகவத் பிரார்த்தனையுடன் ஆசீர்வதித்து எழுதிவைத்தனுப்பிய ஸ்ரீமுகம். இங்கே ஆற்காடென்னும் சடாரண்ண க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய புஷ்பவனம் என்னும் புதுப்பட்டி கிராமத்திய ஸ்ரீபரத்துவாஜ மகாரிஷி ஆசிரமத்தில் லோகத்தில் எல்லோருடைய க்ஷேமத்தைக் குறித்து தபஸ் செய்து கொண்டு இந்த மரியாதையை அனுப்பியிருக்கிறோம்.

சம்பாதி–லோககுரு ஸ்தானமாகிய இதில் பரதகண்டத்திலுள்ள சனாதன தர்மத்தை கெடுக்காமலும் எல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகும்படிக்கும் பாரபக்ஷம் இல்லாமல் படிக்கும் சாஸ்திர எல்லைகள் கடவாமல்படிக்கும் பிபீலகாதி பிரம்மம் பரியந்தம் (எறும்பு முதல் பிரம்மாதிகளிலும்) எல்லாவற்றிலுமிருப்பது ஒரே பிரம்மமென்று எல்லோருக்கும் பிரம்மானந்தத்தை அடையச்செய்யவே ஜெகத்குருபீடம் இருக்கிறது. காமகாண்டத்தில் அவரவர்கள் நன்றாய் கடமைகளைச்செய்து நடந்து அதனால் சித்தமானது சுத்தமாகி அகண்டபிரமானந்த சாக்ஷாத்காரம் அடையச்செய்வதே விரதமாகக்கொண்ட இந்த குரு பீடமானது ஸ்ரீ ஆதிசங்கரபகவான் அவதாரம் பரம்பரைக் கிரமமாய் வந்து கொண்டும் குருவாயிருக்கும்போதே சிஷ்யர்களை ஏற்படுத்தி சன்மார்க்க சதாச்சாரத்தில் பழக்கி பீடாதிபத்யம் சன்யாசம் அளிப்பது வழக்கமாயிருக்கிறது. காலதேச வர்த்தமானத்தை அனுசரித்து சாத்தியமான வரையில் சிஷ்யர்களை சன்மார்க்கத்திலும் சதாச்சாரத்திலும் நடத்திச் சந்தோஷமாயிருக்கச் செய்துகொண்டு வருகிறது. இன்னம் காலதேச வர்த்தமானத்தை யோசித்து சாஸ்திரங்கள் இடம் கொடுத்திருக்கும் வரையிலும் தற்கால நிலைமையை அனுசரித்து சிஷ்யர்களுக்கு சில சுவதந்திரங்களையும் இந்த ஜகத்குரு சமஸ்தானம் கொடுக்கவேண்டியது அவசியமாகத் தோன்றி இருக்கிறது.

நீங்கள் நெடுநாளையப் பாரபக்ஷமின்றியிலும் தாட்சண்யங்களுக்கு உட்படாமலும், ஜீவகாருண்யமுள்ளவராயும் சுவயநன்மையைக் கருதாமல் லோகநன்மையையே முக்கியமாகக்கருதி சுகதுக்கங்கள் பாராமல் மானாவமானத்தைக் கவனியாமல் ஜென்மமெடுத்தற்கு பரோபகாரமே சாதனமென்று கருதி உங்கள் தர்மபத்தினிசமேதராய் பாடுபட்டுவருவது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கி இருக்கிறது. உங்களை நேரில் பார்த்து, உற்சாகப்படுத்தி எங்கள் அபிப்பிராயங்களையும் உங்களுக்குச்சொல்லி தக்க சகாயமும் செய்து அனுக்கிரகிக்க வேண்டுமென்று குருதேவதாப்பிரேரணை உண்டாயிருப்பதால் விவேகியாகிய நீரும் உங்கள் தர்மபத்தினியும் அனாதியாய் உங்களுக்குச் சொந்தபாத்தியமான இந்த ஜகத்குருபீடத்தை சிறப்புவிப்பதற்காக இந்த சமஸ்தானத்திற்கு வந்து ஸ்ரீசாரதாசந்திரமவுளீதரவாமிகள் பிரசாத அனுக்கிரகம்பெற்று இப்போதிலும் அதிகமான சிரேயசை அடைவீர்கள் என்று நம்பி இந்த ஸ்ரீமுகம் எழுதிவைத்து அனுப்பலாயிற்று. விவேகிகளுக்கு என்ன எழுதவேண்டி இருக்கிறது. —ஸ்ரீபிர.ஸ்தாவித்தியானந்தநாத பாரதஸ்வாமி சங்கராச்சாரியூ, பு. அ. வெங்கட்டரமணம் சர்வாதிகாரி (என்று கன்னடத்தில்)

['குடிஅரசு' 2-3-1930]

படிப்பகம்

www.padippakam.com



மற்ற கவிஞர்கள் பழைமை விரும்பிகள் ஆனதினால், பழமையில் பற்றுக்கொண்ட மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்றார்கள்; போற்றுகின்றார்கள். நமது முட்டாள் தனத்துக்கு உதாரணமே வள்ளுவரைப் பாராட்டுவது ஒன்றே போதுமே!

வள்ளுவர், 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றும்

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்றும் பாடியுள்ளார். எனவே, அவர் பகுத்தறிவுவாதி; யார் எதைச் சொன்னாலும் அறிவு கொண்டு ஆராய்ந்து உணரவேண்டும் என்று சொல்லி இருக்கின்றார் என்று கூறுவார்கள்.

தோழர்களே! வள்ளுவர் இப்படிக்கூறி இருந்தாலும் அது அவர் கொள்கையல்ல; ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னார், அவ்வளவுதான். மற்றபடி, அந்தப் பழைமை விரும்பியே 'உலகத்தார் உண்டென்பதை இல்லென்பான் வையத்தில் அலகையா வைக்கப் படும்' என்று கூறியுள்ளாரே! எனவே மூடநம்பிக்கை முதலியவைகளில் நம்பிக்கை உடையவரே வள்ளுவர்.

பாரதியாரை எடுத்துக்கொண்டாலோ, அவர் தாவாத சொள்கை இல்லை; கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர் நடப்பு முதலிய எல்லாவற்றையும் கூறியுள்ளார். எனவேதான் பழைமை விரும்பிகள் இவர்களை எல்லாம் போற்றுகின்றார்கள்.

பாரதிதாசன் எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்களை எடுத்துப் பாட முற்படவே இல்லை. சமுதாய மாற்றத்திற்கான கருத்துக் களைத் துணிந்து கூறிய பெரும் புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்களுக்கு எடுத்துச் சொல்லத்தக்க சாதனமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.

நமது மக்கள் இப்படிப்பட்டவருக்குப் பாராட்டும், பெருமையும் அளிக்கவேண்டிய அளவுக்கு அளிக்காதது வருந்தத் தக்கதாகும். காரணம், அவர் பகுத்தறிவுவாதி யானபடியால் அவருடைய பணிக்குக் கிடைக்கவேண்டிய மதிப்புக் கிடைக்கவில்லை.

பாரதிதாசனைப்போன்று புதிய கருத்துக்களை எடுத்துச்சொல்லிப் பரப்ப ஆளே இல்லையே! பாரதிதாசன்போல நமது நாட்டில் புரட்சிப் புலவர்கள் தோன்றி இருந்திருப் பார்களேயானால், நமக்கு 2000, 3000 ஆண்டுகளாக இருந்துவரும் இழிதன்மை இருந்து வந்திருக்குமா?

[சிவகங்கை மன்னர் ராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில், 8-3-1973-ல் சொற்பொழிவு]

படிப்பகம்

www.padippakam.com



# 3. தலைவர்களின் கடிதங்கள்

## ஸ்ரீமுகம்

திரு. ஈ. வெ. இராமசாமியாருக்கு ஸ்ரீஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம்.

ஸ்ரீசங்கராச்சாரி சமஸ்தானம்-நிஜசிருங்கேரி க. நெ. 53. (முகாம் புஷ்பவனம்)

அஸ்மத் பிரிய முக்கிய சிஷ்யரான கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு கஸ்பா வெங்கிட்டசாமி நாயுடு குமாரர் ஸ்ரீமான் இராமசாமி நாயுடுவினுடைய சமஸ்த்த அய்ஸ்வரிய ஆரோக்கிய அபிவிருத்தியின் பொருட்டு திரிகால அனுஷ்டானத்திலும் பகவத் பிரார்த்தனையுடன் ஆசீர்வதித்து எழுதிவைத்தனுப்பிய ஸ்ரீமுகம். இங்கே ஆற்காடென்னும் சடாரண்ண க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய புஷ்பவனம் என்னும் புதுப்பட்டி கிராமத்திய ஸ்ரீபரத்துவாஜ மகாரிஷி ஆசிரமத்தில் லோகத்தில் எல்லோருடைய க்ஷேமத்தைக் குறித்து தபஸ் செய்து கொண்டு இந்த மரியாதையை அனுப்பியிருக்கிறோம்.

சம்பாதி-லோககுரு ஸ்தானமாகிய இதில் பரதகண்டத்திலுள்ள சனாதன தர்மத்தை கெடுக்சாமலும் எல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகும்படிக்கும் பாரபக்ஷம் இல்லாமல் படிக்கும் சாஸ்திர எல்லைகள் கடவாமல்படிக்கும் பிபீலகாதி பிரம்மம் பரியந்தம் (எறும்பு முதல் பிரம்மாதிகளிலும்) எல்லாவற்றிலுமிருப்பது ஒரே பிரம்மமென்று எல்லோருக்கும் பிரம்மானந்தத்தை அடையச்செய்யவே ஜெகத்குருபீடம் இருக்கிறது. காமகாண்டத்தில் அவரவர்கள் நன்றாய் கடமைகளைச்செய்து நடந்து அதனால் சித்தமானது சுத்தமாகி அகண்டபிரமானந்த சாக்ஷாத்காரம் அடையச்செய்வதே விரதமாகக்கொண்ட இந்த குருபீடமானது ஸ்ரீஆதிசங்கரபகவான் அவதாரம் பரம்பரைக் கிரமமாய் வந்துகொண்டும் குருவாயிருக்கும்போதே சிஷ்யர்களை ஏற்படுத்தி சன்மார்க்க சதாச்சாரத்தில் பழக்கி பீடாதிபத்யம் சன்யாசம் அளிப்பது வழக்கமாயிருக்கிறது. காலதேச வர்த்தமானத்ைத அனுசரித்து சாத்தியமான வரையில் சிஷ்யர்களை சன்மார்க்கத்திலும் சதாச்சாரத்திலும் நடத்திச் சந்தோஷமாயிருக்கச் செய்துகொண்டு வருகிறது. இன்னம் காலதேச வர்த்தமானத்தை யோசித்து சாஸ்திரங்கள் இடம் கொடுத்திருக்கும் வரையிலும் தற்கால நிலைமையை அனுசரித்து சிஷ்யர்களுக்கு சில சுவதந்திரங்களையும் இந்த ஜகத்குரு சமஸ்தானம் கொடுக்கவேண்டியது அவசியமாகத் தோன்றி இருக்கிறது.

நீங்கள் நெடுநாளையப் பாரபக்ஷமின்றியிலும் தாட்சண்யங்களுக்கு உட்படாமலும், ஜீவகாருண்யமுள்ளவராயும் சுவயநன்மையைக் கருதாமல் லோகநன்மையையே முக்கியமாகக்கருதி சுகதுக்கங்கள் பாராமல் மானாவமானத்தைக் கவனியாமல் ஜென்மமெடுத்தற்கு பரோபகாரமே சாதனமென்று கருதி உங்கள் தர்மபத்தினிசமேதராய் பாடுபட்டுவருவது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கி இருக்கிறது. உங்களை நேரில் பார்த்து, உற்சாகப்படுத்தி எங்கள் அபிப்பிராயங்களையும் உங்களுக்குச்சொல்லி தக்க சகாயமும் செய்து அனுக்கிரகிக்க வேண்டுமென்று குருதேவதாப்பிரேரணை உண்டாயிருப்பதால் விவேகியாகிய நீரும் உங்கள் தர்மபத்தினியும் அனாதியாய் உங்களுக்குச் சொந்தபாத்தியமான இந்த ஜகத்குருபீடத்தை சிறப்புவிப்பதற்காக இந்த சமஸ்தானத்திற்கு வந்து ஸ்ரீசாரதாசந்திரமவுளீதரவாமிகள் பிரசாத அனுக்கிரகம்பெற்று இப்போதிலும் அதிகமான சிரேயசை அடைவீர்கள் என்று நம்பி இந்த ஸ்ரீமுகம் எழுதிவைத்து அனுப்பலாயிற்று. விவேகிகளுக்கு என்ன எழுதவேண்டி இருக்கிறது. —ஸ்ரீபிரஸ்தாவித்தியானந்தநரதபாரதஸ்வாமி சங்கராச்சாரியூ, பு. அ. வெங்கட்டரமணம் சர்வாதிகாரி (என்று கன்னடத்தில்)

['குடிஅரசு' 2-3-1930]

படிப்பகம்

www.padippakam.com



மற்ற கவிஞர்கள் பழமை விரும்பிகள் ஆனதினால், பழமையில் பற்றுக்கொண்ட மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்றார்கள்; போற்றுகின்றார்கள். நமது முட்டாள் தனத்துக்கு உதாரணமே வள்ளுவரைப் பாராட்டுவது ஒன்றே போதுமே!

வள்ளுவர், 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றும்

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்றும் பாடியுள்ளார். எனவே, அவர் பகுத்தறிவுவாதி; யார் எதைச் சொன்னாலும் அறிவு கொண்டு ஆராய்ந்து உணரவேண்டும் என்று சொல்லி இருக்கின்றார் என்று கூறுவார்கள்.

தோழர்களே! வள்ளுவர் இப்படிக்கூறி இருந்தாலும் அது அவர் கொள்கையல்ல; ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னார், அவ்வளவுதான். மற்றபடி, அந்தப் பழைமை விரும்பியே 'உலகத்தார் உண்டென்பதை இல்லென்பான் வையத்தில் அலகையா வைக்கப் படும்' என்று கூறியுள்ளாரே! எனவே மூடநம்பிக்கை முதலியவைகளில் நம்பிக்கை உடையவரே வள்ளுவர்.

பாரதியாரை எடுத்துக்கொண்டாலோ, அவர் தாவாத கொள்கை இல்லை; கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர் நடப்பு முதலிய எல்லாவற்றையும் கூறியுள்ளார். எனவேதான் பழைமை விரும்பிகள் இவர்களை எல்லாம் போற்றுகின்றார்கள்.

பாரதிதாசன் எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்களை எடுத்துப் பாட முற்படவே இல்லை. சமுதாய மாற்றத்திற்கான கருத்துக் களைத் துணிந்து கூறிய பெரும் புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்களுக்கு எடுத்துச் சொல்லத்தக்க சாதனமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.

நமது மக்கள் இப்படிப்பட்டவருக்குப் பாராட்டும், பெருமையும் அளிக்கவேண்டிய அளவுக்கு அளிக்காதது வருந்தத் தக்கதாகும். காரணம், அவர் பகுத்தறிவுவாதி யானபடி யால் அவருடைய பணிக்குக் கிடைக்கவேண்டிய மதிப்புக் கிடைக்கவில்லை.

பாரதிதாசனைப்போன்று புதிய கருத்துக்களை எடுத்துச்சொல்லிப் பரப்ப ஆளே இல்லையே! பாரதிதாசன்போல நமது நாட்டில் புரட்சிப் புலவர்கள் தோன்றி இருந்திருப் பார்களேயானால், நமக்கு 2000, 3000 ஆண்டுகளாக இருந்துவரும் இழிதன்மை இருந்து வந்திருக்குமா?

[சிவகங்கை மன்னர் ராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில், 8-3-1973-ல் சொற்பொழிவு]

படிப்பகம்

www.padippakam.com



அறிவு சொல்ல, இவருக்கு எதில் என்ன யோக்கியதை இருக்கிறது? அயோக்கியத்தனமான பத்திரிகைகளின் ஆதரவு இருக்கிறது என்பதாலும், தன்னிடம் பத்திரிகைகள் இருக்கின்றன என்பதாலும் ஒரு மனிதன் எந்த அயோக்கியத்தனத்தையும் செய்யலாமா? செய்தாலும்—மடையனும், அயோக்கியனும், துரோகிப் பயல்களுமாக இருக்கும் மக்கள்தாம் சரி என்று சொல்வார்கள்; யோக்கியர்கள் இழித்துத்தான் கூறுவார்கள். ஏன் இவ்வளவு வேதனைப் பட்டு எழுதுகிறேன் என்றால், 'கருணாநிதி ஆட்சி விலகிவிட வேண்டும்; அல்லது விலக்கப்பட வேண்டும்' என்று அவர் சொன்னால், அப்படிச் சொல்லும் கருத்தையும் தெரிந்தால் மனம் பதறுமா, பதறாதா?

அயோக்கியத்தனத்திற்கு எல்லை இல்லையென்றால், மனித சமுதாய நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களுக்கு மனம் பதறாதா? வெடிக்காதா? என்றுதான் கூறுகிறேன். எனவே மக்களே, நீங்கள் அவற்றை மதிக்க மாட்டீர்கள் என்று இருந்தாலும் உங்கள் வெறுப்பை அவர்களுக்குக் காட்டுங்கள் என்று வேண்டி இதை முடிக்கிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—16-11-1972]

## 12. பாரதிதாசன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப்பற்றித் தெளிவாகப் பேசவேண்டுமானால் பகுத்தறிவுக் கூட்டத்தில்தான் பேசமுடியும். அப்படிக்கில்லாது கடவுள், மதம், மூடநம்பிக்கைக்கு ஆட்பட்ட இடங்களில் பேசுவதென்றால் வழவழா கொழகொழா என்றுதான் பேச வேண்டிவரும்.

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் தோன்றுகிறவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான் ஆகும்.

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்லுவதற்கு இல்லை.

நமது தமிழ்ப் புலவர்கள் வள்ளுவரைக் கூறுவார்கள்; அடுத்தது சாதிச் செல்வாக்கும் அரசியல் செல்வாக்கும் கொண்ட பாரதியாரைக் கூறுவார்கள். இவர்கள் எல்லாம் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்; பெரிதும் மக்கள் இன்று ஒத்துக்கொள்ளத் தக்கவோ, பின்பற்றத் தக்கவோ கூடிய கருத்துக்களைக் கூறவில்லை.

பாரதிதாசன் அப்படி அல்லவே; அவர் புதுமைக் கருத்துக்களையும், புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார். அவருக்கு அனுசரணையாகச் சுயமரியாதை இயக்கமும் திராவிடர் இயக்கமும் இருந்தன.

சுருங்கச் சொன்னால், அவர்போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

அவர் கடவுள், மதம், சாஸ்திரம், பெண்ணடிமை, மூடநம்பிக்கைகள் இவைகளைக் கண்டித்து நன்றாகப் பாடியுள்ளார்.

பாரதியாருக்கோ, வள்ளுவருக்கோ கொடுக்கின்ற மரியாதை நமது பாரதிதாசனுக்கு நம் மக்கள் கொடுக்கத் தவறிவிட்டார்கள். காரணம், பாரதிதாசன் புதுமைக் கவிஞர்; புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவர் என்பதால்தான்.



கவிஞர் பாரதிதாசன் அவர்களுடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



அப்போது அவருக்குள்ள தனிப்பெருமை, சமபந்தி போஜனங்களில் கலந்துகொள்வது தான். அன்றைக்கு (50, 60 ஆண்டுகளுக்குமுன்) அது பெரிய யோக்கியதாம்சமாக இருந்தது. மேற்கண்ட தன்மைகளால் எங்களுக்குள் நட்புரிமை வளர்ந்தது. அரசியலில் காங்கிரசிலும் கலந்தோம்; அவரிஷ்டப்படி காங்கிரசுக்கு அவரைப்போலவே முழு நேரத் தொண்டனானேன்; பிறகு இருவரும் அத்தியந்த நண்பர்களானோம்; அனேக இரகசியங்களைத் தைரியமாய் மனம்விட்டுப் பேசிக்கொள்வோம். இருவரும் சேர்ந்து காந்தியாரின் முட்டாள்தனங்களையும், பித்தலாட்டங்களையும்பற்றிப் பேசுவோம். காந்தியார் புத்திசாலித் தன்மையையும், இராஜாஜியின் புத்திசாலித் தன்மையையும்பற்றி சங்கோஜம் இல்லாமல், பயம் இல்லாமல் அவரும் நானும் பேசுவோம்.

அவர் என்னைப்பற்றி, 'அதிசயமான யோக்கியர்' என்று கருதிப் பேசி இருக்கிறார். நானும் அவரைப் பற்றி, 'என் ஆயுள் உள்ளவரையிலும் அவரைத் தலைவராகக்கொண்டு நடப்பது' என்றும் முடிவு பண்ணிக்கொண்டு பேசி இருக்கிறேன். ஜனங்களும் பெரிதும் அவரை அப்படிக் கருதினார்கள். சர்.பி. தியாகராசச் செட்டியாரே, 'பார்ப்பனர் எல்லோரும் இராஜகோபாலாச்சாரியார்போல் இருந்தால், பார்ப்பனர் அல்லாதார் இயக்கமே தேவையில்லை' என்று பேசியிருக்கிறார். அவர் வேஷத்திற்காக அப்படி நடக்கவில்லை; நானும் உண்மையாகவேதான் நடந்துகொண்டேன்.

பிறகு எங்களுக்கு உண்மையாகவே சாதி அபிமானம் ஏற்பட்டுவிட்டது, அவர், பார்ப்பனர் நன்மையையே எல்லாக் காரியத்திலும் பேச்சிலும் கருத்தாய்க் கொண்டார்; நானும் பார்ப்பனரல்லாதார் நன்மையையே கருத்தாய்க் கொண்டு நடந்துவந்தேன். இந்த எங்கள் இருவரின் கருத்துக்கள்தான் நம் நாட்டின் அரசியல், சமுதாயஇயல் —தத்துவமாக, தொண்டாக, கட்சியாக, மக்கள் கடமையாக நடந்துவருகின்றன. இதில் நியாயம், மறுக்கக்கூடாத தன்மை நம்மிடமிருப்பதால், இராஜாஜி ஓர் அடாவடிப் போக்கில் நடந்துகொள்கிறார். இந்த நடப்புக்குத்தான் இராஜாஜி சகலத்தையும் பரித் தியாகம் செய்ய வேண்டியவராகி விட்டார். எப்படி என்றால், நாடகத்தில்—ஒரு விபசாரி (தாசி) பதிவிரதை வேடம் போட்டால் ஒரு குடும்பப் பெண் எப்படி நடந்துகொள்வாளோ—அதுபோல் தனது இலட்சியத்தில் நடந்துகொள்கிறார். இதில் அவருக்கு வெட்கமோ, அவமானமோ, பழிக்கு ஆளாகவேண்டிய தன்மையோ ஏற்பட அவசியமோ இல்லை. என்ன செய்தாவது நம்மை ஒழிக்க வேண்டியதுதான் அவரது தலையாய கடமை.

ஆகவே, இராஜாஜிக்கு என்னதான் 'புகழ்' இருந்தாலும், அவரைப் பெரியவர் என்று நாம் கருதினால்—பிறர் கருத இடங்கொடுத்தால் நமக்கு அழிவு நெருங்கிவிடும்.

['விடுதலை'-தலையங்கம்—15-11-1972]

இராஜாஜி—காங்கிரஸ் ஆட்சியில், பொதுமக்கள் 100 க்கு 7 பேர் படித்திருக்கும் நாட்டில், சுமார் 6000 பள்ளிக்கூடம் உள்ள நாட்டில் 2200 பள்ளிகளை மூடின யோக்கியர் தான் இவர்! 1952-ல் மெஜாரிட்டி இல்லாமல் பதவியில் வந்து உட்கார்ந்துகொண்டு 100-க்கு 15 பேர் படித்திருக்கும் நாடான நம் நாட்டில் 12,000 பள்ளிகள் இருந்ததில் 6000 பள்ளிகளை மூடி—அதுவும், 'மாணவர்கள் ஒரு வேளைதான் படிக்க வேண்டும்; மறு வேளை சாதித்தொழில் செய்யவேண்டும்' என்று உத்தரவு போட்டு, அதனால் அரசியல் வாழ்விலிருந்தே வெளியேற்றப்பட்டவர்தானே இவர்!

இவரது அரசியல் நாணயத்தை எடுத்துக்கொண்டாலும், 'மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கமாட்டோம்' என்று கட்சிக் கொள்கையைச் செய்துகொண்டு—அதனால் பதவிக்கு வந்து, மாதம் 20,000 ரூபாய் சம்பளம் வாங்கிப். பல இலட்ச ரூபாய் சொத்துக்காரராக இருக்கும் தியாகிதானே இவர்! இவர் அரசியல், சமுதாய வாழ்வில் எதில் நேர்மையாய், யோக்கியமாய் நடந்துகொண்டிருக்கிறார்? இவர் வந்து பொதுமக்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



நமது 'குடிஅரசு' ஏட்டில் என்னென்ன கருத்துக்கள் வருமோ அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார். நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டிவந்தேன்.

நமது 'குடி அரசி'ல் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர்களே அவரை உணர்ந்தார்கள்.

டாக்டர் அம்பேத்கார் ஆரம்பத்தில் இந்து மதத்தை ஏதாவது திருத்தலாமா என்று எண்ணினார்; பிறகு அதனைத் திருத்தமுடியாது—அதனை ஒழித்தால் ஒழிய வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

[சென்னையில், 29-5-1972-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-6-1972]

## 11. இராஜாஜி

நாட்டில் அரசியலில் ஆகட்டும், பொது வாழ்வில் ஆகட்டும் (பெருவாரி மக்களால் பாராட்டப்படும்) பெரிய மனிதர் என்பதற்கு ஒரு நபர் கூட இல்லாமல் போய்விட்டார்கள்! இந்த நிலைமையை நாட்டின் பொதுவளர்ச்சிக்கு ஒரு உதாரணம் என்று சொல்லலாம். என்றாலும், அரசியல் வாழ்வில் நமது நாட்டில் பெரியவராகத் தன்னைக் காட்டிக் கொண்டும், தனது இன மக்களால் விளம்பரம் செய்யப்பட்டுக்கொண்டும் இருக்கும் பெரியவர் உயர்திரு. இராஜாஜி (இராஜகோபாலாச்சாரியார்) அவர்கள் ஒரு பெரியவர் என்பதாக இருந்து வருகிறார். அவரைத் தவிர்த்து மற்றொரு விரலை நீட்ட நபரே இல்லை என்று சொல்லுகிறார்கள்.

என்றாலும், அவரை ஒரு பெரிய மனிதன் என்று சொல்லுவதற்கு, அவருடைய வயதைத் தவிர வேறு ஏதாவது தன்மை இருக்கிறதா என்றால் ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். என்றாலும், அவரிடம் பொதுத் தொண்டு என்பதாக நேர்மையான தொண்டோ, குணமோ, தன்மையோ எதுவுமில்லை. அவரும் அதைப் பற்றி இலட்சியம் செய்யவில்லை.

அவரிடமிருக்கும் தொண்டின் தன்மையெல்லாம்—முதலாவது அவருடைய சமுதாய எதிரிகளை ஒழிக்கவேண்டும்; தமது சமுதாயம் ஒன்றே உயர் நிலையில் வாழவேண்டும் என்ற தன்மையையுடைய தொண்டு ஒன்றுதான் அவரிடம் இருக்கின்றது. இதற்காக அவர் செய்திருக்கும் தியாகம் மகத்தானது. என்னவென்றால் உண்மை, யோக்கியம், நேர்மை, நாணயம், மானம் முதலிய உயிர்போன்ற அருங் குணங்களை எல்லாம் வெகு எளிதில் தியாகம் செய்து விட்டார்.

தன்னைப்பற்றி மக்கள் என்ன சொல்லுகின்றார்கள்; எப்படிக் கருதுகின்றார்கள் என்பது பற்றி இலட்சியம் செய்வது என்பதைச் சிந்திப்பதையே அடியோடு தியாகம் செய்துவிட்டார். இந்தத் தியாகம் சுயநலத்திற்காகவே அல்ல; தமது சமுதாயத்திற்காகவே ஆகும். என்றாலும், செல்வத்தைச் சேர்ப்பதில் மாத்திரம் வெகு பிடிமானமாக இருந்து வளர்ந்துகொண்டே வருகிறார். இந்த இலட்சணத்தோடு இப்போது அவரது தொண்டெல்லாம்—அவரது சமுதாயத்தின் எதிரிகளாகிய நமது சமுதாயத்தை அழித்து ஒழித்துக் கட்டுவது என்பதுதான். இந்தக் காரியத்திற்கு இன்றைய நிலையில் மேற்கண்ட தியாகங்களை எல்லாம் செய்தாக வேண்டும் என்பதாகக் கருதி, துணிந்து செய்துவிட முனைந்து இருக்கிறார்.

எனக்கு அவரைச் சற்றேறக்குறைய 1910-லிருந்தே தெரியும். 1917-ல் நான் ஈரோடு முனிசிபல் சேர்மன்; அவர் சேலத்தில் சேர்மன். அதற்கு முன்னால் அவர் வக்கீலாக இருக்கும்போது முதலே சமுதாய சம்பந்தமான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசுவார்.


C. RAJAGOPALACHARI

60. BAZLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS-17

11 8.64

'விடுதலை'யும் பெரியாரும் என் அன்பார்ந்த எதிரிகள்! என் நண்பரின் 86-ம் ஆண்டு பிறந்த நாளன்று என் வாழ்த்துக்களை பெரியார் அன்புடன் பெற்றுக் கொள்வார்களாக

படிப்பகம்

www.padippakam.com



இன்னும், தோழர் அம்பேத்கார் அவர்களின் தைரியத்துக்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இலண்டனில் காந்தியார், 'நான் இந்திய மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன்' என்று சொன்னபோது, 'நீங்கள் எங்கள் இனத்தின் பிரதிநிதியல்ல' என்று அம்பேத்தார் அவர்கள் சொன்னார். காந்தியார் திரும்பவும், 'இந்திய மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன்' என்று சொன்னவுடன், அம்பேத்கார் அவர்கள், 'பத்துத் தடவை சொல்லுகிறேன், நீங்கள் எங்கள் பிரதிநிதி அல்ல என்று; திரும்பத்திரும்ப வெட்கமில்லாமல் பிரதிநிதி என்று சொல்லுகிறீர்கள்; நீங்கள் உங்களுடைய மகாத்மா பட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள்' என்பதாகச் சொன்னார். காந்தியார் பேசாமல் உட்கார்ந்துவிட்டார். பின்பு, இந்நாட்டுப் பத்திரிகைகள் அம்பேத்காரைக் கண்டபடி தாக்கின. ஆனால், அவர் ஏதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அவருடைய தைரியத்திற்கு இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். அவர் மந்திரியாக இருக்கும்போது ஒருதடவை சென்னைக்கு வந்திருந்தார். அப்போது ஒரு கூட்டத்தில் பேசும்போது, 'கீதை-முட்டாள்களின் பிதற்றல்' என்று சொன்னார். கீதைக்கு இந்த நாட்டில் எவ்வளவு விளம்பரம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். காந்தியாரிலிருந்து, ஆச்சாரியாரிலிருந்து—பெரிய பெரிய அய்கோர்ட் ஜட்ஜுகள், இன்னும் பெரிய மனிதர்கள் என்பவர்களெல்லாம் கீதையைப் புகழ்வதே வேலையாகக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; கீதைக்கு வியாக்கியானம் கூறுவது, கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது என்பது ஒரு மதிப்பு, கவுரவம் என்பதாக இந்த நாட்டில் இருக்கிறது. அப்படிப்பட்ட பெரும் விளம்பரமான நிலையிலிருக்கிற கீதையை, 'முட்டாள்களின் பிதற்றல்' என்று அம்பேத்கார் சொன்னார். முட்டாள்களுடையது என்றாலே மோசம்; அதிலும் அந்த முட்டாள்களுடைய பிதற்றல் என்று கீதையை மிகவும் இழிவுபடுத்திக் கூறினார். யார்யாரை இதுபோய்ப் பாதிக்கிறது பாருங்கள்! அவர் அந்தப்படி பேசியபின் பார்ப்பனப் பத்திரிகைகள் அவருடைய பேச்சுக்கு மறுப்பு ஒன்றும் சொல்லாமல், 'ஒரு மந்திரியாய் இருப்பவர் இப்படியெல்லாம் பேசலாமா?' என்று எழுதின. அவ்வளவு தான் அவைகளால் முடியுமே தவிர, அவர் சொல்லுவதை எப்படி எந்த ஆதாரத்தின்மீது மறுக்கமுடியும்?

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இப்போது கொஞ்ச நாட்களாக பவுத்தக் கொள்கையில் சேரப்போவதாகச் சொல்லிவருகிறார். உண்மையில் பவுத்தம் ஒரு உயர்ந்த மார்க்கமாகும். அது ஆரியத்தை—அதன் கலாச்சாரத்தைக் கண்டிப்பதற்கு என்றே எழுந்ததாகும். ஆரியத்தின் சாதிப்பிரிவையும், வேத, புராண, இதிகாசத்தைப்பற்றியும் பவுத்தம் கண்டிக்கிறது; அவைகளை ஒத்துக்கொள்வதில்லை. அதே மாதிரி, பவுத்தம் கடவுள் என்பதாக ஒன்றைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அதுபோலவேதான் 'ஆத்மா' என்பதாக ஒன்று இல்லை என்று சொல்லி, 'ஆத்மா'வை மறுத்திருக்கிறது.

அம்பேத்கார் பவுத்தத்தில் சேருகிறேன் என்று சொன்னவுடன், எப்போதும் போலப் பலர் எதிர்த்தார்கள். ஆனாலும், இஸ்லாம் ஆவது என்றால் பயப்படுகிற அளவுக்கு பவுத்தர் ஆகிவிடுவது என்று சொல்லுவதற்கு, இந்துமதத்தார்கள் (பார்ப்பனர்கள்) பயப்பட மாட்டார்கள். ஏனென்றால், பவுத்தத்தை இந்துமதத்தோடு ஏறக்குறையக் கலரவைத்து விட்டார்கள்.

[சென்னையில், 13-5-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-5-1952]

தலைவரவர்களே! தோழர்களே!

மறைந்த பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் அவர்களும் நானும் நெடுநாட்களாக நண்பர்கள் என்பது மாத்திரமல்ல; பல விஷயங்களில் எனது கருத்தும் அவரது கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.



சாதி ஒழிப்பு என்ற விஷயத்தில் மாத்திரமே நாங்கள் ஒத்த கருத்துடையவர்கள் என்பது அல்ல. இந்துமதம், இந்து சாஸ்திரங்கள், இந்துக் கடவுள்கள், தேவர்கள் என்பவர்கள்பற்றிய—இந்துமதப் புராணங்கள் இவைகளைக் குறித்தும்கூட எங்கள் இரண்டு பேர்களின் கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அதுமட்டுமல்ல, அவைகளைப் பற்றி நான் எவ்வளவு உறுதியாகவும் பலமாகவும் எனது அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறேனோ அவ்வாறுதான் அவரும் மிகவும் உறுதியாகவும் பலமாகவும் இலட்சியங்களைக் கடைப்பிடித்தார். உதாரணமாக, பார்ப்பனர் போற்றிப் பிரச்சாரம் செய்யும் கீதை என்பதை, 'முட்டாளின் உளறல்' என்று சொன்னவர் டாக்டர் அம்பேத்கார்!

இப்படிச் சில விஷயங்களில் மாத்திரமல்ல; பல விஷயங்களில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாரோ அதே அபிப்பிராயம்தான் எனக்கும் இருந்துவந்தது. பல விஷயங்களில் நாங்கள் ஒருவருக்கொருவர் கலந்துகொள்ளாமலேயே—அந்தப்படி அபிப்பிராயம் கொண்டவர்களாக இருந்துவந்தோம். சந்தர்ப்பம் கிடைத்த போது நானும் அவரும் எங்கள் இருவருடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக்கொள்வதும் உண்டு.

உதாரணமாக, பர்மாவில் நடந்த உலக பவுத்தர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள நாங்கள் போயிருந்தபோது அம்பேத்கார் அவர்கள் என்னைப் பார்த்து, 'என்ன இராமசாமி, நாம் இப்படிப் பேசிக்கொண்டே இருப்பதால் என்ன பலன் ஏற்படமுடியும்? வாருங்கள், நாம் இரண்டு பேரும் புத்தமதத்தில் சேர்ந்துவிடுவோம்!' என்றார். நான் சொன்னேன், 'ரொம்ப சரி; இப்போது முதலில் நீங்கள் சேருங்கள்; நான் இப்போது சேருவது என்பது அவ்வளவு ஏற்றதல்ல. ஏனென்றால், தமிழ்நாட்டில் நான் இப்போது சாதி ஒழிப்பைப்பற்றித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்துவருகிறேன். இந்துக் கடவுள்கள் எனப்படும் விநாயகர், இராமன் சிலைகளை உடைத்தும், படங்களை எரித்தும், இந்து மதத்திலுள்ள பல விஷயங்களைப்பற்றியும் மக்களிடம் எடுத்துச்சொல்லி இப்போது பிரச்சாரம் செய்வதுபோல் அப்புறம் நான் செய்யமுடியாது; ஒரு இந்துவாக இருந்து கொண்டு இப்படிப் பேசுவதனால் என்னை யாரும், 'நீ அதைச் சொல்லக்கூடாது' என்று தடுக்க உரிமை கிடையாது. ஆனால், நான் 'இன்னொரு மதக்காரனாக' இருந்தால் அப்படிப்பட்ட வசதி எனக்கு இருக்கமுடியாது. ஆகவே, நான் வெளியிலிருந்து கொண்டு புத்த மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்துவருகிறேன்' என்பதாகச் சொன்னேன்.

என் பிரச்சாரத்தில் சாதி ஒழியவேண்டுமென்று மாத்திரம் நான் சொல்லிவரவில்லை. அதற்கு முக்கிய அடிப்படையான சாதி, மதம்—ஆதாரம் ஒழியவேண்டும் என்றுதான் நானும் சொல்லி வருகிறேன்; அவரும் அப்படித்தான் சொன்னார்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் புத்த மார்க்கத்தில் சேரும்போது என்னென்ன பிரமாணம் எடுத்துப் படித்தாரோ, [இராமனையும், கிருஷ்ணனையும் கடவுள்களாக வணங்க மாட்டேன் என்பன போன்றவைகள்] அவைகளைத்தான் நான் கூறுகிறேன். அதன்படி தான் எங்கள் நாட்டில் பத்தாயிரக்கணக்கான மக்கள் இராமனையும் பிள்ளையாரையும் கொளுத்தினார்கள்; உடைத்தார்கள். இந்தப் பிரமாணத்தில் உள்ள பல விஷயங்கள் எனக்குப் பல வருடங்களுக்கு முன்பே தோன்றித்தான், அவைகளை நாங்கள் பிரச்சாரமாகச் செய்து வருகிறோம். இதைப் படித்துவிட்டு நான் சொல்லவில்லை. எப்படியோ எங்களுக்கு அப்படித்தான் அபிப்பிராயம் தோன்றியது.

[டெல்லி பகார்கஞ்சில், 15-2-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1959]

டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது.

இன்றுமட்டுமல்ல; முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும்.

படிப்பகம்

www.padippakam.com



படுகிறார்கள் என்றும், காங்கிரஸ் ஆட்சியில் தம் மக்களுக்குப் பள்ளிக்கூடங்களில் படிக்க இடம் கிடைப்பதுகூடக் கஷ்டமாக இருக்கிறதென்றும் கூறினார்கள். அதைக் கேட்ட காந்தியார் கூறிய பதிலில்தான், நான் கூறிய மனமாற்றம் இருக்கிறது.

கவனித்துப் பாருங்கள் : 'என்னருமை பிராமணத் தோழர்களே! நீங்கள் கடவுளோடு நேர்தொடர்பு வைத்துக் கொண்டுள்ளவர்களாயிற்றே! அதிலும் மகா புத்திசாலிகளாயிற்றே! அப்படியிருக்க, உங்களுக்கு எதற்குப் படிப்பு வேண்டும்? கடவுளை நம்பி, சதா கடவுள் பணிசெய்து கொண்டிருங்களேன்! படியாத முட்டாள்களான அவர்களுக்குத் (திராவிடர்களுக்கு) தானே படிப்பு அவசியம்; அவர்கள் படிக்கட்டுமே! உங்கள் பிள்ளைகளுக்கு இடமில்லாமற் போனால் வருத்தப்படாதீர்கள். உங்கள் விகிதாச்சார இடங்களைக்கூட தாழ்த்தப்பட்டவர்களுக்காக விட்டுக்கொடுத்து உதவுங்கள்' என்று அவர் கூறினார். இதைத்தானே நாமும் இன்றுவரை கூறிவந்தோம்.

எனவேதான், அவரது மறைவால் நாம் வருத்தப்பட நேரிட்டதே ஒழிய, அவரது பேரைச் சொல்லி உங்களது நன்மதிப்பைப் பெறுவதற்காக அல்ல என்பதை உங்களுக்குத் தெளிவுபடுத்தவே இவ்வளவும் கூற நேரிட்டது.

[சிதம்பரத்தில், 29–9–1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-10-1948]

## 9. காந்தியே காரணம்

தோழர்களே!

காந்திதான் நமது நாட்டை வடநாட்டானுக்கும் பார்ப்பானுக்கும் ஒப்படைத்து, நம்மை அடிமையாக்கியதற்குக் காரணம். சாதி ஒழிப்புக்கு சாஸ்திரம் புராணம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுபோல—நாட்டுப் பிரிவினைக்குக் காந்தி ஒழிய வேண்டும்.

நம் மக்களும் மற்ற மக்களும் பாடுபட்டு மக்கள் பலம் ஏற்பட்ட பிறகும், வெள்ளைக்காரன் தன் அவசியத்தை முன்னிட்டும் போகவேண்டிய நிர்ப்பந்தம் வந்ததால், காந்தி கையில் நாட்டைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

நாங்கள் அந்தக் காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்சி 'ரெககனைஸ்டு பார்ட்டி' என்பது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். சட்டசபை, பார்லிமெண்ட் வரை திறமை, நாணயம் நன்றாகத் தெரியும்.

இந்த ஒரு நாட்டை முன்னிட்டு அவர்கள் பிரிவினை செய்தால், அவர்களுக்கு மேலும் பல நாட்டுத் தொல்லை வந்து சேரும். அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது மாத்திரமல்ல, தங்கள் காரியமும் ஆகவேண்டும் என்ற நிலை இருந்தது. அதற்குப் பல பேர்களிடம் ஒப்படைத்தால் தங்கள் காரியம் ஆகாது என்று எண்ணினார்கள், வெள்ளையர்கள்.

ஆகவே, தங்களுக்கு ஒப்பந்தமாக இருந்து, தங்கள் நாட்டுக்கு வேண்டிய காரியங்களை முடித்துக்கொள்ள ஒரே ஆளாக இருந்தால் நல்லது என்று எண்ணினார்கள். அதற்கு, இந்த காந்திதான் உதவியாக இருந்தார். ஆகவே, அவரிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள், வெள்ளையர்கள்.

இப்போது ஒவ்வொரு அன்னிய நாட்டானுக்கும் சுரண்டுவதற்கு ஒவ்வொரு நாடு வேண்டியதாக இருக்கிறது. இதில் ஒன்றும் இரகசியமில்லை. இன்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வேண்டியவன்; இந்தியாவுக்கு பிரிட்டன் அந்தரங்கத்தில் நண்பன்.

தங்கள் ஏகாதிபத்தியத்திற்கு ஆபத்து வந்துவிடாமல் இருக்கவே வெள்ளைக்காரர்கள் காந்தியிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு அவரிடம் நாட்டை ஒப்படைத்தார்கள்.

ஒப்படைக்கும்போது நீதி சொல்லிவிட்டு—அதாவது இன்னின்ன மாதிரி சட்டம் செய்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.



அவர்கள் போகிறவரையில் ஆமாம் போட்டுவிட்டு—அவர்கள் போனதும், உடனே வடநாட்டுக்குச் சாதகமாக அரசியல் சட்டம் செய்துகொண்டுவிட்டார்கள்.

காந்திக்குச் செலவுக்குப் பணம் கொடுத்தவன் வடநாட்டான்; மனிதனுக்கு மேற்பட்ட தெய்வீக சக்தியுடையவர் என்று விளம்பரம் செய்தவன் பார்ப்பான். ஆகவே, அவர்கள் இருவருக்கும் எது சரியோ அந்தப்படி நடக்க காந்தி ஒப்புக்கொண்டுவிட்டார்.

[சேலத்தில், 18-8-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-8-1957]

## 10. டாக்டர் அம்பேத்கார்

தலைவரவர்களே! தோழர்களே!

1925ஆம் வருஷத்திலே இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல; மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்துவந்திருக்கிறது என்பதால். ஆனால், வடநாட்டில் அப்படியல்ல.

வடநாட்டில் இருக்கிற இந்த பேதத்தைப்பற்றி, இழிசாதித் தன்மையைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. சூத்திரன், பஞ்சமன் என்றால் ஏதோ 'திவான் பகதூர்', 'ராவ்பகதூர்' பட்டம் என்பது போன்ற பட்டம் என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிற மக்கள் வாழும் நாடு அது. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால் கடினமான காரியமாகும். ஆனால், அங்கேயே 1927, 1928-லேயே அம்பேத்கார் சுயமரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார். நாசிக்கில் கூடிய ஒரு மாநாட்டிலே இராமாயணத்தைப் போட்டுக் கொளுத்தியிருக்கிறார். 1930-லே என்று நினைக்கிறேன்—'தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்திலே இருப்பது தவறு; இந்து மதந்தான் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக்கியது' என்பதாகச் சொல்லி, 'அனைவரும் முஸ்லிம் ஆகவேண்டும்; நானும் முஸ்லிம் ஆகப்போகிறேன்' என்று அவர் சொன்னார். எவ்வளவோ பெரிய பெரிய ஆட்களெல்லாம் அதைக் கண்டித்தார்கள். மாளவியா, விஜயராகவாச்சாரியார் போன்றவர்களெல்லாம், 'அம்பேத்கார் அவர்களே, உங்களுடைய முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள்' என்பதாகத் தந்தி கொடுத்தார்கள்.

அப்போது தோழர் அம்பேத்கார் அவர்களுக்கு நானும் ஒரு தந்தி கொடுத்தேன். என்னவென்றால், 'நீங்கள் ஒண்டியாகப் (தனியாகப்) போகக்கூடாது; குறைந்தது ஓர் இலட்சம் பேரோடு மதம் மாறவேண்டும்; அப்போதுதான் முஸ்லிமும் மதிப்பான். இல்லாவிட்டால், தனியாக அங்கு போனால் அவனும் நம்மைக் கவனிக்கமாட்டான். உங்கள் தாழ்த்தப்பட்ட இனம் நசுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கும். முஸ்லிம் ஆகிவிட்டால் இந்துமதத்தின் இழிவுபற்றி நீங்கள் பேசினால், 'முஸ்லிம் இந்துமதத்தைப்பற்றிப் பேசுவதா?' என்பதாகக் கிளப்பிவிடுவார்கள். ஆகையால், ஒரு இலட்சம் பேரோடு தாங்கள் போகும்போது நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்' என்பதாகத் தந்தி கொடுத்தேன்.

அதற்கப்புறந்தானே—பயந்துகொண்டு, ஆதித் திராவிட மக்களுக்கு காங்கிரஸ்காரர்களும் ஏதோ நன்மை செய்வதாக வந்தார்கள்! 'மதம் மாறுவேன்' என்று மிரட்டிய தோழர் அம்பேத்கார் அவர்கள் ஆதித் திராவிட மக்களுக்குப் பெரும் அளவுக்கு நன்மை செய்து கொடுத்திருக்கிறார். உள்ளபடி சொல்லுகிறேன், இந்துக்கள் யாரிடமாவது வசமாக மாட்டினார்கள் என்றால், அது தோழர் ஜின்னா அவர்களிடமும், தோழர் அம்பேத்கார் அவர்களிடமும்தான். தோழர் ஜின்னாவிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டார்கள்; ஆனால் அம்பேத்காரிடமிருந்து விடுதலை பெறமுடியவில்லை; அவர் அடிக்கடி ஓங்கி அடித்துக் கொண்டேயிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



ஆளாக நேரிடும். பின்னை ஏன் சொல்லுகின்றேன் என்றால், என்னைப் போலவே காந்தியாரும் தாம் ஒரு 'சூத்திரன்' என்பதை நன்றாய் உணர்ந்து கொண்டார்; இந்து மதம் திருத்த்முடியாதது என்பதையும் உணர்ந்து கொண்டார். இந்தியா, இந்தியர், இந்து மதம் என்பதாக ஒன்று இல்லை என்றும்; சிந்து நதியால் இந்தப் பெயர் ஏற்பட்டதென்றும்; இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குக் கேடாக இருப்பது மத உணர்ச்சியே என்றும்; தீண்டாமை, அரிஜனன் என்பது இந்துமத உணர்ச்சி உள்ளவரை மாற்றமடைய முடியாதது என்றும்; ஒரே கடவுள்தான் உண்டு—அதுதான் அல்லா, 'காட்' (God) ராம் என்றும்; குரான் இந்துக்கள் படிப்பதற்குரியதென்றும், அதைப் பாராயணம் செய்ய வேண்டுமென்றும்; இந்துக்கள் முஸ்லிம்களுக்கு மிக்க தீங்கு இழைத்துவிட்டார்கள் என்றும்; அவற்றைப் பரிகரிக்காமல் மேலால் ஒரு காரியம் செய்யத் தன்னால் அனுமதிக்க முடியாதென்றும் பச்சையாகக் கூற ஆரம்பித்து விட்டார்.

பார்ப்பனர்களின் உண்மையான தன்மையை நன்றாய் அறிந்து கொண்டார். தன் பெயரைச் சொல்லிப் பதவிக்கு வந்தவர்களையும், அவர்களின் அக்கிரமங்களை, கொள்ளையை, ஒழுக்க ஈனமான—நாணய ஈனமான காரியங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தான் பல தவறுகள் செய்துவிட்டதாகவும், அவற்றிற்குப் பரிகாரம் செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்றும் கருதிப் பரிகாரத்தில் பிரவேசித்தார். அப் பரிகாரமானது அவரால் நடைபெற்றே தீரும். அப்பொழுது திராவிடர் கழகக் கொள்கையும், திட்டமும்தான் இந்தியா முழுவதற்கும் ஏற்படவேண்டியதாகும். நமக்கும் சட்டப்படி, சாஸ்திரப்படி, மதப்படி—சூத்திரப் பட்டம் ஒழியும்; நம் நாடும் பிரிந்து நமக்குக் கிடைக்கும்; இதில் சந்தேகமில்லை. காந்தியார் திடீரென்று தமது பழைய கருத்துக்களிலிருந்து இப்படித் திரும்பியதற்குக் காரணம், பார்ப்பனர் தன்மையும், தனது முக்கிய சிஷ்யர்கள் யோக்கியதையும் அவருக்கு நன்றாய் விளங்கிவிட்டதுதான்.

அன்றியும், 'இந்துக்கள் யாவரும் குரான் படியுங்கள்' என்றதிலிருந்தும், தானும் குரான் படித்துக்கொண்டு 'ராம்—ரஹீம்' (அல்லாஹ்) பஜனை செய்ததிலிருந்தும், மற்றவர்களையும் செய்யச் செய்ததிலிருந்தும்—சாதிமத சம்பந்தமாக அவர் அடைந்த மாற்றத்திற்கு அளவு காட்ட வேண்டுமா என்று கேட்கிறேன்.

தவிரவும், காந்தியார் விக்கிரக ஆராதனைக்கு மாத்திரம் குறை சொல்லாமல், கடவுள் என்பதை மனித உருவாக, வஸ்துவாக, ஒரு தனிப் பொருளாகக் கற்பித்துக்கொண்டு இருக்கிறவர்களுக்குப் படும்படியாக, 'எனக்கு, கடவுள் ஒரு வஸ்துவாக—தனிப்பட்ட பண்டமாக இருக்கிறது என்பதில் நம்பிக்கையில்லை' ('I have no belief in personal God') என்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சொல்லிவிட்டார். அதாவது, கடவுள் என்பதை நான் ஒரு செயலாக, சக்தியாகக் கருதுகிறேனே ஒழிய, ஒரு மனிதன் செய்கை போலவோ, ஒரு ஜீவன் செய்கை போலவோ கருதவில்லை என்பதாகச் சொல்லிவிட்டார். இதற்கு, 'இயற்கை நடப்புதான் கடவுள்' என்பது பொருளாகும். இந்த எண்ணம் அணு அளவாவது மக்களுக்குள் வருமேயானால் கோவில், விக்கிரகம், உண்டைக் கட்டி, படையல்; அவைகளுக்குக் கலியாணம், உற்சவம் முதலியதான வழிகளில் பார்ப்பனர் பணம் பறிக்கும் தந்திரமும், சோம்பேறி வாழ்வும் அடியோடு நின்றுவிடும்; அப்புறம் 'மேல் உலக—கீழ் உலக'ப் பித்தலாட்டங்களும், அவற்றால் பார்ப்பனர்களுக்கு ஏற்படும் கொள்ளை வருவாய்களும் ஒழிந்துவிடும். சுருக்கமாகச் சொன்னால், பார்ப்பனீயமே பட்டு அழிந்துவிடும். ஆகவே, நமக்கு மாத்திரம் அல்லாமல் 'இந்திய நாடு' முழுவதுமே சமய, சமுதாயத் துறையில் ஏற்பட இருந்த புரட்சிகரமான அனேக மாறுதல்கள்தான் காந்தியார் பார்ப்பனரால் கொலை செய்யப்பட நேர்ந்ததற்குக் காரணம். அப்படிப்பட்ட மாறுதலை விரும்பும் நாம் அதற்காக மிகமிகத் துக்கமும் துயரமும் அடைகிறோம்.

[தூத்துக்குடியில், 8, 9-5-1948-ல் நடந்த 18-வது மாகாண தி. க. மாநாட்டில் தலைமை உரை—
'குடி அரசு' 15-5-1948]



# 8. காந்தியார் மாற்றமும், கொலையும்

தோழர்களே!

சுதந்திரம் வந்துவிட்டதாக விளம்பரப்படுத்தப்பட்டு வெள்ளையனும் போய்விட்டதாகக் கூறப்பட்ட அந்தத் தினத்திலிருந்து, காந்தியாரின் எண்ணங்களில் பல குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டுவந்ததை நான் கண்டேன். காங்கிரஸ்காரர்கள் விரும்பியபடி சுயராஜ்யம் கிடைக்குமானால், நம் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் என்னென்ன கேடுகள் விளையக்கூடும் என்று நான் இடைவிடாது கூறிவந்தேனோ, அக் கேடுகள் விளைய நேரிட்டதை உணர்ந்து, காந்தியார் அதை ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார்; அக் கேடுகளையும் அனுபவிக்க ஆரம்பித்தார்; அவசரப்பட்டு சுயராஜ்யம் கேட்டது எங்கு ஆபத்தாக முடியுமோ என்று கவலைகொள்ள ஆரம்பித்தார்; தமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று தாம் கருதிவந்தவர்களில் பெரும்பாலோரைப் பற்றி, நான் என்ன மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தேனோ அதேபோல அவரும், அவர்களைப் பற்றிக்கொள்ள ஆரம்பித்தார்; சுருங்கக் கூறவேண்டுமானால், உண்மையை உணர ஆரம்பித்தார்; தாம் செய்த பல தவறுகளை உணர ஆரம்பித்தார்; அத் தவறுதல்களைத் திருத்திக்கொள்ளவும் ஆரம்பித்தார் என்று கூறலாம்.

அத் திருத்தங்களைச் செய்யப் புகுந் தறுவாயில், தமது எண்ணங்களுக்கேற்பச் செயலாற்ற முற்பட்ட தறுவாயில், அவரது முற்போக்கு எண்ணங்களால் தமக்குக் கேடு சூழும் என்று அஞ்சிய சுயநல சோம்பேறிக் கூட்டத்தாரால் கொலை செய்யப்பட்டார். இதுதான் நமக்கு மனவேதனையாக இருக்கிறது. அப்படிப்பட்ட துர்மரணத்திற்கு மட்டும் அவர் ஆளாகாமல் இருந்திருப்பாரேயானால், இதற்குள்ளாக இந்நாட்டில் எத்தனையோ புரட்சிகரமான காரியங்களை அவர் செய்து இருப்பார். இன்று ஏற்பட்டுள்ள கொள்ளைகள், கொடுமைகள், பல அட்டூழியங்கள், அநீதிகள் இவற்றையெல்லாம் நிறுத்தியிருப்பார்; அல்லது, அடியோடு நிறுத்த முடியாவிட்டாலும், இவற்றிற்கெல்லாம் சரியான பரிகாரமாவது தேடியிருப்பார். குற்றம் பல கண்டதால் காங்கிரஸின் அமைப்பு முறையையே மாற்றியமைக்க ஆரம்பித்தார். நமது கொள்கைகளை நேர்முகமாக ஆதரிக்காவிட்டாலும், மறைமுகமாகவாவது ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார்; அதுவும், மறுபடியும் நான் அவருடைய சிஷ்யனாக ஆக வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் ஆசை கொள்ளும் அளவுக்கு ஆதரிக்க ஆரம்பித்தார். அப்படி நான் ஏங்கியிருந்த சந்தர்ப்பத்தில் அவர் கொல்லப்பட நேர்ந்ததுதான் எனக்கு அளவிடற்கரிய துக்கம் உண்டாகக் காரணமாயமைந்தது.

அவர் நமது கொள்கையை ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார் என்பதற்குப் பல காரணங்கள் காட்டமுடியும் என்றாலும், உதாரணமாக ஒன்றிரண்டு காரணங்களை மட்டும் இங்கு கூற ஆசைப்படுகிறேன். 'காங்கிரஸ்காரர்கள் தமது தியாகத்திற்குக் கூலி கேட்க ஆரம்பித்துவிட்டனர்; பதவி வேட்டை துவங்கிவிட்டனர்; காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் நீதி நிர்வாகத்தில் அடிக்கடி தலையிடுகின்றனர்' என்றெல்லாம் குற்றம் கூறினார். இதையெல்லாம் தாமாகக் கூறுவது அழகாக இருக்காதென்று கருதி, தமது நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்குமுரிய தோழர் கொண்டா வெங்கடப்பையா அவர்களால் எழுதப்பட்ட கடிதத்தை அப்படியே வெளியிட்டு, அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் யாவற்றையும் தாம் உண்மையென்றே நம்புவதாகவும், மேற்படி குற்றங்களுக்காக ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் அவமானப்படவேண்டியது அவசியமென்றும் குறிப்பிட்டிருந்தார். இவைதான்—நான் காங்கிரஸ் பிரமுகர்களைப்பற்றி அடிக்கடி கூறிவந்த கருத்துக்களாகும்.

இங்கு திராவிடர் கழகம் வலுப்பெற்று வருவது கண்டு பொறாமை கொண்ட சில பார்ப்பனர்கள் காந்தியாரிடம் காவடி தூக்கிச் சென்றனர். தென்னாட்டில் திராவிடர் கழகம் என்றொரு கழகம் வளர்ந்து வருகிறதென்றும், அதைக் கண்டு காங்கிரஸ் மந்திரிகளே பயப்

படிப்பகம்

www.padippakam.com



விவரம், தெளிவு கண்டுபிடிக்க முடியாத பிரபவ ஆண்டு முதலியவைகளை ஒப்புக் கொண்டு இருப்பதைவிட, நமக்குத் தெரிந்த ஒரு பெரியாரின் பேரால்—அதுவும் ஆயிரம் ஆண்டுகளாக இல்லாத ஒரு பெருமாறுதல் ஏற்பட, ஆண்டு துவக்குவது எப்படித் தவறாகக் கருத முடியும்? இந்த நாட்டுக்கு என்று ஒரு ஆண்டு வேண்டாமா? அது அவர்பேரில் இருக்கட்டும்.

காந்தியாரின் கொள்கைகளை வைத்து ஒரு மதத்தைத் தோற்றுவிப்பதுதான் எப்படித் தவறாகும்? சத்தியமும், அகிம்சையும்தானே அவருடைய முக்கிய தத்துவங்கள்? சத்தியமே கடவுள் என்பதுதானே அவருடைய முக்கிய சித்தாந்தம். தனியாக, வஸ்துவாக ஆளாக ஒரு கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என்று பலதடவை சொல்லி இருக்கிறார். சத்தியம்தான் கடவுள் என்று அவர் கொண்டு நடந்திருக்கிறபடியால் மக்கள் சத்தியமே கடவுள் என்று நம்பிப் பயப்பட்டு நடந்தால் இன்றையக் கடவுள்களால் ஏற்படும் பயனைவிட—எவ்வளவோ நலம் ஏற்படும். பிறகு மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம். அகிம்சையையும், அன்பையும் முக்கியத் தத்துவமாகக் கொண்டதுமான ஒரு மதத்தையும், சத்தியத்தையே கொண்டதான ஒரு கடவுளையும் ஏற்பாடு செய்து துவக்கினால் அதை மக்கள் எல்லோரும் போற்றித் தழுவ மாட்டார்களா? அதன் மூலம் இன்று மக்களிடையே இருந்துவரும் சாதி வேறுபாடுகளும், மதவெறி உணர்ச்சியும் அடியோடு அழிய மார்க்கம் பிறக்காதா? அதன் மூலம் இன்று வரைக்கும் சாதிமத பேதங்களை உண்டாக்கவும், மக்களைக் காட்டுமிராண்டி காலத்திற்கு அழைத்துச் செல்லவுமே பெரிதும் பயன்பட்டு வந்த இந்துமதம், போலிக் கடவுள் அழிய வழி பிறக்காதா?

மதம் என்பதென்ன—மாற்றியமைக்கக் கூடாததொன்றா? மதம் என்பதே மக்களின் நல்வாழ்வுக்காகப் பெரியோர்களால் ஏற்படுத்தப்படும் நெறி அல்லது மார்க்கம் தானே? என்றாவது மொட்டையடித்துக் கொள்வதும் சாம்பல் பூசிக் கொள்வதும் மதம் என்றாகி விடுமா? ஆகவே, என்ன காரணம் முன்னிட்டேனும், இன்றையக் கடவுள் தன்மையும், மதத் தன்மையும் மாற்றப்பட்டாக வேண்டும். இன்றைய ஏற்பாடுகள் இன்றைய 'ஆர்டர்' எப்படியும் மாற்றப்பட்டாக வேண்டும். மாற்றப்படாத வரையிலும் இன்றைய மக்கள் வாழ்வு பாழாகத்தான் (Waste) போய்க்கொண்டிருக்கும்.

['விடுதலை' 11-3-1948]

தோழர்களே!

காந்தியாருக்குப் பாமர மக்கள் ஆதரவு அதிகம் இருக்கிறது. அவர் பேரைச் சொல்லி இந்த மாறுபாடுகளைச் சொன்னால் மக்கள் ஏற்றுக்கொள்வதும் சுலபம். ஆக இத் தத்துவங்களோடு காந்தி மதத்தை ஏற்படுத்துவது இன்றையத் தேவைக்கு ஏற்றதாக இருக்கும் என்பதோடு. காந்தியாரை—புத்தருக்கும் மற்ற பெரியாருக்கும் சமமாகக் கருதியதாகவும், ஆக்கியதாகவும் ஏற்படும் என்பதையும், இந்த நிலைக்கு இதுவாவது இன்று செய்யவேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காந்தி மதத்தை ஏற்படுத்துவதால் இந்துமதம் அழிந்துபோகுமே என்று சிலர் வருந்தக்கூடும். அதற்கு காந்தியாரே பதில் அளித்திருக்கிறார். மறைவுக்கு ஒன்றிரண்டு மாதங்களுக்கு முந்தியே அவர், 'இந்து' என்பது இந்நாட்டில் வழங்கிவந்த புராதனச் சொல் அல்லவென்றும்; அன்னியர்கள் சிந்து நதிக் கரையில் வாழ்ந்துவந்த மக்களை 'சிந்து' வென்று கூறியது, நாளடைவில் திரிந்து 'இந்து'வாகியது என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறார். அதேபோல் 'இந்தியா' என்ற பெயரும் தோன்றியிருக்கிறது.

ஆகவே, இந்தியா என்று இந் நாட்டை அழைப்பதைக் காட்டிலும்—சரித்திரம் அறியாத பரதன் பேரால் 'பாரதபூமி' என்று இந் நாட்டை அழைப்பதைக் காட்டிலும்—உலக மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வந்தவரும், பாராட்டப்பட்டு, புகழப்பட்டு



வந்தவரும், நாம் நன்கு அறிந்தவருமான காந்தியார் பேரால் இந் நாட்டை அழைப்பது மேலல்லவா? சந்துகளுக்கும், பொந்துகளுக்கும், கட்டடங்களுக்கும், பூங்காக்களுக்கும் இவர் பெயரை இடுவதைக் காட்டிலும்—இந் நாட்டிற்கே இவர் பெயரை இடுவது பொருத்தமல்லவா? 'பார்க்கின்' பெயரையாவது அவ்வப்போது மாற்றிவிடலாம்; தேசத்தின் பெயரைச் சுலபமாக மாற்ற முடியாதே! காந்தியாருக்கு ஆங்காங்கு சிலைகள் ஏற்படுத்துவதைவிட, அவர் பேரால், அவர் கொள்கைகளைக் கொண்ட மதத்தை ஏற்படுத்துவது மேலல்லவா? சிலைகளை எடுத்துவிடலாம்; அல்லது, சிலைக்கு ஒரு அர்ச்சகராக உட்கார்ந்து கொண்டு சுலபமாக மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்கலாம். காந்தி தேசம், காந்தி மதம், சத்திய கடவுள் இவற்றைச் சுலபமாக அழித்துவிடமுடியாது. இன்று புத்தர் சிலையை யாராவது மதித்துக் கன்னத்தில் போட்டுக்கொள்கிறார்களா? புத்தர் கொள்கைகளை மதிக்காதவர்கள் யாராவது இருக்கிறார்களா? அதைப் பார்த்தேனும் காந்தி சீடர்களும், காந்தியார் கொள்கை வாழ்வு வாழ்பவர்களுமான நீங்கள் காந்தி மதத்தை உண்டாக்கப் பாடுபடுங்கள்!

[திருவல்லிக்கேணி கடற்கரையில், 7-3-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-3-1948]

## 7. காந்தியார் மறைவுபற்றி

தோழர்களே!

இன்று இந்த ஸ்தானத்தில் இருக்கும் நான் முதலாவதாகப் பேசவேண்டியது பெரியார் காந்தியாரின் மறைவுபற்றி—கொலைபற்றி. பேசவேண்டியது, சம்பிரதாயப்படி மாத்திரம் அல்லாமல் உண்மைப்படியும், கடமைப்படியும் பேச வேண்டியதாகும். காந்தியார் மறைவு திராவிட நாட்டுக்கும், திராவிட மக்களுக்கும் மகத்தான நட்டமும், மாபெரும் ஏமாற்றமடையத்தக்க வாய்ப்புமாகும். காந்தியார் கொலை திராவிட மக்களின் எல்லையற்ற ஆத்திரமும், இரத்தக் கொதிப்பும், திடுக்கிடும்படியான விறுவிறுப்பையும் கொள்ளத்தக்க காரியமாகும். இதைச் சொல்லுகிறபோது என் மனம் பதைக்கிறது; கை நடுங்குகிறது; நா வறட்சியடைகிறது; இதயம் துடிக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதரை எப்படித்தான் கொல்ல, இப்படிப்பட்ட ஒரு பார்ப்பனனுக்கு எண்ணம் வந்தது, கை வந்தது என்பதை நினைத்தால் இராமாயணக் கதையில்வரும் ஒரு இடம்தான் சற்று அதை விளக்குகிறது.

அதாவது, சம்புகன் என்ற ஒரு சூத்திரன் பிரார்த்தனை (தபஸ்) செய்ததற்காக—'சூத்திரனுக்குத் தபசு செய்ய உரிமை இல்லை' என்கின்ற காரணங் கற்பித்து பார்ப்பனர்களின் தூண்டுதலின்மேல் இராமன் என்கின்ற ஒரு ஆரியனால் கண்டதுண்டமாக்கப்பட்டான் என்கின்ற இடம்தான் இக் கொலையின் காரணத்துக்குச் சிறிது விளக்கத்திற்குரியதாகிறது. ஆகவே, காந்தியார் கொலையானது, ஒரு தனிப்பட்ட அல்லது ஒரு புதிய சம்பவமல்ல என்பதும்; இது ஆரியர்–சூத்திரர் (திராவிடர்), அல்லது ஆரியர்–ஆரியரல்லாதவர் என்கின்ற இனப் போராட்ட முறை என்றும்; அதுவும் இந்துமதப் புராணத் தத்துவங்களைப் பின்பற்றியதுதான் என்றும் நிச்சயிக்க வேண்டியதாகிறது. 'காந்தியார் சம்புக இனத்தாராகவும், கொன்றவன் இராமன் இனத்தானாகவும்' இருந்ததுதான் இக் கொலைக்குக் காரணமே ஒழிய—மற்றபடி தனிப்பட்ட மக்கள்மீதோ, தனிப்பட்ட குணங்கள் மீதோ குறைகூறுவது பொருத்தமற்றதாகும்.

காந்தியார் மறைவை—நான் ஏன் திராவிட நாட்டுக்கு, திராவிட மக்களுக்கு எல்லையற்ற நட்டம் என்று சொல்லுகிறேன்? இப்படிச் சொல்லுவதன் மூலம் ஏதாவது இலாபம், நலம் அடையலாமென்கிற சமயோசித புத்தியாலா? இல்லவே இல்லை! ஒருக்காலும் இல்லை! இப்போது இப்படிச் சொல்லுவதால் எனக்கோ, நம் கழகத்துக்கோ எவ்வித நன்மையும் ஏற்படாது; நம்மவர்களிலேயே சிலர் என்னை வெறுக்கக்கூடும்; மற்றும், ஒரு கூட்டத்தார், அதுவும் செல்வாக்குள்ள ஒரு கூட்டத்தாரின் வெறுப்புக்குத்தான் நான்

படிப்பகம்

www.padippakam.com



வகுப்பு இருக்கலாம்—சட்டப் புத்தகத்தில், வகுப்புக்கோர் நீதி வழங்க. வகுப்பு இருக்கலாம்—சாஸ்திரப் புத்தகத்தில், மக்களைப் பல வகுப்பினராக்கி உயர்வு தாழ்வு கற்பிக்க. வகுப்பு இருக்கலாம்-கடவுள் தன்மையில், ஒருவன் தலையிலிருந்து தோன்றினான், ஒருவன் காலிலிருந்து தோன்றினான் என்று கூற. ஆனால், ஏன் அப்படிப் பல வகுப்புகள் இருக்கவேண்டும்? ஒரு வகுப்பு மக்கள் ஏன் மற்ற வகுப்பு மக்களின் உழைப்பால் உண்டு கொழுக்கவேண்டும் என்று கேட்டால் அதுதான் வகுப்புத் துவேஷமாகக் கருதப்படுகிறது.

வகுப்பு இருக்கலாம், நாட்டில் அந்த வகுப்பு முறையில் தாழ்த்தப்பட்ட சூத்திரர்களாய், பஞ்சமர்களாய், சண்டாளர்களாய் இருக்கலாம்—ஒரு பெரும்பான்மை சமூகத்தார். 'ஏன் அய்யா, நாங்கள் உழைத்தும் படிக்கப் பள்ளியின்றி, குடிக்கக் கூழின்றி, இருக்கக் குடிலின்றி, உடுக்கத் துணியின்றி அநாகரிக வாழ்வு வாழவேண்டும்?' என்று கேட்டால் அது வகுப்புத் துவேஷமாம். 'அய்யா, நாங்கள் பஞ்சமர்கள்—சேரியில் வாழ்ந்து இடமின்றி இன்னல் படுகின்றோம். ஆகையால், எங்களுக்கு மேலும் இருக்க வசதி செய்து கொடுங்கள்', 'அய்யா நாங்கள் இந் நாட்டை ஆண்டவர்கள்; இந் நாட்டுக்கே உரியவர்கள்; இந் நாட்டின் பூர்வீகக் குடிகள். அப்படிப்பட்ட நாங்களோ இன்று மத்திய ஆசியாவிலிருந்து வந்து குடியேறிய லம்பாடிக் கூட்டத்தாரால் பல சாதிகளாக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு அவர்களுடைய தாசி மக்களாய் வாழ்ந்து வருகிறோம். இக் குறைபாடுகளைப் போக்க ஏதாவது வழி செய்யுங்கள்' என்று அரசாங்கத்தை நோக்கிக் கூறினால், 'அதெல்லாம் பேசக்கூடாது; மீறிப்போனால் உங்களை வகுப்புத் துவேஷியாய்க் கருதி ஜெயிலில் அடைப்போம்—ஜாக்கிரதை' என்று ஆட்சியாளர் கூறினால், அதெப்படி நியாயம் ஆகும்? அப்படித்தான் இன்றைய அரசாங்கம் கூறுகிறது. இதென்ன நியாயம்? ஒரு திருடனைப்பற்றிப் பேசாதே என்று கூறப்படுமானால் அத் திருடனைக் காப்பாற்றத்தானே அம் முயற்சி எடுத்துக்கொள்ளப்படுவதாகக் கருதப்படும். அதேபோல், வகுப்பு பற்றிப் பேசாதே என்றால் அந்த வகுப்பைப் பத்திரமாகக் காப்பாற்ற முயற்சி செய்யப்படுகிறது என்றுதானே நாம் கொள்ளவேண்டும்? நாட்டில் வகுப்புப் பேதா பேதங்கள் இருக்கலாம்; வகுப்பின்பேரால் இருந்துவரும் கொள்ளைகளும், ஏய்ப்புகளும், சுரண்டல்களும் இருக்கலாம்; ஆனால், அவற்றைப்பற்றி மட்டும் பேசக்கூடாது என்றால்—அதென்ன நியாயம்? நாங்கள் செய்த தீமை என்ன?

[நாகூரில், 28-2-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-3-1948]

## 5. காந்தியாருக்கு ஞாபகச் சின்னம்

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது அவசியம். அது நிரந்தரமானதாகவும், அதிசயமான பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். அதற்கு என் தாழ்மையான யோசனை:

1. இந்தியாவுக்கு, 'ஹிந்துஸ்தான்' என்கிற பெயருக்குப் பதிலாக—'காந்தி தேசம்' அல்லது 'காந்திஸ்தான்' என்று பெயரிடப்படலாம்.

2. இந்து மதம் என்பதற்குப் பதிலாக—'காந்தி மதம்' அல்லது 'காந்தினிசம்' என்பதாக மாற்றப்படலாம்.

3. இந்துக்கள் என்பதற்குப் பதிலாக-"மெய்ஞ் ஞானிகள்' அல்லது 'சத்ஞானஜன்' என்று பெயர் மாற்றப்படலாம்.

4. காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள்தான் உண்டு; வருணாசிரம தர்மமுறை அனுசரிக்கப்படமாட்டாது. ஞானமும் (அறிவும்) பக்ஷமும் (அன்பும்) அடிப்படையாகக்கொண்டது; சத்து அதாவது சத்தியமே நித்தியமானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி, கிறிஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாக—'காந்தி ஆண்டு' என்று துவக்கலாம்.



இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதனால்தான், புத்தர், கிறிஸ்து, முகம்மது முதலிய பெரியார்களுக்கு காந்தியார் ஒப்பானவராகவும், இன்றைய நிலைமைக்குத் தோன்றிய ஓர் சீர்திருத்த மகானாகவும் உலகமே கருதும்படியான நிலை ஏற்படும்; உலக மக்களால் நாம் நன்கு மதிக்கப்படுவோம்; இந்தியாவுக்கு சாபக்கேடு எது எது சொல்லிவரப்பட்டதோ அதெல்லாம் மறைந்துவிடும். ஆர்யசமாஜ், சீக் சமாஜ், பிரம்ம சமாஜ் என்பது முதலிய எத்தனையோ புதிய மார்க்கங்கள் (கொள்கைகள்) ஏற்பட்டும் ஒன்றும் இந்தியாவை வெற்றி கொள்ளவில்லை. ஆனால், பவுத்த மதம், கிறிஸ்து மதம், முகம்மதிய மதம் ஆகியவை வெற்றிபெற்றுவிட்டன. இதன் காரணம், இவை அரசாங்க மதங்களாய் இருந்து வருவதேயாகும். ஹிந்துஸ்தான் முப்பது கோடிக்கு மேற்கொண்ட மக்களைக் கொண்டது. அதன் அரசியல் திட்டமாக—'காந்தியம்' என ஏற்பட்டுவிடுமானால், கண்டிப்பாக வெற்றிபெற்றே தீரும். இன்றைய முட்டாள்தனமும், மூர்க்கத்தனமும் ஆன கொலைபாதகப் பேயாட்டங்கள் இனி நடைபெற முடியாமலும் போகும்.

பெயர் மாறுதல்கள் காரணமாய் மதங்களுக்கும் தேசங்களுக்கும் கொள்கை, பெயர் மாற்றங்கள் ஏற்படுவது சகஜமாகவே இருந்து வந்திருக்கிறது.

உதாரணமாக, புத்தர், அசோகர் காலத்தில் ஏற்பட்ட மதக்கோட்பாடு மாறுதல்களும்; ரஷியா, ஸயாம் முதலிய நாடுகளுக்கு ஏற்பட்ட 'சோவியத்லேண்ட்', 'தாய்லேண்ட்' போன்ற பேர்களும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மற்றபடியாக, சிறு ஊர்களுக்குப் பெயர் மாற்றுவதும் பெருந்தொகையாகப் பணம் வசூல்செய்து அதன்மூலம் சில பொதுநலக் காரியங்கள் செய்வதும் காந்தியாருக்கு நாம் ஏதோ நன்றி காட்டினதாகத்தான் வந்து முடியுமே தவிர, காந்தியாரால் உலகத்துக்கு, நம் நாட்டுக்கு—அதாவது, மற்ற நாட்டாரால் தாழ்மையாகக் கருதப்பட்ட சரித்திரப் பிரசித்தமுள்ள நாட்டுக்கு ஏற்பட்ட மகா மேன்மையான காரியம் என்னவென்பதற்கு நல்ல ஆதாரம் இல்லாமல் போய்விடுகிறது. ஒருவரை மகான்—'கிரேட் மேன்' (Great Man) என்றால்—அவரால் ஏற்பட்ட நிரந்தரமான பெரிய காரியம் ஒன்று இருந்தாகவேண்டுமேயொழிய, அவர் காலத்தில் இன்னின்ன காரியம், அற்புதம், அதிசயம் நடந்தன என்பவை பிற்கால மக்களுக்குப் பயன்படுவதானதாக ஆகிவிடாது. இது எனது தாழ்மையான அபிப்பிராயம்; கொள்ளவும், தள்ளவும், திருத்தவும், மாற்றவும் உங்களுக்குப் பூரண உரிமையுண்டு.

இதற்கு இது ஒரு நல்ல சமயம்; நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தியாவின் ஒரு பாகமாகிய 'சிந்து'வுக்கு இன்று பாகிஸ்தான் என்ற பெயர் ஏற்பட்டிருப்பதுபோல்—இந்தியாவின் பெயரும் மாற்றப்படலாம். இந்து என்பதும் இந்தியா என்பதும்—அன்னியர்கள் நமக்கும், நம் நாட்டிற்கும் கொடுத்த பெயர். (அதுவும் சிந்து நதி காரணமாக ஏற்பட்ட பெயர்) என்பதை எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; காந்தியாரும் இதைச் சமீபத்தில் சொல்லியிருக்கிறார். இந்து மதம் என்பதாக ஒரு மதமும் இல்லை. ஆகவே, இந்தப்படியான மாற்றம் காந்தியார் உயிர்ப் பலியின் காரணமாக ஏற்பட்டுவிடுமானால் இனி இங்கு மத, சமுதாய, சாதி சம்பந்தமாக எந்தப் பிரச்சினையும் சுலபத்தில் காணமுடியாது. 30 கோடி மக்களும் 'ஞானவான்களாக'—ஒரே சமுதாய மக்களாக உலகத்தின்முன் திகழ்வார்கள்.

['குடி அரசு' 14-2-1948]

## 6. காந்தியார் நினைவாக

காந்தியாரின் ஞாபகார்த்தமாக, இந்தியா தேசத்திற்கு 'காந்தி தேசம்' என்று பெயரிடலாம் என்றும்; கிறிஸ்து ஆண்டு, முகம்மது ஆண்டு என்பதுபோல் 'காந்தி ஆண்டு' துவக்கலாம் என்றும்; கிறிஸ்து மதத்தைப்போல், பவுத்த மதத்தைப்போல், 'காந்தி மதம்' என்ற ஒரு புது மதத்தைத் தோற்றுவிக்கலாம் என்றும்—நான் யோசனை கூறியிருக்கிறேன். நமக்குத் தெரியாத கலியுக ஆண்டு, பசலி ஆண்டு, கிறிஸ்து ஆண்டு—

படிப்பகம்

www.padippakam.com



எலும்பையே காவிரி நதியிலும் மற்ற நதிகளிலும் கொண்டுபோய்க் கலப்பது புண்ணியமென்றால்—அந்த நதிகளில், நம் முன்னோர்களின் எலும்பையும், சாம்பலையும் கொண்டு போய்க் கலப்பதுதானே நமக்கும் புண்ணியமான தாகும்—இந்த ஏற்பாடுதானே புனிதமானது' என்கின்ற முடிவைத்தானே இந்தச் செயல்—மக்களைக் கொள்ளச்செய்யும்? அஸ்தியை ஆற்றில்கரைக்க அய்யருடைய உதவி தேவை என்கிற முடிவில், பார்ப்பனர் வகுத்த சாஸ்திரங்களும், அவர்களின் வயிற்றுப் பிழைப்பும் பராமரிப்பதற்குத்தானே இந்த நடவடிக்கை பயன்படுவதாக இருக்கமுடியும்? 'இந்திய யூனியன் மதமற்றது' என்று கூறப்பட்டாலும், அது இந்து மதத்தைப் பின்பற்றியே நடக்கக் கூடியது என்கிற உண்மையைத்தானே அரசாங்கம் காட்டும் ஆதரவிலிருந்து மக்கள் தெரிந்துகொள்ளக் கூடியதாய் இருக்கமுடியும்?

இதுதானா காந்தியாருக்குச் செய்யும் நன்றி, மரியாதை? இவ்வாறு தரிசிப்பதும், மலர்மாலை சாத்துவதும் ஆன காரியங்களால் அவருடைய கொள்கைகள் நிறைவேறி விட்டன என்று கூறமுடியுமா?

இயற்கையை ஏவல்கொண்டு, விரும்பியபடி எல்லாம் ஆட்டிவைக்கும் விஞ்ஞான முறையும், அதன் பயனாய்த் தோன்றிய இயந்திரங்களும் இங்கு இன்றைக்கும் வணக்கத்திற்குரியவையாக இருக்கின்றனவேயன்றி, வாழ்வின் நலனுக்காகக். கொள்ளப்பட்டவை என்று சொல்லமுடியாத நிலையிலேயே இருக்கின்றோம். அறிவு உயர்ந்தது; அறிவைப் பெருக்குவது கல்வி; கல்வியைத் தருவது ஏடு; அந்த ஏடு வணக்கத்திற்குரியதாகவே இந்த நாட்டில் இருந்துவருகிறது என்று சொல்லலாமே தவிர, அந்த ஏட்டின் பயனைக் கண்டு அறிவு பெருகி வாழவேண்டும் என்ற போக்கைக் காணோமே! எது எது உயர்ந்தது என்று சொல்லப்படுகின்றதோ அதெல்லாம் வணக்கத்திற்குரியது; பூசைக்குரியது என்கிற மனப்பான்மை இந்த நாட்டில் வேரூன்றி—வாழ்வில் அவைகளை ஏற்று நடக்கும் தன்மை இல்லாமல் போனதால்தானே, இந்தப் பழம்பெருமை வாய்ந்த நாடு கேடுகெட்ட நாடாக மாறிவிட்டது! சாரத்தை விட்டுவிட்டுச் சக்கையை ருசிபார்க்கும் நடவடிக்கைதானே பல காலமாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது! அந்தப் போக்கைத்தானா இப்பொழுதும் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்கிறோம்.

பார்ப்பனீய மதமான இந்து மதம் என்கிற கொடிய பாம்பிற்குக் காந்தியார் பாலூற்றி வளர்த்து வந்தார். அப் பாம்பின் கொடுமையைப்பற்றி நாம் அவருக்கு அதிகமாகவே எடுத்துக் கூறினோம். சுயராஜ்யம் என்ற மகுடியை ஊதிவந்ததால், அதுவும் ஆடிப்பாடிக் குதித்ததால், அதையடக்கித் தன்வழிச் செலுத்தலாம் என்றே காந்தியார் முழுக்க முழுக்க நம்பினார். சுயராஜ்ய மகுடியை ஊதாத நேரத்தில்—ஊதத் தேவையில்லை என்று அவர் கருதிய வேளையில், அப் பாம்பு தன் விஷப் பற்களுக்கு அவரையே இரையாகக் கொண்டு விட்டது. இப்பொழுது, 'அந்தப் பாம்பை என்ன செய்வது?' என்பதே கேள்வி. அதை நாம் நசுக்கி அழித்துவிட வேண்டும் என்றுகூடச் சொல்லவில்லை. அதனுடைய விஷப் பற்களைமட்டும் பிடுங்கி எறிந்துவிடவேண்டும். இதைத்தான் இங்கு வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறோம். இதற்கு வழி என்ன?

அவருடைய நினைவாகப் பெரும் பொருளை நிதியாகச் சேர்த்து, 'கஸ்தூரிபாய் நிதி'போலவும், 'கமலாநேரு நிதி'போலவும் சில பொதுக் காரியங்களுக்குச் செலவு செய்து விட்டால், அது உண்மையாகவே அவருக்குத் தகுந்த ஞாபகார்த்தமாக ஆடுவிடுமா? அவருடைய உருவச் சிலைகளை அங்கங்கே வைத்துப் பூசை நடத்திவருவதினால் அது அவருடைய தொண்டைச் செய்ததாக முடியுமா? காந்தியார் கழகம் என்று பெயர்வைத்து அவர் எழுதியவைகளையெல்லாம், ஒன்றுசேர்த்து (காலப்போக்கில் பார்ப்பனீயப் பிடியில் சிக்கி, நல்லதையெல்லாம் சுட்டெரித்துவிட்டு, மாற்றித் திருத்தி வைத்துக்கொண்டு) வெறும் வேதாந்த விசாரணையில் ஈடுபட்டால் அது அவருடைய கொள்கைகளைப் பரப்பியதாக



ஆகுமா? அவர் எப்படி உண்ணாவிரத மிருந்தாரோ, மவுனவிரத மிருந்தாரோ அவைகளை நாங்களும் எங்கள் வாழ்க்கையில் பின்பற்றப் போகின்றோம் என்று சிலபேர் முடிவு கட்டுவதால் அது அவருக்கு உண்மையாகவே நன்றி காட்டியதாக ஆகுமா? அவருடைய நினைவுக்கு அறிகுறியாக 'போஸ்டல்' மூத்திரைகளை அச்சிட்டு வெளியிடுவதோ, அதைப் போன்ற மற்ற செயல்களைச் செய்வதோ காந்தியாரின் கொள்கைகள் இந்த நாட்டில் நிலைபெறுவதற்கு வழிசெய்யும் காரியங்களாகுமா? வெறும் பஜனைபாடும் அளவிலும், பால், பழம், பூ வைத்து நைவேத்தியம் செய்யும் அளவிலும் நின்றால்—அவர் உயர்ந்தவர், ஒரு பெரியார், ஒரு மகாத்மா, ஒரு மகான் என்று பெருமையாகப் பேசிக்கொள்வதற்குப் பேருதவியாக இருக்குமேதவிர அவரால் இந்த நாட்டிற்கு நிலையான பயனேற்பட வழிசெய்ததாகுமா? அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

['குடிஅரசு'—தலையங்கம்—14-2-1948

## 4. காந்தியார் மரணம்

பெரியோர்களே! தோழர்களே!

திராவிடர் கழகத்தின் நேர்மையான பகுத்தறிவு விளக்கத்தால் தம் சோம்பேறிச் சுக வாழ்வுக்குக் கேடு நேர்வதைப் பொறுக்க முடியாத பார்ப்பனீயம்—இன்று அதை அழிக்கத் தனது வஞ்சம் நிறைந்த சூழ்ச்சிகளை எல்லாம் கையாள ஆரம்பித்து விட்டது.

காந்தியாரைக் கொன்றவன் பார்ப்பனன் என்ற உண்மையை வெளியிட்டதற்காகப் பார்ப்பனீயம் இன்று நம்மீது பாய்கிறது. காரணம், எந்த மக்களுடைய வாழ்வுக்காக அவர் அல்லும் பகலும் உழைத்து வந்தாரோ, எந்த மக்கள் அவர் பேரைச் சொல்லிப் பல பதவிகளைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ்ந்து வந்தார்களோ, எந்த மக்கள் அவர் பேரைச் சொல்லிச் சுலபமாய் மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்து வந்தார்களோ—அதே இனத்தைச் சேர்ந்த ஒருவன்தான் காந்தியாரைக் கொன்றான் என்பதையும் அவன் ஒரு பார்ப்பனன் என்பதையும் வெளியிடும்போது அவர்கள் உண்மையாகவே வெட்கப் படுகிறார்கள். எங்கு மக்கள் தம்மீது பாய்ந்து விடுவார்களோ என்று கவலைப்படுகிறார்கள். அதனால், அவ்வுண்மையை வெளியிடும் நம்மை அழிக்கப் பார்க்கிறார்கள்.

ஆனால், இதே பார்ப்பனர்கள்—இந்தக் கொலைக்கு ஒரு முஸ்லிம் காரணஸ்தராயிருப்பாரானால் அதையே காரணமாக வைத்துக்கொண்டு முஸ்லிம்கள் அத்தனை பேரையும் அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பார்கள் அல்லவா? கொலை செய்தவன் ஒரு இந்துப் பார்ப்பனன் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுங்கூடப் பல இடங்களில் மிகமிகக் கேவலமான முறையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டு அவர்கள் சொத்துக்கள் அழிக்கப்பட்டு இருக்கும்போது, கொன்றவன் ஒரு முஸ்லிமாகவே இருந்திருப்பானானால் இதற்குள் முஸ்லிம் சமூகமே இவ்விந்திய யூனியனைப் பொறுத்தமட்டிலுமாவது அழிக்கப்பட்டு இருக்கும். ஆனால், சர்வ சக்தி படைத்த பார்ப்பனீயக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் கொலைசெய்து விட்டதால், இன்னான்தான் கொன்றான் என்று கூறி ஆசை தீர அழுவதற்குக்கூட வசதி இல்லாமல் உத்தரவு இடப்பட்டிருக்கிறதாம்.

சுட்டவன் பார்ப்பான் என்பதை எடுத்துக் காட்டுவது இன்றைய அடிமை அரசாங்கத்திற்கு வகுப்புவாதம் பேசுவதாகப் படுகிறது. ஆனால், சுட்டவன் ஒரு முஸ்லிம் ஆகவோ ஒரு கறுஞ்சட்டைக்காரனாகவோ இருந்திருந்தால், இதே அரசாங்கம் அவர்களை வேண்டும்படி தாக்க இந்தப் பார்ப்பனர்களையும் அவர்கள் கூலிகளையும் யாதொரு தடையுமின்றி அனுமதித்து இருக்கும். ஆனால், அவன் ஒரு பார்ப்பனனாகப் போய்விடவே, கொலையுண்ட காந்தியார் இனித் திரும்பி வரப்போவதில்லை; ஆகவே, இனி அவரைப்பற்றிப் பேசாதீர்கள்; பேசினால் வகுப்புத் துவேஷமாகக்.கருதப்படும் என்று கூறியிருக்கிறது. இது எவ்வளவு கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!



படிப்பகம்

www.padippakam.com



# 3. காந்தியார்

மதவெறிகொண்ட மாபாதக் கூட்டம் சதிச்செயல் புரிந்து, தந்திரமும் வஞ்சனையும் போர்த்து, உலகப் பெரியாருள் ஒருவரான பெரியார் காந்தியாரைப் பலிகொண்டுவிட்ட செய்தியைக் கேட்டுத் திகைத்தவர் பலர்; திகைப்பால் செத்தவர்கள் சிலர்; சாக விரும்பியவர்கள் சிலர் என்ற செய்திகளையெல்லாம் அவர் மறைந்ததிலிருந்து நாள்தோறும் கேட்டு வந்திருக்கின்றோம். மனிதத் தன்மை படைத்த எவருமே விரும்பாத, இழிவான இந்தப் படுகொலையைக்கண்டு, கேட்டு எவருமே பதறாமல் இருக்கமுடியாது. கோட்ஸே கும்பல்கூட அல்ல; கோட்ஸே கூட மனம் பதறித்தான் இருப்பான்—தன்னால் கொல்லப்பட்ட காந்தியார் குலைந்து மண்ணில் வீழ்ந்ததைக் கண்டு! ஏன்? அவனும் மனித உடல் போர்த்தவன்தானே!

சுயநலம் கொஞ்சமும் இல்லாமல், தனது முப்பது ஆண்டு வாழ்க்கையையும் இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் நன்மைக்காகவே, தன் மனத்தில் எது நன்மை என்று பட்டதோ அவ்வழியிலேயே உழைத்த பெரியார் காந்தியார். பலாத்கார முறைகளில் கொஞ்சமும் நம்பிக்கை இல்லாமல் அகிம்சையையே தன் கருவியாகக் கொண்டவர். மத இயலில், மதத்திற்கு மதம் வேறுபாடில்லை என்றும், மத முடிவுகள் எல்லாம் ஒன்றுதான் என்றும் வற்புறுத்தியவர். கடவுள் இயலில், கடவுள் ஒன்றுதான் என்றும் அந்த ஒன்றைத் தான் பலரும் பலவாறு கூறிப் போனார்கள் என்றும், ஆனால் எல்லாவற்றையும் ஒன்றாகவே தான் நான் மதிக்கிறேன் என்றும் விளக்கிக் கூறி, கடவுள் வழிபாட்டிற்காக அமைந்த கோவில்களை 'விபசார விடுதிகள்' என்று கூறி, அங்குத் தாகனோ, அந்தக் கடவுளுக்குப் பால், பழம், சோறோ வேண்டியதில்லை; திறந்த வெளியே போதும் என்றவர். அதாவது, விக்கிரக ஆராதனை கூடாது, பிரார்த்தனையே போதும் என்று வற்புறுத்தியவர். சமுதாய இயலில் ஒருவரை ஒருவர் சுரண்டுதல் கூடாது; பரம்பரையாக ஒருவர் உறிஞ்சிப் பிழைக்கவும், அதற்காக மற்றொருவர் நைந்து வாழ்க்கை கசந்து வாழவும், அதற்காக ஒரு கூட்டம் ஒடுக்கப்பட்டவர்களாய்—தாழ்த்தப்பட்டவர்களாய் இருந்துவருவது ஈனம் என்றும் வற்புறுத்தியவர். தேச இயலில் இந்தியத் துணைக் கண்டத்தை ஒரே நாடு என்றும், இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரே நாட்டினர் என்றும் வற்புறுத்தியவர்.

இவ்வாறான காந்தியாருடைய பல கொள்கைகள், மத வேறுபாடு, சாதி வேறுபாடு நிரம்பிய இந்த நாட்டிற்கு அவைகளைத் தீர்க்க ஓரளவிற்குப் போதுமானவைகள் என்று கூறத் தகுந்ததாயினும் அக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அவர் கையாண்டுவந்த முறைகள் நிச்சயமாக விபரீதமான பலனைத்தான் கொடுக்குமென நாம் அடிக்கடி வற்புறுத்தி விளக்கிக்கூறி வந்திருக்கின்றோம் என்பதையும், அதே நேரத்தில் அவரின் பல கொள்கைகள் இந்தப் பிற்போக்கான நாட்டிற்குத் தேவையானவை என்று உணரத் தவறவில்லை என்பதையும் இங்குக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

இவ்வாறு இந்தியத் துணைக் கண்டத்தின் நன்மைக்காக, பெருமைக்காக, முன்னேற்றத்திற்காக உழைத்துவந்த பெரியார் காந்தியார் என்று சொல்லிக்கொள்ளத் தகுந்த நிலையிலிருந்தாலும், அவருடைய மறைவுக்குப் பிறகும் இந்த நாட்டில் வாழ்ந்தேயாக வேண்டிய மக்கள் எவ்வளவுதூரம் நன்மை, பெருமை, முற்போக்கு அடைந்திருக்கிறோம்? அடையாவிட்டால் அதற்குக் காரணம் என்ன? அடைவதற்கு நாம் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்பவைகளைப்பற்றி எண்ணவேண்டுமல்லவா? அவைகளையடைந்தால் தானே உண்மையில் காந்தியாரின் கொள்கைகள் நிறைவேறியதாக, வெற்றி பெற்றதாக நாமும் சொல்லிக்கொள்ள முடியும்; உலகமும் ஒப்புக்கொள்ளும்? இந்த நாட்டின் பிற்போக்குச் சக்திகள் என்று காந்தியார் எவற்றைக் குறிப்பிட்டாரோ, அவற்றையொழிப்பது தானே உண்மையாக அவரை மரியாதை செய்வதாக இருக்கமுடியும்? இதைத் தேசியத் திராவிடர்கள் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள, தேசியப் பல்வேறு இனங்களும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும்.



காந்தியாரை எந்த இந்து மதம் ஒழித்ததோ—அதாவது, எந்த இந்து மதம் காந்தியார் உயிருடன் வாழ்வது தான் அழிந்துபோவதற்கு ஏது என்று கருதியதோ—அந்த இந்து மதத்தின் வளர்ச்சிக்காகவா அவருடைய மறைவு பயன்படுத்தப்படவேண்டும்? தான் பெரிய சாதியாய் இருந்துகொண்டே மற்ற சாதியெல்லாம் தனக்குக் கீழ்ப்பட்ட சாதியென்று சொல்லி அவைகளைத் தலை நிமிரவொட்டாமல் தந்திரத்தாலும் வஞ்சகத்தாலும் சதிச்செயல் புரிந்து, சாஸ்திரம் என்றும் சடங்கென்றும் கூறி ஏமாற்றி வாழ்ந்துவரும் எத்தர்கள் பிழைப்புக்காகவா, இந்தப் பெரியாருடைய மறைவு பயன்படுத்தப்பட வேண்டும்? அறிவற்ற மக்களின் மூடத் தனத்தைப் பெருக்கி, அவர்கள் அந்த மூடத்தனத்தில் இருந்து என்றும் மீளாத வழியாகப் பார்ப்பனீயத்தின் காலைக் கழுவிக் குடித்து வாழும் சாதியாக என்றைக்கும் இருப்பதற்காகவா இந்தப் பெரியாரின் வஞ்சகமான படுகொலையை மறைத்து, வேறுவகையில் ஆடம்பரமாக, அனாவசியமாகப் பயன்படுத்தப்படவேண்டும்?

காந்தியார் முடிவிற்குப் பிறகு நாம் நாட்டிலே என்ன பார்க்கின்றோம்? உலகத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் அவரைப் பாராட்டி அவர் முடிவுக்கு வருந்தி, அவரைச் சுட்ட கொலை பாதகப் பார்ப்பனனைக் கண்டித்து ஏராளமான செய்திகள் வெளியாகிவிட்டன. ஒருவன் குற்றம் செய்தால் அவனும் அவனைச் சார்ந்த சொந்தக்காரர்களும், அவன் குலத்தினருமே ஒழிக்கப்படவேண்டும் என்ற இந்து மதத்தின் பழங்கால நீதியை இப் பார்ப்பனன் விஷயத்திலும் கையாளப்படவேண்டும் என்று நாம் கூறவில்லை; விரும்பவுமில்லை; அது நியாயமுமில்லை. ஆனால், அவனையொழித்துவிட்டு, அவன் அந்நச் சதிச் செயலைச் செய்ய எந்த இந்துமத வெறியுணர்ச்சி காரணமாக இருந்ததோ, அந்த இந்து மதச் செழிப்புக்கான காரியங்களைச் செய்வதுதான் நீதியா, நியாயமா என்று கேட்க ஆசைப்படுகின்றோம். இந்தப் படுகொலைக்கு—எந்த, 'இந்து மத சாம்ராஜ்ய வெறியுணர்ச்சி' காரணமாக இருந்ததோ—அந்த உணர்ச்சியை ஆழக் குழி தோண்டிச் சுட்டுப் பொசுக்கிச் சமாதி வைப்பதல்லவா நீதியான செயலாக இருக்கமுடியும் என்று கூறவும் ஆசைப்படுகின்றோம்.

அவர் மறைந்த பதின்மூன்றாம் நாள், அவருடைய சாம்பல்களை எல்லாம் இந்த நாட்டின் 'புண்ணிய' நதிகளில் கரைத்துவிடப்பட்ட ஒரு சடங்கையும், அதைப் பக்தி விசுவாசமாகப் பலர் பார்த்துத் தரிசித்துச் சென்றனர் என்ற விளம்பரச் செய்திகளையும், அதை அங்கங்கே உள்ளவர்கள் அவை கொண்டுபோகப்பட்டபோதும், கரைத்தபோதும் ஏராளமாகக் கண்டு வணங்கிச் சென்றனர் என்ற செய்திகளையும் பார்க்கும்போது நாம் பெரிதும் வருத்தமடைகின்றோம். காந்தியாரின் படுகொலை விளைவித்த வருத்தத்தைக் காட்டிலும், அவருடைய முடிவு இந்தப்படி சித்திரவதை செய்யப்படுவது—நமக்குமட்டுமல்ல, பகுத்தறிவுடைய எவருக்கும் அதிக வருத்தத்தையே உண்டுபண்ணும் என்னலாம்.

இந்தச் செயலால் மக்களுடைய காலமும் பொருளும் வீணாகக் கழிந்தன என்றுகூட நாம் குறிப்பிட ஆசைப்படவில்லை. ஆனால், விலைமதிக்க முடியாததான மக்களின் அன்புணர்ச்சி; காந்தியார் படுகொலையைக் கேட்டுத் திகைப்படைந்து, இதற்கு ஏதாவது வழிசெய்ய வேண்டும் என்று பிறந்த தெளிவுணர்ச்சி; காந்தியாரிடத்தில் நாம் மரியாதையுடையவர்கள் என்று காட்டவேண்டும் என்று தோன்றிய நன்றியுணர்ச்சி; பரிதாபமான முடிவைக்கேட்டு நம்மீது அதிகமான சுமை ஏற்றப்பட்டிருக்கிறது, சமுதாய முன்னேற்றத்திற்கு நம்மாலான தொண்டைச் செய்தேயாகவேண்டும் என்று உண்டான வீர உணர்ச்சி; 'காந்தியார் எலும்பைக் கண்டு தரிசித்தோம்', 'ஆற்றில் சாம்பலைக் கரைக்கும்போது அந்த அருமையான காட்சியைக் கண்டு களிப்படைந்தோம்', 'இதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு எப்படியெப்படியெல்லாமோ போய் ஏதோ ஒரு மாதிரியாய்ப் பார்த்து வணக்கத்தைச் செலுத்திவிட்டோம்' என்று எண்ணி மனத்திருப்திப்படும் அளவிலா மனத்திலுண்டான நல்லுணர்ச்சிகள் எல்லாம் கரைத்துவிடப்படவேண்டும் என்று கேட்கிறோம். 'காந்தியார்

படிப்பகம்

www.padippakam.com



என்றும், இந்தப் போராட்டத்தில் தங்களை (சர்க்காரை)ப் பற்றி எவரும் கவனிக்காமல் இருப்பார்கள் என்றும், அந்தச் சமயத்தில் தங்களுக்கு வேண்டிய காரியத்தை ஜனப்பிரதிநிதிகள் பேரால் செய்து கொள்ளலாம் என்றும் கருதக்கூடும். ஆனால், அது புத்திசாலித்தனமான யோசனை அல்ல என்பதே எனது அபிப்பிராயம். ஏனெனில், இந்தக் காரியம் சர்க்காருக்கும் தொல்லை கொடுக்கக்கூடிய காரியமாகலாம். எந்தக் கட்சியார் பதவிக்கு வந்தாலும், அவர்கள் தங்கள் கட்சிக்கோ, சமுதாயத்திற்கோ நன்மை செய்யாமல் வெறும் மந்திரியாயிருந்தும் சம்பளம் பெறுவதைக் கட்சியார் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். மற்றும், தங்கள் கட்சிக்கோ, சமுதாயத்துக்கோ ஏதாவது நன்மை செய்துகொள்ள முற்பட்டால் அதனால் பாதகமடையும் மற்றக் கட்சியார் கிளர்ச்சியும் தொல்லையும் செய்யாமல் இருக்க மாட்டார்கள். ஆதலால், இந்தச் சமயத்தில் இப்போது இருக்கிறபடி நடந்து, சீக்கிரம் யுத்தத்தை வெற்றி காணும்படியான முடிவிற்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

நம் கட்சிக்குப் பதவி கிடைக்காமல் போகுமே என்கின்ற பயம் வேண்டாம்; கட்சி பலமாகவும் கட்டுப்பாடாகவும் இருந்து செல்வாக்குப்பெற்றால் பதவி காலடியில் வந்துவிழும். நாம் தேடிப்போய் அடையும் பதவியைவிட நம்மைத்தேடி வந்தடையும் பதவியே பயனுள்ளதாகும். தவிரவும், நாம் மாத்திரம் கட்டுப்பாடாயிருந்தால் பதவியில்லாமலே அனேக காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம்.

நம் மக்களுக்கு இன்னமும் தங்களைப் பற்றிய அறிவும், தங்கள் சுயமரியாதையைப் பற்றிய கவலையும் சரியாக இல்லை. நாம் வேறு; ஆரியர் வேறு என்கின்ற உணர்ச்சி வர வேண்டும். ஆரியர் சமயம், கடவுள், சாஸ்திரம், கலை, பழக்கவழக்கம் வேறு; திராவிடன் சமயம், கடவுள், சமயாதாரம், கலை, பழக்க வழக்கம் வேறு என்கின்ற எண்ணம் ஏற்பட வேண்டும்.

நம் மக்கள் ஆரிய சமயத்திற்கு அடிமையாய் இருக்கிறவரையில் நம் சமுதாயத்திற்குச் சுயமரியாதை ஏற்படப்போவதில்லை; விடுதலையும் ஏற்படப்போவதில்லை. நாம் முதலில் சமய சமுதாயத் துறையில், ஆரிய ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும். ஆரியத்திற்கு அடிமைப் பட்டதாலேயே—நமக்குச் சூத்திரப் பட்டம் கிடைத்திருக்கிறது; அதனாலேயே நாம் அரசியல் அடிமைகளாய் வாழ்கிறோம்; கல்வி முதலிய எந்தத் துறையிலும் முன்னேற முடியாமல் தடைப்படுத்தப் பட்டிருக்கிறோம். இன்று திராவிடர்கள் சொல்லிக்கொள்ளும் வைணவம், சைவம் எனப்பட்டதும், மற்றும் பலவுமான சமயங்கள் என்பதெல்லாம்—முதலில் எப்படியிருந்தாலும், இன்று ஆரிய ஆதிக்கத்திற்கும் திராவிடர் அடிமைத் தன்மைக்கும், இழிவுக்கும் பயன்படத் தக்கதாகவே இருந்து வருகிறது.

நமது அடிமைப் புத்தியின் தடிப்பானது, ஆரிய ஆதிக்க சாதனங்கள் எல்லாம் நம்முடையதென்று உரிமை பாராட்டி, அவற்றிற்கு அடிமைப்படத் துணிந்துவிடச் செய்து விட்டது. ஆரியக் கடவுள்கள் என்பவைகள் இருக்குமிடங்களில் நமக்கு எவ்வளவு இழிவு ஏற்பட்டாலும் சிறிதும் வெட்கம், மானமின்றி அவைகளிடம் சென்று இழிவை அனுபவிக்க முந்துகின்றோம். ஆரியர்கள் கற்பித்துக் கொண்ட கடவுள்களுக்கு, ஆரியர்கள் கற்பித்து வைத்த கதைகளைத் தமிழில் எழுதிவைத்துக்கொண்டு, அக் கதைகளைச் சொல்லிப் பாடிப் பிரார்த்தனை செய்கின்றோம். இது ஆரிய மதப் பிரச்சாரமா, இல்லையா என்று கேட்கின்றேன். இப்படி ஒரு கூட்டம் நாட்டிலிருக்கும்போது திராவிடர்களுக்கு விமோசனம் எப்போது, எப்படி வரும்? ஆகவே, இப்போது நம் மக்களுக்கு, ஆரியர்--திராவிடர் சமய, சமுதாய பேதங்களை விளங்கச் செய்யவேண்டியது நமது முக்கிய கடமையாகும். இதற்காக ஒரு தனிப் பிரச்சாரமும் ஒரு தனி ஸ்தாபனமும் ஒரு தனிப் படையும் வேண்டும். நமது நிலையை நாமுணர்ந்து, நமது இழிவை நீக்கிக்கொள்ளப் பாடுபடுவது குற்றமாகாது. இதனால் யாரும் குற்றம் சொல்லவும் முடியாது.



யுத்தம் முடிந்ததும் நமது வேலை இதுவாகத்தான் இருக்கவேண்டும். முக்கியமாய்—இதற்காக வேண்டியுமே, 'திராவிட நாடு திராவிடருக்கு' என்கின்றோம். சர்க்கார் நம் நாட்டைப் பிரித்து நமக்கு ஒரு தனி அரசியல் ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால், நாம் அப் போராட்டத்தில் மடியத் தயாராய் இருக்க வேண்டும். ஒருவனுடைய நாட்டில் வேறு ஒருவன் வந்து ஆதிக்கம் செய்யும்படியாகவும், நாட்டுக்குடையவனைச் சூத்திரனாகவும்—கீழ்ச் சாதியாகவும் செய்திருக்கும், செய்துவரும் ஆட்சி எப்படிப்பட்டதானாலும் அது கொடுங்கோன்மை ஆட்சியேயாகும்.

இன்று நமக்குத் 'திராவிடர்' என்கின்ற பெயரேயில்லை; 'தமிழர்' என்கின்ற பெயரேயில்லை. சூத்திரர், தீண்டப்படாதவர், நாலாம் சாதி, அய்ந்தாம் சாதி என்கின்ற பெயர்கள்தானிருக்கின்றன. இது சரியா? இது உங்களுக்குச் சம்மதமா? இது மாற்றப் பட வேண்டாமா? அதற்கானவை செய்யப்பட வேண்டாமா? வைசிராய் நமது கட்சித் தலைவனைக் கூப்பிடவில்லை என்பது அவமானமாகக் கருதுவதானால். நம் சமுதாய $3\frac{1}{2}$ கோடி மக்களை ஒரு அன்னக் காவடி உஞ்சவிருத்திக் கூட்டம்—சூத்திரன், கீழ்ச் சாதி, தொடக்கூடாத சமூகம் என்று கூப்பிடுவதையும், ஒதுக்கிவைப்பதையும் பற்றி எவ்வளவு அவமானப்பட வேண்டும்? இதையெல்லாம் விடவா மந்திரி பதவி, வைசிராய் சபை மெம்பர் பதவி, ஆலோசனையாளர் பதவி, கவர்னர் பதவி ஆகியவைகள் பெரிதும் அவசரமும் அவசியமுமானவை என்று கேட்கிறேன்?

வயது சென்ற பெரியவர்கள், மானமற்ற செல்வப் பித்தர்கள், பதவிப் பித்தர்கள் நிலை எப்படியோ இருக்கட்டும். வாலிபர்களாகிய நீங்கள்—உறுதியுடனும் துணிவுடனும், நம்பிக்கையுடனும் முன்வாருங்கள்! ஒரு பத்து வருஷத்திற்குள் பெரியதொரு சமுதாயப் புரட்சி நடத்தி, மானமும் விடுதலையும் பெற்றுவிடலாம்.

[சென்னை கோகலே மண்டபத்தில், 20-7-1940-ல் நடந்த டாக்டர் நாயர் தினக்கொண்டாட்டத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 28-7-1940]

## 2. திரு. வி. க.

தோழர்களே!

அன்பர் கலியாணசுந்தரனார் அவர்களின் தமிழ்த் தொண்டை நானே நன்றாய் அறிந்தவன். அவரது தமிழ்த் தொண்டிற்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால், நானே யாவேன். நான் தமிழ் பேசுவதும், எழுதுவதும் தப்பாக இருந்தாலும், நான் பல பத்திரிகைகள் நடத்துவதும், சுமார் 50, 60 புத்தகங்கள் வெளியிட்டதும் அன்பர் கலியாண சுந்தரனார் அவர்கள், தமிழ் மொழியில் 'தேச பக்தன்', 'நவ சக்தி' முதலிய பத்திரிகைகளின் தொண்டாலேயாகும். திரு. வி. க. அவர்களின் 'தேச பக்தன்' பத்திரிகைக்குப் பிறகே தமிழ், அரசியல் மேடைகளைக் கைப்பற்றிற்று என்று சொல்லுவேன். அரசியல் தலைவர்களையும் தமிழ் அடிமை கொண்டதற்குக் காரணம் அவர்களது பத்திரிகைகளே யாகும். அப் பத்திரிகைகள் என்னைவிட மோசமானவர்களையும் தமிழ் மொழியில் உணரவும், தமிழ் பேசவும் செய்துவிட்டதால்—'தமிழ் மொழியைக் காதால் கேட்டால் தோஷம்' என்று கருதும் சாதியாரும் தமிழில் கலந்து கொள்ளவும், தமிழை ஒப்புக்காவது மதிக்கவும் செய்துவிட்டது.

[சென்னை பச்சையப்பன் கல்லூரியில், 13-1-1936-ல் நடந்த தமிழ்த் திருநாளின்போது சொற்பொழிவு—'திராவிட நாடு' 22-8-1943]

படிப்பகம்

www.padippakam.com



தன்மையுமுள்ள மனிதனுக்குத் தேசம், அரசியல், சுதந்திரம் என்னும் தேசியத் தன்மையைவிட—சுயமரியாதை, சுதந்திரம் என்னும் சாதீயத் தன்மையே பிரதானம் என்கின்ற உணர்ச்சி ஏற்படாதா? ஏற்பட வேண்டாமா? என்று கேட்கிறேன்.

டாக்டர் நாயர், இதுவரை உயிருடன் இருந்திருப்பாரானால், இந்தத் துறையில் வெகுதூரம் நாம் முன்னேறியிருப்போம். அவருக்குப் பிறகு சமுதாய சுயமரியாதையுள்ள சரியான தலைவர்கள் திராவிட சமுதாயத்தில் காணுவது மிகக் கஷ்டமாகப் போய்விட்டது. அதனால்தான், டாக்டர் நாயருக்குப் பிறகு அவருடைய இடத்தைப் பூர்த்திசெய்ய ஆளில்லாமல் போய்விட்டது என்று நான் அடிக்கடி சொல்லுகிறேன்.

இன்று, அவருக்குப்பின் நமக்கு அரசியல் சுதந்திரம் எவ்வளவோ கிடைத்தது. இதன் பயனாய் நம் மக்கள் பலர், தாங்கள் கனவிலும் நினைத்திருக்க முடியாததும், தங்களுக்குச் சிறிதும் தகுதியில்லாததுமான பல பெருமையும், பதவியும், பணமும், செல்வாக்கும் பெற்றார்கள். என்றாலும், சமுதாயத்தில் அவர்கள் எல்லோருமே கீழ்ச் சாதியாய் இருப்பது கடுகளவாவது மாற்றமடைந்ததா? அதற்காக என்று எந்தத் தலைவராவது பாடு பட்டார்களா? இன்னும் பெரிய பதவிகளும், அதிகாரங்களும், அரசியல் சீர்திருத்தங்களும் சர்க்காரால் அளிக்கப்பட்டு அவை நமக்குக் கிடைத்துத்தான் என்ன பயன் என்று கேட்கின்றேன்.

நாம் தலைவராகி என்ன பயன்? மகாத்மாவாகி என்ன பயன்? அரிவரி எழுத்துக்கள் எல்லாம் நம் பெயருடன் தொடர்ந்து வரும்படியான பட்டங்கள் கிடைத்து என்ன பயன்? மகாராஜாவாகி என்ன பயன்? கவர்னராகி என்ன பயன்? சூத்திரனாகக் கீழ்ச்சாதியாகத் தானே இருக்கிறோம்? இருப்போம்! அதுவும், நாம் ஆண்ட—நாம் வாழ்ந்த—நம்முடைய நாட்டில், அதுவும் பிழைக்கவந்த–பாடுபடாத சோம்பேறிக் கூட்டத்தால்–$3\frac{3}{4}$ பேர்வழிகளால் அம் மாதிரி அழைக்கப்படுகிறோம்; நடத்தப்படுகிறோம். ஆனால், யோக்கியதையற்ற, நாணயமற்ற, ஒழுக்கமற்றவன் என்று தீர்ப்பளிக்கப்பட்ட அயோக்கியன் ஆரியனாயிருப்பதால் பிராமணன்—மேல்சாதிக்காரன் என்று அழைக்கப்படுகிறான்; நடத்தப்படுகிறான். இன்று, இந்த நாட்டில் நாமே இப்படி இழிவாய் நடத்தப்படுகிறோம் என்றால், இது ஒழியாமல் நமக்குப் பதவியா, உத்தியோகமா, பட்டமா என்று கேட்கிறேன். இந்த நூற்றாண்டில் இந்த இழிவு நீக்கப்படாவிட்டால் இனி என்று நீக்கப்படப்போகிறது என்று கேட்கிறேன்.

காங்கிரசுக்கு (ஆரியர்களுக்கு) பூரண சுயேச்சை கிடைத்த பின்பா, அல்லது இவர்கள் ஆசைப்படுவதுபோல்—பிரிட்டிஷார் போய், வேறுசாதியார் இந்தியாவை ஆளுகின்றபோதா என்று கேட்கிறேன்.

ஜஸ்டிஸ் கட்சி என்றால், இந்த மாதிரியான இழிவுகளை ஒழிக்கவே தோன்றிய கட்சி என்கின்ற எண்ணம் மக்கள் ஒவ்வொருவருக்கும் தோன்ற வேண்டும்; மற்றும் கட்சியிலுள்ள ஒவ்வொருவருக்கும் அதுவே முதன்மையும் முக்கியமுமான கடமை என்றும் தோன்றினால் அல்லவா—ஒவ்வொருவரும் அதற்காகப் பாடுபட முற்பட்டால் அல்லவா—இக் கட்சியினால் மக்கள் மானமும் சுயேச்சையும் அடைய முடியும் என்று கேட்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் வைசிராய் நம் கட்சித் தலைவர்களைக் கூப்பிடவில்லையென்றும், மற்றக் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டார்கள் என்றும் மிக்க கோபமாகப் பேசினார்கள். அந்தக் கோபத்தில் எனக்குக் கலந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், வைசிராய் நம்மைக் கூப்பிட்டுக் கேட்கும்படியான ஒரு கட்சியாக நம்முடைய கட்சியில்லை என்பது என் அபிப்பிராயம். எதனால் அப்படிச் சொல்லுகிறேன் என்றால், நம் கட்சிக்குப் பலமில்லை; ஒற்றுமையில்லை; கட்டுப்பாடில்லை; நம்மைக் கூப்பிடாவிட்டால் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்று வைஸ்ராய் நினைத்திருக்கிறார். நம்



கட்சியும் அரசியல் பதவிகளுக்கு இருக்கிறதேயொழிய—மற்றபடி ஒரு பெரிய சமுதாய மாறுதலுக்கு இல்லையென்று அவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. நம் கட்சியார் பலரும் இதை உணரவில்லை. அதனாலேயேதான் வைசிராய் கூப்பிடாததைப்பற்றியும், பதவியைப்பற்றியும் இலட்சியம் செய்யக்கூடாது என்கிறேன்; பதவியில் இலட்சியம் வைத்தால் நமது இலட்சியம், கொள்கையெல்லாம் பறந்துபோக வேண்டிவரும்.

சமுதாயக் கட்டுப்பாட்டின் பலத்தாலும் மேன்மையாலும் கிடைக்கும் பதவியால்தான் நாம் ஏதாவது பயனுள்ள காரியம் செய்துகொள்ள முடியும். அப்படி இல்லாதவரை, பதவியே நமக்குக் கேடாய் முடிந்தாலும் முடியலாம்.

நமக்குள் போதிய பலமும் கட்டுப்பாடும் இல்லாத காலத்தில் கிடைக்கும் பதவியால் தனிப்பட்ட நபர்கள் பதவியை அனுபவிக்க நேரிடுவதைத் தவிர, சமுதாயத்துக்கு வேலை செய்யும்படியான பலம் ஏற்படாது. அதனால்தான் நான், அப்படிப்பட்ட அதிகாரமில்லாத பதவிகூடாது என்கின்றேன். மற்றும், பலமும் கட்டுப்பாடுமில்லாத பதவி நமக்குள் கலகத்தை உண்டாக்கிக்கொண்டேயிருக்கும்; நம் எதிரிகளுக்கும், விஷமத்தையும் தொல்லையையும் விளைவிக்க சவுகரியத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கும்.

ஜஸ்டிஸ் கட்சி 17 வருடகாலம் ஆட்சியிலிருந்தது; அதற்கு எதிரிகள் தொல்லையைச் சமாளிக்க வேண்டிய வேலையே சரியாயிருந்தது. அத் தொல்லை யில்லாதிருக்குமானால் அனேக வேலைகள் செய்திருக்கும். அது, நமக்குச் செய்யவேண்டிய வேலையெல்லாம் செய்துவிட்டதாகச் சொல்லமுடியாது. பதவியின்மூலம் எதிரிகளை அடக்கலாம், ஒழிக்கலாம் என்பது முடியாத காரியம். அதற்குப் பதிலாக, பதவி பெறுவதின் மூலம் எதிரிக்கு ஆக்கம்தான் அதிகம் ஏற்படும். உதாரணமாக, நாம் 17 வருஷகாலம் பதவி வைத்திருந்தது எதிரிகளுக்குப் பலம் சேர்த்துக்கொள்ள மிக சவுகரியமாயிற்று. அது போலவேதான் எதிரிகள் 27 மாத பதவி வைத்திருந்தது, நமக்குச் சற்றாவது பலம் ஏற்பட உதவிற்று. எதிரிகள் பதவி வகித்ததால் நமக்குச் சில கெடுதிகள் ஏற்பட்டது என்றாலும் அதைவிட இலாபம் என்று மதிக்கத் தகுந்த சில கட்டுப்பாடும் உணர்ச்சியும் ஏற்பட்டது.

இப்போது எதிரிகள் பதவியிலில்லாததால் நம் கட்சிக்கு ஒரு உற்சாகமோ உணர்ச்சியோ இல்லாமல் சப்பையாக இருக்கிறது தெரியவில்லையா?

அதுபோலவே, நாம் பதவியிலில்லாததால் நம் எதிரிகள் (காங்கிரஸ்) மதிகெட்டுப் பைத்தியம் பிடித்துக் கண்டபடி உளறித் திரிய வேண்டியதாயிற்று. இருவரும் பதவியில்லாததாலேயே மக்களுக்கு, இன்று யார் நிர்வாகம் நடத்துகிறவர்கள் என்பதும், அவர்களுக்கு என்னென்ன அதிகாரமென்பதும்கூடத் தெரியாது. இந்த மாதிரி சர்க்கார் இருக்கிற காலத்தில் யுத்தம் இல்லாதிருக்குமானால் நாம் பல காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கலாம்: அல்லது, நம் எதிரிகள் பதவியிலிருந்தாலும் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டிருக்கலாம். இல்லாவிட்டாலும் நமக்குள் இனியும் கட்டுபாடும் உணர்ச்சியுமாவது ஏற்பட்டிருக்கும். எப்படியெனில், அப்போதுதான் நமக்குக் கிளர்ச்சி செய்ய உற்சாகமேற்படும்.

ஆதலால்தான் இப்போது—இதுசமயம் மத்திய அரசாங்கமாகிய வைஸ்ராய் நிர்வாக சபையிலாவது, மாகாண அரசாங்கமாகிய கவர்னர் நிர்வாக சபையிலாவது, இப்போது ஜனப்பிரதிநிதிகள் என்கின்ற–உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்கள் என்கின்ற நபர்கள் பதவியில் இருக்கக்கூடாது என்றும்; இப்போதிருக்கிறபடியே சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கொண்டே நடத்தப்படட்டும் என்றும் சொல்லுகிறேன். சர்க்கார் தங்கள் இராஜதந்திர புத்தியின் பயனாய் பொது ஜனங்களிலிருந்து பொறுக்கி எடுத்து இந்த இடங்களில் சிலரைப் போட்டுவிட்டால் அவர்கள் ஒருவருடன் ஒருவரும் பதவியிலிருப்பவர்களும் வெளியில் இருப்பவர்களும் போராடிக் கொண்டிருப்பதில் கவனம் இழுக்கப்பட்டுவிடும்

படிப்பகம்

www.padippakam.com



களான்னு கேக்கணும்; இல்லாவிட்டா அதை போடுன்னு சொல்லணும். அப்ப பெத்தவங்களுக்கு—ஆண் இருந்தாலும் ஒண்ணு, பெண் இருந்தாலும் ஒண்ணுன்னு ஆகும். இப்ப ஆம்பிளையெல்லாம் உத்தியோகம் பாக்கறாங்க; பொம்பளைங்க எல்லாம் வீட்லே இருக்காங்க. அதனாலேயே நமக்கு ஆம்பிளைப்புள்ளை ஒண்ணு வேணும்னு தோணுது; அவன் சம்பாதிக்கிறான்னு தோணுது. அதனாலே நாம் 'ஈக்வலைஸ்' பண்ணிட்டா உத்தியோகத்தை ஆளுக்குப் பாதின்னு?

அமைச்சர்: அப்போ, ஆம்பிளைங்க கொஞ்சம் 'அப்போஸ்' பண்ணுவாங்களே, எதிர்ப்பாங்களே?

பெரியார்: ஏன்? எப்படி 'அப்போஸ்' பண்ணுவாங்க? எப்படி நீங்கதான் அப்போஸ் பண்ணமுடியும்? உங்க மகளுக்கும், உங்க தங்கச்சிக்கும், உத்தியோகம் வரும் போது, நீங்க ஏன் 'அப்போஸ்' பண்றீங்க?

அமைச்சர்: ரொம்ப சரி.

பெரியார்: இல்லாது போனாதானே வரும்; யாருக்கோ வருதுன்னா! உங்களுக்கு வேலையில்லை. உங்க பொண்ணுக்கும் வருது—உத்தியோகம்; உங்க தங்கச்சிக்கும் வருது.

அமைச்சர்: ரொம்ப சரி.

பெரியார்: அதனாலே அப்படின்னு சட்டமே போட்டுடுங்க—இப்போ ஆதித் திராவிடருக்கு போட்டமாதிரி. 50 சதவீதம் 'பீமேலுக்கு' (பெண்ணுக்கு) உத்தியோகம் ஒதுக்கிவைக்கணும் அப்படின்னு கொஞ்சம் 'மார்ஜின்' விடலாம்.

அமைச்சர்: இந்த 'சஜஷன்' (யோசனை) நல்லா இருக்குது. 'ஒரிஜினல் சஜஷன்'. இதை நாங்க எக்சாமின் (பரிசோதனை) பண்ணிப் பார்க்கிறோம், இதை பண்ண முடியுமான்னு. இன்னொன்று கேக்கணும் உங்களை! இப்ப வந்து, 'அபார்ஷன்' இருக்குது பாருங்க 'கருச்சிதைவு'. இதுபற்றி பெரிய 'காண்ட்ரவர்சி' (வாக்குவாதம்). சர்க்காரிலே—நாம் 10 வருஷமா இதைப்பத்தி எழுதிக்கொண்டே வர்றோம். அவங்க சொல்றாங்க, இது 'அபார்ஷன்' லீகலைஸ் (சட்டபூர்வமாக) பண்ணிட்டா—

பெரியார்: அது எப்படி? லீகலைஸ்னு எப்படிச் சொல்றது? அபார்ஷன்னா நேச்சுரல் அபார்ஷனா? மருந்து சாப்பிட்டா?

அமைச்சர்: மருந்து சாப்பிட்டு—அதாவது 'இன்ட்யூஸ்டு அபார்ஷன்'. அது வந்து தப்புன்னு சொல்லியிருக்காங்க. ஆனா வருஷத்துல 40 லட்சம் பெண்கள் இந்த மாதிரி சரியான டாக்டர்கள் இல்லாத—கெடுதி டாக்டர்கள்கிட்டே போயிட்டு அவங்க உடம்பை கெடுத்துட்டு கொலைகூட ஆயிடுது. அந்த மாதிரி ஆகாம 'லீகலைஸ்' பண்ணிட்டா.

பெரியார்: ஆனா, வேணுங்கிறவங்க செய்துக்கலாம்.

அமைச்சர்: 'தட் இஸ் குட்' (That is good) அதுதான் இருக்கணும். 'வாலண்டிரியா', தெரியாம கர்ப்பமாயிட்டா, குழந்தை வேண்டாம்னு சொன்னா, சர்க்கார் ஆஸ்பத்திரியிலே போயி, அந்த ஆபரேஷன் பண்ணிக்கலாம்.

பெரியார்: அதை 'லீகலைஸ்' பண்ணலாமே. அதுல யாருக்கும் தகராறு இல்லே.

அமைச்சர்: அதுதான். சர்க்காரில் ஒரு 'பில்' (மசோதா) கொண்டு வந்திருக்கோம். அது வந்து ராஜ்ய சபையில் 'அப்ரூவல்' ஆயி செலக்ட் கமிட்டிக்குப் போயிருக்கிறது; அப்புறம் லோக் சபாவிற்கு வரும். அப்புறம் பில் வந்து, 'ஆக்ட்' (சட்டம்) ஆயிடும்.

பெரியார்: என்ன மாதிரி பதில் சொல்லலாம்னா, அட நாம செய்யாவிட்டா அவுங்க செய்துக்க போறாங்க. அதுலே அபாயத்துக்கு ஆளாவாங்க. இப்ப நாம செய்யறதினாலே நல்லதனமா குற்றத்துக்கு இடமில்லாம செய்து—



அமைச்சர்: சரியான டாக்டர்களை வைத்து சரியான ஆஸ்பிடலை (ஆஸ்பத்திரி) வைச்சு ஒண்ணும் கெடுதியாகாம சரியாக பண்ணணும்னா, 'லீகலைஸ்' பண்ணணும்.

பெரியார்: ஆம். அந்த மாதிரி செய்யணும்.

அமைச்சர்: ரொம்ப நன்றி உங்களுக்கு.

[8-3-1970-ல், சென்னை வானொலி ஒலிபரப்பு—
பேட்டி: டாக்டர் S. சந்திரசேகர், மத்திய அரசு அமைச்சர்
நூல்: வானொலியில் தந்தை பெரியார், பதிப்பு 1970]

# 2. தலைவர்களைப்பற்றி

## 1. டாக்டர் நாயர்

தலைவர் அவர்களே! தோழர்களே!

இன்று, நமது காலஞ்சென்ற தலைவர் டாக்டர் நாயர் அவர்கள் உயிர்துறந்த நாளைக் கொண்டாடுகிறோம் என்றாலும் அத் தலைவரவர்கள் இறக்கவில்லை என்று சொல்லுவேன். அவர் கொள்கைகளும், தொண்டுகளும் இன்னும் இந் நாட்டில் வேலை செய்துகொண்டு வருகின்றன. ஆதலால், அவர் இன்னும் உயிருடனிருக்கிறார்.

டாக்டர் நாயர் ஒரு புரட்சிவீரர்; சுயமரியாதை வீரர்; அவரை ஒரு திராவிட லெனின் என்று சொல்லவேண்டும். நாயர் நாளில் பிறந்திருக்காதவர்களுக்கும், அவர் நாளில் கோவணம் கட்டாத சிறுபிள்ளையாய் இருந்தவர்களுக்கும்—இன்று, நாயர் பெருமையையும் அவரால் தாங்களடைந்த மேன்மையையும் அறிந்துகொள்ள முடியாது. ஏனெனில், நாயர் தொண்டாற்றத் தொடங்கிய நாளில் இந்நாட்டு மக்கள் நிலை எப்படியிருந்தது என்பது அப்போது போதிய அறிவுபெற்றிருந்த மக்களுக்கே விளங்கியிருக்கும். அவர் தொண்டின் பயனாய் இப்போது யோக்கியதைபெற நேர்ந்த மக்கள், 'நாயர் தேசத் துரோகி' என்றும் 'வகுப்புவாதி' என்றும் பேசலாம்.

அப்படிச் சொல்லும் ஒவ்வொரு திராவிடனும் இன்றும் தன்னைப் பற்றி யோசித்துப் பார்ப்பானானால், சிறிது சுயமரியாதை இருந்தாலும், 'நாயர் இனியும் கொஞ்ச காலமிருந்து வகுப்புவாதத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்யாமல் போய்விட்டாரே!' என்று வருத்தப்படுவான். எப்படியெனில், இன்று எவ்வளவு பெரிய பதவியிலிருந்தாலும், எவ்வளவு பெரிய தேசியவாதியாயிருந்தாலும், வகுப்புவாதத்தை எவ்வளவு வெறுத்த மகானாயிருந்தாலும் அவன் திராவிடனாய் இருப்பானானால்—ஆரியனுக்குக் கீழ்ச்சாதியாயும், சூத்திரனாயும் இழிவுபடுத்தப்படுகின்றானாகக் கருதப்படுகின்றானா, நடத்தப்படுகின்றானா, இல்லையா என்பது விளங்காமல் போகாது.

இன்று—இந்த 20-வது நூற்றாண்டில், உலகில் எவ்வளவோ அற்புதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான வயதில், திராவிடர்களிலேயே மாபெரும் தலைவர்களும், மகான்களும், தேச பக்தர்களும், தியாகிகளும், தேசியத் தலைவர்களும் இருக்கிறார்கள் என்று ஆரியர்களாலேயே கொண்டாடப்படும் இக் காலத்தில்—இன்றும், இப்போதே-இதோ, தெருக்கள் தோறும் ஒவ்வொரு சோற்றுக் கடை, இட்லிக் கடை, தண்ணீர்ப் பந்தல், கடவுள் சன்னிதானம் என்று சொல்லப்படும் இடம் ஆகியவைகளில் ஆரியனுக்கு வேறு, திராவிடனுக்கு வேறு என்று இடம் பிரித்துவைத்து, ஆரியனுக்குப் பிரித்துவைத்த இடத்தில் திராவிடன் பிரவேசித்தால் தோஷம், தண்டனை முதலிய இழிவுகள் ஏற்படுத்திவைக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று பாருங்கள். இதைப் பார்த்த—மானமும் மனிதத்



படிப்பகம்

www.padippakam.com



பெரியார் : எங்க ஜனங்க சொல்வாங்க—'அவிஙுக்குப் புள்ளையில்லே; அதனாலே அவன் எல்லாத்தக்கும் வேணாம், வேணாம்னு சொல்றான்—அவன் 'ரிசி'னு—அவ்வளவு தான் சொன்னாங்க. கலியாணம் ஆனவங்களையெல்லாம் நான் கேலிபண்ணுவேன்; புள்ளைதாச்சி ஆனவங்களையெல்லாம் 'அதக்குள்ளவா ஆயிடுச்சு? அப்படி இப்படின்னு' பரிகாசம் பண்ணுவேன். அப்ப, சின்னவங்க எதிர்த்துப் பேசமாட்டாங்க; பெரியவங்களா இருக்கிறவங்க 'அவன் வரடன், வரடன்'னு சொல்லுவாங்க, அதுக்கு.

அமைச்சர் : சர்க்காருடைய 'புரோகிராம்' இருக்கிறது, பாருங்க. இந்த 'பேமிலி பிளானிங்', உலகத்திலேயே பெரிய 'புரொகிராம்' இதுதான். பணம் செலவு பண்றதிலேயோ, ஆபீசர்சிலோ, வேலை பண்றதிலையோ ஒரு 130 நாடுகளை 'சம்பேர்' பண்ணினாக்கா—நம்முடைய புரோகிராம்—டெல்லி கவர்ன்மெண்ட் புரோகிராம்தான் பெரிய புரோகிராம். அதுக்கு உங்க 'ஒப்பீனியன்' வேணும். உங்க அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறேன்?

பெரியார் : ரொம்ப நல்ல காரியம்தான்—இந்தமாதிரி அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. சமுதாயத்திலேயே ஒரு பெரிய, ஒரு நல்ல காரியம். ரொம்ப ஜனங்களுக்கு தொந்தரவு இல்லாம, மனசுக்கு சந்தோஷமா வாழ்வு கொடுக்கக்கூடிய ஒரு காரியம்தான். அதுலே இன்னொன்று எனக்கு என்ன தோணுதுன்னா—இந்தப் பெண்களை—இதிலே பிரச்சாரம் பண்றதக்கு ரொம்பப் பக்குவப்படுத்திச் சொன்னா நல்லா இருக்கும் அப்படின்னு. பொம்பளைக்கு ரொம்ப ஆசை புள்ளைபெக்க வேணும்னு. ஆம்பிளைக்கு ஒரு அளவிலிருந்தாலும் பொம்பளைக்குக் கூடுதலா இருக்கும் அது. அவங்களண்டை போயி நெருங்கி, அந்த விஷயங்களை எடுத்துச் சொல்றாப்பிலே கொஞ்சம் நல்ல பொம்பிளைங்களைவிட்டு அதிகமா பழகிச் சொன்னால், கொஞ்சம் அவங்க கேப்பாங்கன்னு நினைக்கிறேன்.

அமைச்சர் : நாங்க வந்து பெண்களுக்கு சொல்றதுக்கு பொம்பிளைங்களைத்தான் 'டிரெயின்' பண்ணி 'பேமிலி பிளானிங்' ஆபீசர்சுன்னு அனுப்புகிறோம்—அவங்க கிராமத்துக்கும், டவுனுக்கும் போயி சொல்லுவாங்க. ஆண்களை அனுப்பறதில்லை.

பெரியார் : அதோடு கூடவே இந்த 'ரிலிஜியஸ் பெயித்' (மத நம்பிக்கை) இல்லாத பொம்பளைங்களையே அனுப்பணும். ஆம்பளைகளைப் போட்டாலும் கூடுமான வரைக்கும் அவனை பகுத்தறிவுவாதியாகவே போடணும். பெண்ணா போட்டாலும், ஆம்பிளையா போட்டாலும்—மதநம்பிக்யையில்லாதவங்களா பார்த்துப் போடணும்.

அமைச்சர் : இவ்வளவு பெரிய புரோகிராமிலே, மதநம்பிக்கையில்லாத 'ஆபீசரை' கண்டுபிடிக்கிறது கொஞ்சம் கஷ்டம் எங்களுக்கு; ரெண்டாவது, ஒண்ணு பண்றேன் இப்போ. இப்போ ஆண்கள், பெண்கள் கலியாணம் பண்றதக்கு ஒரு வயது 'லிமிட்' ஒண்ணு இருக்கு. அதக்கு 'ஏஜ் ஆப் கன்சென்ட்' (Age of consent)னு சொல்றோம். அதுக்குவந்து ஆண்களுக்கு 18; பெண்களுக்கு 15. இது வந்து 1956-லே, இந்த, 'ஹிண்டு கோட்பில்' ரெய்ஸ் பண்ணினது. எனக்கு அது திருப்தியா இல்லை. ஆண்களுக்கு 21, பெண்களுக்கு அட்லீஸ்டு 18ஆவது இருக்கணும்னு பண்ணனும். அதுக்கு ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு எழுதுகிறோம். 17 ஸ்டேட் கவர்ன்மெண்டும் ஒத்துக்கணும். ஒத்தக்கொண்டால்தான் எங்க மத்திய சர்க்காரிலே சட்டம் உண்டாக்க முடியும். அதுக்கு ரொம்ப வாதம் நடக்குது. 'யெஸ்', 'நோ'; 'யெஸ்', நோ' சொல்லிக்கொண்டேயிருக்காங்க, 'வேண்டாம்' 'இருக்கணும்'னு. உங்க அபிப்பிராயம் என்னனு கேக்கறேன்.

பெரியார் : அய்யா, சொல்றது ரொம்ப சரி. 18 வயது கூட பத்தாது; பெண்களுக்கு 20 வயசு இருந்தாதான், அது ஏதாவது பயன்படும். 18 வயசுன்னா ஏதோ ஜனப் பெருக்கத்துலே கொஞ்சம் குறையுதுன்னு சொல்றீங்க.



அமைச்சர் : இப்ப இருக்கிறதுலே 5 வயசு கூடுது. இப்ப 15 இருக்குது. நான் 18 ஆக ஆக்கணும்னு பார்க்கிறேன். உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் இந்தி பேசும் நாடுகளிலெல்லாம் 12, 13, 14 வயதில் கலியாணம் பண்ணிடறாங்க.

பெரியார் : அதெல்லாம் பெண்களை ரொம்ப அடக்கவேணும்கிறதக்காக ஏற்பட்ட 'ஏஜே' (வயது) தவிர. அது வேறே எந்த ஒரு காரணத்தையும் கொண்டு அது ஏற்படலே. 20 வைத்தோமானால் ரெண்டு காரியம் 'சால்வ்' (Solve) ஆகும். அவுங்களா பார்த்து ஒரு சுதந்திரமான புஷனைப் பார்த்துக்குவாங்க.

அமைச்சர் : பெண் வந்து 20 வயசாச்சுன்னா, படிச்சுட்டு அவளா பார்த்து இஷ்டப் பட்டு கலியாணம் செய்துக்கிடுவா. இப்ப வந்து அப்பா—அம்மா யாராவது தேடிப்புடிச்சுக் கலியாணம் பண்றாங்க.

பெரியார் : அந்தமாதிரி தேடிப்பிடிப்பாங்க; பெண்களுடைய வாழ்க்கைத்தரம் கொஞ்சம் உயரும். 20 வயசு வரைக்கும் அவங்க படிச்சாங்கன்னா—வேலைக்கு லாயக்கு ஆகறாப்பலே ஒரு படிப்பு அவங்களுக்கு வந்து சேரும். இந்த 18-லே கொண்டு போயிட்டா எஸ். எஸ். எல். சி. பாஸ் பண்ணியும், பெயில் ஆகியும் இருக்கிற நிலைமை வரும். அவங்க, புருஷனுக்கு என்னமா பாடுபட முடியும்? அவங்களுக்கு தொழில்தான் என்ன வரும்? எனக்கென்னமோ, எவ்வளவு நாளைக்குக் கலியாணத்தைத் தள்ளிப்போடறமோ அவ்வளவும் நல்லதுதான்; பின்னாலேயும் ரொம்ப உபயோகப்படுவாங்க அவங்க. இப்ப என்ன பண்றது? 18-லியே கலியாணம் பண்ணினா 19-லியே குடும்பப் பொம்பிளையா போயிடறா; குடும்பத்தைக் காப்பாத்தற வேலையே அவளுக்குச் சரியாப் போகுது; 20-லே ரெண்டு புள்ளையாகிப்போகுது. புருஷனுக்கும் குடும்பத்தைக் காப்பாத்தறதுக்குத்தான் வேலை வேண்டியிருக்குது. சம்பாதனையும் குடும்பத்தைக் காப்பாத்தறதுக்குத்தான். இதுக்குத் தகுந்தபடி தன்னுடைய ஒழுக்கத்தையும் கெடுத்துக்கிறான் அவன். அவன் 'கேரக்டரும்' (Character) கெட்டுப்போகுது. அதெல்லாம் இல்லாம இருக்கணும்னா ஒரு 20, 22 வயதாவது இருக்கணும்.

அமைச்சர் : அப்புறம் முன்னே என்ன பண்ணினோம்? ஒரு 4 வருஷத்துக்கு முன்னே ஒரு தம்பதிகளுக்கு 2, 3, 4 குழந்தை பெத்துக்கலாம்; அவங்களுக்குப் பணமிருந்தால், சவுகரியமிருந்தால் குழந்தைகளுக்குத் துணிமணி கொடுத்து காப்பாத்த முடியுமானா, 5, 6 குழந்தைகூட பெத்துக்கலாம்னு ஒரு தடவை சொன்னோம்.

அப்புறம் சொன்னோம்; அதெல்லாம் முடியாது; ரெண்டு குழந்தைங்க, இல்லேன்னா மூணு. இப்ப நான் கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தா அதுவும் கொஞ்சம் சாஸ்தியா போச்சு.

அப்புறம் நாங்க சொன்னோம்—ஒரு ரெண்டு குழந்தை போதும்னு சொல்றோம். அதிலே என்ன கஷ்டம்னா, இப்போ ஒரு ஆண்—ஒரு பெண் குழந்தை பொறந்துட்டுதானா கஷ்டமில்லே. ரெண்டும் பெண்ணா போயிட்டதுன்னா இன்னும் ஒன்றுக்கு 'டிரை' (Try) பண்றாரு ஆளு, ஆண் குழந்தை வேணும்னு. அதுக்கு எப்படி அவங்களை 'எஜுகேட்' பண்றதுன்னு எனக்குத் தெரியலே. பெண் குழந்தை பொறந்தாலும் அதோடு நிறுத்திக்கலாம்; ஒண்ணும் கஷ்டமில்லே. பெண்ணும் ஆணும் ஒண்ணுன்னு சொல்றதுக்கு நம்மாலே முடியலே; நான் சொல்றது என்னன்னா, 2 குழந்தை இருந்தா போதும். 2 ஆண் குழந்தை இருந்தாலும் நிறுத்திடணும்னு சொல்லணும். அதை எப்படி சொல்றது மக்களுக்கு?

பெரியார் : நான் சொல்றேன். அந்த எண்ணம் மக்கள் மனசிலேருந்து மாற வேணுமானா 50 சதவீதம் பெண்களுக்கு உத்தியோகம்; 50 சதவீதம் ஆம்பிளைக்கு உத்தியோகம். ஒரு ஆபீஸ்லே 100-பேர் உத்தியோகஸ்தர் இருந்தா—50 பெண் இருக்காங்

படிப்பகம்

www.padippakam.com



மாத்திரம் போடுகிறார்கள். நான்தான் எனது பத்திரிகையில் நீங்கள் சொல்லும்—'சாதியொழிய வேண்டும்' என்ற கருத்துக்களைப் போடுகிறேன்.

வினோபா : தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நீங்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செய்யவேண்டும். அதிக நிலதானம் கிடைக்க உதவி செய்யவேண்டும்.

பெரியார் : என்னால் கூடுமான உதவிகளைச் செய்கிறேன். நான் கொண்டுள்ள வேலை அதாவது, சாதி ஒழிப்பு முக்கியமானது. நான் அரசியல் பற்றிக் கவலைகொள்ளாதவன். அரசியலில் ஈடுபடமுடியுமானால் நீங்கள் செய்துவரும் வேலையையும், இனி செய்யப்போகும் வேலையையும் சேர்த்து, சட்டத்தின் மூலம் ஒரே வரியில் உத்தரவு போட்டு விடலாம். ஆனால், சாதி ஒழிப்பு வேலை அவ்வளவு இலேசானதல்ல. அதனால்தான், அந்த முக்கியமான வேலையை நான் மேற்கொண்டு செய்கிறேன். நான் அதையே எல்லா வற்றையும்விட முக்கியமானதாகக் கருதுகிறேன்.

(திருச்சி மாவட்டத்தில் கால்நடையாகச் சுற்றுப்பயணம் செய்துவரும் ஆச்சார்யா வினோபா பாவே அவர்களும், பெரியார் அவர்களும் இன்று (19-1-1957) காலை 10-45 மணிக்கு திருச்சி தேசியக் கல்லூரியில் சந்தித்தார்கள். சுமார் 2 மணி நேரம் உரையாடினார்கள்.)

['விடுதலை' 20-1-1957]

## 4. அமைச்சர் எஸ். சந்திரசேகர் (வானொலிப் பேட்டி)

டாக்டர் சந்திரசேகர் : குடும்பநலத்திட்டப் பிரச்சாரப் பணியில் தாங்கள் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறீர்கள். நான் நினைப்பது சரியாக இருந்தால்—1920 லேயே குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டு இருந்தீர்கள். இந்தப் புத்தகத்தை எழுத வேண்டும் என்ற கருத்து தங்களுக்கு எப்படித் தோன்றியது என்று கூறினால் பரவாயில்லை.

பெரியார் : எனக்கு சின்ன வயசிலேயே ரொம்ப செல்லப்பிள்ளை மாதிரி எல்லாரிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருந்தது. அதிலே, எனக்குக் கொஞ்சம் ரொம்ப வேகமான கருத்துக்களெல்லாம் தோணும். 'அது தப்பு, இது தப்பு'ன்னு கருத்துக்களெல்லாம் எனக்குத் தோணும். அதை நான் சாதாரணமா, தைரியமா வெளியிடுவேன். அந்த முறையிலே மதசம்பந்தமா, இலக்கிய சம்பந்தமா—அதது சம்பந்தப்பட்டவங்ககிட்டே வாதாடி, வாதாடி ஒரு மாதிரி—பொதுவா சொன்னா, ஒரு வாயாடி என்ற நிலைமைக்குப் பேரு வர்றபடி வாதாடிட்டு இருந்தேன். அதே போக்குலேதான் ஜனங்களண்டை பழகும்போது இந்தப் பிள்ளைகுட்டி அதிகமாக பெத்துகிட்டு இருக்கிறவங்க படற கஷ்டம், நம்மகிட்ட வந்து முறையிடுகிற முறை, புருஷன்—பெண்சாதி சண்டை போட்டுகிட்டா வர்ற கலவரம் இதுகளையெல்லாம் நான் 'சீரியஸா' (Serious) கவனிக்கிறபோது, இந்தப் புள்ளைங்களாலே பெரிய தொல்லை படறாங்க, இயற்கையா இருக்கிற தொல்லை தவிர, புள்ளை குட்டிகளால் வேற தொல்லை படறாங்கண்ணு கண்டேன்.

வேடிக்கையா சொல்றேன். 'குடி அரசு' ஆபீசிற்கு எதிர்த்தாப்பலே ஒரு வீடு. அவங்க நம்ம சாதியில்லே. எங்களுக்கும் அவங்களுக்கும் ஒரு மாதிரியான முறை. அண்ணன்—தம்பி, மாமன்—மச்சான்னு கூப்பிடுவோம். அந்த முறையிலே எதிர்த்த வீட்டுக்காரன் ஒருவன் அவன் எனக்கு மாப்பிள்ளையா வேணும். அவன் மனைவிக்கு நான் அண்ணனாவேணும். இந்தமாதிரி இருக்கும். அவனுக்கு நாலு குழந்தை; கைக்குழந்தை ஒன்னு. அந்த நிலையில் அவன் கோவம் வந்து பொண்டாட்டியைப் போட்டு அடிச்சுப்புட்டான்.



அப்ப நான் இங்கிருந்து சிபாரிசுக்குப்போய், 'என்னடா! இந்த மாதிரி பண்றியே, கொள்றியே? குழந்தை குட்டிகளுக்கு இந்தமாதிரி பண்ணுறியே?' அப்படின்னு ரொம்பக் கடினமா கேட்டதுக்கு, 'இதைப் பத்தியெல்லாம் நீ கேக்காதே'ங்குற அளவுக்கு வந்துட்டான், அந்தக் கோபத்தினாலே. அந்தம்மா அழுதுபுட்டு சொல்றபோது ஒரு வார்த்தை சொன்னா—'இந்த மாதிரி இவருகிட்டே இன்றைக்கு நேத்திக்கல்ல—நான் படற அவஸ்தை; கொஞ்ச நாளாகவே ஒதை தின்னு தின்னு எனக்கு ரொம்ப வேதனையா போச்சு; அதனாலே போயி எங்காவது ஆத்தில்—குளத்தில் இறங்கிடலாம்னு முடிவு; இதுகளை வச்சி கிட்டு நான் என்ன பண்ணட்டும்? இல்லாட்டா இதுகளையும் தள்ளிப் போட்டுல்ல நான் விழவேணும். இந்தக் கொலைக்கு நான் ஏன் பாகப்படணும். இந்த ஆள் கிட்டே உதை தின்னுகிட்டிருக்கேன். இல்லாட்டா நான் போய் விழுந்திடுவேன் ஆத்தில்லே' அப்படின்னு அவ சொன்னா.

வாய்துடுக்கு முறையிலே, 'சரி ஏன் இப்படி பெத்தே நீ? உன்னை யாரு இவ்வளவு பெத்துக்கச் சொன்னா? பெத்துக்கிட்டியே, வேதனைப்படறியே' அப்படின்னேன்.

அப்ப, அந்த அம்மா பேச்சோட பேச்சா, 'அது நம்ம செயலில்லே, அது பகவான் செயல் அப்படி பண்ணிட்டது. நான் என்ன பண்ணட்டும்!' அப்படின்னு சொன்னா. அப்பதான் அந்த பகவான் செயலைக் கண்டிச்சுப் போட்டு, நான் அன்னிக்கே வந்து எழுதியிருக்கிறேன். இந்த மாதிரி குழந்தைகளைப் பெத்துகிட்டு சங்கடப்படறாங்க. இப்படி கிணத்துலே விழுந்துட துணிஞ்ச பொம்பளைகூட, 'இந்தப் புள்ளைகளை வெச்சுகிட்டு எப்படி நான் விழுகிறது? இதையும் போட்டுட்டு விழுறதுன்னா புள்ளையைக் கொல்றதுன்னா, எனக்கு இதா இருக்குதே'ன்னு விசனப்படறாண்ணு வேடிக்கையா அப்ப வந்ததுதான்.

வந்ததுக் கப்புறம், நாம 'சீரியாசா' எழுதிட்டு இருந்தமா, 'பிரிட்டிஷ் நியூசிலே' வந்தது இந்த சங்கதி—இங்கிலீஷ் பத்திரிகையிலே; அதை எடுத்துத்தான் எழுதிகிட்டிருக்கேன். நம்ம கருத்துக்குச் சரியா இருந்தது; அப்ப எங்கிட்ட இருந்த கிளார்க் ஒருத்தர் கொஞ்சம் இங்கிலீஷ் தெரிஞ்சவர். அவருகிட்டே சொன்னேன்—இதை மொழி பெயர்த்திடலாம்னு. அதைத்தான் முதல் முதல்லே செய்தோம். அப்படியே எண்ணம் வளர்ந்து போச்சு.

எனக்கு முதல் மனைவியாயிருந்த நாகம்மை கல்யாணமாகிக் கொஞ்ச வருஷம் ஆன உடனே ஒரு குழந்தை பொறந்து செத்துப்போச்சு. இந்தக் குழந்தையை நான் பார்க்கவுமில்லை; அய்ந்து மாதம் ஆச்சு; அய்ந்து மாசமா நான் அதைப் பார்க்கக்கூட இல்லை. எனக்கு அவ்வளவுதான். மறுபடியும் அந்தம்மாகிட்டே சொன்னேன்.

'எனக்குக் குழந்தை இல்லேன்ற பேச்சே நாம வைச்சுக்கக் கூடாது இங்கே; அப்படி—இப்படின்னு அந்தம்மா கெஞ்சுவாங்க, 'ஒரு புள்ளே மாத்திரம் இருக்கட்டும்; வேறு இல்லாட்டிப் போகட்டும்'னு. நம்ம குடும்பத்துக்கு ஒண்ணு என்னா—நூறு புள்ளே நாம எடுத்து வளர்த்திடலாம்னு சொன்னேன். அதனாலே ரெண்டு, மூன்று பிள்ளை வளர்த்தேன். அதுக்கு நான் ரொம்ப உபதேசம் பண்ணினேன், 'நம்மளுக்குக் குழந்தை வேண்டாம்'னு. அப்படியே அந்த எண்ணம் வளர்ந்தது. அந்த—குழந்தை பெக்கிறது ஒரு 'நியூசன்சு'ன்னு எனக்குப்பட்டது. என்னை இராமேஸ்வரத்துக்கெல்லாம் கூட்டிக் கிட்டுத்தான் வந்தாங்க—குழந்தைக்காக; ஆமா. எங்க ஊரிலேகூட கணபதி, அரசமரம்—வேப்பமரம் கல்யாணம் இதெல்லாம் பண்ணியிருக்காங்க. எனக்கு புள்ளே வேண்டாம்னது அப்படியே பழகிப்போச்சு. அது என்னவோ 'பிராக்டிகலா' (Practical) ரொம்ப வளர்ந்து போச்சு அந்த எண்ணம்.

அமைச்சர் : அந்தக் காலத்திலே குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்னமாவது எதிர்ப்பு இருந்திருக்கும், இல்லையா?

படிப்பகம்

www.padippakam.com



1957-ல், திருச்சியில் வினோபா பாவே அவர்களுடன் இராமாயணம் பற்றி உரையாடி பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தம் கருத்தை விளக்கினார்.



அய்ரோப்பிய நாடுகளிலும், ரஷ்யாவிலும் சுற்றுப்பயணம் செய்து திரும்பிய பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு 1932 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில்—'குடிஅரசு' 18-12-1932



## 3. பெரியார்-வினோபா பாவே

வினோபா பாவே: சாதி ஒழிப்பும் என்னுடைய முக்கியக் கொள்கைகளில் ஒன்று. தேர்தல் சண்டையில் கலந்து கொள்ளாமல் சமுதாயப் பணி செய்வதைப் பாராட்டுகிறேன். நான் இராமாயணம்—எந்த நூலையும் பிரமாதமாகக் கொள்வதில்லை. தவறான கருத்துக்கள் இருந்தாலும் ஒரு சில நல்ல கருத்துக்களும் இருக்கின்றன. தவறான கருத்துக்களை விட்டுவிட்டு நல்ல கருத்துக்களை எடுத்துக்கொள்ளலாம். இராமாயணத்தைச் சாதாரண நூலாகவே நான் கருதுகிறேன். சாதியை ஒழிக்கும் பணியில் உள்ள நீங்கள், இதுபோன்ற நூல்களையும், கடவுள்களையும் ஒழிக்கிறேன் என்கிறீர்கள். நமக்கு முக்கியமான கருத்துக்களை மாத்திரம் வற்புறுத்தி, மற்றவைகளில் தளர்த்திக் கொடுப்பதன் மூலம் அதிகக் கூட்டமான மக்கள் நம் பக்கம் திரும்பக்கூடும். நமது குறிக்கோள் சாதியை ஒழிப்பது. அதை மாத்திரம் வற்புறுத்தினால் போதும். கடவுள்களையும் புராண ஆதாரங்களையும் (சாதி ஒழிய வேண்டுமென்பதற்காக) ஒழிக்கக் கிளம்பினால் புராண ஒழிப்பு, கடவுள் ஒழிப்பு வேலையாகவேதான் இருக்க நேரிடும். புராண, இதிகாசங்களில் உள்ள நல்ல கருத்துக்களை வைத்துக்கொண்டே சாதியை ஒழிக்கலாம்.

பெரியார்: இராமாயணம் நீதிநூல் என்பதற்கு அதில் ஒன்றும் இல்லை; நீதி கற்பிக்கக்கூடிய தன்மையில் அதில் ஒன்றுமே கிடையாது; நல்ல கருத்துக்கள் இருப்பதாக ஒன்றும் இல்லை. இரண்டொருவருக்கு வேண்டுமானால் நல்ல கருத்துக்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளமுடியலாம். நாம் பொதுமக்கள் என்பவர்களை மனத்தில் வைத்துப் பார்க்கவேண்டும். விஷத்தின்மீது சர்க்கரை பூசிக்கொடுத்தால் எத்தனை பேருக்கு—சர்க்கரையை மட்டும் சாப்பிட்டுவிட்டு விஷத்தைத் துப்பிவிடக்கூடிய சக்தி இருக்கும்? மக்களுக்கு நீதிநூல் தேவையென்றால், உங்களைப் போன்றவர்கள் புதிதாக எழுதித் தரலாம். அந்த இதிகாசங்களை எழுதியவர்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தானே? அதுவும் அந்தக் காலத்து மனிதர்கள்!

சாதியொழிய வேண்டுமானால், அதற்கு ஆதாரமாக இருக்கின்ற இராமாயணம், பாரதம், மனு போன்ற புராண இதிகாசங்கள், கடவுள்கள் எல்லாம் ஒழிந்தே தீரவேண்டும். ஒரே ஆண்டவன் என்பவன்கூட சாதிக்கு ஆதாரமாயிருந்தால் ஒழிந்தே தீரவேண்டும். இராமாயணம், பாரதம் போன்ற புராணங்களிலும், இராமன், கிருஷ்ணன் போன்ற கடவுள்களிடத்திலும் மற்றும், பதிவிரதை என்று சொல்லப்படுகிறவர்களிடத்திலும் கொஞ்சங்கூட யோக்கியத் தன்மையோ, நாணயமோ காணப்படவில்லை. அதைப் படிக்கின்ற மக்களுக்கும் அதிலிருந்து நாணயமோ, ஒழுக்கமோ வந்ததாகவும் இல்லை. நான் கடவுள் என்று ஒன்று உண்டு என்று புரிந்து கொள்ளவும், அந்த ஒரு கடவுளை நம்பவும் முடியாவிட்டாலும், ஒரு கடவுள் உண்டு என்கிறவர்களிடம்—இல்லையென்று மறுத்துப்பேச வரவில்லை. ஆனால், சாதிக்கு ஆதாரமாக இருக்கிற மனுதர்மம் போன்ற சாஸ்திரங்களையும், சாதிக்கு ஆதாரமாக இருக்கிற இதிகாசங்களையும், சாதிக்கு ஆதாரமாயிருக்கிற இராமன், கிருஷ்ணன், பிரம்மா, விஷ்ணு போன்ற கடவுள்களையும் வைத்துக்கொண்டு சாதியை ஒழிக்க முடியாது. நான் வால்மீகி, கம்பராமாயணம் போன்ற நூல்களைப் படித்தே கூறுகிறேன்.

[இராமாயணத்திலுள்ள ஆதாரங்களை எடுத்துக் காட்டியபோது]

வினோபா: நான் துளசி இராமாயணமும், மராட்டி இராமாயணமுந்தான் படித்துள்ளேன். அவைகளில் அப்படி இல்லை.

பெரியார்: நீங்கள் ஏழெட்டு மாதங்களாகத் தமிழ்நாட்டில், எனது சமுதாய மக்களுக்கு, சாதியொழிய வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிவருவதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். இதைப் பத்திரிகைக்காரர்கள் போடுவதேயில்லை; சாதியொழிய வேண்டுமென்ற கருத்தை மறைக்கவே பார்க்கிறார்கள்; அவரவர்களுக்கு வேண்டிய சங்கதிகளை

படிப்பகம்

www.padippakam.com



காங்கிரசின் ஆட்சி, உலக மக்களுடையவும், பிரிட்டிஷாருடையவும் கண்களைத் திறந்துவிடும்; அப்போது காங்கிரசின் எதேச்சாதிகாரச் செயல்களிலிருந்து சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டுவதவசியமென்ற உண்மை ஸ்வரூபத்தைக் கண்டுகொள்வர்.

கட்டாய இந்தி சம்பந்தமாக என் கருத்துக்களை ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும் ஆதரித்தனர். கட்டாய இந்தித் திட்டம், நமது கலைகளுக்கு விரோதமாக—பிராமண மதத்தையும், கலைகளையும் பலப்படுத்தி விஸ்தரிக்கும் ஒரு குறுகிய நோக்குள்ள திட்டாகுமென்று நான் அபிப்பிராயப்படுவதுபோன்றே, ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் அபிப்பிராயப்பட்டனர். நான் நமது மாகாணத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மீண்டும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்ட விஷயமாகப் பிரஸ்தாபித்தபோது ஜனாப் ஜின்னா அவர்கள், 'நீங்கள் என் பூரண ஆதரவையும் பெறுவீர்கள்' என்று கூறினார். இவ்விஷயத்தில் டாக்டர் அம்பேத்காரும் என் அபிப்பிராயத்தை ஆதரித்தார். இந்தி சம்பந்தமாக எனது கொள்கையை ஜனாப் ஜின்னா அங்கீகரித்ததிலிருந்து, நான் மீண்டும் ஆரம்பிக்கப்போகும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் இம் மாகாண முஸ்லிம்கள் தாராளமாகக் கலந்து உதவி செய்வார்களென நான் நம்புகிறேன். நம் மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிசபையின் செயல்களைப்பற்றி என்னிடமிருந்து முதல் தரமான தகவல்களைக் கேள்விப்பட்டவுடன் அவ்விரு தலைவர்களும், 'காங்கிரசாட்சியின் கீழ் நீங்கள் மிக சகிப்புத் தன்மையோடு நடந்துகொண்டதைப் பாராட்டுகிறோம். நீங்கள் இதர மாகாணங்களிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்து, அங்குள்ள பொதுமக்களுக்கு இவ்வுண்மையை உணர்த்தவேண்டும்' என்று ஏகோபித்துக் கூறினார்கள்.

இந்நாட்டிலுள்ள எல்லா காங்கிரஸ் எதிர்ப்பு ஸ்தாபனங்களையும் ஒன்றுதிரட்ட, நாங்கள் ஏகமனதாக வேலைசெய்வதென முடிவு செய்தோம். இதனைக் 'கட்டுப்பாடான வேலை'யென அவர்கள் கூறுகின்றனர். ஆனால், ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் அரசியல் நிர்ணய சபையைப் பலமாக எதிர்க்கின்றனர். மாஜி காங்கிரஸ் மந்திரிசபையால் ஏற்படுத்தப்பட்ட படுமோச வரிகளை ஒழிக்கக் கிளர்ச்சிசெய்யும் விஷயத்தைப்பற்றியும், வேலையற்றிருக்கும் சட்டசபைகளின் அங்கத்தினர்களுக்குச் சம்பளங்கள் அளிக்கப்படக்கூடாதெனக் கிளர்ச்சி செய்யும் விஷயத்தைப்பற்றியும் நாங்கள் மேற்கொண்டு சம்பாஷணை நடத்தினோம். கூடிய சீக்கிரத்தில் இதற்காக ஒரு கூட்டுக் கிளர்ச்சி செய்யத், திட்டம் வகுப்பதென உத்தேசித்துள்ளோம்.

நாம் நியாயமாகக் கருதுபவைகளை எல்லாம் அழித்துக்கொண்டுவரும் விபரீத குணமுள்ள ஸ்தாபனமாகிய காங்கிரசை, கடைசிவரை எதிர்த்துப்போராட—'காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கம்' ஒன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்படுமென அந்த மாபெருந் தலைவர்களிருவரும் வாக்குறுதிகளும், நம்பிக்கையுமளித்தனரென்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்ளுகிறேன். சீக்கிரத்தில் நான் மீண்டும் பம்பாய் செல்வேன்; அதுசமயம் அரசியல் நிலைபற்றி இன்னும் விரிவான விஷயங்கள் விவாதிக்கப்பட்டு, ஒரு திட்டம் வகுக்கப்படுமென நம்புகிறேன்.

என் சுற்றுப்பிரயாணம் மிகப் பயன்படத் தக்கதாகவும் பேருதவியாகவுமிருந்தது. இதுபோன்ற சந்தோஷமான சந்திப்பு—நமது நண்பர்கள் எதிர்பார்ப்பதைவிடவும், நம் எதிரிகள் பயப்படுவதைவிடவும் வெகு சீக்கிரத்தில்—ஏற்படுவதற்கு என் நன்றியையும், வந்தனத்தையும் செலுத்திக்கொள்கிறேன்.

[பம்பாயில், 8-1-1940-ல் ஜின்னா அவர்களையும் டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் பெரியார் கண்டு பேசியது பற்றிய அறிக்கை—'குடிஅரசு' 28-1-1940]

www.padippakam.com



காங்கிரஸ் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நடந்துகொள்ளும் முறைகள் பற்றியும் விவாதம் நடைபெற்றது. பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரசைத் தட்டிக்கொடுப்பதையே இலாப கரமானதாகவும், பாதுகாப்பானதாகவும் கருதுகின்றதென்று நாங்கள் ஏகமனதாக அபிப் பிராயப்பட்டோம். ஏனெனில், வேறெந்த ஸ்தாபனமும் காங்கிரசைப்போன்று இராஜ விஸ்வாசமாகவும் பூரணமாகவும் பிரிட்டிஷ் சர்க்காரின் பாட்டுக்குத் தாளம்போட முடியாது. மேலும், காங்கிரசைப்போல் வேறெந்தக் கட்சியும், பிரிட்டிஷாரின் வசதிக்காகப் பொது மக்களின் உணர்ச்சிகளைக் கருணையற்ற முறையில் புண்படுத்த முற்படாது.

பிரிட்டிஷ் நலன்களுக்குத் தீங்கு செய்யாததும், அவ்வாறு செய்ய நினையாததுமான ஒரே ஒரு கட்சி காங்கிரஸ்தான். ஒருக்கால் பிரிட்டிஷ் சர்க்காரின் கருத்தும் இவ்வாறுதான் இருக்குமெனக் கருதவேண்டியிருக்கிறது. அவ்வாறில்லாவிடில், காங்கிரசிடம் பிரிட்டன் இப்போது நடந்துவரும் தோரணையில் நடந்துவராது.

பிரிட்டிஷார் காங்கிரசின் செல்வாக்கு க்ஷீணமடைந்து வருவதை நன்கறிவர். ஆனால், அவர்கள் 'குரைக்கும் நாய்களுக்கு எலும்பு போடும்' பழைய கொள்கையை இப்போது அனுஷ்டித்து வருகின்றனர்; அயல்நாட்டு ஆதிக்கத்தை உண்மையில் வெறுப்ப வர்களைக் கருணையின்றி ஒழித்துவிடும் கொள்கையும் பிரிட்டிஷார் அனுசரித்து வருகின்றனர்; ஒருவேளை அவர்கள் இதர சில கட்சித் தலைவர்களையும், சமூகத் தினரையும்கூடப் புறக்கணித்துவிட முயற்சிப்பர்.

முஸ்லிம் லீக் மதப் பாதுகாப்புக்காக ஏற்பட்ட ஒரு ஸ்தாபனமன்று. இஸ்லாத்திற்கு இத்தகைய உதவியொன்றும் தேவை இல்லை. இஸ்லாம் மதம் தன் சுயபலத்தோடு நின்று, தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் வல்லமையுடையது.

ஆனால், அரசியல் முஸ்லிம்களுக்காகப் பேசவும், செயல்கள் புரியவும் முஸ்லிம் லீக் ஒரு ஸ்தாபனத்துக்கு மட்டுமே உரிமை இருக்கிறது. முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம்களின் சுயமரியாதைக்குக் கண்கண்ட பூரண சின்னமாகும். அரசியல் முஸ்லிம்களுக்காக முஸ்லிம் அல்லாதார் பேசுவதை, முஸ்லிம் லீக் ஒருபோதும் சகித்துக்கொண்டிராது.

முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விஷயங்களில் பிரதிநிதித்துவம் வாய்ந்தது. முஸ்லிம் சமூகத்தின் சார்பாகப் பேசவும், முஸ்லிம் சமூக நன்மைகளை உத்தேசித்து எத்தகைய அரசியல் மாற்றத்தையும் அனுமதிக்கவும் முஸ்லிம் லீக் ஒன்றுக்கு மட்டுமே உரிமையுண்டு. இந்த உண்மை உணரப்படவேண்டும்; அங்கீகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் முஸ்லிம் லீக், தனது அரசியல் கோரிக்கைகளை இதர அரசியல் கட்சிகள்முன்னும் பிரிட்டிஷார்முன்னும் சமர்ப்பிக்கும்.

'முஸ்லிம் லீக் தனது உரிமைகளைக் கோருவதற்காக அன்னியருக்குப் பணிந்து விடாது. நமது சமூகத்தின் 'இஜ்ஜத்' (கண்ணியத்தை)தை அங்கீகரிக்கக்கூடிய அந்தஸ்தையே—முஸ்லிம் லீக் கோருகிறது. இத்தகைய கண்ணியமான 'இஜ்ஜத்'தைக் கொண்டுவரும் எவரையும் வரவேற்க லீக் தயாராயிருக்கிறது' என்று ஜனாப் ஜின்னா கூறினார். இந்தப் பெருந்தன்மை வாய்ந்த, நியாயமான கூற்றை யாராவது மறுக்க முடியுமா என்று நான் கேட்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் சிறுபான்மையினர் நிலைமை சம்பந்தமான பிரச்சினையில் நாங்கள் ஒரே அபிப்பிராயம் கொண்டவர்களாகவே இருக்கிறோம்.

'எந்த வகையிலாவது காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வர முயற்சிக்குமாயின், அம்முயற்சியொன்றே சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டுவதன் அவசியத்தை உணர்த்திவிடும். இப் பாதுகாப்புகளில்லாமல் எந்த அரசியல் முறையும் திருப்திகரமாக நடைபெறாது' என்று ஜனாப் ஜின்னா அபிப்பிராயப்படுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



காந்தியார்: எப்படி மாற்றக் கூடும்?

பெரியார்: தாங்கள்தான் இந்துமதத்தின் பேரால் எதையும் சொல்லி மக்களை நடக்கச் செய்யலாம் என்று சொன்னீர்களே! அதேபோல் நாளைக்கு வரப்போகும் மகானும் இந்துமதத்தின் பேரால் எதையும் செய்யலாமல்லவா?

காந்தியார்: இனி வரும் காலத்தில் அந்தப்படி மாற்ற எவராலும் சுலபத்தில் முடியாது.

பெரியார்: நான் சொல்லுகிறேன். தாங்கள் மன்னிக்க வேண்டும். இந்துமதத்தை வைத்துக்கொண்டு இன்று தங்களாலேயே நிரந்தரமாக ஒன்றும் செய்துவிட முடியாது. பிராமணர்கள் அவ்வளவு தூரம் விட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள். தங்கள் கருத்து அவர்களுக்கு விரோதமாகச் சற்றுப் பலிதமாகிறது என்று கண்டால் உடனே எதிர்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இதுவரை ஒரு பெரியாராலும் இந்தத் துறையில் எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டதில்லை என்பதோடு, அப்படிப்பட்ட ஒருவரையும் பிராமணர்கள் விட்டுவைத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

காந்தியார்: உங்கள் மனத்தில் பிராமணர்மீது ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டு விட்டது. அதுவே உங்களுக்கு முன்னணியில் நிற்கிறது. இதுவிஷயமாய் இவ்வளவு நேரம் நாமிருவரும் பேசியதில் இதுவரை நாம் எவ்வித ஒற்றுமை முடிவுக்கும் வரவில்லை என்பதாக நான் நினைக்கிறேன். ஆனாலும், இனியும் 2, 3 தடவை சந்திப்போம். பிறகு நாம் என்ன செய்யலாம் என்பதைப்பற்றிச் சிந்திக்கலாம்—என்று சொல்லிக்கொண்டு படுக்கையில் இருந்தபடியே ஒரு கையால் தன் தலையை உருட்டித் தடவினார்.

[1927-ல், பெங்களூரில் காந்தியார்-பெரியார் சந்திப்பு— நூல்: 'இந்து மதமும் காந்தியாரும் பெரியாரும்' (1948)—வள்ளுவர் பதிப்பகம், பவானி]

## 2. பெரியார்-ஜின்னா-அம்பேத்கார் சந்திப்பு

பம்பாயில் 8-1-1940ஆம் தேதி ஜனாப் ஜின்னா அவர்களையும், டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் பெரியார் கண்டு பேசியது பற்றிய அறிக்கை:

நான் பம்பாயில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முகமதுஅலி ஜின்னாவையும், ஆதித் திராவிட சமூகத் தலைவர் டாக்டர் அம்பேத்காரையும் சந்தித்துச் சில மணி நேரங்கள் அவர்களுடன் மனம்விட்டுத் தாராளமாகச் சம்பாஷித்தேன்.

நாங்கள் காங்கிரஸின் ஆரம்பம் முதல், அரசியல் நிர்வாகத் திறமையின்மை வரை—பல்வேறு விஷயங்கள்பற்றிச் சம்பாஷித்தோம். ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் காங்கிரசைப்பற்றிக் கூறிய அபிப்பிராயங்கள் என் சொந்த அபிப்பிராயத்தை ஒத்தனவாகவே இருந்தன. நாங்கள் மூவரும் காங்கிரஸ் செல்வாக்கினால் ஏற்படும் தீங்குகளை அகற்ற ஒன்றுகூடி முயற்சிப்பதென முடிவு செய்தோம்.

'காங்கிரசின் செயல்களும், அதில் அங்கம் வகிப்பவர்களும், கொள்கைகளும், தீவிர மாறுதலும் காங்கிரஸ் எப்போதும் ஓர் அரசியல் ஸ்தாபனமெனக் கூறமுடியாதென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன' என்று ஜனாப் ஜின்னா கூறினார்.

காங்கிரஸ் சுயநலங்கொண்ட சில தனிப்பட்ட நபர்களடங்கியது. அது பொது மக்களின் உணர்ச்சியில் விளையாடும் முறையில் நடந்துவருகிறது. காங்கிரசாரும் பொது மக்களின் பிரதிநிதிகளெனத் தங்களைக் கூறிக்கொண்டு, அவர்களிடம் கிடைத்ததையெல்லாம் விழுங்கி, தங்கள் குலப்பெருமையை பலப்படுத்திக்கொள்ளுகின்றனர்.



பம்பாயில் 8-1-1940-ல் முகமது அலி ஜின்னா அவர்களுடன், தம் தனி நாடு கொள்கைபற்றிப் பெரியார் ஈ. வெ. ரா. கலந்துரையாடினார். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் இடப் பக்கம் அமர்ந்துள்ளவர் டாக்டர் B. R. அம்பேத்கார் அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



காந்தியார் : நீங்கள் சொல்லுவது மற்ற மதங்களுக்குச் சரி; இந்துமதத்துக்கு அது பொருந்தாது. மதத்தை ஒப்புக்கொண்டு, மதத்தின் பேரால் நீங்கள் என்ன வேண்டு மானாலும் செய்யலாம்; உங்களை ஆட்சேபிக்க எவனாலும் முடியாது.

பெரியார் : அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? அப்படி என்றால் யார் சம்மதிப் பார்கள், அதற்கு என்ன ஆதாரம் என்று சொல்லவேண்டாமா?

காந்தியார் : நீங்கள் சொல்வது எல்லாம் சரி. அதாவது, இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை. உண்மைதான் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்குக் குறிப்பிட்ட கொள்கை இல்லை என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆதலால்தான், நாம் ஒரு இந்து மதஸ்தன் என்பதை ஒப்புக்கொண்டு, நம் இஷ்டம்போல் அதற்குக் கொள்கை ஏற்படுத்திக்கொள்ளலாம். இன்று இந்த நாட்டில், ஏன்—உலகத்திலேயே சொல்லுகிறேன்—மக்களை நாம் கருதுகிறப்படி நல்வழிக்குக் கொண்டுவர வேண்டுமானால், இந்துமதம் ஒன்றினால்தான் முடியும்; மற்ற மதங்களால் முடியாது. ஏனென்றால், மற்ற மதங் களுக்குச் சரித்திர ஆதாரம், கொள்கை ஆதாரம் உண்டு. அவற்றில் கை வைத்தால் கையை வெட்டிவிடுவார்கள். கிறிஸ்துநாதர் என்ன சொன்னாரோ, அவர் சொன்னதாகச் சொல்லும் பைபிள் என்ன சொல்லுகிறதோ, அந்தப்படிதான் கிறிஸ்தவர்கள் என்பவர்கள் நடந்தாக வேண்டும்.

முகமது நபி அவர்கள் என்ன சொன்னாரோ, குரான் என்ன சொல்லுகிறதோ, அப்படித்தான் முஸ்லிம்கள் என்பவர்கள் நடந்தாக வேண்டும். மாறுபட்டு ஏதாவது ஒரு திருத்தம் சொன்னால், அது மத விரோதமாகிவிடும். சொல்லுகிறவர் மதத்திற்கு வெளியில் வந்துதான் சொல்லவேண்டும். உள்ளே இருந்து சொன்னால் ஒழித்து விடுவார்கள். இதுதான் உண்மையான மதம் என்பவைகளின் தன்மை.

ஆனால், இந்து மதம் என்பது இல்லாத மதம் ஆனதால் அந்த மதத்தின்பேரால் யாரும் மகான்களாக ஆகி எதையும் சொல்லலாம். அப்படியே இந்து மதத்தில் ஏற்பட்ட பல பெரியோர்கள், மகான்கள் பலவற்றைச் சொல்லி இருக்கிறார்கள். ஆதலால், நாமும் அந்த மதத்தை வைத்துக்கொண்டே அனேக சீர்திருத்தங்களை இந்தக்கால மனிதவர்க்கத் தேவைக்கு ஏற்றபடி செய்யலாம்.

பெரியார் : மன்னிக்கவேண்டும்—அதுதான் முடியாது.

காந்தியார் : ஏன்?

பெரியார் : இந்துமதத்தில் உள்ள சுயநலக் கும்பல் அதற்குச் சற்றும் இடம் கொடுக்காது.

காந்தியார் : ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? 'இந்து மதத்தில் தீண்டாமை இல்லை' என்று சொல்லுவதை இந்துமதத்தினர் யாவரும் ஒப்புக்கொள்ளவில்லையா?

பெரியார் : ஒப்புக்கொள்வது என்பது ஒன்று, ஒப்புக்கொண்டபடி நடப்பது என்பது வேறு. ஆகையால், இது காரியத்தில் நடக்காது.

காந்தியார் : நான் காரியத்தில் செய்கிறேன். இந்த 4, 5 வருஷங்களில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணரவில்லையா?

பெரியார் : உணருகிறேன். அடிப்படையில் மாறவில்லை. தங்களுக்கு உள்ள செல்வாக்கைக் கண்டும், தாங்கள் அவர்களுக்கு வேண்டியிருக்கிறது என்ற சுயநலத்துக்கு ஆகவும் ஒப்புக்கொண்டதாக நடிக்கிறார்கள். அதைத் தாங்கள் நம்புகிறீர்கள்.

காந்தியார் : (சிரித்துக்கொண்டே) யார் அப்படி நடக்கிறார்கள்?

பெரியார் : பார்ப்பனர்கள் யாவரும்தான்.

காந்தியார் : எல்லாப் பார்ப்பனருமா?

பெரியார் : ஆம். ஏன்? தங்கள்கூட இருக்கும் பார்ப்பனர்கள் எல்லோரும்தான்.



காந்தியார் : அப்படியானால் உங்களுக்கு ஒரு பார்ப்பனரிடம்கூட நம்பிக்கை இல்லையா?

பெரியார் : நம்பிக்கை ஏற்படமாட்டேன் என்கிறது.

காந்தியார் : இராஜகோபாலாச்சாரியாரிடம்கூட உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

பெரியார் : அவர் நல்லவர்; உண்மையானவர்; தியாகி; சுயநலமில்லாதவர். ஆனால், இவையெல்லாம் அவர்களது வகுப்பு நலனுக்கு, அவர் உண்மையான தொண்டர், நல்ல தியாகி, அத்தொண்டில் சுயநலமில்லாதவர். ஆனால், என் வகுப்பு நலத்தை அவரிடம் ஒப்படைத்துவிடச் சுலபத்தில் எனக்கு மனம் வராது.

காந்தியார் : இது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அப்படியானால், உலகத்தில் ஒரு பிராமணன்கூட யோக்கியன் இல்லை என்பது உங்கள் கருத்தா?

பெரியார் : இருக்கலாமோ என்னமோ; எனக்குத் தென்படவில்லை.

காந்தியார் : அப்படிச் சொல்லாதீர். நான் ஒரு பிராமணனைப் பார்த்திருக்கிறேன். சந்தேகமற நான் இன்னும் அவரை நல்ல பிராமணன் என்றே கருதுகிறேன். அவர் யார் தெரியுமா? அவர்தான் கோபால கிருஷ்ண கோகலே.

பெரியார் : அப்பாடா! தங்கள் போன்ற மகாத்மாவினுடைய கண்ணுக்கே இப் பெரிய உலகில் ஒரே ஒரு பிராமணன் தென்பட்டு இருந்தால், எங்களைப்போன்ற சாதாரண பாவிகள் கண்களுக்கு எப்படி உண்மைப் பிராமணன் தென்பட்டிருக்க முடியும்?

காந்தியார் : [சிரித்துக்கொண்டே] உலகம் எப்போதும் 'இன்டெலிஜன்ஷியா' [படித்த கூட்டத்தார்] ஆதிக்கத்தில் இருக்கும். பிராமணர்கள் படித்தவர்கள். அவர்கள் எந்தக் காலத்திலும் ஆதிக்கமுள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். ஆதலால், அவர்களைக் குற்றம் சொல்லுவதில் பயனில்லை. மற்றவர்களும் அந்த நிலைக்கு வரவேண்டும்.

பெரியார் : மற்றமதங்களில் அப்படி இல்லை. இந்துமதத்தில் மாத்திரம்தான், பார்ப்பனரே யாவரும் இண்டலிஜன்சியாவாக—படித்தவர்களாக இருக்கிறார்கள். மற்ற வர்கள் அனேகமாக 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்கள் படியாதவர்களாக, ஏமாளிகளாக இருக்கிறார்கள். ஆகவே, ஒரு சமுதாயத்தில் ஒரு சாதி மாத்திரமே 'இண்டலிஜன்ஷி யாவாக'—ஆதிக்கக்காரர்களாக இருக்கமுடியும் என்றால், அந்தமதம், அந்த சாதி தவிர்த்த மற்ற சாதியாருக்குக் கேடானதல்லவா? ஆதலால்தான், நான் அந்த மதம் பொய் மதம் என்பதோடு, அந்த மதம் மற்றவர்களுக்குக் கேடானது. ஆதலால், ஒழியவேண்டும் என்கிறேன்.

காந்தியார் : உங்கள் கருத்து என்ன? இந்துமதம் ஒழியவேண்டும், பிராமணர்கள் ஒழியவேண்டும் என்பதாக நான் கருதலாமா?

பெரியார் : இந்துமதம், அதாவது இல்லாத–பொய்யான–இந்துமதம் ஒழிந்தால் பிராமணன் இருக்கமாட்டான். இந்து மதம் இருப்பதால் பிராமணன் இருக்கிறான். நானும் தாங்களும் சூத்திரர்களாக இருக்கிறோம். எல்லாவித ஆதிக்கமும் பிராமணர்கள் கையில் இருக்கிறது.

காந்தியார் : அப்படி அல்ல. நான் இப்போது சொல்லுவதை பிராமணர்கள் கேட்க வில்லையா? இந்தச் சமயத்திலேயே நாம் யாவர்களும் சேர்ந்து, நீங்கள் கருதுகிற குறை பாடுகளை இந்து மதத்தின் பேராலேயே நீக்கி விடலாமல்லவா?

பெரியார் : தங்களால் அது முடியாது என்பது எனது தாழ்மையான கருத்து. முடிந்தாலுங் கூடத் தங்களுக்குப் பிறகு மற்றொரு மகான் தோன்றி, முன்பு இருந்துவரு வதை இப்போது தாங்கள் மாற்றுவதுபோல், இன்று தாங்கள் செய்ததை அந்த இன்னொரு மகான் மாற்றிவிடுவார்.

படிப்பகம்

www.padippakam.com

# 1. தலைவர்களுடன் சந்திப்பு

## 1. காந்தியாரும் பெரியாரும்

1927ஆம் ஆண்டு பெங்களூரில் காந்தியார் விடுதியில் தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்களும், தோழர் தேவதாஸ் காந்தியவர்களும் கீழே இருந்து வரவேற்று, காந்தியாரிடம் தனி அனுமதிபெற்று தந்தை பெரியார் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவ்வமயம் அங்கு காந்தியாருக்கும், பெரியாருக்கும் நடந்த சொல்லாடலின் ஒரு பகுதி :—

பெரியார் : இந்துமதம் ஒழிந்தாகவேண்டும்.

காந்தியார் : ஏன் ?

பெரியார் : இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை.

காந்தியார் : இருக்கிறதே !

பெரியார் : இருக்கிறதாகப் பார்ப்பனர் கற்பித்து, அதை மக்கள் மனத்தில் அப்படி நினைக்கும்படி செய்திருக்கிறார்கள்.

காந்தியார் : எல்லா மதங்களும் அப்படித்தானே ?

பெரியார் : அப்படி அல்ல ; மற்ற மதங்களுக்குச் சரித்திர சம்பந்தமான ஆதாரங்களும், மதக்காரர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய கொள்கைகளும் உண்டு.

காந்தியார் : இந்துமதத்துக்கு அப்படி ஒன்றும் இல்லையா ?

பெரியார் : என்ன இருக்கிறது ? ஒருவன் பிராமணன், ஒருவன் சூத்திரன், ஒருவன் பஞ்சமன் என்கிற இந்தப் பேத, பிரிவுத் தன்மையல்லாமல் வேறு என்ன பொதுக் கொள்கைகள், பொது ஆதாரங்கள் இருக்கின்றன ? அதுவும், பிராமணன் உயர்ந்தவன் ; சூத்திரன், பஞ்சமன் தாழ்ந்தவன் என்கிற தன்மை நடப்புத் தவிர வேறு என்ன இருக்கிறது ?

காந்தியார் : சரி, அந்தக் கொள்கையாவது இருக்கிறதே !

பெரியார் : இருந்தால் நமக்கு இலாபமென்ன ? அதனால் பார்ப்பனர் பெரியசாதி ; நீங்களும் நாங்களும் சின்னசாதி என்பதாக அல்லவா இருந்துவருகிறது ?

காந்தியார் : நீங்கள் சொல்வது தவறு. வருண தர்மத்தில் சின்னசாதி, பெரிய சாதி என்பது இல்லை.

பெரியார் : இது தாங்கள் வாயால் சொல்லலாம் ; காரியத்தில் நடவாது.

காந்தியார் : காரியத்தில் நடத்தலாம்.

பெரியார் : இந்துமதம் உள்ளவரை ஒருவராலும் நடத்தமுடியாது.

காந்தியார் : இந்துமதத்தின் மூலம்தான் செய்யலாம்.

பெரியார் : அப்படியானால் பிராமணன், சூத்திரன் என்பதாக உள்ள மத ஆதாரங்கள் என்ன ஆவது ?

காந்தியார் : நீங்கள்தான், இந்துமதத்துக்கு ஆதாரங்கள் இல்லை என்கிறீர்களே !

பெரியார் : நான் மதமும் இல்லை ; குறிப்பிட்ட ஆதாரமும் இல்லை என்றேன். மதத்தை ஒப்புக்கொண்டால், ஆதாரத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டாமா ?

காந்தியார் : மதத்தை ஒப்புக்கொண்டு, ஆதாரங்களை நாம் ஏற்படுத்தலாமே ?

பெரியார் : அதுதான் முடியாது. மதத்தை ஒப்புக்கொண்டால் அப்புறம் நாம் ஒன்றும் மாற்றமுடியாது.

படிப்பகம்

www.padippakam.com



நம்மைத் தமிழும் இந்தியும் படிக்கச் செய்துவிட்டு, பார்ப்பானும் பணக்காரனும் ஆங்கிலமும் ஆங்கில கான்வென்டிலும் படித்துப் பதவிக்குப் போய்விடுவார்கள். பிறகு நம் கதி என்ன?

தமிழ்மொழிக் களஞ்சியங்களான 'மாணிக்கவாசகர் காலம்' எழுதிய காலஞ்சென்ற மறைமலை அடிகள், பெரிய புராணத்திற்கு புது உரை எழுதிய திரு. வி. கலியாணசுந்தரம் முதலியோர் வாழ்வில், முக்கியத்துவத்தில் என்ன தரத்தில் இருந்து சென்றார்கள்? 'சைவத்தை நிலைநிறுத்திய' மூடநம்பிக்கைக் களஞ்சியங்களாகத்தானே முடிவெய்தினார்கள்!

காலம் செல்லாத இன்றையத் தமிழ்க் களஞ்சியங்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர்கள் சிதம்பரநாதன் செட்டியார், மு. வரதராசனார், இராஜமாணிக்கனார் மற்றும் ஒரு டஜன் உருப்படிகளின் இன்றைய நிலை என்ன? அவர்களால் அவர்கள் ஓர் அளவுக்கு நன்றாய்ப் பிழைக்கிறார்கள் என்பதைத் தவிர நாட்டிற்கோ, மனித சமுதாயத்திற்கோ என்ன பயன்? அன்னக்காவடி பஞ்சாங்கப் பார்ப்பான் மகன் ஆங்கிலம் படித்து சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஆகிறான்!

பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சிப் போராட்டம் இல்லாதிருந்தால் இந்த மேதாவி டாக்டர்கள் 'மகான்'கள் நிலை இன்று எப்படி இருக்கும்? கிறுக்கன் பாரதிக்கு இருக்கிற மதிப்பில் நூற்றில் ஒன்றுகூட இவர்களில் எவருக்கும் இன்று இல்லையே!

இவர்கள் தரத்தைவிடக் குறைந்த தரமுள்ள ஆங்கிலத்தில் பேர் பெற்றவர்கள், சாதாரண அளவு ஆங்கிலப் படிப்பாளிகள் எவ்வளவு மேல்நிலையில் இருக்கிறார்கள்!

எதிர்காலத்திலாவது இந்த நிலை மாறும் என்று கனவு காண முடியுமா? கல்விக்கு ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் இந்த மந்திரி சபையினால்தான் ஏற்படவேண்டும். இதுவே 'உருண்டைக்கு நீளம், புளிப்புக்கு அவனப்பன்' என்றால் நம் கதி என்ன?

இது (இவர்கள்) ஒழிந்தால் பக்தவத்சலம், வெங்கட்ராமன் அல்லது கக்கன், மன்றாடியார் மந்திரி சபை அல்லது அவர்கள் போன்றோர் மந்திரிசபைதானே ஏற்படும்?

ஆதலால், நான் வேண்டிக்கொள்கிறேன், இன்றைய தினம் ஆங்கிலத்திற்குள்ள எந்த நிலையிலும், எந்த அமைப்பிலும் கை வைக்காதீர்கள் என்று!

5 வருடமானால் உங்களை யாரும் எந்த மந்திரியாய் இருந்தீர்கள் என்று கேட்க மாட்டார்கள். என்ன செய்தீர்கள் என்றுதான் கேட்பார்கள். 'நாங்கள் காலேஜ்களில் ஆங்கிலத்தை ஒழித்தோம்' என்றால் என்ன ஆகும்? இதே கேள்வி 10 வருஷத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால், காமராசர் என்ன சொல்லுவார்? நாங்கள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளந்தோம் என்றா சொல்லுவார்? 'உன் மகனைக் கேள்; உன் மகளைக் கேள்; அவள் உத்தியோகத்தைப் பார்; அவர்கள் பேசுகிற பேச்சைப் பார்' என்பார்!

['விடுதலை'-தலையங்கம்—5-4-1967]

## பகுதி V

# தலைவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



# 8. மொழித் தொல்லை

நமது நாட்டில் சாதித் தொல்லை பெருந் தொல்லையாக நீண்டநாளாகவே இருந்து வருகிறது. மதத் தொல்லையும் இருந்து வந்தாலும் அது இந்தியா தேசம் என்று கருதப் படுகிறபோதுதான் ஏதோ காணப்படுகிறதே அல்லாமல் சாதித் தொல்லைபோல், தமிழ் நாட்டைப் பொறுத்து என்று சொல்லப்படுகிற அளவுக்கு இந்தியாவில் மற்ற நாடுகளில் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அதன்கேடு, அதாவது சாதித் தொல்லையால் ஏற்படும் கேடு இந்திய தேசிய நலத்தைக்கூட பெரும் அளவிற்குப் பாதித்து வளர்ச்சியைக் கெடுத்துவருகிறது.

இப்போது மொழித் தொல்லையைப்பற்றி எழுதத் தொடங்கியதால் சாதித் தொல்லையை ஒதுக்கி வைத்துவிட்டு மொழித் தொல்லையைப் பற்றியே சிந்திப்போமாக!

இந்த மொழித் தொல்லை—இந்திய தேசம் முழுவதிலும் பலநாடுகளுக்குச் சேர்ந்து ஒரே ஆட்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கிறதே யல்லாமல் இயற்கை யாக ஏற்பட்ட தொல்லை அல்ல என்றே சொல்லலாம்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் மொழித் தொல்லை இல்லை என்று சொல்லப் படுமானால் அவன் ஒருமொழியை ஆட்சிக்காகப் பொது மொழியாக்கி வைத்துவிட்டான். ஆதலால் மொழித் தொல்லைக்கு இடமில்லாமல் போய்விட்டது.

அந்த மொழி வெள்ளையனுடைய சொந்த மொழியாக இருந்தாலும், இந்திய மக்கள் அதை விரும்பி மேல்விழுந்து கற்கவும், பயன்படுத்திக்கொள்ளவும் போட்டிபோட ஆரம் பித்ததால், அம்மொழியினால் மக்கள் நன்மை அடைந்தார்கள் என்பதைத் தவிர, சிறிதும் தொல்லையடையவில்லை.

வெள்ளையனுக்குப் பிறகும் முன்பு இருந்த பொதுமொழியையே, பொதுமொழியாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தால் இன்று இந்தியா ஒட்டிலும் (முழுவதும்) காணப் படுகிற பிளவு நிலையும், பேத உணர்ச்சியும் பெரும் அளவுக்கு இல்லாமலிருக்கும் என்றே சொல்லலாம்.

ஆனால், வெள்ளையன் ஆட்சி இந்த நாட்டில் இருக்கும்போதே அன்னிய மொழியை, அதாவது (இந்தியாவில் அந்தந்த நாட்டில் இருந்துவந்த மொழியைத் தவிர்த்துப் பொது மொழியாய் இருந்துவந்த ஆங்கிலத்தின்மீது துவேஷத்தை ஏற்படுத்தி) பெரும்பாலான நாட்டுக்கு அன்னிய மொழியாய் இருந்துவந்த இந்தியைக் கொண்டுவந்து பலாத்காரமாய் புகுத்தியது (ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து) ஆங்கிலத்தினால் பிழைத்து வந்த இந்தப் பார்ப்பனர்களே யாகும்.

பொதுவாக, இந்தியாவில் உள்ள மக்கள் 100-க்கு 99 பேர் மூடநம்பிக்கைக்காரர்க ளாய்,முட்டாள்களாய் இருப்பதற்கே காரணம் அவரவர்கள் மொழியேயாகும் என்பது எனது பலமான கருத்து. நம் மனிதருக்கு இதுவரை படிப்பு இல்லை என்பது ஒரு காரண மானாலும், அவரவர் பேசும் மொழியிலாவது அறிவிற்கான சொற்கள் இருக்கிறதா என்றால் கிடையாது. படிப்பதாக இருந்தாலும் அறிவிற்கான நூல்கள், இலக்கியங்கள், மத சம்பிரதாய ஆதாரங்கள் எதுவுமே கிடையாது! பிறந்த குழந்தை பேசவேண்டுமானாலே தாய் தந்தையர் கற்றுக்கொடுத்துத்தானே ஆகவேண்டும்!

அறிவுக்கு ஏற்ற சொல் இல்லை; மொழி இல்லை; நூல் இல்லை; சமயமில்லை. இப்போது இருப்பவை எல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டவை. இவைகளில் எதையும் மாற்றக்கூடாது என்பது 'குரங்குப் பிடிவாத'மேயாகும். மக்களுக்குள் செலுத்துவதிலும் மூடநம்பிக்கையோடும் 'கற்பு'க்கு இருக்கிற நிபந்தனையோடுமே செலுத்தப்பட்டு வருகிறது! இவற்றுள் சாதி உணர்ச்சி வேறு, மக்களுக்குள் புகுந்து



வக்கீலுக்கு எப்படி புரட்டு, பித்தலாட்டம் அவசியமோ, அதுபோல சாதி உணர்ச்சிக்கும் மக்களுக்கு புரட்சி, பித்தலாட்டம் அவசியமாகி, அவைகள் மூலமே காப்பாற்றப்பட வேண்டி யது ஆகிவிடுகிறது.

சர். இராதாகிருஷ்ணன், சர். சி. வி. இராமன் ஆகிய 'படித்த' பெரியோர்களைப் பார்த்தாலே சாதி உணர்ச்சி எவ்வளவு தூரம் பகுத்தறிவைக் கெடுத்துவிடுகிறது என்பது தெரியும்.

இப்படியாக இந்தத் தன்மையில் உள்ள மொழிகளை இந்த முறையில் புகுத்தப்பட்டு வந்தால் மனிதனுக்கு மொழியினால் அறிவு எப்படி வளரமுடியும்?

புதிய உலகில் வாழ்கின்ற, வாழவேண்டிய மக்களுக்கு மொழிப் பைத்தியம் எதற்கு? அதுவும் சாதிபோன்ற, மதம்போன்ற மொழிப் பைத்தியம், மொழிவெறி என்பது எதற்காக இருக்கவேண்டும்?

பார்ப்பனர்கள் தாங்கள் மைனாரிட்டி (Minority) என்கின்ற காரணத்தால் தங்கள் பாதுகாப்புக்கென்று இந்தியாவை, இந்திய யூனியன் ஆட்சியை நமது நாடாகவும், நமது ஆட்சியாகவும் செய்ததை நாம் ஒப்புக்கொண்ட, ஏற்றுக்கொண்ட மாபெரும் முட்டாள்தனத்தால், ஏமாளித் தனத்தால் இந்தியும், மூடநம்பிக்கை மடமையால் இருந்து வரும் தாய்மொழி வெறியும் என்றென்றைக்கும் நாம் அறிவுபெற முடியாமலும் செய்து விட்டது; செய்துவருகிறது. உலகம் உள்ளவரை நாம் இந்த இந்திய யூனியன் என்னும் நரகக் குழியில் இருக்க வேண்டியவர்களா?

போதாக்குறைக்கு, 'பெரியார் கல்லூரியில் படித்தவர்கள்' என்றும், நாங்கள் 'பகுத்தறிவுவாதிகள்' என்றும் சொல்லிக்கொள்ளும் இன்றைய மந்திரிகள் 'தமிழுக்கு, தமிழ்மொழிக்குக் கேடுவந்தால் நாங்கள் பதவியைவிட்டு வெளியேறிவிடுவோம்' என்று சொல்லுகிறார்கள் என்றால், இதில் என்ன பகுத்தறிவு இருக்கிறது? என்ன 'பெரியார்' வாசனை இருக்கிறது? 'உயர்தரப் படிப்புக்களையெல்லாம், கல்லூரியிலும்கூட தமிழிலேயே ஆக்குகிறோம்' என்றால் 'மக்களை முட்டாள்களாக்குகிறோம்' என்றுதானே பொருள்?

இப்படியான நிலை ஏற்பட்டால் இது முக்கொலை என்றுதானே ஆகும்? தமிழ் மொழியும் கெட்டு, பாடவிஷயமும் பொருளும் கெட்டு, ஆங்கிலமும் கெடும்படி ஆவதால் மூன்று கொலை செய்ததாகத்தானே முடியும்? இதுதானா இந்த சிப்பாய்கள் வேலை?

இந்த நாடு முன்னேற வேண்டுமானால், எந்த மொழியிலானாலும் சரி, விஞ்ஞான அறிவு, விஞ்ஞான வாழ்வு இவற்றால்தான் முடியும்!

இந்தியோ, தமிழோ காப்பாற்றப்படவேண்டும் என்ற கூப்பாடு எந்த அடிப்படையில் கிளப்பப்படுகிறது? 'நமது முன்னோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பண்பாடுகளை கலாசாரங்களைப் பாதுகாக்கவேண்டும்' என்பதற்காகவே அல்லாமல் வேறு எதற்காக?

இன்று இந்தியாவிலேயே ஆயிரத்துக்கு ஒரு மனிதன்கூட பேசாத, எங்கும் பேச்சு வழக்கில் இல்லாத, எந்த ஒரு காரியத்திற்கும் பயன்படாத சமஸ்கிருதத்திற்காக பார்ப்பனர் இமாலயப் பிரயத்தனம் செய்து பள்ளிகளில், கல்லூரிகளில் எல்லாம் பாடமாக, பரீட்சையாக வைத்து, பல கோடிக்கணக்கான ரூபாய்களை இவற்றிற்காகச் செலவுசெய்து பாழாக்குவது எதற்காக? பார்ப்பான் 'மேல்சாதி மகன்' என்பதைப் பாதுகாக்க, அதற்கேற்ற கலாசாரத் தையும் பண்புகளையும் நிலைநிறுத்தத்தானே அல்லாமல் வேறு எதற்காக? 'அவன் தம்பி அங்கதன்' என்ற கருத்திற்கு இணங்க தமிழ், இந்தி, வெங்காயம் என்பதும், ஆங்கிலம் விலக்கப்பட வேண்டும் என்பதும் அல்லாமல் வேறு என்ன கருத்து அதில் இருக்கிறது?



படிப்பகம்

www.padippakam.com



நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு கமிஷன் என்றால் அதற்குப் பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு—வீண்விரயம் என்று அர்த்தம். இதனால் யாருக்காவது 'காதொடிந்த ஊசியளவாவது' பிரயோசனம் உண்டா? விரயம் செய்யப்பட்ட பணம் அத்தனையும் நம்மிடத்திலிருந்து வரியாகக் கோடிக்கணக்கில்—டில்லி சர்க்காரால்—பகற்கொள்ளையரைப்போல் எடுத்துச் செல்லப்படுவதுதானே? பார்ப்பனரிடம் இருந்து போகும் வரிவிகிதாசாரம் என்ன? நம்மிடம் இருந்துபோகும் வரியின் விகிதாசாரம் என்ன? 'அண்டைவீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே' என்கின்ற தன்மையில், இலட்சக் கணக்கில் இப்படி வாரியிறைத்துப் பதறப் பதற நாசமாக்கிக் கொண்டிருப்பதை—நாம் இன்னமும் சகித்துக்கொண்டுதான் இருக்கிறோம். இவ்வாறுதான் இருக்கவேண்டுமா?

'சமஸ்கிருதக் கமிஷன்' சிபாரிசுப்படி மத்திய சர்க்காரிலேயே 'மத்திய சமஸ்கிருத போர்டு' (Central Sanskrit Board) என்ற ஒரு அமைப்பு 1957 ஆகஸ்ட் முதல்தேதியி லிருந்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு, முன்னாள் சுப்ரீம்கோர்ட் சீப்ஜஸ்டிஸ், திரு. பதஞ்சலி சாஸ்திரி தலைவர்; மற்றும் 8 பேர் உறுப்பினர்கள், மூன்று வருடங்களுக்கு இவர்கள் பதவியில் இருப்பார்கள். ('மெயில்' தேதி 1-7-1959)

இந்தப் போர்டினது பிரதான நோக்கம் எல்லாம்—சமஸ்கிருதத்தை இந்தியா முழுவதிலும் எப்படிப் பரப்புவது என்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து மத்திய சர்க்காருக்கு அவ்வப்போது ஆலோசனை கூறவேண்டியதுதானாம். சமஸ்கிருதக் கமிஷனின் சிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல இலட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டதாம். (Bhavan's Journal 14-6-1959)

இப்படிப் பல இலட்ச ரூபாயைக் கரியாக்குவதன் மூலம் யாருக்கு என்ன நன்மை என்பது ஒருபுறம் இருக்கட்டும்; அரசியல் சட்டத்தில் உள்ள மற்ற 13 மொழிகளுக்குக் காட்டாத சலுகை, சமஸ்கிருதத்திற்கு மட்டும் என்ன தேவை? அப்படிச் சமஸ்கிருத இலக்கியத்திற்கும் மொழிக்கும் ஊக்கம் அளிப்பது என்றால், அதைத் தனிப்பட்டவர்களான பிர்லா, கே. எம். முன்ஷி போன்றவர்களால் அதற்கெனவே ஏற்படுத்தப்பட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டுவருகின்ற—பாரதீய வித்யாபவனம், பாரத இதிகாச சமிதி, சமஸ்கிருத விசுவ பரிஷத் போன்றவைகள் செய்துகொள்ளலாம் அல்லவா? மத்திய சர்க்கார் மாத்திரம் இதற்கு ஏன் இவ்வளவு சலுகை காட்டவேண்டும்? இது மாத்திரம் அல்ல. மத்திய சர்க்காரின் ஆதரவுள்ள, 'சாகித்திய அகடமி'யின் ஆதரவில் சமஸ்கிருதத்தைப் பரப்புவதற் கென்றே ஒரு பத்திரிகையும் (Journal) துவக்கப்பெற்றுச் சில மாதங்களாக நடந்து வருகின்றது.

இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்ன? இவ்வளவு ஆர்வம் செலுத்துவதன் உள்நோக்கம் என்ன? என்று ஆராய்ந்தால்தான் பார்ப்பான் தனது ஆதிக்கத்தையும் ஏகபோக உரிமையையும் பாதுகாப்பதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறான் என்பது விளங்கும்.

சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பான் வாழமுடியும்; சுரண்டமுடியும்; நம்மைக் கீழ்சாதி மக்களாக ஆக்கமுடியும்; அவன் பிராமணனாக இருக்கமுடியும். அதன் நலிவு, பார்ப்பன ஆதிக்கத்தின் சரிவு என்பதை உணர்ந்துதான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையாக—விழிப்போடு காரியம் செய்துவருகிறார்கள்.

இல்லாவிட்டால், உலகம் பூராவும் சுற்றி வருகிற 'சசிவோத்தம' சர். சி. பி. இராமசாமி அய்யர், 'சமஸ்கிருதந்தான் இந்தியாவின் அரசாங்க மொழியாக இருக்கவேண்டும்' என்று பேசிவருவாரா? அதுமட்டுமா? தமிழைத் தாய்மொழி என்று கூறுகின்ற பார்ப்பனரைக் காணமுடிவதில்லையே! தப்பித் தவறி எங்காவது ஒன்று இரண்டு சுட்டிக்காட்டுவீர்க ளானால் அது வயிற்றுப்பிழைப்பைக் கருதி அப்படி உதட்டளவில் கூறிய பார்ப்பனனாக இருக்கும், அவ்வளவுதான்.



'சமஸ்கிருத விஸ்வ பரிஷத்'தின் கூட்டம் புதுடெல்லியில் பாபு இராஜேந்திரபிரசாத் தலைமையிலே, அதுவும் இராஷ்டிரபதி பவனத்தில் நடக்கிறது. அதில் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்: 'அரசாங்கத்திடம் சொல்லி—சமஸ்கிருதப் படிப்புக்கு என ஒதுக்கி இருக்கும் தொகையைச் செலவழிக்காவிட்டாலும்கூட, அதை சமஸ்கிருதமல்லாதவற்றிற்குச் செலவிடக் கூடாது; அது சம்பந்தமாகச் சட்டங்கள் செய்யப்படுவதோ, உத்தரவு போடப் படுவதோ தடுக்கப்படவேண்டும்' என்று கூற ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அதில் உறுப்பினர் களாக, இந்திய பார்லிமெண்டின் சபாநாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்கார், இன்றைய சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி திரு. பி. பி. சின்ஹா போன்ற சிலர் நியமிக்கப்பட்டு உள்ளனர். (பவன்ஸ் ஜர்னல், 23-3-1959)

சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்படும் பணம் செலவாக வழியில்லை என்றால்கூட, வேறு காரியத்திற்குச் செலவிடப் படக்கூடாதாம்! எவ்வளவு பரந்த மனப்பான்மை! இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, பார்ப்பனரின் காலைக் கழுவிய திரு. இராஜேந்திர பிரசாத்—குடியாட்சித் தலைவரின் தலைமையின் கீழாகும். இதைப் போய்—மதச் சார்பற்ற அரசாங்கம் என்றும், பார்ப்பன அரசாங்கம் அல்ல என்றும் சொல்லுவது, மனிதன் உடனே சாகக்கூடிய மாதிரியில் கடிக்கின்ற பாம்புக்கு 'நல்ல பாம்பு' என்று பெயர் வைத்திருப்பது போன்றதல்லவா?

'ரிட்டயரான' ஒவ்வொரு பார்ப்பன ஜட்ஜ், அதிகாரி, தலைவர் எல்லோருக்கும் எப்படி சமஸ்கிருதத்தைப் பரப்புவது என்பதில்தான் கவலை. அது பரவினால், ஆழ வேரூன்றினால்தான் பார்ப்பன சாதித் திமிருக்கு உரம் போட்டதுபோலவாகும் என்பதை நன்றாக உணர்ந்துதான் அவர்கள் இவ்வாறு தீவிரமாக இதில் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

நம்முடைய மக்களோ இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், 'நாம் எவனுக்கு வைப்பாட்டி மக்களாக இருந்தால்தான் என்ன? வயிறு நிரம்பவேண்டியதுதானே!' என்று இருக்கிறார்கள்.

நம்முடைய புலவர்கள், அறிஞர்கள் எல்லோரும் இதைப்பற்றியே நினைக்க நேர மில்லாத மாதிரி காட்டிக்கொண்டு, பார்ப்பானின் காலைக் கழுவி 'கதி மோட்சம்' பெறுவதில் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அரசியல்—ஓட்டு—பதவி வேட்டைக்காரர்களோ, 'நாய் விற்ற காசு குலைக்காது', 'கருவாடு விற்ற காசு நாறாது' என்கின்ற தன்மையில்—'எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம்' என்று எண்ணித் தமிழ் மக்களது மானத்தைப் பார்ப்பனரிடம் அடகுவைத்துக் கூலிபெற்றுக்கொண்டு இருக்கின்றார்கள்.

இந்நிலையில் இதையெல்லாம் எடுத்துக்கூறிப் பேசித் திரிவதற்கு—அதன் விளைவு களைச் சந்தோஷத்தோடு ஏற்பதற்கு என்னைத் தவிர, எனது கழகத்தைத் தவிர இன்று இந்த நாட்டில் யார் இருக்கிறார்கள்? யார் இருக்கிறார்கள்? யார் இருக்கிறார்கள்?—எனக்குப் பிறகு; எங்களுக்குப் பிறகு, சிந்தியுங்கள்!

['விடுதலை'-கட்டுரை—15-2-1960].

படிப்பகம்

www.padippakam.com



உதாரணமாக, தமிழ்நாட்டுப் பார்ப்பானுக்குத் தாய்மொழிப் பற்றோ, தாய்நாட்டுப் பற்றோ இருந்தால் நாட்டுப் பற்றுக்காக 'ஜெய் ஹிந்த்' என்பானா? 'ஜனகணமன' என்பானா? தாய்மொழிக்காக, 'வந்தே மாதரம்' என்பானா? வணக்கத்துக்கு, 'நமஸ்காரம்' என்பானா? 'பாரத தேசம்' என்பானா? இதெல்லாம் எப்படித் தாய்நாட்டுப் பற்றாகவும், தாய்மொழிப் பற்றாகவும் விளங்குகிறது என்பதை அறிவைக்கொண்டு சிந்தித்துப் பார்க்கட்டுமே!

—பார்ப்பான் மாத்திரம் என்ன? நமக்குத்தான் உண்மையான (தாய்ப் பால்) மொழி, நாட்டுப் பற்று இருக்கிறதா? எதையோ பேசி எவனையோ காப்பியடித்து நாம் சுத்த சாம்பிராணிகளாகிவிட்டோம். இதுதான் தாய்ப் பாலின் பலன்!

[நூல்: 'தாய்ப் பால் பைத்தியம்']

## 7. சமஸ்கிருதம் ஏன்?

இன்று இந் நாட்டில் நடைபெறும் ஆட்சியானது, 'ஜனநாயகக் குடியரசு' என்ற போலிப் பெயரைக் கொண்டதாயினும், உண்மையாக இது பார்ப்பன நாயகம் என்பதையும், பார்ப்பனர்களது நலத்தைப் பாதுகாக்கின்ற தன்மையில் அவர்களால் நடத்தப்பெற்று வருவதாகும் என்பதையும், நான் பல தடவைகள் எடுத்துக்காட்டி வந்திருக்கிறேன்; இன்றும் அதைத்தான் செய்துகொண்டு வருகிறேன். இந்த நாட்டில் உள்ள மற்ற அரசியல் கட்சிகள் என்கின்ற யாவும், 'இந்த அரசாங்கத்தில் நமக்கு ஏதாவது பங்கு கிடைக்கிறதா? நாமும் பொறுக்கித் தின்று வாழ்வதற்கு வகை கிடைக்காதா?' என்கின்ற தன்மையில்தான்—அதனை ஒழிக்கவே போட்டி போடுவதைப்போல் நடித்து மக்களிடம் ஓட்டு வாங்கிக் கூட்டுக் கொள்ளைப் பங்குபெறத் துடித்துக்கொண்டு இருக்கின்றன.

அரசாங்கத்தினரும் இவர்களுக்கும் பங்கு கிடைக்கவே பல ஏற்பாடுகள் செய்து வைத்து ஆசைகாட்டுகிறார்கள். ஆகவே, அவர்களால் (இதில் பங்கு பெறுபவர்களால்) இதைப் 'பார்ப்பன நாயகம்' என்பதை ஒருநாளும் ஒப்புக்கொண்டதாகக் காட்டிக்கொள்ள முடியாது. நெஞ்சார உணர்ந்ததை வெளியே சொன்னால் 'வயிறு கழுவுவது', 'காலட்சேபம் நடத்துவது'—கொள்ளைப்பணம் சேர்ப்பது-பதவி பெறுவது பாதிக்கப்பட்டுவிடுமே என்று கருதி அஞ்சி, பயந்து ஒடுங்கி, பார்ப்பான் பாடுகிற—'ஜனநாயக சங்கீதக் கச்சேரி'க்கு இவர்கள் பக்கமேளம் வாசிப்பவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில், இதை ஜனநாயகம் என்று இவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் இவர்கள் தேர்தலுக்கு நிற்க முடியாது; பதவிக்குப் போட்டிபோடமுடியாது.

இது பகுத்தறிவைப் பயன்படுத்துகிற அறிவாளிகளுக்கு விளங்காமற் போகாது. இதை எவன் புரிந்து கொள்கின்றானோ அவனால்தான் திராவிடர் கழகத்தின் மகத்தான தொண்டின் சக்தி, மகத்துவம், பெருமை என்னவென்று உணர முடியும்.

இன்று நடைபெறும் ஆட்சி பச்சைப் பார்ப்பன ஆட்சி என்றும், சூத்திரனை—பிராமணன் மேல் சாதி-கீழ்சாதிக்காரன் என்பவன் அப்படியே நீடித்து நிலைத்து என்றென்றும் 'சிரஞ்சீவி'யாக இருக்கவேண்டும் என்று பாடுபட்டுவரும் ஆட்சி என்றும் காட்டுவதற்கு இதுவரை பலவித ஆதாரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன என்றாலும், இன்றும் ஒரு எடுத்துக்காட்டு காட்டுகிறேன்.

இந்த நாட்டில் பல காலமாக 'சமஸ்கிருதம்' என்கின்ற ஒரு வடமொழியை (ஆரிய மொழியை) ஆரியர் இந் நாட்டில் புகுத்தி, அதற்குத் 'தேவ பாஷை' எனப் பெயரிட்டுக் கடவுள்கள்—தேவர்கள், சமயம், சாத்திரம் ஆகியவைகளுக்கு அதில் சொன்னால்தான் புரியும்—பயன்படும் என்று காட்டி, நமது பரம்பரை இழிவிற்கு நிரந்தரப் பாதுகாப்பு ஏற்படுத்திவருகிறார்கள்.



இந்நாடு நம்முடைய நாடு; இந்நாட்டில் நாம் தமிழர்கள் 100-க்கு 97 பேர்கள் வாழ்கிறோம். நமது நாட்டு மொழி தமிழ் மொழி. இந்த நிலையில் நமது மொழிக்கும், நம் கலாச்சாரத்திற்கும், நம் பழக்க வழக்கங்களுக்கும் சம்பந்தமில்லாத—நம் நாட்டு மக்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கு 3 பேராக உள்ள—இந் நாட்டிற்குப் பிழைக்க வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்களுடைய தாய்மொழியாக உள்ளதும், எழுத்தே இல்லாததுமான சமஸ்கிருதம் என்னும் மொழிக்கு இன்று இருந்துவரும் செல்வாக்கு, தமிழுக்கு உண்டா? இவ்வாரியர் புகுதலுக்குப் பின் இருந்திருக்கிறதா? இன்றைய இளைஞர்கள், வாலிபர்கள் பலருக்கு ஒரு முப்பது, நாற்பது வருடங்களுக்கு முந்திய நிலைமை எப்படி? தமிழுக்கு அப்பொழுது இருந்த மரியாதை, அந்தஸ்து என்ன? பார்ப்பன 'மேலோர்' மொழியாக—சமஸ்கிருதத்திற்கு இருந்த அந்தஸ்து என்ன? என்பது பற்றிய பல விஷயங்கள் தெரியுமா? தெரியாது என்றே நினைக்கின்றேன். சுமார் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு வேளை தெரியக்கூடும்.

முன்பெல்லாம் ஒரு காலேஜில் ஒரு சமஸ்கிருத புரோஃபசர் வாங்கும் சம்பளத்துக்கும், தமிழ்ப் பண்டிதர் (புரோஃபசர்) வாங்கும் சம்பளத்தக்கும் மலை அளவு வித்தியாசம் இருக்கச் செய்தது. அரசாங்கத்தில் சமஸ்கிருதம் படித்தவனுக்கு அவ்வளவு சலுகை! சமஸ்கிருத புரோஃபசருக்கு 350 ரூபாய் சம்பளம்! தமிழ்ப் பண்டிதருக்கு (புரோஃபசருக்கு) 75 ரூபாய்தான் சம்பளம். சமஸ்கிருத ஆசிரியருக்குப் பெயர்—'புரோஃபசர்'; தமிழ் ஆசிரியருக்குப் பெயர்—ஆசிரியர்.

காலஞ்சென்ற பேராசிரியர் திரு. கா. நவச்சிவாய முதலியார் அவர்கள் பிரசிடென்ஸி காலேஜில் புரோஃபசராக இருந்தபோது வாங்கின சம்பளம் ரூபாய் 81 என்பதாகத்தான் ஞாபகம். அதே நேரத்தில் அங்கு சமஸ்கிருத புரோஃபசராக இருந்த திரு. குப்புசாமி சாஸ்திரி (என்ற ஞாபகம்) என்பவர் வாங்கின சம்பளம் சுமார் ரூ. 300-க்கு மேல்! ஜஸ்டிஸ் கட்சி அரசாங்கத்தில் முதல் மந்திரியாக இருந்த திரு. பனகல் இராஜா அவர்களே இதைக் கண்டு மனம் கொதித்து என்னிடத்தில் நேரில் சொல்லி, 'நீங்கள் இதைக் கண்டித்து ஒரு தலையங்கம் எழுதுங்கள்' என்றும் சொன்னார். அவர் சமஸ்கிருதம் படித்தவர்; புலமை வாய்ந்தவர். என்றபோதிலும்கூட அந்தமாதிரி—அந்தஸ்திலும், சம்பளத்திலும் வேறுபடுத்திய கொடுமையைக் கண்டித்தார். பிறகு அரசாங்க உத்தரவு போட்டு அதன்மூலம் இவ்வேற்றுமையை ஒழித்தார். அன்று நாங்கள் போட்ட கூப்பாடும், ஜஸ்டிஸ் மந்திரி சபையின் உத்தரவும் இல்லாதிருந்தால் இன்றும் தமிழ்ப் பண்டிதர்கள் இதே நிலைமையில்தான் இருக்கக்கூடும்.

பிறகு, திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 1937-ல் இந்தியைக் கொண்டு வந்ததன் உள்நோக்கமே சமஸ்கிருதத்துக்குச் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்து வருவதைத் தடுத்து அதை உயர்த்தவும், அந்த சமஸ்கிருத எதிர்ப்பு உணர்ச்சியை அழிக்கவுமேயாகும். இதை அவர் வெளிப்படையாகவே பல கூட்டங்களில் பல சொற்பொழிவுகளின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். இதை நாம் இப்பொழுது விட்டால் நமது இனத்திற்கும், தன்மானத்திற்கும், உரிமைக்கும் பேராபத்து என்று கருதித்தான், ஆச்சாரியாரின் கட்டாய இந்தித் திணிப்பைப் பலமாக எதிர்த்துப் போராட்டம் துவங்கி சுமார் 2000 பேர்களைச் சிறைக்கு அனுப்பியதோடு, நானும் மூன்று ஆண்டு கடின காவல் தண்டனை பெற்றேன்.

இன்று தமிழ்நாட்டில் 'சமஸ்கிருதம்' என்ற ஒரு மொழி உண்மையிலேயே தேவைதானா? எதற்காவது பயன்படுகிறா? அதற்கும் நமக்கும் கடுகத்தனையாவது, எதிலாவது, ஒற்றுமை—பொருத்தம் எவ்வகையிலாவது இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



மரியாதைக் குரிய–பாராட்டத்தகுந்த தமிழ்ப் பெரியார்கள் மறைமலை அடிகள் முதல் திரு. வி. க. வரை உள்ள பெரியார்களிடம்–அவர்கள் கருத்துக்களிடம், அவர்கள் நடந்து கொண்ட முறைகளில் இருந்து, இன்றைய நாட்டு முன்னேற்றத்துக்கு என்றோ, மக்கள் முன்னேற்றத்திற்கென்றோ எடுத்துக்கொள்ளத்தக்க சாதனங்கள் என்ன இருக்கின்றன என்று அன்பர்கள் தோள்தட்டிக் கூறமுடியுமா?

தாய்ப் பால், தாய்ப் பால் என்ற மாத்திரத்தில் மக்கள் ஏமாந்துவிடுவார்களா? தமிழ்த் தாய் யாரிடமாவது அவர்களது பாலைக்கறந்து எடுத்து இரசாயன பரிசோதனை ஸ்தாபனத்தில் கொடுத்துப் பரீட்சித்துப் பார்த்தால், உடலுக்கு உரம் ஊட்டும் சாதனம் அதில் என்னென்ன இருக்கின்றது என்று கண்டுபிடித்துச் சொல்லச்சொன்னால், அப்போது தெரியும்–தாய்ப் பால் யோக்கியதை! அன்றியும், தாய்ப் பாலைப்பற்றிப் பேசுபவர்காளவது அதில் உடலுரத்துக்குள்ள அம்சம் என்ன என்ன என்பதை விளக்கி அதைப்பற்றிப் பேசுவதுதான் தர்மமாகும். அப்படி ஒன்றுமே இல்லாமல், மக்களுக்குத் தாய்ப் பாலால் (தமிழால்) ஏற்பட்ட பழமை என்னும் முட்டாள் தனத்தைக் கைமுதலாக வைத்துக்கொண்டு, 'தாய்ப் பால்' என்ற சொல்லை மட்டும் பயன்படுத்துவதனால் மக்கள் ஏமாற்றப்படுவது அல்லாமல், வேறுயாருக்கு என்ன பலன் ஏற்படும்? மற்றும், நமக்கு இனி வேண்டி இருக்கும் அறிவு என்னும் உடலுரத்திற்குத் தாய்ப் பால் கண்டிப்பாகப் போதாதென்று மாத்திரமல்ல, பயன்படாது என்றும் உறுதியாகக் கூறுவேன்.

இப்போது நாம் உலக அந்தஸ்தில் மிகமிகத் தாழ்வான நிலையில் இருக்கிறோம். மனிதன் இன்றைய ஆசாபாசங்களுக்கு, அனுபவங்களுக்கு, இன்றியமையாத தேவைகளுக்கு, மற்ற நாட்டானோடு தலை நிமிர்ந்து நடப்பதற்கு நம்மிடம் (தாய்ப் பாலில்) என்ன இருக்கிறது? எதற்குத் தமிழைப் பயன்படுத்துகிறோம்? நமது வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் இதுவரை நாம் அனுபவியாததை, காணாததை, நினைக்காததை அனுபவிக்கிறோம், காண்கிறோம், நினைக்கிறோம். இதன் அடிப்படைகளை ஊமையன் மாதிரி கைஜாடை அல்லது கண்ஜாடை அல்லது புட்டிப் பாலால் (அயல் மொழியால்) உணருகிறோம்; அறிகிறோம். செய்யத் தெரிகிறோமே அல்லாது, தாய்ப் பால் சக்தி பயன் தருகிறதா?

பார்ப்பனர்களும் அரசாங்கமும் இந்தத் துறையில் செய்கின்ற அக்கிரமங்கள் சொல்லி முடியாது. ஒரு பண்டத்துக்கு—தமிழ்ப் பெயர் உண்டாக்கி, தமிழில் சொல்லிவிட்டால் போதுமா? அதன் செயல் முறைக்கும், அதன் பாகங்களுக்கும், அதை ஊடுருவி அறிந்து கொள்வதற்கும் அதன் அடிப்படைக்கும் சொற்கள் வேண்டாமா?

மற்றும் மருத்துவம், பொறி இயல், சட்டம் முதலிய எத்தனையோ துறைகளின் நுணுக்கங்களுக்கு, செயல்களுக்கு நமக்குத் தக்க அறிவும், அனுபவமும், செய்முறையும் வேண்டுமானால் நமது தாய்ப் பாலில் (தமிழ் மொழியில்) என்ன இருக்கிறது?

இன்றைக்கும் எந்தத் துறையிலானாலும் நமக்குத் திறமை ஏற்பட வேண்டுமானால் அதற்காக நம் மக்களை மேல் நாடுகளுக்கு அனுப்பி (இங்கிலீஸ்) புட்டிப் பாலில் தானே எண்ணங்கள், செயல்முறைகள், பண்டங்களின் பெயர்கள், பாகங்களின் பெயர்கள், நடைமுறைகளின் பெயர்கள், அடிப்படைத் தத்துவம் முதலியவைகளை அறிந்து வரும்படி செய்யத்தான் நம்மால் முடிகிறதே தவிர, நமது தாய்ப் பால் (தமிழ்) இவற்றில் எதற்காவது பயன்படுகிறதா?

நாம் மொழியால்தானே தமிழனே தவிர–3000 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழைப் பேசுகிறோமே ஒழிய—பேச ஆசைப்படுகிறோமே ஒழிய,–வாழ்க்கையில், ஆசாபாசங்களில், வளர்ச்சியில், போக போக்கியங்களில், நாம் தமிழன் அல்லரே! பேச்சில் 'நான் பழந் தமிழன்' என்பதுபோல—நடப்பில், வாழ்வில், பழக்க வழக்கங்களில், 'நான் பழந் தமிழன்' என்று யாராவது சொல்லிக் கொள்ளமுடியுமா?



ஒரு ஊருக்குப் போக நினைப்பவன், 'பஸ்'ஸில் போகவேண்டும்; 'இரயிலி'ல் போகவேண்டும்; 'டெலிபோன்' பேசவேண்டும் என்றால்—'பஸ் ஸ்டேண்டு'க்குப் போக வேண்டும்; 'இரயில்வே ஸ்டேஷனு'க்குப் போகவேண்டும்; 'பப்ளிக் போனு'க்குப் போக வேண்டும் என்றுதான் தமிழ்ப் புலவனும், எந்தத் தமிழ் அனுதாபியும் நினைக்கிறானே ஒழிய இவைகளைச் செய்யவேண்டுமானாலும்—புட்டிப் பால் குடிக்காதவனாலே (இங்கிலீஷ் படிக்காதவனாலே) ஒரு நாளும் செய்யவே முடியாது.

வண்டி என்பதும் 'பஸ்' என்பதும் எப்படி நடைமுறையில் மணிக்கு 6 மைலும் 60 மைலும் போகக்கூடிய வித்தியாசத்தில் இருக்கின்றதோ, அதுபோலவே இந்தச் சாதனைகளின் செயல்முறைக்கும் தாய்ப் பாலும் புட்டிப் பாலும் அவ்வளவு தூரம் வித்தியாசத்தில் பயன்படுபவையாய் இருக்கின்றன. இதை மறைத்துப் பேசுவதில் என்ன பயன்? இதற்குச் சமாதானம் சொல்ல குதர்க்க வழியைப் பின்பற்றுவதால் என்ன பயன்?

மேலே குறிப்பிட்டபடி, மொழி என்பது ஒருவர் கருத்தை ஒருவர் அறியப் பயன்படுகின்றதே தவிர, வேறு எதற்குப் பயன்படுவது? இதைத் தவிர, மொழியில் வேறு என்ன இருக்கிறது? இதற்காக—தாய்மொழி என்பதும், தகப்பன் மொழி என்பதும், நாட்டுமொழி என்பதும், முன்னோர் மொழி என்பதும், மொழிப் பற்று என்பதும் ஆகியவைகளையெல்லாம் எதற்கு மொழிக்குப் பொருத்துவது?

நாம், நமக்கு ஒரு 200 மைல், 300 மைல் தூரத்தில் இருக்கிற கன்னட நாட்டுக்கோ, தெலுங்கு நாட்டுக்கோ போனால், நம் தாய்மொழி நமக்குப் பயன்படுமா? நமது நாட்டை விட்டு நாம் வேறு எந்த வெளிநாடுகளுக்குப் போனாலும் எப்படி நம் தாய்மொழி நமக்குப் பயன்படமாட்டாதோ, அது போலவே இன்றைய 'நமது நாடு' என்பதே இன்று வேறு நாடாகவே ஆகிவிட்டதே!

உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். 100 வருடத்துக்குமுன் ஈரோட்டிலிருந்து செத்துப்போன எனது பாட்டன், மேல் லோகத்தில் இருந்து இன்று தொப்பென்று ஈரோட்டிலேயே குதிப்பதானால்—அவனும் அவன் முன்னோர்களும் பிறந்து வளர்ந்த வீட்டைக் கண்டுபிடிக்க முடியுமா? அவன் தனது சாதி ஜனங்களைக் கண்டுபிடிக்க முடியுமா? மற்ற வாழ்க்கை முறை, வாழ்க்கை வசதிகளைக்கண்டு அனுபவிக்க முடியுமா? எல்லாம் யாரோ ஒருவராலாவது சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியவனாகத்தான் இருப்பான். காரணம் நாடே, மக்களே, வாழ்க்கையே மாறிவிட்டது. ஆகவே, இங்கு மொழி மாறிவிட்டது என்பது மாத்திரமல்லவே; ஊரே மாறிவிட்டது என்பதுதானே பொருள்! அதுபோல்தானே, இன்று நமது நாடே மாறியாகிவிட்டது. அதற்கேற்றவண்ணம் மொழி மாறுதலடைய வேண்டியதுதான் நியதி ஆகும்.

நம் நாட்டுப் பார்ப்பனர்கள் முன்னேற்றத்தின் பயன்களை எல்லாம் அனுபவிக்கவும், தாங்கள் முன்னேறவும் இங்கிலீஷ் மொழியை நல்லவண்ணம் பயன்படுத்திக்கொண்டு, மற்றவர்கள் எங்கு தங்களைப்போலவே முன்னேறிவிடுவார்களோ என்ற பொறாமையினால், கெடுதல் புத்தித் தன்மையால் நமக்கு இந்தியைக் கொண்டுவந்து புகுத்தி, அதை வேண்டாம் என்று சொல்லுவதற்காக நமக்குத் தாய்மொழி, தாய்மொழி என்று பைத்தியம் பிடித்து அதிலேயே அழிந்துவிடுவோமே ஒழிய, இங்கிலீஷ் என்ற உணர்ச்சி ஏற்படாது என்ற 'ஞானதிருஷ்டி'யினால், நமக்கு இந்தத் தாய்மொழிப் பைத்தியம் ஏற்படும்படி செய்துவிட்டார்கள். உதாரணமாக, இந்தி கட்டாயம் என்றதனால்தான் தமிழ்மொழிப் பைத்தியம் நமக்கு ஏற்பட்டது. இது பார்ப்பனர்களின் திறமையேயாகும். யாராவது சொல்லட்டுமே—பார்ப்பனர்களில் யாருக்காவது, எங்காவது தாய்மொழிப் பைத்தியமோ, தாய்மொழிப் பற்றோ இருக்கிறதா? அவனுக்கு முதலாவதாக தாய்மொழி என்பதாக ஒரு மொழியே கிடையாது என்பது மாத்திரமல்லாமல்—தாய்நாடு என்பதாக ஒரு நாடே கிடையாதே! அவர்கள் மொழிப் பற்று, நாட்டுப் பற்று எல்லாம்—அவர்கள் 'சாதி ஆதிக்கப்பற்று'தானே?



படிப்பகம்

www.padippakam.com



# 6. தாய்ப்பால் பைத்தியம்

தொட்டதற்கெல்லாம் பழமைப் பைத்தியமே—'சனாதனமே' தலைவிரித்தாடும் போது அந்த மோகத்தில் ஆழ்ந்த மக்களிடையில் பொதுவான முன்னேற்றம்—மாறுதல் ஏற்படுத்த வருகிறவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் மிக மிகக் கஷ்டமும் தொல்லையும் அனுபவிக்கவேண்டிவரும் என்பதில் மறுப்புக்கு இடம் இருக்காது.

இதற்குச், சுருக்கமான ஓர் உதாரணம் எடுத்துக்காட்ட ஆசைப்படுகின்றேன். அதாவது, இதே தமிழ்நாட்டில் தமிழ் மொழியான் அல்லாத ஆங்கில மொழிக்காரன் ஆட்சி வந்த பிறகுதான், அவனது 200 ஆண்டு ஆட்சியில் தமிழ் மக்களில் 100-க்கு 15 பேர்களாவது எழுத்துக்களையே அறிய முடிந்தது.

இந்த இங்கிலீஷ்காரன் ஆட்சி உச்சநிலையில் இருந்தபோது அதற்கு மந்திரியாக இருந்தவர்கள் இந்நாட்டுப் பார்ப்பனர்களேயாவார்கள். எப்படிஎனில், இந்தப் பார்ப்பனர் கருத்துப்படிதான் சட்டம், சம்பிரதாயம் முதலியவைகளைக்கொண்டு அவர்கள் மனம் கோணாமல் நடத்திவந்தான். அதன்பயனாக எல்லா நீதி நிர்வாகப் பதவிகளும் ஆங்கிலேயர்களுக்கு அடுத்தாற்போல் பார்ப்பானிடம்தான் இருந்தன. இதனை அறியாதவர்கள் உண்மை தெரிந்துகொள்ள முடியாதவர்களேயாவார்கள். இதனை வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமானால், இவர்கள் இந்தப்படியான ஆட்சியை எதிர்க்கவோ, வேறு மாற்றத்தைச் சொல்லவோ வகை அறியாதவர்களாகவே இருந்தார்கள், மற்றவர்கள். இப்படிப்பட்ட தன்மையில், நம்மில் மாத்திரம் அல்லாமல், பொதுவாகவே எழுத்து வாசனை உடைய மக்கள் 100-க்கு 15 பேர்களுக்கு உள்ளாகவேதான் இருந்திருக்கிறார்கள். இந்த 15 பேர்களில் இங்கிலீஷ் கற்றவர்கள் 100-க்கு 2 பேர்கள் இருக்கலாம். இந்த 2 பேர்களில் ஒன்றே முக்காலே மூன்றுவீசம் பேர் பார்ப்பனர்களே ஆவார்கள். இதிலிருந்து, இங்கிலீஷ் படித்த சமுதாயத்தின் வாழ்வு அன்றும் இன்றும்கூட எப்படி இருக்கின்றது? இங்கிலீஷ் படிக்காதவர்களின் வாழ்வு எப்படி இருக்கின்றது? என்று பார்த்தால், அதோடுகூடவே தமிழ் படித்தவர்கள் வாழ்வு எப்படி இருக்கின்றது? படிக்காதவர்கள் வாழ்வு எப்படி இருக்கின்றது? ஏதாவது பேதம் உண்டா? என்று பார்த்தாலும் 'இங்கிலீஷின் தன்மை' விளங்கும். அதாவது, இங்கிலீஷ் படித்தவர்கள் தன்மையும், ஒன்றுமே படிக்காதவர்கள் தன்மையும் விளங்கும்.

மற்றும், இந்தத் தமிழ்நாட்டிலேயே நம் தன்மையும் பார்ப்பனரின் தன்மையும், இருவரின் வாழ்வின் பேத அளவும் விளங்குவதோடு அந்தப் பேதத்துக்குப் பெருங்காரணம் வேறு எது எதுவோ இருந்தாலும், பெரிதும் அந்த ஆங்கிலம் படிக்காததுதான் காரணம் என்பது விளங்கும்.

இன்றைய தினம் ஆட்சி நம்முடையது என்று சொல்லப்பட்டாலும், இதில் இங்கிலீஷ் படித்தாலொழிய, அந்த இங்கிலீஷிலும் 'திறமையான படிப்பாளி' என்கின்ற தகுதி இருந்தால் ஒழிய ஆட்சியில் பங்குபெற முடியாது என்கின்ற நிலை இருந்துவருவதை யாராவது மறுக்கமுடியுமா?

மற்றும், இன்றைய உலகச் சூழ்நிலைக்கு ஏற்ப—விஞ்ஞான முன்னேற்றத்திற்கு ஏற்ப—எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் இங்கிலீஷைத் தவிர வேறு எந்த மொழியிலாவது நாடோ, மனிதனோ முன்னேறுவதற்கு ஏற்ற வசதியோ வாய்ப்போ இருக்கிறதா என்று கேட்கிறேன். இந்த அளவைப் பொறுத்த அளவிலாவது தமிழ் மக்கள் என்னும் 'குழந்தைகளுக்கு'—தாய்ப் பால் என்னும் தமிழானது முன்னேற்றம் என்னும் உடல் தேறுவதற்கோ வளருவதற்கோ பயன்பட்டு இருக்கின்றதா? பயன்படுமா?

'தாய்ப் பால் சிறந்தது' என்பதில் தாய்ப் பாலில் சக்தியும் சத்தும் இருந்தால்தான் அது சிறந்ததாகும். இங்கு தமிழ் என்னும் தாயே சத்தற்றவள் என்பதோடு, நோயாளியாகவும் இருக்கும் போது, அந்தப் பாலைக் குடிக்கும் பிள்ளை உருப்படியாகமுடியுமா?



தாய்க்கு நல்ல உணவு இருந்தால்தானே அவளுக்குப் பாலும் ஊறும்; அந்தப் பாலுக்கும் சக்தி இருக்கும்? தமிழில் நல்ல உணவு எங்கே இருக்கிறது?

நண்பர் சிவஞானம் கூறும் தமிழ்த் தாய் உண்ட உணவெல்லாம் சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பஞ்ச காவியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பாரதம், இராமாயணம், பாகவதம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் முதலிய இவைகள்தானே? இவைகளில் சுவை இருக்கலாம்; அழகு இருக்கலாம்; முன்னேற்றத்துக்கான 'அறிவு' இருக்கிறதா?

இப்படிப்பட்ட இந்தத் தாய்ப் பாலைக் குடித்து வளர்ந்த பிள்ளைகள், இந்நாட்டிலேயே நடைப் பிணமாய் இருப்பதைத் தவிர அதுவும் மற்றவன் கை, காலில் நடப்பதைத் தவிர, உழைப்புக்கு—காரியத்துக்குப் பயன்படும்படியான, தன் காலால் தாராளமாய் நடக்கும் படியான பிள்ளை—ஒரு ஒற்றைப் பிள்ளை—தமிழ் நாட்டில் இருக்கின்றதா என்பதை அன்பர்கள் காட்டட்டுமே என்றுதான் பரிவோடு கேட்கிறேன்.

இன்றைய தினம் கூட மேற்கண்ட தமிழ்த் தாயின் பாலை நேரே அருந்தி வளர்ந்த பிள்ளைகள் இங்கிலீஷ் புட்டிப் பாலை அருந்தி இருப்பார்களேயானால் இந்த அன்பர்கள் உட்பட எவ்வளவோ சக்தியும், திறமையும் உடையவர்களாக ஆகி, இவர்கள் வாழ்க்கை நிலையே வேறாக, அதாவது அவர்கள் நல்ல பயன் அடைபவர்களாக ஆகி இருப்பார்கள் என்பதோடு, மற்றவர்களுக்கும் பயன்படும்படியான நல்ல உரம் உள்ள உழைப்பாளிகளாகி இருப்பார்கள் என்று உறுதியோடு கூறுவேன்.

தாய்ப் பாலைக் குடிக்கவேண்டும், தாய்ப் பாலுக்கு வகை செய்யவேண்டும் (அதாவது சமஸ்கிருதம் கட்டாயமாக்கவேண்டும்) என்று வரட்டுக் கத்தல் கத்துகிற எந்தப் பார்ப்பனராவது, 'புட்டிப் பால் (இங்கிலீஷ்) வேண்டாம்' என்று தள்ளுகின்றனரா? சொல்கின்றனரா? அப்படிச் சொல்கிறவர்கள் சங்கராச்சாரியார்கள், மகான்கள் கூட்டத்திலாவது யாராவது ஒருவர் இருக்கிறார்களா? தாய்ப் பாலை (தமிழை) எதற்காகப் படிக்கவேண்டும்? படித்த பிறகு, அது எதற்குப் பயன்படுகிறது?

ஒருவருக்கு ஒருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ளத்தானே பேச்சு (மொழி) வேண்டும்? பேசப் பழக வேண்டுமானால் அது தானாகப் படிக்காமலேயே வந்துவிடுகிற சாதனமாகுமே! தமிழ் மக்களில் 100-க்கு 60 பேர்களுக்குமேல்–தாய்மார்களில் 100-க்கு 80 பேருக்குமேல் படிப்பு வாசனை அற்ற தற்குறிகளாக இருக்கிறார்கள். என்றாலும் இவர்களில் யாருக்குத் தமிழ் பேசத்தெரியாது? ஓர் ஆணையோ, பெண்ணையோ நண்பர்கள் காட்டுவார்களா? எனவே, எதற்காகத் தமிழ் வேண்டும்? மேலும், தாய்ப் பால் குடித்துத் தமிழில் மேதாவிகளாகிய நபர்கள் முதல்–தமிழில் அரைகுறையாக 'பஜாரி' இலக்கியங்கள் கற்றவர்கள் உட்பட அவர்களுக்கு ஏற்பட்ட உடல்நலமெல்லாம் மூட நம்பிக்கை என்ற நோய்களுக்கு ஆளாகியதே! அந் நோயைத் தீர்க்க எவ்வளவோ பேதி மருந்து கொடுத்து அவைகளை வெளியாக்கிப் போக்கவேண்டி இருக்கிறது. இன்றைய முற்போக்குக்கு முதல் எதிரி தாய்ப் பால் குடித்த மக்கள்தானே!

அப்பப்பா, இந்தத் தாய்ப் பால் குடித்த மக்களிடம் கடவுள், மதம், புராணம், சம்பிரதாயங்கள், பழமை முதலிய நோய்கள் தொத்துநோய்கள் போலவே விளங்குகின்றன என்பது மாத்திரமல்லாமல், பக்கத்தில் உட்கார்ந்தாலே சகிக்கமுடியாத வாடை (வெறுப்பு) அல்லவா தோன்றுகின்றது!

எவ்வளவு தமிழ்ப் பற்று, தமிழ் மேதைத் தன்மையுள்ள கலைஞர்களை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் இடத்தில் அவர்களில் 100-க்கு 5 பேர், 10 பேர்கள் இடத்திலாவது–முன்னேற்ற உணர்ச்சி இருக்கின்றதா என்று பார்த்தால் எல்லாம் பழங் குப்பைகளும், அவைகளுக்கு ஏற்ற கற்பனைகளும், ஒழிக்கப்படவேண்டியவைகளும், அழிக்கப்படவேண்டியவைகளும் உருவமாய்க் காணப்படுகின்றன என்பதைத் தவிர, வேறு என்ன இருக்கிறது?

படிப்பகம்

www.padippakam.com



என்றால்—உலகில் மற்ற மொழி நாடுகளைக் காணும்போது தமிழ் நாட்டுக்குத் தமிழ் என்ன பயன் அளித்திருக்கிறது?

தமிழை வளர்க்கவேண்டும் என்பதெல்லாம் கலைத்துறையிலோ, விஞ்ஞானத் துறையிலோ, மற்றும் சில துறைகளிலோ வேறு மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்படவேண்டும் என்கின்ற நிலைதானே தமிழுக்கு இருந்துவருகிறது?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மொழியானது, மொழியில் ஆகட்டும், பொருளிலாகட்டும், எழுத்திலாகட்டும், வேறு முறையிலாகட்டும் எவ்வித முன்னேற்றமும் மாறுதலும் அடையவில்லை. உலகத்திலே நீதிசிறந்த இலக்கியம்–குறள் தமிழில் உள்ளது. அது தருப்பிடித்துவிட்டது. என் அனுபவத்திற்கு எட்டியவரையில் உலகத்திலே சிறந்த துறை அறிவு, தமிழிலுள்ள கணக்குமுறை, அதாவது இளஞ்சுவடி என்றும் எண் கணக்கு என்றும் சொல்லக்கூடிய இலக்க முறை. அது குப்பைக்கே போய்விட்டது. இவை இரண்டையும் கழித்துவிட்டால் தமிழில் இருந்து—தமிழன்தெரிந்துகொள்ளத் தக்கதோ தமிழனுக்குப் பயன்படக் கூடியதோ எதுவும் தென்படவில்லை. தமிழும் தமிழனும் பெரும்பாலும் பழங்காலச் சின்னமாகக் காணப்படுகின்றன.

தமிழனின் பேச்சுமொழி, தாய்மொழி—தமிழ் என்பதைத் தவிர, தமிழருக்கு வேறு உலக முக்கியத்துவம் எதுவும் எனக்குத் தென்படவில்லை. மற்றபடி, தமிழ் நாட்டிற்கு, தமிழருக்கு வேறு எந்த மொழி தேவையானது–நல்லது; அரசியல், விஞ்ஞானம், கலை முதலியவைகளுக்கு ஏற்றது—பயன்படக்கூடியது என்று என்னைக் கேட்டால்—எனக்கு, ஆங்கில மொழிதான் சிறந்தது என்று தோன்றுகிறது. இது எனக்கு சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னமேயே தோன்றிய எண்ணமாகும்.

நான் 1939-ல் கோவைக்கல்லூரியில் அதன் பிரின்ஸிபாலின் தலைமையின்கீழ் கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் பேசும்போது எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தச் சமயம் நான் இந்தி எதிர்ப்புக்காகச் சிறைசென்று—சிறையினின்று விடுதலையாகி வந்த பிறகு, கல்லூரி மாணவர்களால் அழைக்கப்பட்டு ‘மொழி’ என்னும் தலைப்பில் பேசிய பேச்சில் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தத் தலைப்பில் மொழியின் பயன் என்ன? பயனுக்கேற்ற மொழி எது? என்று 2 பிரிவுகளாய்ப் பிரித்துக்கொண்டு பேசியிருக்கிறேன். அப்பேச்சில் ஆங்கில எழுத்துக்களையே தமிழ் எழுத்துக்களுக்கு நெடுங்கணக்காக—அகர வரிசையாக எடுத்துக்கொள்ளலாம் என்றும், தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ற எழுத்து ஆங்கிலத்தில் ஏதாவது ஒன்றிரண்டு குறையுமானால் அதற்கேற்ற தமிழ் எழுத்தையே எடுத்துக்கொள்ளலாமென்றும் சொன்னதோடு, மற்றும் ஆங்கிலமே தமிழனின் பேச்சுமொழியாக ஆகும்படியான காலம் ஏற்பட்டால் நான் மிகமிக மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவேன் என்றும் பேசியிருக்கிறேன். சமீபத்தில் (1957) நுங்கம்பாக்கத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் கூட்டப்பட்ட காலத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் பேசிய திருவாளர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழ் நாட்டுக்கு ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்றும் பேசினார்; ஆங்கிலமே போதனா மொழியாக இருக்கவேண்டும் என்றும் பேசினார். பிறகு நான் பேசும்போதும் அதுபோலவே பேசிவிட்டு, ஆங்கிலம் பேச்சு மொழியாக இருந்தாலும் மிகவும் பயன்படும் என்றும் சொன்னேன். அதே சமயம் இப்படி நான் சொல்வதால், மொழி வெறியர்கள் சிலர் என்னை, ‘நீ யாருக்குப் பிறந்தாய்?’ என்றுகூடக் கேட்டார்கள். ‘அந்த மொழியைப் பேச வேண்டும் என்று சொல்வதனால் நாம் ஆங்கிலேயனுக்குப் பிறப்பதானால், மற்றபடி காப்பி குடிப்பது முதற்கொண்டு இரயில், ரேடியோ, ஆகாய விமானம், டெலிபோன், மருந்து முதலியவை ஆங்கிலேயனுடையவை என்று தெரிந்து அனுபவிக்கிற நாம்—எத்தனை தடவை ஆங்கிலேயர்களுக்குப் பிறந்தவர்களாவோம் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், மொழி பேசுவதனால் ஆங்கிலேயனுக்குப் பிறந்தவனாகமாட்டோம்’ என்று



சொன்னேன். கடைசியாகத் தமிழின் மூலமோ தமிழ் இலக்கியத்தின்மூலமோ, தமிழ்ச் சமயம், தமிழ்ப் பண்பாடு மூலமோ நாம் உலக மக்கள் முன்னிலையில் ஒருநாளும் இருக்க முடியாது.

தமிழ் வடமொழியைவிட, இந்தி மொழியைவிடச் சிறந்தது என்பதிலும், பயன்படத் தக்கது என்பதிலும் எனக்கு அய்யமில்லை என்றாலும், நாம் இன்றைய நிலைமையைவிட வேகமாக முன்னேற வேண்டுமானால்—ஆங்கிலந்தான் சிறந்த சாதனம் என்றும், ஆங்கிலமே அரசியல் மொழியாகவும், போதனா மொழியாகவும் இருந்தாக வேண்டுமென்றும், ஆங்கில எழுத்துக்களே தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்களாவது அவசியம் என்றும், ஆங்கிலமே நம் பேச்சு மொழியாவது நலம் பயக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[நூல்: ‘மொழியும் அறிவும்’ (1957, 1962)]

‘இந்தி வேண்டாம்’ என்பதை நான் 1926ஆம் ஆண்டிலேயே ‘இந்தியின் இரகசியம்’ என்னும் தலைப்பில் ‘குடி அரசி’ல் எழுதினேன்.

அந்தத் தலையங்கம்தான் தமிழ்நாட்டில் மாத்திரமல்லாமல் இந்தியாவிற்கே இந்தி எதிர்ப்புக்காக எழுதப்பட்ட, தெரிவிக்கப்பட்ட முதலாவது எதிர்ப்புக் கருத்தாகும்.

பிறகு 1938-ல் இராஜாஜி இந்தியைப் புகுத்திய காலத்தில் இந்தியாவிலேயே முதல் முதல் கிளர்ச்சி ரூபமாக எதிர்ப்புக் காட்டியது சுயமரியாதை இயக்கம்தான். 2000 பேரை சிறைக்கனுப்பியதோடு நானும் 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை தண்டிக்கப்பட்டேன்.

அதனால் காங்கிரசும் பதவியிலிருந்து விலகியது; இந்திக் கட்டாயமும் ஒழிந்தது. பிறகு ‘சுதந்திரம்’ கிடைத்தது என்னும் பேரால் ‘இந்தி’ தேசிய அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டது என்றாலும், அதையும் தொடர்ந்து எதிர்த்துவந்தது நமது இயக்கம்தான்.

எனது இந்தி எதிர்ப்பு என்பது இந்தி கூடாது என்பதற்கோ, தமிழ் வேண்டும் என்பதற்கோ அல்ல என்பதைத் தோழர்கள் உணரவேண்டும். மற்றெதற்கு என்றால், ஆங்கிலமே பொதுமொழியாக, அரசாங்க மொழியாக, தமிழ்நாட்டு மொழியாக, தமிழன் வீட்டுமொழியாக ஆகவேண்டும் என்பதற்காகவேயாகும்.

தமிழன் பழைய தமிழனாகவே இருக்கவேண்டும் என்று கருதுவது—தமிழன் காட்டுமிராண்டியாகவே இருக்கவேண்டும் என்று கருதுவதற்கொப்பாகும்.

நாம் இவ்வாறு கூறுவது, தமிழன் உலக மனிதனாக—விஞ்ஞான உருவாக—ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் மக்களை விஞ்ஞானத்தில் தோற்கடிக்கத் தக்கவனாக ஆகவேண்டும் என்பதற்கேயாகும். நாம் இன்று கிணற்றுத் தவளைகளாக இருக்கிறோம். நமக்கு கம்பனுக்குமேல் புலவன் இல்லை; வள்ளுவனுக்குமேல் தீர்க்கதரிசி இல்லை. இக் கருத்தில் நாம் உலக மனிதனாக ஆகமுடியாது என்பது எனது பலமான கருத்து. ஆகையால் தமிழர் தோழர்களே! உங்கள் வீட்டில் மனைவியுடன், குழந்தைகளுடன் வேலைக்காரிகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுங்கள்; பேசப் பழகுங்கள்; பேச முயலுங்கள். தமிழ்ப் பைத்தியத்தை விட்டொழியுங்கள். என்னை வையாதீர்கள்; மனிதனாக வாழ முயலுங்கள்.

[‘விடுதலை’–அறிக்கை—27-1-1969]

www.padippakam.com



‘ அட கெடுவாய் பல தொழிலு மிருக்கக் கல்வி (தமிழ்)
அதிகமென்றே கற்றுவிட்டோம் ; அறிவில்லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக் கூத்தாடச்
செப்பிடு வித்தைகளாடத் தெரிந்தோமில்லைத்
தடமுலை வேசையராகப் பிறந்தோமில்லைச்
சனியான தமிழைவிட்டு தையலார் தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்ன சென்ம மெடுத்து உலகிலிரக்கின்றோமே’

தமிழ் படித்ததால் பிச்சைகூட கிடைக்கவில்லை; தமிழ் படித்தது பிச்சை எடுப்பதைத் தவிர வேறு உயிர்வாழ ஒன்றுக்கும் பயன்படவில்லை என்பதோடு, இதற்காகச் செலவு செய்த காலத்தை வேறுதுறையில் செலவிட்டால் வாழ்வில் பயன் ஏற்பட்டிருக்கும் என்பதையும் 100 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தமிழ்கற்ற அனுபவப் புலவர் மேற்கண்ட பாடல் மூலம் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

[‘விடுதலை’–தலையங்கம்—16-3-1967]

## 5. மொழி

மொழி என்பது ஒரு மனிதனுக்கு அவ்வளவு முக்கியமான சாதனம் அல்ல; அது இயற்கை ஆனதும் அல்ல; அதற்கு ஒரு கட்டாயமும் தேவையில்லை.

மொழி, மனிதனுக்குக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு—விஷயங்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் அளவிற்குத் தேவையானதேயொழிய பற்றுக் கொள்ளுவதற்கு அவசியமானதல்ல.

மொழியானது சமுதாயத்திலுள்ள சூழ்நிலைக்கு ஏற்றதேயொழிய பொதுவாழ்விற்கு, உணர்ச்சிக்கு ஏற்றதல்ல. இந்தக் கருத்துக்களைக் கொண்டுதான் நாம் நமக்கு எந்த மொழி வேண்டும் என்பதுபற்றிச் சிந்திக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நமக்குச் சொந்த மொழி என்பது—பிறந்த சாதியின் காரணமாக எனக்குக் கன்னடம்; சிலருக்குத் தெலுங்கு ; பெரும்பாலானவர்களுக்குத் தமிழ் ; நாட்டுக்கு உரியது தமிழ்.

தமிழ்நாட்டில் இருந்துகொண்டு—தமிழ்நாட்டைப்பற்றி நினைத்துக் கொண்டு, தமிழ்நாட்டுக்கு அரசியலுக்கானாலும், இலக்கியத்திற்கானாலும், போதனைக்கானாலும் ஒரு மொழி வேண்டுமானால் நாம் தேர்ந்தெடுக்கவேண்டியது தமிழ்மொழி என்பதாகத்தான் தோன்றும். அது ஓரளவிற்கு நியாயமாகும். ஆனால், நாடு நம்முடைய சொந்த நாடு ஆனாலும் ஆட்சி தமிழர்களல்லாத—அன்னியர்களுடைய ஆட்சியாக இருப்பதால், அந்த அன்னியர்கள் பல நாடுகளை ஒன்றுசேர்த்து அடக்கி ஆள்பவராக இருப்பதனால், அவர்களுடைய ஆட்சி நிலைப்பிற்கும், வசதிக்கும் ஏற்றபடி ஏதோதோ காரணங்களைச் சொல்லிக்கொண்டு, அன்னிய மொழியாகிய இந்தி மொழி என்பதுதான் ஆட்சி மொழியாகவும், கல்லூரி போதனா மொழியாகவும், பள்ளிகளில் கட்டாய மொழியாகவும்கூட இருக்கவேண்டும் என்று ஆட்சியாளர்களால் வலியுறுத்தும்படியான நிலைமை நம் நாட்டுக்கு ஏற்பட்டுவிட்டது. இது நமக்கு ஒரு மாபெரும் கெட்ட வாய்ப்பும் வெட்கப்படத் தக்கதான சம்பவமுமாகும்.

இந்த நாட்டில் மேற்கண்டபடி இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப் (மொழியாக்க) படவேண்டும் என்பதற்கு அரசாங்கமும், இந்த நாட்டுப் பார்ப்பனர்களும், அவர்களின்



அருளால் பிழைக்கவேண்டும் என்ற நிலையிலுள்ள பெரும்பாலோரும் எந்த அளவிற்கு வேண்டுமானாலும் இந்தியைப் புகுத்தவும் கட்டாயப்படுத்தவும் இவைகளுக்காகத் தந்திரமான பல வழிகளைக் கோலவும் துணிந்து முன்வந்திருக்கிறார்கள்.

அதுபோலவே, தமிழ்மொழியை அரசியல் மொழியாகவும், கல்லூரி போதனா மொழியாகவும், பள்ளிகளில் கட்டாய மொழியாகவும் இன்னும் இலக்கிய மொழியாகவும் இருக்க வேண்டுமென்று தமிழர்களிடையே அரசியல்வாதிகள் என்போர்களும், மற்றும் புலவர்களும் இலக்கிய வாழ்வுக்காரர்களும், மற்றும் மொழிப்பற்று என்பதை சமயப் பற்றுபோல் முக்கிய பற்று என்று கருதுகின்றவர்களும் வலியுறுத்துகிறார்கள். கிளர்ச்சி வயப்பட்டவர்கள் இதற்காகக் கிளர்ச்சிகளும் செய்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு மொழிகள் பற்றியும் கவலையில்லை; பிடிவாதமுமில்லை. இவற்றுள் இந்தி எந்த வகையிலும் நமக்குத் தேவையில்லை என்பதோடு கண்டிப்பாக நம் நாட்டிற்குள் இந்தியைப் புகவே விடக்கூடாது என்பது எனது கருத்தாகும். எந்தத் துறையில் நமது நாட்டிற்குள் இந்தி புகுந்தாலும், சமஸ்கிருதத்தினால் தமிழர்களும் தமிழ்நாடும் இன்று என்ன நிலைமைக்கு வந்து தொல்லையும் மடமையும் இழிவும் அனுபவிக்கிறார்களோ—சற்றேக்குறைய அந்த நிலைமைக்குத்தான் நம்மைக் கொண்டுபோய்விடும் என்பது எனது துணிபு. இந்தி, தமிழ்நாட்டையும் தமிழனையும் வட நாட்டானுக்கு–பார்ப்பனருக்கு அடிமைப்படுத்துவதல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் பயன்படாது.

இந்தி ஆட்சிமொழியாய் இருக்கிறதே என்றால், நாம் உலகம் உள்ள அளவும் வட நாட்டானுக்கு அடிமை ஆக இருப்பது என்று முடிவு செய்துகொண்டோமா? தமிழ்நாடு ஒருநாளைக்கும் அன்னியன் ஆதிக்கம் இல்லாத சுதந்திர நாடாக இருக்கக்கூடாது என்பது தான் தமிழ்நாட்டின் நிலையா? அப்படி இல்லை என்றால், இன்றைய அன்னியநாட்டான் ஆதிக்க ஆட்சியைத் தற்கால (தற்காலிக) ஆட்சி என்றுதானே சொல்லவேண்டும்?

மற்றும் இந்திமொழி, கலாசாலை போதனைக்கோ, இலக்கிய போதனைக்கோ, ஆட்சிமுறை போதனைக்கோ வேறுமொழியில் இருந்து இந்திமொழியில் மொழிபெயர்த்து நம் நாட்டிற்குள் புகுத்தவேண்டிய அளவில்தான் இருக்கிறதே தவிர—மற்றபடி மூலநிதி (பொக்கிஷம்) அதில் என்ன இருக்கிறது? இன்று சட்ட அறிவோ, கலை அறிவோ, பொறியியல் அறிவோ, வைத்திய அறிவோ, விஞ்ஞான அறிவோ அளிக்கத் தக்க நேரிடைச் சாதனம் இந்திக்கு என்ன இருக்கிறது?

நிற்க, தமிழை எடுத்துக்கொண்டாலும் இன்று உலக ஞானத்தில் முற்போக்குத் தன்மையில் தமிழுக்கு என்ன சிறப்பு இருக்கிறது? தமிழனுக்கு முதலாவது தெளிவான நேரான சரித்திரம் இல்லை.

தமிழனுக்கு அதுபோலவே சமய ஞான சாதனமும் இல்லை. இவை மாத்திரமல்லாமல், தமிழனுக்கு என்று—ஆரிய ஆதிக்கமும் கலப்பும் அற்ற இலக்கியமும் இல்லை. அதாவது, ஆரியர் வரவுக்கு முந்தியது என்று சொல்லத்தக்க வண்ணம் விவகாரத்திற்கு இடமில்லாத தன்மையில் எதுவும் கிடைப்பது மிக்க அருமையாகத்தான் இருக்கிறது. தமிழ்மொழி வேண்டுமானால் ஆரியத்திற்கு முந்தியது என்று ஒப்புக்கொள்ளலாம். அதுவும் தமிழனுக்கு இன்றளவும் என்ன பலனைக் கொடுத்திருக்கிறது? விஞ்ஞானத்திற்குச் சிறிதும் பயன்படத் தக்கதாய் இல்லை; அறிவுக்கும் தக்கபடி பயனளிக்க முடியவில்லை. தமிழ்மொழி ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் அதைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழன் இன்னும்—இந்த விஞ்ஞானப் பரவல் காலத்திலும் உலகில் எங்கும் இல்லாத அளவுக்கு மூட நம்பிக்கை உடையவனாகவும், மான உணர்ச்சி என்பது 100-க்கு 75 பாகம் இல்லாதவனாகவும் இருந்துவருகிறான். மனித வாழ்விற்கு மொழி முக்கியம்

படிப்பகம்

www.padippakam.com



பிறகு மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டு இருந்து, 'ஈரோட்டுக்கு அடுத்த ஊத்துக்குழி ஸ்டேஷனில் இறங்கிக் கொண்டார். அந்தச் சம்பவம் அவர் அவினாசியில் நடந்த ஒரு சமய மாநாட்டுக்கு தலைமை தாங்க சென்ற சமயம்.

சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்பெல்லாம் புலவர்கள் யாராயிருந்தாலும் 'பிச்சை' எடுத்தே தீருவார்கள். பெரிய புலவர்களுக்கு எல்லாம் மாதம் ரூ. 15 முதல் ரூ. 30 வரை சம்பளம்தான் சாதாரணமாக இருக்கும். அவர்கள் தகுதி எல்லாம் 'இலக்கியங்களை' உருப்போட்டு ஒரு சொல்லுக்குப் பல பொருள் சொல்லி, மக்களை மருளச்செய்து, காசு வாங்குவதுதான் உயர்ந்த தொழிலாகும். அந்தக் காலத்தில் எங்கள் குடும்பத்தையும் என்னையும் அறியாத புலவர்கள் தமிழ்நாட்டில் அருமை. புலவரைப்பற்றி என் கருத்து 'புலவர் என்றால் சொந்த புத்தி இல்லாதவன், புளுகன்' என்றுதான் உரை கூறுவேன். நா. கதிரைவேற்பிள்ளை என்கின்ற ஒரு தமிழ் வாயாடிப் புலவர் என்னிடம் வந்தபோது, ஒரு நிகழ்ச்சியில் 'புலவர்களுக்குப் பகுத்தறிவு கிடையாது என்பது என் கருத்து. அதை உங்களிடமும் கண்டேன்' என்று சொன்னதற்கு 'உன்னிடம் வந்ததே தவறு' என்று சொல்லி என்னிடம் வாங்கிக் குடித்த பாலை விரலைவிட்டு வாந்தி எடுத்துவிட்டார்.

இதுவரை நாட்டுக்கு, மனித சமுதாயத்திற்கு இந்த நாட்டில் எந்தப் புலவனாலும் வளர்ச்சி, அபிவிருத்தி காரியமும் ஆனது கிடையாது; அதற்குத் தகுதியான புலவன் இன்று இங்கு யாரும் இல்லை. பெரிய பெரிய பேர் வாங்கி இருப்பார்கள். ஆனால், அவர்களால் சின்ன கடுகத்திய காரியம்கூட ஆனதில்லை. எல்லாப் புலவர்களும் பழமையைப் பிரச்சாரம் செய்பவர்களே.

எந்தப் புலவராலும் இதுவரை நமது நாட்டுக்கு ஒரு சிறு மதிப்பிற்குரிய முன்னேற்ற நூல்கூட உண்டாக்கப்பட்டதில்லையே! கம்பராமாயணத்திற்கும் பெரிய புராணத்திற்கும் புதிய பொருள் எழுதிப் பணம் சம்பாதிப்பார்கள்.

இன்று தமிழில் 'மேதாவிகள்' டாக்டர்கள் ஏராளமாக ஆகிவிட்டார்கள். பூச்சும், பொட்டும், நாமமும்தான் அவர்கள் தலையில் விளங்குகிறதே தவிர, தலையில் இருக்க வேண்டியது அறவே இல்லை. புலவரை இடித்துரைக்க இந்த நாட்டில் என்னைத் தவிர வேறு எவரும் முன்வரப் பயப்படுகிறார்கள்.

தமிழின் 'பெருமை'யை உணரவேண்டுமானால் இன்று புலவருக்கு உறு துணையாய், பெருமைக்கு ஆதாரமாய் கம்பராமாயணமும், சிலப்பதிகாரமும்தானே முதல் வரிசையில் இருக்கின்றன. குறளை 'தீக்குறளாக்கி' விட்டார்களே புலவர்களும், பக்தர்களும்! புலவர்களுக்குக் கம்பராமாயணமும் சிலப்பதிகாரமும் இனத் துரோகம், முட்டாள் தனம், மூடநம்பிக்கை, பகுத்தறிவுக்குப் பூட்டுப் போடுதல் ஆகிய காரியங்கள் தவிர வேறு என்ன பலனைத் தருகிறது?

கம்பராமாயணத்திற்கும், சிலம்புக்கும் இந்த நாட்டில் மதிப்பு இருக்கிறது என்றால் இந்த நாட்டு மக்களுக்கு அறிவும் இல்லை; மானமும் இல்லை; இன உணர்ச்சியும் இல்லை என்றுதானே பொருள்?

இவைகளின் தன்மையே இப்படி இருந்தால், இவைகளைத் தாங்கி நிற்கும் தேவாரம், திருவாசகம், திருமுறை, பிரபந்தம், பெரியபுராணம் முதலிய குப்பைக் கூளங்களின் யோக்கியதை எப்படி இருக்கும்? இவைகளைக் கொண்டாடும் மக்கள் இன்னமும் பத்தாம் பசலி மக்களாக இருக்கிறார்கள் என்றுதானே பொருள்கொள்ள வேண்டும்? நம் நாட்டுக்கு மீளமுடியாத பெரும்கேடு என்னவென்றால், இந்தக் குப்பைக் கூளங்கள் எல்லாம் சமய நூல்களாக, பக்திக்குச் சாதனங்களாக, இலக்கியங்களாக ஆக்கிவிட்டதுதான். இதன் பயன் என்ன? இந்தக் கடவுள்களும், சமயங்களும் உள்ளவரை இந் நாட்டு மனிதர்கள் உருப்படப்போவதில்லை என்பதுதானே முடிந்த முடிபு; முதலாவது பெரும் கேடு.



இதைச் சொல்லக்கூட இந்த நாட்டில் (என்னைத் தவிர) ஆளே இல்லையே! எவனைப் பக்குவப்படுத்தினாலும் மரியாதை, விளம்பரம் வந்தவுடன் 'தமிழைக் காக்க' அல்லவா புறப்பட்டுவிடுகிறார்கள்! புலவன் பொறுக்கித் தின்ன இலக்கியங்களைக் காப்பதுபோல் 'பொதுத்தொண்டு' மக்களும் இப்போது பலன் அடையத் தமிழைப் பயன்படுத்திக் கொண்டு, வெட்கமில்லாமல் 'தமிழைக் காக்கிறேன்' என்கிறார்கள்.

என்னைக் குடிகாரர்போல் வைவதில் சமாதானம் ஏற்பட்டுவிடாது. கையிலுள்ள சரக்கைக் காட்டவேண்டும்.

திரு. கி. ஆ. பெ. தமிழைக் காக்கவேண்டும் என்று சொல்கிறார் என்றால், அவர் தானாகவே தன்னை ஒரு அனாமதேயம் என்று சொல்லிக்கொண்டு, அந்தப்படி அய்க் கோர்ட் தீர்ப்பும், சட்டமும் செய்துகொண்டு 'நான் எதையும் உளறுவேன்; யாரும் அதை லட்சியம்செய்து என்னை மதிக்கக்கூடாது' என்ற நிலை எய்திவிட்டார்!

அட பாவமே! மந்திரி கலைஞர் கருணாநிதி 'தமிழுக்குக் கேடுவந்தால் மந்திரி பதவியை விட்டுவிடுவேன்' என்று எதற்காகச் சொல்லவேண்டும்? ஏன் அனாவசியமாய் முட்டாள்கள் வைத்த கண்ணியில் மாட்டிக் கொள்ளவேண்டும்? அப்துல் காதருக்கும் ஆடி அமாவாசைக்கும் என்ன சம்பந்தம்?

'ஒழுக்கம், நாணயம் கெட்டால், நீதி கெட்டால், நம்பிக்கை கெட்டால், நன்றி கெட்டால் என்பதுபோன்ற மனிதத் தன்மை எங்களிடம் இல்லையானால், எங்களால் காப்பாற்ற முடியாவிட்டால் பதவியை விட்டுவிடுவேன், (ஏன்) உயிரையும்கூட விட்டு விடுவேன்' என்று கூறலாம். 'கப்சா'வும் விடலாம். அதை விட்டுவிட்டு, 'தமிழைக் காப்பாற்றாவிட்டால், அதற்குக் கேடுவந்தால் பதவியை விட்டுவிடுகிறேன்' என்றால் அதற்கா மக்கள் ஓட்டுக்கொடுத்தார்கள்? ஒவ்வொன்றுக்காகவும் மந்திரி பதவியை விட்டு விடுவேன் என்றால் அப்படி ஒரு மனிதனுக்கு எத்தனை மந்திரி பதவி இருக்கிறது?

நாம் வீட்டில் தமிழ் பேசுகிறோம். கடிதப் போக்குவரத்து நிர்வாகம், மக்களிடம் பேச்சு இவைகளைத் தமிழில் நடத்துகிறோம். சமயத்தை, சமயநூல்களை, இலக்கியத்தைத் தமிழில்கொண்டு இருக்கிறோமே! சரி! இதற்குமேலும் சனியனான தமிழுக்கு என்ன வேண்டும்?

தமிழ் காட்டுமிராண்டிக் காலத்து மொழி. நாகரிக காலத்திற்கு, பகுத்தறிவு காலத்திற்கு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற காலத்திற்கு, 'யாயும் யாயும் யாராயினரோ' என்ற காலத்திற்குத் தமிழ் பயன்படுமா? வேஷத் தமிழரை அல்ல; உண்மைத் தமிழரைக் கேட்கிறேன். சொல்லுங்கள் (நீங்கள் சொல்லும் சமாதானத்தைப் பல ஆயிரம் புத்தகமாக அச்சுப்போட்டு வெளிப்படுத்துகிறேன்). எவ்வளவோ வேலை செய்ய வேண்டி இருக்கிற மந்திரி பதவியில் உட்கார்ந்துகொண்டு, 'தமிழுக்குக் கேடுவந்தால் பதவியை விட்டுவிடுகிறேன்' என்கின்ற மந்திரிக்கும், ஊர் ஊராய்த் திரிந்து குட்டிச்சுவராக வேண்டிய கோயில்களை எல்லாம் கட்டிமுடிக்கும் திருப்பணியில் இருந்த மந்திரிக்கும் தரத்தில் என்ன வித்தியாசம்? நான் இதை மந்திரிமீது குறைகூற எழுதவில்லை. மந்திரிக்கு உள்ள பகுத்தறிவு எனக்கு நன்றாய்த் தெரியும்.

ஏன், பாமர மக்களுக்கு வழியல்லா வழியில் பயப்படவேண்டும்? என்பதற்காகவே எழுதுகிறேன். தமிழ்பற்றிய இந்தக் கருத்து இன்றையக் கருத்தல்ல. இந்தி எதிர்ப்புக் காலம் தொட்டு எனக்கு இந்தக் கருத்துதான். இது மந்திரிகளுக்கும் தமிழுக்காக இன்று பாடுபடுபவருக்கும் தெரியும்.



படிப்பகம்

www.padippakam.com



| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| தாய் | தல்லி | தாய் | தள்ளே |
| தகப்பன் | தன்றி | தந்தை | அச்சன் |
| அண்ணன் | அன்ன | அண்ணா | சேட்டன் |
| தம்பி | தம்புடு | தம்பி | அனுசன் |
| கணவன் | மொகுடு | கெண்ட | பர்தா |
| மகன் | குமாரடு | மகனு | ஆண்குட்டி |
| பாட்டன் | தாத | தாத | மூப்பன் |
| உடல் | ஒள்ளு | மய்யி | தேகம் |
| மனைவி | பெண்ட்லாமு | எண்டத்தி | பாரியா |
| மகள் | குமாரத்தி | மகளு | பெண்குட்டி |
| அக்காள் | அக்க | அக்க | சேட்டச்சி |
| மாமன் | மாம | மாவ | அம்மாவன் |
| மருமகன் | அல்லுடு | அளிய | மருமான் |
| பாட்டி | அவ்வ | தாத்தி | முத்தி |
| எது | எதி | எது | எது |
| அது | அதி | அது | அது |
| இது | இதி | இது | இது |
| இங்கே | இக்கட | இல்லி | இவடே |
| அங்கே | அக்கட | அல்லி | அவடே |
| எங்கே | எக்கட | எல்லி | எவடே |
| இப்போது | இப்புடு | ஈவாக | இப்போள் |
| அப்போது | அப்புடு | ஆவாக | அப்போள் |
| எப்போது | எப்புடு | ஏவாக | எப்போள் |
| சிறிய | சின்ன | சிக்க | சிறிய |
| பெரிய | பெத்த | தொட்ட | வலிய |
| நெருப்பு | நிப்பு | பெங்கி | தீ |
| கொடு | ஈய் | கொடு | கொடு |
| மழை | வான | மளே | மழ |
| இரவு | ராத்திரி | ராத்திரி | ராத்திரி |
| பகல் | பகலு | அகலு | பகல் |
| யார் | எவரு | யாரு | யாரானு |
| ஊர் | ஊரு | ஊரு | ஊரி |
| ஊருக்கு | ஊரிக்கி | ஊரிக்கே | ஊரிலே |
| சோறு | அன்ன | ஊண்ட | ஊணு |
| சேலை | சீரா | சேலை | முண்டு |
| நீர் | நீள்ளு | நிறு | வெள்ளம் |
| கண் | கன்னு | கண்ணு | கண்ணு |
| மூக்கு | மூக்கு | மூங்கி | மூக்கு |
| காது | செவ்வு | கிமி | செவி |
| வாய் | நோரு | பாயி | வாயி |
| தலை | தல | தலெ | தலை |
| வர் | ரா | பா | வரி |
| பசு | ஆவு | அசுவு | பசு |
| எருது | எத்து | எத்து | கான |
| சொல்லு | செப்பு | ஹேள்ளு | பர |



தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை தனித்தனி மொழியா? இந்தப்படி மொழி பேசுகிறவர்கள் தனித்தனித் தேசிய இனமா? இதற்காக அவர்கள் பிரிந்து வாழ வேண்டுமா? அறிஞர்கள் சிந்திக்க!

['விடுதலை'-தலையங்கம்—27-11-1948; 2-2-1953]

## 4. தமிழ்

நமது நாட்டில் வேறுவழியில் பிழைக்கமுடியாதவர்கள் தமிழின் பெயரால் பிழைக்கத் துடிக்கிறார்கள். அவர்கள் துடிதுடிப்புதான் 'தமிழைக் காக்கவேண்டும், தமிழுக்கு உழைப்பேன், தமிழுக்காக உயிர் விடுவேன்' என்பது போன்ற கூட்பாடுகள்.

இதில் மற்ற மக்கள் சிக்குண்டு ஏமாந்து போகக்கூடாது.

நான் தமிழை அறியாதவனல்ல; தமிழ்ப் புலவர்களை, மேதாவிகளைத் தெரியாதவன் அல்ல; தமிழ் இலக்கியங்களின் தன்மையை உணராதவனல்ல.

இன்றையப் புலவர்கள் தமிழ் அபிமானிகள் தியரிடிகல் (Theoretical) புத்தகம் படித்த புலவர்கள் என்றால், நான் (Practical) பிராக்டிகல் (அனுபவ) தமிழ் அறிவு உடையவன் என்று கருதி இருப்பவன். 1920 வரை என்னிடம் வந்து வாதம் செய்யாத, கைநீட்டாத தமிழ்ப் புலவர்கள் குறைவென்றே சொல்லுவேன்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையை எனக்குத் தெரியாது; சாமிநாத அய்யரை எனக்கு நன்றாய்த் தெரியும்; சாமி வேதாசலத்தையும் தெரியும்; கலியாணசுந்தர முதலியார் தரத்திலுள்ள 'பிரபல' தமிழ்த் 'தென்றல்'களையும் தெரியும்.

ஒரு சமயத்தில் நாங்கள், காங்கயம் சேஷாசல நாயுடு, முத்துசாமிக் கவிராயர் (சங்கரம் பிள்ளை சங்கரதாஸ் ஆனபின்) சங்கரதாஸ் இவர்களுடன் பேசிக்கொண்டு இருந்த போது 'வள்ளுவரை மன்னிக்கலாம். மற்ற எந்தப் புலவனையும், எந்த இலக்கியத்தையும் மன்னிக்க முடியாது. படிப்படியாக ஆயுள் தண்டனை, தூக்குத் தண்டனை வரையில் தண்டிக்கப்படவேண்டியவர்கள் ஆவார்கள்' என்று சொன்னேன். அவர்கள் பெருஞ் சிரிப்பு சிரித்து, கை தட்டினார்கள்! இது சுமார் 1900 முதல் 1920 வரை உள்ள காலத்தில் நடந்த பல நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

ஒரு வேடிக்கை நிகழ்ச்சி: வே சாமிநாத அய்யர் நான் 'பிரபு'வாயிருக்கும்போது வந்து புலவர் முறைப்படி என்னைப் பார்த்துவிட்டுப்போன சில நாட்களுக்குப் பின், ஒருநாள் இரயில் பிரயாணத்தில் அவர் இருக்கும் வண்டியில் நான் ஏறி ஒருபுறம் உட்கார்ந்தேன். வண்டியில் இருந்த மக்கள் என்னைக் கவனித்தார்கள். அப்போது அவரிடம் 'நாயக்கர் வந்து ஏறினார்' என்று சொன்னார்கள். அது ஈரோடு ஸ்டேஷன் ஆனதால் 'இராமசாமி நாயக்கர்'தான் என்று கருதி என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். உட்கார்ந்த உடன் நான் வணக்கம் தெரிவித்தேன். அவர் என்னை உற்றுப் பார்த்தார். பார்த்ததும் பொருளாதாரத்தில் எனது நிலை தாழ்ந்துவிட்டதாகக் கருதிக் கண் கலங்கினார். கலங்கி 'வியாபாரத் தொழில் அப்படித்தான், சகடக் கால் போல்' என்று கூறிக்கொண்டு 'சவுகரியமா?' என்று கேட்டார்.

அவர் ஏன் அப்படி நடந்துகொண்டார் என்றால், அவர் என்னிடம் வந்து பேசிய காலம், என்னைப் பிரபு என்று கருதி வந்து பயன்பெற்ற காலம். அடுத்தாற்போல் இரயிலில்,—பிரயாணத்தில் என்னை அவர் சந்தித்த காலம் நான் காங்கிரசில் சேர்ந்து கதர் கட்டிக்கொண்டு, சட்டை போடாமல் ஒரு மடிசஞ்சி மூட்டையை வைத்து, அதன்மீது உறைந்துகொண்டிருந்த காலம். பிறகு நான் அன்றைய எனது நிலையைப்பற்றிப் பேசிய

படிப்பகம்

www.padippakam.com



எனக்கி என்று கூறும் மக்களைத்தானா—'வேறுமொழி பேசுவோர்' என்று ஒதுக்க வேண்டும்! தமிழ்நாட்டுப் பார்ப்பனரையெல்லாம் ஒரு தனியிடத்தில் வைத்துவிட்டால் இவர்கள் பேசுவது தெலுங்கு, கன்னடம், மலையயாளத்தைவிட வேறு மொழியாகத்தானே கொள்ளவேண்டியிருக்கும்!

நாம் 'அங்கே' என்பதை ஒருவன் 'அக்கடே' என்றும், ஒருவன் 'அவடே' என்றும் கூறுகிறான். இச் சிறு வேறுபாட்டின் காரணமாக இவை வெவ்வேறு மொழியாக்கப் படலாமா? 'அங்கிட்டு' என்று வழங்கும் தமிழர் வேற்று மொழியாளரா?

நாம் 'ஆ' என்பதைத்தான் தெலுங்கன் 'ஆவு' என்றும்; கன்னடியன் 'அசு' என்றும்; மலையாளி 'ஆல்' என்றும் கூறுகிறான். 'ஆன்' என்பதுதான் 'ஆல்' என்று திரிந்திருக்கும். இச் சிறு மாறுபாட்டினாலா இவை நான்கு மொழிகளாக்கப்பட வேண்டும்?

தமிழ்நாட்டில் ஒரு கோட்டத்தில் (ஜில்லா) இருக்கும் சொல், மற்றொரு கோட்டத்தில் இல்லை; ஒரு கோட்டத்தில் ஒரு பொருளுக்குப் பயன்படுத்தும் சொல்லை மற்றொரு கோட்டத்தில் வேறு பொருளுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஒரே கோட்டத்தில் வெவ்வேறு ஒலியாக உச்சரிக்கிறார்கள். வழிக்கு – வெட்டி, பாட்டை என்னும் சொற்கள் கோவையில் இல்லை. 'கொல்லை' என்ற சொல் தமிழ்நாட்டில் சில இடங்களில் 'கக்கூசு'க்கு வழங்கப்படு கிறது; சில இடங்களில் வீட்டின் பின்வாசலுக்கு வழங்கப்பட்டு வருகிறது; சில இடத்தில் விளை நிலத்தைக் குறிக்கிறது. தமிழ்நாட்டில் கோவைக் கோட்டத்தில் நகர மக்கள் பேச்சு, நாட்டு மக்களால் எளிதில் புரிந்துகொள்ள முடிவதில்லை. தமிழிலுள்ள ஒரு பொருட் பல சொற்களே ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனியாக வழங்கி வெவ்வேறு மொழியாக நிற்கின்றன.

எனவே, இவை நான்கும் ஒரே உதரத்திலிருந்து உதித்து எழுந்தவையல்ல. அந்த உதரமேதான் இவை நான்கும். என்னருந் தமிழே! நீயேதான் தெலுங்கு! நீயேதான் கன்னடம்! நீயேதான் மலையாளம்!' என்றுதான் நான் கூறுவேன். இதை நமது மக்களுக்கு உணர்த்தி ஒரேநாடு, ஒரேமொழி, ஒரேமக்கள் என்ற ஒன்றுபட்ட நிலையை உண்டாக்க வேண்டும்.

தமிழர்களுக்கு, குறிப்பாகத் தமிழ்ப் பண்டிதர்களுக்குச் சிறிதாவது இனப்பற்று இருந்திருக்குமானால் ஆரியர்களுடைய இந்தத் தந்திரம், சூழ்ச்சி வெற்றி பெற்று—நம் மக்கள் இவ்வளவு பிரிவினைக்கும்,வேற்றுமைக்கும் ஆட்பட்டிருக்க முடியாது. தெலுங்கர், கன்னடியர், மலையாளிகட்குள்ள மொழிப் பற்றில், உணர்ச்சியில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு நூற்றில் ஒரு பங்கு கூட இல்லை.

அவை வெவ்வேறு மொழிகளாய் இருப்பதால் நமக்கென்ன கேடு எனின், தமிழ கத்தைச் சுற்றி மூன்று புறத்திலுமுள்ள மக்கள் ஆரியமயமாய் இருந்தால் அது நமக்குத் தொல்லையாகவும், பல துறைகளில் தடையாகவும் இருக்காதா? 'திராவிட நாடு திராவிடருக்கு' ஆனால் இந்தக் குறைபாடுகளை எளிதில் தீர்த்துக்கொள்ள முடியும். மற்றும் தெலுங்கர், கன்னடியர், மலையாளிகளைத் தமிழர்களாக்க வேண்டுமானால், 'திராவிடர்' என்று சொல்லித்தான் ஆக்க முடியும். 'திராவிடமே தமிழ்; தமிழே திராவிடம்' என்னும் புத்துணர்ச்சியைத் திராவிட மக்கள் பெறுவார்களாக!

[நூல்: 'மொழியாராய்ச்சி'—(1948) வள்ளுவர் பதிப்பகம், பவானி]

## 3. திராவிட மொழி தமிழே!

நான் மொழிப் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போதெல்லாம் திராவிட மொழி என்பது, தமிழ் மொழி என்பதுதான் என்றும், தமிழ் தவிர்த்த கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்பதாகத் தனி மொழியோ, சார்பு மொழியோ கிடையாதென்றும், தனி



மொழி என்று கருதிக்கொண்டு சொல்லப்படுவதும், பேசப்படுவதுமான மேற்கண்ட தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று சொல்லப்படும் மொழிகள் தமிழ் மொழிதானே ஒழிய வேறு மொழி அல்லவென்றும், இட பேதம், போக்குவரத்து வசதிக் குறைவு காரண மாக ஆங்காங்குள்ள மக்கள் தமிழைப் பேசிய முறைதான், அதாவது தமிழ் மொழியை உச்சரித்த மாதிரிதான் இப்போதைய சிறு பேதத்துக்குக் காரணமேயொழிய, அவை தனித் தனியாக உண்டாக்கப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட மொழிகள் அல்லவென்றும் பல நாட்களாக வலியுறுத்தித் தொடர்ந்து பேசி வந்திருக்கிறேன்.

அதன் விளக்கம் என்னவென்றால்—இப்பொழுது நமது நாட்டிலே பார்ப்பனர்கள் தமிழ் பேசும்போது எனக்கு உனக்கு என்பதை 'நேக்கு', 'நோக்கு' என்று பேசுவதை யும், அவர்கள் இவர்கள் என்பதையும், வந்தார்கள் போனார்கள் என்பதையும், 'அவா, இவா', 'வந்தா', 'போனா' என்றும் உச்சரிப்பதையும் பார்க்கிறோம். நம்மில் சிலரும், சில தாசிகளும் பார்ப்பனர்போல் பேசி பெருமை சம்பாதிப்பதற்காக அந்தப்படியே உச்சரிப்பதையும் காண்கிறோம். ஆனால், சொற்களின் அடிப்படையிலே மாற்றமில்லை.

அன்றியும், சில சொற்களில் மாற்றம் இருக்கிறது என்று காணக்கூடியதாய் இருந் தாலும்—அதாவது தமிழில் 'வீடு' என்பது கன்னடத்தில் மனை என்றும், தெலுங்கில் இல்லு என்றும் சொல்லப்பட்டாலும் அவையும் நம் தமிழ், தனித் தமிழ் மொழியே தவிர வேறு மொழி அல்ல. ஒரு சமயம் ஏதாவது ஒரு பொருளுக்கு, ஒரு காரியத்திற்கு, ஒரு குணத்திற்கு தமிழ் அல்லாத வேறு சொல் இருக்கிறது என்று எடுத்துக் காட்டப்படுமானால் அவையும், பெரிதும் வடமொழிச் சொற்களை, தமிழில் எப்படிப் பலவற்றைக் கலக்கிப் பேசுகிறோமோ அதுபோல் தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்கிற மொழிகளிலும் வடமொழியைக் கலக்கி அல்லது புகுத்தப்பட்டுப் பேசப்படும் சொற்களாகவும், அல்லது அப்போதுள்ள அரசாங்கம், சமயம், ஆரிய செல்வாக்கு அல்லது பக்கத்துச் சார்பு, நாட்டு மொழிக்கலப்பு ஆகியவைகளால் கலந்து பேசப்பட நேர்ந்த சொற்களே தவிர, அப்படிப்பட் டவை கன்னடம், தெலுங்கு, மலையான மொழிகளுக்கு ஏற்பட்ட தனிச் சொற்கள் ஆகமாட்டா.

மற்றும் ஒன்று, இரண்டு, மூன்று, மாதம், வாரம், நாள் ஆகியவைகளுக்கும்; வண்டி, வாகனம் முதலியவைகளுக்கும் தமிழ்ச் சொற்களே பிற திராவிட மொழிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, இந்த நமது கூற்றுக்கு எடுத்துக்காட்டுக்காக இந் நான்கு மொழிகளிலும் இருந்துவரும், வழங்கிவரும் சில சொற்களை இதன் கீழே குறிப்பிட்டிருக்கிறேன். இதை வாசகர்கள் ஊன்றிப் படித்து, மற்றும் மேலே கண்ட நமது கூற்றுக்கு ஏற்றவண்ணமே மற்ற மொழிகளும் பெரிதும் இருக்கின்றனவா, இல்லையா என்பதையும் கூர்ந்து, ஆராய்ந்து சிந்திக்க வேண்டுகிறேன்.

திராவிட மக்களைப் பிரித்துப் பாழ்படுத்தியதுபோலவே திராவிட மொழியையும் பலவாறாகப் பிரித்துப் பாழ்படுத்தி, அதற்கு எழுத்து, இலக்கணம் எல்லாம் ஆரியமய மாக்கி, திராவிட மக்களுக்கு நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இல்லாமல் போகும்படி ஆரியர்கள் செய்துவிட்டதோடு, திராவிட நூல்களையும், கலாச்சாரங்களையும் பாழ்படுத்தி ஆரிய நூல்களும், ஆரிய கலாச்சாரங்களுமே திராவிடர்களிடையில் தலைசிறந்து விளங்கும்படி, திராவிடம் அடிமைப்படுத்தப்பட்டாகிவிட்டது.

இதைப் பற்றிப் பாமர மக்கள் சிந்திப்பதைவிட, திராவிடப் புலவர்களையே சிந்தித்துப் பார்க்கும்படி மிகவும் தாழ்மையோடு வேண்டிக்கொள்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் எழுத்துக்களில் ஒரு சில மாற்றம் செய்தேன். அனேக பண்டிதர்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னைப் பாராட்டினார்களே யல்லாமல், ஒருவராவது அம் முயற்சிக்கு ஆதரவு அளித்தவர்கள் அல்ல.

இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய நான் தகுதியற்றவன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் தகுதியுள்ளவர்கள் எவரும் வெளிவராவிட்டால் நான் என் செய்வது? என்னைக் குறைகூறவோ, திருத்தவோ முயற்சிப்பதன் மூலமாகவாவது இதற்கு ஒரு வழி பிறக்காதா என்றுதான் துணிந்தேன். இதுவரை யாரும் அதை இலட்சியம் செய்ய வில்லை.

ஆனாலும், நான் அம்முறையிலேயே இரண்டு, மூன்று பத்திரிக்கைகள் நடத்து கிறேன்; அம் முறையிலேயே 10, 20 புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறேன். இன்னமும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது.

[சென்னை பச்சையப்பன் கல்லூரியில், 13-1-1936-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 26-1-1936

## 2. திராவிட மொழிகள்

தமிழன், தெலுங்கன், கன்னடியன். மலையாளி இவர்கள் பேசுவதெல்லாம் தமிழ் தான். இவர்கள் பேசுவது வெவ்வேறு மொழியென்று கூறுபவன் தமிழ் மகனல்லன்; தமிழை அறியாதவன்; ஆரியத்திற்குச் சோரம் போனவன்; நம்மைக் காட்டிக் கொடுத்து ஆரிய ஆதிக்கத்திற்கு ஆக்கந்தேட முயற்சிப்பவன். இவை நான்கும் வேறுவேறு மொழி என்று கூறுபவர்கள் 'தமிழர் என்று தம்மை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; கருதிக் கொண்டிருக்கிறார்கள்' என்று கூறலாமே தவிர—இவர்களைத் தமிழறிந்தவர்கள் என்று நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படப் போகிறது. அதுதான் பிரிந்து போகட்டும் என்றால், மொழிவாரிக் கவிஞர்கள் நியமிக்கப் பட்டு, மொழிவாரி இலக்கணங்களும் செய்யப் பட்டு. திராவிட மொழியைப் பாழாக்கத் திட்டம் தீட்டியாகிவிட்டதே! இந்நான்கு மொழி களும் ஒரே மொழிதான் என்ற கருத்து மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கியதும், ஆரிய அதிக்கம் அதைக் கெடுக்க—'அவை ஒன்றல்ல, தனித்தனி' என்று பிரித்துக் காட்ட முற்பட்டுவிட்டதே!

நமது பண்டிதர்களில் சிலர், இவை நான்கும் ஒன்றிலிருந்து வந்தவை; ஒரே தாய் வயிற்றில் பிறந்து வளர்ந்த நான்கு அக்கை, தங்கைகள் என்று கருதுகிறார்கள். இது பித்தலாட்டம் என்பதுதான் என் கருத்து. இத் திராவிடத் தாய்க்குப் பிறந்தது ஒரே மகள் தான், அதுதான் தமிழ். அந்த ஒன்றைத்தான் நாம் நான்கு பெயரிட்டு அழைக்கிறோம். நான்கு இடத்தில் பேசப்படுவதால் நான்கு பெயரில் வழங்குகிறதே ஒழிய, நான்கிடத்திலும் பேசப்படுவது தமிழ்தான். நான்கும் ஒன்றிலிருந்து உண்டானவை என்று எண்ணுவது தான் தவறு; ஒன்று தான் நான்காக, நமது அறியாமையால் கருதப்பட்டுவருகிறது. இதை நிரூபித்துக் காட்டவும் என்னால் முடியும்.

நான்கு தனியிடங்களில் வாழ்ந்துவந்த மக்களுக்குள் போக்குவரவும், அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பமும் முன் காலத்தில் இல்லாததால், ஆங்காங்குள்ள மக்கள் தமிழைப் பேசி வந்த முறை சிறிது வேறுபடவும், அதைச் சாதகமாக வைத்துக்கொண்டு, நம்மை நான்கு சாதியாகப் பிரித்துவைத்த ஆரியம், நம் மொழியையும் நான்காகப் பிரித்து. வேண்டு மளவும் வடமொழியை அவற்றுள் புகுத்தி, அதற்கேற்ற வண்ணம் எழுத்து இலக்கணம் முதலியவற்றை உண்டாக்கி, சிறிது வேறு உச்சரிப்பாக இருந்த தமிழைத் தனித்தனி மொழியென்று சொல்லும்படி செய்துவிட்டது. தமிழ் மக்கள் தங்களுக்குள் உள்ள வகுப்பு



வேற்றுமையால், இக் குறைபாட்டைப் பற்றிச் சிந்திக்காமல், இதன் உட்காரணத்தையும் கண்டுபிடிக்காமல், தமிழ் நாட்டிலுள்ள தமிழைத் தவிர, மற்றைய மூன்றும் கிளைமொழி களென்றும், நாட்டுப் பெயரையே மொழிக்குக் கொடுத்துப் பிரித்துவிட்டார்கள். அன்றையத் தமிழ்ப் பண்டிதர்கள் ஆரியத்திற்கு அடிமைப் பட்டிருந்ததால் அதைத் தடுத்தார்களல்லர். இன்னும் நமது பண்டிதர்களுக்கு அந்த ஆரியமோகம் தீர்ந்தபாடில்லை.

ஒன்று நான்காக வகுக்கப்பட்டது என்பதற்கும், ஒன்றிலிருந்து நான்கு பிறந்தன, கிளைத்தன என்பதற்கும் வேற்றுமையுண்டு. ஆகவே, தமிழ், நீண்ட தொடர்பற்ற காரணத்தால் நான்காகப் பிரிந்திருக்கிறதே அல்லாமல், தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை தோன்றியவை அல்ல; உண்டாக்கப்பட்டவை அல்ல என்று திராவிடர் உணரவேண்டும். இந்த உண்மை தெரிந்துகொண்டாலொழிய, இந்த நான்கு நாட்டாருக்குள்ளும் வேற்றுமையுணர்வு தோன்றாமலிருக்காது. இந்நான்கும் தமிழ் மொழியேதான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

ஆரிய மோகமற்ற நான்கு மொழிப் பண்டிதர்களும் ஒன்றாக உட்கார்ந்து, நான்கு மொழியகராதிகளையும் வைத்துக்கொண்டு, ஆரியனல்லாத ஒரு வடமொழிப் பண்டிதனை நீதிபதியாய் வைத்துக்கொண்டு, தமிழ் தவிர்த்த மற்ற மூன்று அகராதிகளிலுமுள்ள வடசொற்களையும், பிறசொற்களையும் நீக்கிவிட்டால் எஞ்சியிருப்பவை அத்தனையும் தமிழ்ச் சொற்களாகவே இருப்பதைக் காணலாம். நூற்றுக்கு அய்ந்துகூட, 'தமிழ் அல்லாத' சொல்லாக இருக்காது. அதற்குள்ள நீட்டலையோ, குறுக்கலையோ நீக்கி விட்டுப் பார்த்தால், அவையும் தமிழாகவே முடியும். அவ்வாறு அயற்சொற்களை நீக்கிய பிறகு நூற்றுக்கு எண்பது, இன்றுள்ள வழக்கத் தமிழ்ச் சொற்களாகவும்; பத்து தற்போது வழக்கத்திலில்லாமல் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்துவரும் சொற்களாகவுந்தான் இருக்கும்.

இன்று வேண்டுமானால் நீங்கள் 50 ஆண்டுகளுக்கு முன் அச்சிட்ட ஒரு மொழிவாரிச் சொன்னூலை (ஒக்காபுலேரி) எடுத்துப் பாருங்கள். எல்லாம் தமிழ்ச் சொற்களாகவே இருப்பதைக் காணலாம். அதைச் சுருக்கமாகச் சில உதாரணங்களால் விளக்குகிறேன்.

நாம் குடியிருக்கும் இடத்திற்குத் தமிழில் 'வீடு. இல், மனை, பொறை' என்று பெயர். ஒரு தெலுங்கனும் 'இல்' என்றுதான் சொல்லுகிறான்; ஒரு கன்னடியன் 'மனை' என்கிறான்; ஒரு மலையாளி 'பொறை' என்கிறான். தமிழன் தாகத்துக்குக் குடிப்பதை 'நீர்' என்கிறான்; தெலுங்கன் 'நீளு' என்கிறான்; கன்னடியன் 'நீரு' என்கிறான்; மலையாளி 'வெள்ளம்' என்கிறான்; 'ஆற்றுவெள்ளம்'; எனவே, வெள்ளம் என்பதும் தமிழ்ச் சொல்தான். வீடு, இல், மனை, பொறை, நீர், நீளு, நீரு, வெள்ளம் இவை எல்லாம் தமிழ்ச் சொற்கள்தானே!

நாம், 'எனக்கு' என்று தமிழில் கூறுவதைத் தெலுங்கில் 'நாக்கு' என்றும்; கன்னடியன் 'நெனக்கி' என்றும்; மலையாளி 'எனக்கி' என்றும் கூறுவான். பார்ப்பான் 'நேக்கு' என்று கூறுவான். அதைப்போலவே, 'உனக்கு' என்பது தமிழ்; 'நீக்கு' என்பது தெலுங்கு; 'நோக்கு' என்பது பார்ப்பனத் தமிழ்.

'அவர்கள்', 'அவர்' என்பதைத் தெலுங்கர் 'வான்ளு', 'வாரு' என்கிறார்கள்; கன்னடியர் 'அவரு' என்கின்றனர்; பார்ப்பனர் 'அவா, இவா, வந்தா, போனா' என்று மொண்ணையாகவே, மொக்கையாகவே பேசுகிறார்கள். நம்மில் பலரும் அதைப் பெருமை யாக நினைத்து அம் மாதிரியே பேசிவருகிறார்கள்.

'அகத்துக்கு' என்பதைப் பார்ப்பனர் 'ஆத்துக்கு' எனத் திரித்துக் கூறி வருகிறார்கள். இந்த நேக்கையும், நோக்கையும், ஆத்தையும், அவா, இவாவையும் தமிழென்று கூறும்போது—இல், மனை, பொறை, நீளு, நீரு, வெள்ளம், நாக்கு, நெனக்கி,

படிப்பகம்

www.padippakam.com



இப்போது உயிர் 5, மெய் 15, சிறப்புக்குறி 8, ஆய்தம் 1—மொத்தம்—29.

29 உருவ எழுத்துக்களிலேயேகூட தமிழ் எழுத்துக்களுக்கு எண்ணிக்கையையும் (தமிழ் மொழியை) அடக்கிவிடலாம். அல்லது, சிலர் கருதுவதுபோல், 12 உயிரெழுத்துக்களில் ஐ, ஔ தவிர மற்ற பத்தில் 'அ' வை அப்படியேயும் 'ஆ'வுக்குப் பதிலாக 'ா' வையும், 'எ', 'ஏ' வுக்குப் பதிலாக 'ெ', 'ே' என்ற குறிப்புக்களையும் வைத்துக்கொண்டு இ, ஈ, உ, ஊ, ஒ, ஓ என்ற ஆறு எழுத்துக்களுக்கு, ஆறு புது எழுத்துக்களை உற்பத்தி செய்துகொண்டு, இவற்றையே உயிர் மெய்யாக்க மெய்யோடு சேர்த்துப் படிப்பதானால் அப்போது உயிர் 10, மெய் 15, ஆய்தம் 1, மெய்குறிப்பு 1 ஆக 27 எழுத்துக்களாகும். இந்த 27 எழுத்துக்களைக் கொண்டே நமது சகல சொற்களையும் அதி சுலபமாக எழுதிவிடலாம். பிறமொழிச் சொற்களை நம் மொழியால் எழுதுவதற்குத் தேவைப்பட்டால் ஒன்றிரண்டு வேறு எழுத்துக்களையும் உண்டாக்கிக் கொள்ளலாம். அறிஞர்களும் பண்டிதர்களும் தீர்க்கமாய்ச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

எப்படியும் தமிழ்மொழி எழுத்துக்கள் குறைக்கப்பட்டாக வேண்டும்; அச்சுக்கோப்பதற்கும், டைப் அடிப்பதற்கும் ஆங்கிலத்தைப்போல் இலகுவாக்கப்படவேண்டும் என்பதும், கற்கும் பிள்ளைகளுக்கும் 3 மாதத்தில் படிக்கத் துவக்கலாம் என்பதும்தான் நமது ஆசை. இப்போது இதோடு முடிக்கின்றேன்.

இது முடிவல்ல, அறிஞர்களுக்கு விண்ணப்பம்.

['மொழி', 'எழுத்து' என்னும் பொருள்கள்பற்றி கும்பகோணம் அரசினர் கல்லூரியிலும், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு—நூல்: 'மொழி-எழுத்து' (தமிழன் பிரஸ், ஈரோடு)]

# 2. தமிழ்

## 1. தமிழ் மொழி

தலைவர் அவர்களே! தோழர்களே!

நான் தமிழில் எந்த அளவும் பள்ளியில் பயின்றவனல்லன். தமிழைப்பற்றித் தமிழ் மக்கள் நலம், தமிழ் மக்கள் தன்மதிப்பு என்பதல்லாமல் வெறும் பாஷையைப் பற்றியே நான் எவ்வித பிடிவாதம் கொண்டவனுமல்லன். தமிழுக்காக என்று எவ்விதத் தொண்டும் புரிந்தவனுமல்லன்.

முதலாவதாக, தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்கவேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்துவிடவேண்டும்; தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளிவைக்க வேண்டும்.

மத சம்பந்தமற்ற ஒருவனுக்குத் தமிழில் இலக்கியம் காண்பது மிகமிக அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணம்கூட மதத்தோடு பொருத்தப்பட்டே இருக்கிறது.

உதாரணமாக, 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என்றால் என்ன? நரகர்கள் யார்? தேவர்கள் யார்? இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது?

இனி, பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குத் தமிழ் இலக்கியங்களுக்குப் புத்தகங்கள் எவை? கம்பராமாயணம், பாரதம், பாகவதம், பெரிய புராணம், தேவாரம், திருவாய்மொழி போன்ற மதத் தத்துவங்களும், ஆரிய மதத் தத்துவம் என்னும் ஒரு தனிப்பட்ட வகுப்பின்



உயர்வைப் போதித்து மக்களை மானமற்றவர்களாக்கும் ஆபாசக் களஞ்சியங்களும் அல்லாமல்—வேறு இலக்கியங்கள் மிதந்து காணப்படுகின்றனவா? இன்றையப் பண்டிதர்களுக்கு உலக ஞானத்தைவிடப் புராண ஞானங்கள்தானே அதிகமாய் இருக்கின்றன.

மேல்நாட்டு அறிவாளிகள் செய்த இலக்கியங்களை மத சம்பந்தமன்னியில்—கடவுள் சம்பந்தமன்னியில் பெரிதும் செய்துவைத்தார்கள். அதனால் நூற்றுக்கணக்காக மேல்நாட்டு இலக்கியங்களும், பண்டிதர்களும் போற்றப்படுகிறார்கள்.

கீழ்நாட்டில்—குறிப்பாக இந்தியாவில் எத்தனை இலக்கியங்கள் உலகத்தால் மதிக்கப்படுகின்றன? எத்தனை பண்டிதர்கள் உலகத்தால் போற்றப்படுகிறார்கள்? தாகூர் அவர்கள் கவிக்காகப் போற்றப்படலாம்.

மதம்—கடவுள் சம்பந்தமற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை ஞானத்தைப்பற்றிய இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத விஞ்ஞானத்தைப் பற்றிய இலக்கியம்—ஆகியவைகள் மூலந்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மையடைய முடியும் என்பது மாத்திரமல்லாமல், அதைக் கையாளும் மக்களும் ஞானமுடையவர்களாவார்கள்.

கம்பராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இருந்து என்ன பயன்? ஒருவன் எவ்வளவுதான் பட்டினி கிடந்தாலும், மலத்திலிருந்து அரிசி பொறுக்குவானா? அது போல்தானே, கம்பராமாயண இலக்கியம் இருக்கிறது? அதில் தமிழ் மக்களை எவ்வளவு இழிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது? தமிழரின் சரித்திரகால எதிரிகள் எவ்வளவு மேன்மையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்? சுயமரியாதையை விரும்புகிறவன் எப்படி கம்பராமாயண இலக்கியத்தைப் படிப்பான்? இன்று கம்பராமாயணத்தால் தமிழ்மக்களுக்கு இலக்கியம் பரவிற்றா, இழிவு பரவிற்றா என்று நடுநிலையில் இருந்து யோசித்துப்பாருங்கள்!

தமிழ்ப் பாஷையின் பெருமை பரமசிவனுடைய டமாரத்திலிருந்து வந்ததென்றோ, பரமசிவன் பார்வதியிடம் பேசிய பாஷையென்றோ சொல்லி விடுவதாலும்—'தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்ததாலும்', 'முதலை உண்ட பாலனை அழைத்ததாலும்', 'எலும்பைப் பெண்ணாக்கினதாலும்', 'மறைக் கதவைத் திறந்ததாலும்'—தமிழ் மேன்மை உற்றதாகிவிடாது. இந்த ஆபாசக் கதைகள் தமிழ் வளர்ச்சியையும், மேன்மையையும் குறைக்கத்தான் பயன்படும்.

பரமசிவனுக்கு உகந்த பாஷை தமிழ் என்றால், வைணவனும் துருக்கனும் தமிழைப் படிப்பதே பாவமல்லவா? அன்றியும் அந்தப்படியிருந்தால், பார்ப்பான் தமிழ் மொழியைச் சூத்திர பாஷையென்றும், அதைக் காதில் கேட்பதே பாவம் என்றும் சொல்லுவானா என்று யோசித்துப்பாருங்கள்!

மேல் நாட்டு மொழிகள் எவ்வளவு மாற்றமடைந்து வருகின்றன? எழுத்துக்களில் எவ்வளவு மாறுதல் செய்து வருகிறார்கள்? ரஷ்யாவில் சில பழைய எழுத்துக்களை எடுத்துவிட்டார்கள்; புதிய எழுத்துக்கள் சேர்த்தார்கள். அமெரிக்காவில் எழுத்துக் கூட்டுவதாகிய 'ஸ்பெல்லிங்' (Spelling)' முறையை மாற்றிவிட்டார்கள். துருக்கியில் துருக்கி மொழிக்கு உண்டான எழுத்துக்களையே அடியோடு எடுத்துவிட்டு ஆங்கில எழுத்துக்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். தமிழர்கள், தமிழுக்காக—நமக்கு விவரம் தெரிந்த காலமாய் என்ன காரியம் செய்தார்கள்? காலத்துக்கு ஏற்ற மாறுதலுக்கு ஒத்து வராதவன் வெற்றிகரமாய் வாழமுடியாது. மாறுதலுக்கு மனிதன் ஆயத்தமாய் இருக்கவேண்டும். 'முன்னேற்றம் என்பதே மாறுதல்' என்பதை உணர்ந்த மனிதனே உலகப் போட்டிக்குத் தகுதியுடையவனாவான்.



படிப்பகம்

www.padippakam.com



தானாலும் எழுத்துக்களைக் கற்கவேண்டியது கஷ்டமாகிறது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அவைகளில் உயிர் எழுத்துக்கள் 5; மெய்யெழுத்துக்கள் 20 எனலாம்; அவை எல்லாம் தனி எழுத்துக்களே; உயிர்மெய் எழுத்துக்கள்—அதாவது, உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் கிடையாது; வெகு சுலபமாக அவ்வெழுத்துக்களைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால், இலக்கணமுறை, உச்சரிப்புமுறை ஒரு பொது வரையறைக்குக் கட்டுப்பட்டதல்ல. தமிழில், அப்படியல்ல. எழுத்துக் கூட்டுதலும், உச்சரிப்பும், அதன் இலக்கணமும் பெரிதும் இயற்கையையே அடிப்படையாகக் கொண்டதாகும். அப்படிப்பட்ட மொழியை, நாம் ஏன் நவீன முயற்சிக்கு ஏற்றவண்ணம் செப்பனிடக் கூடாது?

சாதாரணமாக, தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்துவிடலாம்; இந்த இரண்டும் தேவையில்லாத எழுத்துக்கள். மேலும், இவைகள் கூட்டெழுத்துக்களே ஒழிய தனி எழுத்துக்கள் அல்ல. இவை இல்லாமல் எந்தத் தமிழ்ச் சொல்லையும் எழுதலாம்; உச்சரிக்கலாம். இவைகளை எடுத்துவிட்டால் சொற்களின் உச்சரிப்பிலோ, பொருளிலோ இலக்கணத்திலோ எவ்விதக் குறையும், குற்றமும் ஏற்பட்டுவிடும் என்று தோன்றவில்லை. சுமார் 40 வருடங்களுக்கு முன்னால் இருந்தே நான் இதை கவனித்துவருகிறேன்: இந்தப்படி எழுத்துக்கோத்து அச்சடிக்கப்பட்டுள்ள ஒரு குறள் புத்தகத்தையும் நான் 40 வருடத்திற்கு முன்பே பார்த்திருக்கிறேன். இப்படிச் செய்வதில் மொத்தத்தில் 38 எழுத்துக்கள் (அதாவது உயிரெழுத்து ஐ, ஔ ஆகிய 2-ம்; அவை ஏறும் மெய்யெழுத்துக்களில் 2×18=36-ம் ஆக 36+2=38) ஞாபகத்திற்கும், பழக்கத்திற்கும் தேவை இல்லாத எழுத்துக்கள் ஆகிவிடும். (ஐ = அய்; ஔ = அவ் என எழுதலாம்). இவை தவிர உயிர்மெய் எழுத்துக்களில் தனிமாற்றம் பெற்றிருக்கிற ணா, றா, னா ஆகிய மூன்று எழுத்துக்களுக்கும் தனி உருவம் தேவை இல்லாமல் ணா, றா, னா போல்—ஆக்கிவிடலாம்.

மற்றும், மெய்யெழுத்துக்களில் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய நான்கு குறில், நெடில் எழுத்துக்கள் கொண்ட (4×18=72) தனி உருவ எழுத்துக்களை நீக்கிவிட்டுத் தனிச் சிறப்புக் குறிப்பை—அதாவது ககரத்திற்கு ஆகார நெடில் உருவம் காட்ட ஒரு 'ா' (கால்) போட்டு விடுவதுபோல், ககரத்துக்கு எகரம், ஏகாரம் காட்ட ஒற்றைச் சுழிக் கொம்பு, இரட்டைச் சுழிக்கொம்பு 'ெ, ே' போடுவதுபோல—மற்ற, இகர, ஈகாரத்துக்கும், உகர, ஊகாரத்துக்கும் சில குறிப்புக்களை உண்டாக்கி, உயிர் 10, மெய் 18, குறில், நெடில் குறிகள் 9, ஆய்தம் 1 ஆகிய 38 தமிழ் எழுத்துக்களாகச் சுருக்கிவிடலாம்.

இதைப்பற்றி மற்றொரு சொற்பெருக்கில் தெளிவாக்க இருக்கிறேன். இந்த மாறுதல்கள் செய்வதால் நம் மொழிக்கோ, பொருளுக்கோ, இலக்கணத்துக்கோ எவ்விதக் குறைபாடோ, கேடோ செய்தவர்களாக ஆகமாட்டோம்.

துருக்கியில் கமால் பாட்சா அவர்கள் எழுத்துக்களின் அடிப்படையையே மாற்றிவிட்டார். அதாவது, இருந்த எழுத்துக்களையே ஒழித்துவிட்டு வேற்றுமொழி (ஆங்கில) எழுத்துக்களை எடுத்துக்கொண்டார். அதனால் கற்க மிக வசதியும், இலகுவும் ஏற்பட்டுவிட்டது. அய்ரோப்பாவில் நான் சுற்றுப்பிரயாணம்செய்த ரஷ்யா முதல்—போர்ச்சுகல் வரை, சுமார் 10, 15 நாடுகளிலும் எத்தனையோ மொழிகள் இருந்தும், அந்த மொழிகளுக்குப் பெரிதும் ஒரே மாதிரி 26 முதல் 32 எழுத்துக்கள்தாம் பயன்படுத்தப்படுகின்றன. சில புதிய தனி 'ஒலி' கொண்ட மொழிகள் இருக்குமானால், அவற்றிற்கு ஏற்ப 2 அல்லது 3 புதிய உருவ எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் சமீப காலத்தில் 'எழுத்துக்கூட்டும் முறை'யை மாற்றிக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மேல் நாடுகளில் எழுத்துக்கள், எழுத்துக்கூட்டும் முறைகள் இவைகளில் மாற்றம் செய்வதால், இலக்கணத்தில், உச்சரிப்பில், பொருளில் மாற்றம் ஏற்படுவதாயிருந்தாலுங்கூடத் துணிவாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் சொல்லும் மாற்றங்களுக்கு அப்படிப்பட்ட குற்றங் குறைகள் இல்லையென்றே கருதுகிறேன்.



நமது தமிழ்ப் பண்டிதர்கள் இம் மாற்றங்களுக்கு ஒப்புக்கொள்ள வேண்டுமே,—அதுவன்றோ பெரிய கஷ்டம்! மேல்நாடுகளில் பண்டிதர்கள் என்றால் புத்துலகச் சிற்பிகளாயிருப்பார்கள். நம் நாட்டிலோ பண்டிதர்கள் என்றால் பழமைக்கு இழுத்துக்கொண்டு போகும் பாட்டிக் கதை வீரர்களாக இருக்கிறார்கள். 'பண்டு' என்ற சொல்லிலிருந்து—அதாவது பண்டையர்கள் என்பதுதான் பண்டிதர்கள் என்ற சொல்லாகத் திரிந்தது என்று மூலம் கண்டுபிடிக்கத் தக்கவர்களாக இருக்கிறார்கள்! எழுத்து, மொழிச் சீர்திருத்தத்தில் எனக்குத் தெரிய எந்தப் பண்டிதரும் பாடுபட்டிருப்பதாகக் காண முடியவில்லை. காலஞ்சென்ற பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் அக் காலத்தில் சிறிது பாடுபட்டார். ஆனால், அவர் சமயத்தை (ஓங்காரத்தை)த் தலையாக வைத்துக்கொண்டு பாடுபட்டார். ஆதலால், அக் காலத்தில் அவரிடம் எனக்குப் பற்றிருந்தும், எனக்கு ஓங்காரத்தில் இருந்த வெறுப்பு அவரது முயற்சியையும் அறிவுத் திறனையும் அனுபவிக்க முடியாதபடி செய்துவிட்டது. அவர் இப்போது இருந்திருந்தால் எவ்வளவோ செய்திருப்பார்.

அடுத்தபடியாக, மெய்யெழுத்துக்களில் 'ந, ங, ஞ' ஆகிய மூன்று எழுத்துக்களையும் எடுத்துவிடலாம். 'ன்+த=ந'; 'ன்+க=ங'; 'ன்+ச=ஞ' என்று ஆக்கிவிடலாம். எனவே மெய்யெழுத்தில் ந, ங, ஞ ஆகிய மூன்றையும் குறைக்கலாம்; இவை தனித்தனியாகத் தேவையில்லை என்றே தோன்றுகிறது. உயிரெழுத்துக்களில் 'ஐ'யும், 'ஔ'வும் எப்படிக் கூட்டெழுத்துக்களோ, அப்படி—உயிர் மெய்யிலுள்ள கூட்டெழுத்துக்கள்தான் இந்த ந, ஞ, ங என்ற மூன்றும். பந்து என்ற வார்த்தையையும், பங்கு என்ற வார்த்தையையும், பஞ்சு என்ற வார்த்தையையும் எடுத்துக்கொள்ளுவோம். ந, வையும், ங, வையும், ஞ, வையும் எடுத்துவிட்டால் 'பன்து', 'பன்கு', 'பன்சு' என்று எழுதவேண்டியிருக்கும். இந்தச் சொற்களின் உச்சரிப்பை முதலில் சொல்லிக் கொடுத்துவிடலாம்; அல்லது, சாதாரணமாக உச்சரிப்புப் பழக்கத்திலேயே இருந்துவரும். பொதுவாகவே 'த'வுக்கு முன்வந்தால்—இப்படி உச்சரிக்கவேண்டும்; 'க'வுக்கு முன் வந்தால்—அப்படி உச்சரிக்கவேண்டும் என்று சொல்லிக்கொடுத்துவிட்டால், பிறகு உச்சரிப்பதில் கஷ்டமிருக்காது. ஆங்கிலத்தில் இம் மாதிரி பல உச்சரிப்புகள் இருக்கின்றன. உதாரணமாக Put (பி-யு-டி) 'புட்' என்றும், But (பி-யு-டி) 'பட்' என்றும்தான் உச்சரிப்பார்கள். இந்த வார்த்தைகள் முதலில் அறிமுகமாகாதிருந்தால், ஒரே மாதிரிதான் உச்சரிக்கவேண்டியிருக்கும். ஒரு எழுத்துக்கு பல சப்தங்கள் இருப்பது தமிழுக்குப் புதிதல்ல. 'த' என்னும் எழுத்து 'தடி' என்ற சொல்லில் ஒருவிதமாகவும், 'பதம்' என்ற சொல்லில் வேறுவிதமாகவும் ஒலிக்கவில்லையா?

அதேபோல் 'ன' என்ற எழுத்துக்கே 'ந' சப்தமும், 'ங' சப்தமும், 'ஞ' சப்தமும் இருந்தால் ஒன்றும் கெட்டுவிடாது. இந்தச் சீர்திருத்தங்களைச் செய்தால் தமிழ்த் தனி உருவ எழுத்துக்கள் வெகு சொற்பமாகிவிடும். உயிர் எழுத்துக்கள்—10. நெட்டெழுத்துக்கள் எல்லாவற்றிற்கும், 'ா' (காலே) போட்டுவிடுவதால் அய்ந்து உருவ எழுத்துக்கள்தாம் இருக்கும். அதாவது (ஆங்கில 'வவ்வல்கள்'போல்) அ, இ, உ, எ, ஒ நெட்டெழுத்துக்கள்—ஆ, இா, உா, எா, ஒா என்றே எழுதலாம். மெய்யெழுத்துக்கள் 18-ல் 3 எழுத்துக்கள் (ந், ங், ஞ்) எடுக்கப்பட்டால் 15 எழுத்துக்களையும், மேலே புள்ளி வைக்காமல் பக்கத்தில் ஒர் ஒரு கோடு இழுப்பதன் மூலம் காட்டலாம். அதாவது, க|, ச|, ட|, ண|, த|.........ன| என்றபடி எழுதினால்—க், ச்......என்று அர்த்தப்படுத்திப் படிக்கலாம். ஆக சிறப்புக் குறிகளில் இந்தக் கோடு 1, ஆ—ா=1, இ—ி=1, ஈ—ீ=1, உ—ு=1, ஊ—ூ=1, எ—ெ=1, ஏ—ே=1.

ஆக 8 சிறப்புக் குறிகளில் இகர, ஈகாரத்திற்கும்; உகர, ஊகாரத்திற்கும் 4 குறிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்படவேண்டும். ஒகரத்திற்கும் ஓகாரத்திற்கும் எகர, ஏகாரக் குறிப்புக்களே பயன்பட்டு விடுவதால் அவற்றிற்காகத் தனிக் குறிப்பு வேண்டியதில்லை. அல்லது ெ, ே, என்ற இந்தக் கொம்புகளை வேறு வகையில் மாற்றிப் போட்டுக் கொள்ளலாம். கடைசியாக, ஆய்தம் 1 இருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



இம்மதம் ஒழிய, பெரும்பாலும் பழமை விரும்பிகளான பண்டிதர்களே பெருத்த தடையாக இதுகாறும் இருந்து வந்திருக்கிறார்கள். தமிழைக் கெடுத்தவர்கள், தமிழன் அறிவுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் இந்தத் தமிழ்ப் பண்டிதர்களும், அவர்களின் சைவமும்தான். பண்டிதர்கள் பார்ப்பானைப்போல் உச்சிக் குடுமி வைத்துக்கொண்டு, பட்டை, விபூதியும் பூசிக்கொண்டு, கவைக்குதவாத கட்டுக் கதைகளை நம் குழந்தைகளுக்குப் போதித்துவிட்டனர். திருக்குறள் அறிவைப் பரப்புவதை விட்டு—நம் குழந்தைகளுக்கு திருவிளையாடற் புராண அறிவையும், தேவார-திருவாசக அறிவையும், பாரத-இராமாயண அறிவையும் பரப்பிவிட்டனர்; சிந்திக்கத் தவறினார்கள். சிலப்பதிகாரத்தைத் தலை சிறந்த நூலென்று இன்றும் போற்றி வருகிறார்கள். அதில் கண்ணகி என்ற மாது மதுரை மாநகர் மீது தனது முலையைத் திருகி எறிகிறாள், கோபாவேசத்தோடு! உடனே மதுரை பற்றிக்கொள்கிறது. இதுதான் அவளுடைய கற்புக்கு எடுத்துக்காட்டு. இன்று எந்த ஒரு பெண்ணாவது அவள் எவ்வளவுதான் கற்புடைய கன்னிகையாயிருந்த போதிலும் இந்தக் காரியத்தைச் செய்யமுடியுமா? எங்காவது இம் மாதிரிக் காரியம் நடந்திருக்குமா? நடக்குமா? அந்தச் சமயத்திலும் அவள் நெருப்புக்கு ஆணையிடுகிறாள், 'பார்ப்பனரை அழிக்காதே' என்று. பார்ப்பனரை அழிக்காதே என்று ஆணையிடுபவள் ஆரியப் பெண்ணாக இருப்பாளா? தமிழ்ப் பெண்ணாக இருப்பாளா? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

தமிழில் ஆரியம் புகுந்ததால்தான், மற்ற மக்களெல்லாம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டி வாணிபம் நடாத்திய தமிழர் மரபில்—இன்று, ஒரு நியூட்டன் தோன்றமுடியவில்லை; ஒரு எடிசன் தோன்ற முடியவில்லை; ஒரு மார்க்கோனி தோன்ற முடியவில்லை என்பதை அறிந்து கொள்ளவேண்டும். பழமையிலுள்ள மோகத்தை முதலில் விட்டொழிக்க வேண்டும். தமிழைப் புதுமொழியாக்கச் சகல முயற்சிகளும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம் மொழியில் இல்லாத ஒரு கருத்தை, நம் மொழியில் ஏற்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது அக் கருத்துக்குண்டான வார்த்தைகளைத் தோற்றுவிப்பதில் நாம் மிக ஜாக்கிரதையாகப் பணியாற்ற வேண்டும். நாம் கண்டுபிடிக்கும் அல்லது உண்டாக்கும் வார்த்தை, நாம் கூறவேண்டிய கருத்தைத் தெளிவாகவும் விளக்கம் செய்வதாகவும், சுலபமாக உச்சரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக, 'காப்பி' என்ற வார்த்தையை எடுத்துக்கொள்வோம். இப்போது நம்மில் பெரும்பாலோர்க்கு இந்தப் பானம் அவசியமாகி விட்டது. நமது மொழியில் இதற்கு வார்த்தை கிடையாது. இப்போது அதற்கு வேறு வார்த்தை உண்டாக்குவதைவிட வழக்கிலிருந்துவரும் அதே வார்த்தையை நாம் தமிழில் ஏற்றுக்கொள்ளலாம். நமக்குத் தேவையான விஞ்ஞானக் கருத்துகளுக்கு வேறு வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும்போதும் ஆங்கில வார்த்தைகள் தமிழ் மொழி உச்சரிப்புக்குச் சுலபமாக இருக்குமானால், அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் நலமாகும்.

கலைச்சொல் நிர்மாணக் கமிட்டியார் கண்டுபிடித்துள்ள வார்த்தைகளைப் பாருங்கள். Electrolysis, Hydrogen, Disinfectant, என்பவற்றிற்கு, முறையே—வித்யுக்தி யோகம், ஆப்ஜனகம், பூதி நாசினி என்று புது வார்த்தைகளைத் தோற்றுவித்துள்ளார்கள். ஆங்கில வார்த்தைகளுக்குப் பதிலாக வடமொழி வார்த்தைகளைத் தோற்றுவித்துள்ளனர். இதைவிட சென்னைத் தமிழ்ச் சங்கத்தார் கண்டுபிடித்துள்ள, முறையே—மின் பகுக்கை நீரகம், நச்சு நீக்கி என்ற வார்த்தைகளே சிறந்தனவாக இருக்கின்றன. காரணம், சென்னைத் தமிழ்ச் சங்கத்தாருக்குள்ள தமிழ்ப் பற்று, கலைச்சொல் நிர்மாணக் கமிட்டியாருக்கு இல்லாமற்போனதுதான். நமது மேன்மைக்கும், அந்தஸ்துக்கும் ஏற்றதும் நம் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டக்கூடியதும், நம் இழிவைப் போக்கக் கூடியதுமான



எம்மொழியிலிருந்தும்—நம் மொழிக்கு ஆக்கம் தரக்கூடியதும், அவசியமானதும் ஆகிய சொற்களை எடுத்துக்கொள்ளலாம். எம்மொழித் தொடர்பிருந்தாலும் பரவாயில்லை. நமக்கு வடமொழித் தொடர்பு மட்டும் கூடவேகூடாது. தமிழ் ஒன்றுதான் இன்றுவரைக்கும் வடமொழிக் கலப்பை ஓரளவுக்காவது எதிர்த்து வந்திருக்கிறது. வேற்றுமொழிக் கலப்பின்றித் தனித்துச் சிறப்புடன் வாழக்கூடிய தன்மையைத் தமிழ் பெற்றிருக்கிறதென்று மேனாட்டு மொழி வல்லுனர்களே எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

கடைசியாகத் தமிழ்மொழி வளர்ச்சிக்காக, அதில் செய்யப்படவேண்டிய சில சீர்திருத்தங்களைக் குறித்து எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம்மைப்படுத்தப்பட வேண்டும்; மக்கள் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும்; பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும். 'இன்றையத் தமிழ் மிகவும் பழைய மொழி; வெகு காலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது; மற்ற மொழிகளைப்போல் திருத்தப்படாதது' என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறைவாகுமே தவிர, பெருமையாகாது என்பேன். ஏன்? பழமை எல்லாம் அனேகமாக மாற்றமாகி இருக்கிறது; திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும், திருத்துவதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ ஆகிவிடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும், திருத்தவும் வேண்டும். பிடிவாத மாய்ப் பாட்டி காலத்திய—பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தால், கழிபட்டுப்போவோம்; பின் தங்கிப்போவோம்.

மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க் கருவியாகும். போர்க் கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்படவேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ளவேண்டும். நம் பண்டிதர்கள் இந்த இடத்திலும் நம்மொழிக்கு மிக்க அநீதி விளைவித்துவிட்டார்கள். தமிழ்—சிவனும், சுப்பிரமணியனும் பேசிய மொழி; உண்டாக்கிய மொழி என்று பண்டிதர்கள் கூறுகிறார்கள்: அதே சிவனும், சுப்பிரமணியனும் உபயோகித்த போர்க் கருவிகள் இன்று நம் மக்களுக்குப் பயன்படுமா? அவைகளை நாம் இன்று பயன்படுத்துவோமா? அல்லது, அவர்களே இன்று போரிட நேர்ந்தால்—அவைகளைப் பயன்படுத்துவார்களா? சிந்தித்துப் பாருங்கள்! இயற்கையின் தத்துவம் நமது அறிவு வளர்ச்சிகளுக்கேற்ப மாறுதல்களுக்கும் செப்பனிடுவதற்கும் வசதியளிக்கக் கூடியதேயாகும். சிவன் கோலும், மழுவும், கத்தியும், வேலும், ஆலமும் கொண்டுதான் சண்டை பிடித்து இருக்கிறாராம். விஷ்ணு வந்தபிறகே வில் வந்திருக்கிறது. அதன்பிறகே துப்பாக்கியும், அதிலிருந்து பீரங்கியும், மிஷின் பீரங்கியும் ஏற்பட்டு இன்று அணுகுண்டு வரை போர்க் கருவிகள் முன்னேற்றமாகி இருக்கின்றன. இன்று நாமோ நம் கடவுள்களோ போரிடநேர்ந்தால்—வில்லும், வேலுமா உபயோகிப்போம்? ஆகவே, போர்க் கருவிகள் மாற்றமடைந்திருப்பது போல், நமது மொழியும் மாற்றம் அடையவேண்டாமா? போர்க் கருவிகளில் மாற்றத்தை அனுமதித்த கடவுள்கள்—மொழி மாற்றத்தைமட்டுமா அனுமதிக்க மாட்டார்கள்?

ஆகவே, பிறர் சுலபமாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக் கோக்கவும், டைப் அடிக்கவும் தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்று நினைக்கிறேன்.

தமிழில் எழுத்துக்கள் அதிகம். ஞாபகத்தில் இருத்தவேண்டிய தனி உருவ எழுத்துக்கள் அதிகம். மொத்த எழுத்துக்கள் 216 வேண்டியிருக்கிறது என்றால், இதில் 135 எழுத்து உருவங்கள் தனித்தனியாக ஞாபகத்தில் வைக்கவேண்டியிருக்கிறது.

தமிழ் எழுத்துக்கள், ஆங்கிலம் முதலிய சில அன்னியமொழி எழுத்துக்களைவிட, எழுத்துக் கூட்டுவதற்கு ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கிய நேர்முறையைக் கொண்ட

படிப்பகம்

www.padippakam.com



தன் வீட்டுக்கு வந்த தன் மகளைப் பார்த்து, 'ஆம்மம்மா! உன்னைக் கன்னிகாதானம் செய்தாயிற்றே! உன்னை உன் புருஷனுக்குக் கொடுத்துவிட்டோம்; தானம் செய்து விட்டோமே! இனி, உனக்கு இடம் அவன் இருப்பிடம் தானம்மா' என்று கூறும் தகப்பன்மார் தோன்றினார்கள்! கன்னிகாதானம் என்பதற்குத் தமிழ் வார்த்தை ஒன்று கண்டுபிடியுங்களேன். திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணை' என்றுதானே கூறுகிறார். அதாவது, புருஷனும் மனைவியும் சிநேகிதர்கள், நண்பர்கள் என்றுதானே அதற்குப் பொருள். எவ்வளவு கருத்து வேறுபாடு பாருங்கள். 'மோட்சம்' என்பதற்குத் தமிழ் வார்த்தை ஏது? மோட்சத்தை நாடி எத்தனை தமிழர் காலத்தையும், கருத்தையும், பொருளையும் வீணாக்குகிறார்கள், கவனியுங்கள். மதம் என்பதற்குத் தமிழில் மொழியேது? மதம் என்ற வார்த்தையால் ஏற்பட்டதுதானே மதவெறி? நெறி, கோள் என்றால்—வெறி ஏது?

'பதிவிரதாத் தன்மை' என்பதற்காவது தமிழில் வார்த்தையுண்டா? 'பதிவிரதம்' என்ற வார்த்தை இருந்தால்—'சதி விரதம்' அல்லது 'மனைவி விரதம்' என்கின்ற வார்த்தையும் இருக்கவேண்டுமே! இதுவும் வடமொழித் தொடர்பால் ஏற்றவினைதான். 'ஆத்மா' என்ற வார்த்தைக்குத் தமிழில் மொழியேது? ஆத்மாவால் எவ்வளவு மூட நம்பிக்கைக் களஞ்சியங்கள் நம் புலவர்கள், அறிஞர்களிடையேயும் புகுந்து விட்டன? தமிழ்நாட்டு மக்களின் வழக்கங்கள் யாவும் பெரிதும் ஆண், பெண் இருபாலார்க்கும் சம உரிமை என்ற அடிப்படையின் மீதும், பகுத்தறிவு என்ற அடிப்படையின் மீதும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

நம் நாட்டுச் சீதோஷ்ண நிலையைப் பொறுத்தும் கருத்துக்களின் செழுமையைப் பொறுத்தும் நமக்குத் தமிழ்தான் உயர்ந்த மொழியாகும். வடநாட்டானுடைய ஆசாரங்கள், தர்மங்கள், ஆசாபாசங்கள் முற்றிலும் நமக்கு மாறுபட்டவை. அவற்றிற்கேற்ப அமைக்கப் பட்டுள்ள அவர்களது மொழியே அவர்களுக்கு உயர்வானதாகவும் நமது மொழி அவர்களுக்குத் தாழ்வானதாகவும் தோற்றுவது சகஜம். ஆனால், நாமும், அவர்கள் நம் மொழியை மட்டமாகக் கருதுகிறார்களே என்பதற்காக நம்மொழியை மட்டம் என்று கருதி விடலாமா? அப்படிக் கருதி வடமொழியை ஆதரிக்கப் புகுந்துதானே நாம் பல மூட நம்பிக்கைகளுக்கும், பல இழிவுகளுக்கும் ஆட்பட்டுத் தவிக்கிறோம். வடமொழியில் நமக்குப் பெயர் சூத்திரன். நாம் ஏன் சூத்திரர்கள் என்று, இன்று கேட்க ஆரம்பித்திருக்கிறோம். இதற்கு நம் தமிழ் மொழியிலிருந்து ஒரே ஒரு ஆதாரமாவது காட்டட்டுமே! ஒன்றுகூட இல்லையே! வடமொழியை எடுத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு ஆதாரங்கள்? கடவுள் வாக்குகளே அதற்கு ஆதாரமாய் வந்துவிடுமே! தற்போது தமிழில் வந்து புகுந்து கொண்ட வடமொழி வார்த்தைகளை எடுத்துவிட்டால் நம் குறைகள், தொல்லைகள் எவ்வளவு நீங்குமென்பதும்; தொடர்பை ஏற்றுக்கொண்டால் எவ்வளவு இழிநிலைக்கு ஆளாகவேண்டியிருக்கிறதென்பதும் புரிகிறதல்லவா?

வடமொழித் தொடர்பால் ஏற்பட்ட இன்னல்கள் ஒருவாறு மேலே விளக்கப்பட்டன. அதற்கு மாறாக ஆங்கில மொழித் தொடர்பால் நடக்கேற்பட்டுள்ள நன்மைகளையும், அம்மொழியிலுள்ள கருத்துச் செறிவுகளையும் பாருங்கள். ஆங்கில மொழி நூல்களில் முன்னேற்றக் கருத்துக்கள் மலிந்து கிடக்கின்றன. விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் இருக்கின்றன. நமது வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்வதற்கான பல அரிய மார்க்கங்களை ஆங்கில நூல்களிலிருந்தே நாம் பெரும்பாலும் அறிந்துவருகிறோம். சுருங்கக்கூறின், 'அடிமை வாழ்வே ஆனந்தம்' என்று நினைத்திருந்த இவ் இந்திய நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டியதே ஆங்கில மொழி அறிவு தான் என்று கூறினால் மிகையாகாது. இராஜா வேண்டாம், குடியரசுதான் வேண்டும் என்கின்ற அறிவு; சமதர்மம் வேண்டும், சனாதனம் ஒழியவேண்டும் என்கின்ற



அறிவு; ஆணும் பெண்ணும் சமம் என்கின்ற அறிவு ஆகிய சகல அரசியல்-பொருளாதார முன்னேற்ற அறிவுக் கருத்துக்களையும் ஆங்கில மொழிதான் நமக்குத் தந்தது.

தந்தியையும், மின்சாரத்தையும், படக் காட்சியையும், ஆகாய விமானத்தையும், ரேடியோவையும், எக்ஸ்ரேயையும் அதுதான் அறிமுகப்படுத்தியதேயொழிய, நமது தமிழ் மொழியோ அல்லது அதை அழிக்கவந்த வடமொழியோ அல்ல. வடமொழித் தொடர்பு சாஸ்திர, புராண, இதிகாச மூடநம்பிக்கைகள் நம் பகுத்தறிவை அடிமைப்படுத்தின. ஆங்கில மொழி நம்மை அவ்வடிமைத் தளையிலிருந்து விடுத்து, எதையும் நம் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பார்க்கும்படி செய்தது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத, பிரத்தியட்ச அனுபவத்திற்கு ஒவ்வாத, சரித்திர காலத்திற்கு உட்படாத எதையும் ஒதுக்கித் தள்ளும்படி செய்தது ஆங்கில மொழிதான்; அதைப் பேசிய மக்களைத் தமிழைக் காட்டிலும் வெகு வேகமாக அறிவு உலகத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது. ஆங்கிலேயன் சந்திரகிரகத்தினிடமிருந்து ஒலி கேட்கிறான்; வடமொழியாளன் இங்கு, அதில் ஈரேழு பதினாலு லோகங்களைக் காட்டித் திவச மந்திரம் படிக்கிறான். எவ்வளவு வேற்றுமை பாருங்கள்! காரணம் என்ன? நம் மக்களுக்குப் புத்தியில்லையா? அல்லது, நம் மூளை களிமண்ணால் செய்யப்பட்டதா? அப்படியொன்றும் இல்லையே!

அறிவு வளர்ச்சிக்குப் பெரும்பாலும் சுற்றுச் சார்புதான் காரணம். ஒரே தகப்பனுக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்றை இந்நாட்டிலும், ஒன்றை இங்கிலாந்திலும் வளர்த்துப் பாருங்கள்; இதனுண்மை விளங்கும். இங்கிலாந்தில் வளர்ந்த மகன் இந்தியாவில் வளர்ந்த மகனைவிடப் பல மடங்கு அறிவு விசாலம் அடைந்தவனாயிருப்பான் என்பது திண்ணம். அவன் எதையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்ப்பான்; இவன் எதையும் மதக் கண்கொண்டு பார்ப்பான். அவனவன் வளர்ந்த இடத்தில் உள்ள பழக்கவழக்கங்களை ஒட்டி அவனவனுடைய அறிவுத் தன்மையும் மாறுபட்டிருக்கிறது.

உதாரணமாக, நமது இரண்டு கைகளை எடுத்துக்கொள்ளுவோம். இரண்டுக்கும் நரம்பு, தசை, எலும்பு இவற்றின் அமைப்பும், இரத்த ஓட்டமும் ஒரே மாதிரி தன்மையாகத்தான் அமைந்திருக்கின்றன. இவை இரண்டும் ஒரே தாயின் கர்ப்பத்தில்தான் உண்டாயின; இரண்டும் ஒரே தகப்பனுடைய சுக்கிலத்தால்தான் உண்டாயிருக்கின்றன. என்றாலும், ஒரு கையால்தான் எழுத முடிகிறது; மற்றொரு கையால் எழுத முடியவில்லையே; ஏன்? ஒரு கையை எழுத்து வேலைக்கே—மற்றும் மேலான செய் திறம் வேலைக்கே பயன்படுத்திவிட்டோம். மற்றொரு கையைக் கேவலமான வேலைக்கே, மலம் அலம்பும்—வேலைக்கே பயன்படுத்தி, வேறு வேலைக்குப் பயன்படுத்தாமல் வலிவற்றதாக ஆக்கிவிட்டோம். எது எந்த வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டதோ அந்த வேலையில் அது பழக்கப்பட்டுப் போயிற்று; வலிவற்றதாகவும் ஆகிவிட்டது. ஆகவே, எதற்கும் பழக்கம்தான் காரணமே ஒழிய அமைப்பல்ல முக்கிய காரணம்.

தமிழும் ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வடமொழிக் கலப்பால் இடது கைபோல் பிற்படுத்தப்பட்டுவிட்டது. இந்நோய்க்கு முக்கிய காரணம், மதச் சார்புடையோரிடம் தமிழ்மொழி சிக்கிக்கொண்டதுதான். தமிழ் சைவமொழி ஆக்கப்பட்டதால்தான் சைவத்திற்காக வேண்டி வடமொழியும், வடமொழிக் கலைகளும் அதிகமாகத் தமிழ் நாட்டில் புகத் தொடங்கின. தமிழ் மன்னர்கள் ஆரிய மதத்தை ஏற்றுக்கொண்டதால், அம்மதக் கருத்துகளை விளக்கத் தமிழில் சொற்கள் இல்லாது போகவே அதிகமாக வடமொழிச் சொற்களைக் கையாள ஆரம்பித்தனர். தமிழிலிருந்து சைவத்தையும், ஆரியத்தையும் போக்கிவிட்டால் நம்மை அறியாமலே நமக்குப் பழந்தமிழ் கிடைத்துவிடும். மதத்திற்கு ஆதாரமாயிருந்து வருவனவெல்லாம் வடமொழி நூல்களே ஒழிய, தமிழ்மொழி நூல்களில், தற்சமயம் நம் நாட்டில் இருந்துவரும் மதத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்பது இங்கு கவனிக்கத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



அதிகமாக உபயோகப்படுத்தும்படி செய்து, அதன்மூலம் தமது கலை, ஆச்சார அனுஷ்டானம் ஆகியவைகளைப் புகுத்திவிட்டனர். அந்த வடமொழிக் கலப்புக் காரணமாகவும், அந்தக் கலாச்சாரப் பண்புகளினால் ஏற்பட்ட பற்றுதல் காரண்மாகவும், அந்தந்த மக்களுக்குத் தமது மொழி தமிழ் அல்லாத வேறு மொழியேயாகும் என்ற கருத்தும் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், என் சிற்றறிவிற்கு, என் அனுபவத்திற்கு, ஆராய்ச்சிக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் தனித்தனி மொழிகளென்றோ, அல்லது தமிழ் தவிர மற்ற மூன்றும் தமிழிலிருந்து பிரிந்த மொழிகளென்றோ தோன்றவில்லை. ஒரேமொழி அதாவது தமிழ்தான் நான்கு இடங்களில் நான்கு விதமாகப் பேசப்பட்டு வருகிறது என்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். உதாரணமாக, இங்கு (சென்னையில்) 'தோட்டத்திற்குப் போகிறேன்' என்றால், 'வயலுக்கு, விளை நிலத்துக்குப் போகிறேன்' என்று அர்த்தம். 'கொல்லைக்குப் போகிறேன்' என்றால், 'கக்கூசுக்குப் போகிறேன்' என்று அர்த்தம். சோழநாட்டில் தோட்டத்துக்குப் போவதென்றால், கக்கூசுக்குப் போவதாகவும், கொல்லைக்குப் போவதென்றால் வயலுக்குப் போவதாகவும் அர்த்தம் செய்து கொள்ளுவார்கள். ஒரே தமிழ்ச்சொல் இரண்டு இடங்களில் வெவ்வேறு பொருளில் வழங்குகிறது. ஒரு பொருளுக்குப் பல சொற்கள் இருந்தால், ஒவ்வொரு சொல்லும் ஒரு மொழியாகிவிடுமா?

முன்பு—சுமார் 50 ஆண்டுகட்கு முன்பு, நான் மலையாளத்துக்கு வியாபார விஷயமாய்ச் சென்றபோதெல்லாம் நான் சிறிது அழுத்தியும், குறுக்கியும், மடித்தும் பேசிய தமிழை அங்குள்ளவர்கள் புரிந்துகொண்டுதான் இருந்தார்கள். நான்கு மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற பண்டிதர்களைக் கொண்டு, அந்தந்த மொழியிலுள்ள வடமொழி வார்த்தைகள் அத்தனையையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், எஞ்சி நிற்கும் வார்த்தைகள் அத்தனையும் அனேகமாகத் தமிழ்ச் சொற்களாகவே இருக்குமென்று என்னால் அறுதியிட்டுக் கூறமுடியும்; அகராதிகொண்டு மெய்ப்பிக்கவும் முடியும். சமீபகாலம் வரையிலும் கூட அவைகளுக்கு எழுத்தோ, இலக்கியமோ இருந்ததில்லை. தெலுங்கு வைணவர்கள் சமீப காலம்வரை தமிழ்ச் சப்தத்தில்தான் நாலாயிரப் பிரபந்தத்தையும், திருப்பாவையையும், தெலுங்கு எழுத்தில் படித்துப் பாடி வந்திருக்கின்றனர். அந்தப் புத்தகங்கள் தெலுங்கெழுத்தில், தமிழ்ச் சப்தத்தில்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. கன்னடியர்களுக்கும், மலையாளிகளுக்கும் முதல் நூலே கிடையாது. வடநாட்டு ஆதிக்கமும், வடமொழி மோகமும் குறையக்குறைய ஆந்திரர்களும், மலையாளிகளும், கன்னடியர்களும் தம் தாய் மொழி 'தமிழ்'தான் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொள்வார்கள் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. அந்தந்த மொழி வல்லுனர்கள், பண்டிதர்கள் சிலர் இன்று ஓரளவு இந்த உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பது நமக்கு மேலும் நம் கருத்துக்கு வலிமை ஊட்டுகிறது. இத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த ஒரு பெரிய இயக்கத்தை நான் நடத்தினேன். அதாவது, 'தமிழ் மொழி தாய்மொழியாக உள்ள இந்நாட்டில், இந்தியைப் புகுத்தக்கூடாது' என்று கிளர்ச்சி செய்தேன்.

அது என் தாய்மொழிப் பற்றுதலுக்காக என்று அல்ல; அது என் நாட்டு மொழி என்பதற்காக அல்ல; சிவபெருமானால் பேசப்பட்டது என்பதற்காக அல்ல; அகத்திய முனிவரால் திருத்தப்பட்டதென்பதற்காக அல்ல; மந்திரசக்தி நிறைந்தது; எலும்புக் கூட்டைப் பெண்ணாக்கிக் கொடுக்கும் என்பதற்காக அல்ல; பின் எதற்காக? தமிழ் இந்நாட்டுச் சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைந்துள்ளது. இந்திய நாட்டுப் பிற எம்மொழியையும்விடத் தமிழ் நாகரிகம் பெற்று விளங்குகிறது. தூய தமிழ் பேசுதல்—மற்ற வேற்று மொழிச் சொற்களை நீக்கிப் பேசுவதால் நம்மிடையேயுள்ள இழிவுகள் நீங்குவதோடு, மேலும் மேலும் நன்மையடைவோம் என்பதோடு, நம் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப நம்



மொழி அமைந்திருக்கிறது. வேறு மொழியைப் புகுத்திக்கொள்வதன் மூலம் நம் அமைப்புக் கெடுவதோடு, அம் மொழியமைப்பிலுள்ள நம் நலனுக்குப் புறம்பான கருத்துக்கள், கேடுபயக்கும் கருத்துக்கள் நம்மிடைப் புகுந்து நம்மை இழிவடையச் செய்கின்றன என்பதால்தான்.

வடமொழியில் நம்மை மேலும் மேலும் அடிமையாக்கும் தன்மை அமைந்திருப்பதால்தான் அதையும் கூடாதென்கிறேன். நமது மேன்மைக்கு, நமது தகுதிக்கு, நமது முற்போக்குக்கு ஏற்றமொழி–தமிழைவிட மேலான ஒரு மொழி இந் நாட்டிலில்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே தவிர, அது அற்புத அதிசயங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக அல்ல. இம்மொழியில் பாடி அதிசயங்கள் விளைவித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால், அந்தக் கருத்து நமக்குத் தேவையில்லை. ஏன்? ஆயிரம் முதலையை வைத்துக்கொண்டுதான் பாடிப் பாருங்களேன்; அவைகளில் எதுவாவது, தான் தின்ற ஒரு மீனையாவது கக்குகிறதா என்று! தாழ்ப்பாளிட்ட சிற்றறையின் முன்னின்றுதான், இலக்கணப்படியே மனம் உருகிப் பாடுங்களேன்—சிறிதாவது தாழ்ப்பாள் அசைகிறதா என்று! அற்புத சக்திகள் நிறைந்த மொழி என்று பிடிவாதம் செய்வது அறியாமைதான்; அது தமிழ்ப்பண்புகூட அல்ல. தமிழில்—அதிசயம், மந்திரம், சக்தி முதலிய சொற்களே இல்லை.

இதேபோல், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமைதான். ஏன்? நம் தாய் நம்மைப் பெற்றெடுத்ததும் நம்மைத் தெலுங்கன் வீட்டிலோ, துருக்கியன் வீட்டிலோ விட்டிருந்தால் நாம் தெலுங்கோ அல்லது உருதுமொழியோ பேசுவோமா? அல்லது, நம் தாய் தமிழ் பேசியதன் காரணமாக, நம்மைப் பிறிட்டுக்கொண்டு நம் நாவிலிருந்து தமிழ் தானாக வெளிவருமா? இன்னும் கவனிப்போம். நம் தாய் குழந்தையாக இருந்தபோது பேசியதென்ன? 'பாய்ச்சி குடிக்கி', 'சோச்சி தின்னு', 'மூத்தா பேய்', 'ஆய்க்கு போ' என்றுதானே பேசியிருப்பாள்! இப்போது நாம் பாச்சி, சோச்சி, மூத்தா, ஆயி—என்றா பேசுகிறோம்? இந்தக் காலத்தில் நம் தாய்கள் பேசுகிற மொழியே அதிசயமாயிருக்கும். ஆதலால், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமை என்று தோன்றவில்லையா?

ஆதலால், ஒரு மொழியின் தொடர்பு நமக்கு நல்லதா கெட்டதா என்று சிந்திக்கும்போது நமது இடத்திற்கும், சீதோஷ்ணத்திற்கும் பொருந்தியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பிறகு அம்மொழியிலுள்ள கருத்துக்கள் நம் தன்மானத்தையும், மேன்மையையும், நலத்தையும், தகுதியையும் காக்கக்கூடியதா? அதிகப்படுத்தக்கூடியதா? அவற்றைக் கெடுக்கக்கூடியதா? என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, தமிழ்மொழியின் வடமொழித் தொடர்பால் நமக்கேற்பட்டுள்ள, ஏற்படப்போகும் கெடுதிகளைப் பார்ப்போம். நம்மிடையேயுள்ள சாதிப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுவோம். 'சாதி' என்ற வடமொழிச் சொல்லைத் தமிழிலிருந்து எடுத்துவிட்டால் அதற்குச் சரியான தமிழ்ச்சொல் ஒன்று கூறுங்களேன்!, பண்டிதர்கள்தான் கூறட்டுமே. வார்த்தை இல்லையே! ஆதலால், நம் மக்களிடையே ஆதியில் சாதிப் பிரிவினை இல்லை என்பதும், இது வடநாட்டுத் தொடர்பால்தான் ஏற்பட்டது என்பதும் தெரிகிறதா இல்லையா? அந்த வார்த்தையே இல்லாவிட்டால் சாதிபேத உணர்ச்சி அற்றுப்போகுமா, இல்லையா? கூறுங்களேன். இதேபோல் திவசம், திதி, கலியாணம், வைகுந்தம், சொர்க்கம், மோட்சம், நரகம்; சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சிய என்ற இவ் வார்த்தைகள்—வடமொழியா? தமிழா? இவ்வார்த்தைகளின் தொடர்பால் நம் புத்தி தெளிந்ததா? இருந்த புத்தியும் போனதா? சிந்தித்துப்பாருங்கள்.

தாரா முகூர்த்தம், கன்னிகாதானம் என்ற பேர்கள் வந்த பிறகுதானே நம்பெண்கள் கணவனின் கைப்பொம்மைகள் ஆனார்கள்? அதன் பிறகுதானே, சிறிது சச்சரவு நேர்ந்து



படிப்பகம்

www.padippakam.com



மக்களின் மொழியை அவ்விதம் மாற்றியமைத்து வருகிறது. ஒரே மொழியைக் குளிர்ப் பிரதேசத்திலுள்ளவன் ஒரு விதமாயும், உஷ்ணமான பாலைவனத்திலுள்ளவன் ஒரு விதமாயும் பேசுவதைக் காணலாம்.

உதாரணமாக, ஆங்கிலேயனை எடுத்துக்கொள்வோம். அவன் சாதாரணமாகக் குளிர் தேசத்தில் வாழ்பவன். குளிரானது அவனுக்கு 'ஹா', 'ஹூ' என்கின்ற—பெரும் காற்றைத் தள்ளிக்கொண்டு உச்சரிக்கவேண்டிய சப்தத்தை இயற்கையாக உண்டாக்கச் சுலபமாக அம்மொழியும், ஏன்—அதுபோன்ற வடமொழியும் பேசமுடிகிறது. ஆனால், என்னதான் அவன் தமிழில் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும், சுத்தமான தமிழில் இலக்கணக் குற்றமில்லாமல் பேசினாலும் ழ, ள—இந்த சப்தங்களைச் சரியாக உச்சரிக்க முடிவதில்லை. எங்களூரில் தமிழில் வித்துவான் பட்டம் பெற்ற பாதிரியார், பாப்ளி என்று ஒருவர் இருக்கிறார். அவரால் 'மகா ஜனங்கலே'! என்றுதான் கூறமுடிகிறதே தவிர, 'மகாஜனங்களே!' என்று உச்சரிக்க முடியாது. இந்த சப்தத்திற்கு அவருக்குப் பழக்கமான அந்தச் சீதோஷ்ணம் சரிப்படாமற் போவதுதான் காரணம். அந்தச் சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைக்கப்பட்ட அவர் நாக்கு, இந்த சப்தத்தை உச்சரிப்பதற்கேற்பச் சுலபத்தில் திரும்பமுடியவில்லை என்பதுதான் காரணம்.

நம்மூரிலிருந்து சிலர் வடநாடு சென்று நான்கு, ஐந்து ஆண்டுகள் சுற்றிவிட்டு 'பைராகி'போல் வேஷம் போட்டுக்கொண்டு இங்கு வந்து சுற்றுவார்கள். அவர்களின் வடமொழி உச்சரிப்பைக் கவனித்தால் அவர்கள் இவ்வூர்க்காரர் என்று சுலபமாய்க் கண்டுபிடித்து விடலாம். நான் சிலரைக் குறிப்பாகக் கண்டுபிடித்து, 'ஏம்பா, இந்த ஊரிலிருந்து போனவன்தானே நீ?' என்று கேட்டதுண்டு. அவர்களும், 'ஆமாம், எஜமானே' என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்நாட்டுச் சீதோஷ்ணத்திற்கு ஏற்பப் பழகிய—அமைக்கப்பட்ட நாக்கால் வடமொழிச் சப்தத்தைச் சரிவர உச்சரிக்க முடிவதில்லை. அந்தந்த நாட்டு மக்கள் அந்தந்த நாட்டு மொழிகளைச் சரிவர உச்சரிக்க முடிகிறதென்பதும், வேற்று நாட்டு மொழிகளைச் சரிவர உச்சரிப்பது அனேகருக்குக் கஷ்டமாயிருக்கிறதென்பதும், தம் நாட்டிற்கு ஒப்பான சீதோஷ்ணமுள்ள வேறு ஒரு நாட்டு மொழியைச் தம்மால் சரிவர உச்சரிக்க முடிகிறதென்பதும் எதைக் காட்டுகிறது? அந்தந்த நாட்டின் சீதோஷ்ண நிலைக்கேற்ப அந்தந்த நாட்டு மக்களின் மொழி ஒலி அமைந்திருக்கிறது என்பதைத் தானே காட்டுகிறது?

**அந்தந்த இடத்திற்கேற்பவும், அந்தந்த சீதோஷ்ண நிலைக்கேற்பவும் மொழிகள் பிரிந்திருக்கின்றன என்பது மேலே கூறியதிலிருந்து பெறப்படுகிறது.**

இனியும் கவனிக்கும் பட்சத்தில் ஒரு மொழியில் சுலபமாக விளக்கக்கூடும் ஒரு கருத்தை, மற்றொரு மொழியில் விளக்குவது வெகு கஷ்டமாயிருக்கும். அதாவது, அந்தக் கருத்தை வெளியிடுவதற்கு வேண்டிய வார்த்தைகள் அம்மொழியில் இருக்காது. காரணம் என்ன? அந்த மொழி பேசும் மக்களிடத்து, அந்தக் கருத்து இருந்ததில்லை என்பதுதான். அந்தக் கருத்து அவர்களிடத்து ஏற்படவேண்டிய அவசியமோ, தேவையோ இருந்ததில்லை என்பதுதான் அதற்குக் காரணம்.

எந்த ஒரு மொழியின் சிறப்பும், பெரும்பாலும் அம்மொழியின் மூலம் அறியக்கிடக்கும் கருத்துக்களைப் பொறுத்துத்தான் இருக்கும். அந்தந்த மொழியிலுள்ள கருத்துக்களைக் கொண்டுதான் பெரும்பாலும் அந்தந்த மொழிபேசும் மக்களின் நாகரிகத்தைக் கூட, அறிவைக்கூட ஒருவாறு அறிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக, ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள சில பிரபலமான புத்தகங்களை வாங்கிப்படித்தால், அவற்றில் காணப்படும் கருத்துக்களைக் கொண்டே அம்மக்களின் நாகரிகத்தின் முன்னேற்றத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலும் அறிந்துகொள்ள முடிகிறது. ஒரு மொழியை ஏற்பதும், தள்ளுவதும்கூட, பெரும்பாலும் அந்தந்த மொழியிற்பாற்பட்ட முன்னேற்றக் கருத்துக்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது.



ஒரு மொழியின் சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் மற்றொரு காரணமும் உண்டு. ஒரு மொழியை எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாகக் கற்றுக்கொள்ள முடிகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது வளர்ச்சியடைவதும் சுலபமாகிறது. சுலபமாகக் கற்றுக்கொள்ளப்படுவதற்கு எழுத்துக்கள் சுலபத்தில் எழுதக்கூடியனவாகவும் எண்ணிக்கையில் குறைவாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இதுவுமன்னியில், மொழியின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் சலுகையும் ஆதரவும் மிக முக்கியமாயிருக்கிறது. அரசாங்கத்தின் ஆதரவின்றேல் ஒரு மொழி எவ்வளவு சிறப்புடையதாயினும், அதன் வளர்ச்சி மிகவும் தடைப்பட்டே நிற்கும் என்பது கண்கூடு. ஆங்கில மொழிக்கு நம் நாட்டில் செல்வாக்கு ஏற்படக் காரணமே, அது அரசாங்க மொழியாய் இருந்து வருவதுதான். இதுவரை பொதுவாக 'மொழி' என்பது பற்றியும் அதன் அமைப்பு, சிறப்பு, வளர்ச்சி என்ற பலவான தன்மைகளைப் பற்றியும் ஒரு சிறிது ஆராய்ந்து பார்த்தோம். இனி நமது தகைமைசால் தமிழைப்பற்றிச் சற்று விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

'தமிழ்' என்றால் என்ன? மக்களா? நாடா? மொழியா? நாட்டைப் பொறுத்து, மக்களைப் பொறுத்து—மொழிக்குத் தமிழ் என்கின்ற பேர் வந்ததா? அல்லது மொழியைப் பொறுத்து நாட்டுக்கும், மக்களுக்கும், தமிழகம், தமிழ்நாடு, தமிழர் என்கின்ற பேர் வந்ததா?' என்ற கேள்விகள்—தமிழைப் பொறுத்தவரை வித்து முந்தியதா? மரம் முந்தியதா? என்ற தர்க்கத்தைப் போன்றதாகவே எனக்குத் தோன்றுகின்றன. எப்படி இருந்தாலும், தமிழ் நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி என்று மூன்று பண்டங்கள் இருக்கின்றன. இந்த மூன்றையும் முதல் பொருளாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் தமிழ், தமிழ்நாடு, தமிழ்மொழி என்கின்ற சொற்களைக் காண்பதற்கு முன்பிருந்தே, இவற்றைக் காணாதவர்களிடமிருந்து இந்த மூன்றையும் குறிக்கும்படியாக திராவிடம், திராவிடர் திராவிடமொழி என்பதாகச் சொற்கள் இருந்து வந்ததையும், வருவதையும் பார்க்கிறோம். தமிழ்மொழியும், அதன் சிதைவுகள் என்று சொல்லப்படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளும், மக்களும், நாடுகளும்கூடத் தமிழைச் சேர்ந்ததே என்றும்; அந்தக் கருத்தைக் கொண்டே 'திராவிடம்' என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது என்றும் அகராதிகளும், ஆராய்ச்சி உரைகளும் கூறுகின்றன. நாட்டிலும் இதை வெகு காலமாகவே ஒப்புக்கொண்டு வழக்கத்திலும் கொண்டுவந்திருக்கிறோம்.

வடமொழி ஆதாரங்களான இலக்கியம், இதிகாசம், புராணம் ஆகியவற்றிலும் திராவிடர், திராவிடம் என்ற சொற்கள் தமிழ் மொழியையும், நாட்டையும், மக்களையும் குறிக்கப் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தேச சரித்திரங்களிலும் திராவிடர், திராவிடம் என்ற சொற்கள் தமிழர், தமிழ்நாடு என்பவற்றிற்குப் பதிலாக உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறதையும் காண்கிறோம். ஆனால், தெலுங்கு நாட்டாராகிய ஆந்திரர்களும், கன்னட நாட்டாராகிய கன்னடியர்களும், மலையாள நாட்டாராகிய மலையாளிகளும் இதை ஒப்புக்கொள்ளத் தயங்குகிறார்கள். தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பதுபோல்—தமிழும் ஒரு மொழி என்றுதான் சொல்லுகிறார்களே ஒழிய, இவையாவும் தமிழ்தான் என்பதை ஒப்புக்கொள்ள வெட்கப்படுகிறார்கள்; சிலர் மறுக்கவும் செய்கிறார்கள். காரணம், அவர்களது மொழிகளில் ஆரியச்சொற்கள் பெரும்பான்மையாகக் கலந்துவிட்டன. ஆதியில் ஒரே கூட்டமாக வாழ்ந்த திராவிட மக்கள், இட நெருக்கத்தால் பல பிரிவுகளாகப் பிரிந்துசென்று ஆங்காங்கு குடிவாழவும், அந்தந்த இடத்தின் சீதோஷ்ண நிலைக்கேற்ப அவர்களது மொழியில் சில நீட்டலும், குறுக்கலும் ஏற்படவும், அக் காலத்திய போக்குவரத்து வசதிக் குறைவு காரணமாக ஒரு பகுதிக்கும் மற்றோர் பகுதிக்கும் தொடர்பில்லாமல் போனதால், நாளடைவில் அந்தந்த இடத்தில் வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்கள் தம்து மொழிக்குக் கடவுள் பேரால் பல மகத்துவங்களை எடுத்துக் கூறி, அந்தந்தப் பிரதேச மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வடமொழியை

படிப்பகம்

www.padippakam.com



## 2. மொழி–எழுத்து

தலைவர் அவர்களே! தோழர்களே!

'மொழி' என்பது பற்றிப் பேச, சிறிதும் அதற்கான அறிவோ, ஆராய்ச்சியோ, ஆற்றலோ அற்ற நான்–'மொழி' என்பது குறித்துப் பேசத் துணிந்தது, மொழித் தத்துவத்திலுள்ள என்னுடைய ஆசை மிகுதியின் பொருட்டேயாகும். நான் கூறப்போகும் தத்துவங்களை இலக்கண, இலக்கிய ஆதாரங்களுடன் விளக்குவது என்பது எனது தகுதிக்கு மேற்பட்ட காரியம். அதற்கு வேண்டிய இலக்கிய, இலக்கணங்களில் பாண்டித்தியமோ, ஆராய்ச்சியோ எனக்கில்லை. ஆராய்ச்சியாளர் மேற்கோள்களையும் என்னால் காட்ட இயலாது. எனக்குத் தோன்றிய, என் அனுபவத்துக்கு எட்டிய விஷயங்களைத்தான் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லப்போகிறேன். அவற்றில் பெரும்பாலும், உங்களுக்குக் குற்றமாகப் படலாம். ஆகவே, நான் கூறுவதை நீங்களும், உங்கள் அறிவையும், அனுபவத்தையும், மற்றும் இது விஷயத்தில் அனுபவமும் ஆராய்ச்சியும் உள்ள பெரியோர்கள் கருத்தையும் கொண்டு சிந்தித்துப் பார்த்து ஏற்கக்கூடியதை ஏற்றும், ஏற்கக் கூடாததைத் தள்ளியும் தெளிவுபெற வேண்டுகிறேன்.

'மொழி' என்றால் என்ன? அது எதற்காகப் பயன்படுகிறது? என்று முதலில் கவனிக்கவேண்டும். ஒருவனுடைய கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க மொழி முக்கிய சாதனமாக இருந்துவருகிறது. அது ஒலி மூலமாகவே பெரிதும் இருக்கிறது. மேலும், இச் சாதனம் மனிதர்களுக்கே சிறப்புடையதாக அமைந்திருக்கிறது. மிருகங்களும், பட்சிகளும்கூட சில செய்கைக் குறிப்புகளாலும், சிலவித சப்தங்களாலும் தம் கருத்தைத் தமக்குள் பரிமாறிக்கொள்கின்றன. ஆனால், அவற்றை 'மொழி' என்று கூறாவிட்டாலும், 'ஒலிக் குறிப்பு' என்று கூறலாம். பறவை, மிருகம், சிறு பிராணி ஆகியவை பேசிக்கொள்வது எனக்குத் தெரியும்.

உதாரணமாகக் கோழியை எடுத்துக்கொள்வோம். தன் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு போகக்கூடிய அடப்பான், கழுகு, கருடன் இவை சமீபத்தில் பறப்பதைக் கண்டதும் தாய்க் கோழியானது ஒருவிதமான ஒலியைக் கொடுக்கிறது. அந்த ஒலியைக் கேட்டதும் குஞ்சுகள் தமக்கேதோ ஆபத்தென்று உணர்ந்து ஓடோடியும் வந்து தாய்க் கோழியின் விரிந்த சிறகுகளின் கீழ்ப் பதுங்கிக்கொள்ளுகின்றன. குரங்குகளையும் நான் கவனித்திருக்கிறேன். தாய்க் குரங்கு தொலைவிலுள்ள தன் குட்டியைத் தானாக அடையக் கூடாதபோது அதைத் தன்னருகில் அழைக்க நினைத்தால், அது சிறிது தன் பற்களைக் காட்டித் தன் மேல்உதட்டையும், கீழ்உதட்டையும் சேர்த்து ஏதோ முணுமுணுப்பதுபோல் குறிப்பும், சிறிது இலேசான சப்தமும் கொடுக்கும். அதைக் கண்டதும் குட்டியானது நேரே தன் தாயை வந்தடையும். இது போலவேதான், ஒரு ஆண் குரங்கின் இப்படிப்பட்ட சைகையால் பெண் குரங்கும் வந்து சேருகிறது. இதுபோல், காக்கைக்கு நல்ல சோறு வைக்கும்போதும், 'பிதிர்'ச் சோறு வைக்கும்போதும் கவனித்திருக்கிறேன். நல்ல சோறு வைக்கும்போது நாம், 'கா! கா!' என்று கூப்பிடுகிறோம். முதலில் ஏதோ ஒரு காகம் வருகிறது; சிறிது பயந்துகொண்டே சாதத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டு தன் இனத்தைக் கூவி அழைக்கிறது. அவையும் சப்தம் கேட்டுவந்து சாதத்தை உண்ணுகின்றன. பிதிர்ச் சோறாயிருந்தால் அக் காகம் வேறுவிதமான சப்தம் போட்டதும், மற்றக் காகங்களும் அதை ஏதோ ஒரு 'பொறி' என்று நினைத்து அதே ஒலி கொடுத்து, எந்தக் காகமும் அந்தச் சாதத்தை உண்ணாதபடி செய்கின்றன. பிறகு ஒரு காகம் கிட்டவந்து மோந்து பார்த்து, ஆபத்து இல்லை என்று தெரிந்தால் மற்றவைகளும் கலந்து சாப்பிடுகின்றன. எறும்புகளைக்கூடக் கவனித்திருக்கிறேன். எறும்பு சரமாகப் போய்க்கொண்டிருக்கும் போது நாம் ஒன்றிரண்டு எறும்புகளைக் கொன்றுவிட்டு, மற்றொரு எறும்பைச் சிறிது நசுக்கிவிட்டால், அது வேகமாகச் சென்று தனக்கு எதிர்ப்படும் எறும்புகளுக்கெல்லாம் அந்த இடத்தில் உள்ள ஆபத்தை எப்படியோ தெரிவிக்கிறது. மற்ற எறும்புகள் யாவும்



எவ்வளவோ வேகமாக வந்துகொண்டிருந்தாலும் உடனே வந்த வழியே திரும்பிப்போய் எறும்புக் குழியில் இருக்கும் எறும்புகளுக்கும் தெரிவித்து அடங்கிவிடுகின்றன.

இப்படி ஏதோ சில குறிப்புகளின் மூலம் மற்றும் சில ஜீவராசிகளும் தம் கருத்தை ஒன்றுக்கொன்று பரிமாறிக்கொள்வதுதான் தெரிகிறதே ஒழிய, நமக்கிருப்பதுபோல் அவற்றிற்கு 'மொழி' என்று ஒன்று இருப்பதாகத் தெரியக் காணோம். ஒருவரைப் பார்த்து, 'உங்கள் மொழி என்ன?' என்று கேட்பதற்கு, 'நீங்கள் எந்த மொழியில் உங்கள் கருத்தைப் பரிமாறிக்கொள்கிறீர்கள்?' என்றுதான் பொருள். ஆக, மேலே தெரிவித்ததிலிருந்து மொழி என்பது ஒருவருக்கொருவர் தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உபயோகப்படுத்தும் சாதனம் என்று நன்கு விளங்குகிறது.

மக்களிடையே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் சாதனம் மொழி என்றால், அம் மக்களிடையே பல மொழிகள் வழங்கப்படக் காரணம் என்னவென்று நீங்கள் கேட்கலாம். பலமொழிகள் வழங்க வேண்டுமென்று யாரும் விரும்பியதில்லை என்றும், தற்போது வழங்கப்பட்டு வரும் எம்மொழியும் கற்பனை செய்யப்பட்டதல்லவென்றும் உங்களுக்கு விளக்கிக்காட்ட விரும்புகிறேன்.

தர்மபுரியானும், கொங்குநாட்டுக் கிராமத்தானும், யாழ்ப்பாணத்தானும்—இவர்கள் யாவரும் பேசுவது தமிழ்தான். ஆனால் தர்மபுரித் தமிழன், யாழ்ப்பாணத்தான் கூறுவதை இரண்டு முறை திருப்பிக் கூறினால்தான் தெரிந்துகொள்ளுவான். அதேபோல், கொங்கு நாட்டுக் கிராமத் தமிழன் தான் கூறுவதை மூன்றுமுறை திருப்பிச் சொன்னால் தான், தர்மபுரியான் அறிந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக, யாழ்ப்பாணத்தான், 'அவர்கள் அப்பொழுதே வந்துவிட்டார்கள்' என்று கூறுவதை, திருநெல்வேலியான், 'அவா அப்பமே வந்தா' என்பான்; கிராமத்தான், 'அவியொ அப்பளையே வந்தாங்கோ' என்பான். இப்படி ஒரே மொழி வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாகப் பேசப்படக் காரணம் என்ன? அவர்கள் ஒருவருக்கொருவர் சுலபத்தில் கலந்துகொள்ள வசதியான போக்கு வரத்துச் சாதனங்கள் இல்லாமையும், அவர்களைப் பிரித்துவைக்கும் மலைகள், ஆறுகள், சமுத்திரங்கள் உள்ளமையும் ஆகிய இவைதான் காரணம்.

நம் நாட்டில் சில மலைவாசிகள் இருக்கிறார்கள்; அவர்கள் பேசுவதும் தமிழ் என்கிறார்கள். ஆனால், அவர்கள் கூறுவதைக் குறிப்புகளின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறதே தவிர, விளக்கமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் ஆயிரம் ஆண்டுகளாக நம் நாட்டில்தான் இருந்து வந்திருக்கிறார்கள். பின் ஏன் அவர்கள் நம்மைப் போல் பேச முடியவில்லை? அவர்களை நம்மோடு தொடர்பு கொள்ள முடியாமற் செய்த—அம் மலைவாசம்தானே காரணம்? அவர்களுக்கு வேண்டிய அளவு ஏதோ குறிப்புகள் வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்; நமக்கு வேண்டிய அளவு நாம் ஏதோ குறிப்புகள் வைத்துக்கொண்டு நாம் வாழ்க்கை நடத்துகிறோம். இதுதானே நமக்குள் உள்ள வித்தியாசம்? நம்முடன் தொடர்பு வைத்துக்கொண்டு அம் மலைவாசிகள் கொஞ்ச காலம் வாழ்ந்தால் நம்மைப்போல் அவர்களும் பேசுவார்கள் அல்லவா?

மற்றும், மொழியானது அந்தந்த நாட்டுச் சீதோஷ்ணத்திற்கேற்பவும், அவரவர்களுக்கு வேண்டிய வாழ்க்கைப் பழக்க, வழக்க, பண்பு, குறிப்புகளுக்கேற்பவும் அமைந்துள்ளன. சில மொழிகள் அதிக சக்தி (Energy) செலவிடாமல் சுலபமாய்ப் பேசக்கூடிய ரீதியிலும்; சில அதிக சக்தியைச்செலவிட்டுச் சிரமத்தோடு பேசக்கூடிய ரீதியிலும் அமைந்திருக்கக் காண்கிறோம். உதாரணமாக, வடமொழியிலுள்ள 'ஹ' போன்ற சப்தங்கள் அடிவயிற்றிலிருந்து ஆள் துளைத்துக் கொண்டு வருவதுபோல் ஒலிக்கிறது. அவர்கள் கொஞ்சிப் பேசிக்கொள்வதுகூடச் சில சமயங்களில் ஏதோ சண்டை போட்டுக்கொண்டு கோபமாய்ப் பேசிக்கொள்வதுபோல் நமக்கு ஒலிக்கிறது. சீதோஷ்ண நிலையானது

படிப்பகம்

www.padippakam.com



வேண்டிய மாற்றங்கள் பல என்பதைப்பற்றிப் பலருக்கு அபிப்பிராயம் இருந்தாலும் எவரும் தைரியமாய் முன்வராமலே இருக்கிறார்கள். 'இவ்வளவு பெரிய காரியத்திற்கு பாஷா ஞானம், இலக்கண ஞானம், பொதுக் கல்வி இல்லாத ஒரு சாதாரண மனிதன் முயற்சிக்கலாமா?' என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கலாம்; அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், தகுந்த புலமையும், பாஷா ஞானமும், இலக்கண அறிவும் உள்ளவர்கள் எவரும் முயற்சிக்காவிட்டால் என்செய்வது? தவம் செய்வதா? அல்லது ஜெபம் செய்வதா?

தமிழ் ஏற்பட்டது இன்று நேற்றல்ல; எழுத்துக்கள் ஏற்பட்டது இன்று நேற்றல்ல. ஆனால் எழுத்துக்கள் கல்லிலும், ஓலையிலும் எழுதும் காலம் போய்க் காகிதத்தில் எழுதவும், அச்சில் வார்த்துக் கோக்கவும் ஏற்பட்ட காலந்தொட்டு இன்றுவரை, அவற்றில் யாதொரு மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால், யாராவது ஒருவர் துணிந்து இறங்க வேண்டியதாயிற்று.

புதிய மாறுதல்களால்—அதாவது, போக்குவரத்து வசதியின் காரணத்தால் ஏற்பட்ட பலதேச மக்கள் கூட்டுறவாலும், பலதேச பாஷைச் சொற்களும, பலதேசப் பொருள்களும் கலரும்படி ஏற்பட்ட சம்பவங்களாலும் இன்று அனேக வார்த்தைகள் உச்சரிப்புகள் தமிழில் சர்வசாதாரணமாய்க் கலந்துவிட்டன. அவைகளை உச்சரிக்கும் போதும் எழுதும்போதும் தமிழ்ப் பாஷையும் தமிழ் எழுத்தும் விகாரமாய் வெட்கப்பட வேண்டியிருக்கிற தன்மையில் இருக்கின்றன (அதற்குத் தத்துவார்த்தமும், விதியும் இருக்கலாம்). ஆதலால், சில எழுத்துக்கள் வேறுபாஷைகளில் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டியதுகூட மிக அவசியமாகும். அதற்குவெட்கமாய்' இருக்கும் பட்சத்தில் புதியதாகவாவது எழுத்துக்களை உண்டாக்கிக்கொள்ள வேண்டும்.

இவைகள் ஒருபுறம் இருக்க, இப்போது உயிர்மெய் எழுத்துக்கள் என்று சொல்லப்படும் 18 எழுத்துக்களிலும் ஒவ்வொன்றுக்கும் உள்ள இ—கரம், ஈ—காரம், உ—கரம், ஊ—காரம் ஆகிய நான்கு சப்தங்கள் கலந்த எழுத்துக்கள் தனித்தனி வடிவம் கொண்டு அதாவது கி, கீ; கு, கூ என்பது மாதிரியே 18 எழுத்துக்களும் தனித்தனி உருவம் பெற்று 18×4= ஆக மொத்தம் 72 எழுத்துக்கள் அதிகமாக, அனாவசியமாக இருந்து வருகின்றன.

இந்தத் தனித்தனி வடிவங்கள் எதற்காக இருக்கவேண்டும்? எல்லா உயிர்மெய் எழுத்துக்களுக்கும் ஆ-காரம், ஏ-காரம் ஆகிய சப்தங்களுக்கு ா, ே, ஆகிய குறிப்புக்களைச் சேர்த்து எப்படி கா, கே, என்று ஆக்கிக் கொள்ளுகின்றோமோ அதுபோலவே, மேற்கண்ட கி, கீ; கு, கூ முதலிய சப்தங்களுக்கும் ஒரு தனிப்பட்ட குறிப்பு அடையாளத்தை ஏன் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது மிகவும் யோசிக்கத்தக்க விஷயமாகும்.

உதாரணமாக ஜ, ஷ முதலிய கிரந்த அட்சரங்கள் என்று சொல்லப்படுபவைகளுக்கு, இன்றும் உ-கரம், ஊ-காரம் சப்தங்களுக்கு கு, கூ என்கின்ற மாதிரி தனி எழுத்துக்கள் இல்லாமல், உ-காரத்துக்கு ு இந்த மாதிரிக் குறிப்புகளையும், ஊ-காரத்திற்கு ூ இந்த மாதிரிக் குறிப்புகளையும் சேர்த்து ஜு, ஜூ; ஷு, ஷூ; ஸு, ஸூ; ஹு, ஹூ என்பதாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதுபோல், தமிழ் எழுத்துக்களிலும் கி, கீ, கு, கூ ஆகியவைகளுக்கு ு, ூ என்பது போன்றவைகளையோ அல்லது வேறு விதமான குறிப்புகளையோ சேர்த்தால்—அச்சில் 72 தனி எழுத்துக்கள் தேவையில்லை என்பதோடு—பிள்ளைகள் தமிழ் கற்பதற்கும் 72 எழுத்துக்களைத் தனியாக ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லாத சவுகரியமும் ஏற்படும்.

மற்றும், எழுத்துக் குறைவால் அச்சில் சவுகரியம் ஏற்படுவது போல்வே தமிழ் எழுத்து 'டைப்ரைட்டிங்' என்ற அச்சடிக்கும் இயந்திரம் செய்வதிலும் மிகுந்த சவுகரியமும், விலை சகாயமாய்ச் செய்யக்கூடிய நிலைமையும் ஏற்படும்.



எழுத்துக்கள் உருவம் மாற்றுவது, குறிப்புகள் ஏற்படுத்துவது, புதிய எழுத்துக்களைச் சேர்ப்பது என்பது போலவே சில எழுத்துக்களை, அதாவது அவசியமில்லாத எழுத்துக்களைக் குறைக்கவேண்டியதும் அவசியமாகும்.

உதாரணமாக, உயிரெழுத்துக்கள் என்பவைகளில் ஐ, ஔ என்கின்ற இரண்டு எழுத்துக்களும் தமிழ் பாஷைக்கு அவசியமில்லை என்பதே எனது வெகுநாளைய அபிப்பிராயமாகும். ஐ-காரம் வேண்டிய எழுத்துக்களுக்கு ை, இந்த அடையாளத்தைச் சேர்ப்பதற்குப் பதிலாக—ய் என்ற எழுத்தைப் பின்னால் சேர்த்துக் கொண்டால், ஐ-கார சப்தம் தானாகவே வந்துவிடுகிறது. உதாரணமாக 'கை' என்பதற்குப் பதிலாக 'கய்' என்று எழுதினால் சப்தம் மாறுவதில்லை என்பது விளங்கும்.

அதுபோலவே, ஔ-காரத்துக்கும் 'கௌ' என்பதற்குப் பதிலாக 'கவ்' என்றோ 'கவு' என்றோ எழுதினால் சப்தம் மாறுவதில்லை. கௌமதி—கவ்மதி—கவுமதி என்கின்ற சப்தங்கள் ஒன்று போலவே உச்சரிப்பதைக் காணலாம். இந்த வகையில் ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களை உயிரெழுத்துக்களிலேயே குறைத்துவிட்டால் அதனாலும் பெரிதும் அனுகூலம் உண்டு.

ஆகவே, கி-கீ, கு-கூ என்கின்ற சப்தங்களுக்குத் தனிக் குறிப்பு வடிவங்கள் ஏற்படுத்துவதன் மூலம் குறிப்புகள் அதிகமானாலும், ஐ, ஔ குறிப்புகள் குறைவுபடுவதன் மூலம் கிட்டத்தட்ட சரிப்பட்டுப் போக இடம் ஏற்படும். கையெழுத்து எழுதுவதற்கும் அசவுகரியமிருக்காது.

தமிழ் எழுத்துக்களில் மேலே குறிப்பிட்ட இந்தப்படியான சீர்திருத்தங்கள் எல்லாம் செய்யப்படுமானால் அப்பொழுது தமிழில் மொத்த எழுத்துக்கள் 46-ம், 7 குறிப்பு எழுத்துக்களும் ஆக 53 எழுத்துக்களில் தமிழ்ப் பாஷை முழுவதும் அடங்கிவிடும்.

அதாவது உயிர் எழுத்து 10; உயிர் மெய் எழுத்து 18; ஒற்றெழுத்து 19; எழுத்துக்களின் குறிப்புகள் (அதாவது ா, ு, ூ, ெ, ே இவைகள் போல) 7; ஆக மொத்தம் 54 எழுத்துக்களுள் அடங்கிவிடும்.

அச்சுக்கும் 54 அறைகள் (கேஸ்கள்) இருந்தால் போதுமானதாகும். பிள்ளைகளுக்கும் இந்த 54 எழுத்துக்கள் ஞாபகமிருந்தால் போதுமானதாகும்.

ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்கின்ற கிரந்த அட்சரங்களான எழுத்துக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் அதில் குற்றெழுத்து உட்பட ஒரு பத்து எழுத்து அதிகமாகி 64 எழுத்துக்களாகலாம்.

ஆனால், இப்பொழுதோ மேற்படி 64 எழுத்துக்களுக்குப் பதிலாக, சுமார் 150-க்கு மேல் 160 எழுத்துக்கள் வரை இருந்துவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாஷையின் பெருமையும், எழுத்துக்களின் மேன்மையும் அவை சுலபத்தில் தெரிந்துகொள்ளக் கூடியதாகவும், கற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருப்பதைப் பொறுத்ததே ஒழிய, வேறல்ல. ஆதலால் இந்த மாற்றங்கள் நாளாவட்டத்தில் செய்யக்கூடியவை என்று சொல்லுவதானாலும் ணு, ணோ முதலிய 7 எழுத்துக்களைப் பொறுத்த வரையில் உள்ள மாற்றத்தை வாசகர்கள் இப்போது முதலே அனுமதிப்பார்கள் என்று கருதுகின்றோம்.

இதுவரை பல தோழர்கள் ஆதரித்ததோடு மற்ற மாறுதல்களையும் எழுதியிருப்பதும், இப்பொழுதே செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதும் நமக்குத் தைரியத்தைக் கொடுக்கின்றது. அவர்களுக்கு நமது நன்றியும் பாராட்டுதலும் உரியதாகுக.

['குடி அரசு'-தலையங்கம்—20-1-1935]

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே, இப்போது ணு, ரு, ணூ ஆகிய எழுத்துக்களும் ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துக்களும் மற்ற கா, நா, ரா முதலாகிய எழுத்துக்களைப் போலும் டை, நை, மை முதலிய எழுத்துக்களைப் போலும்—ஆகாரத்துக்கு 'ா' குறியையும், அய்காரத்துக்கு 'ை' குறியையும் பெறாமல் தனி வடிவத்தைக் கொண்டு இருப்பதை மாற்றி, ணா, றா, னா; ணை, லை, ளை, னை போல உபயோகித்துப் பிரசுரிக்கலாம் என்று கருதியிருக்கின்றோம். இதன் பலனாய் அச்சுக் கோப்பதற்கு எழுத்துக் கேசுகளில் (அறைகளில்) 7 கேசுகள் (அறைகள்) குறைகின்றன என்பதோடு, பிள்ளைகளுக்கும் இந்த ஏழு எழுத்துக்களுக்குத் தனி வடிவம் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய அவசியம் இல்லாமல்போகும் சவுகரியம் ஏற்படுகின்றன.

இன்னமும், தமிழ்ப் பாஷை எழுத்துக்களில் அனேக மாறுதல்கள் செய்யவேண்டியிருந்தாலும், இப்போதைக்கு இந்தச் சிறுமாறுதலை அனுபவத்திற்குக் கொண்டுவரலாம் என்று கருதி, அந்தப்படியாகவே எழுத்துக்களை உபயோகித்து, அடுத்தாற்போல் பிரசுரிக்கப்போகும், 'குடி அரசு' பத்திரிகையைப் பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்.

இதை வாசகர்களும் மற்றும் தமிழ் மொழி பத்திரிகைக்காரர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் ஆதரிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

['பகுத்தறிவு'-கட்டுரை—30-12-1934]

தமிழ்ப் பாஷை எழுத்துக்கள் விஷயமாய்ப் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பது அனேகருக்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே ஏற்பட்டிருந்த அபிப்பிராயங்களாகும். தோழர் குருசாமி அவர்கள் எழுதியதுபோல் பெருத்த பண்டிதர்களில் கூடப் பலர் எழுத்துச் சீர்திருத்த விஷயமாய் வெகு காலமாகவே பேசி வந்திருக்கிறார்கள்.

தமிழ் எழுத்துக்களைப்பற்றி அழுக்கு மூட்டைப் பண்டிதர்கள் எவ்வளவு தத்துவார்த்தம் சொன்னாலும், அது எவ்வளவோ விஷயத்தில் சீர்திருத்தமடைய வேண்டும் என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

ஒரு பாஷையோ, ஒரு வடிவமோ, அல்லது வேறு பல விஷயமோ எவ்வளவு பழையது, தெய்வீகத் தன்மை கொண்டது என்று சொல்லிக் கொள்ளுகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அவற்றில் சீர்திருத்த வேண்டிய அவசியமிருக்கின்றது என்பது அதன் உண்மைத் தத்துவமாகும்.

உதாரணமாக, நெருப்புக்கு—சுமார் நூறாயிரம், பதினாயிரம் வருஷங்களுக்கு முந்தி சக்கிமுக்கிக் கற்கள்தான் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இது ஒரு 'கடவுளால்' ஆதியில் பொதிய மலையில் இருந்தோ, கைலாசமலையில் இருந்தோ கண்டு பிடிக்கப்பட்டதாகவோ, உபதேசிக்கப்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால், இன்று நெருப்புக்கு ஒரு பொத்தானை அழுத்துவதோ, ஒரு முளையைத் திருப்புவதோ ஆகிய காரியத்தில் வந்துவிட்டது.

இதுபோலவே, பஞ்ச பூதங்களிலும். அவைகள் உற்பத்தி, சேர்க்கை, அனுபவம் ஆகியவைகளிலும் நாளுக்குநாள் எவ்வளவு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பது, இன்னும் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கின்றன என்று மக்கள் கருதுகிறார்கள் என்பதும் தெரிந்தால்—கேவலம்; ஒரு புராதன பாஷை எழுத்துக்கள் என்பதில் எவ்வளவு சீர்திருத்தம் அவசியமிருக்கும் அல்லது செய்யக்கூடும் என்பது தானாய் விளங்கும்.

சாதாரணமாய், 500 வருஷத்திற்கு முந்தி இருந்த மக்களின் அறிவிற்கும் அவர்களுடைய வாழ்க்கை சவுகரியத்திற்கும்,—இன்று இருக்கும் மக்களின் அறிவுக்கும், வாழ்க்கை அவசியத்துக்கும் எவ்வளவோ மாறுதலும், முற்போக்கும் இருந்து வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.



இதனால், பூர்வீக மக்களை மடையர்கள் என்றே சொல்லியாக வேண்டும் என்பதாக நான் சொல்லவரவில்லை. ஆனால், பூர்வீக மக்கள் என்பவர்கள் விஷயங்களையும் ஞானங்களையும் அல்லது திருத்தங்களையும் எவ்வளவு தூரத்தில் கொண்டுவந்துவிட்டுப் போனார்களோ—அதிலிருந்தே, அதற்குப் பிற்காலத்து மக்கள் அவ்விஷயங்களை ஆரம்பித்து வைக்க ஏது இருந்ததால் அதைவிடச் சற்று அதிக முற்போக்கு நிலமைக்கு அவ்விஷயங்களைக் கொண்டுவந்து விட்டுப்போக முடிந்தது.

அதுபோலவே, இப்போதும் அதிலிருந்தே ஆரம்பிக்கின்றபடியால், அது இன்னும் விசேஷமான மாறுதல்களாக முடிகின்றது. அதுபோலவே, இன்னும் ஒரு 100 ஆண்டு அல்லது 500 ஆண்டுகள் சென்றால் இன்றைய நிலையிலிருந்து இன்னமும் எவ்வளவோ தூரம் மாற்றம் அடைந்த முன்னேற்றங்கள் என்பவை ஏற்படலாம். அதனால், இந்த நூற்றாண்டு மக்களைக் காட்டுமிராண்டிப் பிராயமுள்ள மக்கள் என்றுகூடச் சொல்லும்படி ஏற்பட்டாலும் ஏற்படலாம். அதற்காக வேண்டி இன்னும் அய்நூறு வருஷத்திற்குப் பின் எப்படி இருக்கவேண்டிவரும் என்று கருதி இப்பொழுதே கண்டுபிடித்துச் செய்துவிட முடியாது.

முன்னேற்றம், மாறுதல் என்பவை கால தேச வர்த்தமானத்தையும், அன்று உள்ள அறிவு விருத்தியையும் பொறுத்ததே ஒழிய—மதவெறியர்கள் சொல்லுவது போன்ற தீர்க்க தரிசனத்தைப் பொறுத்ததல்ல என்பதே நமது அபிப்பிராயம். முக் காலத்துக்கும் ஏற்ற தீர்க்கதரிசனம் என்பது ஆராய்ச்சியற்ற அறிவீனர்களின் வசனமேயாகும். 'வீபூதி வைத்துக்கொள்ளுவதற்காகக் கடவுள் மனிதனுக்கு நெற்றியை நீளவசத்தில் மூன்று விரல் உயரத்தில் 6 அங்குல அகலத்தில் ஏற்படுத்தினார்' என்று சொல்வது எவ்வளவு தீர்க்க தரிசனமும் தத்துவார்த்தமும் கொண்டதோ, அதுபோல்தான் முக் கால தீர்க்க தரிசனமும் ஆகும். ஆதலால், உலக விஷயங்களில், மனித சமூகவாழ்க்கை சம்பந்தப்பட்டவைகளில்—தீர்க்க தரிசனத்தையும், தெய்வீக தத்துவார்த்தங்களையும் கொண்டுவந்து கலக்கிக் கொண்டு, குரங்குப் பிடியாய்ப் பழமையையே கட்டிக்கொண்டு அழுவதினாலோ அல்லது மாறுதல்கள் வரும்போதெல்லாம் சீறிவிழுந்து கோபிப்பதினாலோ யாதொரு பிரயோசனமும் ஏற்பட்டுவிடாது என்பதோடு, அது சாத்தியப்படக்கூடியது என்றும் சொல்லமுடியாது.

பழையதை மாற்றக்கூடாது என்பதும், பழையவைகள் எல்லாம் தெய்வாம்சத்தால் ஏற்பட்டவை என்பதும்—பழைய செய்கைகளோ, பழைய தத்துவங்களோ, பழைய மாதிரிகளோ, பழைய உபதேசங்களோ முக் காலத்துக்கும், முடிவு காலம் வரைக்கும் இருப்பதற்கும், பின்பற்றுவதற்கும் தகுதியான தீர்க்கதரிசனத்துடன் தெய்வீகத் தன்மையில் ஏற்பட்டவை என்று சொல்லப்படுமானால்—அவைகளை மத வெறியர்களுக்கும், பழைமையில் பிழைக்கக் காத்துக் கொண்டிருக்கும் சோம்பேறிச் சுயநலக் கூட்டங்களுக்கும் விட்டு விடவேண்டுமே ஒழிய, அவற்றைப் பொதுஜன—சாதாரண நித்திய வாழ்க்கையில் கொண்டு வந்து கலக்கி—முற்போக்குக்கும், சவுகரியத்துக்கும் தொல்லை விளைவிக்கக் கூடாது.

எவ்வளவு மதவெறியனும், குரங்குப் பிடிவாதக்காரனும் இன்றைய வாழ்க்கையில் மாற்றமடைந்துகொண்டும், மாற்றத்தை ஏற்றுக்கொண்டுந்தான் இங்கு வாழ்ந்துவருகிறானே ஒழிய, எவனும் தெய்வீகத்துக்கு மாறுபட்டதென்றோ, தத்துவங்களுக்கு மாறுபட்டதென்றோ கருதி எதையும் விட்டுவிட்டுக் காட்டுக்கு ஓடிப்போகவில்லை; அல்லது தற்கொலை செய்துகொண்டு 'ஆண்டவனை' அடைந்துவிடவும் இல்லை.

ஆகையால், மாறுதலைக்கண்டு அஞ்சாமல் அறிவுடைமையோடும், ஆண்மையோடும் நின்று விஷயங்களை நன்றாய் ஆராய்ச்சிசெய்து, காலத்துக்கும் அவசியத்துக்கும் தக்க வண்ணம் தள்ளுவன தள்ளி, கூட்டுவன கூட்டித் திருத்தம் செய்ய வேண்டியது பகுத்தறிவு கொண்டவன் என்னும் மனிதனின் இன்றியமையாத கடமையாகும் என்பதை அனேகர் உணர்ந்திருந்தாலும்—அதன் பயனாய் இன்றையத் தமிழ் எழுத்துக்களில் செய்யப்பட



படிப்பகம்

www.padippakam.com

# 1. எழுத்துச் சீர்திருத்தம்

## 1. தமிழ் எழுத்தில் சீர்திருத்தம்

தமிழ்ப் பாஷை எழுத்துக்கள் வெகுகாலமாகவே எவ்வித மாறுதலும் இல்லாமல் இருந்து வருகின்றன.

உலகிலுள்ள பாஷைகள் பெரிதும் சப்தம், குறி, வடிவம், எழுத்துக்கள் குறைப்பு, அவசியமான எழுத்துக்கள் சேர்ப்பு ஆகிய காரியங்களால் மாறுதல் அடைந்துகொண்டே வருகின்றன.

கால வர்த்தமானங்களுக்கு ஏற்ப சப்தங்களும், பாஷைகளும், உச்சரிப்புகளும், வடிவங்களும் மாறுவது இயல்பேயாகும்.

வார்த்தைகள் கருத்தை வெளியிடுவதற்கு ஏற்பட்டவைகள் என்பது போலவே, எழுத்துக்கள் சப்தத்தை உணர்த்த ஏற்பட்டவைகளேயாகும்.

ஆனால், நம் பண்டிதர்களுக்குத் தாராளமாய் அறிவைச் செலுத்த இடமில்லாமல் மதம், பழக்க வழக்கம் ஆகியவைகள் குறிக்கிட்டுவிட்டதால், எழுத்துக்களுக்கும், அதன் கோடுகளுக்கும், வடிவங்களுக்கும் தத்துவார்த்தம் கற்பிக்கவேண்டிய அவசியமேற்பட்டு, எழுத்துக்களையே தெய்வமாகவும்–தெய்வ வடிவமாகவும் கருதவேண்டிய நிலை நம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது.

தற்காலம் எத்தனையோ புதியவார்த்தைகள் வந்து நமது தமிழ்ப் பாஷையில் புகுந்து கொண்டன. அவைகளை இனி விலக்க முடியவேமுடியாது; விலக்குவதும் புத்திசாலித் தனமாகாது. அப் பேர்ப்பட்ட வார்த்தைகளைச் சரியானபடி உச்சரிக்க நமக்குப் பழக்கத்தில் எழுத்துக்கள் இல்லாமல் பாஷையையும், உச்சரிப்பு அழகையும் கொலை செய்கின்றோம். விஷ்ணு என்பதை விட்டுணு என்றும், விண்டு என்றும் உச்சரிப்பதில் பெருமை அடைகின்றோம்; பாஷாபிமானப் பட்டமும் பெறுகின்றோம்; அதற்கு இலக்கணம் இருக்கிறது என்கின்றோம்; அதோடு, சப்தங்கள் மாறிவிடுவதால் கருத்தும், அர்த்தமும் மாறுவதில்லை என்றும் கருதுகிறோம். அதுபோலவே, சில எழுத்துக்கள் பழைய பழக்கம், வழக்கம் என்பதற்காக மாற்றக்கூடாது என்று இல்லாமல், சவுகரியத்துக்காக மாற்றவேண்டியது அவசியம் என்றால், அறிஞர்கள் அதற்கு இடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். சுமார் 70, 80 வருடங்களுக்கு முந்திய பதிப்புகளிலும், எழுத்துக்களிலும் 'ஈ' என்கின்ற எழுத்தானது 'இ' எழுத்தையே மேலே சுழித்த—வட்ட வடிவத்தில் இருந்து வந்திருக்கிறது.

இன்னும் 400, 500 ஆண்டுகளுக்கு முந்தின 'கல் எழுத்துக்கள்' அனேகம், வேறு வடிவத்தில் இருந்துவந்திருக்கின்றன. இப்பொழுது அவைகள் மாற்றமடைந்ததற்குக் காரணங்கள் கேட்பாருமில்லை; சொல்லுவாருமில்லை. அதனால் சப்தமோ, அர்த்தமோ, பாஷையின் அழகோ கெட்டுப்போனதாகக் குறை கூறுவாரும் காணப்படவில்லை.

அதுபோலவே, இப்போதும் சில எழுத்துக்களை மாற்றவேண்டியதும், சில எழுத்துக்களைக் குறைக்கவேண்டியதும், சில குறிகளை மாற்றவேண்டியதும் அவசியம் என்றும், அனுகூலமென்றும் பட்டால் அதைச் செய்யவேண்டியதுதான் அறிவுடைமையே ஒழிய— அதன் தத்துவார்த்தத்துக்கு ஆபத்து வருகின்றதே என்பது அறிவுடைமையாகாது என்பது நமது கருத்து.

படிப்பகம்

www.padippakam.com



கல்வி இலாக்கா :—பிரசிடென்சி கல்லூரி பிரின்ஸ்பால் : திரு. பாலகிருஷ்ண நாயர் : குவீன் மேரீஸ் கல்லூரி : திருமதி. கோமன் ; லேடிவெலிங்டன் : திருமதி. வர்கிஸ் ; சட்டக் கல்லூரி டைரெக்டர் : திரு. குன்னிராமன்.

இவை—ஒரு சில நிர்வாக அடிப்படைப் பதவிகளிலுள்ள மலையாளிகளை உதாரணத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டன.

இனி மாவட்டத் (ஜில்லா) தலைமைப் பதவிகளிலுள்ள மலையாளிகள் எண்ணிக் கையைக் காட்டுவதற்குப் போலீஸ் இலாக்கா ஒன்றை மாத்திரம் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறேன். இவைகளிலிருந்து மற்ற இலாக்காக்களையும் தெரிந்துகொள்ளுங்கள்.

போலீஸ் இலாக்கா :—இதில் 13 ஜில்லாக்களோடு சென்னையைச் சேர்த்தால் 14 ஆகும். இவற்றில், சென்னையில் கமிஷனர் : திரு. பார்த்தசாரதி அய்யங்கார் என்ற ஒரு பார்ப்பனர் இருப்பது மாத்திரமல்லாமல் அடுத்த பதவியான டிப்டி கமிஷனர் என்பதில் மூன்றிலும் மூன்று மலையாளிகள் இருக்கிறார்கள் அவர்கள் :—

(1) திரு. அடிகை (லா அண்டு ஆர்டர்), (2) திரு. தாமோதரன் (கிரைம்), (3) திரு. சுகுமாரன் (ட்ராஃபிக்).

அய். ஜி.க்கு அசிஸ்டெண்ட் :—திரு. வி. பி. நாயர்

அசிஸ்டெண்ட் கமிஷனர்கள் :

1. திரு. சேதுமாதவ மேனன் (லா அண்டு ஆர்டர்), 2. திரு. சேதுமாதவ நாயர் ; (புரொகிபிஷன்)

இனி ஜில்லாக்களில் போலீஸ் சூப்பரின்டெண்டெண்டுகள் :—திருச்சி : திரு. விஸ்வ நாத நாயர்; மதுரை (வ): திரு. ஏ. சி. நம்பியார்; திருநெல்வேலி: திரு. மாப்ளா அப்துல்லா; வடஆர்க்காடு : திரு. ஷெனாய்; சேலம் : திரு. பாலகிருஷ்ணமேனன்; நீலகிரி : திரு. மாப்ளா ரூக்கி. இவை தவிர மற்ற ஜில்லாக்களிலும் அய்யர், அய்யங்கார்கள்.

அதாவது :—மதுரை (தெ): திரு. கிருஷ்ணசாமி அய்யர்; இராமநாதபுரம் : திரு. நரசிம்ம அய்யங்கார்; மலபார் : திரு. இராமானுஜ அய்யங்கார்; தென் கன்னடம் : திரு. முத்துசாமி அய்யர்.

மீதியுள்ள ஜில்லாக்களில் இரண்டில் ஆங்கிலோ கிறிஸ்தவர்களும், ஒரே ஒரு ஜில்லாவில் தென்ஆர்க்காட்டுக்கு மட்டும் திரு. பாலகிருஷ்ண உடையார் என்ற தமிழரும் இருந்து வருகிறார்கள். இவர் பதவியும் ஆட்டத்தில் இருக்கிறது.

இவை தவிர, அரசாங்க போலீஸ் இலாக்கா (போர்ட்போலியோ) நிர்வாகத் தலைமையில், செக்ரட்டரி : திரு. ஆர். ஏ. கோபால்சாமி அய்யங்கார் ; டிப்டி செக்ரட்டரி : டி. ஏ. சுப்புசாமி அய்யர் ஆகிய இரண்டு பார்ப்பனர் இருப்பது போக, மற்றும் இரண்டு டிப்டி செக்ரட்டரிகள் :—

1. திரு. ஒய். சிவராம மேனன், 2. திரு. சி. ஆர். பணிக்கர்.

மற்றும் பப்ளிக் (பொலிடிகல்) என்று கூறப்படும் இரகசிய நிர்வாகத் தலைமை ஸ்தானங்களில் :—தலைமை டிப்டி செக்ரட்டரி : திரு. டி. என். இலட்சுமி நாரயண அய்யர்; அண்டர் செக்ரட்டரி : திரு. ஆர். பாலசுப்ரமணிய அய்யர்.

அரசாங்கத் தலைமை ஸ்தாபனங்கள் இந்தப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை உதாரணங்களாக எடுத்துக் காட்டப்பட்ட ஒரு சிலவேயாகும். மற்ற இலாக்காக் களிலும் 100-க்கு 90 பேர்களான தமிழர்களைத் தவிர மற்ற சமுதாயக்காரர்களே அமர்த்தப் பட்டிருக்கிறார்கள்.



இந்த நிலைமை இதற்கு முன்பே இருந்து வந்தாலும் இவ்வளவு மோசகரமான நிலைமை, அதாவது செக்ரிட்டேரியட், போலீஸ்—முதலியவற்றில் இவ்வளவு மோசகரமான நிலைமை—திரு. ஆச்சாரியார் அவர்கள் காலத்தில் ஏற்பட்டதாகவே தெரிகிறது. இங்கே பொதுமக்கள் சிந்திக்கவேண்டும்—தமிழனுக்கு ஆட்சியில் இடமெங்கே? தமிழன் வாழ்வில் ஆட்சியின் உதவி தேடுவதற்கு வழி எங்கே? தமிழனைப் பழிவாங்கும் தன்மையிலே இந்த நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறு காரணம் ஒன்றும் காணோம்.

ஆகையால், ஒவ்வொரு இனத்தாரும், ஒவ்வொரு ஜில்லாக்காரர்களும் பிரிந்து மொழிவாரி மாகாண நாடு பெறும் வரையில், பதவிகள் ஜில்லா விகிதமாவது அந்தந்த ஜில்லா அடையும்படி செய்யவேண்டியது அவசியமாகிறது. சமீப காலத்தில் திருவாங்கூர்—கொச்சி இராஜ்யத்தில் தமிழர் உரிமை கேட்டதற்காக, தமிழர்களை அந்நாட்டு மலை யாளிகள் நடத்திய மாதிரியைப் பார்த்தால், குறைந்த அளவு நாம் நமது உரிமைக்காவது பாடுபடக்கூடாதா என்று தோன்றுகிறது. இந்த உணர்ச்சியின் பெயரால்தான் இந்த எண்ணங்கள் நமக்குத் தோன்றுகின்றன.

ஆகவே, தமிழர் இவற்றைப்பற்றி நல்ல வண்ணம் யோசித்து, கட்டுப்பாடான கிளர்ச்சி செய்வதன்மூலம் பரிகாரம் பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இதுவே என்னுடைய பிறந்தநாள் விழா வேண்டுகோள்.

['விடுதலை'—அறிக்கை—17-9-1954]

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் காரணங்களுக்காகவே வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்து தமிழ்நாட்டை விலக்கி, சுதந்திரத் தமிழ்நாடாக ஆக்கவேண்டுமென்றும், நாட்டைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும் சமுதாயமாகிய பார்ப்பன சமுதாயத்தைத் தமிழ்நாட்டிலிருந்தே வெளியாக்கிவிட வேண்டுமென்றும் நான் உறுதியாகக் கருதி என்னாலான முயற்சிகளைத் திராவிடர் கழகத்தின் மூலம் தொண்டாற்றி வருகிறேன்.

இது ஒருபுறமிருக்க, இந்தச் சந்தர்ப்பத்தையும் நடப்புகளையும் ஆதரவாகக்கொண்டு உள்நாட்டிலேயே சில கொள்ளைக் கூட்டங்கள் தோன்றி—வசதிப்பட்ட அளவுக்குக்கூட, தமிழனைத் தலையெடுக்கவொட்டாமல் செய்துவருகின்றன.

இங்குச் சற்று விவரமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நாட்டு அரசியலில் வெள்ளையன் இருந்த காலம் முதற்கொண்டே பார்ப்பனர்கள் ஏகபோக ஆதிக்கம் பெற்று, தமிழர்களுக்குச் சிறிதும் நல்வாய்ப்பில்லாமல் தமிழர்கள் அழுத்தப்பட்டு வந்திருப்பதைக் கண்டிக்கும் முறையில் இந் நாட்டுத் தமிழ் மக்களால்—நான் அறிய, 1890-ஆம் ஆண்டிலிருந்தே பெருங்கிளர்ச்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. உதாரணமாக, 1892-லும், 1893-லும் சென்னை மாகாணத்தில் கவர்னராயிருந்த லார்டு வென்லக் துரையவர்களுக்கு இந் நாட்டுத் தமிழ் (திராவிட)ப் பெருங்குடி மக்களின் பெயரால், 'கவர்னருக்குப் பகிரங்கக் கடிதம்' என்பதாகக் குறிப்பிட்டு இரண்டு கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளின் நகல் என் கைவசமிருக்கின்றன. அக் கடிதங்களில், சமுதாயத் துறையிலும் அரசியல் துறையிலும் பார்ப்பனர் ஆதிக்கத்தையும் கொடுமையையும் ஆதாரபூர்வமாகப் புள்ளிவிவரங்களோடு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. மற்றும், அக் கடிதத்தில் அவற்றை அனுசரித்து 'மெயில்' முதலிய பத்திரிகைகளின் கருத்துக்களையும், டாக்டர் மில்லர் போன்ற பெரியோர்களின் கருத்துக்களையும் எடுத்துப்போட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன.

இதை எதற்காகக் குறிப்பிட்டேனென்றால்—பார்ப்பன ஆதிக்கமும் கொடுமையும் பற்றிச்சொல்வது ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட பிறகோ, அல்லது சுயமரியாதை இயக்கம் ஏற்பட்ட பிறகோ அல்லவென்றும் 1890-லேயே நம்மவர்கள் உணர்ந்து முறையிட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே.

நிற்க, இத்தொல்லைகள் அல்லாமல் தமிழர்களுக்குத் தமிழ் நாட்டிலே மற்றொரு தொல்லை வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. அதென்னவென்றால், உத்தியோகத் துறையில்—தமிழன், 'பார்ப்பனரல்லாதான்' என்கிற பெயரால் தனக்குரிய பங்கை வலியுறுத்த ஆரம்பித்த பிறகு, பார்ப்பனர் அதை எதிர்த்து ஒடுக்கும் வகையில் தங்களால் ஆனவற்றையெல்லாம் செய்து ஒடுக்கிய பின், மீதி—அதாவது பார்ப்பனரல்லாதவருக்கு ஏதாவது சலுகை காட்டிப் பதவி கொடுத்துத்தான் தீரவேண்டும் என்ற நிலைமை—நிர்ப்பந்தம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில், பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிகொண்டு சில பதவிகளை வெள்ளையனுக்குக் கொடுப்பதும்; அவனுக்குக் கொடுப்பது மக்களுக்கு இஷ்டமில்லையென்றால் வெளி மாகாணக்காரர்களுக்குக் கொடுப்பதும்; அவர்களுக்குக் கொடுப்பதும் சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்—முஸ்லிம்கள் ஆகியவர்களுக்குக் கொடுப்பதும்; அது சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் ஆந்திரர், மலையாளி, கர்நாடகர் ஆகியவர்களுக்குக் கொடுப்பதுமாய்ச் சூழ்ச்சி செய்து, தமிழர்களுக்கு எவ்வளவு கொடுமையும் குறைபாடும் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்துவந்தார்கள். வெள்ளையன் அரசாங்கமும் இவர்களுக்கு ஆதரவு கொடுத்தே வந்திருக்கிறது.

இப்போது வெள்ளையன் ஆட்சி ஒழிந்துவிட்டது; இந்தியன் ஆட்சி என்று ஏற்பட்டுவிட்டது. அதோடு, நாடும் பலவிதத்திலும் வடநாடு—தென்னாடு என்று பிரிந்துவிட்டது. அது மாத்திரமேயல்லாமல், மொழிவாரி நாடு என்னும் பேரால் ஆந்திர நாடும் தமிழ்நாட்டை விட்டுப் பிரிந்துவிட்டது.



இதனால் ஆந்திரர்கள் தொல்லை அரசியலிலும் உத்தியோகங்களிலும் ஒரு அளவுக்கு ஒழிந்துவிட்டது என்றாலும், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், மலையாளிகள், கர்நாடகர்கள் என்பவர்களது தொல்லை அரசியல் ஆதிக்கத்திலும் உத்தியோகங்களிலும் ஒழிந்தபாடில்லை.

இதை ஏன் சொல்கிறேனென்றால், தமிழ்நாடு மொத்த ஜனசங்கியையில் பார்ப்பனர் 100-க்கு 2¾-ம், கிறிஸ்தவர் 100-க்கு 4-ம், முஸ்லிம்கள் சுமார் 100-க்கு 5-ம், மலையாளிகள் சுமார் 100-க்கு 8-ம், கர்நாடகர்கள் 100-க்கு 5-ம் (இவைகள் உத்தேசமான புள்ளிகள்) இவ்வளவு பேரும் சேர்ந்து, ஜனசங்கியையில் தமிழ்நாட்டார்—தமிழர் அல்லாதவர்கள், 100-க்கு 25 பேர்களுக்கு உட்பட்டவர்களாகவேயிருந்தாலும், இந்தக் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் சாதாரண உத்தியோகங்களில்—நீதி நிர்வாகத் தலைமை உத்தியோகங்களில் சுமார் 100-க்கு 60 பேர்களாகவும், முக்கியமான உயர்ந்த உத்தியோகங்களில் 100-க்கு 75 பேர்களாகவும் இருக்கிறார்கள்.

இதை ஏன் பிரித்துக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன் என்றால், தமிழ்நாட்டிலே தமிழர்களைத் தவிர—அதாவது மேற்படி கூட்டத்தினர் தவிர்த்த, தமிழர்களைப் பற்றியாவது தமிழர்களின் பழக்க வழக்க—கலாச்சாரக் குறைபாடுகளைப் பற்றியாவது, சமுதாயத் துறையில் அவர்களுக்குள்ள இழிவைப்பற்றியாவது, அரசியல், கல்வி, பொருளாதாரத் துறையிலாவது மேலே காட்டிய இந்தக் கூட்டத்தாருக்குச் சிறிதும் கவலையில்லை என்பதோடு, பெரிதும் மாறுபட்டவர்கள் என்றும் சொல்லவேண்டியிருக்கிறது. தமிழர்கள் சமுதாயத் துறையில் கீழான சாதியாராக—'சூத்திரர்களாக' இருப்பதைப்பற்றி இவர்கள் யாருக்கும் கவலையில்லை. எப்படியாவது தங்களுக்கு, தங்கள் விகிதத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கையளவு பதவிகள் கிடைப்பதனால், தமிழன் கதி எக்கேடு கெட்டாலும் இவர்கள் இலட்சியம் செய்பவர்களல்லர்; அவரவர்கள் தங்கள் தங்கள் சமூகத்துக்கு எப்படி நடந்து பயன்பெறுவது என்பதையே பெரும்பாலும் இலட்சியமாகக் கொண்டவர்கள் ஆவார்கள்; அப்படியே இருந்தும் வந்திருக்கிறார்கள். அதனால்தான், எந்த விதத்திலும் தங்களைவிடத் தனிப்பட்ட மேலான யோக்கியதை இவர்களுக்கு இல்லாமலிருந்தும் தமிழர்களைவிட இவர்கள் மூன்று பங்கு ஆதிக்கத்தில்—பதவியில் இருந்து வருகிறார்கள்.

இதில் குறிப்பாகக் கூறவேண்டுமேயானால், மலையாளிகளின் தொல்லையே மாபெரும் தொல்லையாகும். அவர்கள் பெரும்பாலும் ஆரிய கலாச்சாரத்தையும், ஆரிய மொழியையும், ஆரிய வருணாசிரம தர்மத்தையும் ஆதரிக்கிறவர்கள். ஆனதனால், வகுப்புவாரி உரிமையில் மலையாளிகளைப் பார்ப்பனரல்லாத 'இந்துக்கள்' என்கின்ற பிரிவில் பார்ப்பனர்கள் சேர்த்துக்கொண்டு, பார்ப்பனரல்லாதாருக்கு என்கின்ற கணக்கில் ஏராளமான மலையாளிகளுக்குக் கொடுப்பதையே—அவர்கள் தாராளமாக வந்து புகுவதையே பார்ப்பனர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்; அனுமதிக்கிறார்கள். அதன் காரணத்தால், ஏறக்குறைய பார்ப்பனர் இல்லாத பெரும் பதவிகளிலும் மலையாளிகளே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். முதலில் ஒரு சில உதாரணங்கள் கூறுகிறேன்.

சென்னை அரசாங்க நிர்வாகத்தின் தலைமைப் பீடாதிபதியான,

சீப் செக்ரட்டரி: திரு. கே. ராமுண்ணி மேனன்

சீப் எஞ்சினியர்: திரு. கே. கே. நம்பியார்

சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர்கள் :—(1) திரு. நாயக் (2) திரு. காமத்

வைத்திய இலாக்கா:—எழும்பூர் பிள்ளைப்பேறு ஆஸ்பத்திரி சூப்பரின்டெண்டெண்டு: திரு. ஆர். கே. கே. தம்பான்; அசிஸ்டெண்ட் சூப்பரின்டெண்டெண்ட்: திரு. கிருஷ்ணமேனன்; ஸ்டான்லி ஆஸ்பத்திரி சூப்பரின்டெண்டெண்ட்: திரு. கே. என். பிஷரொட்டி; பெண்கள் ஆஸ்பத்திரி, திருவல்லிக்கேணி, சூப்பரின்டெண்டெண்ட்: திருமதி. பாருகுட்டிராமன்.



படிப்பகம்

www.padippakam.com



முதலியவைகளாய்க் கொடுக்க வேண்டும் என்றும் [illegible]லப்பட்டிருக்கிறது. இந்தப்படி செய்யாவிட்டால் மதத் துரோகம் என்றும், இந்த[illegible]யாதவன் இஸ்லாம் ஆக மாட்டான் என்றும்கூடக் கூறப்படுகிறது.

அதுபோலவே, கிறிஸ்துவ மதத்திலும் த[illegible]காடுக்க வேண்டியது மிக முக்கிய மானதென்றும், தர்மம் செய்யாதவனுக்கு மோட்சமில்லை என்றும்,—உதாரணமாக ஓர் ஊசியின் காதோட்டை வழியாக ஒரு ஒட்டகம் நுழைந்தாலும் நுழையுமே ஒழிய, பிச்சை கொடுக்காத பணக்காரன் ஒரு காலமும் மோட்சத்துக்குப் போகமாட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இத்தப்படிக்குத் தர்மங்கள் செய்யவேண்டிய அவசியங்களை வற்புறுத்தி அந்த வற்புறுத்தல்களைப் பகவான் சொன்னான், ஆண்டவன் சொன்னான் என்று வேதங்கள் என்பவைகளிலும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த தர்மங்கள் எல்லாம், இருக்கிறவர்கள்—அதாவது செல்வவான்கள்—இல்லாதவர்களுக்கு, ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் இதன் தாத்பரியமாகும்.

செல்வவான்களுக்குச் செல்வம் கடவுளால் கொடுக்க வேண்டும் என்பதுதான் இதன் தாத்பரியமாகும்.

'செல்வவான்களுக்குச் செல்வம் கடவுளால் கொடுக்கப்பட்டதாகும். ஆகையால் கடவுள் கொடுத்ததைக் கடவுளின் சிருஷ்டியாகிய—கடவுளின் பிள்ளைகளாகிய ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்' என்பதே அந்தத் தாத்பரியத்தின் உள்கருத்தாகும். செல்வவான்களுக்குக் கடவுள் செல்வங்களைக் கொடுத்தார் என்றால், செல்வமில்லாத ஏழை தரித்திரவான்களுக்குச் செல்வமில்லாமல் செய்ததும் கடவுள்தான் என்பதை எந்த மதவாதியும் ஆஸ்திகனும் மறுக்கமாட்டான் என்றும், மறுக்க முடியாது என்றும் சொல்வேன்.

செல்வம் என்பது உலகத்தின் பொதுச்சொத்து. அதை யார் உண்டாக்கி இருந்தாலும், உலகத்தில் உள்ளவரை எந்த ஜீவனுக்கும், அது பொதுச் சொத்தாகும். ஆனால், அந்தப் பொதுச் சொத்தானது, பலாத்காரத்தாலும், சூழ்ச்சியாலும், ஆட்சியாலும், கடவுள் பேராலும் ஒருவனுக்கு அதிகமாய்ப் போய்ச் சேரவும், மற்றொருவனுக்குச் சிறிது கூட இல்லாமல் தரித்திரம், பசி முதலியவை அனுபவிக்கவும் ஆன தன்மை உண்டாக்கப்படுகிறதே ஒழிய மற்ற எந்தக் காரணத்தாலும் எவனுக்கும் இல்லாமல் போக நியாயமே இல்லை.

ஆனபோதிலும், கடவுளே ஒருவனைச் செல்வவானாக ஆக்கினார் என்றும், கடவுளே ஒருவனை ஏழையாக ஆக்கினார் என்றும் வைத்துக் கொள்வதானாலும் தர்மம்-பிச்சை கொடுக்கிற அதிகாரத்தை மாத்திரம் ஏன் பணக்காரனுக்குக் கொடுத்து, அவனுக்கு இஷ்டமிருந்தால் பிறத்தியானுக்குப் பிச்சைபோட்டு மோட்சத்துக்குப் போகும்படியும், அவனுக்கு இஷ்டமில்லையானால் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்துக்குப் போகும்படியும், எதற்காகக் கற்பிக்க வேண்டுமென்பது நமக்குப் புலப்படவில்லை. அன்றியும், ஏதோ இரண்டொரு பணக்காரன், பிச்சை கொடுத்து, தர்மம் செய்து மோட்சத்திற்குப் போவதற்காகவும்—பலர் பிச்சை கொடுக்காமலிருந்து நரகத்திற்குப் போவதற்காகவும் எத்தனையோ கோடிக் கணக்கான பிச்சைக்காரர்களை ஏன் சிருஷ்டித்தார் என்பதும் நமக்கு விளங்கவில்லை. செல்வம் கடவுளால் உண்டாக்கப்பட்டதானால் ஏழையும் பணக்காரனும் கடவுளால்தான் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தப்படி ஒரு கடவுள் மூன்றையும் படைத்து—ஏழைக்கும், பணக்காரனுக்கும் வாங்கும்—கொடுக்கும் உத்தியோகம் கொடுத்து, இதற்குக் கணக்கு எழுதி வைத்து, அவனவனுக்குத் தகுந்த மோட்ச-நரகத்துக்கு அனுப்பும் வேலையில் கடவுள் ஈடுபட்டிருக்கிறார் என்றால், கடவுள் பக்தர்கள் கடவுளைப் பரம முட்டாளாகவும் பரிசுத்த மடையனாகவும் சிருஷ்டிக்கிறார்களா? அல்லது, கடவுளைப் பரம கருணா



நிதியாகவும், பாரபட்சமற்ற[illegible]யாகவும் சிருஷ்டிக்கிறார்களா? என்று கேட்கிறேன். ஏழையைச் சிருஷ்டிப்பானேன்[illegible]ட்டு, [illegible]க்காரனைச் சிருஷ்டிப்பானேன்? ஏழையைப் பணக்காரனிடம் போய்க் கெஞ்சும்[illegible]வானேன்? பணக்காரன் தனக்கு இஷ்டமிருந்தால் கொடுப்பதும் இஷ்டமில்லாவிட்ட[illegible]ாடுக்காமல் ஆளைவிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளச்சொல்வதும் ஏன்? என்பவைகளை யோசித்துப் பார்த்தால் முதலில் இந்தத் தத்துவம் உண்மையாய் இருக்குமா என்பதே பெரிய சந்தேகமாய் இருப்பதோடு, பரிசுத்த ஆஸ்திகத் தன்மையுடன் கடவுளைச் சிருஷ்டித்துப் பிரச்சாரம் செய்கின்ற மக்கள் எவ்வளவு முட்டாள்களாய் இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடை மலையாகும்.

கடவுள் பார்த்து ஓர் உத்தரவில் அல்லது ஒரு சங்கற்பத்தில், 'எல்லாப் பொருளும், எல்லா மக்களுக்கும் பொதுவாய் இருக்கத்தக்கது' என்று செய்துவிட முடியாதா என்று கேட்பதோடு, எல்லா ஜீவன்களையும் தானே சிருஷ்டித்து தானே நடத்துகின்றவனாய் இருக்கிறபடியால்—ஒன்றை ஒன்று துன்புறுத்தவோ, ஒன்றை ஒன்று கொன்று தின்னவோ கூடாது என்று நிர்ணயித்துவிட முடியாதா என்று கேட்கின்றேன். உண்மையாகவே ஒரு யோக்கியமான கடவுள் இருந்தால் இதைச் செய்திருக்க மாட்டாரா என்றும் கேட்கின்றேன்.

இந்தப்படி செய்வது முடியாத காரியம் என்று யாராவது சொல்லுவார்களானால். ரஷ்யாவில் லெனின் என்ற ஒரு மனிதன் இந்தப்படி உத்தரவு போட்டுப் பணக்காரரும், பிச்சைக்காரரும் இல்லாமல் செய்துவிட்டாரே, இவர் கடவுளுக்கும் பெரியவரா என்று கேட்கிறேன்.

ஆதலால் தர்மம்—பிறத்தியானுக்குப் பிச்சைகொடுப்பது, மற்றவர்களுக்கு உதவுவது என்கின்ற முறைகள் எல்லாம் பணக்காரத் தன்மைக்கு அனுகூலமானதே தவிர—பணக்காரத் தன்மையைக் காப்பாற்ற ஏற்படுத்தப்பட்டதே தவிர, அவை ஒரு நாளும் ஏழைகளுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் அனுகூலமானவையல்ல.

ஏனெனில், பிச்சைகொடுப்பது, மற்றவர்களுக்கு உதவிசெய்வது என்கின்ற காரியங்களால்தாம், இல்லாத ஏழை மக்களை—தரித்திரவாசிகளான மக்களைப் பிரித்தாளமுடியும். ஏழைமக்கள் பிரிந்திருந்தால்தான் பணக்காரர்கள் வாழமுடியும். அன்றியும், பணக்கார மக்கள்மீது ஏழை மக்களுக்குக் குரோதமும் வெறுப்பும் இல்லாமல் இருக்கவேண்டும் என்கின்ற காரியத்திற்காகவே தர்மம் என்பதும், 'ஜக்காத்' என்பதும், பிச்சை என்பதும் கற்பிக்கப்பட்டதே ஒழிய, பிச்சைக்காரர்களுக்கு உதவிசெய்வதற்கோ அவர்களைக் காப்பாற்றுவதற்கோ ஏற்பட்டதல்ல.

பிச்சைக்காரர் இருப்பதும் அவர்கள் பிச்சை எடுப்பதும் ஜன சமூகத்துக்கு ஒரு பெரும் தொல்லையும் இழிவுமாகும் என்பதோடு, ஒரு கடவுள் இருந்தால்—அக் கடவுளுக்கு மிகுந்த அவமானமும், அயோக்கியத்தனமான காரியமுமாகும்.

இந்தக் கருத்தைவைத்தே திருவள்ளுவரும் 'பிச்சை எடுத்து வாழவேண்டிய மனிதனைக் கடவுள் சிருஷ்டித்திருப்பானேயானால், அக் கடவுள் இல்லை என்றுதான் அர்த்தம். அவன் இருந்தாலும் ஒழியவேண்டியதே அவசியம்' என்று சொல்லி இருக்கிறார்.

திருவள்ளுவர் நூலில் முன்னுக்குப்பின் முரண்கள் பல இருந்தாலும், அவர் ஒரு தனியுடைமைக்காரரேயானாலும் இந்த ஒரு விஷயத்தில் தைரியமாய்ச் சொல்லி இருக்கிறார்.

ஆனாலும், இதற்கு முரணாக, மற்றொரு இடத்திலும் சொல்லியிருக்கிறார். அதாவது, 'தர்மம் செய்தவனையும் பாவியையும் பார்க்கவேண்டுமானால்—பல்லக்கில் போகிறவனையும், பல்லக்குத் தூக்கிச் சுமப்பவனையும் பார்' என்று சொல்லி இருக்கிறார். ஆகவே, இதிலிருந்து தர்மம் செய்ததனாலேயே பல்லக்கில் போகும்படியான செல்வவானாகப் பிறந்தான் என்றும், தர்மம் செய்யாததனாலேயே பல்லக்குத் தூக்கும் தரித்திரனாகப் பிறந்தான் என்றும் சொல்லுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



அப்படியானால், ஏழை—பணக்காரத் தன்மையை [illegible] ளுவர் ஆதரிக்கிறார் என்பதாக ஒருபுறத்தில் விளங்குகிறது. இந்த முரணும் [illegible] ஏற்பட்டதற்குக் காரணம் இவருக்குக் கடவுள் தன்மையில், ஆத்மார்த்தத்தில் [illegible] நம்பிக்கையேயாகும். கடவுள் தன்மை அதாவது, 'மனிதத் தன்மைக்கு மீறின [illegible] தி இருக்கிறது—அதற்கும் உலக நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம் உண்டு' என்று [illegible]வன் கருதினான் ஆனாலும் அப்படிப் பட்டவன் முன்னுக்குப்பின் முரணாகவும், தனிஉ[illegible]மைக்காரனாகவும், உயர்வு தாழ்வுகளை ஆதரிக்கிறவனாகவும் இருந்துதான் தீருவான்.

எது எப்படி இருந்தபோதிலும், உலகத்தில் மனித சமூகம் தொல்லை இல்லாமல் வாழவேண்டுமானால் பிச்சை கொடுப்பதும், பிச்சை எடுப்பதும் சட்டவிரோதமான காரியங்களாய்க் கருதப்படவேண்டும். அப்படியானால்தான், மனிதன் சுயமரியாதையோடு வாழமுடியும். பிச்சை கொடுக்கும் வேலையை சர்க்காரே ஏற்றுக்கொண்டு, அதற்குப் பணம் வேண்டுமானால் பணக்காரரிடமிருந்து 'பிச்சை வரி' என்று ஒரு வரியை கிறிஸ்து சொன்ன கணக்குப்படியோ, முகமதுநபி சொன்ன கணக்குப்படியோ சர்க்கார் வசூலித்து, அதற்கு ஒரு இலாக்காவை வைத்து வினியோகிக்கவேண்டும். அந்தப் பிச்சையை—சர்க்கார் தொழிற்சாலைகள் வைத்து அதன்மூலம் பிச்சைக்காரர்களிடம் வேலையை வாங்கிக்கொண்டு வினியோகிக்கவேண்டும். அந்தக் காரியத்துக்காகச் சர்க்கார் எந்தத் தொழிற்சாலையை வைக்கிறார்களோ அம் மாதிரித் தொழிற்சாலையை மற்றவர்கள் வைக்காமல் தடுத்துவிடவேண்டும்.

இப்படிச் செய்தால், பணக்காரர்கள் ஏற்பட்டு நாசமாய்ப் போனாலும், பிச்சைக் காரர்கள் தொல்லையாவது இல்லாமல் போய்விடும். பணக்காரத் தன்மை ஆட்சி இல்லாத தேசம் எதிலும் இந்தக் காரியம் சுலபமாய் நடத்தலாம்.

ஆகவே, தர்மம் செய்வது அக்கிரமம் என்றும், ஜனசமூகத்துக்குத் தொல்லை என்றும், பணக்காரர்களின் அயோக்கியத்தனங்களை மறைக்க ஒரு சூழ்ச்சி என்றும் சொல்லுகிறேன்.

['குடி அரசு'—கட்டுரை—21-4-1945]

## 12. தர்மமும் பாவ புண்ணியமும்

உலகிலுள்ள எல்லா மதங்களையும்விட இந்து மதத்தில்தான் தர்மம் என்பது இது, இது என்று தெளிவாய் வரையறுத்துக் கற்பிக்கப்பட்டிருப்பதனால், கண்மூடித்தனமான செய்கைகள் இன்னும் செழித்து வருவதற்கிடமாய் இருக்கின்றன. இது சம்பந்தமாக இந்து மதமும், கோட்பாடுகளும், தர்மமும் ஒரு எல்லை ஏற்படுத்தியிருப்பதனால், அவ்வளவுக்குச் செய்யத்தான் யாருக்கும் மனம் வருமே தவிர, அதைத் தாண்டிப்போக யாருக்கும் மனம் வராது. ஒரு அடியாருக்கு அன்னமளித்தால் இவ்வளவு புண்ணியம் என்று கணக்குவாரியாக—அதன் பலனாய் இவ்வளவு காலத்திற்கு மோட்சத்திலிருக்கலாம் என்று வகுத்து எழுதி வைத்திருக்கிறார்கள். இதைக் கேட்டபிறகுதான் இத்தகைய தர்ம சம்பந்தமான எண்ணம் வருகிறதே தவிர வேறல்ல. இம் மாதிரியான காரியங்களினால் உண்மையான பரோபகாரமான காரியங்களுக்குக் குந்தகம் ஏற்படுகின்றது என்பதை நீங்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும். இவற்றால்தான், நாடு முன்னுக்கு வருங் காரியங்கள் தடைப்படுகின்றன. எந்தத் தேசத்திலும் தர்மம் இல்லாமலிருக்கவில்லை. வெள்ளைக்காரத் தேசத்தின் தர்மம் நம் நாட்டுத் தர்மத்தைவிடப் பன்மடங்கு உத்தமமாயும், தேசத்திற்கும், சமூகத்திற்கும் உண்மையான நன்மையளிப்பதாயும் இருக்கின்றது. வெள்ளைக்கார நாட்டுத் தர்மம், கிணறு நிரம்பி வழிவதுபோல, அவன் இராஜ்யம் நிரம்பி நம் நாட்டிலும் வழிந்தோடுகின்றது.

அத்தகைய தர்மம் நிறைந்த நாட்டில் என்ன வழக்கம் என்றால், ஒருவன் தெருவில் பிச்சைக்கு வந்தால் உடனே போலீஸ்காரன் பிடித்துக் கொண்டுபோவான். அங்கு



பிச்சையிடுவது சோம்பேறி[illegible] வளர்க்கும் முறை என்பதை நன்கு அறிந்து கொண்டார்கள். வெள்[illegible] நாட்டில் படிக்காதவன் என்றால் அவன் வெட்கித் தலை குனிந்துவிடுவான். நம் நா[illegible]ட்டு, தர்மம் என்று வந்தால் 'நமக்கென்ன நம்மாலான சாப்பாடு போட்டுவிடுவோம்; [illegible]ருத்த அவன் தலைவிதி போலாகிறது; சரஸ்வதி அவன் நாக்கில் இருந்தால் எப்படியும் படித்[illegible]டுவான்' என்ற தர்மம்தான் நமக்குக் கற்பிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் முன்னேறும்போது நாம் இக் கதிக்கு ஆளாகி இருக்கக் காரணம் என்ன? நமது மதங்கள், தர்மங்கள் என்ற பல தத்துவங்கள்தாம் நம்மை இந்நிலையில் வைத்திருக்கின்றன. அவர்கள் முன்னேற்றத்திற்குப் பலமும், பீரங்கியும் மட்டும் காரணமல்ல. சென்னை மாகாணத்தில் உயர்ந்த குஷ்டரோக, க்ஷயரோக மருத்துவ ஆஸ்பத்திரிகளும் உயர்ந்த கலாசாலைகளும், கல்லூரிகளும் அவர்களுடையதாகத்தான் இருக்கக் காண்கிறோம். தப்பான வழிகளில் பிள்ளைகளைப் பெற்று கள்ளியில் போட்டு விட்டால், அவற்றை எடுத்து வளர்த்து சம்ரக்ஷிக்கும் அனாதை ஆஸ்ரமங்களும் அவர்களுடையதாகத்தான் இருக்கின்றன. தெருவிலும் நடக்கக்கூடாது; அருகிலும் வரக் கூடாது என்று மிருகங்களிலும் கேவலமாய் நம்மால் நடத்தப்படுபவர்களையும், அவர்கள் சேர்த்துக் கல்வி அளித்து, சமத்துவம் பாராட்டி, மாக்களெனக் கருதப்பட்டவர்களையும் அவர்கள் மக்களாக்கி வருவதையும் காண்கின்றோம். இவற்றையெல்லாம் நாம் எளிதில் மறக்கமுடியாது; அல்லது மறைக்கவும் முடியாது. அவர்கள் நொண்டியை, முடத்தை, குருடர்களைக் கொன்றுவிடுகிறார்களா? அத் தகையவர்களுக்கும் தம் சுய உதவியினால் எவ்வளவுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ, அவ்வளவுக்கு உதவிபுரிந்து வழிகாட்டி வருகின்றார்கள். இதனால் வெள்ளைக்காரன்தான் புத்திசாலியா? நமது முன்னோர்கள் என்ன முட்டாள்களா? என்ற கேள்வியும் கிளம்பக்கூடும். இதற்காக நாம் நமது முன்னோர்கள் பேரிலும் சுலபமாகக் குற்றம் சொல்லிவிடமுடியாது. எந்தக் கொள்கையும், நீதியும், தர்மமும், காலத்திற்கும், இடத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற வாறுதான் இருக்கும். இராமேசுவரத்தில் ஒரு செட்டியார் தர்மம் செய்வதற்காகச் சாணியும், பாலும், சுக்கும் மட்டும் கொடுக்கிறார் என்றால், அதுபோல நாமும் இங்கு சாணியைக் குவியலாகக் கொட்டிக்கொண்டு வாரிக்கொடுப்பது தகுதி ஆகுமா? அவ்விடத்திற்கு அவசியத்திற்கு ஏற்றவாறு அது முக்கியமான தர்மமாக இருக்கலாம். அதற்காக நாம் அவன்மீது குறைசொல்ல முடியுமா? முன்னூறு, நானூறு வருடகாலத்துக்கு முந்திய காலத்துத் தர்மம் என்ற காரியங்கள் இப்பொழுது செய்யமுடியாதவைகளாகத்தான் இருக் கின்றன. அப்போது அவை அவசியமாகச் செய்யவேண்டியனவாகத்தான் இருந்திருக்கும். அக்காலத்தில் தற்போது இருப்பதைப்போன்று துரிதமான போக்குவரத்துச் சாதனங்களோ மற்ற வசதிகளோ கிடையாது. அந்த நாட்டு மக்களுக்கு அந்தந்த ஊரே சொர்க்கம். அக் காலத்தில் அவர்கள் கிணற்றுத் தவளைகளைப் போலத்தான் இருந்திருக்க முடியும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு விளைச்சலும் அபரிதமாய் விளைந்துகொண்டிருந்தது. அக் காலத்தில் மழை பெய்வதற்கு அவசியமான காடு முதலியவை அடர்ந்திருந்ததால் பருவ மழைகள் தப்புவதில்லை. இதனால் உழுதாலும் உழாமல்விட்டாலும் அறுவடைக்குக் குறைவில்லை. அப்பொழுது அதிகமாக விளைந்தாலும் தற்போதைப்போல விளைந்த தானியம் முழுவதையும் வெளியூருக்குக் கொண்டுபோகப்படாமல் பெரும் குழிகள் வெட்டி, அவற்றில் புதைத்து வைப்பதும் வழக்கமாய் இருந்துவந்தது. அன்றியும், அக் காலத்தில் பிச்சைக்காரர்களும் மிக அரிதென்றே சொல்லலாம். எவ்வளவு விளைந்தாலும் வாரி வெளிநாட்டுக்கு அனுப்புவது என்ற முறை அக் காலத்தில் கிடையாது. அதற்குச் சாதனமும் கிடையாது. அதனால்தான், இவ்வளவு பேருக்கு அன்னமிட்டால் இவ்வளவு புண்ணியம் என்றும் எழுதிவைக்க இடம் இருந்தது. அதனால் நம் நாட்டில் காலக் கிரமத்தில் பிச்சை எடுக்கும் சாதிகள் என்றே பல சாதிகளும் தோன்றிவிட்டன.

ஏதோ சாம்பலையும் மண்ணையும் பூசிக்கொண்டு வந்தாலும், சாமி என்று விழுந்து கும்பிடும் முட்டாள்கள் அதிகமாய் இருக்கிறார்கள் என்பதை அறிந்துதான் பிச்சைக்காரர்

படிப்பகம்

www.padippakam.com



களும் நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வருகி[illegible]. இத்தனை கோயில் இருக்கையில் இன்னும் புதிதாகக் கோயில் கட்டுவது அவசி[illegible]று கேட்டால், 'பாவி தடுக்கிறான். அவன் சொல்லைக் கேட்ட காதை 'லோஷ[illegible]ட்டுக் கழுவவேண்டும்' என்கிறார்கள். அக் காலத்தில் செல்வ மிகுதியினால் செல[illegible]க்கு வழியின்றி இவ்வாறெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். தங்கள் விளைபொ[illegible]ள்களுக்குச் செலவு வேண்டும் என்ற முறையில் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு மென்மேலும் தர்மம் என்னும் பெயரால் பலவாறு செலவிட்டு வந்தார்கள். அக் காலத்தில் எத்தனை கடவுள் இருந்தாலும் பூசை போட்டு—எவ்வளவு பேர் வந்தாலும் சோறு போடும் செல்வமும் செழிப்பும் இருந்தது. அதனால் இவ்வளவு கடவுள்களும் அடியார்களும் ஏற்பட இடம் இருந்தது. ஆனால், இப்போதைய கொள்கையும், மதக்கோட்பாடுகளும் காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் மனிதன் அறிவுக்கும் தன்மைக்கும் ஏற்றவாறும் இருக்கவேண்டும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் எல்லா மதத்தவர்களுந்தாம் பாவம் செய்யக் கூடாதென்கிறார்கள். ஆனால், பாவம், சுத்தம் முதலான தத்துவங்களுக்கு அந்தந்த மதத்தினருக்கு அர்த்தம் வேறாகத்தானிருக்கிறது. பாலைவனத்தில் தோன்றிய இஸ்லாம் மதத்தில், சுத்தம் என்றால் மூன்று வேளையும் குளிப்பதுதான் சுத்தம் என்று எழுதிவைக்க முடியாது. அங்கு மணலை, உடம்பில் தேய்த்துக்கொண்டாலும் குளித்துச் சுத்தம் ஆவதற்கு ஒப்பாகத்தான் கருதப்படக்கூடும். அதனால், அந்தச் சுத்தம் தப்பு என்று சொல்லிவிட முடியாது. நமக்குள் வெளிக்குப்போனால் நான்கு செம்பு தண்ணீர் விட்டுக் கழுவுபவர்களும் போதாக் குறைக்குத் தலை முழுகுபவர்களும் இருக்கிறார்கள். அவ்வாறு செய்தால்தான் அதனைச் சுத்தம் எனக் கருதப்படுகிறது.

ஆனால், இவர்களைவிடப் பன்மடங்கு கடுமையான சுகாதாரமுடைய வெள்ளைக்காரன்—'காகிதத்தில் பாதியும் கால்சராயில் பாதியுமாக'த் துடைத்துவிட்டுப் போகிறான். அவன் நாட்டில் அவ்வளவுதான் வசதி. இங்கு குளிக்காவிட்டால் பாவி என்கிறான். அங்கு குளித்தாயா என்று கேட்பதே மரியாதையல்ல எனக் கருதப்படுகிறது. இங்கு வியர்வையினால் குளிக்கவேண்டிய அவசியம் உண்டு. அங்குக் குளிரினால் அத்தகைய அவசியம் இல்லை. அவ்வாறே இந்து மதத்தில் எறும்பை மிதித்துவிட்டாலும் பாவம்; அவன் சங்கதியோ அதைப்பற்றிக் கவலையே இல்லை. இங்கு நாம் பசுவை அடித்தாலும் மகா பாவம் என்கிறோம். அங்கு அவன் அதைக் கொன்று தின்னாவிடில் வேறு மார்க்கம் இல்லை. ஒருவன் சிற்றப்பன் மகளைக் கட்டலாம் என்கிறான்; மற்றவன் அதைப் பாவம் என்கிறான்.

இப்படி, சவுகரியத்திற்கும் பழக்கத்திற்கும் ஏற்றவாறுதான் கொள்கைகளும், கோட்பாடுகளும் இருக்கக் கூடும். ஆதலால், அனைத்தும் கால தேச வர்த்தமானத்திற்கேற்றவாறு இருக்க வேண்டும் என்பது நன்கு விளங்கும். அன்றியும், அந்த அந்தக் காலத்தில் திறமைக்கு ஏற்றவாறு ஏமாற்ற ஏதேதோ எழுதி வைத்திருக்கலாம். அவற்றைக் குறித்து இப்போது கவலை இல்லை. ஆனால், நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது இன்றைய நிலைமையில் எப்படி இருக்கவேண்டும் என்பதேயாகும். அதிலிருந்து தப்ப வழி உண்டா என்றும் பார்க்கவேண்டும். நாம் நமது செல்வம், அறிவு, ஒழுக்கம் முதலியவை பிரயோஜனமான வழியில் செலவிடப்பட வேண்டும் என்பதனால், அது தர்மத்திற்கு விரோதமானது என்று சொல்லிட முடியாது. இப்பொழுது நாம் இருக்கும் நிலையில் தர்மத்தின் பேரால் சத்திரமும், சாவடிகளும் கட்டிக்கொண்டு போவோமானால் நம் சமூகத்தின் கதி என்ன ஆகும்? நமது நாட்டின் நிலைமைக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றவாறுதான் எந்தத் தர்மமும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இனி நமக்குப் புதிதாகச் சாமிகள் வேண்டியதில்லை. இப்பொழுது நமது நாட்டில் 22 கோடி இந்துக்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடவுள்களோ புராணங்களின் கணக்குப்படி 33 கோடி கடவுள்கள் இருக்கின்றன. இத்னைப் பங்கிட்டால்



ஒரு ஆசாமிக்கு ஒன்றரைக் கட[illegible]வீதம் வரும். உலகிலே மதங்களைவிட கடவுள்கள்தாம் அதிகமாய் இருக்கின்றன[illegible]வு கடவுள்களை நாம் காப்பாற்றினால் போதும்! நாட்டின் பெருமையை வள[illegible]ட்டு, [illegible]ள் கஷ்டத்தைப் போக்க, அறிவை வளர்க்க கல்வி அத்தியாவசியம். அவர்கள் [illegible]ருத்[illegible]தையுடனும் சுகமாயும் வாழ்வதற்குத் தொழில் அபிவிருத்தி அவசியம். எந்தத் தேச[illegible]திலும் இவை இரண்டும் இன்றியமையாத அவசியமான அம்சங்கள். நம் நாட்டிலோ நூற்றுக்கு 93 பேர் படிப்பில்லாத தற்குறிகளாய் இருக்கிறார்கள். இதைவிட அவமானமான காரியம் ஒரு தேசத்திற்கு வேறு என்ன இருக்கிறது? அதுபோலவே சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு வெளிநாடுகளுக்குப் பிழைப்புக்காகத் துறைமுகங்கள்தோறும், கப்பல்கள்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெண்டு பிள்ளைகளுடன் ஏற்றுமதி செய்யப்படுவதான கோரக் காட்சியைத் துறைமுகங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். இவ்வாறு பிழைப்பின்றியும் சாப்பாட்டுக்கு வகை இன்றியும் கடல் கடந்து ஜீவிக்கச் செல்லும் ஏழை மக்கள் தொகையை, இச் சென்னை மாகாணத்தில் மட்டும் (1949ஆம் ஆண்டு) மாதம் ஒன்றுக்கு இலட்சத்துக்கு அதிகமாகக் காணலாம். இவர்கள் குழந்தை குட்டிகளுடனும், வயோதிகர்களுடனும், கர்ப்பிணிகளுடனும் செல்வதான பரிதாபத்தை என்னவென்று சொல்வது! இங்குள்ள கஷ்டத்தைவிட அங்கு போய்ச் சாகலாம் என்றுதான் மனம் முறிந்து போகிறார்கள். இக் கொடுமைகளைக் கவனித்துப் பரிகாரம் தேடப்படுவதில்லை. இத்தகைய நாட்டில் நடக்கும் விஷயங்களோ விபரீதமாகத்தான் இருக்கின்றன.

இங்கு சாமிகளுக்கும், சடங்குகளுக்கும், உற்சவ வேடிக்கைகளுக்கும், சதிர் ஆட்டங்களுக்கும் இலட்சக்கணக்காகத்தான் செலவிடப்படுகின்றது. திருப்பதி போன்ற தேவஸ்தானங்களுக்கும், முக்கியமான மடங்களுக்கும் சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமாக மாதா மாதம் வருமானம் கிடைக்கிறது. ஒரு சாமிக்கு ஒரு வேளைச் சாப்பாடாகிய ஒரு சட்டி அரணைப் பூசைக்குச் சுமார் 20 ரூபாய்க்கு அதிகம் செலவிடப்படுகிறது. இவ்வாறு இருக்க அச் சாமியின் பிள்ளைகள்—சாமியே கதியென இருக்கும் மக்கள் கஞ்சிக்கு அலைந்து கொண்டு—பிழைக்க வழி இல்லாது ஆயிரக்கணக்காகக் கப்பலேறி வெளிநாடு சென்று துன்புறுகிறார்கள். இவை இரண்டினையும் சேர்த்துப் பார்த்தால், அந்தச் சாமிக்குத்தான் அதிக அவமானம் என்பது நன்கு விளங்கும். அத்தகைய சாமிகளுக்கிருக்கும் சொத்துக்களுக்கும், ஆடம்பரங்களுக்கும், வாணவேடிக்கைகளுக்கும், சதிர்க் கச்சேரிகளுக்கும் ஒரு விதமான அளவில்லை. இராஜாவுக்குக்கூட அவ்வளவு ஆடம்பரம் இல்லை. இராஜாவாயினும்—கொடுங்கோன்மையினால், அந்த சுகங்களை ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பாராமல் அனுபவிக்கிறான் என்று சொல்லலாம். ஆனால், கருணை வள்ளல் என்ற கடவுள் இப்படி வீணாக்குவதற்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கலாமா?

சாமிக்கு இன்றைக்கு யாராவது தங்கக் காரைக் போட்டால், பேசாமல் போட்டுக் கொள்கிறது. யாராவது கழற்றிக்கொண்டு போனாலும் கல்லுபோல் பேசாமல் சும்மா இருக்கிறது! சமீபத்தில் ஆண்டாள் தாலியையும் யாரோ கழற்றிக் கொண்டு போய்விட்டதாயும் பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள். ஏன் இந்த நாட்டில் நூற்றுக்கு 93 வீதமானவர்கள் தற்குறிகளாய் இருக்கவேண்டும்? இதற்கும் வறுமைக்கும் காரணம் என்ன? ஆனால், நான் உங்களைச் சந்தோஷப்படுத்த ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிடலாம்: வெள்ளைக்கார நீச அரசாங்கத்தார் நம் பணத்தைக் கொள்ளையிட்டுப் போனதாகக் கூச்சலிடுகின்றார்கள். அந்த நீச அரசாங்கத்தால்தான் 'சரஸ்வதியும் நம் நாட்டைவிட்டு ஓடி விட்டாள்' என்கின்றனர், மற்றும் சிலர். ஆனால், நம் நாட்டைவிட்டு ஓடிய சரஸ்வதி அந்த நீச நாட்டுக்குத் தான் போய்ச்சேர்ந்திருக்கிறாள். வெள்ளைக்காரன் கொள்ளையிட்டுப் போவதையும், சாமிகளுக்கும் சடங்குகளுக்கும் [illegible]வதையும் கணக்குப் பார்த்தால், சாமிகளுக்குச் செலவானதுதான் பன்மடங்கு அதிகமிருக்கும். சாமிகள், மதம், சடங்குகள் முதலியவற்றின் பெயரால் செலவாகும் பணமும், கஷ்ட நஷ்டமும், அசவுகரியங்களும் கணக்கிடமுடியாது.

படிப்பகம்

www.padippakam.com



பணம் சம்பாதிப்பதில் எத்தனையோ தந்திர[illegible] சூழ்ச்சியும் செய்யும் அறிவாளிகளுங்கூட இவ்வாறு செலவிடுவதில், அந்தத் தந்திரம் [illegible] இல்லாமல் முட்டாள்களாகத்தான் நடந்துகொள்கின்றனர். அபிஷேகத்தில் ரூப[illegible] காடுத்தால் என்ன, 10 ரூபாய் கொடுத்தால் என்ன? வித்தியாசம் என்னவென்று ய[illegible] சிந்திப்பது உண்டா? சென்னை சர்க்காரின் கணக்குப்படி சாமிக்கு வருமானம் ([illegible]) 2 கோடிக்கு அதிகமாகிறது. இது தவிர, கணக்கில் வராத கொள்ளைகளும், போக்குவரத்து, தரகர் செலவும், சொல்ல வேண்டியதில்லை. கணக்குப் பார்த்தால் சாமிகளுக்கு நாம் கொடுப்பது சர்க்கார் வருமான வரியைவிட அதிகமேயன்றி ஒருவிதத்திலும் குறையாது. 'தர்மம் என்றால் சாப்பாடு போடுவதுதானா?' என்று கேட்டால், 'அப்படிக் கேட்பது பாவம்' என்ற தர்ம முறைதான் நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய வீணுக்குச் செலவாகும் பணம் மூன்று ஜில்லாவுக்குச் சாப்பாட்டுடன் கல்வி போதிக்கப் போதுமானதாகும். இந்த மாதிரி சுமார் 25 வருடங்களுக்கு நம் சுவாமிகள் சிறிது வயிற்றை இழுத்துக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தால், பிறகு நம்நாட்டில் ஒருவன்கூட மருந்துக்கும் தற்குறியாய் இருக்கக் காண முடியாது என்பது திண்ணம்.

உள்ளது உள்ளபடி உண்மையைச் சொன்னால், 'அவன் தப்பு சொன்னான்; இவன் நாத்திகம் பேச்சுப் பேசுகிறான்' என்று வீண் கூச்சலிடும் கூட்டத்தாருக்குக் குறைவில்லை. மேடைமீதேறி வெள்ளைக்காரர்களைத் துரத்திடுவோம் என்று பயமுறுத்தலாம். மிரட்டினாலும் அர்த்தத்தோடல்லவா மிரட்டவேண்டும்? 'ஜேபியில் எலிக்குஞ்சு இருக்கிறது; எடுத்துவிட்டால் செத்துப் போவாய்' என்றால் எவன் பயப்படுவான்? 'எடுத்துவிடு! ஒரு கை பார்ப்போம்' என்றுதான் சொல்லுவான். மார்க்கத்துக்கும் தகுந்த வழிக்கும் நமது அறிவையும், செல்வத்தையும் செலவிடாமல் நாம் யாரையும் வெல்லமுடியாது. ஒரு கூட்டத்தார் நம்மைத் தாழ்ந்த நிலையிலேயே அடக்கி வைத்துக்கொண்டு இருக்க முயல்வது சரித்திர பூர்வமாய் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. மத விஷயத்திலும் மற்ற விஷயங்களிலும் வெள்ளைக்காரன் நம்மைவிடச் சேவலமாக இருந்திருப்பதை அவர்கள் தேச சரித்திரமே நன்கு விளக்குகின்றது. அங்கு இருந்த புரோகிதமும், சாமிகளும் இப்பொழுது எங்கு போயின? எல்லாம் இங்குவந்து சேர்ந்தன. அவர்கள் எல்லாவற்றையும் இங்கு மூட்டை கட்டி அனுப்பிச் செலவுக்குப் பணமும் கொடுத்துவிட்டு, அங்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் இறங்கி இருப்பதால், நாளுக்கு நாள் அந் நாட்டார் முன்னேற்றம் அடைந்துவருகிறார்கள். அவர்கள் சாமிக்கு உற்சவம் இல்லை; தேர் இல்லை; திருவிழா இல்லை. அப்படி இருந்தும் அந்தச் சாமி அவர்கள் பல அற்புதங்கள் கண்டுபிடிக்க வழியாய் இருக்க, நம் சாமிகளுக்கு இலட்சக்கணக்கான பணம் செலவிட்டு, தேர்த் திருவிழா நடத்தியும் நாம் இந்தக் கதியில் இருக்கிறோம்.

நம் நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டிற்குப் போகின்றன என்று கூச்சலிடுவதனால் பயன் என்ன? கடுகளவாவது நாம் முன்னேற முயற்சி செய்வதில்லை. அண்மையில் ரஷ்யாவில் செத்தவர்களைப் பிழைக்கவைக்கும் நூதன முறையை ஒருவர் கண்டு பிடித்ததாகப் பத்திரிகையில் படித்து இருப்பீர்கள். இத்தனைக்கும் அது நாத்திகம் நிறைந்த நாடு. நாத்திகருக்கு நரகம் வேண்டுமானால் ரஷ்யாவில் இருப்பவர்களுக்கே இருப்பிடம் சரியாய்ப்போய்விடும். ஆதலால், வேறு எந்த நாத்திகர்களுக்கும் நரகத்தில் இடமிராது. அவ்வளவு நாத்திகமாய் இருக்கும் ஊரில் செத்தவனைப் பிழைக்கவைத்து, சாமியோடுபோட்டி போடுகிறார்கள். வெள்ளைக்காரன் நாட்டில் சாமிக்கு முக்கால் துட்டுகூட செலவு இல்லை. முஸ்லிமும் அப்படித்தான். வெள்ளைக்காரன் கோயிலுக்குப் போனால் துணி அழுக்கை வெளுப்பதற்குச் செலவிடுவதைவிட வேறு செலவு இல்லை. விவசாயத்திலும் அவர்கள் எந்தப் பழத்தை–எந்த நிறத்துடன்–எந்தச் சுவையில் பயிரிடவேண்டும் என்று ஆராய்ச்சி செய்து, அதற்குத் திராவகங்கள் ஊற்றிப் பயிரிட்டு வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். நாம் உழவுகட்ட வேண்டுமானாலும் பார்ப்பானைக் கூப்பிட்டு நல்ல வேளை பார்த்து,



அந்தந்த ஏருக்கும் மாட்டுக்[illegible]சைபோட்டு உழுவதனால்தான் நாம் இந்தக் கதியில் இருக்கின்றோம். நமக்கு [illegible]ட்டு, [illegible]கோடி சாமிகளும், இவ்வளவு பணச் செலவுமிருந்தும் நாம் கடுகளவாவது முன்னேற[illegible]ருத்தில் இருக்கின்றோம்.

பூகோள சாஸ்திரம் போதிக்கும் ஆசிரியரின் தகப்பனும், கிரகணத்தன்று தர்ப்பையை எடுத்துக்கொண்டு சமுத்திரக் கரைக்குத் தர்ப்பணம் செய்து வைக்க வந்து விடுகிறான். இவன் பேச்சைக் கேட்டுக் குளிக்கப் போனால் நம்மை முதலை இழுத்துக் கொண்டு போய்விடுகிறது. கிரகண ஸ்நானத்திற்குப் போவோம் என்று சொல்லும் எம். ஏ.க்களும், பி. ஏ.க்களும் இன்னுமில்லாமல் போகவில்லை. இக் காலத்திலும் சந்திர சூரியனை ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்கும் கதைகளும், அதன் மூலமான புரட்டுகளும், பணம் பறிக்கும் சூழ்ச்சிகளும் ஒழிந்தபாடில்லை. தேச முன்னேற்றத்திற்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, ஒழுக்கத்திற்கோ முட்டுக்கட்டையாய் இருக்கும் எவற்றையும் ஒழிக்க முயலவேண்டும். அம் மாதிரி செய்யும் தேசமும், மதமும், சமூகமுந்தான் முன்னுக்கு வரும். கிலாபத் மதப்பித்துப் பிடித்து இருந்த துருக்கி, தற்போது அதனை இருந்த இடம் தெரியாமல் மூட்டை கட்டி அனுப்பிவிட்டு, முன்னேற்றத்துக்கு வழி தேடியதனால்தான் தற்போது அய்ரோப்பாவில், மற்றைய நாடுகளைப்போல் நல்ல நிலைமையை அடைந்துவருகிறது.

நம் மதத்தில் உள்ள அர்த்தமற்ற தத்துவங்களை ஒழித்து, பிறருக்கு எவ்விதத்தில் உபகாரமோ அதைச்செய்து, மக்களுக்குள் சமத்துவமும், சகோதரத்துவமும், சத்தியமும், ஜீவகாருண்ணியமும் பரவச்செய்வதற்கு வழிதேட வேண்டும் என்றுதான் நாம் சொல்லுகிறோம். வீண் செலவிடும் பணங்களை உண்மையாகக் கஷ்டப்படுகிறவர்களுக்குக் கொடுத்து உபகாரம் செய்வதில் செலவிடுங்கள் என்றுதான் சொல்கிறோம். பழைய குருட்டு நம்பிக்கைகளைத் தம் சூழ்ச்சிகளுக்கு ஆதாரமாகக் கொண்டு சுகமாய் இருந்த கூட்டத்தார் இப்பொழுது கூலிகளையும் குறும்புப் பிரசாரத்தில் ஏவி விடுகின்றனர். எந்தக் காலத்திலும் நன்மைக்கும் பரோபகாரத்திற்கும் விரோதமாக நம் நாட்டில் ஒரு கூட்டத்தார் இருந்திருப்பது சரித்திர மூலமாகவும் நன்கு அறியப்படும். அர்த்தமற்ற கொள்கைகளை ஒழித்து ஒழுக்கமே பிரதானம் என்றும் சீர்திருத்தி, மற்றவனுக்கு உபகாரம் செய்வதுதான் 'மோட்சம்' என்று புகட்டவேண்டுவது அவசியமாகும். கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி அளித்துத் திருப்தி செய்வதுதான் மேலான 'புண்ணியம்'. இவற்றைச் சொன்னால் என்ன நாத்திகம் வந்துவிட்டது? வீணாக மக்களைக் குழப்பி அவர்கள் அறிவைக் கட்டிப் போட்டு, 'நான் சொல்லுவதை நம்பு, இல்லாவிட்டால் பாவம்!' என்று நான் சொல்லவில்லை. எதிலும் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் நாடு முன்னேற்றமடையுமே யன்றி, 'என்னுடைய பாட்டன், முப்பாட்டன் போன வழியில்தான் போகிறேன்' என்ற மூடக்கொள்கையினால் நாடு நாளுக்கு நாள் நாசமடைவது திண்ணம். என் புத்திக்கு எட்டியதை எடுத்துக் காட்டினேன். அதில் சரியானது எனத் தோன்றியதை ஒப்புக்கொண்டு அதன்படி நடக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நான் சொல்லுவதில் பிசகிருந்தால் என் அறியாமைக்குப் பரிதாபப்படும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

['குடிஅரசு'–கட்டுரை—28-5-1949]

## 14. 'நான்'

இப்பொழுது மனிதன் தன்னை உணர்த்தும் வகையில் 'நான்' என்று சொல்லிக் கொள்வது எது என்பதே இப்பொழுது விளக்கப்படவேண்டிய விஷயமாகும். முன்பு ஆத்மா என்பதைப்பற்றி சொன்னதுபோலவேதான் இப்பொழுது 'நான்' என்பதைப் பற்றியும் சொல்லவேண்டி இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



மனிதன் தன்னை 'நான்' என்று சொல்லிக்கொ[illegible]தனால், அது எது என்னும் ஆராய்ச்சியானது, இந்துமதம் என்பதின் கடைசி—[illegible] 'வேதாந்த' தத்துவமாகப் பாவிக்கப்பட்டு, 'அதைக் கண்டுபிடிப்பதே' க[illegible] கண்டுபிடிப்பதாகும் என்று சொல்லப்பட்டு வருகின்றது.

உதாரணமாக, 'தன்னை அறிந்தவனே கடவுளை அறிந்தவனாவான்' என்றும், 'தன்னைத் தான் அறிந்தால் கடவுளை அறியவேண்டியதில்லை,' 'தன்னை அறிந்தவனே ஞானி' என்றெல்லாம் சொல்லப்படுவதை நாம் கேட்டிருக்கின்றோம்.

ஆகவே, இந்தப்படி சொன்னவர்கள் எல்லாம் ஒரு மனிதன் தன்னை 'நான்' என்று சொல்லிக் கொள்கிறானே, அது எது என்று கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஏதோ ஒரு பெரிய கஷ்டம் இருப்பதாக நினைத்தோ, அது சுலபத்தில் மனத்துக்கு எட்டாதது என்று கருதியோ இப்படிச்சொல்லி இருக்கக்கூடும் என்பதாகவும், மற்றும் 'நான்' என்பதைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து ஒருவன் அதைக் கண்டுபிடித்து விட்டானேயானால், பிறகு அவன் 'ஞானி'யாகவும், 'துறவி'யாகவும் அல்லது கடவுளைப்பற்றிக் கவலைப்பட வேண்டியவனல்லாத-இலட்சியம் செய்யப்பட வேண்டியவனல்லாத 'நாத்திகனாகவும்' ஆகி விடக்கூடும் என்று கருதிச் சொன்னதாகவும் இருக்கக்கூடும் என்பதாகவும் முடிவுசெய்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

எப்படி இருந்தாலும், ஒரு மனிதன், தான் யார்? தனக்குள் இருக்கும் 'நான்'—'என்' என்று வரும் உணர்ச்சி எது? அது எப்படி உண்டாகின்றது? எதுவரையில் அவ்வுணர்ச்சி இருக்கின்றது? என்பதான உண்மையை உணர்ந்தால், அவன் நாத்திக அபிப்பிராயத்தை—அதாவது ஆத்மாவோ கடவுளோ இருக்கின்றது என்பதை நம்பாத கொள்கையையே கொள்ளவேண்டியவனாகி விடுவான் என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகின்றோம்.

உலகத்தில் பெயரும் உருவமும் உள்ள பொருள்கள் எல்லாம் ஒருவித சேர்க்கையால்—அதாவது பல கூட்டுப் பொருள்களால் சேர்ந்து இருக்கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்.

ஏனெனில், உலகத்தில் உள்ள எந்தப் பெயருக்கும் மாறுதலையடையாத ஒரு தனி வஸ்து என்பது கிடையவே கிடையாது. ஏனெனில், எந்தப் பெயரும் ஒரு தோற்றத்திற்கு, உபயோகிக்கப்பட்டு அல்லது ஒரு உருவத்திற்கு அல்லது ஒரு வடிவத்திற்குத்தான் சொல்லப்பட்டு வருகின்றதே அல்லாமல் வஸ்துவுக்குப் பெயர் சொல்லப்படுவதில்லை என்பதேயாகும்.

உதாரணமாக, நாம் ஏதாவது ஒரு வஸ்து என்பதை எடுத்துக்கொண்டு அதற்குப் பெயர் என்ன என்று ஒரு மனிதனைக் கேட்டு, அவன் சொன்ன பெயரையே திருப்பிச் சொல்லி, அந்தப் பெயருக்குண்டான வஸ்துவைத் தொட்டுக் காட்டும்படி அம் மனிதனையே கேட்டால், அந்த மனிதன் தொட்டுக்காட்டும் பாகத்தில் இருக்கும் வஸ்துவானது அந்தப் பெயரை—அதாவது அவன் முன்சொன்ன பெயரை உடையதாக அது காணப்படாததை நாம் நன்றாய்ப் பார்க்கலாம். அதாவது,

ஒரு லாந்தர், ஒரு மேசை, ஒரு கடிகாரம், ஒரு புத்தகம் என்பது போன்ற பெயர்களை உடைய வஸ்துக்கள் என்பவைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு அவற்றின் பெயர் என்ன என்று கேட்டால் முறையே முன்சொன்ன பெயர்களைத்தான் சொல்வான். ஆனால், ஒரு லாந்தர் என்பது எது என்று தொட்டுக்காட்டச் சொன்னால் லாந்தர் என்பதில் அவன் தொட்டுக்காட்டிய பாகம் ஒரு சிம்னியையோ, கண்ணாடியையோ, த[illegible]டையோ, கம்பியையோ, ஆணியையோதான் தொட்டுக் காட்டப்பட்டதாய் இருக்கும். அதுபோலவே, ஒரு மேசையைத் தொட்டுக் காட்டச் சொன்னால் தொட்டுக் காட்டியபாகம் ஒரு பலகையோ,



அல்லது காலையோ, ஆணி[illegible]யோ, குமிழையோ, கைப்பிடியையோதான் தொட்டுக் காட்டியதாய்க் காணப்படு[illegible]டியேதான் ஒரு கடிகாரம், புத்தகம் ஆகிய பொருள்களிலும் ஒரு பாகத்தையே தொ[illegible]ட்டு[illegible]ம்.

இப்படியே மற்றும் அதன் [illegible]ரிவுப் பெயர்களும்—அதாவது மேல் சொல்லப்பட்ட பெயர்களும் சரியானபடி தொட்டுக் காட்டப்பட்டதாகவும் இருக்கமுடியாது. ஏனெனில், அவன் லாந்தர் என்பதாகக் காட்டியது கம்பி என்பதானாலும், கம்பி என்பதாக ஒன்றைத் தொட்டுக்காட்டியதாக இல்லாமல், இரும்பைத் தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும். இரும்பு என்பதைக் காட்டும்போது ஏதோ ஒரு வகையான மண்ணின் சேர்க்கையைக் காட்டியதாகத்தான் காணப்படும். இப்படியே நமக்குக் காணப்படும் வஸ்துக்கள் எல்லாம் ஏதோ ஒரு ரூபமாத்திரத்திற்கு—ஒரு உருவத்திற்கு—ஒரு மாதிரியான தோற்றத்திற்கு அந்தப் பெயர் சொல்லப்படுவதாகக் காணப்படுமே அன்றி, அந்தப் பெயருக்கு அந்த வஸ்து கட்டுப்பட்டு, அந்த வஸ்துக்கள் வேறு எந்த ரூபத்தை அடைந்தாலும், வேறு எந்தக் குணத்தை அடைந்தாலும், அந்தப் பெயரையே உடையதாகக் காணும்படியான ஒரு வஸ்துவும் காணப்படமுடியாது என்பது இவற்றிலிருந்து நன்றாய் உணரக் கிடக்கின்றது.

ஆகவே லாந்தர், மேசை, கடிகாரம், புத்தகம் என்றதும் ஒருவித வடிவத்தில் காணப்படும் ஒரு தோற்றத்தின் பெயரே தவிர ஒரு வஸ்துவின் பெயர் அல்ல என்பதும் இதனால் உணரத்தக்கதாகும்.

எப்படியெனில், மேசை, நாற்காலி, பெஞ்சு, ஊஞ்சல் என்று சொல்லப்படுவதான வஸ்துக்கள் மரம் என்னும் ஒரே மூலப்பொருளாலும், இரும்பு என்னும் ஒரே உபமூலப் பொருளாலும் செய்யப்பட்டிருந்தாலும்—தனித்தனி வடிவத் தோற்றத்தினால் தனித்தனி பெயரை உடையதாகி இருப்பதுபோலவே, உலக வஸ்துக்கள் வடிவம், உருவம், சாயல், குணம், நிலை முதலாகிய பேதத்தால் பலவிதப் பெயர்களை உடையதாக இருந்து பலப்பல காரணங்களால் அதே வஸ்துக்கள் வேறுபல பெயர்களையும் அடைந்தாலும் முடிவில் அவற்றின் மூலப்பொருள்களின் பெயர் எல்லாவற்றிற்கும் ஒரே (தாது) பெயருடைய வஸ்துவாகவேதான் இருக்கும்!

இதுபோலவேதான், ஜீவன்கள் என்கின்ற 'உயிர்'ப்பிராணிகள் எல்லாம்கூட உருவத்தில், தோற்றத்தில் வேறுவேறு வகையாய்—பெயராய்ச் சொல்லப்பட்டாலும் அவற்றின் மூலப் பொருள்களும் ஒன்றேயாகும். அதாவது, மரத்தையே மூலப்பொருளாய்க் கொண்ட மேசை நாற்காலி, பெஞ்சு முதலிய பல பெயர்களுக்கு உருவம், தோற்றம் ஆகியவைகளே காரணமாய் இருப்பது போல, அணுக் கிருமி, பூச்சி, புழு, பட்சி, மிருகம், குரங்கு, மனிதன் முதலாகிய பல ஜந்துக்களுக்கும் உருவம், தோற்றம், குணம் முதலிய காரணமாய்ப் பல பெயர்கள் சொல்லப்பட்டாலும், தொட்டுக்காட்டும் பாகங்களானவை எல்லா ஜீவ வர்க்கத்திற்கும் ஒரே மாதிரியான, ஒரே பெயர் கொண்டதான மூலப்பொருளாகத்தான் இருக்கும். ஆகவே, ஜீவ வர்க்கங்கள் என்பனவாகிய சகல ஜீவப்பிராணிகளும் சாயல், உருவம், தோற்றம், குணம் முதலியவை தவிர அவற்றின் மூலப்பொருள்களும், தத்துவமும் ஒன்றேயாகும்.

எனவே, எத்தனையோ கோடிவித ஜீவப்பிராணிகள் என்பதில் மனிதன் என்பதும் ஒருவிதமான தோற்றமுடைய உருவத்திற்குச் சொல்லப்படும் பெயரேயொழிய—மனிதன் என்கின்ற ஒரு தத்துவத் தனிப்பொருள் இல்லை என்பதை இதனால் ஒருவாறு உணரலாம். ஏனெனில், மனிதன் என்று குறிப்பிடுவதற்குத் தொட்டுக்காட்டக்கூடிய ஒரு வஸ்து மனித சரீரத்தின் எந்தப் பாகத்திலும் கிடையாது என்பதாலேயேயாகும். உதாரணமாக, ஒரு மனித உருவத்தைக் காட்டி அவனை மற்ற ஒரு மனிதனைத் தொட்டுக்காட்டச் சொன்னால் அவன் ஒரு மனிதன் என்பவனின் சரீரம் என்பதில் ஏதாவது ஓர் அவயவத்தைத்தான் தொட்டுக்காட்டுவான். அந்த அவய்வத்திற்கு ஏற்கனவே பெயர் கை, கால், வ்யிறு, மார்பு,



படிப்பகம்

www.padippakam.com



முதுகு, தோள் என்பவை முதலாகிய ஏதாவது ஒரு ...ரையுடைய அவயவமாகத்தான் இருக்கமுடியும். அந்தப் பெயருக்குடைய அவயவ...வையும் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தால் அது தசை, தோல் முதலாகிய பெயர்க...ய பொருளாகத்தான் காணப் படும். இப்படி எல்லாம் இருந்தாலும்கூட, அப்படி...ப்பட்ட மனிதனும் இயங்குதல்—அதாவது, அசைகின்ற சக்தி இருக்கும்போது... அந்தத் தோற்றத்திற்கு மனிதன் என்கின்ற பெயரையுடையதாகவும்—அதாவது, அசைகின்ற சக்தி இல்லாது போய்விட்டால் மனிதன் என்ற பெயரையுடைய அதேதோற்றம் பிணம் என்னும் பெயரையுடையதாகவும் ஆகிறது.

அன்றியும், மனிதன் அசையும் சக்தியை உடைத்தாயிருக்கும்வரை அந்த சரீரத்தில் எந்தப்பாகம்—அதாவது முன்சொல்லப்பட்ட அவயவங்களாகிய கண், காது, வாய், கால், கை முதலாகிய எந்தப் பாகம் போய்விட்டபோதிலும் மனிதன் என்றே சொல்லப்படுகின்றது. எனவே, அசையும் சக்தி உள்ள ஒருவிதத் தோற்ற உருவிற்குத்தான் இங்கு மனிதன் என்று சொல்லப்படுவதாய் இருந்து வருவதைப் பார்க்கின்றோம். இந்தப்படியான மனிதன் அசையும் சக்தியையுடைத்தாய் இருக்கும்வரைதான், அவனுக்குள் உயிரோ, ஜீவனோ, ஆத்மாவோ ஒன்று இருக்கின்றது என்று கருதுகின்றார்களே ஒழிய வேறில்லை.

இந்த அசையும் சக்தியிருக்கின்ற ஜீவன்கள் எல்லாவற்றிற்குமேதான் 'ஆத்மா' என்பதாக ஒன்று இருக்கின்றது என்பது ஆத்மவாதிகளின் கொள்கையாகும். அதாவது, 'சரீரத்தில் இருந்து ஆத்மா பிரிந்துவிட்டால் அசைவு நின்று விடும்'; அதாவது, மனிதன் செத்துப்போவான் என்று சொல்லுவார்கள். எப்படி இருந்தாலும், 'சரீரத்திற்கு அசையும் சக்தியைக் கொடுப்பதுதான் ஆத்மா' என்பது ஆத்மவாதிகள் கொள்கை என்பதும் இதனால் புலப்படும்.

ஆகவே, இந்த அசையும் சக்தி சரீரத்துக்கு எப்படி உண்டாகின்றது? இது எப்படி நின்று போகின்றது? என்பதைச் சரிவர உணர்ந்தோமானால் ஆத்மாவின் யோக்கியதை இன்னதென்று ஒருவாறு விளங்கிவிடும்.

இதற்குமுன் ஆத்மாவைப் பற்றிச் சில கேள்விகள் எழுகின்றன. அதாவது, சரீரத்திற்குள் ஆத்மா எப்படி வந்தது? ஏன் வந்தது? சரீரத்தை விட்டுவிட்டு ஆத்மா எப்படி வெளியேறுகின்றது? அது ஏன் வெளியேறிவிடுகின்றது? எந்த மாதிரி ஆத்மா மனித சரீரத்திற்குள் வருகின்றது? எந்த மாதிரி ஆத்மா—கழுதை முதலிய மிருக சரீரத்திற்குள் வருகின்றது? எந்த மாதிரி ஆத்மா அணுக் கிருமி முதலிய சரீரத்திற்குள் நுழைகின்றது? ஜீவன்களின் அசைவு, பலம், குணம் முதலிய பலவித மாறுதலான நடவடிக்கைகளுக்கு ஆத்மா காரணமா? அல்லது, அதனதன் சரீர அமைப்பு காரணமா?—என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன. இவை ஒருபுறம் நிற்க, இனி எடுத்துக்கொண்ட விஷயமாகிய 'நான்' என்பதைப்பற்றிப் கவனிப்போம்.

ஒரு மனிதன் தான் 'நான்' என்று சொல்லுவது அந்த மனிதனுக்குள் இருக்கும் அசையும் சக்தியாகிய 'ஆத்மா' என்பதா? அல்லது வேறு பொருளா? என்று பார்ப்பதனால் அது வேறு பொருளா அல்லவா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே ஆத்மா என்பது 'நான்' என்று சொல்வதல்ல என்பதானது சீக்கிரத்தில் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கின்றது. எப்படியெனில், ஒரு மனிதன் பேசும்போது, 'என் ஆத்மா' என்றும், 'நான் என் ஆத்மாவை விடமாட்டேன்' என்றும், இந்தமாதிரி 'நான்' 'என்' என்பது வேறு என்றும், 'ஆத்மா' என்பது வேறு என்றும், பிரித்துப் பேசுவதையும், பேசும்படி இருப்பதையும் பார்க்கின்றோம். ஆகவே, சரீரத்தின் அசையும் சக்தி 'ஆத்மா' என்றால், இந்த 'நான்' என்பது அதைவிட்டு வேறுபட்ட மற்றொரு விஷயமாக இருக்கும் என்று கருதவேண்டியதாக இருக்கின்றது என்பது இதனால் ஒருவாறு புலப்படும்.



ஆனால், ஒரு மனித ...தில் 'ஆத்மா' என்பதாக ஒரு வஸ்துவும், 'உயிர்' என்பதாக ஒரு வஸ்துவும் '...' என்பதான தன்மையை உணர்த்த ஒரு வஸ்துவும் ஆக மூன்று வஸ்துக்கள் இருக்கும்...ட்டு, ...நினைப்பது சரியான நினைப்பாகாது என்பதோடு அப்படி நினைத்தாலும் அவைகள் ...ருத்த... மனிதனை நடத்துகின்றது அல்லது மனிதனுடைய நடத்தைக்கு ஜவாப்தாரித்தனமுடையது என்னும் விஷயம் மயக்கத்தையும் முரண்களையும் விளைவிக்கக் கூடியதாகிவிடும். ஆதலால், 'நான்' என்று சொல்லப்படுவதும், எண்ணப் படுவதும் தனிப்பட்ட ஒரு வஸ்துவல்ல என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது.

மற்றபடி பின்னே அது என்னமாய்த்தான் இருக்கக்கூடும்? என்ற கேள்விக்கு நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றோம்.

அது பிசகாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால், அந்தப் பிசகானது ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா என்று பிரித்துச் சொல்லுகின்றது போன்ற அவ்வளவு பெரிய பிசகாகவும், ஆத்மாவுக்குக் குணங்கள் கற்பிக்கின்ற அளவு பிசகாகவும் இருக்காது என்பது மாத்திரம் உறுதி. திருத்துவதற்கு யாவருக்கும் உரிமை கொடுத்தே நமது அபிப்பிராயத் தைத் தெரிவிக்கின்றோமேயொழிய, இதுவே சரியான அபிப்பிராயம் என்பதாக நாம் ஒன்றும் இவ் விஷயத்தில் சொல்ல வரவில்லை.

ஆகவே, 'ஆத்மா என்பதாகத் தனித்துப் பிரித்து உணர்த்தக்கூடிய வஸ்து ஒன்று இல்லை' என்றே சொல்லுகிறோம்.

['குடி அரசு'—கட்டுரை—17-5-1931]

## 15. ஆத்திகம்—நாத்திகம்

**பெரியோர்களே! இளைஞர்களே!**

ஆத்திக-நாத்திகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் இது ஒரு பயனற்ற விஷயம் என்றே தெரிகிறது. ஏனெனில், ஆத்திகமும் நாத்திகமும் 100-க்கு 90 பேர்களின் அபிப் பிராயங்கள், பழக்க வழக்கங்களால், பிறர் சொல்லிக்கொடுப்பதால், சேர்க்கையால் ஏற்படுவதே ஒழிய, ஒரு இயற்கை உணர்ச்சி அல்ல. அன்றியும் பசி, தூக்கம், பஞ்சேந்திரிய உணர்ச்சி ஆகியவைகளைப்போல் இயற்கையால் ஏற்படும் எண்ணமல்ல. அதைப்பற்றி மனிதன் கவலைப்படவேண்டியதேயில்லை; அது இன்று ஒரு ஆராய்ச்சி விஷயமாகி நாகரிக விஷயமாகவும் பேசப்பட்டு வருகின்றது. மனிதனுக்குக் கட்டும், காவலும், சட்டமும், போலீசுமாகத்தான் இருக்கின்றனவே ஒழிய கடவுளோ, நரகமோ, சாஸ்திரமோ, ஒழுக்கமோ கட்டிக் காப்பாற்றிவிடவில்லை; அனுபவத்திலும் எவனும் அவற்றின்மீது எவ்வித பொறுப்பையும் சுமத்துவதுமில்லை.

ஆதலால், ஆத்திக-நாத்திகம் என்பது ஒரு பயனற்ற பிரச்சினையாகும். மற்றும், அது அவனுடைய சொந்த புத்தி, யோசனையைப் பொறுத்ததாகும்.

ஆதலால் நமது வாழ்வில் ஏற்படவேண்டிய இன்ப-துன்பங்களுக்கும், முற் போக்குக்கும், மாறுதலுக்கும் ஆத்திக-நாத்திகத்தைக் கொண்டுவந்து குறுக்கே போட்டுக் கொண்டு யாரும் கஷ்டப்படவேண்டியதில்லை.

நம்மைப் பொறுத்தவரை எந்த அளவில் ஆத்திகத்தில் பிரவேசிக்கின்றோம் என்று நினைப்பீர்களானால் வாழ்க்கையின் நலன்களைக் கடவுளின்மீது பொறுப்பேற்றுவதும், கடவுளுக்காகச் செல்வங்களை, மக்களின் வாழ்க்கைக்குரிய பொருள்களைப் பாழாக்கு வதையும் பொறுத்த அளவில்தான் பிரவேசிக்கின்றோம்.

மற்றபடி, எவன் எத்தனை கடவுளை எந்த விதமாக நினைத்துக் கொண்டாலும், வணங்கினாலும், அவற்றோடு பேசினாலும், அதுவாகவே ஆய்விட்டாலும் நமக்கு அக்கறை இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



உலகத்தைப் பொது என்றும், உலகப்பொ[illegible]கள் போக போக்கியங்கள் யாவருக்கும் சமம் என்றும் மனிதன் எண்ணவேண்[illegible]தற்குக் கடவுள் குறுக்கிடாமல் இருந்தால் கடவுளைப்பற்றிய வேலை நமக்கு [illegible] அதைப்பற்றிய கவலையும் நமக்கில்லை. ஆகையால், அதை ஒரு பெரிய பிர[illegible]யாக வைத்துக்கொண்டு எவரும் கஷ்டப்படவேண்டியதில்லை.

[புதுக்கோட்டையில், 7-10-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 14-10-1934]

தோழர்களே!

மக்களுக்கு ஆத்திகம் – நாத்திகம் என்பதற்குப் பொருள் தெரிவதே இல்லை. நாத்திகன் என்றால் கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன் அல்ல; நான் கடவுள் இல்லை என்று சொல்கிறவன் அல்ல; இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளவும் இல்லை. என்னால் கடவுள் என்பது என்ன? எப்படிப்பட்டது? என்று புரிந்துகொள்ள இன்றைக்கும் முடிய வில்லை. புரிந்துகொண்டிருப்பதாகக் கருதுபவரிடத்தில் எனக்கு ஏன் சண்டைவேண்டும்? நான் (1956) கண்டிப்பதெல்லாம்—பேசுவதெல்லாம் கடவுள்களைப்பற்றிய சேதியே அன்றி, கடவுளைப்பற்றிய சேதியல்ல. போலிக் கடவுள்களை மக்களிடத்தில் புகுத்திவிட்டார்கள்; போலிக் கடவுள்களால் மக்கள் சீரழிகிறார்களே என்பதுதான் என் கவலை. நாத்திகன் என்பதற்குக் கடவுள் இல்லை என்பவன் என்று பொருள் இல்லை. புராண, இதிகாச, வேத சாஸ்திரங்களை ஒப்புக்கொள்ளாதவர்களையே—அவற்றைப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்பவர்களையே—பார்ப்பனர்கள் நாத்திகர் என்று குறிப்பிட்டிருக்கின்றனர். இராமாயணத்தில், பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் புத்தர் முதலானவர்களை —பகுத்தறிவைப் பயன்படுத்தியதற்காக—நாத்திகர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. யார் ஒருவன் பார்ப்பன ஆதாரங்களில் கை வைக்கிறானோ அவனுக்கு நாத்திகப் பட்டம் சூட்டியிருக்கின்றார்கள். இராவணன் பெரிய சிவபக்தன். ஆனால், பார்ப்பன ஆதாரங்களை எதிர்த்ததால் நாத்திகன் எனப்பட்டிருக்கிறான். அப்படியே இரணியனும். குறைபாடுகளை நீக்கப் பல முறைகள் உண்டு. பல வைத்தியங்கள் உண்டு; அதில் ஒரு வகையே சமுதாய இழிதன்மையையும் சாதியையும் ஒழிக்க நாங்கள் கையாளும் முறை.

மதத்தின் மேல் குற்றமில்லை; மதத்தைச் சார்ந்தவர்கள் மேல்தான் குற்றம் என்று கூறுகிறார்கள். சார்ந்தவர்களைத் திருத்தும் பொறுப்பு மதத்தினுடையது இல்லையா? சார்ந்தவரைத் திருத்த முடியாத மதத்தை எப்படி நல்ல அமைப்புடையது என்று சொல்ல முடியும்? மதத்தில் காலத்துக்கு ஏற்ற மாறுதல் வேண்டாமா? ஏசு, 'ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டு' என்று சொல்லியிருக்கிறார்! இது இன்று சாத்தியப்படுமா?

'மேல் துணியைக் கேட்டால் இடுப்புத் துணியையும் கொடுத்துவிடு' என்று சொல்லி இருக்கிறார். இப்படி இக் காலத்தில் இருக்க முடியுமா? அப்படிச் செய்தால் எல்லோரும் நிர்வாணமாய் இருக்க வேண்டியதுதான். இப்படிக் காலப்போக்குக்குப் பொருத்தமில்லாதவற்றை மாற்றிக்கொள்ள வேண்டும்; திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும்.

[பொன்மலையில், 22-9-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 26-9-1956]

தலைவரவர்களே! தோழர்களே!

சாதாரணமாக, மக்கள் முடிவெய்திய காரியங்களில் தங்கள் தங்கள் சாதிமத சம்பிரதாயங்களை அனுசரித்துக் காரியம் செய்வார்கள். அதற்குப் பல பெயர்கள்—தீட்டுக் கழிப்பது, கருமாதி—இப்படி ஏதேதோ உண்டு.

இங்கே அந்தப் படியான காரியம் நடைபெறவில்லை. மறைந்தவர் முடிவெய்திய நாளை நினைவில் வைத்து அறிவுரை கூறும் நாளாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது



போன்ற சந்தர்ப்பங்களில் சா[illegible]னக் கூட்டமாக இருந்தாலும் அங்குதான் தத்துவம் முழங்கும். 'அவர் இப்படி [illegible]ார்; அப்படி வாழ்ந்தார். இப்போது என்னத்தைக் கொண்டு போய்விட்டார்; வா[illegible]ித்தியம்' என்று இப்படித் தத்துவம் பேசுவார்கள். ஆனால், இதைப் பிறகு மறந்து[illegible]ர்கள். இதை வேடிக்கையாக—'மயான வைராக்கியம்' என்று சொல்லுவார்கள்; 'பிரசவ வைராக்கியம்' என்று சொல்லுவார்கள். அதாவது, ஒருவர் இறந்துபோனதும் மயானத்தில் 'வாழ்வு மாயம், அநித்தியம்' என்று பேசுகிற தத்துவம்—பின்னால் மறந்துபோகிறது. அதேபோல், பிரசவ வேதனைப்படுகின்ற சமயத்தில், 'இனிமேல் குழந்தையே வேண்டாம்' என்று கருதுவார்கள். குழந்தை பிறந்து சந்தோஷமானவுடனேயே, 'எல்லோரும் இங்கேயே கூடிக்கொண்டிருக்கின்றீர்களே! அவரைக் கவனித்தீர்களா? சாப்பிட்டாரா? போய்ப் பாருங்கள்' என்று சொல்லுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பேசப்படும் தத்துவம் உண்மை.

ஆனால், அப்படிப் பேசப்படும் தத்துவங்களுக்கு வலிமை இருப்பதில்லை. ஒருவர் இறந்துபோகிறார் என்றால்—கட்டை மண்ணுக்குத்தான் போகப்போகிறது என்று நன்றாகத் தெரியும். என்றாலும் குளிப்பாட்டி, 'நல்ல வேஷ்டியாகப் போடு; இதைச் செய்—அதைச் செய்' என்பதெல்லாம் எதற்காக? அந்தந்த மத, சாதி சம்பிரதாயப்படி— 'வெள்ளிக்குடம் வைத்தாயா?' '16 இலை போட்டாயா?' 'தானம் கொடுத்தாயா?' என்பதெல்லாம்—அவனவன் அனுஷ்டிக்கும் சாதி மத சம்பிரதாயப்படியும், சாஸ்திர சம்பிரதாயப்படியுமே தவிர, வேறு ஒன்றும் கட்டாயம் இல்லை. அவன் சார்ந்துள்ள மத, சாஸ்திர சம்பிரதாயப்படி இவற்றையெல்லாம் செய்யவேண்டும். 'ஏன் செய்கிறாய்?' என்றால், 'இது எங்கள் சாதிப் பழக்கம்; சாஸ்திரம் சொல்லுகிறது; புராணம் சொல்லுகிறது' என்பார்கள். இதைத் தவிர வேறொன்றும், செய்பவனும்—செய்யச் சொல்லுகிறவனும் சொல்லமாட்டார்கள். இந்தக் காரியங்களெல்லாம் ஏறக்குறைய ஒரு கூட்டத்தாரிடம்— கட்டாயம் எந்தக் கூட்டத்தார் என்றால் ஆத்திகர்கள் என்ற கூட்டத்தாரிடம், அவர்கள் சாயபுவாக இருந்தாலும், கிறிஸ்தவனாக இருந்தாலும் கண்டிப்பாக உண்டு; ஏதோ ஒரு விதத்தில் நடக்கும். மற்ற ஒரு கூட்டத்தார் ஆத்திகரல்லாதார்கள்—நாத்திகர் என்று சொல்லலாம்; அவர்களிடம் இந்தக் காரியம் இருக்காது. வேறுமுறையில் மனத் திருப்திக்காக சில காரியங்கள் செய்வார்கள்.

நாம் ஆத்திகம் என்றால் என்ன, நாத்திகம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தச் சொற்கள் மக்களை மயக்கி வருகின்றன. ஏன்? பொருள் சரியாகத் தெரிவதில்லை; அது விளங்கி விட்டால் கருத்து வேற்றுமைகள்கூட சகிக்கக் கூடியதாக ஆகிவிடும். இப்போது சாயபு ஒரு காரியம் செய்கிறார். அதைப் பார்த்து மற்றவர்கள் ஏதோ அவர் மதப்படி அவர் காரியம் செய்கிறார் என்று சகித்துக் கொள் கிறார்கள். அதேபோல, சாயபு மற்றவர்கள் ஒரு காரியம் செய்யும்போது, 'ஏதோ, அவர்கள் சாஸ்திரப்படி செய்கிறார்கள்' என்று கருதிப் போவாரே தவிர, கோபிப்பதில்லை. அதுபோலத்தான், ஆத்திக-நாத்திகம் விளங்கிவிட்டால் கருத்து வேற்றுமை சகித்துக் கொள்ளக் கூடியதாகிவிடும்.

ஆத்திகம் என்பது வெறும் நம்பிக்கையின்பேரில், நம்பிக்கையையே அடிப்படையாகக்கொண்ட காரியம்.

இப்போது ஒருவர் சந்தைக்குப் போய்விட்டு வந்து குளிக்கிறார். 'ஏன்?' என்று கேட்டால், 'சந்தைக்குப் போய்விட்டு வந்தேன்; பறையன் என்மேல் பட்டிருப்பான்; அதனால் குளிக்கிறேன்' என்பார்.

'பறையன் தொட்டிருந்தால் என்ன? அதற்கு ஏன் குளிக்க வேண்டும்?' என்றால், 'இதென்னப்பா, இப்படிக் கேட்கிறாய்; சாஸ்திரத்தில் சொல்லியிருக்கவில்லையா? பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; அதன்படி குளிக்காமல் வீட்டிற்குப் போனால் தீட்டு'

படிப்பகம்

www.padippakam.com



என்று சொல்லுவார். அதேபோல ஒரு நாத்திகர் என் ... சந்தைக்குப் போய்விட்டு வந்து குளிக்கிறார். ‘ஏன் குளிக்கிறாய்’? என்றால், ‘சந் ... போனேன்; அங்கு எவ்வளவு அசிங்கம், தூசி; பல கொடுமையான நோயாளிகளெ ... முட்டியிருப்பார்கள்; அதனால் குளிக்கிறேன்’ என்பார். காரண காரியத்தைத் தெ ... அதன்படி நடப்பவன் நாத்திகன். வெறும் நம்பிக்கையை ஆதாரமாக வைத்து—சாஸ்திரம் சொல்லுகிறது, பெரியோர்கள் சொல்லுகிறார்கள் என்பதை நம்பி அந்த நம்பிக்கையின்படி நடப்பவன் ஆத்திகன்.

‘சாஸ்திரம் சொல்லுகிறது; பெரியவர்கள் சொல்லுகிறார்கள் என்றாயே—அதை நிஜம் என்று தெரிந்துகொண்டாயா?’ என்றால், ‘பெரியவர்கள் சொல்லுகிறார்கள்; சாஸ்திரம் சொல்லுகிறது என்றால் நிஜமில்லாமல் வேறென்ன?’ என்பான்.

‘நிஜமென்று கண்டு பிடித்தாயா?’ என்றால் ‘பெரியவர்கள்தாம் சொல்லிவிட்டார்களே—பிறகு என்ன கண்டு பிடிப்பது?’ என்பான். இன்னும் ஏதாவது கேட்டால், ‘பார்த்தாயா, பெரியவர்கள் சொல்வதை நம்பமாட்டேன் என்கிறாய்; நீ நாத்திகன்’ என்பார்கள். அவ்வளவுதான்—அதாவது என்ன சொல்லியிருக்கிறதோ அதை அப்படியே—கண்ணைமூடிக் கொண்டு நம்பி அதன்படி நடப்பவன் ஆத்திகன்.

அந்தக் காரியங்களை அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துக் காரண காரியங்களைத் தெரிந்து நடப்பவன் நாத்திகன்.

உதாரணமாக, ஆத்திகர் என்பவர்களில் ஒருவர் செத்து விட்டால் பந்தோபஸ்தாகப் புதைக்கிறார்கள். ‘மறுபடியும் உயிர்பெறும் நாள் வரும்; அதுவரையில் பந்தோபஸ்தாக இருக்கவேண்டும்’ என்கிறான். இது என்ன நம்பிக்கை? அதுபோல சாய்பு பத்திரமாகப் புதைக்கிறான். ‘ஜட்ஜ்மெண்ட் நாள்வரும்; அப்போது ஆண்டவன் அவர்களை எழுப்பித் தண்டனை தருவான்; அதனால் புதைக்கவேண்டும்—எரிக்கக் கூடாது’ என்கிறான்.

நம்மிடம், ‘அவர் உடல்தான் அழிந்தது; அவர் நேரே மோட்சத்திற்குப் போயிருக்கிறார். அங்கே அவர் சவுக்கியமாக நல்ல சாப்பாடு சாப்பிட்டு ஆனந்தமாக இருக்க எதை எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும். நம்மைப் பெற்று வளர்த்ததற்கு இதைக்கூடச் செய்யவேண்டாமா?’ இப்படி இன்னும் சிலர் கூறுவர்.

‘அவர் எங்கும் போய்விடவில்லை; இன்னொரு உடலில் புகுந்து உடனே எங்காவது பிறந்திருப்பார்’ என்பர் சிலர்.

இன்னும், ‘அவர் அனாதையாகத் தொங்கிக் கொண்டிருக்கிறார்; குறைபாடுகளை நீக்கி, மோட்சத்திற்கு அனுப்பவேண்டும்’ என்று கூறிச் சிலர் வருஷா வருஷம் துணி, அரிசி, செருப்பு கொடுக்கிறார்கள்—பார்ப்பனர் சாப்பிட்டுச் சந்தோஷமாயிருக்க!

நீங்கள் சிந்திக்கவேண்டும். கொடுக்கும்போது பார்ப்பானுக்குக் கொடுப்பதாகவே கருதவில்லை; அவனிடம் கொடுத்தால் அங்குபோய்ச் சேரும் என்று கருதிக் கொடுக்கிறார்கள். தபால் ஆபீஸ் மாதிரி பார்ப்பான்! இவனிடம் கொடுத்தால் அங்கு போய்ச் சேர்ந்துவிடும்! ‘ஏனப்பா, இதற்கெல்லாம் ஏதாவது ருஜு உண்டா? பெற்றுக்கொண்டதாக ரசீது வந்ததா? அட! கனவிலாவது வந்து பெற்றுக்கொண்டேன் என்பதாகச் சொன்னதுண்டா?’ என்றால், ‘நீ என்னப்பா, புராணத்தில் சொல்லியிருக்கிறது; அப்புறம் என்ன?’ என்பார். புராணம் யார் சொன்னது?—‘பார்ப்பான் சொன்னான்; ரிஷிகள் சொன்னார்கள்’ என்பார். யார் அந்த ரிஷிகள்? ‘நீ என்னப்பா, தெரியாததுபோல் கேட்கிறாய்? அவர்கள் தெய்வீக சக்தியுடையவர்கள்; அதெல்லாம் என்ன இலேசு என்று நினைத்தாயா! பெரிய புராணத்தில் இருக்கிறது; காசி புராணத்தில் இருக்கிறது; காசி புராணத்தில், ஒரு சொட்டுத் தண்ணீர் மேலே பட்டுவிட்டால் எப்படிப்பட்ட பாவமும் நிவர்த்தியாகி மோட்சத்திற்குப் போகலாமென்றிருக்கிறதே!’ என்பான். ‘என்னப்பா இதெல்லாம் நிஜமாக இருக்குமா?’ என்றால், ‘நீ என்ன இப்படிக் கேட்கிறாய்? காசி புராணம் நாரதர்



சொல்லி நந்தி எழுதியது—தெரு ... ா? என்பான். ‘நீ பார்த்தாயா?’ என்றால், ‘நம் முதுகை, நாம் பார்க்க முடிகிறதா ... னால் முதுகு இல்லையென்றா அர்த்தம்!’ என்பான்.

‘இவற்றையெல்லாம் அறி ... கொண்டு ஆராய்ந்து பார்க்கவேண்டாமா?’ என்றால், ‘காசி புராணத்தில், இதை அறி ... கொண்டு ஆராய்ந்தால் காராம்-பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாகவேண்டும் என்று போட்டிருக்கிறதே’ என்பான். இப்படி, பகுத்தறிவைக் கொண்டு ஆராயப் பயப்படுகிறவன் எல்லாம் ஆத்திகன். ஆராய்வது பாவம் என்று சொல்லிவிட்டதால் பெரும்பாலான மக்கள் நம்பி, அந்த நம்பிக்கையில் வாழ்வதே வாழ்வாகி விட்டது. அவைகள் ‘ஆர்க்யூமெண்டிற்கு’—விவாதத்திற்கு—அறிவு ஆராய்ச்சிக்கு ஒத்துக் கொள்ள முடியாதவை; வெறும் நம்பிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டவை; அதுதான் ஆத்திகம்.

அதுபோல, இன்னொரு கூட்டம் தங்கள் சொந்த அறிவு ஆராய்ச்சிமேல் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் இந்த மாதிரிக் காரியங்களில் தேவையில்லாத—தங்கள் அறிவுக்கு அவசியமென்று தோன்றாத சடங்குகளைச் செய்யமாட்டார்கள். நான்கும் நான்கும் எட்டு என்று புரிகிறபோது, நான்கும் நான்கும் ஒன்பது என்று புராணத்தில் எழுதியிருப்பதாலேயே நம்பி, நாமும் ஒன்பது என்று சொல்லவேண்டுமா என்று கேட்பவர்கள். அறிவைக் கொண்டு எதையும் செய்பவர்கள்; அறிவுதான் அவர்களுக்கு ஆதாரம்; அவர்களே நாத்திகர்கள்.

ஒரு பிரிவு—பெரியவர்கள் சொன்னார்கள், புராணம் சொல்லுகிறது என்ற நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட ஆத்திகம்; மற்றொரு பிரிவு—தனது சொந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட நாத்திகம்.

ஆத்திகர்கள் ஆராய்ச்சி செய்வதே பாபம் என்று சொல்லுபவர்கள். ஆராய்ச்சி செய்தால் உலகமே மூழ்கிப் போய்விடும் என்று, நம்பிக்கைக்கு ஆதாரமான தங்கள் கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். நம் நாட்டில் மாத்திரமல்ல, உலகெங்கும் அப்படி வலியுறுத்தப்பட்டு வருகிறது. உலகெங்கும் நம்பிக்கை போதிக்கப்பட்டு ஆராய்ச்சிக்காரர்கள் வலுப்பதற்கில்லாமல் பார்த்துக் கொள்ளுகிறார்கள். அதனால் ஒரு அறிவு ஆராய்ச்சிக்காரனைப் பார்த்தால் மட்டம்தட்ட நினைக்கிறார்கள். ‘நான்கும் நான்கும் ஒன்பது என்று சொல்லுவதை—இவன் ஆராய்ச்சியால் மறுத்து, நான்கும் நான்கும் எட்டு என்பது—தப்பு. அப்படி ஆராய்ச்சி செய்வது கடவுளுக்கு விரோதம்; சாஸ்திர விரோதம்’ என்று சொல்லி அவனை மதிப்பதில்லை. ஒருவன் நீட்டாக நாமம் போட்டிருக்கிறான்; கொட்டை கட்டி இருக்கிறான். ‘ஆகா, ஆத்திகன்! கவுரவிக்கத் தகுந்தவன்’ என்கிறார்கள். ‘இவன் கருப்புச் சட்டைக்காரனா?—நாத்திகன்!’ என்று வெறுக்கிறார்கள்.

‘இவன் இந்து மகா சபைக்காரனா ......... ஆகா......... ஆத்திகனாயிற்றே! யார் இரத்தினசாமி முதலியாரா? ஆத்திக சிகாமணியாயிற்றே! எழும்போதும் சிவசிவா; உட்காரும்போதும் சிவசிவா--என்பாரே!’ என்பர். அவன் ‘சாதக’த்தைப் பார்த்தால் 7, 8 கொலைகள் செய்திருப்பான். இருந்தாலும் ஆத்திகன்; அதனால் மதிக்கத்தான் வேண்டும்.

ஆராய்ச்சிக்காரர்களை மட்டம்தட்ட வேண்டுமென்பதில் பலருக்குச் சொந்தத்தில் கவலை (Personal Interest) இருக்கிறது. பார்ப்பான் மேல்சாதிக்காரன்; முதல் வெற்றிலை பாக்கு மரியாதை அவனுக்குத்தான். அவனைப் பார்த்து, ‘நீ எதனால் உயர்ந்தவன்; உன் உடம்பில் ஓடுவது இரத்தம்—எங்கள் உடம்பில் ஓடுவது சீழா? நீ என்ன, மூத்திரம் பெய்தால் பன்னீர் வாசனையா வீசுகிறது?’ என்று கேட்டால், உடனே—அவன், ‘அட, நாத்திகப் பயலே!’ என்பான். ஏன்? அந்த ஏற்பாடு ஒழிந்தால் தனது இலாபம், மேல் சாதிக் கவுரவம் போய்விடும். அதனால், அந்த அறிவு ஆராய்ச்சிக்கு இடம் தரக்கூடாது என்கின்றான்.

படிப்பகம்

www.padippakam.com



அதுபோல, ஒரு பணக்காரன் கள்ள மார்க்கெட்டி... லட்சம் இலட்சமாகச் சாம்பாதித்திருப்பான்; கேட்டால் என்ன சொல்வான்—'எல்லா... கவான் கொடுத்தார்' என்பான். 'எதற்காக உன்னிடம் மாத்திரம் கொடுக்கிறார்?' ...ல், 'போன ஜென்மத்தில் செய்த புண்ணியம்!' என்பான். இப்படிச் சொல்ல வாய்...ந்தால்தான்—சொல்வதை நம்பும் மக்கள் இருந்தால்தான்—வெளியில் வரும்போது வெறுப்பு இருக்காது. அறிவு ஆராய்ச்சிக்காரர்கள் அதிகமாய் விட்டால்—'இதோ பார் மோசடிக்காரன்!' என்று கூறக்கூடிய நிலைமை வந்துவிடும். அதற்காக அறிவு ஆராய்ச்சி பெருகாமல் பார்த்துக்கொள்வதில் அவர்களுக்குக் கவலையிருக்கிறது.

இன்னொன்று நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்; 'ஆஸ்திகம்', 'நாஸ்திகம்' என்பவை தமிழ்ச் சொற்கள் அல்ல. தமிழில் அந்தப் பொருளுடைய சொல்லும் கிடையாது. அந்த இரு சொற்களும் ஆரிய மொழி, பார்ப்பன மொழிச் சொற்கள். அதில்—அதாவது வடமொழியில், 'ஆஸ்தி' என்றால்—'உடையது' என்று பொருள். நாம், 'அவன் ஆஸ்திக்காரன்' என்பதில்லையா?'—அதாவது பொருளுடையவன் என்பது. அதுபோல, 'நாஸ்தி' என்றால் 'இல்லாமை'—'அவன் நாஸ்தியாகப் போய்விட்டான்' என்றால் என்ன? ஒன்றும் இல்லாதவனாகிவிட்டான் என்று பொருள். இப்படி 'உடையது', 'இல்லாதது' என்ற பொருளை உணர்த்த வடமொழியில் ஏற்பட்ட சொற்கள்தாம்—'ஆஸ்திகம்', 'நாஸ்திகம்' என்பவை. இந்தச் சொற்களை எப்படிக் கடவுளுக்குச் சம்பந்தப்படுத்தினார்களோ தெரியவில்லை.

புராண இதிகாசங்களில் இராமாயணத்தை எடுத்துக்கொண்டால், இராமன் வாயினாலேயே வரும்படியாக, ஒரு ஆளைப்பற்றிக் குறிப்பிடும்போது—அதாவது பவுத்தனைப் பற்றியும் இன்னும் இரண்டொருவரைப்பற்றியும் குறிப்பிடும்போது, 'பவுத்தனா? சார்வாகனா? அவன் நாஸ்திகனாயிற்றே!' என்று சொல்லுவதாகக் காட்டியுள்ளார்கள். இன்னும் பரதனிடம் நாட்டைப்பற்றிப் பேசும்போது, 'பவுத்தர்களை நாட்டில் வைத்திருக்கக் கூடாது' என்று கூறுவதுபோல் சொல்லும்போது, 'நாஸ்திகன்' என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. பெரியோர்கள் சொன்னதை—புராண இதிகாசங்களை அறிவைக்கொண்டு தர்க்கம் செய்கிறவன் நாஸ்திகன். அது தவிர, 'கடவுள் உண்டு'; 'இல்லை' என்கின்ற பிரச்சினையே அங்கில்லை. இதேபோல், பாரதத்திலும் இரண்டொரு இடங்களில் இதே அர்த்தத்தில்தான் வருகிறது.

'ஏனப்பா, கும்பகோணத்திற்குப் போய், அந்த மூத்திரக் குட்டையில் மூழ்க வேண்டும்? கடவுள் அந்த இடத்தில் வந்துதானா தீர்த்தம் கொடுக்கவேண்டும்? அது எப்படிப் பொருத்தம்?' என்றால் உடனே, 'உனக்கு யார் பதில் சொல்லுவது? நீ நாஸ்திகன்' என்று—அதாவது 'கடவுள் இல்லை என்பவன்' என்கிற அர்த்தத்தில் சொல்லிவிடுகிறான். 'கடவுள் இல்லையென்பவன்' என்கிற ஆயுதத்தை உபயோகித்துத் தப்பித்துக்கொள்கிறான்.

எங்கேயும், 'கடவுள் உண்டா? இல்லையா?' என்கிற விவகாரத்திற்கு இடம் இருக்க முடியாது. இன்றுகூட யார் சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன்—'கடவுள் உண்டா? இல்லையா?' என்று சொல்ல, தமிழில் வார்த்தையே இல்லை. தமிழ் மூத்தமொழி; அதுகூட வேண்டாம்—நமக்கென்று இருக்கிற சொந்த மொழி. கடவுள் என்பது உலகத்துக்கே பொதுவான ஒன்று. அதைக் குறிப்பிட—'கடவுள் உண்டா? இல்லையா?' என்று சொல்ல ஒரு சொல் தமிழில் இருக்க வேண்டுமா, இல்லையா? தமிழில் இல்லை. 'ஆஸ்திகம்', 'நாஸ்திகம்', 'நிரீச்சுர வாதம்', 'உலகாயத வாதம்' என்று இப்படி வடமொழி வார்த்தைகள்தாம் உண்டே தவிர, தமிழில் வார்த்தைஇல்லை. இதைப் பிடித்துக்கொண்டே போனால் தமிழனுக்கே கடவுள் இருந்ததா, இல்லையா என்பதே சந்தேகம்தான்.



'கடவுள் என்பவர் எங்கும் உள்ளவர்; வல்லவர்; எல்லா சக்தியும் படைத்தவர்; எதையும் அசைப்பவர்; வாயை அசைப்பவர் கூட அவர்தான்' என்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட கடவுளை ஒருவன் இல்லைஎன்கிறான் என்றால் அந்த வார்த்தையே பொருத்தமாக இல்லையே!

உள்ளே இந்த அறையில் 200 'கேண்டில் பவர்' உள்ள விளக்கு இருக்கிறது; உள்ளே போய்ப் பார்த்தால் கண்ணுக்குத் தெரியவில்லை என்றால் என்ன அர்த்தம்? இந்தப் பெட்டி நிறைய சாமான் இருக்கிறது; கையை விட்டுப் பார்த்தால் கைக்கு ஒன்றும் சிக்கவில்லை என்றால் அர்த்தம் என்ன? 'உள்ளே 200 கேண்டில் பவர் விளக்கு இருக்கிறது' என்பது பொய்யாக இருக்க வேண்டும்; 'பெட்டியில் நிறைய சாமான் இருக்கிறது' என்பதும் பொய்யாக இருக்க வேண்டும்; அல்லது 'கைக்குச் சிக்கவில்லை' என்பது பொய்யாக இருக்கவேண்டும்.

கடவுளை, 'எல்லாம் வல்லவர், எல்லா சக்தியும் படைத்தவர், அவர்தான் எல்லாவற்றையும் அசைக்கிறார்' என்று சொல்லிவிட்டு—'கடவுள் இல்லை என்கிறான்' என்றால் என்ன அர்த்தம்? புத்தியுள்ளவனாக இருந்தால், 'அட கடவுளே! என் மனத்தில், என் கருத்தில் கடவுள் உண்டு என்று தோன்றும்படி செய்கிறாய்—அவன் கருத்தில் கடவுள் இல்லை என்று கருதும்படி செய்கிறாயே; என்னே உன் திருவிளையாடல்!' என்று கடவுளைப் பார்த்தல்லவோ கேட்க வேண்டும்? அதை விட்டுவிட்டு மனிதன்மேல் கோபித்துக் கொண்டால் என்ன நியாயம்?

சூரியனை, பகல் 12 மணிக்கு நின்றுகொண்டு, ஒருவன் பார்த்து 'ஆகா எவ்வளவு பிரகாசம்; கண்ணைக் கூசுகிறதே'! என்கிறான். பக்கத்தில் நிற்பவன், 'சூரியனா? எங்கே இருக்கிறது? காணோமே!' என்று கேட்க முடியுமா? கேட்டால் புத்தியில்லை; பைத்தியம் என்றுதானே சொல்வார்கள். ஏன்? இருக்கிறது என்று சொல்கிற பண்டம்—அதாவது சூரியன்—அவ்வளவு தெளிவாக இருக்கிறது. அதைவிட அதிகச் சக்திவாய்ந்த கடவுள் கண்ணுக்குப் படாவிடினும், கருத்துக்காவது படவேண்டாமா? கடவுள் இருக்கிறது என்பதுகூட ஒரு எல்லைக்குத்தான்! இன்னின்னாருக்குத்தான் கடவுள் உண்டு என்ற எல்லை இருக்கிறது. ஞானிக்குக் கடவுள் இல்லை; பகுத்தறிவுவாதிக்குக் கடவுள் இல்லை.

சங்கராச்சாரியைக் கேளுங்கள்; அவர் லோக குரு; அவருக்குக் கடவுள் இல்லை. அவரைப் பார்த்து, 'கடவுள் உண்டா?' என்றால், 'கடவுள் எப்படியிருக்கும்?; ரூபாய்க்கு எத்தனைபடி?' என்பார். ஏன்? அவர் உயர்ந்தவர், ஞானியாகிப் போனவர்;—'நான்தான் கடவுள்' என்பார். அவரது தத்துவப்படி அவருக்குக் கடவுள் கிடையாது—அவரேதான் கடவுள். அவ்வளவு உயர்நிலைக்குப் போனவர்களுக்குக் கடவுள் கிடையாது. இது சங்கராச்சாரியின் தத்துவம்; அவர்கள் தத்துவப்படி கடவுள் இருக்கிறதா என்றால்—இல்லை.

ஆளுக்குத் தகுந்தமாதிரி கடவுள்! உனக்குக் காளி அது, இது கடவுள்! ஏன்? உன் பக்குவத்திற்குத் தகுந்தாற்போல்—புத்திக்குத் தகுந்தாற்போல். இன்னும் கொஞ்சம் சாதாரண புத்தியுள்ளவனுக்கு உருவம் உள்ள கடவுள்; நீ உருவத்தையே கும்பிடு! இன்னும் பெரிய புத்திக்காரனுக்கு அவனேதான் கடவுள்! நிலைமைக்குத் தகுந்தாற்போல் இப்படிச் சில தந்திரங்களைச் சொல்லிக் கொள்ளை அடிக்கிறான்; அவ்வளவுதான்!

நினைவுநாள் காரியம் ஒரு பணக்காரன் வீட்டில் நடப்பதானால் எவ்வளவு கூத்தடிப்பார்கள்? 'இன்று எட்டாம் நாள்; இன்று சோடசம், வெள்ளி இலை போட்டாயா? வெள்ளிக் குடம் வைத்தாயா? பார்ப்பானுக்குத் தானம் எத்தனை?' என்று கூறி என்னென்ன காரியம் நடக்கும்!

இலட்சாதிபதிகள் வீட்டில் ஒரு காரியம் என்றால் எவ்வளவு நடக்கும்? பத்து இலட்சம்! இருபது இலட்சம்! எதற்காக என்று சிந்திப்பதே இல்லை. பணம் இருக்கிறது—



படிப்பகம்

www.padippakam.com



ஜம்பமாகச் செலவழிக்கிறார்கள். இவர்கள் செலவழித்து நாசமாகப் போகட்டும்; இவர்களைப் பார்த்து எத்தனையோ பேர் கெட்டுப்போகிறார்களே!

மேல் நாடுகளில் பகுத்தறிவாளர் சங்கம்; சிந்தனையாளர் சங்கம்; உண்மை நாடுவோர் சங்கம் என்பன போன்ற சங்கங்களும் உண்டு. அவர்கள் வேதம், சாஸ்திரம், அவதாரம் இவற்றையெல்லாம் நம்புவதில்லை.

தமிழ்நாட்டிலும் சரித்திரப்படி ஆரியர்கள் வருவதற்குமுன் தமிழர்கள் பகுத்தறிவு வாதிகளாகவே இருந்திருக்கிறார்கள். பார்ப்பான் வருவதற்குமுன், தமிழன் என்பவனுக்கு ஒரு கடவுளும் இருந்ததில்லை. ஆரியம் வருமுன் அந்த எண்ணமும் கருத்தும் கிடையாது. அன்று மாத்திரமல்ல; இன்றும் தமிழனைப் பொறுத்தவரையில் ஏதாவதொரு கடவுள் இருக்கிறதென்று சொல்லச் சொல்லுங்கள், பார்க்கலாம்! கோவில், குளம், பொம்மையைக் காட்டினால் போதாது. கடவுள் என்கிற தத்துவப்படி, தமிழனுக்கு அன்றும் இன்றும் எது கடவுள்? பார்ப்பதற்கு மாய்கையில் இருப்பதாகத் தோன்றுமே தவிர, உண்மையில் கடவுள் கிடையாது.

மறைமலையடிகளாருக்கும், எனக்கும் ஒரு போராட்டம். இவராவது வாதாடி, 'தமிழனுக்கு ஒரு கடவுள் இருக்கிறார்; அது இன்னதுதான்' என்று சொன்னவர் அல்லர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார், 'நீங்கள் சொல்லுவது சரி; ஆனால், என்றுமே இருந்ததில்லை என்று சொல்லாதீர்கள்; தமிழர்கள் இயற்கையைக் கடவுள் என்றனர். இயற்கை என்றால் அழகு. அழகு என்றால் முருகு' என்றார்.

சரி; அந்த முருகன் எங்கே போய்விட்டான்? இன்றுள்ள முருகன் அந்த அழகு முருகன் அல்லன்; கொழுக்கட்டை—கல் முருகன். இந்த முருகன் தமிழனின் முருகனல்லன்! சிவன் மகன் என்ற முறையில்—ஆரியப் புராணப்படி கற்பனை செய்யப் பட்ட ஒரு உருவம்.

இன்னொருவர், 'சிவன் தமிழர் கடவுள்' என்கிறார். 'அது அன்பின் உருவம்; அன்பே சிவம்; அன்பே உருவானவன் சிவன்' என்றெல்லாம் சொல்லுகிறார்கள்; இன்று இருக்கும் சிவன் அன்பு சிவனா? அன்பே உருவான சிவன் கையில் ஏன் அரிவாள், கொடு வாள், வேலாயுதம், சூலாயுதம் எல்லாம்? கேட்டால், காலப்போக்கில் கெட்டுப்போய்விட்டது; ஆரியர் வந்ததால் தமதாக்கிக்கொண்டார்கள் என்பார்கள். பின், நீ ஏன் கும்பிடு போடு கிறாய்? அன்றும் இன்றும் கடவுள் என்பது ஆரிய ஆதிக்கத்தினால் ஏற்பட்ட கற்பனை. இதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்?

முதல் முதல் சரித்திரச் சான்றுப்படி புத்தர்கள்தான் அறிவைக்கொண்டு ஆராய்ந்து சொன்னவர்; அறிவைக்கொண்டு பார்த்ததனாலேயே பெரிய நாத்திகரானவர். புத்தர் அறிவு வாதி; ஆராய்ச்சிவாதி. அதனால்தான் அவர் கொள்கைகளையும் முயற்சிகளையும் பார்ப் பனர்கள் அழித்துவிட்டார்கள்.

புத்தர் மக்கள் உள்ளத்தில் விதைத்த விதை முளைத்து வளர்ந்து கொடி படர ஆரம் பித்தது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் அதை எதிர்த்துக் கொடுமை செய்து ஒழித்து விட்டார்கள். உலகில் அறிவுவளர்ச்சி, வாழ்க்கை முயற்சிக்கு ஏற்ப இப்போது புத்தருடைய கொள்கையே செலாவணியாகிறது. இப்போது மக்களிடம் பொறுமையிருப்பதால் சகித்துக் கொள்ள முடிகிறது.

இதுதான் இன்று ஏற்பட்டுள்ள நிலை. முன்போல இன்று நாத்திகம் அவ்வளவு கொடுமையானதாகக் கருதப்படவில்லை. அதனால்தான், இன்றைய தினம் மற்றவர்கள் செய்கிற முறைப்படி கருமாதிச் சடங்குகள் செய்யாமல் நினைவு நாள் காரியத்தை— மறைந்தவருடைய நடத்தை, பண்பைப்பற்றிச் சொல்லி நடத்தும் நினைவு விழாவாக, ஏதோ அவர்கள் இஷ்டப்படி நாம் நடக்கிறதென்கிற முறையில் நடத்த முடிந்தது.



எனது தாயார் உடம்பு சவுக்கியமில்லாமல் படுக்கையில் இருந்தார்கள். அப்போது வடஆர்க்காடு பகுதியில்தான் 4, 5 கூட்டங்கள் ஏற்பாடு செய்துகொண்டு வரவேண்டி யிருந்தது. தாயாரிடம் போய்வர அனுமதி கேட்டேன். 'மகராசனாகப் போய்விட்டு வா' என்றார்கள். எனது அண்ணார் நாடி பிடித்துப் பார்த்துவிட்டு இன்னும் ஒரு வாரத்திற்குப் பயமில்லை என்றார். ஜோலார்பேட்டை வந்து படுத்தேன். உடனே ஊரில் இருந்து ஆள் வந்து எனது தாயார் இறந்துபோய்விட்டதாகச் சொன்னான்; ஊருக்குப் போய், காரியத் தைப் பார்த்துவிட்டு அன்று சாயந்திரமே வந்துவிட்டேன்.

அதுபோலத்தான் நாகம்மையார் இறந்தபோதும்; அவருக்குக் காய்ச்சலாக ஆஸ்பத் திரியில் தடபுடலாக இருந்தது; வியாழக்கிழமை நாளில் வெளியூருக்குப் புறப்பட்டுப் போனேன்; வெள்ளிக்கிழமை இறந்துவிட்டதாக ஆள் வந்தது. வெள்ளிக்கிழமை இரவு 4 மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். காரியத்தை முடித்துவிட்டு சனிக்கிழமை இரவு திருச்சியில் ஒரு திருமணம் நடத்திவைக்கப் போய்விட்டேன்.

அது கிறிஸ்தவர்கள் திருமணம். பாதிரிமார்கள் ரகளை செய்தார்கள். முதலில் குறிப்பிட்ட இடத்தைக் கொடுக்கமாட்டேன் என்றார்கள். வேறு இடத்தில் திருமணம் நடந்தது. முடித்துவிட்டு இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, போலீசார் வந்து என்னைக் கைது செய்திருப்பதாகச் சொன்னார்கள். மணமக்களையும் கைது செய்தனர். மறுநாள் பேப்பரில் நான் கைதான செய்தியும் நாகம்மையார் இறந்த செய்தியும் ஒன்றாக வெளிவந்தது. பிறகு போலீஸில் 'ஸ்டேட்மெண்ட்' கொடுத்தோம். திருமணம் செய்து கொண்டவர்கள்—'நாங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பே கிறிஸ்துவ மதத்தைவிட்டு வெளியேறிவிட்டோம்' என்று சொன்னார்கள். போலீஸ்காரர்கள் பாதிரியுடன் 'டெலி போனில்' பேசினார்கள்; பிறகு எங்களை விட்டுவிட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

1910-ல் எங்கள் தகப்பனார் உடம்பு சவுக்கியமில்லாமல் இருந்தார். அவர் உயிருட னிருக்கும்போதே நானும் என் அண்ணனும் அவர் உடலைப் புதைப்பதா எரிப்பதா என்ற விவாதத்தில் இறங்கினோம். நான் ஊருக்குள் புதைத்து சமாதி கட்ட கலெக்டருக்கு மனு கொடுத்து, முனிசிபாலிடியில் பர்மிஷன் வாங்கி வைத்திருந்தேன். என் அண்ணன், 'புதைப்பது வைணவ சம்பிரதாயத்திற்கு விரோதம்; ஆதலால் எரிக்கத்தான் வேண்டும்' என்றார். நான் வைணவர்களிலேயே பெரிய ஆட்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஆதாரம் காட்டி வாதாடினேன். மத்தியஸ்தர்கள் எங்கள் அய்யாவையே கேட்டுவிடலாம் என்று கூறி அவரையே கேட்டார்கள். பிறகு ஒரு சாமியார் வந்தார். 'சன்னியாசம் வாங்கிக் கொண்டால் புதைக்கலாம்' என்றார். சன்னியாசம் வாங்குவதென்றால் கோவிலில் கொண்டு போய்க் காஷாய வேட்டிகளை வைத்து ஏதேதோ செய்து சாமியே காஷாயம் கொடுப்ப தாகச் சம்பிரதாயம். அதற்கு 300 ரூபாய் செலவு ஆகும் என்றார்கள். 300 ரூபாய் கொடுத் தோம். காஷாயம் வாங்கிக் காவி வேட்டியைக் கட்டிக்கொண்டு எங்கள் தகப்பனார் இரண்டு நாள் படுத்திருந்தார்; இறந்தார்; புதைத்தோம். எனது அண்ணியார் செத்தபோதும் மறுநாள் யாருக்கும் வேலையில்லை.

தத்துவ விசாரணையோடு இந்தக் காரியங்களைச் சிந்தித்துப் பார்த்தால் விளங்கும். இன்று மாத்திரம் சொல்லவில்லை; நான் காங்கிரசில் இருந்தபோதே 1929-ல் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் 'இறந்து போனவர்களுக்காகத் திதி, திவசம் கொடுப்பதில்லை' என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது.

[திருப்பத்தூரில், 29-12-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-1-1957]

படிப்பகம்

www.padippakam.com



# 16. நாத்திகம்

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

என்னை நாத்திகன் என்று சொல்கிறவர்கள் 'நாத்திகம்' என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டு சொல்லுகின்றார்களோ அந்த அர்த்தத்தில் நான் நாத்திகன் என்று வலியுறுத்திச் சொல்கிறேன்.

நாத்திகத்திற்குப் பயந்தவனால் ஒன்றும் செய்யமுடியாது. அதிலும் சமதர்மக் கொள்கையைப் பரப்ப வேண்டுமானால் நாத்திகனால்தான் முடியும். அதனால் ரஷ்யாவையும் நாத்திக ஆட்சி என்கிறார்கள். புத்தரை அப்படிச் சொல்லுவதற்குக் காரணம் அவர் சமதர்மக் கொள்கையைப் பரப்ப முயன்றதால்தான். நாத்திகம் என்பதற்கு அர்த்தம் சமதர்மக் கொள்கை மாத்திரமல்ல. சீர்திருத்தம்—அதாவது, பழைய கொள்கைகளை மாற்ற வேண்டுமானால் அந்த மாற்றத்தையும், ஏன்–எவ்வித சீர்திருத்தத்தையுமே நாத்திகம் என்று யதாப் பிரியர்கள் சொல்லித் திரிவார்கள். எங்கு எங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ—அங்கெல்லாம் இருந்துதான் நாத்திகம் முளைக்கிறது.

கிறிஸ்துவையும், நபியையும்கூட நாஸ்திகர்கள் என்று யூதர்கள் சொன்னதற்கு—அவர்களது சமதர்மமும் சீர்திருத்தமுந்தான் காரணமாகும். துருக்கியில் பாட்சாவும், ஆப்கானிஸ்தானில் அமீரும் நாஸ்திகர்கள் என்று அழைக்கப்பட்டதற்கும் அவர்களது சீர்திருத்தந்தான் காரணம். ஏனென்றால், இப்போது வழக்கத்தில் இருக்கும் கொள்கைகளும் பழக்கங்களும் எல்லாம் கடவுள் செய்ததென்றும், கடவுள் கட்டளை என்றும், கடவுளால் சொல்லப்பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகியவைகளின் கட்டளைகள் என்றுமேதான் யதாப் பிரியர்கள் சொல்லுகின்றார்கள்.

ஆகவே, நாம் இப்போது எதை எதை மாற்றவேண்டுமென்கிறோமோ அவைகள் எல்லாம் கடவுள் செய்ததாகவும், அல்லது கடவுள் தனது அவதாரங்களையோ தூதுவர்களையோ செய்யச் சொன்னதாகவுமே சொல்லப்படுவதால்—அவைகளைத் திருத்தவோ அழிக்கவோ புறப்படுவது கடவுள் கட்டளையை மீறின—அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததேயாகும்.

உதாரணமாக, மக்களில் நாலு சாதிகள் கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டன என்று சொல்லப்படுகையில், மேற்படி சாதி ஒழிய வேண்டுமென்றால் அவன் கண்டிப்பாகக் கடவுளை மறுத்தோ, அலட்சியம் செய்தோதான் ஆகவேண்டும். எல்லா மதங்களும் மதக் கொள்கைகளும் கடவுளாலோ, அவதாரங்களாலோ, கடவுள் தன்மையாலோ ஏற்பட்டவை என்று சொல்லப்படுகையில், அம் மத வித்தியாசங்கள் ஒழியவேண்டும் என்றும், மதக் கொள்கைகள் மாற்றப்பட வேண்டுமென்றும் சொல்லும்போது அப்படிச் சொல்பவன் அந்தக் கடவுள்களை, அலட்சியம் செய்தவனேயாகின்றான். அதனால்தான், கிறிஸ்தவர் அல்லாதார் 'அஞ்ஞானி' என்றும், முகமதியர் அல்லாதவர் 'காபிர்' என்றும், இந்து அல்லாதார் 'மிலேச்சர்' என்றும் சொல்லப்படுகின்றனர்.

அன்றியும், கேவலம்–புளுகும், ஆபாசமும் நிறைந்த புராணங்களை மறுப்பதே இந்துமதக் கொள்கைப்படி 'நாத்திகம்' என்று சொல்லப்படும்போது, சாதியையும் கர்மத்தையும் மறுப்பதை ஏன் நாத்திகம் என்று சொல்லமாட்டார்கள்?

சாதி உயர்வு–தாழ்வு, செல்வம்–தரித்திரம், எசமான்–அடிமை ஆகியவைகளுக்குக் கடவுளும் கர்மமும்தான் காரணம் என்று சொல்லுவதானால், பிறகு, மக்களுக்கு விடுதலையும் முன்னேற்றமும் எங்கே இருக்கின்றன? கடவுளையும் கர்மத்தையும் ஒழித்தாலொழிய அதற்காக மனிதன் எப்படிப் பாடுபடமுடியும்? மேடும், பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போடுவது கடவுள் செயலுக்கு விரோதமான காரியமேயாகும். மனிதனுக்கு முகத்தில்–தலையில் மயிர் முளைப்பது கடவுள்செயலானால்



சவரம் செய்வது கடவுள் செயலுக்கு எதிராகவே ஆகும்—அதாவது, ஓரளவுக்கு நாத்திகமே யாகும். அதிலும், செய்யச் செய்ய மறுபடியும் மயிர் முளைப்பதைப் பார்த்துச் சவரம் செய்வது வடிகட்டின நாத்திகமேயாகும். பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதும் நாத்திகமேயாகும். ஏனெனில், கடவுள் பார்த்து ஒருவனை அவனது 'கர்மத்'திற்காகப் பட்டினி போட்டிருக்கும்போது நாம் அவனுக்குச் சோறுபோடுவது கடவுளுக்கு விரோதமான காரியமேயாகும். அதாவது, கடவுளை நம்பாத–கடவுள் செயலை நம்பாத செயலேயாகும்.

இப்படியே பார்த்துக்கொண்டுபோனால், உலகத்தில் ஆத்திகர் என்பதாக ஒருவரும் இருக்கமுடியாது. ஆதலால், நம்மைப் பொறுத்தவரை நாம் பல மாறுதல் ஏற்பட விரும்புவதால் அவை கடைசியாய் நாத்திகமேயாகும். நாத்திகமும் சாத்திர விரோதமும், தர்மதிற்கு விரோதமும் செய்யாமல் யாரும், ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்ய முடியவே முடியாது.

[திருச்சியில், 1-9-1930-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 7-9-1930]

உலகத்திலேயே நாத்திகம் என்று சொல்லப்படும் வார்த்தையானது அனேகமாய் பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப்படக்கூடியதாக இருந்து வருகின்றது. காரணம் என்னவென்று பார்ப்போமானால், அவ்வார்த்தையில் 'கடவுள் என்பது இல்லை' என்கின்ற பொருள் அடங்கி இருப்பதாகக் கொள்வதேயாகும்.

மக்கள், கடவுள் இல்லை என்று சொல்வதைப்பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும் வெறுப்புக் கொள்ளவும் புரோகிதர்கள், பாதிரிகள், மவுல்விகள், பண்டிதர்கள் என்பவர்களால் கற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர, கடவுள் என்பதைப் பற்றிய விளக்கம் யாருக்கும் தெளிவாக்கப்படாமல் இருப்பதோடு, அது மனத்திற்கும் புத்திக்கும் எட்டாதது என்பதாகவும் அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தான் ஆகவேண்டும் என்றும் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டு விட்டது. இப்படி இருந்த போதிலும், என்றைய தினம் கடவுள் என்கின்ற வஸ்து உண்டு என்று கற்பிக்கப்பட்டதோ அன்று முதலே கடவுள் இல்லை என்கின்ற வாதமும் ஏற்பட்டு, வெகு காலமாகவே இவ் வாதப் பிரதிவாதம் நடந்து வருவதோடு, நாளது வரை முடிவுபெற முடியாமலே இருந்துவருகின்றது.

உதாரணமாக, கடவுள் இல்லை என்று சொல்லும்படியான பல மதங்களும் கூட, உதாரணமாக சூனிய மதம், நிரீஸ்வர மதம், உலகாயத மதம், நாத்திக மதம் என்பவை போன்ற பல உண்டு என்றாலும், கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்கின்ற கிளர்ச்சி வலுத்து, அதை அமுலுக்குக் கொண்டுவந்து, மற்றும் உலகமெங்கும் அக்கொள்கையைப் பரப்பப் பிரச்சாரமும் செய்ய ஏற்பாடுகள்–சாதாரணமாக, இந்த இருபதாவது நூற்றாண்டில் தான் தைரியமாகவும், பலமாகவும் செய்ய முடிகின்றது.

ஏனெனில், இதுவரை உலகத்தில் எந்த நாடும் பெரிதும் புரோகிதக் கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும் கடவுள் பிரச்சாரத்தின்பேரால் கவுரவமும் வயிற்றுப்பிழைப்பும் நடத்தி வந்தவர்களின் ஆதிக்கத்திலும் இருந்து வந்ததாலும், உலகத்திலுள்ள அரசாங்கங்களும் மதத்துடனும் கடவுளுடனும் பிணைக்கப்பட்டே இருந்ததாலும், கடவுளை மறுக்கும் அபிப்பிராயத்திற்கோ, கூட்டத்திற்கோ நாட்டில் ஆதரவு இல்லாமல் போனதோடு, அவர்கள் மீது தோஷமும் கற்பிக்கப்பட்டு, அந்த அபிப்பிராயம் வலுக்க முடியாமலும் பரவ முடியாமலும் போய்விட்டது. ஆனால், இந்த நூற்றாண்டில் கடவுள் மறுப்பு என்பது பாமர மக்களுக்குள் ஒருவித வெறுப்பும் அதிருப்தியும் தரக்கூடியதாயிருந்தாலும், மற்றும் கடவுள் பேரால் அல்லது கடவுள் சம்பந்தமான மோட்சம், சாஸ்திரம், கதை, புராணம், பிரச்சாரம் ஆகியவைகளின் பேரால் வாழ்க்கை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கு மிகுதியும் ஆத்திரத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் நடுவு நிலையுள்ள அறிஞர்களால் இவ் விஷயம் ஆராய்ச்சி செய்யப்படத் தொடங்கி ஆலோசிக்கப்பட்டு வருவதும், அவ்வித

படிப்பகம்

www.padippakam.com



அபிப்பிராயக்காரர்களைப் பெரிதும் அறிவாளிகள் என்றும், ஞானவான்கள் என்றும் சொல்லுவதும் மதிப்பதுமாய் இருந்து வருகின்றன. மேல்நாட்டு அறிவாளிகள் என்று சொல்லப்படுபவர்களுக்குள் இன்றும் அனேகர்கள் நாத்திகர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ரஷ்யா, சைனா முதலாகிய இடங்களின் முக்கிய பட்டணங்களில் கடவுளை நிலைப்படுத்தும் மதங்களை எதிர்க்கவும் நாத்திகத்தைப் பரப்பவும் என்றே பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் பட்டு, அவற்றிற்காகப் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகள் வெளியிடப் பட்டும் வருகின்றன.

குறிப்பாக, அமெரிக்காவில் நியூயார்க் என்கின்ற பட்டணத்தில் 'நாத்திகத்தை உலக மெங்கும் வியாபிக்கச் செய்வதற்கான சங்கம்' என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்து, அதன்மூலம் 3, 4 வருடங்களாக நல்ல வேலைகள் மும்முரமாகச் செய்யப் பட்டுவருகின்றன. அங்கிருந்து நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையின்படி, அச் சங்க மானது பிரச்சாரத்திற்காகவும், துண்டுப் பிரசுர வினியோகத்திற்காகவும் வருடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலாகவே செலவு செய்து வந்திருக்கின்றது. இப்போது இந்த வருடத்தில் 'கிறிஸ்துவ மதம் வெடிப்புக் கண்டுவிட்டது'—என்கின்ற பேராலும் 'மதம் என்றால் என்ன? கடவுள் என்றால் என்ன? கடவுள் இல்லாத முற்போக்கு' ஆகிய இவை போன்ற தலைப்புக்களிலும் பல இலட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியாக்கப்பட்டிருக்கின்றன. சங்க அங்கத்தினர்கள் வருடத்திற்கு வருடம் 100-க்கு 50 வீதம் உயர்ந்துகொண்டு வருவதுடன் பல இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வெளிநாடுகளிலும்கூட பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருவதாய்க் காணப்படுகின்றது. வேறு மொழிகள்மூலமும் சைனா முதலிய இடங்களுக்கு ஆட்களை அனுப்பி இதுபோன்ற பிரச்சாரமும் நடைபெறுவதுடன், ஒவ்வொரு கனவானும் ஒவ்வொரு வேலையை ஏற்றுக் கொண்டுள்ளதால் திருப்தி தரத்தக்க அளவு பிரச்சாரம் செய்யப்படுகிறது. இதன் தலைமைக் காரியாலயம் நியூயார்க்கில் 14-வது வீதி 307-E என்ற கட்டிடத்தில் நிறுவப் பட்டிருக்கிறது. இதில் சேரவிரும்பும் அங்கத்தினருக்கு வருட சந்தா ஒரு டாலர் அதாவது மூன்று ரூபாயாகும்.

இப்படியே லண்டனிலும் 'தாராள நினைப்புக்காரர்கள் சங்கம்,' 'அறிவாளிகளின் சங்கம்,' 'உண்மை நாடுவோர் சங்கம்' என்றும் பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அது போலவே பிரச்சாரமும் செய்யப்பட்டு வருகின்றது. இச் சங்கங்களின் வயது 40, 50-க்குமேல் ஆகியிருந்த போதிலும், அவைகள் இப்போதுதான் மிக்க பிரபலமாயும் செல்வாக்காகவும் நடைபெற்று வருகின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

இவற்றில் கலந்துள்ள நபர்களில் உலகத்திலேயே மிக்க அறிவாளிகள், இராஜ தந்திரிகள் என்று சொல்லப்பட்ட பெரியார்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, நாத்திகப் பிரச்சாரம் உலகில் சகஜமாகவும் செல்வாக்காகவும் நடைபெறுகின்றது.

இனி, அதனால் ஏற்படும் நன்மை என்ன, கெடுதி என்ன எனப் பார்ப்போம். சாதாரணமாக, மனிதன் நாத்திகனாயிருந்தால் ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்க மாட்டான் என்றும், திருட்டு, பொய், மோசம், ஒருவன் சொத்தை ஒருவன் அபகரித்தல், முறை தவறிக் கலத்தல், மக்களை இம்சித்தல் முதலாகிய காரியங்கள் செய்யப் பயப்பட மாட்டான் என்றும் சொல்லப்படுகிறது. இதைப்பற்றிக் கவனிக்குமுன், உண்மையான கருத்தில் இந்தக் கடவுள் நம்பிக்கை உள்ள மனிதன் எவனாவது உலகில் இருக்கிறானா என முதலில் யோசிப்போம்.

கடவுள் என்கின்ற பதத்திற்கு மக்களில் பெரும்பான்மையோர் கருதிக் கொண் டிருக்கும் கருத்து என்னவெனில்—சர்வ சக்தியும், அதாவது ஜீவராசிகள் புல், பூண்டு, தாவரங்கள் யாவும் தனது இச்சையால் உண்டாக்கப்பட்டு, தனது சக்தியால் இயங்கச்



செய்கின்றதானதும், எங்கும் வியாபித்திருப்பதும், சர்வ ஜீவராசிகளையும் இரட்சிக்கும் தன்மையுடையதானதும், எல்லாவற்றையும் சமமாய்ப் பார்ப்பதானதும்—சுருக்கமாய்ச் சொல்வதானால் அவனன்றி ஓர் அணுவும் அசையாததான சக்தியுடையதானதும் ஆன ஒரு கடவுள் உண்டு என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இது சரியா, தவறா என்று யோசிப்பதற்கு முன்னும், இப்படி மக்கள் எண்ணிக் கொண்டிருப்பதானது உலகத்திற்கு நன்மையா, தீமையா என்று முடிவு செய்வதற்கு முன்னும், இந்தப்படி உலகத்தில் எந்த மனிதனாவது உண்மையில் நம்பிக்கொண்டிருக் கின்றானா, அந்தப்படி நம்பி இருப்பதற்குத் தகுந்தபடி அவனது மனம், மெய், மொழி ஆகியவைகளால் ஏற்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்றனவா, அதாவது எந்த மனித னுடைய நடவடிக்கையில் இருந்தாவது மேற்கண்ட சக்தியும் குணமும் கொண்ட ஒரு வஸ்துவை நம்பி நடக்கின்ற மனிதனின் நடவடிக்கைகள் இவை என்று கருதும்படியாக இருக்கின்றனவா என்பதை யோசிப்போமானால், இதுவரை ஒரு மனிதனையாவது அம் மாதிரி நம்பிக்கையின் மீது நடக்கின்றான் என்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், அந்தப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒரு மனிதன்கூட தனது வாழ்க்கையில் எண்ணி இருக்க முடிவதில்லை என்றுந்தான் சொல்லவேண்டி இருக்கின்றது.

இப்படிச் சொல்வதானது, சாதாரண மக்களிடையே மாத்திரமல்லாமல், கடவுள் பிரச்சாரம் செய்பவர்களிலாவது, கடவுளைக் கண்டவர்களாகச் சொல்லப்பட்டவர்களிலாவது, கடவுளுக்குச் சமமாகக் கருதும் சமயாச்சாரிகள், மதத்தைக் காப்பாற்றும் ஸ்தாபனத் தலைவர்கள் முதலியவர்களுக்குள்ளாவது, நாத்திகத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கித் துயரப்பட்டுக் கண்ணீர் வடிக்கும் ஆத்திகப் பண்டிதர்கள், சாஸ்திரிகள், வைதீகர்கள் முதலாகியவர்களுக் குள்ளாவது இதுவரை ஒருவராவது இருந்ததாகவோ இருப்பதாகவோ சொல்லுவதற்கில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒருதனி மனிதனென்றும், தனக்காகத் 'தான்' செய்யவேண்டிய காரியம் பல உண்டு என்றும், அவற்றைத் தினமும் செய்வ தாகவும்—அவனவன் இஷ்டப் பட்டபடி செய்து கொண்டும், அதனதன் பலனை அடைந்து கொண்டும், அதுபோலவே மற்றவர்களையும் செய்யும்படி தூண்டிக்கொண்டும், மற்றவர்கள் செய்வதில் குணதோஷங் கற்பித்துச் சொல்லிக்கொண்டும், அதற்காக விருப்பு–வெறுப்புக் காட்டிக்கொண்டும், மகிழ்ச்சி–துக்கம் அடைந்து கொண்டுந்தான் இருக்கின்றானே ஒழிய—கடவுளின் சர்வ சக்தியைப் பற்றியோ, சர்வ வியாபகத்தைப் பற்றியோ, சர்வ தயாபரத் தைப்பற்றியோ, சர்வ சமத்துவத்தைப் பற்றியோ நம்பி இருப்பவன் ஒருவனும் இல்லை.

ஆகவே, இதிலிருந்து அப்படிப்பட்ட ஒரு வஸ்து இல்லை என்றும், இருப்பதாகவும் யாரும் நம்பி இருக்கவில்லை என்றும்தான் முடிவுகட்ட வேண்டியதோடல்லாமல், அப்படி ஒன்று இருப்பதாகக் கற்பித்து நம்பச் செய்வதனாலாகிலும் காரியத்தில், அதாவது கடவுள் நம்பிக்கையினால் ஏற்படக்கூடும் என்று கருதுகின்ற முன்சொன்ன காரியங்களாவது நடக்கின்றதா என்று பார்த்தால்—திருடாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளை வஞ்சிக்காதவன், முறைதவறிக் கலவி செய்யாதவன், பிறர்க்குத் துன்பம் தராதவன் முதலிய காரியங்கள் செய்யாதவன் ஒருவனைக்கூடக் காணமுடிவதில்லை. அன்றியும், திருட்டு, வஞ்சகம், பொய், முறைதவறிக் கலத்தல் முதலாகிய காரியங்கள் எவை என்று தீர்மானிப்பதே கஷ்டமான காரியமாயிருக்கின்றது என்றாலும், மக்கள் எதை, எதை மேற்கண்டமாதிரி குணங்கள் என்று கருதுகின்றார்களோ அதைச் செய்யாமலிருக்க இந்த எண்ணத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்குவதாலோ நிலை நிறுத்துவதாலோ முடி கின்றதா?

இது ஒருபுறமிருக்க, மேற்கண்ட—அதாவது கடவுள் என்பதற்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் உடையதான ஒரு கடவுள் என்பது இல்லை என்றும், அல்லது இருக்க முடியாது என்றும் கருதுகின்றவர்களிடத்திலாவது– அந்தப்படி கருதிக்கொண்டிருக்

படிப்பகம்

www.padippakam.com



# 2. பகுத்தறிவு

## 1. பகுத்தறிவு

பெரியோர்களே! தோழர்களே!

பகுத்தறிவு என்றால் என்ன? ஜீவப் பிராணிகளின் சிந்தனா சக்தியும் சிந்திப்பின் உணர்ச்சியுந்தான் அறிவு என்று சொல்லப்படுகிறது. அச் சிந்திக்கும் தன்மையின் கூர்மையைப் பகுத்தறிவு என்று சொல்லலாம்.

ஆனால், அப் பகுத்தறிவைப் பெரிதும் மனிதனுடைய சிந்திக்கும் தன்மைக்கும் சிந்திப்பின் கூர்மைக்குமே குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றது.

உலகில் உள்ள பல கோடி ஜீவராசிகளில் மனிதன் என்கின்ற ஜீவப் பிராணியும் ஒன்று என்பது மக்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயமாகும். மரம், புல், பூண்டு, செடி, கொடி ஆகியவைகளும் ஜீவ வர்க்கத்தில் சேர்ந்தவை என்பது நவீன ஆராய்ச்சியால் மெய்ப்பித்துக் காட்டப்பட்டுள்ளது.

மற்றும் மண், கல், மலை ஆகிய அசேதனப் பொருள்கள்கூட வளருவதும் சேதிக்கப்பட்டால் வளர்ச்சி தடைப்படுவதும் முதலிய காரணங்களால் அவைகளின் இயங்குதல்கள் விளங்குகின்றன.

இப்படிப்பட்ட காரியங்கள் மனிதன் நேரே காணமுடியாமலும், மிக மிக மந்த கதியிலும் இயந்திரங்கள் மூலமல்லாமல் அறியமுடியாததாகவும் இருப்பதால் மக்கள் அவற்றைச் சுலபத்தில் ஒப்புக்கொள்ள முடியாதவர்களாக இருந்துவருகிறார்கள்.

அவ் வறிவின் மேலான தன்மைக்குப் பகுத்தறிவு என்ற பெயர் கொடுத்து—அது மனிதனுக்கே உரித்தானது என்றும், அதனாலேயே மனிதன் ஜீவப் பிராணிகளிலெல்லாம் உயர்ந்தவன் என்றும் சொல்லுகிறார்கள்.

அறிவின் தன்மையும் அவற்றின் படிகளும் எப்படி இருந்தாலும் பரிணாம வாதக் கொள்கைப்படி (அதாவது, ஒன்று மற்றும் ஒன்றாக மாறிக்கொண்டிருப்பது) பிரபஞ்சத் தோற்றங்கள் எல்லாம்—ஒவ்வொரு வஸ்துவின் ஆரம்பத் தோற்றமே இன்றிருப்பது போன்றல்ல. ஒன்று மற்றொன்றாக மாறி மாறி வருவதாலேயே பல்வேறு தோற்றங்கள் காணப்பட்டு, நாளடைவில் ஜீவப் பிராணிகள் என்று சொல்லப்படுவனவாகக் காணப்படுகின்றன.

ஜீவராசிகளில் ஊர்வனவற்றில் பாம்புக்கு இல்லாத கால்கள் எப்படி பல்லி, ஓணான், பாம்பரணை முதலியவைகளுக்கு இருக்கின்றனவோ அதுபோலும்—நாய், கழுதைகளுக்கு இல்லாத கை சவுகரியங்கள், விரல்கள் முதலியவை எப்படிக் குரங்கு, தேவாங்கு முதலிய சாதிகளுக்கு இருக்கின்றனவோ அதுபோலும்—மற்ற ஜீவராசிகளுக்கு இல்லாத ஒரு அளவு அறிவின் சிந்தனாசக்தி மனிதனுக்கு இருக்கின்றது—என்கின்ற அளவு வித்தியாசம் மாத்திரந்தான் உண்டே தவிர, மற்றபடி தனிப்பட்ட மேன்மை ஏதும் சொல்லுவதற்கில்லை. ஏனெனில், மனிதனுக்கு இல்லாத பல சக்திகள், விசேஷ குணங்கள் முதலியவை மற்ற ஜீவராசிகளிடம் இருப்பதைக் காணலாம்.

அதுபோலவே, மற்ற ஜீவராசிகளிடம் இல்லாத சில கெட்ட குணங்களும், பல அசவுகரியங்களும், துன்பங்களும், கவலைகளும், திருப்திஅற்ற தன்மைகளும் பகுத்தறிவுடைய மனிதனிடத்தில் இருப்பதையும் காணலாம்.

உதாரணமாக, மனிதனுடைய ஆசை எல்லையற்றது; அவசிய மில்லாதது; வெறும் கற்பனையையும், மூடநம்பிக்கையையும், பொறாமையையும் பலவீனத்தையும் அஸ்திவாரமாகக் கொண்டதாகும்; தனது தேவைக்கு மேலும் எவ்வளவு இருந்தாலும் தனது பின் சந்ததிக்கும், தான் இறந்த பிறகு மோட்சலோகம் என்பதில் பயன்படவும் வேண்டும் என்கின்ற அவிவேகமான ஆசையுமாகும்.



உதாரணமாக, நாடுபிடித்து ஆட்சிசெய்ய வேண்டும் என்று கருதுகிறவனுக்கு எவ்வளவு நாடு இருந்தாலும், உலகமே அவனது ஏக சக்ராதிபத்திய சர்வாதிகாரத் தன்மைக்குக்கீழ் வந்து விட்டாலும்கூட மேல் லோகமும் கீழ் லோகமும் தனது ஆட்சிக்குள் வந்தால் நல்லது என்று முட்டாள்தனமான கற்பனைக்கு அடிமையாகி, திருப்தியற்றவனாகிறான். எவ்வளவு பூமி இருந்தாலும், சமுத்திரப் பரப்பெல்லாம் பூமியாகி அதற்கும் தானே மிராசுதாரனாக இருந்தால் நல்லது என்கின்ற ஆசைக்கு அடிமையாகி, குறைபாட்டுக்குக் கட்டுப்பட்டவனாகிறான்.

அதுபோலவே, செல்வம் எவ்வளவுதான் கோடிக்கணக்காக இருந்தாலும், எண்ணிக்கைக்கு எப்படி ஒரு அளவு கிடையாதோ அதுபோல், எவ்வளவு பெருகினாலும் மேலும் மேலும் சொத்து சேரவேண்டும் என்கின்ற ஆசையிலிருந்து விலக முடியாதவனாகி, போதவில்லையே, போதவில்லையே என்கின்ற தரித்திரத்திற்கு அடிமை ஆகிறான். இந்தக் குணங்களைப் பகுத்தறிவில்லாத ஜீவராசிகள் என்பவைகளிடம் காணமுடியாது.

தன் பிள்ளை குட்டி, பேத்து, பிதிர் ஆகிய பின் சந்ததிகளைப் பற்றிய முட்டாள்தனமான கவலை பகுத்தறிவுள்ள மனிதனுக்குத்தான் இருக்கிறதே ஒழிய, பகுத்தறிவில்லாதவைகளுக்கு இல்லை. அநேக ஜீவராசிகள் தம் பிள்ளை குட்டிகளைக் கவனிப்பதே இல்லை. அநேக ஜீவராசிகள் தம் பிள்ளை குட்டிகள் தனியே இரை தேடிக்கொள்ளும் பருவம் வந்தவுடன் வெறுத்துத் தள்ளி விடுகின்றன. எவையும் அவைகளைப்பற்றிச் சதா கவலைப்படுவதில்லை.

பகுத்தறிவில்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தை வருத்தி வாழ்வதில்லை. தன் இனத்தைக் கீழ்மைப் படுத்துவதில்லை; தன் இனத்தின் உழைப்பாலேயே வாழ்வதில்லை; தன் இனத்தின்மீது சவாரி செய்வதில்லை.

பகுத்தறிவுள்ள மனிதன் தன் இனத்தைக் கீழ்மைப்படுத்துகிறான். வாகனமாய் உபயோகப்படுத்துகிறான். சோம்பேறியாயிருந்து தன் குலத்தின் உழைப்பிலேயே வாழ்கிறான். பாடுபட ஒரு கூட்டமாகவும்—பயன் அனுபவிக்க இன்னொரு கூட்டமாகவும் பிரிந்து கொள்ளுகிறான்.

உதாரணமாக, நாய், கழுதை, பன்றி என்கின்ற 'இழிவான' மிருகக் கூட்டத்தில், பார்ப்பன சாதி, பறை சாதி, நாயுடு சாதி. முதலி சாதி என்கின்ற பிரிவுகள் கிடையாது. ஆனால், மனித வர்க்கத்தில் தன் இனத்தையே பிரித்து இழிவுபடுத்தப்படுகின்றது.

மனிதன்மீது மனிதன் சவாரி செய்கிறான். மனிதன் உழைப்பை மனிதன் கொள்ளை கொள்கிறான். மனிதனை மனிதன் வஞ்சிக்கிறான்.

பகுத்தறிவின் பயன் இதுவாயிருக்கும்போது, பகுத்தறிவு இருப்பதாலேயே மனிதன் மேன்மையானவன் என்று எப்படிச் சொல்ல முடியும்?

பொதுவாகவே, மனித வாழ்க்கையின் தன்மை மிக்க குறைபாடும் கவலையும் அதிருப்தியும் கொண்டதாகவே இருக்கிறது. இந்தக் குணம் எல்லா தேசத்திலும் எல்லா மனிதர்களிடையும் அரசன், குடிகள், பணக்காரன்; ஏழை, மேல் சாதிக்காரன், கீழ் சாதிக்காரன், முதலாளி, தொழிலாளி என்கின்ற பேதங்களாக, தாரதம்மியங்களாக இல்லாமல் எல்லா மக்களிடமுமே இருந்துவருகின்றது,

அறிவில்லாதவன் கஷ்டப்படுகிறான் என்று சொல்வதற்கு இல்லாமல், பகுத்தறிவு என்பது இருந்தும் மனிதன் ஏன் இத்தன்மையில் இருக்கவேண்டும்? மனிதன் காட்டு

படிப்பகம்

www.padippakam.com



கின்றார்கள் என்று பிறரால் கருதப்படுகின்றவர்களிடத்திலாவது—முன் சொல்லப்பட்ட திருட்டு, பொய், வஞ்சகம் இம்சிப்பது முதலிய குணங்கள் கடவுள் நம்பிக்கைக்காரர்களைவிட அதிகமாக இருப்பதாகவாவது, அல்லது பிறமக்களுக்கு ஆஸ்திகர்களைப்போன்ற நன்மை செய்யவில்லை என்றாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால், அதுவும் முடியாத காரியமாய்த்தான் காணப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

மக்களில் பலருக்கு ஆராய்ச்சியும், முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில் மேற்கண்ட விதமான காரியங்களைப் பற்றியெல்லாம் யோசனைசெய்து பார்ப்பதை விட்டுவிட்டு, தனக்கே புரியாதபடி ஒன்றை நினைத்துக் கொண்டு, 'கடவுள் உண்டா? இல்லையா?' என்று கேட்பதும், 'கடவுளை ஒப்புக்கொள்ளுகின்றாயா? இல்லையா?' என்று கேட்பதும், 'கடவுள் இல்லாமலிருந்தால் மக்களில் ஒருவருக்கொருவர் ஏன் வித்தியாசமாக இருக்கவேண்டும்? ஒருவர் பணக்காரனாகவும் ஒருவர் ஏழையாகவும் ஏன் இருக்கவேண்டும்? ஒருவர் கூன், குருடு, நொண்டி, குஷ்டரோகியாகவும்; ஒருவன் திடகாத்திர உருவமாகவும் ஏன் இருக்கவேண்டும்? ஒருவனுக்கு ஏன் பத்துப் பிள்ளைகள்? ஒருவனுக்கு ஏன் பிள்ளை இல்லை?' இருவர் ஒரே காலத்தில் தனித்தனியாக வியாபாரம் ஆரம்பித்தால் ஒருவர் இலாபமும் இன்னொருவர் நட்டமும் ஏன் அடையவேண்டும்?—என்பன போன்ற கேள்விகள் கேட்டு, அதன்மூலம் மேற்கண்ட குணங்கள் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று உண்டென்றும் மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார்கள். இம் மாதிரிக் கேள்விக்காரர்களைப் பகுத்தறிவு இல்லாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒன்றும் சொல்லமுடிவதில்லை.

இவற்றிற்கெல்லாம் ஒரே விடை-அதாவது, 'இம் மாதிரியாகத் தோற்றங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசங்கள் காணப்படுவதாலேயே கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்று சொல்லிவிடலாம்.

எப்படியெனில், சர்வ வல்லமையுடைய கடவுள் ஒருவர் இருந்து, சர்வத்திலும் புகுந்து, சர்வத்தையும் ஒன்று போலப் பார்ப்பவராயிருந்தால் சர்வத்தையும் ஒன்று போலவே சிருஷ்டிக்கலா மல்லவா? வேறு வேறாகக் காணப்படுவதாலேயே சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சமத்துவமும் கொண்ட கடவுள் என்பதாக ஒன்றும் இல்லை.

ஏனெனில், நொண்டிக்கும், முடவனுக்கும், நல்லவனுக்கும், கஷ்டப்படுபவனுக்கும் கஷ்டப்படுத்துகிறவனுக்கும் கடவுளே காரணஸ்தனாயிருந்தால் கடவுளை சர்வ தயாபரத்துவமுடையவனென்றும் பாரபட்சமில்லாத சர்வசமத்துவ குணமுடையவனென்றும் எப்படிச் சொல்லமுடியும்? இந்தப்படி பகுத்தறிவைக்கொண்டு சொல்லக்கூடிய சமாதானங்கள் ஒருபுறமிருக்க, ஆராய்ச்சியைக் கொண்டு அறியக்கூடிய சமாதானங்களைப் பற்றிச் சற்று கவனிப்போம்.

ஒரே கையால் கை நிறைய அரிசியை அள்ளி அள்ளி வேறாய்வைத்து, ஒவ்வொரு தடவை அள்ளிய அரிசியைத் தனித்தனியாய் எண்ணிப் பார்த்தால், அவற்றுள் ஒன்றுக்கொன்று எண்ணிக்கை வித்தியாசமாயிருப்பானேன்? அதே மனிதன் அதே கையால் அதே நிமிஷத்தில் அதே குவியலிலிருந்து அள்ளினவைகள் ஏன் வித்தியாசப்படுகின்றன?

ஒரே பூமியில் ஒரே வினாடியில் விதைக்கும் ஒரேமாதிரி விதைகள் சில முளைத்தும், சில முளைக்காமலும், முளைத்தனவைகளில் சில வளராமல் கூழையாகவும், சில அதிக உயரமாகவும், சில அதிக மணிகள் கொண்டவையாகவும், சில குறைவான மணிகள் கொண்டவையாகவும், சில முளைத்து நன்றாய்த் தழைத்தும் ஒரு மணிகூட இல்லாத வெறும் கதிராகவும் இருக்கக் காரணம் என்ன? ஒரு வினாடியில் ஒரு பூமியில் நட்டசெடிகள் ஒன்று பல கிளைகளுடனும், ஒன்று சொற்பக் கிளைகளுடனும் வளருவதும், ஒன்று பதினாயிரக் கணக்காகக் காய்ப்பதும், ஒன்று நூற்றுக் கணக்காகக் காய்ப்பதும், ஒன்று பூவிட்டு எல்லாம் கருகி உதிர்ந்துவிடுவதும், ஒன்று பூவிடாமலும் பிஞ்சுவிடாமலும் வறடா



யிருப்பதும் என்ன காரணம்? கடவுள் ஒருவர் இருந்தால் இவைகள் எல்லாம் அதனதன் இனத்தில் ஏன் ஒன்றுபோல் இருக்கக்கூடாது?

ஒரு சமயம் கடவுள் இந்தப்படி செய்திருப்பாரானால் அம் மரம், செடி, தானியம் முதலானவைகள் இப்படிப் பலன் அடைவதற்குக் காரணம் என்ன? என்பதுபோன்ற கேள்விகளுக்கு எது சமாதானமோ அதுதான் மனிதர்களைப் பற்றிய – மனிதர் சம்பந்தமான கேள்விகளுக்குச் சமாதானம் என்பது தானாகவே புலப்படும்.

['குடி அரசு'–தலையங்கம்—28-9-1930]

கடவுள், மதம், ஆத்மா, நான், பாவ-புண்ணியம், மோட்சம், நரகம், ஒழுக்கம் என்பனவெல்லாம் மனிதனால் கற்பனை செய்யப்பட்ட ஒரு கட்டுக் கதையே யொழிய வேறல்ல. இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒருசில சுயநலக் கூட்டத்தார்—ஊரார் உழைப்பில் உடல்நோவாது உண்டு வாழவேண்டுமென்று விரும்பும் மனிதப் புல்லுருவிகள்—புரோகிதர்கள் இத் தகைய கற்பனைகளைச் செய்து மக்களை மூடர்களாக்கி, அறிவிற்குப் பகைவர்களாக்கி, தன்னம்பிக்கையை இழக்கும்படி செய்து, இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்தை மக்கள் வெறுக்கும்படி தூண்டி, தாங்கள் இவ்வுலக வாழ்க்கையில் பூரண இன்பம் துய்த்துக்கொண்டு, மற்ற மக்களுக்கு மறு உலக வாழ்க்கையில் மோகங்கொள்ளும்படி செய்துவிட்டனர். எனவே, பகுத்தறிவுவாதிகள்—மனிதஜீவ அபிமானிகள் தங்கள் பகுத்தறிவினால், சுயநலப் புரோகிதர்களால் கட்டப்பட்ட இந்த மறு உலக நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து, மக்களை இவ்வுலக வாழ்க்கையில் பற்றுள்ளவர்களாகச் செய்யவேண்டும். விஞ்ஞான அறிவு நாளடைவில் லோகாயதவாதிகளுக்கு (Materialist) அனுகூலமாக வளர்ந்துகொண்டே வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி என்னும் சம்மட்டியினால் கடவுள், ஆத்மா, மோட்சம், நரகம், பாவ-புண்ணியம், ஒழுக்கம் என்னும் கற்பனைகள் நிர்த்தூளி செய்யப்பட்டுக்கொண்டேதான் வருகின்றன. ஆனாலும், நாம் ஒவ்வொருவரும் இவ்விஞ்ஞான முறையைக் கைக்கொண்டு சுயநலப் புரோகிதர்களால் நிறுவப்பட்ட மறு உலக வாழ்க்கையின் நம்பிக்கையை விரைவில் உலகைவிட்டோட்டி இவ்வுலக வாழ்க்கையை இன்பமாய்ச் செய்ய முயலுவோமாக!

['குடிஅரசு'–கட்டுரை—11-6-1949]

பெரியோர்களே! தோழர்களே!

மனிதனுக்கு ஆறறிவு இருக்கின்றது. பகுத்தறிவுவாதி என்றும், மனித இலட்சணம் உடையவன் என்றும் கூறவேண்டுமானால் அவன் புத்தியை ஆராய்ச்சித் துறையிலேயே செலுத்தவேண்டும். அவன்தான் பகுத்தறிவுவாதி.

'நாத்திகோ வேதநிந்தகா' என்று வடமொழி கூறுகிறது. அதாவது, புராணத்தையும், சாஸ்திரத்தையும், வேதத்தையும், மனுதர்மம், வருணாசிரமம் முதலியவைகளையும் குறை சொல்லுபவன்—தர்க்கம் செய்பவன் 'நாத்திகன்' என்று எழுதி வைக்கப்பட்டு இருக்கின்றது.

[மயிலையில், 3-9-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-9-1951]



படிப்பகம்

www.padippakam.com



மிராண்டியாயும் சமூக வாழ்க்கை இல்லாமலும் காட்டில் தனித்தனியாய்த் திரியும்போது இல்லாத கஷ்டங்கள்—கெட்ட எண்ணங்கள் எல்லாம், சமூக வாழ்க்கைக்கு வந்த பின்பு அனுபவிக்கின்றவனாகவும் உடையவனாகவும் இருந்துவருகிறான்.

மனிதன் காட்டுமிராண்டித்தன வாழ்க்கைக்கு வரும்போது ஒவ்வொரு மனிதனும் சமுதாய வாழ்க்கையில் ஒருவனுக்கொருவன் உதவி செய்து, வாழ்க்கை நிலையை மேம்படுத்திக்கொள்ளலாம் என்று கருதி வந்திருப்பானே ஒழிய, மற்ற மனிதனைக் கொடுமைப்படுத்தி, இழிவுபடுத்தி, கஷ்டப்படுத்தி அதன் பயனாய்த் தான் வாழலாம் என்று கருதி இருக்கமாட்டான். அப்படிக் கருதியிருந்தால் சமூக வாழ்க்கை ஏற்பட்டே இருக்காது.

பரஸ்பர உதவிக்காக ஏற்பட்ட சமூக வாழ்க்கை, பரஸ்பரத் தொல்லைக்கும் உபத்திரவத்துக்கும் ஆளாக ஏற்பட்டுவிட்டது.

சமுதாயத் துறையில் இன்றுள்ள வேற்றுமை, பகைமை, துவேஷம், இழிவு, தரித்திரம், மடமை முதலிய குணங்கள் மனிதன் அறிவுக் குறைவினால்—பகுத்தறிவு இல்லாததினால் அல்லது பகுத்தறிவைச் செவ்வனே பயன்படுத்தாததினால் ஏற்பட்டவை என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய, காலக் கொடுமையாலோ, கடவுள் தன்மையாலோ, அரசாட்சியாலோ ஏற்பட்டது என்று எவரும் சொல்லிவிட முடியாது.

ஏனெனில், சமூக வாழ்க்கையின் சரித்திர ஆரம்ப காலம் எதுவோ அக் காலத்திலிருந்தே இக் குணங்கள் மனித சமூகத்தில் இருந்துவந்திருப்பதைச் சரித்திர ஆதாரங்களில் பார்க்கலாம்.

கடவுள் தன்மை என்பதிலும், எப்படிப்பட்ட கடவுள் காலத்திலும் அவதாரங்களின் காலத்திலும், கடவுள் தன்மை பெற்ற தூதர்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், சமய குரவர்கள் என்பவர்கள் காலத்திலும் இக் கொடுமைகளும் குறைகளும் இழிகுணங்களும் நிலவி வந்திருக்கின்றன.

அதுபோலவே, அரசாங்க விஷயத்திலும், இன்றுள்ள அன்னியர்—வெள்ளைக்காரர் வியாபார உணர்ச்சியோடும் பொறுப்பில்லாமலும் ஆளுகின்ற 'ஆட்சி' என்பது மாத்திரம் அல்லாமல், கடவுள் அவதார ஆட்சி, தர்ம தேவதைகள் ஆட்சி, மனுநீதி ஆட்சி, மற்றும் சேர, சோழ, பாண்டியர், பார்ப்பனர், நாயக்கர், முகமதியர் ஆகிய எல்லா ஆட்சிக் காலத்திலும் இருந்துவந்த குறைகளேதான் இன்றும் காணப்படுகின்றன.

எந்தக் காலத்திலும் எப்படிப்பட்ட கடவுளாலும் யாருடைய ஆட்சியிலும் இக் குறைபாடுகள் நீங்கி இருந்ததாகவோ, நீக்கப்பட்டதாகவோ காணமுடியவில்லை.

ஆகவே, இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிப்பதாய் இருந்தால், இரண்டு காரணங்களைச் சொல்லலாம்.

ஒன்று, மனிதனுக்குப் பகுத்தறிவு ஏற்பட்டதனாலேயே மனிதன் இத்தியாதி கொடுமைக்கும் துக்கத்துக்கும் இழிவுக்கும் ஆளானான் என்று சொல்லவேண்டும்.

இதை அறிஞர் ஒப்புக்கொள்ள முடியுமா? முடியாது. மற்றென்னவென்றால், மனிதன் அறிவைத் தப்பாய்ப் பயன்படுத்தி, இயற்கையையும் மனித சுபாவத்தையும் தவறுதலாகக் கற்பித்துக்கொண்டு, மனித ஜென்மமே அளவற்ற ஆசைக்கு அடிமைப்பட்டதென்றும் மனித ஜென்மமே துக்கம் அனுபவிக்கவும் கவலையால் மூழ்கவும் ஏற்பட்டதென்றும் மனிதனது சமூக வாழ்க்கையே (சம்சாரம், சாகரம்) துக்கம் என்றும் கருதி, அதையே இயற்கையாக்கிவிட்டதால் இந்நிலையில் இருக்கிறான் என்றுதான் சொல்லவேண்டும்.

மனித வாழ்க்கைநிலை முழுவதையும் கட்டுப்படுத்திக் கட்டுப்பாட்டுக்கு அடிமைப்படுத்திக்கொண்டான். மனிதனுடைய இந்த சிந்தனா சக்தியையுங்கூட கட்டுப்படுத்தி



விட்டான். இயற்கைக்கு மாறாக இன்னின்னபடிதான் நடக்கவேண்டும்; இன்னின்னபடிதான் சிந்திக்கவேண்டும் என்கின்ற கட்டுப்பாட்டுக்குங்கூட ஆளாகிவிட்டான். மனிதன் தனக்கு என்று ஏற்படுத்திக்கொண்ட கடவுள் மதம், மதக் கட்டளை கடவுள் கட்டளை என்பவைகள் எல்லாவற்றையும் பெரிதும் இயற்கைக்கும் உண்மைக்கும் விரோதமாகவும், அனுபவத்திற்கு முடியாததாகவுமே கற்பித்துக்கொண்டான்.

இந்தத் தவறுதலோடு மாத்திரம் நிற்காமல் மனித சமூகத்தையே தேசம், மொழி, மதம், சாதி என்பவைகளால் பிரித்து வேற்றுமைப்படுத்திக்கொண்டான். அதோடு நிற்காமல், பல மதங்கள், பல கடவுள்கள், பல வேதங்கள் என்பதாக ஒன்றுக்கொன்று மாறுபட்ட குணங்களுடன் கற்பித்துக்கொண்டான். இவற்றில் ஒன்றுக்காவது பகுத்தறிவைச் சுதந்திரமாய்ப் பயன்படுத்த உரிமை இல்லாதவனாகிவிட்டான். வஸ்துக்களை உனது-எனது எனப் பிரித்துக்கொண்டான். மனிதனின் ஒய்வு எல்லாம் மனிதனின் பகுத்தறிவைப் பாழ்படுத்தி, அடிமைத்தனத்திற்குப் போவதற்கே பயன்பட்டதே தவிர, பகுத்தறிவால் பயன்படவோ மேன்மை அடையவோ முடியவில்லை.

மனித சமூக நன்மைக்காக—அதாவது மக்கள் சமூகம் சரீர உழைப்பினின்றும், காலதாமதத்தில் இருந்தும் காப்பாற்றப்படவும் அதிகப் பயன் அடையவும் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள் எப்படி முதலாளிமார்கள் ஆதிக்கத்திற்கு ஆளாகி, உழைப்பாளி பாட்டாளிகளுக்கும் பட்டினியாக இருக்கப் பயன்படுகின்றனவோ அதுபோலவே, மனிதனுக்கு மேன்மையையும் திருப்தியையும் கவலையற்ற தன்மையையும் உண்டாக்கித் தரவேண்டிய பகுத்தறிவானது, சிலருடைய ஆதிக்கத்திற்கு அடிமையாகி, மக்களுக்குத் துக்கத்தையும் கவலையையும் தரித்திரத்தையும் கொடுக்கப் பயன்பட்டுவருகிறது. இவற்றாலும், இன்னும் இவை போன்ற காரணங்களாலேயும் மனிதன் பகுத்தறிவு பெற்றதால் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லாத தொல்லையும், கவலையும், குறைவும், அதிருப்தியும், தரித்திரமும் அடையக் காரணமாகிவிட்டான் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

எனவே, மனிதன் இப்படிப்பட்ட கீழ்மைநிலையில் இருந்து மேம்பாடு அடையவேண்டுமானால் முதலாவதாகத் தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்கவேண்டும்.

இன்று மனிதனிடம் தன்னம்பிக்கை இல்லை. தன்னைத் தான் நடத்துவதாக அவன் நினைப்பதில்லை. தனது காரியத்திற்குத் தானேதான் பொறுப்பாளி என்பதில் நம்பிக்கையில்லை. மனிதன் தான் கற்பித்துக்கொண்ட கடவுளையும், கடவுள் கட்டளையையும், கடவுள் சித்தாந்தத்தையும் வெகு குளறுபடி ஆக்கிக்கொண்டான்.

அதோடு மாத்திரமல்லாமல், தனது சவுகரியத்திற்கு ஏற்றபடியெல்லாம் மாற்றிக்கொள்கிறான். பெரிதும் சோம்பேறி வாழ்க்கைக்கே கடவுளைப் பயன்படுத்துகிறான். இவ்வளவோடு அல்லாமல் தலைவிதி, முன் ஜென்மம், கர்மபலன் என்பவைகளைக் கற்பித்துக்கொண்டு தனது முட்டாள்தனத்துக்கும் அயோக்கியத்தனத்துக்கும் பரிகாரமாக்கிக்கொண்டான்.

மனிதன் முதல் முதல் தவறிப்போன இடம் இதுவேயாகும். கடவுளும் கருமமுமே மனிதனின் பகுத்தறிவைப் பாழ்படுத்தி, பகுத்தறிவற்ற ஜீவராசிகளைவிடக் கேவலமாக்கி, இன்று மனிதனை துக்க ரூபகமாகவும் கவலைக் களஞ்சியமாகவும் ஆக்கிவிட்டன.

பகுத்தறிவுக்குக் கடவுளும் கருமமும் நேர் விரோதிகளாகும். ஏனெனில், கடவுளுக்கும், கருமத்துக்கும் அடிமைப்பட்டவனிடம் சொந்தமாக ஒன்றுமே கிடையாது. அவன் மரக்கட்டை, தண்ணீர் அலையில் அலைவது போன்றவனே ஆவான்.

ஆதலால், இந்த உணர்ச்சிகளிலிருந்து விடுபடுவதே பகுத்தறிவின் வெற்றிக்கு முதல் படியாகும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தப்படி சொல்லுவதை மக்கள் நாஸ்திகம் என்கிறார்கள். இதனாலேயே பகுத்தறிவுவாதிகள் நாஸ்திகர்கள் என்று உலகமெங்கும் பழிக்கப்படுகிறார்கள். பகுத்தறிவு மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கமானது நாஸ்திகப் பழிப்புக்குப் பயன்படக்கூடாது.

[திண்டிவனத்தில், 18-5-1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 26-5-1935]

## 2. அறிவுச் சுதந்திரம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

மனிதன் என்பதற்கே பொருள், விஷயங்களை ஆராய்ந்து, நன்மை தீமை என்பதை உணர்ந்து, சகல துறைகளிலும் மேலும் மேலும் வளர்ச்சி அடைகிற தன்மை உடையவன் என்பதேயாகும்.

மற்ற ஜீவப் பிராணிகளை எடுத்துக்கொண்டால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அவை எப்படி இருந்தனவோ அப்படியேதான் இன்னும் இருக்கின்றன. பட்சி—காகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்ததோ அதேமாதிரியாக இன்னும் இருக்கிறது. அதேமாதிரி ஆடு, மாடு, குதிரையை எடுத்துக்கொள்ளுங்கள்—ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்தனவோ அதே மாதிரித்தான் அவைகளின் சுபாவமும் தன்மையும் இருக்கின்றன. ஆனால், மனிதன் அப்படி அல்லன்.

மனிதன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட எவ்வளவோ மாற்றமடைந்திருக்கிறான்; நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட எவ்வளவோ மாற்றமடைந்திருக்கிறான்; இன்னும் சொல்லப்போனால், அம்பதாண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட எவ்வளவோ மாறுதல் அடைந்திருக்கிறான்; அறிவிலே, வளர்ச்சியிலே, அற்புதங்களைக் கண்டுபிடிப்பதிலே எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறான். அதற்கு எல்லாம் காரணம் மனிதனுக்கு உண்டான அறிவு மேன்மைதான்.

அப்படிப்பட்ட மனிதன் சில துறையிலே முன்னேற்றமடைந்து, வேறு சில துறைகளிலே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கொஞ்சம்கூட முன்னேற்றம் அடையாத நிலையிலேதான் இருக்கிறான். ஒரு சில துறைகளிலே முன்னேற்றம் ஏற்படுவானேன்? சில துறைகளிலே முன்னேற்றம் அடையாமல் இருப்பானேன்?

சக்கிமுக்கிக் கல்லிலே இருந்தவன் முதலிலே திரிவிளக்கு, பிறகு 'காஸ்' விளக்கு, அதன் பிறகு 'எலக்டிரிக்' விளக்கு என்று—சில ஆயிரம், பத்தாயிரக்கணக்கான விளக்கினுடைய வெளிச்சம் ஒரு சிறு கம்பியில் தெரியும்படி, அவ்வளவு முன்னேற்றம் எப்படி அடைந்தான்? அறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்ததனாலேதான்!

மணிக்கு மூன்று மைல் நடந்துகொண்டிருந்த மனிதன் முதலிலே மாட்டு வண்டி, குதிரை வண்டி, சைக்கிள், மோட்டார் இவைகளில் சென்று இன்றைய தினம் மணிக்கு 600 மைல் பறக்கும்படியான ஆகாயக் கப்பலை எப்படிக் கண்டுபிடித்தான்? அறிவினாலேதான்! ஒரு மைல், இரண்டு மைல் கேட்கும்படியான ஒலிபெருக்கியை எப்படிக் கண்டுபிடித்தான்? அறிவினாலே! அய்ந்தாயிரம், பத்தாயிரம் மைலுக்கப்பால் இருந்து பேசினால், அதைக் கேட்கும்படியான தொலைபேசியை எப்படிக் கண்டுபிடித்தான்? அறிவினாலே! மனிதனுடைய அறிவு அவ்வளவு வேலைகளைச் செய்து இருக்கின்றது. இது எல்லாம் கதை அல்ல—நாம் நேரிலே அனுபவிக்கின்றோம். நாளைக்கு வேண்டுமானாலும் பம்பாயில் புறப்பட்டால் மறுதினம் சீனாவுக்குப் போய்விடலாம்; அடுத்த நாள் இங்கு வந்து சேரலாம்; இது எல்லாம் இன்று நடக்கிறது. சாதாரணமாக ஒரு மனிதன் கக்கூசுக்குப் போய், கால் கை கழுவி சுத்தமாக்கிக்கொண்டு குளித்துவிட்டு வருகிற நேரத்திற்குள் காசிக்குப் போய் வந்துவிடலாம்; அவ்வளவு வேகமாகப் போக முடியும்.



அப்படி அறிவினாலே அவ்வளவு அதிசயங்கள், அற்புதங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதை நாம் அனுபவிக்கின்றோம்.

அப்படிப்பட்ட அறிவுடைய மனிதன் எல்லாத் துறைகளிலும் அறிவு பெற்று இருக்கின்றானா என்றால், சில துறைகளில் மாத்திரம்தான் பெற்றிருக்கிறான். ஆனால், சில துறைகளிலே பயன்படுத்தமாட்டான். பயன்படுத்தினால் பாபம் என்று சொல்லிவிட்டனர். அதனால் பயந்து சில துறைகளில் பயன்படுத்தவே மாட்டான்; பயன் படுத்தவே இல்லை. அந்தக் காரணத்தினாலேதான் நாம் சூத்திரர்களாக, பஞ்சமர்களாக—கீழ்மக்கள், பிற்பட்ட மக்கள் என்று சொல்லும்படியாக இருக்கிறோம். அந்தத் துறையில் நாம் ஆராய்வது இல்லை; ஆராய்ந்தால் பாபம் என்று சொல்வார்கள். அப்படி ஆராய்வதாலே தண்டனை ஏற்பட்டுவிடும்; தண்டனை கிடைத்துவிடும் என்று நம்பி ஆராயாமல் இருக்கிறார்கள். ஆனால், மனிதனுக்கு அறிவு இல்லை என்று சொல்ல முடியுமா? அறிவு இருக்கிறது; சில காரியங்களிலேதான் அந்த அறிவைப் பயன்படுத்துகிறார்கள்; சில காரியங்களில் பயன்படுத்துவதே இல்லை.

விருந்துக்கு அழைக்கப்பட்டவன் கால் கைகளைக் கழுவிக்கொண்டு இலையில் உட்கார்ந்ததும், சாணி உருண்டையை உருட்டி வைத்துச் சாப்பிடுங்கள் என்று சொன்னால் அவன் என்ன செய்வான்? 'என்ன, அயோக்கியப் பயல்! நம்மை மடையன் என்று நினைத்தானா? அல்லது, அவன் மடையனா? என்று ஆத்திரம் அடைந்து எழுந்து போய் விடுவான். ஏன்? அவனுக்கு அறிவு இருக்கிறதனாலே, எந்த மடையனாவது சாணியைச் சாப்பிடுவானா என்று கருதியே ஆகும். ஆனால், அதே மனிதனிடத்தில் அதே சாணியை கொழுக்கட்டை மாதிரிப் பிடித்து வைத்து, அதன் தலையிலே அருகம் புல் குத்தி வைத்து, குங்குமத்தை இட்டு, 'விழுந்து கும்பிட்டுவிட்டு வா, சாப்பிடப் போகலாம்!' என்றால், உடனே கும்பிடுவான். சாணியைச் சோறாக வைத்தபோது கோபம் அடைந்த மனிதன்—அதைச் சாமியாக வைத்தால் விழுந்து கும்பிடுகிறான்; தலையில் குட்டிக்கொள்கிறான். இது ஏன்? அவனுக்கு அறிவு இல்லையா? அறிவு இருக்கிறது. அந்த அறிவைச் சோற்றுச் சங்கதியில் செலுத்தலாம்—ஆனால், கடவுள் சங்கதியில் செலுத்தினால் அழிந்தே போய் விடுவோம் என்கிற பயம் உண்டாகி இருப்பதால், அவன் சிந்திப்பது இல்லை. இரண்டும் அறிவுதான். ஆனால், சிந்தித்தால் பாபம், தோஷம் என்கிற தடைகள் குறுக்கே நிற்கின்றன.

'ஏன் நெற்றியில் சாம்பல் அடித்துக்கொள்கிறாய்?' என்றால் கோபம் வந்துவிடுகிறது.

'அது சிவபிரானை வணங்கும் பக்திச் சின்னம்; முன்னோர்கள் காலம் முதற்கொண்டு செய்துவருகிறோம். அது மேலே பட்டால் பாபம் போம்; அதைக் குற்றம் சொல்லுகிறாயே!' என்று கேட்பார்கள். அந்தச் சாம்பலை அடுப்பிலிருந்து முறத்தில் வாரி வந்து தெருவிலே நின்று அவன் முகத்திலே வாரி அடித்தால்—உடனே, 'என்ன என் முகத்தைக் குப்பைத் தொட்டி என்று நினைத்துக்கொண்டாயா?' என்று சண்டைக்கு வந்துவிடுவான்.

மற்றும், அதே சாம்பலை ஒரு தட்டிலே வைத்துக்கொண்டு, 'இந்தப் பெண்ணுக்குப் பேய் பிடித்திருக்கிறது; பேய் ஓடக் கடவது!' என்று சொல்லி ஒரு பெண்ணின் முகத்தில் அடித்தால், பக்கத்தில் யாராவது பாட்டிகள் இருந்தால், 'இன்னும் கொஞ்சம் போடுங்கள்' என்று சொல்லுவார்கள். வெறும் சாம்பலை ஒருவனுக்குத் தெரியாமல் அள்ளி வந்து, 'இது சாமி பிரசாதம்' என்று கொடுத்தால் பக்தியோடு இரண்டு கைகளையும் நீட்டி வாங்கி வாயிலும் போட்டுக்கொள்கின்றான்; அதற்காக விழுந்தும் கும்பிடுகிறான்; தட்டிலே தட்சிணையும் போடுகிறான். ஆனால், இவற்றைப்பற்றிச் சிந்திக்கிறதே இல்லை.

ஆனால், நான் சொல்வதென்னவென்றால்—எந்தச் சங்கதியாக இருந்தாலும் நன்றாகச் சிந்திக்க வேண்டும்; ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது கடவுளாச்சே; இது சாஸ்திர

படிப்பகம்

www.padippakam.com



மாச்சே; இது பகவான் வாயில் இருந்து வந்ததாச்சே; பெரிய புராணம் சொல்லுகிறதே; சின்னபுராணம் சொல்லுகிறதே; கழறுகிறதே—என்று எல்லாம் நினைக்கக்கூடாது.

நமக்கு அறிவு இருக்கிறது; அனுபவம் இருக்கிறது; ஆராயும் திறன் இருக்கிறது. அவற்றைக்கொண்டு எந்தச் சங்கதி ஆனாலும் ஆராய்ந்து பார்த்துத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துகொள்ள வேண்டும்.

[பெரம்பூரில், 21-3-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-3-1951]

## 3. மறுத்தலும் பகுத்தறிவும்

நாம் மாறுதலுக்குக் கட்டுப்பட்டவர்களும், ஆசைப்பட்டவர்களும் ஆவோம். ஆதலால், அந்த மாறுதலேதான்—அதுவும் அறிவு, ஆராய்ச்சி ஆகிய காரணங்களைக் கொண்டு இந்தத் திருமண முறையில் காணப்படுகிற மாறுதல்கள் ஏற்பட்டவைகளாகும்.

பகுத்தறிவு என்று சொல்வதும் மாறி மாறி வருவதாகும். இன்று நாம் எவை எவைகளை அறிவுக்குப் பொருத்தமானவை என்று எண்ணுகிறோமோ அவை நாளைக்கு மூடப் பழக்க வழக்கங்கள் எனத் தள்ளப்படலாம். நாம்கூட பல பொருள்களை, ஏன்—மகான்கள் என்று புகழப்படுபவர்கள் சொன்னவற்றையே ஒதுக்கிவிடுவோம். அதுபோலத்தான், நமது பின்னோர்கள் என்னைக் குறித்துக்கூட, ஒரு காலத்தில், 'இராமசாமி என்ற மூடக் கொள்கைக்காரன் இருந்தான்' என்று கூறலாம். அது இயற்கை; மாற்றத்தின் அறிகுறி; காலத்தின் சின்னம். பழைய காலத்தைச் சேர்ந்தவை என்பதற்காக நாம் குறை கூற வில்லை. அவர்கள் காலத்திற்கு அவர்கள் செய்தது சரி என்பதானாலும், அப்பொழுது அவ்வளவுதான் முடிந்தது என்பதானாலும் இன்று மாறித்தான் ஆகவேண்டும். சக்கிமுக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக் காலத்து 'எடிசன்'. அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்பொழுது மின்சாரத்தில் நெருப்பைக் காண்கிறோம்! எனவே, மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது. எத்தகைய வைதிகமும் மாற்றத்திற் குள்ளாகித்தான் தீரவேண்டும். இப்பொழுது நாம் எவ்வளவு மாறி இருக்கிறோம்? 50 வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட கடவுளைப்பற்றிய எண்ணம்—தெய்வீக சக்தி படைத்தவர்கள், பெரிய மனிதர்கள் என்பவர்களைப்பற்றிய எண்ணம்—வீடு, வாசல், உடை, உணவு, தெருக்கள், வண்டி, குடுமி வைத்தல் ஆகிய எண்ணங்களில், பொருள்களில் பெரிய மாற்றத்தைக் காண்கிறோம். பெண்களின் புடவை, இரவிக்கை, நகைகள், புருஷன்-பெண்சாதி முறை ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களைப் பாருங்கள்! அடுத்தபடியாக பொருட் செலவும் அதிகமில்லை; நேரமும் பாழாவதில்லை!

மனிதனுடைய அறிவுப் பெருக்கமும் அனுபவ முயற்சியும் இந்த அதிசயங்களுக்குக் காரணம் என்றும், அதனாலேயே அக்கால மனிதர்களைவிட இக்கால மனிதர்கள் அறிவு, அனுபவம் பெற்றவர்கள் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உள்ள இந்தக் காலத்தில் நாம் மற்ற காரியங்களில் ஏற்பட்ட அறிவுத் திறனையும், அதிசய சக்திகளையும் அனுபவித்துக் கொண்டு, இந்தக் கேடுகெட்ட—மானம் கெட்ட இழி நிலைக்குக் காரணமான அர்த்தமற்ற, சூழ்ச்சிகரமான, காட்டுமிராண்டிக் காலத்தில் ஏற்பட்ட மதம், கடவுள்கள், சாத்திரம், சடங்கு, சாதி, மதக்குறி, உயர்வு-தாழ்வு பேதம், அறிவுக்குப் பொருந்தாத அர்த்தமற்ற கொள்கைகள் ஆகியவற்றைக் கடைப்பிடித்துக்கொண்டு ஈன வாழ்வு வாழ்வது, எப்படி அறிவுடையவர் ஒப்புக்கொள்ளக்கூடிய காரியமாகும்?

அறிவுதான் கடவுள் என்பான் பண்டிதன். ஆனால், அவன் கற்பிக்கிற-வணங்குகிற கடவுள், உலகில் உள்ள எல்லா அயோக்கியத்தனங்களும் கொண்டதாக இருக்கும்.

அழகுதான் கடவுள் என்பான். ஆனால், அவலட்சணமான தோற்றங்கள் எல்லாம் அவன் கற்பித்துள்ள கடவுள்களில் பிரதிபலிக்கும்.



உயர்ந்த மக்கட்கு வழிகாட்டும் நல்ல நடத்தைகளும் உபதேசங்களும் நிறைந்தனவே புராணங்கள், சாத்திரங்கள் என்று கூறுவான். ஆனால், அவைகளில் கூடா ஒழுக்கங்களும் இழி தன்மைகளும் ஏராளமாக இருக்கும். அவைகளுக்குக் காரணம், அவைகள் ஏற்பட்ட காலத்தைச் சிந்திக்காமல்—ஏற்படுத்தியவர்களின் தன்மைகளை அறியாமல், தங்களின் பெருமைகளைக் காட்டிக்கொள்ளவும், தங்கள் பிழைப்புக்கு வழி தேடவும் அவைகளைப் பயன்படுத்த வேண்டியதாகிவிட்டதால் அவர்களின் நிலைமை பரிதபிக்கத் தக்கதாகி விட்டது.

[புத்தகத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது]

## 4. முட்டுக் கட்டைகள்

இன்று தமிழர் சமுதாயம்தான் உலகிலேயே காட்டுமிராண்டி வாழ்வு வாழ்ந்து வருகிற சமுதாயமாக இருக்கிறது! உலகிலுள்ள 280 கோடி மக்களில் யாரும் இவ்வளவு பிறவி இழிவான நிலையில் – முட்டாள்தனமாக வாழ்பவர்களில்லை.

நமது நாட்டைப் பிடித்துள்ள 'பேய்கள்' மூன்று. அவை: 1. கடவுள்–மதம்–சாஸ்திரங்கள், 2. சாதி, 3. ஜனநாயகம் என்பன. நம்மை அரித்துவரும் நோய்கள்: 1. பார்ப்பான், 2. பத்திரிகைகள், 3. அரசியல் கட்சிகள், 4. தேர்தல்கள், 5. சினிமா—ஆகிய இவைகள் ஒழிக்கப்பட்டாலொழிய நமது வாழ்வு சீர்படாது என்று, நான் இங்கு மட்டுமல்ல—வடநாட்டிலும், கன்னட, கேரள மாநிலங்களிலும் இலட்சக்கணக்கான பொது மக்கள் கூடிய கூட்டங்களில் ஆண்டுக் கணக்காக எடுத்துரைத்து வந்திருக்கிறேன்.

அதுபோலவே, நமது வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் தடையாக மேலும் முட்டுக் கட்டைகளாக மேலும் மூன்று சாதனங்கள் இருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டி வருகிறேன். அவை – அம் மூன்று முட்டுக் கட்டைகள்:

1. முன்னோர்கள் சொன்னபடி நடக்கவேண்டும்;
2. முன்னோர்கள் (பெரியவர்கள்) எழுதியபடி நடக்கவேண்டும்;
3. பெரியவர்கள் நடந்தபடியே நாமும் செல்லவேண்டும் என்பவைகளாகும்.

இவை, 'முட்டுக் கட்டைகள்' என்று சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் சொன்னார் என்றாலும், அதற்குப் பிறகு, இன்று—இந்த 'இருபதாம் நூற்றாண்டின் புத்தர்களாக' விளங்கும் கருஞ்சட்டைக்காரர்கள்தாம் சொல்லுகிறார்கள்.

ஆனால், இந்த நாட்டிலுள்ள பெரும் 'பிரபல' பார்ப்பனத் தலைவர்கள்—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், திரு. இராசகோபாலாச்சாரியார், கே. எம். முன்ஷி, சங்கராச்சாரியார் போன்றவர்கள் எங்கு—எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும், இம் முட்டுக்கட்டைகளை ஆதரித்து, வலியுறுத்தி—அதாவது 'நாம் எக் காரியத்திற்கும் நமது முன்னோர் சொன்ன, காட்டிய, எழுதிய வழிப்படியே நடக்கவேண்டும்' என்று பேசிவருகிறார்கள்.

இப்படி இவர்கள் பேசுவது ஏதோ, நமது முன்னோர்கள் எக் காலத்திற்கும்–எந்த நிலைமைக்கும் பொருந்தக்கூடிய வகையில் 'சர்வரோக நிவாரணி' தயாரித்து வைத்துள்ளதைப்போன்று சொல்லி வருகிறார்கள்.

மக்களுக்குச் சிந்தனாசக்தியும், அறிவும், விஞ்ஞான உணர்வும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் இவர்கள் இப்படிப் பேசிவருவதன் உள்நோக்கமாகும்.

'முன்னோர்கள், பெரியவர்கள் என்பவர்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?' என்று கேட்டால்—'ரிஷிகள், மகான்கள், தெய்வீக புருஷர்கள், ஆதர்சன ஆச்சாரியர்கள் இவர்கள்தாம்' என்பார்கள்; மற்றும் அவதாரங்களையும் குறிப்பிடுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இவர்களெல்லாம் யார்? எப்போதிருந்தார்கள்?, எங்கிருந்தார்கள்? அதற்கென்ன ஆதாரம்? சரித்திரத்திற்கும் இவர்களுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? என்றெல்லாம் ஆராய்ந்தால் இது மாபெரும் புரட்டு—அதுவும் இமாலயப் புரட்டு என்பது தெளிவாக விளங்கும்.

இஸ்லாமியர்களின் முன்னோர்கள் என்றால் அவர்களுக்குக் காலம் உண்டு; சரித்திரம் உண்டு. கிறிஸ்தவர்களின் முன்னோர் என்றால் அவர்களுக்கும் காலம் உண்டு; சரித்திரம் உண்டு. அதுபோல் இந்த ரிஷிகள், தெய்வீகர்கள், மகான்கள் ஆகியவர்களுக்கு ஏதாவது உண்டா ஆதாரம் என்றால்—புராணங்கள், வேதங்கள், ஸ்மிருதிகள், சுருதிகள் என்று ஏதோ கறையான் பிடித்த சிலவற்றைக் காட்டக்கூடும். அதை நுணுகி ஆராய்ந்தவர் களுக்குத்தான் தெரியும், அதிலுள்ளவைகள் எல்லாம், 'பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றி னால் அவன் எப்படியெப்படி உளறுவானோ அப்படியே இருக்கின்றன'வென்று.

'உதாரணமாக, ரிஷிகளில் பெரியவரான நாரதர், மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவைக் (ஆணும் ஆணும்) கூடிப் பெற்றெடுத்த குழந்தைகள்தாம் இன்றைய 60 'தமிழ்' வருடங்கள் என்பவை. இதற்குப் பாகவதம், புராணம், இதிகாசம் ஆகியவை களில் ஆதாரம் உண்டு என்றால், இது எவ்வளவு பெரிய ஆபாசம்? முட்டாள்தனமான கருத்து? இதை நம்புவதைவிடக் கடைந்தெடுத்த காட்டுமிராண்டித்தனம் வேறு இருக்க முடியுமா?

இப்படி முன்னோர்கள் சொன்னது, எழுதியது, நடந்தது என்பதை வெறும் வாயினால் மாத்திரம் பார்ப்பனர்கள் கூறிக்கொண்டிருக்கவில்லை. இந் நாட்டில் 100-க்கு 84 பேராக உள்ள 'இந்துக்களுக்கு' உரிய சட்டமாகிய இந்து 'லா'விலும் நுழைத்துப் பலப் படுத்திப் பாதுகாத்து வருகிறார்கள். இந்து 'லா'வின் அடிப்படைகளில் ஒன்று, சுமார் 20 ரிஷிகள் (**Smirithikaras**—ஸ்மிருதிக்காரர்கள்) சொன்னதாகும். நாரதர், பராசரர், யாக்ஞவல்கியர், விஸ்வாமித்திரர், வசிஷ்டர், மனு போன்றவர்கள் என்ன கருத்துக்கொண் டார்களோ—அதைக் காட்டித்தான் இன்று அய்க்கோர்ட், சுப்ரீம் கோர்ட் போன்ற நீதிமன்றங்களில் தீர்ப்புகள் எழுதப்படுகின்றன.

இந்த ரிஷிகள் சுத்த அனாமதேயங்களாகவே இருக்கிறார்களே; இவர்களைப்பற்றி ஆதாரங்கள் உண்டா என்று தேடினால், அவை அறிவிற்கொவ்வாத ஆபாசக் களஞ்சியங் களாகவே இருக்கின்றன.

'வச்சிர சூசிப் பிரமாணம்' என்ற நூலிலுள்ளபடி—கலைக்கோட்டு முனி மான் வயிற்றிலும், கவுசிகர் காதிராஜாவுக்கும், ஜம்புகர் நரி வயிற்றிலும், கவுதமர் பசு வயிற்றி லும், வால்மீகி வேடனிடத்திலும், அகஸ்தியர் குடத்தினிடத்திலும், வியாசர் செம்படச்சி வயிற்றிலும், வசிஷ்டர் ஊர்வசி என்ற தாசி வயிற்றிலும், கவுடல்யர் முண்டச்சி வயிற்றிலும், நாரதர் வண்ணாத்தி வயிற்றிலும், மதங்கர் சக்கிலிச்சி வயிற்றிலும், மாண்டவியர் தவளை வயிற்றிலும், சசங்கியர் பறைச்சி வயிற்றிலும், காங்கேயர் கழுதை வயிற்றிலும், சவுனகர் நாயின் வயிற்றிலும் பிறந்திருக்கிறார்கள்.

'இப்படி—நாய், நரி, கழுதை, தவளை, குடம் இவைகளின் வயிற்றிலிருந்து எங்கள் முன்னோர்கள் பிறந்தார்கள்; அவர்கள் வாக்குத்தான் எங்களுக்குச் சட்டம்' என்று நாம் சொன்னால்—செயற்கை நிலா செய்து பறக்கவிடும் மற்ற நாட்டுக்காரர்கள் நம்மைக் காட்டு மிராண்டித்தனத்தின் சின்னம் என்று கருதமாட்டார்களா?

இத்தனை ரிஷிகள், முனிவர்கள், தெய்வீக புருஷர்கள், ஆண்டவனின் அவதா ரங்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், மகாத்மாக்கள் தோன்றி 'மகிமைகள்' புரிந்திருந்துங் கூட, நாம் இன்றைக்கு வளையாத குண்டூசி செய்யக்கூடக் கற்றுக்கொள்ளவில்லையே, ஏன்—என்றால் என்ன பதில் கூறமுடியும்?



எனவே, பெரியோர்கள் சொன்னது, பெரியோர்கள் எழுதியது, பெரியோர்கள் நடந்தது என்பதாகிய பிரச்சாரம் செய்வது, நம்மை முழு மூடர்களாக நிரந்தரமாக இருக்கச் செய்வதற்குத்தானேயொழிய, வேறில்லை.

ஆகவே, இம்மூன்று முட்டுக் கட்டைகளை ஒழித்தாலொழிய நாம் முன்னேற முடியாது என்பது உறுதி. இல்லாவிடில் தேங்கிய சாக்கடையாக நமது சமுதாயமும்—அதில் புரண்டு இன்பங் காணும் பன்றிகளாக நம் மக்களும் இருக்கவேண்டியிருக்குமென்பது உண்மை. எனவே, முட்டுக் கட்டைகளை ஒழிக்கவேண்டியது தமிழ் மக்களின் முக்கிய—முதற் பணியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—22-5-1959]

## 5. நாம் அஞ்ஞானிகள்

ஞானம் என்றால் அறிவு என்று பொருள்; அஞ்ஞானம் என்றால் (பகுத்து அறியும்) அறிவற்ற தன்மை என்பது பொருள். இன்றைய மக்களாகிய நாம் பெரும்பாலோர் (பகுத்தறிவற்ற) அஞ்ஞானிகளேயாவோம். இதன் காரணம், நாம் இயற்கைத் தன்மையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், இயற்கைக்கு மாறுபாடான கடவுள், மதம், தெய்வீகம், தெய்வீக முன்னோர் கண்ட முடிவு என்பனவாகியவற்றிற்கு அடிமைகளாகிவிட்ட காரணத்தால் மெய்ஞ்ஞானம் என்பது நம்மை அணுகாமலே போய்விட்டது.

மெய்ஞ்ஞானம், அஞ்ஞானம் என்ற சொற்களுக்கு உண்மையான பொருள் என்ன வென்று பார்த்தால் மெய்ஞ்ஞானி கவலை அற்றவனாகவும் அஞ்ஞானி கவலை கொண்ட வனாகவுமே இருப்பான் என்பதுதான்.

கவலை என்பதன் பொருள்—பேத நிலை.

கவலையற்ற என்பதன் பொருள்—பேதமற்ற (அபேத) நிலை என்பதேயாகும்.

மனிதன் பகுத்தறிவு உரிமையுடையவனானதால் அவன் கண்டிப்பாக—கட்டாயமாக அபேத நிலையில் உள்ள மெய்ஞ்ஞானியாகவே இருக்கவேண்டியவன் ஆவான். ஆனால், அப்படிக்கில்லாமல் பேத நிலைக்கு ஆளாகி அஞ்ஞானியாக இருந்துவருகிறான்.

மனிதருக்குள் (சமுதாய வாழ்வில் வாழ்ந்துவரும்) மனித சமுதாய ஜீவியத்தில் பேதநிலை ஏன் இருக்கவேண்டும் என்பது சிந்திக்கத் தக்கதாகும். அதிலும் மனித சமுதாயத்தை அடக்கி ஆட்சிபுரியும் அரசு என்ற ஆட்சிக்கு உட்பட்ட மக்களிடையில் பேத நிலை ஏன் இருக்கவேண்டும்? ஏன் இருக்கிறது? என்று சிந்திப்போமானால்,

அதன் விடை என்னவென்றால், மனித சமுதாயத்தை அடக்கி ஆளும் ஆட்சி அஞ்ஞான ஆட்சியாய் இருக்குமானால், அது கண்டிப்பாய்ப் பேதநிலை உள்ள ஆட்சி யாய்த்தான் இருக்கும்.

மனித சமுதாயத்தை அடக்கியாளும் ஆட்சி மெய்ஞ்ஞான (பகுத்தறிவு) ஆட்சியாய் இருக்குமானால், அது கண்டிப்பாய் வாழ்வில் பேதநிலை அற்ற அபேதநிலை ஆட்சியாகத் தான் இருக்கவேண்டும், இருந்துதான் தீரும்.

நம் நாட்டில் இதுவரை இருந்துவந்த ஆட்சி முறையானது அஞ்ஞான ஆட்சி; அதாவது, பேதத்தை நிலை நிறுத்துவதும் மக்கள் 100-க்கு 100 பேரையும் கவலைக்கு, போதாமைக்கு உட்படுத்துவதுமான ஆட்சியே நடந்து வந்திருக்கிறது.

இன்று ஒவ்வொரு மனிதனும் மற்றவனைவிட மேலான நிலையில் இருக்கவேண்டும் என்ற அவாவினால் போட்டி போடுவோனாகி, சதா கவலைக்குள்ளாகி, பல தொல்லை களுக்கும் ஆட்பட்டவனாகவே இருந்து வருகின்றான். இதுதான் 'பகுத்தறிவு' ஆறறிவு உடைய மகனுக்கு அழகு.

படிப்பகம்

www.padippakam.com



எனவே, ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் வித்தியாசம் என்ன என்று பார்ப்போமானால்—முதலாவது, ஆத்திகன் புராணங்கள் கூறுபவையெல்லாம் உண்மை என்று நம்ப வேண்டும் என்கின்றான். நாத்திகன் அவைகளை அப்படியே ஒப்புக்கொள்ள மறுக்கிறான். இவ்வளவுதான் ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் உள்ள உண்மையான வித்தியாசம்.

ஒருவன் ஒன்றை உண்டு என்று நம்புவதனாலே உயர்ந்த நெறியுடையவனாக ஆகிவிடமாட்டான்; இல்லை என்று மறுப்பதனால் அதனாலேயே நெறிகெட்டவனும் ஆக மாட்டான். ஏனெனில், நம்பிக்கையும் அவநம்பிக்கையும் அதனதன் ருசுவைப் பொறுத்தது.

வேதங்களெல்லாம் கடவுள் வாக்கென்றெண்ணி ஆத்திகன் அவைகளை நம்புகிறான் என்றாலும், யாரோ சிலர் வேதங்களெல்லாம் கடவுள் வாக்கு என்று சொன்னதை நம்பித்தான் அவனும் வேதங்களைக் கடவுள் வாக்கென்று நம்புகிறானே அல்லாமல் தனக்குத் தேவையான ருசுவெல்லாம் கிடைத்து விட்டது என்று அல்ல.

ஆனால், அவன் அவ் விஷயத்தைச் சற்று நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால், 'வேதங்கள் கடவுள் வாக்கு' என்று கூறுவது கடவுள் அல்ல என்பதும், மனிதன்தான் என்பதும்; வேதங்களுக்கும் கடவுளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பதும் அவனுக்கு நன்கு புலனாகாமல் போகாது.

ஏனென்றால், என் ஆத்திக நண்பர்களில் எவரும் ஒருபொழுதும் கடவுளைக் கண்டதே கிடையாது. கடவுளிடமிருந்து வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ யாதொரு செய்தியும் அவர்களுக்கு வந்ததும் இல்லை.

வேதங்கள் எல்லாம் 'கடவுள் வாய்ப் பிறப்பு' என்பதற்குக் கடவுளிடம் இருந்து நேர்முகமான தெளிவு எதுவும் அவர்களுக்குக் கிடையவும் கிடையாது.

எல்லாம் கடவுள் வாய்மொழி என்று நம்புவதற்கு ஆதாரமாய் இருப்பதெல்லாம், 'ரிஷி வாக்கியங்கள்' என்பவைகளும், புராணங்கள் என்பவைகளும், கடவுள் அருள் பெற்றவர்கள் என்பவர்கள் சொன்னார்கள் என்று எழுதிவைக்கப்பட்டவைகளும்தாம். ஆனால், அவை நம் கண்ணெதிரே மனிதர்களாலேயே எழுதப்பட்டு, மொழிபெயர்க்கப் பட்டு, அச்சிடப் பெற்றதையும், பெறுவதையும் பார்க்கிறோம்.

ஓ! ஆத்திக நண்பனே! வேதங்கள் எல்லாம் கடவுள் ரிஷிகளுக்கு உபதேசம் செய்ததாக நீ நம்புகிறாயே ஒழிய, கடவுள் அவ்வாறு உபதேசம் செய்ததாகக் கடவுள் உன்னிடம் நேரில் சொன்னது கிடையாதே! நீ பார்த்ததும் கிடையாதே; வேதங்கள் எல்லாம் கடவுள் வார்த்தை என்று யாரோ சொன்னதைத்தானே நீ நம்பிக்கொண்டு இருக்கிறாய்?

ஆனால் உண்மையில், 'ரிஷிகள்' யாரென்று உனக்குத் தெரியாது! வேதங்களை எழுதியவர் யாரென்றும், எப்பொழுதென்றும் நீ அறிவாயா? வேதங்களை மொழி பெயர்த்ததும், தொகுத்ததுங்கூட இன்னார் என்றும் உனக்கு நேரில் தெரியாது.

எனவே, உனக்குத் தெரியாத—யாரோ சிலர் சொல்வதை ஆதாரமாகக் கொண்டு, 'வேதங்கள் எல்லாம் தேவ வாக்கு' என்று நீ நம்புகிறாய். ஆகவே, வேதங்கள் தேவ வாக்கு அல்ல என்று நான் மறுப்பதனால் அது தேவ வாக்கை நான் மறுத்ததாக எப்படி ஏற்படும்? ஒருக்காலும் ஏற்படவே மாட்டாது; மனித வாக்கை மறுப்பதாகவேதான் ஏற்படும்.

ஆனால், நாத்திகர்கள் வேண்டுமென்றே ஏதோ துர்எண்ணத்தின்பேரில் வேத சாஸ்திரங்களை மறுப்பதாக ஆத்திகர்கள் பழிசுமத்துகிறார்கள். அதிலுள்ள உண்மை என்னவெனில், நாத்திகன் தனது பகுத்தறிவுக்குச் சரி என்றும், உண்மை என்றும் பட்டதை மாத்திரந்தான் நம்புகின்றான். மற்றபடி, சாமான்ய ஜனங்கள் கைக்கொண்டொழுகும் 'மதங்கள்' அவனது பகுத்தறிவுக்குப் பொய் என்று தோன்றுவதனாலும், அந்தப்படி



தோன்றும் மதம் மக்களுக்கு எவ்வித நன்மையும் பயக்காது என்றும், தீமையே பயக்கும் என்றும் அவன் நம்புவதாலும், அனுபவத்தில் காண்பதாலும், நாத்திகன் அவற்றை அடியோடு மறுப்பதோடு எதிர்க்கவும் செய்கிறான்.

அன்றியும், தன் பகுத்தறிவுக்குச் சரி என்று தோன்றுபவைகளை வெளிப்படையாகக் கூறி, அவைகளைப் பகிரங்கமாய்ப் பிரச்சாரம் செய்யும் நாத்திகன் மிக ஒழுங்காகவே நடக்கிறான். இவ்விஷயத்தில் ஒரு 'போப்'புக்கோ அல்லது ஒரு மதாச்சாரிக்கோ உள்ள பெருமை அவனுக்கும் உண்டு.

தவிர, நாத்திகர்கள் எல்லாம் சுயநலக்காரர்கள், நெறியற்றவர்கள் என்று குறை கூறுவதானது சிறிதும் புத்தியற்றவர்கள் கூறும் கூற்றாகும்.

ஏனெனில், அப்படிச் சொல்லுதலானது 'அபேதவாத (சோஷியலிஸ்ட்) தலைவர்கள் எல்லாம் சுயநலக்காரர்கள், நெறியற்றவர்கள்' என்று குறைகூறுவதற்கு ஒப்பாகவே இருக்கிறது.

உண்மையில், நாத்திகர்களையும், சோஷியலிஸ்ட் தலைவர்களையும் ஜனங்கள் ஆதரிப்பதில்லை; மதிப்பதும் இல்லை; அன்றியும் பழிக்கவும் வெறுக்கவும் செய்கிறார்கள். ஆகவே பொதுஜன மதிப்பில்லாத இந்தப் பழியினாலும், வெறுப்பினாலும் நாத்திகர்களுக்கு என்ன விதமான சுயநலமோ, இலாபமோ, பெருமையோ இருக்க முடியும்?

'ஜாதிப் பிரஷ்டனாகவோ, பொதுஜன மதிப்பை இழக்கவோ பொருள் நஷ்ட மடையவோ, இழக்கப்படவோ நீ இஷ்டப்பட்டால் மாத்திரம் நாத்திகன் அல்லது சோஷியலிஸ்ட் எனப் பெயர் எடுப்பாயாக!' என்று ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, இதில் ஒரு மனிதனுக்கு சுயநலம் இருக்குமா?

எனவே, நாத்திகத்தினால் ஒருவன் எத்தகைய இலாபமும் அடையமாட்டான்; நாத்திகன் எனப் பெயர் எடுப்பது ஒரு மனோகரமானதும் கீர்த்தி அளிப்பதுமான செயலும் அல்ல.

'வேத உண்மை'யை மறுப்பவர்களுக்கெல்லாம் நாத்திகப் பட்டம் சூட்டுவது, தன் நீங்காக் கடமையென ஆத்திகன் நம்புகிறான்.

கடவுளைக் காப்பாற்றுவதும், நாத்திகர்களைப் பழி வாங்குவதும் தன் கடமையென ஆத்திகன் கருதுகிறான். எல்லா மதக்காரர்களும் அவ்வாறே எண்ணுகிறார்கள்.

இந்தக் குரூர நம்பிக்கையினால் உண்டான போர்கள் எத்தனை! கடவுளைக் காப்பாற்றப் புறப்பட்டவர்களால் கொல்லப்பட்டவர்கள் எத்தனை! சித்திரவதை செய்யப்பட்டவர்கள் எத்தனை! இம்சிக்கப்பட்டவர்கள் எத்தனை!

இந்த 'மூடச் சாம்பிராணி'களின் பாதுகாப்பை விரும்புமாறு 'கடவுள்' அவ்வளவு பலவீனமானவரா? தன்னை எதிர்த்தவர்களைக் கொல்லவும் பழிவாங்கவும் இயலாது—கூலிகளை நியமிக்க வேண்டியவாறு அவர் அவ்வளவு சக்தியற்றவரா?

கடவுளைக் காப்பாற்ற ஆத்திரம் கொள்ளும் ஆத்திக நண்பனே! நாத்திகரிடத்திலும் அவிசுவாசிகளிடத்திலும் நீ கொண்டுள்ள வெறுப்பு எவ்வளவு கொடுமையானது என்று நீ எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

உலக நாகரிகத்தின் உண்மைச் சரித்திரந்தான் யாது? அவிசுவாசிகளுடையவும், நாத்திகர்களுடையவும் வெற்றியே உலகத்தின் உண்மைச் சரித்திரமாகும். அவர்கள் பொய் நம்பிக்கைகளை மறுத்ததினாலேயே உண்மை வெளியாகி உலகம் நாகரிகம் பெற்று வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



மற்றும், இத் தொல்லைக்கு ஆக்கம் கொடுத்து, மேலும் மேலும் மனிதனை கீழ்த்தர மனிதனாக ஆக்குவதற்கு அரசாங்கம் கடவுளைப் பயன்படுத்திக்கொண்டால், அதற்காகவே அரசாங்கம் கடவுளைக் காப்பாற்றினால், பிரச்சாரம் செய்தால் அது அஞ்ஞான ஆட்சி என்பதையே தெளிவுபடுத்துவதாகும்.

இதனால் மக்களுக்குக் கவலையும், கேடும், போட்டியும், போராட்டமும் மாத்திர மல்லாமல் ஆட்சிக்கும் பல தொல்லையும், தொந்தரவும் ஏற்பட வழியாகிறது.

நாடு வளர்ச்சி பெறாமல் போனதற்கும், மக்கள் கீழ்மக்களாகவும், ஒழுக்கம், நாணயம் அற்றவர்களாகவும் ஆனதற்கும் இதுவே காரணமாகிறது.

உண்மையான நல்ல ஆட்சி, சமநிறை ஆட்சி என்றால், துலாக்கோல் முள்ளும் தட்டும் போல், ஒவ்வொரு மனிதனும் மற்ற மனிதனுக்கு சமநிறை போல் ஆக்கப்படும் ஆட்சியாக இருக்கவேண்டும்.

மனிதன் பிறக்கும்போது மேல் சாதிப் பிறவியாய்ப் பிறப்பதில்லை; மனிதன் பிறக்கும்போது செல்வவானாகப் பிறப்பதில்லை. அதுபோல் மனிதன் பிறக்கும்போது கீழ் சாதியானாகவும், தரித்திரனாகவும் பிறப்பதில்லை. அப்படியிருக்க, மனிதரில் கீழ்சாதி, தரித்திரன், மேல்சாதி, செல்வவான் என்பதாக ஏன் இருக்கவேண்டும்? மற்றும், மக்களை சமமாய், நீதியாய் ஆட்சி புரிய ஒரு அரசாங்கம் இருந்தும் இப்படிக் கீழ்–மேல் நிலை ஏன் இருக்கவேண்டும்? ஏன் இருக்க விடவேண்டும்?

பேதமற்ற நிலையுடைய மக்களையும், பேதமற்ற தன்மையுடைய மக்களையும் கொண்ட ஒரு ஆட்சியையும் காணவேண்டுமானால் அரசர்களையும், கடவுள்களையும், தரகர்களையும் கொன்று குவித்துத்தான் காணமுடிந்திருக்கிறது என்ற நிதர்சனமான எடுத்துக்காட்டுதனை இப்படிப்பட்ட நிலையைக் கண்ட நாடுகளில் காண்கிறோம்.

இப்படிப்பட்ட நிலையைக் காண்பதும் குற்றமல்ல என்று தோன்றும்படியாகவே அதாவது, இம் மாதிரிப் பேத நிலையை உண்டுபண்ணியவர்களுக்கும், அதை ஆதரிப்பவர் களுக்கும், அதனால் நலம் அனுபவிப்பவர்களுக்கும் தண்டனை கொடுப்பதை ஒக்குமே தவிர, கொன்று குவித்தல் என்பது கொலைபாதகமானது என்ற கருத்தில்தான், இம் மாதிரி மரண தண்டனைகள் நடைபெற்றிருக்கிறது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

ஆதலால், அஞ்ஞான ஆட்சியை ஒழித்துக்கட்டி, பேதமற்ற மெய்ஞ்ஞான ஆட்சியை ஏற்படுத்துவது என்பது வியாதிக்காரன் பிழைக்க, அவனுக்கு இரண சிகிச்சை (ஆபரேஷன்) செய்வது போன்றுதான் ஜீவகாருண்ய செய்கையாக ஆகுமே ஒழிய, ஒரு நாளும் இம் முயற்சிக்குத் தவறான காரியமாக ஆகாது என்பது நமது கருத்து. இந்தக் கருத்தில்தான் இந்நிலை அடைய பல நாடுகளில் பெரும் பெரும் புரட்சிகள் ஏற்பட்டிருக் கின்றன என்று சொல்லலாம்; ஏற்படக்கூடும் என்றும் சொல்லலாம். மக்கள் ஞானிகளாக, பகுத்தறிவுவாதிகளாக ஆக்கப்பட்ட நாடுகளில் இம் முயற்சிகள் துவக்கப்படுமானால் இம்சைக்கு இடமில்லாமல் இஷ்டபூர்வமான முறையில் வெற்றியடையலாம்.

ஏன் அஞ்ஞான ஆட்சியில் பேதம் ஏற்பட்டது என்று சொல்லவேண்டியதாகிறது என்றால், ஆட்சியின் அனுமதியினாலும், பாதுகாப்பினாலும்தான் மேல்சாதியானும் செல்வவானும் வாழ முடிகிறதே தவிர, இயற்கைக்கு–நீதிக்கு–சமத்துவத்திற்கு விரோத மான நிலை தானாக ஒரு விநாடியும் வாழமுடியாது.

பேதநிலை எதற்காக இருக்கவேண்டும்?

பகுத்தறிவு காரணமாக துக்கமற்று, கவலையற்று, குறைவற்று, உள்ளதைக் கொண்டு திருப்தியடைந்து வாழவேண்டிய உரிமை உடையவர்களே ஆவார்கள்.



இந்தப்படி மக்கள் கவலை, துக்கம், குறைவற்று வாழ்கிறார்களா என்பதை மேற் பார்வை செய்வதுதான் மெய்ஞ்ஞான ஆட்சி என்பதாகும்.

[‘விடுதலை’–தலையங்கம்—21-9-1964; 8-2-1969]

## 6. நம்பிக்கையாளரும் நம்பிக்கை மறுப்பாளரும்

ஒருவனை ‘நாத்திகன்’ என்று அழைப்பதனால் அவன் நன்னெறியற்றவன் என்று பிறர் கருதவேண்டும் என்பது அழைப்பவர்களின் கருத்து.

கொஞ்ச காலத்துக்குமுன் ‘நாத்திகர்’ எனப்படுவோர், ‘சமுதாயப் பிரஷ்டர்’ களாகக்கூட மதிக்கப்பட்டனர்.

அதற்கும் கொஞ்ச காலத்திற்குமுன் நாத்திகர் எனப்படுவோரை அரசர்கள் இம்சித்தும் வந்தனர். அதற்கும் வெகு காலத்திற்குமுன் நாத்திகர் எனப்படுவோருக் கெல்லாம் சித்திரவதையும், மரண தண்டனையும் விதிக்கப்பட்டுவந்தன.

இப்பொழுதோ அந்த நிலைமை முற்றிலும் மாற்றம் அடைந்துவிட்டது என்றாலும், சாமான்ய ஜனங்களால் மதம் என்று கூறப்படுவதை மறுப்பவர்களையெல்லாம் தூஷித்துச் சமுதாயப் பிரஷ்டர்களாகக் கருதுவதும், அறிவு வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி ஞானமுன்னேற் றத்துக்கும் தடை உண்டுபண்ணி, வைதிகத்துக்கு ஆதரவளிப்பதுமாயிருந்து வருகிற தானது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது.

நிற்க, வேதங்களெல்லாம் தெய்வ வாக்கென்றும், வேதங்களை மறுப்பது ‘கடவுள் இல்லை’ என்று மறுப்பதற்கு ஒப்பாகும் என்றும் மக்கள் பொதுவாகக் கருதி இருக்கும் நம்பிக்கையே, சாமான்ய மதக் கோட்பாடுகளை மறுப்பவனைக்கூட நாத்திகன் என்று பழிக்கப்படுவதற்கு மூலகாரணமாய் இருக்கிறது.

ஆனால், வேதங்களெல்லாம் தெய்வத்தின் சொந்த வாக்கென்று நம்புவதென்பது நாத்திகனுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது.

ஆகவே, நாத்திகன் கடவுள் வார்த்தைகளையாவது, கடவுள் கட்டளைகளையாவது ஒருபோதும் மறுக்கவில்லையென்பதும், மனிதனுடைய வார்த்தைகளையும் கட்டளை களையும் மட்டுமேதான் அவன் மறுக்கிறான் என்பதும் யோசித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சர்வமும் அறியும் தன்மையும், சர்வ தயாபரத் துவமும் உடைய கடவுள் என்பதாக ஒன்று உண்டென்று நம்பின—அறிந்த எவனும் அப்படிப்பட்ட கடவுள் ஒருவர் இல்லை என்று மறுக்க முன்வரவே மாட்டான். இதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஏனெனில், அப்படிப்பட்ட கடவுளை இல்லையென்று மறுப்பதால் அவனுக்கு என்ன இலாபம்?

கடவுள் தண்டனையை அலட்சியம் செய்தாவது இப்படிச் சொல்லவேண்டும் என்கின்ற அவசியம் அவனுக்கு என்ன வந்தது?

அன்றியும், வேதங்களெல்லாம் கடவுளாலேயே கூறப்பட்டன என்று மனப் பூர்வமாக அறிந்த எவனும்—சந்தேகத்துக்காவது ஆளான எவனும், ‘வேதங்கள் கடவுள் வாக்கல்ல’ என்று மறுக்கவும் துணியமாட்டான்.

வேதங்கள் எல்லாம் தெய்வ வாக்கு என்று கூறுவதற்கு வெறும் குருட்டு நம்பிக்கையும் நிர்ப்பந்தமுமே ஆதாரமாக இருக்கின்றனவே ஒழிய, எவ்வித ருசுவோ, பிரத்தியட்சப் பிரமாணமோ ஒன்றும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



பகுத்தறிவு அடையமுடியாமல் தடை செய்துகொண்டு வந்தார்கள். மக்களிடையே பகுத்தறிவைத் தடைப்படுத்த கடவுள், மதம், சாஸ்திரம் முதலியவைகளைப் புகுத்தி, அவைகளை மக்கள் நம்பும்படி செய்துவிட்டார்கள். கடவுள் என்றால் ஒத்துக்கொள்ளவேண்டும். எங்கே? ஏன்? எப்படி? என்று கேட்கக்கூடாது என்று கூறிவிட்டார்கள். இதைப்போலவே மதத்திற்கும்—என்ன? எப்படி? என்று சிந்திக்கக்கூடாது என்று கூறிவிட்டார்கள். இதைப் போலத்தான் சாஸ்திரமும்.

இதில் நாம் பகுத்தறிவு என்றால் என்ன என்பதற்கு விளக்கம் காண்கிறோம். பகுத்தறிவு என்பது ஆதாரத்தைக்கொண்டு தெளிவடைவது; மூடநம்பிக்கை என்பது ஆராயாமல் ஏற்றுக்கொள்வது என்பது பொருள். நமது இழிநிலை, நமது முட்டாள்தனம் மாறவேண்டுமானால் நாம் ஒன்றும் பெரிய கஷ்டப்பட்டு முயற்சி செய்யவேண்டியதில்லை. பகுத்தறிவு கொண்டு தாராளமாகச் சிந்தித்தால் போதும்.

நமது கொள்கை பகுத்தறிவு; பகுத்தறிவு என்றால் நாத்திகம் என்பது பொருள். அறிவுகொண்டு சிந்திப்பதுதான் நாத்திகம் ஆகும். கடவுள் மனதுக்கும், வாக்குக்கும் எட்டாதது என்று கூறப்பட்டாலும் அதுதான் உலகத்தை உண்டாக்கி நம்மை எல்லாம் நடத்துகின்றது; எல்லாவிதமான சர்வசக்திகளும் உடையது என்று கூறப்படுகிறது.

அப்படிப்பட்ட கடவுள் நம்மைத் தவிர்த்து மற்ற உலகுக்கு ஒன்றுதான். ஆனல் நமக்குத்தான் ஆயிரக்கணக்கில் கடவுள்கள்!

நம்மைத் தவிர்த்த மற்ற உலகிற்கு,—கடவுளுக்கு உருவம் இல்லை; நமது கடவுள்களுக்கோ பல்லாயிரக்கணக்கான உருவங்கள். மற்ற நாட்டுக் கடவுள்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை; நமது நாட்டுக் கடவுள்களுக்கோ மனிதனுக்கு வேண்டியது எல்லாமுமே வேண்டும். மற்ற நாட்டுக்காரர்கள் கடவுள்—யோக்கியம், நாணயம், ஒழுக்கம் உடையது என்று உண்டாக்கி இருக்கிறார்கள். நமது நாட்டுக் கடவுள்களுக்கோ இந்த ஒழுக்கம், நாணயம் எதுவும் கிடையாது. மனிதனில் கீழ்த்தரமானவனுக்கு என்னென்ன குணங்கள் இருக்குமோ அவைகள் அத்தனையும் கடவுளுக்கு ஏற்றிவிட்டிருக்கிறார்கள். இப்படி ஏராளமான பேதங்களையும் நடப்புக்கு ஒவ்வாத காரியங்களையும், காரியத்திற்குக் கேடான குணங்களையும் கடவுளுக்குக் கற்பித்திருக்கிறார்கள்.

இவைகளை எல்லாம் நம்புவதுதான் மூடநம்பிக்கை. நல்லவண்ணம் சிந்தித்து ஆராய்ந்து, ஏற்கவேண்டியதை ஏற்றுக்கொண்டு, மற்றதைத் தள்ளிவிடுவதுதான் பகுத்தறிவு.

நாம் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தால், பகுத்தறிவுக்கு ஏற்ற கடவுள் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்த்தால், இல்லவே இல்லை; உண்மையில் ஒரு கடவுள் இருக்குமானால் நமக்குத் தெரியாமல் இருக்கவேண்டிய அவசியம் என்ன? அந்தக் கடவுள் தாம் இருப்பதாக நமக்காவது ஏன் தெரியப்படுத்தக்கூடாது?

ஆகவே, மக்கள் இவற்றை எல்லாம் அறிவுகொண்டு சிந்தித்தல் வேண்டும். அறிவு கொண்டு சிந்திப்பதுதான் பகுத்தறிவு. பகுத்தறிவுக்குத் தடையாக இருப்பதும், சிந்திக்கவொட்டாத நிலையை ஏற்படுத்தி வைப்பதும் கடவுள் பற்றிய மூடநம்பிக்கைதான் என்பதையும் இவற்றிற்கெல்லாம் முன்னோடிகளான பார்ப்பனர்களின் சதியையும் மக்கள் உணரவேண்டும்; சிந்திக்கவேண்டும்.

சிந்தனைதான் அறிவை வளர்க்கும்; அறிவுதான் மனித வாழ்வை உயர்த்தும்.

['விடுதலை'—தலையங்கம்—20-6-1973]



# 3. மனித வாழ்க்கை

## 1. மனிதராசி உயர்வானதா?

உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் தன்தன் சரீரத்தில் பற்றுக்கொண்டவைகளாகவே இருந்துவருகின்றன. அந்தச் சரீரப்பற்று என்பது, சரீரமானது ஜீவித்திருப்பதற்கு ஆதாரமானது என்கின்ற தத்துவத்தினாலேயே ஏற்பட்டதாகும். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்காத ஜீவன் கிடையவே கிடையாது எனலாம். ஆனால், எல்லா ஜீவராசிகளும் என்றைக்காவது ஒருநாள் ஜீவிதப்பற்று அற்று செத்தேபோகும் என்பது மாத்திரம் அனுபவ சிந்தாந்தமாகும்.

உலகிலுள்ள மற்ற ஜீவராசிகளைப் போலவே மனித வர்க்கம் என்னும் ஜீவராசியும் ஒன்றாகும். ஒரு மனிதனும், ஒரு யானையும், ஒரு எறும்பும், ஒரு சிறு பேனும், பூதக் கண்ணாடி மூலம் பார்த்தறியத்தக்க அதிநுட்பமான ஒரு கிருமியும் எல்லாம் ஒரே தத்துவத்தைக்கொண்ட ஜீவராசிகளேயாகும்.

ஆனால், அவை தோற்றதிலும், செயலிலும் வேறுபட்டிருக்கலாம். 'அப்படியானால் மனிதனுக்கும் கழுதைக்கும் வித்தியாசமில்லையா?' என்று ஒருவர் கேட்கலாம். ஜீவ தத்துவத்தில் வித்தியாசமில்லை என்றுதான் பதில் சொல்லுவேன். ஏதாவது வித்தியாசம் உண்டு என்று சொல்லவேண்டுமானால், ஒரு நாய் ஜீவனுக்கும், ஒரு கழுதை ஜீவனுக்கும் என்னவிதமான வித்தியாசமோ அந்தவிதமான வித்தியாசம்தான் உண்டு என்று சொல்லலாம். ஆனால், அவ்வித்தியாசம் அளவில் டிகிரியில் (Degree) ஜாஸ்தியாகவோ கம்மியாகவோ இருக்கலாம் என்றுதான் கொள்ளவேண்டும்.

இன்னும் பேசப்போனால், தாவர வர்க்கங்களும், ஜீவ வர்க்கங்களும்கூட தத்துவத்தில் அதாவது—உற்பத்தித் தத்துவத்திலும், வாழ்வுத் தத்துவத்திலும், அழிவுத் தத்துவத்திலும் ஒரே தத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு இருந்துவருகின்றன என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

வித்தின் மூலம் எப்படி மரம், செடிகள், புல் பூண்டுகள், உற்பத்தியாகின்றனவோ அதுபோல ஆண்-பெண் சேர்க்கை விந்துமூலம் ஜீவப் பிராணிகள் உற்பத்தியாகின்றன. வித்தில்லாமல் எப்படி சில தாவர வர்க்கங்கள் உற்பத்தியாகின்றனவோ, அதுபோல்தான், ஆண்-பெண் சேர்க்கையில்லாமல் பல ஜீவ வர்க்கங்களும் உற்பத்தியாகின்றன.

தாவர வர்க்கங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசமும், மாறுபட்ட சக்தியும் இருப்பது போலவே, ஜீவ வர்க்கத்தினிடமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமும், மாறுபட்ட சக்தியும் இருந்துவருகின்றது.

மனித ஜீவ வர்க்கத்திடமுள்ள சில குணங்கள் எப்படி மற்ற ஜீவராசிகளுக்கு இல்லையோ, அதுபோன்றே—மற்ற ஜீவராசிகளுக்கு உள்ள சில குணங்கள் மனித ஜீவ வர்க்கத்திற்கு இல்லாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு கழுதைக்கும் ஒரு குரங்குக்கும் உள்ள வித்தியாசத்தைக் கணக்குப் பார்த்து, ஒரு குரங்குக்கும் ஒரு மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், பின்கண்ட வித்தியாசத்தின் அளவு அதிகமாய்க் காணமுடியாது. ஆகவே, மனித ஜீவன், ஜீவப் பிராணிகளிலெல்லாம் மேலானதென்றும், தனிப்பட்டதென்றும், அதற்கு மாத்திரமே சில தனித் தத்துவங்களுண்டு என்றும், கருமம், மதம், மேல் லோக வாழ்வு, கடவுள், கடவுள் தண்டனை, மன்னிப்பு, சன்மானம் ஆகியவை சொந்தமென்றும், மனிதனுக்கே சில தத்துவங்கள்—கடமைகள், பிரார்த்தனைகள் முதலியவை உண்டென்றும் சொல்லுவதில் ஏதாவது அர்த்தமிருக்க இடமுண்டா என்று பார்த்தால், இவை வெறும் கற்பனைகளென்றே விளங்கும். மற்றும், கடவுளுக்கும் மனிதனுக்கும் இருக்கும் சம்பந்தமும், பொறுப்பும் மற்ற ஜீவராசி

படிப்பகம்

www.padippakam.com



அக் காலத்தில் வாழ்ந்த ஆத்திகக் கொள்கை உடைய 'புண்ணிய சீலர்கள்' உண்மையை வெளியாக்கப் பாடுபட்ட அவிசுவாசிகளையும் நாத்திகர்களையும் நிந்தனை செய்தார்கள்; சித்திரவதை செய்தார்கள்; இம்சித்தார்கள்; கன்னெஞ்சத்தோடு கழுவேற்றினார்கள்; கொலை புரிந்தார்கள். அந்த ஆத்திகர்களின் சந்ததிகளோ கர்ண பரம்பரைச் செய்திகளை யெல்லாம் உண்மையென நம்பினார்கள். ஆனாலும், அவைகளைத் தைரியமாய் மறுத்துக்கூறி இறந்துவிட்ட 'அவிசுவாசிகளை' யெல்லாம் இப்பொழுது வாழ்த்துகிறார்கள். ஆனால், இப்பொழுது உண்மையை விளக்குவதற்குப் பாடுபட்டுக் கொண்டு உயிருடன் இருக்கும் 'அவிசுவாசிகளை'யெல்லாம் குற்றம் சொல்ல முயற்சிக் கிறார்கள்.

சூரியமண்டல உண்மைகளை முதன்முதலில் வெளியிட்ட கோபர்நிக்கஸ் சமுதாயப் பிரஷ்டரானார். இப்பொழுதோ பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்று எல்லா மக்களும் நம்புகிறார்கள். முன் நிந்திக்கப்பட்ட கோபர்நிக்கஸ் பெயரும் இப்பொழுது போற்றப் படுகிறது.

ஒவ்வொரு நட்சத்திரமும் உண்மையில் ஒவ்வொரு சூரியனுக்கு ஒப்பானது என்று முதன்முதலில் கூறிய புரூனோ தீக்கிரையாக்கப்பட்டார்.

வானசாஸ்திர உண்மைகளை வெளியிட்டு, பாதிரிகளின் குருட்டு நம்பிக்கைகளை யொழித்த கலிலியோ சிறையில் சித்திரவதை செய்யப்பட்டார்.

இப்பொழுது அதே கிறிஸ்தவர்கள் கலிலியோ கூறியவைகள் எல்லாம் உண்மை யென்று ஒப்புக்கொள்கிறார்கள். அவரது பெயரும் இப்போது உலகத்தில் மதிப்புப் பெற்றிருக்கிறது.

இவ்வண்ணம் ஆராயப் புகுந்தால் அவிசுவாசிகள்—நாத்திகர்கள் என்பவர்கள் கூறியவைகளே உண்மையென்றும்; விசுவாசிகள்—ஆத்திகர்கள் என்பவர்கள் கூறுப வைகள் பொய்யென்றும் விளக்கப் பதினாயிரக் கணக்கான திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டலாம்.

இப்பொழுது நாளுக்குநாள் கொஞ்சம் கொஞ்சமாக வைதிகர்கள் பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

காலம் செல்லச் செல்ல சாத்திர உண்மைகளை (சயின்ஸ்) ஆத்திகர்களும் வைதிகர் களும் ஒப்புக்கொண்டுதான் வருகிறார்கள்.

எனினும், 'உண்மை நம்பிக்கையுடையவர்கள்' அல்லது ஆத்திகர்கள், நாத்திகர் களை வெறுக்கிறார்கள்; நாத்திகர்களைத் தூற்றாமல் இருப்பதில்லை; தூற்றுவதைத் தம் முக்கிய கடமையென்றும் நம்புகிறார்கள்.

டார்வின் கொள்கைகளை நாத்திகக் கொள்கை, மூடக்கொள்கை என்று வெறுத் தவர்கள் இப்போது அந்தப் பரிணாம வாதத்தைச் சந்தோஷமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உண்மை ஆராய்ச்சியாளரை 200 வருஷங்களாகச் சித்திரவதை செய்தும், கொலை புரிந்தும் வந்த ஆத்திகன் இன்னும் திருப்தி அடையவில்லை.

மதப் புரட்டுகளையும், வேதப் புரட்டுகளையும், புராணப் புரட்டுகளையும் ஒழிக்க முன் வருகின்றவர்களை நாத்திகர்கள் என்று ஆத்திகன் இப்பொழுதும் கூறிக்கொண்டே தான் இருக்கிறான்.

உதாரணமாக, 'கிறிஸ்தவர் அல்லாத பெண்களும் புருஷர்களும் எரி நரகத்திலாழ்ந்து தவிப்பார்கள்' என்று கிறிஸ்தவர்கள் கூறுவது வழக்கமாக இருந்தது. அது மூடநம்பிக்கை என்று எடுத்துக் காட்டினால் அவர்களுக்குப் பிடிக்கவில்லை.



'ஞான ஸ்நானம் பெறாத குழந்தைகள் எல்லாம் நரகம் புகுவார்கள்' என்று கிறிஸ்த வர்கள் நம்பி இருந்தார்கள். அது மூடநம்பிக்கை என்று கூறினால் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

மந்திரவாதத்திலும் சூனியத்திலும் அவர்களுக்கு நம்பிக்கையிருந்தது. ஆயிரக் கணக்கான மந்திரவாதிகளையும், சூனியக்காரர்களையும் அவர்கள் நெருப்பில் இட்டுக் கொளுத்தினார்கள்.

இப்பொழுது மந்திரவாதத்தைப் பற்றிப் பேசினால் அதே கிறிஸ்தவர்களுக்கு வெறுப்புண்டாகிறது; மந்திரவாதிகளை அஞ்ஞானிகள் என்கிறார்கள்.

'ஆதாம்', 'ஏவாள்', 'பிரளயம்' முதலிய புராணக் கதைகளை அவர்கள் நம்பி னார்கள். இப்பொழுதோ அவைகள் எல்லாம் உபமான கட்டுக்கதை என்றுகூற முன்வந்து விட்டார்கள்.

ஆறுநாட்களில் உலகம் உண்டுப்பண்ணப்பட்டதென்று அவர்கள் நம்பினார்கள். இப்பொழுது பூகர்ப்ப சாத்திரக் கொள்கைகளை மெல்ல மெல்ல ஒப்புக்கொள்கிறார்கள்.

ஓ! ஆத்திக நண்பர்களே! நாத்திகம் எனப்பட்டவைகளே இப்பொழுது 'வைதிகமாக' இருக்கின்றன என்று நீங்கள் உணரவில்லையா? நாத்திகன் என இம்சிக்கப் பட்டவர்கள் கூறியவைகள் எல்லாம் இப்பொழுது உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டுவிட வில்லையா? இன்று அவைகளைப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடமாகப் பாதிரிகளாலேயே கற்பிக்கப்படவில்லையா?

தற்காலம் உண்மையென நம்பப்படுபவைகள் முன்னூறு வருடங்களுக்கு முன் யார் கூறியிருந்தாலும் அவர்கள் அப்பொழுது கொல்லப்பட்டே இருப்பார்கள் அல்லவா? எனினும், ஒரு நூற்றாண்டுக்குப் பின் உண்மையென ஒப்புக்கொள்ளப்படுபவைகளை முன்னாடியே கூறுவோரை நீ நாத்திகன் என்று அழைக்கிறாய்!

சரித்திரத்திலிருந்தும், விஞ்ஞான சாஸ்திரத்திலிருந்தும் நீ ஒரு படிப்பினையும் கற்றுக்கொண்டாயில்லை!

நேற்று நம்பத் தகாததாய் இருந்தது இன்று நம்பத் தக்கதாய்விட்டதை நீ உணர்கிறாயில்லை!

இன்று நம்பத் தகாததாய் இருப்பது நாளை நம்பத் தக்கதாவதும் நிச்சயம்.

சுதந்திரமாகச் சிந்தனை செய்து சுதந்திரமாகப் பேசிய 'அவிசுவாசிகளாலே'யே உலக நாகரிகம் உருப்பெற்று இருக்கிறது; உருப்பெற்றும் வருகிறது.

அவர்கள் உயிருடன் இருந்தபோது அவிசுவாசிகள் என்றும், நாத்திகர் என்றும் வெறுக்கப்பட்டனர். ஆனால், இப்பொழுதோ அவர்கள் எல்லாம் உலக நன்மைக்காக உழைத்த 'புண்ணியாத்மாக்களாக' மதிக்கப்படுகிறார்கள். இன்றைய நாத்திகர்களும் பெரிதும் அப்படித்தான் ஆனவர்கள்.

['குடிஅரசு'—கட்டுரை—23-7-1949]

## 7. பகுத்தறிவுக்குத் தடைகள்

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு ஜீவநாடி உயிர்நாடி ஆகும். ஜீவராசிகளில் மனித னுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. இதில் மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்தநிலையில் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு காட்டுமிராண்டி என்பது பொருள்.

பகுத்தறிவு பெறும்படியான சாதனம் நமக்கு நீண்டநாட்களாகவே தடைப்படுத்தப் பட்டு வந்துள்ளது. நம்மை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய பார்ப்பனர்கள் நாம்



படிப்பகம்

www.padippakam.com



களுக்கு இல்லை என்று சொல்லமுடியுமா என்பதும் விளங்கும். அதுபோலவே, பாவமும் புண்ணியமும், சொர்க்கமும், கடவுள் பதத்தை அடையக்கூடிய தன்மையும் மற்ற ஜீவ ராசிகளுக்கு இல்லையென்று சொல்லமுடியுமா என்பதும் விளங்கும்.

ஒரு பூச்சியின் செய்கைக்குப் பாவம், புண்ணியம் உண்டானால்தான் ஒரு மனிதனின் செய்கைக்குப் பாவம், புண்ணியம் உண்டாக முடியும். மனிதனுக்குள்ள பகுத்தறிவு என்பது கடவுளால் தனிப்பட்ட காரியத்துக்காகக் கொடுக்கப்பட்டது என்றால், ஒரு யானைக்குள்ள தும்பிக்கை, ஒரு நாரைக்குள்ள நீண்ட மூக்கு, ஒரு முள்ளம்பன்றிக்கு இருக்கும் செதில் முட்கள், தேளுக்குள்ள கொடுக்கு, பாம்புக்குள்ள விஷம் போன்றவைகளெல்லாம் கடவுளால் தனிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டவை என்றுதானே சொல்லவேண்டும்? ஆதலால், ஒரு யானைக்குத் தும்பிக்கை விசேஷ உறுப்பாகவும் நீண்ட அவயவமாகவும் இருப்பதுபோலவே, மனிதனுக்குப் பகுத்தறிவுக்குள்ள நரம்புக்கூட்டும் மூளையின் பரிமாண—அதாவது அதிக சிந்தனா சக்திக்குள்ள உறுப்புக்கள் என்பவை விசேஷ உறுப்பாகவோ விசேஷ சக்தியாகவோ இருக்கின்றதென்பதே யல்லாமல், அதற்கு மாத்திரம் ஒரு தனி விசேஷத்துவம் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

உதாரணமாக, ஜீவப் பிராணிகளுடைய இந்திரியங்களின் விசேஷத்தை எடுத்துக் கொள்வோமானால் ஒரு எறும்புக்கு இருக்கும் மூக்கு மோப்ப சக்தி ஒரு மனிதனுக்குக் கிடையாது. உதாரணமாக, சர்க்கரையோ, பிஸ்கோத்தோ, ஒரு பெட்டிக்குள் இருக்குமானால் அதை மனிதனால் மோப்பத்தின் மூலம் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், ஒரு சிறு எறும்பு கண்டுபிடித்துவிடும். அதுபோலவே, பட்சிகளின் (கண்)பார்வை சக்தி ஒரு மனிதனுக்குக் கிடையாது. உதாரணமாக, சமீப தூரத்தில் இருந்தும் மனிதனுக்குத் தென்படாத ஒரு வஸ்துவானது, பூமிக்குமேல் ஒரு மைல், இரண்டு மைல் உயரத்தில் பறக்கும் பட்சியின் மிகச் சிறிய கண்களுக்குத் தென்பட்டு, அப் பட்சியால் அது தூக்கிச் செல்லப்படுகின்றது. மீனுக்கு இருக்கும் நீந்தும் சக்தி மனிதனுக்கு இல்லை. உடும்புக்கு இருக்கும் பிடித்துக்கொள்ளும் அவயவ சக்தி மனிதனுக்கு இல்லை. இது போலவேதான், ஒரு விஷயத்தில் மனிதனுக்குள்ள மூளை அவயவத்தின் சக்தி மற்ற ஜந்துக்களுக்கு இல்லையென்று சொல்லவேண்டும். இந்த வித்தியாசங்களெல்லாம் அமைப்பில் ஜீவனுக்கு ஜீவன் மாறுபட்டிருப்பது போன்ற ஒரு வித்தியாசமே தவிர, மனிதனுக்கு மாத்திரம் ஏற்பட்ட ஒரு தனித் தத்துவ உயர் குணம் என்று சொல்லிவிடமுடியாது.

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு மாத்திரந்தான் உண்டு. அது தனிக் காரியத்திற்காகக் கடவுளால் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுமானால், பகுத்தறிவு இருக்கின்றது என்கிற காரணத்திற்காக மனிதன் எந்த விதத்தில் மேலான நிலையில் உள்ளவனாய் இருக்கிறான் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். மற்ற பகுத்தறிவில்லாத ஜீவனுக்கு உள்ள என்ன குறைகள், பகுத்தறிவுள்ள மனிதனிடம் இல்லாமல் இருக்கிறதைக் காண்கின்றோம்?

ஆகாரம், நித்திரை, ஆண்–பெண் சேர்க்கை ஆகிய தேவைகளில் மற்ற ஜீவன்களிடமுள்ள தேவைகளே மனிதனிடமும் காணப்படுகின்றன. இன்னும் பேசப்போனால் மற்ற ஜீவன்களைவிட அதிகமாகவும் காணப்படுகின்றன. ஆசை என்கிற ஒரு கெட்ட குணம் மற்ற ஜீவன்களைவிட மனித ஜீவனிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. அதிருப்தி என்கிற கெட்ட குணம் மனிதனிடமே அதிகமாய் இருக்கின்றது. கவலை என்கின்ற கெட்ட குணமும் மனிதனுக்கே அதிகமாய் உண்டு. தன் இனத்தை அடிமைப்படுத்தி அதைக் கொடுமைப்படுத்தி வாழும் கெட்ட குணம் மனித ஜீவனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றது. மற்ற ஜீவன்களுக்கு உள்ளது போன்ற வஞ்சகம், ஏமாற்றம் முதலிய குணங்கள் மனிதனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றன. தனக்குத் தெரியாததையும், புரியாததையும் பற்றி நம்புதல், பேசுதல், நம்பச் செய்தல் முதலிய 'மூடத்தன்மை



குணம்' மனித ஜீவனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றது. நம்பிக்கைக்கும், நடவடிக்கைக்கும் சம்பந்தமில்லாத குணம் மனித ஜீவனிடமே இருந்து வருகின்றது. ஒரே விஷயத்தை இரண்டுவிதமாய் நம்பும் சுயபுத்தியற்ற தன்மையும் மனிதனிடமே இருந்து வருகின்றது.

இதுபோன்ற எத்தனையோ 'கெட்ட' குணங்கள் மனித ஜீவன் தனது பகுத்தறிவின் பயனாகவே உடையதாயிருக்கின்றது. ஆகையால் பகுத்தறிவின் 'மேன்மையால்' மனித ஜீவன் சிறந்தது என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும் என்பதே நமது கேள்வியாகும். மேலும், மேற்கண்ட காரணங்களாலும் மற்றும் பல காரணங்களாலும் மனித ஜீவன்களில் பெரும்பான்மையானவை, மற்ற ஜீவராசிகளைவிட இழிவுத் தன்மையுடையவை என்பதும் நமது அபிப்பிராயமாகும். சாதியின் பேரால் உயர்வு–தாழ்வு, மதத்தின் பேரால் வேற்றுமை உணர்ச்சி, தேசத்தின் பேரால் குரோதத் தன்மை முதலான இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாகக் காண்கிறோம். மற்றும், கடவுளின் பேரால் மேல்–கீழ்நிலை முதலாகிய அயோக்கியத் தன்மைகள் மனித ஜீவனிடமே உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனித ஜீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால் மேற்கண்ட கெட்ட-தீய-இழிவான, அயோக்கியத்தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதனிடம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்ற 'பகுத்தறிவில்லா' ஜீவராசிகளைவிட மனித ஜீவன் மூளை விசேஷம் முதலிய அவயவத்தை நன்மைக்காகப் பிரயோகித்துக் கொண்ட ஜீவன் என்று சொல்லப்படும். அதில்லாத நிலையில், எவ்விதத்திலும் மனித ஜீவன் மற்ற ஜீவப் பிராணிகளைவிட உயர்ந்ததல்ல என்பதோடு—பல விதத்திலும் தாழ்ந்தது என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது.

['குடிஅரசு'–கட்டுரை—3-9-1933]

## 2. எப்படிப்பட்ட மனிதன் உயர்ந்தவன்?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

பணத்தால் ஒரு மனிதனை மதிப்பதென்றால்—ரிசர்வ் பேங்கைத்தான் மதிக்க வேண்டும். படிப்பால் ஒரு மனிதனை மதிப்பதென்றால்—பெரிய 'லைப்ரெரி'யைத்தான் மதிக்கவேண்டும். அறிவால் ஒருவனை மதிக்கவேண்டுமானால்—'என்சைக்கிளோபீடியா', 'ரேடியோ' ஆகியவற்றை மதிக்கவேண்டும். இப்படியாக அனேகவற்றை, ஜீவனில்லாதவைகளிலும் காணலாம். ஆதலால், நாம் மனிதனை மதிப்பது, பேசுவது, நினைவுறுவது என்பவையெல்லாம் இவைகளை உத்தேசித்தல்ல.

உலகிலுள்ள எல்லா ஜீவப் பிராணிகளுக்கும்—மனிதர்கள் என்பவர்கள் உட்பட உருவத்தில் பேதம் இருந்தாலும், குணத்தில் பேதம் இருந்தாலும் நடப்பும் பயனும் அனேகமாய் ஒன்றுதான்.

ஜீவன் என்றால் பிறத்தல், தன் நலனுக்காக வாழ்தல், இனத்தைப் பெருக்குதல், இறத்தல் ஆகியவைகளைக் கொண்டதேயாகும். இந்தத் தத்துவங்களைப் பார்த்தால் செத்த மனிதர்களும், இருக்கும் மனிதர்களும் 'முக்காலே மூன்று வீசம் முக்காணி அரைக்காணி' பேரும் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை உடையவர்களும், மேற்கண்ட குணங்களையுடைய ஜீவப் பிராணி என்பதில் சேர்ந்தவர்களாகாமல்—அவைகளினின்றும் உயர்ந்தவர்களாகக் கருதப்பட வேண்டிய மனிதத் தன்மை உடையவர்களாக இருக்க நியாயம் எங்கே இருக்கிறது?

ஜீவன் என்றால் சுய உணர்ச்சி என்றுதான் கருத்து. சுய உணர்ச்சி என்பது தன்னைப்பற்றிய, தன் வாழ்வைப்பற்றிய, தன் பாதுகாப்பைப் பற்றிய உணர்ச்சி என்பதாகத்தான் முடியும். இத் தன்மையை உடையவர்களை ஜீவப் பிராணிகளில் நத்தை;

படிப்பகம்

www.padippakam.com



சங்கு, ஈ, எறும்பு, பாம்பு, தேள், குயில், கழுகு, புலி, சிறுத்தை, குதிரை, யானை, ஆடு, மாடு, குரங்கு, மனிதன் என்பதாக—மனிதனை மற்றவைகளோடு சேர்த்துச் சொல்லு வதற்கு அல்லாத தனிக் குணம் வேறு என்ன பெரும்பாலான மனிதர்களிடம் இருக்கிறது என்று கருதிப் பாருங்கள்.

மனிதனுக்கு ஆறு அறிவு இருக்கிறது என்று சொல்லுவது மனிதனை ஜீவப் பிராணி களிடமிருந்து பிரிப்பதற்குப் போதுமான காரணமாகாது. சிந்திக்கிற குணம் எல்லா ஜீவப் பிராணிகளிடமும் இருக்கிறது. 'ஜீவத் தன்மை' எந்தெந்த ஜீவனுக்கு இருக்கிறதோ அவற்றிற்கெல்லாம் சிந்திக்கும் தன்மை உண்டு. ஆனால், அதில் அளவு வித்தியாசம் இருக்கிறது உண்மை. அதனால் எதுவும் வேறுபட்ட உயர்ந்த ஜீவனாக ஆகிவிடாது. அதன் பலனாலும் ஏதும் உயர்ந்ததாக ஆகிவிடாது.

தேன் ஈக்களால், மக்கள் தேன் சாப்பிடுகிறார்கள். மாடுகளால், மக்கள் பால் சாப்பிடு கிறார்கள். ஆடு, கோழிகளால்—மக்கள் ஆகாரம் அடைகிறார்கள், நாய்களால் காக்கப் படுகிறார்கள்; கழுதை, குதிரை முதலியவற்றால் பொதி சுமக்க வைத்தும் சவாரி செய்தும் பயனடைகிறார்கள். இப்படி எத்தனையோ ஜீவன்களால் எத்தனையோ பலன் அடைகி றார்கள். இவற்றால் இவை உயர்ந்த ஜீவனாகக் கருதப்படுன்றனவா? இல்லை. அப்படித்தான், மனித ஜீவனும், பல வழிகளில் பல காரணங்களால், வேறுபட்ட தன்மை களால் ஒரு ஜீவனிடமிருந்து பிரிந்து காணப்படலாமே ஒழிய உயர்ந்த ஜீவனாகிவிட மாட்டான்.

மற்றபடி, எதனால் மனிதன் மற்ற ஜீவப் பிராணிகளுடன் சேராத உயர்ந்தவ னாகலாம் என்று கேட்கப்படலாம். அதைச் சொல்லத்தான் இவ்வளவும் சொன்னேன்.

ஜீவசுபாவ உணர்ச்சியான—தன்மை உணர்ச்சியும் தன்னல உணர்ச்சியும் உள்ள மனிதன் இவற்றை (தன்னலத்தை) அலட்சியம் செய்து—அதாவது தன்னைப் பற்றிய கவலையும் தனது நலத்தையும், தன் மேன்மைபற்றிய கவலையும், தனது மேல்வாழ்வின் தன்மை என்பதையும் அடியோடு மறந்து, மனித சமுதாய வாழ்வின் மேன்மைக்காகப் பணியாற்றவே மற்ற மனித ஜீவன்களுக்கு இருக்க முடியாத வசதி என்னும் தன்மை, தொண்டாற்றும் சக்தி ஆகியவை இருக்கின்றன என்று கருதி—தன்னலத்தையும் தன் மானாபிமானத்தையும் விட்டு, எவன் ஒருவன் தொண்டாற்றும் பணியை வாழ்வாகக் கொண்டிருக்கிறானோ, அவன்தான் மற்ற ஜீவப் பிராணிகளிடமிருந்து வேறுபட்ட மனிதத் தன்மை கொண்ட மனிதனாவான். மனித உரு ஜீவப்பிராணி என்பதில் எந்த மனிதனை மதிப்பதானாலும், நினைவு நாள் கொண்டாடுவதானாலும் இந்தக் குணத்திற்காகத்தான் இருக்கலாமே ஒழிய வேறொன்றுக்கும் ஆக இருக்கமுடியாது.

[திருச்சி, தஞ்சை, கும்பகோணம் ஆகிய இடங்களில் 1945 மார்ச், ஏப்ரல் மாதங்களில்
சொற்பொழிவு—'குடி அரசு' 14-4-1945]

ஒரு மனிதனுக்கு அவனது மலமும் மூத்திரமும் உயர்ந்த நறுமணமுள்ளவையாக இருந்தாலும், அதனால் மனிதன் மேன்மையானவனாகவோ, மதிக்கத் தகுந்தவனாகவோ ஆகிவிட மாட்டான். சிற்சில புல் பூண்டுகளுக்கு நறுமணம் உண்டு. சில ஜந்துக்களின் மலங்களுக்கு நறுமணமுண்டு. அவற்றை நாம் மதிக்கிறோமா? போற்றுகிறோமா?

அரசர்களை மதிக்கிறோமா? பெரிய மனிதர்களை, ஆழ்வார்களை மதிக்கிறோமா? அல்லது, தெய்வங்கள் என்பவர்களையாவது மதிக்கிறோமா? மகான்கள் அல்லது ஆச்சாரி யார்களை—மடாதிபதிகளை மதிக்கிறோமா? இவர்களையெல்லாம் அவரவர்களிடத்தில் சம்பந்தமும் தனிப்பட்ட நலமும் பெறுகிறவர்கள்தாம் மதிப்பார்கள்; மற்றவர்கள் ஏன் மதிப்பார்கள்? ஏன் என்றால், வியாபாரம் செய்து இலாபம் சம்பாதிப்பவனை யார் எதற்காக மதிப்பார்கள்?



ஓட்டல்காரன்—அன்னதானப் பிரபு ஆவானா? சம்பள உபாத்தியாயர்—குருநாத ளாவானா? தாசி—காதலியாவாளா? என்பதுபோல்தான் தன்தன் நலனுக்கு, தன்தன் பொறுப்புக்கு ஆகக் காரியம் செய்யும் எவனுடைய காரியம்—எப்படிப்பட்டதாயினும் அது சாதாரண ஜீவ சுபாவமே ஒழிய போற்றக்கூடியதாகாது. அப்படியில்லாத தன்மை, செய்கை, வாழ்க்கை கொண்ட மனிதர்கள்—அதாவது தன்னைப் பற்றிய கவலையில்லாமல், பிறருக்கு என்று தன்னை ஒப்படைத்துக்கொண்டு தொண்டாற்றுகிறவன் மதிக்கப்பட்டே தீருவான். அத் தொண்டால் பாதகமடையும் தனிப்பட்டவர்கள்—தனிப்பட்ட வகுப்புகள், கும்பல்கள் அவனை மதிக்காமல் இருக்கலாம்; அவமதிக்கலாம். அது, பொதுவாக மதிக்காததாகாது.

['விடுதலை'-கட்டுரை—8-4-1950]

## 3. மனித வாழ்க்கை இலட்சியமற்றது

பெரியோர்களே! ஆசிரியப் பெருமக்களே! மாணவ ஆசிரியர்களே!

என்னைப் பொறுத்தவரை நான் கூறுவேனாகில், மனிதப் பிறவியானது ஒரு இலட்சிய மற்ற பிறவி என்றே கூறுவேன். மனிதன் பிறக்கிறான்; பற்பல எண்ணங்களை எண்ணு கிறான்; பல வகைகளை இச்சிக்கிறான்; எவ்வளவோ காரியங்களில் விருப்பம்கொண்டு அவைகளை நிறைவேற்ற முற்படுகிறான். ஒரு சிலவற்றில் ஆசை நிறைவேறுகிறது; மற்றவைகளில் ஏமாற்றம் அடைகிறான்; இறுதியில் செத்துப்போகிறான். மனிதன் பிறந்ததுமுதல் செத்துப்போகும்வரை இடையில் நடைபெறுகிறவைகள் எல்லாம் அவனின் சுற்றுச்சார்பு, பழக்கவழக்கம் இவைகளைப் பொறுத்து நடக்கின்றன. எனவே, மனித வாழ்வு இலட்சியமற்ற வாழ்வு என்பது என் கருத்து. இதை அனேக அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். மேலும், இக் கருத்து யாராலும் மறுக்க முடியாததும் ஆகும்.

பிறப்பும் இறப்பும் இயற்கையே. மனிதன் ஏன் பிறக்கிறான் என்று யாராவது கூறமுடியுமா? பிறந்து எதற்காக வாழ்கிறான், எதற்காக இறந்துபோகிறான்–என்று யார் கூறமுடியும்? இதைக் கேட்டால், 'அது கடவுள் செயல்; கடவுள் பிறப்பிக்கிறார்; காப்பாற்று கிறார்; சாகடிக்கிறார்' என்றுதான் கூறமுடியுமே தவிர, வேறு சரியான காரணம் கூற முடியுமா? அவன் எந்தக் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது பிள்ளை வேண்டுமென்று பிள்ளையைப் பெறுகிறான் என்றால்—எதற்காகப் பிள்ளை வேண்டும் என்பதைக் கூற முடியுமா? அவன் எந்தக் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது தனக்குப் பிள்ளை வேண்டும் என்று முயற்சிக்கிறான் என்று அவனைக் கேட்டால்கூடத் தெரியாது. குழந்தையை அடைந்ததும் அதை ஏன் காப்பாற்றவேண்டும், அதற்கு ஏன் கல்வி புகட்டவேண்டும்–என்ற இலட்சியத்தைக் கூறமுடியாது. ஏதோ, தம் பிள்ளை படிக்கவேண்டும் என்பார்களே தவிர, எதற்காகக் கல்வி கற்கவேண்டும் என்றே தெரியாது. எல்லோரும் படிப்பதற்கு விரும்புகிறார்கள். அவரவர்கள் தங்கள் மக்களைப் பள்ளிக்கு அனுப்பிக் கல்வி கற்க வைக்கிறார்கள். அந்தப் பெற்றோர்களுக்கே தமது மக்கள் ஏன் படிக்கவேண்டும் என்பதற்குச் சரியான பதில் கூறமுடியாது. படிக்கும் பிள்ளையோ நாம் எதற்காகப் படிக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே படிக்கிறான். அவனை, 'நீ ஏன் படிக்கிறாய்?' என்று கேட்டால் அவனுக்கே பதில் கூறமுடியாது. அப்படி எதாவது பெற்றோர்களோ அல்லது பையன்களோ கூறுவார்களேயானால், 'படிப்பது பணம் சம்பாதிக்க' என்று கூறுவார்கள். படிப்பானது பொருள் திரட்ட வழிதேடுவதற்கு என்பதாகமட்டும் கூறுவர்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், அந்தப் பணம் எதற்காக என்றால், அதுவும் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது சேர்க்கப்படுவதில்லை. ஏதோ செல்வத்தை மென்மேலும் சம்பாதித்து அதைச் சேர்த்து வைத்துக்கொண்டே போகவேண்டும். அதற்கு அளவே கிடையாது. நாளுக்குநாள் மென் மேலும் சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டே போகவேண்டும் என்ற ஆசைமட்டும் உண்டே தவிர, அது எந்த அளவுக்குப்போய் நின்றால் போதும் என்ற அளவே கிடையாது. இப்படிச் சொத்துச் சேர்ப்பது என்பதும் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீதோ, குறிப்பிட்ட எல்லையின்மீதோ சேர்ப்பதில்லை. ஆசைக்கும் எல்லையில்லையே! படித்துப் பாஸ்செய்த பின் வேலைக்குத் திண்டாட்டம். வேலை ஏதாவது கிடைத்துவிட்டால், அந்த வேலை கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிய வேலையாக வரவேண்டும்; மென்மேலும் பிரமோஷன் கிடைத்துக்கொண்டே போகவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அந்த வேலை கிடைத் தாலும் அதில் திருப்தி கிடையாது. அதற்கும் மேலான ஸ்தானத்தைத் தாவிப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. அதையும் தாவிக் குதித்து எப்படியோ பிடித்து விட்டால், அடுத்தபடியாக மேலே உள்ள உத்தியோகம் வேண்டும். அதற்காகப் பலவழி களிலும் முயற்சிக்க ஆரம்பிக்கிறான். இப்படியே ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தின்மீதுதான் உத்தியோகம் அடைதல் என்பது இல்லாமல் போய்விடுகிறது. இவ்விதமே—எல்லாம் ஒரு இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிராமல் இருக்கின்றன.

வாழ்க்கை என்ற ஏணியின் அடிப்படையில் கால்வைக்கும்பொழுது நாம் எங்கே ஏறுகிறோம், கடைசியாக எங்கே போவோம் என அறியக்கூடவில்லை. நாம் ஏறிமுடித்தால் போதும் என்பதைக் கொண்டிராமல், ஒவ்வொரு படியாக ஏறிக்கொண்டே போகவேண்டும்; அதற்குமேல் என்ன தெரிகிறதோ அதைப் பிடிக்கவேண்டும்; அதைப் பிடித்தவுடன் அதற்குமேலே என்ன தெரிகிறதோ அதைப் பிடிக்கவேண்டும்–என்று எல்லையே இல்லாமல் இலட்சியமற்ற முயற்சியிலேயே காலத்தைக் கடத்துகிறோம். இறுதியில் காலம் முடி வடைந்து இறந்து போகிறோம். இப்பேர்ப்பட்ட வாழ்க்கையில் ஒருவிதப் பலனும் கிடையாது. சமுதாயத்துக்குப் பயன்தரும் வாழ்க்கையே சிறந்த இலட்சியம். மனிதன் பிறந்து இறக்கும்வரை இடையில் உள்ள காலத்தில் ஏதாவது பயனுள்ள காரியம் செய்ய வேண்டும். அவன் வாழ்க்கை மற்றவர்களின் நலனுக்கும், சமுதாயத்தின் சுகத்திற்கும் பயனுள்ளதாக இருக்கவேண்டும். ஒருவன் வாழ்வதென்பது அவனுடைய வாழ்க்கையால் பிறர் நன்மையடைந்தார்கள்; மற்றவர்கள் சுகம் கண்டார்கள் என்று அமையவேண்டும். இதுதான் முக்கியமானதாகும். இதுவே அவசியமும் பொருத்தமும் ஆனதுமன்றி மனித வாழ்க்கை என்பதன் தகுதியான இலட்சியம் இது என்றும் கூறலாம். ஆனால், நாம் இதை யாரிடமும் காண்பது கிடையாது. கண்டுபிடிப்பதென்றால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிருவரைக் காண்பதே மிகக் கஷ்டமான காரியமாகும். நாம் மட்டும் வாழ்ந்தால் போதாது; நமது சமுதாயமும் வாழவேண்டும்; மற்றவர்களின் பிள்ளைகளும் வாழவேண்டும். நம் பிள்ளைகள் மட்டும் சுகம் அடைந்தால் போதாது; ஏனையவர்களின் வாழ்வு சுகம் அடைய வேண்டும். இதற்கு ஏதாவது நம்மால் ஆனமட்டிலும், நம் வாழ்க்கை அவர்களின் நன்மைக்கு அமையும் முறையில் நாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதே முக்கியமானது. இந்த வேலையைச் செய்பவர்கள் மிகக் குறைவு; காண்பதும் அரிது.

[திருச்சி, பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 17-3-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-3-1956]



# 4. பொதுநலம்

## 1. சுயநலம்–பிறநலம்

சுயநலத்துக்கு அறிவே தேவை இல்லை. உணவுக்கு அலைவதும், உயிரைக் காப்பதும் எந்த ஜீவனுக்கும் இயற்கை.

ஒவ்வொரு ஜீவனிடத்திலும் சில அருமையான, அற்புதமான குணங்கள் உண்டு என்றாலும் அவையெல்லாம் அந்தந்த ஜீவனின் சுயநலத்துக்கேதான் பயன்படுகின்றன.

மனித ஜீவன் என்பது மற்ற ஜீவப் பிராணிகளை விட அறிவில் பெரும் பேதம் உடையதாகும்; அதாவது, பகுத்தறிவு உடைய ஜீவன் என்று சொல்லப்படுவதாகும். என்றாலும்—அதாவது மனித ஜீவன் பகுத்தறிவுடையது ஆனாலும், அதுவும் கூட சுய நலத்தையும், புகழையும், தன் உயிர் வாழ்வையுமே முக்கியமாய்க் கொண்டதாகும்.

மனிதன் தன் சுயநலம் என்பது மாத்திரமல்லாமல் தன் தாய், தகப்பன், பெண்டு, பிள்ளை முதலிய மனித ஜீவன்களின் நலத்தைப்பற்றியும் கவலை கொள்ளுகிறான் என்றால், அதுவும் பெரிதும் சுயநலத்தை உத்தேசித்தே ஆகும். மனிதன் தான் பயன் படுத்தும் மாடு கன்றுகளின் நலத்தை எதற்காகக் கவனிக்கிறான்? தன் மனைவியை எதற்காக அழகுபடுத்துகிறான்? தனது நாய்க்கு எதற்காக நல்ல போஷணை கொடுக் கிறான்? எதற்காகத் தான் குடியிருக்கும் வீட்டைப் பாதுகாக்கிறான்? எதற்காகத் தனது பணத்தை, பொருளை, பத்திரப்படுத்திப் பெருக்குகிறான்? ஓட்டல்காரன் எதற்காக வாடிக்கைக்காரர்களுக்கு நல்ல சாப்பாடு போடுகிறான்? பத்திரிகைக்காரன் எதற்காக நல்ல, அதிசய, புதிய செய்திகளைக் கண்டுபிடித்துப் பிரசுரிக்கிறான்? வைத்தியர்கள் எதற்காகத் தன்னிடம் வரும் நோயாளிகளையெல்லாம் சவுக்கியப்படுத்த வேண்டுமென்று கவலைப்படு கிறார்கள்? வக்கீல்கள் தங்களிடம் வரும் கட்சிக்காரர்களுக்கு அனுகூலம் ஏற்பட வேண்டு மென்று பலவழிகளிலும் பாடுபடுவது எதற்கு? எதற்காகத் தாசிகள் தங்களிடம் வருபவர் களுக்கு எல்லாம் தங்களுக்குக் காமம் இல்லாவிட்டாலும் மேல் விழுந்து இன்பமளிக் கிறார்கள்? இவர்கள் எல்லோரும் பிறர் நலத்தைப் பேணுவதாக நமக்குக் காணப் பட்டாலும், அவற்றின் பயனாய் சுயநலம் அடைவதற்கேயாகும் என்பதில் அய்யமுண்டோ? இது தெளிவாய்த் தெரிகிறதல்லவா? ஆதலால், ஜீவனின் சுபாவமே சுயநலந்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

சாதாரணமாக, எவ்வளவு பகுத்தறிவு உள்ள மனிதனாக இருந்தாலும் அவன் அறிவின் பிரயோகம் எல்லாம் தன் நலத்துக்காகத்தானே ஒழிய, மற்றபடி அதில் எவ்விதத் தனிப் 'பிறநலம்' என்பது இருக்கவே மாட்டாது.

ஆனால், ஏதோ தனிப்பட்ட மக்களிடம் 'பிறநலம்' என்பதைத் தவிர வேறு ஒன்றும் காணமுடியாமல் இருக்கலாம். அல்லது, சுயநலத்தைவிட அதிகமான பிறநலம் இருப் பதைக் காணலாம். இது இப்படி இருப்பது நமக்கும் பிறநலமாகக் காணப்படலாமே ஒழிய உண்மையில் அது அப்படி நடப்பவருக்குச் சுயநலமாகவே இருக்கும். எப்படியெனில், அவன் பிற நலத்துக்காக உழைப்பதும், தொல்லைப்படுவதும், அல்லற்படுவதும் அவனுடைய சுயநலத்துக்காகவே முடிவுறும். அந்த இரகசியம் அவனுக்குத்தான் தெரியும்.

சுயநலம் என்பது பணம் சேர்ப்பது, உயர்வாழ்வு வாழ்வது, பிரபலமடைவது ஆகியவை மாத்திரமே அல்ல. இவையெல்லாம்—இவற்றிற்கு எதிரானதும் மாறுபட்டதும் கூட சுயநலமாகும்.

மனிதனுக்கு நலம் என்பவற்றுள் எல்லாம் தலைசிறந்த நலம் அவன் மனத் திருப்தியே யாகும். அவனுடைய மனத்திற்குப் பூரண திருப்தி அளிக்கக்கூடியது எதுவோ அதுதான் அவனுக்கு (சுய) நலமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



பிற நலத்துக்காகச் செய்யப்படும் காரியம் என்பது, செய்பவனுடைய மனத்துக்கு நல்ல திருப்தியை அளிக்கக்கூடுமானால், அவனுடைய ஆசை நிறைவேறுமானால் அது சுயநலத்தின் தன்மையேயாகும். ஒரு மனிதன் அவனுடைய ஆசை நிறைவேற அவனது மனம், வாக்கு, காயங்களால் பாடுபடுவது சுயநலம். அதில் அதிக சுயநலம்; சிறிது சுயநலம் என்று இருந்தாலும் பேராசை, சாதாரண ஆசை, மித ஆசை, நிராசை என்று இருந்தாலும் அவைகளுக்கு மூலம் அல்லது காரணம் மனத் திருப்தியே ஆகும்.

ஒரு மனிதன் ஒரு தெருவில் நடக்கிறான். அத் தெருவின் ஓரத்தில் ஒரு அழிந்த வேலிக்குள் பூஞ்செடியில் 6 அங்குல சுற்று வட்டமும் பல இதழ்களும் கொண்ட ஒரு ரோஜா மலர் இருக்கிறது. 'அது அவனுக்கு அதிசயமும் அழகும் கொண்ட காட்சியாகக் காணப்படுகிறது.

அந்த மனிதன் அதைப் பறித்துக்கொண்டு போனால் யாரும் கேட்கமாட்டார்கள்; யாரும் அங்கு இல்லை. பறித்துக்கொண்டு போய்த் தன் காதலிக்குக் கொடுத்து மகிழலாம். ஆனால், அவன் நினைக்கிறான்: 'இதைப் பறித்துக்கொண்டு போனால் நானும் காதலியுந் தானே மகிழ்வோம்? இந்தச் செடியிலேயே இதை அப்படியே விட்டுவிட்டு, இதை வேறு யாரும் பறிக்க முடியாதபடி வேலியையும் செப்பனிட்டு விட்டுப் போய்விட்டால், இந்தத் தெருவில் நடக்கும் பதினாயிரக்கணக்கான மக்கள் இதைக் கண்டு மகிழ்வார்கள் அல்லவா?' என்று கருதி அப் பூவைப் பறிக்காமல், வேலியை நன்றாய் அடைத்துவிட்டுப் போய் விடுகிறான். இதில் அவன் இவ்வளவு கஷ்டப்பட்டு வேலியை அடைத்துவிட்டு வெறுங் கையுடன் சென்றதானது, பல பேர் அப் பூவைக் கண்டு மகிழ்வதைக் கண்டு அவன் இன்பம் அனுபவிப்பதானது, சுயநலம் அனுபவித்ததாகிவிடவில்லையா? ஒரு மனிதன் பசியால் கஷ்டப்படுகிறான். அவனுக்குத் தனது—அதாவது, தனக்குப் போதுமானதாக மாத்திரம் இருக்கும் உணவில் பகுதி கொடுத்துப் பசியாற்றிவிட்டுத் தான் சிறிது பசிக் கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு இருந்தாலும், 'ஒரு மனிதனின் பசியை ஆற்றினோம்' என்று ஒரு இன்பத்தை அடைவதில் திருப்தி அடைகிறான். இதில் சுயநலம் இல்லையா?

ஒரு மனிதன் இரயிலில் போகும்போது, கதவை மற்றொருவன் மூடும்போது பக்கத்தில் இருந்த வேறு ஒருவனின் விரல்கள் அதில் சிக்கி நசுங்கி விடுகின்றன. இவன் அதைப் பார்த்து மனம் பதறி, வேதனை அடைந்து, அவன் பக்கத்திற்குச் சென்று தனது நல்லதொரு வேட்டியை—மற்றவர்கள் துணி கொடுப்பதற்குள்—கிழித்து விரலுக்குச் சுற்றி, தான் குடிப்பதற்காக வைத்திருந்த தண்ணீரையெல்லாம் ஊற்றி நனைத்துக் கட்டி விடுகிறான். இவன் யார் என்று அவனுக்குத் தெரியாது, அவன் யாரென்று இவனுக்குத் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் இவன்—அதாவது வேட்டியைக் கிழித்துக் கட்டியவன் பயணம் சொல்லிக் கொள்ளாமல் இறங்கித் தான் போகவேண்டிய இடத்திற்குப் போய்விடுகிறான். போனவுடன் வேட்டியைப் பார்க்கும்போதெல்லாம் அது பயன்பட்ட நல்ல காரியத்தை நினைத்து மகிழ்ச்சி அடைகிறான். இதில் சுயநலம் இல்லையா?

இன்பமடைவது, மனத் திருப்தி அடைவது, இயற்கை உணர்ச்சிகள் சக்தி அடைவது, பழிவாங்குவது, எதிரியைத் தண்டிப்பது மூலம் திருப்தி அடைவது முதலியவை எல்லாம் சுயநலமேயாகும்.

மனிதன் தன்னலம் அல்லாத காரியத்தை மேல் விழுந்து செய்து திருப்தி அடைகிறான். திருட்டு என்பது கெட்ட காரியமாகும். இதனால் பணம், பொருள் கிடைக்கிறது. அதனால் திருடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். ஆனால், எந்த விதத்திலும் இலாபம் இல்லாத காரியமாகிய தாசி வீட்டிற்குச் செல்லுகிறான்; அதற்குப் பணம் செலவழிக்கிறான்; குடும்பத்திற்குத் தொல்லை விளைவிக்கிறான்; தன் காரியத்தையும் கெடுத்துக்கொள்ளுகிறான்; உடலையும் கெடுத்து நாணயத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறான். மேலும்,



இதற்காக முறை தவறின காரியத்தை எல்லாம் செய்கிறான். அதாவது, ஒரு மிக மிகச் சுயநலக்காரன் செய்யும் காரியத்தை எல்லாம் செய்கிறான். இதனால் அவனுக்கு ஏற்படும் நலம் என்ன என்று பார்த்தால், அவன் இன்பம் அடைகிறான். அதனால் அவனுக்குத் திருப்தி ஏற்படுகிறது. ஆகவே, மனத் திருப்திதான் சுயநலமாகிறது.

இன்பமும் திருப்தியும் ஏற்படுகிற காரியம் எல்லாம் சுயநலமாகிறபடியால், இவை இல்லாத காரியம் எதையும் மனிதன் தானாகச் செய்வதில்லை; செய்யவும் முடியாது. ஆதலால், மனிதனுக்குப் பிற நலம் பேணி தன்னலம் இல்லாமல் செய்யும் காரியம் எதுவும் இல்லை.

[புத்தகம் : 'சுயநலம்–பிறநலம்'—1971]

## 2. பொதுநல உணர்ச்சி

மக்களின் நன்மைக்கான காரியம் என்பதாக ஏதாவது ஒன்றைக் கண்டுபிடித்து அதைச் செய்யலாமா என்கின்ற கவலையோ இலட்சியமோ இல்லாமல், வெறும் 'கலாட்டாவில்' பத்திரிகைகளில் பிரமாதப்படுத்தப்படுகின்றனவே அல்லாமல், உருப்படியான காரியம் எதையும் காண எவராலும் முடியவில்லை. வீணான வழியில் ஊக்கமும் உணர்ச்சியும் போய்க்கொண்டிருக்கின்றன.

படித்தவர்கள், படிக்காதவர்கள், தேச பக்தர்கள், அரசியல் வாதிகள் ஆகியவர்களின் காரியங்கள்தான் இப்படி இருக்கின்றன என்று பார்த்தால், இவர்களைத் தவிர மற்றவர்களான, பொது நலத்தில்—ஜீவகாருண்யத்தில்—தர்ம காரியத்தில் கவனம் கொண்ட மற்ற கனவான்களின் செயல்களும் இதைவிட மோசமான காரியங்களாகவே இருக்கின்றன.

பொதுக் காரியம் என்பதே நமது நாட்டில் கோவில் கட்டுவது, கும்பாபிஷேகம் நடத்துவது, பழைய கோவில்களைப் புதுப்பிக்கும் திருப்பணி செய்வது, அந்த சாமிகளுக்கு வாகனம், இரதம், தேர், உற்சவங்கள் செய்வது, சத்திரங்கள் கட்டி—வருகின்ற பக்தர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் சாப்பாடு போடுவது, வேத பாடசாலை, தேவார பாடசாலை முதலியவை கட்டுவது, இலட்ச பிராமண சமாராதனை, இலட்சத் தீபம் முதலியவைகளைச் செய்விப்பது ஆகிய காரியங்களே பொதுத் தர்மங்களாக நடைபெறுகின்றன.

ஏதாவது மக்களுக்குப் பிரச்சாரம் செய்வது என்றாலோ, ஆடு மீன் கோழி சாப்பிடக் கூடாது—சாப்பிட்டால் நரகம் என்றும்; திருநீறு பூசினால் பாவமெல்லாம் போம் என்றும் மற்றும் இதுபோல் பிரச்சாரம் செய்வதும்; பொதுமக்களுக்கு ஏதாவது ஒழுக்கம் கற்பிக்க வேண்டுமானால் இராமாயணம், பாரதம், பாகவதம், திருவிளையாடல் புராணம் முதலிய புராணங்கள் படிப்பதன்மூலம் ஒழுக்கங்கள் கற்பிப்பதும் ஆகிய காரியங்களே மற்றவர்கள், பிரபுக்கள், நாகரிகமடைந்தவர்கள் ஆகியவர்களின் 'பொதுநல சேவை'யாக இருக்கின்றன.

இந்த நிலையில் இந்தியாவுக்கு இன்று வேண்டியது இன்னது என்று அறிந்தவர்கள் யாராவது இருக்கின்றார்களா என்பதை வாசகர்களையே யோசித்து உணரவிட்டு விடுகின்றோம். ஆகவே தேச பக்தியும், கடவுள் பக்தியும் மனிதனை சுயநலஸ்தனாகவும், கண்மூடித்தனமாய்ப் பின்பற்ற வேண்டியதாகவும் செய்கின்றதே தவிர, மனித சமூகத்தின்—நாட்டின் முன்னேற்றத்தின் ஏ, பி, சி, டி-யைக்கூட காணச் செய்ய முடிவதில்லை.

தேசபக்தி என்கின்ற வார்த்தையே வெள்ளைக்காரன் இராச்சியத்தில் உத்தியோகம் சம்பாதிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டதல்லாமல் வேறு எதற்காகவாவது ஏற்படுத்தப்பட்டு—வேறு ஏதாவது பலன் கொடுத்தது என்று யாராவது ஒற்றை விரலை நீட்ட முடியுமா? தேச பக்தியும், கடவுள் பக்தியும் மனித சமூகத்திற்கு என்ன பலனைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கின்றன, அல்லது கொடுத்தன என்றாவது யாராவது சொல்ல முடியுமா? மற்ற தேசத்

படிப்பகம்

www.padippakam.com



மாதிரிதான் நடந்தார்களா? மக்கள் தாரெல்லாம் விடுதலையடைய, சுதந்திரமடைய இந்த முன்னேற்றம் அடையவும் அவர்களது கஷ்டமும் சரீரப் பிரயாசையும் அடிமைத்தனமும் ஒழியவும், மனிதத் தன்மை இன்னது மனிதனுடைய இயற்கைத் தன்மை இன்னது என்ப வைகளை உணர்த்தி அவைகளை அடையச் செய்து கவலையற்று வாழச் செய்வதற்கு இதுவரை யார் என்ன கவலை எடுத்து என்ன காரியம் செய்திருக்கின்றார்கள்?

ஒவ்வொரு மனிதனும், 'பொது நலத்திற்குப் பாடு படுகின்றேன்' என்கின்ற ஏணியின் மூலம் சுயநலத்திற்குப் போகின்றானேயல்லாமல், உண்மையான பொது நலத் துக்காக வேலை செய்வதற்கு யார் இருக்கின்றார்கள்? இருந்தார்கள்? அல்லது அதற்காக வேண்டியது என்ன என்றாவது யார் அறிந்தார்கள்? வீணே சுய நலமும் குருட்டு நம்பிக் கையும் கொண்டவர்கள் செய்கையானது பல வழிகளிலும் இன்றைய தினம் நம் நாட்டை— ஜன சமூகத்தைப் பாழாக்கிக்கொண்டு வருகின்றதைத் தவிர வேறு ஒரு காரியமும் காண முடிவதில்லை. இந்த இலட்சணத்தில் யாராவது உண்மையைச் சொல்ல வந்தால் அவர்களை—தேசத் துரோகி என்றும் நாத்திகன் என்றும் மூளாவண்ணம் பேசுவதிலும் குறைவில்லை.

['குடி அரசு'–தலையங்கம்—21-12-1930]

## 3. பொதுநல வாழ்வு

இது, பொதுநல வாழ்வு என்று சொல்லப்படுவதை, அதாவது ஒரு மனிதன் தனக்கென வாழாமல் பிறர் நலத்துக்காக வாழுந் தன்மை என்பதைப்பற்றி ஒருவாறு ஆராயும் பொதுக் கட்டுரையாகும்.

மனிதன் என்பவன் ஒரு ஜீவப் பிராணியேயாவான். ஜீவப் பிராணிகள் என்பவைகள் எல்லாம் சுபாவத்தில் தன்னலமுடையவைகளேயாகும். எப்படியெனில், ஒவ்வொரு ஜீவனும் தான் உயிர்வாழவேண்டும், தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும். அப்படிப்பட்டவையுள் மனிதனும் ஒரு ஜீவனாகும்.

ஆனால், மனிதவாழ்வு என்பது சமுதாயவாழ்வு, அதாவது மற்ற மக்களோடு சேர்ந்து வாழ்வதாயும், அப்படிப்பட்ட மனிதவாழ்வுக்கு வேண்டிய ஒவ்வொரு சாதனமும் தன் ஒருவனாலேயே செய்துகொள்ளக்கூடியதாய் இல்லாமல் மற்றவர்களது கூட்டுமுயற்சியால், கூட்டுச்செயலாலேயே முடிக்கக்கூடியதாயும் இருக்கிறபடியால் மனிதவாழ்வு என்பது தனக் கெனவே என்பதாயில்லாமல் பிறருக்காகவும் பாடுபட்டே வாழவேண்டிய வாழ்வாக இருக்கிறது.

ஆகவே, மனிதன் மனம் ஒப்பி பிறர்நலனுக்காக உழைப்பது என்பது இன்றி யமையாத இயற்கை விதியாக இருந்துவருகிறது.

ஏதோ ஒரு சிலர் திருட்டு, விபச்சாரம் முதலிய கூடாத தொழிலில் ஈடுபட்டவர்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம் என்றாலும், பொதுவாக எல்லா மனிதர்களின் வாழ்வும், தொழிலும் பிறருக்குப் பயன்படுவதற்குச் செய்யப்படுவதாக இருந்துவருகின்றன. அதன் பயனாய்த் தானும் வாழ்கிறான் என்பது உண்மைதான்.

ஒரு விலை மாது, வக்கீல், வியாபாரி, உத்தியோகஸ்தன், விவசாயி, கூலியாள் முதலியவர்கள் எல்லோரும் தங்கள் சுயநலத்திற்கே வாழ்கிறார்கள். என்றாலும் அவர்கள் செய்யும் பணி பிறருடைய நலத்திற்கே, பிறருடைய தேவைக்கே, பிறருடைய திருப்திக்கே அல்லாமல் தமக்காகவேதான் என்று சொல்லுவதற்கில்லை.

இந்தத் தத்துவத்தை விட்டுவிட்டு மற்றும் ஒரு மனிதன் உழுகிறான், நூற்கிறான், நெய்கிறான், வீடு கட்டுகிறான், ரோடு போடுகிறான், கிணறு வெட்டுகிறான், கணக்கு



எழுதுகிறான், பலகாரக் கடை, ஓட்டல் வைக்கிறான், பத்திரிகை நடத்துகிறான்; மற்றும் பல பணிகள் உடலுழைப்பாலும் மூளை உழைப்பாலும் செய்கிறான்.

இவைகள் யாருக்குப் பயன்படுகின்றன? அவனுக்கேயா? இல்லை; மற்ற மக்களுக்கும் பயன்படுகின்றன. ஆனால், அதனால் செய்பவனின் குடும்பமும் உயிர்வாழுகின்றது.

மற்றும், இன்றைய பிரத்தியட்ச நடப்பையும், அனுபவத்தையும்கொண்டு 'பொது நலப் பணியில்' ஈடுபட்டிருப்பவர்களது தன்மையைப் பார்ப்போமேயானால், அவை 100-க்கு 90 சுயநலத்திற்காகச் செய்யப்படும், அதாவது முன்னால் கூறப்பட்டவர்கள் செய்வதுபோல செய்யப்படும் ஒருமாதிரி வியாபாரம், வாழ்வுக்கான தொழில் என்பதாகத்தான் பெரிதும் காணப்படுமேயல்லாது, சுயநலமற்றது என்று காணுவதற்கு எளிதில் முடியாததாகவே இருந்துவருவதைக் காணலாம்.

சுமார் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது மக்களுக்குப் போதிய தெளிவு இல்லாத காலத்தில் 'பொதுநலம்' என்பது வேறுதுறையில் வாழ்கிறவர்கள் அத்துறையைப் பெருக்கிக்கொள்ள, பெருமைபெற ஒரு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது மக்களுக்கு ஓரளவு தெளிவு ஏற்பட்டபின்பு மனத் துணிவும், பிறர் பழிப்பை இலட்சியம் செய்யவேண்டிய அவசியமில்லாத தன்மையும் ஏற்பட்டபிறகு தன் வாழ்வுக் காகவும், தன் தகுதிக்கு, நிலைமைக்கு மேற்பட்ட வாழ்வு வாழவேண்டும், பொறுப்பற்ற, கவலையற்ற, பாடுபடாத வாழ்வு வாழவேண்டும் என்று கருதுகிறவர்களுக்கெல்லாம் முதல் தோற்றமாயும் நிலவுவது 'பொதுவாழ்வில் இறங்கிவிடுவது' என்பதேயாகிவிட்டது.

தன் தொழிலை, உழைப்பை 'பொதுநல வாழ்வு' என்பதில் பயன்படுத்தி இருக்கிற தாகச் சொல்லிக்கொள்ளுபவர்கள், அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் என்பவர்கள் இன்று பெரிதும் சுகவாழ்வும், சுகபோகமும், மேன்மையான வாழ்வும் வாழுகிறார்கள்.

அதாவது, கைமுதல் இல்லாமலும், உடலுழைப்பு இல்லாமலும் மேலும் சொல்வ தானால், ஒழுக்கம், நாணயம்பற்றிய கவலை இல்லாமலும் சுகஜீவியாய் இருந்து வருகிறார்கள்.

மற்றும், தெளிவான, உதாரணம் வேண்டுமானால் இன்று 'பொதுவாழ்வு' என்பதில் ஈடுபட்டுள்ளவர்களாகக் காணப்பட்ட, காணப்படுகின்ற மக்களில் 100-க்கு 90 பேர்களுக்கு மேம்பட்ட மக்களை எடுத்துக்கொண்டு தனித் தனியாக துருவிப் பார்த்து வருவோமே யானால், அவர்களில் 89 பேர்களும் தங்களைப் 'பொதுநல வாழ்வில்' ஈடுபடுத்துவதற்கு முன் தாங்கள் இருந்துவந்த நிலையைவிடப் பன்மடங்கு பணத்தில், அந்தஸ்தில், வாழ்வில், போக போக்கியங்களில் வளர்ச்சிபெற்றவர்களாகவே காணப்படுவர் என்பதோடு தங்கள் தேவைக்குமேல், தகுதிக்குமேல் அடைந்து அனுபவிப்பவர்களாகவே காணப்படுவார்கள்.

அதிலும், பொதுநலவாழ்வில் இறங்குபவர்களுக்கு மான அவமானம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லாத அளவுக்குப் பொதுமக்கள் கணிப்பு ஆகிவிட்டதால், அதற்கேற்றாற் போலவே மதச் சேவையும், அரசியல் சேவையும், சமுதாயச் சேவையும் ஆகிவிட்டதால் எவ்வளவு இழிதன்மையும், ஒழுக்கக் குறைவும், துரோகத் தன்மையும் உள்ளவனுக்கும் 'பொதுநல வாழ்வு' என்பது வாழ்க்கை வளர்ச்சிக்குப் பயனளிக்கக்கூடியதாக ஆகிவிட்டது.

இப்படிப்பட்ட 'பொதுநல வாழ்வு' என்பது, ஈடுபட்டவர்களுக்கு வாழ்க்கை வளர்ச்சியும், சுகபோக வாழ்வும் அளித்துவருவது ஒருபுற மிருந்தாலும், இது மனித சமுதாயத்தில் பொது ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை ஆகியவைகளைப் பெரிதும் கெடுத்து விட்டது. எப்படியெனில், 'பொதுநல வாழ்வு' என்பதானது எப்படிப்பட்டவரும் அதில் ஈடுபட்டுவிட்டால் அவருக்கு இவ்வளவு மேலான வாழ்வு அளித்து வருவதால்—அவர்களுக்கு மானஅவமானம், ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை தேவை இல்லாமலிருப்பதால்—மேலும்,

படிப்பகம்

www.padippakam.com



இதனால் மானஅவமானம் இழிவுகூட அவர்கள் பார்க்கவேண்டிய அவசியமில்லாதிருப்பதால்—இனி வாழ்க்கையில் பிரவேசிக்கவேண்டிய வயது வந்தவர்களும், அவசியமுடையவர்களும் இந்தப் 'பொதுநல வாழ்வு'க்காரர்களைப் பார்த்து இவர்களைப் பின்பற்ற முனைந்து விடுகிறார்கள். பொதுமக்களையும் இத்தன்மை ஆட்கொண்டுவிடுகிறது. 'பொதுநல வாழ்வு' என்பதுபற்றி இப்படிக் கூறுவதானது யாரோ ஒரு சிலரை மாத்திரம் கண்டு கூறுவதாக யாரும் கருதிவிடக்கூடாது.

பொதுவாகவே, முன் கூறியபடி 'பொதுநல வாழ்வில்' ஈடுபட்ட 100-க்கு 90 மக்களைக் கண்டும், 30 ஆண்டு அனுபவத்தைக்கொண்டும் 'மதிப்பிற்குரிய—பெரிய பெரிய ஆட்கள்' என்பவர்களது உள்ளும் புறமுமான கருத்து, நடத்தை ஆகியவைகளை உணர்ந்தும்தான் 'பொதுநல வாழ்வு' என்பதற்கு இந்த விளக்கம் தர நேர்ந்தது.

இதற்கு விலக்கான 'பொதுநல வாழ்வுக்காரர்கள்' இருக்கலாம் என்பதை இந்த விளக்கம் மறுக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் மரியாதைக்கு உரியவர்களேயாவார்கள். ஆனால், அரிது; மிகமிக அரிது.

['விடுதலை'—கட்டுரை—17-1-1954]

## 4. பொதுத் தொண்டு

**அராட்சித்தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!**

ஏதோ மனிதனாகப் பிறந்தோம்; சுயநலத்திற்கு ஏற்ப வாழாமலிருக்க வேண்டுமென்று கருதுகிறோம். நம் வாழ்வின் பயனாகத் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தொண்டாற்றி வருகிறேன். பலர் கருதுகிறார்கள்—நான் பொதுமக்களுக்காகத் தொண்டாற்றுகிறேன் என்று; ஒரு மாதிரியில் அந்தக் கருத்து சரி. இந்த நாட்டில் பார்ப்பானைத் தவிர மற்றவர்களெல்லாம் பொதுமக்களுக்குப் பாடுபடுகிறவர்கள்தாம். உலகத்தில் மனிதனாக உள்ள அனைவரும், பார்ப்பானைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பொதுமக்களுக்குத் தொண்டாற்றுகிறவர்கள்தாம்.

சாதாரணமாக அருவருப்பாகத் தோன்றும் கக்கூஸ் சுத்தம் செய்யும் (மலம் எடுப்பது) வேலை முதல், அரசனாக இருந்து ஆட்சிபுரிகிற வரையில் எல்லோருடைய வேலையும் பொதுத்தொண்டுதான்.

கக்கூஸ் எடுக்கிறான் என்றால் தனக்கு மட்டுமா எடுக்கிறான்? வேலைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள். உத்தியோகம் செய்பவன், விறகு வியாபாரம் செய்பவன், மற்றும் பல வியாபாரிகள், தொழில் செய்வோர்கள் இவர்களை எடுத்துக்கொண்டால் அவனவன் செய்கிறதெல்லாம்—அது அவனுக்கு மட்டுமல்ல. உயர்வு—தாழ்வு என்னவென்றால், அதன் மூலம்தான் தன் வாழ்வை வளப்படுத்திக் கொள்கிறான் என்கிறோமே தவிர வேறு வகையில் அதுதொண்டுதான். மற்றவனுக்குள்ள வசதி வாய்ப்பு, அமைப்பு இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, இலாபம் பார்த்துக் கூலி பார்த்துச் செய்கிறார்கள் என்று சிலரைக் கூறலாமே தவிர, அவர்கள் இறக்கும்போது எடுத்துக்கொண்டா போகிறார்கள்? அவைகளை விட்டுவிட்டுத்தான் போகிறார்கள்; மற்றவர்கட்குத்தான்; 'அது நம் மகனுக்கு', 'அல்லது நம் மனைவிக்கு' என்று நினைப்பார்கள். கணக்குப் பார்த்தால் அவர்களும் (மனைவி, மக்களும்) மற்றவர்கள்தாம். தனக்கு என்று ஒன்றும் இல்லை. பொதுத்தொண்டில், தனக்கு என்று ஒன்றைச்செய்கிறவர்கள் சிலர்தான்.

தேடி வைத்தவர்கள் யாரென்றால்; மற்றவர்களைத் தேடாமல்—எதிர்பாராமல் தொண்டாற்றிப் போகும் அத்தனைபேரும்; அவர்கள்தாம் தமக்கென்று புகழைத் தேடிக்கொண்டு போகிறார்கள்; பிரதியுபகாரம் இல்லாமல் தொண்டு செய்பவர்கள் என்ற பெயரைத் தம்மோடு



எடுத்துப் போகிறார்கள். உலகத்தில் அது இருக்கிற வரையில் தம் பெயர் நிலைக்கும்படி செய்துவிடுகிறார்கள். நிலம், காணி இவையெல்லாம் எவ்வளவுதான் சேர்த்து வைத்திருந்தாலும் அவன் செத்துப் போனதும் அவனது என்று சொல்லமாட்டார்கள். இவனுடைய மகனது என்றுதான் கூறுவார்கள்; இது இயல்பு. தனது என்று கூறும்படியானது தொண்டு ஒன்றுதான். மற்றவர்களுக்காகப் பலனை எதிர்பாராமல் தொண்டு செய்வதுதான்.

[தேரெழுந்தூரில், 31-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-4-1959]

## 5. தியாகம்

தியாகம் என்பதுபற்றி அறிஞர் ஆச்சாரியார் தமது இராமநாதபுரம் சொற்பொழிவில் குறிப்பிட்டு இருக்கும் கருத்தானது மிகவும் சரியானதும், பொருத்தமானதுமாகும்.

ஏனென்றால், எனக்கு இது சுமார் 30 ஆண்டுகளாக இருந்துவரும் கருத்தாகும். மக்களிடையில் மூடநம்பிக்கை காரணமாகவும், சுயநலம் காரணமாகவும் யோசனையும், பொருளுமற்ற அனேக சொற்கள் பழக்கத்தில் இருந்துவருகின்றன.

'தியாகம்' என்ற சொல்லைப்பற்றி ஆச்சாரியார் அவர்கள் குறிப்பிடுகையில், 'தியாகம் என்பது பத்திரிகைகள் ஏதோ அவசரத்தில் சிருஷ்டித்த வார்த்தை; பத்திரிகைகள் எவ்வளவோ பதங்களை இப்படிச் சிருஷ்டித்திருக்கின்றன' என்று கூறி இருக்கிறார். இதைக் குறிப்பிடும்போது இதற்கு முன்னும் பின்னாலும் கூறியிருப்பவை எப்படி இருந்தாலும், தியாகம் என்பதைப்பற்றிக் கூறியது மிகவும் சரியான தத்துவக் கொள்கைக் கருத்தாகும்.

நான் சில மாணவர்களுக்கு எனது கையெழுத்தைப் போட்டுக்கொடுக்கும்போது, அவர்கள் அதில் 'ஏதாவது இரண்டு வார்த்தைகளை எழுதிக் கொடுங்கள்' என்று கேட்கப்பட்ட காலத்தில், 'கடவுள் என்பதும், தியாகம் என்பதும், நிஷ்காமிய கர்மம் என்பதும், மோட்சம், நரகம் என்பதும் பொருளற்றதும், விளக்கமுடியாததுமான சொற்கள்' என்று எழுதிக் கொடுத்து வந்திருக்கிறேன்.

மற்ற சொற்களை விட்டுவிட்டு—'தியாகம்' என்பதைப் பற்றியே இதில் எழுதுகிறேன்.

தியாகம் என்றால் தமிழ் அகராதிகளில் கொடுப்பது, கொடை, (உரிமையை) விடுதல், விட்டுக் கொடுத்தல், உபகாரம் என்பன போன்ற பொருள்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஆங்கில அகராதிகளில் 'சாக்ரிபைஸ் (Sacrifice)' என்ற சொல்லுக்கு பலி, தியாகம், பரித்தியாகம் என்ற பொருள்கள் காணப்படுகின்றன. இவை எப்படி இருந்தாலும், தியாகம் என்பதற்குச் சுயநலம் இல்லாமல் தொண்டாற்றுதல், கஷ்டநஷ்டம் அடைதலோடு தானே பெரிய காரியங்களைச் சாதித்தல், பரிகரிக்கமுடியாத துன்பம், தொல்லையை மனப்பூர்வமாக ஏற்றல் என்பதைத்தான் பொருளாகக் கொண்டு மக்கள் அச்சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் என்று கருதிக்கொண்டு அந்தப் பொருள்களைப் பற்றிச் சிந்திப்போம்.

மனிதனுக்குச் சுயநலம் என்பது என்ன? மண், பெண், பொன் ஆசை என்பது மாத்திரந்தானா? மனிதன் சுயநலத்திற்காக மேற்கண்டவைகளையும் விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கிறானே என்று பார்த்தால், இவற்றையும்விட சுயநலம் என்பதாக வேறு ஒன்று இருக்கிறதாகத் தோன்றுகிறதா, இல்லையா? சாப்பிடுவது, தூங்குவது, போக போக்கியம் அனுபவிப்பது என்றால் சுயநலத்திற்கு ஆக இவைகளையும் விட்டுவிட்டுப் பட்டினி, ஏழ்மை, துறவிவாழ்வு வாழ்கின்றானே அப்போதும் இவைகளைவிடச் சுயநலம் என்பதாக வேறு ஒன்று இருப்பதாகத் தோன்றுகிறதா, இல்லையா? சில 'பெரியவர்களும்' 'சிறியவர்களும்' நரகம் புகத் துணிந்து சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதாக அறிகிறோம். அதன் கருத்தென்ன?

படிப்பகம்

www.padippakam.com



எவ்வளவு இம்சையை, மிடிமையை அனுபவித்துக் கொண்டாவது வேறு ஒரு காரியத்தைச் செய்ய முன்வருகிறான் என்றால் அப்போது அவனுக்கு வேறு ஏதோ ஒரு சுயநல உணர்ச்சி இருக்கிறது ; அதற்காகத்தான் இந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறான் என்றுதானே அறியக் கிடக்கிறது ?

சுயநலம் இல்லாவிட்டால் மனிதன் ஒரு ஜீவனாகவே இருக்கமுடியாது. ஆகவே, இங்கு சுயநலம் என்றால் என்ன என்பது தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டியதாகும்.

இது 'தத்துவ' ஆராய்ச்சி அல்ல—அறிவு ஆராய்ச்சி; மக்களை மயக்கத்திலிருந்து, ஏமாற்றத்திலிருந்து தெளிவிக்கும் ஆராய்ச்சியேயாகும். இதை ஒரு வரியில் ஆச்சாரியார் சொல்லிவிட்டார் என்றாலும், விளக்கினால் மக்களுக்குள் இருக்கும் அகம்பாவமான தியாகக் கருத்து மாற்றமடையலாம். அதாவது, 'மனிதனுக்குச் சுயநலம் என்பது அவனது மனத்துக்குத் திருப்தி ஏற்படுத்துவதும் இன்பமளிப்பதுமேயாகும். சுயநல காரியம் என்பது 'தியாக'மானாலும் 'பாக்கிய'மானாலும் செய்பவனுக்கு மனத் திருப்தி ஏற்படுவதுதான். அதுதான் தூக்குக் கயிற்றைக் கழுத்தில் தானாக மாட்டிக்கொள்ளுவதானாலும் அவனுக்கு இன்பம் பயப்பதாம்.

மனித வாழ்வில் வெற்றி என்னவென்றால் அவனவன் மனத் திருப்தியோடு வாழ்வதுதான்.

30 ரூபாய் சம்பளத்திலுள்ள ஒரு குடும்பஸ்தன் தன் அயலான் வீட்டுப் பிள்ளை படிக்க மாதம் 5 ரூ. கொடுத்துவிட்டு, தான் 25 ரூபாயில் கஷ்டஜீவனம் செய்து வருகிறான் என்றாலும், அந்த அயலான் பிள்ளை நன்றாகப் படிப்பதையும் அயல் வீட்டார் இவனை (மாதம் 5 ரூ. கொடுத்து உதவுபவனை) சதா போற்றிப் புகழ்ந்து ஆசி கூறுவதையும் கேட்டுக்கொண்டிருப்பதில் அவனுக்கு எவ்வளவு இன்பம் உண்டாகும்? ஆகவே, அந்த 5 ரூ. செலவில் அவன் மனம் எவ்வளவு திருப்தியடையும் என்பதைச் சிந்தித்தால்—5 ரூபாய் தியாகம் அவனுக்கு எவ்வளவோ திருப்தியும் இன்பமும் தரும் பாக்கியத்தை அளித்ததா, கஷ்டத்தை அளித்ததா என்பது விளங்காமல் போகாது.

ஒரு மனிதன் ஒரு கோயில் உற்சவத்திற்குப் போவதற்காக இரயிலில் இடமில்லாமல் மக்கள் நெருக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நசுங்கிக்கொண்டு தொல்லைப்படுகிறான். இது தியாகமா? அவன் 'புண்ணியம் பெறப்போகிறோம்' என்ற மனத் திருப்தியினால் நசுங்கப் படுகிறான்; அவ்வளவுதானே! இதில் தியாகம் என்ன? இது ஒரு விபாபாரம் தானே! அதுபோல் அவன் ஏறியிருக்கும் இரயில் வண்டியில் ஒரு பெரியார் வந்து ஏறுகிறார். அவன் முன்னமேயே நெருக்கத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தாலும் பெரியாரைக் கண்டவுடன், தான் எழுந்து பெரியாரை உட்காரவைத்துவிட்டு, நின்றுகொண்டே மேலும் நெருக்கப்பட்டுக்கொண்டு வருகிறான். இந்த நிலையில் அவன் மனம் வழிந்தோடும்படியான திருப்தியடைந்து எல்லையற்ற இன்பத்தை அனுபவிக்கிறான். என்ன திருப்தி? என்ன இதயம்? கிட்ட நெருங்கிப் பார்த்தறியாத, வெகு காலமாகப் பார்க்கக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெரியாரை, தான் கைதொட்டு உட்காரவைத்து, பக்கத்திலேயே நின்று கொண்டு அவருக்கு வேண்டியதைத் தன் கைகளால் வாங்கிக்கொடுத்துக் கொண்டிருக்கும் படியான ஒரு வாய்ப்பைப் பெற்றோமே என்று ஆனந்தக் கூத்தாடுகிறான்.

இதில் அந்த நெருக்கடி பட்டது 'தியாகமா', 'பாக்கியமா'? எந்த மனிதன் எவ்வளவு பெரிய 'தியாகம்' என்பதைச் செய்தாலும் அவனுடைய திருப்திக்கு, இன்பத்திற்குத்தான் செய்கிறானே ஒழிய, நட்டத்திற்கு அல்ல; அதிருப்திக்கு அல்ல.

சிலர் தனக்கு இஷ்டமில்லாமலும், துக்கத்துடனும், நட்டக் கருத்துடனும் சில 'தியாகம்' செய்தார்கள் என்று சொல்லப்படுவதாலும் அவர்கள் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமே என்கின்ற ஆசைக்கும், திருப்திக்கும்—அதாவது, தான்



அந்தப்படி அந்தக் கஷ்டத்தை, நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவனை மற்றவர்கள் இழிவாய்க் கருதுவார்கள் என்று பயந்து செய்கிறார்களே ஒழிய, பலன் எதிர்பாராத முட்டாள்தன, பைத்தியப் புத்தியால் அல்ல.

கடுகளவு புத்தி உள்ளவனும் பலன் இல்லாத—ஏதாவது ஒருவகையில் தனக்கு திருப்தி அல்லது பெருமை, அல்லது புகழ், அல்லது மானம் கெடாமல், இழிவு ஏற்படாமல் தப்பித்துக்கொள்ளுதல் என்ற கருத்துக்கள் இல்லாத காரியத்தைச் செய்யவே மாட்டான். அது முட்டாள்தனமாகவும் இருக்கலாம். அல்லது புத்திசாலித்தனமாகவும், கெட்டிக்காரத் தனமாகவும் இருக்கலாம்; அதுவேறு விஷயம்.

நான் மந்திரி வேலை கொடுக்கப்பட்டும், 'வேண்டாம்' என்று சொன்னதாக வைத்துக் கொள்ளுங்கள். இது தியாகமா? புத்திசாலித்தனமா? வேலை ஏற்பதைவிட ஏற்காமலிருப்பதால் திருப்தியும் இன்பமும் அல்லது தொல்லை இல்லாத தன்மையும் இருக்கிறதாகக் கருதித்தான் மறுத்திருப்பேன்.

நான் கோயில் கட்ட இலட்ச ரூபாய் கொடுக்கிறேன்.

இது வியாபாரமா, தியாகமா? தர்மம், பிச்சை கொடுப்பது, மோட்சத்திற்கு இல்லாவிட்டால், பெருமைக்கு இல்லாவிட்டால்—மனத் திருப்திக்கு, இன்பத்திற்கு ஆகவாவது—தொல்லை சகிக்கமாட்டாமலாவதுதான் இருக்கும். இதில் தியாகம் என்ன இருக்கிறது?

அதுபோல், சில இளைஞர்கள் ஆவேசத்தில் சுற்றுச்சார்பு சகவாசத்தில் தனது பெருமைக்கு, புகழுக்கு, திருப்திக்கு என்று ஏதாவது குருட்டாட்டம், நல்ல ஆட்டம் ஆடிவிட்டு, 'நான் தியாகி—எனக்குக் கூலி என்ன?' என்றால், இதைவிட முட்டாள்தனமான காரியம்—என்ன இழிவான காரியம் வேறு இருக்க முடியும்?

ஆனால் இந்த முட்டாள்தனமான வியாபார வேண்டுதலாலேயே பண்டித ஜவகர்லால் முதல் மந்திரி பதவியும், அவர் குடும்பம் பெரும் பெரும் சம்பளமுள்ள பதவியும், பாபு இராஜேந்திர பிரசாத் சர்வாதிகாரத் தலைவர் பதவியும் பெற்றிருப்பதைக் கண்ட சிறு 'தியாகிகள்'—தங்களுக்கும் ஏதாவது ஒரு வழியில் பங்கு கேட்பதில் தவறு என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. காங்கிரஸ் பதவி, பெருமை, பண இலாபம் ஆகிய காரியங்களுக்கு இவர்கள் (தியாகிகள்) செய்தது போன்ற காரியங்கள்தாமே பல இளைஞர்களுக்கும் பண்ட மாற்றாக இருந்துவருகிறது? 'விபூதி பூசி இருப்பவர்களுக்கெல்லாம் கோயில் பிரசாதம் கொடுக்கப்படும்' என்று ஆன பிறகு, விபூதி பூசினவன் எல்லாம் கையை நீட்டினால், நெருக்கடி சமாளிக்க முடியாமல், 'உனக்கு வெட்கமில்லையா? இப்படி மேலே விழுந்து கையை நீட்டுகிறாயே!' என்றால் இதில் வெட்கமென்ன? முன்னால் இருந்தவனுக்குக் கிடைத்துவிட்டது; கொடுக்கப்பட்டாய்விட்டது என்றால், பின்னால் இருப்பவன் வேறு என்னதான் சொல்லிக் கையை நீட்டுவது?

ஆனால், இந்த நிலைக்குத் தியாகம் என்பது பொருளற்றதும், முட்டாள்தனமானதும், மானமற்றதுங்கூடத்தான். ஆனால், மற்றவர்கள் பெரியவர்கள் 'தியாக பலன்' அனுபவிக்கும்போது இவர்களுக்கு மாத்திரம் எப்படி இந்தத் தன்மைகள் பொருத்தமற்றவையாகும்?

விஷயப் பொருத்தம், சந்தர்ப்பம் எப்படி இருந்தாலும், 'தியாகம்' என்ற சொல் பொருளற்றது; பித்தலாட்டமானது; சுயநலத்திற்கு வழியானது. ஆச்சாரியார் சொன்னபடி 'பத்திரிகைக்காரர்கள் (பார்ப்பனர்கள்) சிருஷ்டி[illegible]த சொல்' என்பதை நா[illegible] மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இப்படி இன்னும் பல சொற்களைச் சிருஷ்டித்து மக்களை ஏய்க்கிறார்கள் என்பதையும் ஆதரிக்கிறேன். என்னுடைய வெகுநாள் கருத்தும் இதுவே.



படிப்பகம்

www.padippakam.com



சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பே நானும் சைவல்ய சாமியும் சேர்ந்து பாலக்காடு வித்வான் நடேசம் பிள்ளை என்ற ஒரு பெரும் புலவரிடம், 'நிஷ்காமிய கர்மம் என்பதே பொருள் அற்ற, அல்லது பித்தலாட்டம் ஆன சொல்' என்று வாதாடி இருக்கிறோம்.

அதாவது, பலனை எதிர்பாராமல் அல்லது இலட்சியம் இல்லாமல் தியாகம்—கர்மம்—வினை—செயல் செய்வது என்பதைப்பற்றி வாதாடி இருக்கிறோம்.

இதைப்பற்றி மற்றொரு சமயம் விளக்கலாம்.

['விடுதலை'–தலையங்கம்—2-7-1953]

## 6. ஜீவகாருண்யமும், யாகமும்

தலைவரவர்களே! தோழர்களே!

ஜீவகாருண்யம் என்ற வார்த்தைக்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக அர்த்தம் கொண்டிருக்கிறார்கள். சிலர் மாமிசம் சாப்பிடாமல் இருந்தால் அதுவே பெரிய ஜீவகாருண்யம் என்றும், மற்றபடி ஜீவனுக்கு எவ்வித மனவருத்தத்தையும், உடல் வருத்தத்தையும் செய்தால் குற்றமில்லை என்றும் கருதியிருக்கிறார்கள். சிலர் ஜீவன்களை இம்சைப்படுத்தாமல் இருந்தால் போதும் என்றும், மாமிசம் சாப்பிடுவதைப் பற்றிக் குற்றமில்லை என்றும் கருதி யிருக்கிறார்கள். சிலர் சில ஜந்துக்களை மாத்திரம் இம்சைப் படுத்தக் கூடாதென்றும், மற்ற ஜந்துக்களைப் பற்றிக் கவலை இல்லை யென்றும் கருதி யிருக்கிறார்கள். ஜீவகாருண்யத்துக்கு இந்தப்படி எத்தனையோ விதமான கருத்துக்களும் தத்துவங்களும் இருக்கின்றன.

விவரமாய்ச் சொல்ல வேண்டுமானால், ஜீவகாருண்யம் என்பது ஒவ்வொரு தேசத்துக்கும், ஒவ்வொரு மதத்துக்கும், ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு விதமாய் கருதப்படுகின்றது.

இந்துக்கள் என்பவர்கள் பசுவை வணங்குவார்கள்; அதனிடத்தில் அளவுக்கு மீறிய மரியாதையும், ஜீவகாருண்யமும் காட்டுவார்கள்; யாராவது பசுவைக் கொன்றால்—சாப்பிட்டால் அவர்களிடம் குரோதமும், வெறுப்பும் கொள்ளுவார்கள். இந்தக் காரணத்தினாலேயே, இந்துக்களுக்கு முகமதியர்கள் மீது வெறுப்பும் அசூசமும் இருந்து வருகின்றன. இதனாலேயே பல இடங்களில் இந்து–முஸ்லிம் கலகங்களும் கட்சிகளும் உண்டாகின்றன. இந்துக்களிலேயே பறையர், சக்கிலியர் என்று அழைக்கப்படும் வகுப்பார் மாட்டு மாமிசம் உண்பதினாலேயே அவர்களைக் கீழ் சாதிக்காரர்கள் என்று கருதுவதாகவும், அதனாலேயே அவர்களைத் தொடுவதற்கு அஞ்சுவதாகவும் சொல்லப்படுகின்றது. இதை அனுசரித்து பல சாஸ்திரங்களும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இப்படிப்பட்ட இந்துக்கள் பசுமாடு விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்று பார்த்தால் வண்டியிலும், உழவிலும், ஏற்றத்திலும், செக்கிலும் கட்டி அதைச் சாகும் வரை உபத்திரவிக்கிறார்கள். மாட்டை நல்ல காளைப் பருவத்தில் கட்டிப் போட்டு, விதர்களை நசுக்கிக் கொட்டாப் பிடியால் தட்டிக் கரைத்துக் கொடுமைப்படுத்துகிறார்கள். பசுவின்பாலை அதன் கன்றுக்குக் கொடுக்காமல், அதற்கு வெறும் புல்லைப் போட்டுவிட்டு, தாங்கள் சாப்பிடுகிறார்கள். இப்படி அர்த்தமற்ற ஜீவகாருண்யம் பலப் பல ஜீவர்கள் பெயரால் எத்தனையோ விதத்தில் உலகத்தில் வழங்கிவருகிறது. பறவை, மிருகம், ஊர்வன ஆகிய விஷயங்களில் காட்டப்படும் ஜீவகாருண்யத்தில் ஒரு சிறு பாகம்கூட, மனித ஜீவனிடத்தில் மக்கள் காட்டுவது அருமை என்றே சொல்லலாம்.

மக்கள் சமூக வாழ்க்கைத் திட்டத்தின்பயனாய் ஒருவரை ஒருவர் எவ்வளவு கொடுமைப்படுத்துகிறார்கள், எவ்வளவு கொடுமைக்கும் துக்கத்துக்கும் ஆளாக்குகிறார்கள்



என்று பார்த்தால் நடைமுறையிலுள்ள ஜீவகாருண்யங்கள் முட்டாள்தனமானவையென்றே சொல்லலாம்.

நான், ஏன் இங்கு இந்த ஜீவகாருண்யக் கூட்டத்திற்கு வந்தேன் என்று சிலர் கேட்கலாம். உண்மையிலேயே இங்கு கடலாடியில் நடக்கும் யாகத்தில் ஏதோ சில அய்ந்தோ, பத்தோ ஆடுகள் கொல்லப்படுவதை நான் பிரமாதமாகக் கருதி இங்கு வரவில்லை. இலட்சக் கணக்கான ஆடுகள் மாடுகள் மற்றும் சில ஜீவர்கள் தினமும் கொல்லப்படுவது எனக்குத் தெரியும். அப்படி இருக்க பின் ஏன் நான் இங்கு வந்தேன் என்றால், யாகத்தின் புரட்டையும்–அது செய்யப்படுவதன் உள் எண்ணத்தையும்–அதனால் ஏற்படும் பலன்களையும், 'உயர்ந்த சாதியார்–அகிம்சா தர்மமுள்ள அந்தணர்' என்று கர்வமுடன் தங்களைச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களின் யோக்கியதையையும் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டவும், கொல்லப்படும் பிராணிகள் யாகத்தின் பேரால் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பதையும் ஜனங்களுக்கு அறிவித்து, இப்படிப்பட்ட கொடுமையான சித்திரவதை இனி நிகழாமல் இருக்கும்படி செய்ய சர்க்காரைத் தூண்டுவதற்காகவுமே வந்திருக்கிறேன்.

முதலில், கொலைக் கொடுமைகளைப்பற்றிச் சொல்லுகிறேன். யாகத்தில் கொல்லப்படும் ஆடுகள் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பது தங்களுக்குச் சிலருக்காவது தெரிந்திருக்குமென நினைக்கிறேன். நான் அறிந்தமட்டில் ஆட்டைக் கால்களைக் கட்டிக் கீழே தள்ளி, கொம்பைப் பிடித்து ஒருவர் அமிழ்த்திக்கொண்டு வாய்க்குள் மாவைத் திணித்துக் கொண்டிருக்க—ஒருவர் நன்றாகக் கட்டி மூச்சுவிடாமல் சப்தம் போடாமல் செய்து—ஒருவர் விதர்களைக் கிட்டிபோட்டு நசுக்க—மற்றவர் வயிற்றில் ஆயுதங்களால் இடித்துக் கிழித்து அதன் சிற்சில உறுப்புகளைத் தனித் தனியாய் அறுத்து எடுப்பதன் மூலம் கொல்லப்படுகிறது. இது சகிக்கக்கூடியதா? உயிர்களிடத்தில் அன்பு காட்டக்கூடிய சாதியார் செய்யக் கூடியதா? அகிம்சைக்காரர்களுக்கு ஏற்றதா? இப்படிப்பட்டவர்கள் மேல் சாதிக்காரர்களா? இவர்களுக்கு பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ள உரிமையுண்டா? யோசித்துப் பாருங்கள்! ஆடு, கோழிகளைத் தலைகீழாகப் பிடிப்பதையும், தரதரவென்று இழுப்பதையும் ஜீவ இம்சை என்று சட்டஞ்செய்து அம் மனிதர்களைத் தண்டிக்கும் சர்க்கார்—இவர்களை என்ன செய்யவேண்டும்? ஆலையிலிட்டு நசுக்கும்படி சட்டம் செய்தால் அதைத் தப்பு என்று சொல்லமுடியுமா? யோசித்துப் பாருங்கள்!

இந்த யாகம் ஆட்டுக்கு மாத்திரமில்லையாம். மாடு, மனிதர், குதிரை முதலியவைகளுக்கும் உண்டாம். இப்படியே விட்டுவிட்டால் நாளைக்கு இந்த ஆடுகளின் கதியேதான் மனிதர்களுக்கும் ஏற்படும். மத சம்பந்தத்தில் அரசாங்கம் நுழைவதில்லை என்று சொல்லி அரசாங்கம் சுலபமாய்த் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால், நாளைக்கு நாமே தியாகம் செய்து 10, 20 மனிதர்களை இந்தப்படி சித்திரவதையான கொலைபாதகம் செய்தால், மதத்தில் பிரவேசிக்காமல் அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருக்குமா? அதுபோலவே இப்போது கருதி, இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான சித்திரவதைக் கொலைகளையும், இம்சைகளையும் அரசாங்கம் ஏன் நிறுத்தக்கூடாது? பார்ப்பனர்களுக்குப் பயந்தோ, மதத்திற்குப் பயந்தோ தாங்கள் சும்மா இருப்பதாகச் சொல்வார்களானால், இப்படிப்பட்ட கொலையும் சித்திரவதையும் தங்கள் மதத்துக்கு விரோதம் என்று கருதி அதற்காக வேதனைப்படும் ஜயின மதத்தினுடையவும், ஜயினர்களுடையவும் கொள்கையும் மரியாதையும் உணர்ச்சியும் காப்பாற்றப்பட வேண்டாமா என்று கேட்கிறேன்.

தோழர்களே! இந்தக் கொடுமைகளை உருவகப்படுத்திப் பார்க்கும்போது இராமாயணக் கதையின் தத்துவம் இதில் தாண்டவமாடுகின்றது. இராவணனையும் அவன் குடும்பத்தையும் ஆரியர்கள் இழித்துப் பழித்துக்கூறி, அவன் அரசை நாசமாக்கியதாகக் காணப்படும் கதையை இப்போது நினைத்துப் பாருங்கள்! இராமாயணக் கதைக்கு அஸ்திவாரமே இந்தச் சித்திரவதைக் கொலைபாதகச் செயல்களான யாகமேயாகும். தாட்கை

படிப்பகம்

www.padippakam.com



என்கின்ற ஒரு பெண் யாகத்தைக் கெடுத்ததற்காகத்தானே கொல்லப்பட்டிருக்கிறாள்? இந்த மாதிரிக் கொலைபாதக யாகத்தை யார்தான் கெடுக்கத் துணியமாட்டார்கள்? யாகத்தைக் கண்டு மனம் வருந்தி, பரிதாபப்பட்டு, அதை நிறுத்த முயற்சித்ததல்லாமல் அந்த அம்மாள் செய்த கெடுதி என்ன?

நமக்குச் சக்தியில்லாததாலும், நம் உணர்ச்சிக்கு அனுகூலமான ஆட்சி இல்லாததாலும் நாம் எல்லோரும் இங்கு வந்து கத்துகிறோம். சக்தியும் ஆட்சி உரிமையும் இருக்குமானால் நாம் தாடகையைப்போல்தானே நடந்துகொண்டு தீருவோம்? யாகத்தை வெறுத்ததற்காக அந்த அம்மாளைக் கொன்று விட்டதுமல்லாமல் அந்த அம்மாளை இழித்துக்கூறும் முறையில்—அந்த அம்மாள் மூத்திரம் பெய்து யாக நெருப்பை அணைத்துவிட்டாள் என்றும்; மிருகங்களையும், பறவைகளையும் பச்சையாய்ச் சாப்பிட்டாள் என்றும், பொருத்த மற்றதும், போக்கிரித்தனமுமான ஆபாசக் கதைகளையும் கட்டிவிட்டார்கள். இதிலிருந்தே இராமாயணத்தை ஜீவகாருண்யம் காரணமாய் ஏற்பட்ட ஆரியர்-திராவிடர் கலகம் என்றும்; ஆரியர் தங்களை உயர்த்தியும் திராவிடர்களைத் தாழ்த்தியும், திராவிடர்களுக்கு என்றும் பழி இருப்பதற்காக எழுதிவைத்துக் கொள்ளப்பட்டது என்றும்; இராம-இட்சுமணர்கள் ஆரியக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்றும்; இராவணாதியோர் திராவிட—அதாவது ஜீவகாருண்யக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் விளங்கவில்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்!

அக் கதையில் மிருகங்களையும் ஜீவர்களையும் கொல்லும் விஷயங்களிலும், மது மாமிசம் சாப்பிடும் விஷயங்களிலும், சூது வாது செய்த விஷயங்களிலும், பெண்களை இழிவாய் நடத்திக் கொடுமைப்படுத்தின விஷயங்களிலும் சிறிதும் தயங்காத இராம—இலட்சுமணக் கூட்டங்களை இவ்வளவு தூரம் புகழ்ந்திருப்பதுமல்லாமல், அவர்களைக் கடவுளாகக் கருதச் செய்து, திராவிட மக்களைக் கொண்டே பூஜிக்கவும் வணங்கவும் புகழவும் செய்து விட்டார்கள். அதுபோலவே இராவணாதியர்கள் இந்த யாகத்தை வெறுத்ததல்லாமல் வேறொரு கெடுதியும்—இராம-இலட்சுமணான் செய்த அளவுகூடச் செய்யாதவர்களை—திராவிட மக்களைக் கொண்டே இகழச் செய்துவிட்டார்கள். ஒரு வயிற்றில் பிறந்த இருவரில் ஒருவன் (இராவணன்) இராட்சதனாம்; ஒருவன் (விபீஷணன்) தேவ கணத்தைச் சேர்ந்தவனாம் (ஆழ்வானாம்)! என்ன புரட்டு? யோசித்துப் பாருங்கள்! ஒரு பெண்ணின் மூக்கையும் முலையையும் அறுத்த பாவிகள் கடவுளின் அவதாரங்களாம்! ஆயிரக்கணக்கான ஆடு, குதிரை, மாடு முதலியவைகளை மேற்கண்டபடி சித்திரவதை செய்து கொன்று தின்றவர்கள் தேவர்களாம்! இதிலிருந்து கடவுள்கள், தேவர்கள், பிராமணர்கள் ஆகியவர்களின் யோக்கியதைகளைச் சற்று நினைத்துப் பாருங்கள். திராவிட மக்களின் யோக்கியதைகளையும் ஏமாளித்தனத்தையும் எண்ணிப் பாருங்கள்!

இது நிற்க; இந்த யாகங்கள் புண்ணிய காரியங்களாம்! சொர்க்கத்திற்குக் காரணமானவைகளாம்! புண்ணியம் சொர்க்கம் என்கின்ற புரட்டைப் பாருங்கள்! ஜீவர்களைச் சித்திரவதை செய்தல் புண்ணியமாகவும், சொர்க்க லபிதமாகவும் இருந்தால் இனி பாவத்துக்கும் நரகத்துக்கும் காரணமான காரியம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. நமக்குப் புண்ணியம் சொர்க்கம் வேண்டுமானால் நமக்கு இஷ்டமானவர்களைப் பிடித்துக் கால் கைகளைக் கட்டிப்போட்டு, வாயில் மண்ணை அடைத்து, விதரைப்பிடித்து நசுக்கிக் கொன்றுபோட்டால்—புண்ணியமும் சொர்க்கமும் கிடைத்து விடும்போல் இருக்கிறது! வேண்டுமானால் சில மந்திரங்களையும் சொல்லிவிடலாம். இதில் நமக்கு இரண்டுவித இலாபம் போலும்! சொர்க்கம் நரகம் என்பவைகள் சோம்பேறிகளின் வயிற்றுப் பிழைப்புச் சாதனங்கள் என்று பல தடவைகள் நான் சொல்லி வந்திருக்கிறேன். பாடுபட்டு உழைத்தவன் பொருளைக் கையைத் திருகிப் பிடுங்கிக் கொள்வதற்குப் பதிலாக், சொர்க்க நரகங்கள் எனும் பூச்சாண்டிகளைக் காட்டிப் பயப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றது.



இப்படிப்பட்ட சொர்க்க நரகத்திற்கு உண்மையான அர்த்தம் நல்ல விதத்தில் செய்யவேண்டுமானால், மனிதனின் மூர்க்க சுபாவமும், பழிவாங்கும் தன்மையும் சொர்க்கம் நரகம் என்னும் வார்த்தைகளால் கற்பனைகளாகப் பிரதிபலிக்கின்றன என்பதாகும்.

இப்படிப்பட்ட சொர்க்க நரகத்தைப் பிரச்சாரம் செய்யவே யாகங்கள் முதலியன செய்யப்படுகின்றன.

யாக சம்பந்தமான வேத சாஸ்திர ஆதாரங்கள் நமக்குப் பொருத்தமானவைகளாகுமா? நாம் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியுமா? இப்படிப்பட்ட கொடுமைக்கும் கொலைபாதகத்துக்கும், சித்திரவதைக்கும் ஒரு கடவுள் சொர்க்கத்தைக் கொடுப்பதாக இருந்தால் கடவுளின் தன்மையாகக் கூறப்படும் கருணை என்று சொல்வது உண்மையாய் இருக்க முடியுமா? கடவுளால் உண்டாக்கப்பட்ட ஒரு ஜீவனை மற்றொரு ஜீவன் சித்திரவதை செய்து ஆகுதி கொடுப்பதைக் கடவுள் விரும்புகிறார் என்றால்—ஜீவர்களை எல்லாம் கடவுள் உற்பத்தி செய்தார் என்பது உண்மையாக இருக்க முடியுமா? கடவுள் பேராலேயே இப் பேர்ப்பட்ட காரியங்கள் நடப்பதை ஒரு கடவுளோ—அரைக் கடவுளோ அணுவளவு கடவுளோ இருந்தால் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? அல்லது, கடவுளுக்கு இது தெரியாது என்று சொல்லிவிட முடியுமா? இவைகளெல்லாம் பாமர மக்களை ஏமாற்றுவதற்குச் செய்யப்படும் சூழ்ச்சிப் பிரச்சாரமே யொழிய வேறில்லை. இப்படிப்பட்ட யாகங்களுக்குச் சங்கராச்சாரி சுவாமியார் என்பவரும் அனுமதியளிக்கிறாராம்; பணம் கொடுக்கிறாராம். இதிலிருந்து சங்கராச்சாரிகள் என்பவர்களுடைய யோக்கியதைகளையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த யாகங்கள் இப்பொழுது ஏன் செய்யப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? சனாதன தர்மங்கள் கெட்டுப்போய் விட்டனவாம்! எதனால் என்று கேட்டீர்களானால், சாரதா சட்டம் செய்யப்பட்டு விட்டதாம். தீண்டாமை ஒழிப்புச் சட்டமும், கோவில் பிரவேசச் சட்டமும் இப்போது இந்திய சட்டசபையில் இருக்கின்றனவாம்! அவை நிறைவேறிவிடும் பட்சத்தில் சனாதன தர்மத்துக்குப் பெரிய ஆபத்து வந்துவிடுமாம்! ஆதலால், யாகங்கள் செய்வதன் மூலம் அவைகளைத் தடுத்து, சனாதன தர்மத்தை நிலைநாட்டவேண்டுமாம்! ஆகவே, சனாதன தர்மங்கள் என்பவை பார்ப்பனரல்லாத மக்களுக்கு, பார்ப்பனர் ஒழிந்த மற்ற மனித சமூகத்திற்கு எவ்வளவு மோசமானதும், கெடுதியானதும், சுயமரியாதைக்கு விரோதமான காரியம் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இதிலிருந்து பார்ப்பனர் புரட்டுகளை நீங்கள் தெரிந்து கொள்ளக்கூடும் என நினைக்கிறேன். சில பார்ப்பனர்கள் தீண்டாமை ஒழியவேண்டும் என்பதும், சில பார்ப்பனர்கள் கோவில் பிரவேசம் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதும்; மற்ற பார்ப்பனக் குருமார்கள், மடாதிபதிகள், சாதித் தலைவர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து—சட்டம் ஒழியவும், பிரயனத்தப்படுபவர்கள் ஒழியவும் யாகம் செய்வதும், யாகத்தை ஆதரிப்பதுமாயிருந்தால் இதற்கு என்ன அர்த்தம் சொல்லுவது என்று உங்களையே கேட்கிறேன்!

நான் இங்கு வரப்போவதாய்ப் பத்திரிக்கையில் தெரிந்துகொண்டவுடன், இரண்டொரு பார்ப்பன நண்பர்கள் என்னைப் பரிகாசம் செய்தார்கள். அது என்னவென்றால், 'நீங்கள் இப்பொழுது உலக மக்கள் பொது விஷயங்களில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கும்போது, எங்கோ இரண்டொரு பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக ஏதோ ஒரு வியாபாரமாய் யாகம் செய்து பிழைக்கிற காரியத்தைப் பிரமாதமாய்க் கருதி, அதற்காக நீங்கள் போகலாமா?' என்று கேட்டார்கள். இந்த யாகங்களை யாரோ இரண்டொரு பார்ப்பனர்களின் வயிற்றுப்பிழைப்பு வியாபாரம் என்று எண்ணிவிட முடியுமா? இதற்கு எல்லாப் பார்ப்பனரும் பணம் கொடுத்திருக்கிறார்கள். சங்கராச்சாரி

படிப்பகம்

www.padippakam.com



முதலியவர்கள் ஆதரவளித்து இருக்கிறார்கள். அய்யங்காரப் பார்ப்பனர்களுக்கு யாகம் விரோதமானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இப்போதைய யாகத்தில் அய்யங்காரப் பார்ப்பனர்களும் கூடச் சேர்ந்து ஆதரவளித்தும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படியிருக்க, இரண்டொரு பார்ப்பனர்கள் என்று எப்படிச் சொல்லிவிட முடியும்?

அப்படியானால், இவ்வளவு கூச்சல் ஏற்பட்ட பிறகாவது சில முக்கியமான பார்ப்பனர்கள் ஏன் ஒன்றுகூடி ஒரு அறிக்கையை வெளியிடக் கூடாது? "இந்த யாகம் பார்ப்பன சமூகத்தின் சார்பாகவோ, மதத்தின் தத்துவப் பிரகாரமோ நடப்பதல்ல; நாங்கள் அதை ஆதரிப்பதில்லை என்பதோடு வெறுக்கவும் செய்கிறோம்" என்று தோழர்கள் மகாகனம் சாஸ்திரியாரும், சர். சிவசாமி அய்யரும், சர். சி. பி. இராமசாமி அய்யரும், டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியாரும், சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் ஒரு அறிக்கை வெளியிடட்டுமே? இவர்களெல்லாம் தங்களைப் பெரிய சீர்திருத்தவாதிகளென்றும், தாங்களே இந்தியமக்களின் பிரதிநிதிகள் என்றும், எல்லா விஷயங்களுக்கும் தாங்களே அபிப்பிராயம் கொடுப்பவர்கள் என்றும் தாராளமாய் விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்ததுடன் போதிய விளம்பரமும் பெற்றிருக்கிறார்கள். ஏன் இவர்கள் வாய்திறக்கக் கூடாது என்று கேட்கிறேன். காங்கிரஸ்கட்சிப் பார்ப்பனராவது ஏன் அறிக்கை வெளியிடக் கூடாது? தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் முந்திரிக்கொட்டைபோல் உலக விஷயங்களுக்கெல்லாம் முன்னால்வந்து அபிப்பிராயம் கொடுப்பவர்—இதற்கு ஏன் வாய்மூடிக்கொண்டிருக்கிறார் என்று கேட்கிறேன்.

தீண்டாமைவிலக்கு மசோதாவையும், கோயில் பிரவேச மசோதாவையும் காங்கிரசின் சார்புடைத்தல்லவா என்றும், தோழர் காந்தியார் இம் மசோதாக்கள் நிறைவேறவேண்டி கவலை எடுத்துக்கொண்டு, இந்திய சட்டசபை அங்கத்தினர்களிடம் பிரச்சாரம் செய்து, ஆதரவும் தேடிவருகிறார்களா இல்லையா என்றும் கேட்கிறேன். இப்படிப்பட்ட காங்கிரஸ் அனுமதிபெற்ற—காங்கிரஸ் சார்பான மசோதாக்களை ஒழிப்பதற்கு யாகம்செய்தால் காங்கிரஸ்வாதியான தோழர் சத்தியமூர்த்தியின் கடமை என்ன என்று கேட்கின்றேன்.

தஞ்சை ஜில்லா பார்ப்பனர்கள் வருணாசிரமக்காரர்கள்; அவர்கள் தீண்டாமை விலக்கு மசோதாவுக்கும் கோயில் பிரவேச மசோதாவுக்கும் எதிராகவும், சாரதா சட்டத்தை ஒழிப்பதற்கும் தகுதியுடையவர்களையும் அந்தப்படி செய்வதாக வாக்களிப்பவர்களையும் தான் தேர்ந்தெடுப்பார்கள். அப்படியிருக்க, தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரி அவர்கள் அந்தத் தொகுதியில் நிற்பதென்றால் அவர்கள் எப்படிப்பட்டவராய் இருக்கக்கூடும் என்று யோசித்துப் பாருங்கள்! தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் இந்த இரண்டு மூன்று மசோதாக்களையும் ஆதரிப்பதாக இதுவரை எங்கும் சொல்லவே இல்லை. அன்றியும் தீண்டாமை விலக்கு, கோயில் பிரவேசம் ஆகிய காரியங்களுக்குச் சட்டம் செய்யக்கூடாது என்று தஞ்சை, திருச்சி ஜில்லாவில் பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட பார்ப்பனர்கள்தாம் காங்கிரஸ் தலைவர்கள் மாத்திரமல்லாமல், தோழர் காந்தியால் பாராட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்களைப் போன்று சில பார்ப்பனரல்லாதாரும் இருக்கிறார்கள்.

உழைத்தவன் உழைப்பின் பயனை அடைய வேண்டுமானால்—இப்படி யாகம், சாஸ்திரம், வேதம், மோட்சம், கர்மம், முன்ஜென்மம், கடவுள் செயல் என்கின்ற பித்தலாட்டங்களுக்கு அடிமைப்படக் கூடாது.

எத்தனையோ வருஷ காலமாய் யாகம் செய்யப்பட்டு வருவதாய் அறிகிறோம். உலகத்தில் என்ன அக்கிரமம் மாறி இருக்கிறது? என்ன கொடுமை நீங்கி இருக்கிறது? யாகம், எக்கியம் கிரமமாய்ச் செய்யப்பட்டு வந்த தெய்வீக அரசர்களான இராமன், அரிச்சந்திரன் ஆகியவர்கள் காலத்தில் இருந்த அக்கிரமம், அயோக்கியத்தனம், கொலை



பாதகம் எல்லாம் இன்னும் இருந்துதான் வருகின்றன. எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஆகையால், நீங்கள் இப்படிப்பட்ட மிரட்டுதல்களைக் கண்டு பயந்துவிடாதீர்கள்! ஏமாந்து விடாதீர்கள்!

[சென்னையில், 3-6-1934-ல் சொற்பொழிவு—'புரட்சி' 10-6-1934]

## 7. நாகரிகம் எது?

தலைவரவர்களே! தோழர்களே! மாணவர்களே!

நாகரிகம் என்ற வார்த்தைக்குப் பொருளே பிடியில் சிக்காத ஒரு விஷயமாகும். ஒவ்வொருவரும் 'நாகரிகம்' என்பதற்கு ஒரு தனிப் பொருள் கூறிவருகிறார்கள். 'கண்ணோட்டம்' என்ற தலைப்பின் கீழ், குறளில் நாகரிகம் என்ற வார்த்தை வள்ளுவரால் உபயோகிக்கப்பட்டிருப்பதாக நான் 10, 20 வருஷங்களுக்கு முன் பார்த்ததாக ஞாபகம். அது தாட்சண்ணியம், அடிமை என்கின்ற பொருளில் உபயோகப்பட்டிருப்பதாகவும் எனக்கு ஞாபகம்

நாகரிகம் என்கின்ற வார்த்தைக்கு எந்தக் கருத்தை வைத்துக்கொண்டு பேசினாலும் மக்கள், சமூகம், நடை, ஆகாரம் மற்றும் எல்லா பாவனைகளிலும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தினால் இவைகள் வேறுபட்டிருக்கின்றனவென்று கூறமுடியாது. எப்படியோ, எல்லாம் மாறுதலில்தான் போய்க்கொண்டிருக்கிறது.

நம்முடைய பெண்கள் முன்பு முழங்கைக்குக் கீழும் இரவிக்கை அணிந்துவந்தார்கள். பின்பு மேலேறியது. மறுபடியும் கீழே இறங்கியது. இப்பொழுது மறுபடியும் மேலேயே போய்க்கொண்டிருக்கிறது. மேல்நாட்டுப் பெண்களும் தெருக்களில் தெருக் கூட்டுவது போன்ற ஆடைகளை முன்பு அணிந்துவந்தார்கள். அந்தக் காலத்தில், துணிகளைத் தூக்கிப் பிடித்துக்கொள்ள, பணம் படைத்தவர்கள் ஆட்களை நியமித்துக்கொண்டிருந்தார்கள். அது அக்கால நாகரிகம். இப்பொழுது என்னவென்றால் ஆடை விஷயத்தில் மேல்நாட்டுப் பெண்களும் எல்லாம் சுருக்கிக்கொண்டு விட்டார்கள். அதை நாம் இப்பொழுது நாகரிகம் என்றுதான் கருதுகிறோம்.

நாம் இவைகளைப் பற்றியெல்லாம் பேசும்பொழுதும் யோசிக்கும்போதும் எந்தவித மாறுதலும் இல்லாமல்—அதாவது சாதி, மதம், தேசம் என்ற பற்றுதல்களை விட்டு விட்டு, Freeயாக சுயேச்சையாகச் சீர்தூக்கிப் பார்த்தால்தான் விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அதன் உண்மையும் அப்பொழுதுதான் விளங்கும்.

ஒரு காலத்தில் சாம்பலைப் பூசிக்கொண்டு 'சிவ, சிவ,' என்று ஜெபிப்பதுதான் யோக்கியமாகக் கருதப்பட்டது. இன்றைய கால தேச வர்த்தமானங்கள் மேற்சொன்ன விஷயத்தைக் கேலி செய்கிறது.

கணவன், மனைவி என்கின்ற இரு சாரார்களை எடுத்துக்கொண்டாலும், முன்பு—கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன் என்று மதித்து அடிப்பூதுவதே ஒரே கடமை என்று நடந்துவந்த பெண்களைப்பற்றிப் பெரிதும் மதித்து வந்தார்கள். ஆனால், இன்றோ, கணவனிடம் மனைவியானவள், 'நான் உனக்கு வேலைக்காரியா? அடிமைப்பட்ட மாடா? ஜாக்கிரதையா யிருந்தால் சரி; இல்லாவிட்டால் எனக்குச் சம அந்தஸ்தும், சம உரிமையும், சர்வ சுதந்திரமும் உண்டு!' என்று கர்ஜனை செய்யும் பெண்களையே நாகரிகம் வாய்ந்தவர்கள் என்று கருதுகிறோம்.

முன்பு புராணத்தைப்பற்றியும் மதத்தைப்பற்றியும் பேசுவதுதான் வித்வத் தன்மையாக இருந்தது. ஆனால், அது இன்று குப்பையாகி பரிகசிக்கத் தக்கதாக ஆகிவிட்டது. புத்திக்கும் அறிவிற்கும் பொருத்தமில்லாத முரட்டுப் பிடிவாதத்தில் முன்பு

படிப்பகம்

www.padippakam.com



நம்பிக்கையிருந்ததை சிலாகித்துப் பேசினோம். ஆனால் இன்றையதினம் பிரத்தியட்சமாக எதையும் எடுத்துக்காட்டித் தெளிவுபடுத்துவதையும் விஞ்ஞானம் போன்ற அறிவியக்க நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுநர்களையுமே நாம் பெரிதும் மதித்துவருகிறோம்.

நாகரிகம் என்பது நிலைமைக்கும், தேசத்துக்கும், காலப்போக்கிற்கும் தக்கவாறு விளங்குகிறது. கால தேசவர்த்தமான வழக்கத்தையே ஒட்டி நாகரிகம் காணப்படுகிறது.

காலப்போக்கானது எந்தவிதத் தேக்கத்தையும் உண்டாக்குவதில்லை; ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றவும் புரட்சி ஏற்படவும் செய்கின்றது.

மீசை, தலைமயிர் இவைகளைப்பற்றிப் பலர் பேசினார்கள். எது நாகரிகம் என்று கருதுகின்றோமோ அது பெருத்த அஜீரணத்துக்கு வந்துவிடுகிறது. மீண்டும் அந்த நிலைமையானது மாறிக்கொண்டு போகத்தான் செய்கின்றது.

ஒரு விஷயமானது வாய்ச் சாமர்த்தியத்தினால் செலாவணியாகிவிடும். அது மெய்யோ பொய்யோ–சரியோ தப்போ எப்படியும் இருக்கலாம்.

நாம், ஏன் எதற்காக உழைத்துப் பாடுபடவேண்டும்? பகுத்தறிவு படைத்த நாம் பாடுபட்டுத்தான் ஆகவேண்டுமா? நாகரிகம் என்பது சதா உழைத்துத்தான் உண்ண வேண்டுமா? என்ற கேள்விகள் எழுந்து மக்கள் சமூகம் கஷ்டம், தியாகமின்றி—நலம்பெற முயற்சிக்கலாம். இது நாகரிகமாகக் கருதப்பட்டு பயன் அடைந்தாலும் அடையலாம்.

இன்றைய அரசியல் விஷயத்தில் இராட்டை சம்பந்தப்பட்டிருக்கிறது. இது ஆயிர வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டு நாகரிகமாகப் பாவிக்கப்பட்டிருந்தது; பின்பு குப்பையில் தள்ளப்பட்டது. பிறகு அது மீண்டும் வெளிப்படுத்தப்பட்டு, அதற்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப்பட்டு, இராட்டை சுற்றுவதும் தக்ளி நூல் நூற்பதும் நாகரிகமாகக் கருதப்பட்டது. ஆனாலும் அதுவும் ஒழிந்துபோயிற்று என்றே சொல்லலாம். இவைகளையெல்லாம் எந்த விதமான (தேசம், மதம், சாதி) பற்றுகளுமில்லாத பொது மனிதன் பொது நோக்கோடு கவனித்தால் உண்மை விளங்காமல் போகாது.

நாம் ஒரு காலத்தில் தேசம், தேசியம், தேசப் பற்று என்பதை நாகரிகமாகக் கருதி வந்திருக்கிறோம். ஆனால், இன்றோ அவைகளையெல்லாம் உதறித்தள்ளி மனித ஜீவகாருண்யம், உலக சகோதரத்துவம், மக்கள் அபிமானம் (Citizen of the World Humanism) என்று கருதுவதையே பெரிதும் நாகரிகமாகக் கருத முன்வந்துவிட்டோம்.

ஒரு காலத்தில் நாகரிகமாகக் கருதிவந்ததை இன்று நாம் பரிகசித்து வருகிறோம். ஒரு மனிதன் தான் நாயக்கன், முதலி, வைணவன், சைவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக்கொண்டு, ஒவ்வொருவரும் தாங்கள் அதிக மேல்சாதிக்காரனாவதற்குச் சைவ, வைணவப் போக்கைப் பற்றிக்கொண்டு, பூணூலையும் நாமத்தையும் போட்டுத் தங்கள் மதத்தைச் சிலாகித்துப் பிதற்றிக்கொண்டும் வந்தான். ஆனால், இன்றைய தினம் இவைகளையெல்லாம் புத்திகெட்டதனமென்றும், முற்போக்குக்கு முரணான செயல் என்றும் கூறி, வெகுவாகக் கண்டனம் செய்து வருவதைக் காண்கிறோம்.

ஒரு காலத்தில் தனித் தனித் தத்துவம் நாகரிகமாகக் கருதப்பட்டது. உதாரணமாக, ஒரு தனித் தனிச் சாதி நன்மையும், தேச நன்மையும் சிலாக்கியமாகக் கருதப்பட்டது. ஆனால், ஒரு சாதியின் அனுகூலம் பிறசாதியானுக்குப் பாதகம் என்பதையும், ஒரு தேச நன்மை மற்றொரு தேசத்துக்குப் பொல்லாங்கு என்பதையும் நாம் இன்று நன்கு உணர ஆரம்பித்து விட்டோம்.

தோழர்களே! நான் குறிப்பாக ஒரு விஷயத்தைப் பற்றி வற்புறுத்தி இங்குகூற விரும்புகிறேன். அதாவது, நாம் அனுபவ முதிர்ச்சியால், அறிவு ஆராய்ச்சியால் நாம்



முற்போக்காகிக் கொண்டு வருகிறோம் என்பதேயாகும். நாம் எல்லா மனிதர்களையும் அறிவின் உணர்ச்சியால் ஆழ்ந்து கவனிக்கிறோம். உதாரணமாக, வியாபாரிகளை மக்கள் சமூகத்தின் நலனைக் கெடுத்து இலாபமடையும் கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்றும், லேவா தேவிக்காரர்களை மனித சமூக நாச கர்த்தாக்களென்றும், மத ஆதிக்கங்கொண்ட வர்க்கத்தினர்களை மனித சமூக விரோதிகளென்றும் கண்டிக்கிறோம்.

நாகரிகம் என்பது பிடிபடாத விஷயம் என்று முன்பே கூறினேன். நம் நாட்டுப் பெண்கள் எப்படி (Belt பெல்ட்) கட்டாமல் சேலை கட்டுகிறார்கள் என்றும், அது இடுப்பில் எவ்வாறு தங்கி இருக்கிறது என்றும், தலைக்கு ஊசி இல்லாமல் பெண்கள் எவ்வாறு மயிர் களைச் சேர்த்து முடிந்து கொள்கிறார்கள் என்றும், நாம் சாப்பாட்டுக்குத் தினம் ஓர் இலை (Plate) எப்படி செலவு செய்கின்றோம், என்ன மகத்தான நஷ்டம் என்றும் மேனாட்டார் ஆச்சரியப்பட்டு நம்மவர்களைக் கேட்பதையும் கேட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் அவர்களின் செய்கையைச் சரியாக உணராததினால், சிலதை ஆச்சரியமாகக் கருத நேரிடுகிறது.

நம்மிடையேயுள்ள சாதி அபிமானம், சொந்தக்கார அபிமானம், பாஷாபிமானம், தேசாபிமானம் எல்லாம் தொலைய வேண்டும். இல்லாவிட்டால் எந்த நல்ல விஷயத்திலும் நாம் முடிவு காணுவது சரியாக ஆகிவிடாது.

காந்தியார் மேனாட்டில் முழங்கால் துண்டோடு—போதிய ஆடையின்றிப் போன பெருமையைப்பற்றி ஒரு நண்பர் குறிப்பிட்டார். இது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமாகும்? சவுகரியத்திற்காகவும்—நன்மைக்காகவும் அங்கு அதிக ஆடைகளை பந்தோபஸ்துக்காக அணிந்து கொள்ளாமல் பிடிவாதத்தோடு—கேவலம், இந்திய தர்மம் என்ற வெறும் எண்ணத்திற்காகக் குளிரால் விரைத்துப்போக இங்கிலாந்து வாசம் செய்தது எவ்வளவு தூரம் நியாயமான செய்கையாகும்?

புதிய எண்ணங்களும், புதிய எழுச்சிகளும், புதிய காரியங்களும் நிகழ்கின்றன. நீங்களும் காலப் போக்கின் உயரிய பலனை வீணாக்காது, பகுத்தறிவை மேற்போட்டுக் கொண்டு, ஜனசமுதாய நன்மையைத் தேடிப் பாடுபட முன்வாருங்கள். உங்களுடைய முயற்சிக்கு எல்லாம் வெற்றியே உண்டு.

[ஈரோட்டில் சொற்பொழிவு–'புரட்சி'—31-12-1933]

## 8. மக்கள் துயரம் நீங்க வழி

தலைவரவர்களே! தோழர்களே!

இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் மக்கள் சமூக அமைப்பின் அஸ்திவாரமே சரியில்லாமல் இருக்கிறது. இந்த அஸ்திவாரத்தின்மீது கட்டக்கூடிய எந்த அமைப்பும் மக்கள் சமூகத்துக்கு நன்மையளிக்கக்கூடியது அல்ல.

ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படி சம அந்தஸ்தும், சம உரிமையும் உண்டோ அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்கவேண்டியது அவசியமாகும். அப்போதுதான், மக்கள் சுகமாக வாழமுடியும். ஏதோ தான் பிறந்த வேளையின் பலன் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதான், மற்றொருவன் சுகத்தை அனுபவிக்கப் பாத்தியதை உடையவன்தான் என்னும் சோம்பேறி எண்ணமே மக்களை அழித்து வருவதற்கு முக்கிய கருவியாய் இருக்கிறது. இந்த எண்ணம் மாறுபடவேண்டியது அவசியமாகும். இதற்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் அது வீணாகாது.

மக்களின் மனோபாவமும் வாழ்க்கை நடத்தும் முறையும் மாறினால் ஒழிய வேறொரு முறையாலும் நன்மையுண்டாகாது என்பது திண்ணம். தற்போதிருக்கும்



படிப்பகம்

www.padippakam.com



நிலைமையில் சுயராஜ்யம் வந்தால் குருட்டு நம்பிக்கையும் வைதிகமும்தான் வலுக்கும். தற்போது சுயராஜ்யம் அனுபவிக்கும் தேசங்களை எடுத்துக்கொள்ளுங்கள்; ஏழைகள் நிலைமை அங்கு எப்படியிருக்கிறது? அமெரிக்கா ஜனநாயக ஆட்சியுடையதாகத்தான் இருக்கிறது. அங்கே இலட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றார்கள். அமெரிக்கா உலகின் செல்வத்திற்கே இருப்பிடமாய் இருந்தும்—அங்கே ஏழைகள் நிற்க நிழலின்றி, உறங்க இடமின்றித் தவிக்கிறார்கள்.

ஜெர்மனி நிலைமை என்ன? சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை உடையதென்று சொல்லும் இங்கிலாந்து சுயராஜ்ய தேசமேயாகும். ஆனால், அங்கு ஏழைகள் படும் துயரம் கொஞ்சநஞ்சமல்ல. சுயராஜ்யமுள்ள ஒவ்வொரு தேசமும் இப்படித்தான் இருக்கிறது. சுயராஜ்யமோ, அன்னிய ராஜ்யமோ, குடியரசோ, முடியரசோ எந்தவிதமான முறையாலும் மக்கள் சுகம் பெறமுடியாத நிலைமையில் உலகம் இன்று இருந்துவருகின்றது. ஆகையால், ஏழைகள் துயரத்தைப் போக்க இந்திய சுயராஜ்யம் இப்போது சிலரால் கருதப்படும் முறையில் யாதொரு நன்மையும் கொடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம். சமதர்மத்தையும் பொதுவுடமையையும் அஸ்திவாரமாகக் கொண்ட அமைப்பு ஒன்றே மக்கள் சுகவாழ்க்கைக்குரிய வழியாகும். இதற்காக ஏன் நாம் தியாகம் செய்யத் தயாராய் இருக்கக்கூடாதென்று கேட்கிறேன்.

உலகத்தில் பல வகைகளில் ஜீவராசிகள் மரணமடைகின்றன. பல நோய்களால் இறக்கிறவர்களின் தொகை சாதாரணமல்ல. மதத்தின் பெயரால் யாதொரு விவேகமுமில்லாமல் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். இன்னும் பல வழிகளில் மரணம் அடையும்போது மக்களின் உன்னத வாழ்க்கை அமைப்பை உத்தேசிக்கச் சிலரோ, பலரோ உயிரைத் தியாகம் செய்வதுகூட பெரிய காரியமாகுமோ?

மனிதனுக்கு மனிதன் எதற்காக வித்தியாசம் காண்பிக்கப்படவேண்டும்? அறிவுள்ள எவரும் இனி இந் நிலைமையைச் சகித்துக்கொண்டு ஒருகணமாவது வாழமுடியாது. பலாத்காரம் கூடாது. இம் முறைகளை மாற்ற பலாத்காரம் ஒருபொழுதும் வெற்றியடைய முடியாது. பலாத்காரம் பலாத்காரத்தையே பெருக்கும். உண்மையை மறைத்துவிடும். ஆகையால், மக்களுடைய மனத்தை மாற்றப் பாடுபடவேண்டியதுதான் முறையே ஒழிய, பலாத்காரத்தினால் சாதித்துவிடலாமென்று எண்ணுவது மனித இயற்கைக்கு விரோதமான தத்துவமாகும். இந்தத் தேசத்திலும் முன்னேற்றமுள்ளவர்களென்றும், பிற்போக்கானவர்களென்றும் இரண்டு கட்சிகளே இருக்கமுடியும். இப்படிப் பிரிக்கப்பட்டால் ஒழிய மக்கள் அபிவிருத்தியடைய மார்க்கமில்லை. நமது மக்களுக்கு விஷயத்தை அறியக்கூடிய பகுத்தறிவு விருத்தியடைந்தால் ஒழிய மற்ற எந்த ராஜ்ய முறையாலும் ஒரு நன்மையும் விளைந்துவிடப் போவதில்லை.

[குடந்தையில், 8-7-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 9-9-1934]

## 9. மாறுதல்

தலைவரவர்களே! தோழர்களே!

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மனிதனும் அவனவன் வாழ்வில் முற்போக்கும், மாறுதலும் அடைந்துகொண்டே வருகின்றான். இதற்காகத் தனி இலட்சியம் தேவையில்லை. மரக்கட்டைபோல் உணர்ச்சியற்றவனாய் இருந்தாலும் அவன்கூட காலப்போக்கில் தானாகவே மாறுதலும் முற்போக்கும் அடைந்துதான் தீருவான்.

ஆனால், அப்படிப்பட்ட விஷயங்களில் நம்போன்றவர்கள் செய்யும் விசேஷ காரியம் என்னவென்றால், எப்படிப்பட்ட மாறுதல்—எப்படிப்பட்ட முற்போக்கு அவசியம் என்பதில் செலுத்தும் கவனமேயாகும்.



தானாகப் போய்க்கொண்டிருக்கும் முற்போக்குக்கும் மாறுதலுக்கும் தடையாயிருந்து அவற்றை வேறு வழியில் திருப்புவதனால் சில சமயங்களில் பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டுவிடுகின்றது. அதற்கு எதிர்ப்பும் பழிப்பும் பலமாய் ஏற்பட்டுவிடுகின்றது. இப்படிப்பட்ட சமயங்களில் சிலர் பழமையை—யதாஸ்திதியைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு உபத்திரவப்படுகிறார்கள்; தொல்லைகளை விளைவிக்கிறார்கள்; இத் தொல்லையும் உபத்திரவமும் தங்கள் அறியாமையால் செய்வதுண்டு.

எப்படியிருந்தாலும் அபாயமான வழியில்—கெடுதி உண்டாக்கும் வழியில் மாறுதலும் முற்போக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது மக்கள் கடமையாகும். மாறுதல் வரும்போது அதைக் கையாளுபவர்கள் துன்பத்துக்கும் பழிப்புக்கும் ஆளாவது என்பது புதிதல்ல; சரித்திரகால இயற்கையாகும். சாக்ரடீஸ், புத்தர், கிறிஸ்து, முகமதுநபி ஆகிய பெரியார்கள் இன்று எவ்வளவோ மக்களின் வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரியவர்களானாலும், அவர்கள் காலத்தில் எவ்வளவோ தொல்லைக்கும், இழிவுக்கும் பழிப்புக்கும் ஆளானதாகச் சரித்திரங்கள் சொல்லுகின்றன.

அதுபோலவே, சில மாறுதல்கள் தற்கால மக்களுக்குக் கசப்பாய் இருந்தாலும், பிற்கால மக்களால் மதிப்பும் பெருமையும் பெறும் என்ற துணிவு எனக்குண்டு. அந்த நம்பிக்கையின்பேரில்தான் நாம் எந்த மாறுதலையும் திருத்தத்தையும் செய்யத் துணியவேண்டுமே ஒழிய, நாம் இன்றே பாராட்டப்படவேண்டும் என்று கருதிக்கொண்டு செய்வது பயன்படாது.

கலியாணம், இழவு, வாழ்வு முதலிய துறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் சுயமரியாதை இயக்கந்தான் என்று முழுவதும் கூறுவது தகாது. காலதேச வர்த்தமானம் மக்களை அப்படிக் காலத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்ளச் செய்கின்றது. அதில் சிலவற்றிற்குச் சுயமரியாதை இயக்கம் 'துணை புரிந்தது என்று சொல்லலாம்.

[புதுக்கோட்டையில், 7-10-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 14-10-1934]

படிப்பகம்

www.padippakam.com

# 1. கல்வி

## 1. கல்வி விடுதலை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

விடுதலை என்பதை நாம் அடையவேண்டுமானால், அதற்கு நாம் எப்படி உழைக்க வேண்டும்? எந்தெந்தத் துறையில் முன்னேறியிருக்க வேண்டும்? முற்போக்குக்கு எவ்வாறு பாடுபடவேண்டும் என்பதைப்பற்றி நாம் அவசியம் அறியவேண்டும்.

மக்கள் விடுதலையடைவதற்குரிய மார்க்கங்கள் என்று யோசித்தால் பல இருக்கின்றன என்பது விளங்கும். பொதுவாக மக்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவசியம் வேண்டியிருப்பவைகள் கல்விச் செல்வம், தொழில், சமூக சமத்துவம், பெண்கள் சமத்துவம், பெண்கள் விடுதலை ஆகியவைகளிலேயே நமக்கு முதன்முதலாக விடுதலை வேண்டியிருக்கின்றது. மற்ற தேசத்தாருடைய கல்விச் செல்வம், தொழில் சமத்துவம், விவாகம், விவாகரத்து ஆகியவைகளுடன் நமது தேசத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால்தான் நமது நாட்டின் தன்மை நமக்குச் சுலபமாக விளங்கும். அதோடு நமது நிலை இவ்வாறு இருப்பதற்குக் காரணம் என்ன என்பதையும் அறிந்து அவைகளினின்று விடுதலையடையும் படியான மார்க்கங்களைத் தெரிந்து அதற்கெனப் பாடுபட்டோமானால் நமக்கு நிச்சயமாக வெற்றி ஏற்படும்.

தற்காலம் கல்வியானது நமது நாட்டில் மிக்க மோசமான நிலைமையில் இருக்கிறது. புள்ளிவிவரங்களின்படி 100-க்கு 10 பேரே படித்தவர்கள். இவர்களிலும் பிராமணர்களைத் தள்ளி, பிராமணரல்லாதார்கள் 100-க்கு எத்தனை படித்த மக்கள் இருக்கின்றார்கள் என்றால் 100-க்கு 5 பேர்கூட படித்தவர்கள் இருக்க மாட்டார்கள். அரசாங்க அறிக்கையிலும் பார்ப்பனரல்லாதாரில் அனேக வகுப்பார் கல்வியில் பின்னடைந்திருப்பதால், அவர்களுக்கென்று கல்விச் சம்பளம்கூடக் குறைத்திருக்கிறார்கள். பெண்களுக்குச் சம்பளமே இல்லை என்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், மற்ற நாடுகளில் 100-க்கு 50, 60, 70 வீதமும், இன்னும் சில நாடுகளில், நமது நாட்டுப் பார்ப்பன சமூகம் போல 100-க்கு 100 பேர் படித்தவர்கள் உள்ளார்கள். நமது நாட்டில் மட்டும் 100-க்கு 90 பேர் தற்குறிகளாக இருப்பதேன்? அதுவும் பார்ப்பனரல்லாத சமூகம் 100-க்கு 95-ம், தீண்டாதார் சமூகம் 100-க்கு $99\frac{3}{4}$-ம், பெண்கள் 100-க்கு $99\frac{1}{2}$-ம் தற்குறிகளாக இருப்பதற்குக் காரணம் என்ன? இதற்கு அரசாங்கமா காரணம் என்பதை யோசித்துப் பாருங்கள்! இதற்குக் காரணம் கண்டுபிடிக்க இதுவரை நாம் என்ன செய்திருக்கிறோம்? என்ன செய்கிறோம்? அரசாங்கம் நமக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவில்லையா? அல்லது, அரசாங்கத்தில் பணமில்லையா? அல்லது, மக்களுக்குக் கல்வி கற்க வேண்டுமென்கின்ற ஆசை இல்லையா? என்பவைகளைக் கவனித்தோமானால் ஏன் மக்கள் கல்வி கற்கவில்லை என்பது விளங்கும்.

சகோதரர்களே! நமது சமூகம் இதற்குமுன் என்றைக்காவது கல்வி அறிவுடன் இருந்ததாகச் சொல்லக்கூடுமா என்பதை யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். சர்க்காரார் பார்ப்பனர்களுக்கு மட்டுந்தானா படிப்பு சொல்லிக் கொடுக்கின்றார்கள்? இல்லவே இல்லையே; எல்லோரையும் ஒன்றாய்த்தானே பாவிக்கிறார்கள்? ஆதலால் இதிலுள்ள சூழ்ச்சியை அறிந்தீர்களானால் விடுதலையின் உண்மைத் தத்துவம் விளங்கும். நமது மதத் தத்துவப்படிக்கு ஆதிகாலத்தில் இன்னின்ன சாதிதான் கல்வி கற்கவேண்டுமென்று சட்டங்களிருந்தன. படிக்க ஒருசாதியும், படிப்புச் சொல்லிக்கொடுக்க ஒருசாதியும்

படிப்பகம்

www.padippakam.com



இருந்து வந்ததோடு—அதிலும் இன்னது இன்னதுதான் படிக்கவேண்டுமென்பது ஆகிய திட்டங்களும் ஆதியிலிருந்தன. இவைகளை நாம் வெளியில் எடுத்துரைத்தால் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்; ஆட்சேபணை செய்பவர்கள் ஒருவருமில்லை.

ஆண் மகனின் நிலையைவிடப் பெண் மகளின் நிலைமை படிப்பு விஷயத்தில் மிக்க மோசமானதாகவே இருக்கின்றது. இதிலும் தீண்டாதார் எனப்படுவோர் நிலைமையே இன்னும் இதைக்காட்டிலும் மிக்க மோசமானதாகவேயிருக்கிறது. மக்களுக்குக் கல்வி அவசியமென்பதை அறிந்து மக்கள் ஒத்துக் கொண்ட போதிலுங்கூட, மேல் சாதிக்காரர்கள் என்பவர்கள் மற்றவர்கள் படிக்காமலிருப்பதற்குரிய பல தந்திரங்கள் இன்னமும் செய்துகொண்டுதானிருக்கிறார்கள். சில இடங்களில் தீண்டப்படாதாருக்குப் பள்ளிக்கூடங்களே இல்லை; அப்படிச் சில இருந்த போதிலுங்கூட, போதுமான உபாத்தியாயர்கள் அப் பள்ளிக்கூடங்களுக்கு அகப்படுவதில்லை. அப்படியொருசமயம் பள்ளிக்கூடமும் உபாத்தியாயரும் இருந்த போதிலுங்கூட தீண்டாதாரின் மக்கள்—சில தெருக்களில் நடந்து அப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல உரிமை இல்லை. அவர்கள் அத் தெருக்களில் நடமாடக்கூடாதெனத் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவு கஷ்டங்களையும் அவர்கள் மீறிப் படிக்க ஆரம்பித்தாலோ அவர்கள் படிப்பதற்குப் போதிய பணம் இல்லை. அவர்களுக்குப் போதுமான சாப்பாடு இல்லை. இத்தகைய கஷ்டங்களை நாம் எப்படி நீக்கவேண்டும் என்று பார்த்தால், நமது சமூகத்திற்கு மத விஷயத்தில் உள்ள முட்டுக் கட்டைகளை முதலில் நீக்குவதுதான் எல்லோரும் படிக்க முயற்சி செய்வதாகும். மதத்தைக் காப்பாற்றிக்கொண்டு எல்லோரும் படிக்க வேண்டுமென்பது அறியாமையேயாகும். ஆதலால், மதக் கட்டுப்பாட்டை ஒழிக்க முதலில் முயற்சிக்கவேண்டும். அவ்வாறு முயற்சிப்பதற்கும் நமக்குத் தைரியம் வேண்டும். அவ்வித தைரியம் நமக்கு ஏற்பட்டால்தான் கல்வி விடுதலையுமேற்படும்.

இவைகளைவிட்டு, சரஸ்வதி கடாட்சமில்லை; பணமில்லை; அரசாங்கத்தார் கல்வி கற்பிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தால் நாம் விடுதலை அடையத் தகுந்த புத்தியில்லாதவர்கள் என்றுதான் சொல்லிக்கொள்ள வேண்டும். ஏனெனில், பிராமணர்களும் இந்த அரசாங்கத்தில் இருந்துகொண்டும், சாதாரண வரும்படியுள்ளவர்களுமாயிருப்பதோடல்லாமல், வேறு அரசாங்கத்தில் உள்ள பணக்காரர்களல்லர். அவர்கள் குமாஸ்தாக்களாகவும், காபி கிளப்புக்காரர்களாகவும், புரோகிதர்களாகவும், தட்சணை வாங்குபவர்களாகவும் சோம்பேறிகளாகவும் இருந்தும்கூட அவர்களில் 100-க்கு 99 பேர் எப்படி வாசிக்க முடிந்தது என்பதை யோசித்தோமானால், அப்பொழுதுதான் சூட்சுமம் புலப்படும். ஆகவே, நம் நாட்டில் இப்பொழுது இருந்துவரும் மத தர்மங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால் சிலரைத் தவிர்த்துப் பெரும்பாலான மக்கள் படிக்கவே முடியாது. நமது மத தர்மப்படி இன்னின்னவர்கள் கற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் இருக்கிறது. அந்த முறையை அஸ்திவாரமாக வைத்தே இன்றைய உபாத்தியாயர்கள் எல்லாம் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். இவர்களிடத்தில் படிக்கும் பிள்ளைகள் 100-க்கு 90 பேர்கள் தலை எடுக்கமுடியாமல் போகின்றது. ஆகையால், இந்த முறைகள் நடைபெறும்படி அனுமதித்துக் கொண்டிருப்பதா, அல்லது இவைகளை அழிப்பதுதான் நமக்கு விடுதலையை அளிக்குமா?

[மதுரை மாவட்டம், சித்தையன் கோட்டையில், 22-6-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 28-6-1931]

கல்வி விஷயத்தில் நம்நாட்டு மக்களுக்கு இரண்டு முக்கிய விஷயம் கையாளப்பட வேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஒன்று, கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்படவேண்டும்.

மற்றொன்று, மேன்மையான வாழ்வுக்குத் தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ பயன்படவேண்டும்.

['குடி அரசு'—தலையங்கம்—22-8-1937]



## 2. குழந்தைகள் கல்வி

இந்நாட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நாம், நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ள ஏதாவது சாதனமிருக்கிறதா என்று பார்ப்போம். நாம் எப்படித் தெரிந்துகொள்ளுவது?

பள்ளியில் படிக்கும்போது ஏதாவது தெரிந்துகொள்ளலாமா என்றால் அங்கு தமிழர்களைப் பற்றி ஒரு சேதியும் கிடையாது; எவ்விதப் பாடப் புத்தகமும் கிடையாது. 'அரிவரி' பாலபாடம் படிக்கும்போதும் 'அய்யர்'—'பிராமணன்' போன்ற வார்த்தைகள்தாம் காணப்படுகின்றனவே அன்றித் தமிழர்—திராவிடர் என்கின்ற வார்த்தைகளுக்கு அங்கு இடமோ, அவகாசமோ கிடையவே கிடையாது.

மேல் வகுப்புக்கு வந்து அங்கு ஏதாவது தெரிந்துகொள்ளலாம் என்றாலோ அதற்கும் இடம் இல்லை. தமிழ் நாட்டுக்குச் சரித்திரமே இல்லை. இந்து தேச சரித்திரம் என்பதை எடுத்துக்கொண்டால் இராமாயண—பாரதமும், அசோகன்—மவுரியன் ஆட்சியும், முஸ்லிம்—வெள்ளையர் ஆட்சியும்தான் விளக்கப்படுமே ஒழிய சேர, சோழ, பாண்டியரைப் பற்றியோ, திராவிடர்—தமிழர் என்கின்ற ஆட்சியைப் பற்றியோ காண்பது மிகவும் அருமையேயாகும். அவைகள் எந்த வகுப்புக்கும் பாடமாக இல்லை. அப்படி ஏதாவது எங்காவது காண முடிந்தாலும் அது பெரும் பித்தலாட்டமும், மோசடியுமாகத்தான் காணப்படலாமே தவிர, யோக்கியமாய், சரித்திர ஆதார முறையாய்க் காண்பதற்கு இடமே இல்லை.

ஆகவே, நமது பிள்ளைகள் நம்மைப்பற்றித் தெரிந்துகொள்ள இடமும் இல்லை, வசதியும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

இன்றும், சொல்லுகிறோம்—தமிழன் ஆரியருக்கு முன் என்ன சமயத்தவனாய் இருந்தான், அவன் கடவுள் எப்படிப்பட்டது, அவனது வாழ்க்கை முறை எப்படிப்பட்டது—என்பன போன்றவைகளைக் காட்ட, சரியான சரித்திர ஆதாரம் ஒன்றும் காணப்படுவதில்லை.

'தமிழர்கள் காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள்' என்பதற்கே ஆதாரங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பள்ளிக்கூடத்திலோ, சரித்திரங்களிலோ நம்மைப்பற்றித் தெரிந்கொள்ள ஆதாரங்கள் இல்லை என்பதோடு—தமிழ் நூல்கள் என்பவைகளிலாவது தனித் தமிழர் நிலை எப்படி இருந்தது என்றும், அனுபவ பூர்வமான அவர்களது வாழ்க்கை எப்படி இருந்தது என்றும் தெரிந்துகொள்ளப் போதிய ஆதாரங்கள் கிடையாது.

இன்று நம் கண்முன் காணப்படும் தமிழர் வாழ்க்கை என்பதெல்லாம் ஆரியரைப் பார்த்து அதுபோல் வேஷம் போட்டுக்கொண்டு, அவர்களது சாதனங்களை ஏற்றுக் கொண்டு, அவர்களைப் பின்பற்றுவது என்பதல்லாமல், வேறுஒன்றும் காண்பதற்கு இல்லை. ஆரியர் கடவுள்கள், அவர்களது சமயங்கள், அவை சம்பந்தமான ஆரியர் கதைகள், அவர்களது ஆகமங்கள், அவர்கள் சாஸ்திரங்கள், அவர்களது நீதி நூல்கள் ஆகியவைகளை நம் பண்டிதர்கள் கற்றுக்கொண்டு, அவை நமக்குப் போதிக்கப்படுவனவாக இருக்கின்றன.

இவைகளை மாற்றித் தமிழர்களுக்கு என்று மற்ற நாட்டாரையும் மற்ற இனத்தாரையும் போல் ஏதாவது பாடங்கள், சரித்திரங்கள் முதலியவை கண்டுபிடித்து அல்லது உண்டாக்கி நம் பிள்ளைகளுக்குப் பாடமாகக் கீழ்வகுப்பில் இருந்தே படிப்பிக்கப்பட்டால் ஒழிய, எப்படி அவர்கள் தங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளமுடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தப்படி இல்லாததாலேயே, நம்மைப்பற்றித் தெரிந்துகொள்ள நம் பண்டிதர்களே வழிகாட்டிகளாய் இருந்துகொண்டு—அவர்களது உச்சிக் குடுமியையும் சாம்பல் மண் பூச்சுக்களையும்—அவர்கள் பாராயணம் செய்யும் புராணக் கதைகளையும் நாம் பின்பற்றிக் கடைந்தெடுத்த முட்டாள்களாக நேர்ந்ததோடு ஆரியருக்கும், ஆரியத்துக்கும் மீளா அடிமைகளாக ஆகியிருக்கும்படி நேர்ந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



தமிழர்களின் படிப்புக்குக் கீழ்வகுப்புகளிலாகட்டும், இராமாயண-பாரதக் கதைகள் ஏன் சேர்க்கப்படவேண்டும்—அதுவும் தேச சரித்திரத்தில் ஏன் சேர்க்கப்படவேண்டும்?

பஞ்ச காவியங்களைவிட இராமாயணம், பாரதம் எப்படிச் சரித்திர சம்பந்தமான கதைகளாகும்?

பாடப் புத்தகக் கமிட்டியில் உள்ள தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்குமானால் இராமாயண-பாரதக் கதைகள் சரித்திரத்திலும், வசன பாடத்திலும் சேர்க்கச் சம்மதித்து இருப்பார்களா? பண்டிதர்கள், உபாத்தியாயர்கள், தமிழ்ச் செல்வர்கள் இக் குறைகளை எடுத்துக் காட்டுவதற்காக நம்மீது பாய்கின்றார்களே தவிர, புராண இதிகாசங்கள்—அதுவும் தமிழர்களுக்குச் சம்பந்தமில்லாததும், தமிழர்களுக்கு இழிவைத் தரக்கூடியதும், தமிழர் முற்போக்கைத் தடுக்கக் கூடியதும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததுமான விஷயங்கள் கொண்ட புராண இதிகாசங்கள்—சமய ஆதாரங்கள் போலவும், புண்ணிய சரித்திரங்கள் போலவும், தேச சரித்திரங்கள் போலவும் நம் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

இவ்விஷயத்தில் இனியாவது தமிழ்ப் பண்டிதர்கள், தமிழ் உபாத்தியாயர்கள், உண்மைத் தமிழ்ப் பெற்றோர்கள் ஒன்று கூடி மாநாடு கூட்டி—இம்மாதிரி விஷயங்கள் பள்ளிப் படிப்பில் நுழையாமல் இருக்கும்படி செய்யக்கூடாதா என்று கேட்கின்றோம்.

தமிழிலே, தமிழ் மொழி இலக்கியத்திலே, தமிழர் நல்வாழ்விலே, தமிழர் தன்மானத்திலே, தமிழர் தனி ஆட்சியிலே கவலையுள்ள நம் செல்வர்களுக்கு—இந்தக் காரியமெல்லாம் முக்கிய கடமை அல்லவா என்றும் கேட்கிறோம்.

தலைமுடி எடுத்துக்கொண்டு, காவடி தூக்கி ஆடி, பழனிக்கும் திருச்செந்தூருக்கும் சென்று வந்துவிட்டால் தமிழர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாய்விட்டது என்று அர்த்தமா—அல்லது, தாங்கள் பிறந்ததற்குப் பயன் ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தமா? பட்டம், பதவி, நிர்வாகப் பெருமை பெற்றுவிட்டால் தமிழர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தாய்விட்டது என்று அர்த்தமா?

நிலை குலைந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி ஊட்டி, அவர்களுக்குத் தன்மான உணர்வும் ஊட்ட வேண்டாமா? தமிழ் மக்களை—அவர்கள் படித்தவர்களானாலும், பண்டிதர்களானாலும், மந்திரி, கவர்னர்-வைசிராய் நிர்வாகசபை மெம்பர் ஆனாலும் பகுத்தறிவு விஷயத்தில் மரக் கட்டையாக்கிவிட்டு, தமிழரல்லாதவர் அடிமைப் படுத்திச் சுரண்டிக் கொள்ளைகொள்வதைத் தடுக்கவேண்டாமா?

தமிழ் மக்களின் நலத்தில் கவலை உள்ளவர்கள் எது எதற்கு என்றுதான் அழுவது? தமிழர்க்குத் தொண்டாற்றுவது என்றால் என்னதான் அர்த்தம்?

ஆகவே, பள்ளிகளில் உள்ள சுத்தத் தமிழாசிரியர்களை, இனியாவது இப்படிப்பட்ட புத்தகங்களைப் பாடமாக வைக்காமல் இருக்கக் கேட்டுக்கொள்வதோடு, பாடப் புத்தகக் கமிட்டியில் உள்ளவர்கள் இனியாவது இவ்விஷயங்களைக் கவனித்து, புத்தகங்களை அனுமதிக்க வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம். நமக்குச் சுதந்திரம் வந்த இலாக்காக்களின் கதியே இப்படி இருக்குமானால், இத் தமிழர்கள் எந்த முகத்தைக் கொண்டு எல்லா இலாக்காக்களிலும் முழுச் சுதந்திரம் கேட்க முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம் -12-2-1944]



# 3. அறிவும் படிப்பும்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

கல்வி என்பதைப் பற்றி நமது மக்கள் பெரும்பாலும் புத்தகப் படிப்பையும், குருட்டு உருப்போட்டுத் தேர்வுகளில் தேறிவிடுவதையுமே கல்வி என்று கருதிக்கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, ஆங்கிலத்தில் பி.ஏ., எம். ஏ. படித்துப் பட்டம் பெற்றவர்களையும் தமிழ்ச் சங்கத்தில் படித்து வித்துவான்பரீட்சை பாஸ்பண்ணி பட்டம் பெற்றவர்களையும் கல்வியாளர் என்று சொல்லிவிடமுடியாது. அவர்கள் ஏதோ ஒரு வித்தையில், அதாவது குருட்டு உருப்போட்டு ஒப்புவிக்கக் கூடிய ஒரு வித்தை அல்லது ஒரு சாதனத்தில் தேர்ந்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். அதாவது, அலமாரியில் உள்ளபுத்தகங்களைப் போல், இவர்களும் தங்கள் மனத்தில் பல விஷயங்களைப் பதியவைத்திருக்கும் 'ஒரு நகரும் அலமாரி' என்றுதான் சொல்லவேண்டும்.

படிப்பு வேறு, அறிவு வேறு என்பதை ஞாபகத்தில் பத்திரமாய் வைத்துக் கொள்ளுங்கள். படித்த மூடர்களுக்கு எத்தனை உதாரணம் வேண்டுமானாலும் சொல்லலாம். உதாரணமாக, பூகோள சாஸ்திரத்தில் எம். ஏ. பட்டம்பெற்ற ஒரு உபாத்தியாயர் பிள்ளைகளுக்குச் சூரிய, சந்திர கிரகணத்தைப் பற்றி வானசாஸ்திர பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, 'பூமியும் சூரியனும், சந்திரனும் ஒன்றுக்கொன்று சுற்றுவதன் பயனாய் ஒன்றால் ஒன்று மறைக்கப்படுவதால் அதன் ஆகுருதியும் ஒளியும் மறைவுபடும். அதைத் தான் சந்திரகிரகணம் என்றும் சூரியகிரகணம் என்றும் சொல்லுவது' என்று பாடம் சொல்லிக்கொடுப்பான். ஆனால், சந்திரகிரகணமோ, சூரியகிரகணமோ வந்துவிட்டால், 'சூரியன் என்கின்ற ஒரு தேவதையை இராகு, கேது என்கின்ற தேவதைகள் துன்பப்படுத்துவதாகவும், இது அவைகளுக்கு ஏற்பட்ட சாபத்தீடு என்றும், அதற்காக மக்கள் தோஷ பரிகாரம் செய்யவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு, கிரகணம் பிடிக்கும்போது ஒரு ஸ்நானமும், விடும்போது ஒரு ஸ்நானமும் மத்தியில் மந்திரங்களும் ஜபங்களும் செய்வான்; சாப்பிடாமல் பட்டினியாகவும் இருப்பான். மற்றும் தான்பிறந்த நேர கிரக நட்சத்திரமும் கிரகண நேர நட்சத்திரமும் ஒன்றாயிருந்தால் நெற்றியில் பட்டங் கட்டிக்கொண்டு முழுகுவான். ஆகவே, அவனது படிப்பு வானசாஸ்திரப் பரீட்சையில் தேறத்தான் உபயோகப்பட்டதே தவிர, அந்த எம். ஏ. பட்டம் பெற்றவனுக்கு அது அறிவுக்குச் சற்றும் பிடிக்கவேயில்லை. ஆனால், நமது தமிழ்ப் பண்டிதர்கள் நிலையோ அப்படிக்கூட இருக்க முடிவதில்லை. அவர்களுக்கு உள்ள படிப்பே முட்டாளாவதற்கு முதல் தர மருந்து போன்றது. புராணங்களைத் தவிர, அவர்களுக்கு வேறுபடிப்பே கிடையாது. இலக்கணம், நீதிநூல் என்று சிலவற்றைப் படிப்பார்கள். ஆனால், அவைகளும் ஆரம்பமும் மூடத்தனமாகவே இருக்கும்; முடிவும் மூடத்தனமாகவே இருக்கும். மத்திய பாகமோ உலக வாழ்க்கைக்குப் பயன்படாததாகவும் அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமானதாகவுமிருக்கும். ஆங்கிலம் படித்த பட்டதாரிகள் என்பவர்களுக்காவது அறிவாளர்களாவதற்கு ஏற்ற பல நூல்கள் உண்டு. தமிழ்ப் பட்டதாரிகளுக்கோ மடையர்களாவதற்கேற்ற நூல்களே உண்டு. அதாவது, அவை பெரிதும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்பன போன்றவைகளைத் தவிர இலக்கணம், இலக்கியம் என்று சிலவும் கூட்டி இவைகளை உருப்போட்டுப் பரீட்சை கொடுத்தவர்களாவார்கள். ஆகவே, ஆங்கிலப் பட்டதாரிகளிடம் எதிர்பார்க்கும், அதாவது அறிவியல் புத்தகங்கள் படிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்த அளவுகூடத் தமிழ்ப் பட்டம்பெற்ற பண்டிதர்கள் என்பவர்களிடம் எதிர்பார்க்கமுடியாது. ஆகவே, மனிதன் முழுமூடனாக வேண்டுமானால் புராணங்களையும் இதிகாசங்களையும் படித்துப் பண்டிதனாகவேண்டியதுதான் என்பதற்கிணங்கித்தான் நமது படிப்பும், அறிவும் இருக்கின்றது. தமிழ்ப் பண்டிதர்கள் என்பவர்களுடைய யோக்கியதையை நான் பார்த்த பிறகு, மக்களை அறிவுக்காக—தமிழைப் படி என்று சொல்லுவது மிக்க மோசமான காரியம் என்றே எனக்குத் தோன்றுகின்றது. ஏனென்றால், அவர்களுக்குப் பொது அறிவு

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படும்படியான படிப்புக்குத் தமிழில் ஆதாரங்களே இல்லை என்பதுதான். வடமொழி ஆதாரங்களேதான் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பல வேஷங்களுடன் திகழ்கின்றனவே யன்றி, மக்களுக்கு அறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் உண்டாகும்படியானவைகள் அல்ல. ஆகவே, மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படவேண்டுமானால், உலக இயலை அறியச் சந்தர்ப்பங்கள் அளிக்கப் படவேண்டும். அதற்கு ஆதாரங்கள் பத்திரிகைகள் படிக்கவும், பல மக்களிடம் சேர்ந்து பழகிப் பேசவும் சவுகரியமுள்ளதுமான வாசகசாலைகளேயாகும்.

[கொடைக்கானலில், 20-7-1930-ம் நாள் காஸ்மாபாலிட்டன் வாசகசாலைத் திறப்புவிழாவில்
சொற்பொழிவு—'குடி அரசு' 27-7-1930]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

கல்வி விஷயத்தில் தற்போதுள்ளவர்கள் மிகவும் மேன்மை பெற்றவர்கள். ஏனெனில், முந்திய சகாப்தத்திற்கும் பிந்திய சகாப்தத்திற்கும் கல்வி கற்பிப்பதில் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. நம் சகாப்பத்திற்கு முந்தைய காலத்தில், இன்னார் இன்னார் தான் கல்வி கற்பிக்க உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனை இருந்தது. இன்ன இன்ன விஷயந்தான் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் இருந்தது. இதோடு மாத்திர மல்லாமல், இன்ன இன்னார்தான் கல்வி கற்பிக்கப்பட உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனையும், இன்ன இன்னவர்களுக்கு எழுத்து வாசனையே கற்பிக்கப்படக் கூடாது என்கின்றதான நிர்ப்பந்தமும் இருந்துவந்தது. இந்த மாதிரியான நியமங்களினாலும், நிர்ப்பந்தங்களினாலும் கல்வி என்பது 'மூடுமந்திரம்' போன்று ஒரு இரகசியப் பொருளாகவே இருந்துவந்தது. இந்தக் காரணங்களினால் முற்காலங்களில் ஆயிரத்தில் ஒருவர் இருவரே கல்வி கற்றவர்கள் என்று சொல்லும்படியான மாதிரியில் இருந்து வந்ததோடு, கல்வி கற்றவர்கள் என்பவர்களே எல்லா மக்கள்மீதும் எல்லாக் காரியத்திலும் ஆதிக்கம் செலுத்துபவர்களாய் இருந்துவந்தார்கள். அன்றியும், மேல் சொல்லப்பட்ட இந்த நிபந்தனைகளும் ஆதிக்கங்களும் எல்லாம் மக்கள் பிரிவில் ஒரு தனிப்பிரிவார் மாத்திரம்—அதுவும் பிறவி காரணமாய் உரிமைகொண்டாடத் தக்கதாய் இருந்துவந்ததே அல்லாமல், மற்றபடி பொதுத் ஏகுதியைக் கொண்டதாகவோ, எல்லோருக்குமே சம உரிமை கொண்டதாகவோ சிறிதும் இருந்துவரவில்லை.

சாதாரணமாய் நமது இந்தியாவை முழுவதும் எடுத்துக்கொண்டு, பழைய கல்வி போதனாமுறை என்பதை ஒரு முறையாக வைத்துப் பார்ப்போமானால், இந்தியாவில் உள்ள 35 கோடி (1931) மக்களில் 17½ கோடி மக்களான பெண்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்வி கற்பிக்க முடியாததாகும். மற்றொரு பிரிவில் 7 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்திலும் படிப்பு என்பது நினைப்பதற்கே முடியாத காரியமாய் இருக்கும். மற்றும் பார்ப்பனர்கள், அரசர்கள், வியாபாரிகள் என்கின்ற வெகு சிறிய கூட்டத்தார்கள் மாத்திரம் கல்வி கற்க உரியவர்களாவார்கள். அவர்களிலும் கல்வி கற்பிப்பதில் பிரிவுக்குப் பிரிவு வித்தியாசம் இருக்கும்.

ஆனால், இன்றைக்கு இவ்வித வித்தியாசங்கள் ஏதுமில்லாமல் யாருக்கும், யாவராலும் கல்வி கற்பிக்கப்படலாம். ஆனபோதிலும், கல்வியின் இன்றைய இலட்சியமும், கற்பிக்கும் போதனாமுறையும் பாராட்டத்தக்கவையாக இல்லை.

ஏனெனில், கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்படவேண்டிய அவசிய மெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு தகுதிப்படுத்துவது என்பதேயாகும். அல்லது, உலகில் நல்வாழ்க்கை வாழத் தகுதியுடையவனாக்குவது என்பதாகும்.

அதாவது, ஒவ்வொரு காரியத்திற்கும் மற்றவர்களை எதிர்பார்த்தோ, மற்றவர்கள் ஆதிக்கத்தில் இருந்தோ அல்லது தனக்கு மற்றவர்கள் வழிகாட்டக்கூடிய நிலையிலோ



மனிதன் இல்லாமல் சுதந்திரத்தோடு—சுய அறிவோடு வாழத் தகுதியுடையவனாக வேண்டும். அன்றியும், கல்வி கற்பிக்கும் கடமையில் இருக்கும் ஒவ்வொருவரும், கல்வியின் அவசியத்திற்கு இந்தக் காரணங்களைத்தான் சொல்லுகின்றார்கள். கற்பிக்கப்படுபவர் களும் அந்த எண்ணத்தின்மீதுதான் தாங்கள் கற்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், கல்வியின் பயன் இந்த இலட்சியத்திற்கு அனுகூலமாக இருக்கின்றதா?

பொதுவாக எந்தத் தேசத்திலுமே மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பில் இருப் பவர்கள் எல்லோரும் கல்வி போதிக்கும் விஷயத்தில் ஒருவிதமான உள்கருத்தை வைத்துத் தான்—அதைக் கல்வியின் மூலம் போதிக்கும் முயற்சியில் இருந்து வருகின்றார்கள். அந்த மாதிரியான உள்கருத்தைப் போதிப்பதில் கல்வியானது மக்களுக்கு அறிவுக்கும், வாழ்க்கையில் சுதந்திரமாய் வாழ்வதற்கும் பயன்படுகின்றது என்பதைவிட—தாங்கள் கொண்ட உள் எண்ணத்தையே மிக முக்கியமாய்க் கருதுகின்றார்கள். உதாரணமாக, ஒரு தேசத்தார் தேச பக்திக்கு ஏற்ற கல்வி இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். மற்றொரு தேசத்தார் மத பக்திக்கான கல்வி வேண்டும் என்றும், மற்றொருவர் வீரம் ஏற்பட வேண்டு மென்றும், இன்னொருவர் அந்த நாட்டுப் பழமையான பழக்கவழக்கம் இருக்கவேண்டும் என்றும், மற்றும் சிலர் கடவுள் பக்தி புகட்டுவதற்கு அனுகூலமாய் இருக்கவேண்டும் என்றும் பார்க்கிறார்கள். இப்படியாகவே, பல உட்கருத்துக்களைப் பிரமாதமாய்க் கருதிக் கல்விமுறை ஏற்படுத்துவதில் கல்வியின் உண்மையான பிரயோசனம் ஏற்படாமலே மறைந்துபோய் விடுகின்றது.

இந்தக் காரணங்களால் கல்வி கற்றவர்கள் எல்லாம் அறிவாளிகளாய் இருக்க முடியாமல், எந்த உள் காரணத்தை வைத்துக் கற்பிக்கப்பட்டார்களோ அதற்கு மாத்திரமே பயன்படுகின்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். கல்வி கற்பிப்பதில் இக் குறைபாடுகள் தவிர, மற்றொரு பலமான கெடுதி என்னவென்றால், கல்வி கற்பிப்பதில் மதத்தின் ஆதிக்கம் வந்து புகுந்து—அறிவுக்காகக் கல்வி என்பது மாறி—முட்டாள்தனமும், விசாரணையற்ற தன்மையும் வருவதற்கே கல்வி பயன்படும்படியாக ஆகின்றது. இது இன்று உலகத்தில் சில தேசங்கள் தவிர மற்ற தேசங்களிலெல்லாம் நடந்துவரும் சம்பவமேயாகும்.

இதற்குக் காரணம் என்னவென்றால், கல்வியின் பொறுப்பு எல்லாம் மத ஸ்தாபனங் களிடையே சிக்கி, மதபோதகர்கள் ஆகியவர்களால் நடத்தப்பட்டு வருகின்றவைகளாய் இருப்பதே காரணமாகும்.

மதத்திற்கும் உலக இயற்கைக்கும் எப்போதும் சம்பந்தம் இருப்பதில்லை. ஏனெனில், அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழி மறித்துத் திருப்புவதையே ஜீவநாடியாய்க் கொண்டிருக்கின்றன. அதனால் மதம் கலந்த படியால் இயற்கை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடமில்லாமலே போய்விடுகின்றது. எப்படி எனில், மதங்கள் என்பவைகள் எல்லாம் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் இருந்தே காணப்படுபவை ஆகும்.

ஆகவே, மத சம்பந்தமான கொள்கைகள், அபிப்பிராயங்கள் முதலியவைகள் எல்லாம் அந்தக் காலத்திய உலக நிலை, அறிவு நிலை, ஆராய்ச்சி சவுகரிய நிலை, கல்வி நிலை ஆகிய வைகளுக்கு ஏற்றவைகளாகவே இருக்கும். ஆதலால், அவை இந்தக் கால அறிவு, ஆராய்ச்சி, சவுகரியம் முதலியவைகளுக்கு ஏற்றதாக இருக்க முடியாது. இந்தக் குறைபாடானது உலகத் தோற்றத்தில் மனித வாழ்க்கையில் ஒவ்வொரு தன்மையிலும் இருக்க வேண்டியதாகி விட்டது. ஆகையால் கல்வியும் மதமும் கலந்தால் அறிவு சூன்யமாக வேண்டியதே தவிர வேறில்லை.

உதாரணமாக, தற்கால ஆராய்ச்சி சவுகரியத்தைக் கொண்ட ஒரு வான சாஸ்திரி, கிரகணத்திற்குக் காரணம் சொல்லுவதாய் இருந்தால் அவன், பூமியுடையவும் சூரிய

படிப்பகம்

www.padippakam.com



னுடையவும் நடப்பைக் கொண்டு கணக்குப் போட்டுப் பார்த்து, ஒன்றின் நிழலால் மற்றொன்றின் ஒளி இன்ன காலத்தில் இன்ன அளவுக்கு மறைக்கப்படுகின்றது என்று சொல்லுவான். இதே விஷயத்தைப்பற்றி மத சாஸ்திரியைக் கேட்டால் அவன் சூரியன், சந்திரன்களுக்கு ஏற்பட்ட சாபத்தின் பயனாய் இராகு, கேது என்ற இரண்டு கெட்ட கிரகங்களால் ஏற்படும் பீடைகள் என்று சொல்லுவான்.

இதில் இருக்கும் மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால், ஒரே ஆசாமி வான சாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும்போது பூமியின் நிழலால் சந்திரன் மறைக்கப் படுகிறதென்றும், மத சாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும்போது சூரியன், சந்திரன் என்கின்ற தேவர்களை இராகு, கேது என்ற பாம்புகள் விழுங்குகின்றன என்றும் சொல்லுவான்.

இது மாத்திரமல்லாமல், வானசாஸ்திரியாய் இருந்து சூரிய கிரகணத் தன்மையைப் பிரத்தியட்சப் பாடமாக சில சாதனைகளைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் கற்பித்து விட்டு, வீட்டுக்குப் போனவுடன் இராகு, கேது என்கின்ற, பாம்புகள் விழுங்குகின்றன என்பதற்குத் தகுந்தபடி 'தோஷப் பரிகாரத்திற்கு' ஸ்நானம் செய்யவும், தர்ப்பணம் செய்யவும், சங்கல்பம் செய்து கொள்ளவும், சாந்தி செய்யவுமான காரியத்தில் ஈடுபடுகின்றான். ஆகவே, கல்வியுடன் மதத்தையும் கலப்பதால் மனிதனுடைய பகுத்தறிவும் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது!

இன்றையக் கல்வியில்—முக்கியமாக நமது நாட்டுக் கல்வியில் இருக்கின்ற ஆபத்தும் பயனற்ற தன்மையும் எதனால்? நமது கல்வி போதகர்கள் எல்லாம் மதத்தின் சாக்கினால் மேன்மையடைந்து வருகின்றவர்களாகவே ஏற்பட்டுவிட்டதேயாகும். மதம் என்னும் உலோகத்தினால் ஒரே அச்சில் உருக்கி வார்க்கப்பட்ட உருவங்களேதான் இன்று பெரிதும் உபாத்தியாயர்களாக அமைந்து இருக்கின்றார்கள். இம் மாதிரி உபாத்தியாயர்களிடம் படிக்கும் பிள்ளைகளுக்குக் கல்வியினால் எப்படி அறிவும், சுதந்திர அறிவும் உண்டாக முடியும்?

அறிவு வேறு; மதம் வேறு என்று பிரித்துவிடவேண்டும். அறிவை உண்டாக்கி விட்டு, பிறகு அந்த அறிவின் மூலம் மதத்தைக் கொள்ளும்படி செய்யவேண்டும். அப்படிக் கில்லாமல், மதத்தைப் புகுத்தி அதன்மூலம் அறிவை வளரவிடாமல் செய்துவிட்டால் சுதந்திர ஞானம் எப்படி ஏற்படும்?

இரண்டும் இரண்டும அய்ந்து என்றால், 'எப்படி அய்ந்து?' என்று கேள்வி கேட்கக் கூடிய உரிமை இல்லாத முறையில் கல்வி கற்பித்தால், கணக்கில் ஒரு மனிதன் தேர்ச்சிபெற முடியுமா? அதுபோலவே, இயற்கை விஷயங்களில் 'காட்டுமிராண்டிக் காலம் முதல் கர்ண பரம்பரையாகக் கேட்டுவந்த செய்தியையே சொல்லிக்கொண்டு, அதையே போதித்து வந்தால் அதன்மூலம் எப்படி இயற்கை அறிவை ஏற்படுத்த முடியும்?

பிள்ளைகளுக்காகச் சரித்திர ஞானம் பரவச் செய்யும் கல்விக்காகச் சில தப்புகள் செய்யவேண்டி வந்தாலும் அனுமதிக்கத்தான் வேண்டும். ஆனால், அத் தப்பிதத்தை அனுமதிக்கும் முறையில் வேண்டுமானால் நாம் சற்று ஜாக்கிரதையில் இருந்து அத் தப்பிதத்தினால் ஏற்பட்ட பயனைக் கொண்டு, பிரத்தியட்ச அனுபவ அறிவு பெறத் தகுதியாக்க வேண்டும். உபாத்தியாயர்களின் புத்திசாலித்தனத்தை இங்குதான் பார்க்க வேண்டுமேயொழிய, எதிரொலிபோல் கூப்பாடு போட்டு உருப்போடவும், கண்மூடித் தனமாய் விஷயங்களைப் பதியவைக்கவும் சிறிதும் இடம்கொடுக்கக்கூடாது. ஆகவே, நமது கல்வியின் ஜீவநாடி எல்லாம் இலட்சியத்திலும், பாதனா முறையிலுந்தான் இருக்கின்றது. உபாத்தியாயர்கள் பகுத்தறிவாளர்களாய் இருக்கவேண்டும். அறிவின் முடிவின்படி நடப்பவர்களாய் இருக்கவேண்டும்.



கடவுள், பக்தி, பிரார்த்தனை முதலியவை எல்லாம் எவ்வளவு முக்கியமானதாகவும் உண்மையானதாகவும் இருக்கவேண்டும் என்று சொல்லி வருகின்றீர்களோ, அந்த முறையெல்லாம் பிரார்த்தனையில் நடைமுறையில் உள்ளனவா? சாதாரணமாக கிராமபோன் போன்று சிறுவர்கள்—அவர்களுக்கும், இந்தப் பிரார்த்தனைப் பாட்டைச் சொல்லிக் கொடுப்பவர்களுக்கும் புரியாத பாட்டை நாடகத்தில் வந்து சொல்விட்டுப்போவது என்றால் இதற்குச் சமமாக எதைச் சொல்லுவது?

அனேகமாக நமது பிரார்த்தனைகள் என்பதெல்லாம் புரியாத மொழி, புரியாத சொற்கள், புரியாத கருத்துக்கள் கொண்ட பாடல்களாகவும், வாக்கியங்களாகவும் இருக் கின்றன. எந்த பக்திப் பாட்டும், சங்கீதப் பிரதானியத்திலும், இலக்கண இலக்கியப் பிரதானியத்திலும், வேஷப் பிரதானியத்திலும், சடங்கு பிரதானியத்திலும் இருக்கின்றனவே தவிர, உண்மைப் பிரதானியத்தில் சிறிதாவது இருக்கிறதா? இந்த மாதிரி வேஷமுறையில் இவ்வளவு சிறுகுழந்தைப் பருவத்தில் இருந்தே புகுத்தப்பட்ட இந்த பக்திக்கு, ஏதாவது ஒரு துரும்பளவு யோக்கியதையாவது இவர்கள் பிற்கால வாழ்வில் உண்டாகிறதா?

மற்றும், இதிலிருந்து அக் குழந்தைகளுக்கு ஒரு பித்தலாட்டத்தையும் நாணயக் குறைவையும் பக்தி என்னும் பேரால் புகட்டினவர்களானோமா, இல்லையா—என்று யோசித்துப் பாருங்கள்.

இந்த மாதிரியான மதம் கலந்த கல்வியானாலும், வேஷத் தன்மையானாலும் இதனால் நமது பெண்கள் நிலையும் மிகவும் மோசமாகிவிடுகின்றது. அவர்கள் மதத்தையும் பக்தியையும் வாழ்க்கையில் பிரமாதப்படுத்தி, அதனால் பெண் சமூகம் முன்னேறவே மார்க்கம் இல்லாமல் செய்துகொள்ளுகின்றார்கள். பெண்களை இன்றைய தினம் ஒரு உபாத்தியாயராகவாவது இருக்கக்கூடிய நிலைக்குக் கொண்டுவந்தது மதமும் பக்தியும் அல்லவே அல்ல. ஆனால், மதமும் பக்தியுந்தான் அவர்களை இதுவரை அடிமைகளாக்கி வைத்திருந்தன. அவையெல்லாம் மாறி, அவர்களுக்குச் சிறிதளவாவது சுதந்திரம் ஏற்படக் காரணம், மதத்தை அலட்சியம் செய்து செய்யப்பட்ட சீர்திருத்தப் பகுத்தறிவு உணர்ச்சி அல்லவா? அப்படிப்பட்ட பெண்மக்கள் இப்போது சிறிது விடுதலை பெற்று உபாத்தியாயரான பிறகு, தங்கள் அடிமைத் தனத்திற்குக் காரணமாய் இருந்த மதத்தை—பிள்ளைகளுக்குக் கல்வியுடன் புகுத்துவார்களானால்—அவர்களை மத சம்பிரதாயத்தில் ஈடுபடுத்துவார்களேயானால்—நமது பிள்ளைகளை ஒப்புவிக்கலாமா என்பது பயமாகவேயிருக்கின்றது.

இப் பெண்கள் கண்மூடித்தனமாய் மதத்தில் ஆழ்ந்து கல்வியோடு அதைக் கலக்கிக் குழப்புவதிலிருந்து, அவர்கள் மறுபடியும் அடுப்பூதவும் சட்டிசுரண்டவுமான உலகத்திற்குப் போக ஆசைப்படுகிறார்கள் என்றுதான் விளங்குகிறது. இனிப் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் வேலை முழுவதும் பெண்களுக்கே கொடுக்கவேண்டும் என்று எண்ணிய என் போன்றவர்கள் மனதெல்லாம் பெண் உபாத்தியாயர்கள் நிலைமையைப் பார்த்ததும் பயப்படுகிறது.

ஆகவே, பெண் உபாத்தியாயர்கள் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமேயொழிய ஆண் உபாத்தியாயர்களைப் பின்பற்றக் கூடாது.

இந்த இலட்சணத்தில் உள்ள கல்வியோடு இப்போது வரவர தேசபக்தி என்பதாக ஒன்று புகட்டப்பட்டுவிடுகின்றது. இது அறிவு வளர்ச்சிக்கு மற்றொரு ஆபத்தான காரியமாகும். கடவுள்பக்தி, மதபக்தி ஆகியவைகள் போலவே, இந்தத் தேசபக்தியும் மனிதனின் அறிவு வளர்ச்சியை நாசமாக்கிவிடுகின்றது. அதிலும் நமது நாட்டுத் தேசபக்தியோ நினைப்பதற்கே பயங்கரமானதாக இருக்கின்றது. தேசபக்தியும், தேசியமும் பழமையைப் பார்த்துக்கொண்டு பின்னால் போகப் பார்க்கின்றனவே தவிர முன்புறம் பார்ப்பதற்கில்லை. தேசியத்துக்கும் புதுமைக்கும் ஜென்மப் பகையாய் இருந்து வந்திருக்கின்றது. தேசியம்

படிப்பகம்

www.padippakam.com



என்றாலே பழமை என்று கருதப்பட்டுவிட்டது. புதுமை என்றாலே தேசத் துரோகம் ஆகிவிட்டது.

ஆகவே, கல்வி என்று பெயர்வைத்து, அதன் சாக்கில் மதத்தைப் போதித்து, தேசியம் என்ற உணர்ச்சியையும் அதன் மூலமாகவே ஏற்றிவிட்டால், குரங்குக்குக் கள் வார்த்தது போல்தான் ஆகுமே தவிர, அங்கு பகுத்தறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், முற்போக்குக்கும், சுதந்திரத்திற்கும் இடமே இல்லாமற் போய்விடும். இந்தக் காரணத்தால்தான் உலகத்தில் இந்தியாவுக்கு மாத்திரம் கீழ்ப்படியில் முதலிடம் கிடைத்திருக்கிறது.

ஆகவே, கல்வி கற்பிப்பதைவிடக் கல்வியின் இலட்சியத்தையும் போதனையின் தன்மையையும் மாற்றவேண்டியது இந்தியாவுக்கு மிகவும் அவசியமானதாகும்.

[ஈரோடு மகாஜன ஸ்கூலில், 17-9-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 27-9-1931]

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

முதலாவது, உங்கள் படிப்புக்கு இலட்சியமே இல்லை. இலட்சியமற்ற படிப்பு என்பது ஒருபுறம் இருந்தாலும், என்ன படிப்புப் படிப்பதென்பது பள்ளிக்கூடத்தாருக்கும் ஆசிரியருக்கும்கூட சம்பந்தமற்றதாகும். இதனால், இப் படிப்பினால் ஏற்படும் பயன் என்ன என்றாலோ, அதுவும் தானாக ஏதாவது ஏற்பட்டால் அதுதான் பயனேயொழிய மற்றபடி நிச்சயமான பயன் என்ன? என்ன ஏற்படும்? என்பதைக் கருதுவதற்கில்லை. படிப்பது என்பது வெறும் பேச்சளவிற்கு, 'அறிவுக்காக, அறிவு விருத்திக்காக' என்று சொல்லப்படுகிறது.

ஆனால், படித்தவர்களுக்கு அறிவு விருத்தியாகிறதா? படித்தவர்கள் அறிவாளிகளாக இருக்கிறார்களா என்றால், ஆம் என்று சொல்ல முடிவதில்லை. இந்த அறிவு என்பது கூட ஒரு பொது அர்த்தத்திற்குக் கட்டுப்பட்டதாய் இல்லாமல் எதைப் படித்தானோ அதில் அறிவுள்ளவன் என்றுதான் சொல்லக்கூடியதாய் இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட படிப்பில் அதாவது படித்த படிப்பின் அறிவாவது சரியாக இருக்கிறதா என்றால், அதுகூட சரியாக இல்லாமல், ஒன்றுக்கொன்று முரணான அறிவு ஏற்படும்படியாக இரண்டு கருத்துள்ள—அதாவது முரண்பட்ட கருத்துள்ள படிப்பேதான் கொடுக்கப்படுகின்றது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் மாணவர்களுக்கு அறிவுப் படிப்பும், மூடநம்பிக்கைப் படிப்பும் இரண்டும் தரப்படுகின்றன. இதனால் மாணவர்கள் பகுத்தறிவும், அதற்கு மாறான மூடநம்பிக்கையும்—இரண்டும் கொண்டவர்களாகி விடுகிறார்கள். மாணவர்கள் மாத்திரமல்லாமல், படிப்பைமுடித்த பெரியவர்களும், உபாத்தியாயர்களும் கூட மூட நம்பிக்கையுடையவர்களாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

உதாரணமாக, சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், வானசாஸ்திரம், உடற்கூறு, உலோக விஷயம் முதலியவைகளில் படித்துத் தேறியவர்களில், யாருக்காவது இது சம்பந்த மான மூடநம்பிக்கைக் கொள்கை இல்லாத சரியான அறிவு இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

சரித்திரம் படித்தவன் இராமாயண—பாரதம் முதலிய புராணக் கதைகளையும் சரித்திரத்தில் சேர்த்துப் படித்து, இராமனும் பரதனும் இந்த நாட்டை ஆண்டார்கள் என்றும், அது இன்னகாலம் என்றும், இந்த நாட்டுக்குப் பாரததேசம் என்பது பெயர் என்றும் கருதிக்கொண்டு, அனுபவத்திலும்—அதற்கு ஏற்றவண்ணம் பாரதமாதாவை வணங்கிக்கொண்டு நிற்கிறான். நிஜமாக நடந்த சரித்திர உண்மைகள், நிஜமான போர்கள், நபர்கள், அதன் காலங்கள் ஆகியவை சரித்திரம் படித்தவர்களுக்குச் சரியாய்த் தெரிவதில்லை. நடவாததும், நடந்ததாக நம்பமுடியாததும், அதற்கும் காலம்நிர்ணயிக்க முடியாததுமான—அறிவுக்குப் பொருந்தாத காரியங்களுக்கு அதிக விவரம் தெரிகிறது. ஆனால், நடந்தவைகளுக்குச் சரியான விவரம் தெரிவதில்லை. சேர, சோழ, பாண்டியர், நாயக்கர் ஆகிய மன்னர்களும் அவர்களது வாரிசு, அண்ணன் தம்பிகளும், மனைவி மக்களும் ஆண்ட நாட்டு எல்லைகளும், முறைகளும் சரித்திரம் படித்த 100-க்கு 90 மாணவர் களுக்கு விவரம் சொல்லத் தெரியாது. தசரதனுக்கும், இராமனுக்கும், கிருஷ்ணனுக்கும், பாண்டவருக்கும், துரியோதனாதியர்களுக்கும், இரணியனுக்கும், பலிச் சக்கரவர்த்திக்கும், மனுநீதி கண்ட சோழனுக்கும் அண்ணன் தம்பிமார்கள், மனைவிமார்கள், அவர்கள் கணவர்கள் இவ்வளவு என்று 100-க்கு 99 மாணவர்களுக்குத் தெரியும்.



பூகோளம் படித்தவனுக்கு உலகப் பரப்பு, அதன் பிரிவுகள் சரியாக ஞாபகத்தில் இருக்காது. ஆனால் இல்லாததும்—இருக்க முடியாததுமான மேல் ஏழுலோகம், கீழ் ஏழு லோகம், அதன் வர்ணனை, பலன், தன்மை இருப்பதாக முழு ஞாபகமாகத் தெரியும். வான சாஸ்திரம் படித்தவனுக்கு சூரிய, சந்திரனின் உண்மைத் தன்மை, கிரகணங்களின் உண்மைத் தன்மை, இயக்கம், அதன் சீதோஷ்ண நிலைக்குக் காரணம் ஆகியவை சரிவரத் தெரியாது. ஆனால், சூரியனுக்கு 16 குதிரை, சந்திரனுக்குக் கலை வளரவும் தேயவும் சாபம், இவர்களது மனைவி மக்கள், அவர்களது விபசாரம், இராகு, கேது விழுங்கு வதால் கிரகணம், அதற்குப் பரிகாரம்—என்பது போன்ற கற்பனைக் கதைகள் யாவருக்கும் உண்மை என்ற எண்ணமும், அதை அனுசரித்த அனுபவமும், அதற்கு ஏற்ப நடப்பும் தெரியும். விஞ்ஞானத்தைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. உதாரணமாக, விஞ்ஞானப் படிப்பின் இன்றைய நிபுணர்களைப் பார்த்தாலே விஞ்ஞானப் படிப்பின் தன்மையும் பயனும் நன்றாய் விளங்கும். இப்படியாக, படிப்புக்கும் அறிவுக்கும் பெரும் பாலும் உண்மைக்கும், நடப்புக்கும் சம்பந்தமில்லாத மாதிரியான படிப்புதான் இன்று பள்ளிப் படிப்பாகப் போய்விட்டது.

இது தவிர, இனிப் படிப்பினால் ஏதாவது ஒழுக்கம், நாட்டுப்பற்று, இனப்பற்று, சமரச ஞானம் முதலியவை ஏதாவது ஏற்படுகிறதா? அல்லது, படித்த மக்களிடம் இவை ஏதாவது இருந்து வருகிறதா என்றால், அதுவும் சிறிது சரியானபடி இல்லாமல் வெறும் கற்பனைக் குணங்களும், பற்றுகளுந்தான் பெரிதும் காணப்படுகின்றனவே தவிர, உண்மை யானதும் இருக்கவேண்டியதுமானவைகள் அருமையாகவே இருக்கின்றன.

[ஈரோட்டில் 9-7-1945-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 14-7-1945]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

ஒருவன் எவ்வளவோ படித்திருக்கலாம். பட்டம் படிப்பு எல்லாம் படித்திருக்கலாம். பலே அறிஞன், புத்திசாலி என்று பேசப்படலாம். எல்லாம் அனுபவப் படிப்பைவிட மட்ட ரக மானவைகளே. வக்கீல் படிப்புப் படித்து விட்டால் அறிவாளி என்று கூறமுடியாது. வக்கீலுக்கு எதை எதை எப்படி எப்படிப் புளுகினால் கேஸ் ஜெயிக்கும் என்பதில்மட்டும்தான் சாமர்த்தியம் இருக்கலாம். ஒரு வழக்கு பொய்யானது என்று தனக்கே தெரியும். அந்த வழக்கை மெய் என்று தீர்ப்புக் கூறும்படி என்னென்ன தில்லுமுல்லுகள், புரட்டுகள் செய்ய வேண்டுமோ அவைகளைமட்டும் கற்றிருந்தால் போதும். பொய் கூறுவதைத் துணிந்து ஓங்கி அடித்து உண்மையைப்போல் கூறுகிற வக்கீல்கள்தாம் பெரிய வழக்கறிஞர்கள் என்று போற்றப்படுகிறார்கள். ஆதலால், வக்கீல்களும் அறிவாளிகள் என்று கூறுவதற்கில்லை. அதேபோல், பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் வாத்தியார்களும் புரொபசர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அறிவும்—ஏட்டுக்குள் இருப்பதைமட்டும் தெரிந்திருப்பார்கள்; உலக விஷயம் தெரியாது! உலக அறிவே முக்கியமானது.

உலகத்துடன் பழகியவர்க்குத்தான் பொது அறிவு வளரமுடியும்.

[சிதம்பரம் அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-3-1956]



படிப்பகம்

www.padippakam.com



# 4. கல்வித் திட்டம்

பெரியோர்களே ! மாணவத் தோழர்களே !

இப்போதுள்ள கல்விக்கூடம் எதற்காக இருக்கிறது ? மக்கள் அறிவு பெற வேண்டும், ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்குக் கல்வி கற்கவில்லை; கல்வித் திட்டமும் இவைகளைப் போதிப்பதாக இல்லை ; அவர்கள் படிப்பதெல்லாம் பிழைப்பதற்கு, மண்வெட்டி எடுக்காமல் ஓரளவு பேனா பிடித்தெழுதிச் சம்பாதிக்கும்படியான வழியைத் தேடுவதற்கேயாகும். இந்த வழியை அடையத் தாமதம் ஏற்படவே, பொது வாழ்வில் புகுவதற்கு ஆரம்பிக்கின்றனர். அதில் இறங்கி அதன் மூலம் எப்படியாவது மேலே போய் விட முயற்சிக்கின்றனர். பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க வைப்பதன் காரணம், தன் பிள்ளை புத்திசாலி ஆகவேண்டும், அறிவாளியாக வேண்டும் என்று வெளியில் மட்டும் கூறுவார்களே தவிர, உள் நோக்கமெல்லாம் பையன் உத்தியோகத்திற்குப் போய்ச் சம்பாதித்தால் நம் வாழ்க்கையைக் கஷ்டமின்றிக் கழிக்கலாம் என்பதற்குத்தான்.

பையன் படித்து முடிந்தவுடன் உத்தியோகத்தில் அமர்ந்தால் அவன் தன் பகுத்தறிவுக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள முடியாது. பாதிரி வேலையில் அமர்ந்தால் எப்பொழுதும் கடவுளின் பெருமையை பரப்புவதிலேயே இருக்கவேண்டும். போலீஸ்காரனாக அமர்ந்தால் அவன் சாத்வீகனாக இருந்தாலும், எதிலும் ஆத்திரத்துடன் தயவு தாட்சண்யமின்றிப் பிறரைக் கண்டிப்பவனாக இருக்கவேண்டும். அதைப்போன்றே, வேலையைப் பொறுத்து அவன் ஒழுக்கமும் அமைகிறது. யோக்கியன், நாணயஸ்தனாக இருப்பவன் குறைந்த சம்பளம் வரும் உத்தியோகத்திற்கு வந்தால், அதைக்கொண்டு அவனுடைய குடும்பஜீவனம் நடப்பதற்கு வழி இல்லை. ஆகவே, பகவான் இவ்வளவுதான் கொடுத்தார் என்று சும்மா இருப்பானா ? இவன் சும்மா இருந்தாலும் இவன் பெண்டுபிள்ளைகள் சும்மா இருப்பார்களா ? அடிக்கடி ஏதாவது தொல்லை கொடுத்துக்கொண்டே இருப்பர். இவன் அத் தொல்லை பொறுக்காமல் முதலாளியிடம் போனஸ் கொடுக்கும்படி கேட்பான். அதிகச் சம்பளம் கொடுத்தால் நல்லதுதான் என்பான். இப்படி ஒவ்வொன்றாகப் பார்த்து அதுவும் போதவில்லையென்றால் எங்கே கிடைக்கிறதோ அங்கங்கே கை நீட்டி வாங்குவதற்கு ஆரம்பித்து விடுகிறான். பிறகு அவன் வாழ்க்கை இலஞ்சத்திலேயே கழிகிறது. ஒருவன் யோக்கியன், நாணயஸ்தனாக இருக்கவேண்டியது என்ன அவசியம் ? கடவுள் தண்டிப்பார் என்பதற்காகவா ? இவைதான் பித்தலாட்டம் என்று கூறுகிறோம். எனவே கடவுளும், மோட்சமும் நரகமும் பித்தலாட்டம் என்று தெரிந்தவன் எதற்காக யோக்கியனாகவும் நாணயஸ்தனாகவும் இருக்க வேண்டும் என்றால், வாழ்க்கையில் நல்ல பெயர் எடுக்க வேண்டும் ; பிறர் இவனைப் பார்த்து இவனுடைய நற்குணங்களைப் புகழ்ந்து பேச வேண்டும் ; சுற்றிலும் உள்ளவர்கள் இவனுடைய பெருந் தன்மைகளையும் நல்லொழுக்கங் களைப்பற்றியும் பாராட்டிப் பேசினால் இவனுக்கு ஒரு மகிழ்ச்சி உண்டாகும். இதற்கென்று நல்லவனாக நடக்கவேண்டியதாக இருக்கிறது.

வீதியில் ஒருவனிடம் சாமான் வாங்குகிறவன் ரூபாய்க்கு 5 படி தானியம் வாங்குவதாக வைத்துக்கொள்வோம். சாமானை விற்பவன் கண் கொஞ்சம் குருடானவனாக இருக்கிறான். வாங்குகிறவனுக்கு அந்தத் தானியமும் அதிகம் தேவையாக இருக்கிறது. எனவே சும்மா தருவானா ? அவனும் குருடன் ; நமக்கும் தேவை ; அண்டை அயலாருக்குத் தெரியாமல் முடிந்தவரை பார்க்கலாம் என்ற ஆசை வருவது யாருக்கும் இயற்கை. அதைப் பிசகு என்று கூற முடியாது. இது மனிதனுடைய இயல்பாகவே போய்விட்டது. இதை யாராவது தப்பு என்று கூறுவானாகில் அது அறிவீனம் என்றுதான் கூற வேண்டும்.

இவன் செய்தது குற்றம் ; இவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று கடவுள் சொல்வார் என்று யாராவது சொன்னால்—முதலில், சொல்பவன் முட்டாள் என்று



தான் கூறுவேன். ஏன் ? கடவுள்தானே விற்பவனையும், வாங்குகிறவனையும் படைத்ததாக அந்தப் பக்தனே கூறுவான். ஏன் விற்பவனைக் குருடனாகவும் வாங்குகிறவனை இப்படி திருட்டுத்தனம் செய்யும் அவசியமுள்ள தரித்திரவானாகவும் படைக்கவேண்டும் ?

இந்த நாட்டில் யோக்கியன், நாணயஸ்தன் இருப்பதாகக் காணமுடியவில்லை. படிப்பாளி என்று கூறப்படும் அத்தனை பேரும் அறிவாளி என்று கூற முடியுமா ? அவர்கள் எல்லாம் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருக்கலாம் ; அதிகச் சம்பளம் வாங்கலாம் ; கொழுத்த பணக்காரர்களாக இருக்கலாமேயன்றி அறிவில் சிறந்தவர்கள் என்று கூற முடியுமா ? எனவே, கல்வியென்பது மனிதனைப் பெரிய உத்தியோகஸ்தனாக்கவும், பணம் சம்பாதிக்க ஒரு வழியாகவும் மட்டும்தான் உள்ளது ; ஆனால், அறிவாளியாக்கப் போதியதாக இல்லை. மனிதனுக்குக் கல்வி அவன் அறிவாளியாகும் இலட்சியத்திற்கு அடிப்படையாக அமையவேண்டும்.

மாணவர்கள் பகுத்தறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். அதற்குப் பள்ளி நேரங்களில் தங்கள் மனம்போன போக்கில் நடத்தல் கூடாது. முதலாவது, வயிற்றுப் பிழைப்பைத் தேட, பரீட்சையில் பாஸ் செய்ய வேண்டும். அதன் பிறகு தங்கள் அறிவை அத்துடன் வைத்துக் கொள்ளக்கூடாது. தானே எதையும் சிந்தித்து உணரும் பகுத்தறிவைப் பின்பற்ற வேண்டும். நான் கூட மாணவர்களை என் கழகத்திற்கென்று எதிலும் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடாது—கல்விக்கு இடையூறாக எதிலும் ஈடுபடக் கூடாது என்று அடிக்கடி கூறுவதுண்டு. மாணவர்கள் பொதுக் காரியங்களில் சேர வேண்டாம். நாங்கள் செய்யும் போராட்டங்களில் சம்பந்தப்படக்கூடாது. அரசியல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் சேரக்கூடாது என்றும் கூறுவேன். ஏதாவது உங்களிடமிருந்து கழகம் எதிர்பார்க்குமானால் உங்களால் ஆன மறுப்பைக் காட்டுவதற்கென்று மட்டும் அவசியமுள்ள நேரங்களில் உங்களிடம் கேட்டுக் கொள்வதுண்டு. இந்த அளவில் மட்டும் மாணவர்கள் எங்களுக்கு ஆதரவு தந்தால் போதுமானது.

[சிதம்பரம் அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் நடந்த திராவிட மாணவர்கள் கழகக் கூட்டத்தில் சொற்பொழிவு—‘ விடுதலை ’ 9-3-1956]

# 5. கேள்வி கேட்கும் பழக்கம்

தலைவரவர்களே ! தோழர்களே !

உங்களுக்குக் கூட்டங்கள் ஒரு சர்வகலாசாலை போன்றதாகும் ; உலக நடப்பையும் மக்கள் யோக்கியதையையும் கண்டறிய ஒரு பரீட்சைக் கருவியாகும். பள்ளிக்கூடத்தில் இவைகளைப் படித்துவிடமுடியாது. பெரிய கலாசாலைப் பட்டம் பெற்றுவிடுவதானாலும், இந்தப் படிப்பு வந்துவிடாது.

உலகக் கல்வி வேறு ; பகுத்தறிவு வேறு ; பட்டம் வேறு. பெரிய டாக்டராய் இருப்பான் ;—ஆனால் அவனும், மூத்திரமும் சாணியும் சாப்பிட்டால் ஒருவன் மோட்சத்துக்குப் போகலாம் என்று நினைப்பான். பெரிய வானசாஸ்திர நிபுணனாய் இருப்பான்—அவனும் பார்ப்பான் மூலம் தன் இறந்த தந்தைக்கு அரிசி, பருப்பு, காய்கறி, செருப்பு அனுப்புவான். ஒருவன் பெரிய உடற்கூறு சாஸ்திரியாய் இருப்பான்—அவனும் தன் மனைவியையும், மகளையும் வீட்டுக்குத் தூரம் என்று வீட்டுத் திண்ணையில் தள்ளி மூடி வைத்துவிட்டு, உள்ளே தாழ்ப்பாள் போட்டுத் தூங்குவான். ஆகையால், மனிதனுக்குப் பகுத்தறிவும் உலகக் கல்வியும் அறிய, பள்ளிக்கூடமும் பட்டமுமே போதுமானதாகிவிடா.

[நாமக்கல்லில்; 12-12-1937-ல் சொற்பொழிவு—‘ குடிஅரசு ’ 19-12-1937]

படிப்பகம்

www.padippakam.com



தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

கூட்டங்களில் கேள்வி கேட்பதுபற்றி நான் சில விஷயங்களைக் கூற ஆசைப்படுகிறேன். பொறுப்பற்ற முறையிலும் கூட்டத்திற்குச் சம்பந்தப்படாத விஷயங்களைப் பற்றியும் பல கேள்விகள் கேட்கப்படுவதால், இதுபற்றி விளக்கம் கூறுவது மிக அவசியமாகிறது. சொற்பொழிவாளர் பேசிய விஷயங்களைப்பற்றி மட்டும் கேட்கப்படும் கேள்விகள்தாம் 'ரெலவென்ட்' (Relevent)—பொருத்தமான, சம்பந்தப்பட்ட கேள்விகளாகக் கொள்ளப்படும். மற்ற கேள்விகள் நாகரிகமற்றவர்களால்கூட ஞானமற்றவர்கள், காலித்தனமாகக் கேட்பவர்கள், குழப்பத்துக்காகக் கேட்பவர்கள், சுலபத்தில் விளம்பரம் பெற ஆசைப்படுபவர்கள், மானத்தைப்பற்றிக் கவலைப்படாதவர்கள் ஆகிய தன்மை கொண்டவர்களின் கேள்விகள் என்றுதான் சொல்லப்படக்கூடும்.

இப்படிப்பட்ட மக்களுக்கெல்லாம் புத்தி கற்பிக்கவே, ஒழுங்காக நடந்துகொள்ளும் வழியைக் காட்டிக்கொடுக்கவே திராவிடர் கழகம் வேலைசெய்து வருவதால், அதிகப் பிரசங்கித்தனமான கேள்விகளைப்பற்றி இங்கு நான் விளக்கிக் கூறவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பொருத்தமற்ற கேள்விகளைச் சாதாரணமாகத் தலைவர் அனுமதிக்க மாட்டார். எந்தக் கேள்விக்கும் ஏதாவது பதில் சொல்லிச் சமாதானம் செய்யவேண்டுமென்று கருதுவதாலும், இல்லாவிட்டால் கேள்வி கேட்டவர் நம்மை ஜெயித்துவிட்டதாகவோ அதற்குச் சமாதானம்கூற நம்மால் இயலவில்லையென்றோ தப்பாக நினைத்துக்கொண்டு போவார் என்பதற்காகவும் திராவிடர் கழகம் ஒன்றுதான் இதுவரை எப்படிப்பட்ட கேள்விகளையும் அனுமதித்துப் பதில் சொல்லி வருகிறது. நீங்கள் பத்திரிகையில் பார்க்கலாம்—சொற்பொழிவாளர் பேசியது சம்பந்தமான கேள்விகள் கேட்கப்பட்டால்கூட காங்கிரஸ் தோழர்களும், கம்யூனிஸ்ட் தோழர்களும், மந்திரிகள் உட்பட, பதில் சொல்லாமல் கூட்டத்தைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு நழுவி விடுவதை!

கேள்வி கேட்பதும் அதற்குப் பதில் கூறப்படுவதும் மேல்நாட்டுப் பழக்கம். அங்கு மன்னரைத் தவிர்த்த யார் பேசினாலும், சொற்பொழிவாளர் தனது பேச்சை முடித்து உட்கார்ந்ததும், தலைவர் கேள்விக்கு 10 நிமிஷம் அல்லது ஒரு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக்கூறி, கேள்வி கேட்கும்படி சொல்வார். கூட்டத்தில் நடந்த சங்கதிகளைப்பற்றிக் கேட்பதுதான் ஒழுங்கான கேள்வி என்று கருதப்படும். உதாரணமாக, இப்போது நான் பேசியதைக் கேட்ட பின்பு, என் சொற்பொழிவு முடிந்ததும், 'திராவிட நாட்டு ஜனத்தொகை 5 கோடி என்றீரே, 4¾ கோடிதானே!' என்றும், 'திராவிடரை எப்படிப் பிரிப்பது?' என்றும் நீங்கள் கேட்கலாம்; இது பொருத்தமானதாகக் கருதப்படும். அல்லது, 'முன்பு, கோவைக் கூட்டத்தில் திராவிட நாடு ஒரிஸ்ஸா மாகாணத்திலும் ஒரு பகுதியையுடையது என்று கூறினீர்களே; இன்று சென்னை மாகாணம்தான் என்று கூறுகிறீர்களே, எது சரி?' என்று கேட்கலாம். இதுவும் பொருத்தமான கேள்விதான். இதைவிட்டு, 'உங்களுக்குத் தாடி ஏன்'?; 'அது ஏன் வெளுப்பு'? என்று நீங்கள் இந்தக் கூட்டத்தில் கேட்பீர்களானால் இது பொருத்தமற்றதாகவும், குறும்புத்தனமானதென்றும் கருதப்படும். அல்லது, எவனுக்காவது தவறான வழியில் மதிப்பு, விளம்பரம் வாங்கிக் கொடுக்க, 'குப்பனை ஏன் கூட்டிவரவில்லை?', 'சொக்கன் எங்கே காணோமே?' என்று கேட்பது வெட்கங்கெட்டு விளம்பரம் தேடும் கேள்வியாகும்.

ஆகவே, தோழர்களே! இனி, கேள்விகேட்கும்போது சற்று யோசித்து, கூட்டத்தில் பேசப்பட்ட விஷயத்தைப் பொறுத்திருக்கிறதா—உங்கள் கேள்வி என்பதை முடிவு செய்து கொண்டு, கேள்வித்தாளை அனுப்பும்படிக் கேட்டுக்கொள்கிறேன். கேள்வி உரிமையைப் பாழாக்கிவிடாதீர்கள்; கேள்வி உரிமை இருந்தால்தான் பேசுகிறவர்கள் நாணயமாகப் பேச முடியும். அதைக் கெடுத்துவிடாதீர்கள்.



நான் கூட்டத்தில் பேசாத விஷயங்களைப்பற்றி உங்களுக்குச் சந்தேகங்கள் இருக்குமானால் அவற்றைத் தனிமையில் கேட்டு அறிந்து தெளிவடையவேண்டுகிறேன். மாணவர்கள் கனவான்களாக ஆகவேண்டும்; தறுதலைகளாக, அதிகப் பிரசங்கிகளாக ஆகக்கூடாது. கூட்டத்தின் மதிப்பைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது. நான் எந்தக் கேள்விக்கும் எனக்குப் பட்டதைப் பதிலாகச் சொல்லிவிடுகிறேன். அதனால் பலர் பாதிக்கப்படக்கூடும்; அதனால் அவர்களுக்கு வேண்டியவர்கள் மனம் புண்படும். ஆதலால், சொற்பொழிவுக்குப் பொருத்தமற்றதைக் கேட்காதீர்கள்!

[சென்னையில், 26-10-1947-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 29-11-1947]

# 2. அயல்நாட்டு அனுபவங்கள்

## 1. நமது மலாய்நாட்டு விஜயம்

நாம் இவ் வாரம் மலாய்நாடு போகும் விஷயம் பத்திரிகைகள் மூலம் வெளி வந்திருப்பதை வாசகர்கள் அறியலாம். மலாய்நாட்டிலுள்ள சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட அன்பர்களும் தொண்டர்களும் வெகுநாட்களாக விரும்பியதற்கும் நாமும் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகள் உலகில் உள்ள எல்லா மக்களிடையிலும் பரவி நன்மை பயக்க வேண்டுமென எதிர்பார்த்திருந்ததற்கும் ஏற்ப, நாம் மலாய்நாடு செல்கிறோம். நாம் இப்போது அங்கே போவது நமது நாட்டிலுள்ள வேலைகளை எல்லாம் நாம் முடித்துவிட்டோம் என்ற கருத்திலல்ல. பின் என்னவெனில், இந்த அய்ந்தாறு ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்தின் மூலமாக, மக்களிடையில் இருக்கின்ற புரட்டுகளையும் மூடநம்பிக்கைகளையும் எப்படி இங்கு எடுத்துரைத்தோமோ அதேபோல் மலாய்நாட்டில் குடியேறியுள்ள தமிழ் மக்களிடத்திலும் நமது இயக்கத்தின் கொள்கைகளை நேரில் எடுத்துச் சொல்லவேண்டுமென்ற ஆசையினால்தான், நாம் இப்போது மலாய்நாடு செல்கிறோம். தாய்நாட்டிலிருந்து இதர இடங்களாகிய மலேயா, தென்னாப்பிரிக்கா முதலான அயல்நாடுகளுக்கு ஜீவனத்திற்காகக் குடியேறிய நமது ஏழை மக்களோடு கூடவே பார்ப்பனீயமும் குடியேறி இருக்கிறது என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைக்கும்படி கோருகிறோம். தேக உழைப்பினால் பாடுபட்டுச் சம்பாதித்தும் பாமர மக்களுடைய ஊதியத்தை மதம், கடவுள், வேதம், சாத்திரம், புராணம் என்ற பெயர்களினால் கொள்ளையடித்து, நகத்தில் அழுக்குப்படாமல் ஏமாற்றி, வயிறு வளர்க்கக் கூடிய பார்ப்பனர்கள் நமது நாட்டில் எவ்வளவு தீங்குகளை இழைத்திருக்கின்றார்களோ அதேமாதிரி ஏனைய நாடுகளில் குடியேறிய மக்களையும் முன்னேறவிடாமல் அழுத்திக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

உதாரணமாக, நான் இப்போது போகக்கூடிய மலேயாநாடுகளில் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாகப் பார்ப்பனர்கள் செய்துவரும் இடைஞ்சல்களை நாம் அடிக்கடி கடிதங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், தெளிவாய் அறிந்திருக்கிறோம். சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களையும் அதன் முற்போக்கான கருத்துக்களையும் மக்கள் நன்குணர்ந்து அதன்படி நல்லறிவுபெற்று மூடநம்பிக்கைகளையும், குருட்டுத்தனமான பழக்கங்களையும் கொஞ்சங்கொஞ்சமாய் ஒழித்து, சகலசாதி மக்களும் ஒற்றுமைப்பட்டு வருவதைப் பொறுக்காத பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் சில மாதங்களாகத் தவறான முறைகளில் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். உதாரணமாக, பார்ப்பனீயமும், புரோகிதமும், அர்த்தமற்ற சடங்குகளும் இல்லாமல் சுயமரியாதை இயக்கத்தின் முறைப்படி நடக்கும் எண்ணிறந்த

www.padippakam.com



திருமணங்கள் சட்டப்படி செல்லாதவைகள் என்று ருசுப்படுத்துவதற்கும் தங்களுடைய ஆதிக்கத்தை எப்போதும்போல் மக்களிடத்தில் நிலைநாட்டுவதற்கும் பார்ப்பனர்கள் செய்துவரும் முயற்சிகள் கொஞ்சமல்ல. அவர்களுடைய முயற்சிகள் பலன்தரலாம் என்று எதிர்பார்த்த நாட்களெல்லாம் போய் மக்களுக்குப் பகுத்தறிவு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதால் இத்தகைய சூழ்ச்சிகளை மக்களே எதிர்த்துப் போராடி வென்றுவிடுவார்கள் என்ற பூரண நம்பிக்கை நமக்குண்டு. ஏனெனில், வெகுநாட்களாக ஏமாற்றிக்கொண்டே வந்த ஒருவன் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பின்னுங்கூட, மேலும் மேலும் ஏமாறிக்கொண்டே இருப்பதற்கு அவனது அறிவு இடங்கொடாது என்பது நமக்குத் தெரியும்.

இந்தமாதிரி சூழ்ச்சிகள் ஒருபக்கம் இருக்க, சுயமரியாதை இயக்கத்தை அழிப்பதற்கு என்றே சில இந்துமதச் சங்கங்கள் எனப்படுபவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றால் சுயமரியாதை இயக்கம் எவ்வளவு தூரம் மலாய் நாட்டுப் பார்ப்பனர்களையும் அவர்களது கூலிகளையும் பாதிக்கிறது என்பதை நன்கு உணரலாம். இதர தமிழ் ஆங்கிலப் பத்திரிகை களைவிட மிகவும் அதிகமாக நமது 'குடிஅரசு' மலாய் நாடுகளில் பரவி இருந்தாலுங்கூட அதுமாத்திரம் போதாமல், அவ்விடத்திலேயே 'முன்னேற்றம்' போன்ற பத்திரிகைகளை நமது அன்பர்கள் ஆரம்பித்து, அவைகளும் ஏற்பட்ட சில மாதங்களுக்குள்ளாகவே ஆயிரக் கணக்காய்ப் பரவ ஆரம்பித்திருக்கின்றன என்றால், சுயமரியாதை உணர்ச்சி மக்களிடத்தில் எவ்வளவு தூரம் செலாவணி ஆகியிருக்கிறது என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

நமது இயக்கத்திற்கு இத்தகைய எதிர்ப்புகள் வருவதால் நமக்குச் சற்றும் கவலை யில்லை. அவைகளினுடைய கதி என்னவாகும் என்பது நமது நாட்டில் செவ்வாய்க்கிழமை தாலிகட்டி புதன்கிழமை அறுத்துப்போன ஆத்திகச் சங்கத்தை உணர்ந்தவர்களுக்கு நன்கு தெரியும். செங்கற்பட்டில் கூடிய முதலாவது சுயமரியாதை மாநாட்டின் தீர்மானங் களையும் அவைகளை நடைமுறையில் நடத்தி ஆதரவளித்த எண்ணிறந்த மக்களையும் பார்த்துத் திகிலடைந்த பார்ப்பனர்கள், சில கூலிகளைப்பிடித்து ஆத்திகச் சங்கம் என்பதாக ஒன்று ஸ்தாபித்து, அவர்களது கைகள் ஒயும்வரையும் நம்மையும் நமது அன்பர்களையும் கண்டவாறெல்லாம் தூஷித்தும் அவதூறாகத் தூற்றியும் பார்த்து, ஒருவாறாக அடங்கி ஒடுங்கி அமிழ்ந்து விட்டார்கள். கடவுள் உண்டு என்பதை ஸ்தாபிப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட ஒரு சங்கத்தின் நிலைமை இவ்வாறு ஆகியிருக்கிறது என்பதை வாசகர்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்குமாறு விரும்புகிறோம்.

இதே மாதிரியாகத்தான் மலாய் நாட்டிலும் இந்துமதம் என்பதைக் காப்பாற்று வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்கங்களைப்பற்றியோ அவைகளின் கர்த்தாக்களைப் பற்றியோ நமக்குச் சற்றேனும் கவலையில்லை. ஏனெனில், இந்து மதம் யாருக்காக ஏற்பட்டது, யார் ஏற்படுத்தியது, எப்போது, எந்தக் கருத்தினால் ஏற்படுத்தப்பட்ட தென்பதை நமது மக்கள் வெட்டவெளிச்சமாகத் தெரிந்துகொண்டு விட்டார்களாதலால், 'மதம் போச்சு' என்ற பொய்க் கூச்சலின் மூலமாய் இனி மக்களை ஏமாற்றவோ அடிமைப் படுத்தவோ ஒருவராலும் முடியாது என்ற உறுதியான நம்பிக்கை நமக்குண்டு. பராசரஸ்மிருதி, மனுஸ்மிருதி முதலியவைகளிலும் இந்து மதத்திற்கு ஆதாரமான வேதங் களிலும் தற்காலத்திற்கு ஏலாததும் மனிதனது பகுத்தறிவுக்கு முரண்பட்டதுமான கருத்துக்களே அடங்கி இருக்கின்றன என்பதை நிச்சயமாய் அறிந்துகொண்ட நமது மக்களிடம் இந்து மதம் என்ற பூச்சாண்டியைக் காண்பித்து இனியும் ஏமாற்றலாம் என்று யாராவது எண்ணியிருப்பார்களானால் அவர்களுக்காக நாம் பெரிதும் இரங்குகிறோம்.

இந்துமதம் என்பதற்கு அடிப்படையாகச் சொல்லப்படுகின்ற வேதங்கள் ஸ்மிருதிகள் இவைகளின் நிலைமையே தத்தளித்துக்கொண்டு இருக்கும்போது, அவைகளின் மேற் கட்டடமாகிய இந்து மதத்தின் கதி என்னவாகுமென்று நாம் சொல்லவேண்டியதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



1929—30-ல் மலேயா நாட்டில் ஈ. வெ. ரா. நாகம்மையாருடன் சுற்றுப்பயணம் செய்த பெரியார் ஈ. வெ. ரா. அங்கு சொற்பொழிவாற்றும் காட்சி; தாடி வளர்க்க நேரிட்ட நாளைக்குச் (சனவரி 1930) சின்னாட்கள் முந்திய தோற்றம்



ஆகையால், இந்து மதத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கப் புறப்பட்டிருக்கும் கூட்டத்தார்கள் இனியாகிலும் காலதேச வர்த்த மானத்தை உணர்ந்து, யோக்கியமான முறையில் உழைத்துத் தங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தமான வழிகளில் நடத்தவேண்டும். தவறுவார்களானால் மக்களுக்குள் அனாவசிய மான வேறுபாடுகளும் மதப் பூசல்களும் சாதிச் சண்டைகளும் உண்டாகி, அதனால் மனித சமூகத்தின் முன்னேற்றமும் தடைப்படும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

கடைசியாக, நமது மலாய் நாட்டுப் பிரயாணத்தைப்பற்றிய விஷமப் பிரசாரங் களைப் பற்றியும் சிறிது உறுதியாய்க் கூற விரும்புகிறோம். நாம் மலாய் நாடு போவதாலும் அவ்விடத்தில் நமது இயக்கத்தின் கொள்கைகளை எடுத்து மக்களுக்குச் சொல்வதாலும் சில சுயநலக் கூட்டத்தார்க்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த சிலர், தங்களுடைய ஆதிக்கத்திற்கு அழிவுகாலம் கிட்டிவிட்டதென்று பயந்து, நம்மை அவ்விடம் வரவொட்டாது தடுக்கவேண்டிய முயற்சிகளைப் பல வழிகளிலும் செய்யத் தொடங்கி இருப்பதாகவும் அறிகிறோம். இந்த நாட்டில் உள்ளதுபோலவே அங்கும் சர்க்காருக்கு உள் உளவாய் இருக்கின்ற பார்ப்பனர்கள், சர்க்கார் மூலமாக நம்மைப்பற்றிப் பொய்யும் புரட்டும் சொல்லி நம்மைத் தடுப்பதற்கு வேண்டிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து வருகின்றார்கள் என்று கேள்விப்படுகிறோம். இவைகளெல்லாம் உண்மையாய் இருக்கு மாயின், இத்தகைய மேல்மிரட்டல்களால் நமது இயக்கத்தின் இலட்சியங்களை நாம் சொல்லாமலோ அல்லது அதன் நன்மைகளை மக்களுக்கு விளக்காமலோ இருக்கப் போவ தில்லை என்பதை மாத்திரம் உறுதியாய்க் கூறுவோம். ஆனால், நான் வெகுநாட்களாகச் சொல்லி வந்தபடி அரசியலைவிடச் சமூக மத விஷயங்களைப் பிரதானமாகக்கொண்டு, நமது சுற்றுப்பயணத்தை முடித்துவருவதாக நாம் உத்தேசித்திருக்கிறோம். அரசியல் சம்பந்தமான பிரச்சினைகள்பற்றி நமக்குத் தற்போது அதிகக் கவலையில்லை. ஆதலால் அது சம்பந்தமாக நாம் ஒன்றும் பேசப்போவதுமில்லை. ஆனால், சமூக மதச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாகச் செய்யப்போகும் நமது பிரச்சாரத்திற்கு மாத்திரம், பார்ப்பனர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு மலேயா கவர்ன்மென்டார் ஏதேனும் முட்டுக் கட்டையாக இருக்க முயலுவார்களேயானால், அதற்காக நாம் நமது வேலையில் சற்றேனும் பின்வாங்கப்போவதில்லை என்பதை மாத்திரம் நிச்சயமாய்க் கூறுவதோடு, அதனால் ஏற்படக்கூடிய எவ்விதக் கஷ்ட நஷ்டங்களுக்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம் என்பதை வாசகர்களுக்கு வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்கிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—15-12-1929]

## 2. மலேயா இந்தியர்க்கு

சகோதரர்களே!

இன்று இங்கு நடந்த மாநாட்டின் நடவடிக்கையைப் பார்த்தேன். இது எங்கள் நாட்டில் காங்கிரசின் ஆரம்பகால நடவடிக்கைகளை ஒத்திருக்கின்றது. அதாவது, இந்தியப் பொது மக்களுடையவும், பாமர மக்களுடையவும் நன்மைக்காகவென்று தான் ஆதியில் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதை ஆரம்பித்தவர்களில், அரசாங்க உத்தியோகத்தை நம்பி ஆங்கிலம் படித்துவிட்டு உத்தியோகத்திற்கும், தங்கள் சொந்த வயிற்றுப் பிழைப்புக்கும் வகை எதிர்பார்த்த மக்களே முதன்மையாய் இருந்தார்கள். அம் மாநாடுகளில் தங்கள் உத்தியோகத்திற்கு ஏற்ற பல தீர்மானங்கள் செய்துவிட்டு, பாமர மக்களை ஏமாற்ற—ரோடுகள் போடவேண்டும்; வரி குறைக்கவேண்டும்; காடு திருத்த வேண்டும்—என்பனபோன்ற சில காகிதத் தீர்மானத்தையும் செய்வார்கள். காரியத்தில் சீர்திருத்தம் என்ற பேரால் கொழுத்த சம்பளமுள்ள சில உத்தியோகங்களை அந்தப் படித்த கூட்டத்தினர் அனுபவிக்கவும் அதற்காக வரிகள் உயர்த்தவும் நேர்ந்ததைத் தவிர, அதற்குத்

படிப்பகம்

www.padippakam.com



தருந்தபடி வரிகளும் உத்தியோகங்களும் அரசாங்க அதிகாரங்களும் மற்றும் தொல்லைகளும் பெருகினவே தவிர, வேறு யாதொரு பலனும் ஏற்படவில்லை.

சம்பளமும் உத்தியோகமும் பெருகினதின் காரணமாய்க் கட்சிகளும் உட்பிரிவுகளும் ஏற்படவேண்டியதாகிவிட்டது. ஏனென்றால், ஸ்தாபனங்களில் முக்கியஸ்தர்களாக இருக்கின்றவர்கள் அதனால் ஏற்படும் உத்தியோகங்கள் எல்லாம் தாங்களே சுயமாக அனுபவிக்க ஆசைப்படுவதாலும், மற்றவர்களுக்கும் பங்கு கொடுக்காமல் ஏமாற்ற சூழ்ச்சி செய்வதாலும், மற்றவர்கள் பிரிந்துபோய் வேறு ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டு தாங்கள் தலைவர்களாவதும், பிறகு அதுபோலவே அதிலிருந்து பலர் பிரிந்துபோவதும், சாத்தியப்படாதவர்கள் சாதி, மத வகுப்புக்களின் பேரால் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொண்டு பாத்தியம் கேட்பதுமாகிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. எங்கள் நாட்டில் உள்ள இவ்வளவு அரசியல், மதவியல், சாதி வகுப்பியல், சமூகவியல் ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டதான கட்சிகளும் ஸ்தாபனங்களும், காங்கிரஸ் ஏற்பட்டதினாலும் அதில் உள்ளவர்களின் சூழ்ச்சியாலும் அவர்களைப் பின்பற்றியும் ஏற்பட்டதேயொழிய வேறில்லை. ஆகையால், இந்த மாநாடு எங்கள் நாட்டுக் காங்கிரசைப் பின்பற்றாமல், அரசாங்கத்தாரே–உத்தியோகமும் பதவியும் கேட்காமல், நாட்டின் நலனுக்கும் பொதுமக்கள் நன்மைக்குமான முறையில் ஆட்சி செலுத்தும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தும் மாதிரியில் நடந்துகொள்ளவேண்டும். அதற்கு மார்க்கம், மக்களை ஒன்றுபடுத்தி அவர்களுக்கு அறிவையும் சுயமரியாதையையும் உண்டாக்குவதே தவிர, உத்தியோகங்களை இந்திய மயமாக்கவேண்டும் என்பதல்ல என்பதே எனது அபிப்பிராயம்.

இந்தியர்கள் என்பவர்களாகிய நாம் ஒரு மதம், ஒரு சாதி, ஒரு வகுப்பு, ஒரு கொள்கை, ஒரு இலட்சியம் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. முதலாவது, இலட்சியத்தை ஒன்றுபடுத்திக்கொண்டாலொழிய ஒரு காரியமும் செய்ய முடியாது. ஆதலால், நீங்கள் ஏதாவது எங்கள் காங்கிரசைப் பின்பற்றி, எங்கு இந்த நாட்டையும் இந்தியாவைப்போல் பாழாக்கி, ஏழைகளை வதைத்து, இனி வரும் ஏழைகளுக்கும் தொல்லை விளைவித்து, அவர்களை இங்கிருந்து இனி வேறு வெளிநாட்டுக்கு அனுப்பிவிடுவீர்களோ என்று பயப்படுகிறேன்.

[சிங்கப்பூர் டவுன் ஹாலில், 26-12-1929-ல் நடந்த மலேயர் இந்தியன் அசோசியேஷன் மாநாட்டில் சொற்பொழிவு—'குடி அரசு' 2-2-1930]

## 3. அயல் நாட்டு அனுபவங்கள்

மலாய் பிரயாணத்தைப்பற்றி நாம் சிறிதும் நினைத்திருக்காத நிலையில் திரு. சாமி அற்புதானந்தா அவர்களால் எழுதப்பட்ட ஒரு கடிதம் வந்தது. அக் கடிதத்தில் மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கக் கொள்கை உணர்ச்சி விசேஷமாய் பரவி வருகின்றதெனினும், சில விஷமக்காரர்கள் சுயநலத்தின் காரணமாய் இந்துமதத்தின் பேரால் தொல்லை விளைவிக்கின்றார்கள் எனவும், சுயமரியாதைக்காரர்களுக்கு, 'இந்துக்களைப் புதைக்கும் சுடுகாட்டில்கூட இடம் கொடுக்கக்கூடாது' என்று இந்துமதச் சங்கத்தில் தீர்மானங்கள் கொண்டு வந்ததாகவும், சுயமரியாதைக் கல்யாணங்களைச் சர்க்கார் ஒப்புக்கொள்ளக்கூடாது என்று விஷமம் செய்கின்றார்கள் எனவும், ஒருமுறை வந்துபோனால் மிக்க அனுகூலமாய் இருக்குமென்றும் பொருள்பட எழுதி இருந்தார். இதைப் பார்த்ததும் அதுசமயம் போய்த்தான் பார்க்கலாமா என்பதாக ஒரு எண்ணம் தோன்றியதால், இது சமயம் சிறிது வேலை இருக்கின்றதென்றும், ஒன்று இரண்டு மாதம் பொறுத்து முயற்சிப்பதாகவும் ஆனால் அங்குள்ள 'முன்னேற்றம்' பத்திராதிபரையும் திரு. காளியப்பனையும் கலந்து, அவர்களைக்கொண்டு எழுதும்படியும் பதில் எழுதினோம். இப்படி இருக்க ஒரு மாதம் கழித்து, திடீர் என்று 15 நாள் சாவகாசத்தில் புறப்படும்படி நிகழ்ச்சிக் குறிப்புடன்



ஒரு கடிதம் வந்தது. அக் கடிதத்திற்கு, வர முடியாது என்று எழுதியதுடன் அந் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் மற்ற பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டதாய்த் தெரிந்ததால் அதை பிரசுரிக்க வேண்டாம் என்று தகவலும் அனுப்பிவிட்டோம். தவிர, திருவாளர்கள் சாரங்கபாணி, காளியப்பன் இவர்கள் கடிதமும் இதை அனுசரித்துப் புறப்படும்படியாகவே கிடைத்தது. எல்லாவற்றிற்குமாக ஒரு நீண்ட தந்தி ஒன்றை—சென்னையிலிருந்து 'குடி அரசு' ஆபீசு ஈரோட்டிற்கு மாற்றப்படவேண்டி இருப்பதாகவும் நாகர்கோவில் மாநாட்டிற்காகவும், பார்ப்பனர் அல்லாதார்க்குள்ளாகவே கட்சிப் பிளவு-தகராறுகள் இருப்பதாலும், இதுசமயம் கண்டிப்பாய் வருவதற்குச் சவுகரியம் இல்லை என்பதாகத் தந்தி கொடுத்தோம். இதற்குப் பதிலாக, '6000 டாலர்கள் (பதினாயிரம் ரூபாய்கள்) செலவழித்துச் செய்த மாநாட்டு ஏற்பாடுகளும், வரவேற்பு ஏற்பாடுகளும் வீணாய்விடும். வராவிட்டால் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்களுடைய நிலைமை நெருக்கடியாகிவிடும்' என்று திருவாளர்கள் சாரங்கபாணியும் காளியப்பனும் தந்தியடித்தார்கள். அதைப்பார்த்த இவ்விடத்திய நமது நண்பர்கள் கண்டிப்பாய்ப் போகவேண்டுமென்றும், இவ் விடத்திய காரியங்களை எல்லாம் தாங்கள் சரியாய்ப் பார்த்துக்கொள்வதாகவும் சொன்னதோடு, கைவல்ய சாமியாரும் கண்டிப்பாய்ப் போகவேண்டுமென்று சொன்னார்கள். இவைகளை அனுசரித்துப் போவதாகத் தீர்மானித்து, ஒரு தந்தியை சிங்கப்பூருக்கு திரு. சாரங்கபாணிக்குக் கொடுத்துவிட்டோம். அதற்குப் பதிலாக திரு. சாரங்கபாணி அவர்களால், நமது வருகைக்கு அவ்விடம் இந்துசபையார் பெரிய எதிர்ப்பு செய்கிறார்கள் என்றும், அதனால் அவ்விடத்திய சர்க்கார் நம்மைக் கப்பல் விட்டு இறங்க அனுமதிக்கமாட்டார்கள்போல் இருக்கின்றதென்றும், இறங்கவிட்டாலும் பேசவிடமாட்டார்கள் என்றும், தகுந்த ஏற்பாட்டுடன் கண்டிப்பாய் வரவேண்டும் என்றும் தந்தி கொடுத்திருந்தார். இது டிசம்பர் மாதம் 9ஆம் தேதி கிடைத்தது. அதைப் பார்த்தபிறகு, கப்பல் ஏறும்நாள் மிகச் சமீபத்தில் இருந்ததால், அதாவது 11ஆம் தேதியாய் இருந்ததால் ஒன்றும் செய்யமுடியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். இந்த நிலையில் 'மாநாடு ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. கப்பல் ஏற வேண்டாம்; கடிதம் பார்' என்பதாக மாநாட்டு வரவேற்புத் தலைவரான திரு. அய்யாறு அவர்கள் பெயரால் பினாங்கிலிருந்து ஒரு தந்தி கிடைத்தது. இதைப் பார்த்ததும் கஷ்டம் ஒழிந்தது என்று மெத்த சந்தோஷமாக இருந்தோம். ஆனால், இங்குள்ள நண்பர்களும் நமது தமையனாரும் இந்தத் தந்தி பொய்யாய் இருக்குமென்றும், மறுபடியும் தந்தி கொடுத்துக் கேட்கவேண்டுமென்றும் சொன்னதால் மறுபடியும், 'இப்படி ஒரு தந்தி கிடைத்தது; அது உண்மையா?' என்று கேட்டோம். அதற்குப் பதில், 'பினாங்கு தந்தி பொய்; கண்டிப்பாய்ப் புறப்படு; பயணத்தை உறுதிப் படுத்து' என்று பதில் 11ஆம் தேதி கிடைத்தது. இதைப் பார்த்தபிறகு மறுபடியும் கவலை ஏற்பட்டது. ஏனெனில், அவ்விடத்திய சர்க்கார் நம்மைக் கப்பலைவிட்டு இறக்காமல் பாரிஸ்டர் திரு. மணிலால் அவர்களைச் செய்ததுபோல் செய்துவிட்டால் நாம் என்ன செய்வது என்கின்ற கவலை தவிர வேறு இல்லை. இதன்பேரில் சென்னை அரசாங்க பிரதம அதிகாரிகளைக் கேட்கச் செய்ததில், அவர்கள் மலாய் அரசாங்கத்தில் தாங்கள் பிரவேசிக்க முடியாது என்று ஒரே வார்த்தையால் முடித்து விட்டார்களாம். பிறகு எப்படியானாலும் சரி, இவ்வியக்கம் காரணமாய் வந்ததை அனுபவிப்போம் என்றே புறப்பட்டோம். நாள் சுருக்கமாக இருந்ததால் 11ஆம் தேதி சென்னையில் கப்பலேற முடியாமல் 13ஆம் தேதி நாகைக்குப் புறப்பட்டு அங்கிருந்து 15ஆம் தேதி கப்பலேறிவிட்டோம்.

கப்பலில் கம்பியில்லாத் தந்தி மூலமாய் பல வரவேற்புத் தந்திகள் கிடைத்துக்கொண்டிருந்தாலும் சற்றுக் கவலையுடனேயேதான் கப்பல் பிரயாணம் செய்தோம். நாங்கள், பினாங்கு துறைமுகத்திற்கு 4 மைல் தூரத்தில் கப்பல் நின்றிருக்கும்போதே ஒரு வெள்ளைக்காரச் சாதாரண அதிகாரியும் மற்றொரு இராணுவ உடை தரித்த வெள்ளைக்கார அதிகாரியும் சில போலீசுக்காரரும் நம்மிடம் வருவதைப் பார்த்ததும், 'சரி, நமக்குத் தடை



படிப்பகம்

www.padippakam.com



உத்தரவு வந்துவிட்டது' என்று முடிவு செய்துகொண்டு, மனதில் நம்மையறியாமல் ஏற்பட்ட ஒருவிதத் திகிலுடன், முகத்தை மாத்திரம் சிரிப்பாகக் காட்டிக் கொண்டு நின்றோம். அவர்கள் இருவர்களும் கிட்ட வந்ததும் சலாம் செய்து, ஒருவர் அசிஸ்டண்ட் கண்ட்ரோலர் என்றும், மற்றவர் சார்ஜண்ட் என்றும் தாங்களே அறிமுகம் செய்து கொண்டார்கள். பிறகு பேச ஆரம்பித்ததும் என்னிடம் பேசவேண்டியவைகளைத் திரு. இராமநாதன் அவர்களிடம் சொல்லும்படி சொன்னோம். பிறகு அவர் பேசும்போதே ஒருவிதத் தைரியம் வந்தது. அதற்குள் பினாங்கிலிருந்து சில சங்கத்து நண்பர்கள் வந்து ஒரு கடிதம் கொடுத்தார்கள். அதில் இதைப்பற்றிய காரியம் ஒன்றுமில்லாமல் நிகழ்ச்சிக் குறிப்பு இருந்ததால் அந்தக் கவலை நீங்கிவிட்டது. இதற்குள் மற்றொரு படகில் சாமி அற்புதானந்தா, சுப்பிரமணியம் முதலியவர்களும் மற்றும் சில இந்து, முகம்மதிய கனவான்களும் வருவதைப் பார்த்தோம். இறங்கவிடமாட்டார்களே என்று நினைத்த எண்ணம்போய், இவ்வளவு ஆடம்பரம் வேண்டாம் என்று சொல்லவேண்டிய நிலைமை வந்துவிட்டது.

பினாங்கில் இறங்கியவுடன் பலவிதமான விஷயங்கள் காதுக்கு வந்தன. அவற்றுள் ஒன்று, நம்மைக் கத்தியால் குத்துவதற்கு ஒரு நபருக்கு 500 வெள்ளி பேசி ஏற்பாடு செய்திருப்பதாகவும், நாம் போகும் இடங்களிலெல்லாம் கலகம் செய்வதற்கும் துண்டுப் பிரசுரங்கள் போட்டு வழங்கி வருவதற்கும் 500 வெள்ளி பேசி பலரை நியமித்து இருப்பதாகவும், மற்றும் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பேசினதாகவும் சொன்னதாகவும், முகம்மதுநபிக்கு விரோதமாய்ப் பேசினதாகவும், இந்து மதத்தை ஒழித்து இந்துக்களை முகம்மதிய மதத்தில் சேர்ப்பிக்க முகம்மதியரிடம் பணம் வாங்கிக்கொண்டு மலாய் நாட்டிற்கு வருவதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாய் ஒத்துழையாமைப் பிரச்சாரம் செய்ய வருவதாகவும், போல்ஷிவிசம் பிரச்சாரம் செய்ய வருவதாகவும் இன்னும் பலவிதமாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் பிரச்சாரம் செய்திருந்த விஷயம் நேரில் பார்த்தோம். தவிரவும் அவ்விடத்திய ஓர் ஆங்கில தினசரிப் பத்திரிகை, அரசாங்கத்திற்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் நாம் பெரிய கலகக்காரர் என்றும், நம்மை மலாய் நாட்டில் விட்டால் ஜன சமூகத்தின் சாந்த குணம் கெட்டு, சர்க்காருக்குத் தொல்லை ஏற்படுமென்றும், எச்சரிக்கை செய்வதாக ஒருவாரம் தவறாமல் தலையங்கமும், உபதலையங்கமும் எழுதி வந்தது. இதுநிற்க, 'தமிழ்நேசன்' பத்திரிகைக்காரரான ஓர் அய்யங்கார் ஊர் ஊராகச் சுற்றிப் பிரச்சாரம் செய்ததுடன், தனது பத்திரிகையில், கடவுளுக்கும் மதத்துக்கும் ஆபத்து என்று தினப்படி எழுதிக்கொண்டே வந்தார். தவிர இவ்வளவும் பேசாமல் திரு. வரதராசலு நாயுடுவின் பேப்பரும், மருந்து விற்கும் ஆட்களும் கூலிகளும் விஷமப் பிரச்சாரம், அதாவது, 'தோட்டக்கூலிகளைக் கிளப்பிவிட்டுத் தோட்டக்காரருக்குத் தொல்லை விளைவிப்பான்; இவன் காந்தி மனிதன்' என்றும் சொல்லிவந்தார்களாம்.

மற்றும் ஒரு விசேஷம். அதாவது 'இந்து மகாசபைத் தலைவர், அவ்வூர் போலீஸ் கமிஷனரிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்துப் பேசுகையில், 'இந்தியாவிலிருந்து வரும் ஈ. வெ. ராமசாமி என்பவர் எங்கள் கடவுளான இராமரை விபசாரத்தில் பிறந்தவர் என்று சொல்லுகின்றார்; ஆதலால் அவரை இங்கே வரவிடக் கூடாது' என்றாராம். அதற்கு அந்த போலீஸ் கமிஷனர், 'அதற்கு நாம் என்ன செய்யலாம், எங்கள் வெள்ளைக்காரர்களில் சில பேர் இயேசு கிறிஸ்துவையும் இப்படித்தான், அதாவது, அவர் தாயார் விவாகம் ஆவதற்கு முன் அவரைப் பெற்றதால் விபசாரத்தில்தான் பிறந்திருக்க வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். கேட்டால், 'சயின்சுப்படி ஒரு ஆள் கூடாமல் எப்படி பிள்ளை பிறக்கும்' என்கின்றார்கள். ஆகவே, மத விஷயங்களில் இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாகவே இருந்துவருகின்றது. அதற்காக யாரையும் தூக்கில் போட முடியாது' என்றும் சொன்னாராம். இப்படியாகப் பலவிதத்திலும் எதிர்ப் பிரசாரங்கள் செய்தார்கள் என்பது மாத்திரம் நமது காதுக்கு எட்டியதே தவிர, காரியத்தில் பலன் ஒன்றும் காண முடியவே இல்லை. 'தமிழ் நேசன்' பத்திராதிபரான ஒரு அய்யங்கார், சர்க்காரால் நம்மை மலாய் நாட்டில் இறங்கக்கூடாதென்று உத்திரவு போட்டுவிட்டதாகச் கட்டுக் கட்டிவிட்டதால், அதை நம்பி அனேகம் பேர் கப்பலில் இருந்து நாம் இறங்கமாட்டோமென்று நினைத்துக்கொண்டு, இறங்கினால் குத்திவிடுவதாயும் கலகம் செய்வதாயும் பேசிவிட்டார்கள். நாம் பினாங்கில் இறங்கியதும் அங்கு துறைமுகத்தில் ஜனங்கள் நடந்துகொண்டதைப் பார்த்த பிறகுதான் யாரும் எவ்வித எதிர்ப் பிரச்சாரங்கள் செய்யாமல் இருந்து விட்டார்கள்.



நிற்க, எதிர்ப் பிரச்சாரங்கள் செய்வதற்கு ஏற்பட்ட காரணங்கள் என்னவென்று பார்த்ததில், பினாங்கில் இந்து மகாசபை என்று ஒரு சபை இருப்பதாகவும், அதைச் சர்க்கார் இந்துக்களுடைய பிரதிநிதி சபை என்று ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், அச் சபை பிரமுகர்களுக்கு அங்குள்ள இந்துக்களால் சில மரியாதைகளும் வரும்படிகளும் இருப்பதாகவும், நமது இயக்கத்தால் அவற்றிற்கு மரியாதை குறைந்து வரும்படி குறைவதாகவும், அதனால் நமது இயக்கத்திற்கு விரோதமாய் வேலை செய்யவேண்டி வந்ததாகவும் தெரிய வந்தது. ஆனால் அந்த இந்து மகாசபையில் இந்துக்கள் என்பவர்களிலேயே பல வகுப்பாரை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்வதில்லை என்கின்ற நிபந்தனை உண்டு. அதாவது, ஆதித் திராவிடர்கள், மருத்துவர்கள் முதலியவர்களை மாத்திரமல்லாமல், சமீப காலம் வரை நாடார்களையும் சேர்க்க மறுத்து வந்தார்களாம். முதல் முதலில் நாடார்களைச் சேர்க்கும்போதும் அதிகமான பணம் கொடுத்ததால்தான் சேர்த்தார்களாம். இந்த யோக்கியதை உள்ள இந்து மகாசபை கெட்டுப் போகுமென்று சிலர் சத்தம் போட்டதால் தான் அதை யாரும் அந்நாட்டில் மதிக்கவில்லை. தவிர, 'தமிழ்நேசன்' அய்யங்கார் நாம் போகும் ஒவ்வொரு ஊருக்கும் முதல்நாள் போய் வரவேற்புக்கு எவ்வளவோ இடையூறு செய்துகொண்டு போனதாக அனேகமாய் ஒவ்வொரு ஊர்களிலும் பிரஸ்தாபம் வந்து கொண்டே இருந்தது. இது தவிர, மலாய் நாட்டிலுள்ள சங்கங்களில் எதில் எதில் பார்ப்பனர்கள் அங்கத்தினர்களாக இருந்தார்களோ, அதிலெல்லாம் வரவேற்புக்குக் கூடியவரை எதிர்ப்புகள் செய்து பலமான தோல்விகள் அடைந்ததுடன், இரண்டொரு சங்கத்தில் இது விஷயமாய்ச் செய்த விஷமத்திற்குப் பார்ப்பனர்களிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கியிருந்ததை எங்களுக்குக் காட்டினார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் நமது மலாய் நாட்டுச் சுற்றுப்பிரயாணம், நாம் எதிர்பார்த்ததற்கு மேலான அளவு வெற்றிகரமாகவே முடிந்தது. முகம்மதிய கனவான்களும், கிறிஸ்தவ கனவான்களும் அவர்களில் அய்ரோப்பியர்களும், மற்றும் இந்துக் கனவான்களும் இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் சிறிதும் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரும் கலந்து கொண்டதும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் போல் தலைமை வகித்து உபசாரங்கள் செய்ததும் நடவடிக்கைகளைப் பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். திருவாளர்கள் சுவாமி அற்புதானந்தர், கே. சுப்பிரமணியம், காளியப்பன், அய்யாறு, சாரங்கபாணி, ஓ. இராமசாமி நாடார், கோவிந்தசாமி, தாமோதரன், பழனியப்பச் செட்டியார், ஜனாப்புகள் முகம்மது ராவுத்தர், சீனிராவுத்தர், முகம்மது யூசுப் முதலிய கனவான்கள் சிங்கப்பூரிலும், பினாங்கிலும் செய்த ஏற்பாடுகள் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இந்த இரண்டு ஊர்களில் 7500 ரூபாய்க்கு மேலாகவே செலவுசெய்து இருக்கின்றார்கள். எவ்வளவு சொல்லியும் அவர்கள் சிறிதும் இலட்சியம் செய்யாமல் எதிர்ப் பிரச்சாரக்காரர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்கின்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டே வீண் செலவு செய்தார்கள். எனவே, நமது மலாய் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் வெற்றிகரமாக முடிந்தது என்பது வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன், மலாய் நாட்டிலுள்ள இந்தியச் சகோதரர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—9-2-1930]

www.padippakam.com



# 4. கெய்ரோ கடிதம்

கிடைத்திருக்கலாம். அதில் 'எம்பரஸ் போர்ட் சைட்டிலிருந்து எழுதிய வியாசம் எழுதமுடிந்தது. மற்றபடி ஆப் பிரிட்டன்' என்கின்ற கப்பல் விஷயத்தைப் பற்றி மாத்திரம் கொழும்பிலிருந்து கப்பல் புறப்பட்டதற்குப்பின் கண்ட விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதுகிறேன்.

டிசம்பர் 17-ந் தேதி காலை புறப்பட்ட கப்பல் 24-ந் தேதி காலை 10 மணிக்கு ஜிபுட்டி என்கின்ற பிரஞ்சு துறைமுகம் வந்து சேர்ந்தது. இது ஏடனுக்கு எதிர்ப் பாகத்தில் இருப்பதும் பிரஞ்சுக்காரருடைய துறைமுகமுமாகும். நாங்கள் பிரஞ்சுக் கப்பலில் பிரயாணம் செய்ததால் பிரஞ்சுக் கப்பல் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. பிரஞ்சுக் காரருக்குச் சொந்தமான தீவாகிய மடகாஸ்கர் என்னும் தீவுக்கு அனுப்பப்படும் சாமான் களும், அத் தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சாமான்களும் ஜிபுட்டி என்ற துறைமுகத்தின் வழியாகத்தான் வரவேண்டும். இந்தத் துறைமுகத்தில் நாங்கள் இறங்கினதும் கமாலியர் என்கின்ற ஒரு சாதியார்—நீக்ரோவர்களைப் போல் அதிகக் கறுப்பும், மிகவும் சுருண்ட தலைமயிரும் உடையவர்கள்தாம் இந்தத் தேசத்தில் அதிகமாய் இருக்கிறவர்கள்; இவர்கள் பாஷை அரபு—மதம் இஸ்லாம்; மிகவும் இளைத்த சரீரமுள்ள வர்கள், பார்வைக்கு விகாரமானவர்கள், ரொம்பவும் ஏழைகள், அழுக்குத் துணியுடைய வர்கள்; இவர்கள்தாம் இவ்விடத்திய கூலிகள். பெண்கள் விகாரமாய், மலை லம்பாடி சாதியாரைப்போல் நகை அணிந்துகொண்டு, நீண்ட குப்பாயம் போட்டுக்கொண்டிருக் கிறார்கள். இங்கு சில அரபியரும், நம் பக்கத்திய—அதாவது மரைக்காயர்கள், இராவுத்தர் மார்களைப்போல் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் நல்ல உடை உடுத்திக்கொண்டு சுத்தமாகவும், நல்ல தோற்றமாகவும் இருக்கிறார்கள். இவர்கள் முதலாளிகளாகவும், சற்று நாகரிக வாழ்க்கைக்காரராகவும் காணப்படுகிறார்கள்.

ஜிபுட்டி துறைமுகப் பாகம் மாத்திரம் நல்ல உயர்தரக் கட்டடங்களும் நல்ல உயர்தர ஷாப்புக் கடைகளும், பிரஞ்சுக்கார வெள்ளையர்களால் மிகுதியும் குடியிருக்கப்பட்ட மாளிகைகளும் உடையதாகக் காணப்படும். மற்றப்படி ஊருக்கு ஒரு பெண்கூட முகத்தை மூடிக்கொண்டு போனதை நாங்கள் பார்க்கவில்லை. ஆனால், முக்காடு மாத்திரம் போட் டிருக்கிறார்கள். இங்கு பம்பாய், குஜராத்தி வியாபாரிகள் சிலரைப் பார்த்தோம். இங்கு தபால் எழுதிவிட்டு, சில ஞாமான்கள் சாப்பாட்டுக்கு வாங்கினோம். பிறகு 24-ந் தேதி மாலை 5 மணிக்கு ஜிபுட்டிலிருந்து கப்பல் புறப்பட்டு 29-ந் தேதி சூயஸ் துறைமுகத்துக்கு வந்தது. அத் துறைமுகம் மிக்க அழகானதாகவும், ஊர் மிகவும் புதிய முறையில் ஏற்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. ஜிபுட்டியிலிருந்து செங்கடலில் கப்பல் புறப்பட்ட வுடன் தினம் 1-க்கு 3, 4 கப்பல் வீதமும், சூயசுக்குப் பக்கத்தில் வரவர ஒருமணி ஒன்றுக்கு ஒரு கப்பல் வீதமும், கடலில் போவதையும் வருவதையும் பார்த்துக்கொண்டே இருந்தோம். சூயசுக்குப் பக்கத்தில் வந்தவுடனே சிறிது சிறிதாய் குளிர் அதிகப்பட்டு, சூயசில் நடுங்கும் படியான குளிர் ஏற்பட்டது. ஏனெனில், அங்குதான் முதலில் குளிர் கண்டோம். கப்பலில் எங்களுடைய இடம் 4-வது வகுப்பு (மேல்தட்டு) ஆனதால் அங்கு—சென்னையில் கப்பல் ஏறினது முதல் 4, 5 நாள் வெயிலாலும் மழையாலும் மிகவும் கஷ்டப்பட்டதுடன், சாமான்களுடன் அடிக்கடி மூட்டைகள் இறக்கும் போதும் ஏற்றும் போதும் இடம் மாற வேண்டியதாயும் இருந்தது.

புதுச்சேரித் துறைமுகத்தில் எனக்குச் சிறிது காய்ச்சலும், மயக்கமும், தலைவலியும் அதிகத் தொந்தரவு செய்ததுடன், வெயிலிலே இருக்கவேண்டி இருந்ததாலும் சற்று மன வருத்தமும் உடல்நிலையைப் பற்றிக் கவலையும் ஏற்பட்டதால் 4-வது வகுப்பி ருந்து 3-வது வகுப்புக்கு மாற்றலாம் என்று தீர்மானித்து, புதுச்சேரியிலிருந் எங்களைக் காண வந்திருந்த திரு. பாரதிதாசன், திரு. நோயேல், திரு. செல்வம் அவர்களுடைய காரியதரிசி





ஆகியவர்கள் மூலமாய்க் கப்பல் கமிஷனரிடம் சென்று மாற்றும்படிக் கேட்டதில், அவர் சென்னையில் 3-வது வகுப்புக்காகச் சொல்லப்பட்ட சார்ஜைவிட 2 பவுன் அதிகமாகக் கூட்டி 1 டிக்கெட்டுக்கு ரூ. 120 வீதம் அதிகம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார். அதற்கும் சம்மதித்ததில் இங்கிலீஷ் பவுன்நோட்டு எடுக்கமாட்டேன் என்று சொல்லி, இந்திய நாணய நோட்டே வேண்டுமென்று கேட்டார். எங்களிடம் இருந்த தொகைகள் எல்லாம் இங்கிலீஷ் நாணய நோட்டாகவே மாற்றப்பட்டு இருந்ததால் புதுச்சேரி டவுனுக்கு இங்கிலீஷ் பவுன் நோட்டை அனுப்பி, இந்திய நாணயமாக மாற்றிக் கொண்டுவந்து கொடுப்பதாகச் சொல்லி, நாணயம் மாற்ற திரு. பாரதிதாசன் அவர்களை புதுச்சேரி ஊருக்குள் அனுப்பினோம். அவர் இந்தியநாணயத்தையும் சில தின்பண்டங்களையும் ஒரு டாக்டர்வசம் அனுப்பிக் கொடுத்தார். அதற்குள் எனக்குச் சற்று குணமாயிருந்ததாலும், டாக்டர் பரீட்சை பார்த்து சில பக்குவம் சொன்னதாலும் 3-வது வகுப்புக்கு மாறாமல் 4-வது வகுப்பிலேயே இருந்து கொண்டோம். பிறகும் 2, 3 நாள் கஷ்டப்பட்டோம். கப்பலில் நாங்கள் மூட்டைகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்டோமானாலும் 4-ம் நாள் ஒரு கீழ்த்தட்டில் சாமான்களை வைத்துக் கொள்ள கப்பல் கமிஷனர் அனுமதிகொடுத்தார். அந்தக் கீழ்த் தட்டானது மூட்டைகள் போடவும் ஒரு பக்கம் பிரஞ்சு சோல்ஜர்கள் இருக்கவும் ஏற்பட்டது. அதில் 50 சோல்ஜர்கள் இருக்க இடமுண்டு. 50 சோல்ஜர்கள் ஏற்கனவே இருந்தார்கள். நாங்கள் மூட்டை களின்மேல் இருந்தோம். இரண்டொரு நாள் சோல்ஜர்கள் எங்களுடன் பழகிவிட்டதாலும், 3 தமிழ் பிரஞ்சு இந்திய சோல்ஜர்கள் மிக்க பழக்கமாகிவிட்டதாலும் பிரயாணம் சிறிதுகூட கஷ்டமாகத் தோன்றவில்லை. ஆகாரம் இந்த சோல்ஜர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆகாரமேதான் எங்களுக்கும் கொடுக்கப்பட்டது. அதாவது, தினம் 2 வேளை வேகவைத்த உருளைக்கிழங்கும் கொள்ளு அல்லது அவரை, கடலை முதலிய ஏதாவதொரு தானியமும் வேகவைத்துக் கொடுப்பதுடன், உருண்டை ரொட்டி 3-ம், இதுகளும் மாட்டு மாமிசத் துண்டும் சாராயமும் கொடுக்கப்படுவது பழக்கம். காலையில் பால் இல்லாத காப்பியும் ரொட்டியும் உண்டு. இவற்றுள் சாராயம், மாட்டு மாமிசம் ஆகியவைகளை நாங்கள் உபயோகிக்கவில்லை. மற்றதுகளுடனும் கொழும்பிலும், சென்னையிலும், புதுச்சேரியிலும் வாங்கின பிஸ்கட், ஆரஞ்சுப் பழம் ஆகியவைகளுடனும் காப்பி, டீயுடனும் சரிப்படுத்திக் கொண்டோம்.

சூயசிலிருந்து 29-ந் தேதி பகல் 2 மணிக்குக் கப்பல் சூயஸ்கால்வாய் வழியாக போர்ட் சைட்டுக்குப் புறப்பட்டது. இந்தக் கால்வாயானது செங்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்குமாக சுமார் 100 மைல் நீளம் மணல்தரையில் வெட்டப்பட்ட கால்வாயாகும். இதன் அகலமெல்லாம் சுமார் 150 அடிதானிருக்கும். நமது வாய்க்கால் போலவே இரு பக்கம் கரையில் நடக்கும் ஜனங்களுடன் பேசிக்கொண்டே கப்பலில் போகலாம். ஆனால், 40 ஆயிரம், 50 ஆயிரம் டன் கனமுள்ள கப்பல்கள் எல்லாம் தாராளமாய்ப் போகத்தகுந்த ஆழம் வெட்டப்பட்டிருக்கின்றது. கால்வாய் வேலைகள் இன்னமும் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. எதிரில் கப்பல் வந்தால் ஒதுங்கி நிற்க ஆங்காங்கு வசதி இருக்கின்றது. கால்வாய்க்கு நெடுக வாட்சுமேன்களும், காவல்களும், பந்தோபஸ்துகளும் உண்டு. இந்தக் கால்வாய் 'சூயஸ் கால்வாய் கம்பெனியார்' என்கின்ற ஒரு கம்பெனி யாரால் முதல்போட்டு வெட்டப்பட்டு, ஒவ்வொரு கப்பலுக்கும் சுங்கம் வாங்குவதன் மூலம் பங்குக்காரர்களுக்கு இலாபம் கிடைத்து வருகின்றது. ஒரு கப்பலுக்கு சுமார் 10000 (பத்தாயிரம்), 15000 ரூபாய் போல் சுங்கம் வசூலிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டோம். சூயசி லிருந்து போர்ட் சைட்டுக்குப் போவதற்குள் குளிர் அதிகப்பட்டுக் கொண்டே வந்துவிட்டது.

29-ந்தேதி இரவு 10 மணிக்கு கப்பல் போர்ட்சைட்டுக்கு வந்தது. இரவு 11 மணிக்கே பிரயாணிகளைக் கப்பலை விட்டு இறக்கிவிட்டார்கள். துறைமுகம் சென்னையைப் போலவே கப்பலிலிருந்து தரையில் கால் வைக்கலாம். ஸ்தல யாத்திரைகளில் எப்படிப் பண்டாரங்களும், அர்ச்சகர்களும், யாத்திரை வழிகாட்டிகளும் இரயிலிலேயே வந்து

படிப்பகம்

www.padippakam.com



தொந்தரவு செய்வார்களோ அதுபோல், Guide என்று சொல்லப்படும் வழிகாட்டிகள் கப்பலுக்குள்ளாகவே வந்து சூழ்ந்து கொண்டு இம்சைப்படுத்திவிட்டார்கள். பிறகு ஒருவன் எங்களுடன் விடாப்பிடியாய்த் தொடர்ந்து வந்து எங்கள் சாமான்களைக் கப்பலிலிருந்து 'போட்'டில் ஏற்றிக்கொண்டு எங்களை கஸ்டம் ஆபீஸ், டாக்டர் சோதனை, சாமான் சோதனை முதலியவைகளை நடத்திக்கொடுத்து 'அக்ராப்போல்' என்கின்ற ஒரு ஒட்டலில் கூட்டிக்கொண்டுவந்து இரவு 12 மணிக்கு விட்டான். இங்கு ஒட்டல் என்பது தங்குமிடம் மட்டுந்தான். அதாவது, ஓர் அறையில் சாமான் வைத்துப்படுத்துக்கொள்ளலாம். கட்டில், நாற்காலி, மேசை உண்டு. சாப்பாட்டுக்கு வேறு ஏற்பாடுதான் செய்துகொள்ளவேண்டும். இந்த ஒட்டலில் நாள் ஒன்றுக்கு 3 பேருக்கு தங்குவதற்கு தினம் 3 ரூ. வீதம் பேசி ஒரு வாரம் இருந்தோம். சாப்பாடு சொந்தத்தில் செய்து கொண்டோம். வழிகாட்டி 7 ரூ. வாங்கிவிட்டான். வழிகாட்டிகளின் கஷ்டத்தைத் தவிர வேறு கஷ்டமில்லை. பாஷை தெரியாதவர்கள் இந்தக் கஷ்டம் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

போர்ட் சைட் ஊரானது சூயசைப்போலவே புதிதாக உண்டாக்கப்பட்ட சிறிய பட்டணம்; மூன்று புறமும் தண்ணீர் சூழ்ந்தது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் எகிப்தியர்கள். அனேகமாக 100-க்கு 90 இஸ்லாம் மதக்காரர்கள். மற்ற பல தேசத்தாரும் இங்கு இருக்கிறார்கள். துறைமுகம் என்பதைத் தவிர இதற்கு வேறுபெருமை கிடையாதானாலும் பெரியபெரிய ஷாப்புகளும் அலங்கார சாமான் கடைகளும் தாராளமாய் உண்டு. சரி பகுதி காப்பிக் கடைகள் இருக்கும். சாமான்கள் நிலவரம் எல்லாம் நமது ஊர்களில் உள்ளது போலவேயொழிய அதிகமில்லை. ஆனால், கடைகளில் சாப்பிட்டால் செலவு அதிகம். ஜனங்கள் பார்வைக்கு வெள்ளைக்காரர்களைப்போலவே இருக்கிறார்கள். எகிப்திய இஸ்லாம் பெண்களுக்கும் அய்ரோப்பியப் பெண்களுக்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது கடினம். கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்குங்கூட அடையாள வித்தியாசம் கிடையாது. 3-ல் 2 பாகம் பெண்கள் அய்ரோப்பிய உடையுடனும் தொப்பியுடனுமே திரிகிறார்கள். ஆண்கள் எல்லாம் அய்ரோப்பிய உடைதான். சில ஏழைக் குடும்பப் பெண்களும் சில கிராமக் குடும்பப் பெண்களும் மாத்திரம் உள்ளே அய்ரோப்பிய உடை அணிந்து, மேலே கருப்புத் துணியினால் போர்த்துக் கொண்டு, வாய் மாத்திரம் மறையும்படி ஒருவித வலைத் துணி கட்டிக்கொள்ளுகிறார்கள். (நெற்றி, கண், மூக்கு எல்லாம் தெரியும்). ஆண்கள் அய்ரோப்பிய உடையுடன் சிலர் அய்ரோப்பியத் தொப்பியும் துருக்கித் தொப்பியும் அணிகிறார்கள். தாடி என்பது கிடையவே கிடையாது. கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் இங்கு அடையாளம் கண்டுபிடிக்கவே முடியாது. இந்த ஊர் ஜனங்கள் எல்லோருக்கும் இந்தத் துறைமுகத்திற்கு வந்துபோகும் பிரயாணக்காரர்களால்தான் வியாபாரமும் பிழைப்பும் நடக்கவேண்டியதே தவிர வேறில்லை. எகிப்திய இஸ்லாம் பெண்களின் டான்சு தினமும் நடக்கும். பலர் உடம்பெல்லாம் பலவித பச்சை குத்திக் கொள்ளுகிறார்கள்.

போர்ட்சைட்டில் ஒருவாரம் இருந்துவிட்டு ஜனவரி மாதம் 5-ந் தேதி காலை 8 மணிக்கு கெய்ரோவுக்குப் புறப்பட்டு இரயிலேறி 5-ந்தேதி பகல் 1 மணிக்கு கெய்ரோவுக்கு வந்தோம். 150 மைல் தூரம் 3-வது வகுப்புக்கு மைலுக்கு அரையணா இரயில் சார்ஜ் விகிதம். இரயில் வண்டிகள் எல்லாம்—S.I.R சின்ன வண்டிகளில் இரண்டு இரண்டு பேருக்குப் பெஞ்சுகள் இருப்பதுபோலவே, எல்லா வண்டிகளிலும் இருக்கின்றது; வண்டிகள் எல்லாம் பெரிய வண்டிகள்.

முதல் வண்டியிலிருந்து கடைசி வண்டிவரை வண்டி நடுவில் நடந்து போகலாம். கெய்ரோ பட்டணமானது ஆப்பிரிக்கா தேசத்திலேயே பெரிய பட்டணமாகும், இதில் 10 இலட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இது ஈஜிப்ட் தேசத்தின் தலைநகரமாகும். எகிப்திய தேசம் என்பது உலகத்தில் உள்ள பழமையான தேசங்களில் எல்லாம் மிகப் பழமையானது.



நாகரிகங்களிலும் எகிப்திய நாகரிகமே மிகப் பழமையானது. இது உலகுக்கு மத்திய தேசமுமாகும். இவ்விடத்திய சீதோஷ்ணநிலை குளிர்காலத்தில் பெங்களூரைப் போலவும், வெயில் காலத்தில் நமது ஊர்களைப்போலவும் இருக்கும். இங்குள்ள மலைகள் அனேகமாய் மணல் மலைகளேயாகும். நிலங்கள் பெரும்பாகம் வெறும் மணல் பூமிகளாகவே இருக்கும்.

கெய்ரோவில் ஒரு பெரிய நதி ஓடுகின்றது. அதற்குப் பெயர் நைல் (Nile) நதி என்பது. இது உலகத்திலேயே பெரிய நதியாகும். இதன் நீளம் 3500 மைல். இதில் கப்பல்கள் தாராளமாகப் போகின்றன. இதற்குப் பல வாய்க்கால்களும், தாராளமாகப் பாசனங்களும் உண்டு. இங்கு மழை என்பதே கிடையாது. ஒட்டகம், குதிரை, கோவேறு கழுதை, கழுதை ஆகியவைகளால்தாம் எல்லாவேலையும் செய்யப்படுகின்றது. பசுமாடு பால்கறக்கவும், காளைமாடுகள் சாப்பிடவும்தான் பயன்படுகின்றன. உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், முதலிய குளிர் தேசக் காய்கறிகளேதான் அதிகம். எல்லோரும் கோதுமை ரொட்டியும், சப்பாத்தியும் தான் அதிகம் சாப்பிடுகிறார்கள். உடை விஷயங்கள் நம்மூர் உடைகளைவிட அதிகம் தேவை இருக்கிறதுடன் அதிகமாகவே உபயோகிக்கிறார்கள். அவற்றின் விலைகள் எல்லாம் நமது பக்கத்தைவிட நயமாகவே இருக்கின்றன.

பொதுவாகக் கிராமங்கள் எல்லாம் மண்சுவர் வீடுகளாகவும், மேற்கூரைகள் எல்லாம் மரம்போட்டு, பலகை போட்டு, மண் பரப்பியதாகவுமே இருக்கின்றன. மழை இல்லாததால் கூரையைப்பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. பட்டணங்களில் வீடுகள் 3, 4, 5, 6, 7 மாடி வரையில் இருக்கின்றன; 3, 4 மாடிகளே அதிகம். பொதுவாக, பம்பாய் கட்டடங்கள் போலவே காணப்படும்.

நிற்க, நான் இதுவரை உடைகளை மாற்றிக் கொள்ளவில்லை. தலைக்கு மாத்திரம் ஒரு கம்பளி குளிர் (மங்கி கேப்) குல்லாய் போட்டுக்கொண்டேன். ஆகாரம் ரொட்டி, முட்டை, காப்பி இவைகள்தாம் முக்கியமாய் உபயோகிக்கிறேன். முட்டை இவ்விடம் மிக மலிவு. 2 அணாவுக்கு 5 முட்டை கிடைக்கின்றது. இந்தப் பக்கத்துக்காரர்களுக்கு நான் ஒருவனே தாடி வைத்தவனாகவும், ஒரு புதுமாதிரி மனிதனாயும் காணப்படுவதால் யாரும் குறிப்பாய்ப் பார்ப்பதும், மற்றும் மரியாதை செய்வதுமாய் இருக்கிறார்கள். கூடுமானவரையில் ஜனங்கள் நமது ஜனங்களைவிட நல்ல குணமுள்ளவர்களாகவும் விவேகிகளாகவும் இருக்கிறார்கள்; 'இந்தியன்' என்றால் மிகப் பிரியமாய்ப் பேசுகிறார்கள்; அய்ரோப்பியரிடம் வெறுப்பாய் இருக்கிறார்கள். இவ்விடத்திய பெண்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும், சுதந்திர உணர்ச்சியும், தைரியமும், துணிவும் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். குழந்தைகள் சிறுவர்கள் ஆகியவர்களுக்கு நமது பக்கத்திய குழந்தைகளைவிட அதிக புத்தியும் சுதந்திர உணர்ச்சியும் துணிவும் இருக்கின்றன. மற்ற அரசியல், மதவியல் சம்பந்தமான விஷயங்கள் பின்னால் எழுதுகிறேன். இன்னும் இரண்டு மூன்று தினத்தில் 'ஏதன்சு'க்குப் (கிரீஸ் தேசம்) போவோம்.

['குடி அரசு'—கடிதம்—7-2-1932]

## 5. ஈஜிப்ட் கடிதம்

சூயஸ் துறைமுகத்தில் ஒரு பெரிய கப்பலை 29-12-1931 தேதியில் நாங்கள் பார்த்தோம். அதன் பெயர் 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' (Empress of Britain). நேற்றைக்கு முந்திய தினம் கனடியன் பசிபிக் ரெயில்வே கம்பெனியாரால் அக் கப்பலின் மேல் தளத்தில் ஒரு விருந்து கொடுக்கப்பட்டது. அதுசமயம் மேன்மை தங்கிய பிரதம மந்திரியவர்களும், மேன்மை தங்கிய ஹை கமிஷனர் அவர்களும் பிரதம விருந்தினராய் இருந்தனர். மேற்படி கப்பலைப் பற்றிய சில ருசிகரமான விவரங்கள் கீழ்வருமாறு :

உலகத்திலேயே அதிசயமானதும், பெரியதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கே பெருமை தரக்கூடியதுமான கனடியன்—பசிபிக் போக்குவரவுக் கப்பலான 'எம்பரஸ் ஆப்

படிப்பகம்

www.padippakam.com



பிரிட்டன்' என்ற இந்தக் கப்பலைத் தவிர, வேறு ஒன்றையும் கூறமுடியாது. பிரிட்டிஷார் கடல் வியாபாரத்தில் மிகவும் கியாதி வாய்ந்தவர்கள் என்ற பரம்பரைப் புகழை இந்த அதி உன்னதக் கப்பல் ஒருபடி அதிகம் உயர்த்தி இருக்கிறதென்றே சொல்லலாம். இது 800 அடி நீளமும் 100 அடி அகலமும் உள்ளது; மணி 1-க்கு 20 மைல் வேகம் போகக்கூடியது; மொத்தம் 42,500 டன் எடையுள்ளது; பிரகாசமான வெள்ளை வர்ணத்தால் பூசப்பட்டும், மேல்தட்டின் பகுதிகளில் நீலநிறப் பட்டைகள் அழகாகத் தீட்டப்பட்டும், இதனை ஊடுருவிச் செல்லும் மூன்று பெரிய புகை போக்கிகள் பழுப்பு நிறத்தோடும் திகழ்வது கண்ணைக் கவரத்தக்க காட்சியாகும். அதன் அடிப் பாகத்தில் தீட்டப்பெற்றுள்ள பச்சை நிறப் பட்டைகள் அட்லாண்டிக் சமுத்திரத்தின் அலைகளின் நிறத்தைத் தோற்கடிப்பனவாய் இருக்கின்றன. மேல் தளத்திலிருந்து சுமார் 208 அடி உயரத்தில் பறக்கும் கொடிகளும், கப்பல் அசையும்போது காற்றினால் அலைக்கப்பட்ட அக் கொடிகள் அசையும் கம்பீரமும் தூரத்திலிருந்து காண்போருக்கு ஓர் மிகப் பெரிய, உன்னத, நவீன இராஜமாளிகையே தண்ணீரில் மிதப்பதுபோல் தோன்றும். 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' முதல் வகுப்பும் பிரயாணிகள் மூன்றாம் வகுப்பு அறையும் உடையதாயிருக்கிறது. இதை உண்டாக்கும் போதே ஒன்று மட்டும் முக்கியமாய்க் கவனிக்கப்பட்டது. அதாவது, மற்ற எந்தக் கப்பலிலும் இல்லாத மாதிரி ஒவ்வொரு பிரயாணிக்கும் அதிகமான இடவசதி அளிக்கத் தக்கதாய் இருக்க வேண்டுமென்பதே. மற்ற அதிக எடையுள்ள கப்பல்களைக் காட்டிலும் இதில் குறைந்த பிரயாணிகளே இருக்கக் கூடியதாய் இருக்கிறது. சுமார் 1195 பிரயாணிகள் மட்டும் இதிலிருக்கலாம். ஆனால், கப்பல் மாலுமிகள் 714 பேர் இருக்கிறார்கள்.

பிரயாணிகளது உபபோகத்திற்காக ஒன்பது தட்டுகள் விடப்பட்டிருக்கின்றன. சலூன் பிரயாணிகளின் உபயோகத்திற்காக 11 பொது அறைகளும், ஒரு சிசு போஷண சாலையும் யாத்ரீகர்களுக்கு 3 பொது அறையும் ஒரு சிசு போஷண சாலையும், 3-ம் வகுப்புப் பிரயாணிகளுக்கு 2 பொது அறைகளும் ஒரு சிசு போஷண சாலையும் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

'ஏ' தட்டிலும் 'பி' தட்டிலும் பிரயாணிகள் உலாவவும், காற்று வாங்கவும் தகுந்த திறந்தவெளிகள் இருக்கின்றன. மற்றும் 'ஏ' தட்டில் ஒரு பாகம் நடனத்திற்காக ஒதுக்கி விடப்பட்டிருக்கிறது. 'பி' தட்டு மிகவும் அலங்காரமாகவும், முதல் வகுப்புப் பிரயாணிகள் சவுகரியமாய் இளைப்பாறத் தக்கதாயும் இருக்கிறது. சலூன் பிரயாணிகளின் சவுகரியத்தை முன்னிட்டு டென்னிஸ் முதலிய விளையாடுமிடங்கள் கொண்ட படகுதட்டு ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கிறது. 'டி' தட்டில் இரண்டு பெரிய சாப்பிடும் அறைகளும், அதிலிருந்து ஏணி வழியாக மேலே 'எப்' தட்டுக்குச் சென்றால் அங்கு நீந்தும் குளமும், சிற்றுண்டிச் சாலையும் தேகாப்பியாச இடங்களும், மனோரம்மியமான காட்சியளிப்பனவாய் இருக்கின்றன.

ஜனங்கள் சவுகரியமாய் உட்கார்ந்து பார்க்கத் தக்க காலரிகள் நிறைந்த டென்னிஸ் பந்து விளையாடுமிடமும், அதன் சமீபத்திலேயே சிற்றுண்டிச் சாலையும் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன. 'எம்பரஸ் ஆப் பிரிட்டனின்' இன்னொரு முக்கிய காட்சி என்னவெனில், ஒவ்வொரு தட்டிலுள்ளவர்களும் நீந்துவதற்குக் கொண்டுள்ள ஆர்வமே. தண்ணீர் மட்டத்தில் அவர்கள் எல்லோரும் நீந்துவது கண்டுகளிக்கவேண்டிய ஆச்சரியக் காட்சியே யாகும். கை, கால் முதலிய அங்கங்களைப் பரீட்சை செய்து, வேண்டிய சிகிச்சை செய்ய ஏற்பட்ட தனி அறைகள் 'பி' தட்டின் மத்தியில் இருக்கிறது. 'ஜி' தட்டில் பற்பல புதிய காட்சியளிக்கும் பல அறைகள் சுமார் 30 அடி அகலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்சொன்ன பல நவீனங்களோடு 'எப்' தட்டில் டர்கிஷ் பாத் (Turkish Bath) என்று சொல்லப்படும் ஒருவித ஸ்நானத்திற்குரிய சாதனங்களெல்லாம் அமைக்கப்பெற்றிருக்கின்றன.



இத்தகைய பெரிய கப்பலின் அலங்காரம் மிகவும் நூதனமானவை. ஒவ்வொரு இடத்திலும் அலங்காரங்கள் ஒழுங்காயும், நவீனமாயும், மேனாட்டுப் புராதன சித்திர வேலைப்பாட்டுடன் நவீன கொள்கைகளைப் புகுத்தி எங்கும் வளைவுகளாகவும், கோணங்களாகவும், சரி கோடுகளாகவும் உள்ள அலங்காரம் பார்க்கப் பார்க்கப் பரவசமாக இருக்கிறது.

பல கற்றுத்தேர்ந்த நிபுணர்களின் மேற்பார்வையில் எவ்விதக் குறைபாடுமில்லாது செவ்வனே அலங்கரிக்கப்பட்ட தோற்றம் போற்றக் கூடியதே.

முதல் முதல் நமது கண்களைக் கவர்வது 'எம்பரஸ் அறை' என்ற நடன அறையே யாகும். இதை மிகவும் பிரக்யாதி பெற்ற எம்பயர் நடனசாலைக்கு அடுத்தபடியாகச் சொல்லலாம். இருண்ட நீலநிற மேற்கூரையும் அதன் வழியாக மின்சார சாதனத்தால் தோன்றி மறையும் நட்சத்திரங்களின் ஒளியும், அவற்றைச் சுற்றிய வெண்ணிறமான சுவாகச் சதுரத் தூண்களும், மெல்லிய சிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தம்பத்தின் பீடங்களும், சரிகை வேலைப்பாடமைந்த இளஞ் சிவப்பான வெல்வட் பட்டினால் தொங்கவிடப் பட்ட சன்னல் திரைகளும், மற்றொரு மூலையில் மேடையின் பின்புறம் சன்னல் திரைகளையும் தோற்கடிக்கக்கூடிய சிங்காரத்தோடு தொங்கவிடப்பட்ட திரையின் பிரகாசமும் ஒருங்கே சேர்ந்து மனோரம்மியமான காட்சியளிப்பதோடு இதோர் வாத்தியக்காரர் மேடையோ, அன்றிப் பேசும் படக்காட்சி சாலையோவென்ற அய்யத்தை உண்டாக்காதிராது.

அடுத்தாற்போல், பசும் சலவைக் கல் தூண்களும், கண்ணாடியில் கூரையும் கொண்டு சிவப்பும் நீலமும் கலந்த வெல்வெட் பட்டுத் திரைகள் தொங்கவிடப்பட்டதுமான இளைப் பாறும் கூடம் காணப்படுகிறது.

விலையுயர்ந்த மரத்தினால், தூண்களே இல்லாது நுண்ணிய வேலைப்பாடுகளமைந்து இரண்டு பாகமாகத் தடுக்கப்பட்ட சாப்பிடும் மண்டபத்தின் சுவரில் காணப்படும் சித்திரங்கள் ஆச்சரியப்படத் தக்கனவாய் இருக்கின்றன. ஒருபுறம் புஷ்பங்கள், பறவைகள் முதலிய சித்திரங்களும் மற்றொரு புறம் வானமும் நட்சத்திரங்களைப் போலும் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. சுமார் 40 அடி அகலமும் தூண்கள் தாங்கிய கண்ணாடிக் கூரையும் பளிங்கு போன்ற தண்ணீரும் கொண்ட நீந்தும் குளமும் மிகவும் அழகானது. அக் கண்ணாடிக் கூரையின் வழியாகச் செயற்கைச் சூரிய ஒளி செலுத்தப்படுகிறது. அதன் ஒரு பாகத்திலிருந்து படிக்கட்டுகளின் வழியாக மேல் தளத்துக்கும், சிற்றுண்டிச்சாலைக்கும், உடைமாற்றிக்கொள்ளும் அறைக்கும் செல்ல வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

'எம்பரஸ் ஆப் பிரிட்டனில்' பிரயாணிகள் இரண்டு கண்டத்திலிருந்தும் ஆகாய வசனியின் உபயோகத்தால் ஆனந்தமடைகிறார்கள். சேமிக்கப்பட்ட ஓரிடத்திலிருந்து சுமார் 10 அல்லது 12 ஒலிபெருக்கும் கருவியின் மூலம், மேல் தட்டுகளுக்கும் முக்கியமான பொது அறைகளுக்கும் நிகழ்ச்சிகள் கேட்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

'எம்பரஸ் ஆப் பிரிட்டனில்' உள்ள பிரயாணிகள் வெளியேவிடும் சுவாசக் காற்று ஒவ்வொரு 7 நிமிஷத்துக்கு ஒரு தரம் சுத்தமாக்கப்பட்டு, புதிய ஆரோக்கியக் காற்று நிரப்பப் படுகிறது. ஓர் நூதன சாதனத்தால் கடற்காற்று ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு, பின்னர் கால நிலைக்குத் தக்கவாறு உஷ்ணமோ அல்லது குளிர்ச்சியோ ஆக்கப்பட்டு, பொது அறைகளிலும், மண்டபத்திலும் பொருத்தியிருக்கும் விசைகளை அழுத்துவதின் மூலம் எல்லா விடங்களிலும் சுத்தக் காற்று நிரப்பப்படுகிறது. மற்றும் தனிப்பட்ட நபர்களின் விருப்பத்திற்கேற்றவாறு இளங் காற்றாகவோ அல்லது பெருங் காற்றாகவோ, தாங்கள் விரும்பிய அறைகளுக்கும் இடத்திற்கும் வரவழைத்துக் கொள்ளலாம்.

'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' எல்லா வகையிலும் இணையற்றதாகும். 42,500 டன் எடையுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் இக் கப்பல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துறைமுகங்களின் மத்தியில் செல்லும் கப்பல்களுக்கெல்லாம் பெரியது; அய்ரோப்பாவுக்கு செயின்ட்



படிப்பகம்

www.padippakam.com



லாரென்ஸ் வழியாகப் பிரயாணம் செய்யும் கப்பல்களிலெல்லாம் பெரியது; உலகப் போக்கு வரவுக் கப்பல்களிலே பெரியது. இலண்டன் துறைமுகத்திலேயே பெரியதெனப் பதிவு செய்யப்பட்டது. மகா யுத்தத்திற்குப் பிறகு இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ இது போன்று கட்டப்படாத இணையிலாதது; செயின்ட் லாரென்ஸ் வழியிலேயே அதிக வேகமானது; இக் கப்பலின் முக்கிய அம்சமாகக் கவனிக்கப்பட்ட கரைக்கும் கப்பலுக்கும் டெலிபோன் சம்பந்தம் இணைக்கப்பட்டது; ராயல் கழகத்தினராலேயே அலங்கரிக்கும் பெருமை வாய்ந்த முதல் கப்பல் இது ஒன்றே. இன்னும் சில்லரை விஷயங்களைப்பற்றி எழுதவேண்டுமானால் விரிந்துகொண்டே போகும். மேற்கூறப்பட்ட காரணங்களால் இக் கப்பலின் தனிச் சிறப்பு தெள்ளென விளங்குகிறது.

['குடிஅரசு'–கடிதம்—24-1-1932]

## 6. அயல்நாட்டு நடப்புக்கள்

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் சிலோன் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைப் பிரதிநிதியொருவருக்குப் பேட்டி கொடுத்துப் பேசியபோது குறிப்பிட்டதாவது :—

'நான் ஓர் நாத்திகனல்ல; தாராள எண்ணமுடையோன். நான் ஒரு தேசியவாதியுமல்ல; தேசாபிமானியுமல்ல; ஆனால் தீவிர ஜீவரக்ஷா எண்ணமுடையவன். எனக்கு சாதி என்பதோ, சாதியென்பதின் பேரால் கற்பிக்கப்படும் உயர்வு தாழ்வுகளோ கிடையாது. அத் தகைய எண்ணத்தையே நான் எதிர்ப்பவன்; ஆதரிப்பவனல்ல. தாங்கள் மேல் சாதியார், உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு, மனிதரது ஜீவாதாரமான உரிமைகளாகிய தெருவில் நடத்தல், கோவிலுக்குள் செல்லல் முதலியவற்றை மறுத்துக்கொண்டு, ஏனையோர்க்கும் சமத்துவம் வேண்டுமென்று செய்கிற முயற்சியைக் கண்டிக்கிறேன்.

காலமெல்லாம் பண்டையப் பழக்க வழக்கங்களும், மூடக்கொள்கைகளும் நிலைத்தே நிற்கவேண்டுமென்றால் ஒரு பறையன் என்று சொல்லப்படுகின்றவனோ, அல்லது சக்கிலி என்று சொல்லப்படுகின்றவனோ மிருகத்தைவிடக் கேவலமாக நடத்தப்பட்டே வர, எப்படி இந்தியா அவன் தாய்நாடுதான் என்று எண்ணமுடியும்? ஒரு பொதுச் சேவைக்கு அவர்களை நம்மோடு ஒத்துழைக்க எதிர்பார்க்க முடியுமா?

கஷ்டப்படுகின்ற தொழிலாளிகள் அரசாங்கத்தை நடத்துகின்றவர்களாயிருக்க வேண்டும். ஜனங்களின் நன்மைக்காக, ஜனங்களாலேயே நடத்தப்படுகின்ற அரசாங்கமாயிருத்தல் வேண்டும்; இந்தியாவைப் பற்றியுள்ள வறுமையை அகற்றக்கூடிய அரசாங்கமாயிருக்கவேண்டும்.

பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், அய்க்கிய தேசம் முதலியனவெல்லாம் குடியரசு நாடுகளாகவே இருக்கின்றன. ஆனால், எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. ரஷ்யா ஒன்றில்மட்டும் வேலையில்லாத் திண்டாட்டமே கிடையாது. ஒரு சில பிச்சைக்காரர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வயது சென்றவர்களும், அங்கவீனர்களுமே. அவர்களை அரசாங்கம் போஷிக்கிறது. உண்மையில் அது ஒரு புதிய உலகம். அதுபோல் முன்னொருபோதும், எந்நாட்டிலும் சீர்திருத்தம் நடந்தேறியதேயில்லை. அந்நாடு தொழிலாளர் மயமாகவே இருக்கிறது. தோட்டி முதல் தொண்டமான் ஈறாக எல்லோரும் அரசாங்கத் தொழிலாளராகவே கருதப்படுகின்றனர். அங்கு எல்லா மனிதரும் சமமாகவே கருதப்படுகின்றனர். மக்களுக்குள் உயர்வு தாழ்வு என்பதே கிடையாது. வியாபாரம், தொழில், வர்த்தகம், கல்வி முதலிய சமூக அபிவிருத்திக்கான தொழில்களெல்லாம் அரசாங்கப் பொறுப்பிலேயே நடைபெற்று வருகின்றன. விவசாயம் அய்க்கிய முறையில் அரசாங்கப் பொறுப்பில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.



அங்கு சமயமென்பது ஒன்றுமே கிடையாது. ஜனசமூக நன்மையே சமயம்; அதுவே சன்மார்க்கம். கிறிஸ்துவக் கோயில்களுண்டு; அதற்கு அரசாங்கத்தார் எவ்விதப் பண உதவியும் செய்வது கிடையாது. அவர்களுக்கு கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ கவலையோ, விசாரமோ கிடையாது.

குற்றம் செய்தவர்களை அரசாங்கம் ஒரு நவீனமுறையில் தண்டிக்கிறது. அவர்களுக்குச் சகல சவுகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டாலும் அவர்கள் சம்பளத்தில் ஒரு பாகம் அபராதத் தொகையாகப் பறிமுதல் செய்யப்படுகிறது. பலமுறை குற்றம் செய்தவர்களைச் சுகாதார நிலையத்திற்கனுப்பி அங்கு அவர்களது மனோநிலை மாறத்தக்க சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

பாடசாலைகள் மூலமாயும், சினிமாக்கள் மூலமாயும், இதுவரை கற்றிராத பாமர மக்களுக்கும் தொழில் முயற்சியை அஸ்திவாரமாகக்கொண்ட கல்வி கற்பிக்கப்படுகிறது. ஒரு மதத்தையும் பின்பற்றாத அரசாங்கம் மத எதிர்ப்பு சங்கத்திற்குப் போதிய உதவியளித்து வருகிறது.

நான் இத் தேசத்தைப் பார்வையிடச் சென்றதின் நோக்கமெல்லாம், அங்குள்ள நிலைமைகளைச் சரிவர அறியவும், அத் தேசத்தைப்பற்றிப் பெருமிதப்படுத்திக் கூறும் கதைகள் உண்மையாவென்று அறியவுமேயாகும். அரசாங்கம்தாம் தேசத்தை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்பதிலேயே தீவிர கவனம் செலுத்துவதால், கடவுளைப் பற்றியோ மதத்தைப்பற்றியோ நினைப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை.

எகிப்து நாட்டில் பர்தா (கோஷா) முறை அனேகமாக அழிந்துவிட்டதென்றே சொல்லலாம்; சில வயோதிகக் கிழவிகள் மட்டும் அதை விடவில்லை. எகிப்தியப் பெண்கள் ஆங்கில மாதரைப் போலவே ஆடை அணிந்து கொள்ளுகிறார்கள். துருக்கி தேசத்தில் அதிதீவிரமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. சமூக முன்னேற்றத்தில் துருக்கி மாதர் அதிகப் பிரயத்தனம் எடுத்து வருகிறார்கள். சமீபத்தில் ஒரு துருக்கி மாது போலீஸ் சூப்பரெண்டெண்டாக நியமனம் பெற்றிருக்கிறார்.

['குடி அரசு' 30-10-1932]

## 7. 'தோழர்' என விளியுங்கள்!

தோழர்களே, எனது மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாணம் ஒருவாறு வெற்றியுடன் முடிந்து, 11-11-1932-ந் தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்திருக்கிறேன். நீண்ட பிரயாணத்தினால் நான் சிறிது களைப்புற்றிருந்தாலும் சமீபத்தில் களைப்பு நீங்கி, இயக்க வேலையை மும்முரமாய்த் தொடங்க உறுதிகொண்டிருக்கிறேன். என்னுடன் கூடவந்த தோழர் இராமநாதன் அவர்கள், என்னை மார்செயில்ஸில் இந்தியாவுக்குக் கப்பலேற்றிவிட்டு ஜினிவாவுக்குச் சென்று இருக்கிறார். அங்கு சில விஷயம் அறிந்து 2 அல்லது 3 மாதத்தில் இந்தியா திரும்புவதாகச் சொல்லிப் போயிருக்கிறார். அதற்குள், கூடிய சீக்கிரம் நமது இயக்கத் தோழர்கள் பலரைக் கூட்டிக் கலந்துபேசி ஒரு வேலைத் திட்டத்துடன் தீவிரப் பிரச்சாரம் நடத்த உத்தேசித்திருக்கிறேன்.

சீக்கிரத்தில் எனது சுற்றுப்பயணத்தின் விருத்தாந்தங்களையும், காட்சிகளையும், அதனால் நான் கொண்ட கருத்துக்களையும், அதை எந்த அளவுக்குப் பின்பற்றவேண்டும் என்பதையும் விளக்கிப் பத்திரிகைகளில் வெளியிடவும் உத்தேசித்து இருக்கிறேன். நான் இங்கு இல்லாதபோது இயக்கத்தைத் தொடர்ந்து முன்னிலும் பல மடங்கு அதிகமாக எழுத்தாலும், உபன்யாசங்களாலும், மாநாடுகள் கூட்டியும் மக்களுக்கு உண்மையுணர்ச்சிகளை ஊட்டித் தீவிரமாய் வேலை செய்துவந்த தோழர்கள் யாவருக்கும் நான் என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



இயக்கத் தோழர்களும், இயக்க அபிமானத் தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக்கொள்ளுவதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக—'தோழர்' என்கின்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா-ா.ஸ்ரீ, திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீஜத் என்பனபோன்ற வார்த்தைகளைச் சேர்த்துப் பேசவோ—எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். 'குடி அரசு'லும் அடுத்த வாரம் முதல் அந்தப் படியே செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

['குடி அரசு'-குறிப்பு—13-11-1932]

## 8. நானும் நண்பர்களும்

தோழர் இராமநாதன் அவர்கள் அய்ரோப்பாவிலேயே தங்கிக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பல பத்திரிகைகள் பலவிதமாக எழுதிப் பொதுஜனங்களுக்குள் ஒருவித தப்பு அபிப்பிராயத்தை உண்டுபண்ண முயற்சிப்பதாகத் தெரியவருகின்றது. அது என்னவெனில் :

1. தோழர் இராமநாதனின் கையில் ஒரு காசுகூடக் கொடுக்காமல், அவரைக் காயலாவுடன் பிரான்ஸ் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டதாக ஒரு கூற்று.

2. தோழர் இராமநாதனை மார்சேய்ல்ஸ் நடுத் தெருவில் கையில் ஒரு காசுகூட இல்லாத நிலையில் விட்டுவிட்டு வந்ததாக மற்றொரு கூற்று.

3. தோழர் இராமநாதனை மார்சேய்ல்ஸ் தெருக்களில் ஒரு காசுகூடக் கொடுக்காமல் விட்டுவிட்டு வந்துவிட்டதாகவும், ஆனால் தன் கையில் தன் தங்கை எவ்வளவோ கஷ்டப் பட்டுச் சேர்த்து வைத்திருந்ததை அனுப்பியிருப்பதாகவும் அது, சிறுதொகை—செலவுக்குப் போதாதது போலவும் குறிப்பிட்டு, இங்கு ஒரு கனவானால் தனக்குக் கடனாக 300 ரூபாய் அனுப்பும்படி கேட்டுக்கொண்டிருப்பதாய் மற்றொரு கூற்றும், இன்னும் பல.

மேற்கண்ட இவைகளையெல்லாம் நிரூபிக்க தோழர் இராமநாதனால் எழுதப்பட்ட கடிதங்கள் என்பதாகச் சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கடிதங்களேயாகும். அவை யாவன :

1. 4-11-1932ஆம் தேதி 'தாருல் இஸ்லாம்' உப தலையங்கம் :

'எமது நண்பர் ஒருவருக்கு திரு. எஸ். இராமநாதன் அவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து, அவர்கள் ஜினிவாவில் (ஸ்விட்ஜர்லாந்து) இருப்பதாகவும், பிரான்சில் அவரை ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு, தோழர் ஈ. வெ. ரா.-வும் ராமுவும் ருஷியா போய்விட்டதாகவும் செய்தி எட்டியது.'

மற்றொன்று ஜினிவாவிலிருந்து,

2. 'நாயக்கரது வருகையைப் பற்றித் தெரிந்திருப்பீர்களென்று நினைக்கிறேன். கையில் ஒரு காசுகூட இல்லாத நிலைமையில் அவர் மார்சேய்ல்ஸ் வீதிகளில் என்னை விட்டுவிட்டு வந்துவிட்டார் ; அது அவருடைய சுபாவம் ; ஆகையால் அதைப்பற்றிக் குறை கூறுவதற்கில்லை. என்னுடைய சகோதரி சேகரித்து அனுப்பக்கூடிய சிறிய தொகையைக் கொண்டு கஷ்டத்துடன் நாட்களைக் கழித்து வருகிறேன். தங்களுக்கு வேறு பலவித செலவிருக்குமென்பது தெரிந்தாலும், தாங்கள் இதுசமயம் ரூ. 300 கடனாகக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளீர்களென்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகையைத் தங்களால் அனுப்ப முடியாதிருந்தால் கூடுமானதையாவது அனுப்ப வேண்டுகிறேன்' என்பதாகும்.

இவற்றைச் சிலர் நம்பியும், சிலர் நம்பாமலும், இதன் உண்மைதான் என்னவாய் இருக்கக்கூடும் என்பதை அறிய ஆசைப்பட்டும் இருப்பதாகத் தெரியவருகிறது.



இதைப்பற்றி இதுசமயம் மிகச் சுருக்கமாகவே விளக்கினால் போதும் என்று கருதுகிறேன். ஏனெனில், தோழர் இராமநாதன் இங்கு பக்கத்தில் ஆஜர் இல்லை என்பது ஒருபுறமிருந்தாலும், மேற்கண்ட கூற்றுக்களைப் பொறுத்தவரையில்தான் பொதுஜனங்களும் உண்மை அறிய ஆசைப்படுவார்கள் ஆனதினாலும், பத்திரிகைகளில் காணப்பட்ட மேற்கண்ட கூற்றுக்கள் அவை தானாகவே ஒன்றுக்கொன்று முரணாய் இருப்பதை வாசகர்கள் கூர்ந்து கவனித்தாலே ஒருவாறு உண்மை உணரலாம் ஆனதினாலும் மற்றும் அதைப் பரப்ப முயற்சிக்கின்றவர்களின் மனப்போக்கைக் கவனித்துப் பார்த்தால் என்ன கருத்துடன் இந்தப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது என்பது தெளிவாகுமானதினாலும் வெகு சுருக்கத்திலேயே இருப்பது நலம் என்று கருதுகிறேன்.

தோழர் இராமநாதன் காயலாவுடன் எந்த ஆஸ்பத்திரியிலும் விட்டுவிட்டு வரப்படவில்லை என்பது, அவர் கடிதங்கள் என்பவைகள் ஒன்றிலிருந்தே வெளிப்படுகின்றது. அவர் கையில் ஒரு காசுகூட இல்லாமல் விட்டுவிட்டு வரப்படவில்லை என்பதும் அவரது கடிதங்கள் என்பவைகளில் மற்றொன்றில் இருந்து விளங்குகின்றது. ஆகவே, பிரசாரத்திற்கு ஆதாரமான இரண்டு கூற்றுக்களும் உண்மை இல்லை என்பதை நான் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆனால் தோழர் இராமநாதனால் எனக்கு எழுதப்பட்ட இரண்டு கடிதங்களை இதில் பிரசுரிக்கிறேன்.

அவ்விரண்டு கடிதங்களையும் பார்த்தால், ஒன்று தோழர் இராமநாதன் இந்தியாவுக்கு வர இஷ்டப்படவில்லை என்பதும், நாம் அழைத்தும் அதை மறுத்திருப்பதும், என்னை மாத்திரம் தனியாய் இந்தியாவுக்குப் போகும்படி வலியுறுத்தி இருப்பதும் விளங்கும். (இதன் காரணம் அவரது குடும்பத்தாருக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் தெரியும்.) மற்றொன்று, நான் இந்தியா வந்து சேர்ந்த பிறகு தோழர் இராமநாதனால் ஜினிவாவில் இருந்து எழுதியிருப்பது விளங்கும்.

அவையாவன :—

I

Madrid
Hospital
17—8—32

நமஸ்காரம்,

எனக்கு உடம்பு கொஞ்சம் சவுக்கியமாய்விட்டபடியால் உடுப்பு தேவையாய் இருக்கிறது. அதற்கு சவுக்காரம் போடாதவைகளை வீட்டுக்காரியிடம் கொடுத்து போடச்சொல்லி காயவைத்து ஒரு செட்பூட்ஸ் Socks உடன் அனுப்பிவைக்க வேண்டுகிறேன். கைப் பையில் Brush, Paste, சவரம் பண்ணிக்கொள்ள கத்தி, பெட்டி, சோப்பும், கடிதம் எழுத காகிதம், கவர், பென்சில், ஸ்டாம்பும் அனுப்பவேண்டுகிறேன். அவ்விடமுள்ள என் புஸ்தகத்தில் Bertrand Russel அனுப்புவது நலம்.

தாங்கள் எனக்காகக் காலம் கடத்தாமல் மேற்கொண்டு போவதே சரி என்று மறுபடியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கு வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுப்பது வழக்கமாகையால் சில்லரை கொஞ்சம் அனுப்பவேண்டுகிறேன்.

இராமநாதன்

குறிப்பு :—இந்த ஆஸ்பத்திரி மாட்ரிட்டுக்கு 6 மைல் தூரத்தில் 'Tetuau Victorias' என்ற இடத்தில் கட்டப்பட்டது. அங்கிருந்து மாட்ரிட்டுக்கு எழுதப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



II

S. RAMANATHAN,
C/o Thomas Cook
Geneva, Switzerland
26—10—32

அன்புள்ள அய்யா,

மேற்கண்ட எனது விலாசத்திற்கு, 'குடி அரசு' பத்திரிகை அனுப்பிவர வேண்டுகிறேன். மதத்தைப்பற்றிய புத்தகம் வெளியிட்டிருந்தால் நான்கு பிரதிகள் அனுப்பவும். பர்னிலில் இருந்த ராமு, இந்தியாவுக்குத் திரும்புவதாகச் சொல்லிவிட்டு இங்கிலாந்து போனதாகக் கேள்விப்படுகிறேன். அவ்விடம் திரும்பிவந்த விபரம் எழுத வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்
இராமநாதன்

இந்தக் கடிதம் நான் இந்தியாவுக்கு வந்தது மேல் 13-11-1932 தேதியில் ஈரோடு விலாசத்திற்குக் கிடைத்தது.

இந்தக் கடிதங்கள் தோழர் இராமநாதனின் நிலையையும், என்ன நடந்திருக்கக் கூடும் என்பதையும் தானாகவே சொல்லும்.

தவிர, தோழர் இராமநாதன் கையில் பணமில்லை என்பது உண்மை அல்ல என்பதை அவர் மற்றொரு நண்பருக்கு எழுதியிருப்பதாகச் சொல்லப்படும் கடிதங்கள் ஒன்றின் மூலமாகவே விளங்குமானாலும் அதைப் பற்றியும் சற்று விளக்குவோம்.

அவர் இந்தியாவுக்குத் திரும்புவதில்லை என்கின்ற விஷயத்தைத் தனது சகோதரிக்கு சூசனையாய்க் காட்டி எழுதி, செலவுக்கு அனுப்பும்படி எழுதிய கடிதத்தின்மீது அவ்வம்மையார் வருத்தப்பட்டு அவசியம் திரும்பி வரும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் மற்றும் அவர் கேட்டபடி 300 ரூபாய் அனுப்பியிருந்த தொகையின் செக்கு ஒன்று என்னை அவர் பயணம் அனுப்பும் முதல் நாள் வரையில் மாற்றாமல் வைத்திருந்து அன்றுதான் மாற்றிக்கொண்டார். இதோடு அவர் இந்தியாவுக்கு வருவதில்லை என்று சொன்ன பிறகும் அவர் தனக்குப் பணம் தேவையில்லை என்று சொன்ன பிறகும், அவர் கப்பலை விட்டு இறங்கும்போது நான் கொடுத்த 5 பவுனும் மற்றும் அவரிடம் சில்லரையாய் இருந்த தொகையும் சேர்த்துச் சற்றேறக்குறைய ரூ. 400 (நானூறு) போல் அவர் கைவசம் இருந்தது. அவரது தங்கை அனுப்பிய ரூபாய் சுமார் ஒரு மாதகாலமாய் செக்கு மாற்றாமலும் அதிலிருந்து செலவழிக்கச் செய்யாமலும் இருக்கும்படி வற்புறுத்தியவன் நானேயாகும்.

அன்றியும், அவர் ஜினிவாவுக்குப் போவதாய்ப் பயணம்சொல்லிக் கொண்டு கப்பல் விட்டு இறங்கும்போது, 'எப்பொழுதுதான் இந்தியாவுக்கு வருவதாக உத்தேசம்?' என்று நான் கேட்டதற்கு 'அதைப் பற்றி நான் முடிவு செய்யவில்லை; இரண்டு மூன்று மாதத்தில் திரும்பலாம் என்று யோசித்திருக்கிறேன்' என்று சொன்னார். 'எப்படியாவது இந்தியாவுக்குத் திரும்பி வருவதுதான் கிரமமாகும்' என்றும் சொன்னேன். கப்பல் புறப்பட இருந்ததால் என்னிடம் ரூபாய் பெற்றதும், 'ஆகட்டும்' என்று சொல்லிக் கொண்டு அவசரமாய்க் கப்பலை விட்டு இறங்கினார்.

ஆகவே, கையிலும் பணமிருக்க, நானும் கொடுத்து வந்திருக்க, இந்தியாவுக்கு வருவதானால் இனியும் பணம் அனுப்பச் செய்கிறேன் என்று சொல்லியும் வந்திருக்க, தோழர் இராமநாதனை கையில் ஒரு காசு இல்லாமல் நோயுடன் ஆஸ்பத்திரியில் விட்டு வந்ததும் எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கக்கூடும் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.



நேரில் நடந்த வார்த்தைகள் என்பது எப்படி இருந்தாலும் இதில் பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கடிதங்களிலிருந்தும் பொது ஜனங்கள் கருத வேண்டிய விஷயம் மூன்றேயாகும்.

1. தோழர் இராமநாதன் அவருடைய இந்திய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் என்பவை கற்பனைக் கடிதங்களாக இருக்குமா?

2. அல்லது, என்க்கு எழுதப்பட்ட கடிதங்கள் என்பவை கற்பனையாக இருக்குமா?

3. எல்லாக் கடிதங்களும் தோழர் இராமநாதன் அவர்களால் உண்மையாகவே எழுதப்பட்டிருக்குமானால் அவர் நிலைமைதான் என்னமாய் இருக்கக்கூடும் என்பவைகளேயாகும்.

இது விஷயத்தில் எப்படி வேண்டுமானாலும் கருதிக் கொள்ளவோ முடிவு செய்து கொள்ளவோ வாசகர்களுக்குப் பூரண சுதந்திரமும் போதிய அனுபவமும் உண்டு என்றே கருதி இது சமயம் இத்துடன் முடிக்கின்றேன்.

ஈ. வெ. ரா.

'குடிஅரசு' 27-11-1932

## 9. இங்கிலாந்தில் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

தலைவரவர்களே! தோழர்களே!

இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத் தகுந்த சமூகமாகக் கருதலாம். ஆனால், நாங்கள் பிரிட்டிஷ் தொழிற்கட்சியை மிகமிகப் பரிகசிக்கத் தக்க விஷயமாய்க் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏனெனில், தொழிற்கட்சித் தலைவராகிய தோழர் லான்ஸ்பரி அவர்கள் சிப்பாய்கள் சுடுவதையும், கொல்லுவதையும் தான் சிறிதும் விரும்புவதில்லை என்று பெருமை பேசிக் கொள்ளுகின்றார்கள். ஆனால் எங்கள் கார்வாத் (Gharwath) சேனைகள் நிராயுதபாணிகளான மக்களைச் சுடுவதற்கு மறுத்ததற்காக, தோழர் லான்ஸ்பரியின் தொழிற்கட்சி கவர்மெண்டானது—அந்தச் சிப்பாய்களுக்கு 15 வருஷ கடினகாவல் தண்டனை விதித்திருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகின்றேன்.

2. தொழிலாளர் சங்கமாகிய டிரேட் யூனியனை (Trade Union) ஆதரிப்பதாகவும், அதில் சேர்ந்து உழைப்பதாகவும் பறைசாற்றுகிறீர்கள். ஆனால், எங்கள் ஏழை இந்தியச் சுரங்க வேலைக்காரர்களும், மற்றும் தொழிலாளிகளும் சேர்ந்து ஒரு 'டிரேட் யூனியன்' சங்கம் ஸ்தாபிப்பதற்காக அதன் அதிகாரிகளையும், அதற்கு உதவிசெய்த பிரிட்டிஷ் தோழர்களையும் வெளியில் இருக்கவிடாமல் உங்கள் தொழிற்கட்சி அரசாங்கமானது மீரத்து சிறையில் அடைத்துப் போட்டுவிட்டது.

3. தோழர் லான்ஸ்பரி அவர்கள் இந்தியர்கள் விஷயத்தில் மிக்க அனுதாபம் இருப்பதாகவும், இந்தியர்கள் சுடப்படுவதையும், அடிக்கப்படுவதையும், சிறையில் அடைக்கப்படுவதையும் தாம் விரும்புவதில்லை யென்றும் சொல்லிக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், தோழர் லான்ஸ்பரியுடைய தொழிற்கட்சி அரசாங்க 'கேபினட்'டானது சுமார் 80 ஆயிரம் பேர் வரை இந்திய ஆண் பெண்களை ஜெயிலில் அடைத்திருக்கிறது; ஆயிரக்கணக்கான மக்களைச் சுட்டுத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

ஆப்பிரிக்கன் கிராமங்களின்மீது ஆயிரக்கணக்கான தடவை ஆகாயப் படை மூலம் கொடுமை செய்யப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான பர்மியர்களையும் கிராமத்தாரையும் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

படிப்பகம்

www.padippakam.com



4. இந்தியச் சுரங்கங்களில் பத்துமணி நேர வேலைக்கு எட்டணா கூலிக்கு இந்தியர்களிடம் வேலை வாங்கப்படுகின்றது. சுமார் நாற்பதாயிரம் பெண்கள் தினம் அய்ந்தணா கூலிக்கு பூமிக்குள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடுமையையும் ஆபாசத்தையும் நிறுத்தத் தொழிற்கட்சி அரசாங்கம் என்ன செய்தது?

5. தோழர் லான்ஸ்பரி அவர்கள் இங்கிலாந்தில் தொழிலாளிகளை ஆதரிக்க வேண்டுமென்று பேசுகிறார்; ஆனால், இந்தியா விஷயத்தில் தோழர் காந்தியையும் இர்வின் பிரபுவையும் கொடுமையான வட்டமேஜை மாநாட்டையும் ஆதரிக்கிறார். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்தியாவானது இந்திய அரசர்களும், ஜமீன்தார்களும், முதலாளிமார்களும், அய்ரோப்பிய வியாபாரிகளுமே ஆதிக்கம் வகிக்கும்படியானதும்—தொழிலாளிகளுக்கும், குடித்தனக்காரர்களுக்கும் பாத்தியமும், பொறுப்பும் இல்லாததுமான ஒரு அரசியல் சபை மூலம் இந்திய நிர்வாகம் நடக்கும்படியான காரியத்திற்கு உதவி செய்கிறார். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

6. தோழர் லான்ஸ்பரி அவர்கள் யுத்தத்தையும், யுத்த முஸ்தீபையும் வெறுக்கிறதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புக்களையும், பிரிட்டிஷ் 'வைசிராயை'யும் திருப்பி அழைத்துக் கொள்ள மறுக்கிறார்.

7. கடைசியாக, இந்தத் தொழிற்கட்சி அரசாங்கமானது இரண்டு வருஷகாலத்தில் அனுப்பிய ஆகாய சண்டைக் கப்பல்களையும், வெடிகுண்டுகளையும், மோட்டார் பீரங்கி வண்டிகளையும், கவசம் செய்த மோட்டார் வண்டிகளையும், எந்திரத் துப்பாக்கிகளையும், பிரிட்டிஷ் பட்டாளங்களையும் கணக்குப் பார்த்தால், பால்ட்வின் அரசாங்கமானது தனது அய்ந்து வருஷ ஆட்சியில் அனுப்பப்பட்டதைவிட அதிகமாகவே இருக்கிறது. தோழர்களே! இவற்றிலிருந்து பிரிட்டிஷ் 'தொழிலாளர் பார்ட்டி' என்று சொல்லப்படும் சமதர்ம பார்ட்டியின் யோக்கியதையை அறிந்துகொள்வது என்பது எங்களுக்கு மிகக் கஷ்டமாகவே இருக்கிறது.

ஆதலால்—யார்க்ஷையர் தொழிலாளர்களே! நீங்கள் இந்தப் போலிக் கட்சிகளையும், கொள்கைகளையும் நம்பாமல் மனித சமூக விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் சமத்துவத்துக்கும் உண்மையாகவே போராட உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை எதிர் நோக்கிக்கொண்டிருங்கள்!

இங்கிலாந்தில் மேக்ஸ்பரோ (பான்சிலே) 'லேக் பார்க்'கில், [20-6-1923ல் கூடிய கூட்டத்தில், சொற்பொழிவு—'குடி அரசு' 18-12-1932]

## 10. ரஷ்ய நீதி

ரஷ்ய தேச ஆட்சியின் கொள்கை உலகம் முழுவதிலுமே வெறுக்கப்பட வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு பிரச்சாரம் செய்துவருவதாய்க் காணப்பட்டு வருகின்றது. எது போலவென்றால், சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பெரிதும் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் இருந்ததால்—பார்ப்பனர்களின் செல்வாக்கால் அது ஒரு காலத்தில் எப்படி எல்லா மக்களாலும் வெறுக்கப்படவேண்டுமென்று பிரச்சாரம் செய்வதாய்க் காணப்பட்டதோ அதுபோல்.

ரஷ்ய ஆட்சிக் கொள்கையானது, சுருக்கமாகச் சொல்லப்படவேண்டுமானால்—அது, உலகப் பணக்காரர்களுக்கு விஷம் போன்றதும்—ஏழை மக்களுக்குச் 'சஞ்சீவி' போன்றதுமாகும். இன்றைய உலகம் பணக்காரர்கள் கையில் சிக்குண்டு, பணக்காரர்களுக்கு அடிமைப்பட்டு, பணக்காரர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதால் பணக்காரர்கள்



100-க்கு 10 பேர்களேயாயினும், அவர்களே உலக மக்களாகக் காணப்படுவதும், ஏழை மக்கள் 100-க்கு 90 பேர்களாயினும் அப்படி ஒரு கூட்டம் இருப்பதாக உலகுக்கு ஞாபகத்துக்கே வரமுடியாமலும் இருந்துவருகின்றது.

ஆனால், ரஷ்யாவிலோ அப்படிக்கில்லாமல் பணக்கார ஆதிக்கம் ஒழிந்து, ஏழை மக்கள் பணக்காரர்கள் கையினின்று விடுபட்டுச் சுதந்திரம் பெற்று, ஏழை–பணக்காரன், முதலாளி–தொழிலாளி என்கின்ற வேற்றுமையில்லாமல் எல்லோரும் ஒரே இனம் (அதாவது மனித இனம்) என்கின்ற தலைப்பில் எல்லோரும் ஓர் குடும்ப மக்களாய் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நிலை பணக்காரர்கள், புரோகிதர்கள் ஆதிக்கமுள்ள நாடுகளுக்கு எதிரான நிலையானதினால், பணக்கார உலகம் ரஷ்யாவைத் தூற்றவும், பழிக்கவும், வெறுக்கவும், விஷமப் பிரச்சாரம் செய்யவும் ஆன காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. இந்த நான்கைந்து வருட காலமாக ரஷ்யாவைப் பற்றிப் பலவாறு—அதாவது ரஷ்ய மக்களுக்குப் போதிய ஆகாரமில்லையென்றும், கோடிக்கணக்கான மக்கள் அங்குப் பட்டினியால் வாடி மடிகின்றார்கள் என்றும், கொடுங்கோன்மை முறையால் ஆளப்பட்டு வருகிறதென்றும், அந்நாட்டு ஆட்சியில் நீதியென்பதே கிடையாது என்றும், மற்றும் பலவிதமாக அதைத் தூற்றிப் பழித்து, இழித்துப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வந்தன. அங்குள்ள நன்மைகள் மேன்மைகள் எவையாயினும் அவற்றைப் பரிசுத்தமாய் வடிகட்டினாற்போல் மறைத்தும் வந்தன. அப்படி இருந்தும்—எவ்வளவு விஷமப் பிரச்சாரம் செய்தும், சூரிய வெளிச்சத்தை உள்ளங் கையால் மறைக்க முடியாதது போல, ரஷ்ய நிலைமை இப்போது உலக மக்களுக்கு வெளியாகின்றது. வரவர ரஷ்யச் சேதிகளின் உண்மையை வெளிப்படுத்தும் விஷயத்தில் ஜனங்களுக்குள்ள பயம் நீங்கியும் வருகின்றது. அது மாத்திரமில்லாமல், இந்த 4, 5 மாத காலமாக ரஷ்யச் சேதிகளின் உண்மையை வெளிப்படுத்துவது ஒரு நாகரிகமாயும், ரஷ்யச் சேதிகளைப் பற்றிப் பேசுவது ஒரு சத்காலட்சேபமாகவும் ஏற்பட்டுவிட்டது. இதன் பயனாய், இப்போது ரஷ்யச் சேதிகள் இல்லாத பத்திரிகைகளும், ரஷ்யப் பிரஸ்தாபமில்லாத பிரசங்கங்களும் மிக மிக அருமையாகப் போய்விட்டன என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆகவே, ரஷ்யப் பூச்சாண்டித் திரை நீக்கப்பட்டு, வெட்ட வெளிச்சத்தில் வெள்ளைக் கண்ணாடி மூலம் பார்க்கக்கூடியதாக இருந்துவருகின்றது.

சமீப காலத்தில் ரஷ்யாவைப்பற்றி ஒரு பரபரப்பு இருந்துவந்தது நேயர்களுக்குத் தெரிந்திருக்குமென்றே எண்ணுகின்றோம்.

அதாவது, ரஷ்ய ஆட்சியானது சில பிரிட்டிஷ் பிரஜைகளின்மீது குற்றம் சாட்டிச் சிறைபிடித்து வைத்திருப்பதாயும், அது பழிவாங்கும் எண்ணத்துடன் கற்பனையாய்ச் செய்யப்பட்டிருப்பதாயும், ஆனதினால் ரஷ்யாவுடன் பிரிட்டிஷ் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும், வியாபாரத்துறையில் ரஷ்ய வியாபாரத்தை நிறுத்தி அந்தச் சரக்கு பிரிட்டிஷுக்குள் வராமல் தடுத்துவிட வேண்டுமென்று பல புதிய சட்டங்களைச் செய்தும்—அதன் மூலம் ரஷ்ய வியாபாரத்தைப் பகிஷ்கரிக்கவும் முயற்சித்து வந்தது யாவருமறிவார்கள்.

விஷயம் என்ன வென்றால், ரஷ்யாவில் இயந்திரத் தொழில்முறை விருத்திக்கு அனுகூலமான மின்சாரவிசை நிலையங்கள் கொஞ்ச காலமாக ஒன்றன்பின் ஒன்றாய்ப் பழுது ஆகிக்கொண்டு வந்ததுடன், அதனால் ரஷ்யத் தொழில்முறை கெட்டுப் பெரிய நஷ்டம் ஏற்பட்டும் வந்தது. ரஷ்ய ஆட்சி நிர்வாகிகள் இதைப்பற்றிச் சந்தேகப்பட்டு அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முயன்றதில், சில பிரிட்டிஷ் கம்பெனிக்காரர்களின் நன்மைக்காக, ரஷ்யாவிலுள்ள சில பிரிட்டிஷ் இன்ஜினீயர்கள், சில ரஷ்யர்களுக்கு இலஞ்சம் கொடுத்து அவர்களைக் கைவசப்படுத்தி, அதன்மூலம் அங்குள்ள மின்சார



படிப்பகம்

www.padippakam.com



நிலையங்களுக்குக் கெடுதியை விளைவித்து வந்தார்கள் என்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த பிரிட்டிஷ் இன்ஜினீயர்களையும், அதற்கு உளவாயிருந்த ரஷ்யச் சதிகாரர்களையும் கண்டுபிடித்துச் சிறைசெய்து, அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த விஷயத்தைப் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் அறிந்து, இதனால் தங்களுக்குப் பெரிய உலகப் பழியும் அவமானமும் வந்துவிட்டதே என்று கருதி, இச் செயல்களை மறைக்க ஆசைப்பட்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மூலம் ரஷ்யரை மிரட்டிப் பார்த்ததல்லாமல் ரஷ்யாவின்மீது பழியும் சுமத்தினார்கள்.

ஆனால், ரஷ்யர்கள் இவை எதற்கும் பயப்படாமல் தைரியமாய் அது விஷயத்தில் தாங்கள் செய்யவேண்டிய காரியத்தைச் செய்து, உலகத்தின் முன்பு தங்களுடைய திறனையும், தைரியத்தையும், நியாயம் வழங்கும் முறையையும் காட்டிக்கொண்டார்கள். எப்படி என்றால், இந்தச் சதிக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட 18 குற்றவாளிகளில் 6 பேர்கள் பிரிட்டிஷ்காரர்கள் (இவர்கள் ஆறு பேர்களும் பிரிட்டிஷ் இன்ஜினீயர்களாவார்கள்); மீதி ரஷ்யக் குற்றவாளிகள் 12 பேர்கள். இந்தப் பதினெட்டுப் பெயர்களையும் நீதிமன்றத்தில் நிறுத்தி வெளிப்படையாய் எதிரிகளுக்குத் தகுந்த வக்கீல்களை வைத்து வாதாடச் சந்தர்ப்பம் கொடுத்து, அந்த வக்கீல்களுக்கு யோசனை சொல்லவும் விசாரணையின் யோக்கியதையைக் கவனிக்கவும் தக்கவண்ணம் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் வந்து கோர்ட்டில் ஆஜராகச் சம்மதித்தும் விசாரணை நடத்திவந்தார்கள். இந்த விசாரணையால் பிரிட்டிஷ் இன்ஜினீயர்களான குற்றவாளிகளில் சிலர் தங்கள் குற்றங்களைத் தங்கள் வாய்மூலமாக ஒப்புக்கொள்ளவும் நேர்ந்துவிட்டதுடன், சாட்சிகள்மூலம் குற்றங்கள் தாராளமாய் ருஜுவும் ஆகிவிட்டன.

இதன்மீது ரஷ்ய நீதிபதியானவர், பிரிட்டிஷ் குற்றவாளிகள் 6 பேர்களில் ஒருவருக்கு விடுதலையும், இருவருக்கு முறையே 3 வருஷம், 2 வருஷம் வீதம் தண்டனையும், மூவருக்கு தேசப் பிரஷ்டமும் செய்துவிட்டு—ரஷ்யக் குற்றவாளிகள் பன்னிருவர்களில் ஒருவரை விடுதலை செய்துவிட்டு பாக்கிப் பேர்களை 10 வருஷம், 8 வருஷம், 3 வருஷம், 2 வருஷம் வீதமும்—இதில் ஒரு பெண்ணும் இருந்ததால் அவளுக்கு $1\frac{1}{2}$ வருஷமும்—தண்டனை விதித்தார்கள்; அப்பீலுக்கும் இடம் கொடுத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து ரஷ்ய ஆட்சி நீதி வழங்கும் முறையை ஒருவாறு உணரலாம். இந்தக் குற்றங்களைச் சாதாரணக் குற்றம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. இதன் உள் எண்ணமும், இதனால் ஏற்படக்கூடிய நஷ்டமும் எவ்வளவு கடுமையானது என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட குற்றம் ரஷ்யர்கள் பிரிட்டிஷுக்குள் வந்து செய்திருந்தால் அது எப்படிப் பாவிக்கப்பட்டு எவ்விதத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கும் என்பதை அவரவர்கள் சொந்தமுறையில் யோசித்துப் பார்த்தால் தெரியவரும். இப்படிப் பட்ட இந்தக் கடுமையான சதிக் குற்றத்திற்கு இருவருக்கு 2 வருஷம், 3 வருஷம் தண்டனையும், மற்ற மூவருக்கும் தங்கள் நாட்டைவிட்டு அவர்களது சொந்த நாட்டிற்குப் போய்விடும் படியும் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள் என்றால், இதற்கு மேலான காருண்யமும், அருளும் உள்ள நீதி இந்த உலகத்தில் எங்காவது கிடைக்கமுடியுமா என்பதை யோசித்தால்—ரஷ்ய நீதியின் பெருமை விளங்கும். இந்த நீதி ‘இராம ராஜ்ய’த்திலோ அல்லது சுயாட்சி தேசத்திலோகூட எதிர்பார்க்க முடியுமா என்பதும் யோசிக்கத் தக்கதாகும்.

இது இப்படியிருக்க, இதன் உண்மையையும் யோக்கியதையும் பார்த்தபிறகு ஒரு முடிவுக்கு வரலாம் என்கின்ற யோசனை சிறிதுமின்றி, வேண்டுமென்றே அவசரப்பட்டு ரஷ்யர்கள்மீது உலக மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி தூற்றிப் பழித்து, சில பகிஷ்கார முறைகளைக் கையாடினதும் பிரிட்டிஷாரின் புத்திசாலித் தனத்தையோ, இராஜதந்திர முறையையோ, நல்ல எண்ணத்தையோ காட்டுவதாக இல்லாமல்போனது குறித்தும் யாரும் வருந்தாமல் இருக்கமுடியாது.



எப்படியிருந்தபோதிலும், இந்தத் தடபுடல் விஷமப் பிரச்சாரத்தின் பயனாய் ரஷ்யாவுக்கு நன்மையே ஏற்பட்டது என்றுதான் சொல்லவேண்டும். எப்படியெனில், ரஷ்யாவின் நீதியை உலகம் அறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதேயாகும்.

நிற்க; ரஷ்யாவின்மீது எப்படியாவது ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு சாக்கை வைத்து, (‘நீ இல்லாவிட்டாலும் உன் தந்தையாவது செய்திருப்பான்’ என்கின்ற ஆட்டுக்குட்டி—ஓநாய் கதையைப்போல்) ஒரு குற்றம் சுமத்தி, அதனிடம் வம்புச் சண்டைக்குப் போயாவது ரஷ்யாவில் இன்று நடைபெறும் பொதுவுடைமை ஆட்சியை—ஏழை மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் அனுகூலமான ஆட்சியை ஒழித்து—மற்ற நாடுகளில் நடைபெறுவதுபோன்ற பணக்கார ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்கின்ற எண்ணம் இந்த உலகில் இன்று பிரிட்டிஷாருக்கு மாத்திரமல்லாமல் எல்லாத் தேசத்து ஆட்சியாளர்களிடமும் இருந்துவருகின்றது; அதற்கு ஆங்காங்குள்ள முதலாளிகளாலும், பாதிரி, புரோகிதர்களாலும் தண்ணீர் விடப்பட்டுப் பாதுகாத்தும் வரப்படுகின்றது. ஆனாலும், ஏழை மக்கள்—சரீரத்தால் பாடுபட்டுத் தொழில்செய்து வாழும் மக்கள் கண்விழித்துச் சுயமரியாதை உணர்ச்சி பெற்றுவிட்டதால் முதலாளி ஆட்சியின் எண்ணங்கள் கருகிவாடி வருகின்றன.

அன்றியும், ரஷ்ய ஆட்சி, ‘முதலாளித்துவ ஆட்சிகளின் தயவினாலோ அல்லது கருணையினாலோ நாம் வாழலாம்’ என்கின்ற எண்ணத்தின்மீது ஒரு சிடுக்கை நேரம்கூட இல்லை. ஆனால், அதற்குப் பதிலாக, இந்த உலக முதலாளிகள் மாத்திரமல்லாமல் இன்னும், ‘செவ்வாய் மண்டல’ முதலாளிகளின் எதிர்ப்பையும், அவர்களது சக்தியையும், சூழ்ச்சியையும் நன்றாய் அறிந்து, எந்த நேரமும் எதிர்பார்த்து நின்றுகொண்டு இருக்கின்றது. அது எப்படிப்பட்ட யுத்தத்தையும் வரவேற்று, ஒரு கை பார்த்துவிடத் துணிந்து இருப்பதுடன், உலகம் முழுமைக்கும் தன்னுடைய ஆட்சிக் கொள்கையை உவந்தளித்து உதவிபுரியக் காத்தும் இருக்கின்றது.

ஆனால், ஏழை மக்களுக்கும், கஷ்டப்பட்டுப் பாடுபடும் தொழிலாளி மக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உண்மையான சுயமரியாதை உணர்ச்சி உண்டாக்கவேண்டியதுதான் இப்பொழுது பாக்கியிருக்கின்றது.

[‘குடி அரசு’—தலையங்கம்—23-4-1933]

## 11. மேல்நாடும் கீழ்நாடும்

தலைவரவர்களே! தாய்மார்களே! சகாக்களே!

நான் இந்த ஊருக்கு வந்து எதிர்பாராத விதமாய் இங்கு அய்ந்து, ஆறு நாட்கள் தங்கும்படி நேர்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அகஸ்மாத்தாகச் சந்திக்க நேர்ந்த இந்தக் கலைஞான சங்கக் காரியதரிசி, தோழர் சங்கர் அவர்களும், நண்பர் சர்தார் சோம்நாத் அவர்களும், இந்த ஊரில் நான் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று சொன்னார்கள்.

‘மிகவும் வைதிகத் துறையில் பேர்பெற்ற இந்தப் புண்ணிய சேத்திரம் என்பதில், சன்னியாசிகளாலும், சாதுக்களாலும், வானப்பிரஸ்தாஸ்ரமத்தில் இருப்பவர்களாலும் நிறைந்துள்ள மக்கள் முன்—நான் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசமுடியும்?’ என்று சொன்னேன். அதற்குத் தோழர் சோம்நாத் அவர்கள், ‘இங்குக் கூட்டம் போட்டுப் பேசியதே கிடையாது. ஆதலால், நீங்கள் உங்கள் இஷ்டப்படி எதுபற்றி வேண்டுமானாலும் பேசலாம்!’ என்று சொன்னார்கள். நான், குறிப்பிட்ட எந்த விஷயத்தையும்பற்றிப் பேசாமல், ‘மேல்நாடும் கீழ்நாடும்’ என்பதைப்பற்றிப் பேசுகிறேன் என்று சொன்னேன். அவர் சரியென்று ஒப்புக்கொண்டார். ஆகவே, இன்று அதைப்பற்றி நான் பேசுவதில்

படிப்பகம்

www.padippakam.com



நீங்கள் ஏதோ ஒரு கதை கேட்பதுபோல் கருதவேண்டுமே ஒழிய, நான் எதையும் வலியுறுத்திச் சொல்வதாகக் கருதக்கூடாது. ஏனெனில், மிக வைதிகப் பற்றும், தமிழ்ப்பற்றும் உள்ள உங்களுக்கு, அங்கு நடக்கும் விஷயங்கள் பல, திருப்தியில்லாதவைகளாகத் தோன்றலாம். ஆதலால், நான் அதை வலியுறுத்துவதாகக் கருதாமல்—'அங்கு அப்படி நடக்கிறது, இங்கு இப்படி நடக்கிறது' என்கின்ற அளவில் மாத்திரம் கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் பேசப்போகும், 'மேல்நாடும் கீழ்நாடும்' என்ற தலைப்பின் கருத்து, அய்ரோப்பாவும் இந்தியாவும் என்பதாகும். இரண்டு நாட்டு நடப்புகளையும் எடுத்துச் சொல்லுவதில் இரண்டு நாட்டிலும் இருந்துவரும் மதம், கல்வி, அரசியல், பொருளாதாரம், சமுதாயம், தொழில், வாழ்க்கைத் திட்டம், சுகாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றிச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அய்ரோப்பிய நாடு என்பது சற்றேறக்குறைய இந்தியாவைப்போன்ற விஸ்தீரணமும், ஜனத்தொகையும் கொண்ட நாடாகும். அதோடு மதம், கலை, நாகரிகம், சீதோஷ்ண நிலைமை, நடை, உடை, ஆகாரம் முதலியவைகளில் பேதம் இல்லாமல் இருக்கும் நாடாகும். இப்படியெல்லாம் இருந்தும் இப்போது சுமார் 30 தனித் தேசங்களாகப் பிரிக்கப்பட்டு, தனித்தனிச் சுதந்திர நாடுகளாகவும், ஒன்றுக்கொன்று எவ்வித சம்பந்தமுமில்லாத பூரண சுயேச்சை நாடுகளாகவும் இருந்து வருகின்றன. அப்படிப் பிரிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம்—நான் அறிந்த வரையில் பாஷையைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஒரு பாஷை பேசும் நாட்டுக்கும் மற்றொரு பாஷை பேசும் நாட்டுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. மதம் ஒன்றாக இருந்தாலும், ஒரு நாட்டான் மற்றொரு நாட்டானை 'ஒரு சமுதாயத்தான்' என்று அங்குக் கருதுவதில்லை. அந்த மக்களை உண்மையில் எந்த நாட்டினர் என்றுகூடக் கண்டுபிடிக்க முடியாது. அங்கு எந்த நாட்டிலும் மக்களுக்குள் உயர்வு-தாழ்வு என்பது இல்லவே இல்லை. எந்த நாட்டானும் எந்த நாட்டுப் பெண்ணையும் மணம் செய்துகொள்ளுவான். இப்படி எல்லாம் இருந்தும், அவர்கள் ஒரு நாட்டுக்கு ஒரு நாடு எவ்வித சம்பந்தமுமில்லாமல், பிரவேசிக்க முடியாதபடியும், ஒரு நாட்டுச் சாமான் மற்றொரு நாட்டுக்குள் சுங்கமில்லாமல் வரமுடியாதபடியும், தனித்தனி இராணுவ முஸ்தீபுகளுடனும் இருந்து வருகிறார்கள். அனேகமாக அந்தந்த நாட்டுக்குத் தேவையான வஸ்துக்களை அங்கங்கு உற்பத்தி செய்துகொள்வதையே 'தேசியம்' என்று கருதுகிறார்கள்.

ஒரு மொழிக்காரன் மற்றொரு மொழிக்காரன்மீது ஆதிக்கம் செலுத்துவதையோ, ஒரு நாட்டான் மற்றொரு நாட்டான்மீது ஆதிக்கம் செலுத்துவதையோ அடிமைத்தனம் என்று கருதுகிறான்.

உதாரணமாக, இங்கிலாந்துக்காரன் அயர்லாந்து மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதையும், இங்கிலாந்துச் சாமான் அயர்லாந்தில் இறக்குமதி ஆவதையும் அடிமைத்தனம் என்றும், வியாபாரக் கொள்ளை என்றும் அயர்லாந்துக்காரன் கருதுகிறான். ஜெர்மன் குடியாய் இருந்துகொண்டு ஜெர்மன் மக்களை யூதர்கள் சுரண்டுவதை 'யூதர் கொள்ளை' என்று ஜெர்மானியன் கருதுகிறான். இப்படியே நாட்டுக்கு நாடு—மொழிக்கு மொழி—இனத்துக்கு இனம் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமல் தனித்து நின்று தங்கள் சமுதாயத்தையும், தங்கள் நாட்டையும், தங்கள் பொருளாதாரத்தையும் காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

இந்த விஷயங்களில் இந்தியாவுக்கு ஒரு கொள்கையும் இல்லை. இந்தியாவின் சீதோஷ்ண நிலை வெவ்வேறு; இந்திய மக்கள் பல இனத்தினர்; பல மதத்தினர். அம்மதங்களும் ஒன்றுக்கொன்று மாறானவை. இந்தியாவின் தனிப்பட்ட மொழிகள் பல; நடை, உடை, ஆகாரம் பலவிதம். இந்திய மக்களுக்குள் சாதி வகுப்புக்கள் பல; இந்தியாவில் மனிதனுக்கு மனிதன் உயர்வு-தாழ்வு என்பது சொல்லமுடியாததும் சகிக்கமுடியாததும் ஆகும். ஒரு வகுப்புக்குள் ஒரு வகுப்பு மணம் செய்துகொள்ள முடியாத பேதமும், ஒரு சாதியாரை ஒரு சாதியார் ஆதிக்கம் செலுத்துவதும், ஒரு சாதியை ஒரு சாதி சுரண்டுவதும், ஒரு நாட்டை மற்றொரு நாடு வற்ற அடிப்பதும், சுரண்டுவதும் அளவிட முடியாததாகும். ஒரு நாட்டுக்கு ஒரு நாடு, எதில் ஒற்றுமை என்றும், எந்த விஷயத்தில் பொது இலட்சியம் கொண்டது என்றும், எதில் ஒன்றுபோல் நடக்கிறார்கள் என்றும், எதில் பொது உணர்ச்சி கொண்டவர்கள் என்றும் சொல்லி ஆதாரம் காட்டுவது சுலபத்தில் முடியாது.



இந்தியா சுமார் 500 வருஷங்களுக்குமுன் வரையில்—ஏன் வெள்ளையன் வருகிற வரையில் சில சந்தர்ப்பங்கள் தவிர இனம், மொழி, சீதோஷ்ணநிலை, பூர்விகநாடு முதலியவைகளுக்கு ஏற்றபடி தனித்தனி நாடுகளாக இருந்து வந்த நாடாகும்.

இப்படி எல்லாம் இருக்கக்கூடிய இந்தியநாடு, எவ்வித நன்மைக்கும் பயன்படாத வகையில் ஒரே நாடாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. பிணைக்கப்பட்டிருப்பதும் அல்லாமல்—எவ்வித அவசியமும் இல்லாமல் ஒரு மொழி, ஒரு இனம் ஒரு நாகரிகம்—கலை உள்ள நாட்டைப் பல நாடுகளாகப் பிரித்து வேறுபடுத்தியும் இருக்கிறது. இம் மாதிரிப் பொருத்தமில்லாதவற்றை ஒன்றுபடுத்தி இருப்பதற்கும், பொருத்தமுள்ளதை வேறுபடுத்தி இருப்பதற்கும் சரித்திர சம்பந்தமானதோ, அல்லது அவசிய சம்பந்தமானதோ ஆகிய காரணம், அவ்வப்போது படையெடுத்து வந்து வென்ற அரசர்கள் ஒன்று சேர்ந்ததும் பிரிந்ததும் தவிர வேறு ஒரு காரணமும் தென்படவில்லை.

ஜெர்மனியும் இங்கிலாந்தும் ஒரு மதம், ஓர் இரத்தக் கலப்புள்ள நாடுகள். அவை—ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் ஒன்றின் ஆதிக்கம் ஒன்றின்மேல் இருக்கக்கூடாது என்பதற்காக—அழிந்து போகிறவரையில் போராடிப் பார்ப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு இன்று யுத்தகளத்தில் மடிகின்றன. இதன் பயனாய் மற்றும் பல நாடுகளும் இதே காரணத்துக்காகப் போராட்டத்தில் கலந்து தொல்லைப்படுகின்றன.

நம் நாட்டின் சில ஜில்லாக்களைப் போன்ற விஸ்தீரணம் உள்ள நாடுகள் தம்நாட்டு உணர்ச்சியின் பயனாகவே போராட்டத்தில் கலந்து தொல்லைப்படுகின்றன. அவைகளுக்கு நல்ல ஆட்சியை விட தம் நாட்டு உணர்ச்சியே பிரதானமாய் இருந்து வருகிறது. இதனால் அவைகள் கல்வி, செல்வம், கைத்தொழில், பாதுகாப்பு, தனி நாட்டு நன்மைக்கு ஏற்ற ஆட்சி முதலியவை உலகிலேயே யாருக்கும் இளைத்திருக்காத சமநிலை அடையமுடிகிறது. பழைய கால ஆட்சி முறை எப்படி இருந்தது என்பதைப் பற்றிச் சிந்திக்கக்கூட அவர்கள் நேரம் செலவழிப்பதில்லை. பிற்கால ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதே அவர்கள் சிந்தனையாக இருந்துவருகிறது.

மேல் நாட்டில் மக்கள் மதத்துக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நடை, உடை, ஆகாரம், கல்வி, பாவனை, மணம், சடங்கு முதலிய காரியங்களில் மதத்துக்குப் பெரிதும் இடமில்லை. மதம் சரீரத்துக்கு உள்பக்கமே தவிர, சரீரத்துக்கு வெளியில் ஒன்றும் தெரியாது. வாழ்க்கையில் மதத்தைப் புகுத்தமாட்டார்கள். அய்ரோப்பா பூராவும் ஒரு மதந்தான்; அதற்கு ஒரு 'பைபிள்'தான்; அதற்கும் 'ஒரே சர்த்தர்'தான்; அதைப்பற்றி அவர்களுக்குள் சண்டை இல்லை. அவற்றைக் காப்பாற்ற அவர்கள் தொல்லைப்படுவதுமில்லை.

கீழ்நாட்டில் மதம் அப்படி இல்லை. அது வாழ்க்கையின் ஒவ்வொரு முறையையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. தலை மயிர் முதல் கால் செருப்பு வரை, மதத்துக்குச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நடை, உடை, ஆகாரம், பாவனை, கல்வி, மரணம், வாழ்வு, தொழில், பணம் சேர்த்தல், பணம் செலவழித்தல், தர்மம் எல்லாம் மத ஆதிக்கத்தில்—மதப் பிரவேசத்தில் இருக்கின்றன. இங்கு ஒரு மனிதனைக் கண்டவுடன் இவன் இன்ன

படிப்பகம்

www.padippakam.com



இன்ன மதத்தவன் என்று சொல்லும் வண்ணம்—அவனுக்கு ஒரு தனி வேஷம் வேண்டியிருக்கிறது. சரீரத்துக்குள் இருக்கும் மத உணர்ச்சியைவிட, சரீரத்தின் வெளியில் காட்டப்படும் மத உணர்ச்சியே சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. நம் நாட்டு—அதாவது கீழ்நாட்டு மதத்துக்குப் பெயரிலேயே தர்க்கம்; அந்தப் பெயருக்கும் ஆதாரம் கிடையாது. மத ஆதாரத்துக்கும் தர்க்கம்; அவை எல்லோருக்கும் ஒன்றுபோல் இல்லை. மத கர்த்தர் ஒருவரல்லர்; மதக் குறி ஒன்றல்ல; மதப் பிரார்த்தனை ஒன்றுபோல் இல்லை.

மதக் கடவுள்கள் பல! அவைகளின் சரித்திரங்கள் விபரீதம். அதன் பயனாய் மனித சமூகம் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஒன்றுபடுத்தப்படவில்லை. சடங்குகள் பிரார்த்தனைகள் முதலியவை பொருளாதாரக் கேட்டுக்கும், ஒருவரை ஒருவர் சுரண்டுவதற்கும் ஏற்ற வண்ணமே வழங்கப்பட்டு வருகிறதனால்—ஒரு வகுப்பு உயர்வும் ஒரு வகுப்பு தாழ்வும் ஆகி வருகிறது; மதத்தால் நாடு கெட்டது. மனித சமுதாயம் கீழ் நிலை அடைந்தது என்று சொல்லும்படியான நிலை அதிகரித்து வருகிறது.

மதத்தைக் காப்பாற்றுவதன் பயனாய் மக்கள் ஜீவனை இழக்கும்படியான தொல்லை அனுபவிக்கின்றனர். சுருங்கக் சொன்னால், மதத்தால் வேறுபாடும், குரோதமும் ஏற்பட்டு மனிதாபிமானம் இல்லாமல் நாடு துன்பத்தை அனுபவிக்கிறது.

மேல் நாட்டின் கல்வி பெரிதும் பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும், ஆராய்ச்சியையும் பொறுத்து உள்ளது என்பதோடு, அவைகளுக்கு அனுகூலமான கல்வியே அங்கு நடைபெறுகிறது. அதுவும் அங்கு 100-க்கு 65 முதல் 80 பேர் வரை கல்வி பெற்றிருக்கிறார்கள். அப்படிக் கற்றிருப்பதிலும் மதத்தையோ மத பக்தியையோ கொண்டு வந்து அக் கல்வியில் புகுத்துவதில்லை. அங்கு, படித்தவன் என்று சொல்லப்படுபவன் ஒரு பகுத்தறிவாளியாகவும், உலக ஞானமுள்ளவனாகவும், விஞ்ஞானியாகவும், ஆராய்ச்சிக்காரனாகவும் இருப்பானே ஒழிய—மத பண்டிதனாகவும், மூட நம்பிக்கைக்காரனாகவும், மத ஆராய்ச்சிக்காரனாகவும், குறுகிய புத்தி உள்ளவனாகவும் இருக்கவே மாட்டான். படிப்பின் மூலம் பொது ஞானத்தை விருத்தி செய்து கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்படியான படிப்பே பெரிதும் கொடுக்கப்படும். அங்குள்ள கலாசாலை, சர்வ கலாசாலை என்பவை உலகப் பொது அறிவு, பண்டிதத் தன்மைக்குப் பயன்படுபவைகளாகவே இருக்கும். பாடப் புத்தகங்களில் மூட நம்பிக்கைச் சரித்திரங்களோ, மத பக்திக் கலைகளோ ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கும்படியாய் இருக்கும். எப்படிப்பட்ட கல்வி ஆனாலும் அறிவுக்கும், வாழ்க்கைக்கும் எவ்வளவு பயன்படும் என்பதைப் பொறுத்து இருக்குமே ஒழிய இது ஆத்திகமா, நாத்திகமா; மத உணர்ச்சி இருக்குமா, போகுமா; இது பழைய கால நிலையை அனுசரித்ததா, புதிய முறையைப் புகுத்துவதா-என்கின்ற கவலை கொண்டதாக இருக்காது. பழைய கால நிலையைப் போதிக்கும் கல்வியானது விஷயத்தைத் தெரிந்து கொள்ள மாத்திரம் பயன்படத்தக்கதாக இருக்குமே ஒழிய, பழைய கால நிலைக்கு நம்மைக் கொண்டுபோகும்படியானதாக இருக்காது. கல்வியின் தொகுப்பே பெரிதும் பரிசுத்தமான பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். அங்கு கொடுக்கப்படும் கல்வி புதிய ஆயுதங்களைக் கண்டுபிடிக்கத் தக்கதாய் இருக்கும்; மனித வாழ்க்கையை நாளுக்கு நாள் சவுகரியப்படுத்துவதாகவும், முற்போக்கு, அளிக்கத்தக்கதாகவும், மனிதனுடைய அறிவிலும் முயற்சியிலும் நம்பிக்கை அளிக்கத் தக்கதாகவும் இருக்கும். அதனால் அறிவாளிகளும், முயற்சியாளர்களும் அங்கு அதிகம். அவைகள் அந்நாட்டுக்குப் பல நன்மைகள் உண்டாக்கின. பல அற்புதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாவின் கல்வி, பகுத்தறிவை இலட்சியம் செய்வதில்லை. உலகப் பொது ஆராய்ச்சிக்கு மதிப்பு வைப்பதில்லை. அவைகளுக்கு ஏற்ற கல்வி இங்கு தொகுக்கப்படவே இல்லை; கல்வி கொடுக்கப்பட்டிருப்பதும் பெரும்பான்மை மக்களுக்கு 6, 7 பேர்களுக்குத்



தான். அப்படிப்பட்ட கல்வியின் ஒவ்வொரு துறையிலும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத மதம் தாண்டவமாடும். மதத்துக்காகக் கல்வி என்றும், கல்வியினால் மத பக்தி ஏற்பட வேண்டுமென்றும் கருதப்பட்டு, அவைகளின் தத்துவங்களே கல்வியில் பெரிதும் புகுத்தப்பட்டிருக்கின்றன.

இங்கு மத சம்பந்தமான நிபுணத்துவமும் உணர்ச்சியும் உள்ளவன்தான் படித்தவனாகவும், பண்டிதனாகவும் கருதப்படுகிறான். இந்த நாட்டுப் பண்டிதனுக்கு, உலக சரித்திர ஆராய்ச்சியோ விஞ்ஞான அறிவோ பெறவேண்டும் என்கின்ற கவலை இல்லை. அது இல்லாமலே பண்டிதனாகி விடுகிறான். நல்ல பண்டிதன் என்பவன் பெரிதும் நல்ல மூட நம்பிக்கைக்காரனாகவும், பகுத்தறிவில் இலட்சியமில்லாதவனாகவும், குறுகிய பிடிவாதக்காரனாகவுமே இருக்கிறான்.

படிப்புத் திட்டத்தைத் தொகுப்பவர்களுக்குப் படிப்பின் மூலம் பொது அறிவும் பகுத்தறிவும் ஏற்பட வேண்டும் என்கின்ற கவலை இருப்பதில்லை. தங்களுக்கென்று ஏற்பட்ட பழைய வழக்கம், மதத் தத்துவம் முதலியவைகள்தான் மிகுதியும் கவனிக்கப்பட்டு, அவைகளுக்கு ஏற்றபடி பாடங்கள் தொகுக்கப்படுகின்றன.

சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாடப் புத்தகங்களிலேயே மூட நம்பிக்கை கொண்ட புராணக் கதைகள் புகுத்தப்பட்டு விடுகின்றன.

இங்கு கல்வி கொடுப்பவர்கள், இந்தக் கல்வியானது பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கோ, வாழ்க்கைக்கோ எவ்வளவு பயன்படும் என்பதை முக்கியமாய்க் கவனிப்பதில்லை. எந்தக் கல்வியை எடுத்தாலும் இது ஆத்திகமா, நாத்திகமா? இதனால் மத உணர்ச்சி அதிகம் உண்டாகுமா, குறையுமா? இது நம் பழைய கால நிலை—நாகரிகத்திற்கு ஏற்றதா, அல்லது இது புதிய உலகமாக்கிவிடுமா, என்று பயந்து நடுங்கி ஆத்திகம் மதம், பழைய காலநிலை ஆகியவைகளை முக்கியமாய் நினைத்து, அதற்கேற்ற கல்வியையே மக்களுக்குள் புகுத்தப் பார்ப்பார்கள். இங்கு, கல்வி கற்றவன்—விஞ்ஞானக் கல்விப்பட்டம் பெற்றவன் உடனே பழைய கால நிலைக்குப்போக ஆரம்பிக்கிறான். 'அது சரியா, தப்பா?' என்று ஆராயுங் கல்வி, 'கூடாத கல்வி'யாக மதிக்கப்படுகிறது.

சகலத்திலும் பகுத்தறிவைப் பயன்படுத்தும் துணிவும் சுதந்திரமும் உண்டாக்கும் கல்வியை இங்கு நாத்திகமாகவும், மத விரோதமாகவும், தேசியத்துக்கு விரோதமாகவும் கருதுகின்றனர்.

இந் நாட்டுப் பழங்கால நிலை, பழங்கால மதம், பழங்காலப் பெருமை முதலியவைகளில் நிபுணர்களான எந்தப் பண்டிதர்களிடம் இருந்தும் நாளது வரை ஒருவிதமான புதிய உணர்ச்சியோ, அற்புதங்களோ, முன்னேற்றத்துக்கான சாதனமோ ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. இங்கு கண்டுபிடிக்கப்பட்டவைகள் எல்லாம் முன்னோர்கள் செய்த நூல்கள் என்பவைகளுக்குப் புதிய உரைகளும், புதிய கருத்துக்களும், புதிய தத்துவார்த்தங்களும், புதிய பெருமைகளுமே அல்லாமல்—எவ்விதப் புதிய கருத்துக்கள் கொண்டதாகவோ, புதிய கருத்துக்கள் கண்டுபிடிக்கும் எண்ணத்தைக் கொண்டதாகவோ காணப்படவில்லை.

இந்த நாட்டுக் கல்வியின் பயனாய் வாழ்க்கையின் எந்தத் துறையிலும் பழமையிலிருந்து எவ்வித மாறுதலோ, எவ்வித சவுகரியமோ, சுருக்கமோ ஏற்படவில்லை. ஏதாவது ஏற்பட்டிருந்தால் அது புரட்சியின் பயனாலேயே ஒழிய கல்வியால் என்று சொல்லத் தக்கதாய் இல்லை.

இவ்விடத்திய கல்வி மனிதனுடைய சொந்த அறிவுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. 'முன்னோர்கள் சொன்னதைப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்யக் கூடாது' என்பதே பல விஷயங்களில் கல்வியின் பயனாக இருக்கிறது. இவ்விடத்திய படிப்பின் நிலை, தொட்டதை எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி முயற்சியை அலட்சியப்

படிப்பகம்

www.padippakam.com



படுத்தவும், சோம்பேறியாக உட்காரவுமே பயன்படுகிறது. அதனால் சோம்பேறிகளும், சாதுக்களும், சன்னியாசிகளும் இங்கு அதிகமாகி ஆகிவிடுகிறார்கள். இவர்களால் பொருளாதார வீண் செலவும் முன்னேற்றத் தடையும் அல்லாமல் வேறு காரியம் ஆவதில்லை.

மேல் நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலும் ஏதோ சில கொள்கையின்மீது அரசியல் கட்சிகளும், போராட்டங்களும் நடைபெறுகின்றன. ஏனெனில், அங்கு வேறு வகுப்புகள், மதங்கள், கீழ்–மேல் பிறவி பேதங்கள் முதலியவை இல்லாததால்—வெறும் அரசியல் கொள்கைகளை மாத்திரம் வைத்துக் கட்சிகள் நடத்தவும்; கட்சிகள் பதவிக்கு வந்தாலும் அங்கு அந் நாட்டுக்கு, நன்மையான கொள்கைகளைப் பற்றி மாத்திரம் ஆட்சிநடத்தவும்; வாதம் பிரதிவாதம் உண்டாகவும்; வெளிநாட்டான் சுரண்டலும், வெளிநாட்டான் கைப் பற்றாமலும் இருக்கும்படியான பொருளாதாரம், கைத்தொழில், இராணுவம் முதலியவை களைப்பற்றிச் சிந்திக்கவும்; பொதுமக்களின் பொருளாதாரம் வாழ்க்கைநலம் ஆகியவை களைப் பற்றித் திட்டங்கள் வகுக்கவும், தேடவுமான காரியங்கள் நடைபெறுகின்றன. யாவரும் ஒரே இனம்; யாவர்க்கும் ஒரேமொழி; அவைகளுக்கேற்ற கண்டிப்பான எல்லை ஆகியவை இருப்பதால், பிறவி–வகுப்புஉணர்ச்சி முதலியவைகளுக்கு இடமில்லாமல் ஆட்சி நடந்து, பொருளாதாரமும் வாழ்க்கை நலமும் யாவர்க்கும் ஒன்றுபோலவே பெருகிக் கொண்டேவருகின்றன. இதற்கான கொள்கைகளே கட்சிப் போராட்டத்திற்கு அஸ்திவாரமாய் இருந்துவருகின்றன. ஒவ்வொரு நாட்டாரும் மிக்க சிறு தொகையினராக இருந்தும் மற்ற நாட்டு ஆதிக்கம், மற்ற நாட்டான் தலைமை எதிலும் இல்லாமல் பார்த்துக்கொள்வதும் அரசியல் காரியமாக இருந்துவருகிறது.

இந்நாட்டு அரசியல் கிளர்ச்சி என்பது ஏற்பட்டு 50 வருடகாலமானாலும்—அது, பெரிதும் உத்தியோகம் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடம் வருவதற்காகவே செய்யப்பட்டதாக இருந்து, அதன் பயனாக மத, வகுப்பு, சாதிச் சச்சரவுகள் ஏற்பட்டு, இன்று அரசியல், வகுப்புக்கொள்கையைப் பற்றியதும், பிறவி சாதியைப்பற்றியதும், மதத்தைப்பற்றியதுமாக விளங்கிவருகிறது. அரசியல் கட்சிகளைப்பற்றிப் பேசும்போது, சாதிமத வகுப்புக்களைப் பற்றித்தான் பேசமுடிகிறதே தவிர, கொள்கைகளைப் பற்றிய பேச்சு முக்கியமானதாக இல்லை.

இங்கு காங்கிரஸ் என்று சொல்லப்படுவதை இந்துக்களே பொதுமக்கள் சபை என்று ஒப்புக்கொள்ளாமல், 'இந்து மகா சபை' ஒன்றை இந்துக்கள் பொது அரசியல் சபையாகக் கொண்டாடுகிறார்கள். இந்த இரண்டையும் ஒப்புக்கொள்ளாத பார்ப்பனரல்லாதார் சபை, 'திராவிடர் கழகம்' என்று ஒன்று சென்னை, பம்பாய், மத்தியமாகாணம் ஆகியவைகளில் இருந்து வருகிறது.

இதன் மத்தியில் ஆதித் திராவிடர் என்று தாழ்த்தப்பட்ட தீண்டாத வகுப்பைச் சேர்ந்த பல கோடி மக்களுக்கு, ஒரு தனி அரசியல் சபை இருக்கிறது. வருணாசிரமக் காரர்கள்—அதாவது, பெரிதும் பார்ப்பனர்கள், தங்களுக்கு வேறு ஒரு அரசியல் சபை வைத் திருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் முதலியவர்களுக்குத் தனித்தனியே அரசியல் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவ்வளவும் தவிர்த்து, இவ்வளவுக்கும் மாறுபட்டவராக 9, 10 கோடி முஸ்லிம்களுடைய சபை—ஒரு தனி அரசியல் ஸ்தாபனமாக இருக்கிறது. இவற்றின் கொள்கைகளில் பெரிதும் மற்ற ஸ்தாபனங்களுடன் தங்களுக்கு உள்ள சாதி, மத முரண் பாடுகளைக் காட்டுவதுதான் முக்கியமானவைகளாக இருக்கின்றன. அவற்றுள் மதம், சாதி, வகுப்பு உணர்ச்சிகளே தலைசிறந்து நிற்கும்.

காங்கிரஸ்காரர்கள் தங்கள் ஸ்தாபனத்தைப் பொது அரசியல் ஸ்தாபனம் என்று பாத்தியம் கொண்டாடினாலும், காங்கிரஸ்காரர்கள் வேண்டுவது 'ராம ராஜ்யம்' அல்லது 'இந்து ராஜ்யம்' என்று சொல்லப்படுகிறது. இந்து மகா சபையாரும் அதையே சொல்லு



கிறார்கள். இதன் பயனாகத் திராவிடர்கள் தனித்துக் கொள்ள வேண்டியவர்களாகி விட்டார்கள். முஸ்லிம்களும் அப்படியே தனித்துக்கொள்கிறார்கள். தீண்டப்படாத மக்கள் சங்கத்துக்குப் பணம், படிப்பு, சமுதாய சமத்துவம் இல்லாததால் அது சரியான வகுப்புரிமை அடிப்படையின்மேல் இருந்தாலும்—போதுமான செல்வாக்கு இல்லாமல் இருக்கிறது. இது போலவே கிறிஸ்தவர்களும் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்கள் ஆனதால் தனிச் சங்கம் வைத்திருந்தாலும் சமயம்போல் ஒவ்வொரு சமயம் ஒவ்வொன்றைத் தழுவிப் பயன் அடைவது நல்லது என்று கருதுகிறார்கள். வருணாசிரமக்காரரும், மிகச் சிறு கூட்டக் காரராகக் கருதப்பட்டாலும் இந்து மகாசபை, காங்கிரஸ் இவற்றின் மறைவான ஆதரவால் சமுதாயத் துறையில் தங்களுக்குள்ள உயர்வைக் காப்பாற்றிக் கொள்வதையே அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளனர். இவற்றில் ஒன்றாவது 'பிரிட்டிஷ் கவர்மெண்ட்' இந்த நாட்டை விட்டுப்போய்விட வேண்டுமென்று சொல்ல முன் வருவதில்லை.

ஏனெனில், பிரிட்டிஷ்காரன் இந்தியாவை விட்டுப் போய்விட்டால் உள்நாட்டில் மத, வகுப்புத் தொல்லை ஏற்படாமலும், வேறு ஒரு நாட்டான் இந்தியாவைக் கைப்பற்றாமல் காப்பாற்றிக்கொள்ளவும் முடியுமா என்பதற்கும் எந்தக் கட்சியும் பதில்சொல்ல முடிவதில்லை.

பிரிட்டிஷாரிடமிருந்து சில அதிகாரங்களைத் தங்களுக்கு மாற்ற வேண்டும் என்பதிலுங்கூட, எல்லாக் கட்சிகளும் ஒன்று சேருவதற்கில்லாமல், கொடுக்கும் அதிகாரங்கள் ஒரு வகுப்புக்கு—மதத்திற்குப் போய்விட்டால், மற்ற மத, வகுப்புக்காரர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமே என்கின்ற பயத்தால், அதையும் யாரும் நியாயமாய்க் கேட்பதில்லை. 'தங்கள் தங்கள் வகுப்பு மதங்களுக்குச் சரியானபடி அதிகாரம் வேண்டும்' என்று கேட்கிறார்கள். இதற்கு, சிறுபான்மையாக இருந்து அதிக பாகம் அனுபவிப்பவர்கள் முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

ஆதலால், பாமர மக்களை வசப்படுத்த மாத்திரம் 'பிரிட்டிஷ் கவர்மெண்டை'க் குற்றம் சொல்லிவிட்டு, காரியத்தில் தங்கள் தங்கள் வகுப்பு, மதத்துக்கு ஆதிக்கம்—உத்தியோகம் வரும்படியான நடப்பு முறைகளாலேயும், வேண்டுதல்களாலேயும் ஒருவருக் கொருவர் போராடிக் கொள்ளும் முறைகளையே கொள்கைகளாகக் கொண்டிருக்கின்றனர். இதனாலேயே பெரிதும் இந்தியா எந்தத் துறையிலும் முன்னேற்றமில்லாமலும், பொது இலட்சியம் இல்லாமலும் இருந்துவருகிறது.

இந்தச் சங்கங்களால் பிரிட்டிஷாரிடமிருந்து இதுவரை இந்த 50 வருடமாகப் பெறப் பட்ட இலாபமோ, சுதந்திரமோ—'சில வகுப்புக்காரர்கள் பெருத்த சம்பளமுள்ள பதவிகள் அனுபவிக்கிறதை'த்தவிர வேறு நன்மை கிடைத்திருப்பதாகச் சொல்வதற்கில்லை.

இன்றுள்ள மாகாண நிர்வாக நிலை 1910ஆம் வருஷத்துக்கு முன் எப்படி இருந்ததோ அந்த நிலைக்குப் போய்விட்டது. பொறுப்பும் செல்வாக்கும் உள்ள எந்த ஸ்தாபனமும் இன்று அதை மாற்றும்படி கேட்க முன்வர முடியாமல் இருக்கிறது.

இதன் காரணமெல்லாம், இந்திய அரசியல் கொள்கை என்பது வகுப்பு, மதவாதக் கொள்கைகளே என்பதல்லாமல் வேறொன்றுமின்றி இருப்பதேயாகும்.

மேல் நாட்டின் பொதுமக்கள் சமுதாயநிலையை எடுத்துக்கொண்டால் அங்கு சமுதாயத்தில் பிறவி பேதமே இல்லை; யாவரும் சமமேயாகும். அங்கு பொதுமக்களை மதிப்பதில் பிறவி உயர்வு, தாழ்வு என்கின்ற உணர்ச்சியே கிடையாது. யாவருக்கும் எவ்வித சமுதாய உரிமையும் உண்டு; எவனுக்கும் பிறவி காரணமாக எவ்வித அசவுகரியமோ இழிவோ ஒன்றும் கிடையாது. மனிதனை மனிதன் தீண்டக்கூடாது என்றும் கிட்டே வரக்கூடாது என்றும் கருதுகின்ற—சொல்லுகின்ற கொடுமை அங்கு இல்லை. கோவிலானாலும், உண்டிச் சாலையானாலும் வேறு எந்தப் பொது ஸ்தாபன மானாலும் எல்லோருக்கும் சம உரிமையே தவிர, வித்தியாசம் பாராட்டுவதே கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com



பிறவியின் காரணமாகக் கல்வியோ, அந்தஸ்தோ, புரோகிதம், பூசாரி, மதகுருவோ, ஏற்பட்டு ஒருவரை ஒருவர் சுரண்டும் வழக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. யாரும் எந்தக் கல்வியும், எந்த வேலையும், எந்தப் பதவியும் அடையலாம்.

இந்தக் காரணங்களால் அங்கு ஒரே சமுதாயமாகவும், மக்கள் யாவரும் சம உரிமை உடையவர்களாகவும் இருப்பதால் அந்த நாட்டாருக்கு ஒற்றுமையும் கட்டுப்பாடும் பொது இலட்சியமும் வளர்ச்சிபெற்று, அந் நாடு சமுதாயத்தால் முன்னேற்றமடைந்து பூரண சுயேச்சை சமூகமாக இருக்கிறது.

இந்த நாட்டின் சமுதாயம் பிறவியின் பேரிலேயே வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த நாட்டில் பல வகுப்புகளாக மக்கள் பிரிக்கப்பட்டு விட்டார்கள். யாரை மதிப்பதிலும் அவனுடைய பிறவியைப்பற்றிக் கருதுவதே இங்கு முதல் வேலையாக இருக்கிறது. சமுதாயத்தில் பிறவியைப் பார்த்து அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறவி காரணமாக மனுதனுக்கு அனேக அசவுகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யோக்கியதையில் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பிறவி காரணமாக இழிவுபடுத்தப்படவும் உயர்த்தப்படவும் ஆகிவிடுகிறான்; வேறு எவ்வித காரணமும் இல்லாமலே மனிதன் பிறவியையும் சாதியையும் உத்தேசித்து, தீண்டப்படாதவனாகவும் பார்க்கப்படாதவனாகவும் மதிக்கப்படுகிறான். ஒரு மனிதன் தொடுவதோ சாப்பிடுவதோ பாவமாகக் கருதப்படுகிறது. ஒரு மதத்தைச் சேர்ந்த கோவில், குளம் உண்டிச்சாலை ஆகியவற்றில் அவற்றை ஏற்படுத்தியவனுக்குக்கூட சம உரிமை இல்லை. இந்திய சமூகத்தில், கல்விகூட வகுப்புக்குத் தகுந்தபடி பிரிக்கப்பட்டுவிட்டது. உத்தியோகம்கூட இதை அனுசரித்தே பிரிந்துவிட்டது. ஒரு வகுப்புக்கு மேல் உத்தியோகம்; ஒரு வகுப்புக்குக் கீழ் உத்தியோகம். பொது இலட்சியம் என்பதாக ஒன்று இந்நாட்டில் இல்லவே இல்லை. எதைப் பொது இலட்சணமாகக் கருதினாலும்—அது, ஒரு வகுப்புக்கு நலனையும், மற்ற வகுப்புக்குக் கேட்டையும் கொடுக்கக்கூடியதாகவே வந்து முடிகிறது. ஒரு மனிதனை ஒரு மனிதன் பிறவியின் காரணமாகத் தொடக்கூடாது என்றால், மக்களிடையே அன்பும், ஒற்றுமையும் எப்படி வளரும்? பிறவி வெறுப்பும், பிறவி வேற்றுமையும் ஒவ்வொரு வகுப்புக்குள் தோன்றி, வேறுபாடு வளர்ந்த வண்ணமாக இருக்கிறது. ஒருவன் பிற மதத்தவனை மதிப்பதைவிட தன் மதத்தவனையே இழிவாகவும், கேவலமாகவும், எதிரியாகவும், வஞ்சகமாகவும் மதிக்கிறான்.

ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே—ஒரு சாதி இன்னொரு சாதியைச் சுரண்டும்படியான ஏற்பாடுகள் அனேகம் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் ஒரு சாதி மேன்மையும் செல்வமும் வாழ்வும் அடையவும், மற்ற சாதிகள் கீழ்மையும், தரித்திரமும், கஷ்ட வாழ்வும் அடையவுமான நிலைமை ஏற்பட்டு இருந்துவருகின்றது.

இந்தப் பேதங்களால் ஒற்றுமை இல்லை என்பது மாத்திரமல்லாமல் பொது இலட்சியம் இல்லாமல் இருப்பதோடு—பொது முன்னேற்றம் என்பது வகுப்புத் துவேஷமாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே, இந்நாடு அனேக காலமாகத் தேக்கம் அடைந்திருப்பதோடு, கேடும் அடைந்து வருகிறது. ஆகவே, இந்த நாட்டு முன்னேற்றத் தடைக்கும், விடுதலைத் தடைக்கும் ஜன சமுதாய அமைப்பே முக்கிய காரணம் என்று சொல்லத்தக்க வண்ணம் இந்நாட்டுச் சமுதாயம் இருந்து வருகிறது.

மேல்நாட்டு வாழ்க்கைத் திட்டமானது அனுபவத்தை ஒட்டியும், முன் யோசனைப் படியும், மக்கள் மனத்திருப்திக்கு அனுகூலமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மனிதன் வாழ்க்கையில் தினப்படி சாதாரணமாய் நேரிடும் சம்பவங்களையும் அசவுகரியங்களையும் கவனித்து, அவைகளால் எந்த விதத்திலும் எதிர்பாராத அசவுகரியமோ மனக்கசப்போ தாட்சண்யக் கேடோ யாருக்கும் ஏற்படுவதற்கு இடமில்லாமல், கூடியவரை யோசித்துத் தக்க திட்டங்கள், பழக்க வழக்கத்திலேயே புகுத்தப்பட்டிருக்கின்றன.



எவ்வளவு ஏழைக் குடும்பமானாலும், சாதாரண மனிதக் குடும்பமானாலும், உயர் குடும்பமானாலும் ஒருவர் வீட்டுக்கு முன்னதாகச் சொல்லி அனுப்பாமல் வரமாட்டார்கள்; அசவுகரியமான சமயத்தில் வரமாட்டார்கள்; தாங்கள் போவதால் அந்த இடத்துக்கோ, வீட்டுக்கோ திடீரென்று எவ்வித அசவுகரியமும் ஏற்பட இடம் கொடுக்க மாட்டார்கள்; தாட்சண்யத்துக்காக எவ்வித அசவுகரியமும் ஏற்படச் சம்மதிக்கமாட்டார்கள். தன்னால், பிறருக்கு எவ்வித ஏமாற்றமோ, மனத் தாங்கலோ வரும்படி நடந்துகொள்ள மாட்டார்கள். அதாவது, ஒருவன் ஒரு காரியத்துக்காக ஓர் இடத்திற்குப் போகிறான், அல்லது காத்திருக்கிறான் என்று வைத்துக்கொண்டால், அடுத்தாற்போல் அதுபோல் போகிறவன் முன் சென்றவனுக்குப் பின்னால்தான் நிற்பானே ஒழிய, அந்த இடத்துக்காரனுக்குத் தெரியும்படியாகக்கூட நிற்கமாட்டான். முன்னே போவதோ, அவசரப்படுவதோ அநாகரிகமாகக் கருதப்படும். இரயிலில் டிக்கெட் வாங்கப் போனால் முன்னால் இருப்பவனுக்குப் பின்னால், ஒருவர் முதுகை ஒருவர் பார்த்த வண்ணமாகவே நிற்பார்கள். ஆயிரம் பேரானாலும் அப்படியே ஒருவருக்குப் பின்னால் ஒருவர்தான் நிற்பார்கள். சாமான் வாங்கும் கடையானாலும், 'பாங்கி' ஆனாலும் 'தபாலாபீசு' ஆனாலும், நாடகம், வேடிக்கை பார்க்க 'டிக்கட்' கொடுக்கும் இடமானாலும் அப்படியேதான்—வந்த வரிசைக் கிரமப்படியே நிற்பார்கள்.

'டிராம்' வண்டி, 'பஸ்' முதலியவை வரும் இடத்தில் நிற்பவர்கள் அந்த இடத்தில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள 'நெம்பர் சிட்'டை வந்தவுடன்எடுத்துக் கொண்டு நிற்பார்கள். பஸ், கார் வந்தவுடன் அந்த வரிசை எண்படிதான் வண்டியில் ஏறுவார்கள். ஒருவர் மீது ஒருவர் மோதமாட்டார்கள். ஏதாவது சாமான் வினியோகிக்கும்போதும் 'நோட்டீசு' பட்டுவாடா செய்யும்போதும் இடம்விட்டு இடம் நகரமாட்டார்கள்; கைநீட்டமாட்டார்கள். ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது மத்தியில் யாரும் பேச ஆசைப்பட்டு, பேசுபவர்கள் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்ப முயலமாட்டார்கள். எவ்வளவு அவசரமிருந்தாலும் அந்தச் சம்பாஷணை முடிந்தபின் தாங்கள் பேச ஆரம்பிப்பார்கள். மிக்க அவசரமாய் இருந்தால் தங்களுக்கு முந்திய உரிமைக்காரனைக் கேட்டுக் கொண்டு—அவன் சம்மதம் பெற்று, அவனுக்கு நன்றி செலுத்திவிட்டுத்தான் தாங்கள் முன் போகவோ, பேசவோ ஆரம்பிப்பார்கள்.

எதிர்பாராத விருந்தாளியோ, போதிய அவகாசம் கொடுக்காத விருந்தாளியோ, சிநேகிதனோ, பந்துவோ, தாய், தகப்பன், மகன், சகோதரர்கள் யாருமே எந்த வீட்டுக்குள்ளும் வரமாட்டார்கள். எவ்வளவு கஷ்டம் வந்தாலும், வாக்குத் தவறவோ, சொன்னபடி நடந்து கொள்வதைத் தவறவோ இசையவே மாட்டார்கள். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டதைச் செய்வார்கள்; குறிப்பிட்ட காலத்தில் வந்து விடுவார்கள். வந்த கிரமப்படி அமருவார்கள்.

'இரயில்வே ஸ்டேஷன்' முதலிய பொது இடங்களில் நிற்கும் கூலி ஆள், வண்டி வாகனக்காரர் முதலியவர்கள், பிரயாணிகளை வரிசையாகத்தான் அமர்த்திக்கொள்வார்கள். தன் வரிசை வரும்வரை எவனும் பேசவோ, கூப்பிடவோ, முன்வரவோ மாட்டான். கூலி, வாடகை எல்லாம் முன்னமயே ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட விகிதமாகவே இருக்கும். அதிகம்-குறைவு என்கின்ற பேச்சே இருக்காது. கடைகளிலும் சாமான்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்குமே ஒழிய, வியாபாரம் பேச இடம் வைக்க மாட்டார்கள். சில காரியங்களுக்கும் 'முனிசிபாலிட்டியார்' விலையும் விகிதமும் ஏற்படுத்தி விடுவார்கள். கூலி வண்டி அமர்த்திக் கொண்ட பிறகு தகராறுக்கு இடமிருக்காது. எந்த விஷயத்திலும் தாட்சண்ய சங்கடமோ, தயவுக் குறைவோ ஏற்பட இடம் தரவே மாட்டார்கள். அப்படி இடம் தருவது எல்லாவற்றையும் விட அநாகரிகமாய் மதிக்கப்படும். பெண்கள், வயதான கிழவன்மார்கள், சிறுபாலர்கள் ஆகியவர்கள் விஷயத்திலும் யாவரும் சலுகை காட்டி முன் இடம் கொடுத்துச் சவுகரியம் செய்வார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பெண்களிடத்தில், மனைவியானாலும், வேலைக்காரியானாலும் நயமாய் நடந்து கொள்வதைக் கொள்கையாய் அனுசரிப்பார்கள். ஒருவர்க்கொருவர் மரியாதையாய்ப் பேசுவார்கள்; ஒருவர்க்கொருவர் உதவி செய்ய ஆசைப்படுவார்கள்.

ஒரு மனிதன் தனியாய் ஏங்கி நிற்பதைத் தெருவில் போகிற ஒருவன் பார்த்து விட்டால், 'என்ன? உமக்கு ஏதாவது உதவி செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா?' என்று கேட்காமல் போகமாட்டான். எவ்வளவு அவசரமாய்த் தெருவில் போகிற ஆணாக இருந்தாலும்—பெண்ணாக இருந்தாலும், ஓர் அன்னியன் ஏதாவது விஷயம் கேட்டால் நின்று, பொறுமையாய் இருந்து பதில் சொல்லுவார்கள். அதை ஒரு பெருமையாகவும் நினைப்பார்கள். ஏதாவது ஒரு தெருவையோ, இடத்தையோ காட்டும்படி ஒருவனைக் கேட்டால், உடனே கூட வந்து காட்டுவான். அல்லது, தன்னால் கூடிய அளவு அதற்கு உதவி செய்துவிட்டு, தெரிந்த மற்றவனிடம் ஒப்புவித்து, அந்த வேலையைச் செய்யும்படி சொல்லிவிட்டுப் போவான்.

அவ்விடத்திய கிராம ஜனங்களின் வாழ்க்கைத் திட்டமானது இதைவிடத் தாராளமாக இருக்கிறது. தங்களுக்குத் தெரியாத விஷயத்தைப்பற்றி யாராவது கேட்டுவிட்டால் தெரிந்தவனைப் பிடித்து ஒப்புவித்து விட்டுப் போவார்கள். தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தாங்களாகச் சிறிதும் கவலை செலுத்தமாட்டார்கள்; காதும் கொடுக்கமாட்டார்கள்.

ஆனால் நம் நாட்டு மக்களுக்கு வாழ்க்கையில் எவ்விதத் திட்டமும் கிடையாது. அவ்வப்போது சம்பவிப்பதை அனுபவிக்கப் பழகி இருக்கிறார்களே ஒழிய, அசவுகரியமோ, அதிருப்தியோ, தாட்சண்யக் கஷ்டமோ நேராமல் இருக்கும்படி முயற்சி செய்வதே இல்லை. முன்பின் தகவல் கொடுக்காமல், எதிர்பாராத நிலையில் வந்து இறங்கிவிடுவார்கள்; அகாலத்தில் வந்து கதவைத் தட்டுவார்கள்; சாப்பாட்டு வேளையில் வந்து சாப்பாட்டு விஷயத்துக்கு வீட்டுகாரர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தி விடுவார்கள்; வீட்டுக்காரர் சாப்பிடப் போகும்போது வந்து உட்கார்ந்துகொண்டு தொல்லை தருவார்கள். தாங்கள் யாரிடம் போகவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவருடைய சவுகரியம் எப்படி இருக்கும், அவர் வேறு வேலையில் ஈடுபட்டு இருப்பாரோ என்பதைப் பற்றிக் கவனிக்காமல் அங்கு போய்ச் சங்கடத்தை உண்டுபண்ணுவார்கள். இங்கு, இரண்டு பேர் ஏதோ தனி விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும் அதில் போய்க் கலந்து கொள்வார்கள்; அல்லது, அங்கு உட்கார்ந்து தங்கள் காரியமும் நடக்காமல், அவர்கள் பேச்சும் நடக்கவொட்டாமல் மூன்று பேருமாய்ப் பேசாமல் உட்கார்ந்திருப்பார்கள்; அல்லது, அனாவசியமாய்க் கலந்து கொண்டு சங்கடத்தை உண்டு பண்ணுவார்கள். எதிரி சொல்லுவதைக் கேட்காமல் தாங்களே பேசிக்கொண்டு இருப்பார்கள். ஒருவரை ஒருவர் கேட்டால், மற்றொருவர் பதில் சொல்லித் தன் பக்கம் இழுத்துக்கொள்வார். இரண்டு பேர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது அவர்களுக்குத் தொந்தரவு உண்டாகும்படியும் அவர்கள் பேசுவது ஒருவருக்கொருவர் காது கேட்காதபடியும் வேறு இரண்டு பேர் உரக்கப் பேசிக் கஷ்டம் கொடுப்பார்கள்.

பேசுவதில் ஒழுங்குமுறை அனுசரிக்கிற வழக்கம் இங்கு மிகமிக அருமை. முன்னால் சென்றவர், பின்னால் சென்றவர் என்கின்ற வரிசை ஒழுங்கைக் கவனிக்காமல், ஒருவன் ஒரு இடத்துக்கு முன்னதாகவே சென்று காத்திருப்பவனாய் இருந்தாலும் அதை இலட்சியம் செய்யாமல் அவனுக்கு முன்னால்போய் நின்றுகொண்டு தங்கள் காரியத்தை முதலில் செய்து கொள்ளப் பார்ப்பார்கள். இரயில், கார், பஸ் முதலிய பிரயாண இடங்களில், முன்னால் வந்தவன்-பின்னால் வந்தவன் என்கின்ற முறையில்லாமல், பின்னால் வந்தவன் முன்னால் வந்தவனைத் தள்ளிவிட்டு ஏறிக்கொண்டு, முன்வந்தவனுக்கு இடமில்லாமல் செய்து விடுவான். இரயில்வே டிக்கட் வாங்குகிற இடத்தில் உள்ள டிக்கட் கொடுக்கும் துவாரத்தில் 2 பேர், 3 பேர் கையை விட்டுக்கொண்டு எடுக்கமாட்டாமல் தொந்தரவுபடுவார்கள். இரயில்



வண்டியில் 2 பேர், 3 பேர் உட்காரும் இடத்தை ஒருவன் எடுத்துக்கொண்டு, மற்றவன் இடமில்லாமல் நிற்பதைப் பார்த்துக்கொண்டே அவனை நிற்கவைப்பான். குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள் என்கின்ற கவலையில்லாமல் தாராளமாய்த் தாங்களே அதிக இடத்தையும் அதிக சவுகரியத்தையும் அனுபவிப்பார்கள். மக்கள் உட்கார இடமில்லாத போது சாமான்களை இருக்கைகளின்மீதும் பரப்பி வைத்துக்கொள்வார்கள். மற்றொரு அன்னியன் வண்டியில் ஏறும்போது, உட்கார்ந்திருப்பவன் சட்டென்று நீட்டிப் படுத்துக் கொண்டு தூங்குகிறவன்போல் கண்ணை மூடி, குறட்டைவிட ஆரம்பிப்பான். உட்கார்ந்திருக்கும் வண்டியில் காரி உமிழ்வதும், குழந்தைகளை மலஜலம் கழிக்கவிடுவதும், குப்பை செத்தைகள் ஆக்குவதும், தண்ணீரைக்கொட்டி ஆபாசமாக்குவதும் நம்மவர்களால் வெகு சகஜமாகச் செய்யப்படும்.

நாடகம், வேடிக்கை பார்க்குமிடம், பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் முதலியவைகளில் பின்னால் இருப்பவர்களுடைய சவுகரியத்தை அனுசரிக்காமல், தலைதூக்கி மறைப்பதும், நின்று கொண்டு மறைப்பதும், பேசிக்கொண்டு தொந்தரவு செய்வதும் ஆகியவைகள் சாதாரணமாக நிகழும். ஏதாவது சாமான் வினியோகிக்கும் போதும், 'காகித நோட்டீஸ்' முதலியவை வினியோகிக்கும் போதும், கும்பலாக எழுந்து கொள்வதும், எனக்கு உனக்கு என்று சப்தமும் கலாட்டாவும் செய்வதும், 10, 20 கைகள் நீட்டப்படுவதும், கொடுப்பவனுக்கும் சபைக்கும் தொல்லை உண்டாகும்படி செய்வதும், வினியோகிக்கப்படும் சாமான் கீழே கொட்டப்படும்படியும், நழுவி விழும்படியும் செய்வதும் 100-க்கு 75 வினியோக இடங்களில் பார்க்கலாம்.

தான் வருவதாகச் சொன்ன காலத்தில் வரமாட்டார்கள்; காத்திருக்கச் செய்து ஏமாற்றமடையும்படி செய்வதைப்பற்றியும் கவலைப்படமாட்டார்கள். கூலிகள், வாடகை வண்டிகள் அமர்த்தப்படும் இடங்களுக்கு ஒரு மனிதன் போனால், அவனைச் சூழ்ந்து கொண்டு, பிய்த்துப் பிடுங்கிவிடுவார்கள். சாமான்களைப் பிடுங்குவார்கள்; கண்டபடி கூலி விகிதம் கேட்பார்கள். போட்டி போட்டு வாடகையை மிகக் குறைத்துச் சொல்வார்கள். கூலி, வாடகை பெறும்போது கலகம், அதிருப்தி, ஏகதேசமாய்ப் பேச்சு இல்லாமல் இருக்கவே முடியாது. கடைகளில் சாமான்களில் சாமான் தெரிந்தெடுத்து வாங்கும் நேரத்தைவிட விலைகளைப் பற்றி வியாபாரம் பேசும் நேரமே அதிக நேரமாய் இருக்கும். விலைகளில் ஒரு ஒழுங்கில்லாமல், 'ஏமாற்றிய வரையில் இலாபம்' என்றே வியாபாரிகள் கருதுவார்கள்.

ஒருவனுக்கு ஒருவன் உதவி செய்வது என்பது மிக அருமையாக இருக்கும். மக்களிடம்—மக்கள் அதிகாரமாகவே பேசிப் பெருமை கொள்ளப் பார்ப்பார்களே ஒழிய, தன்மையாகவோ நயமாகவோ பேசவே மாட்டார்கள். அப்படி நயமாகப் பேசுவதைக் கவுரவக் குறைவாக நினைப்பார்கள். ஒருவனுக்கு—அவன் போகுமிடத்துக்கு வழி காட்டுவதோ, கேட்ட விவரங்களுக்குப் பதில் சொல்வதோ, பிறர் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவனை விசாரித்து உதவி செய்வதோ இங்கு சிறிது கூட நாகரிகமாய்க் கருதப்படுவதில்லை; அலட்சியப்படுத்துவதுதான் நாகரிகமும், கவுரவமுமாகக் கருதப்படுகிறது.

ஒரு மனிதனிடம் மற்றொரு மனிதன், 'இது கேட்டால் வருத்தப்படுவானே, தாட்சண்யத்தால் சங்கடப்படுவானே' என்கின்ற யோசனையில்லாமல் தன் காரியத்தையே பிரதானமாகக் கருதி மற்றவர்களின் சமய சந்தர்ப்பத்தைக் கவனிக்காமல் கண்ட விஷயங்களைக் கேட்டுச் சங்கடப்படுத்துவது, பல விஷயங்களில் அன்னியனை ஏமாற்றமும் அதிருப்தியும் அடையும்படி செய்வது இங்கு மிக சகஜமாக நடக்கும்.

பெண்களை நயமாக நடத்தாமல் முரட்டுத்தனமாக நடத்துவார்கள். பெண்களிடம் பேசுகையில் மரியாதைப் பதங்களை உபயோகிப்பதில்லை. பொதுவாகச் சொன்னால்,

படிப்பகம்

www.padippakam.com



ஒருவருக்கொருவர் உதவி செய்கிற உணர்ச்சியோ, நயமாக நடந்துகொள்ளுவதோ, நம்மைப் போல்தானே அன்னியன் என்கின்ற எண்ணமோ, மற்றொருவனைச் சங்கடப்படுத்தக் கூடாது–ஏமாற்றம் அடையச் செய்யக்கூடாது என்கிற கவலையோ, மற்றவர்கள் சவுகரியத்தைப் பற்றி யோசிப்பதோ நம்மில் மிக அருமையாகவே இருக்கும்.

பொதுவாகப் பேசுமிடத்து, நாகரிகம் என்பதெல்லாம் ஒரு மனிதனிடம் ஒரு மனிதன் நடந்துகொள்ளும் விதத்திலேயே பெரிதும் அடங்கியிருக்கும். அதை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால் நம் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் ஏராளமான வித்தியாசம் இருந்து வருகிறது.

[வடநாட்டுச் சுற்றுப்பிரயாணம் சென்றகாலை, அரித்துவாரம் கன்கல் கலைஞான சங்கத்தில், அரித்துவாரம் குருகுல காங்கிரி கம்பேரடிவ் ரிலிஜன் புரபசர் (Comparative Religion Professor) அரிதத் வித்யாலங்கரர் தலைமையில், ‘மேல்நாடும் கீழ்நாடும்’ என்பதுபற்றி ஆற்றிய சொற்பொழிவு—‘குடிஅரசு’ 9-11-1946 ; நூல் : மேல்நாடும் கீழ்நாடும் ; குடிஅரசுப் பதிப்பகம், ஈரோடு]

## 12. வெளிநாட்டு அனுபவம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

நான் தற்சமயம் சென்றுவந்த பர்மா, மலேயா நாடுகளைவிட அதிக தூரத்திலுள்ள நாடுகள் பலவற்றிற்கும் சென்றிருக்கிறேன். அய்ரோப்பாவில் பல நாடுகளுக்கும், எகிப்து, கெய்ரோ, துருக்கி போன்ற நாடுகளுக்கும் சென்றிருக்கிறேன். இந்திய நாட்டில் வட கோடியிலிருந்து தென் கோடி வரை மூன்று நான்கு தடவைகள் பிரயாணம் செய்துள்ளேன். இவைகளைவிட அதிசயமல்ல—நான் இப்பொழுது சென்றுவந்த நாடுகள். இருந்தாலும், இதை ஒரு காரணமாகக் கொண்டு உங்களின் எல்லை மீறிய உள்ளத்தின் ஆர்வ உணர்ச்சியானது இப்படிப் பல இடங்களிலும் வரவேற்பளிக்கவும், புகழ் மாலைகள் சூட்டவும் காரணமாய் உள்ளது. இதிலிருந்து பெரும்பான்மை மக்கள் என்னுடைய கழகத்தின் கொள்கைகளை உணர்ந்து விட்டார்கள் என்றும், அதன்படி நடக்கச் சித்தமாயுள்ளனர் என்பதும் விளங்குகிறது.

வெளிநாடுகள் பலவற்றிற்கும் நான் சென்று வந்ததால் பெரும்பலனை அடையும் படியான வாய்ப்பும் ஏற்படுகிறது. இந் நாட்டிலேயே இருந்துகொண்டு, இங்குள்ள பழக்க வழக்கங்களையே கைக்கொண்டு இருப்பதால்தான், நான் கூறும் கருத்துக்கள் யாவும் மக்களுக்குப் பெரும் புரட்சியாகத் தோன்றுகின்றன. ஆனால், எனக்கு அக் கருத்துக்கள் சர்வ சாதாரணமாகத் தோன்றுகின்றன. ஏனெனில், நான் வெளிநாடுகளின் நிலைமையையும், அங்குப் பல துறைகளிலும் மக்கள் வாழும் விதங்களையும் அறிந்தவன். சுமார் 150 கோடிக்கு மேற்பட்ட மக்கள் கொண்ட உலகத்தில் மிகச் சிறிய அளவாகிய 6, 7 கோடி மக்கள் உள்ள இந் நாட்டிலேயே பழகிக்கொண்டிருக்கும் நம் மக்களுக்கு மற்ற மக்களின் வாழ்க்கைத் திறனை எப்படி உணர முடியும்? நேரில் சென்று பார்த்தாலன்றி வேறு எவ்வித வழிகளிலும் உலக அனுபவத்தை உணர முடியாது. என் போன்றவர்களைத் தவிர வேறு யாரும் கூறமுடியாது.

எத்தனையோ பேர்கள் பற்பல துறைகளில் கல்வி கற்கவும், அரசாங்க அலுவலாகவும், உல்லாசப் பிரயாணத்திற்கென்றும் வெளி நாடு செல்கின்றனர். அவர்களெல்லாம் அவரவர்களுக்கு வேண்டியவைகளை மட்டும் கற்று, அதன் சம்பந்தமாய்ப் பட்டம் பெற்று வருகிறார்கள். அன்றியும் அரசாங்க சம்பந்தமாகச் செல்கின்றவர்களும் அங்குள்ள மக்கள் எவ்விதம் வாழ்கிறார்கள்? சமுதாயத்துறை எப்படி நடக்கிறது? கடவுள், மதம் இவைகள் அங்கு எப்படி உள்ளன?—என்பதை அறிந்து வருவதில்லை. ஏதோ ஓரிரு அரசியல் உத்தியோகஸ்தர்களைப் பேட்டி கண்டதாகவும் வரவேற்புப் பெற்றதாகவும்தான் அங்கு



சென்றதன் பலன் கிடைக்கிறது. இதைத் தவிர வேறு பொது நலத்திற்கென்றும்—அந் நாடுகளில் உள்ளதைப்போல் இந்நாட்டு மக்களும் வாழ்வதற்கு எவை வழிகளோ அவைகளை உணர்ந்து வருவதில்லை.

அப்படி உணர்ந்துவரும் ஓரிருவரும் அங்குள்ள மதம், சாஸ்திரம், புராணம் இவைகளைப்பற்றிப் பேசுவதே கிடையாது; ஏதாவதொன்று கூறவேண்டுமானால், ‘இலண்டனில் கூட பிள்ளையார் கோயில் உள்ளது; அமெரிக்காவில்கூட அனுமார் கோவில் இருக்கிறது’ என்றுதான் கூறுவார்கள். ஆனால், அதன் யோக்கியதை அங்கு எப்படி உள்ளது என்பதை விவரமாகக் கூறமாட்டார்கள்.

நான் சென்று பார்த்தேன்—ரஷ்யாவில் நம்முடைய கடவுள் ஒன்றின் யோக்கியதையை. ரஷ்யாவில் உள்ள ‘மியூஸியம்’ ஒன்றில் கிருஷ்ண லீலையின் சின்னம் ஒன்றை, பொம்மை உருவத்தில் செய்துவைத்துள்ளனர். குளித்துக்கொண்டிருக்கும் பெண்களின் ஆடைகளைத் தூக்கிக்கொண்டு புன்னை மரத்தில் உட்கார்ந்திருக்கும் கிருஷ்ணன் சிலையும், அம் மரத்தடியில் பல கோபியர்கள் நிர்வாணமாகக் கைகளை உயர்த்தி, அங்கங்கள் யாவும் தெரியும்படி நின்றுகொண்டு உள்ளதும், அந்தக் காட்சியைக் கண்ட கண்ணபிரான் புன்முறுவலுடன் இருக்கும் காட்சியும் போதாது என்று—அதன் அடியில், ‘இதுதான் இந்திய நாட்டு இந்துமதக் கடவுள் கண்ணபிரானின் திருவிளையாடல்களில் ஒன்று’ என்று அடிக் குறிப்பும் எழுதப்பட்டிருக்கிறது.

அதைக் காண்கின்ற அந் நாட்டு மக்களும், அயல்நாட்டு மக்களும் நாம் எவ்வளவு ‘முட்டாள்கள்’ என்பதை உணரத்தான் அது வழியாக இருக்கிறது.

இவ்விதம் நம் கடவுள்களின் யோக்கியதையும் நம்முடைய முட்டாள்தனமும் அயல் நாடுகளிலும்கூடப் பரவிவிட்டன. ஆனால், இதைக் கண்டுவரும் பார்ப்பனரோ ‘ரஷ்யாவில் கிருஷ்ணன் கோயில் உள்ளது’ என்று கூறுவார்களே தவிர, அதன் யோக்கியதை எப்படி உள்ளது என்பதைக் கூறமாட்டார்கள்.

எனவே, உலகத்தைச் சுற்றி வருவதால் மட்டும் உலக விஷயங்களை உணர்ந்தவர்களென்று கூறமுடியாது. அங்குள்ள மத சம்பந்தப்பட்டவைகளையும், அரசியல், சமுதாய இயல், பொருளியல் முதலியவைகளையும் ஆராயவேண்டும். அவைகள் அந் நாடுகளில் உள்ள நிலைமையையும், நம் நாடுகளில் உள்ள நிலைமையையும் ஒப்பிட்டு, இரண்டிற்கும் உள்ள தாரதம்மியத்தை உணரவேண்டும். இதனால்தான், மனிதனின் அறிவு வளர்ச்சியடைய முடிகிறது.

இவ்விதம் எல்லாத் துறைகளின் நிலைமையையும், சந்தேகமின்றி உணருபவனே அறிவாளி எனப்படுவான். உலகத்தின் விஷயங்களையும் எங்கிலுமுள்ள இயற்கையின் நிலைமையையும் ஆராய்ந்து உண்மையை உணர்ந்தவன்தான் அறிவாளி.

இதன்றி ஒருவன் பி. ஏ. படித்தாலும், எம். ஏ. படித்தாலும் அறிவாளி ஆகமுடியாது. டாக்டர் தொழிலிலும், இஞ்ஜினியர் தொழிலிலும் வெற்றியடைந்து பட்டம்பெற்றதாலும், மந்திரித் தொழில் பார்ப்பதாலும் அறிவாளி என்று கூறமுடியாது.

பட்டம் என்பது பாராயணம்தான். தொழில்துறைப் பட்டம் பெறுவதனால் அந்தத் துறையில்மட்டும் ஓரளவு அறிவுபெற்றிருக்கலாம். ஆனால், உலகப் பொதுவிஷயத்தில் அறிவுபெற, அவர்களுக்கு வாய்ப்புக் கிடையாது. எனவே, பட்டம்பெற்றவர்களும் கூட, பார்ப்பனரின் பித்தலாட்டத்தைச் சிறிதும் ஆராய்வதில்லை. கல்வியறிவில்லாத பாமர மக்கள் ஒருபுறமிருந்தாலும்; ‘நான் படித்தவன்; பட்டம்பெற்றவன்’ என்று கூறிக் கொள்பவர்கள்கூடக் கோயிலைக் கண்டதும் கால்பூட்ஸைக் கழற்றிக்கொண்டே கன்னத்தில் அறைந்துகொள்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



இங்குள்ளதைப் போன்று மேல்நாடுகளில் மூடப் பழக்க வழக்கங்கள் கிடையா. இதைப்போன்று பார்ப்பனரின் பித்தலாட்டங்களால் அநாகரிகம் அங்கு வளரவில்லை. அவ்வித நிலையை உணர்ந்தவர்கள் 'நாமும் அப்படி மனித உணர்ச்சியுடனும் பகுத்தறிவுடனும் வாழவேண்டும்' என்று ஆசைப்படுகிறார்கள். நான் பிள்ளையாரை உடைப்பதும், இராமனைத் தூளாக்குவதும், இராமாயணத்தைச் சம்பலாக்குவதும் எதற்காக? இதைப் போன்ற ஆபாசங்கள் விஞ்ஞானிகள் நிறைந்த நாட்டில் இல்லாததை உணர்ந்ததால்தான். அவர்களுக்கில்லாத பிள்ளையாரும், இராமனும் நமக்கிருந்து என்ன நன்மைகள் செய்தன? ஆயிரக்கணக்கான கடவுள்கள் இருந்தும் எந்தவிதத்தில் நாம் அவர்களைவிட உயர்ந்தவர்களாக இருக்கிறோம்? அல்லது, அவர்களுக்குச் சமமான அறிவையாவது அடைந்திருக்கிறோமா?

இவைகளையெல்லாம் சிந்திக்கும்பொழுது ஒரே ஒரு காரணந்தான் தென்படுகிறது. இங்குள்ளதைப்போன்று பார்ப்பனர்கள் அங்கே கிடையாது. இவர்கள் ஏற்படுத்திய மதம், சாஸ்திரம், புராணம், கடவுள்களைப்போன்று அந் நாடுகளில் கிடையாது.

ஆகவே, இங்கும் இவர்கள் இல்லாமல் ஒழிக்கப்படுவரேயானால், அந் நாடுகளின் நிலைமை—இங்கும் ஏன் உண்டாகாது? எனவே, நம்மை இழிவுபடுத்தவந்த மதமும், அதற்கு ஆதாரமாய் உள்ளவைகள் யாவும் அழிக்கப்பட வேண்டும்.

[சின்னசேலத்தில், 18-4-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-5-1955]

## 13. கண்காட்சியின் பயன்

பெரியோர்களே! ஆசிரியப் பெருமக்களே! மாணவ ஆசிரியர்களே!

முதலாவதாக, கண்காட்சி என்கின்ற பெயர் பொருத்தமாக இருக்கிறதா அல்லது வேறு பெயர் வைக்க வேண்டுமா என்கின்ற விஷயம் வேறு இருக்கிறது. ஏன் என்றால், கண் அழகுக்காக இது வைக்கப்படவில்லை; இதிலிருந்து மனிதன் தனக்குத் தேவையான பல அருமையான கருத்துக்களை அறிந்துகொள்ள வைக்கப்படுவதாகும். மனிதனுடைய அறிவுக்கு, ஆராய்ச்சித் திறனுக்கு, நல்ல படிப்பினைக்கு, வாழ்க்கைக்கு, மற்றும் பல வகையிலும் பயன்படுவதற்குக் கண்காட்சியானது பயன்படுகிறது. இத்தனை நல்ல காரியங்களையும், மக்களின் அறிவையும் கெடுத்து மக்களைக் கெடுப்பதற்காகவே, இதற்கு நேர்மாறாக ஏற்படுத்தப்பட்டவைகள்தாம் இந்தக் கோயில்கள், விழாக்கள், உற்சவங்கள், பண்டிகைகள் என்பவைகள் ஆகும். இவைகள் மக்களுக்கு ஒன்றும் பயன் தருவதில்லை. ஏதோ பல காரியங்களை முன்னிட்டுக் கூட்டம் சேர்கிறது. ஆண்கள் பெண்களைப் பார்க்கவும், பெண்கள் ஆண்களைப் பார்க்கவும்தான் இவை பயன்படுகின்றன. இதைத் தவிர எவனும் அங்கு போய்ப் பார்த்துப் புதிதாக—வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற அறிவுக்கேற்ற புதிய சங்கதி ஒன்றும் தெரிந்துகொண்டு வரமாட்டான்; இவற்றின் மூலம் அறிந்து கொள்ளவும் முடியாது. ஆனால், கண்காட்சியைப் பார்ப்பதின் மூலம் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டு அறிவை விருத்தி செய்து கொள்ளலாம். நாம் அறிந்திருக்க முடியாத பல புதிய விஷயங்களையும்—நாம் வாழ்க்கையில் பல பொருள்களை அனுபவித்து, அதனால் நன்மைகள் அடைந்து வந்தும் அவை எப்படிச் செயல்படுகின்றன என்பது நமக்குத் தெரிந்திருக்காமல் இருப்பதையும் இந்தக் கண்காட்சி என்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடியும். ஆனால், நம்மவர்கள் பெரிய புண்ணிய சேத்திரங்களுக்குச் சென்று பார்க்கிறார்களே தவிர, இது மாதிரியான அறிவுக் கண்காட்சியை அவ்வளவு சிரத்தையுடன் சென்று பார்ப்பது கிடையாது.

உலகத்தில் உள்ள கண்காட்சிகளை எல்லாம் பார்ப்பவன் உலக அறிவு பெற்றவனாவான். உலகத்தில் இருக்கும் பல்வேறு கண்காட்சிகளும் ஒரு பல்கலைக் கழகம்போல் அமைக்கப்பட்டு இருக்கின்றன.



அங்கு (வெளிநாடுகளில்) இந்தக் கண்காட்சி என்பதற்குப் பதிலாக, 'மந்திராலயம்' 'தந்திராலயம்' என்று கூறுவார்கள். மந்திராலயம் என்றவுடன் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். இங்கு 'மந்திரம்' என்ற சொல் தப்பாகப் பயன்பட்டுத் தவறான அர்த்தம் கூறப்பட்டு வருகிறது. உண்மையில், மன் என்பது மனிதன் என்பதாகும்; திரம்—என்பது மனிதனுடைய வல்லமை—மனிதனுடைய சக்தி என்பது ஆகும். அதாவது, மந்திரம் என்பதற்குப் பொருள் மனிதனுடைய சக்தி, அவனுடைய வல்லமை எவ்வளவு உள்ளது என்பதை அறிவதுதான் ஆகும். அதுபோல் அடுத்தது தந்திரம்; அது தனி மனிதனுடைய வலிமையைக் காட்டுவதாகும். தன்—என்பது தன்னுடைய—தனி ஒரு மனிதனுடைய என்றும், 'திரம்' என்பது அவனுடைய சக்தி, வலிமை எவ்வளவு என்பதைக் காட்டும் அளவுகோல் என்றும் ஆகும்.

மந்திரம் என்பது ஒரு பொதுவான சொல். எல்லா மனிதர்களுடைய அறிவை, திறமையை, சாமர்த்தியத்தைக் காட்டுவதாகும். ஒரு மனிதனுடைய அறிவு வலிமையால் ஒரு புதிய கண்டுபிடிப்பு நடக்கிறது என்றால், அதைப் பிற மக்களும் அறிந்து தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ளலாம், பயன் பெறலாம்.

ஒரு இரயில் கண்காட்சியைப் போய்ப் பார்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். முதலில் போனவுடன் மொத்தமாகக் குவித்துக்கிடக்கும் மரங்களையும், இரும்புத் துண்டுகளையும் பார்க்கலாம். அடுத்தபடிச் சென்றால் ஆணி அடிப்பதும் பலகைகளை வெட்டுவதும் போன்று இருக்கும். இப்படி ஒவ்வொன்றாக, வரிசைக் கிரமமாக இருக்கும்; பார்த்துக் கொண்டே சுற்றி வந்தால், அங்கு இரயில் தயாராக இருக்கும். மனிதனுடைய மூட நம்பிக்கைத் தன்மையானது ஒழிந்து அறிவு வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காகவே கண்காட்சி வைத்து இருக்கிறார்கள். எவ்வளவுதான் முரட்டுத்தனமான மூடநம்பிக்கையுள்ளவனும் இம் மாதிரி ஒரு கண்காட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசியில் கீழே இறங்கிப் போகும்போது, அவனுடைய மனம் சிறிது சிந்திக்கத்தான் செய்யும். அவனுடைய மனத்தில் மாற்றம் அடைய வேண்டியதன் காரணமும் சிறிது காணமுடியும்.

'ஒர்க்ஷாப்' கண்காட்சிகளைப் பார்த்தால் இரும்பை வைத்து ஒரு பக்கம் ஆணி அடிப்பான்; இன்னொரு பக்கம் 'போல்ட்' செய்வார்கள். இப்படியாக எஞ்சின் என்றால் அதற்கு என்ன தேவையோ அதையெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்றாகச் செய்வார்கள். பின்னர் இணைக்கும் இடங்களில் எஞ்சினை உருவாக்குவார்கள். கட்டை வண்டிகள் கண்காட்சியைப் பார்த்தால் நன்றாகத் தெரியும்—100 வண்டிப் பட்டறைகளில் செய்யக் கூடிய வேலையை ஒரு இயந்திரம் செய்யும்.

நம் நாட்டில் உழைக்கிறார்களே தவிர உழைப்பைச் சுருக்கிப் பயனை அதிகரித்துக் கொள்ள எண்ணுவதில்லை. அம் மாதிரியான காரியங்களிலும் நம் மக்கள் ஈடுபடுவதில்லை. மனிதன் உழைக்கத்தான் பிறந்தான் என்று கருதி, பெரிய பெரிய கடின வேலைகளை எல்லாம் செய்கிறார்கள். பெரிய கல்லையும், பாறையையும் மனிதன் கஷ்டப்பட்டு உடைப்பதைவிட இயந்திரத்தின் மூலம் அதிகக் கஷ்டம் இல்லாமல் சுலபத்தில் உடைக்கலாம்.

இங்கெல்லாம் ஏதோ ஒரு மாதம் இரண்டு மாதம் என்றுதான் கண்காட்சி இருக்கும். ஆனால், இலண்டன் போன்ற இடங்களில் பொருட்காட்சியானது ஆண்டுக் கணக்கில்—எப்பொழுதும் இருந்துவரும். தினம் போய்ப் பார்த்து அறிவுபெற்று வரலாம்.

தினம் கோயிலுக்குச் சென்றால் நாம் தினசரி அங்கு காண்பது அந்த ஒரே சாமியைத்தான்; வேறு ஒன்றும் காண முடியாது. ஆனால், இலண்டன் போன்ற இடங்களில் உள்ள பொருட்காட்சியில் தினம்—அடிக்கடி வேறுபல புதிய கண்டுபிடிப்புகள் இடம்பெறும். இந்த வாரம் இருந்தது, அடுத்த வாரம் இருக்காது; வேறுபல—புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட பொருள்கள் வரும். அம் மாதிரிப் புதிதாக வந்தவுடன், என்ன என்ன வந்திருக்கிறது என்பதை விளம்பரம் மூலம் தெரிவிப்பார்கள். மக்களும் தினம்போய்ப் பார்ப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இங்கு எப்படி சினிமா பைத்தியம் பிடித்துத் தினமும் போய் அதைக் காண்கிறார்களோ—அதுபோல் அங்கு பொருட்காட்சி. ஆனால், அதைக் காண்பதின் மூலம் அவர்களது அறிவு வளர்வதுடன் வாழ்க்கைக்கு வேண்டிய பல விஷயங்களை அறிந்து கொள்கிறார்கள்.

நான் அங்கு பார்த்தேன், பழைய இரும்புகளை எல்லாம் மலைபோல் கொட்டி வைத்திருக்கிறான். இருபதுக்குப் பதினைந்து (20 × 15) அடி அளவில் பெரிய உலை கட்டி வைத்திருக்கின்றான். பெரிய 'கிரேன்' ஒன்று கீழே இறக்கப்படுகிறது; அதில் தட்டம்போல் பரவலாக வைத்துள்ளான்; ஒரு விசையை அழுத்தி, அத் தட்டத்தை இரும்புக் குவியலின் மேல் விடுகிறான். அது அந்த இரும்பின்மேல் விழுந்ததும், கொட்டிக் கிடக்கும் இரும்பு எல்லாம் டக், டக் என்று அந்தத் தட்டத்திலே ஒட்டிக்கொள்கிறது—அதாவது ஒன்றன்கீழ் ஒன்றாக ஒட்டித் தொங்குகிறது. அவ்வளவு சக்தி உள்ள காந்தம் அதிலே வைத்து இருக்கிறான். ஒரு அந்தர், ஒன்றரை அந்தர் எடை உள்ள இரும்புகள்கூட ஒட்டிக்கொண்டு, ஆடிக்கொண்டே மேலே போகின்றன. மேலே தேவையான இடத்திற்குப் போனவுடன் மற்றொரு விசையை அழுத்தி அந்தத் தட்டிலே உள்ள காந்த சக்தியை 'வாபஸ்' வாங்குகிறான். உடனே அதிலே ஒட்டிக்கொண்டிருக்கும் இரும்புத் துண்டுகள் தொப், தொப் பென்று அங்கே இருக்கும் உலையில் விழுகின்றன. அப்புறம் ஒரு பொத்தானை அழுத்தினால் அவ்வளவு இரும்பும் தண்ணீராய் உருகிவிடுகிறது. அதிலே உள்ள குழாயில் அந்தத் தண்ணீர் விழுந்து, அதற்குரிய இடத்தில் போய் 'மோல்டு' பண்ணி அச்சு வார்ப்பில் அது உருவமாக ஆகிறது. அது ஆறியவுடன் அதைவிட்டு எடுக்கிறான். ஆயிரம் மனிதன் செய்யக்கூடிய காரியமானது ஒரு மனிதனுடைய வல்லமையால்–சக்தியால் அறிவின் திறமையால் நடைபெறுகிறது.

சமுத்திரத்தை ஆழமாக வெட்ட வேண்டும் என்று கருதி வெட்டுகிறான். எப்படிச் செய்கிறான்? படகின் கீழே 'கிரேன்' வைத்து விசையை அழுத்துகிறான். பலகை போன்று இருந்தது, வாயைத் திறப்பது போல இரண்டாகப் பிரிந்து செல்கின்றது. ஆழமாக்க வேண்டிய பகுதியில் செலுத்தி, பிறகு ஒரு விசையை அழுத்தினால் பிளந்துள்ள இருபகுதிகளும் ஒன்றாகச் சேருகின்றன. அப்படிச் சேரும்போது அதற்கிடையில் உள்ள மண்ணை மேலே கொண்டுவந்து போடுகிறது. இப்படி இரண்டு மூன்றுதடவை வெட்டினால் ஒரு படகு நிரம்பிவிடுகிறது. இப்படியாக, பள்ளமாக்க வேண்டிய இடத்தில் வெட்டி—மேடாக்க வேண்டிய இடத்தில் அதைக் கொட்டி மேடாக்குகிறார்கள். இரண்டுமணி நேரத்தில் 20 'வாகன்' மண் வெட்டி எடுக்கிறார்கள். இது அய்ந்நூறு ஆள் செய்தாலும் இரண்டு மணி நேரத்தில் செய்யமுடியாது. இது நம்முடைய அறிவுக்கு அற்புதமாக—அசாத்தியமாகத் தெரியுமே தவிர, அறிவாளிகள் கண்ணுக்கு இது சாதாரணமானதாகும்.

ஒரு பஞ்சாலையை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு பக்கம் பஞ்சுகளைக் கொட்டுகிறான்; மறுபக்கம் அதை ஆவி ஆவியாக அடித்துவிடுகிறது. அந்த ஆவியானது ஒரு சந்திலேபோய்க் காற்றில் கலந்து முறைப்படி சுற்ற, அதற்கேற்ற மெல்லிய நூலாக ஆகிறது.

மற்ற நாடுகள் வளர்வதற்குக் காரணம் இதுதான். அவர்கள் அதிசய அற்புதங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். அந்த எண்ணம் நமக்கு வரவேண்டும். அந்த எண்ணம் நமக்கு வரவேண்டுமானால்; அதற்கு மாறான காரியங்களை நாம் வெறுக்கவேண்டும். இம் மாதிரியான கண் காட்சிகளைப் பார்த்து நாம் அறிவு பெறவேண்டும்.

பட்டிக்காட்டில் உள்ளவனுக்கு, தாலுக்கா ஒரு கண்காட்சி; தாலுக்காவை விட்டு வெளியே வராதவனுக்கு, ஜில்லா ஒரு கண்காட்சி; ஜில்லாவில் இருப்பவனுக்கு, மாநிலத்தின் தலைநகர் ஒரு கண்காட்சி ஆகும்; தலைநகரில் இருப்பவனுக்கு, பம்பாய் – இலண்டன் போன்ற பெரிய நகரங்களைப் பார்ப்பதும் ஒரு கண்காட்சி போன்றதுதான் ஆகும். இரயிலை விட்டு இறங்கி, வண்டியில் ஏறி, தாஜ் மகால் ஓட்டலில் இறங்கித் தங்கிவிட்டு வந்தால் விஷயம் தெரியாது.



விஷயம் தெரிய வேண்டுமானால், வீதியில் நன்றாகத் திரியவேண்டும். அப்போது தான் அந்த நாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள், அவர்களது நிலை என்ன? வாழ்க்கை முறை எப்படி?—என்பவைகள் தெரியும். அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜப்பான் போன்ற பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவன் பி.ஏ. படிப்பாளிக்குச் சமமாவான்; வேண்டுமானால் ஆங்கிலம் பேச எழுத காலேஜில் பயிலவில்லை எனலாம். ஆனால், இச் சுற்றுப் பயணத்தினால்—தானே, சிறிது சிறிதாக அந்த அறிவு ஏற்பட்டுவிடும். பி.ஏ. படிப்பாளிகூட இவனுக்குச் சமமாக மாட்டான். இங்கு நம் நாட்டில் கண் காட்சியைப் பார்த்து அறிவு பெறுவதும் கிடையாது; அதற்குச் செல்வாக்கும் இல்லை. ஆனால், அதற்கு மாறானவற்றிற்குத் தான் செல்வாக்கு இருக்கிறது.

ஆசிரியர்கட்கு இதுபோன்ற கண்காட்சிகள் மிகவும் அவசியமானவையாகும். இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் நாளை மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லித் தரப்போகிறவர்கள் ஆவார்கள். இங்கேயே இதைப் பார்த்து அறிந்து சென்றால் நாளை நல்ல வண்ணம் மாணவர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்ல முடியும்.

இந் நாட்டில் பல கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அதில் பார்த்தால் 'ரிப்பன்' தான் இருக்கிறது. பெண்கள் பார்த்து ஆசைப்படுகின்ற சாமான்கள்தான் இருக்கின்றன; சட்டிப் பானை, சோப்பு, பாத்திரங்கள் இவைதாம். இதற்குத்தான் கண்காட்சி என்று கூறுவதா? தப்பித் தவறி ஒன்றிரண்டு நல்லதாக வந்தாலும் அதை எல்லோரும் பார்க்க முடியாமல் போய்விடுகிறது. நல்ல கண்காட்சி வந்தால் பள்ளிக்கூடத்தை ஒருநாள் விடுமுறை விட்டாவது மாணவர்களை அழைத்துச் சென்று காண்பிக்க வேண்டும். இது ஒரு நல்ல படிப்பினை ஆகும். எப்படி ஒரு மாணவனை இரண்டும் இரண்டும் எத்தனை என்று கேட்டால் விடை அளிக்கும் நேரத்தைவிட—முதலில் இரண்டு கோலிகளையும் பிறகு இரண்டு கோலிகளையும் போட்டு எத்தனை என்று கேட்டால் விரைவில் நான்கு என்று விடை அளிப்பானோ, அதுபோல்—கண்காட்சியானது மாணவர்கள் விஷயங்களை நல்ல வண்ணம் அறிந்துகொள்ளப் பயன்படும்.

[திருச்சி, பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 31-1-1960-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-2-1960]

## 14. பார்வைக் குறிப்பு

"பாய்லர் தொழிற்சாலை இந்தியாவிலேயே மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று என்பதையும் அதன் நிர்வாகமும், திறமையும் மேல்நாட்டு வாய்ப்புகளுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்லாத அதிசயப்படும் தன்மையில் நடந்து வருவது கண்டு மிகமிக மகிழ்ச்சியும், அந்த வாய்ப்புக் கிடைத்ததற்குப் பெருமையும் அடைகிறேன்."

[திருச்சி, "உங்கள் தொழிற்சாலை செய்தி"–ஏப்ரல், 1973]

**Periar visits the Plant:**

"The Boiler Plant is one of India's biggest achievements. I am very very happy and proud to have had the opportunity to see this plant which with its wonderful management and efficiency is equal to Westorn standards in every aspect......"

An extract from EVR's entry in the
Visitor's Book on 6th March, 1973
["Boiler Plant & You" April, 1973]

படிப்பகம்

www.padippakam.com



# 3. பேட்டி

## 1. பெரியாரின் பதில்கள்

கேள்வி: நேருவின் நடுநிலை அவரோடு மறைந்து போயிற்று எனச் சிலர் கூறி வருகிறார்களே! அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இதைப்பற்றி நான் சிந்திக்கவே இல்லை.

கேள்வி: நமது நாடு விடுதலை பெற்றபின் பொருளாதார ரீதியில் முன்னேறி இருக்கிறதா, இல்லையா?

பதில்: நம்நாடு விடுதலை பெற்றபின் பொருளாதாரத்துறை 100-க்கு 200 முதல், 300-க்கு மேற்பட்ட சதவீதம் முன்னேறி இருக்கிறது.

கேள்வி: நேரு, கென்னடி ஆகியோரின் மறைவிற்குப் பின்னும், குருச்சாவின் பதவித் துறப்பிற்குப் பின்னும் உலகில் சமாதான ஆர்வம் அதிகரித்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா?

பதில்: நேரு, கென்னடி ஆகியோரின் மறைவிற்குப் பின்னும், குருச்சாவின் பதவித் துறப்பிற்குப் பின்னும் உலகில் சமாதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது.

கேள்வி: நமது நாட்டில் நின்று நிலவும் சாதிக்கொடுமையை அறவே ஒழிக்கச் சிறந்த வழி என்ன?

பதில்: சரியான அளவுப்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சர்க்கார் துறைகளிலும், சர்க்கார் ஆதரவு, அனுமதி, மேற்பார்வை உரிமைகள் உள்ள எல்லாத் துறைகளிலும் அளித்து விட்டால் நம் நாட்டில் நின்று நிலவும் சாதிக் கொடுமை அறவே ஒழிந்து போகும்.

கேள்வி: சமுதாயத்தின் பல துறைகளிலும் இலஞ்சம், ஊழல், கள்ள வணிகம் போன்ற ஒழுக்கக் கேடுகள் வேகமாகப் பரவி வருகின்றனவே—அவற்றைத் தடுத்து நிறுத்தத் தாங்கள்கூறும் யோசனைகள் என்ன?

பதில்: பார்ப்பனருக்கு உத்தியோகங்கள் கொடுப்பதை நிறுத்திவிட்டால் இலஞ்சப் பழக்கம் நின்றுபோகும். ஏனென்றால், பார்ப்பனர்களுக்குத் தேவை அதிகம்; சலுகை அதிகம்; அதனால் அவர்களுக்கு இலஞ்சம் வாங்கித்தீர வேண்டியிருக்கிறது. அவர்களைப் பார்த்து மற்றவர்களும் வாங்கிப் பழகிவிடுகிறார்கள்.

சனநாயகத்தின் பேரால் பதவிக்கு வரும் மந்திரிகள் ஆட்சியில் ஊழல்கள் இருந்துதான் தீரும். கண்ட்ரோல், லைசென்சு முறை இருக்கும் இடங்களில் கள்ளவணிகம் தவிர்க்க முடியாததாகும்.

கேள்வி: வகுப்புவாதக் கட்சிகள் தடைசெய்யப்படவேண்டும் எனச் சிலர் கூறி வருகிறார்களே, அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: வகுப்புப் பிரிவுகளையும், பிரிவினைபேதங்களையும், அவற்றின் ஆதாரங்களையும் ஒழிக்காமல் வைத்துக்கொண்டு—வகுப்புவாதத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்லுவதும், கட்சிகளைத் தடை செய்யவேண்டுமென்று சொல்லுவதும் பித்தலாட்டம்—அல்லது, அறியாமையேயாகும்.

கேள்வி: சமீபகாலமாக நமது மாணவர்களிடையே கட்டுப்பாடின்மை அதிகரித்து வருகிறதே, அதற்குக் காரணமென்ன?

பதில்: அரசாங்கத்தின் பலவீனமும், தாட்சண்யமுமே நமது மாணவர்களிடையே கட்டுப்பாடின்மையும், காலித்தனமும் பெருகுவதற்குக் காரணமாகும்.



கேள்வி: தமிழில் ஆக்க இலக்கியங்கள் (Creative literature) போதுமான அளவு தோன்றவில்லை என்று கூறப்படுகிறதே, அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: தமிழில் ஆக்க இலக்கியங்கள் தோன்றவில்லை என்பது மட்டுமல்ல; ஆக்க இலக்கியங்கள் அனேகமாக இல்லவே இல்லை. காரணம், புலவர்களுக்குப் பகுத்தறிவு பெறும் வாய்ப்பும், பகுத்தறிவு பெற்றவர்களுக்கு வயிற்றுப் பிழைப்புக் காரணமாக துணிவும் இல்லாமல்போகும்படியான நிலைமை இருப்பதால்—தமிழில் ஆக்க இலக்கியங்கள் தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

கேள்வி: நமது இளைஞர்களின் சீர்கேட்டிற்குத் திரைப் படங்களும் ஒரு காரணம் என்று கூறப்படுவதை ஏற்கிறீர்களா?

பதில்: ஓரளவிற்கு இளைஞர்களின் சீர்கேட்டிற்குத் திரைப்படங்கள் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

கேள்வி: 'கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக வேண்டும்' என்ற கோரிக்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக வேண்டுமென்றால் இன்றைய ஆங்கிலக் கல்லூரிகள் தேவை இல்லை. தமிழ்க் கல்லூரிகளை விரிவுபடுத்தி அதில் கலைத் துறைப் பாடங்களைப் புகுத்திவிட்டாலே போதும். புலவர், வித்வான் என்கின்ற பட்டங்களும் போதும். B.A, M.A பட்டங்கள் தேவை இல்லை.

[மதுரை, 'குறிஞ்சி' வாரஇதழ்—15-1-1965]

## 2. செயற்கரிய செய்தார்

நிருபர்: (மாறன்) வணக்கம் அய்யா.

பெரியார்: வணக்கம்.

மாறன்: உங்களைப் பார்த்ததிலே ரொம்ப மகிழ்ச்சி. நம்முடைய தமிழகத்திலே செயற்கரிய காரியம் செய்து, இந்த சமுதாயத்தினுடைய உருவத்தையே மாற்றியிருக்கீங்க.

பெரியார்: உம்.

மாறன்: ஒரு முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னாலே பார்த்தோமானால், பிறப்பினால் உயர்வு தாழ்வு எல்லாம் ரொம்ப மிஞ்சியிருந்தது. அந்த விதமான ஒரு நிலை மாறி, இப்போ ஒரு நல்ல சூழ்நிலையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒரு பெரிய மாறுதலைச் செய்த தங்களைக் கண்டு பேசுறதிலே ரொம்ப மகிழ்ச்சி. தங்களுக்கு இந்த மாதிரியான புரட்சி செய்யும் நோக்கம் எப்படித் துவங்கியது? தாங்கள் எப்படிப் பொதுப் பணியில் ஈடுபட்டீர்கள் என்று சொன்னால் நல்லது......

பெரியார்: உங்களுடைய பாராட்டுதலுக்கு மிகவும் நன்றி.

மாறன்: வணக்கம், அய்யா.

பெரியார்: ஏதோ நான் செய்ததாகச் சொல்லப்படுவதெல்லாம் காலப்போக்கிலே நடைபெறுகிறது என்றுதான் கருதுகிறேனே தவிர, நானே செய்தேன் என்றில்லை. ஆனாலும் என் பிரச்சாரத்திற்கு மூலப்பொருள் பகுத்தறிவேயாகும்.

மாறன்: அதுதானே முக்கியம்.

பெரியார்: அதாவது—மக்களை எதையும் பகுத்தறிவோடு சிந்திக்கும்படி வேண்டிக் கொள்வதும், மூடநம்பிக்கையைக் கைவிடும்படிக் கேட்டுக்கொள்ளுவதுமே என் பிரச்சாரத்தின் தத்துவமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



மாறன் : ஆமாம்.

பெரியார் : இப்போ, மக்கள் ஏராளமாகப் படிக்கிறார்கள். ஏராளமாக எங்கள் பிரச்சாரத்தைக் கேட்கிறார்கள்.

மாறன் : அப்போது அப்படியில்லை.

பெரியார் : அப்போது கொஞ்சம் எதிர்ப்பு இருந்தது. என் பிரச்சாரம் வெளிநாடுகளுக்குப் பயன்படாவிட்டாலும் தமிழ்நாட்டுக்கு நல்ல வண்ணம் பயன்படுமென்று கருதுகிறேன். எங்கள் பிரச்சாரத்தால் சில மக்கள் மூடநம்பிக்கைகளைக் கைவிட்டாலும், அவற்றால் ஏற்படும் சில உணர்ச்சியைப் பெறாமல்—சுயநலம் காரணமாக மூடநம்பிக்கையில் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் இயற்கைப் போக்கும், விஞ்ஞான வளர்ச்சியும் விரைவில் எங்கள் கொள்கைக்கு வெற்றியளிக்கும் என்று கருதித் தொண்டு செய்து வருகிறேன்.

மாறன் : ஆமாம், அய்யா. இப்படி நீங்கள் திரும்புவதற்கு ஏதாவது முக்கிய சம்பவம் உண்டா? அதாவது, தமிழகத்திலே இப்படித் தீவிரமாக இந்தப் புரட்சி ஏற்படுத்த வேண்டுமென்று...

பெரியார் : சாதாரணமாகச் சொல்கிறேன். நான் வந்து நல்ல குடும்பத்திலே பிறந்திருந்தாலும்கூட, என் தாயார்–தகப்பனார், எனக்கு முன்னே பிறந்த குழந்தையை—வெகுநாள் பிள்ளையில்லாமல் பிறந்ததினால் ஆதரிப்பதற்காக வேண்டி, என்னை என் தகப்பனாருடைய சிறிய தாயாருக்குக் கொடுத்துவிட்டார்கள்.

மாறன் : உங்கள் சரித்திரத்திலே வருது இது.

பெரியார் : அந்த அம்மாள், தம் பிள்ளையாகவே என்னை வளர்த்தார்கள். அந்த வீட்டுக்கு நாதியில்லே; அந்தம்மாள் மட்டுந்தான். அதனாலே நான் கேள்வியற்ற தறுதலைப் பிள்ளையாய்ப் போய்விட்டேன்; இரண்டு நாள், மூன்று நாள்கூட வீட்டிற்கு வரமாட்டேன்; கண்டபடி சாப்பிடுவேன்; எச்சில், கிச்சில் ஒன்றும் எனக்கு இலட்சியமில்லை. அந்தச் சின்னப் பருவத்திலேயே முஸ்லிம் வீட்டிலே சாப்பிடுவேன்; குறவர்கள் வீட்டில் சாப்பிடுவேன்; கண்டபடி சாப்பிட்டுவிட்டேன். அப்புறம் எங்க வீட்டிற்குப் போனேன். மறுபடியும் என்னைக் கூப்பிட்டுக்கொண்டார், என் தாயார். போனவுடன் நான் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு பத்தாவது வயதிலேயே கடைக்குப் போய்விட்டேன்; அவ்வளவுதான்.

மாறன் : அவ்வளவுதான் படிப்பு...

பெரியார் : ஆமாம்; திண்ணைப் பள்ளிக்கூடம் தான்; ஏடு எடுத்துக்கொண்டுதான் எழுதுவோம்; அப்புறம் முனிசிபாலிடி பள்ளிக்கூடம்; இரண்டு வருடம் அதில் படித்தேன். உடனே கூப்பிட்டுக்கொண்டார்கள். எங்க வீட்டிற்கு நிறையப் புலவர்கள், பரதேசிகள், சன்னியாசிகள் வருவதுண்டு. அது சர்வ சாதாரணம். காரணம் என்ன வென்றால், அவர்கள் கொஞ்சம் கஷ்டப்பட்டவங்க...எங்களுக்குப் பணம் அதுபாட்டுக்கு மளமளன்னு வர ஆரம்பிச்சுது. அதுபோல பக்தி வேறே அவங்களுக்கு வளர்ந்துபோச்சு.

மாறன் : அய்யாவோடே தகப்பனாரெல்லாம் ரொம்ப பக்திமான்கள்னு கேள்விப் பட்டிருக்கிறேன்.

பெரியார் : ரொம்ப பக்தி! ரொம்ப பக்தி! இவாளோட பேசறதும், வீட்டிலே வந்து கதை பேசறதும், புராணம் படிக்கிறதும், இதெல்லாம் எனக்கு விரோதம். நான் அவங்களையெல்லாம் கேள்வி கேட்பேன்.

மாறன் : உங்க மனப்பான்மையே அப்படி...



பெரியார் : அதேதான். அந்தக் கேள்விமூலமே எனக்கும் அறிவு வளர்ந்துபோச்சு; எண்ணங்களும் உறுதியாய்ப் போச்சு. அவங்கள்லே எவனும் சரியான பதிலே சொல்லறதில்லே.

மாறன் : நீங்க விடாம கேள்வி கேட்பீங்க?

பெரியார் : ஆமா...நான் சும்மா அவங்களைக் கேள்வி கேட்பேன். கடவுளைப் பத்தி—மதத்தைப் பத்தி...இதைப்பத்தி யெல்லாம் கேள்வி கேட்டா, சிரிச்சுகிட்டே, 'கெட்டிக்கார பிள்ளேப்பா'ன்னு சொல்வானே தவிர—பதில் சொல்லமாட்டான்.

மாறன் : சமாளிச்சுக்கிறது...

பெரியார் : அவ்வளவுதான்; அப்படியே இருந்தது.

மாறன் : அப்படி ஆராய்ச்சி பண்ணினீங்க நீங்க.

பெரியார் : தானா வந்தது ஆராய்ச்சி, நான் பண்ணவேண்டியது மொதல்லே இல்லை; நான் அவ்வளவா ஆராய்ச்சிலே கவலைகொள்ளலே. அவுங்களோடு பேச ஆரம்பிச்சதுதான் பிறகு தர்க்கம், கிர்க்கம்னு ஆரம்பிச்சவுடனே, ஆதாரங்கள் தெளிவாப் போச்சு.

மாறன் : அதைப் பிரச்சாரம் பண்ணனும்னு நினைச்சீங்க?

பெரியார் : அதுவேதான். பிறகு அரசியலுக்கு வந்தபிறகு, இந்தச் சாதியேதான் இன்னைக்கு நம்மை ஆளுதே தவிர—உள்ளபடி ஒரு அரசாங்கமோ அல்லது அரசியல் கொடியோ நம்மை ஆளலே; சாதியைக் காப்பாதுறதை அடிப்படையாவைத்து, ஆட்சிமூலம் நடத்துறாங்க.

மாறன் : சமுதாயத் தொண்டுவந்து...அப்படி இந்தக் கட்சிக்குப் போனவுடனே மேல், கீழ்ன்னு அதிகமாகத் தோன்ற ஆரம்பிச்சிட்டுது.

பெரியார் : ரொம்ப ஆச்சு... மேலே மேலே வளர்ந்து வந்தது. பிறகு அதைக் கேட்டபடியே நான் என் அரசியல் கொள்கைகளை ஏற்பாடு பண்ணிக்கிட்டு—நான் ஒன்றும் அரசியலுக்குப் போறதில்லே, எந்த எலக்ஷனுக்கும் நிக்கிறதில்லே. இவுங்க 1939–40-லே மந்திரி சபையை விட்டுவிட்டுப் போனபோது கவர்னரும், வைஸ்ராயும் என்னைப் பதவியை ஏற்கச் சொன்னாங்க. மந்திரி சபையை அமைக்கச் சொன்னாங்க.

மாறன் : பத்திரிகையிலே யெல்லாம் வந்தது அப்போ.

பெரியார் : ஆமா... அதுக்கு நான் சொன்னேன்—மந்திரி சபை அமைச்சா என் வேலை கெட்டுப் போகும்னு. அதைக் காப்பாத்துற வேலைதான் எனக்குச் சரியாய் இருக்கும்னேன்.

மாறன் : உங்களுடைய இலட்சியமெல்லாம் வேறே.

பெரியார் : ஆமா. ஆனால், நான் உதவி செய்றேன்—அப்படின்னு சொன்னேன்; ரொம்ப நல்ல உதவி பண்ணினேன், அரசாங்கத்துக்கு... சைமன் கமிஷனை உலகமே எதிர்த்தது; நான்தான் ஆதரிச்சேன்; அதற்கு வரவேற்புக் கொடுக்கிறேன்னு போய் நின்னேன். நான் ஆதரவு தந்த ஜஸ்டிஸ் கட்சி என்னைக் கெஞ்சாத கெஞ்சு கெஞ்சியது—'நீ சைமன் கமிஷனை ஆதரிக்கிறாயே. நாளைக்கு ஓட்டே வராதே. எங்களுக்கு உதவி பண்ணுவேன்னுதானே வந்தாய். நீ இப்படி பண்ணுறியே'ன்னாங்க. உங்களுக்காக நான் வரலே; பொது நலத்துக்காகத்தான் வந்தேன்—அப்படின்னு சொல்லி, அப்படியெல்லாம் புரட்சி செய்துகிட்டே வந்தேன்.

மாறன் : உங்களுடைய சுயநலமற்ற சேவையினாலேதானே எல்லோரும் முன்னேறியிருக்காங்க.

படிப்பகம்

www.padippakam.com



பெரியார் : முன்னேறினாங்களோ என்னவோ.. இல்லாட்டா சாதிகள் இன்னும் வளர்ந்திருக்கும் அவ்வளவுதான்; அவ்வளவுதான் சொல்லுவேன். அதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா மாத்தினேன்—ஜனங்கள் எண்ணத்திலே.

மாறன் : நானறிய முப்பது, நாப்பது ஆண்டுகளுக்கு முன்னாலே—' தீண்டாதவன்–தூர எட்டிப் போ'ன்னு சொல்லக்கூடிய நிலைமையெல்லாம் இருந்தது.

பெரியார் : அய்யா, நாங்களே தண்ணிப் பந்தல் வைப்போம், வெயில் காலத்திலே. அப்போ அது ஒரு பெருமை; தர்மம்னு பேரு. என்ன தர்மம்! அதிலே திருடுறது எங்களுக்குத் தெரியும். நானே வியாபாரியாயிருந்து எவ்வளவு திருடியிருக்கேன்னு எனக்குத் தெரியும். ஆனால் தண்ணிப் பந்தல் வைக்கிறது ஒரு பெருமை. அப்படித் தண்ணிப் பந்தல் வைத்தால் சாதிக்குத் தகுந்தபடி மூங்கில் குழாய் வைப்போம்—அதிலே குடிச்சுட்டுப் போகனும்னு; சாதிக்குத் தகுந்தபடி 'டம்ளரை' வைப்போம்.

மாறன் : இப்போ அதைக் கற்பனை கூடப் பண்ண முடியலையே!

பெரியார் : தடையில்லியே! இப்படிக் கொடுமை யெல்லாம் இருந்தது. இதை யெல்லாம் அழிக்கிறதுன்னு ஆரம்பிச்சோம். அப்புறம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் 'பிராமணாள்–சூத்திராள்' போர்டை அழிக்கிறதுன்னு ஆரம்பிச்சோம். ஓட்டல்லே சாதிப் பெயரெல்லாம் இருக்கக்கூடாதுன்னு சொன்னோம்.

மாறன் : எவ்வளவு துணிச்சலான காரியம் அதெல்லாம்.

பெரியார் : ஏதோ செய்தோம்.

மாறன் : பிறராலே முடியல்லையே!

பெரியார் : முடியுதா, முடியவில்லையோ, அவ்வளவு ஆசையிருந்தது; அவ்வளவு ஆத்திரம் இருந்தது.

மாறன் : ஆசைமட்டும் இருந்தாப் போதாதில்லே; துணிச்சலும் வேண்டுமல்லவா? அது உங்களிடத்திலே மாத்திரம்தான் இருந்தது. அதனாலேதான் நாடு முன்னேறிச்சு.

பெரியார் : முன்னேறணும்—முன்னேறிச்சுன்னு சொல்றதுக்கில்லே. இல்லாவிட்டா இன்னும், இப்பவும் எவ்வளவோ ஆகியிருக்கும்.

மாறன் : அப்போ தங்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் என்னென்ன வெல்லாம்? சில முக்கியமான எதிர்ப்பெல்லாம் சொல்ல முடியுமா?

பெரியார் : எல்லாம்தான்.

மாறன் : அதாவது சமுதாயத்திலே எதிர்ப்பு.

பெரியார் : ஆமா. பத்திரிகையிலே எதாவது என்னைப்பத்தி வந்தா எனக்கு விரோதமாகத்தான் எழுதுவாங்களே தவிர, அனுகூலமானது வராது. இப்படி விளம் பரத்துக்கு இடமில்லாம ஏதோ ஒண்டியாய் இருந்து செய்துவர்றோம். இதுக்காகத்தான் அரசாங்கத்தையும் கொஞ்சம் ஆதரிச்சு, நம்ம எண்ணம் உள்ளவனோ அல்லது நமக்கு எதிரியாக இல்லாதவனோ வருகிற அரசாங்கத்தை ஆதரிக்கலாம் என்று நான் ஆதரிக்கிறது. நமக்கு ஒன்றும் அரசியலிலே பற்று இல்லை.

மாறன் : அந்தக் காலத்திலே உங்களுக்கு ஆதரவு அபூர்வமா இருந்ததே. முக்கியமான ஆதரவு எது?

பெரியார் : பிள்ளைகளைத்தான் சேர்த்துக்கொண்டு சத்தம் போட்டேன். பெரிய மனுசங்க ஒருத்தரும் எங்களுக்கு ஆதரவில்லே; உண்மையா எல்லாம் பையங்கதான். மத்தவங்க, ரொம்ப 'ரிலிஜியஸ்' வேஷம்; பயந்தவங்க—அரசியலிலே தங்களுக்கு ஓட்டு



வேணும் என்கிறவங்க. ஆகையினாலே ஆதரவு கம்மிதான். பிள்ளைகள் உற்சாகமா பின்னாலே வருவாங்க. இப்ப பணம் கொடுத்து கூப்பிடறாங்களே—அப்படி, எங்க பணம் தான் செலவு; கல்லடியெல்லாம் அடிச்சிருக்காங்க. இங்கே அடிச்ச அடி இந்தக் கையை ஆட்டி விட்டுட்டுது.

மாறன் : எந்த இடத்திலே, எந்த ஊரிலே அய்யா?

பெரியார் : ம்......சின்னாளப் பட்டின்னு, தேவாங்கர் இருக்கிற ஓர் ஊரு.

மாறன் : ஆமா. அது நெசவுக்குப் பேர்போன இடம்.

பெரியார் : அடியோட அவங்க காங்கிரசு அப்போ........நான் பிரச்சாரம் பண்ணப் போனேன்.

மாறன் : ஆமா. இது எத்தனை வருஷத்துக்கு முன்னாலே இருக்கும்?

பெரியார் : நாற்பத்தி அஞ்சு, நாற்பத்தி நாலு.........நாற்பத்தி அஞ்சாயிருக்கும். நல்லா அடிச்சுட்டாங்க.

மாறன் : அப்போகூட நல்லா பகுத்தறிவு பரவலே?

பெரியார் : ஜனங்களுக்கு எங்கே பரவிச்சு. சட்டுன்னு சொல்றான் பாருங்க—'சாமி இல்லேங்கிறான்; கடவுள் இல்லேங்கிறான்; மதம் இல்லேங்கிறான்; பறையனோட ஒண்ணா சாப்பிடனுங்கிறான்'! அப்படின்னு சொன்னா—நம்ம ஜனங்களுக்கு ஒரு வெறுப்பு. அப்படியெல்லாம் பண்ணினாங்க.

மாறன் : இப்ப அதெல்லாம் சொல்ல முடியாது?

பெரியார் : இப்ப சில பெரியவங்க பேசறபோது, 'மன்னிக்கணும்.........எனக்குக் கொஞ்சம் கடவுள் நம்பிக்கையிருக்குது' அப்படின்னு என்னை மன்னிப்புக் கேட்டுட்டு பேசறாங்களே.

மாறன் : ஒரு கேள்வி கேட்கலாமா?

பெரியார் : கேளுங்க அய்யா......நல்லா கேளுங்க.

மாறன் : அதாவது, இப்ப மத நம்பிக்கை உடையவங்ககூட, உங்களிடத்திலே உங்களுடைய கொள்கைகளை நம்பி உங்களுக்கு ஆதரவாக இருக்காங்க.

பெரியார் : சிலபேர் இருக்காங்க உண்மையிலேயே.

மாறன் : ஆகையினாலே மத நம்பிக்கையைப் பத்தி, நீங்கள் அதைப்பற்றி அதிக மாகப் பிரச்சாரம் செய்யாமல், அது பற்றி அவநம்பிக்கை எதிர்ப்பு சொல்லாமல் இந்த சாதி ஒழிப்பை மட்டும் செய்து வந்தா?

பெரியார் : அது பிரிக்க முடியாதுங்களே, அய்யா. மதம் வேறே, சாதி வேறேன்னு பிரிக்கவே முடியாதே.

மாறன் : இன்னொரு கேள்வி. இப்போ இந்தக் காலத்திலே ஒழுக்கம் குறைஞ்சு வருது, அப்படின்னு எல்லோரும் சொல்றாங்க. அரசாங்கத்தின் தண்டனைக்குப் பய மிருக்கணும்; அல்லது ஒருவிதமான ஆண்டவன் நம்பிக்கையிருந்து பயப்படணும். இந்த ரெண்டும் இல்லாமப் போயிட்டுதே இப்போ. இந்த ஒழுக்கம் நல்லா இருக்கிறதுக்கு என்ன வழி?

பெரியார் : மன்னிக்கணும், அய்யா. இதை ஒன்றும் கட்டுப்படுத்தமுடியாது. இனிமேல் எந்தக் காரணம் சொல்லியும் மக்களைக் கட்டுப்படுத்தவே முடியாது. ஒரு மட்டம் தாராளமாகப் போயி, மறுபடியும் அவங்க ஏதாவது இதுக்கு என்ன பண்றதுன்னு திரும்பினா உண்டே தவிர, இப்ப ஒழுக்கமா, நாணயமா, நேர்மையா மனுசன் யாராவது



படிப்பகம்

www.padippakam.com



சிந்திக்க இப்ப வாய்ப்பு இல்லை...எல்லோருக்கும்தான். அரசியலிலே ஒழுக்கமா இருக்க முடியலே. எவனாயிருந்தாலும் மதத்திற்கும்கூட, காட்டிக்க முடியுதே தவிர, தத்துவப்படி நடக்க எவனாலும் முடியலே. ஒழுக்கம்னு இன்னொருத்தனுக்குச் சொல்றமே தவிர, அந்த வாய்ப்புக் கிடைச்சா நாமும் அந்தத் தவறு பண்ணத் தயாராயிருக்கோம். அனுபவத்தில் சொல்றேன். நான் அப்படியிருக்கிறபோது சும்மா ஒழுக்கம்னு சொல்லி, இன்னொருத்தனை ஏய்க்கிறதிலே என்ன லாபம், சொல்லுங்க.

மாறன் : ஒரு சமுதாய நல்வாழ்வுக்கு.

பெரியார் : என்ன நல்வாழ்வு? சமுதாயத்திற்கு என்ன நல்வாழ்வு வரும்? நீங்க பணக்காரன்; நான் ஏழை. இவங்களுக்கு நல்வாழ்வு எங்கேவரும்? இதையெல்லாம் காப்பாத்துறதா இருந்தா அதைத்தான் ஒழுக்கம்னு நினைக்கிறோம். உங்ககிட்டே, பணம் திருடக்கூடாது நான். நீங்க வியாபாரி; என்னை மோசம்பண்ணிப் பணம் சேர்த்திடலாம்னு நினைக்கிறீங்க. அப்ப எப்படி ஒழுக்கம் வரும்?

மாறன் : அதனாலே, உங்களைப்போல சுயநலமற்றவாதியாக இருந்தா நல்லாயிருக்கும்.

பெரியார் : எங்கே முடியுது, அய்யா?

மாறன் : ஒரு வழி...

பெரியார் : வழியில்லே. நாடு இன்னும் கீழேபோகும்; ரொம்பக் கீழேபோகும். நாமெல்லாம் இவ்வளவு பந்தோபஸ்தா இருக்கமுடியாது. இன்னும் பதினைந்து வருஷத்திலே பாருங்களேன். இப்போ கென்னடியைச் சுட்டான்; வீதியிலே போனா அடிக்கிறான்; தெருவிலே போனா உதைக்கிறான்; மந்திரிங்க போனா காவாலிப்பசங்க எல்லாம் கருப்புக் கொடியைத் தூக்கிக்கிட்டு ஒழிக என்கிறான்; அரசாங்கத்துக்கிட்டே அத்து இல்லேன்னா எப்படி ஒழுக்கம் வரும்?

மாறன் : ஆனா நம்முடைய தமிழ்நாடு வந்து பழைய காலத்திலேருந்தே நல்ல பண்பாட்டோட இருக்கிறதினாலே சுய சிந்தனை அதிகமாயிருக்கு.

பெரியார் : வரணும். தமிழ் நாட்டிலே தமிழனைக் கெடுத்துட்டுதே—இந்தத் தமிழ் இலக்கியங்கள்! மற்ற நாட்டானைப்போல முன்னேற வேண்டிய அளவுக்கு முன்னேற விடாம தமிழ் இலக்கியங்கள் நம்மைப் பாழாக்கிட்டுது.

மாறன் : இலக்கியம் வந்து...

பெரியார் : ஒண்ணுமில்லே!

மாறன் : தமிழ் இலக்கியம் எந்த வகையிலே கெடுக்குதுன்னு சொல்றீங்க?

பெரியார் : இலக்கியமே இல்லியே நமக்கு. இன்றைக்குப் பயன்படும்படியா என்ன இருக்கு? நீங்க தெரிஞ்சுகொள்ளாதது என்னயிருக்கு? நாளைக்கு நம்ம நடந்துக்க வேண்டியதுக்கு என்ன இருக்கு? அப்படி ஆகிப் போச்சுங்க, அது. வெள்ளைக்காரனுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம் என்னன்னா, அவன் பழசை நினைக்காம, புதுக் கருத்தோட புதுசு, புதுசா எங்கெங்கேன்று போவான். இங்கே எவ்வளவு பெரிய புலவனாயிருந்தாலும் பழைய குப்பையைத்தேடி அதிலேருந்து பெரியவனா ஆயிடலாம்னு பார்க்கிறானே தவிர, தன் கருத்துன்னு சொல்றது ஒண்ணுமே கிடையாதே.

மாறன் : அது உண்மை தாங்க.

பெரியார் : இல்லே நமக்கு. எந்தக் கருத்தைச் சொல்றதுக்கு எந்தப் புலவன் இருக்கிறான்?

மாறன் : சமாதிக்குத்தான் கும்பிடு போட்டுக்கிட்டே இருக்கான்?



பெரியார் : அவ்வளவுதான். இன்றையவரைக்கும் ஒருத்தன்கூட புதுக் கருத்தை சொல்லவே இல்லையே.

மாறன் : அய்யாவைத் தவிர...

பெரியார் : என்னமோ வச்சுக்கங்க. சொல்லப் பயப்படறான். ஒரு புலவனைக் கேட்டா அவன் படிச்சதைத்தான் சொல்றான்—இராமாயணம் படிச்சேன், பாகவதம் படிச்சேன், புராணம் படிச்சேன் அப்படின்னு. அதிலேதான் அவன் புலவனானேதவிர, அறிவிலே அவன் ஒண்ணும் புலவன் ஆகலே. என்னமோ பல தொல்லைகள் இருக்குது; வளர்ச்சிக்குப் பல தடங்கல் இருக்குது நம்ம நாட்டிலே.

மாறன் : ஆனால் ஒரு காரியம் அய்யா! பல நாடுகளிலே பகுத்தறிவுவாதிகள் தோன்றியிருக்காங்க. ஆனா மதவாதிகள் வந்து அவங்களுடைய பிரச்சாரம் வெளிவர விடாமல் செய்திருக்காங்க. பொதுமக்களின் அறிவுக்கு திரையிட்டிருக்காங்க. ஆனால், நம்முடைய தமிழ் நாட்டிலே உங்களுடைய பிரச்சாரம் நல்ல பலன் அளிச்சிருக்கிறது. அது மட்டுக்கும் தமிழக மக்கள் நல்ல பகுத்தறிவு உடையவர்கள். நல்ல பண்பாடுடையவர்கள். அதனால்தான் முன்னேற முடிஞ்சுதுன்னு நினைக்கிறேன்.

பெரியார் : யாரு முன்னேறியிருக்கிறாங்க? ஒரு மனுசனைச் சொல்லுங்க நம்ம நாட்டிலே...மன்னிக்கணும்—நீங்க கோவிச்சுக்கக் கூடாது. இந்த நாட்டிலே முன்னேற்றக் கருத்துள்ளவர் யாரு?

மாறன் : அதாவது, முன்னேயிருந்த நிலைமையைவிட இப்போ இருக்கிற நிலைமை.

பெரியார் : அதிலே வித்தியாசம்னு சொல்லிக்கலாமே தவிர, இன்னாருடைய கருத்து ஏற்கத் தகுந்ததுன்னு சொல்ல ஒரு ஆளைச் சொல்லுங்க; எவன் இருக்கிறான்? சொல்றதுக்கே பயப்படறான். ஒவ்வொருத்தருக்கும் ஒரு இலட்சியம்; அந்த இலட்சியத்துக்கு மாறில்லாமல் இருக்கவேணும்னா அவனுடைய வாழ்வு அப்படித்தான் இருக்கும். நாம் என்ன கதியானாலும் சரி, சொல்வோம்ங்ற மாதிரிக்கு, ஒரு ஆள்கூட இல்லையே! அது மாத்திரமில்லே. இப்ப நம்ம நிலைமை எப்படி ஆயிப்போச்சுன்னா, தமிழ் நாட்டிலே இன்றைக்கு ஒரு பெரிய மனுஷனே இல்லியே. நீங்க ஒரு காரியம் நடத்தணும்னா, ஒரு பெரிய மனுஷனைக் கூப்பிட்டு வைக்கணும்னா உங்களுக்கு யார் இருக்கிறா? இல்லியே!

மாறன் : அப்படி ஒருவன் உண்டாகணும். அதற்கு ஒருத்தன் முயற்சிபண்றான்னு வையுங்க. அதுக்கு என்ன செய்யணும்?

பெரியார் : அவனுக்கு சர்வாதிகாரம் வேணும். அவன் ஒண்ணுக்கும் கட்டுப்படாத சர்வாதிகாரியா வரணும். கேட்டா கேளு, கேட்காட்டி போடான்னு சொல்ற மாதிரி இருக்கணும். அவனுக்கு ஒரு காலத்திலே 'சான்ஸ்' அடிச்சா அடிக்கும்.

மாறன் : சுயநலம் இருக்கக்கூடாது; ஒருத்தருக்கும் கட்டுப்படக்கூடாது; அப்படிப்பட்ட சிந்தனை உள்ளவன் வந்து ஒரு நல்ல பெரிய காரியம் செய்யறவனாகலாம்.

பெரியார் : ஆகலாம். ஆனா இப்ப ஒண்ணும் அப்படி ஆக முடியலே. அப்போ பெரிய மனுஷன் என்கிற உலகமே வேறே. அவன் பணக்காரனா, அவன் ஏதாவது தர்மம் பண்றானான்னு...அப்ப வேற மாதிரி இருந்தது. இப்ப பணக்காரனைக் கண்டா சுத்த மோசம்னு நினைக்கிறோம். தர்மம் பண்ணினான்னா, பெரிய திருட்டுப் பய, பெருமைக்காகப் பண்றான்னு சொல்றோம்.

மாறன் : ஆமாம். அப்படித்தானே இருக்கு. பெரும்பகுதி அப்படியிருக்கு.

பெரியார் : எப்படியோ வைச்சுக்கிங்க. அது தெரியாதிருந்த காலத்திலே ஏற்பட்டானுங்க பெரிய மனுஷன். இன்னைக்கு நமக்கு ஆளே இல்லியே! எந்த புஸ்தகம் படிச்சா

படிப்பகம்

www.padippakam.com



தேவலே? ரொம்ப நாம் சண்டை போட்டுக்கணுமானா, குறள் ஒன்று என்னமோ இருக்கு. அதை எடுத்து வைச்சிட்டா, வேறே எது படிச்சா தேவலே? வளர்ச்சிக்கு என்ன இருக்குது? அந்தமாதிரி ஆயிப் போச்சுங்களே.

மாறன்: கல்வி முன்னேறணும்.

பெரியார்: கல்வி முன்னேறணுமானால், அதனுடைய போக்கையே தடுத்துக்கிட்டிருக்காங்களே!

மாறன்: இப்ப அய்யா பெயராலே கல்லூரியெல்லாம் வந்திருக்கு. அப்படிப்பட்ட நல்லகாரியம் செஞ்சிருக்கீங்க.

பெரியார்: நானும் ஏதோ செய்யறேன். நிறைய கட்டிடம் கட்டிகிட்டு ஜனங்களுக்கு ஏதோ செய்யறேன். என்ன செய்யறதுன்னே தோணலியே. ஒரு பிச்சை கொடுக்கிறதா இருந்தா, என்னடா சோம்பேறியை வளர்க்கிறோமேன்னு கருதறோம்.

மாறன்: அய்யா, ஏதாவது பிச்சை கிச்சை கொடுத்திருக்கீங்களா? அப்படிக் கேள்விப்பட்டதே இல்லையே!

பெரியார்: அது சரி...உள்ளபடியே அப்படித்தான்.

மாறன்: உங்களைப் பத்தி ஜி. டி. நாயுடு இருக்காங்களே—விஞ்ஞான மேதை; அவங்க உங்களைப் பத்தி ஒண்ணு சொன்னாங்க. சிக்கனத்துக்கு ஒரு மாபெரும் உதாரணம் வேணும்னா அய்யாவைப் பற்றித்தான் சொல்லணும் அப்படின்னு சொன்னாங்க. இப்போ, ஒரு மனிதன் சிக்கனமா வாழ்க்கை நடத்தணும்னா, அப்படி வாழ்க்கை நடத்துவதற்கு என்னென்ன செய்யணும், ஒரு தனி மனிதன்?

பெரியார்: சிக்கனம்ங்கறது ஒண்ணுமில்லே. எல்லோருக்கும் பணக் கவலை இருக்குது. வியாபார முறையா, தாராளமா இருக்கிறாங்களே தவிர, வேறே இல்லை. நமக்கு எப்படின்னா, பணத்தை என்ன பண்றதுன்னு தெரியலே. எதுக்குக் கொடுக்கிறதுன்னு தோணலே. தவிர, நாம வியாபாரத்திலே பத்து வயசிலேயே இருந்துட்டோம்; ரொம்ப 'சுக்காஞ்செட்டியா' இருந்துட்டோம்; அதனாலே காசை இழுத்துப் பிடிக்கிறோம். இழுத்துப் பிடிக்கத்தான் தெரியுமேதவிர, அதை என்ன பண்றதுன்னு இன்னும் நான் முடிவு பண்ணலே. இதை நான் எழுதியிருக்கிறேன்—அது ஒரு 'ஹேபிட்' (Habit) அவ்வளவுதான். அது ஒரு புத்திசாலித்தனம்னு நான் நினைக்கலே.

மாறன்: அந்த மாதிரி மத்தபேருக்கு நீங்க புத்தி சொல்லலே. அதாவது, மத்தபேரும் சிக்கனமா இருக்கணும்னு?

பெரியார்: சிக்கனம்னு எதை சொல்றேன்னா—வரவுக்கு அடங்கி நடப்பா; வரவுக்குமேலே போகாதே; அவ்வளவுதான். அதுதான் சிக்கனம்.

மாறன்: அய்யா, இன்னொரு கேள்வி கேக்கணும்னு ஆசை. இப்ப தற்காலத்துலே இந்த மாணவர்கள் இருக்கிறாங்கல்ல, அவங்க கட்டுப்பாடு இல்லாமே ஒரு குழப்பமான நிலைமையிலே இருந்து வர்றாங்க. நாம் பார்க்கிறோம்; கல்லூரிகளிலே பார்க்கிறோம். இந்தக் கட்டுப்பாடு குலைஞ்சதுக்குக் காரணம் என்ன?

பெரியார்: என் கருத்து, உங்களுக்குப் பிடிக்குமோ என்னமோ? இந்த ஜனநாயகம் வந்தபிறகுதான் எல்லோருடைய ஒழுக்கமும் கெட்டுப்போச்சு. பள்ளிகூடத்துப் பிள்ளைங்க மாத்திரமல்ல; தொழிலாளிகளெல்லாம் கெட்டுப்போயிட்டாங்க; அதிகாரிகளெல்லாம் கெட்டுப்போயிட்டாங்க. இவனுங்கமட்டும் என்ன? பதவிக்கு வர்றவனும் கெட்டுப் போயிட்டான். அவன் தன் இஷ்டத்துக்குத் தகுந்தபடி நடக்கிறான்.

மாறன்: வருங்காலத்திலேகூட நல்ல மாறுதல்...



பெரியார்: ஜனநாயகம் உள்ளவரை முடியாதுங்க.

மாறன்: அப்போ, ஜனநாயகம் அவ்வளவு நல்லதில்லேங்கிறீங்களா?

பெரியார்: நல்லதில்லேன்னு நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்—'காலிகள் நாயகம்தான் ஜனநாயகம்'னு பெயர் அப்படீன்னுட்டு. இது...வந்து ஜனநாயகம்னு நினைக்கிறதுக்கு முன்னே—சிலபேரு அதைப்பத்திப் பேசிக்கிட்டிருந்தாங்க. அப்பவே சொல்லியிருக்கேன்.

மாறன்: ஜனநாயகம் வந்ததினாலே கட்டுப்பாடு குலைஞ்சுதுன்னு சொல்றீங்க.

பெரியார்: கட்டுப்பாடு குலைஞ்சது.

மாறன்: எல்லாத் துறைகளிலேயும்....

பெரியார்: எல்லாத் துறைகளிலும் இப்ப இருக்கிறதுக்கு எல்லாம். ஒழுக்கம்னா என்னா? கீழே இருக்கிறவங்க மேலே இருக்கிறவங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கணும். உங்களிடத்திலே உண்மையான அன்பு வச்சிருக்கணும்; அது இல்லையே! மேலே இருக்கிறவனைக் கவுக்கப் பார்க்கிறான், கீழே இருக்கிறவன்.

மாறன்: உண்மை. அய்யா...

பெரியார்: தனக்கு வேண்டியபடி நடக்கவில்லையானா எதிரியாகவே நினைக்கிறான்.

மாறன்: அல்லது சூழ்ச்சி பண்ணி...

பெரியார்: அதுதான் சொல்றேனே. அப்பறம் என்ன பண்றது? மாணவங்க கெட்டுப்போனதுக்குக் காரணம் அரசியல்காரங்க. தங்களுக்குப் பயன்படுத்திக்கிறாங்க.

மாறன்: ஆமா...

பெரியார்: அப்ப எப்படி வரும் ஒழுக்கம்?

மாறன்: அதான் காரணம். அவங்க சீர்திருந்துவதற்கு உங்களுடைய யோசனை என்ன?

பெரியார்: அவன் படிக்கவந்தவன்; அவனை நாம் உபயோகப்படுத்திகிட்டா, அவன் கெட்டவன் ஆயிடறான்.

மாறன்: நம்ம பிள்ளைங்கதானே?

பெரியார்: யாரு சொல்றாங்க அப்படி? நான்தானே சொல்லவேண்டியதாயிருக்கு? நம்ம பிள்ளைகளாக நினைக்கிறவன் நான்தான். நீங்க என்ன நினைக்கிறீங்க, உங்க மகனைப்பத்தி மாத்திரம் நினைக்கிறீங்க—மத்தவங்களைப்பத்திக் கவலையே இல்லை.

மாறன்: அய்யா. உங்களைப் போல அவ்வளவு பரந்த மனப்பான்மை எல்லாருக்கும் வருமா?

பெரியார்: இல்லே, சொல்றேன். அதனாலே பலன் அவ்வளவு ஆயிருக்கு. இப்ப இருக்கிற அரசியலை நம்பித்தான் மாணவங்க நடந்துக்கிறாங்க; வண்டியிலே கல்லு போடறாங்க. என்னையே ரகளை பண்றாங்க.

மாறன்: அதனாலே திருத்தறது எப்படி?

பெரியார்: முடியாது. இந்த ஜனநாயகம் இருக்கிறவரைக்கும் நாடு இன்னும் கீழேதான் போயிக்கிட்டு இருக்கும்.

மாறன்: இன்னொரு கேள்வி அய்யா. தாழ்த்தப்பட்டவர்கள்னு முன்னாலே சொல்லப்பட்டவர்கள் இப்போ கொஞ்சம் முன்னேறி வர்றாங்க.

படிப்பகம்

www.padippakam.com



பெரியார் : ஆமாங்க.

மாறன் : அவர்கள் எப்படியெப்படி நடந்துகொள்ளணும்?

பெரியார் : அவங்க முன்னேறி வர்றாங்கன்னா, அவர்களாலே முன்னேற முடியலே.

மாறன் : சரி.

பெரியார் : தாழ்த்தப்பட்டவங்க முன்னேர்றாங்கன்னா ஏதோ அவங்களுக்கு ஏற்பாடு பண்ணின சில நல்ல வாய்ப்புகளினாலே சிலபேரு முன்னேறினாங்க.

மாறன் : அவங்களுக்கு அரசாங்கம் வாய்ப்பு அளிக்குது?

பெரியார் : வாய்ப்பு அளிக்குதுன்னா, அரசாங்கம் தயவினாலேதான் வாய்ப் பளிக்குது.

மாறன் : ஆமா.

பெரியார் : இப்ப ஒருத்தனுக்கு ஒரு உத்தியோகம் கொடுக்கணும்னா, அவன் தன்னைப் பறையன்னு ஒத்துக்கிட்டாத்தானே உத்தியோகம் கொடுக்கிறாங்க? தன்னை சக்கிலியன்னு ஒத்துகிட்டாத்தானே கொடுக்கிறாங்க? அதற்கு அவன் வேணும்னே பறையன் ஆகறான். வேணும்னே சக்கிலியன்னு சொல்லிக்கொள்கிறான். அந்த மாதிரியான நிலைமையில்லாம, எல்லோரையும் சமமாகக் கருதும்படியா—வாய்க்கால் தண்ணி எல்லாருக்கும் சமமா, தானாகப் பாயற மாதிரி அரசியல் அமைப்பிலே வச்சுட்டோமானா, ஒருத்தன் இன்னொருத்தன் தயவை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் வராது. அதைப் பண்ணவே மாட்டாங்க. எல்லோரும், தங்களை வந்து கெஞ்சிக்கிட்டிருக்கிறவங்களுக்குத் தான் ஏதாவது செய்யணும்கிறாங்களே தவிர, வேறே இல்லே. அப்ப யாரு அதுலே பக்குவம் உடையவங்களாக ஆவாங்க? எத்தனை நாளைக்குத்தான் இவங்களுக்கு சுதந்திரம் கொடுத்துக்கிட்டே இருந்தாலும் இவங்க எப்படி 'இண்டிபெண்டன்டா' வளர்றதுக்கு வாய்ப்பிருக்கு?

மாறன் : வந்திருக்காங்களே; எவ்வளவோ முன்னேறி இருக்கிறதைப் பார்க்கிறோமே நாம.

பெரியார் : சில பேர் வந்துக்கிட்டிருக்காங்க. அவ்வளவுதான் சொல்வேன்.

மாறன் : ஆகையினாலே படிப்படியா...

பெரியார் : அதிலே பாருங்க இப்ப. நேத்து சொன்னான். உதவி பத்து வருஷத்துக்குன்னான்; பத்து வருஷம் ஆச்சு. இன்னும் ஒரு பத்து வருஷம்னான். இவங்க எல்லாம் ரகளை பண்றதினாலே மறுபடியும் ஒரு பத்து வருஷம்னு சொல்றான். இப்படியே பத்து வருஷம், பத்து வருஷம்னு இவங்களுக்குப் போனாத்தான் வாய்ப்பே தவிர, நிறுத்திப் போட்டா என்ன ஆகறது அவங்களுக்கு? இப்ப ஒருத்தர் தயவினாலேதான் வாழ முடியறதே தவிர, தாங்களாகவே வாழும்படியான வாய்ப்பு இல்லே...

மாறன் : அந்த நிலை வரணும்.

பெரியார் : ஆமா. அந்த நிலை வரணும்.

மாறன் : அய்யா! தொழிலாலேதானே உயர்வு தாழ்வு இருக்குது?

பெரியார் : ஆமா!

மாறன் : இப்ப, அந்த தாழ்த்தப்பட்டவர்கள்னு சொல்லப்படுறவங்களுக்கு சலுகை இருக்கு. அதே போல, மேலே உள்ளவர்களுக்கு சாதாரண வேலைகளுக்கு ஒரு சலுகை கொடுத்தால்? அவர்கள் இறங்கி வந்தால்?

பெரியார் : அவங்க இறங்கவே மாட்டாங்க.



மாறன் : இறங்கிவர்றதுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால்?

பெரியார் : அவங்க இறங்கி வர்றதுக்கு என்ன பண்ணணும்னா, அவங்களுக்கு இவ்வளவுதான்னு சொல்லிடணும். 'நீங்க இவ்வளவுதான் இருக்கிறீங்க. உங்களுக்கு இவ்வளவுதான் உண்டு' அப்படன்னு, அந்த விகிதாச்சாரம்னு சொல்லிட்டா இறங்குவாங்க —அன்னிக்கு முதற்கொண்டு மத்தமத்த தொழில்களை எல்லாம் கைப்பத்தறதுக்கு.

மாறன் : அப்புறம், ஒரு தனிப்பட்டவர் வந்து பொதுநலப்பணி செய்யணும்னு இறங்குகிறார். அவருக்கு நீங்க சொல்லக்கூடிய யோசனை?

பெரியார் : அதுதான் சொன்னேனே—தனிப்பட்டவர்கள் பொதுநலப் பணிகள்ங் கிறது இப்போ ரொம்ப அருமையாப் போச்சு. ஏன்னா, எல்லாரும் பொழைப்புக்குப் பொது நலப் பணியையே உபயோகப்படுத்திக்கிறாங்க; பதவிக்கு, சம்பாத்தியத்துக்கு.

மாறன் : ஆமா, ஆமா. சுயநலம்தான் வருது.

பெரியார் : பொதுநலப் பணின்னா, அது இப்ப வாழ்வுக்கு ஒரு வழின்னு ஆயிப் போச்சு.

மாறன் : ஆனா உண்மையாக ஒருத்தர்......

பெரியார் : உண்மையாக ஒருத்தன் வரவேணும்னா, அவன்கிட்டே ரெண்டு குணம் இருக்கணும். பொதுநலத்தினாலே பிழைக்கிறோம்னு....

மாறன் : லாபம் சம்பாதிக்கக் கூடாது.

பெரியார் : ஊஹூம்! அதிலே சாப்பிடறோம் என்கிற நிலைமை இருக்கக்கூடாது. இரண்டாவது, பொதுநலத்தினாலே ஒரு சின்ன பலன்கூட அடைந்ததாக இருக்கக்கூடாது.

மாறன் : அவனுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் இருக்கணும்.

பெரியார் : அதுக்கு வேறே ஏற்பாடு பண்ணிக்கணும். அதுலே சாப்பிடறதுன்னு ஆரம்பிச்சா வழுக்கிவிட்டுடும் அவனை.

மாறன் : நல்ல புத்திமதி. ஆகையினாலே தனக்குச் சாப்பாட்டுக்கு இருக்கிறவன் தான் பொதுநலப் பணியிலே இறங்கணும்; ஒண்ணு. அடுத்தது, இந்தப் பொதுநலப் பணியினாலே லாபம் சம்பாதிக்கணும்னு நினைக்கக் கூடாது.

பெரியார் : பயன் அடையணும்னு நினைக்கக்கூடாது. லாபம் மாத்திரம் இல்லே, ஒரு பதவிக்குப் போகணும்; அந்தஸ்து சம்பாதிக்கணும்; குடுபத்துக்கு ஒரு பெருமை உண்டாக்கணும்னு பார்க்கக்கூடாது. எல்லாம் அது மூலமாகத்தான் ஒவ்வொருத்தனும் எதிர்பார்க்கிறான்.

மாறன் : அய்யா, இத்தனை காலமா பணி செய்து வர்றீங்க. இந்தப் பதவி என்கிற போது வெறுத்துத் தள்றீங்க. இந்த மாதிரியா இருக்கணும்?

பெரியார் : சுயநலத்துக்குப் பயன்படுத்தக் கூடாதுன்னுதான் சொல்றேன். பதவிக் குப்போனா அது வந்திடுமேன்னு பயப்படுகிறோமே நாம்! மத்தவங்களும் அதைப் பயன் படுத்தாமப் பார்த்தாத்தான் நல்லாயிருக்கும்.

மாறன் : அப்படிப்பட்டவர்கள் நல்ல பொதுநலப் பணி செய்யலாம்.

பெரியார் : முடியுது. அது செய்ய முடியுது. அவங்களும் சுதந்திரத்தோடு இருக்க முடியும். சுதந்திரமாகப் பேசிக்கொள்ள எல்லாம் முடியும். இல்லாவிட்டால் காற்றடித்த பக்கம் சாயவேண்டியதுதான்.

மாறன் : அப்படிப்பட்டவங்க தமிழ்நாட்டிலே?

படிப்பகம்

பெரியார் : நம் நாட்டிலே யாரு இருக்காங்க அய்யா? யார் இருக்காங்கன்னு சொல்லட்டும் நான்? முடியலையே. எவனைப் பக்குவம் பண்ணினாலும் ரெக்கை முளைச்சா ஓடிடறான்.

மாறன் : இந்தக் காலத்து சமுதாயம் நல்ல வழிக்குத் திரும்பணுமானா—ஒருத்தன் என்னென்ன முறைகளைக் கையாளணும், அய்யா?

பெரியார் : முதல்ல அவன் பகுத்தறிவுவாதியாக ஆயிடணும்; அப்படி ஆயிட்டான்னா அவனுடைய போக்குக்கெல்லாம் நியாயம் கிடைக்கும்.

மாறன் : ஓகோ.

பெரியார் : அப்படி ஆகாமெ நமக்காக அவன் இருக்கான்னா, சும்மா ஏதோ வேப்பெண்ணை குடிக்கிறாப்போல ஏதோ சாப்பிட்டுக்கிட்டு–இந்த வேஷம் போட்டுக்கிட்டுத் தான் இருக்கமுடியும்; மனசு தெளிவாயிடணும் அவனுக்கு. வேறே ஒண்ணும் கிடையாது.

மாறன் : நாம் நல்லது செய்தால் அதைத் துணிஞ்சு செய்யணும், ஒண்ணுக்கும் பயப்பட்டோ அல்லது ஆசைப்பட்டோ செய்யவேண்டியதில்லை.

பெரியார் : செய்யவேண்டியதில்லே. இன்பமும் இல்லே, துன்பமும் இல்லே; பெருமையும் இல்லே, சிறுமையும் இல்லே—காரியம்தான், அப்படின்னு எண்ணம் வந்ததுன்னா அவனாலே ரொம்பத் தாராளமாய் முடியும்.

மாறன் : அதனாலே இந்த சமுதாயமும் பயன்பெறும்!

பெரியார் : அதான்; பொதுத் தொண்டுன்னா சமுதாயத் தொண்டுதானே? அதில்லாம சும்மா, அலங்காரமா வெளிப்பார்வைக்கு நானும் செய்யறேன்னா?

மாறன் : அது வேடிக்கைக் கூத்தாயிடும்.

பெரியார் : அவ்வளவுதான்.

மாறன் : அய்யா, ரொம்ப முக்கியமான கருத்துக்களெல்லாம் சொன்னீங்க. எத்தனையோ விஷயங்கள் சொன்னீங்க.

பெரியார் : ஒண்ணுமில்லே.

மாறன் : ரொம்ப நன்றிங்க.

பெரியார் : நான் சொல்றேன். இது என் கருத்துன்னு சொல்றேனே தவிர, இதுதான் முத்திரைன்னு கொள்ளக்கூடாதுன்னு கேட்டுக்கொள்கிறேன்.

மாறன் : இல்லை அய்யா. இந்தத் தலைமுறையிலே நீங்கள்தான் பகுத்தறிவு வாதத்தை இப்படி நல்லாச் சொல்றீங்க.

பெரியார் : என்னமோ சொன்னேன் (சிரிப்பு)

மாறன் : அய்யா, இந்தத் திருமண முறைகளிலே எல்லாம் ரொம்ப மாறுதல் பண்ணி எவ்வளவோ புரட்சிகள் செய்திருக்கீங்க. அந்தக் காலத்திலே எத்தனையோ பணத்தை செலவழிச்சு, எத்தனையோ குடும்பங்கள் கெட்டுப்போச்சு. அதோடுகூட அந்த மூடநம்பிக்கைகளை எல்லாம் சேர்த்து வைச்சிருந்தாங்க—விழாக்கள், குடும்பத்தில் நடக்கிற கைங்கரியங்களிலே எல்லாம். இப்ப அதெல்லாம் நீங்கிவருது. ஆக, பல விதத்திலே தாங்கள் இந்த நாட்டுக்குப் பணி செய்து, நல்லா முன்னேறி இருக்கிறோம்; நாடும் முன்னேறியிருக்குது.

பெரியார் : அது சரி. அப்படி ஒண்ணும் இல்லே.

மாறன் : அவர்களுடைய சார்பிலே உங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் : ரொம்ப என்னுடைய வாழ்த்துக்கள்.

மாறன் : வணக்கங்க!

[5-1-1970-ல் திருச்சி வானொலி ஒலிபரப்பு]



## 3. பெரியாருடன் பேட்டி

[எழும்பூர் பெரியார் திடலிலுள்ள 'விடுதலை' அலுவலகத்தை ஒட்டி அமைந்துள்ள இருக்கையில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கட்டிலில் அமர்ந்திருக்கிறார். 'கலை மகள்' பற்றி அருகிலுள்ள 'விடுதலை' நிருவாகி திரு. சம்பந்தத்திடம் விசாரித்தவாறு என்னை அன்புடன் வரவேற்று, 'உட்காருங்க' என்றார். பனியனுக்குமேல் தமக்குப்பிடித்த கறுப்புச் சட்டை அணிந்திருக்கிறார். வெண்மையான முடியும், தாடியும் இவரது சிவந்த மேனிக்கு அளிக்கும் கம்பீரயமே அலாதிதான். வட்டமான மூக்குக் கண்ணாடியின் வழியே ஊடுருவிப்பார்த்து, 'என்ன கேக்கப்போறீங்க? கேளுங்க' என்கிறார்.]

'நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?' என்று கேட்கிறேன்.

'எட்டு, ஒன்பது வயசு வரைக்கும் ஈரோட்டிலே திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படிச்சேன். அப்புறம் ஒரு ரூபாய் கொடுத்து அம்மை குத்திக்கொண்டு 'மாடல் ஸ்கூல்'லே சேர்ந்து படிச்சேன். நாலாவது அதாவது போர்த் ஸ்டாண்டர்ட் வரைக்குந்தான் படிச்சேன். அதுக்குமேலே படிக்கமுடியல்லே. கடைக்கு வந்துட்டேன்.'

'உங்கள் தகப்பனாரின் கடையா?'

'ஆமாம். கடையிலே மூட்டைக்கு விலாசம் போடறது முதலான எல்லா வேலைகளையும் கவனிச்சுக்கிட்டிருந்தேன்.'

'உங்கள் அண்ணா அதிகம் படித்தாரா?'

'அவரு படிச்சாரு. லோயர் போர்த் பாரம் வரை படிச்சாரு. அந்தக் காலத்திலே 'அப்பர் போர்த் பாரம்' படிச்சிருந்தா தாசில்தார் பதவி வரைக்கும் போகலாம்.'

'தினமும் குளிப்பதில் உங்களுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்று சொல்லுகிறார்களே; அது மெய்தானா?'

'குளிக்கவேணுங்கிற ஞாபகமே எனக்கு வர்றதில்லை. அதை ஒரு தொந்தரவாகவே நினைக்கிறேன். இப்ப நான் குளிச்சு ஆறுநாள் ஆச்சு. அந்தக் காலத்திலே, நான் சின்னப் பையனா இருந்தப்போ, எங்க வீட்டிலே எல்லாரும் தவறாமே குளிப்பாங்க. சந்தைக்குப் போய் வந்தா குளிப்பாங்க. போன இடத்திலே பல பேர்மேலே பட்டிருப்போமே, தீட்டாயிருக்குமே என்று குளிப்பாங்க. ஏன்? கக்கூஸ் போயிட்டு வந்தாக்கூடக் குளிப்பாங்க. 'தீட்டு' 'தொடக்கூடாது' என்பதிலெல்லாம் அவ்வளவா லட்சியமில்லை எனக்கு. வீட்டிலே என்னை அடக்கிப் பாத்தாங்க. முடியல்லை.'

'நீங்கள் எவ்வாறு நாத்திகரானீர்கள்?'

'நான் அதுக்காகன்னு ஒண்ணுமே படிக்கல்லே; ஆராய்ச்சி பண்ணலே. பக்குவம் அடையல்லே. என் பகுத்தறிவுக்கு எட்டினதைச் சொல்றேன்.'

'கடவுள் இல்லை' என்று சொல்ல உங்களுக்கு உரிமை இருக்கிற மாதிரி, ஆத்திகர்களுக்குக் 'கடவுள் இருக்கிறார்' என்று சொல்லவும் உரிமை உண்டல்லவா? பின் எதனால் 'கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி' என்றெல்லாம் கூறுகிறீர்கள்?'

'எதனாலே கடவுள் இருக்கிறார்னு நீங்க சொல்றீங்க? சம்பாதிச்சவன், லாபம் அடைஞ்சவன் எவனும் 'எல்லாம் கடவுளாலே கிடைச்சுது'ன்னு சொல்றதில்லையே! தன்னுடைய திறமையாலே கிடைச்சுதுன்னுதானே நினைக்கிறான்? கடவுளை நம்பி மேன்மை அடைஞ்சவன், 'இதெல்லாம் கடவுள் சக்தி'ன்னு சொல்லுறானா? திருட்டுப் போனால் போலீசுக்குத் தகவல் சொல்லுகிறோம். பணம் இருந்தால் பெட்டியிலே வச்சுப் பூட்டறோம். இதெல்லாம் கடவுள் செயலா? இதுக்கெல்லாம் கடவுள் எதுக்கு? கடவுள் இருக்காருன்னு சொல்ல உரிமை உண்டுங்கிறீங்க. சோறு திங்க உரிமை உண்டு; சாணி

www.padippakam.com



பெரியார் : நம் நாட்டிலே யாரு இருக்காங்க அய்யா? யார் இருக்காங்கன்னு சொல்லட்டும் நான்? முடியலையே. எவனைப் பக்குவம் பண்ணினாலும் ரெக்கை முளைச்சா ஓடிடறான்.

மாறன் : இந்தக் காலத்து சமுதாயம் நல்ல வழிக்குத் திரும்பணுமானா—ஒருத்தன் என்னென்ன முறைகளைக் கையாளணும், அய்யா?

பெரியார் : முதல்ல அவன் பகுத்தறிவுவாதியாக ஆயிடணும்; அப்படி ஆயிட்டான்னா அவனுடைய போக்குக்கெல்லாம் நியாயம் கிடைக்கும்.

மாறன் : ஓகோ.

பெரியார் : அப்படி ஆகாமெ நமக்காக அவன் இருக்கான்னா, சும்மா ஏதோ வேப்பெண்ணை குடிக்கிறாப்போல ஏதோ சாப்பிட்டுக்கிட்டு–இந்த வேஷம் போட்டுக்கிட்டுத் தான் இருக்கமுடியும்; மனசு தெளிவாயிடணும் அவனுக்கு. வேறே ஒண்ணும் கிடையாது.

மாறன் : நாம் நல்லது செய்தால் அதைத் துணிஞ்சு செய்யணும், ஒண்ணுக்கும் பயப்பட்டோ அல்லது ஆசைப்பட்டோ செய்யவேண்டியதில்லை.

பெரியார் : செய்யவேண்டியதில்லே. இன்பமும் இல்லே, துன்பமும் இல்லே; பெருமையும் இல்லே, சிறுமையும் இல்லே—காரியம்தான், அப்படின்னு எண்ணம் வந்ததுன்னா அவனாலே ரொம்பத் தாராளமாய் முடியும்.

மாறன் : அதனாலே இந்த சமுதாயமும் பயன்பெறும்!

பெரியார் : அதான்; பொதுத் தொண்டுன்னா சமுதாயத் தொண்டுதானே? அதில்லாம சும்மா, அலங்காரமா வெளிப்பார்வைக்கு நானும் செய்யறேன்னா?

மாறன் : அது வேடிக்கைக் கூத்தாயிடும்.

பெரியார் : அவ்வளவுதான்.

மாறன் : அய்யா, ரொம்ப முக்கியமான கருத்துக்களெல்லாம் சொன்னீங்க. எத்தனையோ விஷயங்கள் சொன்னீங்க.

பெரியார் : ஒண்ணுமில்லே.

மாறன் : ரொம்ப நன்றிங்க.

பெரியார் : நான் சொல்றேன். இது என் கருத்துன்னு சொல்றேனே தவிர, இதுதான் முத்திரைன்னு கொள்ளக்கூடாதுன்னு கேட்டுக்கொள்கிறேன்.

மாறன் : இல்லை அய்யா. இந்தத் தலைமுறையிலே நீங்கள்தான் பகுத்தறிவு வாதத்தை இப்படி நல்லாச் சொல்றீங்க.

பெரியார் : என்னமோ சொன்னேன் (சிரிப்பு)

மாறன் : அய்யா, இந்தத் திருமண முறைகளிலே எல்லாம் ரொம்ப மாறுதல் பண்ணி எவ்வளவோ புரட்சிகள் செய்திருக்கீங்க. அந்தக் காலத்திலே எத்தனையோ பணத்தை செலவழிச்சு, எத்தனையோ குடும்பங்கள் கெட்டுப்போச்சு. அதோடுகூட அந்த மூடநம்பிக்கைகளை எல்லாம் சேர்த்து வைச்சிருந்தாங்க—விழாக்கள், குடும்பத்தில் நடக்கிற கைங்கரியங்களிலே எல்லாம். இப்ப அதெல்லாம் நீங்கிவருது. ஆக, பல விதத்திலே தாங்கள் இந்த நாட்டுக்குப் பணி செய்து, நல்லா முன்னேறி இருக்கிறோம்; நாடும் முன்னேறியிருக்குது.

பெரியார் : அது சரி. அப்படி ஒண்ணும் இல்லே.

மாறன் : அவர்களுடைய சார்பிலே உங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் : ரொம்ப என்னுடைய வாழ்த்துக்கள்.

மாறன் : வணக்கங்க!

[5-1-1970-ல் திருச்சி வானொலி ஒலிபரப்பு]



## 3. பெரியாருடன் பேட்டி

[எழும்பூர் பெரியார் திடலிலுள்ள 'விடுதலை' அலுவலகத்தை ஒட்டி அமைந்துள்ள இருக்கையில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கட்டிலில் அமர்ந்திருக்கிறார். 'கலைமகள்' பற்றி அருகிலுள்ள 'விடுதலை' நிருவாகி திரு. சம்பந்தத்திடம் விசாரித்தவாறு என்னை அன்புடன் வரவேற்று, 'உட்காருங்க' என்றார். பனியனுக்குமேல் தமக்குப்பிடித்த கறுப்புச் சட்டை அணிந்திருக்கிறார். வெண்மையான முடியும், தாடியும் இவரது சிவந்த மேனிக்கு அளிக்கும் கம்பீரயமே அலாதிதான். வட்டமான மூக்குக் கண்ணாடியின் வழியே ஊடுருவிப்பார்த்து, 'என்ன கேக்கப்போறீங்க? கேளுங்க' என்கிறார்.]

'நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?' என்று கேட்கிறேன்.

'எட்டு, ஒன்பது வயசு வரைக்கும் ஈரோட்டிலே திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படிச்சேன். அப்புறம் ஒரு ரூபாய் கொடுத்து அம்மை குத்திக்கொண்டு 'மாடல் ஸ்கூல்'லே சேர்ந்து படிச்சேன். நாலாவது அதாவது போர்த் ஸ்டாண்டர்ட் வரைக்குந்தான் படிச்சேன். அதுக்குமேலே படிக்கமுடியல்லே. கடைக்கு வந்துட்டேன்.'

'உங்கள் தகப்பனாரின் கடையா?'

'ஆமாம். கடையிலே மூட்டைக்கு விலாசம் போடறது முதலான எல்லா வேலைகளையும் கவனிச்சுக்கிட்டிருந்தேன்.'

'உங்கள் அண்ணா அதிகம் படித்தாரா?'

'அவரு படிச்சாரு. லோயர் போர்த் பாரம் வரை படிச்சாரு. அந்தக் காலத்திலே 'அப்பர் போர்த் பாரம்' படிச்சிருந்தா தாசில்தார் பதவி வரைக்கும் போகலாம்.'

'தினமும் குளிப்பதில் உங்களுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்று சொல்லுகிறார்களே; அது மெய்தானா?'

'குளிக்கவேணுங்கிற ஞாபகமே எனக்கு வர்றதில்லை. அதை ஒரு தொந்தரவாகவே நினைக்கிறேன். இப்ப நான் குளிச்சு ஆறுநாள் ஆச்சு. அந்தக் காலத்திலே, நான் சின்னப் பையனா இருந்தப்போ, எங்க வீட்டிலே எல்லாரும் தவறாமே குளிப்பாங்க. சந்தைக்குப் போய் வந்தா குளிப்பாங்க. போன இடத்திலே பல பேர்மேலே பட்டிருப்போமே, தீட்டாயிருக்குமே என்று குளிப்பாங்க. ஏன்? கக்கூஸ் போயிட்டு வந்தாக்கூடக் குளிப்பாங்க. 'தீட்டு' 'தொடக்கூடாது' என்பதிலெல்லாம் அவ்வளவா லட்சியமில்லை எனக்கு. வீட்டிலே என்னை அடக்கிப் பாத்தாங்க. முடியல்லை.'

'நீங்கள் எவ்வாறு நாத்திகரானீர்கள்?'

'நான் அதுக்காகன்னு ஒண்ணுமே படிக்கல்லே; ஆராய்ச்சி பண்ணலே. பக்குவம் அடையல்லே. என் பகுத்தறிவுக்கு எட்டினதைச் சொல்றேன்.'

'கடவுள் இல்லை' என்று சொல்ல உங்களுக்கு உரிமை இருக்கிற மாதிரி, ஆத்திகர்களுக்குக் 'கடவுள் இருக்கிறார்' என்று சொல்லவும் உரிமை உண்டல்லவா? பின் எதனால் 'கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி' என்றெல்லாம் கூறுகிறீர்கள்?'

'எதனாலே கடவுள் இருக்கிறார்னு நீங்க சொல்றீங்க? சம்பாதிச்சவன், லாபம் அடைஞ்சவன் எவனும் 'எல்லாம் கடவுளாலே கிடைச்சுது'ன்னு சொல்றதில்லையே! தன்னுடைய திறமையாலே கிடைச்சுதுன்னுதானே நினைக்கிறான்? கடவுளை நம்பி மேன்மை அடைஞ்சவன், 'இதெல்லாம் கடவுள் சக்தி'ன்னு சொல்லுறானா? திருட்டுப் போனால் போலீசுக்குத் தகவல் சொல்லுகிறோம். பணம் இருந்தால் பெட்டியிலே வச்சுப் பூட்டறோம். இதெல்லாம் கடவுள் செயலா? இதுக்கெல்லாம் கடவுள் எதுக்கு? கடவுள் இருக்காருன்னு சொல்ல உரிமை உண்டுங்கிறீங்க. சோறு திங்க உரிமை உண்டு; சாணி



படிப்பகம்

www.padippakam.com



திங்க உரிமை உண்டான்னு கேட்கிறேன். இருக்கிறவரைக்கும் கடவுள், சாமின்னு சொன்னவங்க என்ன சுகத்தைக் கண்டாங்க ?'

'கடவுள் உண்டா, இல்லையா' என்ற வாதத்துக்கு முடிவேது? எனவே இதைத் தொடர்ந்து வாதிப்பது உசிதம் அல்ல என்று கருதி, இந்தப் பிரச்சினையை விடுத்து அடுத்த கேள்விக்கு வருகிறேன்.

'ஈரோட்டில் உள்ள ஒரு பிள்ளையார் கோயிலுக்கு நீங்கள் 'டிரஸ்டி' என்று சொல்கிறார்களே; அது உண்மைதானா ?'

'ஆமாம். அது முதல்லே பிள்ளையார் தோயிலா அமையலே. எனக்குக் குழந்தை இல்லையே என்று பெரியவங்க நாகப் பிரதிஷ்டை செய்தாங்க. 1898ஆம் வருஷம். அரச மரத்துக்கும் வேப்ப மரத்துக்கும் கலியாணம் செய்து வச்சாங்க. குழந்தை பிறக்கல்லே. அங்கே அப்புறந்தான் பிள்ளையார் வந்தது.'

'உங்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் யார் ?'

'எல்லாருமே; என்னோடு நெருங்கிப் பழகிய எல்லாரும் எனக்கு நண்பர்கள். நண்பர்கள் கூட்டத்திலே நான் தலைவன். ராஜாஜியுடனும் நெருக்கம் அதிகம். அப்புறம் ஜஸ்டிஸ் கட்சியோடு தொடர்பு ஏற்பட்டது. அதிலே பலபேர் நண்பர்கள். குறிப்பிட்டு யாரைச் சொல்றது? நான் எல்லாருக்குமே நண்பன்தான்.'

'சமீபத்திலே, கல்லூரிகளையெல்லாம் மூடிவிடவேண்டுமென்று சொன்னீர்கள் இல்லையா ?'

'ஆமாம். சொன்னேன்.'

'நீங்களே லட்சக்கணக்கிலே பணம் உதவி, திருச்சியிலே ஒரு கல்லூரி ஏற்பட உதவி செய்தீர்கள். அதை எல்லாருமே ஒருமுகமாகப் பாராட்டுகிற நிலையிலே, கல்லூரிகளை மூடிவிடவேண்டுமென்று ஏன் சொன்னீர்கள் ?'

'நான் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. படிச்சவனுக்கு வேலை கிடைக்கல்லியே! ஒரு பையன் எட்டாம் வகுப்பு வரைக்கும் படிச்சா, உடல் உழைப்பிலே அவன் நம்பிக்கை இழக்கிறான். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிடுத்து. உதாரணம் சொல்றேன். 1940-ல் கம்மானுக்கு 9 அணா, 10 அணா கூலி கொடுத்தேன். கொல்லத்துக்காரனுக்கு ஒரு நாள் சம்பளம் 12 அணா. பெண் பிள்ளைக்கு ஒரு அணாதான் கூலி. இன்னிக்கு எட்டு ரூபாய், 10 ரூபாய் கூலி கேட்கிறாங்க. காரணம், ஜனங்க எண்ணம் படிப்பிலே ஈடு பட்டது. கொஞ்சம் படிச்சவன் மண்வெட்டி கையிலே எடுக்கிறது கவுரவக் குறைச்சல்னு நினைக்கிறான். வேலைக்கு ஆள் இல்லை. இன்னொரு பக்கம் படிச்சவனுக்கு வேலை இல்லை; வேலையில்லாத் திண்டாட்டம். காலேஜ் இருந்து என்ன உபயோகம் ?' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கேட்கிறார் பெரியார்.

(அப்பொழுது எங்கள் இருவருக்கும் காபி வழங்கப்படுகிறது. 'சாப்பிடுங்க' என்கிறார் பெரியார்.)

'நீங்கள் தினமும் எவ்வளவு தடவை காபி சாப்பிடுவீர்கள்? உங்களுடைய அன்றாட உணவுப் பழக்கம் எப்படி ?'

'காலையிலே 'பெட்காபி' சாப்பிடுவேன். ஆறரை மணிக்கு எழுந்திருப்பேன். யாராச்சும் வந்தாப் பேசிக்கிட்டு இருப்பேன்; இல்லேன்னா படிப்பேன். அப்புறம் இரண்டு இட்லி சாப்பிடுவேன். ரெண்டு மலைப்பழம் சாப்பிடுவேன். காபி சாப்பிடமாட்டேன். மத்தியானம் புலால் உணவு; ஒரு கப் தயிர். இரண்டு வாழைப்பழம். மாலையிலே ஒரு கப் காபி சாப்பிடுவேன். ஒரு நாளைக்கு ரெண்டு வேளை காபி. அப்புறம் இரவிலே இரண்டு



இட்லி; மலைப்பழம். ஒரு நாளைக்கு ஆறு மலைப்பழம் சாப்பிடுவேன். கூட்டம் ஏதும் இல்லாதபோனா எட்டு எட்டரை மணிக்குப் படுப்பேன்.'

'நீங்க எப்பொழுதுமே, எந்தக் கட்சி பதவிக்கு வருகிறதோ அதைத்தான் ஆதரிக்கிறதென்று ஒரு கொள்கை வைத்துக் கொண்டிருப்பதாகப் பலர் கருதுகிறார்கள். அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள் ?'

'ஆளும் கட்சியை நமக்கு வசப்படுத்தப் பார்ப்பேன். நம்ம கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டால் தொடர்ந்து ஆதரிப்பேன். எதிர்த்தால் ஒழிக்க முயற்சி செய்வேன்.' ஒளிவுமறைவின்றிக் கூறுகிறார்.

மதுவிலக்குக் கொள்கை பற்றி வினவுகிறேன். பளிச்சென்று பதில் வருகிறது திராவிடத் தந்தையிடமிருந்து.

'குடிப்பது தவறில்லை. கள் குடிச்சுச் செத்தவங்க எவ்வளவு பேர், சொல்லுங்களேன்? நான் குடிக்கிறதில்லை. எப்படியோ அந்தப் பழக்கம் எனக்கு ஏற்படாமே இருந்திருக்கு. ஆனால் நண்பர்களுக்கு வாங்கிக்கொடுத்திருக்கிறேன். கள்ளுக்கடை எல்லாம் மூடி இருந்தாங்களே, அப்போ குடிக்காம இருந்தாங்களா? குடிச்சுக்கிட்டுதான் இருந்தாங்க. ஒருத்தரும் அப்போ குடியைத் தடுக்கல்லே. வருமானம் குறைஞ்சதுதான் மிச்சம். திருட்டுத்தனமாகக் குடிச்சாங்க. திருட்டுப் போறதைத்தான் நான் சொல்லுவேன். பிடித்துக் கொடுக்கிறது என் வேலையில்லையே! ஜனங்க சோம்பேறியாய் ஆனதற்குக் காரணமே மது ஒழிப்புத்தான். கூலி உயரக் காரணம் இதுதான். சினிமாவுக்குப் போறதைவிட இது நல்லதுதான்.'

'வரதட்சிணைக் கொடுமை இப்போது எல்லாச் சாதியினரிடத்திலும் மிகவும் பரவியுள்ளதே, இதை ஒழிக்க நீங்கள் ஏன் பிரசாரம் செய்யக்கூடாது ?'

'படிச்சவன், படிக்காதவன் என்ற பேதம் உள்ளவரைக்கும் இந்த நிலை மாறாது. பெண் படிச்சவனை விரும்புகிறாள். ஆண் பிள்ளை படிச்ச பெண்ணைத் தேடறான். படிச்சவங்களுக்குக் கிராக்கி ஏற்பட்டுப் போச்சு. போட்டி உண்டாயிடுத்து. அதனாலே வரதட்சிணை வாங்குறது இயற்கையாயிடுத்து. பணம் வாங்கக் கூடாதுன்னா, முப்பது பவுன் நகை போடச் சொல்லுகிறான். நம்ம பொருளாதார அமைப்பு அப்படி ஆயிட்டுது. அப்போதெல்லாம் பார்ப்பனர்களுக்கு மட்டுந்தான் வரதட்சிணை கொடுக்க வசதி இருந்தது. இப்ப எல்லாரும் படிக்கிறாங்க. பெண்களும் இப்போ நிறையப் பேர் படிக்கிறாங்க. வேலைக்குப் போறாங்க. கொடுக்க வசதி இருக்கிறதாலே இது பரவலாயிடுச்சு. 22 வயசு வரைக்கும் பெண்களுக்குக் கலியாணம் செய்யாமல் இருந்தால் வரதட்சிணைக் கொடுமையும் குறைஞ்சு போயிடும். வயசு ஆயிட்டாப் பெண்களே புருஷனைத் தேடிப்பாங்க. வரதட்சிணை மறைஞ்சு போயிடும். முன்னெல்லாம் ரொம்பச் சின்ன வயசிலே பெண்களுக்குக் கலியாணம் செய்து வந்ததாலேதான் இது வளர்ந்து பெருகிப் போச்சு. பெண்கள் ஆண்களை நம்பித்தான் வாழணுங்கிற நிலைமை மாறணும். அப்போ இது சரியாயிடும். சட்டம்போட்டா மட்டும் போதாது. அதைக் கண்டிப்பாய் நிறைவேத்தணும். அமுலாக்க வேணும்.'

'இன்றைய சமுதாயம் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்பிருந்த நிலையிலிருந்து மாறுபட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. இளைஞர்களிடையே முற்போக்கான கொள்கைகள் பரவி வருகின்றன. சாதிவேறுபாடுகள் குறைந்து வருகின்றன. இருந்தும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களையே அவர்கள் பிராமணர்கள் என்ற காரணத்துக்காகத் 'தமிழர் அல்லர்!' என்று சொல்லுகிறார்கள். 'கைபர் கணவாய் வழி வந்தவர்கள்' என்றுகூடப் பேசுகிறார்களே! இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?'

படிப்பகம்

www.padippakam.com



இதைக் கேட்ட பெரியார் சிரித்தவாறு, 'ஏன் என்னையே தமிழன் இல்லேன்னு சொல்றாங்களே? என் தாய்மொழி கன்னடம் என்பதாலே சொல்றாங்க. பெரும்பாலானவங்க என்னைத் தெலுங்கர்—நாயுடு என்றே நினைக்கிறாங்க. ஜஸ்டிஸ் பார்ட்டியை ஆரம்பிச்சது சுயமரியாதைக் கொள்கைக்குத்தானே? அதை ஆரம்பிச்சது யார்? சர். பி. டி. செட்டியார்—தெலுங்கர். டி. எம். நாயர்—மலையாளி. நான்—கன்னடக்காரன். தமிழன் யார் இதைச் செய்தான்?' என்று கேட்கிறார்.

பெரியாருக்குத் தமிழ் தவிரக் கன்னடமும் தெலுங்கும் நன்றாகத் தெரிந்த மொழிகள். கன்னடமொழியில் பேச இவருக்கு அதிக வாய்ப்பில்லை. 'நான் தெலுங்கில் பிரசங்கம் செய்வேன். ஆனால் அந்த அளவுக்குத் தாய்மொழி கன்னடத்தில் பிரசங்கம் செய்ய முடிவதில்லை' என்கிறார்.

'விடுதலை' இதழை நீங்கள்தானே துவக்கினீர்கள்? எந்த வருஷம்?

'விடுதலை ஆரம்பித்து முப்பத்தஞ்சு வருஷம் ஆச்சு. 1936-ல் காலணா விலையில் 'விடுதலை'யை ஆரம்பிச்சேன். அதற்கு முன்னால் 'திராவிடன்' நானே நடத்தினேன் (1920). பிறகு, 1925-ல் 'குடி அரசு' ஆரம்பிச்சேன். 'விடுதலை' ஆரம்பிச்ச காலத்திலே பொப்பிலி ராஜா மாசம் ரூ. 250 கொடுத்துவந்தார். நஷ்டஈடு மாதிரி. மாதம் மாதம் செக் கொடுத்துவிடுவார். சில மாதங்களிலேயே பத்திரிக்கை நல்லா ஓடவும் அப்புறம் அது தேவைப்படலே.'

'விடுதலை'யை 'விடுதலை' என்று நீங்கள் எழுதக் காரணம்...?

'தமிழில் எழுத்துக்கள் அதிகம். 'லை', 'னை', 'ணை' இந்த மாதிரி பல எழுத்துகள் தேவையே இல்லாதவை. இதுமாதிரி எழுத்துக்கள் அதிகமா இருக்கிறதாலே தான் தமிழ் மற்ற மொழிகளைவிடக் கஷ்டமாயிருக்கு. இங்கிலீஷ்காரன் சமஸ்கிருத சுலோகங்களைக்கூட ஒப்பிக்கிறான்; ஆனால் தமிழ்ப் பாட்டுகளை அவனாலே படிச்சு ஒப்பிக்க முடியல்லே. எனக்குத் தெரிந்த கலெக்டர் ஒருத்தர்—இங்கிலீஷ்காரர்—தெலுங்கு நல்லாப் பேசுவாரு. ஆனால் அதுமாதிரி அவராலே தமிழ் பேசமுடியாது. தமிழ் எழுத்துக்களில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். எழுத்துக்களின் எண்ணிக்கை கொறைஞ்சால் படிக்கிறது சுலபமாகும்.'

'தமிழைக் 'காட்டுமிராண்டி பாஷை' என்று நீங்கள் குறிப்பிட்டீர்களே...?'

'ஆமாம், சொன்னேன். என்ன தப்பு? ஒருத்தனோடு ஒருத்தன் சண்டை போட்டுக்கிட்டுத் தமிழிலே திட்டறானே...எப்படித் திட்டறான்? சண்டைக்காரனைமட்டுமா திட்டறான்? அவன் அம்மா, அக்கா, பொண்டாட்டி—எல்லாரையும்னா இழுக்கிறான்? (இந்த இடத்தில் சில நடைமுறைத் தமிழ் வசவுகளை உதாரணத்துக்குக் குறிப்பிடுகிறார் திரு. பெரியார். அவற்றை நான் எழுதாமலே வாசகர்கள் புரிந்து கொள்ளக் கூடுமே?) அதேமாதிரி சண்டைவந்து இங்கிலீஷ்லே திட்டினா 'பூல்'னு திட்டலாம்; 'இடியட்'னு திட்டலாம். தமிழிலே திட்டறமாதிரி அவ்வளவு கேவலமாகத் திட்டறதுண்டா? அதுவும், கிராமங்களிலே பெண்பிள்ளைங்க சண்டைபோட்டுக்கிறதைக் கேட்டா நான் சொல்லறது புரியும்' என்று பெரியார் கூறும்போது, அருகிலுள்ள திரு. என். என். சம்பந்தம், 'ஏன் அய்யா! இங்கே சென்னையிலேமட்டும் என்ன வாழுது? அதைவிட மோசமாயிருக்கு!' என்கிறார்.

பெரியார் தலையாட்டியவாறே, 'உம்; அப்படியா? அப்போ நான் சொன்னதிலே என்ன தப்பு? இந்திமேலே இருந்த துவேஷம் தமிழ்மேலே அன்பா மாறித்து. அதுதான் உண்மை. குழந்தைகளெல்லாம் வீட்டிலேயே இங்கிலீஷில் பேசவேணும். அது நல்ல நாகரிகத்தையும் கொண்டு வரது. ஏன் 'குறளை' எடுத்துக்குங்க! நான் மட்டுந்தான் குறளைக் கண்டிக்கிறேன்.'



'ஏன் கண்டிக்கிறீர்கள்?'

'குறளோடு நின்னுட்டா வளர்ச்சியே குன்றிவிடுமேன்னுதான். குறள் இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தினது. பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கிவிட்டது. பெண் ஒழுக்கம் பற்றி எவ்வளவு சொல்லி இருக்கு 'குறள்'லே? ஆண் ஒழுக்கம்பத்தி...? '...தாம் வீழ்வார்' ...என்ற குறளைப் பாருங்க அதுதான் மோட்சம் என்கிறார் வள்ளுவர். அந்தக் காலத்து நாகரிகம் அப்படி. இந்தக் காலத்துக்குக் குறள் கருத்துக்கள் எல்லாமே ஒத்துவர முடியுமா? நான் குறள்மாநாடு நடத்தியதாலே சில பேர் என்னைக் கண்டிச்சாங்க. கலைஞர்கூட 'அதை (குறள்) ஒண்ணையாவது விட்டுவிடக் கூடாதா'ன்னு கேட்டாரு. குன்றக்குடி அடிகளாரும் கேட்டுக்கிட்டாரு. இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தியது குறள். அதை அப்படியே இப்பவும் நாம் ஏத்துக்கணும்னா...!' தம் மனதுக்குச் சரியென்று படாத எந்தக் கருத்தையும் யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளுவதில்லை பகுத்தறிவுத் தந்தை. கட்டுப் பாடுகளை அறவே வெறுப்பவர் திரு. ஈ. வெ. ரா.

அதுபற்றி அவர்கூறுகிறார்: 'கட்டுப்பாடு எதுவுமே தேவை இல்லை என்பவன் நான். இளமையிலேயே நான் எதிலும் கட்டுப்பட்டதில்லை. திருடக்கூடாதுன்னா, ஏன்? என்று யோசிப்பேன், அப்பவே. திருடறது 'பாவம்'னா ஒப்புக்கமாட்டேன். மதத்தின் பேராலே மக்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிச்சிருக்காங்க. அதனாலே ஜனங்கள் பிரீயாக (சுதந்திரமாக) இருக்கமுடியல்லே. என் வீட்டிலே வளர்ற இந்த சின்னப் பிள்ளைங்க, என்னை 'அப்பா'ன்னு கூப்பிடறாங்க. அன்பா இருக்காங்க. நாளைக்கு இவங்க வளர்ந்து பெரியவங்க ஆனா, சாமி கும்பிடுவாங்களா? மாட்டாங்க! எந்தக் கட்டுப்பாடும் தேவை இல்லை. உணவுக் கட்டுப்பாடுந்தான்! உடம்புக்குக் கெடுதி செய்கிற எதையும் திங்க வேண்டாம். ஆனா ஆடுதின்னறவன் மாடுதின்னக் கூடாதா? ஆடும் புல்தான் தின்னறது. மாடும் புல்தான் தின்னறது. மாடு தின்னாப் 'பாவம்'னு சொல்றாங்க. காரணம், மதக் கட்டுப்பாடுதானே! மனித சமுதாயத்தின் மனத்தை மாத்தவேணும். திருடினாப் பாவம்னு சொன்னாப் போதாது. திருடவேண்டிய அவசியம் இல்லாத வகையிலே சமுதாய நிலையை மாத்தணும்.' ஆழ்ந்து சிந்தித்துத் தெளிந்து அவர் கூறும் கருத்துக்கள் நம்மையும் சிந்தனையில் ஆழ்த்துகின்றன.

தமது சொற்பொழிவுகளில் அவர் 'சாதி'யைக் குறிப்பிடுவதுண்டு. அதுபற்றிக் கேட்டதற்கு 'மதம், கடவுள் எல்லாம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே ஏற்பட்டது. அதையே பின்பற்றுவதால் இன்றைய உணர்ச்சி ஜனங்களுக்கு வரவில்லை. நாளடைவிலே மக்கள் அதிகம் சிந்திப்பாங்க. அவங்க சீர்திருந்தவேண்டுமே என்பதுதான் என் நோக்கம். துவேஷம் இல்லை. துவேஷ அடிப்படையில் சொன்னால்தான் ஜனங்கள் சிந்திப்பாங்க; சீர்திருந்துவாங்க' என்றார் பெரியார்.

'இராஜாஜிபற்றி உங்கள் கருத்து என்ன?' என்று வினவுகிறேன். இராஜாஜி அவர்கள் அமரர் ஆகிய மூன்றாவதுநாள் நிகழ்ந்த பேட்டி இது.

'நான் 'விடுதலை'யிலே நேத்து தலையங்கம் எழுதி இருக்கேன். அதைப் பாருங்களேன்' என்று பெரியார் கூறுகிறார். விடுதலை நிருவாகி திரு. சம்பந்தம் 26-12-72 தேதியிட்ட 'விடுதலை' இதழ் ஒன்றினை என்னிடம் கொடுத்து 'அய்யா கைப்பட எழுதிய தலையங்கம் இது' என்கிறார்.

'அந்தக் கையெழுத்துப் பிரதி இருக்கிறதா?' என்று கேட்டு அதனையும் வாங்கிப் பெரியாரின் கையெழுத்தைப் பார்க்கிறேன். அமரர் இராஜாஜிபற்றிப் பெரியார் எழுதிய தலையங்கத்தின் கையெழுத்துப் பிரதியில் முதல் பக்கத்தை வாசகர்களின் பார்வைக்கு அப்படியே சமர்ப்பிக்கிறோம். அதனைப் படித்துப் புரிந்துகொண்டு அச்சுக் கோப்பது 'விடுதலை' அலுவலகத்தினருக்கு எளிது என்று கூறுகிறார் திரு. சம்பந்தம். ஆனால் நமது வாசகர்களுக்கு அப்படி இராதெனத் தோன்றுவதால் அதன் வாசகம் இதோ:

படிப்பகம்

www.padippakam.com



இராஜாஜியின் மறைவு: 'தமிழ்நாட்டில் ஒப்பிலா மணியாய் வாழ்ந்து அரும்பெரும் காரியங்களைச் சாதித்த பெரியார் இராஜாஜி 95ஆம் வயதில் முடிவெய்தி மறைந்துவிட்டார். அவரது பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு தெரிவிக்கவேண்டுமானால் இராஜாஜி இல்லாது இருந்திருந்தால் மகாத்மா காந்தியே இருந்திருக்கமாட்டார். இது மாத்திரமல்ல. இந்திய தேசிய காங்கிரசே இருந்திருக்க மாட்டாது.'

தலையங்கத்தின் இறுதியில் பெரியார் கையெழுத்திட்டுள்ளார். இது போன்ற முக்கியமான சந்தர்ப்பங்களில் அவரே கைப்பட எழுதுகிறாராம். நிரம்பப் படிப்பதும் உண்டாம்.

இராஜாஜி வயதில் பெரியவரா அல்லது நீங்களா? என்று பெரியாரைக் கேட்கிறேன். பலருக்கு இந்த அய்யம் உண்டல்லவா?

'அவர்தாம் பெரியவர். அவர் கவர்னர் ஜெனரலா இருந்தபோது ஒரு சமயம் நான் அவருடைய வயதைக் கேட்டேன். அப்போ தெரிஞ்சுது அவர்தான் மூத்தவர்னு. அவர் டிசம்பர் 1878. நான் பிறந்தது 17-9-1879. கிட்டத்தட்ட ஒன்பது மாசம் அவர் என்னை விடப் பெரியவர்' என்று விளக்குகிறார் பெரியார். அமரர் இராஜாஜி 'பெரியவர்'; திரு. ஈ. வெ. ரா 'பெரியார்.'

விடைபெறுமுன் 'மக்களுக்கு நீங்கள் கூற விரும்பும் சேதி ஏதாகிலும் உண்டா?' என்று கேட்கிறேன்.

'இன உணர்ச்சி, காலித்தனம் கூடாது' என்கிறார் பெரியார்.

பெரியாருடன் உரையாடுவது ஒரு சுகமான அனுபவம். என்ன கேள்வி கேட்டாலும் 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' என்ற வகையில் எதையும் பூசி மெழுகாமல் நறுக்குத் தறித்தாற்போல் பதிலிறுக்கிறார். 'சிந்தனைக்குத் தெளிவாகாத விஷயங்களை நம்புவதை நான் ஏற்க முடியாது' என்று கூறும் இந்தப் பகுத்தறிவாளர், குழந்தை உள்ளம் படைத்தவர். தொண்ணூற்று நான்கு வயதிலும் தெளிவாக ஆழ்ந்து, சிந்தித்துத் தடுமாற்றமோ, குழப்பமோ இல்லாமல் கருத்துக்களை வெளியிடுகிறார். இப்படிச் சொன்னால் எதிராளி என்ன நினைப்பானோ என்று அவர் கவலைப்படுவதே இல்லை.

இவருடைய மேடைப் பேச்சுக்களில் அடிக்கடி 'வெங்காயம்' என்ற சொல் அடிபடுவது வழக்கம். இந்தப் பேட்டியின்போது ஒருமுறைகூட அந்தச் சொல்லினை அவர் கையாளவில்லை. நூறு நிமிஷங்கள் ஓடினதே தெரியவில்லையே!

[27-12-1972-ல் திரு. பாணன் அவர்களின் பேட்டி—'கலைமகள்' பிப்ரவரி, 1973]

## 4. என் வாரிசு யார்?

கேள்வி: உங்களுடைய அரசியல் வாரிசு யார்?

பதில்: எனக்கு அரசியல் வாரிசு என்று யாரும் கிடையாது; என்னுடைய கொள்கைகளும் கருத்துக்களும்தான் வாரிசு; வாரிசு என்பது தானாகவே ஏற்படவேண்டும்.

கேள்வி: உங்களுடைய கொள்கைகள், கருத்துக்கள், எண்ணங்கள், கோட்பாடுகள் இவைகளைப் பரப்ப ஊர் தோறும் பகுத்தறிவுப் பிரச்சார நிலையங்கள் அமைக்கப் போகிறீர்களா?

பதில்: இதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் என்னென்னவோ செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு இருந்தேன். ஆனால், இப்போதுள்ள சூழ்நிலையில் விடுதலைப் போராட்டம்தான் முக்கியமாகத் தெரிகிறது.



கேள்வி: முன்பு ஒரு முறை திருச்சியில் நடந்த 'சிலை திறப்பு விழாவில்' 'தமிழ்' காட்டுமிராண்டி மொழி என்று சொன்னீர்களே! அப்படியானால் தமிழர்கள் காட்டுமிராண்டிகளா?

பதில்: 'தமிழ்' காட்டுமிராண்டி மொழி என்று சொல்லக் காரணம்–இன்றைக்கும், 2000 ஆண்டுகளுக்கு முன்பு எந்த மூடப் பழக்கவழக்கங்களில் இருந்து வந்தோமோ, அதில் தானே இன்னும் இருந்து கொண்டு இருக்கிறோம். அந்தப் பழக்க வழக்கங்களில் இருந்து நம்மை இன்னும் நாம் மாற்றிக்கொள்ளாமல், 2000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளவற்றையே உதாரணங்கள் காட்டிக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி வந்தால் அதற்கு என்ன பொருள்?

கேள்வி: தமிழ் இலக்கியங்களை நீங்கள் குறை கூறுவது ஏன்?

பதில்: தமிழ் இலக்கியங்களை எழுதிய புலவர்கள் அவற்றைக் கடவுளோடும், மதத்தோடும் இனத்தோடும் இணைத்து எழுதி வைத்திருக்கிறார்களே தவிர, தமிழ் வளர வேண்டும் என்பதற்காக என்ன செய்து வைத்திருக்கிறார்கள்? தமிழ் என்றாலே சைவம், மதம், கடவுள் என்று நினைக்கிறானே தவிர, மக்கள் வாழ்க்கைக்கு, வளருவதற்கு எவனும் எதுவுமே சொல்லவில்லையே!

அதை எப்படி நம்முடைய வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும், ஏற்றுக்கொள்ள முடியும்? இன்னமும் அரசியல் சட்டத்திலும்கூட, மதமும் இனமும் சாதியும் வளர்க்கப்படுகிறதே தவிர, அதை மாற்ற எவன் என்ன வழி சொல்லியிருக்கிறான்?

['மாலை முரசு'—16-9-1973]

## 5. என் பழக்கங்கள்

கேள்வி: தங்களைப் போல் 95 வயது வரையிலும் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில்: எப்போதும் 'ஆக்டிவாக' (சுறுசுறுப்பாக) இருக்கவேண்டும்.

கேள்வி: இந்த வயதிலும், தாங்கள் பல மைல்கள் சுற்றுப் பயணம் செய்கிறீர்களே, உடல்நலம் பாதிக்காதா?

பதில்: வயதிற்கும், இதற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. என்னைப் பொறுத்த வரை சும்மா இருக்கப் பிடிக்காது. சுற்றுப்பயணம் செய்தால்தான் நன்றாக இருக்கிறது.

கேள்வி: எத்தனை மணி நேரம் தூங்குகிறீர்கள்?

பதில்: சாதாரணமாக இரவு 8, 9 மணிக்குத் தூங்கிவிடுவேன். பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகள் இருந்தால், இரவு 11 மணிக்கு, 12 மணிக்கு மேல் தூங்குவேன். எப்படியும், 8 மணி நேரம் தூங்கிவிடுகிறேன்.

கேள்வி: தங்கள் உணவுப் பழக்கம் என்னென்ன?

பதில்: எப்பொழுதும், காலை 6 மணிக்கு எழுந்துவிடுவேன். 8 மணிக்கு 2 இட்டிலி, ஒரு வாழைப்பழம் சாப்பிடுவேன். முன்பெல்லாம், 4, 3 வாழைப் பழங்கள் சாப்பிட முடிந்தது. ஆனால் இப்போது ஒரு பழத்திற்கு மேல் சாப்பிட முடியவில்லை. அதன் பிறகு, பார்வையாளர்களைச் சந்திப்பேன். இடையிடையே சிறிது காப்பி, பால் அருந்துவேன். மதியம் 12 – 1 மணிக்குள் ஒரு கரண்டி சாதம்; சிறிதளவு மாமிசம், தயிர், குருமா, ஒரு வாழைப் பழம் இதுதான் ஆகாரம். மாமிசம் சாப்பிடாவிட்டால், அவ்வளவு திருப்திகரமாக இருக்காது.

படிப்பகம்

www.padippakam.com



நிருபர் : மாமிசம் சாப்பிடுவதால் ஜீரண சக்தி பாதிக்கப்படவில்லையா?

பதில் : என்னைப் பொறுத்தவரை, மற்ற உணவுப் பதார்த்தங்களைவிட மாமிசம் சாப்பிட்டால் ஜீரணமாகிவிடுகிறது. அதனால் எந்தவிதத் தொந்தரவும் கிடையாது. மாமிசம் இல்லாவிட்டால்தான் தொந்தரவு. இரவு 7 மணியிலிருந்து 8 மணிக்குள் 2 இட்டிலி, ஒரு வாழைப் பழம், ஒரு டம்ளர் பால், அத்துடன் சரி. காப்பியும், பாலும்தான் முக்கிய உணவு.

கேள்வி : பொதுக்கூட்டங்கள், மற்ற நிகழ்ச்சிகள் உள்ள நாட்களில் என்ன செய்வீர்கள்?

பதில் : பொதுக்கூட்டங்கள், இரவு 10 – 11 மணிக்கு முடிந்ததும் அதன் பின்பு தான் சாப்பிடுவேன்.

கேள்வி : ஒரு நாள் பொழுதை எப்படிக் கழிக்கிறீர்கள்?

பதில் : முன்பெல்லாம் நிறையப் புத்தகங்கள் படிப்பேன்; எழுதுவேன். ஆனால் இப்போது படிக்கக் கஷ்டமாக இருக்கிறது. எழுதுவதற்குச் சலிப்பாக இருக்கிறது.

யாராவது கட்டுரைகள் கேட்டால் எழுதித் தருவேன். அத்துடன் முன்பு மாதிரி மூளை தெளிவாக இல்லை. கஷ்டப்பட்டுச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. முன்பெல்லாம் ஒன்றைப் பற்றித் தொடர்ச்சியாக வரும். ஆனால் இப்பொழுது நினைவாற்றல் குறைந்துவருகிறது.

கேள்வி : மது அருந்தும் பழக்கம் பற்றித் தங்கள் கருத்து என்ன? தங்களுடைய அனுபவத்தை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

பதில் : இது நாள் வரை நான் மதுவை அருந்தியதே யில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரை பலருக்கு வாங்கிக்கொடுத்து இருக்கிறேன். மது அருந்துவதால் கெடுதி இல்லை. அளவுக்கு மேல் போனால்தான் எதுவுமே கெடுதலே தவிர, அளவோடு இருந்தால் எந்தவிதக் கெடுதலும் இல்லை. 100-க்கு 90 பேர் அளவோடுதான் குடிக்கிறார்கள்.

கேள்வி : முன்பெல்லாம் மாலை நேரங்களில் கார் மூலம் உலாவப் போவீர்களே, இப்போது போவதுண்டா?

பதில் : என்றைக்காவது ஒரு நாள் போவேன். முன்புபோல் இப்போது போக முடிவதில்லை. பொழுது போகவே கஷ்டமாகத்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட சமயங்களில் போவதுண்டு.

கேள்வி : கிளர்ச்சி, போராட்டம் நடத்த வேண்டும் என்கிறீர்களே, அது எப்படி இருக்கும்?

பதில் : என் உடல் வேண்டுமானால் தளர்ந்திருக்கலாம். ஆனால், நான் அவற்றில் நேரடியாகவே ஈடுபட நினைக்கிறேன். நான் என்ன சொல்லுகிறேனோ, அதை நானே முன்னின்று செய்தால்தானே நன்றாக இருக்கும்? ஒதுங்கிக்கொள்வது என்பது எனக்குப் பிடிக்காது.

கேள்வி : ஒரு குறிப்பிட்ட இனத்தார்மீது தங்களுக்கு வெறுப்பு ஏற்படக் காரணம், தாங்கள் அரசியலில் ஈடுபட்ட சமயத்தில் முதல் முதலாக ஒரு விருந்தில் தாங்கள் அலட்சியமாக நடத்தப்பட்டதுதான் என்று சொல்லப்படுகிறதே, அதுதான் உண்மையா?

பதில் : எனக்கு, யார் மீதும் வெறுப்புக் கிடையாது. நான் எதையும் லட்சியம் செய்யாமல், முரட்டுத்தனமாக யதேச்சையாகத் திரிந்தேன். அந்தச் சமயத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களும் சமுதாயத்தில் இருந்த மூடப்பழக்க வழக்கங்களும்தான் காரணமே தவிர, வேறு காரணம் எதுவுமில்லை. ஆனால், அந்தக் காலத்தில் விருந்துகளில்கூட நம்மை மிக இழிவாகவும், தரக் குறைவாகவும் நடத்தி ஒதுக்கியே வந்தார்கள்.

['மாலை முரசு'—16-9-1973]



# 4. அறிவுரை

## 1. ஆசிரியர்களுக்கு

சகோதரிகளே! சகோதரர்களே!

இன்று நீங்கள் எனக்குச் செய்த வரவேற்பு, ஆடம்பரம், உபசாரம், வரவேற்புப் பத்திரம் முதலியவைகளைக்கண்டு எனது மனம் மிகவும் வெட்கப்படுகிறது. இவ்வித ஆடம்பரங்களுக்கு நான் எந்த விதத்தில் தகுந்தவனென்பது எனக்கே தெரியவில்லை. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் என்று சொல்லப்பட்ட பெருத்த கல்விமான்களாகிய உங்களது மாநாட்டுக்கு, அக் கல்வியை ஒரு சிறிதும் பயிலாத நான் எவ்விதத்தில் தகுதியுடையவனாவேன்? உங்களின் அன்பான வேண்டுகோளை மறுக்கப் போதிய தைரியமில்லாத காரணத்தாலேயே ஒருவாறு இப் பதவியை ஏற்கவேண்டியவனாக இருக்கிறேன். என்னுடைய வாழ்நாளில் சுமார் 2 வருஷ காலந்தான் நான் பள்ளியில் படித்திருப்பேன். அவ்விரண்டு வருஷமாகிய எனது 8 வயதுக்கு மேல்பட்டு 11 வயதுக்குள்பட்ட காலத்தில் நான் பாடம் படித்த காலத்தைவிட உபாத்தியாயரிடம் அடிபட்ட காலந்தான் அதிகமாயிருக்கும். இதையறிந்த என் பெற்றோர்கள், 'இவன் படிப்புக்கு லாயக்கில்லை' என்பதாகக் கருதித் தாங்கள் செய்துவந்த தொழிலாகிய வர்த்தகத்தில் என்னுடைய 11-வது வயதிலேயே ஈடுபடுத்திவிட்டார்கள். இந்த 2 வருஷக் கெடுவிலேயும் என் கையெழுத்துப் போடத்தான் கற்றுக்கொண்டேன் என்று சொல்லலாம். ஆகவே, கல்வி முறையிலும் உங்கள் குறைகளைப்பற்றியும் நான் உங்களுக்கு எந்த விஷயத்தையும் சொல்லக்கூடிய சக்தி என்னிடத்தில் இல்லை. ஏதோ என் புத்தி அனுபவத்திற்கெட்டியவரையில் சில வார்த்தைகளைச் சொல்லுகிறேன்.

தற்கால ஆசிரியர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் ஆசிரியத் தொழிலை ஒரு புனிதமான கடமையென்பதாகக் கருதிப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தாலும், அத் தொழிலுக்குரிய கடமைகளைச் சரியானபடி உணர்ந்து நடப்பதற்கில்லாத நிலையில் இருந்துகொண்டு, அத் தொழிலைத் தங்கள் வயிற்றுப்பாட்டிற்கு நடத்தி வருவதே வழக்கமாய் இருக்கிறது. ஆசிரியர்கள் இம் மாதிரி மகாநாடுகள் கூடிப் பேசுவதும், தீர்மானிப்பதும், தங்களுக்குச் சில சவுகரியத்தை உண்டாக்கிக் கொள்ளவும், தங்கள் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொள்ளவுமே யல்லாமல் தங்களால் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவோ, தேச முன்னேற்றத்திற்கு அனுகூலமான கல்வியைப் போதிக்கும் சக்தியை யடையவோ ஒரு பிரயத்தனமும் செய்ததாக நான் அறியவே இல்லை.

முதலாவது, நீங்கள் படித்த கல்வியும் நீங்கள் கற்றுக்கொடுக்கப்போகும் கல்வியும் வயிற்றுப் பிழைப்புக்கு ஓர் ஆதாரமாகக் கருதிக் கற்கவும், கற்பிக்கப்படவும் ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல், மக்கள் அறிவுத் தத்துவத்திற்கோ, தேசத்திற்கோ, ஒழுக்கத்திற்கோ ஒரு பலனையும் அளிக்க முடியாததாய் இருக்கிறது என்பது நீங்கள் அறிந்த விஷயமேதான். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி, சகல்கலா கல்வி என்பது வரையிலும் கவனித்தால், தற்காலம் அடிமைத் தன்மையையும், சுயமரியாதையற்ற தன்மையையும் உண்டாக்கிக் கொடுமையான ஆட்சிமுறைகொண்ட ஒரு அரசாங்கத்திற்கு உதவிசெய்து வயிறு வளர்க்கும் தேசத் துரோகிகளை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகத்தானே இருக்கிறதேயல்லாமல் வேறென்ன இருக்கிறது?

சாதாரணமாக, ஆரம்ப ஆசிரியர்கள் என்ற பெயரையே யாருக்கு உபயோகப்படுத்தலாமென்றால், முதலில் நமது பெண்மக்களுக்குத்தான் உபயோகப்படுத்தலாம். ஏனெனில், நமது குழந்தைகளுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் அவர்களுடைய தாய்மார்களாகிய



படிப்பகம்

www.padippakam.com



நமது பெண்களேயாவார்கள். அக் குழந்தைகளுக்கு 6, 7 வயதுவரையிலும் தாய்மார்களே தான் உபாத்தியாயர்களாக இருக்கிறார்கள். மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களிலும் இவைதான் காணப்படுகின்றன.

எனவே, இரண்டாவதாகத்தான் நீங்கள் ஆசிரியர்கள் ஆவீர்கள். நீங்களிருவரும் எப்படிப் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றீர்களோ அப்படியே அவர்கள் தேசத்திற்கும், தேச நன்மைக்கும், ஒழுக்கத்திற்கும் உரிய மக்களாய் வாழக்கூடும். எனவே தேசம் மக்களாலும், மக்கள் ஆசிரியர்களாலும் உருப்பட வேண்டி இருக்கிறது. ஆனால், அப்பேர்ப்பட்ட ஆரம்ப ஆசிரியர்களாகிய பெண்களோ நமது நாட்டில் பிள்ளைபெறும் இயந்திரங்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது அறிவுண்டாக நாம் இடங்கொடுத்தாலல்லவா, பிள்ளைகளுக்கு அறிவுண்டாக்க அவர்களால் முடியும்? ஆகவே, அந்த முதலாவது ஆரம்ப ஆசிரியர்களின் யோக்கியதை இப்படியாய்விட்டது!

அடுத்தாற்போலுள்ள, இரண்டாவது ஆரம்ப ஆசிரியர்களாகிய உங்கள் யோக்கியதையோ உங்கள் வயிற்றுப்பாட்டுக்கு 'கான்பரன்ஸ்' கூட்டவேண்டியதாகப் போய்விட்டது. உங்கள் இருவர்களாலும் கற்பிக்கப்படப்போகிற பிள்ளைகள், எப்படித் தக்க யோக்கியதை அடையமுடியும்? கல்வியென்பது வயிற்றுப் பிழைப்புக்காக மாத்திரமல்ல; அது அறிவுக்காகவும் ஏற்பட்டது என்பதாக நாம் எடுத்துக்கொண்டால், மக்கள் சுயமரியாதையோடும், சுதந்திரத்தோடும், மற்ற மக்களுக்கு இன்னல் விளைவிக்காமலும், அன்பு, பரோபகாரம் முதலியவைகளோடும் கண்ணியமாய் உலக வாழ்க்கையை நடத்தத் தகுந்த ஞானமும் உண்டாகத் தக்கதாக இருக்கவேண்டும். இவைகளை அறிந்தே வள்ளுவரும் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்' என்றும், 'தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்றும், 'ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்' என்றும் சொல்லி இருக்கின்றார். இதற்கேற்ற கல்விக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நாய்க்கு நாலு கால், பூனைக்கு வாலுண்டு, கண்ணில்லாதவன் குருடன், திருடாதே, அடிக்காதே என்று சொல்லிக்கொடுப்பதினால் என்ன பலன் ஏற்பட்டுவிடக்கூடும்? இவைகள் எல்லாம் குழந்தைகள், தானாகவே படித்துக்கொள்ளும். ஒருவனை அடித்தால் அவன் திரும்பி அடித்துவிடுவான்; ஒருவனை வைதால் அவன் திரும்பி வைதுவிடுவான்; திருடினால் பிடித்து நன்றாக உதைத்துவிடுவார்கள் என்பதும், நாயும் பூனையும் கண்ணில் பார்க்கும்போதே கால் எவ்வளவு என்பதும், வாலுண்டென்பதும் தெரிந்துகொள்ளுவார்கள். இதற்காக இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டமும், பணச்செலவும், மெனக்கெடும் வேண்டியதில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

நீங்கள் முதலில் மக்களுக்குச் சுயமரியாதை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும்; மானம், ஆண்மை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும்; சமத்துவத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும்; மக்களிடத்தில் அன்பு இருக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும்; தேசாபிமானத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும். இவைகளில் ஏதாவது உங்களால் கற்பித்துக் கொடுக்கப்படுகிறதா? என்பதை உங்கள் மனதையே கையை வைத்துக் கேட்டுப் பாருங்கள். நீங்கள் மாத்திரமல்ல, உங்களைவிடப் பெரிய சகலகலா வல்லபர்களிடத்தில் படித்து, எம். ஏ., டாக்டர் முதலிய பட்டங்கள் பெற்ற பையன்களும், ஒரு காப்பிக் கடைக்குப் போனால் தனது சுயமரியாதையற்று அங்கு எச்சில் கிண்ணம் தூக்குபவனைக் கண்டு 'சாமி ஒரு கப் காப்பி கொண்டு வா' என்று கூப்பிடுகிறான். தான் மோட்சத்திற்குப் போவதற்கு மற்றொருவன் கையில் பணத்தைக் கொடுத்து அவன் காலில் விழுந்து கும்பிடுகிறான்; தன் தேசத்தையும், மக்களையும் காட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பதில் போட்டி போடுகிறான். இந்தப் பட்டமெல்லாம் கல்வியாகுமா? இதைப் பெற்றவர்களெல்லாம் படித்தவர்களாவார்களா? வண்ணான், அம்பட்டன், தச்சன், கொல்லன், சக்கிலி முதலியோர் எப்படித் தங்கள் தங்கள் தொழிலைக் கற்றுத் தேர்ந்திருக்கிறார்களோ, அப்படியே தற்காலம் பி.ஏ., எம்.ஏ., என்ற படித்தவர்கள் என்போர்களும் அந்தப் பாடத்தைக் கற்றவர்களாவார்கள். வண்ணானுக்கு எப்படிச் சரித்திர பாடம் தெரியாதோ, அப்படியே பி.ஏ. படித்தவர்களுக்கு வெளுக்குந் தொழில் தெரியாது. அம்பட்டனுக்கு எப்படிப் பூகோளப் பாடம் தெரியாதோ, அப்படியே எம்.ஏ. படித்தவனுக்குப் பிறருக்குச் சவரம் செய்யத் தெரியாது. சக்கிலிக்கு எப்படி இலக்கண இலக்கியங்களும் வேத வியாக்கியானங்களும் தெரியாதோ, அப்படியே வித்வான்களுக்கும் சாஸ்திரிகளுக்கும் செருப்புத் தைக்கத் தெரியாது. ஆகவே வண்ணான், அம்பட்டன், சக்கிலி முதலியோர்களைவிட பி.ஏ., எம்.ஏ., வித்வான், சாஸ்திரி முதலிய பட்டம் பெற்றவர்கள் ஒரு விதத்திலும் உயர்ந்தவர்களுமல்லர்; அறிவாளிகளுமல்லர்; உலகத்திற்கு அனுகூலமானவர்களுமல்லர். இவைகளெல்லாம் ஒரு வித்தை அல்லது தொழில்தானே தவிர, அறிவாகாது. இவ்வளவும் படித்தவர்கள் முட்டாள்களாகவும், சுயநலக்காரர்களாகவும், சுயமரியாதையற்றவர்களாகவும் இருக்கலாம். இவ்வளவும் படியாதவர்கள் பரோபகாரிகளாகவும், அறிவாளிகளாகவும், சுயமரியாதையுள்ளவர்களாகவும் இருக்கலாம். எனவே, இவைகளல்ல கல்வியென்பது நமக்கு விளங்கவில்லையா?



நமது நாட்டின் கேட்டிற்கும் நிலைமைக்கும் முதல் காரணம் தற்காலக் கல்வி முறை என்பதே எனது அபிப்பிராயம். முற்காலத்தில் பனை ஓலையில் எழுதித் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்து படித்த படிப்பைவிடத் தற்காலப் படிப்பு மக்களுக்கு என்ன நன்மை செய்துவிட்டது? ஓலைச் சுவடியும் எழுத்தாணியும் ஆற்றுமணலும் போய், காகிதக் குப்பைகளுக்கும் பெரும்பெரும் புத்தகங்களுக்கும் இங்கி, பெட்டி, பேனா, பென்சில்களுக்குமாக நமது பணங்கள் சீமைக்குப் போக ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல் வேறு பலனுண்டா? 'படிப்பில்லாத' என்கிற முற்காலத்து மக்களைவிட, 'படிப்புள்ள' என்கிற தற்காலத்து மக்கள் ஒழுக்கத்தில் எவ்விதம் உயர்ந்திருக்கிறார்கள்? படிப்பில்லாத காலத்தைவிட அன்பில், அன்னியோன்யத்தில், நம்பிக்கையில் படிப்புள்ள மக்கள் என்ன ஒத்திருக்கிறார்கள்? முன்காலத்தில் ஒருவன் வாங்கின கடனைக் கொடுக்காவிட்டால் அவன் வீட்டு வாயிலில் ஒரு பசுவையும் அதன் கன்றையும் தீனி போடாமல் கட்டிவிடுவது வழக்கம். இந்தப் பட்டினியின் பாவத்திற்கு அஞ்சி பெண்சாதியின் தாலியை விற்றாவது கடனைக் கொடுத்துவிட்டுத்தான் வீதிப்புறம் நடப்பான் என்று எனது தகப்பனார் சொல்லி இருக்கிறார். கல்வி ஏற்பட்ட காலமாகிய இப்பொழுது அம் மாதிரிச் செய்தால் படித்தவர்கள் என்கின்ற வக்கீல்கள், 'பாலைக் கறந்துவந்து நமக்குக் கொடுத்து விடு; பாவம் வந்து உன்னை என்ன செய்துவிடும் பார்க்கலாம்' என்று தைரியம் சொல்லி ஏமாற்றி வழிகாட்டி வருவார்கள். இதனாலேயே தற்காலம் எத்தனை மாஜிஸ்ட்ரேட் கச்சேரி, எத்தனை முன்சீப் கோர்ட்டு, எத்தனை செஷன்ஸ், அய்க்கோர்ட், எத்தனை போலீஸ் கச்சேரி ஏற்பட்டிருக்கிறது, பாருங்கள்! இவைகளெல்லாம் 'படிப்பில்லாத' என்கிற முற்காலத்தில் இருந்தனவா? படிப்பு என்னும் தற்காலக் கல்வி முறையல்லவா மக்களை இவ்வளவு ஒழுக்க ஈனமாக நடக்கத் தூண்டி, அல்லல்படுத்தி, நாட்டையும் சமூகத்தையும் பாழ்படுத்திவருகிறது?

அறிவுக் கல்வியின் யோக்கியதை இப்படியானால் தொழிற் கல்வியின் யோக்கியதை இதைவிட மோசமாக இருக்கிறது. தொழிற்கல்வி என்னும் பெயரால் தற்காலம் நமது பணமும், நேரமும் மக்களின் அறிவும் வீணாவதல்லாமல் வேறென்ன பலனைக் கண்டோம்? தற்காலப் பள்ளிக்கூடங்களில் தொழிற்கல்வி என்ற பெயருடன் கற்றுக்கொடுக்கும் தொழிற் கல்வி முறையும் கொஞ்சமும் சரியானதல்ல. கொஞ்ச காலமாகத் 'தேசியக் கிளர்ச்சி' ஏற்பட்டதின் பலனாய் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் தொழிற்கல்வி என்பதாகச் சொல்லி, தச்சுவேலையும், விவசாயமும், இராட்டினம் சுற்றுதலும், நெசவு நெய்தலும் முதலிய வேலைகளுக்கென்று அனாவசியமாய்ப் பணத்தையும் நேரத்தையும் பாழ்படுத்துகின்றனர். வக்கீல் மகனுக்கும், ஜட்ஜ் மகனுக்கும், மிட்டாதார் மகனுக்கும், வியாபாரி மகனுக்கும்,

படிப்பகம்

www.padippakam.com



பெரிய நிலச்சுவான்தார்கள் மகனுக்கும், ஒருங்கே உட்காரவைத்து சில மணி நேரம் தச்சு வேலை கற்றுக் கொடுப்பதாலும், இராட்டினத்தைச் சுற்றச் சொல்வதாலும், என்ன பயன் விளையக்கூடும்? எல்லாத் தொழிலும் கற்றிருக்கட்டும் என்பதற்காகவே சொல்வோமானால், இந்த இரண்டு மூன்று தொழிலாலேயே உலகத் தொழில்எல்லாம் தெரிந்து விடுமா? ஜீவனோ பாயத்துக்கு என்று சொல்வோமானால் மேற்கண்ட பிள்ளைகளெல்லாம் இந்தத் தொழிலை ஜீவனோபாயத்திற்காக ஏற்று ஜீவிக்க முடியுமா? ஆகவே, அறிவுக்காவது, ஜீவனத்திற் காவது இந்தத் தொழில்கள் இப் பிள்ளைகளுக்கு உபயோகப்படுகிறதா? உயர்தரப் பாடசாலை என்பவைகளில் 'சயன்ஸ்' என்றும், சரித்திரம் என்றும் எதைஎதையோ பணத்தையும், காலத்தையும் செலவழித்துச் சொல்லிக் கொடுத்து, உருப்போடச் செய்து கற்றுத் தேர்ந்த பிறகு, 30 ரூபாய்க்கு ஏவினவேலைசெய்து, படிப்பினுடைய சக்தியையும் அறிவையும் கொண்டல்லாமல் மேல் எஜமானனுக்கு மானத்தையும் மனச் சாட்சியையும் விற்று நல்ல பிள்ளையாவதன்மூலம் சம்பளத்தை உயர்த்தி, வாங்கிய சம்பளத்தில் வாழ்ந்து தன் காரியத்தைப் பார்த்துக் கொண்டதோடு சாவதல்லாமல், வேறு ஏதாவது பல் குத்துகிற துரும்புக்காவது உதவப்படுகிறதா? அல்லது, அந்தத் தொழிலுக்காவது இந்தப் படிப்புகள் உபயோகப்படுத்தப்படுகிறதா? அதுபோலவே, இக் கைத்தொழில்களும் வாழ்வுக்கோ, பிழைப்புக்கோ உபயோகப்படாமல் போகிறது. கைத்தொழில் கற்றுக் கொடுப்பதென்றால் கூடுமானவரையில் பிள்ளைகளின் இயற்கை அறிவிற்கும், வாழ்விற்கும், வாழ்க்கைக்கும் தக்கபடி தரந் தரமாகப் பிரித்து, அதஅதுகளுக்குத் தகுந்த தொழில்களைச் சொல்லிக் கொடுத்து அதை அவர்களுக்கு உபயோகப்படும்படி செய்யவேண்டும்.

பெண்களுக்கு இராட்டினம் சொல்லிக்கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஆண் பிள்ளைகளுக்குக் கதரைக் கட்டச்செய்வதும், கதரை ஆதரிக்கவேண்டிய அவசியத்தைச் சொல்லிக் கொடுப்பதும் இராட்டினத்தைவிட முக்கியமானதாகும். அதை விட்டுவிட்டு, உபாத்தியாயரும் கதர் கட்டாமல் பிள்ளைகளையும் கதர் கட்டச் செய்யாமல், இவர்களின் எஜமானர்களாகிய தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு முதலிய தலைவர்களும் அங்கத்தினர்களும் கதரைக் கட்டாமல் பொதுமக்களின் வரிப் பணத்தை அள்ளி வெறும் இராட்டினத்தை வாங்கி, பிள்ளைகளின் நேரத்தையும் பஞ்சையும் வீணாக்கி நூலைக் குப்பையில் போடுவதில் இலாபமென்ன? கதர் கட்டுவதின் அவசியத்தை அறியாத ஒரு பையன் இராட்டினம் சுற்றுவதில் பிரயோஜனமென்ன? கதரைக் கட்டாத உபாத்தியாயர்கள் கதரைக் கட்டும்படி உபதேசம் செய்வதில் பிரயோஜனமென்ன? 1000 பொய் இராட்டினம் சுற்றி நூல்களைக் குப்பையில் போடுவதை விட, 100 பிள்ளைகள் கதர் கட்டுவது மேலான தர்மம். ஆகவே, இம் முறைகள் காரியத்துக்கு உதவாததாகவும், உண்மைத் தொழில் தத்துவமற்றதாகவும் நடைபெறுகின்றது.

அறிவும் தொழிலும் இப்படியானால், உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கிற பொறுப்பும், பற்றுதலும், பக்தியும் இதைவிட மோசமானதென்றே சொல்ல வேண்டும். சாதாரணமாய், ஒரு உபாத்தியாயருக்கும் ஒரு மாணாக்கனுக்கும் உள்ள பற்று தலையும் பக்தியையும்விட, ஒரு தாசிக்கும் அவளுடைய அன்றன்றைய நாயகனுக்கும் உள்ள பக்தியும், பற்றுதலும் மேலானதென்றே சொல்லலாம். எப்படியெனில், ஒரு தாசிக்கு ஓர் இரவு முழுவதாவது ஒரு நாயகன் இருக்கக்கூடும். நமது மாணாக்கர்களுக்கோ மணிக்கு இரண்டு உபாத்தியாயர்கள் வருகிறார்கள். ஒரு நிலையான உபாத்தியாயரிடமிருந்து ஒரு பொறுப்பான விஷயங்களை உணரக் கூடிய சந்தர்ப்பங்களே கிடையாது. உபாத்தியாயர் களும் சம்பளம் உயர்ந்த பள்ளிக்கூடங்களுக்குப்போவதும், மாணாக்கர்களும் தங்களுக்குச் சவுகரியப்பட்ட பள்ளிக்கூடத்திற்குப்போவதும் சுயேச்சையாகி விட்டது. பிள்ளை படிக்க வேண்டியதும், உபாத்தியாயர் அவனைத் தேறச்செய்ய வேண்டியதும் அவரவர்கள் இஷ்டத்தைப் பொறுத்ததாகவே போய்விட்டதே யல்லாமல், பொறுப்பும் கவலையும் ஒருவருக்கும் கட்டுப்பட்டதல்லாததாகவே இருந்து வருகிறது.



கல்வி, அறிவு, தொழில்முறை, குருபக்தி ஆகியவற்றின் யோக்கியதை இப்படி என்றால் உபாத்தியாயர்களின் காலட்சேபமோ நினைப்பதற்கே பரிதாபமாக இருக்கிறது. முன்காலத்தில் உபாத்தியாயர்களுக்கு காலட்சேபத்தைப்பற்றிய கவலையே இருந்ததில்லை. உபாத்தியாயர்களுக்கு ஒரு சிறுகுடிசை இருந்தால் போதும். பிள்ளைகளுக்கு அக் குடிசைக்கு முன்னால் ஒரு பந்தலோ, கொட்டகையோ இருந்தால் போதும். பிள்ளைகள் படிப்பதற்கு அய்ந்தாறு மட்டை பனை ஓலையும், அரை வண்டி மணலும் இருந்தால் போதும். எழுது கோலாக ஒரு கூர்மையான ஆணி இருந்தால் போதும். மற்றபடி உபாத்தியாயர்களுடைய காலட்சேபத்தைப்பற்றி உபாத்தியாயர்களுக்குக் கவலையே இருந்தது கிடையாது. வெள்ளாமை காலத்தில் பையன்களிடம் சொல்லிவிட்டால் கூடைகூடையாய்த் தானியங்கள் வந்து குவிந்து விடும். உபாத்தியாயரே போட்டுவைக்க இடமில்லாததால்—'போதும்' என்று சொல்லி விடுவார். எண்ணெய், விறகு முதலியவைகள் மாதத்துக்கு ஒருதடவையும், காய்கறி பதார்த்தங்கள் தினமும் தானாகவே பிள்ளைகள் மூலம் வீட்டுக்கு வந்து சேர்ந்து விடும். பண்டிகைகளுக்கு வேஷ்டித் துணிகளும், மேற்செலவுக்கு இனாம் பணங்களும் தானாகவே வந்து சேர்ந்து விடும். உபாத்தியாயர் வீட்டில் நடக்கும் கல்யாணம், கார்த்திகை, நன்மை, தீமை முதலிய சடங்குகளுக்கு அவ்வப்போது பெற்றோர்களும், பையன் களுடைய சுற்றத்தார்களும் தாராளமாகக் கொடுத்து நடத்தி விடுவார்கள்.

பையனுடைய படிப்புக்கு உபாத்தியாயர் ஜவாப்தாரியாகவும், உபாத்தியாயர் களுடைய காலட்சேபத்திற்குப் பிள்ளைகளின் பெற்றோர்கள் ஜவாப்தாரிகளாகவும் பரஸ்பரம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஒரு பையன் வீட்டில் ஏதாவது குற்றஞ்செய்து விட்டாலும், அவன் படித்ததாகச் சொல்லும் பாடங்களில் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லா விட்டாலும் உபாத்தியாயருக்குக் கொடுப்பதில் குறைத்து விடுவார்கள். உபாத்தியாயர்கள் பெயரைச் சொன்னால் பையன்கள் நடுங்குவார்கள். சாப்பாட்டுக் கவலை யென்பதே உபாத்தியாயர்களுக்குத் தெரியவே தெரியாது. உபாத்தியாயர் வீட்டுப் பெண் களோடு குடும்பக் கவலை நின்றுவிடும். எவ்விதத்திலும் அவைகள் உபாத்தியாயர் காதுக்கு எட்டவே எட்டாது. அக் காலத்திய படிப்புசெலவு இப்போதைய செலவுகளில் பதினாறில் ஒரு பங்குகூட இருக்காது. இப்பொழுதோ பிள்ளைகள் கொடுக்கிற பணம் கணக்கு வழக்கில்லை. புத்தகம், காகிதம், பேனா, பென்சில், சித்திரசாமான், விளையாட்டுக் கருவி, இரசாயன சாமான், பெஞ்சு, நாற்காலி, மேசை கட்டடங்கள் இவைகளுக்காகும் செலவுகளே மக்கள் தாங்க முடியாததாகப் போய்விடுகிறது. இதன்மேல் உபாத்தியாயர்களுக்குக் கொடுப்பதும் தாங்கமுடியாததாகவே ஏற்பட்டு விடுகிறது.

சாதாரணமாக, ஆரம்ப ஆசிரியர்கள் என்போருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் சில ஆபீஸ்களில் பியூன்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் கொடுக்கப்படுவதைவிடக் குறை வாகத்தானிருக்கிறது. குழந்தை குட்டிகளோடு வாழ்கிற ஒரு குடும்பத்திற்கு 30 ரூபாயாவது இருந்தால்தான் கவலையில்லாமல் தன் காரியத்தைக் கவனிக்கக்கூடும். அதுகூட இல்லாமல் கஷ்டப்படுகிறதைப் பார்க்கும்பொழுது நமக்கு மிகவும் பரிதாபகரமாகத்தானிருக்கிறது.

'பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்வதுபோல்' நமது அரசாங்கத்தார் கள், சாராயத்தை விற்று அதில்வரும் இலாபத்தை எடுத்து கல்விக்காகச் செலவு செய்கிறார்கள். ஆகவே இன்னும் கொஞ்சம் கல்வி சவுகரியமும், சம்பளச் சவுகரியமும் வேண்டுமானால் இன்னுங் கொஞ்சம் அதிகமாகக் கள், சாராயம் குடித்து, அதனால் அதிக வரும்படியை உண்டாக்கும் பொறுப்பை நம் தலையில் வைத்திருக்கிறார்கள். இம் மாதிரிக் குடியில் வரும் இலாபத்தினால்தான் படிப்புக்குச் செலவு செய்யவேண்டும் என்று ஏற்படுமானால், மக்கள் படிக்காமல் தற்குறியாக இருந்தாவது, உபாத்தியாயர்களெல்லாம் தெருவில் கல்லுடைத்து ஜீவனம் செய்து கொண்டாவது, கள் குடியை நிறுத்துவதே மேலானதென்பது என் அபிப்பிராயம்.

படிப்பகம்

www.padippakam.com



இம் மாதிரிப் படிப்பு வலுத்ததின் பலனாய் படிப்பின் அவசியமில்லாமல் வேறு வழியில்
வாழக்கூடிய பெருத்த குடும்பங்களெல்லாம் பாழாகிப் போய்கொண்டே வருகின்றன.
எவ்வளவுக்கெவ்வளவு உயர்தரப் பள்ளிக்கூடங்களென்பது அதிகமாய்க் கொண்டு
வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் படித்த பெரும்பான்மைப் பிள்ளைகளின் குடும்
பங்கள் கெட்டுக்கொண்டே வருகின்றன.

உதாரணமாக, பூமிகளின் சொந்தக்காரர்களின் பெயர்களைக் காட்டும் 'செட்டில்
மெண்ட் ரிஜிஸ்டர்' என்னும் பதிவுப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தீர்களானால், அதிலிருந்து
தெரிந்து கொள்ளலாம். 40, 50 வருஷங்களுக்கு முந்திய 'செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரி'லுள்ள
பூமிக்குச் சொந்தக்காரரின் பெயர்களை 10 வருஷத்துக்கு முன்னுள்ள புத்தகத்தைப்
பார்ப்பீர்களானால் 100-க்கு 75 பாகம் மாறிப்போய்த்தானிருக்கும். அக் காலத்தில் கவுண்டர்,
நாயக்கர், பிள்ளை, படையாட்சி, ரெட்டி, நாயுடு என்றிருப்பது போய், இப்பொழுது அய்யர்,
அய்யங்கார், ஆச்சாரியார், செட்டியார் முதலிய உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள்,
வியாபாரிகள் ஆகியவர்கள் பெயருக்கே மாறியிருக்கும். காரணமென்னவென்றால், உயர் தரப்
பள்ளிக்கூடம் வந்தவுடனே எல்லாப் பிள்ளைகளும் அதில் படிக்கச் சேர்ந்து விடுகிறார்கள்.
குடியானவர்களும் தங்கள் பிள்ளைகளை அதிலேயே சேர்த்துவிடுகிறார்கள். அந்தப்
பிள்ளைகளுக்குப் படித்துத்தான் ஜீவனம் செய்ய வேண்டுமென்கிற அவசியமில்லாததாலும்,
'இந்தக் கூட்டங்களும் படித்து விட்டால், உத்தியோகங்கொண்டே வாழவேண்டியவர்
களாகிய நம்ம கூட்டத்தார் வாயில் மண் விழுந்து விடுமே' என்கிற பயங்கொண்ட உபாத்தி
யாயர்களாலும், இப் பிள்ளைகள் சரியாகப் படிக்க முடியாமல் 5, 6 வருஷம் பெஞ்சுக்கு
வாடகை கொடுத்ததோடு தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டும், சிகரெட், பீடி பிடித்துக்
கொண்டும், வேடிக்கை உடைகள் தரித்துக் கொண்டும், பொறுப்பும் ஒழுக்கமுமற்ற
சம்பாஷணைகள் பழகிக்கொண்டும், உல்லாசமாய்த் திரிந்து 2, 3 தடவை பரீட்சையில்
தோல்வியுற்று கடைசியாய், 'இனி படிப்பு வராது' என்கிற முடிவுடன் வீடுபோய்ச் சேரு
கின்றார்கள்.

இந்தப் பட்டணவாசப் பள்ளிப் பழக்கமானது பட்டிக்காட்டு வாசத்துக்குச் சவுகரிய
மில்லாமல் வீடு, வாசல்களும், விவசாயப் பண்ணைகளும் தங்களுக்குப் பிடித்தமில்லாததாகி,
நோக்கமெல்லாம் பட்டணங்களிலேயே கொண்டுபோய் விடுகிறது. அல்லது, சிலருக்குப்
பட்டிக்காட்டிலேயே பட்டணங்கள்போல் வீடுவாசல் கட்டி சுகமனுபவிக்க ஆசை ஏற்பட்டு
விடுகிறது. இதன்மூலம் தங்கள் விவசாயம் கெடுவதோடும் தங்களுக்குக் கிரமமாய் வரும்
பொருள் வருவாயும் கெடுவதோடு, அதிகச் செலவும் ஏற்பட்டு அதன்மூலம் கடன்காரர்களாகி
வீண் விவகாரங்களில் ஈடுபட்டுக் கடைசியாய் இக் குடும்பச் சொத்தானது விவகாரத்தில்
அதிகாரிகளுக்கு இலஞ்சத்தின் மூலமாகவும், வக்கீல்களுக்குப் 'பீசி'ன் மூலமாகவும்,
லேவாதேவிக்காரர்களுக்கு வட்டியின் மூலமாகவும் போய்ச்சேர்ந்து விடுகிறது. இந்தக்
காரணங்களால் இவர்கள் பூமிகள் அவர்கள் பேருக்குப் பட்டா மாறுவதும் அல்லது அவர்கள்
விலைக்கு வாங்குவதுமாய் முடிந்து விடுகிறது. இனியும் ஒரு 50 வருஷத்திற்கு இக் கல்வி
முறை இப்படியே இருக்குமானால் நமது பூமிகளெல்லாம் உத்தியோக வக்கீல் கூட்டத்
தாருக்கும், லேவாதேவிக் கூட்டத்தாருக்குமே போய்ச் சேர்ந்துவிடும். இப்பொழுதுள்ள
மிராஸ்தாரர்களின் பிள்ளைகளெல்லாம் அந்தக் கூட்டத்தாரிடம் பண்ணையாட்களாகவும்,
குடிவாரக்காரர்களாகவும் போய்ச் சேரவேண்டியதுதான்.

அரசாங்கத்தாரும் கல்விக்காகக் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு பண்ணு
கிறார்கள். அவ்வளவும் உபாத்தியாயர்களுக்குப் போவதாயிருந்தால் உபாத்தியாயர்
களுக்குக் கஷ்டமே இருக்காது. பணத்தையெல்லாம் கல்வியின் பெயரால் மேற்சொன்னபடி
சாமான்களுக்கும், கட்டடங்களுக்கும், மற்றும் பாதிரிமார்களுக்கும் உயர்ந்த சம்பளம்
பெறும் உபாத்தியாயர்களுக்கும், இவற்றை மேற்பார்வை பார்ப்பது என்பதாகப் பல் பெரிய



பெரிய சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்களுக்குமே போய்விடுகிறது. இவ்வளவு செலவு
களையும் அனாவசியமாய்ச் செய்துவிட்டு, ஆரம்ப ஆசிரியர்களையும் பட்டினி போட்டு
விட்டு, இந்த ஆசிரியர்களை ஆடுமாடுகளைவிடக் கேவலமாகவும் மதிக்கிறார்கள்.

ஜனப் பிரதிநிதிகள் என்கின்ற சட்டசபை அங்கத்தினர்கள் முதலிய அரசியல்
வாழ்வுக்காரர்களோ உங்களிடம் வரும்போது உங்களிடத்தில் ரொம்பவும் அனுதாபம்
உள்ளவர்கள்போல் காட்டிக்கொண்டு, 'உங்களுக்குச் சம்பளம் 40 ரூபாய் வேண்டும்;
50 ரூபாய் வேண்டும்' என்ற ஆசை வார்த்தை சொல்லி உங்களைத் திருப்திசெய்து,
உங்களால் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஓட்டுகளைப் பெற்றுக்கொண்டு போய்விடு
கிறார்கள். பொது ஜனங்களிடம் போகும்போது அவர்களைப் பார்த்து, 'சர்க்காரார் அதிக
வரி வசூல் பண்ணுகிறார்கள். அனாவசியமாய் அதிகமான ஆள் அம்புகள் வைத்து
அரசாங்கச் செலவைப் பெருக்கி விட்டார்கள்; நாங்கள் போய்ச் சம்பளத்தையும் செலவையும்
குறைத்து உங்களுக்கு வரியைக் குறைக்கிறோம்' என்று மேடைமேல் நின்று பேசிவிடு
கிறார்கள். உங்களிருவரையும் ஏமாற்றி, சட்டசபையில் போயிருந்துகொண்டு, சட்டசபையில்
உட்கார்ந்துகொண்டு, உங்களுக்கும் அவர்களுக்கும் திருப்தி ஏற்படும்படியாக ஏதோ
இரண்டு கேள்வி கேட்டதாகப் பாவனை காட்டிவிட்டு, உங்களையும் பொது ஜனங்களையும்
வஞ்சிக்கிற காரியங்களுக்காகச் சர்க்காருக்கு உள் உளவாய் இருந்து தங்களுக்குப் பெரு
மையும், உத்தியோகங்களும், பதவியும் கிடைப்பதற்கும் தங்கள் சொந்தக் காரியங்கள்
ஏதாவது சாதித்துக் கொள்ளுவதற்கும் ஆளாகி விடுகிறார்கள். வரி குறைப்பதும், சம்பளம்
கூட்டுவதும் ஒன்றுக்கொன்று பொருந்தாத விஷயம். வரியையும் குறைத்து, உங்கள்
சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமானால் பெரிய உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்
தையும், நான்மேலே சொன்ன வீண் செலவுகளையும் குறைக்கும்படி சொல்லுவதற்கு
இவர்களுக்குத் தைரியம் வேண்டும். இவர்களே மாதம் 2000, 3000, 4000, 5000 சம்பளம்
வாங்கிக்கொண்டு மந்திரி, தலைவர் முதலிய பதவிகளுக்கு ஆசைப் பட்டுக்கொண்டும்,
இவர்களே இப்பேர்ப்பட்ட பதவிகளை மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்து, அவர்களை
ஆதரித்தும் அதன்மூலம் தாங்கள் பிழைக்கப் பிரயத்தனப் பட்டுக்கொண்டும், இவர்களுடைய
செலவுக்கே தினம் 10, 15, 40, 50 வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டும்,
இவர்கள் போக்குவரத்துக்கே முதலாவது, இரண்டாவது வகுப்பு, இரட்டைப் படிகள் வாங்கிக்
கொண்டும், இவர்கள் நடவடிக்கை நடத்தும் கூட்டங்களுக்கே 2 இலட்சம், 3 இலட்சம்,
2 கோடி, 4 கோடி அனுமதித்துக்கொண்டு இராஜபோகமனுபவிப்பவர்கள்; வேறுயாருடைய
எந்தச் செலவைக் குறைத்து, வரி உயர்த்தாமல், உங்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தக்
கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே, இவ்வித அரசியல் புரட்டுகள் நமது
நாட்டிலுள்ள வரையிலும், உங்களைப் போன்றவர்கள் இவைகளை ஆதரித்து இப் புரட்டர்
களை மரியாதை செய்கிறவரையிலும் உங்களுக்கு மாத்திரமல்ல—இந்த நாட்டுக்கே விமோ
சனம் இல்லையென்பதுதான் என் அபிப்பிராயம். இனியாவது இந்த அரசியல் புரட்டர்களின்
சூழ்ச்சிகளிலிருந்து தப்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

எனவே, இவை ஒவ்வொன்றையும் இன்னமும் கிளற, கிளற மிகவும் மோசமாகவேதான்
வந்து கொண்டிருக்கும். இம் மகாநாட்டைப் பொறுத்த வரையிலும் இதிலேற்பட்டிருக்கிற
சில தீர்மானங்களைப் பொறுத்த வரையிலும்-உங்களுக்கிருக்கும் கஷ்டங்களையும், குறை
களையும் அறிந்து நான் மிகவும் அனுதாபப்படுகிறேன். உங்களுக்கு இன்னும் சம்பளம்,
மரியாதை முதலியன உயரவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்காக
நீங்கள் செய்யும் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ள எனக்கும் ஆசையிருக்கிறது. ஆனால்
அந்நோக்கங்களையும் கிளர்ச்சிகளையும் உங்கள் சுய நன்மைக்கு மாத்திரமென்றில்லாமல்,
நமது மக்களின் உண்மையான ஆரம்ப ஆசிரியராய் இருக்க வேண்டுமென்று வேண்டிக்
கொள்ளுகிறேன். கல்வி விஷயத்தில் நமது நாட்டுக்கு ஏற்படவேண்டிய திருத்தத்தில்
உங்களுடைய உதவியும், தாலுக்கா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி முதலியவற்றின்

படிப்பகம்

www.padippakam.com



உதவியும் ரொம்பவும் வேண்டியிருக்கிறது. உண்மையான தேசாபிமானக் கண்ணோடு பார்ப்பீர்களானால், உங்களுக்கு இவைகளெல்லாம் விளங்காமற்போகாது. இங்கு விஜயம் செய்திருக்கும் தாலுக்கா, ஜில்லா போர்டு அங்கத்தினர்களையும் தலைவர்களையும் இவ் விஷயங்களை யெல்லாம் கவனித்து உங்களுக்கு அனுகூலமாய் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை நீங்கள் ஒருபொருட்டாய் மதித்துத் தலைவனாகத் தேர்ந்தெடுத்த தற்கு என் மனதில் சரியென்று பட்டதை உங்கள் முன் கொஞ்சமும் ஒளிக்காமல் பேசியிருக் கிறேன். இவற்றுள் கொள்ளத் தக்கதும், தள்ளத் தக்கதும் இருக்கலாமென்றே நினைக் கிறேன். ஆதலால் உங்களுடைய அறிவையும், ஆற்றலையும் இவைகளுள் செலுத்தி, தள்ளத் தக்கதைத் தள்ளி, கொள்ளத் தக்கதைக் கொண்டு அமுலில் கொண்டுவர வேண்டுகிறேன்.

[போளூரில், 24-4-1927-ல் நடந்த ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டில் சொற்பொழிவு
—'குடி அரசு' 1-5-1927]

## 2. மாணவர்களுக்கு

பெரியோர்களே! தோழர்களே!

நான் அடிக்கடி மாணவர்களுக்குச் சொல்லுவேன், 'மாணவர்களே! நீங்கள் படிப்பை ஒழுங்காகக் கவனித்துப் படியுங்கள்; உங்கள் பெற்றோர்கள் கடன் வாங்கி, எப்படியாவது நீங்கள் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்கிற ஆசையால் செலவழித்து, உங்களைப் படிக்கவைக்கிறார்கள்; மற்ற மேல்சாதிக்காரர்களைப்போல—பார்ப்பனர்களைப்போல உங்களுக்கு யாதொருவிதமான வசதியும் இல்லை; நீங்களாகவேதான் படித்து முன்னுக்கு வரவேண்டும்; அப்படி இருக்கும்போது நீங்கள் படிப்பைத் தவிர வெளி விஷயங்களில் கலந்துகொள்ளாதீர்கள்; அவைகளில் எப்போது வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். முதலில் உங்கள் படிப்பில் முழுக்கவனம் செலுத்தி நன்றாகப் படியுங்கள்' என்றெல்லாம் சொல்லுவேன்.

எந்தக் காரியத்திற்கும், அனேகமாக நான் மாணவர்களையே அழைக்கமாட்டேன். அவர்களைக் கூப்பிடுவதென்றாலே மிகவும் யோசிப்பேன். ஏனென்றால், அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களையும் எதிர்ப்பையும் தாண்டிப் படிக்க வேண்டியவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாமும் புகுந்து அவர்களைக் கெடுப்பது என்றால் என்ன நியாயம் என்ற கருதித்தான், மாணவர்களை வெளி விஷயங்களில் கலந்துகொள்ள வேண்டாமென்று கூறுவேன்.

ஆனால், இன்று அவர்களின் படிப்புக்கே ஆபத்து வந்துவிட்டது என்கிறபோது அவர்களின் படிப்பையே ஒழித்துக்கட்ட வேண்டுமென்று ஒரு இராஜ்யத்து முதல் மந்திரியும், கல்வி மந்திரியும், வாத்தியார்களும் முயல்கிறார்கள் என்கிறபோது என்ன செய்வது? இந்த அநியாயத்தை, அக்கிரமத்தை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி செய்து தானே ஆகவேண்டும்?

சாதாரணமாக, மாணவர்களைக் கிளர்ச்சிக்கு அல்லது மற்ற காரியங்களுக்குத் தூண்டுவதே தவறு. அவர்கள் உலக அனுபவம் இல்லாதவர்கள்; எதையும் எளிதில் நம்பிவிடுவார்கள்; இளம் உள்ளத்தின் வேகத்தில் எதுவும் செய்துவிடுவார்கள். அவர்களை இந்த முறையில் பழக்கி அவர்களைச் சிலர் கேடு அடையச் செய்யக்கூடாது. அது பஞ்சுக்குப் பக்கத்தில் 'பெட்ரோல்' வைத்து நெருப்புப் பற்றவைப்பதுபோல ஆகும். மாணவர்களை, மாணவர்களுடைய காரியத்தின் அளவுக்குமட்டும் பயன்படுத்திக்கொண்டு—அதிலும் அளவுக்குமீறிப் போகாமல் கட்டோடு இருக்கச் செய்துகொண்டு, மற்றபடி அவர்கள் கலந்துகொள்ளாதிருக்க விட்டுவிடவேண்டும்; இப்படித்தான் செய்யவேண்டும்.

[சென்னையில், 5-12-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-12-1952]



பெரியோர்களே! மாணவத் தோழர்களே! வணக்கம்.

திராவிட மாணவர்களுக்குப் பகுத்தறிவு ஊட்டப்பட வேண்டும் என்பதற்காக இக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. மேலும், இன உணர்ச்சியைத் திராவிட மாணவர்களுக் கிடையே புகுத்தவும் இது மாதிரியான கழகம் அவசியமாகும்.

பொதுவாக, நம் நாட்டு மாணவர்கள் கல்விப் படிப்பினால் எந்தவிதமான பகுத்தறி வையும்—எதையும் ஆராய்ந்து அறியும்படியான தன்மையையும் அடையமுடிவதில்லை; அவர்கள் படிக்கின்ற படிப்பினால் பிற்கால வாழ்க்கையைத் தரித்திரமின்றி நடத்தவேண்டும். அதற்காக, ஏதாவது உத்தியோகத் துறையிலோ, வேறு பணம் சம்பாதிக்கின்ற வழியிலோ பயன்பட வேண்டும் என்பதற்காகவே படிக்கிறார்கள். பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைக்கு அறிவு வளரவேண்டும் என்ற காரணத்திற்காகப் பள்ளிக்கு அனுப்புவதில்லை; படித்துப் பட்டம் பெற்று வந்ததும் ஜீவனத்துக்கு வேண்டிய முறையில் எங்காவது உத்தியோகம் கிடைக்குமா என்ற நோக்கத்தோடேயே பெற்றோர்கள் முயற்சிக்கிறார்கள். இவர்களும் இதற்குத்தான் முயற்சிக்கிறார்கள் என்றால் மாணவர்களும் அந்த நோக்கத்தைத் தான் எதிர்பார்த்துத் தம்முடைய பள்ளிப் படிப்பைக் கற்றுப் பட்டம் பெறவேண்டும் என்ற ஒரே எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், அவர்கள் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் கூறுகின்ற ஒவ்வொன்றையும் அப்படியே மனப்பாடம் செய்து, அதையே பிறகு அவர்கள் கேட்கும்பொழுது சொல்லு வதாலும், எழுதுவதாலும் தேர்வில் வெற்றி பெறுகிறார்கள். இந்த முறையில் ஒரு மாணவன் எவ்வித உயர்ந்த பட்டத்தை அடைந்த படிப்பாளி என்று கூறப்பட்டாலும், அவனுக்குப் போதிய பொதுஅறிவும், உலகியலில் தகுந்த ஞானமும் அடைந்தவனாகக் கருதப்பட மாட்டான். ஏனெனில், அம் மாணவன் தனது புத்தகத்தைப் படித்து, அதில் உண்டாகும் சந்தேகங்களையும், மற்றும் அறிவுக்குப் பொருத்தமற்றதான செய்திகளையும், தனது ஆசிரியர்களிடம், ஏன்? என்ன? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்வதில்லை. அப்படிக் கேட்டாலும் அம் மாணவன் வகுப்பில் 'மிகவும் அதிகப் பிரசங்கியாக நடந்துகொள்கிறான்' என்பதாக ஆகிவிடும். ஆகவே, ஆசிரியர் சொல்லு வதைத்தான் கேட்கவேண்டும்; புத்தகத்திலுள்ளதைத்தான் மனப்பாடம் செய்து திரும்பவும் ஒப்புவிக்கவேண்டும் என்பது நம் நாட்டுக் கல்வி முறை. இக் கல்வி முறையினால் மாணவர் களுக்கு அறிவு புகட்டப்படுவதால் அவர்கள் பிற்காலப் பழக்கவழக்கங்களுக்கும், நல்லொழுக் கத்திற்கும் தகுதியுடையவர்களாக ஆகமாட்டார்கள்.

ஆனால், பலர் பலவிதமாக அறிவு, ஞானம் என்பதைக் கருதுகிறார்கள். பெரும் பாலோர் ஞானம் என்பதும், அறிவு என்பதும் கடவுளைக் காண்கிறதும், மோட்சத்தை அடைவதும்தான் என்று நினைக்கிறார்கள். இந்த எண்ணம் குழந்தையிலிருந்தே நம் பிள்ளைகளுக்கு ஊட்டப்பட்டு வருவதால், மேன்மேலும் ஒரு மாணவன் தெளிவற்றவ னாகவே ஆக்கப்படுகிறான். பொதுவாகவே மாணவன் அதற்கு இடம் கொடுக்காமல் தன்னை இன்னான் என்றுணர்ந்து—'நம் பருவம் எதையும் அறிந்துகொள்ளுகின்றதும், தெரியாதவைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறதுமான மாணவப் பருவம்' என்பதை உணரவேண்டும். இவ்வித எண்ணமுள்ள மாணவன்தான் பிற்காலத்தில் எதையும் அறிந்த அறிவாளியாக விளங்கமுடியும்.

மேல்நாட்டு மாணவர்கள் எல்லோரும் இவ்வித எண்ணம் கொண்டவர்களாக இருப்ப தாலும், அவர்களுக்கு இந்தப்படியே பயிற்சி அளிப்பதாலும்தான் அவர்கள் எதையும் ஆராயும் தன்மையுள்ளவர்களாகவும், மென்மேலும் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு இது ஏன்? எப்படி? எதற்காக? இதனால் என்ன செய்யமுடியும்? என்று இப்படிப் பலவித மான கேள்விகளுக்குப் பதில் தெரிந்துகொண்டே பார்த்ததால்—இன்றைக்கு அவர்கள் அறிவாளிகளாகவும், விஞ்ஞானிகளாகவும் விளங்குகிறார்கள். மற்றும், பல பொது விஷயங்

படிப்பகம்

www.padippakam.com



களிலும் நம் நாட்டு மக்களைப்போல் இல்லாது, எவ்விடத்திலும் பிறருடன் நன்முறையில் பழகுகிறார்கள். குறிப்பாகப் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றால், அங்கு டிக்கட் கொடுக்குமிடத்தில் அதிக மக்கள் வரிசைக் கிரமத்தில் சுமார் ½ பர்லாங் வரையில் காத்திருந்தாலும் அங்கு வருகின்ற தலைநரைத்து வயதுசென்ற கிழவருக்கும், சிறு குழந்தைக்கும், பெண்களுக்கும் முதலில் டிக்கட் வாங்குவதற்கு அத்தனை பேர்களும் அனுமதிப்பார்கள். நான்கு பேர்கள் ஏறுகின்ற வண்டியில் 5-வது ஆள் ஏறுவதற்கு வெட்கப்படுவான். ஒருவன் ஆடையின்றி நிர்வாணமாகக் கடைவீதியில் செல்லுவதற்கு எவ்வளவு வெட்கமடைவானோ, அன்றியும் அவன் பிறரால் எப்படி ஏளனம் செய்யப்படுவானோ, அதற்குச் சமானப்பட்டவனாய் அச் சமயம் தன்னைக் கருதுவான்.

பொது இடங்களிலும் அன்றி, தனிப்பட்ட கணவன்–மனைவி இருவருக்கும் உள்ள பழக்கத்திலும்கூட நம் நாட்டிற்கும் மேல்நாட்டிற்கும் வித்தியாசமுண்டு. அயலூர் சென்ற கணவனோ, மற்றும் குடும்பத்தவர்களோ, உறவினர்களோ தன் வீடு வருவதாய் இருந்தால், முதலில் தாங்கள் வரும் நேரத்தையும், தேதியையும் முன்பாகவே தந்தி மூலமோ, கடிதம் மூலமோ தெரிவித்துவிட்டுத்தான் வருவார்கள். வீடுவந்து சேர்ந்ததும் வீட்டினுள் இருப்பவள் தன் சொந்த மனைவியாக இருந்தாலும், உடனே அவன் உள்ளே நுழைய மாட்டான். முதலில் அவன், தான் வந்திருப்பதைத் தெரிவித்து அவள் 'எஸ்' (yes) என்று அனுமதித்தவுடன்தான் உள்ளே நுழைவான். இந்த முறையில் ஒவ்வொன்றிலும் மேல்நாட்டார் பழகுகிறார்கள் என்றால் மாணவப் பருவத்தில் அடைந்த அறிவின் குணமென்பதே காரணம்.

ஆனால், நம் நாட்டு மாணவர்களுக்குப் பொது அறிவைப் புகட்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் ஒன்றும் இல்லாததாலும், நம் நாட்டுக்கல்வி முறையில் இவை கற்பிக்கப்படாததாலும் அவர்கள் வயதுவந்தவர்களானதும் பொதுவிடங்களிலும், உலகத்தோடும் நன்முறையில் பழகுவது கிடையாது. புகைவண்டி நிலையம் சென்றால் எவன் ஒருவன் முதலில் டிக்கட் வாங்குகிறானா, அவன்தான் சமர்த்தன் என்று புகழப்படுகிறான். புதிய சினிமா இன்றுதான் முதலில் வெளியிடப்படுகிறது என்றால்—அன்றைக்கு முதல் படத்திற்கு, முதல் டிக்கட் வாங்குகிறவன் அதிபராக்கிரம புத்திசாலி என்று போற்றப்படுகிறான். ஏதாவது ஒரு உண்மையை மறைக்க ஆயிரம் பொய்களைக் கூறித் தப்பித்துக்கொண்டால்—அவன் அறிவிற் சிறந்தவன்; அவன் கூறியது பொய்யானாலும் தன் புத்தியின் யூகத்தால் வெகு சாமர்த்தியமாகத் தப்பித்துக்கொண்டான் என்றுதான் கூறுவர்.

நன்னடத்தை என்பது என்னவென்று பார்த்தால்—ஒரு மனிதனிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்களோ, நீங்கள் மகிழ்ச்சியடையவும், திருப்தியடையவும் அவன் என்ன செய்யவேண்டுமோ, அதே முறையில் நீங்களும் பிறரிடம் பழகும்போது அவர்களுக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் உண்டாக்கும்படியான வழியில் நடந்துகொள்வதாகும். உங்களிடம் ஒருவர் நடந்துகொள்வதிலிருந்து உங்களுக்குக் கஷ்டத்தையும், மனக்கலக்கத்தையும் அதிருப்தியையும் உண்டாக்குகிற முறைகள் எவை எவையென்று தோன்றுகிறதோ, அவையவைகளை விட்டுவிடவேண்டும். இது ஒரு சுலபமான கருத்து. இதை யாவரும் கைக்கொள்ளுவதால் நல்லறிவும், பொது அறிவும் அடைந்தவர்களாகலாம்.

இப் பழக்கங்களை மாணவப் பருவம் முதற்கொண்டே, பழகினால் சுலபமாகக் கடைப்பிடிக்கவும் நீடித்திருக்கவும் ஏதுவாகும். திராவிட மாணவர்களாகிய யாவரும் இதையே பின்பற்றி நடக்கவேண்டுமென்றும், எதையும் ஆராயுந் தன்மையுடனும், எவ்விதக் கேள்விகளுக்கும் பதில் தெரிந்து சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்வதே மாணவப் பருவம் என்பதன் நோக்கம் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

[திருச்சியில், 7-11-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-11-1954]



நான் மாணவர்களைப்பற்றி பேசும்பொழுதெல்லாம் அடிக்கடியும் குறிப்பிடுவதுண்டு. அதாவது, யாரும் மாணவர்களை நம்பி மோசம் போகக்கூடாது என்று கூறுவேன். ஏனெனில், மாணவர்கள் சுலபத்தில் நெருப்புப் பிடிக்கும் பண்டங்களுக்குச் சமமானவர்கள். பஞ்சு, மண்ணெண்ணெய், பெட்ரோல் இவைகளை எரியும்படி செய்வதற்கு அதிக உஷ்ணம் தேவை இல்லை. சூரியனின் ஒளிக்கதிர் பட்டாலே எரியக்கூடிய தன்மையும் உண்டு. அப்படிப்பட்ட மெல்லிய உள்ளமும், தெளிவான மனத்தையும் கொண்டவர்கள் மாணவர்கள். கெட்டியான வஸ்துக்கள் சுலபத்தில் தீப்பற்றுவதில்லை; தீப்பற்றிவிட்டால் சுலபத்தில் அணைவதில்லை; நெடுநேரம் நின்று எரியும் சக்தி உள்ளவை. சீக்கிரத்தில் தீப்பிடிக்கும் வஸ்துக்களோ கெட்டியான வஸ்துக்களைப்போல் அதிக நேரம் எரிவதில்லை. சிறிது நேரத்திலேயே அணைந்து போகும். அப்படிப்பட்ட தன்மைக்குச் சமமாக மாணவர்களைக் கூறலாம். எதையும் உடனே நம்பும் சுபாவம் மாணவர்களுடையது. மாணவர்களின் உள்ளம் கெட்டியானது அல்ல; இலேசானதாக இருக்கும்; அதுவும் தாய்மையானதாக இருக்கும்; பட்டதும் பிடிக்கக்கூடிய தன்மை உள்ளது. அந்த மனம் கெட்டிப்படும் வரை அடுத்தடுத்து வருகிறவைகளைக் கவ்விக்கொண்டு, முன்னே பற்றியதைக் கக்கிவிடும்; சரியான பக்குவம் இல்லாததால் ஒரு நிலையில் நிலைத்து நிற்கும் தன்மை கிடையாது. இன்றைக்கு நான் சொல்வதைக் கேட்டு அப்படியே நம்பிவிடும். சரி நம்பி விட்டார்களே என்று நான் நினைத்துக்கொண்டிருக்கும்போது நாளைக்கு யாராவது ஒன்றைக் கூறினால், நான் சொன்னதை விட்டுவிட்டு, மற்றவர் கூறுவதை ஏற்றுக்கொள்வார்கள். மனது பக்குவம் அடைய வேண்டும். இதனால் நான் மாணவர்களுக்கு அறிவில்லை, அல்லது மாணவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்பதாகக் கூறுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். மாணவர்கள் அறிவுள்ளவர்கள்தாம். இருந்தாலும், அந்த அறிவு முற்ற வேண்டும். பிஞ்சு அறிவு கொண்டவர்கள்! அந்த அறிவு முற்றும் வரை அவர்களுக்கு எதிலும் உறுதியான எண்ணம் பிறக்காது.

அறிவு முற்றும் வரையில் எதையும் கற்பதிலேயே மாணவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். மாணவ வாழ்க்கையில் அவர்கள் கடைப்பிடிக்கவேண்டியது எதையும் கற்பதிலேயே மனத்தைச் செலுத்திக் கற்றுத் தெரிந்துகொள்வதிலேயே இருக்கவேண்டும். படித்துப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதிலேயே முழு முயற்சியும் காட்டவேண்டும்.

[சிதம்பரம் அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-3-1956]

## 3. பகுத்தறிவாளர்களுக்கு

தமிழ் நாட்டில் பல இடங்களில் பகுத்தறிவாளர்கள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது; மேலும் பல இடங்களில் பகுத்தறிவுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது; மேலும் பல இடங்களில் பகுத்தறிவுக் கழகம் தோற்றுவிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. இந்த நிலை தமிழர்களுக்கு மிகுதியும் போற்றத்தக்கதும், பாராட்டத் தக்கதுமாகும்.

இவ்விளைவினால் தமிழர் சமுதாயம் சமத்துவமும், முன்னேற்றமுமடைந்து உலக மக்களால் பாராட்டத்தக்க நிலையடையும் என்பதில் சந்தேகமேயில்லை. இவ்வியக்கம் பயனுள்ளதாகவும், பாராட்டத் தக்கதாகவும் வளர்ச்சியடையத் தக்கதாகவும் ஆக வேண்டுமானால் இவ்வியக்கத்தில் அரசியல், மத இயல், சமூக இயல் புகுத்தப்படக்கூடாது. அங்கத்தினர்கள் நிர்வாணியான ஒருவனைப் பார்த்து எப்படி அவனது சாதி, மதம் கண்டுபிடிக்க முடியாதோ அதுபோல் பரிசுத்த உணர்வோடும், தோற்றத்தோடும் விளங்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



அதாவது, எந்தவித மதக் குறிப்பும், மதச் சின்னமும் அணிந்தவராக இருக்கக் கூடாது. களைய, எடுத்துவிட, மாற்றமுடியாத நிரந்தர சின்னத்தைத் தடையாகக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அங்கத்தினர்கள் குறைவாக இருந்தாலும் பகுத்தறிவுக்கு மாறான சாதி, மத சின்னங்கள், குறிகள் இல்லாமல் (கண்டிப்பாய்) பார்த்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'—30-11-1970]

# 5. நமது ஆராய்ச்சி மனப்பான்மை

## 1. புலவர்களின் தன்மை

நம் புலவர், பண்டிதர், தமிழறிஞர் என்பவர்களுக்குத் தமிழ் மொழி பற்றிய இலக்கியம், இலக்கணம் என்னும் துறைகளில் ஏதாவது அறிவுப் பயிற்சி இருந்தால் இருக்க முடியுமே யொழிய—உலகம், சரித்திரம், பூகோளம், பகுத்தறிவு, விஞ்ஞானம் என்னும் துறைகளில் அறிவோ ஆராய்ச்சியோ இருக்க முடியுமா என்பது பெரிதும் ஆலோசிக்கத் தக்கதாகும்.

இதைச் சொன்னால் நம் புலவர்களுக்குக் கோபம் வருவதில் குறைவில்லை. ஆனால், அப் புலவர்கள் தங்களைப்பற்றிச் சிறிது யோசித்துப் பார்க்கட்டும்! தங்களால் நாட்டுக்கோ, சமுதாயத்துக்கோ சிறிதாவது பயன் ஏற்படும்படியான காரியம் செய்கிறார்களா? செய்யத் தகுந்த அறிவோ, சக்தியோ இருக்கிறதா? அப்படிக்கில்லாமல் புராணங்களை உருப்போட்டுக்கொண்டும், புராணங்களுக்குப் புதிய கருத்து சொல்லிக் கொண்டும், உலக தற்கால நிலையை உணராமல் பார்ப்பனர்களைப்போல் வேடம் போட்டுக் கொண்டு—தங்களை மேல்சாதியார் என்று பிறர் மதிக்கவேண்டும் என்கின்ற ஆசையோடு திரிவதும் புலவர் தன்மை ஆகுமா?

புலவன் என்றாலும், பண்டிதன் என்றாலும், வித்வான் என்றாலும் அறிவுடையவன் என்பதுதான் கருத்தாகும். பண்டிதன், வித்வான் என்கின்ற சொற்கள் தமிழ் அல்ல என்றே கருதுகிறோம். புலமையை உடையவனே புலவன் ஆவான். நம் புலவர்களுக்குள்ள புலமைத் தன்மை என்னவென்று பார்த்தால், புராணப் புலமையும், தமிழ் மொழி இலக்கணப் புலமையும் அல்லாமல் அவர்களுக்கு வேறு எதில் புலமை இருக்கிறது?

எனவே, மேற்கண்ட புலவர்கள் ஒரு துறையில் பயிற்சி உள்ளவர்கள் என்பதைத் தவிர—பொது அறிவு பெறவோ, பொதுமக்களுக்கு வழிகாட்டும்படியான தன்மை பெறவோ, முன்னேற்றத்திற்கு வழி கோலவோ, புதுமையைச் சித்திரிக்கவோ இன்றையப் புலவர்கள் என்பவர்களுக்கு ஏதாவது பயிற்சி இருக்கிறதா? எனவே, ஒரு துறையில் பயிற்சி பெற்றவர்கள் பொதுத் துறையில் வந்து கலந்துகொள்ளுவதும், அதைப்பற்றிப் பேசத் தங்களுக்கு அருகதை உண்டு என்பதும் தங்களது குறைபாட்டைக் காட்டிக் கொள்வதே யாகும். உலக இயற்கை மாறுபாட்டைக் கொண்டதாகும். மாறுபாட்டிற்கு அடிமைப் படாது எதுவுமே இல்லை எனலாம். புலவர்கள் அல்லது அறிஞர்கள் என்பவர்களுக்கு, அம் மாறுபாட்டை—முன்னேற்றத்திற்கு ஏற்ற வண்ணம் அமைத்துக் கொடுக்கவேண்டியது கடமையாகும்.

ஆனால், நம் புலவர்கள் மாறுபாட்டை விரும்பாதவர்கள்; அது மாத்திரமல்லாமல், 1000, 2000, 3000, 5000 வருடங்கட்கு முன்னிருந்த நிலைமையை நிலைநாட்ட முயற்சிப்



பவர்கள். புலமைக்கும் பகுத்தறிவிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பவர்கள்; பகுத்தறிவுக்கு ஒவ்வாத கற்பனைகளிலே நம்பிக்கையும் பக்தியும் கொண்டு அவற்றை உருப்போட்டு மக்களுக்குள் புகுத்துகிறவர்கள். இவர்களைக் கொண்ட நாடோ மக்களோ எப்படி முன்னேற்றமடைய முடியும்? இவர்களுக்குப் பொது வாழ்வில் மதிப்பு இருக்கும் பட்சம் முன்னேற்றத்திற்கு இடமுண்டா?

பொதுவாகவே ஒரு மொழியில் இலக்கண இலக்கியங்களைப் படித்தவர்களையும்—மத சம்பந்தமான பயிற்சியும் நம்பிக்கையும் உடையவர்களைப் புலவர்கள் என்று அழைப்பதும் கருதுவதுமே பொது அறிவையும், அறிவு வளர்ச்சியையும் கொலை செய்வதற்கு ஒப்பாகும்.

முன்னேற்றத் தன்மையான விஷயங்களிலும் மக்களைச் சீர்திருத்தும் விஷயங் களிலும், மொழிப் புலவர்களுக்கும் மதப் புலவர்களுக்கும் மதவாதிகளுக்கும் இடம் கொடுப்பது, கலந்துகொள்ளச் செய்வது முதலியன முட்டுக்கட்டையான காரியங்களே யாகும்.

மொழித் துறைக்கும், மதத் துறைக்கும்கூட முற்போக்கு வேண்டுமானால் பொது அறிவுள்ள புலவர்கள் வேண்டுமே தவிர, ஒரு மொழி, ஒரு மதம் என்பதில் புலமை கொண்ட வர்கள் பெரிதும் அம் முன்னேற்றத்திற்குத் தகுதியற்றவர்கள் என்றே சொல்லுவோம். ஏனெனில், அவர்கள் தாங்கள் கற்றதையும், அந்தக் கற்பிலிருந்து தாங்கள் கொண்டதையும் தான் குரங்குப் பிடியாய் வலியுறுத்துவார்களே தவிர, திருத்தப்பாட்டிற்குச் சிறிதும் சம்மதிக்கமாட்டார்கள்.

இவற்றை நாம் திடீரென்று சொல்ல வரவில்லை. புலவர்களிடம் 40, 45 வருட காலமாய்ப் பழகி வந்த அனுபவங்களைக் கொண்டே சொல்லுகிறோம். உதாரணமாக, எந்தப் புலவராலாவது—எந்தத் துறையிலாவது இதுவரை ஏதாவது ஒரு முன்னேற்றகர மான—அறிவுக்கு ஆதரவான காரியம் நடந்திருக்கிறது என்று சொல்லமுடியுமா என்று பார்த்தால் உண்மை விளங்கிவிடும்.

ஆகவே, சீர்திருத்தக்காரர்களும் முன்னேற்றக்காரர்களும் தங்கள் வேலைகளுக்குப் புலவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்பதோடு, அவர்களுக்குப் பாமர மக்களிடம் மதிப்பு இருக்கும்படியாகவும் இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறோம். அவர் களுக்கு மதிப்பு இருப்பதால் நமக்கு இருக்கும் தொல்லைகளுக்கும் நம் காரியங்களுக்கு இருக்கும் முட்டுக்கட்டைகளுக்கும் ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால், பெரியபுராண மும் கம்பராமாயணமும் பாமர மக்களுக்குள் பரவாமல் இருக்கத் தக்கவண்ணம் அவற்றை வெறுக்கச் செய்யவேண்டும் என்று நாம் சொன்ன உடனே, நாம் எதற்காக வெறுக்கச் சொல்லுகிறோம் என்று எடுத்துக் காட்டும் காரணங்களுக்கு எவ்வித சமாதானமும் சொல் லாமல், அவற்றை முன்னிலும் தீவிரமாகப் பரப்பும் வேலைகளையும், அப்படிச் சொல்லுகிற வனை ஆண்மையும் நேர்மையும் அற்றமுறையில் குறைகூறும் வேலைகளையும், மற்றும் இக் காரியங்களைச் செய்ய நம் பிறவி எதிரிகளாகிய பார்ப்பனர்களின் காலுக்குள் நுழையும் துணிவையும் கொள்ளுவது என்றால்—புலவர்களின் இழிதன்மைக்கும், பொது அறிவுடைமைக்கும் வேறு என்ன உதாரணம் வேண்டும்?

மொழிப் பயிற்சி வேறு, கலைப் பயிற்சி வேறு என்பதே நமது புலவர்களுக்குத் தெரிவதில்லை. மொழி, கலை, சமயம் ஆகிய மூன்றையும் ஒன்றாய்ப் போட்டுக் குழப்பி—நம் புலவர்கள் தங்கள் பொதுஅறிவு, புத்தியைப் பாழ்செய்து கொண்டார்கள். அதனாலேயே மொழியைத் திருத்தவும், சமயத்தைப் பரிசுத்தம்செய்யவும் இன்றையத் தன்மைக்கு ஏற்ற கலைகளைப் புதுப்பிக்கவும் வெகுகாலமாகவே ஒரு புலவராலும் முடியாமல் போய்விட்டது. இன்றுள்ள மொழிப் புலவர்கள் யாருக்காவது சமயத்தையோ, ஆண்-பெண் காதலையோ சம்பந்தப்படுத்தாமல் இயல், இசை, நாடகம் என்கின்ற முத் துறைகளிலும், ஏதாவது

படிப்பகம்

செய்யவோ, சொல்லவோ தெரியுமா? சொல்லியோ செய்தோ இருக்கிறார்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

ஆகவே, நமது நண்பர்கள், நாம் புலவர்களைக் குறைகூறுகின்றோம் என்று கருதாமல் அவர்களைப் பாராட்டும்படியான காரியம் என்ன இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

இப்பொழுது சிறிது காலமாக சில வாலிப மொழிப் புலவர்கள் நம் கருத்தைச் சிந்தித்துப் பார்த்துச் சிறிது அளவுக்கு மாற—பழம்பெரும் புலவர்கள், முதிய புலவர்கள் ஆகியவர்களிடமிருந்து மாறுபட்டு, நம் கொள்கையை ஆதரிக்க முற்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்; என்றாலும் சில வாலிபப் புலவர்கள் துணிவாய் வெளியில் வந்து வேலை செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

['குடிஅரசு'–தலையங்கம்—15-1-1944]

## 2. நமது ஆராய்ச்சி மனப்பான்மை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மனிதன் அடுத்த 500 வருடத்தில் அடையக்கூடிய முற்போக்கு இப்போதே நிர்ணயிக்கப்படுகின்றது.

ஆனால், நம்மைச் சுற்றியுள்ள உலகம் இந் நிலையிலிருக்க நாமோ நமது ஆராய்ச்சிக் காரர்களால் 3000 வருடத்திற்கு முன்னால் நாம் இருந்த நிலையை அடைய வேண்டு மென்று தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யப்பட்டுப் பெருமை அடைகின்றோம். அப்படிப் பட்ட தொல்காப்பியம் 2000 வருஷத்திற்கு முந்தியதா, 3000 வருஷத்திற்கு முந்தியதா என் கின்ற ஆராய்ச்சி இன்னமும் நமக்குள் முடியவில்லை. ஆராய்ச்சிக்காரர்கள் யோக்கியதை இப்படி என்றால், நமது பண்டிதர்களுடைய யோக்கியதையோ சமணர்கள் கழுவேற்றப் பட்டார்களா அல்லது தாமாகக் கழுவேறினார்களா என்பதற்குச் சமயம்போல் பேச ஆதாரம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் தேசியப் பண்டிதர்களின் யோக்கி யதையோ—தேசிய மேடையில் ஏறி, தாயைப் புணர்ந்தும் தகப்பனைக் கொன்றும் மோட்சத்திற்குப்போன புராணத்தையும், பெண்சாதியைக் கூட்டிக்கொடுத்து மோட்சத் திற்குப் போன புராணத்தையும் படித்தால் சுயராஜ்யம் வந்துவிடுமென்ற தேசியப் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

[சென்னை பிரம்ம சமாஜத்தில், 19-10-1929-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 27-10-1929]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மேல்நாட்டில் ஒவ்வொரு மனிதனும் அறிவாளிகள் சொன்னபடி கேட்டுத்தெரிந்திருக் கிறார்கள். இந்த நாட்டில் ஒவ்வொருவனும் அய்யர் என்ன சொல்லுகிறார்? சமயம் என்ன சொல்கிறது? சாஸ்திரமென்ன சொல்கிறது? என்று பார்த்துக்கொண்டிருப்பதோடு, கடவுள் வந்து சொப்பனத்தில் சொல்வார் என்றும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

20 வருடங்களுக்கு முன் ஒரு வெள்ளைக்காரப் பெண் அணிந்துவந்த உடை சுமார் 20 கஜத்திற்கு மேலாகவே இருக்கும். பெரிய வீட்டுப் பெண்கள் நடந்தால், துணி பூமியில் இழுபடாமல் தூக்கிக்கொண்டு போவதற்கு ஆள் வைப்பார்கள். அவயவங்களைப் பெரிதாகக் காட்டுவதற்கு முயற்சிப்பார்கள். இன்றைய தினம் அவர்களுடைய உடை 2 கஜம் துணியில் முடிந்துவிட்டது. எவ்வளவு குறுக்கவேண்டுமோ அவ்வளவு குறைத்துவிட்டார்கள். நாம், ஏதைச் சுருக்கினாலும் கடவுள் கோபித்துக்கொள்வாரோ என்று நடுங்குகிறோம்.



வெள்ளைக்காரர்களுடைய ஆராய்ச்சி அடுத்த வருஷத்திற்கு என்ன மாறுதல் செய்வ தென்று துடித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய ஆராய்ச்சி 2000 வருஷத்திற்கு முன் எப்படி இருந்தோமோ அப்படியே இருக்கவேண்டுமென்று கருதி அதைக் கண்டுபிடிக்கத் தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யப்படுகிறது. எனவே, வெள்ளைக்காரனுடைய முற்போக்குக் குதிரை முன்னாலும், நமது குதிரை பின்னாலும் போய்க்கொண்டிருக்கிறது. நம்முடைய முட்டாள்தனமான காரியங்கட்கெல்லாம் அவசியத்தையும் காரணத்தையும் சொல்லாமல் பகவான் சொன்னார்; மனு சொன்னார்; ஆகமம் சொல்லிற்று; ஆழ்வார் சொன்னார்; ஆச்சாரியார் சொன்னார் என்று சொல்வதைத் தவிர வேறுஒன்றும் சமாதானம் இல்லை. ஆகவே, நாம் எந்தக் காலத்திலோ, எவனோ, எதையோ, எதற்கோ சொன்னான்; அதைப் பற்றி நமக்கு என்ன கவலை என்று கருதி, இந்தக் காலத்துக்குத் தகுந்ததைச் செய்யாமல்—வாளாயிருப்போமானால் மனிதர்களாக வாழமுடியாது.

எப்படி, பஞ்சாட்சரம் ஜெபித்தால்—விபூதி பூசினால் மோட்சம் வரும் என்று மூடநம்பிக்கையைக் கருதிக்கொண்டு துன்பப்படுகிறோமோ அதுபோலவேதான், தக்ளி சுற்றினால்—உப்புக் காய்ச்சினால் விடுதலை வரும் என்று மூடநம்பிக்கையால் கஷ்டப் படுகிறோம். பஞ்சாட்சரத்திலும், விபூதியிலும் நமக்குள்ள மூடநம்பிக்கைதான் தக்ளியிலும் உப்புக் காய்ச்சுவதிலும் திருப்பி விட்டுவிட்டதே தவிர வேறில்லை. அதில் நாம் கடுகளவு ஆராய்ச்சியாவது செய்திருப்போமானால் இதிலும் அணுவளவாவது ஆராய்ச்சி செய்யப் புத்தி புகுந்திருக்கும். பரம்பரையாய் நமக்குள்ளிருந்த மூடநம்பிக்கை நம்மை ஆட்சி செய்துகொண்டு சிறிதும் முன்னேறவொட்டாமல் தடுக்கின்றது.

இப்போது நீங்கள் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியில் போகும்போது உங்களிற் சிலர், 'இராமசாமி சரியாய்த்தான் பேசினான்; அதில் என்ன தப்பிருக்கிறது!' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வீர்கள். ஆனால், பக்கத்தில் ஒரு பார்ப்பான் நின்று கொண்டு உங்களைப் பார்த்து, 'நன்றாய் நாத்திகப் பிரச்சாரம் கேட்டீர்களா? பாகவதத்தில் இத்தனையாவது ஸ்காந்தத்தில் இம்மாதிரி இன்ன இடத்தில் இத்தனை மணிக்கு இன்னான் வந்து இந்த மாதிரி நாத்திகம் பேசுவான். ஜனங்கள் அறிவில்லாமல் கேட்டுக்கொண்டிருப் பார்கள். அதுதான் கலி வந்ததற்கு அடையாளம். அது சமயம் ஜாக்கிரதையாய் இருந்து அதை மறக்கடிக்க ஒவ்வொருவராக முயல வேண்டுமென்று பகவான் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். ஆதலால், அவற்றை நம்பாதீர்கள்' என்று சொல்லுவான். நீங்களும் திடுக்கிட்டு, 'ஆ! என்ன பிசகு செய்தோம்!' எனக் கருதி இந்தச் செய்தியைக் கேட்டதற் காக உங்கள் காதுகளைக் கழுவிக்கொள்வீர்கள்.

இப்படியேதான் உங்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஏமாற்றி வைத்திருக் கிறார்கள். ஆகையால், எந்த விஷயத்தையும் கண்மூடித்தனமாய் நம்பிவிடாமல் உங்கள் அறிவைக்கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்து பார்த்து அதன் முடிவின்படி நடவுங்கள்.

[திருவாரூரில், 5-6-1930–ல் சொற்பொழிவு—'குடி அரசு' 15-6-1930]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நமது நாட்டில் சுதந்திரம் என்பதற்கு அர்த்தமே மற்றவர்கள் சுதந்திரத்தைக் கெடுப்பது என்றுதான் பலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மனப்பான்மை அடிமைத் தன்மையான வாசனையின்றால் ஏற்பட்டதாகுமே தவிர ஒருகாலும் சுயேச்சைத் தன்மை உடையதாகாது.

எங்களுக்காக ஏன் ஒருவர் பயப்படவேண்டும்? நாங்களும் மனிதர்கள்தானே! எந்த மனிதனுடையவும், எந்த அரசாங்கத்தினுடையவும் தனிப்பட்ட காரியங்கள் எதிலும் நாங்கள் பிரவேசிப்பதில்லையே! பொதுப்பட்ட காரியங்களில், பொதுமக்கள் நன்மை தீமைகளில் மற்ற எல்லாருக்கும் உள்ளதுபோன்ற உரிமை எங்களுக்கும் உண்டு என்பதில்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் சிறிதும் விட்டுக்கொடுக்க இசையோம். எங்கள் கருத்துகளுக்கு மாறுபட்டவர்கள் தக்க பதிலையும் ஆதாரத்தையும் உடையவர்களானால், நாங்கள் பேசுவதைத் தடுக்கவோ எங்கள்மீது ஆத்திரப்படவோ சற்றும் அவசியம் ஏற்படாது. ஆதாரமற்றவர்கள், தந்திரத்தில் வாழ்பவர்கள்; அதட்டலிலும் மிரட்டலிலும் மக்களை ஏமாற்றிக் காலம் கழிப்பவர்கள் ஆகியோருக்குத்தான் எங்களைப்பற்றிப் பயம் ஏற்படக்கூடும்; கோபமும் ஆத்திரமும் வரக்கூடும். ஆனால், அதற்காக நாங்கள் என்ன செய்வது? அஸ்திவார மற்றவைகளும் புரட்டுகளும் என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்குச் சாய்ந்து விழுந்துதான் தீரும்.

அன்றியும், அதைக் காப்பாற்ற முயற்சிக்கும் நாளெல்லாம் வீண்நாளே. வெகு நாளையப் புரட்டு என்பதாலேயோ, கோபக்காரர்கள், முரடர்கள், தந்திரக்காரர்கள் ஆதரிக்கிற அபிப்பிராயங்கள் என்பதாலேயோ எதுவும் நிலைத்திருக்க முடியாது. அவை யெல்லாம் இனிப் பலிக்கவும் பலிக்காது. சுதந்திர உணர்ச்சி என்பது இத் தேசத்தில் இல்லையானாலும், சுற்றுப் பக்க தேசங்களில் இருந்துவந்து புகுந்துவிட்டது. இனி அதை வெளியில் தள்ளிவிட முடியாது. ஆதலால், தடைப்படுத்த முயற்சிப்பதிலோ கோபிப்ப திலோ பயனில்லை.

அசரீரி சொல்லிற்று, அருள் சொல்லிற்று, ஆகாயவாணி சொன்னான், ஆண்டவன் சொன்னான் என்று ஏதோ ஒன்றைக் கற்பித்து எழுதிவைத்துக்கொண்டு அதன்படி நடந்தாக வேண்டுமென்று மக்களைக் கட்டாயப்படுத்திக்கொண்டு இருப்பதும்; அவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றியாவது சந்தேகப்பட்டு விவரம் கேட்டால் அவர்மீது கோபிப்பதும், வைவதும், பழிசுமத்துவதும், கலகமாகிவிடுமென்று மிரட்டுவதுமான காரியங்கள் எப்படி மனிதத் தன்மையானவையும் நியாயமானவையும் ஆகும்?

அசரீரி, ஆண்டவன், அருள், ஆகாசவாணி சொன்னவைகளானால் அதற்குப் புத்தகம் எதற்கு? ஒருவருக்கு மற்றொருவர் சொல்லுவதெதற்கு? காதில் உபதேசிப்பதெதற்கு? தத்துவார்த்தங்கள் எதற்கு? அறிமுகப் படுத்துவதெதற்கு? என்பவைகளை மக்கள் சிறிதும் யோசிப்பதில்லை.

ஏதாவதொன்றை ஆண்டவன் சொன்னான் என்று சொல்லிவிட்டால், 'ஆண்டவன் எப்படிச் சொன்னான்? ஆண்டவன் சொன்னதாக யார் சொன்னார்?' என்றுகூட கேட்கப் படாதென்கிறார்கள். தப்பித்தவறி யாராவது கேட்டுவிட்டால் வசவும், பழியும் மிரட்டலுடந் தான் பதிலாயிருக்கின்றனவே யொழிய, சமாதானமான பதிலென்பதே கிடையாது. ஆகவே, மனிதர்கள் முதலாவதாக இந்த இடத்தில் தங்களது அறிவைப் பயன்படுத்தச் சுதந்திரம் பெற்றாலல்லாது ஒருநாளும் மனித சமூகம் முற்போக்கடைவதற்கே இடமில்லாது போய் விடும். ஏனெனில், உலகத்தில் சிலர் பலரை ஏமாற்ற, ஆதிக்கம் செலுத்த தங்கள் தங்களது புரட்டுகளையும் பித்தலாட்டங்களையும் ஆரம்பித்த இடமே இந்த இடந்தான் என்று நாம் காணுவதால், அந்தப் புரட்டை முதலில் வெளியாக்கி விடவேண்டும். ஆதலால், அந்த இடத்தை நன்றாய்ப் பரீட்சிக்க வேண்டுமென்று மேலும் மேலும் வலியுறுத்துகிறோம்.

இன்று உலகத்திலுள்ள பெரும்பான்மை மதக்காரர்கள் தங்கள் தங்களுக்கென பற்பல விதமான வாசகங்களை வைத்துக்கொண்டு, அவற்றை ஆண்டவன் சொன்னான் என்று சாதித்துக் கொண்டு, அவற்றைப் பாமர மக்களிடம் பலவந்தமாகச் செலுத்திவிட்டார்கள். அதனாலேயே மக்களுள் பற்பல பிரிவுகள், அபிப்பிராய பேதங்கள் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதோடு, ஒருவரையொருவர் சந்தேகிக்கவும், வெறுக்கவும், அலட்சியமாய்க் கருதவும், எதிர்க்கவும், வஞ்சிக்கவும் அடக்கி ஆளவும் பயன்படுகின்றன. இந்த உணர்ச்சியையும் செய்கையையும் உலகத்தில் செல்வாக்குப்பெற விட்டுக் கொண்டிருக்கும்வரை மனித சமூகத்திற்குள் ஒற்றுமையும் ஓய்வும் ஏற்படுவதற்கு இடமே இல்லை.



நாம் இப்போது எந்த மதக்காரர்களுடைய கொள்கைகளையும் உபதேசங்களையும் எடுத்துக் கொண்டு அவை சரியா தப்பா என்பதாகவோ, ஆண்டவன் சொல்லா என்ப தாகவோ வாதாடவரவில்லை. நம்முடைய வேலையும் கவலையும் அதுவல்ல. எல்லா மதக் காரர்களும் பெரிதும் ஒரே ஆண்டவன்தான் உண்டென்று ஒப்புக்கொள்ளுகின்றவர் களானதால், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கொள்கைகளையும் உபதேச வாசகங்களையும் அந்த ஆண்டவனே சொன்னான் என்று சொல்லுவதால் இவர்களுக்குள் எந்த மதக்காரர்கள் சொல்வது உண்மையென்றும், எந்த அவதார புருஷர்கள் எந்தத் தூதர்கள் சொன்னது உண்மையாய் இருக்கக்கூடியதென்றும் கண்டுபிடிப்பதெப்படி? இதற்கு என்ன பரீட்சை?

இவைகளையெல்லாம் ஆண்டவன் சொன்னான் என்று நம்பும்படி கட்டாயப் படுத்துவதால் ஆண்டவன் எந்த ரூபத்தில், எந்த நிலையில், எங்கு இருந்துகொண்டு, என்ன மொழியில் சொன்னார் என்பதில், எந்த மதக்காரர்கள் உண்மை சொல்லுகின்றார்கள் என்று கண்டுபிடிப்பதுமேயாகும்.

மேலும், ஆண்டவன் என்பவர் தான் சொல்லவேண்டுமென்ற கொள்கையையோ, உபதேசத்தையோ தானே ஒருவர் மூலம் சொல்லிய பிறகு, மற்றவர்களால் எடுத்துச் சொல்லும்படி செய்த பிறகு அவை விவாதத்திற்கு உள்ளாயிருப்பதைப் பார்க்கும்போது— உண்மையிலேயே அவை ஆண்டவனால் சொல்லப்பட்டிருந்தால் அவைகள் ஒவ்வொரு மனிதனுடைய காதிலும் விழும்படியாகவோ, அல்லது மனத்திலும் பதியும்படியாகவோ— அல்லது இப்பொழுதாவது அவைகளை ஆண்டவன்தான் சொன்னான் என்று கருதும் படியாகவோ—ஏன் அந்த ஆண்டவனால் செய்யமுடியவில்லை என்றும், இது ஆண்டவனால் முடியாத காரியமா என்றும் யோசிக்கப் புகுந்தால், அதிலிருந்தே அவைகள் எல்லாம் ஆண்டவனால் சொல்லப்பட்டவை என்று சொல்லப்படுவது உண்மையாய் இருக்க முடியுமா என்னும் சந்தேகங்கள் தோன்றுவதற்கு, என்ன சமாதானம் சொல்லுவது என்பதேயாகும்.

[புதுச்சேரியில், 1-3-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 8-3-1931]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

முயற்சி விஷயத்தில் மேல் நாட்டாரோ இமயமலை உச்சியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும், அதிவேகமாய்ப் பறக்க முயற்சிக்க வேண்டும் என்றும் அவ்வித முயற்சியினால் மரணமடைந்தாலும் பரவாயில்லை என்றும் மேல் நோக்கிக்கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது இந்தியாவிலோ ஒன்றுமே இல்லை.

ஏனெனில், தைரியமும் வீரமும் நமக்கில்லை. உதாரணமாக, ரூ. 400, 500 இலஞ்சம் முதலியன செலவு செய்து ஒரு லைசென்சு வாங்கி துப்பாக்கி வாங்கியிருந்தாலும், அத் துப்பாக்கியின் குதிரையானது கெட்டுப்போய், குதிரையைக் கம்மாளனிடம் கொடுத்து விட்டுக் கட்டையை மூலையில் வைத்திருக்கும்பொழுதுகூட நமது குழந்தைகள் அதன் பக்கமாய்ச் சென்றால், 'துப்பாக்கி! துப்பாக்கி! கிட்டே போகாதே—போகாதே!' என்று சத்தமிடுகின்றோம். ஏன்? நமக்குப் பயமே அதிகமாக இருக்கின்றது; தைரிய உணர்ச்சி என்பது சிறிதுகூட இல்லை. இதனால் நமது அறிவு எவ்வளவுதூரம் முதிர்ச்சி அடைந் திருக்கின்றது என்பது புலப்படுகிறது. நாம், வீணாய் 'நாளை, நாளை' என நாட் களைக் கழித்துக்கொண்டுதான் செல்கின்றோமேயல்லாது வேறில்லை; விஷயங்களை உணரக்கூடிய சக்தியுமில்லை. அப்படி யாராவது உணர்ந்து சொல்ல வந்தாலும், 'நமது முன்னோர்கள் எவ்வளவு பெரியவர்கள்—அவர்களுக்குத் தெரியாத சங்கதியா இவர்களுக்குத் தெரிந்துவிட்டது? இவன் நேற்று வந்த பயல்தானே! அவரைவிடவா இவன் பெரியவன்?' என உரைப்பதில்இருக்கிறோம். இதற்குக் காரணம் என்னவென்றால், நமது அடிமைத்தனம் நம்முடைய தலையின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறது; அது நமது அறிவைக் கூரில்லாமல் செய்துவிட்டது. நமது நாட்டில் இருக்கக்கூடிய அறிவாளிகளும், தீர்க்கதரிசி



படிப்பகம்

www.padippakam.com



களும், கவிவாணர்களும் பழைமையைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். பழைமையிலிருந்து அவர்கள் சிறிதேனும் நழுவுவார்களேயானால் அவர்களுடைய கவிகளை அரங்கேற்ற முடியவே முடியாது.

மக்கள் ஒவ்வொன்றையும் யோசனை செய்து புதிது புதிதாக ஒவ்வொன்றையும் கண்டுபிடிப்பதற்குத்தான் ஆராய்ச்சி எனப்பெயர். ஆனால், நாமோ நமது முன்னோர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை ஆராய்ச்சி செய்வதிலும், அதை நிலை நிறுத்த என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்வதிலுந்தான் ஆராய்ச்சித்துறையில் இருந்துவருகின்றோமே யல்லாது, அதாவது, பின்னால்தான் திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்கிறோமே தவிர, முன்னோக்கிப் பார்ப்பது இல்லை. மேல்நாட்டுக்காரன் ஏதாகிலும் ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடித்தால் மென்மேலும் ஆராய்ச்சி செய்து, 1930-ல் இப்படி இருந்தால், 1940-ல் இது எப்படி இருக்கும்; 1950-ல் இப்படி இருந்தால், 1960-ல் எப்படி இருக்கும் என்பதையே அறிந்துகொள்ள முயற்சிக்கிறான். இதுதான் அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

உதாரணமாக, ஒரு 'போர்டு மோட்டார்' வண்டியை எடுத்துக்கொண்டால் 20 வருடங்களுக்கு முன்பிருந்த உருவம் இப்போது இல்லை. அப்போது மணி ஒன்றுக்கு 18 மைல் சென்றால் இப்போது 90 மைல் வீதம் செல்கிறது. மோட்டாரில் காணப்படும் கோளாறுகளை குறைத்துக்கொண்டே முன்னேறிக்கொண்டு வருகிறான். அவனுக்கு மனிதத் தன்மை, உணர்ச்சி, ஊக்கம், முயற்சி, கவலை ஆகியவைகள் இருக்கின்றன. நமக்கோ அவை இல்லை.

எதை எடுத்தாலும் நமது நாட்டில் பழமை வந்து குறுக்கிடுகின்றது. நமக்குக் கவலை இல்லை; ஊக்கமில்லை; முயற்சி இல்லை; முற்போக்கடைய ஆசையுமில்லை. நாடு முற்போக்கு அடைந்துவிட்டால் சோம்பேறிகளுக்கு இடமிருக்காது. நாம் ஒவ்வொன்றையும் புராணக் கதைகளை ஒப்பிட்டுத் திருப்தி அடைகிறோம். நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருப்பவைகளில் முதன்மையானது மூடப் பழக்கவழக்கமேயாகும்.

நாம், இங்குதான் 'பாரத வீரர்கள், பீமன் சந்ததிகள்' என்று மேடையேறிப் பேசுகிறோமே தவிர, ஒரு அராபி தேசத்தவனை ஒரு நடுத் தடத்தில் பார்த்துவிட்டால்—நமது மக்கள் ஆண், பெண் அடங்கலும் நடுங்குகின்றனர்; காலுடன் மூத்திரம் பெய்துகொள்கின்றனர். வெளி தேசத்திலிருந்து எவன் வந்தாலும் அவனைக் கண்டால் இப்படித்தான் நடுங்குகின்றோம்.

வெளிநாட்டுக்காரன் இங்குவந்து சம்பாதித்துப் போவதற்குக் காரணமே, நமக்கு வீரமும் நாணயமும் அற்ற தன்மையாலேயாகும். நமது கிராமங்களில் ஒரு அராபித் தேசத்துக்காரன் 4 ரூபாய் பெறும்படியான ஒரு சால்வையை 8 ரூபாய்க்குக் கொடுத்துவிட்டு 6 மாதம் பொறுத்துவந்து பணம் கேட்டால், வெற்றிலை, பாக்குத் தட்டில் வைத்து, சங்கராச்சாரிக்குக் காணிக்கை கொடுப்பதுபோல் பயபக்தியுடன் கொடுத்துவிடுகின்றோம்; அவனைக் கண்டால் நடுங்குகின்றோம். உள்ளூர்வாசியிடம் கடன்பட்டிருந்தாலோ அவனுடைய கடனைக் கொடுக்க மறுப்பதுமல்லாமல், 'பண்ணுவதைப் பண்ணு' என்றும் சொல்லுகிறோம். இதற்குக் காரணம் என்ன? ஒரு இரயில்வண்டியில் ஆப்கன் தேசத்தான் ஒருவன் இருந்து அவ்வண்டி முழுமையும் காலியாக இருந்தாலுங்கூட நாம் அவ் வண்டியில் ஏறமாட்டோம். நாம் 10 பேர்வரை ஒரு அறையில் உட்கார்ந்து அவ்வண்டியில் இடமில்லாதிருந்தபோதிலுங் கூட, வடதேசத்தான் ஒருவன் தைரியமாக வந்து உட்காருவான். நாமும் உடனே வண்டியைக் காலிசெய்துவிடுவோம்.

ஆனால், நாம் காளி, வீரன், கருப்பன், சடையாண்டி, முதலிய 'வீரம்' பொருந்திய தெய்வங்களை வணங்குபவர்களாகவும் இருக்கிறோம். எதற்காக இவற்றைக் கும்பிடுகிறோம் என்றால், அத் தெய்வங்களுக்குள்ள தைரியம் நமக்கும் வரவேண்டும் என்றுதான் கும்பிடு



கிறோம். ஆனால், நாம் அதனால் தைரியமுடையவர்களாக வாழ்கின்றோமா என்று பார்த்தாலோ அப்படியுமில்லை. நமது தைரியமெல்லாம் முதலில், 'அடி பார்க்கலாம்!' என்பதிலும், அடிவிழுந்தால் 'ஓடுவதற்குள் என்ன அவசரம்?' என்பதிலேயேதான் இருக்கின்றது. யார் அடித்தாலும் திருப்பி அடிக்கக்கூடிய நிலையில் நாம் இன்று இல்லை.

[திண்டுக்கல் சித்தையன் கோட்டையில், 22-6-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-6-1931]

தோழர்களே!

விவகாரம், நியாயம் என்ற இரண்டு வார்த்தைகளையும் உபயோகப்படுத்தும் விதத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளும்படி கோருகிறேன். நியாயம் வேறு—விவகாரம் என்பதும் வேறு.

விவகாரம் என்பது வலுத்தவன் ஆதிக்கத்தையும், தந்திர சூழ்ச்சிகளையும், பணச் செல்வாக்கையும் பொறுத்து முடிவுபெற்றுவிடும். ஒருவன் தன்னிடம் சக்தியில்லாத காரணத்தால்—பேசும் திறமை, எடுத்துக்காட்டும் அனுபவம் ஆகியவை இல்லாத காரணத்தால் ஒரு விஷயத்தைப் பற்றி வாதித்துத் தோல்வியுற்றுவிட்டால் அது நியாயம் கண்டுபிடித்ததாகிவிடுமா? அதுபோல், உங்கள் வாய் அடங்கும்படி நான் பதில் சொல்லிவிட்டதாலேயே நான் சொன்னது சரி என்று சொல்லிவிடமுடியாது. உங்களுக்கு எடுத்துச் சொல்லி மெய்ப்பிக்க முடியாததாலேயே நான் சொன்னது தப்பு என்றும் சொல்லிவிட முடியாது. ஆதலால், எனக்குத் தெரிந்த பதில் சொல்லுகிறேன். அதை ஆராய்ச்சி செய்து பிறகு தக்க ஒரு முடிவுக்கு வாருங்கள்.

[ஈரோடு, லண்டன் மிஷன் பள்ளியில் சொற்பொழிவு—'புரட்சி' 31-12-1933]

## 3. பழந் தமிழன் பெருமை

பழந் தமிழன் யார்? அவன் கொள்கை என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அதற்கு இன்று அவசியம் என்ன?—என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல இன்று ஆளைக் காணோம். வீணாக அந்தப் பெயரின்பேரில் பிழைக்கவோ, பெருமைப்படவோ, மக்களைச் சுரண்டவோ, தங்கள் எண்ணத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவோ அது பயன்படுத்தப் படுகிறது. பழந் தமிழன் யாராயிருந்தால், எனக்கு என்ன? உங்களுக்குத்தான் என்ன காரியம் ஆகும்? அவன் கொள்கையோ, மதமோ, கடவுளோ, நடப்போ, சக்தியோ எதுவாய் இருந்தாலும் இங்கு, இன்று நமக்கு அதனால் என்ன இலாபம் என்பதுதான் என் கேள்வி. பழந்தமிழர் நிலையைப்பற்றிப் பேசுபவர்கள் பகுத்தறிவுவாதிகளானால், பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கும் அறிவாளிகளானால், நடுநிலைமைக்காரர்களானால்-அவர்களை ஒன்று கேட்கிறேன். அதாவது, காட்டுமிராண்டி வாழ்க்கைக் கால மனிதனைவிட கல்லாயுத கால வாழ்க்கை மனிதன் சிறந்தவன் அல்லவா என்பதும்; அதுபோலவே 4000, 5000 வருஷ காலத்திற்கு முன் இருந்த மனிதனைவிட இன்று 20-வது நூற்றாண்டில் வாழும் மனிதன் சிறிதாவது மேலான அனுபவமும், அனுபவம்பெற சவுகரியமும், ஆராய்ந்து பார்க்கும் வசதியும் உடையவனா அல்லவா என்பதோடு, அந்தக் காலத்தில் வாழ்ந்த வாழ்வைவிட, எண்ணிய எண்ணத்தைவிட வேறான வாழ்வும், வேறான எண்ணங்கள் கொள்ளவேண்டியவனாய் இருக்கின்றானா இல்லையா என்பதுமே ஆகும்.

இன்று வாழும் மனிதனுடைய எந்தக் காரியத்திற்குப் பழந் தமிழனுடைய வாழ்க்கைக் குறிப்பும் நினைவுக் குறிப்பும் நமக்கு வேண்டியிருக்கிறது என்று உங்களை வணக்கமாகக் கேட்கிறேன்.

வீணாகப் பழந்தமிழர் கொள்கை என்பதும், பழந் தமிழர் வாழ்க்கை நிலை என்பதும் அன்னியனை ஏய்க்கவோ, அறியாமையில் மூழ்கவோதான் பயன்படக்கூடியதாக ஆகி

படிப்பகம்

www.padippakam.com



விட்டன. இனி நம்முடைய எந்தச் சீர்திருத்தத்திற்கும் அந்தப் பேச்சு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவுவாதியின் கடமையாகி விட்டது.

பழந் தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது மனித சமூகம் இல்லை. பழந் தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை. மனிதன் காலத்தோடு, மாறுதலோடு செல்ல வேண்டியவனே ஒழிய வேறில்லை. வேண்டுமானால் மடையர்களைத் தட்டி எழுப்ப ஒரு ஆயுதமாக அதைக் கொள்ளலாம். ஆனால், சாது மக்களை ஏமாற்ற அதைப் பயன்படுத்தவிடக்கூடாது என்பதோடு, அவ்வளவு மடையர்களாகவும் நாம் இல்லை. இன்று நம் பண்டிதர் பலருக்குப் பகுத்தறிவு இல்லாமல் போனதற்குக் காரணமே பழந்தமிழர் வாழ்க்கை, பழங்கொள்கை என்பன போன்ற பழமையேயாகும். பழந் தமிழர் பேச்சைப்பேசி இனி ஆகவேண்டிய காரியம் எதுவும் இல்லை. ஆதலால், பொதுமக்கள் பழந் தமிழர் கொள்கைப் பேச்சுப் பித்தலாட்டத்திற்கு இடங்கொடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும். அன்றியும் பழந் தமிழர் கொள்கை என்பது விவகாரத்திற்கு இடமாய்விட்டது.

['குடி அரசு'-கட்டுரை—10-1-1943]

## 4. சிந்திக்காததால் கேடு

தலைவரவர்களே! பேராசிரியர்களே! மாணவர்களே!

சிந்திக்கும் அறிவை 500, 1000 ஆண்டுகளுக்கு முன் மனிதன் பயன்படுத்தி இருந்தால் எவ்வளவோ முன்னுக்குப் போய் இருக்கலாம். ஜன்மமே துக்கம்; வாழ்வே துன்ப சாகரம்—என்று எண்ணியும், அறிவுகொண்டு எதையும் சிந்திக்காமலும் மனிதன் அடங்கிக் கிடந்தானே ஒழிய, 1000, 500 ஆண்டுகளுக்கு முன் எவனும் அறிவைப் பயன் படுத்தவே இல்லை.

மனிதன் தனது முயற்சியால் இரு வேறுவகை நாய்களைச் சேரவைத்துச் சிறந்த புதிய இனத்தை உண்டாக்குகிறான்; புளிப்பு மாங்காயைச் சர்க்கரை மாங்காயாக மாற்ற இரு வேறு மரக் கிளைகளை ஒட்டுகிறான்.

ஆனால், மனிதனை எந்த முறையில் திருத்தி முன்னேற்றலாம் என்று எண்ணவே இல்லை.

எனக்கு உள்ள கவலை—மனிதனுக்கு இந்த எண்ணம் ஏற்படும்படியான சாதனம் இந்தப் படிப்பு அல்ல. இருந்திருந்தால் மனிதன் எவ்வளவோ முன்னேறியிருப்பான்.

மனிதனைச் சீர்திருத்தி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று எண்ணுபவர்கள் மிகமிகக் குறைவு.

மக்கள் அறிவின் பெருமையை உணருவதற்கு முதுகைப் பார்த்துத்தான் பழகி யிருக்கிறார்களே ஒழிய, முன்னே பார்த்துப் பழகவில்லை.

கடவுள் சொன்னது, மகான் சொன்னது, ரிஷிகள் சொன்னது, அவதார புருஷர்கள் சொன்னது என்று பார்க்கிறானே ஒழிய—தன் புத்தி என்ன சொல்லுகிறது என்று பார்ப்பதேயில்லை.

மனிதன் குழந்தைப் பருவத்தைக் காட்டிலும்—3, 4 வயதில் அறிவில் சிறிது முன்னேறுகின்றான்; அதைவிடப் பள்ளிப் பருவத்தில் முன்னேற்றம் அடைகின்றான். பிறகு திருமணமான பிறகு குழந்தை குட்டிகளைப் பெற்றுக்கொண்டும் பல புது அனுபவங் களைப் பெறுகிறான். மற்றும் கால மாறுதல், சுற்றுச் சார்பு, அக்கம் பக்கம் இவைகளுக் கேற்பவும் மாறுதல் அடைகிறான்.



வாழ்வுக்கு, பொறுப்புக்கு, பக்குவத்துக்கு ஏற்ப அறிவு மாறும்போது—1000, 2000 வருடங்களுக்கு முன்பு, 4 சதுர்யுகங்களுக்கு முன்பு, நமது முன்னோர்கள் எப்படி நடந் தார்கள், நமது கடவுள்—சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றன, அதன்படிதான் நடக்க வேண்டும் என்றால் என்ன நியாயம்? சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர்களைவிட நாம் சிறந்தவர்களாக உள்ளோம். இது இப்படி இருக்க, 1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதன் எப்படி அறிவுள்ளவனாக, இன்றைய மனிதனைவிட எதில் சிறந்தவனாக இருக்கமுடியும்?

கிராமத்து அறிவைவிட நகரத்து அறிவு சிறந்து இருக்கின்றது. சென்னை போன்ற பெரிய இடங்களில் நகரத்து அறிவைவிட அதிகம் பெறமுடிகிறது.

நமது நாட்டு அறிவைவிட லண்டன், அமெரிக்கா அறிவு சிறந்து நிற்கின்றது; இந்த லண்டன், அமெரிக்காவைவிட—ரஷ்யா அறிவில் மேலோங்கி நிற்கின்றது. இவைகளை யெல்லாம் கண்டு—நாம் இதுவரை எதை எதை அறிவு வளர்ச்சி பெற்ற இடங்கள் என்று எண்ணி இருந்தோமோ—அதை, அதைவிட அதிக வளர்ச்சி பெற்ற இடங்கள் உண்டு என்பதை உணர்ந்து, நமது தவறான கருத்துக்களை எல்லாம் மாற்றிக்கொள்ளுகின்றோம்.

இவ்வளவு பிரத்தியட்சத்தைக் கண்ட பிறகும் நாம் கீழ்நிலையிலேயே இருக் கின்றோம். நமக்கு அறிவு இருந்தாலும், பகுத்தறிவை—உணர்ச்சியைத் தூண்ட அறிவு சாதனங்களும் இல்லை; நமக்கு வழிகாட்ட ஆளேயில்லை. எவனைப் பார்த்தாலும் பின்னாலே போகச் சொல்லுவானே ஒழிய, முன்னுக்குக் காட்ட ஆளே இல்லை. எதற்கு எடுத்தாலும்—சாஸ்திரத்தைப் பார்! புராணத்தைப் பார்! புலவர்களின் இலக்கியத்தைப் பார்! என்கிறார்களே ஒழிய, உன் புத்தி என்ன சொல்லுகிறது என்று சிந்தித்துப் பார் என்பதே இல்லை.

மனிதன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், ஒழுக்கங்கள் என்ன என்றால்—அந்த முனி அப்படிச் சொன்னார்; இந்த ரிஷி இப்படிச் சொன்னார் என்று கூறுகிறானே ஒழிய, அந்தப் பயல்கள் எல்லாம் யார், அவர்கள் வாழ்ந்ததாகக் கூறுகின்றாயே—அந்த 1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களுக்கு என்ன புத்தியிருந்திருக்கும் என்று எண்ணிப் பார்ப்பதே இல்லை.

தோழர்களே! நமது கோர்ட்டுகளில் சட்டத்திற்கு வியாக்கியானம் செய்யும்போது மேற்கோள் காட்டி விளக்குகையில்—அகத்தியர் என்ன சொன்னார்? நாரதர் என்ன சொன்னார்? வசிஷ்டர் என்ன சொன்னார்? என்றுதான் பார்க்கப்படுகிறது.

நீங்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிக் கூறப்படுபவர்களெல்லாம் யார்? அவர்கள் பிறப்பு, வளர்ப்பு என்ன? என்பதை எண்ணிப் பார்த்தால்—நாம் எவ்வளவு மோசமாக நடக்கின்றோம்; நமது சட்டம் எவ்வளவு முட்டாள்தனமானது என்பது விளங்கும்.

இந்த ரிஷிகள் பலர் மனிதர்களுக்கே பிறக்கவில்லை. கலைக்கோட்டு முனி—மானுக்கும்; ஜம்புகர்—நரிக்கும், கவுதமர்—மாட்டுக்கும், மாண்டவியர்—தவளைக்கும், காங்கேயர்—கழுதைக்கும், கணநாதர்—கோட்டானுக்கும், சவுனகர்—நாய்க்கும், சுகர்—கிளிக்கும், ஜாம்பவந்தர்—கரடிக்கும், அஸ்வத்தாமா—குதிரைக்கும் பிறந்தார்கள் என்று புராணங்களில் எழுதிவைத்துக்கொண்டு இருக்கின்றனர். இவர்கள்தாம் நம் வாழ்வுக்கும் நடப்புக்கும் ஒழுக்கமுறையைக் கற்பிக்க எடுத்துக்காட்டாகக் கூறப்படுபவர்கள்.

எனவே, மாணவர்கள் அறிவில் நம்பிக்கை வைத்து, எந்தக் காரியத்தையும் துருவித் துருவிப் பார்க்கவேண்டும்; முன்னோர்கள் பக்கம் திரும்பிப் பார்க்கவேகூடாது. இப்படி அறிவில் நம்பிக்கை வைக்க வேண்டும்—சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கூறுபவர்களை இவர்கள் நாத்திகர்கள் என்று ஒரு வார்த்தையில் கூறிவிடுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



நாத்திகன் என்றால் ஞானி, அறிவாளி என்றுதான் பெயர்; கடவுள் இல்லை என்பவர் என்பது பொருள் அல்ல. ஞானி என்றால் முனிவர் என்பது அல்ல—ஞானம் உடையவன்; அறிவு உடையவன் என்பது பொருள். எவன் ஒருவன் அறிவை உபயோகப் படுத்துகிறானோ—எவன் ஒருவன் அறிவுகொண்டு எதையும் விவகாரம் பண்ணுகிறானோ அவன் நாத்திகன் என்று கூறப்படுகிறான்.

ஆத்திகன் என்றால் அறிவில் நம்பிக்கை வைக்காமல்—சாஸ்திரம், புராணங்கள் முதலியவைகளை அப்படியே ஒப்புக்கொண்டு, ஆராயாமல் நடப்பவன் என்று பொருள்.

தோழர்களே! இராமாயணத்திலேயே ஓர் இடத்தில் நாத்திகனைப் பற்றிக் குறிக்கும் போது, 'எவன் ஒருவன் நீதியில் நம்பிக்கை வைத்து நடக்கின்றானோ அவன் நாத்திகன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. அப்படி அறிவில் நம்பிக்கை வைத்து நடக்க வேண்டும் என்று சொன்னவர்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டே இருக்கின்றனர். அதன் காரணமாகவே இந்தத் துறையில் இறங்கிப் பாடுபட எவருமே முன் வருவதில்லை.

2500 ஆண்டுகளுக்கு முன் புத்தர் தோன்றிப் பாடுபட்டார். 'உன் அறிவு என்ன சொன்னதோ அதன்படி நட; முன்னோர்கள்—பெரியவர்கள் சொன்னார்கள், வெகு காலத்துக்குமுன் சொல்லப்பட்ட கருத்தாயிற்றே என்று நம்பாதே! மோட்சம், நரகம் என்பது எல்லாம் பித்தலாட்டம்' என்று எடுத்துக் காட்டி விளக்கினார். அவருடைய இயக்கம் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பரவி இருந்தது என்றாலும், புத்தருக்குப் பிறகு அது ஒழிக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டுவிட்டது. பிறகு யாரும் வரவில்லை. நாங்கள்தான் பாடுபடுகின்றோம்.

மாணவர்களாகிய நீங்கள் நல்ல வாழ்வில் நம்பிக்கை வைக்கவேண்டும். அறிவில் நம்பிக்கை வைத்து ஒழுக வேண்டும்.

[மதுரை தியாகராயர் கல்லூரியில், 13-3-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-4-1961]

# பகுதி VIII

# கலைகள்

படிப்பகம்

www.padippakam.com

# 1. கலைகள்

## 1. நமது இலக்கியம்

தலைவரவர்களே! மாணவத் தோழர்களே! தாய்மார்களே!

தமிழனைப் பற்றிச் சிந்தித்து இலக்கியம் பற்றி ஏதாவது பேசுவதாக இருந்தால், முதலில் எதற்காக இலக்கியம், அதனால் நமக்கு என்ன பயன் என்று யோசிக்க வேண்டும். நம் புத்திக்கு எட்டிய முறையில் தமிழர் பண்புக்கு, கலைக்குத் தகுந்தவாறு ஏதாவது இருக்கிறதா என்றால் ஒரு இலக்கியங்கூட இல்லை. இருந்தால் யாராவது சொல்லட்டுமே! எல்லா இலக்கியங்களும் ஆரியர் பண்புக்கு, கலைக்கு, நடத்தைக்குத்தான் இருக்கின்றன. வேண்டுமானால், 'குறள் இருக்கிறதே' என்று சிலர் சொல்வார்கள். நான் சொல்வேன், 'குறளில்கூட தமிழருக்குத் தகுந்தவாறு 50 சதம் தான் இருக்கிறது' என்று. நாட்டில் இலக்கியங்கள் இருந்தால் அது நாகரிகத்திற்கு, அறிவு வளர்ச்சிக்கு, புரட்சிக்கு, முற்போக்கு மாறுதலுக்கு உதவிட வேண்டும். ஆனால், நம் நாட்டு இலக்கியங்களோ புலவர்களும் மதவாதிகளும் ஆரியரும் பிழைக்கத்தான் இருக்கின்றன. 'வடமொழி வேதங்கள் ஆரியருக் கென்றால் தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் தான் நமது வேதங்கள்' என்று ஒரு தடவை மறைமலையடிகள் சொன்னார்கள். கடவுளைக் 'கண்ணே', 'மணியே'! என்று பிரார்த்தித்தால் அது வேதமாகுமா? இலக்கியமாகுமா? மூடத்தனமான பக்திப் பாடல் களைத் தவிர நமக்கு இலக்கியமில்லை.

மேல்நாட்டு இலக்கியங்களைப் பாருங்கள்! மேல்நாட்டு இலக்கியங்களை எடுத்துப் பார்த்தால் நான் சொல்வதன் உண்மை விளங்கும். நம் நாட்டில் இருக்கும் இலக்கியங்களை எடுத்துப் பார்த்தால் அதில் மதம் தலைவிரித்தாடும். ஆத்திகம் ஆதிக்கம் செலுத்தும். ஆரியம் அதை அடிமை கொண்டதாக இருக்கும். இன்றைக்குத் தொல்காப்பியம் இருக்கிறது. அதுவும் இலக்கியந்தான். அது புலவர் கையிலும், பட்டதாரி கையிலும் சிக்கியதே தவிர பாட்டாளிகள் கையில் சிக்கவில்லை. என்றாலும், அதிலும் ஆரியம் புகுந் திருக்கிறது. விளம்பரமாகியிருக்கும் மற்ற இலக்கியங்கள் இராமாயணம், பாரதம், பெரியபுராணம், தேவாரம், திருவாசகம் இவைதாம். பெரும்பாலானவை வடமொழியி லிருந்து காப்பியடிக்கப்பட்ட நூல்கள். மற்றவை அவற்றை அனுசரித்துச் செய்யப் பட்டவை. ஆரியர் வருகைக்கு முன்பு தமிழர் பண்பு எப்படி இருந்தது, இன்றைக்கு எப்படி இருக்கவேண்டியதாகும் என்பதைக்காட்ட நமக்கு இலக்கியம் இருக்கிறதா? ஏதாவது ஒன்று இருந்ததாகக் காட்டவாவது முடியுமா? ஆரியர்கள் இதில் செல்வாக்குப் பெற்றிருந்த காரணத்தால், மக்கள் இதைப்பற்றிக் கவலைப்பட வில்லை; சிந்திக்கக்கூட இல்லை. ஆங்கில இலக்கியங்களைப் படித்தவர்கள் பிழைப்புக்காக உத்தியோகத்திற்குப் போய்விட்டார்கள். அவர்கள், அதை வேறு எவருக்கும் கற்றுத் தரவில்லை; பயன் படுத்த வில்லை. அதனால் நல்ல மேல்நாட்டு இலக்கியங்களும் நம் மக்களிடம் பரவவில்லை. அறிவோடு ஆராய்ந்து பார்த்தால், நமக்கு இலக்கியம் இருந்ததா என்பதுபற்றிக்கூட நினைக்க நியாயமில்லை. ஆரியர்களுக்கே இலக்கிய சுதந்திரம், ஆக்க சுதந்திரம் இருந்ததோடு அழிக்கும் சுதந்திரமும் இருந்தது. நமக்கென இருந்தவை எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. அக் காலத்தில் கிராமபோன் இல்லை; அச்சு இயந்திரம் இல்லை; ஓலை ஏடுகள்தான் இருந்தன. ஏடு நீண்ட நாட்களுக்கு இருக்க முடியாது. கரையான் அரித்துவிடும்; பூச்சிகள் தின்றுவிடும். ஆரியம் இலக்கியத் துறையிலே ஆதிக்கம் கொண்டிருந்தபொழுது அதனுடன் போட்டிபோடத் தக்க சாதனங்கள் இல்லாமலிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com



முதலாவது, நம்மவர்களுக்குப் படிப்பில்லை. சிறிது படித்தவர்கள் இருந்தால் அவர்கள் பக்தர்களாக ஆகிவிடுகிறார்கள். அப் பக்தர்கள் ஆரியத்தைப் பரப்பும் அடிகளார்களாக ஆகிவிடுகிறார்கள். இலக்கியம் என்றாலே பக்தி நூல்கள்; புலவர்கள் என்றாலே பக்தர்கள். இப் புலவர்களால் இலக்கியம் எப்படி வளரமுடியும்? ஆகவே, பொதுவாக நமக்கு இலக்கிய மில்லை.

இன்று புலவர்கள் என்பவர்கள் நிறைய இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் ஆரிய இலக்கியங்களை விற்று வயிறு வளர்க்கிறவர்கள்தான். கலைவாணர்கள் என்பவர்களும் ஏராளமாய் இருக்கிறார்கள். அவர்கள் 100-க்கு 100 பேரும் ஆரியப் பண்புள்ள இலக்கியங் களைக் கலைக்குள் புகுத்தி, ஆரிய அடிமைகளாக இருந்து, வயிறு வளர்க்கிறவர்கள்தான். அவர்கள் கல்லூரிகளிலும், உத்தியோகங்களிலும், பள்ளிகளிலும் இருந்துகொண்டு புத்தகம் போட்டுப் பணம் சம்பாதிக்கிறார்கள். நமக்கு, நம் பண்புக்கு வேண்டிய இலக்கியங்களை எழுத யாரும் இல்லை. இரண்டொரு ஸ்தாபனங்கள்தான் இதற்காகப் பாடுபடுகின்றன. அவற்றுக்குச் செல்வாக்கு இல்லை. சிறிது செல்வாக்கு இருந்தாலும் அதை எதிரிகள் மட்டந்தட்டியபடி இருக்கிறார்கள். அறிவை, ஒழுக்கத்தை வளர்க்கும் இலக்கியமே தேவை. ஆகவே, இனிமேல்தான் நமக்கான இலக்கியம் தோன்றவேண்டும். அதில் இந்துமதம், ஆத்திகம், ஆரியம் மூன்றும் இருக்கக்கூடாது. அறிவு, ஒழுக்கம், விஞ்ஞானம் இவைதான் இருக்கவேண்டும். அறிவு, ஒழுக்கம், விஞ்ஞானம், ஆராய்ச்சி என்றால் அவை நம் நாட்டில் நாத்திகம், மதவெறுப்பு என்றாக்கப்பட்டுவிட்டது. அதனாலேயே நம் நாட்டில் நல்ல பயன்படும் இலக்கியம் இல்லை என்பதோடு தோன்றவும் இல்லை.

காவியங்கள் என்ற பெயரால் சில இலக்கிய நூல்கள் இருக்கின்றன. அவை எதற்கு உதவும் என்பதே எவருக்கும் தெரியாது. அவை மக்களிடம் பரவவும் இல்லை. உண்மையில் தமிழருக்கு உகந்த ஒரு இலக்கிய நூல்கூட இல்லை. சிலப்பதிகாரத்தில் ஆரியம், மடமை கலக்காமல் இருக்கும் பத்து வரிகளைக் காணமுடியாது. இப்படித்தான் மற்றவையும். ஆரியப் பண்பு வேறு; நமது பண்பு வேறு. ஆரியர் வேறு; நாம் வேறு. ஆரியம் வேறு, திராவிடம் வேறு என்ற உணர்ச்சியும் எண்ணமும் இப்போது 50 ஆண்டு களாகத்தான் மக்களிடம்—அதுவும் வெகு சில மக்களிடம் காணமுடிகிறது. நேற்றுவரை இலக்கியங்களைக் கையாண்டவனும், தோற்றுவித்தவனும் ஆரியன்தான். ஆரியப் பிரச்சாரத்திற்கும் ஆதிக்கத்திற்குந்தான் அவற்றைத் தோற்றுவித்தான். நம் முயற்சியால் தமிழில் ஏதோ சில நூல்கள் தோன்றின. பத்திரிகைப் பிரச்சாரம் செய்யப் பலர் வசதி பெற்றுள்ளனர். என்றாலும், அவர்களில் ஆரியத்திற்கு அடிமையாகிப் பணம் திரட்டும் ஈனப் பிறவிகளாகவே அதிகம் பேர் இருந்து வருகிறார்கள். ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ்ப் புலவர்கள் இவ்வளவு துரோகிகளாக இல்லாவிட்டாலும் மடமையில், பொய்யில் ஊறியவர்கள். பட்டமரம் தழைக்கப் பாடுவார்கள். அறம் பாடி மிரட்டுவார்கள். பிச்சை எடுக்கக் கவி பாடுவார்கள். ஆரிய புராண இலக்கியத்தைப் பரப்பிக் கூலி பெறுவார்கள். இந்தக் கோவிலில் முக்கியம் என்ன என்று ஒருவனைக் கேட்டால் அதுவா, அது இன்ன ஆழ்வாரால் மங்களாசாசனம் பெற்ற கோவில்; இன்ன நாயன்மாரால் பாடப் பெற்ற கோவில் என்பதுதான் பெருமை.

பழங்காலத்தில் ஏதோ சிறிது படித்தாலும் பெரும் புலவனாகிவிடுவான். அக் காலத்தில் வசனம் இல்லை. பெரிதும் பாட்டுத்தான். அந்தப் பாட்டும் எதுகை, மோனையை அவசியமாகக் கொண்டவையாக இருக்கும். அதைத் தெரிந்தவன் ஒன்று பிச்சைக்குப் பாடுவான், அல்லது பக்திக்குப் பாடுவான்! பக்திக்குப் பாட ஆரம்பித்தால் சுவாமிகள், அடிகள், நாயன்மார், ஆழ்வார் ஆகிவிடுவார்கள். அவர்கள் அதிகமாகப் பிச்சை எடுத்துக்கொண்டு திரிந்த பக்கத்தில் உள்ள கடவுள்களைப்பற்றிப் பாடிய பாட்டுக்கள் பிரபந்தங்கள் ஆகிவிடுகின்றன. அக் கோவில்கள் பாடல்பெற்ற கோவில்—



'ஸ்தலங்கள்' ஆகிவிடுகின்றன. நாட்டு, 'தேவ ஆரங்கள்' ஆகிவிடுகின்றன. யாரோ ஒரு சில புலவர்கள்—வள்ளுவர், அவ்வை, கபிலர் போன்றவர்கள் நீதிநூல், நீதி மஞ்சரி, கொன்றைவேந்தன், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, சதகம், நாலடி முதலிய பல நீதிகளைப்பற்றியும் ஒழுக்கம்பற்றியும் கூறப்பட்டுள்ள இலக்கியங்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார்கள். 60, 70 ஆண்டுகளுக்கு முன் நான் திண்ணைப் பள்ளிகளில் படிக்கும் பொழுது இவையே தலைசிறந்து விளங்கின. இப்போது அவை குப்பை மேட்டிற்குப் போகச் செய்யப்பட்டுவிட்டன. அந்த இடங்களைப் புராணங்கள், இதிகாசங்கள், கைப்பற்றிவிட்டன. மக்களுக்குள் 50 ஆண்டுக்கு முன்பிருந்த ஒழுக்கம் இன்று ஏன் இல்லை என்றால், ஒழுக்கத்தைப் போதிக்கும் இலக்கிய நூல் எங்கே இருக்கிறது? ஒழுக்கத் திற்காக இலக்கியம் இல்லை என்பது மாத்திரமல்லாமல், ஒழுக்கத்திற்கான கல்வியும் இல்லை; ஒழுக்கத்திற்கான மதமும் இல்லை; ஒழுக்கத்திற்கான அரசும் இல்லை. ஒழுக்கக் கேட்டிற்கும், மோசடி–வஞ்சகத்திற்கும், துரோகத்திற்கும் கல்லூரி, சகல கலாசாலை என்று சொல்லத்தக்க வண்ணமே இவைகள் இருக்கின்றன.

[திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 29-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-9-1956]

## 2. குறளும்—நானும்

பேரன்பு படைத்த தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! வணக்கம்.

வள்ளுவர் குறளையும், அந்தப்படியே, அப்போது பகுத்தறிவுக்கு ஏற்றதல்ல என்று கண்டித்து வந்தேன். எல்லாவற்றையும் குறை சொல்லும்போது, பலர் என்னிடம், 'எல்லாம் போய்விட்டால், நமக்கு எதுதான் நூல்?' என்று கேட்பார்கள். நான், 'இங்கே இருக்கிற மலத்தினால் கெட்ட நாற்றம் வீசுகிறது; அதை எடுத்துவிடு என்று கூறினால்—அந்த இடத்தில் என்ன வைப்பது என்றா கேட்பது?' என்று பதில் கூறுவேன்.

ஏறக்குறைய மத சம்பந்தமான காரியங்களில் மக்களுக்கு நம்பிக்கையே இருக்கக் கூடாது என்று கருதி அந்தப்படியாகவே பிரச்சாரம் புரிந்து வந்தேன். பிறகு நாளாக ஆக நல்ல அறிவாளிகளோடு—அறிவாளி என்றால் பண்டிதர்களோடு அல்ல, பொது அறிவுள்ள மக்களோடு, திராவிட உணர்ச்சி மிக்கவர்களோடு—நம் உணர்ச்சியுள்ள அறிவாளிகளோடு பழகியபோது குறளின் மேன்மை பற்றி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நான், 'இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதே, இந்த இடத்தில் இப்படி யிருக்கிறதே!' என்று கேட்டேன். 'அது பரிமேலழகரின் உரை; அது குறளாசிரியர் கருத்தல்ல' என்று எடுத்துக் கூறி உண்மை உரையினைச் சொன்னார்கள். அந்தக் காலத்தில் பரிமேலழகர் உரைதான் சிறந்த உரை என்று கொண்டாடப்பட்டது. அவர் மனுதர்ம சாஸ்திரப்படி குறளுக்கு உரை எழுதிவிட்டார். பின்னர் வந்த அறிவாளிகள் அதைக் கண்டித்து, குறளின் உண்மைக் கருத்தை எடுத்துக் காட்டினார்கள்.

அதிலிருந்துதான் நான் குறளைப் பற்றிப் பேசுகிறேன். அதுவும் அதையே ஆதாரமாக (Authority) எடுத்துக் கொண்டல்ல; 'நான் சொல்லுகிற கருத்து—அதிலும் இருக்கிறது பார்!' என்று கூறிவந்தேன்.

சிறிது குறை இருந்தாலும் இப்போதைக்கு இது இருக்கட்டும் என்று கருதினேன்.

புராணக் கருத்துக்களிலும், மூட நம்பிக்கைகளிலும் மூழ்கிக் கிடக்கும் நம் மக்க ளுக்குப் பகுத்தறிவு வளர்ந்தபின், மூடக் கருத்துக்கள் ஆட்டம் கண்ட பின்தான் குறளின் பொருளை உணரும் அறிவு மக்களுக்கு உண்டாகும் என்று கருதி, முதலில் மூடக் கருத்து களை அகற்றும் பணியில் பிரச்சாரம் புரிந்து வந்தேன். இன்று மக்களுக்குக் கொஞ்சம் அறிவுத் தெளிவு—பகுத்தறிவுத் தன்மை வளர்ந்து இருக்கிறதால் இன்று குறளைப் பற்றிப் பேசுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



'குறளில் இப்படியிருக்கிறதே! நீ ஏன் இப்படி நடக்கிறாய்?' என்று கேட்காதீர்கள். நான் சொல்லுவது அதில் இருக்கிறது என்ற அளவில்தான்—நான் குறளை ஆதரிக்கிறேன்; அதை அப்படியே முழுவதையும் ஒத்துக் கொள்ளமாட்டேன்.

உதாரணமாக, மாமிச உணவு உண்பதை வள்ளுவர் மிக வன்மையாகக் கண்டிக் கிறார்; கொல்லாமையின் உயர்வு குறித்து வெகுவாக எழுதியிருக்கிறார். குறளிலேயே அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதே என்பதற்காக நான் மாமிச உணவு உட்கொள்ளாமல் இருக்கமுடியுமா? மக்களுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் குறள்தான் ஆதாரம் என்று சொல்லவில்லை.

குறளிலிருந்து உங்களுக்கு வேண்டியதை ஏற்றுக் கொள்ளுங்கள். வேண்டாததைத் தள்ளிவிடுங்கள் என்றுதான் கூறுகிறேன்.

ஒரு கடையில் எல்லா சாமான்களும் கிடைக்கும் என்றால், அந்தக் கடையில் உள்ள எல்லா சாமான்களையும் நாம் வாங்கிக்கொண்டு வருவோமா? நமக்குத் தேவையான சாமான்களை மாத்திரந்தான் வாங்கிவருவோம். அது போலவே, குறளில் வேண்டியதை எடுத்துக் கொண்டு வேண்டாததை விட்டு விடுங்கள் என்று கூறுகிறேன்.

குறளில் ஏதோ சில குறைகள் இருக்கலாம்; இருக்க முடியும். ஏனென்றால், அது 1950-வது வருடத்திய (இன்றைய) மாடல் அல்ல. 2000 வருடத்திற்கு முந்திய சங்கதி. திருவள்ளுவர் திரிகால முணர்ந்த முனிபுங்கவரென்றோ, ஞானியென்றோ நாம் கொள்ள வில்லை. 2000 வருடங்களுக்கு முன்னர் ஒருவன் எவ்வளவு அறிவாளியாய் இருந்தாலும் எலக்ட்ரிக் லைட், ஒலிபெருக்கி, மோட்டார் முதலியவைகளைக் கண்டிருப்பானா? மதவாதிகள் வேண்டுமானால், 'எல்லாக் காலத்தையும், முக்காலத்தையும் உணர்ந்த மகான் இவர்' என்று பலரை விளம்பரப்படுத்தலாம். ஆனால், அது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. நாம் திருவள்ளுவரை மகான் என்றோ அவதார புருஷரென்றோ ஒத்துக்கொள்ளமாட்டோம்.

திருவள்ளுவர் நல்ல அறிவாளி, ஆராய்ச்சிக்காரர். அந்தக் காலத்தில் மக்களிடம் பரவி இருந்த மூட எண்ணங்களோடு போராடிய அறிஞர் என்ற அளவில்தான் ஒத்துக் கொள்ள முடியும்.

அந்தப்படியிருக்க, 2000 ஆண்களுக்கு முன்னதாகத் திருவள்ளுவர் சொன்னவை எல்லாம் அப்படியே இன்றைக்கும் ஏற்றதாக இருக்க முடியுமா? இன்றைய நிலைக்கு நான் பேசும் கொள்கைகள் சரி; என் திட்டங்கள் சரி என்றால் எனக்குப் பிறகும், இன்னும் 100, 200, 1000 வருடங்களுக்குப் பிறகும் என் கொள்கைகள்—நான் வகுத்த திட்டங்கள் கொஞ்சங்கூட மாற்றப்படாமல் அப்படியே இருக்கவேண்டும் என்பது என்ன நியாயம்? அந்தப்படி இருக்க முடியுமா?

காலத்திற்கு ஏற்ற முறையில்தான் எண்ணங்களின் விரிவும், கொள்கை, திட்டங் களும் இருக்க முடியும். போர் முறை பற்றித் திருவள்ளுவர்—வில், வாள், வேல், கேடயம் என்ற ஆயுதங்களை வைத்துத்தானே எழுதியிருக்கிறார்? இன்று எழுதப்பட்டால் அணு குண்டைப் பற்றி எழுதுவார்கள்; நாளைக்கு வேறொன்று. இந்தப் படியாகத்தானே மாறிக் கொண்டே போகும்! அப்படியிருக்க, எதையும் மாற்றக்கூடாது என்பது என்ன நியாயம்? ஆரியக் கருத்துகள், தத்துவங்கள் நம் நாட்டில் நுழையாதிருந்தால், நமக்குக் குறளே ஆதாரமாக—குறளே நம்முடைய மதமாக இருந்திருக்கும். ஆரியர்கள் திருவள்ளுவரை முதலிலேயே—பிறப்பிலேயே இழிந்தவராக ஆக்கிவிட்டார்கள்.

இந்து மதத்தில் எந்தக் காரியங்களைச் செய்தவராக இருந்தாலும், அதிசயமான—அற்புதமான—நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்களை அவர்களின் பிறவியில்–வரலாற்றில் புகுத்துவார்கள். இவன் குதிரைக்குப் பிறந்தான்; இவன் குரங்குக்குப் பிறந்தான்; இவன் யானைக்குப் பிறந்தான்; இவன் செத்துப்போனவனை உயிர் மீட்டு எழச்செய்தான்; இவன்



மண்ணைச் சர்க்கரையாக்கினான்; குருடனுக்குக் கண் கொடுத்தான்—என்பது போன்ற அதிசயங்களைப் புகுத்தி விடுவார்கள். ஏனென்றால், அப்போதுதான் அதிலிருக்கும் குற்றங் குறைகள் பற்றி—ஆபாசங்கள் பற்றி யாரும் கேள்விகள் கேட்க மாட்டார்கள் என்ற கருத்தோடு!

ஆனால், குறளில் அப்படிப்பட்ட அதிசயம் ஒன்றையுங் கூறாவிட்டாலும்—திருவள்ளுவரைத் தெய்வீகப் பிறவியாக ஆக்காவிட்டாலும்—அவருடைய பிறப்புப்பற்றி இழித்துக் கூறிவிட்டார்கள்.

வள்ளுவரின் தாயை ஒரு விபச்சாரியாகக் கற்பனை செய்து விட்டான். வள்ளுவர் பிறப்பைப்பற்றி எழுதும் போது பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் வள்ளுவர் பிறந்தார் என்று எழுதுகிறான். இதில் புத்திசாலித்தனம் என்ன வென்றால்—குறளைப் போன்ற நீதி நெறிகளை, மக்களின் உயர் ஒழுக்கத்திற்கு வேண்டிய பண்புகளைப் போதிக்கத்தக்க தகுதியும் அறிவும் வள்ளுவருக்கு வந்ததற்குக் காரணமே, அவர் பார்ப்பனருக்குப் பிறந்த தால்தான் ஆகும் என்ற கருத்தில் இந்தக் கதையை எழுதியிருக்கிறார்கள். இந்தப்படி பறைச்சியுடன் பார்ப்பான் கூடினான் என்பது, பார்ப்பனர்களுக்கு தர்மப்படி எவ்வளவு கேவலம் என்பதை மறந்துவிட்டார்கள். அக்காலத்தில் அறிவாளிப் பார்ப்பான் எவ்வளவு அயோக்கியத்தனமாக நடந்திருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. இந்தப்படியாக முதல் எடுத்தவுடனேயே குறளையும், அதன் ஆசிரியரையும் இழிவு படுத்தி விட்டார்கள்.

நாட்டில் புராணங்களைப்பற்றியும், இராமன்–சீதை தொடர்புபற்றியும், கந்தன்–வள்ளி காதல் லீலைகள்பற்றியும், கிருஷ்ணனின்–பிள்ளை விளையாட்டு, கோபிகள் லீலைகள் பற்றியும் எல்லோருக்கும்—பாமரர்கள், பாட்டாளிகள், படிக்காதவர்கள், கூலிகள் முதற் கொண்டு பெரிய, பெரிய சீமான்கள் வரை தெரியும்; தெரிந்திருப்பார்கள். ஆனால், குறள் பற்றிப் பெரிய பணக்காரர்களுக்கும் தெரியாது; தெரிய வாய்ப்பும் இல்லை. இந்தப்படியாகக் குறளை எந்தெந்த வழியாக மங்கும்படி செய்ய முடியுமோ—மக்கள் மனத்தில் குறளின் கருத்துக்கள் புகமுடியாது செய்ய முடியுமோ அவ்வளவுக்கு ஆரியர்கள் செய்து விட்டார்கள்.

நான், ஆரியக் கருத்துக்களெல்லாம்—அதன் தத்துவங்கள், கொள்கைகள் ஆகியவை களெல்லாம் ஒரு கூட்டத்தின் உயர்வுக்கும், வேறொரு கூட்டம் வேதனைப் படவுமான முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறி—அவைகளை, ஆரியக் கருத்துக்களை—அவைகளுக்கு ஆதாரமாய் இருக்கின்ற மதம், கடவுள் தன்மை, புராணங்கள் போன்ற வைகளை ஒழிக்க வேண்டும் என்றும் பிரச்சாரம் புரிந்து வருவதால் எனக்கு வள்ளுவர் உள்ளமும், அவர் நூலின் உண்மைக் கருத்தும் தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவேதான், நாம் வள்ளுவரை, அவர் இயற்றிய திருக்குறளைப் போற்றுகிறோம்.

வள்ளுவர் யார், எந்தக் குலத்தைச் சேர்ந்தவர் என்று நிச்சயமாய்க்கூற முடியாது. வள்ளுவர் ஆரியத்தை எதிர்ப்பவர்; ஆரியக் கருத்துக்களைக் கண்டிப்பவர்; அவைகளை வெறுப்பவர் என்று தான் நமக்குத் தெரிகிறது. அத்தோடு, வள்ளுவர் எந்த மதத்தையும் சார்ந்தவராகத் தெரியவில்லை. சாதாரணமாக சைவ, வைணவ, சமணர்கள் விவாதங்களில்–சமணர்கள் தான் வெல்லுவார்கள். பெரிய புராணம் எழுந்ததே சமணர்களை ஒழிப்பதற் காகத்தான். ஆரியக் கருத்துக்களை சமணர்கள் ஏற்கவில்லை என்பதற்காக அவர்கள் வெறுக்கப்பட்டார்கள். அதன் விளைவாகப் பலப் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப் பட்டார்கள் சமணர்கள். இன்றுங்கூட மதுரையில் 8000 சமணர்களை கழுவேற்றின திருவிழா கொண்டாடப்படுகிறது.

அவ்வளவு தூரம் ஆரியக் கருத்துக்களை எதிர்த்து, அதற்காக இன்னல்கள் பல பட்டிருக்கும் சமணர்களும்–திருக்குறளை ஆதரிக்கிறார்கள். சைவ சமயத்தவரும், வைணவ மதத்தாருங்கூட திருக்குறளை மாபெரும் நூல் என்று ஒத்துக் கொள்ளுகின்றனர். இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களும், கிறிஸ்துவ மதத்தின் கீழிருப்பவர்களும் திருக்குறளைப்

படிப்பகம்

www.padippakam.com



போற்றுகிறார்கள். இந்தப்படி எல்லோரும் போற்றுவதால்தான் திருக்குறள் ஒரு மதத்தைத் தழுவியோ, ஒரு மதத்தின் உயர்வுக்காகவோ எழுதப்பட்ட நூல் என்றில்லாமல், மக்களின் வாழ்க்கைக்கு, மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே கையாளவேண்டிய வழி வகைகள் பற்றி எழுதப்பட்ட நூல் என்று ஆகிறது. குறளாசிரியர் காலத்தில் 'இந்து மதம்' என்பது இல்லை. இந்து மதம் என்று இருந்திருந்தால் திருக்குறளில் ஒரு இடத்திலாவது 'இந்து' என்ற சொல்லைக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், 1330 பாட்டுக்களிலும் ஒரு இடத்திலாவது 'இந்து' என்ற சொல் காணப்படவே இல்லை.

அது மட்டுமல்ல, குறளாசிரியர் கடவுளையும், மோட்ச நரகத்தையும் ஒதுக்கி கொள்ள வில்லை. குறளில் நீங்கள் அறம், பொருள், இன்பம் என்ற அளவில்தான் காணமுடியுமே தவிர—'வீடு' 'மோட்சம்' பற்றி அவர் கூறி இருப்பதாக இல்லை. அறம், பொருள், இன்பம் என்றுதான் முப் பிரிவுகளைக் கூறுகிறார், மோட்ச சாம்ராஜ்யத்தை விட்டு விட்டு.

திருவள்ளுவர் கடவுளைப்பற்றிக் கவலைப்படவில்லை என்று கூறினேன். திருக் குறளின் முதல் அத்தியாயத்தில், 'கடவுள் வாழ்த்து' என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. அதில் உருவ வணக்கக் கொள்கைகள் இடம் பெறவில்லை. மேலும், இந்து மதக் கடவுள் களைப் பற்றிய 'புகழாரம்' அந்தப் பத்துப் பாட்டுக்களிலும் கிடையாது.

சிலர் கூறுகிறார்கள், 'குறளில் முதல் அத்தியாயத்தில் இருக்கும் கடவுள் வாழ்த்துப் பாக்கள் இடைச் செருகல்' என்று; சிலர், 'அப்படியெல்லாம் இல்லை; வள்ளுவர் பாடியது தான்' என்று கூறுகிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில் கடவுள் வாழ்த்துப் பாக்களை வள்ளுவரே பாடினதாக வைத்துக்கொண்டாலும் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. இன்றைக்கு நமக்கு இருக்கின்ற கடவுள்களைப் போன்ற கடவுள்களுக்கா வள்ளுவர் வாழ்த்துக் கூறினார்? இல்லை. கடவுள் வாழ்த்துக் கூறப்படும் பத்துப் பாட்டிலும், ஒரு பாட்டிலாவது வள்ளுவர் 'கடவுள்' என்ற சொல்லைக் கையாளவில்லை. திராவிட மக்களுக்கு 'எல்லாம் வல்ல,' 'எங்கும் நிறைந்த' என்பதாகக் கடவுளைக் குறிக்க 'கடவுள்' என்ற ஒரு சொல்லைத் தவிர வேறு சொல் கிடையவே கிடையாது. அந்தச் சொல்லையே வள்ளுவர் தமது குறளில் கையாளவில்லை! கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் கையாளவில்லை என்பதோடு மாத்திரமல்ல. குறள் முழுவதிலுமே—1330 பாடல்களிலுமே ஒரு இடத்தி லாவது வள்ளுவர் 'கடவுள்' என்ற சொல்லைக் குறிப்பிடவில்லை. தமிழ் மொழியில் உள்ள நல்ல சொற்களையெல்லாம்-உயர்ந்த சொற்களையெல்லாம் தமது நூலில் பயன்படுத்திய வள்ளுவர், 'கடவுள்' என்ற சொல்லை மட்டும் பயன் படுத்தவில்லை.

இரண்டாவது, 'கடவுள் வாழ்த்து' என்பதே கேலிக்குரியது; மிகவும் தவறான சங்கதியாகும். 'சர்வ வல்லமை'யும் படைத்த—நம்மையெல்லாம் காக்கும் கடவுளுக்கு 'கடவுள் வாழ்த்து' என்று நாம் போய் வாழ்த்துக் கூறுவதா? வள்ளுவரை நாம் மாபெரும் அறிவாளி, ஆராய்ச்சிக்காரர் என்று கூறுகிறோம். அதற்குத் தக்க ஆதாரங்களும் இருக் கின்றன. அவர் போய் இந்தப்படி 'கடவுள்' என்று நாம் கருதுவதற்கு வாழ்த்துப் பாடல் வாசிப்பாரா?

வள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடியிருப்பதெல்லாம் ஒவ்வொரு நற்குணங்களை வைத்து, அந்தப்படியாக நடக்கவேண்டும் என்பதற்காகவே பத்துப் பாட்டிலும் பத்து விதமான குணங்களைக் கூறினார். சர்வ வல்லமையுடைய சர்வேசுவரனைப் பற்றிப் பாடுவ தென்றால் இரண்டு, மூன்று பாட்டுக்களோடு குறளை நிறுத்தியிருப்பார். அதை விட்டு அவ்வளவு பாட்டுக்கள்—அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நற்குணத்தைப் போதிக் கிறார் என்றால் என்ன பொருள்? மனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுவ தற்காகத்தான்—வாழ்வின் வகையை, நிலையை உணர்த்துவதற்காகத்தான் எட்டு, ஒன்பது கருத்துக்களை வைத்து வள்ளுவர் கடவுள் வாழ்த்துக் கூறியிருக்கிறார்.

['விடுதலை'-30-5-1950]



'கற்றறதனால் ஆய பயன் என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.'

ஒரு மனிதன் நல்ல அறிவுடையவனாய் இல்லாதிருந்தால், நல்ல அறிவுக்கு ஆட்பட்டிருக்க வில்லையானால்—அறிவோடு நடந்துகொள்ளாவிட்டால், அவன் எவ்வளவு படித்து இருந்தாலும் என்னதான் அந்தப் படிப்பில் அவனுக்குப் பயன் ஏற்பட்டது என்று கூறமுடியும்?

'வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.'

விருப்பு, வெறுப்பு இரண்டும் இருக்காதவனுக்குத்தான்—மன அமைதி இருக்கும்; விருப்பு, வெறுப்பு இருந்தால் மனிதனுக்கு மன அமைதி இருக்காது என்று கூறுகிறார். அடுத்து,

'தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.'

என்ற பாட்டை, கடவுளடியைச் சேர்ந்தாலொழிய நன்னிலை இல்லை; பரமனின் திருவடியினை அடைந்தால்தான் பாபங்கள் ஒழியும்; மோட்ச வாழ்வு கிட்டும் என்ற அர்த்தத்திலா வள்ளுவர் கூறுகிறார்? இல்லை.

ஒரு மனிதன் தன் நிலையைப் பூரணமாக-குறைவற்றதாக நினைத்துக்கொள்ள வேண்டும்; தனக்கு மேலாக ஒருவனது நிலை இருப்பதாகக் கருதி, குறைபாடு உணர்ச்சி கொள்ளலாகாது. அதாவது, ஆசை கூடாது. உள்ளதைக் கொண்டு முழுத் திருப்தி அடைந்த வனுக்கு மனத்தில் கவலை உண்டாகாது என்பது அதன் கருத்தாகும். மனிதனுக்குக் கவலை எதனால் ஏற்படுகிறது? தன்னைவிட மேல் நிலையில் ஒருவன் இருக்கிறான்; அவன் உலகத்தில் உள்ள பல பொருள்களை உல்லாசமாக அனுபவிக்கிறான்; அதற்கான வசதி வாய்ப்பு அவனுக்கு இருக்கிறது; நமக்கு அவ் வசதிகள் இல்லையே என்று மனிதன் தன்னைவிட உயர்ந்தவனாக ஒருவனைக் கருதி, அவனைப் பார்க்கும்போதுதானே கவலை கொள்ளுகிறான்? அந்தக் கவலை இல்லாமல், 'நான் ஏழைதான்; படிக்காதவன்தான்; பல நூல்களைக் கற்றறியாதவன்தான்; பணத்தைத் தொட்டறியேன் என்றாலும் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை; இப்பொழுது நான் இருக்கும் நிலையே எனக்கு உயர்ந்தது' என்று மனத் திருப்தி அடைந்துவிட்டானானால் மனக்கவலை ஏது அவனுக்கு?

மனிதனுக்குக் கவலைகள் நீங்கி, திருப்தி எண்ணம் ஏற்பட வேண்டுமானால், பொது உடைமைதான் அதற்கு மருந்து என்று கூறப்படுகிறது. ஏனென்றால், பொது உடைமைத் திட்டத்தில் மனிதர்களுக்குள் பேதம் இல்லாமல் செய்யமுடிகிறது.

பேதமல்லாத இடத்தில் மனிதன் யாரையும் பார்த்துப் பொறாமையுற முடியாது; ஆகவே, மனிதன் மனத் திருப்தியடைகிறான். இக் கருத்தைத்தான் வள்ளுவர் அக் குறளில் கூறுகிறார்.

அதைப்பற்றிப் பரிமேலழகர், வடவர்களுடைய-ஆரியர்களுடைய 32 அறங்களை வைத்துக் கூறினார். ஆனால், வள்ளுவர் அறம் என்று சொல்வது என்ன வென்றால், மக்களுக்குள் அன்பு, ஒழுக்கம், அருள் இருக்க வேண்டும் என்பதாகும்.

மேலும், வள்ளுவர் மேலுலகத்தைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் அவர் மரியாதை செய்யவில்லை; ஏற்றுக் கொள்ளவுமில்லை. ஒரிடத்தில் கூறுகிறார்:

'மேலுலகம் இல்லையெனினும்' என்று—அதாவது, 'உனக்கு மேலுலகம் கிடைக்க வில்லை யென்றால் கூட அதைப் பற்றிக் கவலைப்படாதே; உனக்கு மேலுலகம் கிடைக்காது என்றாலும் நீ பிறருக்கு அருள் கூர்ந்து நட' என்று கூறுகிறார். கடவுளைப் பற்றிச்

படிப்பகம்

www.padippakam.com



சொல்லுகிறபோதுகூட, மனிதனின் வாழ்வுக்கு வசதியில்லாவிட்டால், நம்மையெல்லாம் படைத்துக் காத்துக்கொண்டிருப்பதாகக் கருதப்பட்டு வருகின்ற கடவுளை ஒழிக்கவேண்டும்; அது இல்லாவிட்டால் குற்றமில்லை என்று கூறுகிறார். ஏனென்றால், மனிதனின் கஷ்ட நஷ்டங்களுக்கும், அவனுக்கு ஏற்படுகின்ற இலாபத்திற்கும், அவன் வாழ்வில் தென்படுகிற இன்ப துன்பங்களுக்கும் கடவுள் காரணமில்லை என்பதை உணர்த்தவே அப்படிக் கூறுகிறார்.

இன்னும் வள்ளுவர் ஆரியத்தை எந்தெந்த வகையில் எதிர்க்கிறார் என்றால்,

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்'

என்று—பிறப்பினாலே பேதம் இல்லை; பேதம் கற்பிக்கவும் கூடாது; அடுத்து செய்கின்ற தொழிலாலும் பேதங்கள் கற்பிக்கக் கூடாது என்று—ஆரியக் கொள்கையின் அடிப்படைக்கே அடி கொடுக்கிறார். ஆரியர்கள், 'மனிதனின் பிறப்பிலே—ஆண்டவனின் முகத்திலே பிறந்தவன் உயர்ந்தவன்; காலிலேயிருந்து வந்த (நாம்) இழிந்தவர்கள்' என்று பிறப்பில் பேதங்களை ஏற்படுத்தி, செய்கின்ற தொழிலாலும்,–அதாவது நம்மவர் செய்கின்ற தொழில்களை–உழவுத் தொழில் உட்பட–கேவலமான ஈனசாதித் தொழில் என்று ஆக்கி யிருக்கிறார்கள். அதைத்தான் வள்ளுவர் வெகுவாகப் பிறப்பிலும், தொழிலிலும் பேத மில்லை என்று கண்டிக்கிறார்.

மனித சமுதாயத்தின் தேவைக்காகத்தான் பல தொழில்களும் இருக்கின்றன. வண்ணான் செய்யும் தொழில், நாவிதன் செய்யும் தொழில், தோட்டி செய்யும் தொழில் நமக்கு அத்தியாவசியத் தேவையில்லையென்று கூறிவிடமுடியுமா? கக்கூஸ் எடுக்கிறவன் ஒரு நாளைக்கு வேலை நிறுத்தம் செய்தால் நம் கதி என்னாவது? இந்தப்படியாக சமுதாயத்தின் தேவைக்காகத்தான் பல தொழில்கள் இருக்கின்றன. அதில் போய்ப் பேதங் கற்பிப்பது என்றால் என்ன நியாயம்? இவைகளைச் செய்ய யாவருக்கும் பங்கும் உரிமையும் இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக, வள்ளுவர், ஆரியர் செய்யும் வேள்வியைக் கண்டிக்கிறார்.

'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றின்
உயிர் செகுத்துண்ணாமை நன்று'

அதாவது, கடவுள் பெயர் கூறி உயிர்க்கொலை புரியுங் கொடுஞ்செயலைக் கண்டிக் கிறார். நாட்டிலே நாலு வருணத்தை நிலைநிறுத்துவதற்காகவும், ஆரியர்களின் உயர் வாழ்வுக்கு ஆதாரமாயும் இருந்துவரும் வேதங்களையும்—அதாவது, வேதத்தைப் படிக்கா விட்டாலும் குற்றமில்லை; ஒழுக்கமாக நடக்க வேண்டும் என்று வள்ளுவர் வேதியத் தன்மையைக் கண்டிக்கிறார்.

இந்தப்படியாக மதம், கடவுள், வேதம், வேள்வி ஆகிய அத்தனையையும்—ஆரியத்தின் உயர்வுக்கும் நம்மவர் இழி நிலைக்கும் காரணமாய் நின்று நிலவும் அவைகளை வள்ளுவர் வெகு தீவிரமாகக் கண்டிக்கிறார். இந்தப்படியாக வள்ளுவர் ஆரியக் கருத்துக்களை எதிர்த்துவிட்டு, கண்டித்துவிட்டுத் தனக்கு என்று யாதொரு 'புதுமத உபதேசமும்' அவர் புரியவில்லை. 'உன் அறிவைக் கொண்டு சிந்தித்து, ஆராய்ந்து, உண்மை கண்டு, உலகம் ஒப்ப நடந்துகொள்' என்கிறார். யாவர் ஒருவர், 'உன் அறிவின்படி, உலகம் ஒப்ப நட' என்கிறாரோ அவர் எந்த மதத்தையும் சேர்ந்தவராகார்.

'குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்'

என்று கூறுகிறார். அதாவது, ஒரு மனிதன் தன் இனத்தவருக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டும் என்று நினைத்தானானால்—அதாவது, பொதுநலத்துக்குப் பாடுபட வேண்டும் என்று முன்வந்தால், அவன் அந்தக் காரியத்துக்கு ஏற்ற நல்ல காலம் வரட்டும் என்று எண்ணிக் காத்திருக்கக்கூடாது. இரண்டாவதாக, 'நாம் இந்தக் காரியத்தில் இறங்குகிறோமே; இதனால் இன்னின்ன கஷ்டங்கள் வருமே! நமக்குப் பலவிதத்திலும் அவமானம் ஏற்படுமே—மானம் போய்விடுமே' என்று கவலைப்படக் கூடாது. அந்தப் படியாகவெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் பொதுவாழ்வில் நாம் செய்யப் புகும் காரியமே கெட்டுவிடும் என்று மிகப் புரட்சிகரமாகக் கூறுகிறார்.



ஏன் புரட்சிகரமாகச் சொல்லுகிறார் என்று கூறுகிறேன் என்றால், மற்றொரு இடத்தில் காலம் பார்த்துச் செய்தால் ஞாலமும் கைகூடும் என்று கூறுகிறார். இன்னொரு இடத்திலே,

'மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்' போன்று மானம் நீங்குமானால்—மனிதன் இறந்துவிட வேண்டும் என்று கூறுகிறார்.

மானமிழந்தால் மரணத்தைத் தழுவவேண்டும் என்று வள்ளுவர் கூறுவது ஏன் என்றால், மனிதனுடைய தனி வாழ்வில், அவனது சொந்த வாழ்வில் அவனுக்கு அவமானம் நேரிடின் உயிர்விட வேண்டும். உயிரைவிட மானத்தைப் பெரிதென மதித்து நடக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறார்.

இந்தக் குறள் பொது வாழ்வு பற்றியதாகும். பொதுவாழ்வில் எந்த மக்களின் நல்வாழ்விற்காக—முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறானோ, அந்த மக்களாலேயே வெறுக்கப்படலாம்; பல தொல்லைகட்கும் ஆளாக நேரிடலாம். ஆனால், தாம் படுகின்ற பாடுகள்—அடைகின்ற அல்லல்கள் நன்மைக்காகத்தான் என்று கருதி வேலை செய்தால் தான், அவன் எண்ணிய காரியம் ஈடேறுமேயொழிய, மானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் காரியம் கைகூடிவராது என்று கூறுகிறார்.

இந்தப்படியாக வள்ளுவர் மக்களுக்கு நல்வாழ்வின் வழியையும், நல்லொழுக் கத்தையும் கூறுகிறார்.

இன்றையதினம் திராவிடர்களுக்கு ஒழுக்க நூல் குறள்தான். மற்ற வேறு எந்த நூலும்—பகவத் கீதை, இராமாயணம், பாரதம், பாகவதம், பெரிய புராணம் முதலியவையும் அவை போன்ற நூல்களும் திராவிடரின் ஒழுக்கத்திற்கோ, மான வாழ்வுக்கோ ஏற்றபடி எழுதப்பட்ட நூல்கள் அல்ல. அவைகளெல்லாம் ஆரியர்கள் தங்களின் உயர்வுக்காக—தங்களின் மேல்சாதித் தன்மையை நிலைநிறுத்தி அதனால் இலாபம் அடைவதற்காக ஏற்பட்ட வருணாசிரம தர்மத்தை வலியுறுத்தி எழுதி வைத்துக்கொண்டவையல்லாமல், பொதுவாக மனிதர்கள்—உலக மக்களின் நலனுக்கு ஏற்றமுறையில் எதையுங் கூறவில்லை. பித்தலாட்டங்கள் பல புரிந்தும் தங்கள் காரியத்தை, தங்களுக்கு இலாபத்தைத் தரக்கூடிய காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பதற்காகவும் பஞ்ச தந்திரக் கதைகள் போலச் சொல்லி—அந்தப்படி சொன்னவைகளைக் கடவுளோடு சம்பந்தப்படுத்திவிடுவார்கள்.

நமக்கு ஒரு அளவுக்காவது ஒழுக்கத்தைக் கற்பிக்கக்கூடிய நூல்களாக இராமாயணம், பாரதம் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா? உதாரணமாக, சாணக்கியன் எழுதிய அர்த்த சாஸ்திரத்தை நம்முடைய பொருளாதார ஒழுக்க நூல் என்று நம்மால் எப்படி ஒத்துக்கொள்ள முடியாதோ, அதே போல்—இவைகளை நம் ஒழுக்க நூல்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. அர்த்த சாஸ்திரத்தில், சாணக்கியன், அரசனுக்கு வருமானம் பெருக வேண்டுமானால் அவன் கள்ளுக் கடைகளைத் திறக்கவேண்டும் என்றும், கோவில்களை வைத்து அதற்கு நிறையத் திருவிழாக்களையும் நடத்தி அந்தத் திருவிழாக்களுக்கு மக்கள் அதிகமாக வருவதற்காக அழகிய பெண்களை நாட்டியமாடச் செய்ய வேண்டும், அப்போது கோவிலுக்கும் திருவிழாவுக்கும் வருகிறவர்களிடமிருந்து நிறையப் பொருள் கிடைக்கும் என்றும்; கோவில்களில் அதிசயம் அற்புதம் நடப்பதாக ஜாலம் தந்திரம் செய்ய வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



என்றும் சொல்லுகிறார். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? இது அரசருக்கு—செல்வவான்களுக்குத்தான் பயன்படும். அதுபோல்தான் புராண—இதிகாச—சாஸ்திரங்கள் ஆரியருக்கு உயர்வும், திராவிடருக்கு இழிவுமாகும்.

இயற்பகை நாயனார் கதையைப் படித்தால்—அதில் இயற்பகை நாயனார் ஒரு பார்ப்பனனுக்குத் தன்னுடைய மனைவியைக் கொடுத்தார் என்றும் அதனால் அவருக்கு மோட்சம் கிடைத்தது என்றும் சொல்லப்படுகிறது. இக் கதை பக்திக்கோ, ஒழுக்கத்திற்கோ ஏற்றதாகுமா? இன்று மோட்சம் மோட்சம் என்று கத்திக்கொண்டு திரியும் பிரசங்கிகள் அல்லது மோட்சம் அடையவேண்டும் என்று நினைப்பவர்களெல்லாம் இயற்பகை நாயனார் செய்ததுபோல—தனது மனைவியைப் பார்ப்பானுக்குக் கூட்டிக் கொடுக்கத் தயாரா?

மற்றும் 'பரி'க்குப் பதிலாக 'நரி'யைக் கொண்டுவந்து அரசனின் இலாயத்தில் இருந்த மற்ற குதிரைகளையுங் கொன்று விட்டார், ஒரு நாயனார். ஒரு கோவிலை இடித்து மற்றொரு கோயிலைக் கட்டினார் ஒரு ஆழ்வார். பலபேரை அடித்துத் திருடிக் கோவில் கட்டினார் மற்றொருவர். இந்தப்படியாக வரிசையாகச் சொல்லிக் கொண்டு போகிறார்கள்—நாயன்மார்களைப் பற்றியும், ஆழ்வார்களைப் பற்றியும். இவைகளெல்லாம் ஒழுக்கத்திற்கு ஏற்றவையா?

பக்தி என்பது, எவ்வளவு அயோக்கியத்தனங்களைச் செய்தாலும், அவைகளையெல்லாம் மறைத்து மோட்சத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் என்பது அல்லாமல், வேறு என்ன? கடவுள் இதற்கெல்லாம் மோட்சம் கொடுப்பாரா?

[பெங்களூரில், 22, 23-5-1950-ல், சொற்பொழிவு—'விடுதலை' 1-6-1950]

## 3. மன்னர்களும் இலக்கியமும்

தோழர்களே!

இன்றைய தினம் நாம்கூடப் பேசுகிறோமே—தமிழ்நாட்டு மூவேந்தர்கள் என்று! இந்தத் தென்னாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டியன் என்று சொல்லுகிறோமே—இவர்கள் எல்லோரும் அரசர்களாக இருந்ததற்குக் காரணமே ஆரியர்களுக்கு அடிமைகளாய் இருந்ததால்தான்; அவர்களுக்குக் கோவில் கட்டி மானியம்விட்டதால்தான்! இல்லாதிருந்தால் அவர்களுடைய வாழ்வு இவ்வளவு விளம்பரத்திற்கு உள்ளாகி இருக்குமா என்பது சந்தேகம்தான்.

நம் அரசர்கள் எல்லோரும் ஆரியர்களுக்கு அடிமைகளாக இருந்து, அவர்கள் ஆதிக்கத்துக்கு வேண்டிய காரியங்களை நிரந்தரமாகச் செய்து, அவர்களுக்கு உதவி செய்து வந்திருக்கிறார்கள். இந்தக் காஞ்சிநாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி—மற்ற எந்த நாட்டை (தென்னாட்டை) எடுத்துக்கொண்டாலும் சரி—இந்த நாட்டிலே இருக்கின்ற கோவில்கள், குளங்கள், ஸ்தல புராணங்கள் முதலியவைகளை எல்லாம் நீங்கள் பார்த்தால் சகலமும் ஆரியர்களுக்கு ஆதரவாக இருக்குமே தவிர, திராவிடர்களுடைய மனிதத் தன்மைக்கு, மான உணர்ச்சிக்கு, பகுத்தறிவுக்கு ஏற்றதாக இருக்காது. அப்படிக் காண்பது அருமையாக இருக்கும்.

[காஞ்சிபுரத்தில், 7-4-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-4-1951]

## 4. உதவாக்கரை இலக்கியங்கள்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நமது பிரச்சாரத்தால் பாரத, இராமாயண, மனுதர்ம சாஸ்திரங்களுக்கும் மதிப்புக் குறைந்துவிட்டதால் மனுதர்மத்தையும், ஆரிய தர்மத்தையும், பெரிதும்கொண்ட சிலப்பதிகாரத்தைத் தலையில் தூக்கிக்கொண்டு, ஊர்ஊராய்த் திரிந்து பிரச்சாரம் செய்ய ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது.



இந்தச் சிலப்பதிகாரம் எப்படி அமைந்திருக்கிறது என்றால் ஆபாச மூடநம்பிக்கை, ஆரியக் கருத்துக்களை உட்கருத்தாகக் கொண்டு, நல்ல தமிழ் அமைப்பு உடையதாகக் கொண்டு தேவடியாளுக்குச் சமமாக—அதாவது, தேவடியாள் எப்படிப் பார்ப்பதற்கு அலங்காரமாய் இருப்பாளோ, ஆனால் உள்ளேபோய்ப் பார்த்தால் உள்ளமெல்லாம் வஞ்சகம் நிறைந்தும் உடலெல்லாம் நோய்கொண்டும் வளையல் அணியால் மக்களை ஏய்த்துப் பிழைத்துக்கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றாளோ அதுபோலத்தான்—இந்தச் சிலப்பதிகாரம் ஆகும். பாரத, இராமாயணம் போல்—அது ஒரு நாவல்; சித்திரக் கதை. அதுவும் குறிப்பிட்டகொள்கை இல்லாமல் எழுதின கதைகள்.

ஆரியம் தலைதூக்கி நம் அரசர்கள் ஆரியத்திற்கு அடிமைகளாய், தாசர்களாய் இருந்த காலத்தில்—பகுத்தறிவும், இன உணர்ச்சியும் இல்லாமல் சித்திரித்த கதையாகும். அது மூடநம்பிக்கைக் களஞ்சியம்; ஆரியக் கோட்டைக்கு அரண். இப்படிப்பட்டதைத் 'தமிழ்ப் பண்புக்கு' என்று பிரச்சாரம் செய்தால் இது மானமுடைமை ஆகுமா? ஆதிமுதல் அந்தம்வரை—எப்படிப் பார்ப்பானை, பார்ப்பனீயத்தைப் புகுத்தி அமுல் படுத்தவேண்டும்; எப்படி எப்படி நாம் நடக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

நான் ஒன்றும் பயந்துகொண்டு பேசுகிறேன் என்றோ, பொய் பேசுகிறேன் என்றோ நினைக்கவேண்டாம். அந்தக் கதைகளில் உள்ள கருத்தை அப்படியே எடுத்துக் காட்டுகிறேன். ஆகவே, கவனமாகக் கேளுங்கள்.

சிலப்பதிகாரம், போன ஜென்மம், வருகிறஜென்மம் என்று தலைவிதியைக் காட்டி மனிதனை எப்படிப்பட்ட இழிவுக்கும் ஆளாகச் செய்கிறது; பார்ப்பான் சொல்லுகிறபடி, அவன் எதுகேட்டாலும் எடைக்குஎடை கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறது; ஆருடம், சோசியம், பில்லிசூனியம் ஆகியவைகளைப் பற்றிச் சொல்லுகிறது. முட்டாள்தனமான கற்பையும், பெண் அடிமையையும் பெருமைப்படுத்துகிறது.

கோவலனை அரசன் தண்டித்த மாதிரியானது, நம் நாட்டு இராஜாக்களுக்கே ரொம்பவும் அவமானம் தருவதாகும். இராஜா வீட்டுச் சிலம்பு எங்கோ போய்விட்டது; கோவலன் சிலம்பு வைத்திருப்பது இராஜாவினுடையது என்று பொய்க் குற்றம் சாட்டப் பட்டதன் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாத அரசன், கோவலனை வெட்டிக் கொல்லச் சொல்லுகிறான்; கோவலன் இறந்து போகிறான். இதை அறிந்த அம்பாள் கண்ணகிக்குப் பெரும் கோபம் வந்து, நிரபராதிகளான மதுரை மக்களைச் சுட்டுச் சாம்பலாக்கினாள். இந்த அம்மாளின் கற்பைப் பற்றிச் சொல்லுவதாயிருந்தால், தேவடியாள் வீட்டிற்குக் கணவன் போனதை அறிந்தபோது, அந்தத் தேவடியாளை ஏதாவது செய்து இருக்க வேண்டும். தாசி மாதவி, கோவலன் கண்ணகியின் கணவன் என்று தெரிந்து அவனை அனுபவிக்கிறாள். தேவடியாளுக்கு இதுவா தர்மம்? அப்படிப்பட்டவளுக்குக் கண்ணகி பொருள் கொடுக்க வசதி செய்யலாமா? கோவலன் ஒழுக்கமற்றவன்; தாசி ஒழுக்க மற்றவள்; கண்ணகி மடப்பெண்.

அகலிகை, சீதை, துரோபதை, தாரை எல்லாம் கற்புக்கரசிகளாய் இருக்கும்போது, கண்ணகி கற்புக்கு மாத்திரம் முட்டாள்தனம் வேண்டுமா? மற்றும் இந்த அம்மாளுக்குக் கோபம் வந்ததும், தன் மார்பைத் திருகி எறிகிறாள். இது என்ன புத்தி? மார்பைக் கையால் திருகினால் அது வந்துவிடுமா? இந்தப்படி நடந்த சங்கதியும் அனுபவமும் சிலப்பதிகாரம் தவிர வேறு எதிலும் எங்கும் காணக்கிடைக்கவில்லை. அந்தப்படி திருகிப் பிடுங்கின மார்பு (முலை) வீசி எறிந்தால் அது நெருப்புப் பற்றிக்கொள்ளுமா? அதில் 'பாஸ்பரஸ்' இருக்குமா? இந்த மூடநம்பிக்கைக் கற்பனையானது, என்ன பயனைக் கொடுக்கிறது? இதனால் கண்ணகிக்கு வீரம் இருந்ததாகக் கூறமுடியுமா?

அக்கினி பகவானுக்கு, கண்ணகி, 'பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களைச் சுடு!' என்று கட்டளை இட்டாளாம். அதுபோல் பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்கள் சாம்ப

படிப்பகம்

www.padippakam.com



லானார்களாம்; மதுரைநகரம் சாம்பலாயிற்றாம்! இதுதான் கண்ணகியின் கற்பின் பெருமையா? அவள் புத்தியின் பெருமையா? அக்கினி பகவானுக்குப் புத்தி வேண்டாமா? ஒரு பெண்பிள்ளை முட்டாள்தனமாக உளறினால் நிரபராதிகளைச் சுடலாமா? ஒரு பட்டணத்தைக் கொளுத்தலாமா என்கின்ற அறிவு வேண்டாமா? பார்ப்பனர்களை எதற்காக மீதம் விடவேண்டும்? ஆகவே, வருணாசிரம தர்ம மனுநூல், இராமாயணம், பாரதத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

இராமன் பார்ப்பனன்—ஆகவே சூத்திரனைக் கொன்றான் என்பது இராமாயணம்! பார்ப்பனனை மட்டும் காப்பாற்றவேண்டுமென்பது சிலப்பதிகாரம்! எவ்வளவு முட்டாள் தனமான கொடுமை செய்தாலும் பார்ப்பனர்களைக் காப்பாற்றினால் அவள் பதிவிரதை ஆகி விடுவாள் என்பது சிலப்பதிகாரம்! பாண்டியன் விசாரணை செய்து அவனுக்குக் கிடைத்த உண்மைமீது கோவலனுக்குத் தண்டனை விதித்தான். ஆனால், கண்ணகி ஒரு விசாரணையும் செய்யாமல், ஒரு குற்றமும் காணாமல் நிரபராதிகளான மக்களை, பெண்களைச் சுட்டு எரித்துக் கொன்றாள். அவள் கற்புக்கரசி; வணங்கத் தக்கவள்; தெய்வமானவள்! பாண்டியன் 'குற்றவாளி'—இதுதானே சிலப்பதிகாரக் கதை? இதுதான் தமிழர் பண்பாம்! எவ்வளவு முட்டாள்தனம்—இந்த மாதிரியான ஆபாசமும், அநீதியும் நிறைந்து இருக்கும் கதைகளை நாம் வைத்துக் கொண்டு, நமக்குச் சொந்தம் என்றா சொல்வது?

இவைகளைத்தான் நாம் ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகிறோம்; நெருப்பு வைக்க வேண்டும் என்று சொல்லுகிறோம்; சமுதாயத்திற்கு உதவாக்கரை என்று ஒதுக்கி வைக்கிறோம்!

சிலப்பதிகார அன்பர்கள் கண்ணகிதான் கற்புடையவள் என்கிறார்கள். அப்படி யானால், அப்பொழுது—மற்றவர்களெல்லாம் கற்பு இல்லாதவர்களா? இது மனிதத் தன்மைக்கே பொருத்தம் இல்லையே! ஆனால், அந்த மாதிரி நடந்ததை நாம் பார்த்து இருக்கவும் முடியாது.

இந்தக் கதையைச் சொல்லியே நம் நாட்டுப் பெண்கள் எல்லாம் கண்ணகிகளாகத் திகழவேண்டும்; அவள்போல் கற்புக்கரசியாக வேண்டும் என்று பிரச்சாரம் செய்கின்றவர் களின் பிள்ளை குட்டிகள்—முதலாவது, இம் மாதிரி நடந்தால் பொறுப்பார்களா என்று கேட்கிறோம்.

இந்தப் பிரச்சார 'பிரம்மா'க்களின் மாப்பிள்ளைமார்கள் தேவடியாள் வீட்டில் போய் இருந்தால், இவர்கள் பெண்கள் தாசி வீட்டிற்குப் பணம், நகை எல்லாம் அனுப்பச் சம்மதிப் பார்களா? இப்படி நடந்தால் ஆண்கள் ஒழுக்கமுள்ளவர்களாக ஆவார்களா? இது ஒழுக்கத்தைக் கற்பிக்கும் நூல் ஆகுமா?

ஆகவே, இதுபோன்ற கதைகள் பெண்களுடைய அடிமைத்தனத்திற்கு அடிகோலுவ தாகும். முட்டாள்தனத்திற்கு மூல ஆதாரமாகவும், பிற்போக்கிற்கு வழி அமைப்பதாகவும், பார்ப்பனர்களுடைய உயர்வைக் காப்பாற்றுவதாகவும் செய்யப்பட்ட இலக்கியங்களே தவிர, மனித சமுதாயத்திற்கு எந்த நன்மைக்காகவும் செய்யப்பட்ட இலக்கியங்களா?

ஆகவே, நமக்கு இருக்கிற இலக்கியங்களின் நிலைமை பெரிதும் மோசமானது. உண்மையிலேயே நமக்கு ஏதாவது கடவுள் உண்டா? மதம் உண்டா? சாஸ்திரங்கள் உண்டா? அவர்கள் சொல்லுவதைத்தானே ஒத்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகையால்தான், நாம் கீழ்ச் சாதியாகவும், பார்ப்பான் மேல் சாதியாகவும் இருப்பதற்கு ஆன நிலைமை ஏற்பட்டு விட்டது.

[சேலத்தில், 22-7-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 28-7-1951]



## 5. கோவில்

தோழர்களே!

புத்தருடைய முயற்சிக்கு நேர் விரோதமாக—அது அடியோடு அழிக்கப்படுவதற்குத் தான் ஏறக்குறைய நம்முடைய நாட்டிலே இருந்த அரசர்கள் இவ்வளவு கோவில்களைக் கட்டினார்கள். சரித்திரத்திலே சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள், புத்தருக்குப் பின்னர் தான் இந்தக் கோவில்கள் ஏற்பட்டன என்று!

தமிழ் நாட்டுக் கோயில்கள் எதை எடுத்துக் கொண்டாலும் அவைகள் அத்தனையும் புத்தருக்குப் பின்னர் தான் ஏற்பட்டன என்று சொல்லுகிறார்கள். இது எப்படியோ இருந் தாலும், அவைகளின் ஒரே கருத்து—ஆரியர்களுடைய வருணாசிரம தர்மத்தை நிலை நிறுத்துவதே; வருணாசிரம தர்மத்திற்கு நிரந்தரமான பிரச்சார ஸ்தாபனமாக இருப்ப தற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள்தாம் இந்தக் கோவில்கள்.

இவைகள்தாம் நமக்குக் கடவுள் கதைகளாக, மதங்களாக, பண்டிகைகளாக, தினந் தோறும் நாம் நடந்து கொள்ளும் நடவடிக்கைகளாக ஆக்கப்பட்டுவிட்டன. இவைகள் தாம் நமக்குப் படிப்பாகவும் இயக்கமாகவும், சங்கீதமாகவும், நாடகமாகவும், நாட்டியமாகவும் இருக்கின்றன. வருணாசிரம தர்மத்தை நீக்கிய ஒரு இலக்கியம் நமக்கு வேண்டுமானால் மிக்க கஷ்டம்தான். கண்டு பிடிப்பதே மிகவும் கஷ்டம். ஏதோ சொல்கின்றார்கள்—தொல் காப்பியம் இருக்கிறது, குறள் இருக்கிறது என்று! தொல்காப்பியத்திலும் ஆரியம் புகுந்து இருக்கிறது; குறளில் அவ்வளவாகச் சொல்லக் கூடியது இல்லை என்பது என்கருத்து. அதிலும் அதிகம் இருக்கலாமோ, என்னவோ!

அப்பொழுது தோன்றிய பெரியவர்கள் எல்லாம் ஆரிய தர்மங்களைப் பின்பற்றி, இந்த ஆதாரங்களை நம்பிப் பக்தி செலுத்தினார்கள். அவர்கள்தான் இன்றையதினம் நமக்குப் பெரியவர்களாகக் காணப்படுகிறார்கள். தவிர, அவர்கள் எல்லாக் கொடுமை களையும் சகித்துக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்களே தவிர, மற்றபடி அவைகளை எதிர்த்தார்கள் என்று சொல்லுவதற்கு மிகக் குறைந்த அளவு ஆதாரம் கூடக் கிடைப்பது இல்லை. எனவே, இரண்டாயிரம் ஆண்டுகளாக கடவுள், கலை, இலக்கியம் காவியங்களாக இருக்கும் பலம் பொருந்திய ஒரு கொள்கையை ஒழிப்பதற்காக, நாம் இன்றையதினம் போராடுகின்றோம். இன்றையதினம் சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளாதாரத் திலும், கலைத் துறையிலும் பக்தித் துறையிலும் நாம் போராட வேண்டியவர்களாக இருக் கின்றோம். இது மிகவும் கஷ்டமான காரியம்.

நம்முடைய மதம் என்று நாம் சொல்லுவது, அன்னியனுடைய உயர்வுக்கு—நம் முடைய இழிவுக்கு; நம்முடைய கடவுள்கள் என்று நாம் சொல்லுவது—அன்னியனை வளர்ப்பதற்கு ஏற்ற கடவுள்கள். அவைகள் நம்மை அடக்கி, ஒடுக்க ஏற்படுத்தப்பட்டவை. இத்தனை துறைகளில், இவ்வளவு தொல்லைகளில் இருந்து வருகின்ற சுரண்டலை நாம் ஒழிக்க வேண்டும்.

[காஞ்சிபுரத்தில், 7-4-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-4-1951]

## 6. அரசர்களின் இழிசெயல்

தோழர்களே!

நமது அரசர்கள் கோயில், குளங்கள், மடங்கள் முதலியன கட்டி அதன் பேரால் பார்ப்பானைக் கொழுக்க வைக்கவும், நம்மைக் கல்லில் முட்டிக்கொண்டு மடையர்கள் ஆகவும் ஆக்கித்தானே போனார்கள்!

நான் ஒன்றும் விளையாட்டுக்காகவோ, அவர்களைத் திட்டவேண்டும் என்பதற் காகவோ இப்படிக் கூறவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் என்ற ஊர்க் கோயிலில் போய்ப் பார்த்தால் தெரியும். வரகுண மகாராஜன் என்ற பாண்டியன் தான் மோட்சம் அடைவதற்காகத் தன் மனைவியை பார்ப்பானுக்கு விட்டுக்கொடுத்தது சிற்பமாகச் சுவரிலேயே தீட்டப்பட்டு இருக்கின்றது! இவனது சிவபக்தியின் மேலீட்டைப்பற்றிப் பட்டினத்தார் பாடியுள்ள பாடலிலேயே வரகுண மகாராஜன் தன் மனைவியைப் பார்ப்பானுக்குக் கொடுத்ததைப் புகழ்ந்து பாடியுள்ளார். அந்தப் பாண்டியன், சேர–சோழர்களையெல்லாம் வென்ற பராக்கிரமசாலி என்று சரித்திரம் கூறுகின்றது. அப்படிப்பட்டவன்தான் இப்படிக் கேவலமாக, மானமற்று நடந்துகொண்டான்.

அடுத்தாற்போல, திருவண்ணாமலையில் ஒரு அரசன் ஆண்டுள்ளான். அவன் பெயர் வல்லாள மகாராஜன் என்பது. அந்த மடையனும், தான் மோட்சமடையவேண்டித் தன் மனைவியைப் பார்ப்பானுக்கு விட்டுக் கொடுத்து இருக்கின்றான்.

இந்த அரசர்கள் எல்லாம் பார்ப்பான் சுகவாழ்வு வாழவும், நாம் என்றென்றைக்கும் இழிமக்களாக இருக்கவுமே மனு (அ)நீதி முறைப்படி ஆட்சிசெலுத்தி இருக்கின்றனர். இவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் 'இவன் மனுமுறை தவறாது ஆண்டவன்' என்றும் புகழ்ந்து கூறப்படுகின்றது!

அடுத்து நாயக்கனோ, மராட்டியனோ, முஸ்லிமோ ஆட்சி செலுத்தினார்கள். என்றாலும்—அவர்களும் மக்களுடைய குறைபாடுகள், மற்றும் தேவைகள் என்ன என்று ஆராய்ந்து—அதற்காகப் பரிகாரம் தேடியவர்கள் அல்லர். நமது தற்குறி நிலைமையைப் போக்கவும், நமது இழிவுகள் போக்கவும் பாடுபடவேயில்லை.

அடுத்து வெள்ளைக்காரன் ஆண்டான். அவனாவது நமது இழி நிலையினைப் போக்கவும், நமது தற்குறித் தன்மையினைப் போக்கவும் வேண்டும் என்ற கருத்தை வைத்து ஆண்டானா? இல்லையே!

[ஜோலார்பேட்டையில், 16-4-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-4-196 1]

## 7. ஓவியம், சிற்பம்

தோழர்களே!

சுயமரியாதை இயக்கத்தார் மத சம்பந்தமான ஆபாசங்களை எடுத்து வெளிப்படுத்துகின்ற காலத்தில் அதற்குச் சரியான சமாதானம் சொல்ல யோக்கியதை இல்லாத நமது பண்டிதர்கள், தாங்கள் தப்பித்துக்கொள்வதற்காகப் பழைய கலைகள் என்னும் சாக்கின் பேரில்—அதன் நிழலில்போய் மறைந்துகொண்டு, 'சுயமரியாதை இயக்கத்தார் பழைய கலைகளை நாசம் செய்கின்றார்கள்' என்று பழி சுமத்துவதன் மூலமே அவைகளைக் காப்பாற்றப் பார்க்கிறார்கள். ஆகவே, இது அவர்களுடைய நியாயமற்ற தன்மையையும், பயங்காளித் தன்மையையும் வேறுவழியில், சமாதானம் சொல்லச் சக்தியற்ற தன்மையையுமே காட்டுவதாகின்றது.

கோவில்களைக் குற்றம் சொல்லி, அவற்றில் உள்ள விக்ரகங்களின் ஆபாசங்களை எடுத்துக் காட்டி, இம் மாதிரிக் காட்டுமிராண்டித்தனமான உணர்ச்சியை மக்களுக்கு வளர்க்கலாமா என்றும், இந்த ஆபாசத்திற்காக இவ்வளவு பணச் செலவும் நேரச் செலவும் செய்யலாமா என்றும் கேட்டால்—ஓவியம் என்னும் நிழலில் புகுந்துகொண்டு 'அவைகள் அவசியம் இருக்கவேண்டும்' என்றும், 'அவைகள் அழிந்தால் இந்திய ஓவியக் கலை அழிந்துவிடும்' என்றும், 'சாமி பக்திக்காகத் தாங்கள் கோவில்களைக் காப்பாற்றுவதில்லை' என்றும், 'ஓவியக் கலை அறிவுக்காகக் கோவில்கள் காப்பாற்றப்பட வேண்டும்' என்றும் சொல்லுகின்றார்கள்.



இதுபோலவே, புராணங்களைப் பற்றிய ஆபாசங்களை எடுத்துச் சொல்லும் போதும், இதே பண்டிதர்கள், 'புராணக் கதைகளை நாங்கள் மதிப்பதில்லை' என்றும், 'அப் புராணங்களில் உள்ள [illegible]ணை இலக்கியக் கலைகளையே காப்பாற்ற முயற்சிக்கின்றோம்' என்றும், 'கம்பன் [illegible]ச் சுவையும் சேக்கிழார் தமிழ்ச் சுவையும் இவ்வுலகில் வேறு எங்கும் காண முடியாது' என்றும், 'ஆதலால் அவைகள் காக்கப்படவேண்டும்' என்றும் பேசுகின்றார்கள்.

ஆகவே, நமது பண்டிதர்களின் ஓவியக் கலையும், காவியக் கலையும் போகின்ற போக்கைப் பார்த்தால், அவர்களுக்கு உள்ள பகுத்தறிவுக் கலை எவ்வளவில் இருக்கின்றது என்பது ஒருவாறு தானாகவே விளங்கும். மக்களுக்கு ஓவியம் வேண்டுமானால், இந்தியக் கோவில் ஓவியமும் இந்துக் கடவுள்கள் ஓவியமும், கடுகளவு அறிவுள்ள மனிதனும் ஒப்ப முடியாத, மதிக்க முடியாத ஓவியங்கள் என்பதோடு, அவை மனிதத் தன்மையும் பகுத்தறிவும் உள்ள மக்களால் உண்டாக்கப்பட்ட ஓவியம் என்று சொல்ல முடியாததான நிலையில் இருப்பதையும் காணலாம்.

எப்படியெனில், இந்திய ஓவியம் என்பது இந்து மத சம்பந்தமான கடவுள் புராணம் ஆகியவைகளைப் பற்றியதைத் தவிர, தனிப்பட்ட இயற்கை அறிவைப் பற்றியது மிக மிக அருமை என்றே சொல்ல வேண்டும். அது மாத்திரமல்லாமல், அவைகளில் இயற்கைக்கு முரண்பட்டவையே 100-க்கு 99 ஓவியங்கள் என்றும் சொல்ல வேண்டும். சாதாரணமாக மனிதனும் மிருகமும் புணர்வதும், மிருக முகத்துடன் மனிதன் இருப்பதும், மிருகங்கள் பறப்பதும், மிருகங்களின்மீது அளவுக்கு மீறின மக்கள் இருப்பதும், பட்சிகளின் மீது மக்கள் இருப்பதும், மக்கள் பறப்பதும்; 4 கைகளும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, அஞ்சு, ஆறு முகங்களும்; சிறிய உருவத்தின் மீது பெரிய உருவங்கள் இருப்பதும், தாமரைப் பூவின் மீது ஒரு பெண் நிற்பதும், இன்னமும் இதைவிட எத்தனையோ பொருத்தமற்ற, சாத்தியமற்றதான உருவங்களே இன்று ஓவியமாகக் கருதப்படுகின்றன.

சாதாரணமாக, மேல் நாட்டு ஓவியங்களைப் பார்த்தால் இது ஓவியமா, உண்மைத் தோற்றமா என்று மருளும்படியாகவும், அவைகளுடைய சாயல் முதலியவைகளிலிருந்தே குணம், காலம், இடம், நடவடிக்கை முதலியவைகள் தெரிந்துகொள்ளும்படியாகவும், அவைகள் பிரத்தியட்சமாக இயங்கிக்கொண்டிருப்பது போலவும், எவ்வளவோ அருமையான காரியங்கள் வெகு எளிதில் மிகச் சாதாரண தன்மையில் அறியும்படியாகவும், நாமே பார்த்த மாத்திரத்தில் சுலபத்தில் பழகிக் கொள்ளும்படியாகவும் இருப்பதைக் காணலாம். இவற்றிற்காக ஒரு தம்பிடியாவது செலவில்லாமலும் பூசை, நைவேத்தியங்கள் செய்வதின் மூலம் நேரத்தையும் அறிவையும் பறிகொடுக்காமலும் அனுபவிக்கலாம்.

ஆகவே, அப்படிப்பட்ட அருமையான ஓவியங்களையும், சித்திரங்களையும், புதுமைகளையும் விட்டுவிட்டு—அநாகரிகமும், காட்டுமிராண்டித்தனமுமான, மிருகப் பிராயமும் கொண்டதான உருவங்களை வைத்துக் கொண்டு கொஞ்சமும் வெட்கமில்லாமல் அவைகளுக்குப் பணம், காசு, நேரம் ஆகியவை செலவு செய்து, கீழே விழுந்து அவைகளிடம் பக்தியையும் காட்டிக்கொண்டு, 'ஓவியக் கலைக்காக—அக் கலையைக் காப்பாற்றுவதற்காக அவைகளிடம் இப்படிச் செய்கின்றோம்' என்றால், இது பகுத்தறிவும் யோக்கியக் குணமும் படைத்த மனிதர் என்பவர்களின் செய்கையாகுமா—பேச்சாகுமா என்று கேட்கின்றோம்.

ஆகவே, இவர்களைத் தவிர மற்ற கோடிக்கணக்கான மக்கள் அவற்றை என்னவாகக் கருதுகின்றார்கள்? அதைப் பார்த்தபின், கேட்டபின், எப்படி நடந்துகொள்ளுகின்றார்கள் என்கின்ற விஷயங்கள் இந்தப் பண்டிதர்களுக்குத் தெரியாதா?

கம்ப ராமாயணத்தின் கவி அழகையும், சேக்கிழார் புராணத்தின் தமிழ் அழகையும் பண்டிதர்கள் எடுத்துச் சொல்லும்பொழுதே, புத்தகத்தின்முன் தேங்காய், பழம் உடைத்து

படிப்பகம்

www.padippakam.com



கற்பூரம் பற்றவைத்து, பூசை செய்து கீழே விழுந்து கும்பிட்ட பிறகு, 'ஸ்ரீமத ராமானுஜாய நமஹ' என்றும், 'நமப் பார்வதீபதே; அரகர சம்[illegible] மகாதேவா' என்றும் சொல்லி விட்டு, பிறகு கண்மூடி கைகூப்பி, காப்புச் சொல்லி [illegible] உண்டாக்கிக்கொண்டு—பிறகு தான் கவி படித்துப் பொருள் சொல்ல ஆரம்பிக்கின்றார்கள். அதுவும் யார் முன்னிலையில், எப்படிப்பட்ட ஆண் பெண் முன்னிலையில் என்பதைப்பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை.

ஆகவே, இந்த நிலையில் புராணங்கள், காவியங்கள் ஆகியவைகள் இலக்கியத் திற்கும், இலக்கணத்திற்கும் பயன்படுகின்றனவா—பயன்படுத்தப்படுகின்றனவா, அல்லது மக்களை இலக்கண இலக்கிய அறிவற்ற மக்களாக்கப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைச் சிந்தியுங்கள்.

இந்த இடத்தில் நாம் முக்கியமாய்க் குறிப்பிடுவது என்னவென்றால், நமது பண்டி தர்கள் என்பவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கும், புத்தக வியாபாரத்திற்கும், வாழ்க்கை நிலைமைக்கும் இம் மாதிரிக் காட்டுமிராண்டித்தனமான அநாகரிகமான காவியங்களும் ஓவியங்களுமல்லாமல் வேறுவகை ஒன்றில்லாமல்போனதால், அவர்கள் இத்தனை மோச மான பொய்யையும், புரட்டையும் வஞ்சகத்தையும் சொல்லிக்கொண்டு, இவைகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வந்துவிட்டது.

ஆகவே, இம் மாதிரி ஆபாசமும் அநாகரிகமுமான காவியமும், ஓவியமும் அழிக்கப்படவேண்டுமானால், முதலாவதாக நமது பண்டிதர்கள் என்பவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு—வாழ்க்கை நலத்திற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டியது பகுத்தறிவையும் நாகரிகத்தையும் விரும்பும் பொதுமக்கள் கடமையேயாகும்.

மேல்நாட்டுப் பண்டிதர்களுக்கு அவர்களுடைய கல்வியானது பகுத்தறிவை உண்டாக்கக்கூடியதாய் இருப்பதால், அவர்கள் அநாகரிகப் பழங் காவியங்களுடையவும் ஓவியங்களுடையவும் உதவி சிறிதும் இல்லாமலேயே உயிர்வாழ சவுகரியமடைந்து இருக்கிறார்கள். ஆனால், நமது பண்டிதர்கள் பரிதாபகரமான நிலைமையில் இருப்பதால் அவர்களைக் குற்றம் சொல்லுவதிலும் பயனில்லை.

['குடி அரசு'-கட்டுரை—26-4-1931]

# 2. இசை

## 1. சங்கீதம்

சங்கீதம் என்னும் கலையானது மிக்க மேன்மையானதென்றோ அல்லது இன்றைய நிலையில் மனித சமூகத்திற்கு அது மிக்க இன்றியமையாததென்றோ கருதவியலாது. உலகத்தில் மக்களுக்குள்ள அனேக விதமான உணர்ச்சித் தோற்றங்களில் இதுவும் ஒன்றே தவிர, இதற்கு எவ்விதத்திலும் ஒரு தனி முக்கியத்துவம் கிடையாதென்பதே நமது அபிப்பிராயம்.

உதாரணமாக, சங்கீதம் என்பது தேசத்திற்குத் தகுந்தபடியும், அங்குள்ள சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தபடியும், அவரவர்களது அறிவு வளர்ச்சிக்குத் தகுந்தபடியும் இருப்பதே தவிர—ஒரே சங்கீத முறையானது உலகத்திற்கெல்லாம் பொருத்தமானதென்று சொல்ல முடியாது. ஒரு நாட்டுச் சங்கீத உணர்ச்சிக்காரனுக்கு இன்பமாய் இருப்பது, மற்றொரு நாட்டு வித்வானுக்குப் புரியாததாகவே இருக்கும். மேல் நாட்டுச் சங்கீத இன்பும், கீழ் நாட்டான் அனுபவிக்க முடியாதது; அதுபோலவே, கீழ் நாட்டானின் சங்கீதம் மேல்



நாட்டானுக்கு இன்பம் தராது. [illegible]னால், பொதுவில் சங்கீதத்தில் உலக மக்களுக்கெல்லாம் ஒருவித போக்கிய அனுபவமிரு[illegible]றது என்பதை மாத்திரம் காணலாம். ஆனால், ஒருவர் அதிகமாக அனுபவிக்க ஆசை[illegible]ார்; மற்றொருவர் அதைச் சாதாரணமாகக் கருதுவார். எப்படி இருந்தாலும் உலகிலுள்ள பல கலைகளில் அதுவும் ஒன்றாயிருக்கிறது.

நாம் சங்கீத மாநாட்டில் கலந்துகொள்ள ஆசைப்பட்டதன் முதல் காரணம், சங்கீத ஞானத்திற்காகவோ, சங்கீதக் கலை வளர்ச்சிக்காகவோ மாத்திரம் அல்ல என்றும்; பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்னும் உயர்வு தாழ்வு விஷம் சங்கீதத்திற்குள்ளும் புகுந்து, அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும் விரோதமாயிருக்கும் கொடு மையை அழிப்பதற்கே ஒழிய வேறில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—20-4-1930]

## 2. தமிழிசையும் நாடகமும்

கல்விப் பெரியாரும் அறிவுப் பெரியாருமான தலைவர் அவர்களே! ஆசிரியர்களே! மாணவியர்களே! மாணவர்களே! தமிழ் அன்பர்களே!

இன்று எனக்கு உங்கள்முன் பேசும்படியான வாய்ப்புக் கிடைத்திருப்பதை நான் ஒரு பேறு என்றே கருதுகிறேன். தலைவர் அவர்கள் என்னைப்பற்றி மிக மிக அதிகமாகப் புகழ்ந்து கூறி அறிமுகப்படுத்தினார். அவை என்மீது அவருக்குள்ள அன்பையும் அவர்கள் கொண்டுள்ள மதிப்பையும் காட்டுகின்றனவே ஒழிய, அவை பெரிதும் என்னால் ஏற்றுக்கொள்ளக்கூடியனவல்ல என்பதோடு சிலவற்றைப் பற்றி நான் வெட்கமுமுறுகிறேன்.

தோழர்களே! இன்று உங்களிடையே சொற்பொழிவாற்றுவது எனக்கு மகிழ்ச்சிக் குரியதாயினும், சொற்பொழிவின் தலைப்பு எனக்கு அத்தனை மகிழ்ச்சிக்குரியதாயில்லை. 'தமிழ்இசை' என்பது பற்றிப் பேசவேண்டியது இன்று மிக்க அவசியமாகி விட்டது என்றாலும், அது எனக்கும் மிக்க உற்சாகமான தலைப்பே ஆனாலும், எப்படியோ அந்தத் தலைப்பும் சேதிகளும் இன்று விவாதத்துக்கு இடமுள்ளதாகப் போய்விட்டதால் முதல் முதல்—அதுவும் கட்டுப்பாடானதும் உங்களுக்குச் சுதந்திரமற்றதுமான ஒரு ஸ்தாபனத்தில், விவாதத்துக்கு இடமான விஷயத்தைப் பற்றிப் பேசினால் அது எனக்கும் உங்களுக்கும் மகிழ்ச்சியாய் இருந்தாலும், சிலருக்காவது விரும்பத் தகாததாக ஆகக்கூடும். அப்படி ஏற்பட்டால் அது அவ்வளவு நன்மையான காரியமாகாது.

என்றாலும், இன்று நாட்டில் இத் தலைப்பு ஒருவித உணர்ச்சியைக் கொண்டதாக இருப்பதால் நீங்கள் அதை விரும்புகிறீர்கள் என்று கருதி அதுபற்றிய என் கருத்தைச் சொற்பொழிவு வழியாகச் சொல்லுகிறேன். நீங்கள் நடுநிலைமையில் இருந்து கேட்டு, கொள்வன கொண்டு, தள்ளுவன தள்ள வேண்டிக்கொள்கிறேன்.

சுருக்கமாகச் சொன்னால், தமிழன் தான் நுகரும் இசையை, 'தமிழில் இசை, தமிழில் பாடு, தமிழர்களைப் பற்றித் தமிழர்களுக்கு ஏற்றதைத் தமிழர்களுக்குப் பயன்படுமாறு பாடு' என்கின்றான். இதை யார்தான் ஆகட்டும், ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? ஏன் குறை கூறவேண்டும் என்று கேட்கிறேன். அதிலும் தமிழன் இப்படிக் கேட்பதை— தமிழனால் தமிழனல்லாதவன் என்று கருதப்பட்டவன், ஏன் மறுக்கவேண்டும்? இது மிக மிக அதிசயமானதும், தமிழனால் மிக மிக வருந்தத் தக்கதுமாகும். தமிழன்-தமிழ்மக்கள், தமிழில் பாட்டுக் கேட்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். பணம் கொடுப்பவன், தனக்குத் தமிழ்ப் பாட்டுப் பாடப்படவேண்டுமென்று ஆசைப்படுகிறான்; பாட்டுக்கேட்பவன் தமிழில் பாட்டுப் பாடவேண்டும் என்று ஆசைப்படுகிறான். இந்த ஆசையில் பழந் தமிழர் அல்லாதார் அதை மறுக்கவோ, குறைகூறவோ, குற்றம் சொல்லவோ எப்படி உரிமையுடை யவர்கள் என்று கேட்கிறேன்.



படிப்பகம்

‘தமிழரென்றும், தமிழரல்லாதவர் என்றும் பேசி பாராட்டக்கூடாது’ என்பதாகத் தமிழர்களுக்கு அறிவுரை கூறும் இந்தப் பெருமான்களே! தமிழில் பாடவேண்டும் என்பது பொதுநலத்துக்குக் கேடு, கலைக்குக் கேடு, கலை நாட்டுக்குக் கேடு’ என்று சொல்ல வந்தால்—இவர்கள் உண்மையில் தமிழர்—தமிழரல்லாதவர் என்கின்ற உணர்ச்சியைக் குறையச் செய்பவர்களா, அல்லது நெருப்பில் நெய்யை ஊற்றி எரியச் செய்யும்படியான மாதிரியில் வளரச் செய்பவர்களா என்று கேட்கிறேன். அன்றியும், இப்படிப்பட்ட இவர்கள் தங்களைத் தமிழர்களென்று சொல்லிக்கொள்ளக்கூடுமா? தமிழில் பாடினால் இசை கெட்டுப் போகும் என்றால், மேற்கூறிய தமிழர் அல்லாத தோழர்களைவிட இராஜா சர். அண்ணாமலை செட்டியார், சர். சண்முகம் செட்டியார் போன்றவர்கள் குறைந்த அளவு கலை அறிவோ பொது அறிவோ உடையவர்கள் என்பது இவர்கள் எண்ணமா என்று கேட்கிறேன். காது, கண், மனம் ஆகியவை எல்லா விஷயங்களுக்கும் எல்லோருக்கும் ஒன்றுபோல் இருக்கமுடியாது என்பது அறிஞர் ஒப்பமுடிந்த விஷயமாகும்.

‘தமிழில் பாடு!’ என்றால், சிலர்—அதுவும் ஒரு வகுப்பாரே பெரிதும் ஆட்சேபணை சொல்ல வந்ததாலேயே, ‘தமிழ் இசை இயக்கம்’ வகுப்புத் துவேஷத்தையும் உண்டுபண்ணக் கூடிய இயக்கமாகவும், பலாத்காரத்தை உபயோகித்தாவது தமிழ் இசையை வளர்க்க வேண்டிய இயக்கமாகவும் ஆகவேண்டியதாய் விட்டது.

‘இத்தனை பெரியவர்கள் எதிர்ப்பும், தமிழரல்லாதவர்களின் பத்திரிகைகளின் எதிர்ப்பும் ஏற்பட்ட பிறகேதான் இது ஒரு இயக்கமாக விளங்க வேண்டியதாயும், சில இடங்களில் பாட்டுப் பிழைப்புக்காரர்களை நிர்ப்பந்தப்படுத்தி, பயமுறுத்தித் தமிழில் பாடச் செய்ய வேண்டியதாயும், பாட்டுப் பிழைப்புக்காரர்கள் சில இடங்களுக்குப் போகும்போது பந்தோபஸ்துக்கு ஆட்களைக் கூட்டிக்கொண்டு போகவேண்டியதாயும் ஏற்பட்டுவிட்டது. பாட்டுப் பிழைப்புக்காரரான சிலர்மீது தமிழர்களுக்கு வெறுப்புக்கூட ஏற்படும்படியாக நேர்ந்துவிட்டது. கூடிய சீக்கிரத்தில் இசைக் கலை வியாபாரம் தமிழர்கள் அல்லாதவர்களை விட்டு விலகினாலும் விலகிவிடலாம்; அல்லது, அவர்களே அதை விட்டு விலகினாலும் விலகிவிட நேரிடலாம் என்றுகூடக் கருதவேண்டியதுமாகிவிட்டது.

பொதுவாகச் சொன்னால், இந்த நிலையானது நாட்டின் நலத்துக்கும் ஒற்றுமைக்கும் ஏற்றதல்ல என்றே சொல்லுவேன். இன்று தமிழனின் நிலைமை ‘தமிழன் அன்னிய மொழியைக் கற்கவேண்டும்’ என்று சொல்லுவது தேசாபிமானமும் நாட்டு முற்போக்கு இயல்கலை அபிவிருத்தியுமாக ஆகிவிடுகிறது. தமிழனுக்குத் தெரியாத—புரியாத மொழியில் தமிழன் பாட்டுக்கேட்கவேண்டும்; இதற்குப் பேர்தான் கலை வளர்ச்சியாம்! மற்றும், ‘தமிழனுக்குத் தமிழ் வேண்டும்; தமிழ் இசை வேண்டும்’ என்பது தேசத் துரோகமாகவும், கலைத் துரோகம் வகுப்புத் துவேஷம் என்பதாகவும் ஆகிவிடுகிறது. காரணம், பெண்களுக்கு ஆண்கள் ஒழுக்க நூலும், கற்பு நூலும் எழுதுவதுபோல்—தமிழனுக்குத் தமிழனல்லாதவன்—தமிழரை அடிமை கொண்டு அடக்கி ஆண்டு சுரண்டிக்கொண்டிருப்பவன்—தேசாபிமானம், மொழியபிமானம், கலையபிமானம் முதலியவை கற்பிப்பவனாய்ப் போய்விட்டதேயாகும்.

தமிழ்நாடும், தமிழ்மொழியும், தமிழன் தன்மானமும் விடுதலை பெற்று வளர்ச்சியடைய வேண்டுமானால், தமிழன் காரியத்தில் தமிழனல்லாதவன்—அவன் எப்படிப்பட்டவனானாலும், தலையிடுவது முதலில் ஒழிந்தாகவேண்டும். இதை வேறு எதை ஒழித்தாவது ஒழிக்கவேண்டும்.

அறிஞர்களே! நமக்குப் பாட்டுக் கேட்கக்கூடத் தெரியாது என்றும், நம் மொழியானது பாட்டு இசைக்கக்கூடப் பயன்படாது என்றும் சொன்னால், இந்த இழிமொழி—நம் உயிரைப் போயல்லவா கவ்வுகிறதாயிருக்கிறது என்று மிக்க வேதனையோடு கூறுகிறேன். தமிழ்த் துரோகத்தால் வாழவேண்டியவனும், வள்ளுவர் சொன்னதுபோல்—‘குலத்திலே



ஐயப்படவேண்டியவனுமான தமிழ் மகன்களுக்கு, இது எப்படி இருந்தாலும் அவர்களது வாழ்வும் நம் எதிரிகளின் புகழும் அவர்களுக்கு அணியாகவும் அலங்காரமாகவும் முக்கிய இலட்சியமாகவும் இருக்கும். நம் எதிரிகளுக்கு இருக்கும் செல்வாக்கால் நம்மில் துரோகிகள் பெருகிவிட்டார்கள்; இன்னும் பெருகுவார்கள் என்பதும் உண்மைதான். ஏனெனில், மானங்கெட்ட தமிழ்மக்கள் பலர் இப்படிப்பட்ட இனத் துரோகிகளை அறியாமையாலும், சுயநலத்துக்காகவும் ஆதரிக்கிறார்கள் என்பதை நாம் பிரத்தியட்சத்தில் காண்கிறோம். ஆனால், நாம் இப்படிப்பட்டவர்களையும்தான் முதலில் நன்றாய் வெறுக்க வேண்டும்; அவர்களைத் தமிழர் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கித் தள்ளவேண்டும்.

எப்படியோ ஒரு அளவில் நம் எதிரிகளின் எதிர்ப்பையும், நம் இனத் துரோகிகளின் சதிச் செயலையும் தாண்டித் தமிழிசை வெற்றி வழியில் சென்றுகொண்டிருக்கிறது. இதற்கு நம் வள்ளல் இராஜா சர். அண்ணாமலையாரும் நம் அறிஞர் சர். சண்முகனாரும் ஒரு அளவுக்குப் பெருங் காரணஸ்தர்களாவார்கள். அவர்களுக்குத் தமிழ்மக்கள் நன்றி என்றும் உரித்தாகுக. ஆனால், இனித் தமிழிசைக் கிளர்ச்சி அடுத்தாற்போல் செய்யவேண்டியதென்ன என்பது யோசிக்கத் தக்கது.

தமிழ் இசையை நாம் ஏன் வேண்டுகிறோம்? எதற்காக நமக்குத் தமிழில் இசை வேண்டுமென்கிறோம்? தமிழ்மொழியை ஏன் வேண்டுகிறோம்? ஸ்காந்தத்தை–‘கந்த புராணம்’ என்றும், கிருஷ்ணனை–‘கிருட்டிணன்’ என்றும், ஹோம் நமஹா என்பதை–‘ஓம் நமோ’ என்றும், நரசிம்ஹமூர்த்தி என்பதை–‘சிங்கமுகக் கடவுள்’ என்றும், தசகண்ட இராவணன் என்பதை–‘பத்துத்தலை இருட்டுத் தன்மையன்’ என்றும் மொழிபெயர்த்துக் கொண்டு வணங்கி, நம்பி, திருப்தி அடையவா என்று கேட்கிறேன்.

தமிழிசைக்கு நாம் கிளர்ச்சி செய்ததானது வீணாகவில்லை. தமிழிசைத் தொழிலாளர்கள் தமிழில் இசை கற்று வருகிறார்கள்; பெரும்பாலும் தமிழில் பாடுகிறார்கள். இசையை நுகர்வோரும் தமிழில் இசை வேண்டுமென்று விரும்புகிறார்கள். இனி இந்த உணர்ச்சி குன்றிவிடாது. இசை விருந்தளிக்கும் செல்வவான்களும், நுகர்வோர்களும் தமிழுணர்ச்சி உள்ளவர்களாக இருக்கும் வரை இந்த உணர்ச்சி வலுத்துக்கொண்டே போகும்.

தமிழிசை நமது நல்வாழ்வுக்குப் பயன்படும்படி செய்யவேண்டியது நமது கடமை. இன்று இதுவரை தமிழல்லாத வேறு மொழியில் இருந்த இசை (பாட்டுகள்), தமிழில் பாட வேண்டியதாக ஏற்பட்டதற்குக் காரணம், நமக்குத் தமிழினிடம் ஏற்பட்ட உணர்ச்சியேயாகும். இது ஒரு பெரிய மாறுதல்தான்.

இசை, நடிப்பு ஆகியவை எதற்குப் பயன்படுகின்றன? ஏதாவது ஒரு கருத்தை ஒரு சேதியைக் காட்டுவதற்கும், அதை மனத்தில் பதிய வைப்பதற்கும் அது வெறும் வாக்கியத்தில் இருப்பதை இசை இன்பத்தோடும், நடிப்பு இன்பத்தோடும் மனத்திற்குள் புகுத்துவதற்கும் ஆகவே முக்கியமாய் இருந்து வருகின்றன.

அடுத்தபடியாக இரண்டாவதாகத்தான் அவற்றில் இன்ப நுகர்ச்சி வருகின்றது. ஆகவே, இசைக்கும் நடிப்புக்கும் கருத்தும் செய்திகளும் பிரதானமாகும்; அடுத்ததாகவே சுவை பிரதானமாகும். அதன் உண்மையான அனுபவமும் அப்படியேதான் இருந்து வருகிறது. ஆனால், நுகர்வோரும் இசைத்து நடிப்போரும் செய்தியையும், சுவையையும் பற்றிக் கவலையில்லாமல் நுகர்வோர்கள் நேரப் போக்குக்கும், வேறு பல காட்சி இன்பத்திற்கும் அதைச் சாக்காக வைத்து நுகர்வதாலும், இசைத்து நடிப்போர்கள் பொருளுக்கும், வேறு சுயநலத்துக்கும் பயன்படுத்துவதாலும். அதற்கு உண்டான பயன் ஏற்படாமல் போய் விடுகிறது.

நம்நாடும் நாமும் எவ்வளவோ குறைபாடுகள் உடையவர்களாக இருக்கிறோம். அக் குறைபாடுகள் ஒழிக்கப்படுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்கிறோம். இம் முயற்சியின்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



மூலம் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் அனுபவித்துவருகிறோம். இவற்றை யாராலும் மறுக்க முடியாது. அப்படி இருக்க நம்முடைய கலைகள், நாம் அனுபவிக்கும் நுகரும் சாதனங்கள், இன்பத் தன்மைகள் ஆகியவை எப்படியிருக்கவேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

சாதாரணமாக பொருள் நஷ்டமோ, கால நஷ்டமோ, ஊக்க நஷ்டமோ இல்லாமல் நடைபெறும் காரியங்கள்கூட, நம் நலத்துக்கு ஏற்றதாகவும், தீமை ஒழியத் தக்கதாகவும் இருக்கவேண்டுமென்று விரும்புவது அறிவுடைய மக்களின் தலையாய பண்பாகும். அவற்றில் நமக்குப் போதிய கவலை இல்லாததாலேயே நம் நலத்துக்கு மாறான சேதிகளும் உணர்ச்சிகளும் கொண்ட காரியங்கள் வளர்ந்துவர ஏற்பட்டு விட்டதுடன், அவைகளையே பொருள் கொடுத்தும், காலத்தையும் ஊக்கத்தையும் செலவழித்தும் நுகர்ந்து, அறிவும் மானமும் கெட்டு, முற்போக்கும் தடையுற்றுக் கீழ்நிலைக்கு வரவேண்டியவர்களானோம்.

இன்றைய நம் நிலை என்ன? முதலாவது, சமுதாயத்தில் நாம் கீழான நிலையில் இருக்கிறோமா, இல்லையா? இந்தக் கீழான நிலை ஏழைகளுக்கும் மடையர்களுக்கும், இரந்துண்போர்களுக்கும், சோம்பேறிகளுக்கும், கயவர்களுக்கும் இருந்தால் நமக்குக் கவலையில்லை. (ஏனெனில், இது தனி உடைமை நாடு) ஆனால், கோடீசுவரரும், கோணாத கை-கொடைவள்ளலும், மிக்க மதிவாணருமான இராஜா சர் அண்ணாமலை அவர்களும்; பேரறிஞரும், மலையாடும்படியான வாயாடிகளும், கருத்தாளர்களும் மெச்சும் மதி அரசர் சர். சண்முகம் அவர்களும் நம் சமுதாயத்தில் 4 ஆம் சாதி, 5 ஆம் சாதியாக மதிக்கப்படவும், அவ்வாறே பெரிதும் நடத்தப்படவும் காரணம் என்ன? ஏன் நடத்தப்பட வேண்டும்? சம மனிதராய்க் கருதப்படாததற்கு இவர்களிடம் உள்ள குறை என்ன? குற்றம் என்ன? என்று கேட்கிறேன். இந்தக் கொடுமை இன்றா நேற்றா? இவர்களுக்குள்ள பொருள், செல்வாக்கு, மதி, திறமை, ஊக்கம், உணர்ச்சி ஆகியவை உண்மையில் எதற்காகச் செலவிடப்பட்டு வரவேண்டும்? எதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்? இப்படிப்பட்டவர்கள் பிறந்த நாட்டிலே, இவர்கள் இருக்கும் காலத்திலே மனித சமுதாயத்துக்கும்—ஏன், இவர்களுக்குமே, சமுதாயப் பிறவி இழிவும், குறைபாடும் நீக்கப்பட வில்லையானால், நீக்கப்பட இவர்கள் உழைக்கவில்லையானால், நீக்கப்பட இவர்களது அறிவு, ஆற்றல், உணர்ச்சி, ஊக்கம் செலவழிக்கப்படவில்லையானால்—மற்றும் வேறு யாருடைய காலத்தில் நாம் எதிர்பார்க்க முடியும் என்று கேட்கிறேன்.

சென்ற மாதம் சென்னையில் நடந்த தமிழ் இசை மாநாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். 10 நாட்கள் ஒரு பெரிய திருநாள்போல் நடந்தது; பல பதினாயிரம் ரூபாய் செலவிடப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான மக்கள் தினம் 4, 5 மணி நேரம் செல வழித்து வந்து அமர்ந்து இருந்துவிட்டுப் போனார்கள். வள்ளல் அண்ணாமலையார் உணர்ச்சியும் ஊக்கமும் ஆழ்ந்த சிந்தனையும், அவர்களது பந்துமித்திரக் குழாங்களும், அறிஞர் சண்முகம் அவர்களது அறிவுரைகளும் ஆற்றல்களும் எல்லையின்றிப் பயன் படுத்தப்பட்டன. எதிரிகளுக்கு ஆணித்தரமான விடை அளித்து அவர்களது வாய்க்கு ஆவிகூட வெளிப்படமுடியாதவாறு ஆப்புகள் சம்மட்டியால் அறையப்பட்டன. வெற்றிக் கொடி ஆகாயத்தை அளாவிப் பறந்தது. சென்னை நகர் முழுவதுக்கும் ஒரு புத்துணர்ச்சி கிளம்பியது. சரி, இவை பாராட்டத் தக்கன, போற்றத் தக்கன.

ஆனால், விளைந்த பயன் என்ன? ஏற்பட்ட படிப்பினை என்ன? இம் மாநாடு—பண்டிதர்களைத் தமிழில் பஜனைப் பாட்டுகளைத் தொடுக்க வைத்தது; இசைவாணர்களை (பாட்டுத் தொழில்காரர்களை) வீட்டில் தனிமையில் உட்கார்ந்து பாட்டுகளைப் பாடிப்பாடிப் பழக்கம் செய்து கொள்ளச் செய்தது; இந்தப்படியான தமிழ் பஜனைப் பாட்டுப் பாடத் தெரிந்தவனையே இசை விருந்துக்கு அழைக்கவேண்டும் என்கின்ற உணர்ச்சியை நமது செல்வவான்கள் பலருக்கு ஊட்டியது; இசை நுகரச் செல்லும் மக்கள் பலருக்கும் (இந்த இசைவாணர்) தமிழில் இசை இசைக்கிறாரா, அல்லது வேறு மொழியில் இசைக்கிறாரா—வேறு மொழியில் இசைத்தால் கலவரம் செய்யலாமா என்கின்ற சிந்தனையைச் சிலருக்கு



ஊட்டிற்று—என்பனவாகிய இவை [illegible]ற்பட்டன என்றே வைத்துக் கொள்ளலாம். இவற்றால் சகல உயர்வும், தகுதியும் இருந்[illegible] ஒரு சிறு கீழ் மக்கள் குழுவால் இழி மக்களாய்க் கருதப் பட்டு, சுரண்டப்பட்டு, மான[illegible] நடைப்பிணங்களாய்க் கிடக்கும் தமிழ் மக்களுக்கு, இந்த நிலை மாற, ஏதாவது [illegible]சி முனை அளவு பயன் ஏற்பட்டதா என்று வணக்கத் தோடு கேட்கிறேன். நலம் பெறுவதற்கு வழி சிறிதும் இல்லாவிட்டாலும் கேட்டிற்காவது சரிவு வழி ஏற்படாமல் போயிற்றா என்று கேட்கிறேன்.

என் மீது ஒரு சிலர் முனிவு கொள்ளலாம்; ஆத்திரப்பட்டு வஞ்சினம் கூடக் கூறலாம்; அதை நடத்துவிக்கவும் முனையலாம். இவற்றால் பொதுநலம் என்ன ஏற்படக்கூடும்? தனி நலம்தான் என்ன ஏற்படக்கூடும்? இப் பெரியார்களிடத்தில் இந்த விண்ணப்பம் கொடுக்க எனக்கு உரிமை இல்லையா?

சர். சண்முகம் அவர்கள் ஒரு பெரிய பொருளாதார நிபுணர்; இவ்விஷயத்தில் அரசர் களும் மதிக்கத் தகுந்தவர்; எதிரிகளும் கண்டஞ்சத் தக்கவர். வள்ளல் அண்ணாமலையார் பொருளாதார நிபுணத்துவத்தையே உருவாய்க் கொண்டவர். இவ்விருவரின் பொருளாதார நிபுணத்துவம் இந்தத் தமிழ் இசை மாநாட்டில், தமிழ் இசைக் கிளர்ச்சியில் எப்படிப் பயன் படுகிறது என்று பாருங்கள்!

தமிழிசைக் கிளர்ச்சிக்காக இவர்கள் செலவழித்த பொருளும், மற்ற தமிழ் மக்கள் செலவழித்த பொருளும் தமிழ்நாட்டுப் பொருளல்லவா? தமிழர்களுடைய பொருளல்லவா? நிலை குலைந்து தரித்திரர்களாய் வயிற்றுப் பசிக்கு எச்சில்கலையைத் தேடித் திரியும் ஈன மக்களாய்க் கருதப்படும் தமிழ் உயிர்களுடைய செல்வமல்லவா? இதற்குச் செலவழித்த உணர்ச்சியும் ஊக்கமும் ஆற்றலும் காலமும் இவர்களுடையவை அல்லவா என்று கேட் பதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இவ்வளவு பொருளும், ஆற்றலும், மதியும், மற்றதும் செலவழித்ததற்கு நாம் கண்ட பயன் என்ன? நண்பர்களே, சிந்தித்துப் பாருங்கள்! நாட்டில் உள்ள நல்ல, உயர்தர இசைவாணர்களுக்குப் பொருள்தந்து வரவழைத்து—ஒரு காலைத் தூக்கி ஆடிக்கொண் டிருக்கும் நடராஜ உருவத்தின்முன் தீப தூப நைவேத்தியத்துடன் உட்கார வைத்து, பல ஆயிரக்கணக்கான மக்களை வரவழைத்துப் பஜனைப் பாட்டுக்கள் பாடச் செய்வதும், அதன் மூலம் மக்களுக்குப் பக்தி புகட்டுவதுந்தானா? இது யார் செய்யவேண்டிய காரியம்? எதற்கு ஆகச் செய்ய வேண்டிய காரியம்? இதனால் ஏற்படும் பலன் யாருக்கு நலனைத் தரும்? நிலைகுலைந்து, இழிவடைந்து தரித்திரர்களாய், மடையர்களாய், கீழ்மக்களாய், சுரண்டப்பட்டவர்களாய் வாடும் மக்களுக்கு என்ன பலனைத் தரும்? அவர்கள் குறையைப் போக்கிக்கொள்ள ஏதாவது உணர்ச்சி ஏற்படுமா? அல்லது, முயற்சியைத் தடுக்குமா? மறு முறையும் சிந்தித்துப் பாருங்கள். இதில் பொருளாதார ஞானம் இருக்கிறதா என்று. பஜனைப் பாட்டுக்கள் தமிழில் இருந்தால் என்ன, தெலுங்கில் இருந்தால் என்ன, இந்தியில் இருந்தால் என்ன—அல்லது ஜப்பான், ஜெர்மனி பாஷையில் இருந்தால்தான் என்ன? கடவுளுக்கு எந்தப் பாஷை தெரியாது?

நாட்டினுடைய செல்வம், அறிவு, ஊக்கம், உணர்ச்சி—இந்தப் பஜனைக்காகவா இப்படிச் செலவழிக்கப் படவேண்டும்? இதைக் காணும் அயலான் எவனாவது இந்த நாட்டு மக்களுக்குத் தன்மான உணர்ச்சியோ, இழிவையும் கீழ்மையையும் கண்டு உடல் துடிக்கும் சொரணையோ இருக்கிறது என்று கருதமுடியுமா? நாட்டு மக்களுக்கு இதில் பிரவேசித்து, இந்தத் தன்மானத்துக்குக் கேடு செய்யும் தன்மையைப் பற்றிச் சிந்திக்கவோ, விளக்கவோ, தடுக்கவோ உரிமை இல்லையா என்று கேட்கிறேன்.

தமிழிசைக் கிளர்ச்சிக்குச் செலவாகும் பணத்தையும், நேரத்தையும், ஊக்கத்தையும் பார்த்தால் அதன் பயன் இந்தப் பஜனையில் முடிவதானால் மானமும் அறிவும் உள்ள எவனுக்குத்தான் வயிறு எரியாது என்று கேட்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



பல் விளக்கச் சோம்பேறித்தனப்பட்ட மருமகளைப் பார்த்து ஒரு மாமியார், பல் விளக்கும்படி மருமகனுக்குச் சொல்ல வெட்கப்பட்டு, [illegible]ம்பு சாப்பிட்டால் பல் வெள்ளை யாகும் எனக் கருதி, மறைமுகமாய் 'மாப்பிள்ளை! [illegible] ஊர்க் கரும்பு நல்ல ருசியாக இருக்கும்; ஒரு கட்டுக்குக் கரும்பு வாங்கிச் சாப்பிடுங்கள்' என்று சொல்லிக் காசு கொடுத்தால்—மாப்பிள்ளை அதை வாங்கிக்கொண்டு போய் எள்ளுப் பிண்ணாக்கை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் பல்லை இன்னும் கேவலமாக்கிக்கொண்டு கரும் எண்ணெய்ப் பசையுடன் வந்தால், மாமியாருக்கு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்! அது போலல்லவா இந்தத் தமிழிசைக் கிளர்ச்சி இந் நாட்டில் நடந்துவருகிறது என்று கருத வேண்டியிருக்கிறது.

இதுபோலவே, நம் தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் மாபெரும் கேடாய் இருந்து வரும் மற்றொரு காரியம் சினிமா, நாடகம் முதலிய நடிப்புக் காட்சிகளாகும். இவை இசையைவிடக் கேடானவையாகும் என்பது என் கருத்து. மானமுள்ள நாடாக—மானத்தில் கவலையுள்ள மக்களைக் கொண்ட நாடாக இருந்திருக்குமானால் இந்த நாடகம் சினிமா முதலியவை ஒழிந்து கல்லறைகளுக்குப் போயிருக்கும். இதை நான் வெகு காலமாகச் சொல்லிவருகிறேன்.

இசையினால் காது மூலம் உடலுக்கு விஷம் பாய்கிறது. நடிப்பினால் காது, கண் ஆகிய இரு கருவிகள் மூலம் உடலுக்குள் விஷம் பரவி இரத்தத்தில் கலந்துபோகிறது. இவ்வளவு பெரிய குறைபாடும், இழிவும் உள்ள மக்களுக்கும்—இன்று கடவுள் பஜனையும், கடவுள் திருவிளையாடல் நடிப்புந்தானா விமோசனத்துக்கு வழியாய் இருக்கவேண்டும்?

நாடகம் எதற்கு? அது படிப்பிக்கும் படிப்பினை என்ன? புராணக் கதைகளை நடிப்பினால் அனுபவிப்பதால் மூடநம்பிக்கை, ஒழுக்க ஈனம், கட்டுத்திட்டமற்ற காம உணர்ச்சி, கண்ட மாத்திரத்தில் காம நீர் சுரக்கும்படியாகப் பெண் மக்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளுதல் முதலியன பிடிபடுவதல்லாமல் வேறு என்ன ஏற்படுகிறது?

'இரணியன்' நாடகத்தில், விஷ்ணு தூணிலிருந்து வெளிவரும்போது கூத்து பார்க்கும் மக்கள் கைகூப்பிக் கும்பிடுகிறார்கள்.

'வள்ளி திருமணம்' நாடகத்தில், வள்ளியை சுப்பிரமணியன் காதலித்து காதல் சேட்டை செய்யும்போது, பல ஆண்கள் பெண்கள் பக்கமும், பல பெண்கள் ஆண்கள் பக்கமும் திரும்பிப் பார்த்துக் கண்ணோடு கண்ணை முட்டவைப்பதுபோல் ஆகி மூர்ச்சையாகி விடுகிறார்கள்.

ஒரே கதை, நாடகமும் சினிமாவுமாக ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் ஆடுவதின் காரணம் என்ன? முதலிரண்டு மூன்று நாட்களிலேயே பல பெண்களும் பல ஆண்களும் நாடகக் கொட்டகையைத் தங்கள் 'சங்கேதஸ்தலம்' (அதாவது பார்வையால், சந்திப்பால் ஒரு அளவு காதலைத் தீர்த்துக் கொள்ளவும், காதல் குறியைக் கண்டு அனுபவிப்பதால் ஒரு அளவு இன்பங் கொள்ளவும் அனுகூலமான இடம்) ஆக ஆக்கிக் கொள்ளுகிறார்கள். வெறும் சாதாரண நிலையில் ஆண் பெண் சந்தித்துக்கொள்வதைவிட நல்ல உடை, நல்ல நடை, நல்ல அலங்கரிப்பு, நல்ல சாயலோடு செல்ல உரிமை இருக்கிற இடங்கள்—இவைகளோடு அதற்கேற்ற சைகைகள் நடக்கும் சமயத்தில் சந்திப்பு வைத்துக் கொள்வது, உண்மையிலேயே யாருக்கும் ஒரு இன்பத்தையும் திருப்தியையும் கொடுத்துத் தான் தீரும். இது இயற்கையே ஆகும். ஆனால், நாம் இதை வளர்க்கச் செய்யலாமா? இளம் வயதாகவும், தங்களைக் காப்பாற்றிக்கொள்ளப் போதிய சக்தி இல்லாதவர்களாகவும் இருக்கிற சிறுவர் சிறுமிகளுக்கும், மனோபலமற்றவர்களுக்கும் இதை ஒரு பழக்கமாகச் செய்யலாமா என்று பாருங்கள். அப்படிச் செய்வதானாலும் அதிலிருந்து சிறிது அறிவும் மானமும் பெறும்படியாகவாவது அந்த நடிப்பைத் திருப்பவேண்டாமா? அதை விட்டுவிட்டு காட்டுமிராண்டிகள்போல் மூடநம்பிக்கையும் காமமும் காதலுமே நமது கலைகளை நிரப்பி



வருவதானால்—கலையினால் மனி[illegible]ர் அறிவாளியாவானா, மடையனாவானா? சிந்தித்துப் பாருங்கள்!

'நந்தனார் சரித்திரத்'[illegible]ண்டாமை ஒழியுமா, நிலைக்குமா யோசித்துச் சொல் லுங்கள், பார்க்கலாம்! 'கிருஷ்ண லீலை'யால் விபசாரித்தனம் வளருமா, குறையுமா சொல்லுங்கள், பார்க்கலாம்! திருவிளையாடல் புராண 'சிவ லீலை'யால் ஒழுக்க ஈனங்களும் அயோக்கியத்தனங்களும் வளருமா, குறையுமா என்று கூர்ந்து பாருங்கள். இராமாயணத் தினால் அடிமைத்தனமும் சூழ்ச்சிகளும் வளருமா, குறையுமா என்று பாருங்கள்! இப்படிப் பட்ட புராண சம்பந்தமான கதைகளின் நடிப்பு ஏதாவது ஒரு நல்ல காரியத்திற்குப் பயன் படுகிறதா என்று கேட்கிறேன். இப்படியே ஒவ்வொரு புராணக் கலையிலும் கேடு இருப்ப தோடு, நாட்டுக்குப் பெருமித நட்டமும் முன்னேற்றத் தடையும் இருந்துவருகின்றன. வாலிபர்கள்—ஆண்களும், பெண்களும் முன்வந்து இந்தக் கேட்டை ஒழிக்கவேண்டும். நாடகங்களில் போய் உட்கார்ந்துகொண்டு இப்படிப்பட்ட காதல் வரும் சந்தர்ப்பங்கள் வரும்போது, 'வெட்கம், வெட்கம், மானங்கெட்ட பெண்கள்தான் இதைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள். மானமும் ஒழுக்கமும் உள்ள பெண்கள் இந்த நாடகங்களை எட்டிக்கூடப் பார்க்கமாட்டார்கள்' என்றும்; மூட நம்பிக்கை வரும் சந்தர்ப்பங்களில், 'வெட்கம், வெட்கம், பகுத்தறிவற்றவர்களும் காட்டுமிராண்டிகளும்தான் இந்தக் காட்சி களைக் காண வருவார்கள்; அறிவும் மானமும் உள்ளவன் இதைத் திருத்தத்தான் முற்படு வான்' என்றும் சொல்லவேண்டும்.

அதுபோலவே, இசையரங்குகளிலும் பஜனைப் பாட்டுகள் வரும்போது அவை காதுகளில் கேட்காதபடி, 'யாயா யாயாயா' என்று கூப்பாடு போட்டு அந்தச் சப்தம் மற்றவர்கள் காதுகளில் கேட்காமல் இருக்கும்படி செய்யவேண்டும். யுத்தத்தின் காரண மாக நமது சர்க்கார், ரேடியோவில் ஜப்பான், ஜெர்மன் பேச்சுக்கள் வரும்போது வேறு யாரோ ஒருவர் அப்பேச்சுக்கள் நம் காதுகளில் விழாமல் இருப்பதற்காக 'யாயா..யாயாயா' என்று சொல்லச் செய்கிறார்கள் அல்லவா—அதுபோலத்தான் நானும் சொல்கிறேன்.

நாம் நம் சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுடன்—எவ்வளவு நாட்களாக—எவ்வளவு பாடுபட்டு வருகிறோம்? அந்தப் பலன்கள் நாம் செய்த சிறு காரியத்தையும் கெடுக்கவும், யாரோ சுயநலக்காரர் சுரண்டுவதற்குந்தானா பயன்பட வேண்டும்? நமக்கு ஒருவர் உதவி செய்யாவிட்டாலும் நம் காரியம் கெட்டுப்போகாமல் இருக்கும்படியாகவாவது பார்த்துக்கொள்ள நமக்கு உரிமை இல்லையா என்று கேட்கிறேன். இந்தப் பஜனைப் பாட்டும், இந்தப் புராண நாடகமும் இருக்கும் வரை நம் முட்டாள் தனமும், இழிவும், மானமற்ற கீழ்மையும், ஒழுக்க ஈனமும் ஒழிக்கப்பட முடியவே முடியாது என்பேன்.

[சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 7-2-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-2-1944]

## 3. தமிழிசை

தமிழிசை முயற்சி அல்லது கிளர்ச்சி என்றால் என்ன? தமிழ்நாட்டில் தமிழர்கள் இடையில் இசைத் தொழில் வாழ்க்கை நடத்தவோ அல்லது பொருள் திரட்ட ஒரு வியாபார முறையாகவோ கொண்டுள்ள இசைத் தொழிலாளி அல்லது இசை வியாபாரியை இந்த நாட்டானும் பொருள் கொடுப்பவனும் இசையை அனுபவிப்பவனுமானவன், 'இசை என் விருப்பத்திற்கு ஏற்றவண்ணம் இருக்கவேண்டும்' என்று சொல்லி விரும்புவதேயாகும். இதில் எவ்வித விவாதமோ, வெறுப்போ ஏற்படச் சிறிதும் இடமில்லை. இந்த முயற்சியும், கிளர்ச்சியும், இத்தனை நாள் பொறுத்து ஏற்பட்டதேன் என்பதுதான் அதிசயக்கத் தக்கதாகும். அன்றியும் எங்களுக்கு இப்படிப்பட்ட இசைச் சரக்குத்தான் இருக்கவேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



என்று, கொள்வோரும் நுகர்வோரும் கேட்டால் அ[illegible] தர்க்கித்து, 'நீ இதைத்தான் கொள்ளவேண்டும்' என்று சொல்லுவது இசைப் பிர[illegible]ரின் ஆதிக்கத்தையும், இசை வியாபாரியின் ஆதிக்கத்தையும்—கொள்வோரின் இழி[illegible]யையும், வலிவற்ற மானமற்ற தன்மையையும் காட்டும் அறிகுறியாகும்.

தமிழன் காதுக்கும், மனத்துக்கும் வேண்டிய உணவுக்கு—இந்தத் தமிழர் அல்லாதவர் என்று கருதப்பட்டவர்கள் பக்குவமும், நோட்டமும், சுவையும் சொல்லவருவது அவர்களது அதிகப் பிரவேசத் தனத்தையும், அகம்பாவத்தையும், தமிழர்களை இழிவாய்க் கருதி இருக்கும் சிறு குணத்தையும் காட்டுவதல்லாமல்—அதற்கு வேறு என்ன பெயர் சொல்லக்கூடும்?

['குடி அரசு'-கட்டுரை 19-2-1944]

# 3. நாடகம்

## 1. நவீன நாடகம்

நாடகம் என்பது ஒரு விஷயத்தை, ஒரு சம்பவத்தை, ஒரு கற்பனையை நடித்துக் காட்டுவது என்பது பலரின் துணிபு என்றாலும், அது மக்கள் சமூக நன்மைக்காகவே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தொழில் முறையென்றும் கருதப்பட்டு வந்திருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல், ஜனசமூக நல்வாழ்க்கைக்கு ஏற்ற விஷயங்களையே நடித்துக்காட்ட ஏற்பட்டது என்றும் சொல்லிக்கொள்ளப்படுகின்றது.

ஆனால், இன்றைய நாடக உலகில் நடைபெறும் தொழில் முறைகளில் இம்மூன்று கருத்துக்களுக்கும், ஏதாவது ஆதாரமிருக்கின்றதாவென்று வெறுப்பு விருப்பு இல்லாமல் கூர்ந்து பார்க்கும்படி நாடக அபிமானிகளை வேண்டிக்கொள்ளுகிறேன்.

முதலாவது, நடிப்பு என்பது தற்சொரூபம் என்பதுமாறி, நடிப்போர் என்பவரின் இச்சைப்படி உருவகம் கொடுத்துத் தன்போக்குப்படியும், பார்ப்பவர்கள் இஷ்டப்படியும்—அதாவது எப்படி எப்படி நடித்தால் மக்கள் ஏற்பார்கள் என்ற கவலைமீதும், நடிப்பதையே முக்கிய கொள்கையாய்க்கொண்டு, உண்மை நடிப்பு என்பதன் ஜீவனையே இழந்து, நடை உடை, பாவனை, ரசபேதம் முதலியவைகளைத் தலைகீழாகக்கொண்டு நடிக்கப்படுகின்றது. மற்றும், நடிப்பவர்கள் தங்கள் தங்கள் கொள்கைக்கு ஏற்றபடி திருத்தப்பட்ட வசனங்களைக் கொண்டும், அனேக சந்தர்ப்பங்களில் பொருத்தமற்ற பாவனைகளைக்கொண்டும், பாட்டு களைக்கொண்டும், பொருத்தமற்ற வசனங்களைக்கொண்டும் நடிக்கின்றார்கள்.

ஒன்று: இரண்டு நடிப்புகள் எல்லா அம்சங்களிலும் ஒழுங்காய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நான் பெரும்பான்மையாய்க் காணப்படுகின்ற விஷயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

இரண்டாவது: நாடகங்கள் பொதுஜன நன்மைக்காக நடிக்கப்படுகின்றன என்பதையும் முழுவதும் ஒப்புக்கொள்ள முடியாதவனாகயிருக்கிறேன். ஏனெனில், இன்று எப்படி உலகில் பல்வேறு பொது ஸ்தாபனங்களில் இருந்துகொண்டு, மனித சமூக பொது நலத்திற்கு என்று நடைபெற்று வருபவைகள் அவ்வளவும் அனேகமாய் அவற்றின் ஒவ்வொரு காரியங்களும் அவற்றில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு தனி மனிதனுடையவும், அவனது தனி வகுப்பினுடையவும் சுயநலத்திற்கே பெரிதும் நடைபெற்று வரத் தக்கதாய் இருக்கின்றதோ அதேபோல்தான்—நாடக உலகிலும் அதில் ஈடுபட்டவர்களுடைய—அதைத் தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாய் ஏற்படுத்திக்கொண்டவர்களுடைய சுயநலத்திற்காகவே



கைக்கொண்ட தொழில்முறைய[illegible]தான் நடைபெற்று வருகின்றன. அந்த மாதிரியில் வியாபாரம் நடத்தும் முதலாளி[illegible] மனப்பான்மையையே அஸ்திவாரமாக வைத்துத்தான் நாடகத்தொழிலும் வியாபார[illegible]ல் நடந்துவருகின்றது என்று சொல்லுவதற்கு நான் வருந்துகிறேன்.

மூன்றாவது: 'மக்கள் சமூகத்திற்கு நன்மையான காரியங்களை வைத்துக்காட்டு வதற்காக நாடகம் ஏற்பட்டது' என்று சொல்லப்படுவது; இவ்விஷயத்திலும் நாடக உலகம் நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதாகச் சொல்ல முடியாமைக்கு வருந்துகிறேன்.

ஏனெனில், இன்றைய நாடக உலகத்தில் உள்ள நாடகங்களின் மூலக் கதைகள், கற்பனைக் கதைகள் முதலியவைகள் எல்லாம் பெரிதும் மனித சமூகத்திற்கோ அல்லது அவர்களது நல்வாழ்க்கைக்கோ, முற்போக்குக்கோ, விடுதலைக்கோ, சுதந்திரத்திற்கோ சிறிதும் பயன் அளிக்காததும் பிற்போக்கானதும், மனிதனை மிருகபிராயத்திற்கு, காட்டு மிராண்டிப் பிராயத்திற்கு அழைத்துச் செல்லக்கூடியதுமான விஷயங்களையே நடித்துக் காட்டப்படுகின்றதுடன், மனித சமூகத்தைப் பிரித்து வேற்றுமையும், துவேஷமும் பெருகு வதற்கு அனுகூலமாய் இருப்பவைகளே பெரிதும் நடிக்கப்படுகின்றன.

மனித சமூகத்திற்கு இன்று உள்ள இழிவுகளுக்கும், குறைபாடுகளுக்கும், மானமற்ற தன்மைக்கும், மதத்தின் பேரால், நீதியின் பேரால், தர்மத்தின் பேரால், அரசின் பேரால் எதுஎது ஆதாரமாய் இருந்து வருகிறதோ அதுவேதான் இன்றைய நாடக உலகத்தின் நடிப்புகளுக்கு மூல ஆதரவாய் இருந்து வருகின்றது.

உதாரணமாக, மதசம்பந்தமானதும், ஒழுக்க சம்பந்தமானதும் என்று சொல்லப் படுகின்ற அரிச்சந்திரன் கதையின் நடிப்பையே எடுத்துக்கொள்வோம். இது 'சத்தியத்தை' நிலை நிறுத்துவதற்குப் படிப்பினையாக நடித்துக் காட்டப்படுவதாகச் சொல்லப்படுவ தாகும். ஆனால், இதிலுள்ள தத்துவங்கள் என்னவென்று பாருங்கள்: (1) பெண் அடிமை (2) பிறவித் தீண்டாமை (3) பிறவி வருணாசிரமப் பிரிவு (4) சாதிபேத உயர்வு, தாழ்வு (5) வைதீகர் ஆதிக்கம் (6) மூடநம்பிக்கை (7) முதலாளி—தொழிலாளி கொடுமை, (8) எஜமான் அடிமைத் தன்மை முதலிய குணங்கள் மிதந்து நிற்கின்றனவா, இல்லையா? ஊன்றிப் பாருங்கள். இவை அனைத்தும் உண்டா இல்லையா என்று விவரிக்கக்கூட அவசிய மில்லாமல் பிரத்தியட்சமாய் இருக்கிறதா இல்லையா என்று பாருங்கள். ஆனால், இக் கதையின் முக்கிய கருத்து என்று சொல்லப்படும் 'சத்தியம்' என்பது அக் கதையில் எங்கு இருக்கின்றது என்று தேடிப்பிடிக்க வேண்டியதாய்த்தான் இருக்கிறது. தேடிப்பிடித்ததாகச் சொல்லப்பட்டாலும் அது விவகாரத்திற்கு இடமில்லாமல் எங்கும் சத்தியம் துலங்கியதாகச் சொல்லமுடியாது என்று நான் கருதுகிறேன். என்றாலும், விவகாரத்திற்காக ஒப்புக்கொண்ட போதிலும் இந்தப்படி ஒருசிறு நன்மைக்கு பெருந் தீமைகளைக் கொண்டிராத சரித்திரங் களோ, கதைகளோ எவ்வளவு நடிக்கப்படுகின்றது என்று சிந்தித்துப் பாருங்கள். இதை விரிக்கிற் பெருகும். அன்றியும், அது மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடாத விஷய மாகவும் இருக்கும். ஆதலால், இவ்வளவோடு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

நிற்க, மனிதனுக்குச் சத்தியம் பிரதானமா? மானமும் அன்பும், சமத்துவமும், சுதந்திரமும் கொண்ட வாழ்க்கை பிரதானமா என்று பார்த்தால், சத்தியத்தின் பிரதானம் சுலபமாய் விளங்கி விடும். சத்தியம் என்பதே என்ன என்பதற்கும் விவகரித்துத் தீர வேண்டிய நிலையில் இருந்துவருகிறது.

ஆதலால், இனி வரப்போகும் நாடக உலகமானது இதுவரை இருந்ததுபோலவே இல்லாமல், உண்மையிலேயே மனித சமூகத்திற்குப் பயன்படக்கூடியதாயும் அதாவது, மக்கள் யாவரும் சமம்—பகுத்தறிவே பிரதானம்—உலக இயற்கைப் போக்குகள், இன்ப துன்பங்கள் யாவர்க்கும் பொது; இவற்றை யாரும் சரிசமமாய் அனுபவிக்கக் கடமைப்பட்ட வர்கள்; அதற்கேற்ற கொள்கைகளே வாழ்க்கை முறையாகவும் ஆட்சி முறையாகவும்

www.padippakam.com



இருக்கவேண்டும்; இவற்றிற்கு விரோதமாய் இருப்ப...கள் எல்லாம் அழிந்து ஒழிந்து மறையவேண்டும் என்கின்ற கருத்துக்கு அனுகூலம..., வழிகாட்டியாகவும் இருக்க வேண்டுமென்று விரும்பி, இன்றைப் கொடுமையு...தமும் நிறைந்த உலகத்தை அன்பும் சமத்துவமும் கொண்ட உலகமாய்ச் செய்ய ...ரிய வேண்டுமென்று ஆசைப் படுகிறேன். குற்றமுள்ளதைத் தள்ளி, குணமுள்ளதைக் கொள்ளக் கோருகிறேன்.

['வெடிகுண்டு'-கட்டுரை—10-8-1933]

## 2. இரணியன் நாடகம்

தலைவரவர்களே! தோழர்களே!

சென்னை சீர்திருத்த நாடக சங்கத்தாரால் நடிக்கப்பட்ட இந்த முதல் நாடகத்துக்குத் தலைமை வகிக்கும் பெருமை எனக்கு அளித்ததற்கு நன்றி செலுத்துகிறேன்.

நாடகம் என்பது ஒரு விஷயத்தைத் 'தத்ரூபமாய்' நடித்துக் காட்டுவது என்பதோடு அதைப் பெரிதும் மக்களின் நடத்தைக்கு வழிகாட்டியாகவும், ஒழுக்கங்கள் கற்பிக்கப் படுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது.

ஆனால், அது அந்தப்படி தத்ரூபமாய் நடத்திக் காட்டப்படுவதும் இல்லை; மக்கள் ஒழுக்கத்துக்கும், நடப்புக்கும் வழிகாட்டியாய் நடப்பிப்பதும் இல்லை என்று சொல்வதற்கு நாடக அபிமானிகள் மன்னிக்க வேண்டுகிறேன்.

தத்ரூபம் என்பதில் விஷயங்களின் இரசபாவங்களும், உண்மையாய் நடந்திருக்கும் என்று நினைக்கும்படியான எண்ணமும் ஜனங்களுக்கு விளங்கவேண்டும்.

அந்தப்படி இல்லாமல், நமது நாடகங்கள் பெரிதும் சங்கீதக் கச்சேரி போலவும், காலட்சேப சபை போலவும், விகடசபை போலவும், நகைகள்-உடுப்புகள் காட்சிசாலைகள் போலவும், விஷயங்களுக்குப் பொருத்தமில்லாத பேச்சுக்களை அடுக்கிப் பேசும் பேச்சு வாதசபை போலவும் விளங்குகின்றது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

நாடகங்களுக்கு நடிப்புகளில் மிக விசேஷ சமயங்களில், அல்லது அசல் விஷயத்திலேயே பாட்டுவரும் சந்தர்ப்பங்களில் தவிர, மற்ற சமயங்களில் பாட்டுகள் பொருத்த மற்றது என்பது நமது அபிப்பிராயம்.

உதாரணமாக, நெருப்புப் பிடித்துவிட்ட சமயத்தைக் காட்ட, நடிக்கவேண்டியவர் தடபுடலாய் ஆத்திரப்பட்டுக் குளறுபடியாய் இருப்பதுபோல் நடிக்க வேண்டுமா? அல்லது தாளம், சுதி, இராகம் முதலியவைகளைக் கவனித்து, சங்கீத இலட்சியத்தில் திரும்பி, ஜனங்களுடைய கவனத்தையும் சங்கீதத்தில் திரும்பவிட்டுவிட்டால் நடிப்பு சரியானதாக இருக்கமுடியுமா என்று கேட்கிறேன். அது போலவே, நடிப்புக்குப் பொருத்தமற்ற உடை, நடை, நகை முதலியவைகளுடன் விளங்கினால் விஷயம் நடந்ததாகத் தத்ரூபமாய்க் கருதப்பட முடியுமா?

மேல் நாடுகளில் இரச பாவங்களுக்காகவும், தத்ரூபமாய் நடந்ததாகக் காட்டப்படும் நடப்புக்காகவும் நடத்தப்படும் 'டிராமாக்களில்' பாட்டு என்பதே மிகமிக அருமையாய்த்தான் இருக்கும். சங்கீதத்துக்காக நடக்கும் விஷயத்தை அங்கு 'ஆபரா' (Opera) என்று சொல்லப்படுமே தவிர, 'டிராமா' என்று சொல்லப்படமாட்டாது. இங்கு சங்கீத வித்வான்களே நாடகமேடையைக் கைப்பற்றிக் கொண்டதானது நாடகக் கலையைச் சங்கீதம் அழித்துவிட்டது என்றும், மக்களது நாடகாபிமானமும் சங்கீதத்தில் திருப்பப் பட்டுவிட்டது என்றும்தான் கருதவேண்டும்.

நாடகம் நடிக்கப்படும் கதைகள் விஷயமும், தற்கால உணர்ச்சிக்கும் தேவைக்கும் சீர்திருத்த முறைக்கும் ஏற்றதாயில்லாமல் பழைமையைப் பிரச்சாரம் செய்யவும், மூட



நம்பிக்கை, வருணாசிரமம், சாதி...த்தியாச உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, பணக்காரத் தன்மை முதலிய விஷயங்க... பலப்படுத்தவும், அவைகளைப் பாதுகாக்கவுந்தான் நடிக்கப்படுகின்றதே ஒழிய வே...லை.

அரிச்சந்திரன் கதை, நந்தனார் கதை முதலாகியவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். அரிச்சந்திரன் கதையில் சத்தியம் பிரதானம் என்று சொல்லப்பட்டாலும், சத்திய-அசத்திய விஷயம் நடக்காமல் கதையில் அலட்சியமாய் இருக்கிறது. சாதி வித்தியாசம், தீண்டாமை, பெண்ணடிமை, பார்ப்பன ஆதிக்கம், பணக்காரத் தன்மை, எஜமானத் தன்மை ஆகியவைகள்தாம் தலைதூக்கி இருக்கின்றன. அதுபோலவே, நந்தன் கதையிலும், ஆள் நெருப்பில் விழுந்து வெந்துபோனதுதான் மிளிர்கின்றதே தவிர, உயிருடன் தீண்டாமை ஒழிக்கப்பட்டதாக இல்லவே இல்லை. இராமாயணமும், சீதையைப் படுத்தினபாடு—பெண் ஒரு சொத்துபோல் பாவிக்கப்படுகிறதும் விளங்கும். இப்படிப்பட்ட கதைகள் ஒழிக்கப்படவேண்டும்; சுயமரியாதையும், சீர்திருத்த வேட்கையும் உள்ளவர்கள் அதை நடிக்கக்கூடாது.

இரணியன் கதையில் வீர ரசம், சூழ்ச்சித் திறம், சுயமரியாதை ஆகியவைகள் விளங்கினதோடு பகுத்தறிவுக்கு நல்ல உணவாகவும் இருந்தது. ஆனால், சில விஷயங்களில் தலைகீழ் மாறுதலாகவும், கடின வார்த்தையாகவும் காணலாம். சீர்திருத்த நாடகம் என்றாலே மாறுதல் இருந்துதான் தீரும். மாறுதலுக்கு அவசியமானதும், பதிலுக்குப் பதிலானதுமான வார்த்தைகள் இருந்தால்தான் பழைமை மாற சந்தர்ப்பம் ஏற்படும். அப்படிக்கில்லாமல் இருந்தால் தகுந்த மாறுதல் ஏற்பட இடமிருக்காது. ஆரிய புராணங்களில் ஆரியர்களல்லாதவர்களை—குரங்கு, அசுரன், இராட்சதன், சண்டாளன், பறையன் என்பன போன்ற வார்த்தைகளையும், அவை உபயோகிக்கும் முறைகளையும், பழக்கத்தில் இருந்துவரும் மாதிரியையும் பார்த்தால் இந்தச் சரித்திரம் படிப்பதில் அவசியமான மாறுதல் ஏற்பட உதவி செய்யுமா என்பது சந்தேகந்தான்.

நிற்க, இச் சரித்திரம் உண்டாக்கிய தோழர் புதுவை பாரதிதாசனை நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். அவர் உணர்ச்சியுடன் உண்டாக்கி இருக்கிறார். இன்னமும் இது போல் பல நாடகங்களை உற்பத்தி செய்யவேண்டும். பாத்திரர்களுக்குக் கற்பித்த தஞ்சை தோழர் டி. என். நடராசன் அவர்களின் ஆசிரியத் தன்மை மிகவும் போற்றத் தக்கது. அவர் 20 வருடமாய்ப் பொதுநல சேவையில் இருந்துவருகிறார்; ஜெயிலுக்கும் சென்றவர். அவர்கள் இருவருக்கும் இந்த இரண்டு பதக்கங்களைச் சீர்திருத்த நாடக சங்கத்தார் சார்பாய்ச் சூட்டுகிறேன்.

[சென்னையில், 9-9-1934-ல் தலைமையுரை—'பகுத்தறிவு' 16-9-1934]

## 3. நாடகக் கலை

தோழர்களே!

இதுவரை நம் நாட்டிலே நடந்துவந்த நாடகங்கள் எல்லாம் வள்ளி திருமணம், கிருஷ்ண லீலா, இராமாயணம் இவைகள்தானே! இவைகளினால் மக்கள் அடையும் பயன் என்ன? வள்ளியும் சுப்பிரமணியரும் எப்படிக் கொஞ்சினார்கள்; கிருஷ்ணன் பெண்களை எப்படிக் கற்பழித்தான்; அவனுடைய லீலைகள் எவை எவை—இவைகள் தானே மக்களுக்குக் காட்டப்பட்டன? மக்கள் சமுதாயம் முன்னேற்றம் அடைய, இந்தக் கருத்துக்களையா சொல்லிக் கொடுக்கவேண்டும்? உள்ளபடியே கூறுகிறேன்—இந்த சர்க்கார் மக்களின் முன்னேற்றத்தில் கவலை எடுத்திருக்குமானால், கண்டிப்பாக மேற் கூறிய நாடகங்களை நாட்டில் நடத்த விடாமல் தடை விதித்திருக்க வேண்டாமா?

படிப்பகம்

www.padippakam.com



ரஷ்யா போன்ற நாடுகளிலே இந்த மாதிரிய[illegible] நாடகங்கள் நடத்தப்படுகிறதா என்றால், காணவே முடியாது. அங்கே, மக்களின் [illegible]க் கொள்கையை நீக்கக்கூடிய கருத்துக்கொண்ட நாடகம்; சர்க்கார் எப்படி நடந்[illegible]க்களின் வாழ்க்கைக்கு நல்லது என்பதை எடுத்துக்காட்டும் படங்கள், நாடகங்கள் [illegible]றவைகள்தான் நடத்தப்படும். ஒரு சிலர் கூறுவதைப்போல் நான் கூறவில்லை. அங்கு நேரிலே போய் எத்தனையோ நாடகங்களை நான் பார்த்து இருக்கிறேன். அவைகள் எல்லாம் இப்படியேதான் இருந்தன.

ராதாவின் நாடகம் :—

மக்களின் நன்மைக்காக ஆடப்படும் ஒரு நாடகத்தைப் பார்த்துச் செல்லும்போது நல்ல புத்தியோடு போவார்கள். நல்ல அறிவுரைகள் நாடகத்தில் இருந்தால், பார்த்துச் சென்ற மக்கள் மனதில் அது ஓரளவு நிலைத்து நிற்கும். எனவே அதுபோன்ற— நடிகவேள் ராதாவின் நாடகம் போன்றவைகளுக்கு சர்க்கார் முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும்.

மனித சமுதாயத்தில் நல் வாழ்வுக்கும், முன்னேற்றத்திற்கும், நல்லறிவு பெறுவ தற்கும் நம் நாட்டிலே இலக்கியம், நாடகம் முதலியவைகள் தேவை.

[கரூரில், 27-3-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1952]

# 4. வெளியீடுகள்

## 1. பத்திரிகைகள்

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கென்று வெகு காலமாகவே அதாவது, ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே மதம், வேதம், கடவுள், மோட்சம் என்னும் பெயர்களால் பலவித ஆதாரங்களையும் ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலம் தாங்கள் உயர்ந்தோர்களாயிருந்துகொண்டு, நம்மை ஏய்த்துத் தாழ்த்தி வயிறு வளர்ப்பதல்லாமல் அரசியல் சுயராஜ்யம், தேசியம், தேசியப் பத்திரிகை, தேச சேவை என்கிற பெயராலும் பலவித இயக்கங்களையும் பத்திரிகைகளையும் உண்டாக்கிக்கொண்டு, அதன்மூலம் தாங்களே தேசபக்தி உள்ளவர்கள் என்றும், தங்களுடைய பத்திரிகைகளே தேசியப் பத்திரிகைகள் என்றும் நமது பணத்திலேயே விளம்பரப்படுத்திக்கொண்டு நம்மைத் தாழ்த்தி, மிதித்து, மேலேறி பல வழிகளிலும் வயிறு வளர்க்க ஆதிக்கம் தேடி வைத்துக்கொண்டு விட்டார்கள். இவை எல்லாவற்றையும்விட நமக்குப் பெரிய ஆபத்தா யிருப்பது பார்ப்பனப் பத்திரிகைகளே!

அப் பத்திரிகைகளின் செல்வாக்கு நம் நாட்டை அடியோடு முற்றுகை போட்டுக் கொண்டிருக்கிறது. பாமர மக்கள் மட்டுமல்லாமல், தங்களைப் போதிய அறிவுள்ள மக்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலரும் அப் பத்திரிகைகளின் மூலம் ஏமாறுவதும், அப் பத்திரிகைகளின் மூலம் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாவதும் வளர்ந்துகொண்டே வருகிறது. தமிழ்நாட்டு மக்கள் இப் பார்ப்பனக் கொடுமை முற்றுகையிலிருந்தும் அன்னிய ஆட்சிக் கொடுமை முறைகளிலிருந்தும் தப்பவேண்டுமானால் இப் பார்ப்பனப் பத்திரிகை களைப் பார்த்து ஏமாறுவதையும் அவற்றிற்கு அடிமைகளாவதையும் ஒழித்தாலல்லது கண்டிப்பாய் முடியவே முடியாத நிலையில் இருக்கிறோம். அவைகள் செய்யும் அக்கிரமங்களை நினைக்கும்போது நமது மக்கள் மனிதர்கள்தானா? மனிதப் பிறவிகள்தானா? இப் பிறப்புக்கு மானம், வெட்கம் என்கிற தன்மைகள் இருக்கின்றனவா? என்று சந்தேகப்பட வேண்டியிருக்கின்றது. நமது கெடுதிக்காகவே இப் பார்ப்பனப்



பத்திரிகைகள் நடந்துவருவதையு[illegible] பார்ப்பன ஆதிக்கப் பிரச்சாரமே அதன் கொள்கைகளாக இருப்பதையும் நாம் சந்தே[illegible]—மனப் பூர்வமாகத் தெரிந்திருந்தும், இப் பிரச்சாரங் களுக்குப் பணம் கொடுத்து [illegible]ாசமாய்ப் போவதற்காக இப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதென்றால் யாராவது [illegible] அறிவு, புத்தி, ஒழுக்கம், மானம், வெட்கம், சுயமரி யாதை உள்ள சமூகம் என்று சொல்லக்கூடுமா என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. பிறரைக் குற்றம் சொல்லும்போது மாத்திரம் 'கள், சாராயம் குடிப்பது கெடுதி என்று தெரிந்திருந்தும் அதைக் குடிக்கிறார்களே! என்ன புத்தி கெட்ட ஜனங்கள்; மானங்கெட்ட ஜனங்கள்!' என்கிறோம். ஆனால், அந்தப் புத்தியும் மானமும் நமக்கு இருக்கிறதா என்பதைப் பார்ப்பவர்கள், நம்மில் 1,000-க்கு ஒருவரைக்கூட காணோம். பார்ப்பனப் பத்திரிகைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு மட்டுமல்ல, நம்முடைய இழிவுக்கும் தாழ்மைக்கும் அழிவுக்கும் நடத்தப்படுகின்றன என்பதனை அறிந்திருந்தும் அதைப் பணங்கொடுத்து வாங்கிப் படிப்பவர்களுக்குப் புத்தியும் மானமும் இருக்கின்றதா என்பதைக் கவனிப்பதில்லை. உதாரணத்திற்காக ஒரு பத்திரிகையை எடுத்துக் கொள்வோம் :

சாதாரணமாக 'சுதேசமித்திரன்' என்னும் பத்திரிகை பெரும்பாலும் பார்ப்பன ரல்லாதாருடைய பணத்தையே மூலதனமாகக் கொண்டது. அதன் பத்திராதிபர்கள், உப பத்திராதிபர்கள், மேனேஜர்கள் முதலியவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். அவர்கள் சம்பளமோ மாதம் ரூ. 1,500, ரூ. 1,000, ரூ. 800, ரூ. 600—இப்படி அனுபவிக்கிறார்கள். அப் பத்திராதிபர் பார்ப்பனரல்லாதாரை ஒழித்துப் பார்ப்பனராதிக்கம் தேடுகிற பிரச்சாரம் தவிர, வேறு வேலை ஏதாவது செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? நம்மை நாமே கெடுத்துக் கொள்ள நமது பணமே உதவ வேண்டுமா? அதற்கு விளம்பரம் கொடுப்பவர்கள் பெரும் பாலும் பார்ப்பனரல்லாதார்களே! அதை வாங்கிப் படித்துக் கெடுகிறவர்களும் பார்ப்பன ரல்லாதார்களே! இதில் ஏதாவது இரகசியம் இருக்கிறதா? அல்லது, இப் பார்ப்பனர்கள் எதையாவது இரகசியமாகச் செய்கிறார்களா? நேருக்கு நேராக நம்மைப் பார்த்து, 'நீங்கள் முட்டாள்கள்; உங்களுக்கு மானம், வெட்கம், சுயமரியாதை, அறிவு, புத்தி இவைகள் கிடையாது; ஆதலால் நாங்கள் உங்களை ஏமாற்றுகிறோம். உங்களால் என்ன செய்ய முடியும்? உங்களில் யாரோ சிலர் கத்தினால் கத்தட்டும்—எங்களுக்குக் கவலை இல்லை; இதற்காக நாங்கள் கொஞ்சமும் பயப்பட்டு எங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. உங்களிலேயே சில அயோக்கியர்களையும் முட்டாள்களையும் நாங்கள் சுவாதீனம் செய்துகொண்டு உங்கள் கத்தல்களை ஒழிக்க எங்களுக்குத் தெரியும். ஒரு கை பார்க்கலாம், வாருங்கள்!' என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள். இதற்கொன்றும் மார்க்கமில்லையா என்றுதான் கேட்கிறோம்.

'குடிஅரசு' தோன்றிய பிறகு 'மித்திரன்' சுமார் 2000 சந்தாதாரர்களுக்கு மேலாக இழக்க நேரிட்டும்—இன்னமும் பார்ப்பனரல்லாதாரிலேயே பல பங்குதாரர்களை இரகசிய மாகச் சேர்த்துப் பணம் சம்பாதிக்கப்பட்டு வருகிறது. நம்மவர்கள் முன்னேற்றத்திற் கென்றே நடத்தப்பட்டு வருகிற பத்திரிகைகளைக் கையில் தொடுவதற்கும் நமது மக்கள் அஞ்சுகிறார்கள் என்றால், நமது யோக்கியதையை என்னவென்று சொல்லுவது? சாதாரண மாக 'திராவிடன்' பத்திரிகை எவ்வளவு கஷ்ட, நஷ்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வருகிறது என்பதை யாராவது உணருகிறார்களா? இது யாருடைய நன்மைக்கு நடத்தப் படுகிறது என்பதை யாராவது அறிகிறார்களா? யாரையாவது போய், 'அய்யா, திராவிடன் பத்திரிகை தங்களுக்கு வருகிறதா? இல்லையானால், ஒன்று வரவழையுங்கள்; அதைப் படித்துப் பார்ப்பனர்கள் சூழ்ச்சியையும் அதனால் நம்மவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தையும் உணர்ந்து அதிலிருந்து தப்புவதற்கு வேண்டியது செய்யுங்கள்' என்றால்—'திராவிடனா? அதிலென்ன இருக்கிறது? அதைப் பார்த்தாலே என்னமோபோல இருக்கிறதே! அந்தப் பெயரே நமக்குப் பிடிக்கவில்லையே!' என்று சொல்லி விடுகிறார்கள். இதைத் தங்களுக்குத் தோன்றுகின்றபடி வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறார்கள் என்றே வைத்துக் கொள்ளு

படிப்பகம்

www.padippakam.com



வோம். கட்டின பெண்சாதியை விட்டு, தாசி வீட்டுக்[illegible]ப் போய்ச் சொத்தைப் பாழாக்கி வியாதி கொள்கிறவர்களைப் பார்த்து, 'என்னப்பா, [illegible]டின பெண்சாதியை வீட்டில் வைத்துவிட்டு, தாசி வீட்டுக்குப் போய்ச் சொத்தையும் [illegible]க்கி வியாதியும் கொள்கிறாய் ?' என்றால்,

'வீட்டில் என்ன இருக்கிறது? அவளைப் பார்த்தாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவள் நடந்துகொள்கிற மாதிரியே மனத்திற்கு அசிங்கமாகப் படுகிறது. கட்டிலுண்டா? மெத்தையுண்டா? வாசனையுண்டா? கடிப்பதுண்டா? கிள்ளுவதுண்டா? சட்டிபானை கழுவுகிறவள்தானே' என்று ஆரம்பித்து விடுகிறானேயல்லாமல்—இதெல்லாம் எதற்காகச் செய்யப்படுகிறது, பின்னால் நம்முடைய கதி என்னாகும் என்கிற கவலையே இல்லாமல் அறிவீனமாய் நடந்து கொள்கிறான். அப்படிபோல் நம்மை மயக்கி, ஏய்த்து, நம்மைப் பாழாக்கி, கொள்ளை கொள்ள நடக்கும் பத்திரிகைகள் நாம் ஏமாறத் தகுந்த மாதிரியாகத் தான் நடத்தப்படும். ஒருநாள் பூரா படிப்பதற்கு விஷயமிருக்கலாம். ஆனால், அது பெரும் பாலும் என்ன விஷயம்? நம்மைக் கழுத்தறுக்கும் விஷயமும், பொழுது போக்கும் விஷயமு மாகத் தானே இருக்கும்! அதனால் மானமுள்ள மக்கள் நமது சொந்தப் பெண்டை அன்னி யன் குற்றம் சொல்லும்படியாகவும், கஞ்சிக்குத் திண்டாடும்படியும் விடாமல் காப்பது எப் படித் தனது கடமையாக நினைப்பார்களோ அதுபோல, 'திராவிடன்' பத்திரிகையை ஆத ரிப்பதோடு, கட்டின பெண்டைத் தெருவில் அலையவிட்டு, தாசிவீடு காத்துத் திரிவதுபோல் 'திராவிடனை' விட்டுப் பார்ப்பனர் பத்திரிகைகளைக் கட்டி அழுவதை மறந்து—நமது மானத்தைக் காப்பாற்ற உதவி செய்ய வேண்டுமென்பதாகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த மார்க்கந்தான் நமது பாமர மக்களைக் காப்பாற்றவும் நமது மக்கள் எல்லோருக்கும் சுயமரியாதை ஏற்படவும் சரியான மார்க்கமாகும்.

['குடி அரசு'–தலையங்கம்—30-1-1927 ; 'திராவிடன்' தினசரி, 7-5-1927]

## 2. தமிழரும் பத்திரிகைகளும்

14-12-1956-ம் தேதி 'விடுதலை'யில் அழகுக்கரசு என்பவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அது இந்தச் சமயத்தில் வெளியிடத்தக்க கடிதம் அல்ல :

'தமிழ்நாடு' பத்திரிகையும் 'நவ இந்தியா' பத்திரிகையும் இன்று தமிழ்நாட்டில் உலவுவது தமிழர்களுக்கு மகத்தான ஒரு நல்வாய்ப்பேயாகும்.

அவை என்ன கொள்கையைக் கொண்டு எப்படி நடப்பதானாலும் தமிழர்கள்— உண்மையான தமிழர்கள் யாவரும் அவற்றின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டியது கடமை ஆகும். அவற்றின் உரிமையாளர்களின் உள்ளம் எனக்கு ஓரளவுக்குத் தெரியும். அவர்கள் தமிழர்களின் நலத்தைக் கோருபவர்களே. இந்த இரண்டு பத்திரி கைகள் இல்லாமல் இருந்தால் ஆரியப் பத்திரிகைகளின் அட்டூழியம் தமிழர்களுக்கு எவ்வளவோ கேடுகளைச் செய்திருக்கும். தமிழ் மக்களை நாம், 'பார்ப்பனர்களின் பத்திரி கைகளைக் கண்டிப்பாக வாங்கக்கூடாது' என்கிறோம். 'விடுதலை'யின் நிலைமை நமக்குந் தெரிந்ததே. இந்த நிலையில் தமிழர்கள் எதை வாங்கிப் படித்து விஷயங்களை அறிய முடியும் ?

'தினத்தந்தி'யைப்பற்றி அடிக்கடி குறை எழுதுவதுகூட எனக்குப் பிடிப்பதில்லை. நான் பேசுகிறபோது அவைகளைக் கண்டிக்கிறேன். என்றாலும் அவைகளை ஆதரிக்கும்படி மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

ஆதலால், இந்தப் பத்திரிகைகளை அத்தியாவசியம் கண்டாலொழிய குறைகூறுவது கூடாது என்பது என்து கருத்து.



'நவ இந்தியா' சென்னை[illegible]ந்தது தமிழர்களுக்கு ஒரு பெரும்பேறு. 'தமிழ்நாடு' பத்திரிகையும் சென்னைக்கு[illegible] வேண்டுமென்பது எனது பேரவா. தமிழ்மக்கள் கண்டிப்பாகப் பார்ப்பனர் ப[illegible]களை வாங்கக்கூடாது. கண்டிப்பாகத் தமிழர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள[illegible] வாங்கிப் படிக்க வேண்டுமென்று சிரம் வணங்கி வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'–அறிக்கை—16-12-1956]

## 3. நூல்கள்

தோழர்களே !

இந்தப் புத்தக வியாபார நிலையத்தின் துவக்கவிழா ஆற்றுவதில் நான் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். தோழர் சண்முக வேலாயுதம் அவர்கள் என்னை வேண்டிக் கொள்ளும்போது இப் புத்தக வியாபார நிலையம் சுயநல இலாபத்தை—பண வருவாயை உத்தேசித்துத் துவக்கப்பட்டதல்லவென்றும், நம் இயக்க நூல்களையும், சீர்திருத்த இயக்க நூல்களையும், பத்திரிகைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்ற பொதுநல நோக்கத்தையே முக்கியமாய்க் கருதித் துவக்குவதாகவும் சொன்னார். இதைக் கேட்டு நான் மிகுதியும் மகிழ்ச்சியடைந்தேன். இந்தப் பணி ஆற்று கிறவர்கள் நமது நாட்டில் இதுவரை எங்கும் துணிந்து இம் மாதிரி முன்வந்ததில்லை; முன்வந்தாலும் இலாபத்துக்காக—அதாவது, ஏதாவது ஒரு இயக்கத்துக்காவது, ஏதாவது ஒரு கொள்கைக்காவது, ஏதாவது ஒரு மனிதனுக்காவது செல்வாக்கேற்பட்டால் அந்தப் பெயரைச் சொல்லிக்கொண்டு, அந்தக் கொள்கையைச் சொல்லிக்கொண்டு, அந்த மனிதனைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு, அவன் பெயரைச் சொல்லிக்கொண்டு வயிறு வளர்க்க முன்வருபவர்களும், தன் வாழ்வை அமைத்துக் கொள்பவர்களும்—அந்த இயக்கத்தை, கொள்கையை, மனிதனை வைவதில் செல்வாக்கேற்பட்டால் உடனே வயிற்றுப் பிழைப்புக்கும் வாழ்க்கை நலத்துக்குமாக அவைகளை வைத்துக்கொண்டு வயிறு பிழைப்பவர்களும், அல்லது இந்தக் காரியங்களுக்குக் கூலி பெற்றுக்கொண்டு தொண்டர்களாக இருப்பவர்களும் எங்குமுண்டு என்றாலும் நம் நாட்டில் அதிகம். ஏனெனில், இங்கு மனிதத் தன்மையை உணர்ந்த—மனிதத் தன்மையில் கவலை கொண்ட மக்கள் அரிது. அதாவது, தங்களுடைய சுய இலாப நஷ்டம், பெருமை, சிறுமையே இலட்சியமென்பதில்லாமல் பொதுநலக் கொள்கைகளுக்காக என்று வெளிவந்து தொண்டாற்றும் மக்கள் மிகமிக அருமையாகும்.

பெரிய ஜனக்கூட்டங்களில் அல்லது சந்தைகளில், நாடக இடங்களில், காப்பிக் கடை ஓட்டல்கள், சோடா, லெமன், லட்டுக் கடைகள் வைத்து விற்பனை செய்பவர்கள் பெரிய பொதுநலத் தொண்டர்கள், தியாகிகள் என்றால்—முந்திய ஆட்களும், பெரிய பொதுநலத் தொண்டர்களும், தியாகிகளுமாவார்கள் என்கின்ற நிலையில் உள்ளவர்கள் அநேகர். சந்தை, நாடகம் கலைந்தவுடன் காப்பிக் கடை, ஓட்டலை மூடிவிட்டு வேறு வேலைக்குப் போவதுபோல் இந்தக் கூட்டங்களும் இயக்கத்துக்கோ, அதன் கொள்கைகளுக்கோ, தலைவனுக்கோ கொஞ்சம் செல்வாக்குக் குறைந்தவுடன் அவற்றின்மீது ஆளுக்கொரு கல்லை எறிந்துவிட்டு ஓடுபவர்களாவார்கள். அதுபோல்தான் சிலர் இன்று நம் கூட்டங் களிலும் வந்து பகுத்தறிவு நூல்கள் வெளியிடுவதும், சீர்திருத்த நூல்கள் வெளியிடுவதும், விற்பதுமாக இருக்கிறார்கள். இந்த நபர்கள் உற்சவம், வேறு பெருங்கூட்ட இடம் முதலிய வைகளில் சென்று, அங்கு புராணங்கள், விபூதி, ருத்திராட்சம், துளசி மாலை, சாமி படம் விற்பவர்களாகவும் இருப்பார்கள். மற்றும் நாடகக்காரர்களும் இப்படித்தான்; ஒரு ஊரில் சீர்திருத்த நாடகம், புரட்சி நாடகம், என்று ஆடுவார்கள்; மற்றொரு ஊரில் பக்தி நாடகம், கடவுள் திருவிளையாடல்கள் நாடகம் என்று ஆடுவார்கள்; சிலர் இரண்டும் கலந்துகொண்டு இரு கூட்டத்தாரிடையும் செல்வாக்குப் பெற்று, இருகூட்டப் பிரச்சாரகர்களையும் விலைக்கு

படிப்பகம்

www.padippakam.com



வைத்து இருப்பார்கள்; தேவையானபோது பிரிண்ட் செ[illegible]து கொள்வார்கள். நமது நாட்டில் கல்விக் கொள்கையில் ஒரு நிலை இல்லாத தன்மை[illegible]ருப்பதால்தான் அவ்வப்போது மாற்றுகின்றார்கள்.

அச்சுத் தொழிலுக்கு கம்பாஸிட்டர்கள் பெரிய [illegible]லையாக இருக்கின்றார்கள்; அவர்களுக்குச் சம்பளம் ரூ. 3 அல்லது 4 என்று குறைந்த அளவில்தான் உள்ளது. மண் எடுக்கின்ற ஒட்டனுக்கும் ரூ. 4; கம்பாஸிட்டருக்கும் நாலு ரூபாய் என்றால் என்ன நியாயம்? இது மாறவேண்டும்.

வேலை இல்லாத இளைஞர்களுக்கு கம்போசிங் பள்ளிகள் துவக்கி அச்சுக்களைக் கோக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

அச்சாபீஸ்காரர்கள் ஜாப் வேலையையே பிரதானமாகக் கருதாமல் புத்தகங்கள், பெரிய வேலைகள் முதலியன செய்யவேண்டும்.

1973ஆம் வருஷத்தில் நமது நாட்டில் 35, 40 பேர்கள்தான் படித்து இருக்கின்றார்கள் என்றால் பெரிய அவமானம்; அரசாங்கம் போதிய கவனம் எடுத்து மக்களுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதோடு, தொழிலுக்கு வழிவகைகள் செய்து தரவேண்டும்.

தமிழ்நாடு, கேரளம், பம்பாய், டில்லி தவிர மற்ற மாநிலங்களில் எல்லாம் 100-க்கு 30 பேர்கள்கூடப் படிக்கவே இல்லையே! ஆண்கள் பெண்களுக்கு 50 பேர் அளவிற்குச் சாப்பாடுபோட்டு, அச்சுத் தொழில் கற்றுக்கொடுக்கலாம். இது வேலைஇல்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைக்க உதவும்.

நண்பர் ஆனைமுத்து திராவிடர் கழகம் சம்பந்தமாகவும், பகுத்தறிவுக் கொள்கை சம்பந்தமாகவும் நல்ல தேர்ச்சி பெற்றவர். அவர் இப்படி அச்சகம் துவங்குவது பாராட்டத் தக்கது. அவருக்கு அச்சுத் துறையில் அனுபவம் உண்டு.

இன்றைக்கு அரசாங்கம் மக்கள் நன்மையைக் கருதி அனேகக் காரியங்கள் எல்லாம் செய்து வருகின்றது. மக்கள் காலித்தனம், ரகளைகளுக்கு இடம் தராமல் ஆட்சிக்குப் பாதுகாவலாக இருக்கவேண்டும்.

இன்றைக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் ஸ்டிரைக், ரகளை, காலித்தனத்திற்கு முற்பட்டுவிட்டது வேதனை அளிக்கின்றது. நமது நாட்டுக் கல்வி முறையானது மாற்றி அமைக்கப்பட்டாக வேண்டும். இன்றையக் காலித்தனத்திற்குக் காரணமே கல்வியின் அஜீரணம்தான்.

பட்டப் படிப்புக்குப் பதிலாகத் தொழில் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

[திருச்சியில், 17-8-1973-ல் சொற்பொழிவு—'விடுதலை' 25-8-1973]

## PART IX

# DRAVIDASTAN SEPARATION

படிப்பகம்